JL
Z2.16 83 m N13
r13.1
11.2.86

ஹைகோர்ட்டு தீர்மானங்கள்.

தமிழ்ப்பாஷை பயின்றவர்கள் வியவகார நுட்பங்களை
எளிதில் உணரும்பொருட்டு பிரசுரிக்கப்படும்.

மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

புத்தகம்-1 } மாயவரம் 1913௵ செப்டம்பர்ீ. { **இலக்கம்-1.**

பிரிவி கவுன்ஸில்.

(அலகபாத் ஹைகோர்ட்டு தீர்ப்பின் பேரில் அப்பீல்).

ஜட்ஜிகள். *லார்ட் அட்கின்ஸன் துரையவர்கள்* *லார்ட் பார்கர் துரையவர்கள்* *ஸர் ஜான் எட்ஜ் துரையவர்கள்* *மிஸ்டர் அமீர் ஆலி யவர்கள்* *தீர்ப்பு 1913 ௵ ஜூலை ீ 18 ௳*	*நெட்ரும் சிங்கு ஆ வாதிகள்* *அப்பீல்தார்கள்* V *முசாமத் டர்சா கன்வார்* *பிரதிவாதி (ரெஸ்பாண்டெண்டு)*

1. [*ஹிந்து லா.*]

பாகஸ்தர்களுக்கு தனித்தனி ரேவினியூ பட்டா ஏற்பட்டிருப்பதைக் கொண்டு மட்டில் அவர்களுக்குள் பாகப்பிரிவினை ஏற்பட்டு விட்டதாகத் தீர்மானிக்கக் கூடாதென்பதும், பிரிவினை விஷயமாக வேறு தஸ்தாவேஜிகள் இருந்தால் இந்தப் பட்டாக்கள் அப்பிரிவினையை யுறுதிப்படுத்து மென்பதும்.

நாராயண சிங்கு என்பவருக்கு இரண்டு பெண்ஜாதிகள்; வாதிகள் ஒருத்தியினுடைய பிள்ளைகள், சிட்டுசிங்குஎன்பவர் மற்றொருத்தியினுடைய பிள்ளை. இந்த நாராயண சிங்கு 1871 ௵த்தில் இறந்துபோய் விட்டார். சிட்டுசிங்கு எவ்வித சந்ததியுமன்றி

161886

901 ௵த்தில் இறந்தார். அவர் இறந்தவுடன் அவர் மனைவி டர்சா கன்வார் தன் புருஷன் பேராலுள்ள ரெவினியூ பட்டாக்கள் தன் பேரால் மாற்றப்பட வேண்டுமென்று ரெவினியூ அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டு அந்தப்படி பட்டா மாற்றும்படி உத்தரவு மாகிவிட்டது.

இறந்த சிட்டுசிங்கு தங்களுடைய அவிபக்த சகோதரரென்றும், சர்வேபர்ஷிப் பாத்தியப்படி அவருடைய எல்லாச் சொத்துக்களையும் தாங்கள் அடைய பாத்திய முடையவர்களென்றும், அவைகள் இறந்தவரின் விதந்து டர்சா கன்வார் வசமிருப்பதால், அவைகள் தங்களுக்கு வசமாக வேண்டுமென்றும், அலிகார் சப் கோர்ட்டில் வாதிகள் டர்சா கன்வார் பேரில் வழக்கிட்டார்கள்.

பிரதிவாதி தன் புருஷன் பாகம் பிரிந்தவரென்றும், அவருக்குத் தான் சட்டப்படி வார்சென்றும், கக்ஷியாடி தன் புருஷன் பேரால் தனியே பட்டாவாயிருக்கும் அனேக தஸ்தாவேஜிகளை தாகல் செய்ததுமன்றி பாகஸ்தர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியே தங்கள் தங்கள் சொத்துக்களை பெந்தகம்வைத்து இருக்கும் தஸ்தாவேஜிகளையும் தாகல்செய்தாள்.

இறந்த சிட்டுசிங்கு அவிபக்த சகோதரரென்றும் அவர்சொத்துக்களை வாதிகள் அடைய பாத்தியஸ்தர்களென்றும் சப் ஜட்ஜியவர்கள் தீர்ப்பு செய்தார்கள். ஆனால் ஒரு கிராமத்திலுள்ள சொத்து பொது தர்மசொத்தென்றும் அதற்கு இறந்த சிட்டுசிங்கு மானேஜராக விருந்துவந்ததால் அந்தப் பாத்தியந்தான் வாதிகளுக்குக் கிடைக்கக்கூடிய தென்றுந் தீர்ப்பு செய்தார்கள். இந்தத்தீர்ப்பு சரியல்லவென்று வாதிகள் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்ததில் கீழ்க் கோர்ட்டார் பொது தர்ம சொத்தென்று தீர்மானித்ததை மட்டில் உறுதிசெய்து மற்றச் சொத்துக்கள் பாகப்பிரிவினையான சொத்துக்களென்றும், அவைகளை யடைய பிரதிவாதியே வார்சென்றும், கீழ்க் கோர்ட்டார் செய்த தீர்ப்பை மாற்றிவிட்டார்கள். இத்தீர்ப்பு நியாயவிரோதமானதென்று வாதிகள் பிரிவி கவுன்ஸிலில் அப்பீல் செய்தார்கள்.

தீர்ப்பு:—ரெவினியூ பட்டாக்கள் பாகஸ்தர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே ஏற்பட்டிருக்கிறதென்ற ஒரு காரணத்தைக் கொண்டு மட்டில் அவிபக்தர்களாயிருக்கக்கூடிய இந்து குடும்பஸ்தர்கள் பாகம் பிரிந்தவர்களென்று தீர்மானித்தது

Z 211,83 m N1
N1 8.1

பிசகென்பதுதான் அப்பீல் வாதிகளின் முக்கிய வாதங்கள். ஹைகோர்ட்டார் இந்த ஒரு காரணத்தைக்கொண்டு மட்டில் தீர்மானிக்கவில்லை. வாதிகளுக்குச் சொந்தமான நிம்கோன் கிராமத்தில் நெட்ரும், கான்ஹேறசிங், முக்ரும்சிங் என்ற வாதிகளாகிய மூன்று சகோதரர்களுக்கும் தனித்தனியே பட்டாக்கள் ஏற்பட்டிருக்கின்றன. அச்சொத்துக்களை யவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியே அனுபவித்து வருவதாகக் கண்டு தனித்தனியே பெந்தகம் வைத்திருக்கிறார்கள். இதனால் இச்சொத்துக்களுக்கு இவர்கள் தனித்தனி சொந்தக்காரர்களென்றே ஏற்படுகிறது. இவ்விதந் தனித்தனியே ஏற்படுவதற்கு என்னகாரணமென்பதை வாதிகள் தெரிவிக்கவில்லை. 1898 ௵த்தில் சுசாயன் என்ற ஒரு கிராமம் தனிமையில் பிரதிவாதி புருஷனுக்கும், மற்றொருகிராமம் வாதிகளுக்கும் ஏற்பட்டு தனித்தனியே ரெவினியூ ரிகார்டுகள் ஏற்பட்டிருப்பது அவர்களுக்குள் பாகப் பிரிவினை ஏற்பட்டிருப்பதை ஸ்பஷ்டமாகத் தெரிவிக்கிறது.

இக்காரணங்களினால் ஹைகோர்ட்டார் செய்ததீர்மானத்தை நாம்மாற்றக் காரணமில்லை. இதனால் அப்பீலைத் தள்ளுபடிசெய்யும்படி மாக்ஷிமைதங்கிய சக்கரவர்த்தியவர்கள் சமுகத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறோம். அப்பீல் பிரதிவாதி ஆஜராகததால் அவளுக்குச் செலவுத் தொகை கிடைக்கத்தக்கதில்லை.

அப்பீல் தள்ளுபடி.

சென்னை ஹைகோர்ட்டு.

1912 ௵த்திய 2-வது அப்பீல் 695 நெம்பர்.

ஜட்ஜிகள்.	காயாரோகண பத்தன் அப்பீல் வாதி
ஜஸ்டிஸ் பென்ஸன் துரையவர்கள்	V
ஜஸ்டிஸ் சுந்திரமய்யரவர்கள்	சுப்பராய தேவன் ஆ அப்பீல் பிரதிவாதிகள்

2. [ஹிந்து லா.]

சந்தோஷமாக சகவாசஞ் செய்ய அருகமில்லாத கொடியதும் அசிங்கியமுமுள்ள குஷ்டரோகிகளுக்கு பூர்வீக சொத்தில் பாத்தியமில்லை யென்பது.

திருத்துறைப்பூண்டி முனிசீப் கோர்ட்டு 1909 ௵த்திய அசல் 113 நெம்பரின் பேரில் 1910 ௵த்திய 708 நெ.-1 வது அப்பீல் நாகபட்டணம் சப் ஜட்ஜி யவர்களால் தீர்மானிக்கப்பட்டது.

அப்பீல்வாதிக்காக மிஸ்டர் C. S. வெங்கடாசாரியார் அவர்களும் அப்பீல்பிரதிவாதிக்காக மிஸ்டர் C. V. அனந்தகிருஷ்ணய்யரவர்களும் ஆஜராகி வாதஞ்செய்தார்கள். இறந்த மூலபுருஷனுக்கு தகப்பனுடைய சகோதரன் பிள்ளையொருவன் குஷ்டரோகி. அவனுடைய பாத்தியதையை முன்னிட்டு பிரதிவாதிகள் அந்த மூலபுருஷன் சொத்தையநுபவித்தார்கள். வாதி அந்தமூல புருஷனுக்கு சகோதரிமகன். பிரதிவாதிகள் பாத்தியங்கொண்டாடுகிறவன் குஷ்டரோகியாதலால் அவனுக்கு மூலபுருஷன்சொத்தில் எவ்விதபாத்தியமுங் கிடைக்கமாட்டாதென்றும், அச்சொத்துக்கள் தனக்குவசமாக வேண்டுமென்றும் வாதி பிரதிவாதிகள் பேரில் வழக்கிட்டான். அந்தகுஷ்டரோகம் கொடியதென்றும் அது மத்திமஸ்திதியிலிருக்கிறதென்றும், மெடிகல் சாக்ஷியம் ஏற்பட்டது. இதனால் டிஸ்டிரிக்ட் முனிசீப் அந்தரோகம் சௌக்கியப்படக்கூடாத ரோகமென்றும், அதனால் பிரதிவாதிகளுக்கு மூலபுருஷன் சொத்தில் பாத்தியமுண்டாகமாட்டாதென்றும், வாதியின் பிராதுப்படி தீர்ப்புசெய்துவிட்டார். இதன்மேல் நடந்த அப்பீலில் பிராதிற்சொல்லும் ரோகம் விரணநீருள்ளதாக வாவது, புண்ணுள்ளதாகவாவது இருக்கவில்லையென்றும், அது கொடிய வியாதியல்லவென்றும் அந்தவியாதியினால் அவனுடைய சுஜாதியார் அவனிடம் நெருங்கிப் பழகாதிருந்திருக்கவில்லை யென்றும், அதனால் பிரதிவாதிகளுக்கு சொத்து பாத்தியம் விலகமாட்டாதென்றும், சப்ஜட்ஜியவர்கள் கீழ்க்கோர்ட்டார் செய்ததீர்ப்பை ரத்துசெய்துவிட்டார்கள். இதன்பேரில் வாதி இந்த அப்பீல்செய்திருக்கிறார்.

தீர்ப்பு:—இந்தச் சென்னை இராஜதானியில் மிடக்ஷாரா தான் பிரசித்தமாக அநுஷ்டிக்கப்படுகிறது. ஒருவனுக்குக் குஷ்டரோகமிருப்பதைக் கொண்டு அவனுக்கு வார்சுபாத்தியமில்லை யென்று தெளிவாகச் சொல்லவில்லை. ஒருநபும்ஸகன், ஜாதிபிரஷ்டனானவன், அவனுடைய பிள்ளைகள், ஒருமுடவன், பயித்தியங்கொண்டவன், நிர்மூடன், குருடன், சௌக்கியத்துக்குவரமுடியாதரோக

முள்ளவன், இவை போன்ற மற்று மனேக அநர்கர்கள் பூர்வீகச் சொத்துக்களை பாகப்பிரிவினை செய்துகொள்ள அருகமற்றவர்களாக விருந்தாலும் அவர்கள் சம்ரக்ஷிக்கப்பட்டு வரவேண்டுமென்று அந்தமிடாக்ஷராவில் சொல்லப்பட்டிருக்கிறது. பாகப்பிரிவினைசெய்யப்படுவதற்கு முன்னமே மேலே சொன்ன அங்கஹீனங்கள் ஏற்பட்டுவிட்டால் அவர்களுக்கு சொத்தில் பாத்தியமில்லையென்பதாக மிடாக்ஷரா 2 - வது அத்தியாயம் 10 - வது சுலோக முதலியனவற்றிற் சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கனவே பாகமாயிருந்தால் அவனுக்குள்ள சொத்துபாத்தியம் விலகமாட்டாது. இறந்தவனுக்கு கர்மகிருத்தியங்கள் செய்யக்கூடாத கொடிய ரோகமாக இருந்தால்மட்டில் அவன் சொத்தையடையபாத்தியமற்றவனென்று சொல்லப்பட்டிருக்கிறது. விரணநீர் ஒழுகிறதும் புண்சீயுள்ளதுமான கொடியகுஷ்டரோகிகளுக்குமட்டில் சொத்தில் பாத்தியமில்லையென இ-லா-ரி 19 சென்னை 74, 1 பம்பாய் 554 இவைகளில் தீர்மானித்திருக்கிறார்கள். இக்கொடிய ரோகமுள்ளவன் பிற்பாடு சௌக்கியமடைந்து விட்டால் அவனுக்குச் சொத்துபாத்திய முண்டாய்விடுமென்றும் இந்த மிடாக்ஷராவில் சொல்லப்பட்டிருக்கிறது. ஒருவியாதி சௌக்கியப்படக்கூடியது அல்லது முடியாதென்று வயித்தியர்களால்சொல்ல முடியாது. பிராதிற்கண்ட குஷ்டரோகம் விரணநீருள்ளதும் சீப்புண்ணுள்ளதுமானதல்ல; இதனால் பிரதிவாதிகளுக்குள்ள சொத்து பாத்தியம் விலகமாட்டாது. இந்த 2வது அப்பீல்செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

அலகபாத் ஹைகோர்ட்டு.

1912௵ 157 நே. உத்தரவின் பேரில் முதலாவது அப்பீல்

ஜட்ஜிகள். சீவ் ஜஸ்டிஸ் ஸர் ஹென்ரி ரிச்சார்ட்ஸ் துரையவர்கள். ஜஸ்டிஸ் ஸர் P. C. பனர்ஜியவர்கள்.	அப்டல் ஆலிஸ்கான்ஆ அ வாதிகள். V. முசாமத் நிர்மா.

தீர்ப்பு 5—6—13.

3. [ஹிந்துலா.]

ஒரு இந்துவிதந்துமகம்மதிய மதத்தில் சேர்ந்தபின் ஒரு மகமதியனை விவாகஞ் செய்து கொள்ளுவதினால் இவளுக்கு முதல்

புருஷனிடமிருந்து கிடைத்த சொத்துபாத்தியம் விலகமாட்டாதென்பது.

கங்காராம் என்பவனுடைய விதந்து முசமத்பார்வதி யென்பவள் தன்புருஷனிடமிருந்து வார்சுக்கிரமத்தில் கிடைத்தசொத்தில் ஒரு கிணறுவெட்டுவதாகவும், ஒரு கோவில்கட்டப்போவதாகவும் அவ்விதஞ்செய்யப்போவதை பிரதிவாதிகள் தடுப்பதாகவும் அவர்கள் அவ்விதந் தடைசெய்யாதபடி அவர்களுக்கு இன்ஜங்க்ஷன் கொடுக்கவேண்டுமென்றும் வழங்கிட்டாள். முதில் கோர்ட்டில் இவளுடைய பிராதின்படி தீர்ப்பாகிவிட்டது. பிரதிவாதிகள் இதுவிஷயமாக அப்பீல் செய்தார்கள். இந்த அப்பீல் விசாரணை முடிவடையாதிருக்கும்போது வாதி (விதந்துபார்வதி) மகம்மதிய மதத்திற்சேர்ந்து வாலிமுகமது என்ற ஒருமகமதியனை விவாகஞ் செய்துகொண்டாள். இதனால் இவள் தன்னுடைய பிராதை தள்ளுபடிசெய்யலாமென கோர்ட்டாருக்குத் தெரிவித்தாள். இதனால் இந்த விதந்துவின் மாமியார் முசாமத்நிர்மா என்பவள் ஜாதிபிரஷ்டஞ் செய்யப்பட்ட பார்வதிக்குத்தான் வார்சென்றும், தான் மேலேசொன்ன அப்பீல் நடவடிக்கையில் எதிர்வாதஞ் செய்யப்பாத்திய முடையவளாகையால் தன்னை இறந்ததாகக் கொள்ளப்படவேண்டிய பார்வதிஸ்தானத்தில் கக்ஷிக்காரியாகச் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்றும், மனுக்கொடுத்தாள். இவளுடைய கோரிக்கைபின்படி இவள் கக்ஷிக்காரியாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டாள். இவளையிதில் கக்ஷிக்காரியாகச் சேர்த்தது சட்ட விரோதமானதென்று பிரதிவாதிகள் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்தார்கள்.

தீர்ப்பு:—பார்வதி மகம்மதியமதத்தில்சேர்ந்ததைக்கொண்டு அவளுக்கு அவளுடைய முன்புருஷன் சொத்திலேற்பட்டிருந்த பாத்தியம் 1850௵ 21-வது ஆகட்டுப்படி விலகமாட்டாதென்றும், இதுவிஷயமாக இந்தக்கோர்ட்டிலும் பிரிவிகவுன்ஸிலிலும் (இ-லா-ரி 33 அலகபாத் 356, 38 இந்தியன் அப்பீல் 87) அனேக தீர்மானங்களேற்பட்டிருக்கின்றன வென்றும், பார்வதி மகமதிய மதத்தில் சேர்ந்தபிறகு ஒருமகமதியனை விவாகஞ் செய்துகொண்டது அந்த மகமதியலாப்படி செல்லுபடியுள்ளதென்றும், இவளுக்கு இவளுடைய புருஷன் சொத்து பாத்தியம் விலகாதிருக்கும்போது இவள் ஸ்தானத்தில் வேறொருவர் கக்ஷிக்காரராகச் சேருவதுசரியல்லவென்றும், கீழ்க்கோர்ட்டார்செய்த வுத்தரவை

ரத்து செய்து முசாமத் நிர்மாவினுடைய மனுவைத் தள்ளுபடி செய்து விட்டார்கள்.

சென்னை ஹைகோர்ட்டு.

1911 ௵த்திய 2 வது அப்பீல் நெம்பர் 17.

ஜட்ஜிகள்.	R. M. P. V. முத்தயா செட்டியார் அப்பீல் வாதி
ஜஸ்டிஸ் சுந்திரமய்ய ரவர்கள்	V
ஜஸ்டிஸ் சதாசிவய்ய ரவர்கள்	S.R.M.A.R. இராமசாமிசெட்டியார் அப்பீல் பிரதிவாதி

தீர்ப்பு 1913 ௵த்திய ஏப்ரல்௴ 13௳

1. [ரெவினியூ.]

1908 ௵த்திய 1 வது ஆக்ட்டு அனுஷ்டானத்துக்குக் கோண்டுவரப்பட்டபின் செய்யப்படும் வழக்குகள் பட்டா முச்சலிக்காக்களின் ஆதாரத்தின் பேரில் செய்யப்பட வேண்டியது அவசியமில்லையென்பது.

சிவகங்கை ஜமீனிலுள்ள பூமிக்குடையவர் ஒருவர் தமக்கு தம்முடைய குடியானவன் ஒருவனிடமிருந்து 1315,1316,1317. பசலிகளின் குத்தகைத் தொகை கிடைக்கவேண்டுமென்று ராமனாதபுரம் ஹெட் அஸிஸ்டெண்டு கலெக்டரிடத்தில் 1908 ௵த்திய 421 நெம்பரில் சம்மரி வழக்கு செய்தார். அதன்பேரில் மதுரையிலுள்ள இராமனாதபுரம் டிஸ்டிரிக்ட் கோர்ட்டில் அப்பீல் செய்யப் பட்டது. அந்த அப்பீல் தீர்மானம் சரியல்லவென்று இந்தக் கோர்ட்டில் 2 வது அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது.

பிரதிவாதியின் முக்கிய கக்ஷிகள் என்னவென்றால்

(1) இந்தத் தாவா செய்யப்படுவதற்கு முன்னமே பூமிக்குடையவரால் பட்டா டெண்டர் செய்யப்படாததினாலே இந்தத் தாவா நிற்கத் தகுந்ததல்ல.

(2) அங்காமிகவுல் நிலத்துக்கு ஒரு குறுக்கத்துக்கு ரூபாய் 6 வீதந்தான் பகுதி செலுத்தப்படவேண்டியது; வாதி சொல்லுகிறபடி ரூபாய் 16 அல்ல.

(3) பிரதிவாதி வசமுள்ள எல்லாமாங்களுக்கும் ரூபாய் 1-14க்குமேல் வரி செலுத்த பிரதிவாதி கடமைப்பட்டவனல்ல.

(4) சிட்டு நோட்டம் என்றவரிவசூலிக்க வாதிக்கு பாத்தியமில்லை.

இந்தவழக்கிட்டகாலத்தில் 1908௵ 1-வது ஆக்ட்டென்னும் எஸ்டேட்லாண்டு ஆக்ட்டு அனுஷ்டானத்துக்கு வந்துவிட்டபடியால் பூமிக்குடையவர் குடியானவன்பேரில்வழக்கிடுவதற்கு பட்டா டெண்டர் செய்யப்படவேண்டியது அவசியமில்லையெனக் கீழ்கோர்ட்டார்கள் இருவரும் தீர்மானித்துவிட்டார்கள். இவ்வித விவாதம் இந்தக்கோர்ட்டாராலேயே தீர்மானிக்கப்பட்டு 22 மெடராஸ் லா ஜர்னல் 451–வது பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

அப்பீல்வாதிக்காக ஆஜரான மிஸ்டர் கோவிந்த ராகவய்யரவர்கள் புதிய ஆகட்டு ஏற்படுவதற்கு முந்தி நடந்த விஷயங்களுக்குப் புதிய ஆகட்டிற் கண்டபடி நடவடிக்கை நடத்துவது சரியானதல்லவென்றும் பழய 1865௵ 8-வது ஆகட்டின்படி பட்டா டெண்டர் செய்யப்படாமல் கொண்டுவந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றும் எந்தெந்தக் காலத்தில் எந்தெந்த வியாஜ்ஜிய மூலங்கள் ஏற்பட்டனவோ அந்தக்காலத்திலிருந்தசட்டங்களின்படி நடவடிக்கைகள் நடத்தப்படவேண்டு மென்றும் வாதித்தார்கள்.

புதிய ஆகட்டில் இந்தச்சம்மறிவழக்குகள்ரெவினியூகோர்ட்களிலேயே நடத்தப்படவேண்டு மென்றும் சிவில் கோர்ட்டுகளில் வழக்கிடக் கூடாதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. வியாஜ்ஜிய மூலம் இந்த சட்டமேற்பட்டதற்கு முன்னமேயே யேற்பட்டிருக்கிறதென்ற ஒருகாரணத்தைக்கொண்டு அக்காலத்தில் அனுஷ்டானத்திலிருந்த சட்டப்படி இவ்வழக்குகளை சிவில்கோர்ட்டில் கொண்டுவாமுடியாது. அதுபோலவே பட்டா டெண்டர் செய்யவில்லையென்ற காரணத்தைக் கொண்டு இந்தப்பிராதைத் தள்ளக் கூடாது.

அடுத்த விஷயம் அங்காமிகவுல் நிலத்தைப்பற்றியது. குழுக்கம் ஒன்றுக்கு ரூபா 16 வீதம் கொடுபட்டு வந்த வழக்கமிருப்பதாகக் கீழ் அப்பீல் கோர்ட்டார் கண்டுபிடித்திருக்கிறார்; அதுசரியானதென்றே நாம் அபிப்பிராயப்படுகிறோம்.

மரவரி வருஷம் 1 க்கு ரூபாய் 34-10-9 வீதம் சேரவேண்டுமென்று வாதி கேட்கிறார். பிரதிவாதி அந்த வரி வருஷம் 1 க்கு ரூபாய் 7-10 க்கு எந்த விதத்திலும் மேற்பட்டதில்லையென கூஷி

யாடுகிறார். இது விஷயமாக டிஸ்டிரிக்ட் கோர்ட்டார் சரியான பரிசிலனை செய்யாததால் அது விஷயமாக டிஸ்டிரிக்ட் கோர்ட்டார் புனர்விசாரணை செய்து பயிண்டிங்கு ஏற்படுத்தி அனுப்பவேண்டும்.

கடைசிவிஷயம் சிட்டுநோட்டத்தைப்பற்றி. இந்தவரி எதைப் பொறுத்து ஏற்பட்டதென்பதற்குத் தகுந்த ருஜுவில்லை. இது நாணயங்களைச்சோதிப்பதற்கு ஏற்பட்ட வரியென்று தெரிகிறது. இந்த வரி குடிகளால் பூமிக்குடையவருக்குக் கொடுபடுவதற்கு எவ்வித நியாயமுமில்லை.

இந்தக் கேஸ் டிஸ்டிரிக்ட் கோர்ட்டாரால் புனர்விசாரணை செய்யப்பட்டதில் மரவரி வருஷம் 1 க்கு ரூபா 7-10 செலுத்த பிரதிவாதி சம்மதித்துவிட்டதாக பயிண்டிங்கு ஏற்படுத்தி யனுப்பப்பட்டது. இந்த பயிண்டிங்கை ஹைகோர்ட்டாரவர்கள் அங்கீகரித்துத் தீர்மானஞ் செய்தார்கள்.

சென்னை ஹைகோர்ட்டு.

1910 ௵த்திய 2 வது அப்பீல் நம்பர்கள் 634 முதல் 636.

ஜட்ஜிகள். ஜஸ்டிஸ் ஸர் ரால்வ் பென்ஸன் துரையவர்கள் ஜஸ்டிஸ் மிஸ்டர் சுந்திரமய்ய ரவர்கள்	வெங்கடாஜலக் கவுண்டன் ஆ. அ. வாதிகள் V ரெங்கரெத்தினமயயர் ஆ. அ. பிரதிவாதிகள்

தீர்ப்பு 18—2—13.

2. [ரெவினியூ.]

பட்டாதாருக்குட்பட்ட குடிகள் சாஸ்வத குடிகளல்லவென்பதற்கு சட்டமில்லை யென்பது.

வாதி திருச்சினாபள்ளி ஜில்லா கறுப்பத்தூர் கிராமத்திய மிராசுதார். அந்தக் கிராமம் மொத்தம் 50 பங்குகள்; அதில் வாதிக்கு வீதம் 14½ பங்கு. தாவாவில் கண்ட நிலங்கள் கிராம சமுதாய நிலங்கள். அதாவது மிராசுதார்கள் எல்லோருக்கும் பொதுவான பாத்தியமுள்ளது. இந்த நிலங்களுக்கு மிராசுதார்கள் பேரால் பட்டா வேறபட்டிருக்கிறது. வாதி தன்னுடைய சமுதாய வீதம் 14½ பங்கு பிரிக்கப்பட்டு தனக்கு ஸ்வாதீனமாக வேண்டு

மென மற்ற மிராசுதார்கள் பேரில் 1897 ௵த்தில் வழக்கிட்டு டிக்கிரி பெற்றார். இந்த டிக்கிரிப்படி சொத்துக்களை ஸ்வாதீனப் படுத்த முயன்றபோது பிரதிவாதிகளாகிய குடிகள் தடை செய்ததாகவும், அதனாலவர்களுக்கு குடியானபாத்தியதையை விலக்கி விட்டதாக கிரமப்படி நோட்டீஸ் கொடுத்திருப்பதாகவும், அதனால் அந்தக் குடிகளிடமிருந்து சொத்து ஸ்வாதீனமாக வேண்டியதுமன்றி பகுதி பாக்கியும் வரும்படிகளுங் கிடைக்கவேண்டுமென்றும் வழக்கிட்டார்.

சில குடிகள் தங்கள் வசமிருந்த சொத்துக்களை வாதிக்கு விட்டுவிட்டார்கள்; சிலர் வாதியின் தாவாவைப்பற்றி எவ்வித எதிர்கக்ஷியும் செய்யவில்லை. பாக்கியாயுள்ள குடிகள் தங்களுக்கு தாவா சொத்தில் சாஸ்வதமான குடிக்காணி பாத்தியமிருக்கிறதென்றும், தாவா ஸ்தலங்களில் கிணறுகள் வெட்டியும் கட்டடங்கள் கட்டியும் அதிகமாக அபிவிருத்தி செய்திருப்பதாகவும், தங்களை தாவா சொத்தினின்றும் அப்புறப்படுத்தும் பட்சத்தில் ரூபா 150,000 தங்களுக்குக் கொடுபட வேண்டுமென்றுங் கக்ஷிசெய்தார்கள்.

தாவாவிற் கண்ட நிலங்கள் மூன்று வகுப்புகளுடையன. (1) தோட்டம் (2) புஞ்சை (3) கால்நடை மேயும் ஸ்தலங்கள். இந்த மூவகை நிலங்களும் ஆதியில் தரிசாகக் கிடந்ததாகவும், பிறகு பிரதிவாதிகளாகிய குடிகளால் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டதாகவும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. இந்தக் கேசை விசாரித்த டிஸ்டிரிக்ட் முனிசீப் பிரதிவாதிகள் வாதியிடத்திலாவது அவரின் முன்னோர்களிடத்திலிருந்தாவது சாஸ்வதமான குடிக்காணி பாத்தியதையைப் பெற்றார்களென்பதை பிரதிவாதிகள் ருஜூப்பிக்கவில்லையென்றும், ஆனால் தாவாவிற் கண்ட தோட்டங்களை பிரதிவாதிகள் வாதிக்கும் அவர் முன்னோர்களுக்குந் தெரிந்து அவைகளைப் பிறருக்கு அடிக்கடி பராதீனஞ் செய்துங் கிணறுகள் கட்டியும் வந்திருப்பதால், அச்சொத்தைப்பற்றினவரையில் பிரதிவாதிகளை விலக்க வாதி நடுநியாய சட்டப்படி தடைசெய்யப்பட்டிருக்கிறாரென்றும், மற்ற சொத்துக்கள் வாதிக்குக் கிடைக்கக் கூடியனவென்றுந் தீர்ப்பு செய்துவிட்டார்கள். இது விஷயமாக டிஸ்டிரிக்ட் கோர்ட்டில் அப்பீல் செய்ததில் வாதியின் தாவாப் படிக்கே எல்லா விஷயங்களைப்பற்றியுந் தீர்ப்பு செய்துவிட்டார்

இத்தீர்ப்பு ரத்து செய்யப்பட வேண்டுமென்று குடிகள் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்தார்கள்.

ஹைகோர்ட்டாரவர்கள் அடியிற்கண்டபடி இஷ்யூக்களேற்படுத்தி அவைகளைப்பற்றி கீழ்க்கோர்ட்டார் விசாரித்துத் தெரிவிக்கும்படி கேசை ரிமாண்டு செய்தார்கள்.

(1) பிரதிவாதிகள் வருஷப் பிரதி வருஷம் வைக்கவும் நீக்கப்படவும் அருகமுள்ள குடிகளா? அல்லது அவர்களுக்குத் தாவா சொத்தில் சாஸ்வதமான குடிக்காணி பாத்தியமுண்டா?

(2) பிரதிவாதிகளுக்கு சாஸ்வதக் குடிக்காணி பாத்திய மேற்பட்டிருக்கிறதை வாதிகள் மறுப்பதற்கு தடைப்பட்டிருக்கிறார்களா?

(3) கிணறுகள் வெட்டுதல் முதலியனவற்றிற்கு பிரதிவாதிகளுக்கு காம்பன்ஸேஷன் கிடைக்கத் தக்கதா?

(4) எவ்விதமான எவ்வளவு தொகை பொறுமானமுள்ள வீடுகள் தாவா ஸ்தலங்களில் கட்டப்பட்டிருக்கின்றன?

(5) பிரதிவாதிகள் அப்புறப்படுத்தப்படும் பட்சத்தில் அவர்களிடமிருந்து எவ்வளவுவரும்படி வாதிக்கு கிடைக்கக்கூடியது?

ஜாஸ்தி விருத்திகள் செய்யப்பட்டிருக்கிற தோட்டங்களைப் பற்றின வரையில் பிரதிவாதிகளுக்கு ஒரு சாஸ்வத குடிக்காணி பாத்திய மிருக்கிறதென்றும், மற்ற நிலங்களில் பிரதிவாதிகளுக்கு எவ்வித பாத்தியமு மில்லையென்றும் பயிண்டிங்கு ஏற்படுத்தி அனுப்பினார்கள்.

தீர்ப்பு:—இந்தக் கிராமம் சமுதாயம் 3008 ஏகர் நிலங்களில் 1600 ஏகர்தான் பட்டாவுக்கு வந்திருக்கிறது. இந்த சமுதாய நிலங்கள் ஆதியில் தரிசாக கிடந்ததாகவும் இந்தக் குடிகளால் அவைகள்மிகுந்த அபிவிருத்திக்குக் கொண்டுவரப்பட்டிருப்பதாகவும் அவைகளை அவர்கள் வெகு நீண்டகாலமாக அனுபவித்து வருவதாகவும் வாதிகள் ஸ்வாதீனத்தில் எந்தக்காலத்திலுமிருந்ததில்லையென்றும், ருஜூக்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவர்கள் நிரந்தரமாக ஒரே வித வரி மிராசுதார்களுக்குக் கொடுத்துக்கொண்டு வந்திருக்கிறார்கள். இவர்கள் மிராசுதார்களுடைய தடங்கலன்றியில் தங்கள் தோட்டங்களுக்கு விசேஷ தொகை செல

வழித்து அபிவிருத்தி செய்திருக்கிறார்கள். நிலபட்டா மிராசுதாருக்கு ஏற்பட்டிருக்கும் ஒரு காரணத்தைக் கொண்டு மட்டில் பிரதிவாதிகளை அச்சொத்தினின்றும் விலக்குவது நியாயமல்ல; வாதி வக்கில் சொல்லும் டிரான்ஸ்பர் அவ் பிராபர்டி ஆக்ட் 106 வது செக்ஷன் தாவா கேசுக்கு ஒற்றுமையானதல்ல. கால்நடைகள் மேயும்படியான நிலத்துக்கு மட்டில் பிரதிவாதிகளுக்கு எவ்வித சாஸ்வத பாத்தியமுங் கிடையாது. அதைப்பற்றின வரையில் வாதிக்குத் தீர்ப்பு செய்து மற்ற பரிகாரங்களைப்பற்றி வாதியின் வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டது.

சென்னை ஹைகோர்ட்டு.

1910 ௵த்திய 2 வது அப்பில் நம்பர் 280.

ஜட்ஜிகள்.	
ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள்	எல்கூர் இராமச்சந்திரய்யா ஆ. அ. வாதிகள்.
	V
ஜஸ்டிஸ் டியாப்ஜீ அவர்கள்	சவ்வா பாபன்னு ஆ. அ. பிரதிவாதிகள்.

தீர்ப்பு 20—3—1913.

1. [சிவில் ப்ரொஸீஜர் கோடு.]

பெந்தக டிக்கிரி கடனுக்காக பெந்தக சொத்தை எலமெடுத்தவன் அச்சொத்து தனக்கு ஸ்வாதீனமாக வேண்டுமென வழக்கிட்டு வியாஜ்ஜியம் தள்ளுபடி செய்யப்பட்டாலும் அதே சொத்தைப்பற்றி மறுபடியும் ரிடெம்ஷன் வழக்கு கொண்டுவரலா மென்பது.

கர்னூல் டிஸ்டிரிக்ட் முனிசீப் கோர்ட்டு 1905 ௵த்திய அசல் 359 நம்பரின் பேரில் கர்னூல் டிஸ்டிரிக்ட் கோர்ட்டில் 1907 ௵த்திய 249 வது அப்பீல்.

சொத்துக்குடையவனிட மிருந்து 2 ம் பிரதிவாதி 1882 ௵த்தில் பெந்தகம் பெற்றார். அச்சொத்தை யவரே சொத்துக்குடையவரிட மிருந்து 1887 ௵த்தில் சாசனம் பெற்றார். இதே சொத்து 4 ம் பிரதிவாதிக்கு 1883 ௵த்தில் பெந்தகம் வைக்கப்பட்டது. அவர் தன்னுடைய பெந்தகப் பத்திரப்படி வழக்கிட்டு டிக்கிரி பெற்று அச்சொத்தை ஏலத்தில் விற்று முதல் செய்ததில் அதைவாதி ஏலமெடுத்தார். இந்த இரண்டாவது பெந்தக வழக்கில்

2 ம் பிரதிவாதி கக்ஷிக்காரராகச் சேர்க்கப்படவில்லை. வாதி தான் பெற்ற ஏல சர்டிபிகேட்டுப்படி சொத்து ஸ்வாதீனமாக வேண்டுமென வழக்கிட்டதில் அது தள்ளுபடி யாகிவிட்டது. அதனால் வாதி தான் ஏலமெடுத்த சொத்து 2 ம் பிரதிவாதியிட மிருந்து மீட்கப்பட வேண்டுமென 2 வது வழக்குக்கொண்டுவந்தார். கீழ்க்கோர்ட்டார் வாதிக்கு அனுகூலமாகத் தீர்ப்பு செய்துவிட்டதின் பேரில் 2 ம் பிரதிவாதி அடியிற்கண்ட விஷயங்களைக் கண்டு ஹைகோர்ட்டில் அப்பீல் செய்தார்.

(1) 1883 ௵த்தி லேற்பட்ட 4 ம் பிரதிவாதியின் 2 வது பெந்தகம் மோசக்கருத்துடன் ஏற்பட்டதென்பதை வாதி ருஜுப்பிக்கத் தடைப்படுத்தப்பட்டிருக்கிறார்.

(2) 4 ம் பிரதிவாதி தன்னுடைய பெந்தகப் பத்திரத்தின் பேரில் 1-2 பிரதிவாதிகளை கக்ஷிக்காரராகச் சேர்க்காமல் வழக்கிட்டு டிக்கிரி பெற்று அந்த டிக்கிரி கடனுக்காக ஏலம் போட்டு அதை ஏலத்தில் எடுத்த வாதி தான் பெற்ற ஏல சர்டிபிகேட்டுப்படி சொத்து ஸ்வாதீனமாக வேண்டுமென வழக்கிட்டு அது தள்ளுபடி செய்யப்பட்ட பின்பு அதே விஷயத்தைப்பற்றி புனர் வழக்கிட்டது சிவில் ப்ரொஸீஜர் கோடு ஆர்டர் II ரூல் 2 ப்படி (பழய செக்ஷன் 43) செல்லத்தகுந்ததல்ல.

(3) 4 ம் பிரதிவாதிக்கு ஏற்பட்ட 2 வது பெந்தகம் தெரியாமல் நல்ல எண்ணத்துடன் அந்தப் பெந்தக சொத்தைச் சாசனம் பெற்று விசேஷ தொகை செலவழித்து விருத்தி செய்திருப்பதால் அத்தொகையுங் கொடுத்து மீட்கப்படவேண்டும்.

தீர்ப்பு:—2 ம் பிரதிவாதி தான் எழுத்துமூலமாகக்கொடுத்த ஸ்டேட்மெண்டில் 4 ம் பிரதிவாதிக்கு ஏற்பட்ட பெந்தகம் மோசவகையாக ஏற்பட்டதென்று சொல்லவில்லை. அதனால் அது விஷயமாக எவ்வித இஷ்யூவும் ஏற்படவில்லை. இது இவருடைய பின்யோஜனையாகையால் இது விஷயம் கவனிக்கத்தக்கதல்ல.

பெந்தக சொத்தை ஏலமெடுத்தவன் அச்சொத்து மீட்கப்பட வேண்டுமென்றும், மற்றப் பரிகாரங்கள் கிடைக்கவேண்டுமென்றும் வழக்கிடக்கூடும். அவ்வழக்கிட வேண்டியது அவசியம். (இ-லா-ரி 20 சென்னை 82, 26 சென்னை 486, 32 சென்னை 485 இந்தத் தீர்மானங்களைப் பார்க்க). இவ்வழக்கு சி - பு கோடு ஆர்டர் II ரூல் 2 ப்படி தோஷ மேற்பட்டதென்று சொல்லக்கூடாது.

3 வது கக்ஷியைப் பற்றினவரையில் 2ம் பிரதிவாதி தன்னுடைய ஸ்டேட்மெண்டில் 4ம் பிரதிவாதிக்கு ஏற்பட்ட பெந்தக விபரந் தெரியாமல் தான் விசேஷ தொகை செலவழித்து விருத்தி செய்ததாகச் சொல்லவில்லை. ஆகையால் அந்தக்கக்ஷிக்கு டிரான்ஸ்பர் அவ்பிராபர்டி ஆக்ட்டு 51 வது செக்ஷன்படி தோஷ மேற்பட்டு விட்டது.

இதனால் 2 வது அப்பீல் செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

அலகாபாத் ஹைகோர்ட்டு

1913 ஞூ ருத்திய நிறைவேறு மனு 2 வது அப்பீல் நம்பர் 377.

ஜட்ஜிகள்.	ஷியாம்லால் அ. வாதி
ஜஸ்டிஸ் மிஸ்டர் லேலி துரையவர்கள்	V
	ஷியோபாரன்சிங் அ. பிரதிவாதி

தீர்ப்பு 24—6—13.

2. [சிவில் புரொஸீஜர் கோடு.]

பெந்தக டிக்கிரிதாரன் தன்னுடைய டிக்கிரி நிறைவேற்றப்படுவதில் அலக்ஷியமாக விருந்துவிட்டு பிறகு ஆளைப் பொறுத்து டிக்கிரி செய்யப்பட வேண்டுமென்று கேட்கப் பாத்தியமில்லை யென்பது.

ஷியோபாரன்சிங் தான் டிக்கிரி கடன்காரனிட மிருந்து 1898 ஞூ பிப்பரவரி மாதம் எழுதி வாங்கிய பெந்தகப் பத்திரப்படி தொகை கிடைக்கவேண்டுமென வழக்கிட்டதில் பின்பெந்தகதாரனாகிய கோடிசிங்கும் பிரதிவாதியாகச் சேர்க்கப்பட்டிருந்தான். இந்த ஷியோபாரன்சிங் இவருக்கு முன் ஏற்பட்டிருந்த இரண்டு பெந்தக பத்திரத்தொகைகளை இவர் டிக்கிரி தேதி முதல் இரண்டுமாத கெடுவுக்குள் கோர்ட்டில் கட்டிவிட்டு தாவா பெந்தக சொத்துக்களை ஏலவிற்று முதல் செய்யலாமென்றும், பின் பெந்தகதார் கோடிசிங் இந்த ஷியோபாரன்சிங்குடைய பெந்தக டிக்கிரித் தொகையையும் இவருக்கு முற்பட்ட இரண்டு பெந்தகத் தொகைகளையும் மேற்சொன்ன டிக்கிரி தேதி முதல் ஆறுமாதக் கெடுவுக்குள் கோர்ட்டில் கட்டிவிடும்பட்சத்தில் ஷியோபாரன்சிங்குடைய பெந்தக டிக்கிரி ரத்து செய்யப்படுமென்றும், தீர்ப்பு செய்யப்பட்டது.

ஷியோபார்ன்சிங் டிக்கிரியிற் கண்ட கெடுப்படி முன் பெந்தக பத்திரத் தொகைகள் இரண்டையும் கோர்ட்டில் கட்டிவிட்டார். பின் பெந்தகதாரன் கோடிசிங் இந்த இரண்டு முன் பெந்தகத் தொகைகளையுங் கோர்ட்டில் கட்டாதிருந்ததுடன் ஷியோபாரன் சிங்குக்குச் சேரவேண்டிய டிக்கிரித் தொகை முழுவதுங் கொடாமல் சிலபாக மட்டில் கொடுத்தான்.

கோடிசிங்கு தனக்குக் கிடைத்த பெந்தகபத்திரப்படி வழக்கிட்டதில் ஷியோபார்ன்சிங்கும் பிரதிவாதியாகச் சேர்க்கப்பட்டார். இதன்பேரி லேற்பட்ட டிக்கிரியில் ஷியோபார்ன்சிங்குக்கு ஏற்பட்ட டிக்கிரித் தொகை மட்டில் பின் பெந்தகதாரன் கோடிசிங்கு செலுத்தவேண்டுமெனக் கண்டிருந்தது. இந்த ஷியோபாரன்சிங்கால் செலுத்தப்பட்ட இரண்டு முன் பெந்தகத் தொகைகளும் இந்தக் கோடிசிங்கால் செலுத்தப்பட வேண்டுமெனசொல்லப்படவில்லை. இந்த ஷியோபாரன்சிங் கோர்ட்டில் ஆஜராகி அந்த விஷயங்களைப்பற்றி ஆக்ஷேபிக்கவுமில்லை. கோடிசிங் தன்னுடைய டிக்கிரியை நிறைவேற்றி பெந்தக சொத்துக்களில் சிலவற்றை ஏலம் போட்டதில் அவைகளை ஷியோபார்ன்சிங்குடைய பிள்ளைகளை ஏலத்தி லெடுத்துவிட்டார்கள் இவ்விதம் ஏலத்தில் விடப்பட்ட சொத்துக்கள் போக பாக்கிச் சொத்துக்களின் பேரில் ஷியோபார்ன்சிங் தன் டிக்கிரியை நிறைவேற்றி பெந்தக சொத்தை ஏலவிற்று முதல் செய்தார். இதனால் இவருடைய டிக்கிரி கடன்கள் சில பாக்கியிருந்தன. இந்தத் தொகைக்கும் இவர் முன் பெந்தகங்களுக்கு செலுத்திய தொகைகளுக்கும் சிவில் புரோஸீஜர் கோட் ஆர்டர் 34 ரூல் 6 படி ஆளைப் பொறுத்து டிக்கிரி செய்யப்பட வேண்டுமென, மனுக் கொடுத்தார். இவர் மனுப்படி கீழ்க் கோர்ட்டார்கள் இருவரும் உத்தரவு செய்துவிட்டார்கள்.

இதன் பேரில் டிக்கிரி கடன்காரர் அடியிற்கண்ட விஷயங்களைக் கண்டு ஹைகோர்ட்டில் அப்பீல் செய்தார்.

(1) இரண்டுமுன் பெந்தகபத்திரத் தொகைளுக்கும் ஆளைப் பொறுத்து தொகைவசூலிக்க காலாவதிதோஷ மேற்பட்டுவிட்டது. இதற்குக்காலாவதி வரவில்லையென்று டிக்கிரிதாரன்ருஜூப்பிக்கவில்லை.

(2) டிக்கிரிதாரன் இந்த ஆளைப்பொறுத்த பாத்தியங்களை விட்டுவிட்டவராகிறார்.

(3) பின் பெந்தகதாரன் கோடிசிங் இந்தடிக்கிரி தாருடைய தொகையும் இதற்கு முன்னுள்ள இரண்டு பெந்தகப்பத்திரத் தொகைகளையுங் கோர்ட்டில் கட்டாதிருந்ததால் டிக்கிரி தாரன் தன்டிக்கிரியிற்கண்ட முழுசொத்துக்களையும்ஏலத்துக்குக்கொண்டுவரவேண்டியது மெத்தஅவசியமானது, பின்பெந்தகதாரன்அவனுடைய டிக்கிரிக்கு சிலபாக சொத்தை யேல விற்றுமுதல் செய்யும்படி செய்தது பிசகு; அவரும் டிக்கிரிதாரனும் ஒன்றுசேர்ந்து மோசவகையாக ஏலம்போடுவித்ததால் ஆளைப் பொறுத்து பாக்கித் தொகைக்கு டிக்கிரி செய்வது நியாயமானதல்ல.

தீர்ப்பு:—டிக்கிரிதாரன் தனது டிக்கிரியிற் கண்ட எல்லா சொத்துக்களையும் ஏலவிற்றுமுதல் செய்யவேண்டியது அவசியமானதாகவிருக்க சிலபாக சொத்தை அன்னியன் ஏலவிற்றுமுதல்செய்து அவனுடைய டிக்கிரி கடனையுள்ளவடைத்துக் கொள்ளும்படி வேண்டுமென்று அலக்ஷியமாக விருந்துவிட்டு பின்பு ஆளைப்பொறுத்து டிக்கிரியாக வேண்டுமென்றுகேட்பது நியாயமானதல்ல, இவர்மகனே இந்தப் பெந்தகச்சொத்தை ஏலமெடுத்திருப்பதும் சந்தேகத்துக்கிட மாயிருக்கிறது. சிவில் புரொஸீஜர் கோடு ஆர்டர் 34 ரூல் 6படி உத்திரவு செய்வது கோர்ட்டாருடைய இஷ்டத்தைப் பொறுத்த தேயன்றி கட்டாயமாகச் செய்யக் கூடியதல்ல. டிக்கிரிதாரன் எல்லா சொத்துக்களையும் ஏலவிற்றுமுதலுக்குக் கொண்டுவாராமலிருந்ததும் பிசகு; கீழ்கோர்ட்டார்கள். ஆளைப் பொறுத்து டிக்கிரி செய்தது பிசகு; அதனால் அந்த டிக்கிரிகளை ரத்து செய்கிறோம்.

சென்னை ஹைகோர்ட்டு.

1911 ௵த்திய 2 வது அப்பீல் நம்பர் 1994.

ஜட்ஜிகள்.	
ஜஸ்டிஸ் மிஸ்டர் சங்கரநாயரவர்கள்	சயிது சுலேமான் சாகிப் ஆ. அ. வாதிகள்
	V
ஜஸ்டிஸ் மிஸ்டர் ஓல்டுபீல்ட் துரையவர்கள்	பொன்டாலாஹுாமன் சாகிப் ஆ. அ. பிரதிவாதிகள்

தீர்ப்பு 26—3—13.

3. [சிவில் புரோஸீஜர் கோடு.]

பாத்தியஸ்தாபன வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதானது அச் சோத்து ஸ்வாதீனமாக வேண்டுமென்று பிற்பட்டு கொண்டுவரும் வழக்குக்கு தடையாக மாட்டாதென்பது.

வாதிகள் தங்களுக்கு ஒரு சொத்திலுள்ள பாத்தியம் ஸ்தாபிக்கப்பட வேண்டுமென பிரதிவாதிகள் பேரில்வழக்கிட்டதில் அந்தச் சொத்து வாதிகள் வசமில்லையென்றும், அதனால் பாத்திய ஸ்தாபன பரிகாரமட்டில் கேட்டது சரியானதல்லவென்றும், சொத்து ஸ்வாதீனமுங் கிடைக்கவேண்டுமென வழக்கிட்டிருக்க வேண்டியதென்றும் வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

பிறகு வாதிகள் தங்கள் வசமிருந்த சொத்துக்களை பிரதிவாதிகள் ஆக்கிரமித்து ஸ்வாதீனஞ் செய்துகொண்ட தாகவும், தங்களுக்கு அச்சொத்திலுள்ள பாத்தியம் ஸ்தாபிக்கப்பட்டு சொத்து ஸ்வாதீனமாகவேண்டுமென்றும் இரண்டாவது வழக்கு அதே பிரதி வாதிகள் பேரிற் கொண்டுவந்தார்கள்.

இதே விஷயத்தைப்பற்றி வாதிகள் ஏற்கனவே வழக்கிட்டு அது தள்ளுபடி செய்யப்பட்டிருப்பதால் அதே விஷயமாக புனர் வழக்கிட்டது சிவில் புரொஸீஜர் கோடு ஆர்டர் 11 ரூல் 2, 3 படி செல்லத்தக்கதல்லவென்று பிரதிவாதிகள் கக்ஷிபாடினதில் வாதிகளின் தாவா கீழ்கோர்ட்டாரால் தள்ளுபடி செய்யப்பட்டது. அதன்பேரில் வாதிகள் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்தார்கள்.

தீர்ப்பு:—வாதிகள் இந்த இரண்டாவது வழக்கிடுவதற்கு சி. பு. கோடு ஆர்டர் 2 ரூல் 2, 3 படி தடைப்பட்டிருக்கிறார்களா இல்லையாவென்று பார்ப்பதற்கு முன்வழக்கிலேற்பட்ட வியாஜ்ஜியமூலமென்ன, இரண்டாவது வழக்கிலேற்பட்ட வியாஜ்ஜிய மூலமென்னவென்பதை கவனிக்கவேண்டியது மெத்த அவசியமென்றும் பாத்திய ஸ்தாபன வழக்கு கொண்டுவருவதற்கும், சொத்து ஸ்வாதீனமாக வேண்டுமென்று கொண்டுவரும் வழக்குக்கும், வியாஜ்ஜிய மூலங்கள் வெவ்வேறானவையென்றும், இரண்டு வியாஜ்ஜிய மூலங்களும் ஒன்றாக இருந்தால்மட்டில் வாதிகளின் தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டியதேயன்றி மற்ற கேஸ்களுக்கு அது ஒற்றுமையில்லையென்றும், வாதிகள் இந்த புனர்வழக்கிட்டது கிரமமானதென்றும், இ-லா-ரி 26 சென்னை 760, 29 சென்னை 153, பிரிவி கவுன்ஸில் தீர்ப்பு 16 கல்கத்தா 98 இந்த தீர்மானங்களை யனுசரித்து கீழ்க் கோர்ட்டார் செய்த

தீர்ப்பை ரத்துசெய்து கேசின் சாராம்சத்தில் பிரவேசித்து விசாரித்து தீர்ப்பு செய்யும்படி யுத்திரவு செய்தார்கள்.

சென்னை ஹைகோர்ட்டு.

1909 ௵த்திய அப்பீல் நெம்பர் 200.

ஜட்ஜிகள்.	அருணாஜலஞ் செட்டி ஆ. அப்பீல்வாதிகள்
ஜஸ்டிஸ் மில்லர் துரை யவர்கள்	V
ஜஸ்டிஸ் அப்டர்ரகீம் அவர்கள்	பிரபய்ய செட்டி ஆ. அப்பீல் பிரதிவாதிகள்

[லிமிடேஷன் ஆக்ட்டு 22 வது செக்ஷன்]

மேஜரான வாதிகள் மைனர்களென்று பிராதிற் சொன்னதினால் அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படக் கூடாதென்பது.

வடவார்க்காடு டிஸ்ரிக்ட் கோர்ட்டு 1908 ௵த்திய அசல் 5 நம்பரின் பேரில் அப்பீல்.

வாதிகளின் தகப்பன் லெக்ஷ்மணஞ்செட்டியாருக்கு 1-2 பிரதி வாதிகள் பிராமசரி நோட்டு எழுதிக்கொடுத்து கடன்வாங்கியிருந்தார்கள். அவருடைய மகன்கள் நால்வர் மைனர்களென்று கண்டு அவர்களுடைய தாயார் அவர்களுக்கு அடுத்த சிநேகிதியாக அந்த நோட்டின் பேரில் வழக்கிட்டாள். காலாவதி யேற்படுவதற்கு முதனாள் தான் இந்தப் பிராது கொடுக்கப்பட்டது.

இந்தப் பிராது கொடுத்த காலத்தில் 1-2 வாதிகள் மேஜராகவிருந்தபடியால் அவர்களுக்கு அவர்களின் தாயார், அடுத்த சிநேகிதியாக விருந்து வழக்கிட்டது செல்லாதென்றும், இந்தப் பிராது தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றும், முதல் பிரதிவாதி கக்ஷியாடினார். 1-2 வாதிகளுக்கு சம்மன் அனுப்பப்பட்டது. அவர்கள் ஆஜராகி ஸ்டேட்மெண்டு கொடுத்தார்கள். தாவா பிராது கொடுத்த காலத்தில் தான் மேஜராக விருந்ததாகவும் தவறுதலாக நல்ல எண்ணத்துடன் தன்னை மைனரென்று பிராதிற் சொல்லியிருப்பதாகவும் தான் இந்த வழக்கை நடத்த சம்மதமுடையவராக விருப்பதாகவும் முதல்வாதி ஸ்டேட்மெண்டு கொடுத்தார்.

முதல்வாதி மேஜராக விருந்திருப்பதால் அவருக்காக அடுத்த சிநேகிதி பிராதில் கையெழுத்து செய்திருப்பது சட்டப்படி செல்லத்தக்கதல்லவென்றும், மற்றவாதிகள் மட்டில் வழக்கிடுவதும் செல்லத்தக்கதல்ல வென்றும், எல்லோருஞ் சேர்ந்து கொண்டு வராத இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியதென்றும் வாதிகளின் தாவா டிஸ்டிரிக்ட் கோர்ட்டாரால் தள்ளுபடி செய்யப்பட்டது.

வாதிகளின் தகப்பன் லேவாதேவி செய்யும் ஒரு நாட்டுக்கோட்டை செட்டியென்றும், அவருடைய காரியங்களெல்லாம் ஏஜண்டுகள் மூலமாகவே நடத்தப்பட்டு வருகின்றன வென்றும், அவர்கள் வாதிகளின் வயதை தெரிந்துகொண்டிருக்கமாட்டார்களென்றும், மேஜரான வாதிகள் பிராதில் கையெழுத்து உறுதி மொழி செய்யாவிட்டாலும் அவர்களின் பெயர்கள் பிராதில் வாதிகளென்று கண்டிருப்பதே போதுமானதென்றும், அவர்களை மைனர்களென்று சொல்லி யிருப்பது பிசகான விவரணமென்று சொல்லத்தகுமே யன்றி, பிராதிற்கண்ட விஷயங்களுக்கு அது பாதகமாகமாட்டாதென்றும், அப்பீல் வாதிகளுக்காக மிஸ்டர் L.A. கோவிந்தராகவய்யரவர்கள் இ-லா-ரி 21 கல்கத்தா 866, 19 கல்கத்தா 127 இவை முதலிய ஆதாரங்களை காட்டி வாதித்தார்.

அடுத்த சிநேகிதி மேஜரான வாதிக்காக நடவடிக்கைகள் நடத்த எவ்வித அதிகாரமுமில்லை யென்று அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர் B. நரசிம்மராவ் அவர்கள் இ-லா-ரி 20 அலகபாத் 190 தீர்மானத்தை தன் கக்ஷிக்கு ஆதாரமாக எடுத்துச் சொன்னார்.

தீர்ப்பு:—முதல்வாதி மைனரென்று பிசகாக பிராதிற் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அவரை வாதியென்று பிராதிற் கண்டிருக்கிறது. அவர் பிராதில் கையெழுத்து உறுதி மொழி செய்யாத ஒரு காரணத்தைக் கொண்டே இவர் இதிற் கக்ஷிக்காரனல்லவென்று சொல்லக்கூடாது. (இ-லா-ரி 17 கல்கத்தா 580), சிவில் புரொஸீஜர் கோடு 7 வது ஆர்டர் 2 வது ரூல்படி பிராதில் கையெழுத்து உறுதிமொழியில்லாத காரணத்தைக் கொண்டு அது தள்ளுபடி செய்யப்படக் கூடாது. சிவில் புரொஸீஜர்கோடு 153 வது செக்ஷன்படிக்கும் 6 வது ஆர்டர் 17 வது ரூல்படிக்கும் கையெழுத்து உறுதிமொழி இவைகள் கேசின் நடவடிக்கை

காலங்களில் எந்த சமயத்திலும் வாங்கப்படலாம். புதிதாகவாதி யொருவன் பிராதிற் சேருவதாக இருந்தால்மட்டில் லிமிடேஷனுக்ட்டு 22 வது செக்ஷன்படி அவ்விதஞ் சேருந் தேதியிலிருந்து காலாவதி தோஷம் பார்க்கவேண்டும். இந்தக் கேசில்அந்தப் படிக்கில்லை.

இந்த வியாஜ்ஜியத்தை தன்பேரால் நடத்த முதல்வாதி 'சம் மதிக்கவில்லை யென்றும், அவன் சம்மதிக்கு விரோதமாக அடுத்த சினேகிதி வழக்கிட் டிருக்கிறாள் என்றும் அப்பீல் பிரதிவாதிகள் ருஜுப்பித் திருக்கவேண்டும். அவ்வித ருஜுக்கள் யாதொன்று மில்லை. இதற்கு நேர்விரோதமாக முதல்வாதி ஆஜராகி தன்னுடைய தாயாருடைய நடவடிக்கைகளை தான் ஒத்துக்கொண்டு தான் இவ்வழக்கை மேல் நடவடிக்கை நடத்த சம்மத முடையவராக விருப்பதாகத் தெரிவித்துக்கொண் டிருக்கிறார்.

மைனரென்று பிசகாக எழுதியிருக்கும் ஒரு காரணத்தைக் கொண்டு முதல்வாதி புதிதாக வந்த வாதியென்று சொல்லப் படக்கூடாதென்றும், அப்பீலை யங்கீகரித்து டிஸ்ரிக்ட் ஜட்ஜி கேசை புனர்விசாரணை செய்து முடிவு செய்யும்படி தீர்மானிக் கப்பட்டது.

இந்தக் கோர்ட்டுச் செலவுகள் வியாஜ்ஜியச் செலவுகளில் சேர்க்கப்படும்.

சென்னை ஹைகோர்ட்டு.

1912 ஞு த்திய 2 வது அப்பீல் நம்பர் 62.

ஜட்ஜிகள்.	
ஜஸ்டிஸ் சங்கரநாயர் அவர்கள்	நாராயண அய்யர் ஆ. அ. வாதிகள்
	V
ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள்	ருமய்யர் ஆ. அ. பிரதிவாதிகள்

தீர்ப்பு 1913 ஞு த்திய ஏப்ரல்மூ 13வ

2. [லிமிடேஷன் ஆகட்டு.]

"தாயைப்பெற்ற பாட்டி செய்த பராதீனம் ரத்துசெய்யப்பட வேண்டுமென ஸ்வீகாரப் பேரன் தான் ஸ்வீகாரஞ்செய்து கொள்ளப்பட்ட தேதிமுதல் 6 வருடங்களுக்குள் வழக்கிடலாமென்பதும்

ஒரு தஸ்தாவேஜியில் ஒருவன் சாக்ஷி போடுவதைக் கொண்டு அதிற்கண்ட சங்கதிகளுக்கு அவன் கட்டுப்பட்டவனாகிறானென்ப பதும்".

திருநெல்வேலி அடிஷனல் டிஸ்டிரிக்ட் முனிசிப் கோர்ட்டு 1909 ஞு த்திய அசல் 19 நம்பர் தீர்ப்பின் பேரில் திருநெல்வேலி டிஸ்டிரிக்ட் கோர்ட்டில் 1910 ஞு த்திய 654 நம்பர் முதலாவது அப்பீல்.

அறம்வளர்த்தம்மாள் என்ற விதந்துவுக்கு 1-2 பிரதிவாதிகள் பெண்கள். வாதி இந்த முதல்பிரதிவாதியின் ஸ்வீகாரகுமாரன். அந்த அறம்வளர்த்தம்மாள் தான் அனுபவித்துவந்த தனது புருஷன் சொத்துக்களை 1881,1889 வருடங்களில் I-II a இந்த அடையாள ஆதரவுகளின்படி பராதீனஞ் செய்துவிட்டு 1899 ஞு த்தில் இறந்துவிட்டாள். 1-2 பிரதிவாதிகள் அவளுக்கு பெண்களாகவும் நேரான அனந்தரவார்சு பாத்தியமுடையவர்களாகவு மிருக்கிறார்கள். வாதி முதல் பிரதிவாதியால் 1903 ஞு மே மாதத்தில் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளப் பட்டான். இந்த வாதி தான் பின்னிட்ட அனந்தரவார்சு பாத்தியமுடையவனென்றும், தனது தாயைப்பெற்ற பாட்டியார் செய்த பராதீனங்கள் ரத்து செய்யப்பட வேண்டுமென்றும் 1907 ஞு த்தில் வழக்கிட்டான். கீழ் அப்பீல் கோர்ட்டார் அடியிற்கண்ட காரணங்களினால் வாதியின் தாவாப்படி தீர்ப்புச் செய்தார்கள்.

(a) I&II (b) இந்த அடையாள ஆதிரவுகளின்படி செய்யப் பட்ட பராதீனங்கள் அனந்தர வார்சுகளைக் கட்டுப்படுத்தக் கூடிய கடன்களுக்காக ஏற்பட்டவைகளல்ல.

(b) பின்னால் வார்சாக வரக்கூடிய அனந்தர வார்சுகளின் சாக்ஷியம் மேலே சொன்ன தஸ்தாவேஜிகளில் வாங்கியிருப்பதினால் அவர்கள் அந்தப் பராதீனங்களுக்குச்சம்மதித்தவர்களென்று சொல்லக்கூடாது.

(c) II (b) அடையாள ஆதரவில் அடுத்த ஆண் அனந்தர வார்சுகள் சாக்ஷிபோடவில்லை. அந்த ஆதரவிற்கண்ட சொத்துக்கள் மறுபடியும் அறம்வளர்த்தம்மாளுக்கும் அவள் பெண் 2 ம் பிரதிவாதிக்கும் II (a) அடையாள ஆதரவின்படி விற்கப்பட் டிருக்கிறது. அச்சொத்தின் சிலபாகம் கீழ் நிலமட்டில் 2 ம் பிர

திவாதியால் 3 ம் பிரதிவாதிக்கு விற்கப்பட்டிருக்கிறது. அந்த சாதனத்தில் அடுத்த ஆண் அனந்திரவார்சு சாக்ஷிபோட்டிருக்கிறார். அவர் அவ்விதம் சாக்ஷிபோட்டிருப்பதைக்கொண்டு II (b) அடையாள பராதீனத்துக்கு அவர் சம்மதித்தவரென்று சொல்லக் கூடாது.

இத்தீர்ப்பு சட்டவிரோதமானதென்று 3 முதல் 6 பிரதிவாதிகள் அடியிற்கண்ட விஷயங்களைக்கண்டு ஹைகோர்ட்டில் அப்பீல் செய்தார்கள்.

(1) தாவாவிற்கண்ட பராதீனங்கள் செய்யப்பட்ட தேதி முதல் 6 வருடங்களுக்குள்ளாவது அல்லது 12 வருடங்களுக்குள்ளாவது அவைகள் ரத்து செய்யப்படவேண்டுமென வழக்குகள் கொண்டுவரப் படாததால் வாதியின் தாவா தள்ளுபடிக்கு அருகமானது.

(2) அடுத்த ஆண் அனந்தர வார்சு I அடையாள ஆதாவில் சாக்ஷிபோட்டிருப்பதால் அவர் அந்தப் பராதீனத்துக்கு சம்மதித்தவராகிறார். அது மற்ற அனந்தர வார்சுகளையுங் கட்டுப்படுத்தும்.

(3) II அடையாள ஆதாவில் அடுத்த அனந்தரவார்சு சாக்ஷிபோட்டிருப்பதால் அவர் II (b) அடையாள ஆதாவிற்கண்ட பராதீனத்துக்கும் சம்மதித்தவராகிறார். ஆகையால் அந்தப் பராதீனத்துக்கும் மற்ற அனந்தரவார்சுகள் கட்டுப்பட்டவர்களாகிறார்கள்.

தீர்ப்பு:—பின்னிட்டுவரும் அனந்தரவார்சுகள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே வியாஜ்ஜிய மூல மேற்பட்டிருப்பதால் வாதியின் தாவாவுக்கு எவ்வித காலாவதி தோஷமுமில்லை. சரியான புத்தியுடைய வயது வந்த அடுத்த அனந்தர வார்சுகளிடம் சாக்ஷி வாங்குவதின் கருத்து அந்தப் பராதீனம் கிரமமானதென்பதை ருஜுப்பிக்கிறதற்கே யன்றி வேறல்ல. இந்த தஸ்தாவேஜியிற்கண்ட விஷயங்கள் யாதொன்றுந் தெரிந்து கொள்ளாமலே சாக்ஷிபோட்டேன் என்று அந்த அனந்தரவார்சு திருப்திகரமாக ருசுப்படுத்தினாலல்லது அவர் அந்தப் பராதீனத்திற்குச் சம்மதித்தவராக எண்ணப்படுவார். இந்தப் பராதீனங்கள் அடுத்த அநந்தர வார்சுகளைக்கட்டுப்படுத்தக் கூடியதாக விருப்பதால்

இதற்கு வாதியுங் கட்டுப்பட்டவராகிறார். ஆகையால் கீழ்கோர்ட்டார் செய்த தீர்ப்பு ரத்துசெய்யப்பட்டு வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

அலகபாத் ஹைகோர்ட்டு.

1912 ஹுத்திய 2 வது அப்பீல் நம்பர் 1122.

ஜட்ஜி.	
ஜஸ்டிஸ் ஸர் P. C. பனர்ஜி அவர்கள்	சண்டி பிரசாத் அ. வாதி V நண்ட்கிஷ் ஷோர் ஆ, அ, பிரதிவாதிகள்

தீர்ப்பு 11—6—13.

3. [லிமிடேஷ னுகட்டு.]

ஏலதாரன் சொத்தை வசப்படுத்துவதை அன்னியன் தடைசெய்து அத்தடையை நிவர்த்தித்து சொத்துவசமாக வேண்டுமென்று கொடுபட்ட மனு சாக்ஷி விசாரணையன்னியில் தள்ளுபடிசெய்யப்பட்டால் அவ்விதந் தள்ளுபடி செய்யப்பட்ட தேதி முதல் ஒரு வருஷத்துக்குள் அசல் வழக்கு கொண்டுவர வேண்டியது அவசியமென்பது.

ஏலதாராகிய வாதிகள் தங்களுடைய ஏலசர்டிபிகேட்டின்படி சொத்துக்களை ஸ்வாதீனப்படுத்த எத்தனித்ததை பிரதிவாதிகள் தடுத்துவிட்டார்கள். இத்தடையை நிவர்த்தித்து வசப்படுத்திக் கொடுக்க வேண்டுமென வாதிகள் சி-பு-கோடு 335 வது செக்ஷன்படி மனுக்கொடுத்ததில், அம்மனு விசாரணைக்கு 1908 ஹு அக்டோபர் மாதம் 13 ந் தேதி கெடுகுறிக்கப்பட்டிருந்தது. வாதிகள் சாக்ஷிகளுக்கு படிகட்டியிருந்தார்கள். உபயகட்சி வக்கீல்களும் குறிப்பிட்ட தேதியில் கோர்ட்டில் ஆஜராயிருந்தார்கள். என்னகாரணத்தினாலோ அன்று வாதிகளின் சாக்ஷிகள் விசாரிக்கப்படவில்லை. வாதியின் மனுவிற்கண்ட விஷயங்கள் வேறு சாக்ஷியங்களினாலும் ருஜுப்பிக்கப்படவில்லை. அதனால் கீழ்க்கோர்ட்டார் அடியிற்கண்டபடி உத்திரவு செய்தார்கள்.

"உபபக்ஷிக்காரர்களும் யாதொரு ருஜுவும் விடவில்லை; சொத்துஸ்வாதீனமாக வேண்டுமென்று ஏலதார்கள் கொடுத்த மனு தள்ளுபடிசெய்யப்பட்டது. அவர் அசல்வழக்கிட்டுக்கொள்ள வேண்டியது"

ஏலதார் வாதிகள் பிறகு 1911௵த்திய செப்டம்பர் மாதத்தில் அசல் வழக்குக் கொண்டுவந்தார்கள். வாதிகளின் மனுதள்ளுபடி செய்யப்பட்டதேதி முதல் ஒருவருஷத்துக்குள் அசல் வழக்கிடாததால் வாதிகளின் தாவாவுக்கு லிமிடேஷனுகட்டு ஷிடியூல் I. ஆர்டிகிள் IIன்படி காலாவதிதோஷ மேற்பட்டுவிட்டதென பிரதிவாதிகள் கக்ஷியாடினார்கள். விசாரணையன்னியில் மனுதள்ளுபடி செய்யப்பட்டிருப்பதால் வாதிகளின் தாவாவுக்கு காலாவதி தோஷமில்லையென வாதிகள் கக்ஷியாடினார்கள்.

தீர்ப்பு:—வாதிகள் தங்கள்சாக்ஷிகளுக்கு படிகட்டியிருந்ததுமன்றி விசாரணை கெடுவில் உபயவாதிகளின் வக்கில்களும் ஆஜராக விருந்ததால் இது கக்ஷிகாரர் ஆஜரில்லாதிருந்ததால் தள்ளுபடிசெய்யப்பட்டதாக எண்ணப்படக் கூடாதென்றும், லிமிடேஷனுக்ட்டு ஷிடியூல் I ஆர்டிகிள் II ன்படி வாதிகளின் தாவாவுக்கு காலவாதி தோஷம் ஏற்பட்டுவிட்டதென்றும், வாதிகளின் தாவா தள்ளுபடி செய்யப்பட்டது.

சென்னை ஹைகோர்ட்டு.

1912௵த்திய 21 நம்பர் ஆர்டரின்பேரில் அப்பீல்.

ஜட்ஜிகள்.	
ஜஸ்டிஸ் பென்ஸன் துரையவர்கள்.	கனப்ப செட்டி அ. மனுதார்.
ஜஸ்டிஸ் சுந்திரமய்ய ரவர்கள்	V.
	அண்ணாமலை செட்டி எதிர்மனுதார்.

தீர்ப்பு 1—4—13.

1. [சிவில் ரூல்ஸ் அவ் பிராக்டிஸ்.]

இராமநாத புரம் சப்கோர்ட்டு 1908௵த்திய அசல் 35 நம்பரில் ஏற்பட்ட 1911௵த்திய நிறைவேற்று மனுநம்பர் 229ன்

பேரில் அப்பீல் நிறைவேறு மனுக் கொடுத்த மறுதேதியில் டிக்கிரித்தொகை கோர்ட்டில் கட்டப்பட்டாலும் அத்தொகைக்கு வக்கீல்பீஸ் வசூலிக்கப்படலாமென்பது.

மனுதாரன் தன்னுடைய டிக்கிரித்தொகை பிரதிவாதியை வாரண்டில் பிடித்து வசூலிக்கப்பட வேண்டுமென நிறைவேற்று மனுக்கொடுத்தான். அம்மனு கோர்ட்டில் கொடுக்கப்பட்ட மறுதேதியிலேயே டிக்கிரி கடன்காரன் டிக்கிரித்தொகை பூராவும் கோர்ட்டில் கட்டிவிட்டான். அத்தொகைக்கு வக்கீல் பீசும் வசூலிக்கப்படவேண்டுமென மனுதார் ஆக்ஷேபித்தார். டிக்கிரித் தொகை நிறைவேறு மனு நடவடிக்கைகள் நடத்தி வசூலிக்கப்படாததால் வக்கீல் பீஸ் சேரமாட்டாதென சப் ஜட்ஜி உத்தரவு செய்தார். இவ்வுத்தரவு சரியானதல்லவென்று வாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்ததில் நிறைவேறு மனுகோர்ட்டில் கொடுப்பதே நிறைவேறு நடவடிக்கை நடத்தியதாகுமென்றும், வக்கீல் பீஸ் சேர்க்கப்பட வேண்டியதவசியமென்றும், கீழ்க்கோர்ட்டார் செய்த உத்தரவை ரத்துசெய்து விட்டார்கள்.

சென்னை ஹைகோர்ட்.

1911 ௵த்திய 2 வது அப்பீல் நம்பர் 650

ஜட்ஜிகள்.	
ஜஸ்டிஸ் அப்டர்ரகீம் அவர்கள்	கிலாடு கொட்டய்யா அ. வாதி
ஜஸ்டிஸ் சுந்திரமய்ய ரவர்கள்	V
	பொலவாரபு மல்லய்யா அ. பிரதிவாதிகள்

தீர்ப்பு 13—12—12.

1. [டிரான்ஸ்வர் அவ்பிராபர்டி ஆக்ட்.]

ஒரு சாசனத்துக்கு பிரதிபிரயோஜனமில்லை யென்ற காரணத்தைக்கொண்டு அது ரத்து செய்யப்படக் கூடாதென்பதும், அத்தொகைக்கு சாசன சொத்து ஜவாப்தாரியாக்கப்படு மென்பதும்.

ஒரு சாசனம் மோசவகையாக எழுதிவாங்கபட்டதென்றும், நிர்ப்பந்தித்து வாங்கப்பட்டதென்றும், அதற்கு எவ்வித பிரதி பிரயோஜனமுங் கிடையாதென்றும், அதனால் அந்த சாசனம் ரத்து செய்யப்படவேண்டுமென்றும், வாதி

4

கள் வழக்கிட்டார்கள். மோசம், நிர்ப்புந்தம் இந்த இரண்டு விஷயங்களைப்பற்றியும் வாதியின் வக்கீல் வற்புறுத்தவில்லை. தாவா சாசனத்துக்கு பிரதி பிரயோஜனமில்லையென்றும், அதனால் அந்த சாசனம் ரத்து செய்யப்படவேண்டுமென்றும் கீழ்க்கோர்ட்டார்கள் இருவருந் தீர்ப்புசெய்தார்கள். பிரதிவாதி இத்தீர்ப்பின் பேரில் அப்பீல் செய்ததில் அவர் வக்கீல் சாசனத்தொகை ரூபாய் 800-ம் 6 மாத கெடுவுக்குள் கோர்ட்டில் கட்டி விடுவதாகவும், அந்தப்படிச் செய்யாவிட்டால் அத்தொகைக்கு தாவாவிற்கண்ட சாசன சொத்தைத் துடர்ந்து தொகை வசூலித்துக் கொள்ளலாமென்றுங் கக்ஷி சொன்னார். அவர் சொல்வது கிரமமானதென்று அந்தப்படிக்கே தீர்ப்பு செய்யப்பட்டது.

எல்லாக் கோர்ட்டுகளிலும் உபயவாதிகளின் செலவுகள் அவரவர்களைப் பொறுத்தது.

சென்னை ஹைகோர்ட்.

1910 ஹூ த்திய 2 வது அப்பீல் நம்பர் 721.

ஜட்ஜிகள். ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள் ஜஸ்டிஸ் டயாப்ஜீ அவர்கள்	மெடம் சுப்பண்ணா செட்டி ஆ. அ. வாதிகள். V எல்கூர் இராமச்சந்திரய்யா ஆ. அ. பிரதிவாதிகள்.

தீர்ப்பு 26—3—1913.

2. [டிரான்ஸ்பர் அவ் பிராபர்டி ஆக்ட்.]

பெந்தக டிக்கிரித்தோகை கோர்ட்டில் கட்டப்படுவதற்கு தேதி குறிப்பிடப்படுந் தேதிவரைக்கும் ஏற்பட்ட காண்டிராக்ட்டுப்படி வட்டி கிடைக்கக்கூடியது என்பது.

ஒருவன் பெந்தகக்கடன் தொகையை பலதவணைகளில் கொடுப்பதாக பெந்தக பத்திரம் எழுதிக்கொடுத்திருந்தான். பெந்தகம் பெற்றவன் சில தவணைத்தொகைக்கு வழக்கிட்டு டிக்கிரி பெற்று பெந்தக சொத்தில் சிலவற்றை எலம்போட்டதில் அதை 6-ம் பிரதிவாதி ஏலத்தில் எடுத்துவிட்டான். அந்த பெந்தகம் பெற்றவன் தனக்குக் கிடைக்கவேண்டிய பாக்கித் தொகையைப்பற்றி வழக்கிட்டதில் முன் ஏலத்தில் விற்றுமுதல் செய்யப்பட்ட பெந்

தக சொத்தும் அவர் கடனுக்குக் கட்டுப்படவேண்டுமெனக் கண்டிருந்தார். பெந்தகம் பெற்றவனுடைய பிரார்த்தனைக்கு விரோதமாக கீழ்க் கோர்ட்டார் தீர்ப்பு செய்துவிட்டார்கள்.

இதனால் பெந்தகம் பெற்றவன் முன் ஏல விற்றுமுதல் செய்யப்பட்ட சொத்தும் தன்னுடைய கடனுக்குக் கட்டுப்படவேண்டுமென்றும், தன்னுடைய தொகைக்கு, டிக்கிரித்தொகை கோர்ட்டில் கட்டப்பட வேண்டியதாகக் கோர்ட்டார் குறிப்பிடுந் தேதி வரையில், ஏற்பட்ட காண்டிராக்ட்டுப்படி தனக்கு வட்டி கிடைக்க வேண்டுமென்றும், ஹைகோர்ட்டில் அப்பீல் செய்தார். தீர்ப்பு:- முன் ஏலவிற்று முதல் செய்யப்பட்ட பெந்தக சொத்து வாதியின் கடனுக்குக் கட்டுப்படமாட்டாதென்றும், தாவா பெந்தகத் தொகைக்கு டிக்கிரித்தொகையை கோர்ட்டில் கட்டிவிடும்படி கோர்ட்டாரால் குறிப்பிடப்படுந் தேதி வரையில் ஏற்பட்ட எக்கிரிமெண்டுப்படி வாதிக்கு வட்டிகிடைக்கக் கூடியதென்றும், 13 சென்னை லாஜர்னல் 212, இ. லா. ரி 34 கல்கத்தா 150, இந்தத் தீர்மானங்களை யனுசரித்துத் தீர்ப்பு செய்யப்பட்டது.

அலகாபாத் ஹைகோர்ட்டு

1912 ஹூ த்திய 2 வது அப்பீல் நம்பர் 822

ஜட்ஜி. ஜஸ்டிஸ் ஸர்ஹாரி கிரிபன் துரையவர்கள்.	ஷிட்லாசகாய் அ. வாதி. V தாகூர் டின்னு அ. பிரதிவாதிகள்.

தீர்ப்பு 26—3—13.

1. [ஸ்பெஸிபிக்ரிலீவ் ஆக்ட்.]

இந்துசகோதரர்களில் ஒருவர் மற்றொருவர் அனுமதியன்னியில் குடும்ப சோத்தைவிற்க எக்கிரிமெண்டு செய்தால் அதுசெல்லத்தக்கதல்லவென்பது.

பகவதி பிரசாத் சண்டிபிரசாத் இருவரும் ஒரு அவிபக்த இந்துக் குடும்பசகோதரர்கள். பகவதிபிரசாத் அவர்கள் குடும்பப் பொதுவீட்டை வாதிக்கு ரூபாய் 275-க்குவிற்பதாக 1909-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் எக்கிரிமெண்டு செய்துகொடுத்

தான். 1910-ம் வருஷம் ஜனவரிமாதத்தில் அந்தஇரண்டு சகோதரர்களுஞ் சேர்ந்து அந்தவீட்டை பிரதிவாதிக்கு விற்று விட்டார்கள். இதனால் வாதிதனக்கு கிடைத்த எக்கிரிமெண்டுப்படி சாசனஞ்செய்து கொடுக்கப்பட்டு சொத்து ஸ்வாதீனமுங் கிடைக்க வேண்டுமென அந்தசகோதரர்கள் இருவர் அவர்களிடம்சாசனம் பெற்ற பிரதிவாதி இவர்கள் பேரில் வழக்கிட்டார். வாதிக்கு ஏற்பட்ட எக்கிரிமெண்டு விபரந்தெரிந்தே பிரதிவாதி சாசனம்பெற்றதாக ருஜுவேற்பட்டாலும் சகோதரர்கள் இருவருஞ் சேர்ந்து எக்கிரிமெண்டு எழுதிக்கொடுக்காததால் அதன்பேரில் கொண்டு வந்த வழக்கு சட்டப்படிசெல்லாதென்று முதல்கோர்ட்டார்வாதியின் வழக்கைதள்ளுபடிசெய்துவிட்டார்கள். கீழ்அப்பீல்கோர்ட்டார் அந்தடிக்கிரியை மாற்றி வாதியின் தாவாப்படியே தீர்ப்பு செய்துவிட்டார்கள். வாதிக்கு ஏற்பட்ட எக்கிரிமெண்டு விபரந்தெரிந்தே பிரதிவாதி சாசனம் பெற்றாரென்றும் சகோதரர்கள் இருவரும் தாவாவீட்டை விற்கிறதென்றே தீர்மானித்திருந்ததாகவும் வாதிக்கு ஏற்பட்ட எக்கிரிமெண்டு அவர்களுக்குமெத்த நன்மையானதென்றும் கீழ்அப்பீல் கோர்ட்டார்கண்டுபிடித்துத் தீர்மானஞ் செய்தார்கள்.

இவ்வித பயிண்டிங் மட்டில் வாதிக்கு டிக்கிரிகொடுக்கப் போதுமானதல்லவென்றும் பகவதிபிரசாத் குடும்பகர்த்தாவென்றுவது, வாதியிடம் எக்கிரிமெண்டு செய்து கொள்ளும்படி மற்றொருசகோதரன் சம்மதித்து அதன்பேரில் தாவாஎக்கிரிமெண்டு ஏற்பட்டதென்றுவது எவ்வித ருஜுவுமில்லாததால் வாதிவழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது அவசியமென்றும், ஒரு சகோதரன் எழுதிக்கொடுத்த எக்கிரிமெண்டுபேரில் ஸ்பெஸிவிக் பர்பார்மென்ஸ் அவ் காண்டிராகட்டுபடி வழக்கிட்டது சட்டப்படி செல்லத்தக்கதில்லையென்றும் பிரதிவாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்தார்.

தீர்ப்பு:—தாவா எக்கிரிமெண்டு செய்துகொடுக்க சண்டிபிரசாத் சம்மதித்தான் என்பதற்கு எவ்விதருஜுவுமில்லை; அவன் தமயன் தனிமையில் எக்கிரிமெண்டு எழுதிக்கொடுக்கஅதிகாரமுமில்லை. இதனால் கீழ் அப்பீல்கோட்டார் செய்ததீர்ப்பை ரத்து செய்து முதலாவது கோர்ட்டார் செய்ததீர்ப்பை உறுதிசெய்கிறோம்.

சென்னை ஹைகோர்ட்.

1911 ஹு த்திய 2 வது அப்பீல் நம்பர்கள் 1266,1267.

ஜட்ஜிகள்.		சங்கரப்ப நாய்க்கர் ஆ. அ. வாதிகள்
ஜஸ்டிஸ் சங்கரநாயர் அவர்கள்		V
ஜஸ்டிஸ் ஒல்டுபீல்டு துரை யவர்கள்		பரி நாய்க்கர் ஆ. அ. பிரதிவாதிகள்

தீர்ப்பு 7—2—1913.

1. [ஈஸ்மெண்ட் ஆக்ட்.]

மேல்பாக நிலக்காரன் தன்னிலத்தின் ஜலத்தை கீழ்ப்பாக நிலத்தில் வடியவிடுவது வழக்கமான பாத்தியமென்பதும், கீழ்நிலக்காரன் அதை தடைசெய்யக் கூடாதென்பதும்.

திருநெல்வேலி முன்சீப்கோர்ட்டு 1907 ஹு த்திய அசல் 394ம் நம்பர் 1908 ஹு த்திய அசல் 117ம் நம்பர் இந்த தீர்ப்புகளின் பேரில் தூத்துக்குடி சப் கோர்ட்டில் 1909 ஹு த்திய 9,6 நம்பர் அப்பீல்களாகவும் 1910 ஹு த்திய 18 நம்பர் அப்பீலாகவும் பயில் செய்யப்பட்டது.

வாதியும் பிரதிவாதியும் அடுத்த நிலக்காரர்கள். வாதிக்கு மேல்புரம் நிலம் பிரதிவாதிக்கு கீழ்புரம் நிலம். வாதியின் நிலத்தின் ஜலம் பிரதிவாதியின் நிலத்தில் ஓடிப்பாய்வது நீண்டகால வழக்கம். பிரதிவாதி தன்னிலத்தில் வாதியின் நிலத்தின் ஜலம் வாரிருக்கும் பொருட்டு ஒரு பெரிய அணை அல்லது சுவர் வைத்து தடுத்துவிட்டார். இதனால் வாதி இந்த அணை அல்லது சுவர் பிரிக்கப்பட வேண்டுமென்றும், இனி யவ்வித அணை முதலியன போடாதபடி இன்ஜெக்ஷன் கொடுக்கப்பட வேண்டுமென்றும் பிரதிவாதி பேரில் வழக்கிட்டார். இ-லா-ரி 29 சென்னை 539 வாதியின் கக்ஷிக்கு விரோதமாக விருக்கிறதென்று சப் ஜட்ஜியவர்கள் வாதியின் பிராதை தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

உபயவாதிகளும் கிருஷித்தொழில் செய்பவர்களாகையால் மேல் நிலத்தின்ஜலம் கீழ்ப்புறம்நிலத்தில் வடிவது ஒருவித அநுபோக வழக்க பாத்தியமென்றும், தாவாவிற்கண்ட நிலம் புஞ்சையாகையால் அதன் ஜலம் பிரதிவாதியின் நிலத்தில் வடியவிட வேண்டியது மெத்த அவசியமானதென்றும் வாதி வக்கீல் வாதித்தார்.

தீர்ப்பு:—தாழ்ந்த பூமியில் உயர்ந்த பூமியின் ஜலம் வடிவது மெத்த சகஜமானதென்றும், மேல் நிலக்காரன் தன் ஜலத்தை கீழ்நிலத்தில் வடியவிடலாமென்றும், அதை கீழ்நிலக்காரன் ஏற்றுக்கொள்ள வேண்டியதென்றும், ஆனால் மேல் நிலக்காரன்வழக்கத்துக்கு விரோதமாக ஜாஸ்தி ஜலம் வடியவிடக் கூடாதென்றும், 29 சென்னை லா ரிபோர்ட்டு வாதியின் கேசுக்கு ஒற்றுமையானதல்லவென்றும், பிரதிவாதி அணை போடுவதால் வாதிக்கு மிகுந்த நஷ்டமுண்டாகுமென்றும் வாதியின் தாவாப்படி தீர்ப்பு செய்யப்பட்டது.

சென்னை ஹைகோர்ட்.

1912௵த்திய ரிபர் செய்த கேஸ்நம்பர் 2.

ஜட்ஜிகள்.	
ஜஸ்டிஸ் பென்ஸன் துரையவர்கள்	B. K. மொகிதீன் குட்டி. வாதி
	V.
ஜஸ்டிஸ் சுந்திரமய்யரவர்கள்	C. பார்கர்வூ, பிரதிவாதிகள்

தீர்ப்பு 3—4—1913.

[ஸ்மால்காஸ் கோர்ட் ஆக்ட்.]

விவாக வுடன்படிக்கை நிறைவேறாததாலுண்டாகிய நஷ்டத்துக்கு ஸ்மால்காஸ் திரப்பில் வழக்கிடக் கூடாதென்பது.

ஒருமகமதிய பெண்ணின் தகப்பன் அப்பெண்ணை பிரதிவாதியின் மைனர்குமாரனுக்கு விவாகஞ்செய்து கொடுப்பதாக வுபயவாதிகளுக்குள்ளும் உடன்படிக்கை யேற்பட்டிருந்தது. இந்த வுடன்படிக்கையின்படி பிரதிவாதி நடக்காததால் வாதி தான் குறிப்பிட்ட கல்லியாணத்துக்காக சாப்பாடும் சாப்பாட்டுக்குரிய சாமான்களும் சேகரித்துவைத்திருந்த தாகவும் அவைகளெல்லாம் நஷ்டமாகிவிட்டதாகவும் அந்தநஷ்டங்கள் கிடைக்கவேண்டுமென்றும் வாதி பிரதிவாதிபேரில் வழக்கிட்டார்.

இவ்வழக்கு அசலில் கொண்டுவரவேண்டியதா அல்லது ஸ்மால்காஸ் திரப்பில் நடத்தப்படவேண்டியதா வென்ற விவாதமுண்டாகி இதுவிஷயமாக ஹைகோர்ட்டுக்கு ரிபெர் செய்ததில் இவ்வித வழக்குகள் அசல் திரப்பிலேயே நடத்தப்படவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

சென்னை ஹைகோர்ட்டு.

1912௵த்திய 2-வது அப்பீல் நெம்பர் 731.

ஜட்ஜிகள்.	
ஜஸ்டிஸ் பென்ஸன் துரையவர்கள்	மொட்டயப்பன் என்கிற சிலம்பக்கவுண்டன் அ. வாதி.
	V
ஜஸ்டிஸ் சுந்திரமய்யரவர்கள்	பழனிகவுண்டன் வூ.

தீர்ப்பு 5—3—1913.

[சாக்ஷிய சட்டம்.]

சொத்து வுடனே ஸ்வாதீனமாகவேண்டுமென்று எழுத்து ஏற்பட்டிருக்க அது பிந்திக் கொடுக்கவேண்டுமென்ற எண்ணத்துடன் ஏற்பட்டதென்று ருஜூவிடக் கூடாதென்பதும், இனாம்சாசனத்தை உயிலாக பாவிக்கக் கூடாதென்பதும்.

வாதி தன்னுடைய இரண்டாவது மனைவியின் பெண்ணாகிய முதல் பிரதிவாதியின் பெண்ஜாதி பேருக்கு தன்னுடைய சில சொத்தை 1906 வருஷம் செப்டெம்பர் மாதம் 21௳ சாசனஞ்செய்துவைத்ததாகவும் அச்சொத்தை யவள்தனது ஜீவதிசைக்குப் பிறகு தனதுமூத்தமனைவி தாயாதிகள் இவர்களுடைய தடங்கலன்னியில் அடைவதற்காக ஏற்படுத்தினாரென்றும், தனது பெண் 1909 வருஷம் ஏப்பரல் மாதம் 6௳ இறந்துவிட்டதாகவும், அதன்பிறகு முதல் பிரதிவாதி அந்தசொத்தை ஆக்கிரமித்துகட்டிக் கொண்டதாகவும், அந்த சாசனம் காரணார்த்தமாக வேற்பட்டிருப்பதினால் அது ரத்துசெய்யப்பட்டு பிரதிவாதிகளிடமிருந்து அச்சொத்து தனக்கு ஸ்வாதீனமாக வேண்டுமென்றும் வழக்கிட்டார்.

முதல் பிரதிவாதி தன்தொகையைக் கொண்டு தன் மனைவி பேரால் பேரிரவலாக தாவா சொத்தை சாசனம் வாங்கியதாகவும் அது தகுந்த பிரதிபிரயோஜனத்துடன் ஏற்பட்டதென்றும் வாதி பின்வழக்குபொய்யென்றும் பிரதிவாதிகள் கக்ஷியாடினார்கள்.

தாவாசாசனம் முதல்பிரதிவாதியால் அவன் மனைவிபேரால் பேரிரவலாக வாங்கப்படவில்லையென்றும், ஜாஸ்திவிலை பெறக்கூடியதை குறைந்த கிரயமாக ரூபாய் 1000த்துக்கு மதிப்பிட்டு சாசனஞ் செய்திருப்பதாகவும், அச்சொத்தை வாதியின் பெண் உடனே யடையவேண்டுமென்ற எண்ணத்துடன் ஏற்பட

வில்லை யென்றும், வாதியின் ஜீவதிசைக்குப் பிறகு அச்சொத்தை யவர் பெண் அடையவேண்டியதை யுத்தேசித்தும் அவருடைய மூத்த மனைவியும் தாயாதிகளும் அச்சொத்தில் பிரவேசிக்காதிருப்பதற்காகவும் அவ்விதம் ஏற்படுத்தப்பட்டதென்றும், அந்த நிலத்துக்கு பட்டா மாறுதலும் 1907-ம் வருஷத்தில் பேரிரவலாக பிரதிவாதிகளின் கேட்டுக்கொள்ளுதலின்படி செய்துவைத்ததாகவும் அதுவும் அவருடைய பெண்ணுக்குப் பின்னால் கிடைக்கக் கூடிய நன்மையை யுத்தேசித்து செய்து வைத்ததாகவும் டிஸ்டிரிக்ட் முனிசீப் கண்டு பிடித்து வாதியின் பிராதுப்படி தீர்ப்பு செய்து விட்டார்கள்.

இதைப்பற்றி பிரதிவாதிகள் டிஸ்டிரிக்ட்கோர்ட்டில் அப்பீல் செய்ததில் தாவாவிற்கண்ட சொத்து சாசனத்தேதியிலேயே விட்டுவிட்டதாக வாசகம் ஏற்பட்டிருக்க அதற்கு நேர்மாறாக பிற்பட்ட ஒரு காலத்தில் அதாவது வாதியின் மரணத்துக்கு பிறகு அச்சொத்தை யவர் பெண் அடையவேண்டுமென்ற கருத்துடன் அச்சாசனம் ஏற்பட்டதென்று ருஜுவிடுவது சாக்ஷிய சட்டத்துக்கு விரோதமானதென்று டிஸ்டிரிக்ட் கோர்ட்டார் பிரதிவாதிகளின் அப்பீலை யங்கீகரித்து வாதியின் வழக்கை தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

பிராதிற்கண்ட விஷயங்களை சாக்ஷிய சட்டம் 92-வது செக்ஷன் 1-வது சங்கேதப்படி ருஜுப்பிக்கலாமென்றும் தாவாவிற்கண்ட சாசனம் ஒரு உயிலாக எண்ணப்பட வேண்டியதென்றும் வாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்தார்.

தீர்ப்பு:—மனதில் ஒன்று நினைத்துக்கொண்டு எழுத்தில் வேறுவிதமாக எழுதக்கூடாதென்றும், அவ்வித பிசகுகளை நிவர்த்திக்கவேண்டியதை யுத்தேசித்தே சாக்ஷிய சட்டத்தில் அந்த செக்ஷன் ஏற்பட்டிருக்கிறதென்றும், சொத்தையுடனே ஸ்வாதீனப்படுத்திக் கொடுத்துவிட்டதாக எழுதியிருக்க அதற்கு நேர்மாறாக ருஜுவிடுவது அங்கீகரிக்கத்தக்கதல்லவென்றும் சாக்ஷிய சட்டம் 92-வது செக்ஷன் 1-வது சங்கேதம் தாவா கேசுக்கு ஒற்றுமையானதல்லவென்றும், இனும் சாசனத்தை உயிலென்று ருஜுவிடுவது சட்டப்படி செல்லாதென்றும் வாதியின் அப்பீல் தள்ளுபடி செய்யப்பட்டது.

சென்னை ஹைகோர்ட்டு.

குறிப்புகள்.

1912-௵த்திய 102 நம்பர் முதலாவது அப்பீல் கீழ்க்கோர்ட்டில் ஒரு கக்ஷிக்காரன் ருஜுவை தன்னைப் பொருத்ததாக இஷ்டிபு ஏற்படுத்தும்படி சம்மதித்துவிட்டு அப்பீல்கோர்ட்டில் அந்த ருஜுவை தன்னுடையதல்லவென்று கக்ஷி சொல்லக்கூடாது.

***

1912-௵த்திய 2-வது அப்பீல் நம்பர் 778 பெந்தக சொத்தை மீட்கும்படியான பாத்தியதையை வேறொருவருக்கு மாற்ற வேண்டியிருந்தால் அந்த தஸ்தாவேஜி அவசியமாக ரிஜிஸ்டர் செய்யப்படவேண்டும்.

***

1912௵த்திய 2-வது அப்பீல் நம்பர் 2013 ஒரு குடியானவன் தனக்கு ஒரு சொத்தில் தனிமையான பாத்திய மிருக்கிறதென்று சிவில் கோர்ட்டில் வழக்கிடுகிறான். ரெவனியூ கோர்ட்டில் இவனுக்கு விரோதமான தீர்ப்பு ஏற்பட்டிருக்கிறது. இது ரெஸ்ஜுடிகேடா தோஷமாக மாட்டாது.

***

1912 ஷைத்திய 2வது அப்பீல் நம்பர் 2043 ஒரு சொத்து குடும்பப் பொது சொத்தென்ற பாத்திய ஸ்தாபன வழக்கு ஒரு மைனரால் கொண்டுவரப்படுகிறது. பாகப்பிரிவினை செய்வது மைனருக்கு அனுகூலமில்லாததாக விருக்கும் பட்சத்தில் சொத்து ஸ்வாதீனமாக வழக்கிடாதது பிசகென்ற கக்ஷி சொல்லக்கூடாது.

***

1912 ௵த்திய 2 வது அப்பீல் நம்பர் 156 இனும் டயிடில் பத்திரங்கள் ஏற்பட்டகாலத்தில் அந்த இனும் விஷயமாக கக்ஷிக்காரர்களால் கொடுக்கப்பட்ட ஸ்டேட்மெண்டானது சாக்ஷிய சட்டம் 35 வது செக்ஷன்படி ருஜுவாக அங்கீகரிக்கப்படும்.

***

1912வருஷத்திய 2-வதுஅப்பீல் நம்பர்1041 தகப்பனல்லாத வேறுகுடும்பமானேஜர்கள் வேறுநிலம் வாங்கவேண்டியதற்காக பூர்வீக குடும்பசொத்தை பெந்தகம் வைத்து கடன் வாங்கக் கூடாது.

சென்னை ஹைகோர்ட்டு.

1913ளுத்திய கிரிமினல் ரிவிஷன் பெடிஷன் நம்பர் 143.

ஜட்ஜி. ஜஸ்டிஸ் எயிலிங் துரை யவர்கள்	}	திருகோணம் குப்பாசாரி மனுதார் எதிரி V சக்கரவர்த்தி

தீர்ப்பு 18—7—13.

1. [கிரிமினல் புரிஸீஜர் கோடு.]

தகுந்த போதுமான காரணங்களுக்கல்லாமல் தள்ளுபடி செய்யப்பட்ட கேசை புனர் விசாரணை செய்யும்படி உத்தரவு செய்யக் கூடாதென்பது.

நெல்லூர் ஜில்லா கவாலி டிப்டி மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் மனுதார் எதிரி பேரில் கேஸ் நடந்தது. டிப்டி மாஜிஸ்டிரேட் கேசை பூர்த்தியாக விசாரித்து மனுதார் எதிரி பேரில் எவ்வித குற்றமுமேற்படவில்லை யென்று கேசை தள்ளுபடி செய்துவிட்டார். நெல்லூர் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட் தனக்கு கிரிமினல் புரொஸீஜர் கோடு 437 வது செக்ஷன்படி ஏற்பட்டிருக்கும் அதிகாரத்தை முன்னிட்டு அந்தக் கேசை வேறு மாஜிஸ்டிரேட் மறுபடியும் விசாரித்து தீர்ப்பு செய்யும்படி உத்தரவு செய்தார். ஆனால் அப்படி உத்தரவு செய்ததற்கு யாதொரு காரணமும் எழுதவில்லை. இதனால் மனுதார் எதிரி இந்த உத்தரவு சட்டவிரோதமானதென்று ஹைகோர்ட்டில் ரிவிஷன் மனுக்கொடுத்தார்.

உத்தரவு:—கீழ்கோர்ட்டார் செய்த தீர்மானம் அல்லது உத்தரவுகளை மேல்கோர்ட்டார் ரத்து செய்யவேண்டுமானால் அவ்விதம் ரத்து செய்வதற்கு தகுந்த போதுமான காரணங்கள் கண்டெழுதவேண்டும். இவ்வித உத்தரவுகள் நீதிப்பிரமாணமான புத்தி சாதுர்யங்களினால் செய்யப்பட வேண்டும். இவ்விதஞ்செய்யாததால் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட் செய்த வுத்தரவு ரத்து செய்யப்பட்டது. இந்தக் கேசைப்பற்றி புனர் விசாரணை செய்யவேண்டியது அவசியமென டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்டுக்குத் தோற்றினால் அவ்விதஞ் செய்வதற்கு தகுந்த காரணங்களைக்கண்டு வேறு உத்தரவு செய்யவேண்டும்.

அயோத்தி ஜுடிஷல் கமிஷனர் கோர்ட்.

1912 ளுத்திய கிரிமனல் ரெபரன்ஸ் நம்பர் 55.

ஜட்ஜி. மிஸ்டர் பிகாட் துரையவர்கள் ஜுடிஷல் கமிஷனர்	}	பர்ஷாதி பாஸி எதிரி மனுதார் V பல்ஜிட்சிங் கவுண்டர் மனுதார்

2. [கிரிமனல் புரிஸீஜர் கோடு—பெனல் கோடு.]

வாதியை யடித்ததாக ருஜுவில்லாவிட்டாலும் சாக்ஷிக்காரனையடித்ததாக ருஜுவிருந்தால் இந்த வாதியின் பிராதைக்கொண்டே எதிரியைத் தண்டிக்கலா மென்பதும், ஒரு கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தன் வண்டிக்காரன் அனுமதியன்னியில் வண்டியையோட்டி அதைத் தடுத்த வண்டிக்காரனுக்கு சர்க்கார் உத்தியோகஸ்தன் காயமுண்டு பண்ணினால் அவன் இ. பி. கோடு 99-வது செக்ஷனை தனக்கு ஆதாரமாகக்காட்டி அந்தக் குற்றத்தினின்றும் தப்பித்துக்கொள்ள முடியாதென்பதும்.

பைஸபாட் செஷன் ஜட்ஜி யவர்களால் கி. பு. கோடு 438 வது செக்ஷன்படி ரிபோர்ட்டு செய்யப்பட்ட கேஸ்.

பைஸபாட் பட்டணத்தில் 4-வது குதிரைவீரர் பட்டாளந் தங்கியிருந்தது. அந்தப் பட்டாளத்துக்கு 12 கட்டை வண்டிகள் வேண்டியிருந்தன. அந்தப் பட்டணம் தாசில்தார் தன்னுடைய சேவகர்கள் பால்ஜிட், வாஸி முகமது, ஹரிலால் மூவர்களையுமனுப்பி அந்தப் பனிரெண்டு வண்டிகளும் பட்டாளத்துக்குக் கொண்டுபோய் விடும்படி உத்தரவு செய்தார்.

மகந்து ரும்மனோஹர் என்பவரின் வண்டிக்காரன் பார்ஷாதி தன் எஜமானுக்கு மாங்காய் வாங்கி வருவதற்கு வண்டியை யோட்டிப் போகும்போது மேற்சொன்ன மூன்று சேவகர்களும் வந்து தன்னை வண்டி கேட்டதாகவும், தான் ஓட்டிவந்த வண்டி தன்னுடைய எஜமானுடைய தென்றும், அது வாடகைக்குக் கொடுப்பதில்லை யென்றுஞ் சொன்னதின் பேரில் தன்னை வாஸிமுகமது முகத்திலறைந்ததில் தான் கீழே விழுந்துவிட்டதாகவும் அந்த சேவகர்கள் மூவரும் தன்னை யடித்து தாசில்தாரிடம் இழுத்துப்போகையில் சிலர் தடுத்து தன்னை விடுவித்ததாக

வும், இது விஷயம் பாபுரும் என்பவருக்கு தான் தெரிவித்ததின் பேரில் அவர் தன்னுடைய முக்தியாரைக்கொண்டு மேற்சொன்ன வாலிமுகமது பால்ஜிட் இவர்கள் பேரில் இ-பி-கோடு 323-வது செக்ஷன்படி பிராது கொடுக்கச் செய்ததாகவுஞ் சொல்லுகிறான்.

மேற்சொன்ன சேவகர்களில் ஹரிலால் என்பவர் தனது தலையில் வண்டிக்காரன் பார்ஷாதி அவனுடைய சாட்டைக்கழியாலடித்துவிட்டு வண்டியை யோட்டிப்போனதாகவும் அதைப் பால்ஜிட் தடுத்ததாகவும் பாபுரும் பிண்டபிரசாத் என்ற இரண்டு முக்தியார்களும், இரண்டு வேலைக்காரர்களுடன் வந்து சேவகன் பால்ஜிட்டை யடித்துவிட்டு வண்டியை யோட்டிக்கொண்டு போய்விட்டதாகவும், அந்தப் பால்ஜிட் அந்த வண்டிக்காரன், முக்தியார்கள் இருவர், வேலைக்காரர்கள் இருவர் இந்த ஐந்து பெயரையும் எதிரிகளாகச் சேர்த்து, வண்டிக்காரன் பிராது கொடுத்த தேதியிலேயே இவரும் கிராஸ் பிராதாகக் கொடுத்தார்.

இந்த வண்டிக்காரன் கேசை விசாரித்த டிப்டி மாஜிஸ்டிரேட் சர்க்கார் சேவகன் வண்டிக்காரனை யடித்தது குற்றமாகமாட்டாதென்றும், அவ்விதம் அடித்தது பிரைவேட் டிபென்ஸாக செய்யப்பட்டதென்றும், அது இ-பி-கோடு 99-வது செக்ஷன்படி குற்றமாக மாட்டாதென்றும், வண்டிக்காரனுடைய பிராதைத் தள்ளுபடி செய்துவிட்டார். பால்ஜிட் அடித்ததும் குற்றமாகமாட்டாதென அவனும் விடுதலை செய்யப்பட்டான்.

பால்ஜிட் கொடுத்த பிராதைப்பற்றி விசாரித்ததில் வண்டிக்காரன் ஒருவன் நீங்கலாக மற்றவர்களை விடுதலை செய்து அந்த வண்டிக்காரன் பால்ஜிட் என்ற சேவகனை சாட்டைக்கழியால் அடித்ததற்காக அவனுக்கு இருபது ரூபாய் அபராதம்விதித்தார்.

இதன்பேரில் பார்ஷாதி அடியிற்கண்ட காரணங்களைக் கண்டு ரெவிஷன் மனுக் கொடுத்தார்.

முதலாவது:—பால்ஜிட் தன்னை வண்டிக்காரன் அடித்ததாக பிராது கொடுக்க அதைப்பற்றி எவ்வித ருஜுவுமில்லாதிருக்க சாக்ஷிக்காரன் ஹரிலால் அடிபட்டான் என்ற ருஜுவின்பேரில் தனக்கு அபராதம் விதித்தது சட்ட விரோதம்.

இரண்டாவது:—வாடகைக்குக் கொடுக்கக்கூடாததும் தனக்குச் சொந்தமில்லாததுமான வண்டியை பால்ஜிட்டாவது ஹரி

லாலாவது தடுத்து ஓட்டியது பிசகு; அவர்கள் தடையை மீறியோட்டியது கிரமமானது. சேவகர்கள் இ-பி-கோடு 99-வது செக்ஷன்படி பிரைவேட் டிபென்ஸ் சொல்லியதை யங்கீகரித்து அவர்களை விடுதலை செய்தது சட்ட விரோதம்.

தீர்மானம்:—கிரிமினல் பிரீச் அவ் காண்டிராக்ட் அவ் சர்வீஸைப்பற்றிய இ-பி-கோடு 19-வது அத்தியாயம், அவதூறு குற்றத்தைப்பற்றிய இ-பி-கோடு 21-வது அத்தியாயம், கல்லியாண சம்பந்தமாக ஏற்பட்ட இ-பி-கோடு 493 முதல் 498வரையிலுள்ள செக்ஷன்களில் கண்ட குற்றங்கள், இவைகளைப்பற்றின மட்டில் துன்பமடைந்தவர்கள் நேரில்பிராதுகள்கொடுக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறதேயன்றி மற்றக் குற்றங்களைப்பற்றிச் சொல்லவில்லையென்றும், குற்றம் நடந்த விபரந்தெரிந்த ஒருவன் தனக்கு அது சம்பந்தமில்லாதிருந்தாலும், அதனால் தனக்கு எவ்விதகெடுதியுமில்லாதிருந்தாலும், அது விஷயமாக பிராது கொடுக்கலாமென்பது பொதுவான விதியென்றும், பிரகிருத கேசில் ஹரிலால் தன்னை யடித்து விட்டதாகப் பிராது கொடுக்காவிட்டாலும் கோர்ட்டார் கிரிமனல் புரிஸீஜர் கோடு 190-வது செக்ஷன் கிளாஸ் C. A. இவைகளின்படி கோர்ட்டார் தங்களுடைய நோட்டீசுக்குக் கொண்டு வரப்பட்டவைகளைப்பற்றி விசாரித்து தெண்டிக்கலாமென்றும், அது சட்டத்துக்கு விரோதமான தல்லவென்றும், வாடகைக்கு விடக்கூடாத வண்டியை சேவகர்கள் பலவந்தமாக இழுத்துப்போனது பிசகென்றும், அதைத்தடுக்க வண்டிக்காரனுக்கு பாத்தியமுண்டென்றும், அந்தச் சச்சரவில் அவன் தனது பிரைவேட் டிவென்ஸாக சேவகனை யடித்தது குற்றமாக மாட்டாதென்றும், வண்டிக்காரனுக்கு விதித்த தண்டனையை ரத்துசெய்து அவனுக்கு விதித்த அபராதத்தை வாபஸ் கொடுத்து விடும்படி தீர்மானித்தார்கள்.

டிப்டி மாஜிஸ்டிரேட் சேவகர்கள் வண்டிக்காரனை யடித்தது குற்றமாக மாட்டாதென்று பிராதைத் தள்ளியது பிசகானதாகவிருந்தாலும் மறுபடியும் அதுவிஷயமாக விசாரிக்கச் செய்வது நியாயமாக மாட்டாது.

அலகபாத் ஹைகோர்ட்டு.

1913 ஹூத்திய கிரிமனல் ரிவிஷன் மனு நம்பர் 174.

ஜட்ஜி. ஜஸ்டிஸ் ருவிகியு துரை அவர்கள்	கோகுல் சண்ட் அ. வாதி V மகாபிர் மிசிர்

தீர்ப்பு 19—3—13.

3. [கிரிமனல் புரிஸீஜர் கோடு.]

பிராஸிகியூஷன் திறப்பு சாக்ஷிகளில் பலரை விசாரிக்காமலே கேசைத் தள்ளுபடிசெய்யக்கூடா தென்பது.

கோகல் சண்ட் என்பவர் மகாபிர்மிஸர் பேரில் இ-பி-கோடு 508-வது செக்ஷன்படி குற்றஞ்சாட்டிப் பிராது கொடுத்தார். இது ஜாயிண்டு மாஜிஸ்டிரேட்டால் விசாரிக்கப்பட்டது. இவர் வாதியையும் ஒரு சாக்ஷியையும் விசாரித்த பிறகு எதிரி சொன்ன வாக்குமூலத்தைக் கேட்டு அவனிடம் எழுத்துமூலமாக ஸ்டேட்மெண்டு வாங்கிக்கொண்டு வாதியின் பிராதைத் தள்ளுபடி செய்ததுமன்றி எதிரியை அலக்கழித்ததற்காக அவனுக்கு வாதி ரூ 50 காம்பன்ஸேஷன் கொடுக்கவேண்டிய தென்றும் உத்தரவு செய்தார். இது விஷயமாக வாதி டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்டிடம் ரிவிஷன் மனுக் கொடுத்ததில் அவரதைத் தள்ளுபடி செய்துவிட்டார். இதனால் வாதி தன்னுடைய பிராதைப்பற்றி ஜாயிண்டு மாஜிஸ்டிரேட் தான் கோறிய எல்லா சாக்ஷிகளையும் விசாரிக்காமல் ஒரு சாக்ஷியை மட்டில் விசாரித்து பிராதைத் தள்ளியது பிசகென ஹைகோர்ட்டில் ரிவிஷன் மனுக்கொடுத்தார்.

உத்தரவு:—வாதியால் கோறிக்கொள்ளப்பட்ட எல்லாசாக்ஷிகளையும் ஜாயிண்டு மாஜிஸ்டிரேட் விசாரித்த பிறகு பிராதைத்தள்ளவேண்டியதே யன்றி அதற்கு முன் தள்ளியது மெத்த பிசகு; மற்ற சாக்ஷிகளை விசாரிப்பது அனாவசியமெனத் தோற்றினால் அதற்குத் தகுந்த காரணங்கள் தீர்ப்பில் எழுதப்படவேண்டும். இதனால் ஜாயிண்டு மாஜிஸ்டிரேட் செய்த தீர்மானத்தை ரத்து செய்திருக்கிறோம். ஜாயிண்டு மாஜிஸ்டிரேட் வாதியால் கோறிக்கொள்ளப்பட்ட எல்லாசாக்ஷிகளையும் விசாரித்து சட்டப்படி தீர்மானிக்க வேண்டும்.

பிரிவிகவுன்ஸல்.

[சென்னை ஹைகோர்ட் தீர்மானத்தின்பேரில் அப்பீல்]

லார்ட் அட்கின்ஸன் துரையவர்கள் வெடிங்டன் லார்ட் பார்கர் துரையவர்கள் ஸர் சாமியுல் கிரிபத் துரையவர்கள் ஸர் ஜான் எட்ஜ் அவர்கள் மிஸ்டர் அமீர் ஆலியவர்கள்	வைத்தினாத பிள்ளை அப்பீல்தாரன் V இராஜா சக்கரவர்த்தி யவர்கள்

1913 ஹூ ஜூன்மீ 16உ முதல் 19உ வரையில் விசாரணை

தீர்ப்பு 24—7—13.

1. [இந்தியன் பெனல் கோடு.]

நேரிற்றெரிந்த அல்லது அயற்சார்பு சாட்சியான ருஜுக்களைக் கொண்டு ஒருவனைத் தண்டிக்கவேண்டுமேயல்லது கேள்வி மூலமானதும் அங்கீகரிக்கத் தகாததுமான சாக்ஷியங்களைக்கொண்டு தண்டிக்கக்கூடாதென்பது.

அப்பீல்தாரன் பேரில் கொலைக்குற்றஞ் சாட்டி மரண தண்டனை விதித்ததை சென்னை ஹைகோர்ட்டார் உறுதிசெய்துவிட்ட இதன்பேரில் ஸ்பெஷல் அனுமதி பெற்றுக்கொண்டு பிரிவிகவுன்ஸிலில் இந்த அப்பீல் கொடுக்கப்பட்டது.

இந்தக் கேசின் விஷயங்கள் அடியிற்கண்ட தீர்மானங்களினால் நன்றாகத் தெரியவரும். இந்தக் கேசில் அப்பீல்தாரன் 1. அவர் மகன் தங்கபாபு 2. வேலைக்காரர்கள் கதிரேசன் 3. ஆவணி கோனான் 4. இந்த நால்வரும் எதிரிகள். செஷன் கோர்ட்டில் அஸெஸ்ஸர்கள் இருவரில் ஒருவர் இந்த எல்லா எதிரிகளும் குற்றவாளி யல்லவென்று அபிப்பிராயஞ் சொன்னார். மற்றொருவர் தங்கபாபு நீங்கலாக மற்ற மூவருங் குற்றஞ் செய்தவர்களென்று அபிப்பிராயஞ் சொன்னார். தஞ்சை செஷன் ஜட்ஜியவர்கள் அப்பீல்தாரன் ஒருவனை மட்டில் குற்றவாளியெனக் கண்டு பிடித்து அவனை மட்டில் தண்டித்து மற்றவர்களை விடுதலை செய்தார்கள்.

லார்டுகளின் அடியிற்கண்ட தீர்மானத்தில் சொல்லியபடி செஷன் ஜட்ஜி முக்கியமாய் 5 ஆதாரங்கள் அல்லது பயின்டுகளின் பேரில் தீர்மானஞ் செய்திருக்கிறார்கள். இது விஷயமாக ஹைகோர்ட்டில் அப்பீல் செய்ததில் ஜஸ்டிஸ் பேக்வல் துரையவர்

கள் கீழ்க்கோர்ட்டார் தீர்மானத்தை யுறுதிசெய்ய வேண்டுமென்றும் ஜஸ்டிஸ் சதாசிவப்பரவர்கள் அப்பீல்தாரனை விடுதலைசெய்ய வேண்டுமென்றுந் தீர்மானங்கள் செய்ததின்பேரில் வேறு ஜட்ஜி ஜஸ்டிஸ் சங்கரநாயரவர்களுடைய பரிசீலனைக்கு அனுப்பப்பட்டது. இந்த ஜட்ஜி சங்கரநாயரவர்கள் ஜஸ்டிஸ் பேக்வல் துரையவர்கள் சொன்னதே சரியானதெனத் தீர்மானித்தார்கள். அந்த ஆன்ற அறிவினையுடைய ஜட்ஜிகளின் தீர்மானங்கள் அடியிற் சொல்லப்பட்டிருக்கின்றன.

ஜஸ்டிஸ் பேக்வல் துரையவர்களின் தீர்மானம்.

அய்யாசாமிக்கு கொலை செய்யும் பயித்தியம் இருந்திருக்க ஹேதுக்களிருந்ததென்பதை டிபென்ஸ் திறப்பில் ருஜூப்பிக்கத் தவறிவிட்டார்களென்று நான் அபிப்பிராயப்படுகிறேன். வேறுவித சமாதானமாவது முகாந்திரமாவது ருஜூப்பிக்கப்படாததினாலே அய்யாசாமி அவன் மனைவி இறந்த விஷயத்தில் தீங்கற்றவன் அல்லது குற்றஞ்செய்யாதவனாகிறான். இந்த அய்யாசாமியினுடைய நடவடிக்கைகள் அவனுடைய குணத்துக்கும் தெரியாத்தன்மைக்கும் முற்றிலும் ஒற்றுமையாக விருக்கிறது. அய்யாசாமி தனக்கு மிகுந்த பிரியமுடையவளும் அவளுடைய புத்திசாதுர்யங்களைக்கேட்டு நடப்பது வழக்கமாகவுமுள்ள தனது மனைவி இறந்துகிடப்பதைப் பார்த்து அந்த பிரேதத்துக்கு சமீபத்தில் நின்றது அவனுடைய மடத்தன்மையையும் அசட்டுத்தன்மையையும் வெளிப்படுத்துகிறது. கொலை செய்யும் பயித்தியமுடையவர்கள் குற்றத்தை யொப்புக்கொள்ளுவது வழக்கமானது போல் இவன் யாதொன்றையும் ஒப்புக்கொள்ளவில்லை; இக்குற்றத்துக்காக ஒடியொளிய எவ்வித பிரயத்தனமுஞ் செய்யவில்லை; முதலில் இவன் எவர் பேரிலும் எந்தக் குற்றமுஞ் சாட்டவில்லை. மாஜிஸ்டிரேட் வந்த பிறகு தன்னைச் சூழ்ந்திருக்கும் தன் தகப்பன் முதலியவர்கள் இவனுடைய மனைவியை யிவனே கொலை செய்து விட்டானென்று சொன்னதின்பேரில் சில நேரங்கழித்து தன் மனைவியைக் கொன்றவன் தன்னுடைய தகப்பனே யென்று மாஜிஸ்டிரேட்டிடத்தில் சொல்லியிருக்கிறான். இவன் போலீசாருடைய சரியான காவலுக்கு வுட்படுத்தப்பட்ட பிறகு தான் தன்னுடைய நெருங்கிய பெந்துக்களின் பேரிலுங் குற்றஞ்சாட்டி ஸ்டேட்மெண்டு கொடுத்திருக்கிறான். அய்யாசாமிக்கு அவனுக்கு அன்னியோன்னியமாக விருந்தவளை கொல்லும்படியான கொடுமையான பயித்தியம் இருந்ததென அவனுடைய பெந்துக்கள் சொல்வது அவர்களுடைய நடவடிக்கைகளுக்கு முற்றிலும் விரோதமாக விருக்கிறது; கொலை செய்ததாகச் சொல்லுங்கத்தி இவன் கையிலிருப்பதைப்பிடுங்க அவர்கள் முயற்சிக்கவில்லை; அந்தக் கத்தியிவன் கையிலிருந்திருக்கும் பட்சத்தில் கொலை செய்யும்படியான பயித்தியம் இன்னும் பெருத்த குற்றங்களைச் செய்யத்தூண்டி விடுமென்பது இவர்

களுக்குத் தெரிந்த விஷயம். இவர்கள் சொல்வது உண்மையாக விருந்தால் இந்த சந்தர்ப்பங்களிலே இவனுடைய உறவினர்கள் இவனுடைய கையிலிருந்த கத்தியைப்பிடுங்கியிருக்க வேண்டியதும் அதிகாரிகள் வருகிற வரையில் இவனை பலவந்தமாகக் கட்டிவைத்திருக்கவேண்டியதும் சாதாரணமாக நடந்திருக்கக்கூடிய விஷயங்கள். அவன் பிரேதத்தின் அருகில் நின்றதும், கையில் கத்திவைத்திருந்ததும், பூமியில் இரத்தந்தோய்ந்த வஸ்திரங்கிடந்ததும், இந்த அய்யாசாமி தான் குற்றவாளி யென்றும் அவன் குற்றஞ் செய்யும் போதே கண்டு பிடிக்கப்பட்டானென்றும் அங்கே வந்த அன்னியர்கள் எண்ணும்படியாக ஒருவித ஏற்பாடு செய்திருப்பதாகத் தெரிகிறது.

டிபென்ஸ் சாக்ஷியங்களினாலாவது அப்புருவருடைய சாக்ஷியத்தைத் தவிர இந்தக்கேசில் சம்பந்தப்பட்ட வேறு ருஜூக்களினாலாவது எதிரியின் வீட்டிலுள்ளவர்களைத் தவிர வேறு அன்னியர்களால் இந்த குற்றஞ்செய்திருக்கக்கூடுமென்பதை யெடுத்துக்காட்டவில்லை. இந்த குற்றம் நடந்த காலத்தில் இந்த அய்யாசாமியைத் தவிர கிழவி முத்தாச்சி குழந்தைகள், வீட்டிற்குள் முதல் எதிரி அவர் மனைவி, ஹாலில் அவர் பெண் 3-வது எதிரி, இரண்டாங்கட்டில் அவர் மகன் கல்லியாணம் இவர்கள் இருந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஹால் கதவுக்கு வெளிப்புறந் திண்ணையில் முதல் எதிரியின் வேலைக்காரர்களாகிய 2 - 4 எதிரிகளும், மற்றொரு வேலைக்காரன் சோமு என்பவனும் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. டிபென்ஸ் திறப்புக்கு முக்கிய சாக்ஷிகளாக இருக்கக்கூடிய சோமு, கல்லியாணம், இவ்விருவரும் ஒளிமறைவாக இருந்து விட்டார்கள்.

நான் நினைக்கிறபடி அய்யாசாமி அவனுடைய மனைவியின் மரண விஷபத்தில் குற்றவாளியல்ல வென்று வைத்துக்கொள்ளுவோம். இந்தக் கொலை செய்வதை அய்யாசாமி தடுக்காதிருக்கச் செய்வதற்கு ஒருவனாவது, இந்த அப்பாசாமிக்கு எவ்வித காயமாவது சச்சரவுகள் நடந்த சின்னங்களாவது இல்லாதிருப்பதால் ஒன்றுக்கு மேற்பட்டவர்களாவது அவ்விடத்தில் இருந்திருக்கவேண்டும். கொல்லப்பட்ட பெண்பிள்ளையைப் பிடித்துக்கொள்ள குறைந்த பட்சம் இரண்டு பெயர் இருந்திருக்கவேண்டியது மெத்த அவசியம். ஏனென்றால் அந்தப் பெண் அய்யாசாமி யுடன் கூடப்படுத்திருக்கும்போது கொன்றிருக்கமுடியாது; அதிபலசாலியாகிய ஒருவன் அவளை வெட்டியிருக்கவேண்டும். ஏனென்றால் அவள் கழுத்திலணிந்திருந்த அதிக கனதியுள்ள தங்கத்தாலியானது இரண்டு துண்டாக வெட்டப்பட்டிருக்கிறது. வலது பக்கத்துக்கீழ்த்தாவக்கட்டை நொறுக்கப்பட்டிருக்கின்றது.

டிபென்ஸ் 4 - வது சாக்ஷி கர்னல் ரயிட் துரை சொல்லுகிறபடி முதல் எதிரி தனிமையில் இந்தக் குற்றஞ் செய்திருக்க முடியாதென்பது உண்மை; 16-வயதுடைய கல்லியாணமாவது வீட்டிலிருந்த பெண் பிள்ளைகள் இருவராவது இச்செய்கையைச் செய்யும்படியான பலமாவது முரட்டுத்தனமாவது இருந்திருக்க நியாயமில்லை. இதனால் இக்காரியம் வீட்டிற்கு வெளியி

லுள்ள சிலருடைய வுத்வியைக்கொண்டே நடத்தப்பட்டதென்பது நிச்சயம். அவ்வித வுதவியைத்தருவித்தவன் முதல் எதிரியைத்தவிர வேறில்லை; 3 எதிரியாவது அவளுடைய சகோதரனாவது அல்லது முதல் எதிரியுடைய பெண் ஜாதியாவது முதல் எதிரியுடைய வேலைக்காரர்களைக்கொண்டு, இவர்களின் எஜமானுடைய சம்மதியன்னியிலும் இவருக்குத் தெரியாமலும் இக்கொடிய செய்கைகள் செய்திருப்பார்களென்பது அசம்பாவிதமான விஷயம். பெண் பிள்ளை ஒருவளால் இக்கொடிய செய்கை ஏற்பாடு செய்யப்பட்டதென்பதும் அசம்பாவிதமான விஷயம். ஏனென்றால் அவள் இந்தப்பெண்ணைக் கொல்லவேண்டுமென்று நினைத்தால் எதிரி வக்கீல் சொல்லுகிறபடி பாஷாணங்கொடுத்து கொன்றிருக்கலாம். இந்தக்கொலை நடத்தப்பட்டிருக்கிற மாதிரியைக்கொண்டு இது ஒருவனுடைய பகை, கொடுமை மிருகத்தன்மை இவைகளினால் செய்யப்பட்டதாகத்தெரிகிறது.

கட்டில், பிரேதங்கிடந்தமாதிரி, இவைகள் விஷயமாக நான் முன்னமே விளக்கிக் காட்டியபடி அடியிற்கண்ட அனுமானங்கள் ஏற்படுகின்றன. ஒரு கட்டில் பெஞ்சு இவைகளின் பேரில் விரிக்கப்பட்ட மெத்தையின் பேரில் அய்யாசாமியும் அவன் மனைவியும் கால்களை நீட்டிப்படுத்துக்கொண்டிருக்கிறார்கள். அவன் மனைவியை அப்புறப்படுத்தி படுக்கைக்குக் குறுக்கே தலையணை மேல் தலையை வைக்கப்பட்டிருக்கிறது. அந்தப் படுக்கை அதாவது கட்டிலின் தலைப்பிலுள்ள சட்டத்தினால் அவளுடைய தலையையும் காலையும் ஒருவன் பிடித்துக்கொள்ளுவதும் மற்றொருவன் அவள் கழுத்தில் வெட்டுவதும் எவ்விதத்திலும் சாத்தியமான விஷயமல்ல; அவள் வலது பக்கத்தில் நின்று கொண்டு அவள் கழுத்தில் வெட்டியிருக்க வேண்டும். மெத்தையில் அவள் துடி துடித்துக்கொண்டிருந்தால் சில வெட்டுகள் அவள் தலையிலும் சில தோளிலும், சில மார்பிலும், விழுந்து கீறு காயங்களும் சொற்ப வெட்டுக்காயங்களுமுண்டாயிருக்கின்றன. அவள் கழுத்தினின்றும் இரத்தம் பீரிட்டு தலையணையிலோடியிருக்கிறது; அவள் கழுத்துக்கு சமீபமாக ஊறியிருக்கிறதுந்தவிர பூமியிலுமோடியிருக்கிறது. பின்பு இந்த பிரேதத்தை மல்லாக்கப்போட்டிருக்கிறார்கள். பாதத்தை ஒரு ஸ்டூல் பலகையில் வைத்திருக்கிறார்கள். இடுப்பு வஸ்திரத்தையும் போர்வையையும் மேலே போட்டு மூடியிருக்கிறார்கள்.

கெட்ட விதமான வெட்டுகளில் சில முதல் எதிரியாலேயே செய்திருக்கக்கூடும். அக்கொடிய விஷயங்களைத் தானே நேரிற் செய்யமுடியாதென வெண்ணி மற்றவர்களிடத்தில் கத்தியைக் கொடுத்து செய்யச் சொல்லியிருக்கிறான். இது S அடையாள அய்யாசாமியுடைய முதல் ஸ்டேட்மெண்டில் கண்டபடி,

"என்னுடைய தகப்பன் ஒரே வெட்டாக வெட்டினார்.................. பொழுது விடியுஞ் சமயத்தில் நான்போய் பார்த்ததில் இன்னுமனேக விடங்களில் வெட்டப்பட்டிருப்பதையும் பார்த்தேன்" என்ற வாக்கியங்கள் விளக்கிக் காட்டுகிறது.

இந்த விஷயங்களும் அவைகளினாலேற்படும் அனுமானங்களும் அய்யாசாமி மட்டில் தனிமையில் அவனுடைய பயித்திய நிலைமையில் செய்திருக்கிறான் என்ற கக்ஷிக்கு ஒற்றுமையாக இருக்கவில்லை யென்று எனக்குத்தெரிகிறது.

இந்தக் கொலை நடந்த பிறகு முதல் எதிரியின் நடவடிக்கைகளைப்பற்றி செஷன் ஜட்ஜி கொண்ட அபிப்பிராயங்களை அடியிற்கண்ட குறிப்புகளுக்கு உட்பட்டு நானும் ஒத்துக்கொள்ளுகிறேன். டிபென்ஸ் 6-வது சாக்ஷி பிச்சதேவன் பொழுது விடிந்து 2 மணிக்கு மேற்பட்டு (5 மணிக்கல்ல) தான் பாண்டிக்குப்போனதாகச் சொல்லுகிறான். ஈசனங்குடிக்கும் உறத்தூருக்கும் தபால் கொண்டு போகும்படி மணியகாரனிடம் அப்பாவு குப்பன் இந்த இரண்டு பெயரையும் தான் அனுப்பினதாக பிராஸிகியூஷன் திரப்பு 7-வது சாக்ஷி சொல்லுகிறான். இறந்தவள் காலராவினால் இறந்துவிட்டதாகபிராஸிகியூஷன் 7-வது சாக்ஷி தன்னிடஞ்சொன்னதாக பிராஸிகியூஷன் 8-வது சாக்ஷி சொல்லுகிறான். கோர்ட்டு திறப்பு 3-வது சாக்ஷி மணியகாரன், இறந்த காரணத்தைப்பற்றி தான் பிராஸிகியூஷன் 7-வது சாக்ஷியிடத்தில் யாதொன்றுஞ் சொல்லவில்லை யென்று சொல்லுகிறான். காலராவினால் இறந்ததாகச் சொல்லும்படிக்குந் தான் சொல்லவில்லை யென்று சொல்லுகிறான். கோர்ட்டு திறப்பு 3 வது சாக்ஷி தான் முதல் எதிரியிடம் பேசாமலே கிராம முனிசீப்பை அழைத்துக்கொண்டுவரச்சொன்ன பிறகு தன்னுடைய சுயேச்சையாக சமாசாரம் அனுப்பினதாகச் சொல்லுகிறான். கோர்ட்டு திறப்பு 6-வது சாக்ஷி சாமினாதபிள்ளை தன்னுடைய மேலதிகாரிகளின் அனுமதிக்கு விரோதமாக பிரேதத்தைத்தகனஞ் செய்யும்படி உத்தரவு செய்திருப்பானென்று சொல்வது சந்தேகத்துக்கு இடமாயிருக்கிறது; இந்த சாக்ஷிகளெல்லாம் முதல் எதிரிக்கு சினேகிதர்களாகவாவது அவருடைய சொற்படி கேட்கிறவர்களாகவாவது இருக்கிறார்கள். அவர்கள் முதல் எதிரிக்கு விரோதமாக இருக்கிற விஷயங்களைச் சொல்ல மனதில்லாதவர்களாயிருக்கிறார்கள். அச்சிட்ட ரிகார்டுகளை பார்க்கிற எங்களைப்பார்க்கிலும் இந்த சாக்ஷிகளை நேரிற் பார்த்தவும் அவர்கள் சொல்வதை நேரிற் கேட்டவுமான ஜட்ஜியும் அஸெஸ்ஸர்களும் அந்த சாக்ஷிகளின் ருஜுக்களைப்பற்றி சரியான அபிப்பிராயங் கொள்ள அருகமுள்ளவர்களாயிருக்கிறார்கள்.

நடந்த விஷயங்களை நேரிற் கண்ணால் பார்த்தவும் என்னுடைய அபிப்பிராயத்தில் சாக்ஷியத்தில் மதிப்பு இருப்பதுமான அய்யாசாமியுடைய சாக்ஷியத்தை கடைசியாகச்சொன்ன குறிப்பு பலப்படுத்துகிறது.

யாவரும் ஒப்புக்கொள்ளுகிறபடி அய்யாசாமி மிகுந்த மந்த புத்தியுடையவனென்றும், கோழை மனதையுடையவனென்றும், அவனை மிகவும் கடுமையாக குறுக்கு விசாரணை செய்ததால் சாக்ஷிக்கூண்டில் அவன் சொல்லியது தவறுதலாக இருக்கக்கூடுமென்றும், அவ்விதந் தவறுதலாகச்சொன்ன விஷயங்களை ருஜுவாக அங்கீகரிக்கக்கூடாதென்றும் செஷன் ஜட்ஜி எடு

துக்காட்டுகிறார். அய்யாசாமியும அவன் மனைவியும் கட்டிலில் படுத்துக் கொள்ளப்போனமாதிரியைப்பற்றியும், அப்புரூவர் அவ்விடம் வந்ததைப்பற்றியும் அய்யாசாமி சொன்ன வாக்குமூலங்களை அவர் அங்கீகரிக்கவில்லை. ஆனால் S அடையாள ஸ்டேட்மெண்டு அய்யாசாமியால் சுயேச்சையாகதன் சுய புத்தியால் கொடுபட்டதாக அபிப்பராயப்படுகிறார். இந்த ஸ்டேட்மெண்டும், பிராஸிகியூஷன் 3-வது சாக்ஷி சொல்லுகிறபடி அய்யாசாமி தன் தகப்பனைச்சுட்டிக்காட்டியதும், அவன் பிராஸிகியூஷன் 5-வது சாக்ஷி சப் இனிஸ்பெக்டரிடத்தில் எழுதிவைத்த ஸ்டேட்மெண்டும், இறந்தவள்கொலை செய்யப்பட்டதில் முதல் எதிரி பிரதான மனுஷனாக விருந்தானென்றும் அவன் நேரிலிருந்தே செய்தானென்றும் அய்யாமி சொல்லும் வாக்கு மூலத்தை யுறுதிப்படுத்துகிறது.

பிராஸிகியூஷன் 15 வது அப்புரூவர் சாக்ஷியத்தை ஆராய்ந்துபார்க்க எனக்கு இஷ்டமில்லை; ஏனென்றால் கல்வியிற் சிறந்த செஷன் ஜட்ஜி சொல்லுங்காரணங்களினாலும், அந்த சாக்ஷியத்தின் தன்மையாலும், அது எந்த விதமாகக்கொடுபட்ட தென்பதைக்கொண்டும், அந்த சாக்ஷியம் நம்புவதற்கு அருகமற்றதென்று நான் அபிப்பிராயப்படுகிறேன். கோர்ட்டு 6-வது சாக்ஷி சாமினாதபிள்ளையுடைய சாக்ஷியம் உண்மையாகவிருக்கும் பட்சத்தில் கூச்சல் கேட்ட பிறகுதான் அப்ரூவராகிய தியாகன் வீட்டிற்கு ஓடி வந்திருக்கவேண்டும். கொலை நடந்த காலத்தில் அவன் அவ்விடத்திலில்லை; வீட்டிலுள்ளவர்கள் சொன்ன விஷயங்களில் சிலவற்றைப் பொறுக்கி எடுத்துச் சொல்லியிருக்க வேண்டும். உண்மையாக நடந்த விஷயங்களை அவன்தெரிந்து கொண்டதும், தன்னைப்போன்ற வேலையாட்களுடன் தானுங் குற்றவாளி யாக்கப்படுவான் என்ற பயமும் அவன் ஓடிவிட்ட காரணத்தைத் தெரிவிக்கிறது; தன்னை இயன்றவரையில் தப்பித்துக்கொள்ளவும், உண்மையிற் குற்றஞ் செய்தவர்களை அதற்கு உடன்படுத்தவும், குற்றம் எவ்விதம் நடந்திருக்கக்கூடுமென்பதைப்பற்றி ஜோடிக்கவுமிட முண்டாயிற்று.

ஆனால் வஸ்திரம் மாற்றினதைப்பற்றி மட்டில் அவனுடைய சாக்ஷியத்தை கல்வியிற் சிறந்த செஷ்ஷன் ஜட்ஜி ஒத்துக்கொள்ளுகிறார். அது மற்ற சாக்ஷிகள் சொன்னதற்கும் ஒற்றுமையாக விருப்பதால் நானுமதை யொத்துக்கொள்ளுகிறேன். அய்யாசாமி அதிகாலையில் இரத்தந் தோய்ந்த வெள்ளை வஸ்திர முடுத்தியிருந்தானென்பதற்கும், பிறகு இரத்தந் தோய்ந்த செவப்பு வேஷ்டிகட்டியிருந்தானென்பதற்கும் எவ்வித சந்தேகமுங்கிடையாது. No. 4 அடையாளமுள்ள வெள்ளை வஸ்திரம் பிரேதத்தினிடத்தில் கிடந்தது. அவ்விடம் அதிகாரிகள் வந்த போது அய்யாசாமி தன்னுடைய வஸ்திரத்தை மாற்ற பிரயத்தனஞ் செய்தானென்று தோற்றும். No. 3 அடையாளமுள்ள செவப்பு வஸ்திரத்தில் இரத்தக் கறையிருந்தது. கல்வியிற் சிறந்த செஷன் ஜட்ஜி விவகரிக்கிறபடி அய்யாசாமியைத்தவிர வேறொருவனும் கொலை நடந்த விடத்தில் இருந்தானென்பதைத்தெரிவிக்கிறது.

முதல் எதிரி தன் மகன் பேரிலேயே இந்தக் குற்றத்தைச் சுமத்திய செய்கையானது அவனே குற்றவாளி யென்பதற்கு தகுந்தசாக்ஷியமென்று என்மனதுக்குத் தோற்றுகிறது. பிரேதத்தை தகனஞ் செய்து விடவேண்டுமென்ற யோஜனை நடந்ததென்ற சாக்ஷியம் ஒப்புக்கொள்ளப்படாவிட்டால் கோர்ட்டு திறப்பு 6-வது சாக்ஷி சொன்னதும் சந்தேகிக்கக்கூடியது. அதிகாரிகள் வருவதற்கு முன்னிருந்த சாவகாசமான காலங்களில் முதல் எதிரி தன்னுடைய மகனை ஒளித்துவைக்க எவ்வித பிரயத்தினமுஞ்செய்யவில்லை. ஆனால் முதல் எதிரி தன்னைத்தப்பித்துக்கொள்ளுவதற்கும் தன்னுடைய சொத்துக்கு பின்னிட்டு நஷ்டமுண்டாகாதிருப்பதற்காகவும் தன்னுடைய மகனையும் மருமகளையும் அப்புறப்படுத்துவதற்குத் தயாராகவிருந்திருக்கிறார்.

முதல் எதிரி இந்தக் குற்றஞ் செய்யச்சொல்லி இறந்தவள் கொலை செய்யப்பட்டபோது அவனே நேரிலிருந்தானென்று அய்யாசாமி சொல்லும் சாக்ஷியம் ருஜுப்பிக்கப்பட்ட மற்ற சாக்ஷியங்களை யுறுதிப்படுத்துகிறதென்று நான் நினைக்கிறேன். கீழ்க் கோர்ட்டார் குற்றவாளியென்று கண்டு பிடித்ததையும் அவர் விதித்ததண்டனையையும் நான் உறுதிசெய்கிறேன்.

ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்களுடைய தீர்மானம்

கைதியானவன் குற்றவாளியென்று கல்வியிற் சிறந்த செஷ்ஷன் ஜட்ஜி கண்டு பிடித்ததற்கு ஆதாரமாகச்சொல்லும் விஷயங்கள் பலவற்றை நான் ஒத்துக்கொள்ளவில்லை; வைத்திலிங்கபிள்ளையின் வீட்டிலுள்ளவர்களிற் சிலரால் இக்கொலை நடத்தப்பட்டிருக்கவேண்டுமென்ற முதலாவது கிரவுண்ட் ஆக்ஷேபிக்கத்தக்கதல்ல; அய்யாசாமி, தன் தகப்பனான கைதி குற்றவாளியென்றும், கைதி, அய்யாசாமி குற்றவாளி யென்றுஞ் சொல்லுகிறார்கள். No 3 அடையாள செவப்பு வஸ்திரம் அய்யாசாமி தன்னுடைய தென்று போலீஸ் இனிஸ்பெக்டர் கிருஷ்ணய்யரிடத்தில் ஒப்புக்கொண்டிருக்கிறான். (S அடையாள ஆதிரவைப்பார்க்க). No 4 அடையாள முள்ள வெள்ளை வேஷ்டியும் அய்யாசாமியுடைய தென்பதைப்பற்றி பிராஸிகியூஷன் 2-வது சாக்ஷி ருஜுச்சொல்லுகிறார். கொலை நடந்த காலத்தில் No 4 அடையாள வேஷ்டியை அய்யாசாமி உடுத்திக்கொண்டிருந்ததாக ருஜுவேற்பட்டிருக்கிறது. *No* 3 அடையாள முள்ள வேஷ்டி ரத்தந்தோய்ந்து சமீபத்தில் கிடந்திருக்கலாம். அவன் அதை பிறகு *No* 4 வேஷ்டிக்குப்பதிலாகக் கட்டிக்கொண்டிருக்கலாம். *No* 3 அடையாள வேஷ்டியை மாற்றி *No* 4 வேஷ்டியை கட்டிக்கொள்ளும்படி அய்யாசாமியை அவன் தகப்பன் கட்டாயப்படுத்தினானென்று சொல்வதற்கு தகுந்த ருஜுவில்லை. *No* 3 வேஷ்டி தன்னுடைய தென்று அய்யாசாமி தன்னுடைய S. அடையாள ஸ்டேட்மெண்டில் ஒப்புக்கொண்டிருக்கிறான். மெத்தை படுக்கை இரண்டு தலையணைகள் இவைகளில் இரத்தம் சிந்தியிருந்ததாக ருஜுக்கள் ஏற்பட்டிருக்கின்றன. அய்யாசாமியுடைய இரண்டு வஸ்திரங்களிலும் இரத்தம் சிந்தியிருப்பதானது ஒருவ

னுக்கு மேற்பட்டவன் இக்கொலையில் சம்பந்தப்பட்டிருக்க வேண்டுமென்ற அவசியத்தை ருஜூப்பிக்கவில்லை; அறிவிற் சிறந்த செஷன் ஜட்ஜியுடைய அபிப்பிராயத்தின்படி அது வொரு முடிவான ருஜூவென்பதற்கு எவ்விதத்திலுமிடமில்லை; தனம் என்றவளை கொலை செய்யும்படியான நோக்கம் கைதி ஒருவனுக்கு மட்டிலிருந்ததென்ற 5-வது கிரவுண்டும் நிலைநிற்கத் தகுந்ததல்லவென்பது என்னுடைய அபிப்பிராயம். அய்யாசாமிக்கு மாற்றாந்தாயின் பெண்ணாகிய சகோதரி தங்கபாபுக்கும் இந்த தனத்துக்கும் விரோதம் என்பது யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. அய்யாசாமி தன்னுடைய மாற்றாந்தாயார் தன்னுடைய பெண் ஜாதிக்கு விரோதியெனச் சொல்லுகிறார். தங்கபாபு இக்கொலைக்குற்றஞ் செய்தவனென்றாவது இக்கொலைக்கு உடந்தையாக விருந்தவனென்றாவது அவன் பேரிற் குற்றஞ் சுமத்தத்தகுந்த ருஜூக்கள் இல்லாவிட்டால் அதே ருஜூக்களைக்கொண்டு கைதி பேரில் மட்டில் குற்றஞ் சுமத்துவதுங் கூடாத விஷயமாகிறது. இந்தக்கொலை நடந்த பின் கைதியின் நடவடிக்கைகள் (4 வது கிரவுண்ட்) கொலை செய்தவன் அவனல்லவென்ற அனுமானத்துக்கு ஒற்றுமையானதென்று நான் நினைக்கிறேன். முத்தாச்சி யென்பவள் கூச்சல்போட்டவுடன் இவன் கட்டிலிருந்த விடத்துக்கு போனான். முத்தாச்சி தூக்கத்தினின்றும் விழித்துக்கொண்டு கத்தின விஷயம் இன்னதென்பதை முதலில் இவன் தெரிந்துகொள்ளாவிட்டாலும் இவனு மந்தக் காலத்தில் கூச்சல் போட்டிருக்கிறான்; திருடர்கள் வீட்டுக்குள் நுழைந்திருப்பார்களென்று நினைத்தான். தன்னுடைய சிநேகிதன் பிச்சையப்ப தேவனுக்குச் சொல்லி யனுப்பினான். தனக்கு விரோதியாகவுள்ள சகோதரன் கிராம முனிசீபுக்கு சமாசாரஞ் சொல்லி யனுப்பினான். உடனே இறந்த விஷயமாக அன்று காலையிலேயே உறத்தூருக்கு சமாசாரம் அனுப்பப்பட்டது. பிரேதத்தை தகனஞ் செய்யும்படி அவன் பிரயத்தனஞ் செய்தானென்பதற்கு உபயோகமற்ற அய்யாசாமியுடைய சாக்ஷியமும் நம்புவதற்கு அருகமற்ற கோர்ட்டு திறப்பு 6 வது சாக்ஷியுடைய ஸ்டேட்டுமெண்டுமிருக்கிறது; இந்த இரண்டைத் தவிர வேறே ருஜூக்களில்லை; இந்த கோர்ட்டு திறப்பு 6-வது சாக்ஷி மரண விசாரணை விஷயத்தில் தெளிவான பொய் சொல்லியிருக்கிறார். இந்தக் கைதி தன்னுடைய மருமகளைக் கொன்றுவிட்டு தன் மகனுக்கு விரோதமாக கூச்சல் போட்டிருக்கிறானென்பதும், பிறகு அய்யாசாமிக்கு ரூ 30,000 இலஞ்சங் கொடுத்து பிரேதத்தை தகனஞ் செய்துவிடும்படி அய்யாசாமி சம்மதிக்கும்படி செய்ய அவ்விடத்தில் கூடிய ஜனங்கள் முன்னிலையில் முயற்சித்திருக்கிறானென்று சொல்வதும் நம்புவதற்கு அருகமற்றவை யென்று எனக்குத் தோற்றுகிறது. கைதி தனது மருமகளைக் கொலை செய்வதற்கு காரணம் இறந்த தனம் தன்னுடைய மாமனாராகிய இந்தக் கைதி தன்னை பலவந்தஞ் செய்ய முயற்சித்தார் என்று அவள் அய்யாசாமியிடத்திலும் அவன் மைத்துனனிடத்திலும் சொல்லியது எனச் சொல்லுகிறார்கள். இந்தக் கொடிய கற்பனை விஷயஞ் சொல்லி இந்தக் கைதியே

ரில் தப்பெண்ணங் கொள்ளும்படி செய்துவிட்டார்கள். இதுபோலவே இந்தக் கைதி தன் பெண் தங்கபாபு விடத்தில் முறைகெட்ட புணர்ச்சி செய்தவனென்று (27 அடையாள ஆதிரவு) டிப்டி மாஜிஸ்டிரேட் முன்பாக நடந்த விசாரணையில் அய்யாசாமி கூண்டிலிருக்கும்போது சொல்லி ஒருவித அனுமானமேற்பட்டு கைதிபேரில் ஒருவித தப் பெண்ணங்கொள்ளும்படி செய்தார்கள். கைதி தகுந்த பணக்காரனென்பதற்கும் தகுந்த செல்வாக்குடையவனென்பதற்கும் சந்தேகமேகிடையாது. அவன் பேரிற் சொல்லுகிறபடி அவன் துஷ்டச்செய்கைகள் செய்யக்கூடியவனென்பதற்கு தகாத அபிப்பிராயங்கள் சொல்லப்படுகிறது. அவைகளை யாதரிக்கத்தகுந்த ருஜூக்களில்லை; கொலை நடந்த விஷயமாக முதல் எதிரியும் முத்தாச்சியும் சொல்லும் விபரங்கள் ஏற்பட்ட ருஜூக்களுக்கு முற்றிலும் ஒற்றுமையில்லாதிருத்தல் என்பது கைதி குற்றவாளி யென்று அறிவிற்சிறந்த செஷன் ஜட்ஜி கண்டு பிடித்ததற்கு கடைசியான கிரவுண்டு (ஆதாரம்). முக்கியமான குறிப்புகளில் சில அய்யாசாமியாலேயே ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது; அவர்கள் சொல்லும் விஷயங்கள் ஏற்பட்டிருக்கும் ருஜூக்களுக்கு ஒற்றுமையில்லாமலிருக்கவில்லை யென்று நான் நினைக்கிறேன். தனத்தினுடைய பிரேதமானது யோக்கியமாக நீட்டிக்கிடத்தப்பட்டிருக்கலாம்; சொற்பம் கற்பனையாகவுமிருக்கலாம்; கொலை நடந்த பிறகு திரேகத்தின் மேல் பாகம் திறந்து கிடந்ததால் கோர்ட்டு திறப்பு 5-வது சாக்ஷி முத்தாச்சியால் அந்தபாகம் வஸ்திரத்தினால் மூடப்பட்டிருக்கலாம். தனம் தெற்கு வடக்காகப் படுத்துக்கொண்டாளென்றும், கட்டிலில் படுத்திருக்கும்போதே கொலை நடத்தப்பட்டதென்றும், No 3 No 4 அடையாள வஸ்திரங்களிலும் தலையணையிலும் மெத்தையிலும் இரத்தம் பீரிட்டு அடித்ததென்றும் கீழே கூட இரத்தம் ஊறிவிட்டதென்றும் (பிராஸிகியூஷன் 3 சாக்ஷியத்தை பார்க்க) அய்யாசாமி ஒப்புக்கொள்ளுதலானது (S ஆதிரவு) கட்டிலிலேயே இந்தக் கொலை நடந்திருக்கிறதென்பதை நன்றாகத்தெரிவிக்கிறது. தனத்தினுடைய பிரேதத்தின் மேல்பாகம் திறந்துகிடந்ததால் முத்தாச்சிதான் அந்தப் பிரேதத்திடஞ்சென்று மேலே மூடினதாக ஒப்புக்கொள்ளுகிறாள். கொடுங்கொலை செய்யப்பட்டிருக்கும் பிரேதத்தைப் பார்க்கும் ஜனங்கள் போலீசார் வருகிற வரையில் அதில் பிரவேசிக்காமல் காத்திருக்க வேண்டுமென்பதும், அந்தப் பிரேதங்கிடந்த மாதிரி முதலியவைகளிலும் அதைச் சுற்றிலுங்கிடந்த விஷயங்களிலும் போலீசார் வருகிற வரையில் பிரவேசிக்கக்கூடாதென்பதும் அவசியமான விஷயங்களாக விருந்தாலும் ஒரு வயதான மனுஷி தன்னுடைய நெருங்கிய உறவாகிய ஒரு சிறு பெண்ணின் திரேகத்தில் மேல் பாகந்திறந்துகிடப்பதையும் கூச்சல் போட்டவுடன் ஜனங்கள் அங்கே கூடிவிட்டதையுங்கண்டு அந்த பிரேதத்தை யொழுங்காகப் போட்டும், மேல் பாகந்திறந்து கிடந்ததை மூடியும் தொங்கிக்கொண்டிருக்கும் கால்களை ஒரு ஸ்டூல் பலகையில் வைத்தும் இருக்கவேண்டியது அவசியமானதேயன்றி அவ்விதஞ் செய்யாதிருந்திருக்க நியாயமில்லை; முத்தாச்சி பிரேதங்கிடந்த மாதிரியை

கலைத்தாலும் அவள் வாக்கு மூலத்தில் சரியற்ற விஷயங்களைச் சொன்ன
தைக்கொண்டும், அவளுடைய செய்கைகளுக்காக அப்பீல்தாராகிய முதல்
எதிரியைக்கட்டுப்படுத்துவதானது நியாயமானதாக எனக்குத் தோற்றவில்
லை; *No* 1 அடையாள அரிவாளுடைய வளைவு மிகவும் சொற்பமாக விருப்
பதினாலே அதனால் தலையணை வெட்டப்படாதிருப்பது ஒரு ஆச்சரியமான
விஷயமல்ல; தனம் போட்டிருந்த ஓலையின் செவப்புகளில் இரண்டு உடை
ந்து போய் அவள் புடவையிலிருந்து எடுக்கப்பட்டதானது அவள் காதில்
வெட்டு விழுந்தபோது தெறித்துப்போயிருக்க வேண்டுமென்பஃது ஒற்றுமை
யல்லாத விஷயமாக விருக்கவில்லை ; அறிவிற்சிறந்த செஷ்ஷன் ஜட்ஜி
தான் சொன்ன குறிப்புகளில் ஒன்றேனும் முடிவானதாக விருக்கவில்லை
யென்பதை யொப்புக்கொள்ளுகிறார். அந்த வெட்டுகள் விழுந்திருக்கும்
மாதிரியைக்கொண்டு அவைகளெல்லாம் ஒருவனாலேயேசெய்யப்பட்டிருக்க
வேண்டுமென்பதையும் ஒப்புக்கொள்ளுகிறார். டிபென்ஸ் திறப்பு 4-வது
சாக்ஷி கர்னல் ஹாஸல் ரயிட் என்பவருடைய சாக்ஷியத்தினாலும் ஒருவனா
லேயே இந்தக்காயங்களெல்லாம் ஏற்பட்டிருக்கவேண்டுமென்பதும், இருட்
டில் செய்யப்பட்டதல்லவென்பதும் வெளிச்சத்தில் செய்யப்பட்ட விஷய
மென்றுந் தெரிகிறது; கூலிக்கு அமர்த்தப்பட்ட கொடுங் கொலையாளி யொ
ருவன் விளக்கு வெளிச்சத்தில் அனாவசியமாக திரோகத்திலும் முகத்திலும்
பனிரெண்டு வெட்டுகள் வெட்டியிருக்கமாட்டான். 5 நம்பர் ஒரேவெட்டு வெ
ட்டியிருக்கவேண்டும். அது போதாதென்று நினைத்தாலும்கழுத்தில்மற்றோர்
வெட்டு வெட்டி காரியத்தை முடித்திருக்கவேண்டும். மரணம் நடந்தவுட
னே அய்யாசாமி தான் 5,6 வருஷகாலமாக சுகமாக காலங்கழித்து வந்த
பிறகு தன்னுடைய துர்ப்பாக்கியத்தினால் இவ்வித விஷயங்கள் நடந்தனவெ
ன்று அவன் ஒப்புக்கொண்டு ஸடேட்மெண்டு கொடுத்திருப்பதானது மெத்
தவுங் கவனிக்கத்தக்கது; காயங்களின் தன்மையும் அதன் எண்ணிக்கையும்
கொலை நடப்பதற்கு முந்தியும் பிந்தியுமுள்ள அவனுடைய நடவடிக்கைகளும்
(முத்தாச்சி, இனிஸ்பெக்டர், தாசில்தார் இவர்கள் முன்பாக எழுதிவைத்த
வாக்குமூலங்களைப் பார்க்க) மெடிகல் ஜூரிஸ் புருடன்வில் விஸ்தரித்திருக்
கிறபடி கொலை செய்யும் பயித்தியத்தினால் இக்கொலை யேற்பட்டிருக்கவே
ண்டுமென்று தெரிகிறது; மரண விசாரணை நடந்தபோதும் தாசில்தார்,
மாஜின்டிரேட், வில்லேஜ் முனிசீப் இவர்கள் விசாரணையிலும் முத்தாச்சி
தான் சத்தங் கேட்டுபோனதாகவும் அய்யாசாமி இரத்த அரிவாள் வைத்துக்
கொண்டு தனங் கிடந்தவிடத்தில் நின்றுகொண் டிருந்ததாகவும் ஸ்டேட்மெ
ண்டு கொடுத்திருக்கிறாள். பிற்பட்டு அந்த அய்யாசாமி அந்த தனத்தை
ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வெட்டு வெட்டினதாக ஜாஸ்திப்படுத்தி
சொல்லுகிறாள். வைத்தினாதபிள்ளை சீக்காயிருந்ததாக, பாண்டியிலுள்ள அவர்
வீட்டுக்கு போனதாக முதலிற் சொன்னாள். பின்பு அய்யாசாமியும் வைத்தி
னாதபிள்ளையும் சீக்காயிருந்ததால் அதற்காக பாண்டிக்குப் போனதாக ஜாஸ்
திப்படுத்திச் சொல்லுகிறாள். ஆனால் அவள் தன்னுடைய பெண்ணின் பின்

ளையாகிய அய்யாசாமிக்கு விரோதமாகச் சொன்ன சாக்ஷியங்களைமுற்றிலும்
விலக்குவது கூடாத விஷயமென்று நான் நினைக்கிறேன்.

இந்தக் கைதிபேரில் பொது ஜனங்கள் அபவாதச் சொற்கள் சொல்லும்
படி பிரயத்தினங்கள் நடந்தன. இந்தக் கேஸ் செஷ்ஷன் விசாரணையிலும்
இவருடைய விரோதிகள் அச்சிட்ட துண்டு பத்திரிகைகளும் பாட்டுக
ளும் போட்டு பிரசுரப்படுத்தினார்கள். இவன் பிடிவாதமுள்ள கொடுங்
குணமுடையவனாக விருந்திருக்கலாம்; நாலுவயதில் தாயை யிழந்த
இந்த அய்யாசாமி யிடத்தில் இவன் கொடுமையாக அல்லது கொடூர
மாக விருந்தானென்று எடுத்துக்காட்டக்கூடிய விஷயங்க ளில்லாவிட்டா
லும் அவனிடத்தில் பக்ஷமாக விருந்திருக்கவில்லை யென்று அனுமானிக்
கப்பட்டது அல்லது ருஜூப்பிக்கப்பட்டது. கெட்ட நடையையுடைய இவர்
பெண் விதந்துவிடத்தில் இவர் விசேஷ பிரீதியுடையவராகவிருந்து வந்தது
செல்வாக்குள்ள இவருடைய பெந்துக்கள் இவரை விரோதிக்கும்படி செய்
தது. இவருக்கு பின்னுமனேக கொடும் விரோதிகளிருக்கிறார்கள். இந்தக்
கைதிதன் மகன் அய்யாசாமி யிடத்தில் அசாதாரண விரோதமாக விருந்த
தும், அய்யாசாமி முதலில் சொன்னபடி இந்த கைதியே தன் கையினாலோ
அல்லது பெயர் முதலியன தெரியாத வேறு கொலையாளியைக் கொண்டோ
வெட்டிய பிறகு இந்த அய்யசாமியே தன் மனைவியை வெட்டிவிட்டானெ
ன்று அபாண்டமாக குற்றஞ் சுமத்தியதாகச் சொல்வது இந்த கைதி தன்
மகன் அய்யாசாமியுடன் சேர்ந்து வசிக்க விருப்பமுடையவனாக விருந்தா
னென்றும், ஆனால் இந்த அய்யாசாமியுடைய பெண்ஜாதிக்கு உறவினர்களா
யிருப்பவர்களிடத்தில் விருப்பமில்லா திருந்தானென்றும் சொல்லும் சாக்ஷி
யங்களுக்கு நேர்விரோதமாக விருக்கிறது. இந்தக் கைதியுடைய நிஷ்டூர
மான குணமும் செய்கைகளும், குடும்ப சண்டை சச்சரவுகளில் தன்னு
டைய மருமகள் அவளுடைய புருஷன் இவர்கள் கக்ஷிக்கு விரோதமாக
தன்னுடைய பெண் அவளுடைய தாயார் இவர்களுக்குச் சார்பாக விருந்து
வந்ததானது அய்யாசாமியுடைய ஏற்கனவே பலனற்ற சலனமுள்ள மூளை
யை பின்னும் கழற்றுகிறதுஞ் சுற்றுகிறதுமாகச் செய்துவிட்டது. இது
சாஸ்திர சம்மதப்படி இந்த அய்யாசாமிக்கு ஒரு பயித்தியமாகச் செய்திருக்க
லாம். இது இவனுடைய மனைவியைக் கொல்லும்படி செய்திருக்கும். ஆனால்
எவனொருவன் ஒரு காரியத்தை நினைத்து அந்த காரணத்தினால் தான் நடந்
திருக்கிறதென்று ருஜூப்பிக்காதவரையில் அவைகளைப்பற்றி கவனிக்க
சட்டமிடங் கொடாது. இந்த விருத்தாந்தங்களும் போலீசாருக்குச் சொல்லி
யனுப்பாமல் இந்தக் கொலை விவரந்தெரிந்தவுடனே தனக்கு வுற்ற சினேகி
தர்களுக்குச் சொல்லியனுப்பியதும் அறிவிற் சிறந்த செஷன் ஜட்ஜியுடைய
தீர்மானத்தில் கண்ட மற்றுஞ் சில விஷயங்களும் எவ்விதமாக வற்புறுத்
திச் சொன்னாலும் அப்பீல்தாரன் குற்றவாளி யென்று என் மனதிலெவ்வள
வேனும் பதியவில்லை ; இருக்கப்பட்ட பலமான அனுமானங்களினால் தனத்

தை வெட்டியது கொலை செய்யும் பயித்தியத்தினுலேற்பட்டதேயன்றி கூலி
க்குக் கொலை செய்யவந்தவனுலேற்பட்டதல்ல வென்பது என்னுடைய முடி
வான தீர்மானம். இந்தக் கைதி வசித்த கிராமத்துக்கு 5 மைல் தூரத்திலிரு
க்கும் போலீசாரையுடனே தருவிக்காமலிருந்ததா லது இந்தியாவின்குக்கிராம
வாசிகள் விஷயத்தில் விரோதமானதாக வர்புறுத்தக்கூடாதது. இந்தக் கே
சில் இவருக்கு சாதகமாக டிபென்ஸ் திறப்பில் சாக்ஷிகளாக வந்த இவருடைய
சினேகிதர்களைக் கொண்டு இதே குற்றத்துக்காக ஒளிந்துகொண்டிருக்கும்
இவருடைய மகன் கல்லியாணத்தை கோர்ட்டில் ஆஜர்ப்படுத்தி இவருக்கு
ஸாதகமாக சாக்ஷி சொல்லச் செய்வது அல்லது பிராசிகியூஷன் திறப்பிலோ
அல்லது டிபென்ஸ் திறப்பிலோ சந்தேகப்படக்கூடியதாக விருப்பதை நிவர்
த்திக்கச் செய்தல் கைதி குற்றவாளி யென்று சொல்லுவதற்கு ருஜுவாக
மாட்டாது. தனத்தைக்கொன்றவன் அய்யாசாமியே யென்று கைதி சொன்
னபோது அய்யாசாமி தன் தகப்பனே இக்குற்றத்தைச் செய்தானென்று
போலீசாரிடத்திலும்மாஜிஸ்டிரேட்டாரிடத்திலும் வெளிப்படையாய் தயிரிய
மாக சொல்லமுடியாத கோழை மனதையுடையவனுக இருந்திருக்கிறனெ
ன்பது சாக்ஷியங்களினுல் ருஜுப்பிக்கப்படவில்லை. அங்கே வந்தவர்கள் ஒவ்
வொருவரும் குற்றஞ் செய்கிறபோதே இவன் பிடிக்கப்பட்டானென்றுஎண்
ணும்படியாக கைதியும் மற்றவர்களும் இவன் கையில் அரிவாளைக்கொடுத்து
பிடித்துக்கொள்ளச் செய்ததற்கும் வேறு வேஷ்டி கட்டிக்கொள்ளச் செ
ய்ததற்கும் இவன் சம்மதித்திருந்தான் என்று சொல்வது நான் நம்பக்கூடாத
விஷயமாக விருக்கிறது. கோர்ட்டு திறப்பு 5-வது சாக்ஷி முத்தாச்சி தன்
னுடைய சகோதரனுகிய இந்தக் கைதியை இக்குற்றத்தினின்றும் தப்புவித்
துவிடவேண்டியதினிமித்தம் ஆதிமுதல் கைதிக்கு அனுகூலமான விஷயங்
களைச் சொல்ல அவனிடத்தில் மிகுந்த பிரீதியுடையவளாக இருந்தாளென்
றும், தன் பெண்ணின் பிள்ளையாகிய அய்யாசாமிக்கு பிரதிகூலமாகச் சொல்
லுவதற்கு அவனிடத்தில் பற்றுதலில்லாதிருந்தாள் என்றும் சொல்லுங்கதை
சம்பாவிதமானதல்ல; அவளும் டிபென்ஸ் 2 சாக்ஷி சின்னபொன்னும் முன்
சொன்ன ஸ்டேட்மெண்டுகளுடன் சில சேர்த்துச் சொன்னதானது கைதி
குற்றஞ் செய்திருக்கக்கூடுமென்பதைக் குறிப்பிட்டுக்காட்டக் கூடியதாக
எண்ணப்படக்கூடாது; டிபென்ஸ் திறப்பை பலப்படுத்துவதற்காக அந்த
திறப்பு சாக்ஷிகள் சில விஷயங்களை இட்டுகட்டிக்கொண்டு சொல்வது பலன
ற்றுப்போன பிராஸிகியூஷன் திறப்பு சாக்ஷியங்களை பலப்படுத்துமென்று
நினைப்பது தகுதியல்லவென்று நான் நிச்சயமாகச் சொல்லுவேன். அய்யா
சாமியின் வளர்த்த தகப்பனும் கைதிக்கு விரோதியாயுமுள்ள பிராஸிகியூ
ஷன் 2வது சாக்ஷி இந்த குற்றம் நடந்தவுடனே வில்லேஜ் முனிசீப் முறை
மையில் அவ்விடம் வந்தவர் அய்யாசாமி குற்றவாளி யென்று குறிப்பிட்டுச்
சொன்ன சங்கதியை யொப்புக்கொண்டிருக்கிறுர். பிறகு கைதி தான் குற்
றஞ் செய்தவனென்று சொல்ல அவரைத்தூண்ட முடியாது. இந்த சங்கதி
யும் பிராஸிகியூஷனுக்கு நேர்விரோதமாயுள்ளது. பயித்திய முண்டாயிருந்த

சமயத்தில் இந்த குற்றம் அய்யாசாமியால் செய்யப்பட்டிருக்கும் என்ற அனு
மானத்துக்கு முத்தாச்சியுடைய சாக்ஷியமும் அதற்கு ஒற்றுமையாக ஒப்புக்
கொள்ளுதல் என்று சொல்லக்கூடிய அய்யாசாமியுடைய ஸ்டேட்மெண்டும்
ஏற்பட்டிருப்பதுமன்றி டிபென்ஸ் 4-வது சாக்ஷியாகிய லெப்டினெண்டு கர்
னல் ஹூஸல் ரயிட்டுடைய அனுபோக சாக்ஷியமும் அதை யுறுதிப்படுத்து
கிறது. அய்யாசாமி இந்தக் கொலை செய்ய எவ்வித முகாந்திரமுமில்லை என்
பதற்கும் பிராஸிகியூஷன் திறப்பிற் சொல்லப்படும் மற்ற விஷயங்களுக்கும்
மெடிகல் ஜூரிஸ்புருடன்ஸ் சம்பந்தமாய் ஏற்பட்ட இரண்டு கிரந்தங்களி
னின்றும் சில வாக்கியங்கள் எடுத்துச்சொல்லுகிறேன். (அறிவிற் சிறந்த
ஜட்ஜி லயன் வாடல் இவர்களின் 4-வது பதிப்பு புஸ்தகம் 308-வது பக்கம்,
டெயின் 140,141 பக்கங்கள் இவைகளை குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறுர்
கள்).

இந்தக் கேசில் கைதிக்கு விரோதமாக பிராஸிகியூஷன் திறப்பில் உறு
த்துச்சொல்வது எல்லாம் (அறிவிற் சிறந்த செஷன் ஜட்ஜி தன்னுடைய
தீர்மானம் 11-வது பாராவில் சொல்லும் வீரமான வாக்கியங்கள்) மட்டுக்கு
மிஞ்சின நுண்ணியதும், காரியத்திற்கு தூரமுமான அபிப்பிராயங்கள்.
இவைகள் கடுமையான விசாரணையிலேற்பட்ட விஷயமென்று எண்ணவிட
மில்லை. பிராஸிகியூஷன் திறப்பிலேற்பட்ட அபிப்பிராயங்களி லொன்று
முதலில் மிகுந்த நுண்ணியதாகவும் காரியத்துக்கு புறம்பானதாகவும் இருந்த
தாக அறிவிற் சிறந்த செஷன் ஜட்ஜியே ஒப்புக்கொள்ளுகிறுர். அய்யாசாமி
யை விடுதலை செய்து கைதியை சிறைப்படுத்திய டிப்டி மாஜிஸ்டிரேட்டான
வர் சில கோட்பாடுகளை யனுசரித்து நடத்தினுரென்றும் அவைகளிற் சில
வற்றை தான் ஒப்புக்கொள்ளவில்லை யென்றும் அறிவிற் சிறந்த செஷன்
ஜட்ஜி ஒப்புக்கொள்ளுகிறுர். பெயர் தெரியாத ஒருவன் அல்லது அதற்கு
மேற்பட்டவர்கள் இந்தக் கைதியால் தூண்டப்பட்டிருக்க வேண்டுமென்று
செஷன் ஜட்ஜிகொண்ட அபிப்பிராயம் கைதியை குற்றவாளியாக்கத்தகாத
அவ்வளவு அதிக இலேசான ஆதாரங்களாயிருக்கின்றன வென்பது என்
னுடைய அபிப்பிராயம். அப்புரூவர் (P அடையாள ஆதிரவைப்பார்க்க)ருமநாடான் வீட்டுக்குவரும் முள்ளூர் சாணுன் இந்தக் கொலை செய்தானென்
பது தனக்கு அக்டோபர் மாதம் 22உ காலையிலேயே தெரியுமென்று சொல்
லுகிறுன். இந்த சாணுனை பிடிக்கவாவது அவனை சார்ஜ் செய்யவாவது
பிராசிகியூஷன் திறப்பில் பிரயத்தனங்கள்செய்யவில்லை.இதனுல் அப்புரூவர்
சொல்லுங் கதை யெவராலும் நம்பப்படவில்லை யென்று தெரிகிறது. இந்
தக் கைதி மிகுந்த துஷ்டத்தனமான சாமர்த்தியமுடையவனென்று சொல்
லப்பட்டிருப்பது மன்றி அசாதாரண கொடுமை சம்பந்தப்பட்ட வஞ்சகுண
முடையவனென்றுஞ் சொல்லப்படுகிறது. இவனுக்கு விரோதியாகவுள்ள
வில்லேஜ் முனிசீப் விசாரணை செய்ய வந்த போலீசார் மாஜிஸ்டிரேட் இவர்
களுள்பட அவ்விடமிருந்த எல்லோரும் தான் சொல்வதே யுண்மை யென்று
நம்பும்படி செய்யத்தக்க சாமர்த்தியம் இவனுக்கு இருப்பதாகச் சொல்லப்

பட்டிருக்கிறது. நிஜமென்பது சில சமயங்களில் கற்பனைக்கு புறம்பாயிருக்கிறது என்பதற்குச் சந்தேகமே கிடையாது; அதனால் போதுமான சாக்ஷியில்லாமல் நம்ப அருகமற்ற கதையை உண்மையென்று யாவரும் ஆவலாக கவனிக்கக்கூடிய கேசாகவிருக்கும் ஒரு காரணத்தைக்கொண்டு அவைகளை கோர்ட்டார் அங்கீகரிக்க நியாயமில்லை. இந்தக் கைதிபேரில் இந்தக் குற்றஞ் சுமத்துவதற்கு நம்பத்தகுந்த சாக்ஷியங்கள் யாதொன்றுமில்லையென்றே சொல்லவேண்டும். அப்புரூவர் சொல்லுகிறபடி இந்த கைதி மனித இராக்ஷஸன் என்று சொலலுங் கற்பனைக்கும் எவ்வித ருஜுவில்லை; டிப்டி மாஜிஸ்டிரேட் 27 அடையாள ஆதிரவில் கைதிபேரில் கொடிய அனுமானங்களிருப்பதாக விஸ்தரித்துச் சொல்லுகிறார்.போலீசார் இந்த சூசனையை கைக்கொண்டார்கள். சில தினங்கள் கழித்து அப்புரூவர் ஒருவன் கொண்டு வரப்படுகிறான். அவனுடைய மந்த புத்தியானது டிப்டி மாஜிஸ்டிரேட் விவரித்துச் சொன்னபடி கற்பனைகளுக்கு ஒற்றுமையாக ஒரு கதை கற்பிக்கும்படி எந்த விதமாகவோ தூண்டிவிட்டது. இந்தக் கதை யிவன் மனதில் நன்றாக ஆற ஒருவாறஞ் சென்றது; டிஸம்பர் மாதம் 14-ந்தேதி யன்று தான் (O அடையாள ஆதிரவு) எழுத்துமூலமாக ஏற்பட்டது. இந்த அப்புரூவர் டிஸம்பர் மாதம் 8-ந்தேதி முதலே இந்த விஷயங்களைச் சொல்ல ஆவலுடையவனாக விருந்தபோதிலும் அப்போது எழுதிக்கொள்ளப்படவில்லை;

சாய்வானவும் சமதூரமுமான அனேக காயங்கள், பிரேதத்தின் தெளிவான முகக் குறிப்புகள், கர்னல் ஹாஸல் ரயிட்டின் சாக்ஷியத்திற் கண்ட மற்ற ஆதாரங்கள், பூமிக்கு சில அடி உயரத்தில் படுத்திருந்தவளை பயித்தியமிருந்த சமயத்தில் ஒருவனால் வெட்டப்பட்ட காயங்களென்று காட்டுகிறது; இறந்தவள் பூமியில் படுத்துக்கொண்டிருக்கும்போது கூலிக்கு அமர்த்தப்பட்டவும் தொகையை யுத்தேசித்து அல்லது வேறு பிரதி பிரயோசனத்தை யுத்தேசித்தும் வந்த ஒரு கொலையாளியால் ஏற்பட்டதாக எண்ணவிடமில்லை; பிராஸிகியூஷன் திறப்பிலும் டிபென்ஸ் திறப்பிலும் ஒத்துக்கொள்ளத் தகாத அனேககற்பனை விஷயங்களைப்பற்றி யூகங்கள் என்றுஞ் சொல்லலாம். இவைகளைக்கொண்டு வாதித்தார்கள். பிராஸிகியூஷன் திறப்பு 5-வது சாக்ஷி போலீஸ் இனிஸ்பெக்டர் கிருஷ்ணய்யருடைய யோக்கியதையைப்பற்றி பிராஸிகியூஷன் திறப்பிலேயே விரோதமாகச் சொன்னார்கள். அப்புரூவருடைய ஒப்புக்கொள்ளுதல் (O அடையாள ஆதிரவு) பிராஸிகியூஷன் திறப்பு 18-வது சாக்ஷியாகிய சப்மாஜிஸ்டிரேட்டினால் சில தினங்களுக்குப் பிறகு கற்பிக்கப்பட்டதென்றும் போர்ஜரி செய்யப்பட்டதென்றும் டிபென்ஸ் திறப்பில் அனுமானமாகச் சொன்னார்கள்.டிபென்ஸ் திறப்பில் ஆஜராயிருந்த டாக்டர் சாமினாதன் மிஸ்டர் சடகோபாசாரியார் இருவரும் இந்த அனுமானங்களை பிற்பட்டுச் சொன்ன விவாதங்களில் விட்டுவிட்டார்கள். பிரத்தியக்ஷமான ருஜுக்களன்னியிலும், கேஸின் விசாலமான அனுமானங்களன்னியிலும் யூகமான விஷயங்களுக்கு இடங்கொடுக்கும் அபாயகரமான விஷயம் கீழ்கோர்ட்டுகளின் ரிகார்டுகளினால் தெரியவ

ருகிறபடி அனேக ஆதாரமற்ற அபிப்பிராயங்களில் நன்றாக திருஷ்டாந்தமாகக்காட்டப்படுகிறதென்று நான் அபிப்பிராயப்படுகிறேன். அவை உண்மையான விஷயங்களையும் சந்தர்ப்பங்களையும் கோர்ட்டார் பொறுமையுடன் ஆழ்ந்து யோஜிக்காதபடி அவர்கள் புத்தியை மறைத்து விடுகிறது. கைதி தன்னுடைய மருமகளாகிய தனம் என்பவள் கொலை செய்யப்பட்டதற்கு உடந்தையாயிருந்தானென்று அவன் பேரில் குற்றஞ் சுமத்துவதற்கு போதுமான சாக்ஷியங்கள் இல்லை யென்பது என்னுடைய முடிவான தீர்மானம். செஷன் கோர்ட்டு அஸெஸ்ஸர்களில் ஒருவர் அபிப்பிராயஞ் சொல்லியதை யொத்து கைதி பேரில் குற்றமில்லையெனத் தீர்மானித்து அவனை விட்டு விடும்படி யுத்திரவு செய்கிறேன்.

ஜஸ்டிஸ் சங்கரநாயரவர்களின் தீர்மானம்.

அய்யாசாமி இந்தக் கொலையில் சம்பந்தப்பட்டிருப்பானென்பது நம்பக்கூடாத விஷயமாக விருப்பதினாலே அப்பீல்தாரன் இந்த பிரேத விஷயத்தில் சம்பந்தப்பட்டிருக்கிறான். அய்யாசாமிக்கு விரோதமாக சாக்ஷிசொல்லும்படி முத்தாச்சியை இவன் நிர்ப்பந்தித்தான் என்ற விஷயங்களை முன்னிட்டுக்கொண்டு ஆரம்பிப்போம். இவள் மனதார அல்லது தானே வலுவில் தன்னுடைய பேரனுக்கு விரோதமாக சாக்ஷி சொல்லி யிருக்கமாட்டாள்; அப்பீல்தாரன் இக்கொலை விஷயமாக போலீசாருக்காவது கிராமமுனிசீபுக்காவது தெரிவிக்கவில்லை யென்பதும், இறந்ததற்கு பொய்யான காரணங்களை மற்றவர்களுக்குச் சொல்லி யிருக்கிறானென்பதும், ருஜுவாகி யிருக்கிறதென்று நான் நம்புகிறேன். முத்துசாமி பிள்ளைதான் தன்னிடத்தில் முதலில் சொன்னதாக கிராமமுனிசீப் தன்னுடைய ரிபோர்ட்டில் சொல்லியிருக்கிறார். நடந்த விஷயங்களைப்பற்றி முத்துசாமி தானே வலுவில் கிராமமுனிசீபிடத்தில் சொன்னதாகச் சொல்லுகிறான். அய்யாசாமி இந்தக் கொலை செய்திருப்பானென்று தான் நம்பவில்லை யென்றும், உண்மையைத் தெரிந்துகொள்ள தான் விரும்பியதாகவும் இவன் ஒருசமயத்தில் சொல்லியிருக்கிறான். அய்யாசாமி விஷயத்தில் கிராம முனிசீப் மிகுந்த அக்கறையுடையவராக விருப்பதினாலே அவருக்கு சாதகஞ் செய்ய வேண்டியதனிமித்தம் அந்தப்படிச் சொல்லியிருக்கலாமென்று நான் நினைக்க வேண்டியதாக விருக்கிறது. இறந்தவள் காலராவினா லிறந்தாளென்று அவளுடைய சகோதரர்களுக்கு அறிவிக்கப்பட்டதென்பதற்குச் சந்தேகமே கிடையாது. (பிராஸிகியூஷன் திறப்பு 7, 8, 9, 10 வது சாக்ஷிவாக்கு மூலங்களைப் பார்க்க). இந்த மரணத்துக்காக வந்திருக்கவேண்டியவர்கள் காலராவினால் இறந்து போனதாகக்கேள்விப் பட்டதினாலே அவ்விடம் போகாமலே தங்கி விட்டார்கள். (பிராஸிகியூஷன் 9-10 சாக்ஷிகளின் வாக்கு மூலங்களைப் பார்க்க). இந்த விஷயங்கள் பிரேதத்தைத்தகனஞ் செய்யும்படி அய்யாசாமியுடைய சம்மதியைக்கேட்டார் என்று அய்யாசாமி சொல்லும் சாக்ஷியத்தை பலப்படுத்துகிறது. இவனுடைய

ஸ்டேட்மெண்டானது அப்பீல்தாரிடத்தில் கணக்கப்பிள்ளையாக இருந்தவனும், C. C. அடையாள ஆதியாகவுள்ள ரிபோர்ட்டுகளை எழுதியவனுமான சாமிநாதபிள்ளையுடைய சாக்ஷியத்தினால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. அப்பீல்தாரன், கிராமமுனிசீப், பிச்சையப்பதேவன் இவர்கள் பிரேதத்தை தகனஞ் செய்துவிடவேணுமென்று பேசிக்கொண்டிருந்ததாக இவன் சொல்லுகிறான். இந்த சாக்ஷியத்தை நம்பாதிருப்பதற்கு யாதொரு காரணமுஞ் சொல்லப்படவில்லை. காலராவினாலிறந்து விட்டதாக கற்பனையான விஷயமுற்பத்தி செய்ததானது பிரேதத்தை தகனஞ் செய்ய வுத்தேசித்தார்கள் என்பதை விளக்கிக்காட்டுகிறது. 'இவ்வித யோஜனை நடந்ததில்லை யென்று கிராம முனிசீப் பிச்சையப்பதேவன் இவர்கள் சொல்வதை நான் நம்பவில்லை. பிரேதத்தைத் தகனஞ் செய்ய பிரயத்தினங்கள் செய்தார்களென்ற இந்த ருஜூ அப்பீல்தாரனே இந்த குற்றஞ் செய்தானென்பதற்கு பலமான சாக்ஷியமாக விருக்கிறது.

அப்பீல் தாரன் சொல்லுகிறபடி முத்தாச்சி கூச்சல் போட்டதையிவன் கேட்டவுடனே இவன் என்ன செய்தான். கதிரேசனுடைய சாக்ஷியம் (J அடையாள ஆதிரவு), அய்யாசாமி கொல்வதாக முத்தாச்சி கூச்சல் போட்டதாக அவள் பின்னால் கொடுத்த ஸ்டேட்மெண்டு இவைகளை நம்புவதாக விருந்தால் அப்பீல்தாரன் உடனே கூடத்துக்கு ஓடிவராமலிருந்திருக்கும் இவனுடைய நடத்தைக்குத் தகுந்த சமாதானஞ் சொல்லவேண்டும். திருடர்கள் வந்திருப்பதாக அவன் எண்ணியதாக அவன் சொல்வது பொய். மற்றவர்கள்போன பிறகுதான் அவன் அவ்விடத்துக்குப்போனதாக F அடையாள ஆதிரவில் அவனுடைய ஆவலைத்தெரிவிப்பதானது எந்த விதத்திலும் அவன் பேரில் சந்தேகத்தை யுண்டாக்குகிறது. கொலை நடந்ததை தான் நேரில் பார்க்காவிட்டாலும், தன்னுடைய ஏஜண்டு முத்துசாமிபிள்ளை மாஜிஸ்டிரேட் இவர்களுக்கு திருப்திகரமாகத் தோற்றுவிட்டாலும் இந்தக் கொலை செய்தவன் தன்னுடைய மகன் ஒருவனே யென்று அவன் பேரிற் குற்றஞ் சுமத்தத்தாமதிக்கவில்லை. S அடையாள ஆதிரவிற்கண்ட ஸ்டேட்மெண்டும், அய்யாசாமி பேரிற் குற்றஞ் சாட்டியபோது அவன் பதிற் சொல்லாதிருந்ததும் அவனுடைய சாக்ஷியத்துக்கு விரோதமாக விருப்பதாக அப்பீல்தாரனுடைய வக்கீல் எடுத்துச்சொல்லுகிறார். S அடையாள ஆதிரவிற் கண்ட ஸ்டேட்மெண்டுகள் இப்போது அவன் கொடுத்திருக்கும் சாக்ஷியத்துக்கு விரோதமாக இருக்கிறதென்ற காரணத்தினால் அவனுடைய சாக்ஷியத்தை மதிக்காதிருக்க நியாயமில்லை; அய்யாசாமிபேரில் கொலைக்குற்றஞ் சாட்டி 23-ந்தேதியில் பிடிக்கப்பட்டான். அவன் யாதொரு விஷயங்களையும் ஒப்புக்கொள்ளப்போவதில்லை; எதிரிபேரில் குற்றஞ் சுமத்தக்கூடிய விஷயங்களிருந்தால் அதற்கு சமாதானஞ் சொல்லும்படி எதிரியைக்கேட்க மாஜிஸ்டிரேட்டுக்கு அதிகாரமுண்டு. ஆனால் மாஜிஸ்டிரேட் தான் நேரில் எந்த விஷயங்களையுஞ் செய்ய விரும்பவில்லை. போலீசார் இவனை ஸ்டேட்மெண்டு கொடுக்கும்படி கொண்டு வந்தார்கள். இது சரியானதல்ல. எதிரி

யிடத்தினின்றும் கைப்பற்றப்பட்ட இரத்தக்கறையுள்ள செவப்பு வேஷ்டி விஷயமாகவுள்ள கேள்விகளுக்கு மறுமொழிகள் சொல்ல எதிரி தயாராக வந்திருந்ததாக மாஜிஸ்டிரேட் சொல்லுகிறார். அந்த செவப்பு வேஷ்டி தன்னுடையதென்றும், தன்னுடைய பெண்ஜாதியை தன்னுடைய தகப்பன் வெட்டும்போது தான் அந்த வேஷ்டியைத் தரித்துக் கொண்டிருந்ததாகவும் அப்போது அந்த வஸ்திரத்தில் இரத்தந் தெறித்ததாகவும் அவன் சொல்லியிருக்கிறான். இது முற்றிலும் பொய். ஏனென்றால் கிராமமுனிசீபும் சாமிநாதபிள்ளையும் இவனை பார்த்தபோது இவனந்த செவப்பு வேஷ்டியைக்கட்டிக்கொண்டிருக்கவில்லையென்றும் போலீசாரும் தாசில்தாரும் வந்தபோது அவனதைக்கட்டிக் கொண்டிருந்ததாகவும், அவர்கள் ருஜூச்சொல்லுகிறார்கள். இதனால் இவன் அந்தக் கொலை நடந்தபோது அந்த வேஷ்டியைக் கட்டிக்கொண்டிருக்கவில்லையென்று நன்றாக ஏற்படுகிறது. இந்தக் கொலை நடந்தபோது அய்யாசாமி அவ்விடத்திலிருந்தானென்று ருஜூப்பிப்பதற்கு இந்தசாக்ஷியம் போலீசாருக்கு அந்தக் காலத்தில் உபயோகமாக விருந்தது; இவன் வடக்கே தலையைவைத்து படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தான் என்று கொடுத்திருக்கும் ஸ்டேட்மெண்டானது போலீசாருடைய கற்பனையை யாதரிப்பதற்கே யன்றி வேறுகாரணத்துக்கல்ல; தன்னைப்பிடித்துக் காவல்படுத்தி வைத்திருந்ததாகவும் மறுநாள் அனேக குத்துக்காயங்களுடன் பிரேதத்தை தான் பார்த்ததாகவும் வேறு ஸ்டேட்மெண்டு கொடுக்கும்படி கட்டாயப் படுத்தப்பட்டானென்று தெரிகிறது. S அடையாள ஆதிரவு சப் இனிஸ்பெக்டர் கிருஷ்ணய்யருடைய தூண்டுதலின் பேரில் ஏற்பட்டதாக எனக்குத் தெரிகிறது. வஸ்திர விஷயத்தைப்பற்றியும் தலைவைத்திருந்து படுத்த விஷயத்தைப்பற்றியும் கொடுத்த ஸ்டேட்மெண்டில் கெடுதியிருப்பதாக எதிரிக்கு அந்தக் காலத்தில் தெரியாது; அந்தக்காலத்தில் தான் காவல்படுத்தப்பட்டானென்றும், கொலை நடந்ததென்றும், தன்னுடைய கக்ஷியைச்சொல்ல வேண்டியதினிமித்தம் அந்த ஸ்டேட்மெண்டு கொடுபட்டிருக்கிறது; போலீசாருடைய பாதுகாப்புக்குள் இருக்கும் எதிரிகளால் கொடுக்கப்படும் ஸ்டேட்மெண்டுகள் நம்பப்படுவதற்கு எவ்விதத்திலும் அருகமானவைகள் அல்ல; அதனால் S அடையாள ஆதிரவு நம்பத்தகுந்ததல்ல. அதனால் அய்யாசாமியுடைய சாக்ஷியம் பொய்யாக்கப்பட மாட்டாது.

அய்யாசாமி பேரில் கொலைக்குற்றஞ் சாட்டியபோது அவனுடைய நடவடிக்கைகளினால் தங்களுக்கு மிகுந்த சாதகங்களிருப்பதாக டிபென்ஸ் திறப்பில் சொல்லுகிறார்கள். கிராம முனிசீப் தான் யாதொன்றுஞ் சொல்லவில்லையென்று சொல்லுகிறார். அய்யாசாமியுடைய சாக்ஷி இதற்கு விரோதமாக விருக்கிறது. அய்யாசாமி தான் அந்தக் காலத்தில் பிரேதத்தைப் பார்க்கவில்லை யென்றும், கொலை செய்ய வேணுமென்ற நோக்கத்துடன் எவருஞ் செய்யவில்லையென்று தனக்குத் தெரிவித்ததாகவும், தனக்கு மிகுந்த பிரியமுடையவரும் மரியாதை பாராட்டுகிறவுமான தனது பெரி

யப்பன் நடந்த விஷயங்களை மறந்துவிடும்படி தனக்கு புத்திமதி சொன்னதாகவும், அவன் சொன்னவிஷயம் ஞாபகத்திலிருக்கவேண்டும். இதனால் இவனை இவனுடைய சினேகிதர்களும் வேலையாட்களும் சூழ்ந்து கொண்டிருக்கும்போது தன்னுடைய தகப்பனை இக்கொலை செய்தானென்று அவன் பேரிற் குற்றஞ் சாட்டியது ஆச்சரியப்படத்தக்க விஷயமல்ல. "இந்த பயித்தியம் பிடித்தவன் இவனுடைய பெண்ஜாதியைக்கொன்றுவிட்டான்" என்று இவனுடைய தகப்பன் தன் சினேகிதர்களிடத்தில் சொன்னதற்கு ஜவாப்பாக எதிரிபேரில் குற்றஞ்சாட்டி சொல்லியிருக்கிறான். "நான் ஐந்தாறு வருடகாலமாக சவுக்கியமாகவிருந்தேன். என்னுடைய துர் அதிருஷ்டம் இப்படியாயிற்று" என்று சொல்லியிருக்கிறான். தன்னுடைய மகன் தனக்கு விரோதமாக நடந்து வருவதாகவும், தன் மகன் பாத்தியங்கொண்டாடும் சொத்து தன்னுடைய சுயார்ஜிதமென்றும் அதில் தன்னுடைய பிள்ளைக்கு பாத்தியமில்லை யென்றும் தகப்பன் பிள்ளைபேரில் புகார் சொல்லியது ஐந்தாறு வருடங்களுக்கு முந்தி. இந்த அய்யாசாமி சொன்ன பதிலானது "இவன் வற்புறுத்தி தன்னுடைய பாகத்தை கட்டிக்கொண்டிருக்கும் பட்சத்தில் தன்னுடைய பெண்ஜாதி கொல்லப்பட்டிருக்கமாட்டாள்" என்ற அர்த்தந்தான் கொள்ளக்கூடியது. அந்த அர்த்தத்தைத்தவிர வேறு அர்த்தஞ்செய்யக்கூடியதாக விருக்கவில்லை. மாஜிஸ்டிரேட் அவ்விடம் வந்தவுடனே தன்னுடைய தகப்பனை இந்தக்கொலை செய்தவனென சுட்டிக்காட்டியிருக்கிறான். இதன்மத்தியில் அப்பீல்தாரனாகிய இவனுடைய தகப்பன், பிரேதத்தை தகனஞ் செய்துவிட்டு சாக்ஷியங்களை அழிக்கவும் தன்னுடைய சகோதரியாகிய முத்தாச்சி தன்னுடையமகனுக்கு விரோதமாக சாக்ஷி சொல்லவும். இன்னும் பலவிதங்களில் பொய் சாக்ஷியங்கள் தயாரிக்கவும் பிரயத்தனங்கள் செய்து கொண்டிருந்தான். இந்த அய்யாசாமி கொலை செய்தவனல்ல வென்று நான் கண்டுபிடித்து விட்டதால் அவனுடைய புத்தி சரியான நிலைமையிலில்லை யென்ற விஷயத்தைப்பற்றியாவது, கொலை செய்யும்படியான பயித்தியமிருந்திருக்கக்கூடுமென்ற விஷயத்தைப்பற்றியாவது ஏற்பட்ட ருஜுக்களைப்பற்றி நான் ஆலோஜிக்கவேண்டியது அனாவசியம். அந்தக்காலத்தில் அவனுக்கு அவ்வித பயித்தியமிருந்ததென்பதற்கு எவ்வித ருஜுவுமில்லை. கிராமமுனிசிப்புடையவும் முத்துசாமிபிள்ளையுடையவும் சாக்ஷியங்கள் அதை பொய்யாக்குகிறது. சப் மாஜிஸ்டிரேட் தன்னிடம் அய்யாசாமி வயித்தியஞ் செய்யப்படவேண்டியதற்காகக் கொண்டுவரப்பட்டான் என்று சொல்வதைத்தவிர பயித்திய விஷயமாக விடப்பட்ட மற்ற ருஜுக்கள் எல்லாம் பிரயோஜனமற்றவை. அய்யாசாமி பயித்தியங் கொண்டிருக்கிறானென்று அப்பீல்தாரன் மனுவும் நோட்டீசுங் கொடுத்ததற்கு சொர்பகாலத்துக்கு முந்திதான் இவ்விதம் நடந்தது. இதற்கு முன்னெச்சரிக்கையாகவு மிருக்கலாம். அவைகளை நான் நம்பவேயில்லை. அவர்கள் ஆக்ஷேபித்த ஒவ்வொரு விஷயங்களைப் பற்றியும் எடுத்துச் சொல்வது அனாவசியமென்று நினைக்கிறேன். அய்யாசாமி சொல்வதானது ஏற்பட்ட ருஜுக்களுக்கு ஒற்றுமையுள்ளதாக விருப்பதாக நான்

நினைக்கிறேன். அது உண்மையென்பது பிரசித்தம். அவனுடைய பெரிய தகப்பனுடன் அவன் சம்பாஷித்த விஷயம் மிகவும் சம்பாவிதமானது. ஜஸ்டிஸ் பேக்வல் துரையவர்களின் அபிப்பிராயங்களை நான் ஒத்துக் கொள்ளுகிறேன். அப்பீல்தாரன் குற்றவாளியென்று கண்டு பிடிக்கிறேன்.

அப்பீல்தாரனுக்கு ஆஜரான ஸர் ராபேர்ட் பின்லே C.K.C மிஸ்டர் கிரே, சென்னபட்டணமிருந்து வந்த டாக்டர் S ஸ்வாமிநாதன் இவர்கள் அப்பீல்தாரனை தெண்டித்ததானது பெருந்த நியாயத்தவறுதல் என்றும், சந்தேகப்படக்கூடிய காரணங்களைத் தவிர அப்பீல்தாரன் பேரில் குற்றத்தைச் சுமத்துவதற்கு நேரிற் கண்ட அல்லது அனுமானிக்கக்கூடிய நம்பத்தகுந்த சாக்ஷியங்கள் யாதொன்றுமில்லை யென்றுந் தெரிவித்துக்கொள்ளுகிறார்கள். அப்புருவருடைய சாக்ஷியம் நம்பப்படாதது மெத்த நியாயமானது; அதுபோலவே அப்பாசாமியுடைய சாக்ஷியமும் நம்புவதற்கு அருகமற்றது. இந்தக்குற்றமானது கொலை செய்யும் பயித்தியச் செய்கையினாலேற்பட்டதென்று தெரிகிறது. தெண்டிக்கவேண்டுமென்று சொன்ன ஹைகோர்ட்டு ஜட்ஜிகள் அபிப்பிராயப்படுகிறபடி அய்யாசாமி குற்றவாளியல்லவென்றால் அப்பீல்தாரன்தான் குற்றவாளியென்று சொல்லக்கூடாது. அப்பீல்தாரன் இந்தக் குற்றத்தில் சம்பந்தப்பட்டிருக்கிறானென்பதற்காவது அல்லது இது விஷயம் அவனுக்குத் தெரிந்திருக்கிறதென்பதற்காவது திருப்திகரமான சாக்ஷிகிடையாது. தெண்டித்த அறிவிற் சிறந்த ஜட்ஜிகள் அங்கீகரிக்க அருகமற்ற அநேக சாக்ஷியங்களை அங்கீகரித்திருக்கின்றார்கள், அவைகளைக் கொண்டு அநேக அனுமானங்களை ஏற்படுத்திக் கொண்டு அப்பீல்தாரன் பேரில் கொடிய தப்பான அபிப்பிராயங் கொண்டார்கள். இந்தக் கொலை நடந்தபிறகு அப்பீல்தாரனுடைய நடவடிக்கைகள் இவன் குற்றமுடைய மனசாட்சியுடையவனாக விருந்து வந்தானென்பதைத் தெரிவிக்கவில்லை. பிராஸிகியூஷன் திறப்பு சாக்ஷியங்கள் ஒன்றுக்கொன்று ஒற்றுமையே கிடையாது. அசம்பாவிதமான விஷயங்களாகவு மிருக்கின்றன. அந்த ருஜுக்களைக் கொண்டு ஒரு தலைமையான குற்றத்துக்கு தண்டிப்பது தகாத காரியம்.

இராஜாங்கத்தாருக்காக ஆஜராயிருந்த ஸர் எர்ல் ரிச்சேர்ட்ஸ் K C மிஸ்டர் பிரவுன் சென்னையிலிருந்து வந்த மிஸ்டர் ஆஸ்பர்ன் இவர்கள் அப்பீல்தாரனுடைய கேஸ் 12 A C 159ல் சொல்

லப்பட்ட விதியின் கீழ்வரவில்லையென்று தெரிவித்துக்கொள்ளுகிறார்கள். இந்தியாவிலுள்ள இரண்டு கோர்ட்டார்களும் அப்பீல் தாரன் குற்றவாளியெனக்கண்டு பிடித்திருக்கிறார்கள். முதல் கோர்ட்டார் சாக்ஷிகளை நேரில் பார்க்கவும் அவர்கள் சொல்வதை நேரில் கேட்கவும் சவுகரியங்களிருந்தன. மற்ற அறிவிற்சிறந்த ஜட்ஜிகளுக்கு சம்பந்தப்பட்ட நபர்களின் நடவடிக்கைகளும் அபிப்பிராயங்களும் அனுபோகமாகத் தெரிந்திருக்கிறது; டிபென்ஸ் திறப்பில் சொல்லுங்கதை ருஜுப்பிக்கப்படவில்லை; அப்புருவருடைய சாக்ஷியும் நம்பப்படுவதற்கு அருகமற்றதாக விருந்தாலும் நேரிற்றெரிந்தவும் அனுமானிக்கக் கூடியதுமான போதுமான சாக்ஷிகளிருக்கின்றன. அவைகளைக்கொண்டு தெண்டிப்பதுமெத்த நியாயமானது. "Falsus in uno falsus in Omnibus" என்ற பழமொழி இந்தியாவிலுள்ள சாக்ஷிகளுக்கு உபயோகப்படுத்தக்கூடாது. ஒழுங்குத்தவறுதலாக நடவடிக்கைகள் நடத்தினதாக எண்பிக்கப்படவில்லை; நியாயத்துக்கு விரோதமான காரியங்கள் நடத்தப்படவில்லை. நியாயத்துக்கு பிரதிகூலமான விஷயங்களும் நடத்தப்படவில்லை. இதுவிஷயமாக பிரிவிகவுன்ஸல் தீர்ப்புகளில் யாரைத்தங்கள் கக்ஷிக்கு ஆதாரமாக எடுத்துச் சொன்னார்கள்.

அப்பீல்தாரனுடைய கவுன்ஸல் இதற்கு பதில்சொல்லும்படி கேட்காமலே அப்பீலை யங்கீகரித்து பின்னுற் சொல்லப்போகும் காரணங்களுக்காக அப்பீல்தாரனை விடுதலை செய்யும்படி மாக்ஷிமைதங்கியசக்கரவர்த்தியவர்களுக்குதெரிவித்துக்கொண்டார்கள்.

பிரபுக்களின் தீர்மானம் லார்ட் அட்கின்ஸன் துரைவர்களால் சொல்லப்பட்டது. இந்தக் கேஸ் அப்பீல்தாரன் தன்னுடைய மகன் அய்யாசாமியுடைய பெண்ஜாதியாகிய தன்னுடைய மருமகள் தனம் என்பவள் கொல்லப்படுவதற்கு உடந்தையாக விருந்ததாக தஞ்சாவூர் அடிஷனல் செஷன் ஜட்ஜியால் 1912-ம் வருஷம் ஏப்பரல் மாதம் 1-ந்தேதியில் குற்றவாளியென கண்டுபிடிக்கப்பட்டு மரணதெண்டனை விதிக்கப்பட்டான். சென்னை ஹைகோர்ட்டாருடைய 1912-ம் வருஷம் ஜுன் மாதம் 19-ந்தேதி ஆகஸ்டு மாதம் 5-ந்தேதி இந்த இரண்டு தேதிகளிலும் பிறந்த உத்தரவுகளினால் இவன் குற்றவாளியெனகண்டுபிடிக்கப்படுதலும் தெண்டனையும் உறுதிசெய்யப்பட்டது. ஜஸ்டிஸ் பேக்வெல் துரையவர்கள் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள் இந்த இரண்டு ஜட்ஜி

கள் முன்பாக இவன் குற்றவாளியெனக் கண்டுபிடிக்கப்பட்டது உறுதிசெய்யப்படவேண்டுமென கேட்கப்பட்டதில் அவர்களுக்குள் அபிப்பிராயபேதங்கள் ஏற்பட்டன. இதனால் கிரிமனல் புரிஸீஜர் கோடு 378வது செக்ஷன்படி இந்தக் கேஸ் மூன்றாவது ஜட்ஜி சங்கரநாயரவர்களுடைய தீர்மானத்துக்கு அனுப்பப்பட்டது. செஷன் கோர்ட்டாராலும் ஹைகோர்ட்டாரவர்களாலும் விவரித்துச்சொல்லப்பட்ட விவாதங்கள் பலவற்றையும் பற்றி ஆலோசிப்பது முற்றிலும் அனாவசியமென்று நாங்கள் நினைக்கிறோம். திருஷ்டாந்தமாக சிலவற்றை காட்டுவோம். அப்பீல்தாரன் தன்னுடைய மருமகளைக் கொலை செய்வதற்கு சில காரணங்களிருந்ததென்பதை ருஜுப்பிப்பதற்காக அனேக சாக்ஷிகள் விசாரிக்கப்பட்டார்கள். இது சாதாரண மனிதனை இவ்வித குற்றஞ் செய்யத்தூண்டுவதற்கு போதாத காரணமாக விருந்தாலும் அப்பீல் தாரனைப்போன்ற புத்தி, கருத்து, கோபமுடையவர்கள் இவ்வித குற்றஞ் செய்யும்படி தூண்டுவதற்கு போதுமானதென்று சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் சொல்லு முகாந்திரங்களில் பிரதானமானது எதுவென்றால் "மகன் அவளுடைய பெண்ஜாதியின் சொற்படி எந்த விஷயங்களுஞ் செய்யக்கூடியவனாக இருந்தான். இவர்களில் பெண்ஜாதியே மேலான புத்தியையுடையவள், அவள் தன் புருஷனுக்கும் அவர் தகப்பனுக்கும் பொதுவாயுள்ள குடும்ப சொத்துக்களை பாகப்பிரிவினை செய்யும்படி தன் புருஷனைக் கட்டாயப்படுத்தினாள். அப்பீல்தாரன் அந்த சொத்துக்கள் தன்னால் சுயார்ஜிதமாக சம்பாதிக்கப்பட்டது என்று கக்ஷி சொன்னான்" என்றஇந்த விஷயந்தான்.

மற்றொருசின்ன பின்உதவியாகவுள்ள காரணம் குறித்துச் சொல்லப்பட்டது. அதாவது தகப்பன் தன்னுடைய மகள் தங்கபாபு தன்வீட்டிலிருக்கச் செய்தது; அவள் ஒருகுழந்தை விதந்து அதாவது பத்துவயதாக விருக்கும்போது கல்லியாணமாகி புருஷனும் பெண்ஜாதியுமாக கூடிவாழ்வதற்கு முந்தியே புருஷன் இறந்துபோய் விதந்துவானவள். இவள் துர்பாக்கியமாக தனது கற்பிற் தவறிவிட்டாள். அல்லது கற்பிற்றவறி விட்டதாகச் சொல்லப்படுகிறது; இவ்விதங் கெட்டுப்போனவள் அவள் தகப்பன் வீட்டிலிருப்பதினால் தன் குடும்பத்துக்கு ஒருவித அபகீர்த்தியுண்டாகுமென இறந்தவள் நினைத்து அந்தப்பாவி அந்த வீட்டி

னின்றும் அப்புறப்படுத்தப்பட்டாலல்லது தான் அந்த வீட்டில் வசிக்கமாட்டேனென்று சொன்னதாக சொல்லப்படுகிறது. இந்த சமுசயங்களை நிவர்த்திக்க வேண்டியதற்காக அப்பீல்தாரன் இந்தப்பெண்பிள்ளையை வெளியே போகச்செய்திருக்கிறான். மறுபடியும் தன்வீட்டிலிருக்க அனுமதி கொடுத்திருக்கிறான். இந்த விஷயம் சாதாரணமாக தங்கபாபுவுக்கு இறந்தவர்பேரில் விரோதத்தையும் கெட்ட எண்ணத்தையு முண்டுபண்ணி யிருக்கக் கூடியதாகையால் இந்த விஷயம் ருஜுப்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த விஷயம் அப்பீல்தாரன் தனது மருமகளைக் கொல்லுவதற்குத் தகுந்த காரணமா யிருக்கிறதுந் தவிர இந்தக்கேசில் சொல்லப்பட்டிருக்கிறபடி பகிரங்கமாக அதி துணிகரமாக தனக்கு நம்பிக்கையாகவுள்ள நாலைந்து பேர்களின் உதவியைக்கொண்டு கொல்லும் படி அளவுகடந்த துணிகரத்தை யுண்டுபண்ணிற்றென்று செஷன்ஜட்ஜியும் ஹைகோர்ட் ஜட்ஜிகளும் நினைத்ததாகத் தெரிகிறது. இந்த அப்பீல்தாரன் அவனுடைய குடும்பஸ்தர்கள், இவன் எவர்கள் மத்தியில் வசிக்கிறானோ அவர்கள் இவர்களின் ஜாதி அல்லது வகுப்பிற்குரிய நடவடிக்கைகள், அபிப்பிராயங்கள், உணர்ச்சிகள் இந்த அறிவிற் சிறந்த ஜட்ஜிகளுக்குத்தான் நன்றாகத் தெரிந்திருக்குமென்றும் அந்த வுண்மைகளை யவர்களே அறியத் தகுந்தவர்களென்றும், வாதிக்கப்படுகிறது. இது எப்படியாக விருந்தாலும் இந்த அப்பீலைப்பற்றினவரையில் இந்த விஷயங்களைப்பற்றி அவர்கள் கொண்ட அபிப்பிராயங்களை நாங்களும் ஒத்துக் கொள்ளுகிறோம். இந்த முகாந்திரம் இவ்விதகொடிய செய்கைகள் தடையின்றிச் செய்யும்படி இவனைப்போன்றவர்களைத் தூண்டியிருக்கும் பட்சத்தில் தங்கபாபுவுக்கும் இறந்தவளுக்கு மிருந்த விரோதமானது தன்னை நிந்தித்த விரோதியாகிய இந்த பெண் பிள்ளையை சதியோசனை செய்து அவளை யொழித்து விடும்படி யேன் செய்திருக்கமாட்டாது. இவ்விஷயங்கள் எப்படியிருந்தபோதிலும், தகுதியான முகாந்திரத்தைப் பற்றிய ருஜுக்கள் எவ்வளவுபலமாகவும் நம்பக்கூடியதாகவு மிருந்தாலும் அந்த ருஜுக்கள் அங்கீகரிக்கத் தகாத சாக்ஷிகளை அங்கீகரித்ததினாலுண்டாகுங் கெடுதிகளையாவது அதனாலுண்டாகிய நியாய விரோதங்களையாவது தடைசெய்ய மாட்டாது. அல்லது எதிரி குற்றஞ் செய்தானென்பதற்கு நேரான அல்லது அநுமானிக்கக் கூடிய

ருஜுக்கள் வேண்டியிருப்பதற்கு பிரதியாக அவைகளை யுபயோகப்படுத்தவுங் கூடாது.

இந்தக் கொலைக்கு உடந்தையாக விருந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் பேரில் குற்றமிருக்கிறதென்றாவது அல்லது அவர்களுக்கு யாதொன்றுந் தெரியாதென்றாவது, எதிரிக்கு விரோதமாக ருஜுச் சொல்லாதிருந்த சாக்ஷிகளின் ருஜுக்களில் நம்பிக்கையைப்பற்றியாவது எவ்வித அபிப்பிராயமும் நாங்கள் சொல்லத்தப்பிராயில்லை. எங்களுடைய கடமை யென்னவென்றால் (இந்த பிரிவிகவுன்ஸல் 12 A. C. 459 தீர்ப்பில் லார்ட் வாட்ஸன் அவர்கள் சொல்லுகிறபடி) "விவகார நடவடிக்கைகளில் அசட்டையாக விருந்ததினாலாவது, கிரமமான நியாயமுதலியவற்றின் கிரமங்களுக்கு விரோதமாக நடந்ததினாலாவது முக்கியமாயுள்ள விசேஷநியாய விரோதங்கள் ஏற்பட்டிருக்கின்றனவா" வென்பது தான். இவ்விதநியாயத்தவறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றனவென்று நாங்கள் முடிவான அபிப்பிராயங் கொள்ளுவோமானால் அப்பீல்தாரன் நிரபராதி யென்பதைப்பற்றி எவ்வளவு சந்தேகங்களிருந்தாலும் சரியே! அவன் குற்றவாளியென்று நினைக்க எவ்வித சந்தேகங்களிருந்தாலுஞ் சரியே, இந்திய கோர்ட்டுகளிலுள்ள கிரிமினல் விஷயங்களிலேற்படுந் தீர்மானங்களில் பிரவேசிக்கவாவது அல்லது அவைகளை தடுக்கவாவது எவ்வளவு வேண்டா வெறுப்புகளிருந்தாலுஞ்சரியே, அவன் குற்றவாளியெனத் தீர்மானித்தல் ரத்துசெய்யப்பட வேண்டுமென மாக்ஷிமைதங்கிய சக்கரவர்த்தியவர்களுக்குத் தெரிவிக்க நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம்.

மேலேசொன்ன நியாயத்தவறுதல்கள் இந்தக் கேசில் நடந்திருக்கின்றனவென்று நாங்கள் முடிவான தீர்மானஞ் செய்திருக்கிறோம். கேள்விமூலமுதலிய எவ்விதத்திலும் அங்கீகரிக்கத்தகாத அனேக ருஜுக்கள் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் அங்கீகரிக்கப்பட்டவுடனே எதிரிபேரில் கொடிய கெட்ட எண்ணங் கொள்ளத்தக்கதாக அவைகளை யுபயோகித் திருக்கிறார்கள். இந்தக் கேசை பிரதமத்தில் விசாரித்த ஜட்ஜியின் முன்பாக நடந்த விசாரணை முடிவில் தகுந்த ஆதாரத்துடன் அல்லது நியாயத்துடன் தலைமையான தண்டனை விதிப்பதற்கு நம்பிக்கைக்குஅருகமுள்ள ருஜுக்கள் யாதொன்று மில்லை. இந்த விஷயங்களைப்பற்றி தீர்மானங்களில் சம்பந்தப்படாதன சொல்லியிருப்பதை சவிஸ்தாரமாக பரிசீலனை செய்வது அனாவசியமென்று நினைக்கிறோம்.

இந்த அப்பீல்தாரன் சென்னையைச் சேர்ந்த தஞ்சாவூர் ஜில்லா பாண்டி என்னும் கிராமத்தில் வசிக்கும் ஒருதனவந்தன்; நல்ல அந்தஸ்துடைய யோக்கியமான பூமிக்குடையவனென்றுந் தெரிகிறது. அய்யாசாமி என்பவன் இவனுடைய மூன்றாவது மனைவியின் மகன். இவன் இவனுடைய பெரியதகப்பன் சாமிதேவன் என்னும் ஒரு கிராம முனிசீபால் வளர்க்கப்பட்டு வந்திருக்கிறான். இந்த விசாரணை நடக்கும்போது இவனுக்கு 25 அல்லது 26 வயது; இவன் மந்தபுத்தியுடையவனென்றும் கோழைபான மனதையுடையவனென்றும் செஷன்ஜட்ஜியால் சொல்லப்பட்டிருக்கிறது; இவனுடைய குணம் நடையிவைகளைக் கொண்டும், இதற்குமுன் நடந்த சில கோப மூட்டப்படாதவும் காரணமில்லாததுமான சில துஷ்டத்தனமான செய்கைகளைக் கொண்டும் இவனுக்கு கொலை செய்யும்படியான பயித்தியமிருந்திருக்கக் கூடுமென்பதை ருஜூப்பிக்க பிரயத்தனங்கள் செய்திருக்கிறார்கள். இவனுவடைய மனைவி இறந்த பெண்பிள்ளையும் ஒரு போக்கியமான குடும்பத்தைச் சேர்ந்தவள். அவளுக்கு சுமார் 22 வயதிருக்கும். அவளொரு பிடிவாதமுள்ள கெட்டிக்காரியென்றுந் தெரிகிறது; தன்னுடைய புருஷன் தன் சொற்படி கேட்கும்படிக்குச் செய்திருக்கிறாள். அவளுக்கு இரண்டு பிள்ளைகள். இரண்டும் உயிரோடிருக்கின்றன; ஒன்றுக்கு சுமார் நாலுவயது. மற்றொன்றுக்கு ஒன்றரைவயது; 1911 க்கு ஆறு ஏழு வருடங்களுக்கு முன்னமே இவனும் அவளும் பாண்டிக்கு சமீபமாகவுள்ள ஒரு கிராமத்திலே அவளுடைய பெந்துக்களுடன் சேர்ந்து வசித்து வந்தார்கள்; தகப்பனுக்கும் பிள்ளைக்கும் விரோதமாகவே யிருந்தது; கடைசியாக சிநேகிதர்கள் ஒன்றுகூடி அவர்களுக்குள் ஒருவித சமாதானஞ் செய்து வைத்தார்கள். அய்யாசாமி அவன் மனைவி இரண்டு குழந்தைகள் இவர்கள் அப்பீல்தாரனுடைய வீட்டில் வசிப்பதற்கு 1911 வரு செப்டம்பர் மாதம் 13 உ போனார்கள். இவர்கள் விகல்பமன்னியில் கூடியிருப்பார்களா என்று பரீக்ஷித்துப்பார்க்க அவ்விதஞ் செய்ததாகச்சொல்லப்படுகிறது. ஆகிலும் தங்கபாபு அவள் தகப்பன் வீட்டில் வசிக்க இடங்கொடுக்கக் கூடாதென்பது வற்புறுத்தப்பட்ட நிபந்தனைகளிலொன்று; அய்யாசாமியும் அவனுடைய மனைவியும் அவனுடைய தகப்பன்வீட்டில் அக்டோபர் மாதம் 22 உ இராத்திரி படுத்துக் கொண்டார்களென்பது ஆக்ஷேபிக்

கப்படவில்லை. அவள் அன்றிரவு பொழுதுவிடிவதற்கு முன்னமே மிகுந்த மிருகத்தன்மையாகவும் முரட்டுத் தனமாகவும் கொல்லப்பட்டிருக்கிறாளென்பதும் ஆக்ஷேபிக்கப் படவில்லை. அவளுடைய தேகத்தில் பதின்மூன்று காயங்கள் செய்யப்பட்டிருக்கிறது. எல்லாம் இடது பக்கத்தில் செய்யப்பட்டிருக்கிறது; சிலது சொற்பகாயம்; பெரும்பான்மையும் பெருத்த காயங்கள். அவைகளிலனேகம் கூர்மையான ஆயுதங்களினால் அதிகபலமாக வெட்டப்பட்டிருக்கவேண்டும். திருஷ்டாந்தமாக:—2 நம்பர் காயம் வெட்டுக்காயம். இடது கன்னப்பொறியில் ஒரு அங்குல நீளம், அரை யங்குல அகலம், அரை யங்குல ஆழமுள்ளது; மற்றொரு 3 நம்பர் காயம் இடது காதின் கீழே காலங்குல நீளம் அரைக்காலங்குல ஆழமுள்ளது; இந்தக் காதின் மடல் வெட்டப்பட்டுப் போய்விட்டது; 4 நம்பர் காயமானது இடது பக்கம் கழுத்துக்கு மேல் பாகத்தில் இரத்தக் குழாய்கள் போவதை பிரிக்குமிடத்தில் மூன்று அங்குல நீளம், அரையங்குல அகலம், அரை யங்குல ஆழமுள்ள ஒரு வெட்டுக்காயம்; 6 நம்பர் காயமானது குறுக்குக் காயம், மூன்று அங்குல நீளம் அரையங்குல அகலமுள்ளது. இது கீழ் தாவக்கட்டை இடது பக்கம் வரையில் வந்திருக்கிறது; இவை போலவே இன்னும் ஐந்தாறு பெரிய காயங்களிருந்தன; இந்தக் கேசில் சாக்ஷியாக விசாரிக்கப்பட்ட பட்டாளம் மெடிகல் ஆபீசர் கர்னல் ஹாஸல் ராபிட் ருஜூச்சொல்லுகிறபடி 4 நம்பர் காயமானது இந்த பெண்பிள்ளை பிரக்ஞை தப்பியிருக்கச் செய்திருக்கும்; பேசவாவது நடக்கவாவது சக்தியற்றவளாகச் செய்திருக்கும்; 9 நம்பர் காயமும் இதே விதமாகச் செய்திருக்கும். 1 அடையாள காயமானது அரிவாள் என்ற ஆயுதத்தினாலாவது அவரிடங் காண்பிக்கப்பட்ட வளைவு கத்தியினாலாவது செய்யப்பட்டால் அது அவளை பேச வொட்டாமல் செய்திருக்கும் என்று அவர் நினைத்தார். அந்த காயங்களெல்லாங் குறுக்காவே யிருப்பதால் அவைகள் ஒருவனாலேயே வெளிச்சத்திற் செய்யப்பட்டிருக்குமென்று அபிப்பிராயஞ் சொன்னார். இருட்டில் இருவர்களால் செய்யப்பட்டதல்ல; இறந்தவளுடைய கைகளில் காயங்களில்லா திருப்பதைக்கொண்டு அவள் தூங்கிக் கொண்டிருக்கும்போது கொல்லப்பட்டாளென்பது நன்றாகத்தெரிகிறது. விழித்துக்கொண்டிருந்தால் தன்னுயிர் தப்பித்துக்கொள்ள மன்றாடியிருப்பாள்.

இந்தக் கொலை நடந்த மறு தினமாகிய 1911-ம் வருஷம் அக்டோபர் மாதம் 23-ந்தேதி இவள் பிரேதத்தைப்பற்றி மரண விசாரணை நடந்தது; அவள் புருஷனாகிய அய்யாசாமிபிள்ளை அப்போது ஆஜர் செய்த ரெத்தந்தோய்ந்த அரிவாளினால் அவனே அவளை வெட்டியதாக ஜூரிகளால் தீர்மானிக்கப்பட்டது; இறந்தவள் தூங்கிக்கொண்டிருந்த விடத்தினின்றும் இந்த அரிவாள் எடுக்கப்பட்டது; இதை போலீசார் கைப்பற்றினார்கள்; மரண விசாரணையின்போது ஆஜர் செய்யப்பட்டது. 1911-ம் வருஷம் நவம்பர் மாதம் 22-ந்தேதி அய்யாசாமிபிள்ளை தஞ்சாவூர் ஜில்லா திருத்துறைப்பூண்டி 2-வது வகுப்பு மாஜிஸ்டிரேட் முன்பாக கொண்டு வரப்பட்டான். தன்னுடைய மனைவியைக் கொன்றதாக குற்றஞ் சாட்டப்பட்டான். இந்த குற்றத்துக்காகவிசாரிக்கப்படுவதற்காகவே யென்று தெரிகிறது. வீட்டிற்குள்ளிருப்பவளும் இவனுக்கு பாட்டியாகவுமுள்ள கிழவி முத்தாச்சியுள்பட அநேக சாட்சிகளிடம் வாக்குமூலங்கள் வாங்கினார்கள். இந்தக்கிழவி தான் அன்றிரவு மொட்டு என்ற சத்தங் கேட்டதாகவும் எழுந்திருந்து அய்யாசாமி தூங்கிக்கொண்டிருந்த விடத்துக்கு வந்ததாகவும், படுக்கைக்கு வலது பக்கத்திலே கட்டிலிலே யுட்கார்ந்துகொண்டு அவன் பெண்ஜாதியை ஒரு அரிவாளாலே வெட்டிக்கொண்டிருந்ததாகவும், அனைப் பார்த்து "பையா என்னடாவெட்டுகிறாய்" என்று கேட்டதாகவும், "அவன் கொன்றுவிட்டான்" "அவன் கொன்றுவிட்டான்" என்று கூச்சல் போட்டதாகவும், அப்போது கட்டிலில் தூங்கிக்கொண்டிருந்த குழந்தை விழித்துக்கொண்டதாகவும், அதன்பேரில் இரத்தமிருந்ததென்றும், ஆனால் அதன்பேரில் காயங்களில்லை யென்றுஞ் சொல்லியிருக்கிறாள். மாஜிஸ்டிரேட் எதிரியை விசாரணைக்குக்கொண்டுவராமல் அவன் பேரிலேற்பட்ட ருஜுக்களை நம்பவில்லை யென்று சொல்லி அவனை ஜாமீன்பேரில் விடுதலை செய்தார். மறு தினம் 28 ந்தேதி அவனை விட்டுவிட்டார். இவர் செய்த தீர்ப்பில் 'எதிரியின் கட்சி முழுவதும் தனக்குத் தெரியவில்லை யெனச்சொல்லுகிறார். தங்கபாபுக்கு இறந்தவள் பகையாளியாக விருந்ததாகவும், இவளை தங்கபாபு ஏமாற்றி மாட்டுக்கொட்டகை அல்லது கொல்லை பக்கத்துக்கு அழைத்துப்போனதாகவும், எதிரியின் தகப்பன் அவனுக்கு உதவியாக வந்தவர்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
3 NOV 1913
MADRAS

உ

ஹைகோர்ட்டு தீர்மானங்கள்.

தமிழ்ப்பாஷை பயின்றவர்கள் வியவகார நுட்பங்களை
எளிதில் உணரும் பொருட்டு பிரசுரிக்கப்படும்.
மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

புத்தகம்-1 } மாயவரம் 1913௵ அக்டோபர்மீ { இலக்கம்2

கள் இவர்கள் வசத்தில் ஒப்புவித்து விட்டதாகவும் அவர்கள் மிருகத்தன்மையாக இவளைக்கொலை செய்து அவளுடைய படுக்கையில் கொண்டுவந்து போட்டுவிட்டதாகவும் எதிரி இரத்தக்கரையுள்ள வேஷ்டியைக் கட்டிக்கொள்ளும்படி அவன் பேரிற்கொலைக்குற்றஞ் சுமத்தியதாகவும் எதிரியின் கட்சி யென்றுதெரிகிறது டிபென்ஸ் திறப்பில் சொல்லுகிறபடி இந்தக் கொலையானது நடுராத்திரியில் நடந்திருக்கிறது. ஏற்பட்ட எல்லா சங்கதிகளும் எதிரியின் தகப்பன், மாற்றான் தாயின் பெண், மாற்றான் தாயின் மகன் கல்லியாணம், வேலைக்காரன் கதிரேசன் முதலியவர்கள் பேரில் சந்தேகத்தை விளைவிப்பதாக மாஜிஸ்டிரேட் சொல்லியிருக்கிறார். இது பின்னும் விசாரிக்கப்படும். அய்யாசாமி ஒருவன் பேரில்மட்டில் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறது மாஜிஸ்டிரேட் சொல்லுகிறபடி எதிரியின் விவாதங்கள் அல்லது கட்சி அவனால் சொல்லப்பட்டதல்ல அல்லது அவன் சம்மதியின் பேரில் சொல்லப்பட்டதல்ல வென்பதற்கு யாதொரு ருஜுவுங் கிடையாது. இந்த விஷயங்களுக்கும் இவன் பின்னால் வாக்குமூலங்கொடுத்த விஷயங்களுக்கும் ஒவ்வொரு இனத்திலும் வித்தியாசமிருக்கிறது. மாஜிஸ்டிரேட் தான் நடத்தியபடி செய்வதற்கு அவருக்கு அதிகாரமிருக்கிறதென்பதற்குச் சந்தேகமேகிடையாது. ஆனால் விடுதலையென்பது குற்றவாளியல்ல வென்பதல்ல.

அய்யாசாமியைப்பற்றி மறுபடியும் விசாரிக்கலாம். அவன் செஷன் ஜட்ஜி சொல்லுகிறபடி பிற்பட்டு விசாரணை ஏற்படுகிற காலத்தில் தன்னைக்காப்பற்றிக் கொள்ள முடியாது. இந்த சந்தர்ப்பங்களில் இவன் விடுதலை செய்யப்பட்ட பிரயோஜனங்களில் ஒன்று தன் தலையைத்தப்பித்துக்கொள்ள வேண்டியதினிமித்தம் தன்னுடைய தகப்பன் கழுத்தில் சுருக்குக்கயிறு கட்டும்படி பிரயத்தினங்கள் செய்வதில் மிகுந்த திருஷ்டியுடையவனாக இருக்கும்படி கட்டாயப்படுத்தியது. இவன் பின்னால் சொன்ன சாட்சியத்தின் மதிப்பை சீர்தூக்கிப் பார்ப்பதில் இந்தவிஷயமெத்தவுங் கவனிக்கத்தக்கது.

இந்த தீர்மானஞ் சொல்வதற்கு முதனாள் நவம்பர் மாதம் 27-ந்தேதி இதேமாஜிஸ்டிரேட் தங்கபாபு அப்பீல்தாரனுடைய வேலைக்காரன் கதிரேசன் இவனுடைய மகன் கல்லியாணம்இவர்களுக்குபிடி வாரண்டு பிறப்பித்திருக்கிறார். டிசம்பர் மாதம் 2உ அப்பீல்தாரனுடைய மனைவி காந்திமதியாச்சியும், அவனிக்கோனும் வாரண்டில் பிடிக்கப்பட்டிருக்கிறார்கள். அதாவது அப்பீல்தாரன் வீட்டிலுள்ளவர்கள் எல்லோரும் வாரண்டில் பிடிக்கப்பட்டார்கள். இதனாலிவர்கள் தங்கள் வாய்களைத்திறக்க முடியாதவர்களாகி விட்டார்கள். ஏனென்றால் எதிரிகளாயுள்ளவர்கள் ஸ்டேட்மெண்டு கொடுக்கலாம், ஜட்ஜியாவது மாஜிஸ்டிரேட்டாவது அவர்களை கேள்விகேட்கலாம். இவர்கள் சிறப்புக்கு இவர்களை சாக்ஷியாக விசாரிக்கக்கூடாது. அதே தேதியில் அந்த மாஜிஸ்டிரேட் அய்யாசாமியிடத்தில் ஒரு ஸ்டேட்மெண்டு வாங்கியிருக்கிறார்; இது பிரமாணத்தின்பேரில் ஏற்படவில்லை; பிறகு இது பிந்திய விசாரணையில் பிராஸிகியூஷன் வக்கீலால் சாக்ஷியமாக எடுத்துக்கொள்ளப்பட்டது. இது அனேக விஷயங்களில் ஒற்றுமையில்லாதிருந்தாலும் இரண்டு ருஜுக்களும் ஒன்றுக்கொன்று பொருத்தமாக விருக்கிறதென்பதை ருஜுப்பிக்கிறதற்காக தாகல் செய்யப்பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இது ரிகார்டு 115-வது பக்கத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. அதில் அவன் தானும் தன் மகன் குழந்தையும் தன்னுடைய மனைவி இறந்தவளும் படுத்துக்கொள்ளச் சென்றதாகவும், தன்னுடைய மனைவி வடக்கே தலைவத்து படுத்துக்கொண்டதாகவும், குழந்தை நடுவில் படுத்துக்கொண்டதாகவும், தான் கீழ்புறத்தில் படுத்துக் கொண்டதாகவும்; எதிரியின் பெண்ஜாதி காந்திமதியாச்சியும்,

தன் சகோதரி தங்கபாபும், தன்னுடைய சகோதரன் கல்லியாணமும் தன்னுடைய பெண்ஜாதியை அழுத்திப்பிடித்துக் கொண்டதாகவும் அப்பீல்காரனாகிய தன்னுடைய தகப்பன் அவளை ஒரே வெட்டாக வெட்டினதாகவும் தான் தன் தகப்பனிடஞ் சென்று "வெட்டாதே" 'விட்டுவிடு' என்று சொன்னதாகவும் அப்போது இவன் கட்டியிருந்த செவப்பு வேஷ்டியில் இரத்தந் தெறித்து அதில் கறையாய்விட்டதென்றும், அப்போது இவனுடைய தகப்பனும் சகோதரன் கல்லியாணமும் 'நீங்கள் இந்தப் பயலைப்பிடித்துக் வைத்துக்கொள்ளுங்கள்" என்று சொன்னதாகவும், இதன் பேரில் இரண்டு வேலைக்காரர்கள் கதிரேசன் அவனி அப்பீல்தாரனுடைய ஏஜண்டின் மகன் மற்றொரு சோமு என்பவன், இவர்கள் தன்னைப் பிடித்துவைத்துக் கொண்டதாகவும், தன்னைப்பிடித்து வைத்துக்கொண்டிருந்த பத்து பதினைந்து நிமிஷங்களுக்குப் பிறகு தானிருந்தவிடத்துக்கு அவர்களெல்லோரும் வந்ததாகவும், தன்னைப்பிடித்து வைத்துக்கொண்டிருந்த காலங்களிலெல்லாம் சப்தங்கேட்டுக்கொண்டேயிருந்ததாகவும், பொழுதுவிடிந்ததும் தான்போய் பார்த்ததில் தன் மனைவி பேரில் பல வெட்டுகளிருந்ததை பார்த்ததாகவும் சொல்லியிருக்கிறான். இது பின்னால் நடந்தவைகளினால் அனேக விஷயங்களில் இது ஒரு முக்கியமான ஸ்டேட்மெண்டாக விருக்கிறது. முதலாவது:—இவன் மனைவி கொலை செய்யப்பட்ட காலத்தில இவன் செவப்புவஸ்திரங் கட்டிக்கொண்டிருந்ததாகச் சொல்வது உண்மையல்லவென்று ருஜுப்பிக்கப்பட்டிருப்பதுமன்றி எங்கள் முன்பாக விவாதத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டுமிருக்கிறது. அது அவனுடைய வேஷ்டியென்று ருஜுப்பிக்கப்பட்டிருக்கிறது. அவன் மனைவி கொல்லப்பட்ட தினம் இராத்திரி அவன் வெள்ளை வேஷ்டிகட்டிக் கொண்டிருந்தானென்றும், ருஜுப்பிக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது:—இந்தக் கொலை நடந்த காலத்தில் தியாகன் என்ற ஒருவன் அங்கேயிருந்ததாகவாவது, அவன் கூடவிருந்து எந்த சங்கதியாவது செய்தானென்றாவது இவன் சொல்லவில்லை; மூன்றாவது இறந்தவள் கொல்லப்படுவதற்கு முன்னமே அவளை படுக்கையினின்றும் அவள் அப்புறப்படுத்தப்பட்டாளென்று சொல்லவில்லை. அச்சிட்ட கடிதாசி 143-வது பக்கத்திற்கண்ட G அடையாள ஆதிரவின்படி தியாகன் துப்பறியும் இனிஸ்பெக்டர் D S கிருஷ்ணசாமி அய்யரால் 1911-ம் வருஷம் டிசம்பர் மாதம் 6-ந்

தேதி வாரண்டில் பிடிக்கப்பட்டான், மறுதினம் இதே மாஜிஸ்டிரேட் முன்பாக கொண்டுவரப்பட்டான். இவன் காவலில், வைக்கப்பட்டான், இவன் அப்பீல்தாரன் முதலிய மற்ற கைதிகள்பேரிலுங் குற்றஞ் சாட்டி தானுமந்த குற்றத்தை யொப்புக்கொள்ளுவதாகவும், இது முன்னடந்த விசாரணையில் சாமிநாதபிள்ளை சொன்ன சாக்ஷிக்கு ஒற்றுமையாக விருப்பதாகவும் மாஜிஸ்டிரேட் தனக்குமேலதிகாரி I J ஜில்லஸ்பி அவர்களுக்கு அந்த மாதம் 28-ந்தேதி எழுதியிருக்கிறார் (23-வது ஆதிரவு 170 பக்கம்) அடுத்த டிசம்பர் மாதம் 14-ந்தேதி 2-வது கிளாஸ் மாஜிஸ்டிரேட் V S நாராயணராவ் இவனிடத்தில் ஒரு ஸ்டேட்மெண்டு வாங்கியிருக்கிறார். இவன் பிறகு 1912-ம் வருஷத்தில் மார்ச்சு மாதம் 18-ந்தேதி இந்தக் கேசில் சாக்ஷியாக விசாரிக்கப்பட்டிருக்கிறான். இவன் ஒப்புக்கொள்ளுதலில் சொல்லுங் கதையானது புதுமையாகவும், புறண்டு பேசுவதாகவுமிருக்கிறது. தானும் தன்னுடைய சகோதரன் சோமு, அப்பீல்தாரன் வீட்டிலுள்ளவர்கள் அனேகமாய் எல்லோரும், தனக்குத்தெரியாதவும் பெயர் தெரியாதவுமான வேறேயிருவரும் அங்கே வந்திருந்ததாகச் சொல்லுகிறான். அப்பீல்தாரனுடைய உத்திரவுப்படி தானும் தன்னுடைய சகோதரன் சோமு, கதிரேசன், அவனி இவர்களும் அய்யாசாமியை இரண்டாங் கட்டுக்கு இழுத்துக்கொண்டுபோய் அவனை யங்கே கட்டி வைத்திருந்ததாகவும், அய்யாசாமி பேசினால் அவனை வெட்டும்படி அப்பீல்தாரன் அவனுக்கு உத்தரவு கொடுத்து அவனை காவலிலிருக்கச்செய்ததாகவும் தான் சோமு கதிரேசன் இவர்கள் இறந்தவளிருந்த விடத்துக்குத் திரும்பிவந்ததாகவும், அப்பீல்தாரனுடைய மனைவி காந்திமதி இறந்தவளுடைய தோள்களை யழுத்திப்பிடித்துக் கொண்டதாகவும், அவள் மகன் கல்லியாணம் இறந்தவள் வாயை மூடினதாகவும், அப்பீல்தாரனுடைய உத்தரவுப்படி கல்லியாணமுங் கதிரேசனும் அவள் தலையைப்பிடித்துத் தூக்கியதாகவும், தானும் சோமும் கால்களைப்பிடித்து தூக்கியதாகவும் தங்கபாபு ஒரு வெளிச்சங்கொண்டுவர அப்பீல்தாரனுடைய உத்தரவுப்படி மாட்டுக்கொட்டகைக்குக் கொண்டு போகப்பட்டதாகவும், ஒரு நார்த்தை மரத்தினடியில் அவளை படுக்க வைத்ததாகவும், தனக்குத் தெரியாத இரண்டு பெயர் அங்கே நின்றுகொண்டிருந்ததாகவும், அப்பீல்தாரன் அவர்களைப்பார்த்து "உங்கள் வேலையைப் பாருங்கள்" என்று சொன்னதா

கவும், அதன்பேரில் அவர்களிலொருவன் வலது பக்கத்துக்கு வந்து ஒரு அரிவாளினால் இறந்தவளை காதுக்கும் வலது தோளுக்கு மத்தியில் வெட்டியதாகவும், பின்பு அப்பீல்தாரன் இந்தப் பெயர் தெரியாதவர்களைப்பார்த்து "சீக்கிரத்தில் காரியத்தை முடித்துவிடுங்கள்" என்று சொன்னதாகவும், அதன்பேரில் அவர்கள் அவள் இறந்துபோகும்படி வெட்டினதாகவும், பிறகு அப்பீல்தாரன் தன்னைப்பார்த்து "அதோ வொரு சாயவேஷ்டியிருக்கிறது எடுத்துக்கொள், அய்யாசாமி ஒரு வெள்ளைவேஷ்டி கட்டிக்கொண்டிருக்கிறான், அதைக்களைந்து இந்த சாயவேஷ்டியை அவனுக்கு கட்டிவிடு" என்று சொன்னதாகவும், தானந்தப்படியே செய்ததகாவும் சொல்லியிருக்கிறான். இந்தக்கடைசி ஸ்டேட்மெண்டானது ஏற்கனவே சொன்னபடி நவம்பர் மாதம் 27-ந்தேதி அய்யாசாமி கொடுத்த ஸ்டேட்மெண்டுக்கு நேர்மாறாகவிருக்கிறது என்பது ஸ்பஷ்டமாக விளங்கும். இந்த அய்யாசாமியை இவனுடைய செவப்பு வேஷ்டியில் எப்படி இரத்தக்கறைவந்ததென்று கேட்டதற்கு தன் தகப்பன் தன்னுடைய மனைவியை ஓரே வெட்டாக வெட்டிய காலத்தில் அவளுடைய இரத்தம் தெறித்ததென்று பதிற்சொல்லி யிருக்கிறான்.

இவனை மார்ச்சுமாதம் 18 ந் தேதி சாக்ஷியாக விசாரித்திருக்கிறார்கள்; கொலை நடந்ததினம் இராத்திரி அப்பீல் தாரனை தான் பார்க்கவில்லை யென்று சொல்லி யிருக்கிறான்; அந்த வீட்டுக்குத் தான் போகவே யில்லையென்றுஞ் சொல்லி யிருக்கிறான். அய்யாசாமி அவனுடைய பெண்ஜாதியை வெட்டினதாக முத்தாச்சி தனக்குச் சொன்னதாகச் சொன்னான், அவளை எவராவது வெட்டியதை தான் பார்க்கவில்லையென்று சொன்னான். இதனாலிவனை பப்ளிக் பிராஸிகியூடர் கோர்ட்டாருடைய உத்திரவுப்படி குறுக்கு விசாரணை செய்தார்.

குறுக்குவிசாரணை விபரங்களாவன.

(கோர்ட்டார் அனுமதியின்பேரில் பப்ளிக் பிராஸிகியூடர் குறுக்குவிசாரணை செய்தது.

கே:—நீடாமங்கலம் சப்மாஜிஸ்டிரேட்டினால் நீ விசாரிக்கப்பட்டாயா ?

ப:—ஆம்.

கே:—நீ சொன்னதை அவர் எழுதிக் கொண்டாரா?

ப:—போலீசார் எனக்குச் சொல்லிக் கொடுத்தபடி அவர்களிடம் வாக்குமூலங் கொடுத்தேன்.

கே:—அதைப்பற்றி நீ அவரிடத்தில் சொன்னாயா?

ப:—அந்தப்படிச் சொல்லக் கூடாதென்று போலீசார் எனக்குச் சொல்லி வைத்திருந்தார்கள்.

கே:—மாஜிஸ்டிரேட் டிடத்தில் நீ உண்மையைச் சொன்னாயா?

ப:—போலீஸார் சொல்லிவைத்தபடி அவர்களிடஞ் சொன்னேன்.

கே:—அதுதானா வுண்மை?

ப:—முத்தாச்சி சொன்னாளென்று சொன்னேனே அதுமட்டிலுண்மை.

கே:—முத்தாச்சி சொன்னதைப்பற்றி நீ சப்மாஜிஸ்டிரேட்டிடத்தில் சொன்னாயா?

ப:—அதைச்சொல்ல வேண்டாமென்று போலீசார் சொல்லியிருந்ததால் நான் சொல்லவில்லை.

கே:— நீ சப்மாஜிஸ்டிரேட் டிடத்தில் சொன்னதெல்லாம் பொய்யா?

ப:—எனக்கு சொல்லிக்கொடுத்தபடி சொன்னேன். நான் பொய் பேசும்படி சொல்லிவைத்தார்கள் அந்தப்படி பொய் சொன்னேன்.

இதுதான் இவனுடைய ஜவாப்பு; அவன் குற்றத்தை யொப்புக்கொண்ட அடையாள ஆதிரவு வாசிக்கப்பட்டு சாக்ஷியமாக அங்கீகரிக்கப்பட்டது மறுதினம் காவல்படுத்தப்பட்டே கோர்ட்டார் முன் கொண்டுவரப்பட்டபோது அதற்கு முதனாள் இவன் கோர்ட்டையும் ஜனங்களையும் பார்த்தவுடன் பயந்துவிட்டதாகவும் தானே வலுவில் சொன்னான். கோர்ட்டாராவது இருதிறப்பிலும் ஆஜராயிருந்த வக்கீல்களாவது இவன் பொய்வாக்கு மூலங் கொடுக்கும்படி சொல்லிக்கொடுத்த போலீஸ் உத்தியோகஸ்தர்

அல்லது உத்தியோகஸ்தர்களின் பெயரைக் கேட்கவேயில்லை. இவனை வாரண்டில் பிடித்தவனை கோர்ட்டில் ஆஜர்படுத்தவில்லை; யாருடை முயற்சியின்பேரில் இவன் பிடிக்கப்பட்டானென்பதை யாவது, எதற்காக இவன் குற்றவாளியென்று ஒப்புக்கொள்ள நேர்ந்ததென்பதைப்பற்றியாவது, இவ்விதம் ஒப்புக்கொள்ளும்படி எந்த விஷயம் தூண்டிவிட்டதென்பதைப் பற்றியாவது, எதிரிகள் குறுக்கு விசாரணை செய்து தெரிந்து கொள்வதற்கு எந்த சாக்ஷியும் ஆஜர்ப்படுத்தப்படவில்லை. இது சம்பந்தமான எந்த விஷயங்களும் அப்பீல் தாரன் சம்பந்தப்பட்ட வரையில் மறைக்கப்பட்டிருக்கிறது, இந்த அப்பீலை யாரம்பித்த ஸர் ராபேர்ட் பின்லே அவர்கள் இவ்வித நடவடிக்கைகளினாலே எதிரிக்குச் செய்யப்பட்ட பெரிய அபநியாயத்தைப்பற்றி மனங் கசந்து சொன்னார். அவர்கள் சொன்னதற்குத் தகுந்த காரணங்களிருக்கின்றன வென்றே நாங்களும் நினைக்கிறோம். அப்பூருவர் சொல்லுங் கதையானது அதைதனிமையில் ஆதரிக்கக்கூடிய சாக்ஷிய மில்லாமல் அங்கீகரிக்க அருகமற்றதென்று செஷன் ஜட்ஜி அபிப்பிராயப்பட்டது மெத்த கிரமமானது சரியானது. (188-வது பக்கம்) அந்த சாக்ஷியம் நம்பத்தகுந்ததல்லவென்று, ஜஸ்டிஸ் பேக்வெல் சொல்லுகிறார்கள், இந்தக்கேசை விசாரித்த அறிவிற் சிறந்த மூன்றாவது ஜட்ஜி தான் இந்த அப்புருவருடைய சாக்ஷியத்தை நம்பவில்லையென்று சொல்லுகிறார். ஸர் ஏர்ல் ரிச்சேர்ட்ஸ் பிரதம விவாதஞ் செய்ததிலேயே இது விஷயத்தை வற்புறுத்தவில்லையென்று சொல்லிவிட்டார்; அது மெத்த நியாயமானதென்றே நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம், இந்த சாக்ஷியம் ரிகார்டினின்றும் அடிபட்டதாகவே எண்ணப்படவேண்டும்; அவ்விதம் அடிபட்டபோதிலும் அதன் கறையிருந்து கொண்டேயிருக்கிறது. இது அப்பீல்தாரன் குற்றஞ்செய்ததை நேரிற் பார்த்ததாகச் சொல்லும் மற்றொரு சாக்ஷி அப்பாசாமியுடைய சாட்சியத்துக்குங் கறையுண்டுபண்ணுகிறது. இவ்விதம் இவன் குற்றத்தை யொப்புக்கொண்ட மூன்று வாரங்கள் கழித்து அதாவது 1912 ஹு ஜனவரி மாதம் 12 இந்த அப்புருவருடைய கதையை ஆதரிக்க வேண்டியதாக நினைத்தோ அல்லது அந்த நோக்கத்துடனோ அப்பாசாமியும் வாக்குமூலங் கொடுக்கும்படி செய்துவிட்டது. இவனுடைய வாக்குமூலத்தில் அப்புருவரைக் கொண்டு

வந்து விடுகிறான். இவனங்கே யிருந்ததாக இதற்கு முன் சொல்லவேயில்லை.

எல்லா விஷயங்களு முடிந்தபிறகு அப்புரூவர் செவப்பு வேஷ்டியை இவனுடைய இடுப்பில் கட்டிவிட்டா னென்று இவன் கொடுத்த வாக்குமூலம் அப்புரூவர் சொல்லுங் கதைக்கு ஒற்றுமையா யிருக்கிறது. ஆனாலிது இவன் முன் சொன்ன வாக்குமூலத்துக்கு நேர் விரோதமா யிருக்கிறது. தன்னைதூணில்கட்டி வைத்திருந்தார்கள் என்று முன்னே சொல்லவில்லை. அதே விஷயத்துக்குத் தான் இதுவுஞ் சேர்த்து சொல்லப்பட்டிருக்கிறது. இந்த இருவருஞ் சொல்லுங் கதைகள் ஒன்றுக்கொன்று சம்பந்தப்படுத்தி ஒற்றுமையாகச் சொல்லவேண்டியதை யுத்தேசித்தே யேற்பட்டதெனத் தெரிகிறது. ஒரு கதை பொய் யென்று தள்ளுபடி செய்யும் பட்சத்தில் மற்றொன்றும் உண்மையல்லவென்றே கொள்ளப்படவேண்டியது மெத்த அவசியம். இந்த அப்பாசாமி 1913 ௵ மார்ச்சு மாதம் 21௳ இந்தக் கேசில் சாக்ஷியாக விசாரிக்கப்பட்டான். அப்போது மாஜிஸ்டிரேட் G. S. வைத்தினாதய்யர் முன்பாக தான் 1911 ௵ நவம்பர் மாதம் 27௳ கொடுத்த வாக்குமூலம் உண்மையல்லவென்று சொல்லியிருக்கிறான்; அந்தப்படிச் சொல்லும்படி இனிஸ்பெக்டர் கங்க. அய்யர் தன்னைத் தொந்தரவு செய்ததாகச் சொல்லியிருக்கிறான் அப்படிச் சொல்வதற்கு முன்னமே ஏழெட்டு தடவை இனிஸ்பெக்டரை ஜெயிலிற் பார்த்ததாகச் சொல்லுகிறான். தான் வடக்கே தலைவைத்து படுத்திருந்ததாக மாஜிஸ்டிரேட்டிடத்தில் சொன்னதாகவும் அந்தப்படிச் சொல்லும்படி இனிஸ்பெக்டர் சொல்லிக் கொடுத்ததாகவும் குறுக்கு விசாரணையில் சொல்லியிருக்கிறான். அப்படிச் சொன்னால் அவனுக்கு நல்லதென்று சொன்னதாகவும், எதற்காக அப்படிச் சொல்லவேண்டுமென்று அவர் சொல்லவில்லை யென்றும், தன்னுடைய பெண்ஜாதிக்கு கீழ்பக்கத்தில் படுத்துக்கொண்டிருந்தானென்று சொன்னது உண்மையல்லவென்றுஞ் சொல்லுகிறான். தன்னுடைய தகப்பன் ஒரே வெட்டாக வெட்டினதாகச் சொன்னது பொய்யென்றும், இனிஸ்பெக்டர் அந்தப்படி சொல்லும்படி சொன்னதாகவும், S அடையாள ஆதிரவிற்கண்டபடி தான் 1912 ௵ அக்டோபர் மாதம் 27௳ எழுதிவைத்த வாக்குமூலத்தில் அப்புரூவருடையபெயரைச்

சொல்லத் தவறிவிட்டதாக சப் மாஜிஸ்டிரேட்டிடத்தில் சொல்லி யிருப்பதாகவும், தியாகனுடைய பெயரைச் சொல்லவேண்டாமென்று இனிஸ்பெக்டர் தனக்குச் சொல்லிவைத்திருந்ததாகவும் ஆனால் சோமுவின் பெயரைச் சொல்லவேண்டாமென்று சொல்லவில்லை யென்றும், தான் சப் மாஜிஸ்டிரேட்டிடத்தில் சொல்லி யிருப்பதாகவும் சொல்லுகிறான். தன்னுடைய மனைவியை தன்னுடைய தகப்பன் வெட்டினதை தான் நேரிற் பார்த்ததாகவும், இந்தக்கொலை அறையில் கட்டிலில் நடந்ததாகவும் சொல்லும்படி சப் இனிஸ்பெக்டர் தனக்குச் சொல்லிக் கொடுத்ததாகவுஞ் சொல்லுகிறான். தன் மனைவியைக் கொன்றவன் பெயரைச் சொல்லும்படி சப் இனிஸ்பெக்டர் சொன்னார் என்ற ஸ்டேட்மெண்டை சப்மாஜிஸ்டிரேட்டிடத்தில் மறுத்துச் சொன்னதாக இவன் ஒப்புக்கொள்ளுகிறான். சப் இனிஸ்பெக்டர் சொல்லிக்கொடுத்தபடி அந்தப்படி செய்ததாகச் சொல்லுகிறான். இந்த சப் இனிஸ்பெக்டர் பேரிலும் சப் மாஜிஸ்டிரேட் பேரிலும் ஜாஸ்தி முக்கியமில்லாத இன்னுஞ் சில விஷயங்கள் இந்த சாக்ஷியால் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த இருவரும் விசாரிக்கப்பட்டதில் இந்த சாட்சி சொன்ன யாதொன்றையும் ஒப்புக்கொள்ளவில்லை. இது உண்மையாகவிருக்கும்பட்சத்தில் இந்த வுத்தியோகஸ்தர்களாவது அல்லது சப் இனிஸ்பெக்டராவது இந்த சாட்சி பொய்சத்தியஞ் செய்யும்படி தூண்டிவிட்டதாகவும், இவனுடைய தகப்பனை தண்டனைக்குள்ளாக்கப்படுவதற்காக பிரமாணத்தின்பேரில் பொய்ச்சாக்ஷி சொல்லும்படி தங்களுக்குள் ஓர் வளையத்தக்க ஆயுதமாக வைத்திருந்ததாகத் தெரிகிறது; இது பொய்யாகிவிட்டால் இவன் முன்னே கொடுத்த வாக்குமூலத்துக்கு விரோதமாக பின்னால் வாக்குமூலங் கொடுத்திருக்கிறானென்றும் மனதார பொய்யான பிரமாண வாக்குமூலங் கொடுத்ததாகவும் அவன் பேரிற் குற்றஞ் சுமற்றவுந் தயாராக விருந்திருக்கிறார்கள்.

இவ் விஷயங்கள் மறதியினால் சொல்லி யிருக்கிறானென்று நினைக்க இடமில்லை; மிகுந்த சாமர்த்தியமான குறுக்கு விசாரணையினால் இந்த மனக்கலக்க முண்டாயிருக்குமென்று எண்ணவுமிடமில்லை; இந்த சாக்ஷியம் இவனுடைய சொந்த கற்பனையாக விருந்திருக்கவேண்டும் அல்லது அவைகள் கற்பனையென்று தெரிந்தே பிறர் சொல்லிக்கொடுத்தபடி சொல்லியிருக்க

வேண்டும். இவைகளில் எந்தவிதமாக விருந்தபோதிலும் இந்த சாக்ஷியின் ருஜு முற்றிலும் நம்பிக்கைக்கு அருகமல்ல; அப்புருவருடைய சாக்ஷியம் எவ்விதமோ அதுபோலவே இதுவும் மதிக்கப்படவேண்டும். இவனுடைய சாக்ஷியத்தைப்பற்றி அல்லது பெரும்பாக சாக்ஷியத்தைப்பற்றி நாங்கள் கொண்ட அபிப்பிராயமே செஷன் ஜட்ஜியுங் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. இது விஷயமாக 188-வது பக்கத்தில் எடுத்துச் சொல்லியிருப்பதில் "இந்த சாக்ஷியத்தைப்பற்றி நிதானமான அளவை உபயோகிக்க நான் இஷ்டப்படாவிட்டாலும் விசாரணையின் சோதனை இதில் காட்டக்கூடாதென்று நினைக்கிறேன். இவ்விஷயம் இவருக்கு திருப்திகரமாகத்தோற்றி இந்தக் கொலைக்கு ஒத்தாசை செய்தார்களென்றும், உடந்தையாக விருந்தார்களென்றும் இந்த அய்யாசாமி குற்றஞ்சாட்டிய மூன்று பெயர்களை விடுதலை செய்திருக்கிறார்.

இந்தியாவிலுள்ள கிரிமனல் கோர்ட்டு ஜட்ஜிகள் சாக்ஷிகளை நேரிற்பார்த்தும் அவர்கள் சொல்வதை நேரிற் கேட்டும் அவர்கள் சொல்லும் ருஜுக்களை நம்பி தீர்மானிக்கிறார்களென்றும், அவ்வித தீர்மானங்களை மாற்றுவது அபாயகரமானதென்றும் ஸர் எர்ல் ரிச்சேர்ட்ஸ் எங்களுக்கு வற்புறுத்திச்சொல்லுகிறார். இவ்விஷயங்களை நாங்கள் அங்கீகரிக்கவேண்டியது அவசியந்தான். ஆனால் இந்தக் கேஸ் அவ்விதமானதல்ல வென்று நிச்சயமாகச் சொல்லலாம். இது அதற்கு நேர்விரோதமான நடவடிக்கை; இந்த சாட்சியை நேரில் பார்த்தவரும் விசாரித்தவருமான ஜட்ஜி இந்த சாட்சியம் அவ்வளவாக நம்புவதற்கு அருகமற்றதென்றும், அதை நம்பி யாதொன்றுஞ் செய்யக்கூடாதென்றுஞ் சொல்லியிருக்கிறார்.

இந்த சாட்சியம் உண்மையென்று நினைத்திருக்கும் பட்சத்தில் இதில் சம்பந்தப்படுத்தப்பட்ட மூன்று கைதிகளை விடுதலை செய்திருக்கமாட்டார். எந்தவிடத்தில் எவ்விதமாகக் கொலைநடத்தப்பட்டதென்பதற்காவது, கதிரேசன் முதல் எதிரியால் நியமிக்கப்பட்ட காரியஸ்தர்களிலொருவனாக விருக்கலாமென்று அநேகமாக அனுமானிக்கக் கூடியதாகவிருந்தாலும் அந்த கதிரேசனாவது அவனியாவது தங்கபாபாவது இந்தக் கொலையில் ஒத்தாசை செய்திருக்கிறார்கள் என்பதற்காவது, சந்தேகமின்றி நம்பத்தகுந்தபோதுமான ருஜுவில்லை யென்று வெளிப்படையாகச்

சொல்லியிருக்கிறார் (200 பக்கம்) இதனாலிவர்கள் குற்றவாளியல்லவென்று அவர்களை விடுதலை செய்திருக்கிறார்.

இந்த அப்பீல்தாரன் குற்றவாளி யென்பதற்கு அறிவிற் சிறந்த செஷன் ஜட்ஜி ஐந்து குறிப்பிட்ட பயிண்டிங் (கண்டு பிடித்தல்) சொல்லியிருக்கிறார். இவைகள் ரிகார்டு 199 பக்கக்கடைசியிலும் 200-வது பக்க முதலிலுஞ் சொல்லப்பட்டிருக்கிறது. அவையாவன 1. அன்றிரவு அப்பீல்தாரன் வீட்டிலுள்ளவர்களில் சிலரால் இந்தக்கொலை நடத்தப்பட்டிருக்க வேண்டும். 2. இரத்தக் கரையுள்ள இரண்டு வேஷ்டிகள் இந்தக் கொலையில் ஒருவனுக்கு மேற்பட்டவன் ஒத்தாசையாகவிருந்திருக்க வேண்டுமென்பதற்கு முடிவான ருஜு. 3. அப்பீல்தாரனாலும் அவனுடைய மாமியார் முத்தாச்சியாலும் சொல்லப்பட்ட முகாந்திரங்கள் சங்கதிகளுக்கு முற்றிலும் ஒற்றுமையற்றனவாகவே யிருக்கின்றன. 4. இந்தக் கொலை நடந்த பிறகு அப்பீல்தாரனுடைய நடவடிக்கைகள் குற்றமுள்ள மனசசாட்சி யுடையவனாக இருந்ததாகத் தெரிவிக்கிறது. 5. அந்த வீட்டிலுள்ளவர்களில் இவனொருவனுக்கே தனத்தைக் கொலை செய்யும்படி நோக்கம் இருந்திருக்கிறது என்று ருஜுப்பிக்கப்பட்டிருக்கிறது.

கடைசியிற் சொன்ன விஷயம் சாட்சிகளைக்கொண்டு தெரியவில்லை யென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம. முதல் சங்கதியைப்பற்றி அப்பீல்தாரன் வீட்டிலுள்ளவர்களில் சிலராலாவது அல்லது அவர்களுடைய உடந்தை அல்லது ஒத்தாசையாலாவது நடந்திருக்குமென்று செஷன் ஜட்ஜி சொல்லியிருந்தால் அவர் சொல்வதை நாங்கள் ஒப்புக்கொண்டிருப்போம். இரண்டாவது பயிண்டிங் பொருத்தமாயில்லை. இந்த இரண்டு வேஷ்டியும் அய்யாசாமியுடையது, இந்த கொடுங் கொலை நடந்தகாலத்தில் இவன் வெவ்வேறு சமயத்தில் வெவ்வேறு வேஷ்டி யுடுத்திக்கொண்டிருக்க நியாயமில்லை. இந்தக்கொலை நடந்த சமயத்தில் இந்த இரண்டு வேஷ்டிகளையும் இரண்டு பெயர் கட்டிக்கொண்டிருந்திருக்க வேண்டும். ஆனால் அய்யாசாமி இந்தவிதஞ் சொல்லவில்லை; இதற்குவிரோதமாக இந்தக் கொலை நடந்த காலத்தில் தான் செவப்பு வேஷ்டியைக்கட்டிக் கொண்டிருந்ததாகவும், தன்னுடைய தகப்பன் தன்னுடைய மனைவியை ஒரே வெட்டாக வெட்டினபோது தன்னுடைய பெண் ஜாதியின் இரத்தம் அந்த வேஷ்டியில் தெரி

த்ததாகவும் முதலிற் சொன்னான். பிறகு அன்றிரவு தான் வெள்ளை வேஷ்டிகட்டியிருந்ததாகவும், தன்னுடைய தகப்பனுடைய உத்தரவுப்படி அப்புரூவர் அந்த செவப்புவேஷ்டியை தன்னுடைய இடுப்பில் கட்டினதாகவும் பிரமாணஞ்செய்திருக்கிறான். இந்த கற்பனை அய்யாசாமியுடைய வாக்குமூலங்கள் ஒவ்வொன்றுக்கும் நேர்விரோதமாக விருக்கிறது. இந்தக் கொலை நடந்தகாலத்தில் அவனதைக் கட்டிக்கொண்டிராத பக்ஷத்தில் இறந்தவளும் அவள் புருஷனும் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்த விடத்தில் கிடந்திருக்கும், அவளுடைய இரத்தமதில் பட்டிருக்கும், அதிக இரத்தம் அதில் சொட்டப்பட்டிருக்கவேண்டும். கொலை நடந்த பிறகு இவன் வேஷ்டி மாற்றியிருக்கும் பட்சத்தில் இந்த இரண்டாவது வேஷ்டியில் இரத்தக்கறை அந்த அறையிலுண்டாயிருக்கலாம். உபயோகப்படுத்தப்படாத வேஷ்டிகள் எங்கே வைக்கப்பட்டிருந்த தென்பதற்கு ருஜுவில்லை. இந்தக் கொலை செய்யப்பட்ட அறையில் அவைகளிருக்கும் பட்சத்தில் அவைகளிலிருக்கிறபடி அந்த இரத்தம் அந்த விடத்திலேயே யேற்பட்டதாகவிருக்கும், இதுவுமன்றி அவைகளிலொன்றில் இரத்தம் வேறுவகைகளினாலு மேற்பட்டிருக்கலாம். மேலும் வழக்கம்போல் இந்த இரத்தம் மனுஷ இரத்தம் என்ற ஒரு விஷயந்தான் ருஜுப்பித்திருக்கிறார்கள். மூன்றாவது பயிண்டிங்கைப்பற்றி அப்புரூவர் அய்யாசாமி இந்த இருவருஞ் சொன்ன கதைகள் உண்மையென்று ஒப்புக்கொள்ளும்பட்சத்தில் செஷ்ஷன் ஜட்ஜியின் அபிப்பிராயத்தை நாங்களும் ஒத்துக்கொள்ளலாம். ஆனால் இந்த முகாந்திரங்கள் வேறு விதங்களாக இருந்திருக்கக் கூடுமென்பதற்கு ஏற்பட்ட விஷயங்கள் ஒற்றுமையற்றனவாக விருக்கின்றனவென்று நாங்கள் அறிகிறோம். நாலாவது பயிண்டிங்கானது ஒருதிறந்த(மைதானம்) போன்றது. கேள்வி மூல முதலிய அங்கீகரிக்க அருகமற்ற அனேக சாக்ஷியங்களை அங்கீகரித்திருக்கிறார்கள். சில விஷயங்களுக்கு பிரயோஜனமற்றதாக விருக்கின்றன; சில எதிரிபேரில் விசேஷ தப்பெண்ணங் கொள்ளக்கூடியதாகவு மிருக்கிறது. அய்யாசாமி இந்தக் கொலையைப்பற்றி யாதொன்றுஞ் சொல்லக்கூடாதென்றும் அவன் தகப்பனுடன் இராஜியாகப் போகவேண்டுமென்றும் கட்டாயப்படுத்தப்பட்டதாக சொல்லப்பட்டிருக்கிறது. இது சாமிதேவனுக்கும் அய்யாசாமிக்கும் நட

த்த சம்பாஷணையி லேற்பட்டதாக வாக்குமூல மேற்பட்டிருக்கிறது. இது எல்லா எதிரிகள் முன்னிலையிலும் வாங்கப்படவில்லை. சில எதிரிகளுக்கு முன்பாக வாங்கப்படாமல் மற்றஎதிரிகள் முபாக வாங்கப்பட்ட வாக்கு மூலங்களை ஒன்றாகச் சேர்த்து உண்மையாகச்செய்து அவைகளையெல்லா எதிரிகளுக்கும் விரோதமாக வுபயோகித்திருக்கின்றார்கள். ஆனால் இந்த பயிண்டிங்கானது எவ்வளவேனும் அங்கீகரிக்கத்தகாததும், அவைகளை அங்கீகரிக்கும்பட்சத்தில் எல்லா எதிரிகளுக்கும் மிகுந்த கெடுதியை யுண்டுபண்ணத்தக்கதுமான சொற்பபாக ருஜுவைப் பொருத்ததாகவுமிருக்கிறது தீர்மானங்களில் நன்றாகத் தெரிகிறபடி ஓர் பெருத்த அநியாயத்தை யுண்டுபண்ணி விட்டது. இந்த மரணத்தைப் பற்றி எதிரியாதொரு சமாசாரமும் எவருக்கும் அனுப்பவில்லை, அடுத்த கிராமத்திலுள்ள சினேகிதர்கள், அறிமுக முள்ளவர்கள் இவர்களுக்கு இந்த மரணத்தைப்பற்றி சினேகித ரொருவரால் சமாசாரம் அனுப்பப்பட்டது. இந்த சமாசார மறிவிக்கப் போனவர்கள் அவர்கள் சந்தித்த மனிதர்களிடத்தில் இறந்தவள் காலராவினால் இறந்து போனதாகச் சொல்லியிருக்கிறார்கள். இது எங்கும் பிரஸ்தாபத்துக்கு வந்து விட்டது. இந்த சமாசாரமனுப்பியவன் பிரமாணத்தின்பேரில் விசாரிக்கப்பட்டிருக்கிறான். அந்த விதம் அதாவது காலராவினால் இறந்துபோனதாகத் தான் சொல்லச் சொல்லவில்லையென்று பிரமாண வாக்கு மூலங் கொடுத்திருக்கிறான். இவ்விதஞ் சொல்லும்படி சமாசார மறிவிப்பவர்களுக்கு அப்பீல்தாரன் சொல்லிக்கொடுத்தா னென்பதற்காவது, மற்றவர்களைக் கொண்டு தனக்காக அவ்விதஞ் சொல்லும்படி சொன்னானென்பதற்காவது, அல்லது இந்தவிஷயம் அவருக்குத் தெரிந்திருக்கிறதென்பதற்காவது ஒரு சாக்ஷிகூட விடவில்லை, அப்படியிருந்தும் இந்த வாக்கு மூலங்கள் எப்போதாவது ஏற்பட்டதாவென்பதை அங்கீகரிப்பதற்கு ஆதாரமில்லாமலே அவைகள் சாக்ஷியங்களாக அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. இந்தியாவில் காலராவினாலிறந்தவர்களை அந்த வியாதி பரவ இடங்கொடாமல் உடனே தகனஞ் செய்துவிடுவது வழக்கமாக விருப்பதினாலே இந்த விஷயத்தை பிராஸிக்யூஷன் திறப்பில் எடுத்துக்காட்டி சில ஜட்ஜிகள் இதை யங்கீகரித்திருக்கிறார்கள். இதைக்கொண்டு அப்பீல்தாரன் குற்றமுள்ள மனச்சாக்ஷியை யுடையவனாக விருக்கிறானென்றும் இந்தக் குற்றத்துக் கேற்பட்ட ருஜுக்களை மறைக்க விரும்பினான்

அல்லது பிரயத்தனஞ் செய்தானென்றும் பரிஷ்காரமான நம்பத் தகுந்த ருஜுக்களிருப்பதாக எண்ணிவிட்டார்கள்.

இவ்வித அங்கீகரிக்கத்தகாத ருஜுக்களை யொப்புக்கொண்டு அவைகளை யுபயோகப்படுத்தி யிருப்பதினாலே கொடிய நிலையான அபந்நியாயம் அப்பீல்தாரனுக்கு ஏற்பட்டுவிட்டதென்று நாங்கள் அறிகிறோம். எதிரி குற்றமுடைய மனசாட்சியுடையவனாக விருந்தானென்பதற்கு வேறு இரண்டு விஷயங்களை யாதரித்துச் சொல்லுகிறார்கள். முதலாவது இறந்தவளை தகனஞ் செய்துவிட வேண்டுமென்றேற்பட்ட சம்பாஷணை; இது இந்தியாவில் இறந்த இந்துக்களை எவ்விதஞ் செய்யவேண்டுமென்ற சாதாரண வழக்கம், இது மெத்த சாதாரண விஷயம், பின்னால் தகனக்கிரிகைகள் நடத்தப்படவேண்டியதற்கேற்பட்ட விஷயமேயன்றி வேறொன்றல்ல. காலராவினால் இறந்துபோனதாக எல்லோராலும் பிரஸ்தாபிக்கப்பட்ட விஷயம் செஷன் ஜட்ஜி மனதில் ஒரு குற்றமான சங்கதியாகப் பட்டுவிட்டது. ஆகையால் நாலாவது பயிண்டிங்குக்கு இந்த சாக்ஷியம் எவ்விதத்திலும் ஆதாரமானதல்லவென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். இந்த பயிண்டிங்கை யாதரித்து சொல்லக்கூடிய மற்றொரு விஷயம் யாதெனில் அப்பீல்தாரனுக்கு சிநேகத்தன்மையில்லாத கிராம முனிசீப் சாமித்தேவனுக்கு காலை 6 மணிக்கு முன்னமேயே சொல்லி யனுப்பினார்கள். அவர் காலை 6 மணிக்கு அப்பீல்தாரனுடைய வீட்டுக்கு வந்தார். இறந்தவளுடைய பிரேதத்தைக் காட்டினார்கள். அய்யாசாமியைப் பார்த்தார், அப்பீல்தாரனிடத்தில் ஒரு ஸ்டேட்மெண்டு வாங்கினார். அதையவர் போலீசாரிடத்தில் ஐந்தாறு தினங்கள்கழித்து கொடுத்திருக்கிறார். சில நேரங்கழித்து தான் போலீசாருக்குத் தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் 11 மணிக்கு முந்தி அவ்விடம் வரவில்லை. இவர்கள் வருவதற்குள்ளே இறந்தவள் தூங்கிக்கொண்டிருந்த அறையை ஒருவித ஏற்பாடு செய்துவிட்டதாகவும், இவள் கொலை செய்யப்பட்டபோது எவ்விதங்கிடந்தாளோ அந்தப்படிக்கன்றி வேறுவிதமாக மாற்றிவிட்டதாகவும் சாக்ஷி சொல்லப்படுகிறது. அந்தப்படிக்கு மிருக்கலாம். ஆனால் அப்பீல்தாரனுடன் அநேக ஜனங்களும் அந்த அறைக்குட் போயிருக்கிறார்கள்.

இந்த விஷயங்களை அப்பீல்தாரன் நேரிற் செய்தான். அல்லது வேறொருவரைக்கொண்டு செய்தானென்பதற்கு யாதொரு

ருஜுவுங் கிடையாது. போலீசாருக்கு காலதாமதமாகச் சொல்லியனுப்பியதால் இந்த விஷயம் அப்பீல்தாரனுக்கு விரோதமாகச் சொல்லப்படுகிறது. அச்செய்கை இந்தக் கேசில் நேர்விரோத சங்கதிகளைத் தெரிவிக்கிறதென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். இந்தக் கொலை செய்தவன் தகப்பனாக விருந்தாலுஞ் சரியே அல்லது பிள்ளை செய்திருந்தாலுஞ் சரியே போலீசாருக்கு உடனே தெரிவிக்க வேண்டுமென்ற ஆவல் இவனுக்கு இருந்திருக்க நியாயமில்லை. அடியிற்கண்ட செஷன் ஜட்ஜியின் தீர்மானம் கவனிக்கத்தக்கது (200 பக்கத்தை பார்க்க). "இந்த பயிண்டிங்குகளினாலே (5 வது புரிஸீடிங்கஸ்) முதல் எதிரி (அப்பீல்தாரன்) வைத்தினாத பிள்ளை தன்னுடைய கையினால் இவ்வித துன்பங்கள் செய்ய சக்தியற்றவனென்று சொல்லப்படுவதினாலே அவன் இ. பி. கோடு 302,109 அல்லது 114 வது செக்ஷன்களின்படி கொலைக்கு உடந்தையாக விருந்திருக்கிறானென்று தீர்மானிக்கிறேன்" என்று சொல்லியிருக்கிறார். லெப்டினெண்டு கர்னல் ரயிட் என்பவர் 4 நம்பர் காயமானது அந்த பெண்பிள்ளையை ஸ்மரணை தப்பிப்போகும்படி செய்திருக்குமென்றும், தனக்குக் காட்டப்பட்ட அரிவாளினால் அந்தக்காயஞ் செய்யப்பட்டிருக்கலாமென்றும், தான் அப்பீல்தாரனை பரிசோதனை செய்து பார்த்ததாகவும் அவனுக்கு வலது முன்கையிலுள்ள எலும்பு நொருங்கி சேர்க்கப்பட்டிருக்கிறதாகவும், அவனுடைய கைசற்றேறக்குறைய வூனமென்றே சொல்லப்படலாமென்றும், அவனுடைய வலது கையிருக்கும் ஸ்திதியை யுத்தேசித்து அவனால் அந்தக்காயஞ் செய்ய முடியாதென்றும் வாக்குமூலங் கொடுத்திருக்கிறார்.

மேலே செஷன் ஜட்ஜி சொன்ன கருத்து "அப்பீல்தாரன் தானே இந்த வெட்டுகள் வெட்டவில்லை அவன்பேரில் கொண்டுவந்திருக்கும் கேஸில் ஏதேனு முண்மையிருக்குமானால் அவன்தான் இதற்கு தலைகர்த்தா" என்ற நோக்கத்துடன் சொன்னதாக நாங்கள் ஊகிக்கிறோம்.

அவ்விதம் செஷன்ஜட்ஜி கண்டுபிடித்த விஷயங்கள் அய்யாசாமி சொல்லும் சாக்ஷிக்கு ஒற்றுமையாக விருக்கிறதென்றும் அது மற்ற மூன்று எதிரிகள் பேரில் குற்றஞ் சுமத்த நம்பிக்கைக்கு அருகமற்றதாக விருந்தபோதிலும் இவன் தகப்பன் பேரில்

மட்டில் குற்றஞ் சுமற்ற நம்பிக்கைக்கு அருகமுள்ளதாக விருக்கிறதென்றும், செஷன் ஜட்ஜி அபிப்பிராயப்படுகிறார். இந்தருஜுக்களினால் செஷன் ஜட்ஜி கொண்ட அபிப்பிராயமும் அவருடைய பயிண்டிங்கில் சொல்லப்பட்டிருப்பதும் காரணமற்றவைகளென நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். இந்த ருஜுக்களுக்கு சரியான அர்த்தஞ் செய்யும்பட்சத்தில் அய்யாசாமியுடைய கதைக்கு இது எவ்விதத்திலும் ஒற்றுமையில்லையென்று நாங்கள் நினைக்கிறோம். அனுமான சாக்ஷியம் என்று சொல்லப்படுகிறவை நேரிற்கண்ட சாக்ஷியை எந்த விதத்திலும் பலப்படுத்தவில்லையென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். அந்த நேரிற்கண்ட சாக்ஷியம், நம்ப அருகமற்றதென்று ஏற்கனவே சொல்லியிருக்கிறோம். இந்தக் காரணத்தினாலும் மேலே சொன்ன மற்ற காரணங்களினாலும் எதிரி குற்றவாளியென்று கண்டுபிடித்ததானது நிலைநிற்கத் தகுந்ததல்ல; அதனால் அவனை விடுதலைசெய்ய மாக்ஷிமை தங்கிய சக்கரவர்த்தியவர்களுக்கு தெரிவித்துக்கொண்டோம்.

குற்றவாளியென செய்த தீர்மானம்

ரத்து செய்யப்பட்டது.

பிரிவிகவுன்ஸல்.

ஜட்ஜிகள் லார்ட் அட்கின்ஸன் துரையவர்கள் வாடிங்க்டன் லார்டு பார்கர் துரையவர்கள் ஸர் சாமியூல் கிரிவ்த் துரையவர்கள் ஸர் ஜான் எட்ஜ் துரையவர்கள் மிஸ்டர் ஆமீர் ஆலியவர்கள்	ராம்கிஷோர் கேடர்னாத் ஆ. அ. வாதிகள் V ஜேய் நாராயன் ராம்ராச்பால் ஆ. அ. பிரதிவாதிகள்

117—தீர்ப்பு—1918.

4. [ஹிந்துலா]

"குடும்பப்பொது சொத்துகள் அவிபக்த தகப்பனால் அன்னியருக்கு பராதீனஞ் செய்யப்பட்டால் அதைப்பற்றி பிள்ளைகள் வழக்கிடப் பாத்தியமும், அவ்வழக்கு காலாவதி தோஷமும்"

இராமனாத், இராம்பிலாஸ் என்ற இருவரும் ஒரு அவிபக்த இந்து குடும்பசகோதரர்கள். இராமனாத்க்கு சந்ததியில்லாததினால் கேடர்னாத் என்ற 14-ம் பிரதிவாதியை அவர் 1877-ம் வருஷத்தில்

ஸ்வீகாரஞ் செய்துகொண்டார். ராம்பிலாஸ் என்றவர் 1883-ம் வருஷத்தில் இறந்துவிட்டார். அவர் பேராலிருந்த நிலப்பட்டா அவர் மனைவி ஜேய்தேவி பேரால் இந்த ராம்னாத் சம்மதியின் பேரிலேயே மாற்றப்பட்டது; ஆனால் முழுசொத்து ஸ்வாதீனமும் ராமனாத் வசத்திலேயே இருந்து வந்தது; இந்த ராமனாத் 1883-ம் வருஷத்திலேயே இறந்துவிட்டார். அதனால் கேடர்னாத் இந்த முழு சொத்துக்கும் பாத்தியமுள்ளவராகி விட்டார். ஜெய்தேவி தனக்கு ஜேய் நாராய்ன் என்பவர் ஸ்வீகாரப்பிள்ளை யென்பதாக 1887-ம் வருஷம் அக்டோபர் மாத முதல் பாத்தியங் கொண்டாடியதுமன்றி தன் பேராலிருந்த மிராசுபாத்தியதையை அந்த ஜேய் நாராயன் பேரால் 1889-ம் வருத்தில் மாற்றி விட்டு 1897-ம் வருஷம் ஜூன் மாதம் 25-ந்தேதி இறந்தாள். இதன் பிறகு கேடர்னாத் ஸ்வீகார புத்திரன், என்று பாத்தியங் கொண்டாடும் ஜேய் நாராயனுக்கு சில சொத்துக்களை அவர் தனிமையில் அனுபவித்துவரும்படி 1898-ம் வருஷம் அக்டோபர் மாதம் 24-ந்தேதியில் கொடுத்து விட்டார். அந்தத் தேதி முதல் அவர் தனிமையில் அச்சொத்துக்களை யனுபவித்துக்கொண்டு தனியே வசித்து வந்தார்.

இந்த கேடர்னாதுக்கு நான்கு பிள்ளைகள். 1-வாதி 1886-ம் வருஷம் டிசம்பர் மாதம் 20-ந்தேதி பிறந்தவன். 2-வாதி 1890-ம் வருஷம் ஜூலை மாதம் 21-ந்தேதி பிறந்தவன். 3-ம் வாதி 1892-ம் வருஷம் டிசம்பர் மாதம் 13-ந்தேதி பிறந்தவன்; 4-ம் வாதி 1891-ம் வருஷம் மார்ச்சு மாதம் 15-ந்தேதி பிறந்தவன்.

இந்த வாதிகள் நால்வரும் தங்கள் குடும்பப் பொது சொத்துக்களில் சிலவற்றை தங்கள் அவிபக்த தகப்பன் 14-ம் பிரதிவாதி கேடர்னாத் 1-பிரதிவாதி ஜேய் நாராயனுக்கு பராதீனஞ் செய்துவிட்டதாகவும், அந்த 1-பிரதிவாதி அச்சொத்துக்களை 2 முதல் 13 பிரதிவாதிகளுக்கு பராதீனஞ் செய்துவிட்டதாகவும், 14-ம் பிரதிவாதியால் செய்யப்பட்ட பராதீனங்களுக்கு தாங்கள் கட்டுப்படத்தக்கதில்லை என்றும், அச்சொத்துக்கள்பிரதிவாதிகளிடமிருந்து தங்களுக்கு வசமாகவேண்டுமென்றும் 1907-ம் வருஷம் டிசம்பர் மாதம் 20-ந்தேதியில் வழக்கிட்டார்கள்.

முதல் பிரதிவாதி தான் இறந்த ஜேய்தேவியால் சாஸ்திரோக்தமாக ஸ்வீகாரஞ்செய்து கொள்ளப்பட்டவரென்றும், தன்னு

டைய ஸ்வீகாரத்தை வாதிகளின் தகப்பன் 14-ம் பிரதிவாதி ஒப்புக்கொண்டு நடவடிக்கைகள் நடத்தியிருப்பதால் அதை வாதிகள் ஆக்ஷேபிக்கத்தடைப்பட்டிருக்கிறார்களென்றும், வாதிகளின் தாவா காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுப்போய்விட்டதென்றும், வாதிகளின் தகப்பன் ஜீவந்தராகவிருக்கும்போது வாதிகள் இந்த வழக்கிட்டது சட்டப்படி செல்லாதென்றும் வாதிகளின் தகப்பன் ஜீவந்தராயிருக்கும் வரையில் வாதிகளுக்கு சொத்து ஸ்வாதீனங் கிடைக்கமாட்டாதென்றும் கக்ஷியாடினார்.

இந்தக் கேசில் ஏற்பட்ட இஷ்ஷியுக்கள் பலவற்றுள் அடியிற் கண்ட மூன்றும் பிரதானமானவை.

(1) வாதிகள் தங்களுக்கு பாகங்கிடைக்க வேண்டுமென்று வழக்கிடாமல் இப்போது கொண்டு வந்திருக்கும் வழக்கு செல்லத்தக்கதா?

(2) வாதிகளின் தகப்பன் முதல் பிரதிவாதியை தங்கள் குடும்பஸ்தர்களிலொருவராக வொப்புக்கொண்டு அவருக்கு குடும்பச் சொத்தில் சிலவற்றையுங் கொடுத்திருப்பதால் தகப்பனுடைய நடவடிக்கைகளுக்கு வாதிகள் கட்டுப்பட்டவர்களா?

(3) முதல் பிரதிவாதி வாதிகளின் தகப்பனுடன் குடும்பச் சொத்துக்களை 1887-ம் வருஷம் முதல் சேர்ந்து அனுபவித்து வந்திருப்பதுடன் 1897-98-ம் வருஷ முதல் சில வற்றைப்பிரித்துத் தனிமையில் அனுபவித்துவருவதால் தாவாசொத்தில் முதல் பிரதிவாதிக்கு சர்வசுதந்தர பாத்திய முண்டாகி விட்டதா? வாதிகளின் தகப்பனாருக்குள்ள பாத்தியம் காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுப்போய்விட்டதா? அதனால் வாதிகளின் தாவாவுக்கும் காலாவதிதோஷ மேற்பட்டு விட்டதா?

பாகவழக்கிடாமலே தாவாவழக்கிட வாதிகளுக்கு பாத்திய முண்டென்றும், முதல் பிரதிவாதி கொண்டாடும் பாத்தியதையை வாதிகள் தகப்பன் ஒப்புக்கொண்டிருப்பதால் அதற்கு வாதிகளுங் கட்டுப்பட்டவர்களென்றும், வாதிகளின் பாத்தியதைக்கு விரோதமாக முதல் பிரதிவாதி 12 வருடங்களுக்கு மேற்பட்டகாலமாக அனுபவிப்பதால் வாதிகளின் தாவா காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டு போய்விட்டதென்றும் முதல் கோர்ட்டார் தீர்மானித்தார்கள்.

முதல் வாதி மேஜரான 21 வயது முதல் 3 வருட காலங்களுக்குள் இந்த வழக்கு கொண்டுவரப்பட்டிருப்பதால் அவனைப்பற்றினவரையில் வாதியின் தாவாவுக்கு காலாவதிதோஷமில்லை யென்றும்; முதல் பிரதிவாதி கொண்டாடும் விரோதமான பாத்தியதை தேதிக்குப்பிறகு மற்றவாதிகள் பிறந்திருப்பதால் அவர்களுக்குத் தாவா சொத்தில் எவ்வித பாத்தியமுமில்லை யென்றும், வாதிகளின் தகப்பன் 14-ம்பிரதிவாதி தன்னுடன் முதல் பிரதிவாதி சேர்ந்து தாவா சொத்துக்களை யனுபவிக்கச் சம்மதித்திருந்ததுடன் அவைகளை பாகப்பிரிவினை செய்து முதல் பிரதிவாதிக்கு கொடுத்திருப்பதானது தன்னுடைய சுயபாத்தியதையின் பேரிற் செய்யவில்லை யென்றும், குடும்பத்தலைவர் ஸ்தானத்தில் செய்திருக்கிறாரென்றும், அதனால் முதல் பிரதிவாதியும் தாவா பராதீனத்துக்குக் கட்டுப்பட்டவரென்றும், வாதிகளின் அப்பீலை கீழ் அப்பீல் கோர்ட்டார் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

முதல் வாதிக்கு தாவா சொத்தில் பாத்தியமுண்டாகும் பட்சத்தில் பாகம் பிரிக்கப்படுவதற்கு முன்பிறந்த அவனுடைய மற்ற சகோதரர்களுக்கும், தாவா சொத்தில் பாத்திய முண்டென்றும், பிராதிற்கண்ட மற்ற விஷயங்களைக்கண்டும் வாதிகள் பிரிவிகவுன்ஸிலில் அப்பீல் செய்தார்கள்.

தீர்ப்பு:—இந்தக் கேசின் முக்கிய ஆதாரம் முதல் பிரதிவாதியின் ஸ்வீகாரம் செல்லத்தகுந்ததல்ல வென்பது; அதுசெல்லுபடியற்றதாகும் பட்சத்தில் அவன் ஒரு அன்னியனாகிறான். ஸ்வீகாரம் சட்டப்படி செல்லத்தகுந்ததல்ல வென்பதைப்பற்றி அக்கறையுள்ளவர்கள் எவரும் கட்சியாடலாமென்பது ஆக்ஷேபிக்கப்படவில்லை; அவிபக்த தகப்பனால் செய்யப்படும் பாகப்பிரிவினை சில சந்தர்ப்பங்களில் மைனர் குமாரர்களைக் கட்டுப்படுத்தக்கூடியதாகவிருந்தாலும், குடும்ப சொத்தில் சிலபாகம் அன்னியனொருவனுக்கு கொடுக்கப்பட்டால் விவாதமுள்ள சொத்தை காப்பாற்றும் பொருட்டு நல்ல எண்ணத்துடன் இராஜீயாக கொடுபட்டாலல்லது அந்தப்பராதீனம் பிரதி பிரயோஜன மன்னியிலேற்பட்டதாகும்; அதைப்பற்றி வழக்கிடலாம்; இவ்விதம் நல்ல எண்ணத்துடன் இராஜி செய்யப்பட்டதாக ருஜுக்கள் இல்லை; முதல் பிரதிவாதியின் ஸ்வீகாரம் செல்லுபடியற்றதாகும் பட்சத்தில் வாதிகளின் வழக்கு கிரமமானதென்றே அபிப்பிராயப்படுகிறோம். அவிபக்தர்க

ளாக சொத்துக்களை சேர்ந்து அனுபவிக்க வேண்டியதை யுத்தேசித்தே இந்த வழக்கிட்டிருப்பதால் வாதிகளின் வழக்கு செல்லுபடியுள்ளது; வாதிகள் பாகவழக்கிட்டுத்தான் சொத்து சுவாதீனங்கிடைக்க வேண்டுமென்று வழக்கிட வேண்டியதவசியமில்லை. 14-ம் பிரதிவாதியின் பாத்தியதையை முதல் பிரதிவாதி கொண்டடுவதால் பாகப்பிரிவினையில் 14-ம் பிரதிவாதிக்கு கிடைக்கக்கூடிய பாகத்தின்பேரில் முதல் பிரதிவாதி தொடரலாம். அதன் நிலைமையைப்பற்றி சட்டக்கருத்துகள் விஷயமாகவாவது, ருஜுவம்சங்களைப்பற்றியாவது நாங்கள் இப்போது அபிப்பிராயஞ் சொல்லமுடியாது.

இப்போதேற்பட்டிருக்கும் ருஜுக்களைக்கொண்டு கட்சிக்காரர்களின் பாத்தியா பாத்தியங்களைப்பற்றித் தீர்மானிக்கமுடியாதவர்களாக விருக்கிறோம். இதனால் கீழ்கோர்ட்டார்கள் செய்த தீர்மானங்களை ரத்துசெய்து, கேசை கீழ்கோர்ட்டார் புனர்விசாரணை செய்யும்படிக்கும், முதல் பிரதிவாதி தன்னுடையமற்ற எதிர்கட்சியினில் தவறி விடும்பட்சத்தில் வாதிகள் தங்கள் பிராதிற் கேட்கிற எல்லாப் பரிகாரங்களாவது அல்லது சில பரிகாரங்களாவது அவர்களுக்கு கொடுக்கும்படிக்கும், 14 ம் பிரதிவாதியின் பாகம்பிரிக்கப்பட்டு அந்த பாகம் முதல்பிரதிவாதிக்கு கிடைக்கக்கூடியதாகவிருந்தால் அந்த நிபந்தனைக்குட்பட்டு வாதிகளுக்குப் பரிகாரங் கிடைக்கும்படிக்குந் தீர்ப்பு செய்யும்படி உத்திரவு செய்ய மாட்சிமை தங்கிய சக்ரவர்த்தி யவர்கள் சமுகத்தில் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

அப்பீல் வாதிகளுக்காக எட்வாட் டால்கேடோ அவர்களும் அப்பீல் பிரதிவாதிகளுக்காக J-L-வில்ஸன் அண்டு கோவும் ஆஜரானார்கள்.

அயோத்தி ஸப்ஜுடிஷல் கமிஷனர் கோர்ட்டு.

1912 ௵த்திய முதலாவது அப்பீல் நம்பர் 11.

ஜட்ஜிகள்.
ஜஸ்டிஸ் மிஸ்டர் லின்ட்ஸே துரையவர்கள்
ஜஸ்டிஸ் மிஸ்டர் கன்ஹியாலால் அவர்கள்

ஹரிஹர் பக்ஷ்சிங் அ. வாதிகள்.
V
பாரத் பிரசாத் ஆ அ. பிரதிவாதிகள்.

தீர்ப்பு 15—5—18.

5. [ஷிந்துலா]

தாலாவதியாகப் போனகடனை தகப்பன் கொடுத்தல் சட்ட விரோதம் அல்லது நியாய விரோதமல்ல வென்பதும், அதனால் அக்கடனைப் பிள்ளைகொடுக்கக் கடமைப்பட்டவ னென்பதும், குடும்ப அவசியத்துக்கு வாங்கப்படாத கடன்களை பாகஸ்தர்கள் கொடுக்கக் கடமைப்பட்டவர்கள் அல்ல வென்பதும்.

பெத்நாத் என்ற இந்து வாதிக்கு 1901 ௵ நவம்பர்மாதம் 29 ந் தேதியில் ஒரு பெந்தக பத்திரம் எழுதிக் கொடுத்திருந்தார். இந்தக் கடன் 1894 ௵ த்தி லேற்பட்ட குடும்பக்கடனுக்காக ஏற்பட்ட தஸ்தாவேஜியை யனுசரித்து 1897 ௵ த்தில் ஒரு பத்திர மேற்பட்டதாகவும், அதை யனுசரித்து தாவா கடன் பத்திரம் ஏற்பட்டதாகவும், வாதியால் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த பெத்நாத் இறந்துவிட்டபடியால் இவனுடைய மகன் முதல் பிரதிவாதியாகவும் இந்தப் பிரதிவாதியின் சிற்றப்பன்கள் 2 முதல் 5 பிரதிவாதிகளாகவும் சேர்த்து வழக்கிடப் பட்டார்கள்.

தாவாகடனுக்குத் தான் கட்டுப்படத்தக்க தில்லையென்றும், காலாவதியாகப்போன கடனுக்காகத் தன்தகப்பனெழுதிக் கொடுக்கப்பட்ட தஸ்தாவேஜிக்கு தான் கட்டுப்பட வேண்டிய தில்லை யென்றும், தாவாபெந்தகபத்திரம் பிரதிப்பிரயோஜனத்துடன் ஏற்படவில்லை யென்றும், முதல் பிரதிவாதி கக்ஷியாடினான். தாவா பெந்தக பத்திரத்திற் கண்ட சொத்துக்கள் குடும்பப் பொதுச் சொத்துக்க ளென்றும், தாங்கள் மைனர்களாயிருந்த காலத்தில் குடும்ப ஐவேஜியினின்றும் தங்கள் சகோதரன் பெத்நாத் தாவா பெந்தக சொத்துக்களை அவர்பேரால் சாசனம்பெற்றதாகவும், தாவா பெந்தகக்கடன் தங்கள் குடும்பார்த்தச் செலவுக்காக ஏற்பட்டதல்ல வென்றும் அதனால் தங்கள் பாகசொத்து விலக்கப்படவேண்டு மென்றும், 2 முதல் 5 பிரதிவாதிகள் கக்ஷியாடினார்கள்.

இந்தக் கேசை விசாரித்த சப் ஜட்ஜியவர்கள் தாவாகடன் குடும்ப அவசியச் செலவுக்கு வாங்கப்பட்டதென்பதை வாதி ருஜுப்பிக்கவில்லை யென்றும், அதனால் 2 முதல் 5 பிரதிவாதிகளின் பாகம் விலக்கப்பட வேண்டிய தென்றும், தாவாக்கடன்

மூந்தியகடனை யனுசரித்து ஏற்பட் டிருப்பதாலும், துன்மார்க்க அல்லது தகாத கடனென்று ருஜுப்பிக்கப்படாததாலும் முதல் பிரதிவாதி தாவாகடனுக்கு கட்டுபட்டவனென்றுந் தீர்ப்பு செய்தார்கள்.

இத்தீர்ப்பு சரியானதல்ல வென்று வாதியும் முதல் பிரதிவாதியும் அப்பீல் செய்தார்கள்.

தீர்ப்பு:—மிட்ராவால் எழுதப்பட்ட லிமிடேஷனுக்ட்டு 26,27 பக்கங்களிற் கண்டபடி கடன்களை வசூலிப்பதற்கு காலாவதி தோஷமிருப்பதாக இந்துலாவில் சொல்லப்பட வில்லை யென்றும், துன்மார்க்க கடன்கள் அல்லாத தகப்பனுடைய கடன்களை பிள்ளை கொடுக்கக் கடமைப் பட்டவனென்றும், காலாவதியாகப் போன கடன் தகாதகடனென்ருவது துன்மார்க்கக் கடனென்ருவது சொல்லக்கூடாதென்றும் அதனுல்வாதியின் கடனுக்கு முதல் பிரதிவாதியின் பாக சொத்தும் கட்டுப்படக் கூடியதென்றும், தாவா பெந்தக சொத்து குடும்பஜீவேஜியினின்றும் வாங்கப்பட்டதாக இந்தக் கேசில் தாக்கல்செய்யப்பட்ட குடும்பக்கணக்குகளினுல் ஸ்பஷ்டமாகத் தெரிகிறதென்றும், வாதி சொல்லுகிறபடி தாவாவுடன் குடும்பசொத்துக்கள் மீட்கப்படவேண்டியதற்காக வாங்கப் பட்டதென்பதற்காவது அல்லது வேறு குடும்ப அவசியச் செலவுகளுக்காக வாங்கப்பட்டதென்பதற்காவது ருஜுவில்லை யென்றும், இவருடைய அப்பீல்களும் தள்ளுபடி செய்யப்பட்டது.

பிரிவி கவுன்ஸல்.

[அலகபாத் ஹைகோர்ட்டு தீர்மானத்தின்பேரில் அப்பீல்]

ஜட்ஜிகள்.	
லார்ட் மக்னுடன் துரையவர்கள்	ஸ்ரீ நாராயணனும் மற்றொருவரும்
லார்ட் மவுல்டன் துரையவர்கள்	அ. வாதிகள்
ஸர் ஜான் எட்ஜ் அவர்கள்	V
மிஸ்டர் அமிராலி அவர்கள்	லாலா ரெகுபன்ஸ் ராய்
	அ. பிரதிவாதி

தீர்ப்பு 8—11—12.

6· [இந்துலா].

தகப்பன் துன்மார்க்க நடையையுடையவன்; அதனுல் கடன்களேற்பட்டன வென்று ருஜுவிடுவது போதாதென்பதும் தாவா கடன் "அந்ததுன்மார்க்கச் செலவுகளுக்காக வாங்கப்பட்டதென்

பதை பிள்ளை ருஜுப்பிக்காதவரையில் அந்தக்கடனுக்கு அவர்கள் கட்டுப்பட்டவர்களாவார்களென்பதும்.

அடியிற்கண்ட வம்சாவளிப்படி 3, 4, 5, பிரதிவாதிகளின் தகப்பனும் அவருடைய சகோதரராலும் வாதிக்கு ஒரு லெக்ஷ ரூபாய்க்கு தாவா பெந்தகக்கடன் பத்திரம் எழுதிக் கொடுக்கப் பட்டது.

வம்சாவளி

S. N. (இறந்தார்)

I

R (1 பிரதிவாதி) — J (2 ம் பிரதிவாதி)

I

ஸ்ரீநாருயன் (3ம் பிரதிவாதி) — ஹரிநாருயன் (4 ம் பிரதிவாதி) — பத்ரிநாருன் 5ம் பிரதிவாதி

அப்பீல்வாதிகள்-

இந்த பெந்தக பத்திரத் தொகையில் ரூ 90,000 டிக்கிரிக் கடன்களை தீர்ப்பதற்காககொடுக்கப்பட்டது. ரூ 5000ரொக்கமாகவும், ரூபா 491 ஸ்டாம்பு ரிஜிஸ்டிரேஷன் செலவுகளுக்கும் பாக்கித் தொகை சில உண்டியல் கடன்களை கொடுத்துத் தீர்க்கவும் ஏற்பட்டன. இந்த பெந்தகம்பத்திரத்தின் வட்டித்தொகையை வருஷாவருஷங் கொடுத்துவர வேண்டியதென்றும், அந்தப்படி கொடாவிட்டால் பெந்தகசொத்தை வாதிவசம் விட்டுவிடவேண்டியதென்றுங் கண்டிருக்கிறது. வாதி தன்னுடைய பெந்தகபத்திரத்தின்பேரில் வழக்கிட்டார்.

அப்பீல் வாதிகள் தங்கள் தகப்பன் J என்பவர் துன்மார்க்க உதாரிக் குணமுடையவரென்றும், குடிகாரரென்றும், புத்தியில்லாதவரென்றும், தாவா பெந்தகபத்திரத்திற் கண்ட தொகையில் ஒரு பைசாவளவேனும் தங்கள் குடும்பத்துக்கு செலவழிக்கப்படவில்லையென்றும், அதன்பிரயோஜனத்தை பிரதிவாதிகள் அடையவில்லை யென்றுங் கக்ஷியாடினுர்கள்.

குடும்பச் செலவுகளுக்காக தாவா கடன்வாங்க வேண்டிய அவசியங்கள் யாதொன்று மிருக்கவில்லையென்றும், இந்தக்கடன்

களில் பெரும்பாகத் தொகை அப்பீல் வாதிகளின் தகப்பன் துன்மார்க்க நடையுடையவனாக இருப்பதினாலே தூர்த்த ஸ்திரீசெலவு சூதாட்டம் இவ்வினங்களில் செலவழிக்கப்பட்டிருக்குமென ஊகிக்கக்கூடியதாக விருக்கிறதென்றும், சில பாகத் தொகைக்கு மட்டில் சப்ஜட்ஜியவர்கள் தீர்மானித்தார்கள். இதைப்பற்றி வாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்தார்.

தாவா கடன்களில் ஏதாவது துன்மார்க்கச் செலவுகளுக்கு, வாங்கப்பட்டதென்பதற்கு எவ்வித ருஜுவு மில்லையென்றும் J துன்மார்க்க நடையையுடையவனாக விருக்கிறான் என்ற ஒரு காரணத்தைக் கொண்டு தாவா கடன்கள் அந்த துன்மார்க்கச் செலவுகளுக்கு ஏற்பட்டதென்று ஊகிக்கக்கூடாதென்றும் தாவா கடனுக்கும் தகப்பனுடைய துன்மார்க்கச் செலவுக்கும் ஏற்பட்ட சம்பந்தத்தை ருஜுப்பிக்கவேண்டுமென இந்த கோர்ட்டாரால் அடிக்கடி தீர்மானங்களேற்பட்டு வருகின்றனவென்றும், மைனர் பிரதிவாதிகளின் தகப்பன் J என்பவர் தூர்த்தஸ்திரீ சம்போகஞ் செய்கிறவரென்றும், சூதாடுகிறவரென்றும், குடிக்கிறவரென்றும் ருஜுப்பிக்க பிரயத்தனங்கள் செய்தார்களேயன்றி அந்தத்துன்மார்க்கச் செலவுகளை தாவாகடனுடன் சம்பந்தப்படுத்தக் கூடிய ருஜுக்கள் யாதொன்று மில்லையென்றும், தாவாவிற்கண்டபடி முழுத்தொகைக்கும் ஹைகோர்ட்டார் தீர்மானஞ் செய்து விட்டார்கள். இந்தத்தீர்ப்பின்பேரில் பிரிவிகவுன்ஸிலில் அப்பீல் செய்யப்பட்டது.

தீர்ப்பு.

லார்ட் மக்னுடன் துரையவர்களாற் சொல்லப்பட்டது:—அப்பீல்வாதிகள் தங்கள் கக்ஷிகளை ருஜுப்பிக்கத் தவறிவிட்டார்கள் என்று ஹைகோர்ட்டார் தீர்மானித்தது சரியென்று நாங்களு மொத்துக்கொள்ளுகிறோம்; அவர்களுடைய ருஜுக்கள் எல்லாம் அப்பீல்வாதிகளின் தகப்பன் துன்மார்க்க நடையுடையவரென்று பொதுவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அது போதுமானதல்ல.

ஆகையால் இந்த அப்பீலைத் தள்ளுபடி செய்யும்படி மாக்ஷிமைதங்கிய சக்ரவர்த்தி யவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். அப்பீல்வாதிகள் செலவு தொகை கொடுக்கவேண்டும்.

சென்னை ஹைகோர்ட்.

1911 ஹூத்திய 2-வது அப்பீல் நெம்பர் 1372, 1374.

ஜட்ஜிகள். ஜஸ்டிஸ் பென்ஸன் துரையவர்கள் ஜஸ்டிஸ் சுந்திரமய்ய ரவர்கள்	போடிஎன்கிற லெக்ஷுமாகா ஆ. அ. பிரதிவாதி. V வெங்கடசாமிநாயுடு அ. பிரதிவாதிகள்.

OFFICE OF THE REGISTRAR ... MADRAS.

தீர்ப்பு 5—3—13.

[1. இந்து உயில்]

"இந்து ஒருவன் உயில் செய்யுங்காலத்தில் அவனுக்கு அந்தச் சொத்தில் என்ன பாத்தியங்களிருந்தனவோ அதே பாத்தியங்கள் அவனிறக்குங்காலத்தில் அதாவது அது செலாவணிக்குக் கொண்டு வரப்படுங்காலத்திலிருந்தால் அந்த உயில் ஏற்பட்டகாலத்துக்குப்பிறகும் அவனிறப்பதற்கு முந்தியுமான மத்தியகாலங்களில் அச்சொத்தில் வேறு நபர்களுக்கு பாத்தியங்களேற்பட்டிருந்த போதிலும் அந்த உயில் செல்லத்தகுந்ததென்பதும், ஒருவன் தன்னுடைய விதந்துவை அவளுடைய ஆயுள்பரியந்தம் சம்ரக்ஷித்து அவளுக்கு அபரக்கிரிகைகளைச் செய்துவிட்டு பிறகு தன்னுடைய சொத்துக்களை சர்வசுதந்தரமாக அடைகிறதென்று உயிலிற் கண்டிருந்தால் அவளுடைய ஜீவனும்சபாத்தியதைக் குட்பட்டு அச்சொத்தை யனுபவிக்கிறதென்ற அர்த்தமேயன்றி அச்சொத்தை விதந்துவின் ஜீவதசைக்குப் பிறகு அடைகிறதென்ற அர்த்தமல்ல வென்பதும்."

இது சித்தூர் டிஸ்டிரிக்ட் முனிசீப் கோர்ட்டு 1907 ஹூத்திய அசல் 110, 111, 112 நம்பர்களின் பேரில் வடவார்க்காடு டிஸ்டிரிக்ட் கோர்ட்டு முதலாவது அப்பீல்கள் 1910 ஹூத்திய 130, 131, 132 நம்பர்கள் அப்பீல் வாதிகளுக்காக T. V. சேஷகிரி அய்யரவர்களும் அப்பீல் பிரதி வாதிகளுக்காக T. R. இராமசந்திரய்யரவர்களும் ஆஜராயிருந்தார்கள்.

தீர்ப்பு.

ஒரு இந்து எழுதிவைத்த உயிலின்படி லெகடி அதாவது உயில்பெற்றவன் உயிலிற்கண்ட சொத்துக்கள் தனக்கு வசமாக வேணுமென்று தாவா செய்தார். முதல் பிரதிவாதி இந்த உயில் செய்து வைத்தவனுடைய விதந்து வாதியின் தாவாவைப்பற்றி

அனேக எதிர்வாதங்கள் சொல்லப்பட்டன. அவைகளெல்லாவற்றையும் இந்த இரண்டாவது அப்பீலில் சொல்லுவது அனாவசியம். சட்டக்கருத்துகள் சம்பந்தப்பட்டவரையில் இதிற் சொல்லுவோம்.

முதாவது:—தாவா உயிலிற்கண்ட சொத்துக்கள் குடும்ப பூர்வீக சொத்தாகையால், இந்த உயிலேற்பட்டபின் உயிலேற்படுத்தியவருக்கு பிள்ளை யொருவன் பிறந்து விட்டபடியால் இந்த உயில் செல்லுபடி யற்றதாகிவிட்டது. ஏனென்றால் இந்தப்பிள்ளை பிறந்தவுடன் தகப்பனுக்கு உயில் செய்யும்படியான பாத்தியம் போய்விட்டது. இவனுக்கு பிள்ளை பிறந்துவிட்டபடியால் இவன் செய்த உயில் ரத்தாகிவிட்டதாக அப்பீல் வாதியின் வக்கீல் இங்கிலீஷ் சட்டங்களை யாதாரமாகக்காட்டி வாதஞ் செய்கிறார். இந்த உயில் ஏற்படுத்திய காலத்தில் இந்த உயில் செய்தவனுக்கு தாவா சொத்தில் என்ன பாத்தியங்களிருந்தனவோ அதே பாத்தியந்தான் இவனிறந்த காலத்தில் அதாவது இந்த உயில் செலாவணிக்குக் கொண்டு வரப்படவேண்டிய காலத்தில் இருந்தது. இவருக்கு இப்பால் பிள்ளை பிறந்த ஒரு காரணத்தினால் அந்த உயில் ரத்தானதாக எண்ணப்படக்கூடாது. இவ்வித உயில் செலாவணியுள்ள தென அலகபாத் ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள் (இ. லா. ரி. 29 அலகபாத் 82 பக்கம் 85). இதை யனுசரித்து தாவாவிற்கண்ட உயில் செல்லுபடியுள்ள தெனவே தீர்மானிக்கிறோம்.

இரண்டாவது:—உயில் செய்தவனுடைய விதந்து ஜீவதசை வரையில் வாதிக்கு தாவா சொத்தில் எவ்வித பாத்தியமுமுண்டாகமாட்டா தென்பது; இந்த உயிலின்படி தாவா சொத்தில் விதந்துவுக்கு எவ்வித பாத்தியமுமில்லை. அவளுக்கு ஜீவனாம்சபாத்தியமே யன்றி வேறே எவ்வித பாத்தியமுமில்லை. உயில் பெற்றவன் இந்த விதந்துவை சம்ரக்ஷித்து வரவேண்டியது. இவளுக்கு அபரக்கிரிகைகள் செய்துவிட்டு தாவா சொத்துக்களை சர்வ சுதந்தரபாத்தியமாக அடைகிறது என்று சொல்லியிருப்பதானது அந்த விதந்துவின் ஜீவனாம்ச பாத்தியதைக்குட்பட்டு சொத்துக்களை யனுபவிக்கவேண்டுமென்ற அர்த்தமே யன்றி அந்த விதந்து ஜீவதசை வரையில் அச்சொத்தை யவள் அனுபவிக்க பாத்தியமுடையவள் என்ற அர்த்தமல்ல.

மூன்றாவது:—இந்த உயிலுக்குப்பிறகு உயில் செய்தவருக்கு பிள்ளை அல்லது பிள்ளைகள் பிறக்கும் பட்சத்தில் உயிலிற் கண்ட சொத்துக்களிற் சிலதும், தன்னாலினி சம்பாதிக்கப்பட்ட சொத்துக்களும் அந்தப்பிள்ளை அல்லது பிள்ளைகள் அடையவேண்டிய தென்று சொல்லப்பட்டிருப்பதாலும், அந்தப்படி பிள்ளை பிறந்து விட்டதாலும், அந்த பிள்ளைக்கு ஏற்பட்ட சொத்தில் வாதிக்கு பாத்தியமில்லை யென்பது; இந்த பிள்ளை மத்திய காலத்தில் பிறந்து உயில் செய்தவன் இறப்பதற்கு முன்னமேயே இறந்துவிட்டபடியால் உயில் செய்தவருக்கு அந்த உயிலேற்பட்ட காலத்தில் தாவா சொத்தில் எவ்வித சர்வசுதந்திர பாத்தியமிருந்ததோ அதே பாத்தியந்தான் அவர் இறந்த காலத்திலு மிருந்தது. அதனால் இந்த ஆக்ஷேபணையுஞ் செல்லத்தகுந்ததல்ல.

சென்னை ஹைகோர்ட்.

1908௵த்திய 185, 186 நம்பர் அப்பீல்கள்.

ஜட்ஜிகள். ஜஸ்டிஸ் மில்லர் துரையவர்கள் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள்	முத்துசாமி அய்யர் ஆ. அ. வாதிகள் V. ஸ்ரீமேதாநிதி சுவாமியாரவர்கள் ஆ. அ. பிரதிவாதிகள்

தீர்ப்பு 5—3—13.

1. [தர்ம சொத்துக்களைப் பற்றியது].

மடத்துச் சொத்தில் மடாதிபதிகளுக்கு சர்வசுதந்தர பாத்தியமாவது ஆயுள் பரியந்தம் அனுபவிக்கும் குடியான பாத்தியமாவது இல்லையென்பதும், புருஷன் சொத்துக்களை வார்சுக்கிரமத்தில் அடைந்து அனுபவிக்கும் பெண்பிள்ளை போன்ற பாத்தியமென்பதும், முன் மடாதிபதிகளால் செய்யப்பட்ட பராதீனங்களை பின்னிட்டு வரும் மடாதிபதிகள் தங்களுக்கு பாத்தியங்கிடைத்த தேதிமுதல் 12 வருஷங்களுக்குள் ரத்து செய்யலாமென்பதும், பட்டாதாருக்கு அறிவிக்காமல் ரேவனியு பாக்கிக்கு சொத்துக்கள் ஏலம் போடப்பட்டால் அதைப்பற்றி வழக்கிடக் காலாவதி தோஷமும்.

[illegible]க்ஞான நிதிசுவாமியார் என்ற ஓர் மடாதிபதி தன் ஆதீனத்தைச் சேர்ந்த இனாம் நிலமொன்றை முத்கலாசாரியார் என்ற ஓர் பிராமணனுக்கு சாஸ்வத குத்தகையாக 1872 வருஷத்தில்

கொடுத்துவிட்டார். அவர் அந்த நிலத்தை 1, 2 பிரதிவாதிகளுக்கும், 12, 13 பிரதிவாதிகளின் தகப்பனுக்கும் உள் குத்தகையாக்க் கொடுத்துவிட்டார். அதாவது தன்னுடைய பாத்தியதைகளை யவர்களுக்குக் கொடுத்துவிட்டார். இந்த சுக்ஞானநிதி சுவாமியார் 1890 வருஷத்தில் இறந்தார். இவருக்கு வார்சாக வந்த ஸ்ரீ ஸதிநிதி சுவாமியாரும் 1906 வருஷத்தில் இறந்தார். இவர்பட்டத்துக்கு வருவதற்கு முந்தியே மேற்படி மேலே கண்ட நிலம் 6 ம் பிரதிவாதிக்கு குத்தகைக்குக் கொடுக்கப்பட்டது. இந்த 6 ம் பிரதிவாதி தனக்குக் கொடுக்கப்பட்ட குத்தகை நிலத்தை 1, 2 பிரதிவாதிகளிட மிருந்து ஸ்வாதீனஞ் செய்து கொள்ள முடியவில்லை. அதனால் மடாதிபதி பழையகுத்தகையின் படிக்கே தொகை வசூலித்து வந்தார்கள். இந்த இனும் நிலத்துக்குச் செலுத்தப்படவேண்டியலோகல்பண்டு வரி செலுத்தப்படாததினாலே இந்த நிலங்களில் நாலிலொரு பாகம் ரெவனியு ஏலம் போடப்பட்டதில் அதை 5 ம் பிரதிவாதி ஏலத்தில் எடுத்து அனுபவித்து வந்தார். இந்த ஏல நோட்டீஸ் மடாதிபதிக்கு அறிவிக்கப்படவில்லை; குத்தகை தாரனே நிலத்துக்குச் சொந்தக்காரனென்பதாக அவருக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. இந்தக் குத்தகை தார்களும் தங்களுக்கு நிலபாத்தியங் கிடையாதென்பதாக ரெவனியு அதிகாரிகளிடந் தெரிவிக்கவில்லை. வாதி இறந்த ஸ்ரீஸதிநிதி சுவாமியாருக்கு வார்சாக வந்திருக்கும் மடாதிபதி இவர் தனக்கு முன் மடாதிபதியாக விருந்த சுக்ஞான சுவாமியாரா லேற்பட்ட சாஸ்வத குத்தகை ரத்து செய்யப்பட்டு அந்தக் குத்தகை நிலம் வசமாக வேண்டுமென மதுரை சப்கோர்ட்டு 1908 வருஷத்திய அசல் 16 நம்பரில் வழக்கிட்டார்.

வாதிக்கு முன்னிருந்த மடாதிபதி தன் அதிகார வரம்பை மீறி சாஸ்வதகுத்தகை செய்திருப்பதால் அவ்விதம் பராதீனஞ் செய்யப்பட்ட 1872 வருஷ முதல்பனிரெண்டு வருடங்களுக்குட்பட்டாவது அல்லது அந்தப்பராதீனஞ் செய்த சுக்ஞானநிதி சுவாமியார் இறந்தகாலமாகிய 1890-ம் வருஷம் முதல் பன்னிரண்டுவருஷங்களுக்குட்பட்டாவதுதாவாசெய்யப்படாததால்வாதியின்தாவா காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுப் போய்விட்டதாக குத்தகை தாவா காலயார் பிரதிவாதிகள் கக்ஷியாடினார்கள். ரெவனியூ

ரிகவரி ஆக்ட்டுப்படிக்காவது, லோகல்போர்ட்டு ஆக்ட்படிக்காவது கிஸ்தி பாக்கிக்காக போடப்பட்ட ஏலம் சட்டவிரோதமானதாகவிருந்தால் அதைச்சட்டப்படியுடனேரத்து செய்துகொண்டிருக்க வேண்டுமென்றும்அந்தப்படிச்செய்யாததினாலே ரெவினியூ ஏலத்தில் விடப்பட்ட நிலத்துக்கும் காலாவதி தோஷமேற்பட்டு விட்டதென்றும் அந்த ஏலமெடுத்த 5 ம் பிரதிவாதி கக்ஷியாடினார்.

வாதியின் தாவாப்படியே சப்கோர்ட்டார்தீர்மானஞ் செய்து விட்டதால் பிரதிவாதிகள் ஹைகோர்ட்டில் அப்பீல்செய்தார்கள்.

தீர்ப்பு:—இந்து தேச மடாதிபதிகளை ஆங்கிலேய பிஷப்புகளுக்கு ஒப்பிட்டுச் சொல்வது சரியல்லவென்றும், அந்த ஆங்கிலேய பிஷப்புகளுக்கு வார்சுகளிருப்பதுபோல் மடாதிபதிகளுக்கில்லையென்றும், பிஷப்புகள் தங்களுக்குக்கிடைக்கும் தர்மத்திரவியங்களில் செலவழிந்தனபோக மிகுதியை தங்களுக்கிஷ்டப்பட்ட எந்தச் செலவுகளுஞ் செய்பலாமென்று ஏற்பட்டிருப்பது போல் அதாவது துன்மார்க்க அல்லது ஊதாரித்தனமான செலவுகள் செய்யலாமென சொல்வதுபோல மடாதிபதிகள் தர்மத்திரவியங்களைச் செலவழிக்கக் கூடாதென்றும், மடத்தின் வரும்படிகள் ஏற்பட்ட தருமங்களுக்கு செலவழிக்கப் படாவிட்டால் பொது ஜனங்கள் அல்லது அட்வோகேட் ஜனரல் அது விஷயமாக சிவில் புரிஸீஜர் கோடு செக்ஷன் 92 கிளாஸ்1-வது படி வழக்கிடலாமென்றும் மடாதிபதிகளுக்கு மடத்துச் சொத்தில்சர்வசுதந்திர பாத்தியமாவது ஆயுள்பரியந்தம் அனுபவிக்கும் குடியானவனைப் போன்ற பாத்தியமாவது கிடையாதென்றும், ஆயுள்பரியந்தம் அனுபவிக்கமட்டில் பாத்தியமுடைய பெண்பிள்ளைகளைப்போன்ற பாத்தியந்தான் இந்த மடாதிபதிகளுக்கு முண்டென்றும், ஆகையால் இந்த வாதிக்கு வியாஜ்ஜியமூலம் தான் ஆதீனகர்த்தர் ஸ்தானத்தை யொப்புக்கொண்ட காலமுதல் தான் ஏற்பட்டதென்றும், வாதியின் வழக்குக்கு சாஸ்வதப் பகுதிபாத்தியதையைப் பற்றின வரையில் எவ்வித காலாவதி தோஷமு மில்லையென்றும், குத்தகைதார் பிரதிவாதிகளின் அப்பில் தள்ளுபடி செய்யப்பட்டது.

கிஸ்தி பாக்கிக்காக குத்தகை தாரனுடைய பாத்தியதையை ஏலம் போட்டார்களா, அல்லது இனும் தாருடைய பாத்தியதையை ஏலம் போட்டார்களா, என்றவிவாதமேற்பட்டது. ஏலநோட்

டிஸ் இனும்தார் மடாதிபதிக்கு சர்விஸ் செய்யப்படாமல் குத்தகைதாருக்குச் சர்விஸ்செய்திருப்பதால் குத்தகைதாருடைய பாத்தியதைதான் ஏலம் போடப்பட்டதாக வாதி கக்ஷியாடினர். ரெவனியூ ஏலத்திலெடுத்த 5-ம் பிரதிவாதி தான் ஏலமெடுத்த நிலத்துக்குள்ள குத்தகை வீதத்தை மடாதிபதிக்கு செலுத்திவந்திருக்கும் பட்சத்தில் குத்தகைதாரனுடைய பாத்தியதைதான் ஏலம்விடப்பட்டதென்பது நன்றாகத் தெரியும். அவ்விதம் 5-ம் பிரதிவாதி குத்தகைத் தொகை செலுத்தியதாக எவ்விதருஜுவுமில்லை. ரெவினியூ அதிகாரி ஏலம்போட்டது இனும்தாருடைய பாத்தியதையன்றி வேறல்ல; ஏலமெடுத்தவரும் அந்த எண்ணத்துடன்தான் ஏலத்திலெடுத்திருக்கிறார். அந்த ரெவினியூ ஏலத்தில் விடப்பட்ட சொத்து வாதிக்குக் கிடைக்க நியாயமில்லை. அந்தஏலம் சட்டவிரோதமாகவிருந்தால் அது தகுந்தகாலத்துக்குள் வழக்கிட்டு ரத்துசெய்து கொள்ளப்படாததினாலே அந்தச் சொத்தைப்பற்றின வரையில் வாதியின் தாவா காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுப் போய்விட்டது. இந்தரெவினியூ ஏலத்தில் விடப்பட்ட தொகையில் மிகுதி ரூபாய் 382-8, 3-ம்பிரதிவாதியடைந்திருப்பதால்அந்தத்தொகையாவது, கிடைக்கவேண்டுமென்று வாதி தன் பிராதில் கேட்பதால், அந்தத்தொகை3-ம் பிரதிவாதியிடமிருந்துவாதிக்குக்கிடைக்கவேண்டியதாகத் தீர்மானிக்கப்பட்டது.

லோயர்பர்மா சீப்கோர்ட்டு.

1911ஞூத்திய 2 வது அப்பீல் நம்பர் 233.

ஜட்ஜி. ஜஸ்டிஸ் மிஸ்டர் பார்லெட் துரையவர்கள்.	மைனு நாபிஜானிஸ்ஸா என்கிற மேயண்டா அ. வாதி. V. போடிரஹிமான்.

தீர்ப்பு—3—4—13.

1. [மகமதியலா.]

பதினைந்து வயதுள்ள மகமதியஸ்திரீ தான் தன்னுடைய பெற்றோர் வீட்டிலேயே 3-வருடகாலமிருக்க வேண்டுமென்றும், அந்தக் காலங்களில் தன்னுடைய புருஷன் தன்னையடித்துத் துன்பஞ்

செய்தால் அவர்களுக்குள்ள விவாகசம்பந்தத்தை யவள் நீக்கிக்கொள்ளலாமென்றும் தன்புருஷனுடன், செய்து கொள்ளும் உடன்படிக்கை செல்லத்தகுந்ததென்பது.

வாதிபோடிரஹிமான் பிரதிவாதி மேபண்டாவை 1909 வருஷத்திய ஜூன்மாதம் 22உ மகமதியலாப்படி விவாகஞ்செய்துகொண்டகாலத்தில் அவர்களுக்குள் எழுத்துமூலமாக ஒருவித வுடன்படிக்கை யேற்பட்டது. அதில் வாதிபிரதிவாதியை கோபித்துக்கொள்ளக் கூடாதென்றும், மானபங்கம் அல்லது துர்பாஷைகளாகப் பேசக்கூடாதென்றும், அவளையடிக்கவாவது துன்பப்படுத்தவாவதுகூடாதென்றும், இந்தப்பெண்ணின் தகப்பன்வீட்டிலேயே மூன்றுவருஷகாலங்களுக்கு வாதிவசித்து வரவேண்டியதென்றும், பிறகு இந்தப்பெண்ணுக்குப் பிரியப்பட்ட வீட்டிலேயே வாதியிருந்து வரவேண்டியதென்றும், மேற்கண்ட நிபந்தனைகளிலெதிலாவது வாதி தவறிவிடும் பட்சத்தில் பிரதிவாதி மூன்றுதரம் "தலாக்" சொல்லிவிட்டு வாதியைவிட்டுப் பிரிந்து விடலாமென்றும், பிறகு அவள்தனக்கிஷ்டப்பட்ட இரண்டாவது புருஷனையவள் விவாகஞ் செய்துகொள்ளலாமென்றும்,வாதிக்குப் பிரதிவாதிபேரில் எவ்விதபாத்தியமுமில்லையென்றுங் கண்டிருக்கிறது. வாதிபிரதிவாதியின் பெற்றோர்கள் வீட்டிலேயே 1910-ம் வருஷம் மேமாதம்வரையிலிருந்து வந்ததாகவும், பிறகு வேறு புதியவீடு கட்டப்பட்டதின் பேரில் அந்தவீட்டில் இருவரும் 1910ஞூ அக்டோபர்மாத மத்திவரையிலிருந்து வந்ததாகவும் பிறகு பிரதிவாதி அவளுடைய தாயாருடைய வீட்டுக்குப் போய்விட்டதாகவும், பிறகு அவள் வாதியிடம் வரமாட்டேனென்று சொல்லிவிட்டதாகவும் அதனால் பிரதிவாதி வாதியுடன் கூடிவாழும்படி தீர்ப்புசெய்யவேண்டுமென வாதிவழக்கிட்டார். பிரதிவாதியின்தகப்பன் இறந்து போய்விட்டார். புதியவீடு பிரதிவாதியின் தாயாரால் அவள்வீட்டு கம்பவுண்டுக்குள்ளேயே கட்டப்பட்டதாகத் தெரிகிறது.

வாதி தன்னை பலதடவைகளில் அடித்துத் திட்டியதாகவும், தன்னைக் கொடுமையாக நடத்தி வந்ததாகவும், கடைசியாக 1910ஞூ அக்டோபர்மாதத்தில் தன்னையடித்துவிட்டு தன்வீட்டுக்குவராமல் நின்றுவிட்டதாகவும், இதனால் தானும் வாதியும்

கலியாணகாலத்தில் செய்துகொண்ட உடன்படிக்கையின் ஷரத்தையனுசரித்து வாதிநடக்காமல் தன்னையடித்துத் திட்டியும் உடன்படிக்கையிற்கண்ட 3 வருஷ கெடுவுகடக்கு முன்னமே தன் வீட்டைவிட்டு வாதிபோய்விட்டதால் அதிற்கண்டபடி மூன்று தலாக்குகள் சொல்லிவிட்டு தனக்கும் வாதிக்கு மேற்பட்டவிவாக சம்பந்தத்தை நீக்கிக் கொண்டதாகவும், அதனால்வாதியின்பிராது தள்ளுபடிசெய்யப்படவேண்டு மென்றும், பிரதிவாதி "ஸ்டேட்மெண்டு கொடுத்தாள்.

பிரதிவாதி கக்ஷிசரியானதென்று முதல்கோர்ட்டார் வாதியின் பிராதைத் தள்ளுபடிசெய்து விட்டார்கள். இதன்பேரில் வாதி அப்பீல்செய்ததில் கீழ்அப்பீல் கோர்ட்டார் வாதி பிரதிவாதியைக் கொடுமையாக நடத்தியது மிகுந்த அற்பமான விஷயமென்றும், பிரதிவாதி வீட்டுடன் வாதியிருக்கவேண்டுமென்று நிபந்தனையேற்பட்டது பொதுநீதிக்கு விரோதமாகையால் அது செல்லத்தகுந்த தல்லவென்றும், அந்தக்காரணத்தை முன்னிட்டு பிரதிவாதி "தலாக்" கொடுத்து விவாகசம்பந்தத்தை நீக்கிக் கொண்டதுஞ் செல்லத்தகுந்ததல்ல வென்றும் வாதியின் பிராதுப்படியே தீர்ப்பு செய்துவிட்டார்கள். பிரதிவாதி இதன்பேரில் 2-வது அப்பீல் செய்தாள்.

தீர்ப்பு: — பிரதிவாதி பதினெட்டுவயதுக்குட்பட்ட மைனராக விருப்பதால் பிரதிவாதி வீட்டில் வாதியிருக்கவேண்டு மென்று உடன்படிக்கை யேற்படுத்திக் கொண்டது மகமதியலாப்படி செல்லுபடியுள்ளதென்றும், பிரதிவாதியை வாதி பலதடவை யடித்துத் திட்டியதைச் சகித்துக்கொண்டிருந்து கடைசியாக உடன்படிக்கையிற் கண்டநிபந்தனையின்படி "தலாக்கு" சொல்லிவிட்டு விவாகசம்பந்தத்தை நீக்கிக் கொண்டது மகமதியலாப்படி செல்லுபடியுள்ள தென்றும் கீழ்அப்பீல் கோர்ட்டாருடைய தீர்ப்பை ரத்துசெய்து வாதியின் தாவாவை செலவுடன்தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

கல்கத்தா ஹைகோர்ட்டு.

1910 ஹுத்திய 2-வது அப்பீல் நம்பர் 3830.

ஜட்ஜிகள்
ஜஸ்டிஸ் ஸர் அஷுடோஷ் மூகர்ஜி அவர்கள்
ஜஸ்டிஸ் பீச்கிராப்ட் அவர்கள்

கிரிடிபாஷ்டாஸ் அ. வாதி
V
கோபால்ஜியோ ஜூ.
அ. பிரதிவாதிகள்

தீர்ப்பு 4—8—13.

3. [டிரான்ஸ்ஃபர் அவ் பிராபர்டி ஆக்ட்.]

"பேரிரவலாக ஒருவர்பேரில் பெந்தக பத்திரம் ஏற்பட்டிருந்தால் அவரே வழக்கிட்டு டிக்கிரி பெறலா மென்பது.

முதல் பிரதிவாதி 2 முதல் 4 பிரதிவாதிகளிடமிருந்து எழுதி வாங்கிய ஒரு பெந்தகப்பத்திரப்படி வழக்கிட்டு 1899-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 25-ந்தேதி டிக்கிரி பெற்றான். அந்த டிக்கிரி நிறைவேற்றப்பட்டு 1908-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 13-ந் தேதி இஸ்தியார் சர்வாகி 1908-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 15-ந்தேதி ஏலத்துக்கு கெடு குறிக்கப்பட்டிருந்தது.

இந்த பெந்தகம் வைத்தவர்களின் பிள்ளைகள் மேற்படி பெந்தகமாவது அதன்பேரிலேற்பட்ட டிக்கிரியாவது தங்கள் பாக சொத்தை எந்த விதத்திலுங்கட்டுப்படுத்த மாட்டாதென்று 1908 வருஷம் ஆகஸ்டு மாதம் 26-ந்தேதி பாத்திய ஸ்தாபன வழக்கிட்டார்கள். இந்த வாதிகள் தாவா பெந்தகக்கடனுக்குக் கட்டுப்பட்டவர்களென்றும், இவர்கள் மேற்படி பெந்தக பத்திர வழக்கில் கக்ஷிக்காரர்களாக சேர்க்கப்படாததினாலே இவர்களுக்கு மீட்கும்படியான பாத்தியங்கிடைக்கத்தக்க தென்றும், முதல் கோர்ட்டார் தீர்ப்பு செய்துவிட்டார்கள். இதன்பேரில் வாதிகள் அப்பீல் செய்ததில் முதல் பிரதிவாதிக்கு தாவா பெந்தகத்தொகையில் எவ்வித பாத்தியமு மில்லாததால் அவர் மற்ற 2 முதல் 4 பிரதிவாதிகள் பேரிற் கொண்டுவந்த வழக்கு செல்லத்தகுந்ததல்ல வென்று இ. லா. ரி 30 கல்கத்தா 265 தீர்ப்பை யனுசரித்துவாதியின் வழக்குப்படி சப் ஜட்ஜியவர்கள் தீர்ப்பு செய்துவிட்டார்கள்.

இதன்பேரில் பிரவாதிகள் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்தார்கள்.

தீர்ப்பு:—கீழ் அப்பீல் கோர்ட்டார் சொல்லும் இ. லா. ரி 30 கல்கத்தா 265 தீர்ப்பு ஒரு ஸ்தாவர சொத்து வசமாகவேண்டுமென்று பெயரிரவலாகக்கிரயம் பெற்றவன் வழக்கிட்டதைப்பற்றி ஏற்பட்டதென்றும், அது தாவா பெந்தக பத்திர வழக்கிற்கு எவ்விதத்திலும் ஒற்றுமையில்லை யென்றும், எவ்விதம் பெயரிரவலாக பத்திரம் எழுதிவாங்கினானோ அதுபோலவே அவன் பெயரால்

வழக்கிடவும் அவன் சம்மதித்தவனாகக்கொள்ளப்பட வேண்டியதென்றும், முதல் பிரதிவாதி மற்ற பிரதிவாதிகள் பேரில் டிக்கிரி பெற்றது கிரமமானதென்றும், இவ்வித வழக்கு நியாயமானதென்று இந்த கோர்ட்டாராலேயே ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருக்கிறதென்றும் (17 வீக்லீ ரிபோர்டர் 192,22 வீக்லீ ரிபோர்டர் 413) மேலே சொன்ன பெந்தக டிக்கிரித் தொகை முதலியன என்னவென்பதை கணக்கிட்டு வாதிகள் அத்தொகையைக் கொடுத்து தாவா பெந்தக சொத்துக்களை மீட்டுக்கொள்ளும்படி முதல் கோர்ட்டுக்கு கேஸ் அனுப்பப்பட்டது.

சென்னை ஹைகோர்ட்டு.

1910 ஞுத்திய 2 வது அப்பீல் நம்பர் 1024

தீர்ப்பு 3—12—12.

ஜட்ஜிகள்
ஜஸ்டிஸ் பென்ஸன் துரையவர்கள்
ஜஸ்டிஸ் சுந்தரமய்ய ரவர்கள்

மைனர் கலியப்பக் கவுண்டன்
அடுத்தசிநேகிதன் மாரிக்கவுண்டன்
அ. வாதி

V

தெய்வநாயகம் பிள்ளை
ஆ. அ. பிரதிவாதிகள்

7 [இந்துலா.]

ஒரு மைனருடைய நிலத்தை கார்டியன் விற்று குறைந்த விலையுள்ள வேறு நிலம் வாங்கும்பட்சத்தில் அந்த கார்டியன்செய்த கிரயம் ரத்துசெய்யப்படலா மென்பது.

ஒரு மைனருடைய கார்டியன் அந்த மைனருடைய சொத்தொன்றை ரூ 800க்கு விற்று ரூ 300 பொருமானமுள்ள வேறு நிலம் வாங்கினார். இந்த கார்டியன் செய்த சாசனம் செல்லத்தகுந்ததல்லவென்றும், அது ரத்து செய்யப்பட்டு அச்சொத்து ஸ்வாதீனமாக வேண்டுமென்றும், அந்த மைனருக்கு வேறு கார்டியன் உடுமலைப்பேட்டை டி. மு கோர்ட்டு 1907 வருஷத்திய அசல் 559 நம்பரில் வழக்கிட்டார். வாதியின் தாவாப்படியே அந்தக் கோர்ட்டார் தீர்ப்பு செய்துவிட்டார்கள். இதன்பேரில் பிரதிவாதிகள் கோயம்புத்தூர் டிஸ்டிரிக்ட் கோர்ட்டில் அப்பீல் செய்ததில் மைனர்கார்டியனிடம் சாசனத் தொகை பூராவுங் கொடுபட்டிருக்

கிறதென்றும், அத்தொகை கார்டியனால் சரியாக விநியோகப்படுத்தப் படவில்லையென்ற காரணத்தை முன்னிட்டு பிரதிவாதிகளுக்கு விரோதமாக சாசனத்தை ரத்து செய்தது பிசகென்றும், டிஸ்டிரிக்ட் முனிசீப்செய்த தீர்மானத்தை மாற்றிவிட்டார்கள். இதன்மேல் வாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்கிறார். ஹைகோர்ட்டார் அடியிற்கண்டபடி இரண்டு இஷ்யூக்களை ஏற்படுத்தி அவைகளைப்பற்றி விசாரித்துத் தெரிவிக்கும்படி டிஸ்டிரிக்ட் கோர்ட்டுக்குக் கட்டையனுப்பினார்கள்.

(1) தாவா நிலம் விற்ற கிரயத்தொகையானது கார்டியன் அவ்விதம் விற்கும்படியான நியாயமானதா ?

(2) அந்தக்கிரயத்தொகை மைனருடைய நன்மைக்கு கிரமமான வழியில் உபயோகப்படுத்தப்படுமென்று 1,2-பிரதிவாதிகள் நன்றாக விசாரித்துத்தெரிந்து கொண்டு நல்ல எண்ணத்துடன் சாசனம் பெற்றார்களா ?

இந்த இரண்டு இஷ்யூக்களைப்பற்றியும் டிஸ்டிரிக்ட் ஜட்ஜி பூர்த்தியாகவிசாரித்து தாவாநிலம் ரூபாய் 850–க்கு விற்றதானது கிரமமானதென்றும், அது நியாயமானதென்றும்,3-ம் பிரதிவாதியாகியகார்டியன் வேறுநிலத்தை மைனருக்காக ரூபாய் 800-க்கு வாங்கியிருப்பதாக சாசனத்தைக் காட்டியதை 1,2 பிரதிவாதிகள் உண்மையென நம்பியிருப்பதாகவும், ஆனால் அந்தச் சாசனத்திற்கண்டநிலங்கள் என்னவிலை பொருமென்பதை விசாரிக்கவில்லையென்றும், அதுரூபாய் 800 பொருமென்பதைப்பற்றிவிசாரித்துத் தெரிந்துகொள்ள பிரயத்தனஞ் செய்யவில்லையென்றும், பயிண்டிங்குகள் ஏற்படுத்தி ஹைகோர்ட்டுக்கு அனுப்பிவிட்டார்கள்.

தீர்ப்பு—மைனர் கார்டியன் 3-ம் பிரதிவாதி வாங்கிய II ஆகிரவிற்கண்ட நிலங்கள் ரூபாய் 300 தான் பொருமானமுள்ளதென்று முன் டிஸ்டிரிக்ட் ஜட்ஜி கண்டு பிடித்திருக்கிறார்; இந்த சாசன நிலம் கிரமமாக என்னவிலை பொருமென்பதைப்பற்றி 2-ம் பிரவாதி சரியாக விசாரிக்கவில்லை யென்றும், மைனர் கார்டியன் வாங்கப்போவதாகச்சொன்ன நிலம் ரூபாய் 800 பொருமென்று அந்த கார்டியன் சொன்னதை நம்பிவிட்டாரென்றும், டிஸ்டிரிக்ட் ஜட்ஜி கண்டு பிடித்திருக்கிறார். இதனால் 2-ம் பிரதிவாதி நல்ல எண்ணத்துடன் சாசனம் பெற்றதாகத் தெரியவில்லை. அதனால்

கீழ்கோர்ட்டாருடைய பயிண்டிங்குகளை அங்கீகரிக்கிறோம். தாவா சாசனம் மைனரைக்கட்டுப்படுத்தமாட்டாதென்று அபிப்பிராயப்படுகிறோம். இதனால் கீழ் அப்பீல் கோர்ட்டாருடைய தீர்மானத்தை ரத்துசெய்து டிஸ்டிரிக்ட் முனிசீபின் தீர்மானத்தை யுறுதிசெய்கிறோம். முனிசீபின் தீர்ப்பிற்கண்ட தொகையை இன்று முதல் 3 மாதங்களுக்குள் வாதி கோர்ட்டில் கட்டிவிட்டுத் தாவா சொத்தை வாதி வசப்படுத்திக் கொள்ளவேண்டியது. டிஸ்டிரிக்ட் முனிசீப் வரும்படி. விஷயமாகவும் நஷ்டபரிகார விஷயமாகவும் செய்த தீர்மானங்களை நாங்களும் ஒத்துக்கொள்ளுகிறோம்.

சென்னை ஹைகோர்ட்டு.

1911வருஷத்திய 128 நம்பர் அப்பீல்.

ஜட்ஜிகள்.	
சீவ் ஜஸ்டிஸ் ஸர் அர்னல்ட் வொயிட். கெடி. அவர்கள்.	அஜபாநடேசபண்டாரச் சன்னதி அ. வாதி.
	V.
ஜஸ்டிஸ் மிஸ்டர் சங்கரநாயரவர்கள்.	S. M. R. M. ராமலிங்கபிள்ளை ஆ அ. பிரதிவாதிகள்.

தீர்ப்பு—25—11—12.

2. [தர்மசொத்துக்களைப்பற்றிய சட்டம்.]

ஒருதர்மகர்த்தாவை தர்மபரிபாலனத்தினின்று நீக்கவும் அச்சொத்துக்கள் பரிபாலனவிஷயமாக விதிகள் ஏற்படுத்தவும் வேண்டுமானால் சி. புகோடு 92-வது செக்ஷன்படி நடவடிக்கைகள் நடத்தப்படவேண்டியதேயல்லாமல் 1863வருஷத்திய 20-வது ஆகட்டுப்படி வழக்கிடக் கூடாதென்பதும், இவ்விதஸ்கீம் வியாஜ்ஜியங்களில் சி. பு. கோடுஆர்டர் 40 ரூல் 1 (2) அனுசரிக்கப்படவேண்டிய தவசியமில்லை யென்பதும்.

புதிய சிவில்புரிஸிஜர் கோடு 92-வது செக்ஷன்படி அ பிரதிவாதிகள் அ. வாதிபேரில் நாகபட்டணம் சப்கோர்ட்டில் வழக்கிட்டார்கள். இந்தவழக்கிட்ட போது இந்த 92-வது செக்ஷன்படி, கேசைவிசாரிக்க அந்தக் கோர்ட்டாருக்கு அதிகாரங்கொடுபடாதிருந்ததால், அந்தக்கேஸ் டிஸ்டிரிக்ட் கோர்ட்டாருக்கு மாற்றப்பட்டது. பிறகு இந்தசப்கோர்ட்டாருக்கே இந்தசெக்ஷன்படி அதிகாரங் கொடுபட்டபடியால் மறுபடியும் இந்தநம்பர் நாகப்பட்டணம் சப்கோர்ட்டாருடைய பரிசிலனைக்கே எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த தாவாவைப்பற்றி சப்கோர்ட்டார் விசாரிக்க பாத்தியமில்லையென்றும், 1863வருஷத்திய 20-வது ஆகட்டும்படி டிஸ்டிரிக்ட் கோர்ட்டில் முன்னதாக அனுமதிபெற்றுக்கொண்டு நடவடிக்கைகள் நடத்தப்படவேண்டுமென்றும், தாவாவிற்கண்ட சொத்துக்கள் சி பு கோடு 40-வது ஆர்டர் ரூல் 1 (2) படிரிஸீவர் திறப்பில் வைக்கப்படக் கூடாதென்றுங் கக்ஷியாடினர்.

தீர்ப்பு:—புதிய சீவில் புரிஸிஜர்கோடு 92-வது செக்ஷனிற் கண்ட விதிகள் தாவா கேசுக்கு மிகவும் பொருந்திய தென்றும், அதன்படிதான் பிராதிற்கண்ட பரிகாரங்கள் கிடைக்கக் கூடியதென்றும், முதலில் இந்தப்பிராதை விசாரிக்கசப்கோர்ட்டாருக்கு, அதிகார மில்லாதிருந்தாலும் பிறகு அவர்களுக்கு அந்த அதிகாரங் கிடைத்துவிட்டதால் இரண்டாவது தடவை கொடுபட்டதாக எண்ணப்படவேண்டுமென்றும், 40-வது ஆர்டர் ரூல் 1 (2) தாவா கேசுக்கு பொருத்தமில்லையென்றும், இவ்வித ஸ்கீம் வியாஜியங்களில் ரிஸீவர்நியமிக்கப் படவேண்டியது மெத்த அவசியமென்றும், அப்பீல்வாதியின் அப்பீல் செலவுடன் [illegible] செய்யப்பட்டது.

சென்னை ஹைகோர்ட்டு.

1911 வருஷத்திய 2 வது அப்பீல்கள் நம்பர் 681, 682.

ஜட்ஜிகள்	
ஜஸ்டிஸ் மிஸ்டர் சங்கரநாயரவர்கள்	ராமனக்கவுண்டன் அ. வாதி
ஜஸ்டிஸ் மிஸ்டர் டியாப்ஜி அவர்கள்	ராமலிங்க முதலியார் ஆ. அ. பிரதிவாதிகள்.

தீர்ப்பு 30—1—13.

4. [டிரான்ஸ்வர் அவ் பிராபர்டி ஆக்ட்டு]

ஒருவன் ஒரு பெந்தகக்கடனை தீர்ப்பதாக பெந்தக சோத்தில் சிலவற்றைச் சாசனம் பெற்றிருந்து அந்தப்படி தீர்க்காததினால், அந்த பெந்தக பத்திரன்பேரில், வழக்கிட்டு டிக்கிரி யேற்பட்டபின், இந்த சாசனம் பெற்றவன் அந்த டிக்கிரித் தோகையை செலுத்திவிட்டு கண்டிரி பூஷன் (Contribution) வியாஜ்ஜியம் [illegible]வரக் கூடாதென்பது.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
6 - NOV 1913
MADRAS.
SL
Z211,83mN13
N13.1
161286

அப்பீல் வாதிக்காக மிஸ்டர் T. V கோபாலசாமி முதலியாரும், அப்பீல் பிரதிவாதிகளுக்காக மிஸ்டர் S முத்தய்யா முதலியாரும் ஆஜராயிருந்தார்கள்.

1 முதல் 3 பிரதிவாதிகள் குப்பா செட்டியாருக்கு எழுதிக் கொடுத்திருந்த பெந்தகபத்திரத்தின்படி, ரூ 3000 கிடைக்க வேண்டுமென 1901 வருஷத்திய 26 நம்பரில் வழக்கிட்டார். அந்த பெந்தகசொத்தை கிரயத்துக்கு வாங்கின தாவா கோயம்புத்தூர் டி. மு கோர்ட்டு 1908 வருஷத்திய 66 நெம் வாதியானவர், அந்த 26 நம்பரில் 4 ம் பிரதிவாதியாகவு மற்றொரு சாஸனக்காரர் 5-ம் பிரவாதியாகவுஞ் சேர்க்கப்பட்டார்கள். அந்த 26 நம்பர் பெந்தகக்கடனைத்தீர்ப்பதற்காகவே 4 ம் பிரதிவாதிக்கு ரூ 6000 பொருமானமுள்ள பெந்தக சொத்துக்கள் சாசனஞ் செய்யப்பட்டிருப்பதால், அவரே அந்தக்கடனை தீர்க்கக் கடமைப்பட்டவரென 1 முதல் 3 பிரதிவாதிகள் கக்ஷியாடினார்கள். அதன் பேரில் அந்த கோர்ட்டார் அந்த பெந்தக டிக்கிரி கடன் தொகை பூராவும் சாசனம் பெற்ற 4 ம் பிரதிவாதி வசமுள்ள பெந்தகச்சொத்தைத் தொடர்ந்து தொகை வசூலிக்கப்பட வேண்டியதென்றும், அந்தச் சொத்து ஏலவிற்று முதலினால் அந்த டிக்கிரி கடன் உளவடைக்கப்படாமல் பாக்கியிருந்தால் அத்தொகை 1 முதல் 3 பிரதிவாதிகள்வசமுள்ளசொத்துக்களைத் தொடர்ந்து வசூலிக்கப்பட வேண்டியதென்றும், அதனாலும் அந்த டிக்கிரிக் கடனுளவடைக்கப்படா விட்டால், 5ம்பிரதிவாதி வசமுள்ள சொத்துக்களைத் தொடர்ந்தும், தொகை வசூலிக்கப்படவேண்டுமென டிக்கிரி செய்தார்கள். அந்த நம்பர்4-ம் பிரவாதியாகிய இந்த 66 நெ வாதி அந்த டிக்கிரித் தொகை பூராவும் கோர்ட்டில் கட்டிவிட்டு, தன்பாக பெந்தக சொத்துக்கு அந்த டிக்கிரித்தொகையில் வீதா சாரங்கழித்துக்கொண்டு பாக்கித்தொகை 1 முதல் 3 பிரதிவாதிகளிடமிருந்து கிடைக்க வேண்டுமென வீதாசார வழக்கு (Contribution Suit) கோயம்புத்தூர் டி. மு. கோர்ட்டு 1908-ம் வருஷத்திய 66 நம்பரில் வழக்கிட்டார்.

கீழ்கோர்ட்டார் இருவரும் வாதியின் தாவாப் படியே தீர்ப்பு செய்து விட்டனர். அதனால் இந்த நம்பர் வாதியைப்

போல் பெந்தக சொத்தில் சிலவற்றைச் சாசனம்பெற்ற 4-ம் பிரதிவாதி கீழ்கோர்ட்டுகளின் தீர்ப்புகள் ரத்து செய்யப்பட வேண்டுமென ஹைகோர்ட்டில் அப்பீல் செய்தார்.

தீர்ப்பு:—முன் 1901-ம் வருஷத்திய 26 நம்பர் தீர்ப்பில் இந்த நம்பர் வாதி ஒருவரே அந்த டிக்கிரிக் கடனைத் தீர்க்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருப்பதால், வாதி இந்த வீதாசார வழக்கு கொண்டு வந்தது சுத்தப் பிசகென்பதாக அப்பீல் வாதி (1-ம் பிரதிவாதி) கக்ஷியாடினார். இந்த 26 நம்பரில் டிக்கிரித் தொகை எந்தெந்த விதம் வசூலிக்கப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறதே யன்றி வாதி இந்த வீதாசார வழக்குக் கொண்டு வரக்கூடாதென அந்த தீர்ப்பிற் சொல்லப்படவில்லை யென அப்பீல் பிரதிவாதி (அசல் வாதி) வாதித்தார். 1901-ஹூத்திய 26. நம்பர் வாதி கய்யா செட்டியார் தன்னுடைய பெந்தக பத்திரத்தில் கண்ட சில சொத்தை இந்த நம்பர் வாதி சாசனம் பெற்றிருப்பதில் அந்தச் சாசனத் தொகையைக்கொண்டு இந்த பெந்தகக் கடனைத் தீர்க்கவேண்டு மென்று சாசனத்தில் சொல்லப்பட்டிருப்பதால், இவரை அந்த நம்பரில் 4-ம் பிரதிவாதியாகச் சேர்த்திருக்கிறார். இவர் சாசனம் பெற்ற சொத்து ரூபாய் 600 பொருமான முள்ளதென்றும் அந்த பெந்தகக் கடனை இந்தச் சாசனக்காரர் கொடுக்கக் கடமைப்பட்டிருப்பதால் இந்தச் சாசன சொத்தே முதலில் ஏலம் போடப்பட வேண்டியதென்றும் டிக்கிரி யேற்பட்டிருக்கிறது. இதனால் வேறே யெவருமிந்த டிக்கிரிக் கடனை கொடுக்கக் கடமை பட்டவர்களல்ல வென்றேற்படுகிறது. அதனால் வாதி இந்த வீதாசார வழக்குக் கொண்டு வர எவ்விதத்திலும் நியாயமில்லை. அதனால் கீழ் கோர்ட்டார்கள் செய்த தீர்மானங்களை ரத்துசெய்து வாதியின் வழக்கைச் செலவுடன் தள்ளுபடி செய்கிறோம்.

சென்னை ஹைகோர்ட்டு

1911 ஹூத்திய 2 - வது அப்பீல் நம்பர் 1224.

ஜட்ஜிகள்.	
ஜஸ்டிஸ் ஸர் ரால்வ பென்ஸன் துரையவர்கள்.	அடுஸமல்லி சூரிய நாராயணா அ. வாதி
ஜஸ்டிஸ் மிஸ்டர் சுந்தரமய்யாவர்கள்	V வல்லூரபல்லி ஸ்ரீராமுலு

தீர்ப்பு 20—3—13.

5. [டிரான்ஸ்வர் அவ் பிராபர்ட்டி ஆக்ட்.]

ஒரு பெந்தக டிக்கிரியை மேடர் பெற்றவன் அச்சொத்தின் சம பாகஸ்தனொருவனிட மிருந்து அப்பாதியை சாசனம் பெற்றால் மற்ற பாகஸ்தன் பேரில் பாதித் தொகைக்கு வழக்கிடலா மென்பது.

நாகபூஷணம் பொன்னம்மா என்ற இருவர் பேரிலும் ஒருவர் பெந்தக பத்திரத்தின்பேரில் வழக்கிட்டு ரூபாய் 750 க்கு டிக்கிரி பெற்றார். அந்த டிக்கிரிதாரனிட மிருந்து வாதி அந்த டிக்கிரியை ரூபாய் 321 க்கு மேடர் பெற்றார். பிறகு இந்த வாதி அந்த பொன்னம்மாளுடைய பாத்தியதையை இவரே வாங்கி விட்டார். மற்றொரு நாகபூஷணத்தின் வீத பாத்தியதை பிரதிவாதிக்கு விற்கப்பட்டது. வாதி அந்த பெந்தகத் தொகையில் பாதி நாகபூஷணன் பாகத்தை வாங்கிய பிரதிவாதியுடைய சாசன சொத்தினின்றுங் கிடைக்க வேண்டுமென வழக்கிட்டார்.

வாதி மேடர் வாங்கிய தொகையில் பாதிக்கு மட்டில் வாதி வழக்கிடலாமே யன்றி முழுடிக்கிரித்தொகையிலும் பாதிக்கு வழக்கிட்டது செல்லமாட்டாதென பிரதிவாதி கக்ஷியாடினார். பிரதிவாதியின் கக்ஷிப்படியே கீழ் கோர்ட்டார்கள் இருவருந் தீர்மானித்து விட்டார்கள். இத்தீர்ப்புகள் சட்ட விரோதமானதெனவாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்தார்.

தீர்ப்பு:—வாதி தான் பொன்னம்மாளுடைய பாக சொத்தை சாசனம் பெறுவதற்கு முந்தியே டிக்கிரித் தொகை பூராவையும் மேடர் பெற்றிருப்பதினால் வாதிக்கு அந்த பெந்தக டிக்கிரியில் பாதித்தொகை கிடைக்கக்கூடியதென்றும், முனிசிப் கோர்ட் டிக்கிரித் தேதி முதல் தாவா தொகைக்கு 100-க்கு 6-வீதம் வட்டி கிடைக்கக் கூடியதென்றும், செலவு தொகை கிடைக்கக் கூடியதென்றும், கீழ் கோர்ட்டார்களின் தீர்ப்புகளை ரத்து செய்து வாதியின் தாவாப்படி தீர்ப்பு செய்தார்கள்.

கல்கத்தா ஹைகோர்ட்டு.

1911 ஹுத்திய அசல் 632 ல் மனு

தீர்ப்பு 14—3—13.

ஜட்ஜி. மிஸ்டர்ஜஸ்டிஸ் சௌத்திரி அவர்கள்	ஸர் ஜோ. குமார் கார் போர்மா அ. வாதி V ஸ்ரீமதி பிரொமோர்தா சுந்தரிடாபி அ. பிரதிவாதி

6 [டிரான்ஸ்பர் அவ் பிராபர்டி ஆக்ட்]

பெந்தக சொத்தைத் தொடர்ந்து டிக்ரீத் தொகை வசூலிக்காமல் வேறு சொத்தைத் தொடர்ந்து தொகை வசூலிக்க உத்தரவு செய்யக் கூடாதென்பது.

வாதி தனக்கு பிரதிவாதியால் எழுதிக் கொடுக்கப்பட்ட பெந்தக பத்திரப்படி வழக்கிட்டு ரூபாய் 4355—5—6 க்கு 1911-வருஷம் ஆகஸ்டு மாதம் 11-ந் தேதி டிக்கிரி பெற்றார். இது பிறகு உறுதிசெய்யப்பட்டது. இந்த டிக்கிரித் தொகை பிரதிவாதியால் கோர்ட்டில் கட்டப்பட வில்லை. இந்த பெந்தக சொத்து பிரதிவாதிக்குளெவ்வித பாத்தியமு மில்லையென வேறொருவர், இந்த பிரதிவாதிபேரில் வழக்கிட்டு எக்ஸ் பார்டியாக டிக்கிரி பெற்றுவிட்டதாகவும், அதனால் வாதியின் டிக்கிரி நிறைவேற்றப்படும் பட்சத்தில் அந்த வேறொருவன் கக்ஷியாடி பல விதங்களில் தனக்கு நஷ்டமுண்டாகு மென்றும், அதனால் தாவா பெந்தக சொத்தின் பேரில் இப்போது டிக்கிரி நிறை வேற்றப்பட வேண்டியதில்லையென்றும், இந்த டிக்கிரியை வெண்ணலை டிக்கிரியாக வைத்துக் கொண்டு பிரதிவாதிக்குச் சொந்தமான இதர சொத்துக்களைத் தொடர்ந்து டிக்கிரித் தொகை வசூலிக்கும் பொருட்டு இந்த டிக்கிரி வேறு கோர்ட்டுக்கு மாற்றப்பட வேண்டு மென்றும், வாதி மனுக்கொடுத்தான்.

வாதி பெந்தக சொத்தைத் தொடர்ந்து தொகை வசூலிக்க வேண்டியதென்று டிக்கிரி யேற்பட்டிருக்க, அந்த சொத்து ஏல விற்று முதல் செய்யப்படாமல் இதர சொத்துக்களைத் தொடர்ந்து தொகை வசூலிக்க சட்டாதாரமில்லையென பிரதிவாதி கக்ஷியாடினார்.

தீர்ப்பு:—டிரான்ஸ்பர் அவ் பிராபர்டி ஆக்ட் 89-வது செக்ஷனில் கண்டபடி முதலில் பெந்தகச் சொத்தைத் தொடர்ந்து தொகை வசூலிக்க வேண்டியது மெத்த அவசியம்; பெந்தக சொத்து ஏலவிற்று முதலால் டிக்கிரி கடன் உளவடையாதிருந்து இதர சொத்துக்களைத் தொடர்ந்தாவது ஆளைப்பொருத்தாவது தொகை வசூலிக்க காலாவதி தோஷமேற்படா திருந்தால் டிரான்ஸ்வர் அவ் பிராபர்டி ஆக்ட்டு 90-வது செக்ஷன்படி, மனுக்கொடுத்து புதிய வேறு டிக்கிரி பெற்றுக்கொண்டு அதன் மேல் அந்த டிக்கிரி நிறைவேற்றப்பட வேண்டும். மேலும் வாதி தாவா பெந்தக சொத்து தனக்கு வேண்டியதில்லை யென்றுஞ் சொல்லவில்லை. அதனால் இ. லா. ரி 28 சென்னை 473 ரூலிங்கை யனுசரித்து வாதியின் அப்பீலைத் தள்ளுபடி செய்கிறோம்.

சென்னை ஹைகோர்ட்டு.

1910 ளு வருஷத்திய 2 வது அப்பீல்கள் 1184 முதல் 1192 1194,1195,1197, 1198, 1200.

ஜட்ஜிகள்	
ஜஸ்டிஸ் ஸர் ராலவ் பென்ஸன் துரையவர்கள்	ஸ்ரீ ராஜா வெங்கடநரசிம்ம அப்பாராவ் பகதூர் ஜமீன்தார்காரு அ. வாதி.
ஜஸ்டிஸ் மிஸ்டர் சுந்தரமய்யரவர்கள்	முப்பிடி சுப்பாரெட்டி ஆ. அ. பிரதிவாதிகள்

தீர்ப்பு 12—11—12

3. (ரெவினியூ)

"இனும் கிராமங்களில் இனும்தாருக்கு மேல்வார பாத்திய மட்டிலிருக்கு மென்பது."

ஒரு முழு அக்கிரகாரத்தில் வாதிக்கு சில பாகம் சொந்தம். இவர் தன் பாகத்தில் பயிரிட்ட குடிகள் விலக்கப்பட வேண்டுமென குடிகள் பேரில் வழக்கிட்டார். எஸ்டேட் லாண்டு ஆக்ட் 6—வது செக்ஷன்படி குடிகளுக்கு குடிவார பாத்திய முண்டென கீழ் அப்பீல் கோர்ட்டார் தீர்மானித்து விட்டார்கள். அதன்பேரில் வாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்கிறார்.

தீர்ப்பு:—தாவாவிற் கண்ட நிலம்தன்னுடைய தென்று வாதி ருஜூப்பிக்க வில்லை, இனும் கிராமங்களில் இனும் தார்களுக்கு

மேல் வாரமட்டில் பாத்திய முண்டென ஊகிக்கப்பட வேண்டும். குடிவார முள்பட இனமாகக் கொடுபட்ட தென்பதை வாதி ருஜூப்பிக்கவில்லை. ஒரு பிராமண இனம்தார் நிலத்தைப் பயிரிடுங் குடியானவனாக விருந்திருக்க ஹேதுவில்லை. அதனால் தாவா கிராமம் எஸ்டேட் லாண்டு ஆக்ட் 3-வது செக்ஷன் கீழ் வரும் தாவா நிலம் நீண்டகாலத்தரிசு என்ற கக்ஷி யேற்படவில்லை. இதனால் குடிகளுக்கு தாவா சொத்தில் எஸ்டேட் லாண்டு ஆக்ட் 6-செக்ஷன்படி குடிக்காணி பாத்திய முண்டா யிருக்கிறது. இதனால் இந்த இரண்டாவது அப்பீலை செலவுடன் தள்ளுபடி செய்கிறோம்.

சென்னை ஹைகோர்ட்.

1911 ளு வருஷத்திய 2-வது அப்பீல் நெம்பர் 536, முதல் 538.

ஜட்ஜிகள்.	
ஜஸ்டிஸ் சுந்திரமய்ய ரவர்கள்	கேசரி வெங்கடசுப்பய்யா ஆ. அ. வாதிகள்.
ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள்	V சிக்ரடரி அவ் ஸ்டேட் பார் இந்தியாவின் கவுன்ஸலுக்காக நெல்லூர் கலெக்டர் அ. பிரதிவாதி.

தீர்ப்பு 2—5—13.

4. [ரெவினியூ]

ஒரு ஏரியின் நாலிலொருபாக ஜலத்தை கவர்ண்மெண்டார் ஒருவருக்கு கொடுத்திருந்தால் அதற்காகத் தனிமையில் தண்ணீர்த் தீர்வை வசூலிக்க கவர்ண்மெண்டாருக்கு பாத்தியமில்லை யென்பது.

நெல்லூர் ஜில்லா காவலிடிஸ்டிரிக்டு முனிசீப் இலாகாவைச் சேர்ந்த பர்மனுகர்க்காகிராமத்தில் அனுமா கொண்டா என்ற ஒரு ஏரியிருக்கிறது. அந்த கிராமத்திய இனும்தார்களாகிய அக்கிரகாரத்தாருக்கு அந்த ஏரி ஜலத்தில் நாலிலொருபங்குக்குக் பாத்தியமுண்டென்றும், மற்ற முக்கால்பாகம் கவர்ண்மெண்டாருக்கு பாத்தியமென்றும் அந்த ஏரிக்கு ஜலம் வரும் வாய்க்காலினின்றும் வெங்கடராம ரெட்டிக்கு அவனுடைய ஏரிக்கு கவர்ண்மெண்டார் ஜலம் விட்டதாகவும், அந்தப்படிச்செய்ய அவர்களுக்கு பாத்தியமில்லையென்றும், அந்த அக்கிரகாரத்தார்கள் சிகரடரி அவ் ஸ்டேட் பார்

இந்தியா இன் கவுன்ஸலுக்காக கலெக்டரவர்களை முதல் பிரதிவாதியாகவும், வெங்கடராம ரெட்டியை 2 ம்பிரதிவாதியாகவுஞ் சேர்த்து காவலி டிஸ்டிரிக்ட் முனிசீப் கோர்ட்டு 1894௵ த்திய அசல் 211 நம்பரில் பாத்தியஸ்தாபன வழக்கிட்டதில், வாதிகளின் தாவாப்படியே தீர்ப்பு செய்யப்பட்டது. இது அப்பீலிலும் உறுதிசெய்யப்பட்டது. இதன்பிறகு இந்த ஏரிஜலம் பாய்ச்சலுக்குக்கவர்ண்மெண்டார் தனிமையில் தண்ணீர்த் தீர்வை யேற்படுத்தினார்கள். இவ்வித தீர்வை யேற்படுத்தக் கூடாதென அந்த கிராமத்தார்களாகிய அக்ரகாரத்தார்கள் கவர்ண்டார் பேரில் வழக்கிட்டார்கள். இவ்வழக்கு ஹைகோர்ட்டா ரவர்களிடம் விசாரணைக்கு கொண்டுவரப்பட்டதில், அடியிற்கண்ட இஷ்ஷியு ஏற்படுத்தி அதை விசாரித்து பயிண்டிங்கு அனுப்பும்படி நெல்லூர் டிஸ்டிரிக்ட் ஜட்ஜிக்கு கேஸ் அனுப்பப் பட்டது. அந்த இஷ்ஷியுவாவது.

“தண்ணீர் தீர்வை செலுத்தாமலே அனுமகொண்டாஏரியின் ஜலத்தில் நாலிலொன்றுக்கு சர்வசுதந்தர பாத்தியங் கொண்டாடுவது, காவலி டி-மு. கோர்ட்டு 1894 ௵ த்திய அசல் 211 வது நம்பர்படிக்கும் அதன்பேரிலான நெல்லூர் சப்கோர்ட்டு 1896௵ த்திய 171 நெ. அப்பீல் தீர்ப்பு படிக்கும், ரெஸ்ஜூடிகேடாவா”?

இந்த இஷ்ஷியுவைப்பற்றி டிஸ்டிரிக் ஜட்ஜி விசாரித்ததில் வாதிகளுக்கு தாவாவிற்கண்ட அனுமகொண்டா ஏரியில் நாலிலொரு பாகத்துக்கு பாத்தியமுண்டென்றும், அந்த ஏரியின் மறுமத்தும் அந்த வீதப்படியே செய்யப்பட்டு வருகிறதென்றும், முன்னேற்பட்ட டிக்ரியில் அந்த நாலிலொரு பாத்தியம் ஸ்தாபித்து பிரதிவாதிகள் அந்த ஜலத்தினின்றும் வேறு பாய்ச்சலேற்படுத்தாமல் தடைசெய்யப்பட் டிருக்கிறார்களென்றும், இந்த வழக்கில் அந்த ஜலத்துக்குத் தண்ணீர் தீர்வை யேற்படுத்தக்கூடாதென வழக்கிட்டிருக்கிறார்களென்றும், இந்த இரண்டு வழக்குகளும் வெவ்வேறானவையென்றும், ரெஸ்ஜூடிகேடா தோஷமில்லையென்றும், வாதிகளின் முன் வழக்கு வசதிபாத்தியதைக்காக ஏற்பட்டதென்றும், இந்த இரண்டாவது வழக்கு தண்ணீர் தீர்வையைப்பற்றி யேற்பட்டிருப்பதால் இவ்விஷயம் முன்கேஸில் விசாரணைக்கு ஏற்படவில்லையென்றும், அதனால் கவர்ண்மெண்டார் தண்ணீர் தீர்வை விதிக்க பாத்தியமுண்டா இல்லையா வென்பதைப்பற்றி விசாரிக்கலாமென்றும், இதற்கு ரெஸ்ஜூடிகேடா

கிடையாதென்றும் டிஸ்டிரிக்ட் ஜட்ஜி பயிண்டிங்கு ஏற்படுத்தி ஹைகோர்ட்டுக்கு அனுப்பினார்கள்.

தீர்ப்பு.

ஜஸ்டிஸ் சுந்திரமய்ய ரவர்களுடைய தீர்மானம்:—எல்லாரெட்டி கால்வாய் வழியாக அனுமகொண்டாபள்ளம் ஏரிக்கு பாயும் ஜலத்தில் நாலி லொன்று வாதிகளுக்கு பாத்திய முண்டென 1894-வருஷம் 211 நம்பரி லேற்பட்டிருக்கிற தென்று டிஸ்டிரிக்ட் ஜட்ஜி சொல்லுகிறார். ஆனால் அந்த ஜலத்துக்கு தண்ணீர் தீர்வை விஷயமாக விசாரிப்பது ரெஸ்ஜூடிகேடா தோஷமாக மாட்டாதெனச் சொல்லுகிறார். தண்ணீர் தீர்வை விஷயமாக அப்போது யாதொரு விசாரணையும் நடக்க வில்லை யென்பது மட்டிலுண்மை தான். வாதிகளுக்கு தாவா ஜலத்தில் நாலி லொருபாக பாத்திய முண்டென்று ஸ்தாபிக்கப்பட் டிருப்பதினாலே அதற்கு எவ்வித தண்ணீர் தீர்வையுங்கிடையா தென்பது தானே ஸ்பஷ்டமாகத் தெரிகிறது, ஏரியின் நாலிலொரு பாக ஜலத்தை இனாமாகக் கொடுத்திருப்பதைக் கொண்டு, தண்ணீர் தீர்வை யேற்படுத்த கூடாதென்பதே கவர்ன்மெண்டாருடைய தீர்மான மென்று தெரிகிறது. முன் 211 நம்பர் தீர்ப்பில் தாவா ஏரிஜலத்தில் வாதிகளுக்கு நாலிலொரு பாகம் ஸ்தாபிக்கப்பட் டிருப்பதினாலே அந்த ஜலத்துக்குத் தண்ணீர் தீர்வை யேற்படுத்தக்கூடாதென்று தீர்மானிக்கிறேன்.

ஜஸ்டிஸ் சதாசிவய்ய ரவர்களுடைய தீர்மானம்:—தாவா ஏரி ஜலத்தில் நாலிலொரு பாகத்தை வாதிகளுக்கு சர்வ சுதந்தர பாத்தியமாகக் கொடுத்து விட்டார்கள். அது விஷயமாக 211 நெம்பர் டிக்கிரியு மேற்பட்டிருக்கிறது. அந்த ஜலத்தில் கவர்ன்மெண்டாருக்கு எவ்வித பாத்தியமு மில்லை. இவர்களுக்கு எவ்வித பாத்தியமுமில்லாத ஜலத்துக்கு இவர்கள் தண்ணீர் தீர்வை எந்த ஆதாரத்தின் பேரில் விதிக்கக் கூடும். கவர்ன்மெண்டாருடைய தண்ணீரைக் குடிகள் உபயோகித்தால் அதற்கு தீர்வை யேற்படுத்தலாமென சட்ட மேற்பட்டிருக்கின்றது. இது அப்படிக் கல்ல. இந்த ஜலம் வாதிகளுடைய ஏரிக்கு வருவதற்கு முன் கவர்ன்மெண்டாருக்கு பாத்திய மிருக்கலாம். வாதிகளுடைய ஏரிக்குள் வந்த பிறகு அது வாதிகளுக்குச் சொந்தமானதே; அதற்குத் தண்ணீர்

தீர்வை விதிக்க கவர்ன்மெண்டாருக்கு பாத்திய மில்லை யென்று தீர்மானிக்கிறேன்.

அலகபாத் ஹைகோர்ட்டு.

1913ளு த்திய முதலாவது அப்பீல் நம்பர் 38.

தீர்ப்பு 5—15—13.

ஜட்ஜிகள்

மிஸ்டர் ஜஸ்டிஸ் டட்பால் அவர்கள்	முகம்மது அப்ஸல்கான் அ. வாதி
	V
மிஸ்டர் ஜஸ்டிஸ் ராபிக் அவர்கள்	முசமத்காரிமன் பீபீ

4. [சிவில் புரிஸீஜர் கோடு.]

இறந்த மகமதியனுடைய வார்சு தன் பாகம் பிரித்து கொடுபட வேண்டுமென்று கொண்டுவரப்படும் வழக்கில், அச்சொத்தில் பாத்தியமுடையவர்கள் அனைவரும் கக்ஷிக்காரராகச் சேர்க்கப்படவேண்டியது அவசியமில்லை யென்பது.

ஹிதாயட் அலி என்ற இறந்த மகமதியனுக்கு இமாமன் பீபீ என்ற விதந்துவும், சில சகோதரிகளும் வார்சுகளாயிருக்கிறார்கள். இந்த விதந்து தன் புருஷனுடைய சொத்துக்களை யடைந்து அவைகளை பிரதிவாதிக்கு விற்றுவிட்டாள். இறந்த மகமதியனுடைய சகோதரி யொருவள் அந்த விதந்துவால் செய்யப்பட்ட பராதீனஞ் செல்லத்தகுந்ததில்லை யென்றும், அந்த விதந்துவின் டவர்த் தொகை ஏற்கனவே கொடுபட்டு தீர்ந்துவிட்டதாகவும், அச்சொத்தில் தன் பாகம் பிரிபட்டு தனக்குக்கிடைக்க வேண்டுமென்றும் வழக்கிட்டாள்.

தாவா சொத்து விதந்து இமாமன்பீபீக்கு அவளுடைய டவர்த் தொகைக்காக அவள் புருஷனால் 1886-ம் வருஷம் நவம்பர் மாதம் 10-ந்தேதி யுள்ள உயில் மூலமாக கொடுபட்டதென்றும், அச்சொத்துக்கு அவள் சர்வ சுதந்திரபாத்தியமுடையவளாகையால் அவள் செய்த பராதீனஞ் செல்லுபடியுள்ளதென்றும், தான் தகுந்த பிரதிபிரயோஜனத்துடனும் நல்ல எண்ணத்துடனும் பிரத்தியக்ஷமான பாத்தியமுடையவனிடமிருந்து சாசனம் பெற்றிருப்பதால் தன்னுடைய சாசனம் டிரான்ஸ்பர் அவ்பிராபர்டி ஆக்ட் 41-வது செக்ஷன்படி செல்லுபடியுள்ளதென்றும், வாதி

யின் தாவா காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுப் போய்விட்டதாகவும் அந்த உயில் செல்லத்தகுந்ததில்லை யென கோர்ட்டார் கண்டு பிடித்தாலும், விதந்துவுக்குச் சேரவேண்டிய டவர்த்தொகை முழுவதும் கொடுத்தாலன்றி வாதியின் வழக்கு நிற்கத்தகுந்ததல்லவென்றும், மற்ற பாகஸ்தர்களையும் கக்ஷிக்காரராகச்சேர்த்துக்கொண்டு வராத இந்த தாவா நன்ஜாயிண்டர் அவ் பார்டிஸ் என்ற தோஷத்துக் குள்ளாக்கப்பட்டிருக்கிறதென்றும் பிரதிவாதி கக்ஷியாடினான்.

முனிசீப் பிரதிவாதி கக்ஷி சரியானதென தீர்மானித்து வாதியின் வழக்கை தள்ளுபடி செய்து விட்டார்கள். இதன்மேல் டிஸ்டிரிக்ட் கோர்ட்டில் அப்பீல் செய்யப்பட்டதில் பல விஷயங்களைப்பற்றி அபிப்பிராயஞ் சொன்னார்களே யன்றி, டவர் கடன் தீர்ந்துவிட்டதென்றாவது அல்லது இல்லை யென்றாவது, தீர்ந்துவிட்டால் எப்போது தீர்ந்ததென்றாவது, யாதொரு விபரமுஞ் சொல்லவில்லை. தாவா சொத்துக்களுக்கு பாத்தியமுடையவர்கள் அனைவரும் இதில் கக்ஷிக்காரர்களாக சேர்க்கப்படாததினாலே அவர்களெல்லோரையுங் கக்ஷிக்காரர்களாகச் சேர்த்து கேஸை விசாரித்து முடிவு செய்யும்படி கீழ்க்கோர்ட்டுக்கு நம்பரை யனுப்பினார்கள். எல்லா பாத்தியஸ்தர்களும் இந்த தாவாவில் கக்ஷிக்காரராகச் சேர்க்கப்படவேண்டியது அவசியமில்லை யென வாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்கிறார்.

தீர்ப்பு:—இறந்த மகமதியனுக்குள்ள வார்சுகளில் வாதி யொருவள். அவள் தன் பாகத்துக்குமட்டில் வழக்கிடுகிறாள். இவள் தன் பாகத்துக்கு மேல் ஜாஸ்தி கிடைக்கவேண்டுமென வழக்கிடவில்லை. மற்ற பாகஸ்தர்களில் சிலர் தங்களுக்கு பாகம் வேண்டாமென்று விட்டுவிடலாம். மற்ற பாகஸ்தர்களையும் இதில் கக்ஷிக்காரராகச் சேர்ப்பது மெத்த அனாவசியம். அதனால் வாதிக்கு மெத்த தொந்திரவுகளுண்டாகும். அதனால் கீழ் அப்பீல் கோர்ட்டாருடைய தீர்மானத்தை ரத்து செய்கிறோம்.

கல்கத்தா ஹைகோர்ட்டு.

1909 வருஷத்திய மிஸலேனியஸ் சீவில் அப்பீல் நம்பர். 407

ஜட்ஜிகள்	கலிபிரசன்ன கோஷ்
ஜஸ்டிஸ் மிஸ்டர் காக்ஸ்	அ. வாதி
துரையவர்கள்	V
ஜஸ்டிஸ் மிஸ்டர் ரேய் அவர்கள்	ஷேக் கொலாம் ருமன் வு·
	அ. பிரதிவாதிகள்

தீர்ப்பு 1—7—13.

5 [சீவில் புரிஸீஜர் கோடு]

ஒரு அசல் டிக்கிரி மற்றொரு பாத்தியஸ்தாபன டிக்கிரியால் தடைப்படுத்தப் பட்டால் அது அசல் டிக்கிரி நிறைவேறு நடவடிக்கைகளை தடை செய்யு மென்பது.

கோலாம் றகமன் என்பவர் ஒரு சொத்தை அப்பீல் வாதிக்குப் பெந்தகம் வைத்தார். அப்பெந்தகப் பத்திரத்தின் பேரில் அப்பீல் வாதி வழக்கிட்டு டிக்கிரி பெற்று சிலசொத்துக்களை ஜப்தி செய்தார். அந்தச்சொத்து வாக்வ் சொத்து அதாவது தர்மசொத்தென்றும், கொலாம் றகமன் பேரிற் பெற்ற அ-வாதியின் கடனுக்கு அந்தச் சொத்துக்கள் கட்டுப்படமாட்டா வென்றும், யாகூப் உஸ்ஸென் என்பவர் வழக்கிட்டு அந்தப்படியே டிக்கிரி பெற்றார். அதைப் பற்றி அ. வாதி இந்தக் கோர்ட்டுக்கு அப்பீல் செய்தார். இந்த அப்பீல் விசாரணை மத்தியில் அந்த யாகூப் உஸ்ஸென் இறந்து விட்டார். அவருக்கு கொலாம் றகமனும் நஜுபீபீ இருவரும் வார்சாகச் சேர்க்கப் பட்டார்கள். கொலாம் றகமனைப் பற்றின வரையில் அப்பீல் தள்ளுபடி செய்யப்பட்டது. இந்த அ. வாதியும் நஜுபீபீயும் ஒரு விதமாக ராஜி செய்து கொண்டார்கள். அதனபடி கீழ்க் கோர்ட்டு டிக்கிரி ரத்து செய்யப்பட்டு தாவாவிற் கண்ட சொத்தில் நாலிலொரு பாகத்தைத் தொடர்ந்து அ. வாதி தன்னுடைய டிக்கிரித் தொகையை வசூலித்துக் கொள்ளுகிறதென்று டிக்கிரி யேற்பட்டது. அ. வாதி தன்னுடைய டிக்கிரி நிறை வேற்ற நாஜு பீபீயை மட்டில் பிரதிவாதியாகச்சேர்த்துமனுக் கொடுத்தார். இது விபரம் கொலாம் றகமனுக்குத் தெரிந்தவுடன், அவர் தான் அந்த தர்ம சொத்துக்கு ஏகதேசத்தில் மட்வாலி பாத்திய முடையவரென்றும், அந்தச் சொத்தைத் தொடர்ந்து

டிக்கிரித் தொகை வசூலிக்கப்படக் கூடாதென்றும், கக்ஷியாடினார். முதல் கோர்ட்டார் அ- வாதியின் மனுப்படி டிக்கிரி நிறைவேற்றிக்கொள்ள உத்திரவு செய்து விட்டார். கீழ் அப்பீல் கோர்ட்டார்: அ. வாதி இந்த தர்ம சொத்தைத் தொடர்ந்து தொகை வசூலிக்கக் கூடாதென அ. வாதியின் நிறைவேற்று மனுவைத் தள்ளுபடி செய்து விட்டார்கள். இந்தத்தீர்ப்பு மாற்றப்படவேண்டுமென அ. வாதி அப்பீல் செய்தார்.

தீர்ப்பு:—பாத்தியஸ்தாபன வழக்கில் அ.வாதியும் நஜுபீபீயுஞ் செய்து கொண்ட இராஜிநாமா டிக்கிரி மட்வாலியாகிய கொலாம் றகமானை எவ்விதத்திலுங்கட்டுப்படுத்தப்படமாட்டாது; அவனைப் பற்றி அந்த அப்பீல் தள்ளுபடி செய்யப்பட்டிருப்பதால் கீழ் கோர்ட்டு டிக்கிரி யுறுதி செய்யப்பட்டதென்றே எண்ணப்படவேண்டும். தாவா பெந்தகத்திற் கண்ட சொத்தை தர்ம சொத்தென்று ஸ்தாபிக்கப்பட்டிருப்பதினாலே அது விற்று முதல் செய்யப்பட அருகமுள்ள சொத்தல்ல; கொலாம் றகமான் இந்த பெந்தக டிக்கிரிக்கு பிரதிவாதியாக விருந்தாலும் அவன் தன் சொந்த பாத்தியதையின் கீழ் ஆக்ஷேபிக்க வில்லை. இறந்த யாகுப் உஸ்ஸெனுக்கு வார்சுக்கிரமத்தில் மட்வாலி ஸ்தானத்தில் ஆக்ஷேபிக்கிறார். தாவா சொத்து ஸ்வாமிக்கு சொந்தமானது; அது ஏல விற்று முதல் செய்யப்பட அருகமுள்ளதல்ல. அதனால் அ. வாதியின் அப்பீல் செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

சென்னை ஹைகோர்ட்டு.

1912வருஷத்திய சீவில் மிஸலேனியஸ் 2 வது அப்பீல் நம்பர் 8.

தீர்ப்பு 20—3—13.

ஜட்ஜிகள்.	இராமசாமி செட்டி அ. வாதி
ஜஸ்டிஸ் பென்ஸன் துரையவர்கள்.	V
ஜஸ்டிஸ் மிஸ்டர் சுந்தரமய்யரவர்கள்	இராமனாதன் செட்டி
	அ. பிரதிவாதி

4. [லிமிடேஷனாக்ட்.]

ஸ்டாம்பு நோட்டீஸ் சனிக்கிழமை போடப்பட்டு திங்கட்கிழமை ஸ்டாம்பு கோடுபேட்டாலும், சனிக்கிழமை காபி தயாராயிரு

ந்து திங்கட்கிழமை அவைகள் பெற்றுக் கோள்ளப்பட்டாலும், தினங்கள் எண்ணப்படுவதில் மத்தியில் வந்த ஞாயிற்றுக்கிழமைகள் சேர்க்கப்படக்கூடாதேன்பது.

இராமனாதபுரம் டிஸ்டிரிக்ட் கோர்ட்டார் செய்த உத்திரவின் பேரில் அப்பீல்.

இந்த டிஸ்டிரிக்ட் கோர்ட்டில் அப்பீல் செய்யப்படவேண்டிய நகல்களுக்காக பரமகுடி டி. மு. கோர்ட்டில் மனு கொடுக்கப்பட்டதில் 1911-ம் வருஷம் ஜூலை மாதம் 1-ந்தேதி சனிக்கிழமை ஸ்டாம்பு நோட்டீஸ் போடப்பட்டது. அடுத்ததினம் ஞாயிற்றுக்கிழமையாகப் போய்விட்டதால் ஜூலை மாதம் 3-ந்தேதி ஸ்டாம்பு கொடுக்கப்பட்டது; பிறகு அந்தக் காபிகள் தயாராகிவிட்டதாக ஜூலை மாதம் 15-ந்தேதி சனிக்கிழமை நோட்டீஸ் போடப்பட்டது. அடுத்த தினம் ஞாயிற்றுக்கிழமையாக விருந்தபடியால் ஜூலை மாதம் 17-ந்தேதி நகல்கள் வாங்கப்பட்டன. இந்த இரண்டு ஞாயிற்றுக்கிழமைகளையும் கணக்கிற் சேர்க்காவிட்டால், அப்பீல் 30 தினங்களுக்குள் கொடுபட்டதாக வேற்படுகிறது. அதனால் கீழ்க் கோர்ட்டார் செய்த உத்தரவை ரத்துசெய்து அப்பீலை பயிலில் வைத்துக்கொண்டு சட்டப்படி முடிவு செய்யும்படி தீர்மானிக்கிறோம்.

கல்கத்தா ஹைகோர்ட்.

1910ஹூத்திய 2-வது அப்பீல் நம்பர் 1522.

தீர்ப்பு—4—7—13.

ஜட்ஜிகள் மிஸ்டர் ஜஸ்டிஸ் N. R. சட்டர்ஜியா அவர்கள் மிஸ்டர் ஜஸ்டிஸ் வாம்ஸ்லே	பிடாசிரும். அ. வாதி V குஞ்சிசிங் ஆ. அ. பிரதிவாதிகள்

5. [லிமிடேஷ ஹக்ட்.]

வட்டிக்காக வரவு வந்ததேன்பதை கடன் கோடுத்தவன் ருஜூப்பிக்க வேண்டுமேன்பதும், கடன்காரன் வட்டிக்கேன்றே கோடுத்தானேன்று ஸ்பஷ்டமாக ருஜூப்பிக்க வேண்டும், அல்லது அத்தோகை வட்டிக்கேன்றே கோடுபட்டதேன் றெண்ணத்தகுந்த சந்தர்ப்பங்கள் ருஜூப்பிக்கப்பட வேண்டுமேன்பதும்.

வாதிக்கும் பிரதிவாதிகளின் தகப்பனுக்கும் நெடுகிலும் ரொக்க பத்து வரவு நடந்து வந்ததாகவும், பிரதிவாதிகளின் தகப்பனிறந்த பிறகும், பிரதிவாதிகள் பத்து வரவு செய்து வந்ததாகவும், அந்த பத்து வரவு தொகையின் வட்டிக்காக 1907-ம் வருஷத்தில் ரூபா 43 வரவு வந்திருப்பதாகவும், அதனால் வாதியின் தாவாவுக்கு காலாவதி தோஷமில்லை யென்றும் 1909-ம் வருஷம் மே மீ தம் 28-ந்தேதி வாதி வழக்கிட்டார்.

வாதியின் பத்து வரவு, கணக்கு தீர்த்துக்கொண்டது அத்தொகையை கொடுப்பதாக வாக்களித்தது முதலியனவற்றைப் பிரதிவாதி ஒப்புக்கொள்ளாதிருந்ததுடன் வாதியின் தாவாகாலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டதாகவுங் கக்ஷிபாடினார்கள்.

கீழ்க்கோர்ட்டார் வாதியின் பிராதை தள்ளுபடிசெய்து விட்டதால் வாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்தார்.

தீர்ப்பு:—5 மெட்ராஸ் லா டைம்ஸ் 89, 35, கல்கத்தா 813 முதலிய தீர்ப்புகளில் ஒருதொகை வட்டிக்காகத்தான் வரவு வந்ததென்பதை கடன் கொடுத்தவன் திருப்திகரமாக ருஜூப்பிக்கும் வரையில் அத்தொகை வட்டிக்கு வந்ததாக எண்ணப்படக்கூடாதென்றும், அத்தொகை வட்டிக்குத்தான் கொடுத்ததாக கடன்காரன் வெளிப்படையாக ஒப்புக்கொண்டிருக்கவேண்டுமென்றும், அல்லது அவ்வித எண்ணத்துடன் அந்த கடன்காரன் கொடுத்தானென்பதற்கு தகுந்த ருஜூக்களிருக்க வேண்டுமென்றுந் தீர்மானித்திருக்கிறார்கள். இந்த வாதியினால் அவ்வித ருஜூக்கள் ஒன்றும் ஏற்படவில்லை; அதனால் வாதி வட்டிக்கு வரவு வந்ததாகச் சொல்வதை நாங்கள் நம்பவில்லை. வாதியின் கணக்குபடி மூன்று வருடங்களுக்குள் ரூபா 50 பிரதிவாதிகளுக்கு கொடுபட்டிருக்கிறது. அந்தத்தொகைக்கு மட்டில் 100க்கு 6 வீதம் வட்டியுடனும் அதற்குள்ள செலவுடனுந் தீர்ப்புசெய்கிறோம்.

கல்கத்தா ஹைகோர்ட்டு.

1911 ஹூத்திய 2 வது அப்பீல் நம்பர் 1267

தீர்ப்பு 5—7—13.

ஜட்ஜிகள்.	
ஜஸ்டிஸ் ஸர் அஷுடோஷ் மூகர்ஜி அவர்கள்	மாடேஷிக் அ-வாதி
ஜஸ்டிஸ் மிஸ்டர் பீச்கிராப்ட் துரையவர்கள்	V. பெய்குந்த நாத்கர் அ. பிரதிவாதி

1. [காண்டிராக்டு ஆக்ட்]

ஒரு கடன் காலாவதியாகப் போனவிபரந் தெரியாமலே அக்கடன் கொடுப்பவன் அதை யொப்புக்கொண்டு எழுத்துமூலமாக தஸ்தாவேஜி எழுதிக்கொடுத்தால் அது செல்லும்படி யுள்ளதென்பது.

வாதி பிரதிவாதிபேரில் ஒரு வெண்ணலை டிக்கிரி பெற்றிருந்தான். அந்த டிக்கிரியை நிறைவேற்ற மனுக்கொடுத்ததில், அது காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுப் போய்விட்டதென்பதை, கோர்ட்டார் தெரிந்துகொண்டு, அந்த மனுவைத் தள்ளுபடி செய்யக் கூடாதென்பதற்குக் காரணமிருந்தால் தெரிவிக்கும்படி யுத்திரவு செய்தார்கள். இதன்மத்தியில் தாவா டிக்ரிகடனைப் பற்றி வுபயவாதிகளுக்குள்ளும் ஒரு வித சமாதான மேற்பட்டு வாதிக்கு பிரதிவாதி மேற்படி டிக்கிரிகடனுக்காக ஒரு பெந்தக பத்திரம் எழுதிக் கொடுத்துவிட்டான். கோர்ட்டார் செய்த உத்திரவுக்கு வாதி எவ்வித சமாதானமுஞ் சொல்லாததினாலே அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது. வாதி தனக்குக் கிடைத்த பெந்தக பத்திரப்படி வழக்கிட்டார். காலாவதியாகப் போன டிக்கிரிகடனுக்காக தன்னை யேமாற்றி பெந்தகபத்திரம் எழுதி வாங்கியதால் தாவா பெந்தகபத்திரம் செல்லத்தகுந்ததல்ல வென்று பிரதிவாதி கக்ஷியாடினார். கீழ்கோர்ட்டார்கள் இருவரும் வாதியின் தாவாப்படியே தீர்ப்புசெய்துவிட்டார்கள். இந்த தீர்ப்புகள் சட்டவிரோதமானதென பிரதிவாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்தார்.

தீர்ப்பு:—*வாதி பெற்றிருந்த வெண்ணலைடிக்கிரிகடன் காலாவதியாகப் போன விவரம் பிரதிவாதிக்கு தெரியாதென்றும், அது விபரம் வாதிக்குத்தெரிந்திருந்தும், அது விவரம் பிரதிவாதிக்கு*

தெரிவிக்காமல், மோசவகையாக தாவா பெந்தகபத்திரம் எழுதி வாங்கி யிருப்பதால் அது செல்லத்தக்கதல்ல வென்றும் காண்டிராக்ட் ஆகட்டு 25 வது செக்ஷன் கிளாஸ் 3, தாவா கேசுக்கு ஒற்றுமையில்லை யென்றும், அது காலாவதியாகப் போனவிபரம் நன்றாகத் தெரிந்து மனப்பூர்த்தியாக எழுதிக் கொடுத்ததற்கு மட்டில், அது பொருந்திய தென்றும், பிரதிவாதி வாதித்தான். காலாவதியாகப் போனவிபரம் நன்றாகத் தெரிந்து அந்தக்கடனுக்கு எழுதிக்கொடுத்த தஸ்தாவேஜி மட்டில் செல்லும். அது விபரந் தெரியாமல் எழுதிக் கொடுத்த தஸ்தாவேஜி செல்லாது என்பதற்கு அந்த காண்டிராார்ட்டு ஆகட்டு 23 வது செக்ஷன் கிளாஸ் 3 ல் யாதொன்றுந் தெரியவில்லை யென்றும், அது எப்படியிருந்தபோதிலும் அந்த தஸ்தாவேஜி செல்லுமென்பதே சட்டத்தின் கருத்தென்றும், பிரதிவாதியின் அப்பீல் செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

சென்னை ஹைகோர்ட்டு,

1910 ஹூ த்திய 2 வது அப்பீல் நம்பர் 1748.

தீர்ப்பு 5 - 2 - 13.

ஜட்ஜிகள்.	
ஜஸ்டிஸ் மிஸ்டர் சதாசிவய்யரவர்கள்	அப்பாவு செட்டியார் அ. வாதி
ஜஸ்டிஸ் மிஸ்டர் டையாப்ஜி அவர்கள்	V. நஞ்சப்பா கவுண்டன் ஆ. அ. பிரதிவாதிகள்

2. [காண்டிராக்ட் ஆக்ட்.]

ஒருவன் இருவர்பேருக்கு ஒரு பத்திர மெழுதிக் கொடுத்திருந்தால் அவ்விருவரில் ஒருவரே முழுத்தொகையும் வசூலிக்கலா மென்பதும், அந்தப்பத்திரம் எழுதிக்கொடுத்தவன் வசம், அந்த பத்திர மிருக்கும்பட்சத்தில் அக்கடன் தீர்ந்துவிட்டதாக எண்ணப்படவேண்டுமென்பதும், அக்கடன் தீர்க்கவில்லையென்று ருஜூப்பிக்க வேண்டிய கடமை அப்பத்திரம் பெற்றவனைப் பொறுத்த தென்பதும்.

வாதிக்கும் 10 ம் பிரதிவாதிக்கும் முதல் பிரதிவாதியால் ரூபா 1500-க்கு ஒரு பெந்தக பத்திரம் எழுதிக் கொடுக்கப்பட்டிருந்தது. அதில் வாதி தன் வீதம் பாதி ரூபா 150 ம், அதன்

வட்டி ரூபா 152-8 ம் கிடைக்க வேண்டு மென வழக்கிட்டார். 2 முதல் 7 பிரதிவாதிகள் அந்த பெந்தக சொத்துக்களை தாவா பெந்தக பத்திர தேதிக்கு பிற்பட்டு சாசனம் பெற்றதால் அவர்கள் பிரதிவாதிகளாகச் சேர்க்கப்பட்டார்கள்.

தாவா பெந்தக கடன் பூராகவும் 10 ம் பிரதிவாதியிடங் கொடுபட்டு தீர்ந்து விட்டதாகவும், அது விபரங்கண்டு அந்த பத்திரத்திலேயே வரவு வைக்கப்பட் டிருப்பதாகவும், தாவா பெந்தக பத்திரத்தை தாகல் செய்து 2 முதல் 7 பிரதிவாதிகள் ஸ்டேட்மெண்டு கொடுத்தார்கள். இதை யாதரித்தே 10ம் பிரதிவாதி தான் முழுத்தொகையும் பெற்றுக் கொண்டதாக ஸ்டேட் மெண்டு கொடுத்தான்.

இந்தக் கேசை விசாரித்த கோயம்புத்தூர் சப் ஜட்ஜி தாவா பெந்தகக் கடன் பூராவையும் 10 ம் பிரதிவாதி தான் வசூலித்து விட்டதாக வொப்புக்கொள்ளுவதாலும், தாவா பெந்தக பத்திரத்தில் அது விபரம் வரவு வைக்கப்பட்டு 2 ம் பிரதிவாதியால் தாகல் செய்யப்பட் டிருப்பதாலும், அந்த பெந்தக பத்திரம் பூராவுந் தீர்ந்து விட்டதாக வாதியின் வழக்கை தள்ளுபடி செய்து விட்டார்கள். ஆனால் தாவா பெந்தக பத்திரத் தொகை பூராவும் 10 ம் பிரதிவாதியால் கொடுபட்ட தென்றாவது அல்லது வாதி பாதியும் 10 ம் பிரதிவாதி பாதியுமாக கொடுத்தார்களென்றாவது விசாரித்துத் தெரிந்து கொண்டு அது விஷயமாக யாதொன்றுஞ் சொல்லவில்லை. இத் தீர்ப்பு ரத்து செய்யப்பட வேண்டுமென வாதி, டிஸ்டிரிக்ட் கோர்ட்டில் அப்பீல் செய்ததில், பல கக்ஷிகள் சொல்லப்பட்டதில், 10 ம் பிரதிவாதி கொடுத்த எழுத்து மூலமான ஸ்டேட்மெண்டை ருஜுவாக, அங்கீகரிக்கக் கூடாதென்பதும், தாவா கடன் தீர்ந்து விட்டதென்பதை பிரதிவாதிகள் ருஜுப்பிக்காததினால் வாதியின் தாவா அப்படியே தீர்ப்பு செய்யப்படவேண்டியது அவசிய மென்றும், வாதி வக்கீல் வாதித்தார். 10-ம் பிரதிவாதி தான் முழுத்தொகையும் வசூலித்து விட்டதாக தன்னுடைய எழுத்து மூலமான ஸ்டேட்மெண்டில் ஒப்புக்கொண்டிருப்பதுடன், அதை யனுசரித்து தாவா பெந்தக பத்திரம் 2 ம் பிரதிவாதியால் கோர்ட்டில் தாகல் செய்யப்பட் டிருப்பதைக் கொண்டு அதுவே தாவா கடன் தீர்ந்து விட்டதற்கு பெருத்த ருஜு வென்று வாதியின் அப்பீலை டிஸ்டிரிக்ட் கோர்ட்டார் தள்ளுபடி செய்து

விட்டார்கள். இத்தீர்ப்பு ரத்து செய்யப்பட வேண்டு மென்று வாதி அடியிற் கண்ட ஆதாரங்களைக் கண்டு ஹைகோர்ட்டில் அப்பீல் செய்தார்.

(1) கீழ் கோர்ட்டார் தீர்மானம் சட்டத்துக்கு விரோதமானவை.

(2) தாவா பெந்தக பத்திரம் இருவர் பேருக்கும் எழுதிக் கொடுக்கப்பட்டு அத்தொகை இருவரிடத்திலுங் கொடுபடவேண்டிய தென்று கண்டிருக்க, அத்தொகை முழுவதும் ஒருவரிடத்திலேயே கொடுபடலா மென்றும் அவ்விதங் கொடுப்பது மற்றவனையுங்கட்டுப்படுத்து மென்றும், டிஸ்டிரிக்ட் கோர்ட்டார் தீர்ப்பு செய்தது பிசகு.

(3) முழுபெந்தகக்கடனும் ஒருவரிடத்திலேயே கொடுத்து விடுவதினாலே மற்றொருவருக்கு அந்த பெந்தக சொத்திலாவது, அந்த பெந்தகதார்கள் பேரிலாவது பாத்தியமில்லை யென்று டிஸ்டிரிக்ட் கோர்ட்டார் சொல்வது சரியல்ல.

(4) வாதிக்கு ஏதேனும் பரிகாரங்கிடைக்கக்கூடியதாக விருந்தால் அத்தொகைக்கு மற்றொரு பெந்தகம் பெற்றவர் பேரிற்றொடர்ந்து தொகை வசூலிக்கலாமே யன்றி பெந்தகதாரனிடமிருந்தாவது தன் வீதந்தொகையை வசூலிக்கக்கூடாதென்று டிஸ்டிரிக்ட் கோர்ட்டார் சொல்வது சரியல்ல.

(5) கீழ் கோர்ட்டார்கள் எல்லா இஷ்ஷியுக்களைப்பற்றியும் விசாரித்து வாதிக்கு அனுகூலமாகத் திர்ப்பு செய்திருக்கவேண்டும்.

ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்களுடைய தீர்மானம்:—பெந்தகம் பெற்றவர்கள் பலரில் ஒருவரிடத்தில் அந்த பெந்தகக் கடன் பூராவுங் கொடுத்து விடுவது அந்தக்கடன் பூராவுந் தீர்ந்து விட்டதாகவே கொள்ளப்படவேண்டும். (24 மெட்ராஸ் லா ஜர்னல் 333, 13 மெட்ராஸ் லா டயம்ஸ் 268 இவைகளைப்பார்க்க) பெந்தகம் வைத்தவனிடமிருந்து அந்த பெந்தக பத்திரம் தாகல் செய்யப்படுவது அந்தக்கடன் தீர்ந்து விட்டதாகவே ஊகிக்கப்பட வேண்டும். அவ்விதங் கடன் தீர்க்கப்படவில்லை யென்று ருஜுப்பிக்க வேண்டிய கடமை பெந்தகம் பெற்றவனைப் பொறுத்ததாக விருக்கிறது.

பெந்தகம் பெற்றவர்களி லொருவர் அந்த பெந்தகக்கடன் முழுவதும் வந்து விட்டதாக ஒப்புக்கொள்ளுதலானது மற்ற பெந்தக பத்திரகூட்டாளிக்கு விரோதமாக சாக்ஷிய சட்டம் 19-வது செக்ஷன்படி ருஜுவாக அங்கீகரிக்கப்பட வேண்டும். ஒருவர் தன்னுடைய பாத்தியதை அல்லது அக்கரைக்கு விரோதமாக ஒப்புக்கொண்டால் அது தகுந்த ருஜுவாக அங்கீகரிக்கப்பட வேண்டும்.

எழுத்து மூலமான ஸ்டேட்மெண்டுகள் தவிர வேறே ருஜுக்கள் இல்லாதிருந்து அது சாக்ஷிய சட்டம் 19 அல்லது 32 வது செக்ஷன்படி ருஜுவாக அங்கீகரிக்கக்கூடியதாக விருந்தால் அந்த ஸ்டேட்மெண்டுகள் தஸ்தாவேஜிகளாக எடுத்துக் கொள்ளப்பட்டு பின்பு அவைகள் ருஜுக்களாக அங்கீகரிக்கப்பட வேண்டும். அதனால் இந்த 2 வது அப்பீலை செலவுடன் தள்ளுபடி செய்கிறேன்.

ஜஸ்டிஸ் டயாப்ஜி அவர்களின் தீர்மானம்:—பெந்தகக் கூட்டாளி யொருவன் தான் முழுபெந்தகத் தொகையும் பெற்றுக் கொண்டதாக ஸ்டேட்மெண்டு கொடுப்பது சாக்ஷிய சட்டம் 19 வது செக்ஷன்படி ஒப்புக்கொள்ளுதலாகாது. மற்ற வுடன்பெந்தகதாரனுக்கு விரோதமாக அதை உபயோகப்படுத்தக் கூடாது. அந்த செக்ஷன் விளக்கங்களில் அது வரவில்லை. அந்த சாக்ஷிய சட்டம் 21 முதல் 29 வது செக்ஷன் கீழும் வரவில்லை.

அந்த 19 வது செக்ஷனுடைய கருத்து சில ஸ்டேட்மெண்டுகள் அங்கீகரிக்கதக்கது, அல்லது ஒப்புக் கொள்ளத்தக்கது என்று சொல்வதற்காக ஏற்பட்டதல்ல. சாக்ஷிய சட்டத்தின் விதிகளின்படி அவைகள் ஒப்புக் கொள்ளக் கூடியனவாவென்று யோஜிப்பதற்கு முந்தியே யாரால் கொடுபடும் ஸ்டேட் மெண்டுகள் அங்கீகரிக்கத்தக்கது என்று எடுத்துச் சொல்ல வேண்டியதற்காக ஏற்பட்டன. 19 வது செக்ஷனிற்கண்ட ஸ்டேட்மெண்டுகள் 17 வது செக்ஷனில் சொல்லப்படும் தன்மைக்கு ஒற்றுமையாக விருக்கும்பட்சத்தில் அவைகள் ஒப்புக்கொள்ளப்படலாம், 21 வது செக்ஷன் படிக்காவது அதைத் தொடர்ந்த செக்ஷன்களின்படிக்காவது ருஜுக்களாக அங்கீகரிக்கப்படலாம். வழக்குச் செல்லும் போது ஒப்புக்கொள்ளுதலுக்கும் சாக்ஷியசட்டப்படிக் கேற்பட்ட

ஒப்புக்கொள்ளுதல்களுக்கும் மெத்த வித்தியாசங்களிருக்கின்றன. பெந்தக பத்திரத்தில் வரவு வைக்கப்பட்ட விஷயத்தை ருஜுப்பிக்கத் தவறியது கவனக்குறை வென்று தெரிகிறது. பெந்தக பத்திரம் பிரதிவாதியிட மிருந்து தாகல் செய்யப்பட்டிருப்பதால் அது தீர்ந்து விட்டதாகவே ஊகிக்க வேண்டியதாக விருக்கிறது. 10 ம் பிரதிவாதி இப்பால் இறந்துவிட்டபடியால் அவனுடைய ஸ்டேட்மெண்டு சாக்ஷிய சட்டம் 32 வது செக்ஷன் 2 வது பாராப் படி ருஜுவாக அங்கீகரிக்கப் படலாம். மேற்கண்ட காரணங்களினாலே இந்த 2வது அப்பீல் தள்ளுபடி செய்யப்பட வேண்டு மென்பதை நானும் ஒத்துக் கொள்ளுகிறேன்.

சென்னை ஹைகோர்ட்.

1912 ௵த்திய 2 வது அப்பீல்கள் நம்பர் 811.

தீர்ப்பு 10—4—13.

ஜட்ஜிகள்	முத்தியா செட்டி
ஜஸ்டிஸ் மிஸ்டர் சங்கரநாயரவர்கள்	அ. வாதிகள்
ஜஸ்டிஸ் மிஸ்டர் டயாப்ஜி அவர்கள்	V.
	சுப்பன் சேர்வை
	அ. பிரதிவாதி.

1 [ரிஜிஸ்டிரேஷ ஞக்ட்]

ரிஜிஸ்டிரேஷ ஞக்ட்டு 77 வது செக்ஷன்படி சீவில் கோர்ட்டார் தீர்ப்பு செய்த தேதிமுதல் 30 தினங்களுக்குள் ரிஜிஸ்டர் செய்யப்பட வேண்டுமென்பது தீர்ப்பு சொன்னதேதி முதற்கொண்டல்ல வென்பதும் டிக்கிரி தயாரான தேதிமுதல் 30 தினங்களென்பதும்.

ஒரு சாசனஞ் செய்து கொடுத்தவன் கிரமப்படி ரிஜிஸ்டர் செய்து கொடுக்காததினாலே அந்த சாஸனம்பெற்றவன் ரிஜிஸ்டிரேஷனாக்ட்டு 77 வது செக்ஷன்படி சிவில் கோர்ட்டில் வழக்கிட்டு டிக்கிரி பெற்றான். இந்த தீர்ப்பு 1910 ௵ பிப்பரவரிமாதம் 3௳ சொல்லப்பட்டது. அந்த மாதம் 8௳ காபிக்கு மனுகொடுக்கப்பட்டது. 1910 ௵ மார்ச்சு மாதம் 17௳ டிக்கிரி தயாராகி ஜட்ஜிகையெழுத்து செய்தார். என்ன காரணத்தினாலோ இந்த டிக்கிரிகாபி இவருக்கு மார்ச்சுமாதம் 23௳ தான் கிடைத்தது. இவர் இந்த சாசனத்தை சப்ரிஜிஸ்ட்ராராபிசில் ஏப்ரல் மாதம் 15௳ தான் தாகல்

செய்தார்; அதாவது டிக்கிரி தயாரான 29ம் நாள் கோர்ட்டில் தாகல் செய்தார். ரிஜிஸ்ட்ரார் அதை கிரமப்படி ரிஜிஸ்டர்செய்து கொடுத்து விட்டார்.

இந்தச் சாசனம் எழுதிக்கொடுத்தவன் அந்த தஸ்தாவேஜி ரிஜிஸ்டிரேஷனாக்ட்டு 77 வது செக்ஷன்படி தீர்ப்பு சொன்ன 30 தினங்களுக்குள் ரிஜிஸ்டர் செய்யப்படாததால் அந்த காலத்துக்கு பிற்பட்டு ரிஜிஸ்டர் செய்தது சட்டப்படி செல்லாதென்றும், ஆகையால் அந்த சாசனம் ரத்து செய்யப்பட்டு அந்த சாசனசொத்து தனக்கு வசமாக வேண்டுமென்றும் மதுரை டிஸ்டிரிக்ட் முனிசிப் கோர்ட்டு 1910 ௵த்திய அசல் 571 நம்பரில் வழக்கிட்டார். கீழ் கோர்ட்டார் வாதிகளுக்கு விரோதமாக தீர்ப்பு செய்துவிட்டதால் ஹைகோர்ட்டில் அடியிற்கண்ட விஷயங்களைக் கண்டு அப்பீல் செய்தார்கள்.

(1) டிக்கிரியில் எந்த தேதி கண்டிருக்கிறதோ அந்த தேதி முதல் 30 தினங்களுக்குள் தாவா சாசனம் சப்ரிஜிஸ்ட்ரார் ஆபீசில் தாகல் செய்யப்படவில்லை.

(2) அந்த டிக்கிரியிற் கண்டதேதியில் ஜட்ஜி அதில் கையெழுத்து செய்யவில்லை, வேறு தேதியில் தான் ஜட்ஜி கையெழுத்து செய்தார் என்று சொல்வது ஏற்பட்டரிகார்டுக்கு முற்றிலும் விரோதமாக விருப்பதால் அந்த ருஜா எந்த விதத்திலுஞ் செல்லத்தகுந்ததல்ல.

(3) எந்தத் தேதியில் ஜட்ஜி டிக்கிரியில் கையெழுத்து செய்தாரென்பதை சப்ரிஜிஸ்டிரார் தெரிந்து கொள்ள எவ்வித ஹேதுவுமில்லாததினாலே டிக்கிரியிற் கண்ட தேதியைத்தான் சப்ரிஜிஸ்டிரார் அங்கீகரித்து தாவா சாசனத்தை ரிஜிஸ்டர் செய்யாதிருக்க வேண்டும்.

தீர்ப்பு:—சிவில் புரிஸீஜர் கோடு 20வது ஆர்டர் 7வது ரூலில் தீர்ப்பு எந்த தேதியிற் சொல்லப்படுகிறதோ அதே தேதிதான் டிக்கிரியினு மெழுப்படவேண்டுமென சொல்லப்பட்டிருக்கிறது. செலவு தொகை முதலியனவற்றிற்கு மெமோ முதலியன கொடுத்தபிறகு டிக்கிரிதயாரிக்கப்பட வேண்டியதாக விருக்கிறது. இதனால் டிக்கிரிதேதி யென்பது டிக்கிரிதயாரிக்கப்பட்டு ஜட்ஜி அதில் கையெழுத்து செய்த தேதியேயன்றி டிக்கிரியில் போடப்பட்ட

தேதியல்ல. இவ்வித கேஸ்களில் ஜட்ஜிகள் தாங்கள் கையெழுத்து செய்த தேதியை அந்த டிக்கிரியிற்காட்டியிருந்தால் இவ்வித விவாதங்களுக்கு எவ்விதத்திலு மிடமிராது. இது விஷயமாக ரூல்ஸ் அவ் பிராக்டிஸில் விதிகள் ஏற்படுத்த வேண்டும். டிக்கிரி தயாரான தேதிமுதல் 30 தினத்துக்குள் தாவாசாசனம் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருப்பதால் அது செல்லுபடியுள்ளது. வாதிகளின் அப்பீல் செலவன்னியில் தள்ளுபடி செய்யப்பட்டது.

குறிப்புகள்.

சென்னை ஹைகோர்ட்டு தீர்மானங்கள்.

1912-ம் ௵த்திய 2-வது அப்பீல் நம்பர் 1713.

ஒரு இந்து விதந்து தன் புருஷன் சொத்துக்களைப் பராதீனஞ் செய்த 50 வருடங்களுக்குப் பின் அந்தப் பராதீனங்களைப் பற்றி வழக்கு ஏற்பட்டால், அந்தப் பராதீனம் பெற்றவர்கள் சொற்ப ருஜா விடுவதே போதுமானது; அந்தப் பராதீனங்கள் தகுந்த செலவுகளுக் கேற்பட்டதல்ல வென்று ருஜா விடவேண்டிய கடமை அனந்தர வார்சுகளைப் பொருத்ததாக விருக்கிறது.

* * *

1913-ம் ௵த்திய முதலாவது அப்பீல் நம்பர் 40.

ஒரு மைனருடைய கார்டியன் எந்த கோர்ட்டாருடைய ஜூரிஸ்டிக்ஷனில் வசிக்கிறாரோ அந்தக்கோர்ட்டார் மைனரை ஆஜர் செய்யும்படி யுத்திரவு செய்தால் அந்தப்படி ஆஜர் செய்ய கார்டியன் கடமைப்பட்டவர். அந்த மைனர் வேறு கோர்ட்டாருடைய ஜூரிஸ்டிக்ஷனி லிருப்பதால் தன்னைக் கட்டாயப் படுத்தக்கூடாதென்று கார்டியன் சொல்லக் கூடாது. எந்தக் கோர்ட்டாருடைய ஜூரிஸ்டிக்ஷனில் இந்த மைனர் வசிக்கிறானோ அந்தக் கோர்ட்டார் இந்த டிக்கிரியை நிறை வேற்றலாம்.

* * *

1910-ம் ௵த்திய 2-வது அப்பீல் நம்பர் 1033.

ஒரு பெந்தக பத்திரம் ரூபா 700-க்கு ஏற்பட்டிருக்கிறது. அதில் ரூ. 400 தான் ரொக்கமாககொடுபட்டது. பாக்கி ரூ. 300-க்கும் பிராமிசரி நோட்டு எழுதிக் கொடுத்திருந்தான். இந்த பெந்தகம் பெற்றவன் தன்னுடைய பாத்தியதையை வேறொருவனுக்கு மாற்றி விடுகிறான். இவ்விதம் பெந்தக பத்திரத்தை மேடர் பெற்றவன் தான் நல்ல எண்ணத்துடனுந் தகுந்த பிரதி பிரயே

ஜனத்துடனும் மேடர் பெற்றதாக ருஜுப்பித்தாலல்லது இந்த பத்திரத்தை மேடர் செய்து கொடுத்தவன் உண்மையில் எவ்வளவு கொடுத்திருக்கிறானோ அவ்வளவு தொகை தான் இவனுக்குக் கிடைக்கக் கூடும்.

*   *   *

1912 - ம் ௵த்திய 2 - வது அப்பீல் நம்பர் 932.

ஒரு ஸ்தாவர சொத்தைப் பற்றி கோர்ட்டில் வழக்கு நடந்து கொண்டிருக்கையில் அந்த கக்ஷிக்காரர்களி லொருவன் தனக்கு தாவா சொத்திலுள்ள பாத்தியதையை விட்டு விட்டதாகக் கோர்ட்டில் ராஜிமனுக் கொடுத்தான். அது ரிஜிஸ்டர் செய்யப்படாததினாலே அது செல்லுபடி யற்ற தென்று சொல்லக் கூடாது. இது விடுதலை செய்யப்பட வேண்டியதற்கு ஒருவித வுடன்படிக்கையாக எண்ணப்பட வேண்டும். ரிஜிஸ்டிரேஷனாக்ட்டு 17-வது செக்ஷன்படி ஸ்தாவர சொத்தின் பாத்தியதையைப் பொறுத்ததாக மாட்டாது.

*   *   *

1912 - ம் ௵த்திய சீவில் சில்லரை நம்பர் 277.

ஒரு பெந்தக பத்திரத்தைப்பற்றி சீவில் கோர்ட்டில் நடவடிக்கைகள் நடந்துவந்தன. இந்த வழக்கின் மத்தியில்கக்ஷிக்காரர்கள் இந்த வியாஜ்ஜியத்தை கிராம பஞ்சாயத்தார் முன்பாக தீர்த்துக் கொள்வதாக ஏற்பாடு செய்து கொண்டார்கள். இந்த ஏற்பாட்டினால் சீவில் கோர்ட்டார் இவ்வழக்கைப்பற்றி தீர்மானிக்காமல்நிறுத்திவைக்க நியாயமில்லை. ஏனென்றால் ஸ்தாவர சொத்துக்களைப் பற்றித் தீர்மானிக்க கிராமபஞ்சாயத்தார்களுக்கு அதிகாரமில்லை.

*   *   *

1912 - ம் ௵த்திய 2 - வது அப்பீல் நம்பர் 2220.

ஒருவன் தான் மைனராக விருந்த காலத்தில் தன்னுடைய சொத்துக்களை அக்கிரமமாக விற்று விட்டதாகவும், அந்த சாசனங்கள் ரத்து செய்யப்பட்டு தனக்கு சொத்துக்கள் வசமாக வேண்டுமென்றும் வழக்கிட்டிருந்தான். சாசனத்தில் கண்ட பெரும்பாகத் தொகைக்கு பிரதிப் பிரயோஜன மேற்பட்டிருப்பதால் அத்தொகைக்கு சாசன சொத்து ஜவாப்தாரியாக விருக்கப்படவேண்டுமென கீழ் கோர்ட்டார் தீர்மானித்தார்கள். பெரும்பாகத் தொகைக்கு பிரதிப் பிரயோஜன மிருப்பதால் இந்த சாசனம் ரத்து செய்யப்படக் கூடாதென அப்பீல் செய்யப்பட்டதில்பிரதிபிரயோஜன மிருப்பதாகத் தீர்மானிக்கப்பட்ட தொகைக்கு சாசன சொ

த்து ஜவாப்தாரியாக இருக்கவேண்டிய தெனத் தீர்மானிக்கப்பட்டது.

சென்னை ஹைகோர்ட்டு.

1912 ம் ௵த்திய கிரிமினல் ரேவிஷன் கேஸ் நம்பர் 400

1912 ம் ௵த்திய கிரிமினல் ரெவிஷன் மனு நம்பர். 317

தீர்ப்பு 21-2-13

ஜட்ஜி மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரநாய ரவர்கள்	A. கிருஷ்ணசாமிஅய்யர் மனுதார் V சந்திரவதனா எதிர்மனுதார்

கிரிமனல் புரிஸீஜர் கோடு.

“கி. பு. கோடு 488 செக்ஷனில் குழந்தை யென்று சொல்வது மேஜராகாதவர்களென்பதும், வியபிசாரம் என்பது ஜீவனஞ் செய்வதற்கு ஒருவித தொழிலென் றெண்ணக்கூடா தென்பதும்”.

மனுதார் தனது வைப்பாட்டியின் பெண்கள் ஒவ்வொருவருக்கும் மாதம் 1-க்கு ரூபா 7 வீதம் ஜீவனாம்சம் கொடுத்து வரவேண்டியதாக கிரிமனல் புரிஸீஜர் கோடு 483 வது செக்ஷன்படி தீர்ப்பு செய்யப்பட்டிருந்தது. மனுதார் ஒரு பிளீடர். இவர் தன்னுடைய வரும்படிகள் வரவரக்குறைந்து கொண்டே வருகின்றனவென்றும், தனக்கு வைப்பாட்டியா யிருந்தவள் ஒரு தாசி யென்றும், தான் ஜீவனாம்சங் கொடுத்து வரும் மூத்த பெண்ணுக்கு 17 வயதாகி விட்ட தென்றும், அவளும் அவளுடைய தங்கையும் அவர்கள் தாயாருட னிருந்து வருவதால் அவர்கள் தாசிகளாகிய தாசித்தொழில் செய்து வருவதாகவும் அதனால் அவர்கள் குழந்தைகளாக விருக்கவில்லை யென்றும், அவர்களுக்கு ஜீவனாம்சங் கொடுபட வேண்டியதாக ஏற்பட்ட தீர்ப்புத் தொகை குறைக்கப்பட வேண்டு மென்றும் மாஜிஸ்டிரேட்டாரிடம் மனுக் கொடுத்தார். மனுதாருடைய வரும்படிகள் சில காலங்குறைந்தும், சில காலம் ஜாஸ்திப்பட்டும் வருமென்றும், தீர்ப்புத் தொகையை குறைக்க எவ்வித நியாயமுமில்லையென்றும், உத்தரவு செய்துவிட்டார்கள். இதன்பேரில் மனுதார் ஹைகோர்ட்டில்ரெவிஷன் மனுக் கொடுத்தார்.

உத்தரவு:—மனுதாருடைய பெண்ணுக்கும், இன்னும் பதினெட்டு வயதாகவில்லையாதலால், அவள் கி. பு. கோடு 488-வது செக்ஷன்படி குழந்தை யென்று சொல்லப்படவேண்டுமேயல்லது குழந்தையல்ல வென்று சொல்லக்கூடாது. பெண்களை மனுதார் விவாகஞ்செய்து கொடுக்கவில்லை. விவாகஞ்செய்து கொடுக்க எவ்வித பிரயத்தனமுஞ் செய்யவில்லை; அவர்கள் கூலிவேலை செய்து ஜீவிப்பவர்களென்று மனுதார் சொல்லவில்லை. அல்லது அவர்கள் எந்த விதமாகவாவது தொழில் செய்து ஜீவனஞ் செய்ய வழிகளிருக்கின்றனவென்பதைமனுதார் ருஜுப்பிக்கவில்லை. அந்தப்பெண்கள் தாசிகளாகி தாசித்தொழில் செய்வதாக மனுதார் சொல்லுகிறார். ஒரு பெண் வியபிசாரத்தினால் ஜீவனஞ் செய்ய தொழிலேற்பட்டிருக்கிறது என்று சொல்வது பொது நீதிக்கு விரோதமானது; அது சட்டப்படி செல்லுபடியுள்ளதல்ல. இக்காரணத்தைக் கொண்டு ஜீவனம்சத்தொகை குறைக்கப்பட நியாயமில்லை. அப்பீல் மனுதார் மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

கல்கத்தா ஹைகோர்ட்டு.

1913 வருஷத்திய கிரிமனல் ரெவிஷன் நம்பர் 254.

தீர்ப்பு—12—3—13.

ஜட்ஜிகள் மிஸ்டர் ஜஸ்டிஸ காக்ஸ் துரையவர்கள் மிஸ்டர் ஜஸ்டிஸ் முல்லீக் துரையவர்கள்	ஷீக்பாவலி ரெட்டி மனுதார் V ஷீக்காயரெட் அலி. எதிர்மனுதார்

[கிரிமினல் புரிஸீஜர் கோடு.]

சட்டவிரோதமான கூட்டங் கூடுதல் வீட்டில் அக்கிரமமாக நுழைதல் என்னுங் குற்றங்களில் கி. பு. கோடு 345-வது செக்ஷன்படி இராஜியாக போய்விடலாமென்பது.

எதிர்மனுதார் வீட்டில் மனுதார் அக்கிரமமாக நுழைந்து கொடுந்துன்பஞ் செய்ததாகவும், அதற்காக சட்ட விரோதமான கூட்டங் கூட்டியதாகவும் எதிர் மனுதார் பிராது கொடுத்தார். மாஜிஸ்டிரேட் இ. பி. கோடு 325-வது செக்ஷன்படிக்கு மட்டில் சம்மன் அனுப்பினார். பின்பு உபய வாதிகளும் இராஜியாகி கோர்

ட்டில் மனு கொடுக்கப்பட்டது. அதையங்கீகரித்து மாஜிஸ்டிரேட் பிராதைதள்ளுபடி செய்துவிட்டார். பிறகு இராஜிநாமா ஷரத்துப்படி மனுதார் நடக்காததினால் இந்த பிராதை மறுபடியும் பயிலில் வைத்துக்கொண்டு கேசை விசாரித்து முடிவுசெய்யவேண்டுமென எதிர்மனுதார் மாஜிஸ்டிரேட்டாரிடம் மனுக்கொடுத்தார். அவர் கி. பு. கோடு 315-வது செக்ஷன்படி இராஜி மனுக்கொடுத்து தள்ளுபடி செய்யப்பட்ட பிராதை மறுபடியும் விசாரிக்கக்கூடாதென எதிர்மனுதார் மனுவைத்தள்ளுபடி செய்துவிட்டார்கள். இது விஷயமாக எதிர்மனுதார் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்டாரிடம் மனுக்கொடுத்ததில் அவர்கள் இந்தக் கேசை புனர் விசாரணை செய்யும்படி உத்தரவு செய்து விட்டார்கள். இவ்வித உத்தரவுசட்டவிரோதமானதென மனுதார் ஹைகோர்ட்டில் ரெவிஷன் மனுக்கொடுத்தார்.

உத்தரவு:—மனுதார் பேரில் சாட்டப்பட்ட குற்றங்கள் மூன்றுள் கொடுந்துன்பமும், கட்டடத்துக்குள் அக்கிரமமாக நுழைதலும், கி. பு. கோடு 345-வது செக்ஷன்படி இராஜியாகக் கூடியவை சட்ட விரோதமாக கூட்டங்கூடுதல் என்னும் மூன்றாவது குற்றம் இராஜியாகக்கூடாததாக விருந்தாலும், அது மேற்சொன்ன இரண்டு குற்றங்களையும் அனுசரித்ததாக விருக்கிறது. அந்த இரண்டு குற்றங்களும், இராஜியாகிவிட்டதினால் மூன்றாவது குற்றத்தைப்பற்றி மட்டில் தனிமையில் நடவடிக்கை நடத்தமுடியாது. ஆகையால் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட் செய்த உத்தரவை ரத்து செய்கிறோம். தாவா கேசை புனர் விசாரணை செய்யக்கூடாதெனத் தீர்மானிக்கிறோம்.

கல்கத்தா ஹைகோர்ட்.

1913 ௵த்திய கிரிமனல் ரூல் நம்பர் 580.

தீர்ப்பு—26—6—13.

ஜட்ஜிகள் மிஸ்டர் ஜஸ்டிஸ் இமாம் அவர்கள் மிஸ்டர் ஜஸ்டிஸ் சாப்மன் அவர்கள்	ராம்நந்தன் பிரசாத் சிங் ஆ. (எதிரிகள்) மனுதார்கள் V சக்கரவர்த்தியவர்கள் எதிர்மனுதார்

[இந்தியன் பேனல் கோடு.]

ஒரு சொத்துபாத்தியம் ஸ்வாதீனம் இவை விஷயமாக தற்காப்பு (Private defence) எதுவரையில் இருக்கலாமென்பதும், எந்தெந்த விஷயங்களில் கலகக் குற்றஞ் சாட்டலாமென்பதும்.

பாட்னாஜில்லா பீகார் சப் டிவிஷனல் பாபன்பாரு என்றும், காப்ஸிவார் என்றும் இரண்டு கிராமங்களிருக்கின்றன. அவைகள் இரண்டும் அடுத்த கிராமங்கள். இந்த பாபன்காரு கிராமத்தாருக்கு ஒரு நீரோடுகால் அதாவது வாய்க்கால் சொந்தமானது. அதில் காப்ஸிவார் கிராமத்தார், ஒரு அணைகட்டி தங்கள் கிராமத்துக்கு பாய்ச்சினார்கள். இவ்விதம் இவர்கள் செய்தது பிசகென பாபின்காரு கிராமத்தார் அந்த காப்ஸிவார் கிராமத்தார் பேரில் அந்த அணை போடக்கூடாதென சீவில் கோர்ட்டில் வழக்கிட்டு அவர்கள் அணைபோடக்கூடாதென இன்ஜங்ஷன் உத்தரவு பிறந்திருக்கிறது. இந்த காப்ஸிவார் இந்த இன்ஜங்ஷனுக்குப் பிறகும் பாபன்காரு கிராமத்தாருடைய சம்மதமன்னியில் அந்த வாய்க்காலில் அணைபோட்டார்கள். எதிரிகளாகிய அந்தபாபன்காரு கிராமத்தார் அந்த அணையைத்திறக்க முயற்சித்தார்கள். அந்த காப்ஸிவார் கிராமத்தார் அதைத்தடுத்ததின் பேரில் சச்சரவுகள் ஏற்பட்டு அந்த காப்ஸிவார் கிராமத்தார் இருவருக்கு காயங்களேற்பட்டன. அதனால் மனுதார்களாகிய எதிரிகள் பேரில் இ.பி.கோடு 148, 149, 324, 326 செக்ஷன்களின்படி குற்றஞ் சாட்டப்பட்டு அவர்கள் சப்டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டால் தெண்டிக்கப்பட்டார்கள். இது விஷயமாக டிஸ்டிரிக்ட் ஜட்ஜியிடம் அப்பீல் செய்ததில் தண்டனை சொற்பங் குறைக்கப்பட்டது. அதனால் எதிரிகள் ஹைகோர்ட்டில் ரெவிஷன் மனுக்கொடுத்தார்கள்.

உத்தரவு:—*இந்தக் கேசில் தீர்மானிக்கப்பட வேண்டிய விஷயங்கள் நான்கு. அவையாவன:—*

(1) *எதிரிகளாகிய மனுதார்கள் இந்த அணையை வெட்டிவிடுவதில் ஒரு பாத்தியதையை ஸ்தாபிக்க முயன்றார்களா?*

(2) *வாதி ஆ செய்தது சட்டப்படி தூராகிருகமாக நுழைதல் என்னுங் குற்றமாகுமா? அதனால் எதிரிகளாகிய மனுதார்கள் தற்காப்பு* (Private defence) *உபயோகப்படுத்த பாத்திய முடையவர்களா?*

OFFICE OF T... AR OF BOOKS 15 ... 1913 MADRAS

உ

ஹைகோர்ட்டு தீர்மானங்கள்

தமிழ்ப்பாஷை பயின்றவர்கள் வியவகார நுட்பங்களை எளிதில் உணரும் பொருட்டு பிரசுரிக்கப்படும்.

மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

புத்தகம்-1 | மாயவரம் 1913ஆு நவம்பர்மீ | **இலக்கம் 3**

(3) *இது விஷயத்தைப்பற்றி அதிகாரிகளிடந் தெரிவிக்க எதிரிகளுக்குச் சாவகாச மிருந்ததா?*

(4) *எதிரிகள் தங்கள் தற்காப்புக்கு அதிகரித்து ஏதாவது செய்தார்களா?*

முதலாவது:—*இந்த அணை விஷயமாக சீவில் கோர்ட்டாரால் ஏற்கனவே தீர்மான மேற்பட்டு விட்டதால் மனுதார் எதிரிகள் ஒரு பாத்தியதையை ஸ்தாபிக்க முயன்றவர்களாக மாட்டார்கள். "ஒரு பாத்தியதையைப் பாதுகாத்தல்" என்பதற்கும் ஒரு பாத்தியதையை ஸ்தாபிக்க முயலுதல் என்பதற்கும் விசேஷ வித்தியாசங்க ளிருக்கின்றன. இந்தக் கேஸ் எதிரிகள் தங்கள் பாத்தியதையைப் பாதுகாத்தலாகிறது.*

இரண்டாவது:—*சீவில் கோர்ட்டாருடைய இன் ஜெங்ஷனை மீறி ஒருவன் அந்த ஸ்தலத்தில் பிரவேசிப்பது கிரிமனல் ஆக்கிரமிப்பு; அதனால் எதிரிகள் தங்கள் தற்காப்பை யுபயோகப்படுத்த பாத்திய முடையவர்களா யிருக்கிறார்கள்.*

மூன்றாவது:—*எதிரிகள் தடிக்கழிகளுடன் போயிருந்த போதிலும் வாதி வகையறா அந்த அணையைத் திறந்துவிட வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அவர்கள் கூடாதெனச் சொல்லி அவர்களி லொருவர் எதிரிகளி லொருவரை தடிக்கழியா லடித்த*

பிறகுதான் எதிரிகள் அவர்களைத் தாக்கி யிருக்கிறார்கள். இதனால் இவ்விஷயங்களை அதிகாரிகளிடம் தெரிவிக்கத் தகுந்த சாவகாச மில்லை.

நான்காவது:—எதிரிகள் தங்கள் தற்காப்பை யதிகரித்து யாதொன்றும் செய்யவில்லை யென்று நாங்கள் அபிப்பிராயப்படு கிறோம். இதனால் கீழ்க்கோர்ட்டார் தீர்மானத்தை ரத்து செய்து எதிரிகளை விடுதலை செய்கிறோம்.

கல்கத்தா ஹைகோர்ட்டு.

ரிவிஷன் மனு 1913 ம் வருஷத்திய 252 நம்பர்.

ஜட்ஜிகள்	
ஜஸ்டிஸ் ஹாரிங்டன் துரையவர்கள்	ராம்சந்திர ஸஹா மனுதார்
ஜஸ்டிஸ் தாக்ஸ் துரையவர்கள்	ஹாஜி மேயா ஹாஜி அப்துல்லா எதிர்மனுதார்

தீர்ப்பு 27—3—13.

[இந்தியன் பெனல் கோடு.]

கவர்ண்மெண்டு கறன்ஸி நோட்டைக் கெட்டுப்போய் ஏழு மாதங்களுக்குப் பின் அது பணம் வரவு செலவு செய்யும் ஷராப் ஒருவரிடமிருந்து கண்டுபிடிக்கப்பட்டால் அவரைத் திருட்டுச்சொத்தை வாங்கினாரென்ற குற்றத்துக்கு உள்ளாக்கக் கூடாதென்பது.

1911-வரு மார்ச்சுமாதம் 13வ மனுதார் ஒவ்வொன்றும் ஆயிரம் ரூபாயுள்ள ஏழு கவர்மெண்டு கரென்ஸி நோட்டுகளையும் ஒரு ஐந்நூறு ரூபாய் கரென்ஸிநோட்டையும் கெட்டுப் போக்கி விட்டார். இவ்விஷத்தை கல்கத்தா சீவ் பிரஸிடென்ஸி மாஜிஸ்டிரேட்டாரிடம் 1911-வரு மே மாதம் 12வ மனுதார் தெரிவித்துக்கொண்டதின் பேரில் அந்தக் கோர்ட்டார் இதுவிபரத்தை வேவு போலிசாருக்கு அறிவித்தார்கள். அந்தப் போலீசார் அந்த நோட்டுகளிலொன்று பம்பாயிலுள்ள ஷராப் ஹாஜி மேயா ஹாஜி அப்துல்லா விடமிருப்பதாகத் தெரிவித்தார்கள். அதனால் மனுதார் அந்த அப்துல்லா பேரில் இ. பி. கோடு 411, 414 வது செக்ஷன்படி பிராது கொடுத்தார். இந்தக் கேஸில் கண்ட நோட்டுகள் திருடப்பட்டதென்பதற்கு ருஜூவில்லை யென்பதாக மனுதாருடைய பிராதை பிரஸிடென்ஸி மாஜிஸ்டிரேட் தள்ளுபடி செய்துவிட்டார். இதன்பேரில் மனுதார் ஹைகோர்ட்டில் ரிவிஷன் மனுக் கொடுத்தார்.

தீர்ப்பு:—மனுதாரன் தனக்குச் சொந்தமான கவர்ண்மெண்டு கரென்ஸிநோட்டுகளை 1911 வருஷம் மார்ச்சு மாதம் 13 தேதி கெட்டுப்போக்கிவிட்டார். அந்த வருடம் அக்டோபர் மாதம் 26ம் தேதி அதாவது 7 மாதங்களுக்குப்பிறகு அந்தநோட்டுகளி லொன்று எதிர்மனுதார் வசமிருந்து கண்டு பிடிக்கப்பட்டது. அவர் ஒரு ஷராப்; இவரைப்போல் பணம் வரவு செலவுகள் செய்கிறவர்கள் வசம் இவ்வித நோட்டுகள் வருவது மெத்த சகஜம். அவர் யாரோ ஒரு மகமதியன் தன்னிடங் கொடுத்தான், அவன் பெயர் முதலிய விபரந்தனக்குத் தெரியாதென்று சொல்லுகிறார். வியபாரிகளாயுள்ளவர் களிடத்தில இது செலாவணியாகிறது சாதாரணமான விஷயம். கீழ்க்கோர்ட்டார் மனுதாருடைய பிராதை அங்கீகரிக்காதது மெத்த நியாயமானது. மனுதார் ரிவிஷன் மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

சென்னை ஹைகோர்ட்.

1910 வருஷத்திய அப்பீல் நம்பர் 39.

தீர்ப்பு 27—2—13.

ஜட்ஜிகள்.	
சீப் ஜஸ்டிஸ் வொயிட் துரையவர்கள்	D. வெங்கடசம்ப சதாசிவ தேவரா வாதி- அப்பீல்தார்
ஜஸ்டிஸ் டையாப்ஜி அவர்கள்	V.
	D. பாப்பய்யா தேவரா ஆ. அ. பிரதிவாதிகள்

8. [இந்துலா.]

ஸ்வீகார பாத்தியங் கொண்டாடுகிறவர்கள் ஸ்வீகாரத்தை ருஜூப்பிக்கவேண்டியது அவசியமென்பதும் ஸ்வீகாரபாத்தியதையை முன்னிட்டுக் கொண்டுவரப்படும் வழக்கு பாகவழக்காக அங்கீகரிக்கப்படமாட்டாதென்பதும்.

வாதி மைனர் வெங்கடசம்ப சதாசிவ தேவரா கோடிலிங்க தேவரா என்பவரின் ஸ்வீகார குமாரனென்றும், அவர் இறந்த பின் அவருடைய சுயார்ஜித சொத்துக்களை பிரதிவாதிகள் ஆக்கிரமித்து அனுபவிப்பதாகவும் அவைகள் கிடைக்கவேண்டுமென்றும் மைனர் வாதிக்கு அவனுடைய தாயைப்பெற்ற பாட்டன் அடுத்த சிநேகிதராயிருந்து வழக்கிட்டார்.

வாதி இறந்த கோடிலிங்கம் தேவராவுக்கு ஸ்வீகார குமாரனல்லவென்றும், தாவா சொத்துகள் அவருடைய சுயார்ஜித சொத்துக்களல்லவென்றும் அவைகள் பிரதிவாதிகளின் குடும்ப பூர்வீக சொத்துக்களென்றுங் கக்ஷிபாடினார்கள்.

வாதி இறந்த கோடிலிங்கம் தேவராவுக்கு ஸ்வீகார குமாரனென்றாவது, தாவா சொத்துக்கள் அவருடைய சுயார்ஜித சொத்துக்களென்றாவது ருஜுப்பிக்கப்படவில்லையென கர்னூல் டிஸ்டிரிக்ட் ஜட்ஜி வாதியின் தாவாவைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். அதன்பேரில் வாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்தார்.

தீர்ப்பு:—ஸ்வீகாரஞ் செய்து கொள்ளப்படுவதற்கு எழுத்து மூலமான ஆதாரங்கள் வேண்டியதில்லையென்றும், ஆனால் விசேஷ சொத்துடையவராக விருந்தாலுஞ் சரியே, தக்கஅந்தஸ்துடையவராக விருந்தாலுஞ் சரியே, எழுத்து மூலமாக ஏற்படாததற்கு தகுந்தகாரணங்களும் உண்மையில்நடந்த விஷயங்களுக்குப் பலமான ருஜுக்களும், இருக்க வேண்டியதவசிய மென்றும், ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளப்பட்டு நீண்டகாலமாகி குடும்பஸ்தர்களாலும், பொதுவான நடவடிக்கைகளிலும் ஸ்வீகாரபுத்திரனென ஒப்புக்கொள்ளப்பட்டு நடவடிக்கைகள் நடத்தப்பட்டு வந்தால் ஸ்வீகாரம் நடந்ததைப்பற்றி நேரான சாக்ஷியம் ருஜுப்பிக்கப்பட வேண்டியதில்லையென்றும், மெயின்ஸ் இந்துலாவில் சொல்லப்பட்டிருக்கிற விஷயத்தை வாதி வக்கீல் எடுத்துக்காட்டுகிறார். இந்தக் கேசில் ஸ்வீகாரஞ் செய்து கொள்ளப்பட்டதாகச் சொல்லுங்காலம் நீடித்ததாகவில்லை ;குடும்பஸ்தர்களாலும் பொது நடவடிக்கைகளிலும் வாதி ஸ்வீகார புத்திரனெனக் கொண்டாடப்பட்டானென்பதற்கு எவ்வித ருஜுவுமில்லை. ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளப்பட்டதாக சொல்லுந் தேதிக்குப் பின் ஐந்தாறு வருடங்கள் வரையில் ஸ்வீகார தகப்பன் ஜீவந்தராயிருந்ததாக ருஜுப்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஸ்வீகார தந்தை சாதாரண போலீஸ் கான்ஸ்டேபிள் வேலையிலிருந்து இனிஸ்பெக்டர் வேலைக்கு வந்தவர். அவர் ஒரு தலைமையான நகரில் அனேக சினேகிதர்கள் மத்தியில் வசித்ததாகத் தெரிகிறது. இவ்விதமிருந்த போதிலும் ஸ்வீகார விஷயமாக தகுந்த சாக்ஷியங்களில்லை; வாதி பக்கத்தில் A அடையாள ஸ்கூல் ரிஜிஸ்டர் தாகல் செய்திருக்கிறார்; அதில் வாதியின் தகப்பன் அல்லது கார்டியன்

கோடிலிங்கம் தேவரா வென்று எழுதப்பட்டிருக்கிறது; ஆனால் அவருடைய ஜீவனம் வர்த்தகம் என்று எழுதப்பட்டிருக்கிறது. தகப்பனார் வேறு ஊருக்கு மாற்றப்பட்டிருப்பதனால் வாதி பள்ளிக்கூடத்தை விட்டுவிட்டதாக ஒரு தஸ்தாவேஜி தாகல்செய்தார். ஆனால் கோடிலிங்கம் அந்தக் காலத்தில் வேலையிலில்லை. அதனால் அந்த தஸ்தாவேஜி பொய்யெனத் தெரிகிறது. பிரதிவாதிகள் சொல்லுங் கக்ஷியின்படி தாவா சொத்துக்கள் குடும்பப் பொது சொத்துக்களாகையால் வாதியின் பாகமாவது கிடைக்கவேண்டுமெனப் புதிய சிவில் புரோஸீஜர் விஷயங்களை வாதி வக்கீல் எடுத்துச் சொல்லுகிறார். வாதி ஒருவிதமான பாத்தியதையை யாதாரமாகச் சொல்லி வழக்கிட்டு, அது பொய் யென்று ருஜுப்பட்ட பிறகு அவ்வழக்கை வேறு விதமாக மாற்றலாமென்பதற்கு யாதொரு ஆதாரமும் வாதி வக்கீல் எடுத்துக்காட்டவில்லை ஒரே சொத்தைப்பற்றி ஒருவித பாத்தியங்கொண்டாடியும், அதே சொத்துக்கு வேறுவித பாத்தியங்கொண்டாடியும் வழக்கிடலாம். வாதி தாவா வழக்கில்அந்தப்படிச்சொல்லவில்லை; இனி பிராதைத் திருத்தவு முடியாது. ஆகையால் வாதியின் அப்பீல் செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

M. W. N. (1913) 828.

சென்னை ஹைகோர்ட்.

1909 ௵த்திய அப்பீல் நேம்பர் 198, 233.

தீர்ப்பு 12—12—1912.

9 [இந்து லா].

ஜட்ஜிகள். சீப்ஜஸ்டிஸ் ஸர் அர்னல்ட் வொயிட் துரையவர்கள். ஜஸ்டிஸ் ஓல்ட்பீல்ட் துரையவர்கள்.	1909 ௵த்திய 198 நெம்பர் அப்பீலில் குருச்சகாங்கு நாயுடு அ. வாதி. V கோவூரி பாஸவரெட்டி ஆ.அ. பிரதிவாதிகள். 1909௵த்திய 233 நெம்பர் அப்பீல் லூயிகம் கிருஷ்ணபூபதி ராய்காரு அ. வாதி. V கோவூரி பாஸவரெட்டி ஆ. அ. பிரதிவாதிகள்.

இந்து குடும்ப டாகஸ்தர்களிருவர் பாக தஸ்தாவேஜி ஏற்படுத்திக் கொள்ளாமலே தனித்தனி சொத்துக்களை வெவ்வேறாக அனுப

வித்துக் கொள்ளுகிறதென்று ஏற்பாடு செய்து கொண்டால் அவர்கள் கூட்டுப்பயிரிடுங் குடியானவர் போன்ற பாத்தியமுடையவர்களாகின்றார்கள். ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் பாகத்துக்குக் கிடைத்த சொத்துக்களைத் தனியே பராதீனஞ் செய்யலாம்.

ஒரு ஸ்தாவர சொத்து ஜப்தி செய்யப்பட்டால் அது ஊர்ஜிதத்திலிருக்கின்றதென்றே ஊகிக்கப்பட வேண்டும். நிறைவேற்று மனுவு தள்ளுபடி செய்யப்பட்ட காரணத்தைக் கொண்டு அந்த ஜப்தி பாத்தியம் விடுபட்டுப்போனதாக எண்ணக்கூடாது. டிக்கிரிதாரன் தான்மேடர் செய்து கொடுத்த தஸ்தாவேஜியில் அந்த ஜப்தி விபரத்தைச் சொல்லியிருந்தால் அது ஊர்ஜிதத்திலிருப்பதாகவே எண்ணப்பட வேண்டும்.

வெங்கிடகிருஷ்ணராஜு—வெங்கடபதிராஜு—என்ற இருவரும் ஒரு இந்து குடும்ப அவிபக்த சகோதரர்கள். வெங்கடகிருஷ்ணர் முதலில் இறந்தார். அவருக்கு மைனர் குழந்தைகளிருந்தார்கள். வெங்கடபதி தனக்காகவும் இந்த இரண்டு குடும்ப மானேஜராகவும் தாவா குடும்ப சொத்துக்களை முதல் பிரதிவாதி தகப்பனுக்கு 1877 வருஷத்தில் பெந்தகம் வைத்துக் கடன்வாங்கினார். இந்த வெங்கடபதி இறப்பதற்கு முந்தி அவர் அதிக சீக்காகவிருந்த சமயம், இந்த இரண்டு குடும்பஸ்தர்களுக்குள்ளும் பாகவேற்பாடு நடந்ததாகவும், அதன்படி தாவா சொத்துக்கள் வெங்கிட கிருஷ்ணனுடைய குமாரர்கள் பாகத்துக்குக்கிடைத்துவிட்டனவென்றும், அவர்களிடமிருந்து தான் தகுந்த பிரதி பிரயோஜனத்துடன்சாசனம் பெற்றதாகவும், முதல் பிரதிவாதி சொல்லுகிறார். இந்த வெங்கடபதிஇறப்பதற்கு முந்தி எவ்வித பாகவேற்பாடுகளும் நடக்கவில்லையென்றும், அவர் இறந்த பிறகு அவருடைய வார்சுகளும் வெங்கிட கிருஷ்ணனுனுடைய பிள்ளைகளுக்கு அவர்கள் தாயார் கார்டியனாகவு மிருந்து சிலரை பஞ்சாயத்தாகக் கோரிக்கொண்டு அவர்கள் குடும்பசொத்துக்களை பாகப்பிரிவினை செய்து கொண்டதாகவும், அந்த ஏற்பாட்டின்படி வெங்கிடபதியின் மைனர் குமாரர்களுக்குக் கிடைத்த சொத்தை அவர்களிடமிருந்து முதல் வாதி சாசனம் பெற்றதாகவும், தாவா சொத்துக்களை நல இளப்பஞ் சரிக்கட்டி அளந்து பிரித்துக் கொள்ளாவிட்டாலும் இரண்டு பாகஸ்தர்களுக்குள்ளும் பிரிவினை யேற்பட்டு கூட்டுப்பயிரிடுங் குடியானவர்கள்போ லிருப்பதால் அந்த மைனர் குமாரர்களின் நிச்ச

யிக்காத பாதி பாகத்தை மீட்கவும் அவைகளை ஸ்வாதீனப்படுத்திக் கொள்ளவும் தங்களுக்குப்பாத்தியமுண்டென்றும், வாதிகள் பிரதிவாதிகள் பேரில் வழக்கிட்டார்கள். கீழ்க்கோர்ட்டார் வாதிகளின் தாவாப்படியே முதல் பிரதிவாதிக்குச் சேரவேண்டிய பெந்தகத் தொகை ரூ 12500–ம் கோர்ட்டில் கட்டிவிட்டு தாவாவிற்கண்ட ஸீரியம் கிராமத்தின் பேர்பாதி நிலத்தை மீட்டுக்கொள்ளவேண்டியதென்று தீர்ப்புச் செய்துவிட்டார்கள்.

முதல் பிரதிவாதி தனக்கு பெந்தக பாத்தியமிருப்பதுடன் வாதி குடும்பஸ்தர் மற்றொரு பாகஸ்தருக்கு தாவா சொத்துக்கள் பாகலப்தமாகக் கிடைத்து அவர்களிடமிருந்து தான் முழு சொத்துக்களையும் சாசனம் பெற்றுவிட்டதால் அச்சொத்துக்கள் பூராவையும் மீட்கும்படியான பாத்தியம் தனக்கு இருக்கிறதேயன்றி வாதிகளுக்கில்லையென்றும், அதனால் வாதிகளின் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றும் முதல் பிரதிவாதி ஹைகோர்ட்டில் 1909 ௵த்திய 233 நம்பரில் அப்பீல் செய்தார்.

தீர்ப்பு:—இந்த அப்பீல்தாரன் கிரயம்பெற்றதாகச் சொல்லும் வெங்கடகிருஷ்ணனுடைய பிள்ளைகளுக்கும், அவர்களுடைய பாகஸ்தர்களுக்கும் பாகப்பிரிவினை யேற்பட்டதற்கு தஸ்தாவேஜி ஆதாரமில்லாததால், அவர்கள் தனித்தனியே யிருந்துவருவதாகச் சொல்லுங்காலமுதற்கொண்டு அவர்கள் கூட்டுப் பயிர் செய்யுங் குடியானவர் போன்ற பாத்தியமுடையவர்களென்றும், 11 மூவர்ஸ் இந்தியன் அப்பீல் 75 தீர்ப்பிற்கண்டபடி நிச்சயிக்கப்படாத பாதி பாகத்தை வாதிகள் மீட்கப் பாத்தியமுடையவர்களென்றும், வாதிகள் சொல்லுங் கட்சி சரியானதென்பதை நாங்கள் ஒத்துக்கொள்ளுகிறோம். இப்போது நாங்கள் தீர்மானிக்க வேண்டிய விஷயம் ஒன்றுதானிருக்கிறது. அதாவது முதல்பிரதிவாதியாகிய அப்பீல்தாரன் சொல்லுகிறபடி வெங்கடகிருஷ்ணனுடைய பிள்ளைகளுக்கும், அவர்களின் பாகஸ்தர்களுக்கும் பாகப்பிரிவினை யேற்பட்டு தாவாவிற்கண்ட ஸீரியம் கிராமம் முழுவதும் அந்த வெங்கடகிருஷ்ணனுடைய பிள்ளைகளுக்குக் கிடைத்துவிட்டனவா என்பதுதான். பாகப்பிரிவினை யேற்பட்டதற்கு தஸ்தாவேஜி யாதாரமாவது அல்லது அப்பிரிவினையை ஸ்தாபிக்கக்கூடிய தகுந்த ருஜூக்களாவது இல்லாததால் கீழ்க்கோர்ட்டார் கண்டு

பிடித்து தீர்மானித்ததே சரியென்று தீர்மானிக்கிறோம். முதல் பிரதிவாதி அப்பீல் தள்ளுபடி செய்யப்பட்டது.

1909 ௵த்திய 198 நம்பர்.

மேலேசொன்ன வெங்கடபதிராஜு வெங்கடகிருஷ்ணனுடைய பிள்ளைகள் இவர்கள்பேரில் கன்னம்மாள் என்றவள் ஜீவனாம்ச வழக்கிட்டு 1883 ௵த்திய O அடையாள தவணை ஜீவனாம்ச டிக்கிரி பெற்றாள். அந்த டிக்கிரிக்கு பொறுப்பாயிருந்த கிண்டலி கிராமம் பூராவும் ஏலம் போடப்பட்டுப் போய்விட்டதால் டிக்கிரி கடன்காரர்களுடைய இதர சொத்துக்களைத் தொடர்ந்தும் ஜீவனாம்ச டிக்கிரித் தொகை வசூலிக்கப்பட்டுவந்தன. இந்த டிக்கிரித் தொகை ரூ 552-14 க்கு தாவாவிற்கண்ட சொத்துக்கள் ஜப்தி செய்யப்பட்டு அது தீராதிருந்தது. அந்த டிக்கிரியை 3 ம் பிரதிவாதி 1905 ௵ நவம்பர் மாதம் 24 உ மேடர் பெற்றார். இவர் தன்னுடைய மேடர் பத்திரத்தை யங்கீகரித்து தன்னை மேடர் வாதியாக ஏற்றுக்கொண்டு தாவாவிற்கண்ட சொத்துக்களை ஜப்தி ஏலவிற்று முதல் செய்து டிக்கிரித் தொகை யுளவடைக்கப்பட வேண்டுமென 1906 ௵ பிப்ரவரி மாதம் 24 உ மனுக் கொடுத்தார். இவர் மேடர் பெற்றதற்கும் இந்த மனுக் கொடுத்ததற்கும் மத்தியில் ஷை டிக்கிரிக்கு பின் தவணைத் தொகை ரூ 90 சேர்ந்துவிட்டது. இவருடைய மனுப்படி இவர் மேடர் வாதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டார். இவருடைய மனுவிற்கண்டபடி ஜப்தி ஏலத்துக்கு படிகட்டாததால் அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது. பிறகு 3 ம் பிரதிவாதி இந்தடிக்கிரி கடனுக்காக தாவாவிற்கண்ட முழு சொத்துக்களையும் ஏலத்துக்குக் கொண்டுவந்து தானே அவைகளை 1907 ௵ ஜூன் மாதம் 17 உ ஏலத்திலெடுத்துவிட்டார். வாதி தாவாவிற்கண்ட கிராமத்தில் பாதியை G அடையாள ஆதாரவின்படி 1906 ௵ மார்ச்சு மாதம் 16 உ சாசனம் பெற்றார். அதாவது 3 ம் பிரதிவாதி தாவா சொத்துக்களை ஜப்தி செய்வதற்கு முந்தியே சாசனம் பெற்றுவிட்டார். வாதி தன்னுடைய சாசனப்படி சொத்து கிடைக்கவேண்டுமென வழக்கிட்டார். தாவா சொத்துக்கள ஜப்தி செய்யப்பட்டு அது ஊர்ஜிதத்திலிருந்தகாலத்தில் அதாவது அசல் டிக்கிரிதாரி ஜப்தி செய்து அது தீராதிருந்த சமயம் வாதி சாசனம் பெற்றிருப்பதால், அது சி.பு.

கோடு 276 வது செக்ஷன்படிக்கும் டிரான்ஸ்வர் அவ் பிராபர்டி ஆக்ட்டு 53 வது செக்ஷன்படிக்கும் செல்லுபடியற்றதாகி விட்டதென்றும், அதனால் வாதியின் தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றும் 3 ம் பிரதிவாதி கக்ஷிபாடினார். வாதியின் சாசனம் 3 ம் பிரதிவாதியின் ஜப்திக்கு முற்பட்ட தேதியிலேற்பட்டிருப்பதால் அது செல்லத் தகுந்ததென கீழ்க்கோர்ட்டார் வாதியின் தாவாப்படியே தீர்மானஞ் செய்துவிட்டார்கள். இவ்விதஞ் செய்தது சட்ட விரோதமானதென 3 ம் பிரதிவாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்தார்.

தீர்ப்பு:—மூன்றும் பிரதிவாதியாகிய அப்பீல்தாரன் தன்னுடைய டிக்கிரி ஜப்தியை இழந்துவிட்டான் என்பதற்கு கீழ்க்கோர்ட்டார் இரண்டு காரணங்கள் சொல்லியிருக்கிறார்கள். (1) 3 ம் பிரதிவாதி தான் பெற்ற முன் தவணை டிக்கிரித் தொகையுடன் பின் தவணைத்தொகை ரூ 90 யுஞ் சேர்த்துப்புதிதாக ஜப்தி செய்தது. (2) பெந்தக பாத்தியதையைக் காட்டாமல்ஏலம்போட்டது. இரண்டாவது சொன்ன காரணம் அவ்வளவு முக்கியமானதல்ல. ஏனென்றால் அசல் டிக்கிரிதாரன் ஜப்தி செய்தபோது இந்தப் பெந்தக பாத்தியதையை யுட்படுத்தி ஏலம்போடவேண்டுமென்று பாத்திய மனு கொடுக்கப்பட்டு அதை அசல் டிக்கிரிதாரன் ஒப்புக்கொண்டிருக்கிறான். இந்த விபரங்களெல்லாந் தெரிந்தே மூன்றும் பிரதிவாதி மேடர் பெற்றிருக்கிறார். இவர் பின்னாலேற்பட்ட தவணை டிக்கிரித் தொகை ரூ 90 யும் முன்தொகையுடன் சேர்த்து நிறைவேற்றவேண்டியதி னிமித்தம் முன் நிறைவேற்று மனுவில் மேல் நடவடிக்கைகள் நடத்துவதற்கு படிகட்டாமல் விட்டுவிட்டாரே யன்றி முன் ஜப்தி பாத்தியதை வேண்டாமென்று விலக்கிவிடவில்லை இந்த ஜப்தி விபரம் இவருடைய மேடர் பத்திரத்திலுங் கண்டிருக்கிறது. அப்பீல்தாரன் இ. லா. ரி. 14 அலகபாத் 133, 28 அலகபாத் 114 இந்தலா ரிபோர்ட்டுகளைத் தனக்கு ஆதாரமாகக் காட்டுகிறார். அவை தாவா கேசுக்கு ஒற்றுமையாக விருக்கின்றன. ஆகையால் வாதி சாசனம் பெற்றபோது ஜப்தி ஊர்ஜிதத்திலிருந்துகொண்டிருக்கிறது. அதனால் வாதியின் சாசனம் சி. பு. கோடு 276 வது செக்ஷன்படிக்கும் டிரான்ஸ்பர் அவ் பிராபர்டி ஆக்ட்டு 53 வது செக்ஷன்படிக்கும் செல்லுபடி யற்றதாகி விட்டது. அப்பீலை யங்கீகரித்து வாதியின் வழக்கைச் செலவுடன் தள்ளுபடிசெய்கிறோம்

(1913 M-W-N. 821)

அயோத்தி ஜூடிஷல் கமிஷனர் கோர்ட்.

1912 ஸாலத்திய 115 நம்பர் அப்பீல்.

தீர்ப்பு 29—5—13.

ஜட்ஜி Mr: லின்ஸே துரையவர்கள்	காந்தய்யாபக்ஸ்சிங்கு ஆ.அ. வாதிகள் V. ஷியேபக்ஸ்சிங் ஆ. அ. பிரதிவாதிகள்

10 [இந்து லா]

இந்து குடும்பத்தில் பாகப்பிரிவினையாய் விட்டதென்று சொல்லுகிறவர்கள் அவ்விஷயத்தை திருப்திகரமாக ருஜூப்படுத்தவேண்டிய தவசியமென்பதும் அவ்விதம் ருஜூப்பிக்காத வரையில் அந்த பாகஸ்தர்களி லொருவர் செய்யும் இனாம் செல்லத்தக்கதில்லையென்பதும், தகப்பன் குடும்ப மானேஜராக விருப்பதைக் கொண்டு அவராற் செய்யப்படும் எல்லா விஷயங்களுக்கும், பிள்ளைகள் கட்டுப்பட்டவர்களாகமாட்டார்களென்பதும்.

துர்காபக்ஸ்சிங், ரூம் ஆடர்சிங், ஷியோபாலக்சிங் இம்மூவரும் சகோதரர்கள். சமீபகாலம் வரையில் இவர்கள் அவிபக்தர்களா யிருந்ததாகவே ஒப்புக்கொள்ளப்படுகிறது. இவர்களில் ஷியோபாலக்சிங் தமக்குக் குடும்ப சொத்திலுள்ள பாத்தியதையைத் தம்முடைய சகோதரர் ரூம் ஆடர்சிங்குடைய பிள்ளைகளாகிய 2-3-4 பிரதிவாதிகளுக்கு 1910ம் வருஷம் டிசம்பர்மாசம் 6-ந் தேதி இனாமாகக்கொடுத்து தஸ்தாவேஜியேற்படுத்தி விட்டார். துர்காபக்ஸ்சிங்குடைய பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் வாதிகளாகச் சேர்ந்து மேலேசொன்ன இனாம் சாசனம் இந்துலாப்படி செல்லத்தக்கதல்லவென்று இனாம் சாசனஞ்செய்து கொடுத்தவர் 1-ம் பிரதிவாதி யாகவும் அச்சாசனம் பெற்றவர்களை 2-3-4 பிரதிவாதிகளாகவும், வாதிகளின் தகப்பனை 5ம் பிரதிவாதியாகவுஞ் சேர்த்து வழக்கிட்டார்கள். அவிபக்த குடும்பத்தில் இனாம் சாசனம் செல்லத்தக்கதல்லவென்பது தான் வாதிகளின் முக்கிய தாவா.

தாவா இனாம் சாசனஞ் செய்யப்பட்டகாலத்தில் மேலே சொன்ன மூன்று சகோதரர்களும் பாகம் பிரிந்தவர்களென்றும், அதனால் தாவா இனாம் சாசனம் செல்லும்படியுள்ளதென்றும், இந்த இனாம் சாசனப்படி தங்கள்பேரால் நிலப்பட்டாவாகவேண்டு

மென்று ரெவினியு அதிகாரிகளிடத்தில் மனுக்கொடுத்ததில் வாதிகளின் தகப்பன் 5ம் பிரதிவாதி இப்போது வாதிகள் சொல்லும் ஆக்ஷேபணைகள் செய்ததாகவும், அந்த 5ம் பிரதிவாதி குடும்பத் தலைவராகையால் அவர் செய்யும் விஷயங்களுக்கு வாதிகள் கட்டுப் பட்டவர்களென்றும், அந்த 5ம் பிரதிவாதியும் இந்த 2-3-4 பிரதிவாதிகளும் ராஜியாகி இனாம் சாசனத்திற் கண்ட நிலத்தில் நாலிலொருபாகத்தை 5ம் பிரதிவாதி அடைகிறதென்றும், பாக்கி முக்கால் பாகத்தை இந்த 2-3-4 பிரதிவாதிகளடைகிறதென்றும் இவர்கள் பேரால் பட்டாசெய்யப்படவேண்டியதென்றும், இராஜிமனுக் கொடுத்தின்பேரில் அந்தப்படியே பட்டாவாய் விட்டதாகவும், அதனால் தகப்பனுடைய நடவடிக்கைகளுக்குப் பிள்ளைகள் கட்டுப்பட்டவர்களென்றும், வாதிகளின் தாவா எஸ்டா பல் தோஷத்துக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறதென்றும், 2-3-4 பிரதிவாதிகள் கக்ஷிபாடினார்கள்.

தாவா இனாம் சாசன மேற்பட்டகாலத்தில் இனாம் சாசனஞ் செய்து கொடுத்தவர், பாகம் பிரிந்த வராக இருந்தாரென்றும், அதனால் தாவா சாசனம் செல்லும்படியுள்ளதென்றும், பிரதிவாதிகள் சொல்லுகிறபடி வாதிகளின் தாவா எஸ்டாபல் தோஷத்துக்கு உள்ளாக்கப் பட்டிருக்கின்றதென்றும் கீழ்கோர்ட்டார் வதிகளின் வழக்கை தள்ளுபடி செய்து விட்டார்கள். அதன்பேரில் வாதிகள் இந்தக் கோர்ட்டில் அப்பீல் செய்திருக்கிறார்கள்.

தீர்ப்பு:—இந்தக் கேசில் முக்கியமாக கவனிக்கப்படவேண்டிய விஷயங்கள் இரண்டு; அவையாவன (1) தாவா இனாம் சாசன மேற்பட்ட காலத்தில் உபயவாதிகளின் குடும்பத்தில் பாகப்பிரிவினையேற்பட்டு விட்டதா இல்லையா? (2) பட்டாமாற்றல் விஷயத்தில் வாதிகளின் தகப்பன் இராஜிசெய்து கொண்டது வாதிகளின் தாவாவுக்கு தடையுண்டாக்குமா? பாகம் பிரிந்து விட்டதென்பதை ருஜூப்பிக்கவேண்டிய கடமைபிரதிவாதிகளைப்பொருத்ததாகவிருக்கிறது. கக்ஷியாடும் பிரதிவாதிகள் எந்தக்காலத்தில் பிரிவினையேற்பட்டதென்பதை தங்கள் ஸ்டேட்மெண்டில் சொல்லவில்லை; இந்தக்கேஸ் இஷ்ஷியு ஏற்படுங்காலத்தில் பாகம்பிரிந்த தேதியை தெரிவிக்கும்படி கோர்ட்டார் பிரதிவாதிகளின் வக்கீலைக் கேட்டிருக்கிறார்கள். இவர் அந்த விபரம் தமக்குத் தெரியாதென்று சொல்லியிருக்கிறார். இதைக்கொண்டும் பாகப்பிரிவினையானதற்குத்

தகுந்த ருஜக்களில்லாதிருப்பதைக் கொண்டும் உபயவாதிகளும் தாவா இனும் சாசனம் பிறந்த காலத்தில் அவிபக்தர்களாயிருந்து வந்தார்களென்றும் இந்துலாப்படி அந்த சாசனஞ் செல்லத் தகுந்த தல்லவென்றுந் தீர்மானிக்கிறோம்.

துர்காபக்ஸ்சிங் என்ற 5 ம் பிரதிவாதி குடும்ப மானேஜராக விருக்கும் ஒரு காரணத்தைக்கொண்டு அவர் எந்த நடவடிக்கை நடத்தினாலும் அதற்குப் பிள்ளைகளாகியவாதிகள்கட்டுப்பட்டவர்களென்று சொல்வது எவ்விதத்திலுஞ் சரியல்ல. பட்டாமாற்றல் விஷயமாக நடந்த நடவடிக்கைகளில் வாதிகள் கக்ஷிக்காரர்களல்ல. ரெவினியூ அதிகாரிகள் பட்டா செய்வதைக் கொண்டு அவ்விதம் பட்டா பெற்றவருக்கு அச்சொத்தில் எவ்வித பாத்தியமு மேற்படமாட்டாது. இந்த ரெவினியூ விசாரணையில் வாதிகள் கக்ஷிக்காரர்களாகச் சேர்ந்துகொண்டு அந்த நடவடிக்கைகளை ஆக்ஷேபிக்க வேண்டியது எந்தவிதத்திலும் அவசியமானதல்ல. இந்தப்பட்டா மாற்றல் நடந்த 8 அல்லது 9 மாதங்கள் கழிந்தவுடனே இந்த வழக்குக்கொண்டுவந்திருக்கிறார்கள். இதனாலிவர்கள் அந்தப்பட்டா மாற்றலுக்கு சம்மதித்தவர்களென்று சொல்வது பிசகு. இவர்களுக்குத் தாவா சொத்தில் பாத்தியமிருப்பதை அவர்களின் தகப்பன் விலக்க முடியாது. ஆகையால் வாதியின் தாவா எஸ்டாபல் தோஷத்துக்கு உட்படுத்தப்படவில்லை யெனத் தீர்மானிக்கிறோம். அப்பீலை யங்கீகரித்து வாதிகளின் தாவாப்படி தீர்ப்பு செய்கிறோம்.

20 Indian Cases 861.

சென்னை ஹைகோர்ட்டு.

1912ளு த்திய 2 வது அப்பீல் நம்பர் 675.

தீர்ப்பு 25—7—13.

ஜட்ஜிகள்.	அருணாசலகவுண்டன் வூ.அ. வாதிகள் (பிரதிவாதிகள்)
ஜஸ்டிஸ் சதாசிவய்ய ரவர்கள்	V
ஜஸ்டிஸ் டிஹாப்ஜி அவர்கள்	குப்பணாக்கவுண்டன் வூ. அ. பிரதிவாதிகள் (வாதிகள்)

11. [இந்துலா.]

விதந்து செய்த பராதீனஞ் செல்லமாட்டாதென பாத்திய ஸ்தாபன வழக்குக் கொண்டுவருகிறவர்கள் அந்தச்சொத்து சில தொகைக்கு ஜவாப்தாரியாக விருக்கவேண்டுமென வேற்பட்டால் அத்தொகையை கோர்ட்டில் கட்டுவதாகப் பிராதில் சொல்லவேண்டியது அவசியமில்லை யென்பதும், அனந்தரவார்சுகள் வழக்கிட்டு பெறும் டிக்கிரிகள் அந்த வழக்கிட்டவர்களை மட்டில் கட்டுப்படுத்துமே யன்றி மற்றவர்களை கட்டுப்படுத்த மாட்டாதென்பதும்.

உடுமலைப்பேட்டை டிஸ்டிரிக்ட் முனிசீப் கோர்ட்டு 1909 வருஷத்திய 1339 தீர்ப்பின் பேரில் கோயம்புத்தூர் டிஸ்ரிக்ட் கோர்ட்டு 1911 வருஷத்திய 115 நம்பரில் அப்பீல்செய்யப்பட்டது. அதில் வாதிகளுக்கு அனுகூலமாகத் தீர்ப்பு செய்யப்பட்டதின் பேரில் பிரதிவாதிகள் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்கிறார்கள்.

இந்த அப்பீலில் முக்கியமாக கவனிக்கவேண்டிய விஷயங்கள் இரண்டு. அவையாவன (1) விதந்து செய்யும் பராதீனங்கள் ரத்து செய்யப்படவேண்டுமென வழக்கிடுகிறவர்கள் கிரமமான கடன்களுக்கு அச் சொத்துக் கட்டுப்படக் கூடியதாக விருந்தால் அத்தொகையை கொடுப்பதாக பிராதில் சொல்லவேண்டியது அவசியமா இல்லையா? (2) வழக்கிட்ட அனந்தர வார்சுகளைத்தவிர அவர்களுடைய பின்வார்சுகளுக்கும் அந்த டிக்கிரி செல்லத்தகுமென்று டிஸ்ரிக்ட் ஜட்ஜி சொல்லுவது கிரமமானதா அல்லது பிசகா?

1. வது விஷயத்தைப்பற்றி அப்பீல் வாதிகள் தங்களுக்கு ஆதாரமாக இ லா ரி 31 சென்னை 153 தீர்ப்பைக் காட்டினார்கள். இதற்கு விரோதமாக இந்த கோர்ட்டாராலேயே (1912) சென்னை வீக்கிலி நோட்ஸ் 1176 தீர்ப்பு ஏற்பட்டு விட்டதனால் அனந்தர வார்சுகள் தங்கள் பிராதில் பொறுப்புச்சாட்டுந் தொகைகட்டிவிடுவதாக சொல்லவேண்டியது அனாவசியமெனத் தீர்மானிக்கிறோம்.

2வது விஷயத்தைப் பற்றி டிஸ்ரிக்ட் ஜட்ஜி செய்தது சரியல்ல. எவன் வழக்கிடுகிறானோ அவனுக்கு மட்டில் அந்த டிக்கிரி செல்லுமேயன்றி அவனுடைய வார்சுகளுக்கும் அந்த டிக்கிரி செல்லுமென்று சொன்னது சரியல்ல. ஆகையால் அந்த விஷயத்தைப்பற்றி மட்டில் திருத்தல் செய்கிறோம். பிரதிவாதிகளின் அப்பீல் தள்ளுபடி செய்யப்பட்டது.

(1913) M. W. N. 866.

சென்னை ஹைகோர்ட்டு.

1911 ஹுத்திய 2 வது அப்பீல் நம்பர் 840.

தீர்ப்பு 30—4—13.

ஜட்ஜிகள்.	}	மனோன்மணியம்மாள், அ. வாதி
ஜஸ்டிஸ் மில்லர் துரையவர்கள்.	}	V
ஜஸ்டிஸ் டியாப்ஜி அவர்கள்	}	வைத்திலிங்க நாய்க்கர் ஆ. அ. பிரதிவாதிகள்

12. [இந்துலா.]

அவிபக்த குடும்பஸ்தர்களில் சிலரிடத்தில் தனித்தனியே சாசனம் பெற்றிருந்தாலும், அந்த சாசனபாத்தியங்களைப்பற்றி ஒரே வழக்குக் கொண்டுவரவேண்டியதேயன்றி ஒரு சாசனத்தைப்பற்றி முதலில் வழக்கிட்ட பின்பு இரண்டாவது சாசனத்தைப்பற்றி பிந்தி வழக்கிடுவது செல்லாதென்பது.

ஒரு இந்து குடும்பத்தில் ஐந்துபெயர் சமபாகஸ்தர்கள்; அவர்களிலொருவரிடத்தில் அவருடைய குடும்ப சொத்து பாத்தியதையை வாதி 1904 ஹுத்தில் சாசனம் பெற்றாள். மற்றொரு பாகஸ்தனிடத்தில் அவருடைய பாக குடும்ப சொத்து முழுபாத்தியதையையும் 1895 ஹுத்தில் வாதி சாசனம் பெற்றாள். வாதி தான் 1904 ஹுத்தில் பெற்ற சாசனப்படி பிரதிவாதிகளின் குடும்ப சொத்தில் ஐந்திலொருபாகம் பிரிக்கப்பட்டு தனக்கு வசமாக வேண்டுமென வழக்கிட்டு அந்தப்படி டிக்கிரியாகி சொத்தும் வசமாகிவிட்டது. பிறகு வாதி தான் 1895 ஹுத்தில் பெற்றிருக்கும் சாசனப்படி பிரதிவாதிகளின் குடும்ப சொத்தில் மற்றொரு ஐந்திலொரு பாகங்கிடைக்க வேண்டுமென்று வழக்கிட்டாள். வாதி இந்த வழக்குக் கொண்டுவர சி. பு. கோடு 2 வது ஆர்டர் 2வது ரூல்படி தடைப்பட்டிருப்பதாகவும், வாதியின் வழக்கு அந்தக் காரணத்துக்காகவே தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றும், பிரதி வாதிகள் கக்ஷிபாடினார்கள். கீழ் அப்பீல் கோர்ட்டார் வாதிக்கு விரோதமாகத் தீர்ப்புசெய்து விட்டதின்பேரில் அவள் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்கிறாள்.

தீர்ப்பு:—முன்வழக்கின் வியாஜ்ஜிய மூலம் வேறு பிந்திய வழக்கின் வியாஜ்ஜிய மூலம் வேறு. அதனால் வாதி தனித்தனி வழக்குக் கொண்டுவர பாத்தியமுண்டென வாதி வக்கீல் 7 மெட்ராஸ் லா ஜர்னல் 73-8 மெட்ராஸ் லா ஜர்னல் 92, இவைகளை தன் கக்ஷிக்கு ஆதாரமாக எடுத்துக் காட்டுகிறார். இந்தத் தீர்மானங்களில் தனித்தனியான சொத்துக்கள் வெவ்வேறு சாசனங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. தாவா கேஸ் அப்படிக்கல்ல; பாகம்பிரியாத அவிபக்த குடும்ப சொத்து பாகஸ்தர்கள் தனித்தனியே சாசனஞ் செய்திருக்கிறார்கள். இப்போது செய்த தாவாவை முந்திய வழக்குடன் ஏன்சேர்த்துச் செய்யவில்லையென்பதற்கு வாதியாதொரு முகாந்திரமுஞ் சொல்லவில்லை. முந்திருஜுப்பித்த விஷயங்களும் இப்போது ருஜுப்படுத்திய விஷயங்களும் ஒன்றுதான். இந்த இரண்டு தாவாக்களிலும் சாசனப்படி சொத்து வசமாக வேண்டுமென்று கேட்கவில்லை. தான் சாசனம் வாங்கியவரின் பாகம் நல இனப்பஞ்சரிகட்டி பிரித்து வசமாகவேண்டுமென்பது தான் தாவா. எவன் ஒருவன் பாக வழக்கிடுகிறானோ அவன் தனக்குரிய எல்லா பாத்தியத்தையுங் கண்டு வழக்கிடவேண்டியது அவசியம் வாதி ஒரு பாகஸ்தனுடைய பாத்தியதையைப்பற்றி மட்டில் வழக்கிட்டதால் மற்றொரு பாகஸ்தன் பாத்தியதையைப் பற்றி வழக்கிட இவள தடைப்பட்டிருக்கிறாள். இவளந்த பாத்தியம் வேண்டாமென்று விட்டு விட்டதாகவே எண்ணப்பட வேண்டும். எல்லாபாகஸ்தர்களையுங் கக்ஷிக்காரர்களாகச் சேர்ந்து பாகப்பிரிவினை செய்யவேண்டு மென்று கேட்பது தான் வியாஜ்ஜியமூலம். வாதி பெற்றிருக்கும் சாசனங்களின் தேதிகள் வியாஜ்ஜிய மூலங்களல்ல. அவைகள் வாதிக்கு ஒருவித பாத்தியதையையுண்டுபண்ணினவேயன்றி வேறல்ல. ஆகையால் கீழ்கோர்ட்டார் செய்த தீர்மானத்தை யுறுதிசெய்து வாதியின் அப்பீலை செலவுடன் தள்ளுபடி செய்கிறோம்.

(1913) M. W. N. 881.

அலகபாத் ஹைகோர்ட்டு.

1912 ஹுத்திய 2 வது அப்பீல் நம்பர் 1399.

தீர்ப்பு 16—6—13.

ஜட்ஜி	}	டிர்பெனிபிரசாத் அ. வாதி
மிஸ்டர் ஜஸ்டிஸ் லேலி	}	V
துரையவர்கள்	}	ரூம்நாராயன் அ. பிரதிவாதிகள்

13. [இந்துலா.]

அவிபக்த இந்துக் குடும்ப சொத்தின் பேரில் கடன் கொடுப்பவர் அந்தக் கடன் எந்த அவசியத்துக்கு வாங்கப்படுகிற தென்பதை நன்றாக விசாரித்துத் தெரிந்துகொண்டு கடன் கொடுக்கவேண்டியது அவசியமென்பதும், பெந்தக பத்திரத்தில் பூர்வகடனை தீர்க்கவேண்டியதற்கு வாங்கப்பட்டதென எழுதுவதினாலாவது கடன் வாங்குகிறவன் சொல்வதினாலாவது பூர்வ கடனென் றெண்ணக்கூடா தென்பதும்.

கோகுல பிரசாத், பிர்புதபால் என்ற இருவரும் வாதிகளுக்கு 1900 வருஷம் ஆகஸ்டு மாதம் 19க்கு ஒரு பெந்தகபத்திரமெழுதிக்கொடுத்தார்கள். கோகுல பிரசாத் இந்த தாவாவுக்கு 5 வருஷங்களுக்கு முன் னிறந்துவிட்டார். அவருடைய பிள்ளைகளை 1-2 பிரதிவாதிகளாகவும், பிர்புதயால் 3ம் பிரதிவாதியாகவும் பெந்தக சொத்தை சாசனம் பெற்றவரும் பின்பெந்ததார்களும் மற்ற பிரதிவாதிகளாகவுஞ்சேர்த்து வாதி தன்னுடைய பெந்தக பத்திரப்படி தொகை கிடைக்கவேண்டுமென வழக்கிட்டார். கீழ்கோர்ட்டார் வாதிகளின் வழக்குப்படி தீர்ப்பு செய்து விட்டதால்பெந்தக சொத்தில் சிலவற்றைச்சாசனம்பெற்ற 10 பிரதிவாதி மட்டில் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்தார். தாவா கடன் குடும்ப அவசியச்செலவுக்கு வாங்கப்பட்டதல்லவென்பதும் பூர்வகடனைத்தீர்ப்பதற்கு வாங்கப்பட்டதல்லவென்பதும், அதனால் தாவா கடனுக்கு தன்னுடைய சாசனசொத்துக்கள் கட்டுப்படத்தக்கதில்லையென்பதும் அப்பீல் வாதியின் கக்ஷி.

தீர்ப்பு:—இந்தக்கேசில் தீர்மானிக்கப்படவேண்டிய விஷயம் தாவாக்கடன் குடும்பப் பூர்வீக கடனை தீர்ப்பதற்காக வாங்கப்பட்டதா இல்லையா வென்பதுதான். தாவா பெந்தகபத்திரம் ஏற்பட்ட காலத்தில் நந்தகுமாரலால் பிறந்து விட்டான். அதனால் தாவா பெந்தக சொத்தில் அவனுக்கு பாத்திய மேற்பட்டு விட்டது. ஒரு பாகஸ்தன் மற்றொரு பாகஸ்தனை மோசஞ்செய்ய வேண்டுமென்று குடும்பசொத்தைப் பாராதீனஞ்செய்தால் அந்ததஸ்தாவேஜில் பூர்வகடனைத்தீர்ப்பதற்கு வாங்கப்பட்டதென்று எழுதப்பட்டிருக்கும் வாசகத்தைக் கொண்டு மாத்திரம்அது சாட்க்ஷியமாக அங்கீகரிக்கப்படமாட்டாது. அது அந்த பத்திரமெழுதிக் கொடுத்

3 ம் பிரதிவாதியை மட்டில் கட்டுப்படுத்தும், மற்றவர்களைக் கட்டுப்படுத்த மாட்டாது. தாவாக்கடன் எதற்காக வாங்கப்பட்டதென்பதை வாதி விசாரித்துத் தெரிந்து கொள்ளவில்லை; 6 ம் மூவர்ஸ் இந்தியன் அப்பீல் 393 பிரிவிகவுன்ஸல் தீர்ப்பில் சொல்லியிருக்கிறபடி அவிபக்த இந்துகுடும்ப சொத்தின்பேரில் கடன் கொடுப்பவர் எந்த அவசியத்துக்காக கடன் வாங்கப்படுகின்றது. குடும்ப நன்மையை யுத்தேசித்து குடும்பமானேஜரால் வாங்கப்படுகிறதா என்ற விஷயங்களைத்தீரவிசாரித்து கடன் கொடுக்கவேண்டியது மெத்த அவசியமானது. பூர்வ கடனைத் தீர்ப்பதற்காக கடன் வாங்குகிறோம் என்று தாவா பெந்தகபத்திரம் எழுதிக் கொடுத்தவர்கள் சொன்னதை நம்பித் தான் கடன் கொடுத்ததாக வாதி சொல்லுகிறார். இதைத்தவிர வேறே ருஜூ கிடையாது. கீழ்க் கோர்ட்டார் செய்த தீர்மானம் பிசகு. இந்த 10ம்பிரதிவாதியின் அப்பீலையங்கீகரித்து இந்த பிரதிவாதியைப்பற்றின வரையில் கீழ்கோர்ட்டாருடைய டிக்கிரியை ரத்து செய்கிறோம்.

20 Indian Cases. 951.

அலகாபாத் ஹைகோர்ட்.

1913 ஷூந்திய அப்பீல் நேம்பர் 65.

தீர்ப்பு 3—7—1913.

ஜட்ஜிகள்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் டட்பால் அவர்கள்
மிஸ்டர்ஜஸ்டிஸ் ரூபிகியூ அவர்கள்

முசாமத் அப்டாப் பீகம்
அ. வாதி
V.
சைது உஸ்ஸவர்கான்
அ. பிரதிவாதி

2 [மகமதிய லா].

டிஸ்டிரிக்ட் கோர்ட்டார் மைனர்களுக்குக் கார்டியன் நியமிப்பதில் அந்த மைனர்களின் விவாகம் அந்த கோர்ட்டாருடைய அனுமதியின் பேரில் நடத்தப்பட வேண்டுமென்று உத்தரவு செய்யலாமென்பது.

இறந்த ஹாமித் உஸ்ஸவர்கானுக்கு முசாமத் அப்டாப்பீகம் என்ற பெண்சாதியும் இரண்டு மைனர் பெண்களும், 3 மைனர்

பிள்ளைகளும் டாக்டர் சயிது உஸ்ஸவர்கான் என்ற மாற்றான் தாயின் மகனும் வார்சாக விருந்தார்கள். மைனர்களுக்குக் கார்டியன் வார்ட்ஸ் ஆகட்டுப்படி சர்டிபிகேட் பெறுவதற்கு மேலே சொன்ன விதந்து மனுக்கொடுத்ததில் டிஸ்ரிக்ட் கோர்ட்டார் இந்த மைனர் பெண்களுக்கு விதந்து முசாமத் அப்டாப்பீகம் கார்டியனாக விருந்து வரவேண்டியதென்றும், அந்த மைனர்களுக்கு விவாகஞ் செய்யப்படவேண்டிய காலத்தில் அந்த சயிது உஸ்ஸவர்கானுடைய சம்மதிபெற்றுக் கொண்டும், டிஸ்டிரிக்ட் கோர்ட்டாருடைய அனுமதி பெற்றுக்கொண்டும், விவாகஞ்செய்து கொடுக்க வேண்டியதென்றும், மைனர் குமாரர்களுக்கு இந்த விதந்துவும் சயிது உஸ்ஸவர்கானும் ஜாயிண்டு கார்டியன் களாயிருந்து வர வேண்டியதென்றும் உத்தரவு செய்து விட்டார்கள். இந்த உத்திரவு நியாயத் தவறுதலென விதந்து ஹைகோர்ட்டில் அப்பீல் செய்தாள்.

தீர்ப்பு:—மகமதிய லாப்படி ஒரு பெண் ருதுவாகிவிட்டால் அவள் தனக்கிஷ்டப்பட்ட நாயகனைத் தெரிந்து விவாகஞ் செய்து கொள்ளலாமாகையால் டிஸ்டிரிக்ட் கோர்ட்டார் விவாக விஷயத்தில் நிபந்தனையேற்படுத்தியது பிசகென்றும், அந்த நிபந்தனையேற்படுத்த அந்தக் கோர்ட்டாருக்கு அதிகாரமில்லையென்றும் அப்பீல் வாதி கக்ஷியாடினாள். அப்பீல் வாதி சொல்லுகிறபடி மைனர் பெண்களை விவாகஞ்செய்து கொடுப்பதில் டிஸ்டிரிக்ட் கோர்ட்டார் எவ்வித நிபந்தனையுமேற்படுத்தவில்லை, மைனர்களின் நன்மையை யுத்தேசித்து யோக்கியதையில்லாதவர்களுக்கு மைனர்களை விவாகஞ் செய்து கொடுக்காமலிருக்கும் பொருட்டு கார்டியனுக்கு முன்னெச்சரிக்கை செய்ததேயன்றி விவாக விஷயத்தில் நிபந்தனையேற்படுத்தியதல்ல; டிஸ்டிரிக்ட் கோர்ட்டார் செய்த உத்தரவு சரியானதென்றே தீர்மானிக்கிறோம்.

மைனர் பிள்ளைகளுக்கு, தன்னையும் அந்த பிள்ளைகளின் தாயாரையும் ஜாயிண்டு கார்டியனாக ஏற்படுத்தியது சரியல்லவென்றும், அந்தவுத்திரவினால் மைனருடைய கல்விப்பயிற்சிக்கு இடையூறுகளுண்டாகுமென்றும் டாக்டர் சயிது உஸ்ஸவர்கான் ஆக்ஷேபனைகள் சொன்னார். பிள்ளைகள் சிறுகுழந்தைகளாக விருப்பதினாலே டிஸ்டிரிக்ட் கோர்ட்டார் செய்த உத்தரவு சரியானதென்

றும், பிற்பட்ட காலத்தில் இந்த மைனர்களின் நன்மைக்காக இந்த கார்டியன்கள் இருவரில் எவரை நீக்கவேண்டுமோ அது விஷயத்தைப் பற்றி கோர்ட்டாருக்குத் தெரிவித்தால் அப்போது தகுந்த உத்தரவு செய்யப்படுமென்றுந் தீர்மானித்தார்கள்.

20 இந்தியன் கேஸஸ் 873.

OFFICE OF THE REGISTRAR
15 FEB 1913
MADRAS

சென்னை ஹைகோர்ட்.

1912ஞலத்திய 2-வது அப்பீல் நம்பர் [illegible]4.

தீர்ப்பு 12—3—13.

ஜட்ஜிகள்	
ஜஸ்டிஸ் பென்ஸன் துரையவர்கள்.	இமாண்டி அப்பால் ஸ்வாமிது.
ஜஸ்டிஸ் சுந்திரமய்யரவர்கள்.	அ. வாதி
	V
	விஜயநகரம் ராஜா.

[எஸ்டேட் லாண்டு ஆகட்டு.]

குடிகள் தங்கள் வசமுள்ள பூமிக்குடைய வருடைய நிலத்தை விவசாயத்துக் கன்றி வேறெந்த விஷயத்துக்கு உபயோகித்தாலும் வரிசெலுத்தக் கடமைப் பட்டவர்க ளென்பது

ஒரு குடியானவன் தன் வசமுள்ள நிலத்துக்கு வரி செலுத்தாததால் பூமிக்குடையவர் எஸ்டேட்லாண்டு ஆகட்டுப்படி குடியானவன் பேரில் வழக்கிட்டார். குடியானவன் தான் தாவாநிலத்தை வெகு நீண்டகாலமாக விவசாயத்துக்கு உபயோகப்படுத்தவில்லையென்றும் அதில் நீண்டகாலமாகக்கட்டடங்கட்டி அனுபவித்துவருவதாகவும், எஸ்டேட் லாண்டு ஆக்ட்டு 3 வது செக்ஷன் கிளாஸ் 11 ன்படி தாவா நிலத்துக்கு வரிவசூலிக்கக் கூடாதென்றும், பிரதிவாதி கக்ஷியாடினான். கீழ்கோர்ட்டார்கள் வாதிக்கு அனுகூலமாகத் தீர்ப்பு செய்து விட்டதின் பேரில் பிரதிவாதிகள் ஹைக்கோர்ட்டில் அப்பீல் செய்கிறார்கள்.

தீர்ப்பு:—எஸ்டேட்லாண்டு ஆகட்டு 3 வது செக்ஷன் கிளாஸ் 11 ல் சொல்லப்படுவதின் கருத்து, நிலம் கிருஷித் தொழிலுக்கு உபயோகப்பட்டால் மட்டில் வரி கொடுக்க வேண்டியது. வேறு விஷயங்களுக்கு வுபயோகப் படுத்தப் பட்டால் கொடுக்கக்

கூடியது என்பதல்ல. தாவா நிலத்தைச் சாகுபடி செய்யாமலே தரிசு போட்டுவிடுகிறான். அல்லது வேறு இனத்துக்கு உபயோகப் படுத்துகின்றான். இதனால் வரி கொடுக்க மாட்டேனென்று சொல்லக் கூடாது. தாவா நிலம் விவசாயத்துக்கு உபயோகப் படுத்தக்கூடிய நிலமாகையால் அப்பீல்தாரன் அதற்கு வரி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறான். அப்பீல் செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

(1913) M-W-N - 806

சென்னை ஹைகோர்ட்டு.

1912௵த்திய 2 வது அப்பீல் நம்பர் 1593.

தீர்ப்பு 24-7-13.

ஜட்ஜிகள்.	
மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள்	கொரபாலு ஆ அ. வாதி
	V
மிஸ்டர் ஜஸ்டிஸ் டியாப்ஜி அவர்கள்	நாராயணா என்கிற நாரணப்பய்யா

[ரெவினியு]

கூட்டாளிகள் இருவருக்குக் குத்தகைச் சீட்டு எழுதிக் கொடுக்கப்பட்டதில் குத்தகைத் தொகை கெடுவில் செலுத்தப் படாவிட்டால் அச்சொத்தை பூமிக்குடையவர் உடனே கைப்பற்றலாமென நிபந்தனை யேற்பட்டிருக்கும் பட்சத்தில் அந்தக் கூட்டாளிகளில் ஒருவன் மட்டில் அந்த நிபந்தனையின்படி தன் பாக சொத்தைக் கைப்பற்றலாமென்பது.

வாதியும் 5ம் பிரதிவாதியும் ஒரு நிலத்துக்கு சமபாகபாத்தியமுடையவர்கள். இவர்கள் தங்கள் நிலத்தை 1889௵த்தில் 2-3 பிரதிவாதிகளிடங் குத்தகைக்குக் கொடுத்தார்கள். ஏற்பட்ட கெடுக்களின்படி குத்தகைத் தொகை செலுத்தப் படாவிட்டால் அந்த குத்தகைநிலத்தை பூமிக்குடையவர்கள் மறுகெடு நிபந்தனையன்னியில் கைப்பற்றி விடலாமென்று குத்தகை பத்திரத்தில் ஷரத்துகள் ஏற்பட்டிருக்கின்றன. 2-3 பிரதிவாதிகள் குத்தகை பத்திரத்தி லேற்பட்ட நிபந்தனையின் படி அச்சொத்தை தன் வசம் விட்டுவிடவேண்டு மென வாதி 1909 வருஷம் ஜூலைமாதத்தில் 2-3 பிரதிவாதிகளுக்கு நோட்டீஸ் கொடுத்தார். பின்பு செப்

டெம்பர் மாதத்தில் அச்சொத்து தனக்காகவும் தன் கூட்டாளி 5ம் பிரதிவாதிக்காகவும் வசமாக வேண்டுமென 2-3 பிரதிவாதிகள் பேரில் வழக்கிட்டார். 5ம் பிரதிவாதி தன்னுடன் சேர்ந்து வழக்கிட ஒத்து வாராததாலும் அவர் தம்முடைய பாத்தியங்களை 6-7 பிரதி வாதிகளுக்குக் கொடுத்து விட்டதாலும், அவர்கள் பிரதிவாதிகளின் வர்க்கத்தில் சேர்க்கப் பட்டார்கள். கீழ் அப்பீல் கோர்ட்டார் அடியிற்கண்ட காரணங்களைக்கண்டு வாதியின் பாகம் பாதி மட்டில் வாதிக்குக்கிடைக்கவேண்டியதெனத் தீர்ப்பு செய்து விட்டார்கள்.

(a) வாதியும் 5 ம் பிரதிவாதியுஞ் சேர்ந்து 1889௵த்தில் கூட்டாகக் குத்தகைக்குக் கொடுத்தாலும், வாதிக்கு தாவா நிலத்தில் சமபாதிக்குத்தனிமையான பாத்தியமுண்டு. அதனாலவர் தன் பாகநிலத்தைப்பற்றி பத்திரநிபந்தனையையனுசரித்து தனிமையில் வழக்கிடப்பாத்தியமுடையவரா யிருக்கிறார். (b) டிரான்ஸ்வர் அவ் பிராபர்டி ஆக்டு 111 (g) செக்ஷன்படி குத்தகைபாத்தியம் ரத்து செய்யப்பட்டு பூமிக்குடையவர்சொத்தை ஸ்வாதீனஞ்செய்துகொள்ளவேண்டியிருந்தால் குத்தகைகொடுத்தவர்தமது செய்கையினால் அந்தஎண்ண மிருந்ததை ஸ்பஷ்டமாகத்தெரிவிக்க வேண்டுமென்றும், அவ்வித செய்கை யாதொன்று மில்லாததால் வாதியின் தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டு மென்றும், 2 - 3 பிரதிவாதிகள் கக்ஷியாடுகிறார்கள். தாவா சொத்தை விட்டுவிடும்படி வாதி 1909 ௵ ஜூலைமாதத்தில் நோட்டீஸ் கொடுத்ததே மேலே சொன்ன 111 (g) செக்ஷன்படி வாதியின் செய்கையைக் காட்டுகிறது. 2-3 பிரதிவாதிகள் அடியிற்கண்ட காரணங்களைக்கண்டு ஹைகோர்ட்டில் அப்பீல் செய்கிறார்கள்.

(*a*) குத்தகை ரத்து செய்யப்பட வேண்டுமென்ற நிபந்தனையை வாதி தன்பாகம் பாதிக்குமட்டி லுபயோகிக்கத்தக்கதாக 1889௵த்தி லேற்பட்டகுத்தகை பத்திரம்பிரிக்கப்படக் கூடாது.

(*b*) 1909 ௵ கொடுத்த நோட்டீசுக்குச்சரியான அர்த்தஞ் செய்யும்பட்சத்தில் பத்திரநிபந்தனையின்படி உடனே குத்தகையை ரத்துசெய்ய வேண்டுமென்ற எண்ணத்துடன் எழுதினதல்ல; பிற்பட்டுச்செய்யவேண்டுமென்ற கருத்துடனெழுதப்பட்டதாக எண்ணப்படவேண்டும்.

தீர்ப்பு:—அப்பீல் வாதிகள் இ-லா-ரி 35 கல்கத்தா 807 ரூலிங்ஸை தங்கள் கக்ஷிக்கு ஆதாரமாக எடுத்துச் சொல்லுகிறார்கள். அந்தத்தீர்ப்பு சென்னை இராஜதானிக்கு செல்லத்தக்கதல்ல. இருவர் பேருக்கு கூட்டாக குத்தகை பத்திர மேற்பட்டபின் அவர்களுக்குள் பாகப்பிரிவினை யேற்பட்டு விட்டால் அவ்விதம் பாகம் பிரித்துக்கொண்டவர்கள் தங்கள் தங்கள் பாகசொத்துக்களைப் பற்றினவரையில் குடியானவர்களை விலக்கலாமென சென்னை ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள் (இ-லா-ரி 29 சென்னை 29) இத்தீர்ப்பையே தாவா கேசுக்கு உபயோகப்படுத்த வேண்டியதவசியம். குத்தகை ஷரத்துப்படி குடியானவன் நடக்காத ஒரு காரணத்தைக்கொண்டே அவன் பேரில் இஜெக்ட்மெண்டு (Ejectment) வழக்கு கொண்டு வரலாமா? அல்லது இவ்வித வழக்கு கொண்டு வருவதற்கு முன்னமே இந்த குத்தகையை ரத்துசெய்ய இவருக்கு எண்ணமிருந்த தென்பதை இவருடைய செய்கையினால் காட்டவேண்டியது அவசியமா என்ற விஷயங்களைக் கவனிக்க வேண்டியது மெத்த அவசியம். குத்தகைக்கு கொடுத்தவனுக்கு அவ்வித எண்ண மிருந்ததென்பதை அவனுடைய செய்கையினால் காட்டவேண்டிய தவசியமென இ லா ரி 31 சென்னை 403 தீர்ப்பில் சொல்லப்பட் டிருக்கிறது. இந்த தீர்ப்புக்கு விரோதமாக பின்னால் இந்த ஹைகோர்ட்டாரே தீர்மானித்திருக்கிறார்கள் (இ லா ரி 34 சென்னை 161; 23 சென்னை லாஜர்னல் 715). ஒருவனுடைய குத்தகை ரத்துசெய்யப்படவேண்டியதாக விருந்தால் இரண்டு வித காரணங்களிருக்க வேண்டும். (1)பத்திர நிபந்தனையின்படி நடவாமை (2) குத்தகை கொடுத்தவனுடைய பாத்தியதையை மறுத்தல்; தாவாகேசில் 2 - 3 பிரதிவாதிகள் குத்தகை ஷரத்துப்படி கெடுக்களில் தொகை கொடாததால் வாதி பத்திர ஷரத்தை யனுசரித்து நடவடிக்கை நடத்த பாத்தியமுடையவர். டிரான்ஸ்வர் அவ் பராபர்டி ஆகட்டு 111 (g) செக்ஷன் தாவா கேசுக்கு ஒற்றுமையானதல்ல. ஆதலால் பிரதிவாதிகளின் அப்பீல் செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

20 இந்தியன் கேஸஸ் 930.

சென்னை ஹைகோர்ட்.

1913 ம் வருஷத்திய சீவில் ரிவிஷன் மனு நம்பர் 558

தீர்ப்பு—23—9—13.

ஜட்ஜிகள்	வாசுதேவ அய்யர் மனுதார்.
	V
சீவ் ஜஸ்டிஸ் வொயிட் துரையவர்கள் ஜஸ்டிஸ் ஓல்டுபீல்ட் துரையவர்கள்.	நாகப்பட்டணந்தேவஸ்தானக்கமிட்டியாரும்-பாலகிருஷ்ண உடையாரும் எதிர் மனுதார்கள்.

3. [தர்ம சொத்துக்களைப் பற்றிய சட்டம்·]

நாகப்பட்டணந் தேவஸ்தானங் கமிட்டியில் ஒரு மெம்பர் ஸ்தானங் காலியாயிற்று. அந்தக்காலி யேற்பட்ட மூன்று மாதங்களுக்குள் கமிட்டிமெம்பர்கள் ஸ்டாண்டிங்கு ஆர்டர்ப்படி காலியான மெம்பருக்கு பதில் நபர் எலெக்ஷன் மூலமாயெடுத்துத் தெரிவிக்காததினாலே இந்த கமிட்டியார் எலெக்ஷன் செய்யும்படி உத்தரவு கொடுக்கும்படிக்கும் அல்லது கோர்ட்டாருக்கு யுக்தமாகத் தோற்றுகிறபடி வேறெந்த உத்தரவாவது செய்யவேண்டுமென்றும் இந்த கமிட்டியார் டிஸ்டிரிக்ட் கோர்ட்டாருக்கு எழுதினார்கள். இதன்பேரில் டிஸ்டிரிக்ட் ஜட்ஜி 1913 வரு ஜனவரி மீ 6வ அடியிற்கண்ட உத்தரவு செய்தார்.

“காலிஸ்தானத்துக்கு எலெக்ஷன் மூலமாக நியமிக்க கமிட்டி மெம்பர்கள் கடமைப்பட்டிருக்கிறார்களென்று எனக்கு ஸ்பஷ்டமாகத் தெரிகிறது. அவ்விதஞ் செய்யக்கூடாதபடி எந்தத் தடையுமிருக்கவில்லை. ஆகையால் பாக்கியாகவுள்ள கமிட்டி மெம்பர்களால் இந்தக் காலியானது பூர்த்திசெய்யப்பட வேண்டிதாக உத்தரவு செய்கிறேன்”

இதன்பேரில் பாக்கியாகவுள்ள கமிட்டிமெம்பர்கள் எலெக்ஷன் ஏற்படுத்தினார்கள். எலெக்ஷன்நடந்ததாகவும்,பாலகிருஷ்ண உடையார் என்ற ஒருவர் நியமிக்கப்பட்டதாகவும், வேறு நபர்கள் இந்தக் காலி ஸ்தானத்துக்கு நிற்க முன்வரவில்லையென்றும் மானேஜிங்கு மெம்பர்கள் டிஸ்டிரிகட் ஜட்ஜிக்கு 1913 வரு ஜனவரி மீ 25 ந் தேதியில் எழுதினார்கள்.

இந்த எலெக்ஷன் செல்லுபடியற்றதென ஏன் தீர்மானிக்கப்படக்கூடாதென்பதற்கும், கமிட்டியார் நடவடிக்கைகளில் பாலகிருஷ்ண உடையார் பிரவேசிப்பதை ஏன் தடைசெய்யக்கூடாதென்பதற்கும் காரணமிருந்தால் தெரிவிக்கும்படி மானேஜிங்மெம்பர்களுக்கு டிஸ்டிரிக்ட் ஜட்ஜியால் ஏப்ரல் மாதம் 17உ ஒருத்தரவு பிறப்பிக்கப்பட்டது. பாலகிருஷ்ண உடையார் தன்னை எலெக்ஷன் செய்தது நியாயமென்றும், அது செல்லத்தகுந்ததென்றும் தன்னுடைய பாத்தியத்தையை ஸ்தாபிக்க வேண்டுமென டிஸ்டிரிக்ட் ஜட்ஜியிடம் 1913 வருஷம் ஜூலை மாதம் 19ந் தேதி மனுக்கொடுத்தார். இவ்விஷயத்தில் அக்கறையுள்ள மற்றொருவர் இந்த கமிட்டிமெம்பர் நியமனம் டிஸ்டிரிக்ட் கோர்ட்டாராலேயே செய்யப்படவேண்டுமென மனுக்கொடுத்தார். இந்த இரண்டு மனுக்கள் விஷயமாக டிஸ்டிரிக்ட் ஜட்ஜி விசாரித்து "மிஸ்டர் T. A. பாலகிருஷ்ண உடையார் எலெக்ஷன் கிரமமாக நடந்ததென்று நான் நினைக்கிறேன். கமிட்டியில் அவரை ஒரு மெம்பராக நான் ஒப்புக்கொள்ளுகிறேன்" என்றவுத்தரவு செய்தார்கள். இந்தப்படி எலெக்ஷன் மூலமாக நியமனஞ் செய்தது பிசகென்றும், அந்த எலெக்ஷன் மூலமாய் கமிட்டி மெம்பர்களிலொருவராக நியமித்ததை அங்கீகரிக்கவாவது அல்லது அவரை அந்த மெம்பராக நியமிக்கவாவது டிஸ்டிரிக்ட் ஜட்ஜிக்கு அதிகாரமில்லையென்பதாகவும் அந்த டிஸ்டிரிக்ட் ஜட்ஜியினுத்தரவு ரத்துசெய்யப்பட வேண்டுமென்றும் ரெவிஷன் மனுக்கொடுத்திருக்கிறார்கள். டிஸ்டிரிக்ட் ஜட்ஜி செய்த உத்தரவின்பேரில் அப்பீலாவது ரெவிஷனாவது இல்லையென்பது எதிர்மனுதார்களுடைய முக்கிய விவாதம். இவர்கள் இ லா ரி 11 சென்னை 26 என்ற பிரிவிகவுன்ஸல் தீர்ப்பைதங்கள் கக்ஷிக்கு ஆதாரமாக எடுத்துக் காட்டுகிறார்கள். இந்தத் தீர்ப்பில் கண்ட விஷயம் கமிட்டி மெம்பராக நியமிக்கப்பட்டவர் அந்த ஸ்தானத்துக்கு அருகரல்லவென்பது இந்தக் கேஸ் அப்படிக்கல்ல; சட்டவிரோதமாக நியமித்தார்களா இல்லையாவென்ற விவாதம். இந்தக்கேஸ் போலவே இதே ஹைகோர்ட்டில் ஒரு ரெவிஷன் மனுக்கொடுக்கப்பட்டதில் இவ்வித மனுவைப்பற்றி விசாரிக்க ஹைகோர்ட்டாருக்கு அதிகாரமில்லையென்ற விவாத மேற்பட்டு இந்த கோர்ட்டாருக்கு அவ்வித அதிகாரமிருக்கிறதென்று தீர்ப்பு செய்யப்பட்டிருக்கிறது. (இ லா ரி 26 சென்னை 85). ஆகையால்

எதிர்மனுதார்களுடைய இந்தப் பிரதம ஆக்ஷேபனையை நாங்கள் அங்கீகரிக்கவில்லை.

தீர்ப்பு:—டிஸ்டிரிக்ட் ஜட்ஜி செய்த உத்தரவு சரியா பிசகாவென்று தீர்மானிக்க வேண்டியது. 1863 வருஷத்திய 20 வது ஆக்டின் 10 வது செக்ஷனில்கண்ட விஷயங்களுக்கு வியாக்கியானஞ்செய்வதைப் பொருத்ததாக விருக்கிறது. தேவஸ்தானம் மெம்பர் காலியானவுடனே அந்தஸ்தானம் இவ்வளவு காலத்துக்குள் எந்த விதமாக எலெக்ஷன் செய்யப்பட வேண்டுமென்றும், குறித்த காலத்துக்குள் அந்த எலெக்ஷன் செய்யப்படாத பட்சத்தில் டிஸ்டிரிக்ட் கோர்ட்டார் அந்த ஸ்தானத்துக்கு ஒருவரை நியமிக்கலாம்; அல்லது அந்நியமனம் பாக்கியாகவுள்ள கமிட்டி மெம்பர்களால் செய்யும்படி உத்தரவு செய்யலாம் என்றும், இந்த உத்தரவின்படி கமிட்டி மெம்பர்கள் நியமனஞ் செய்யாவிட்டால் டிஸ்டிரிக்ட் கோர்ட்டாரே அந்த நியமனஞ் செய்யலாம்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த செக்ஷனுடைய கருத்து என்னவென்றால் காலதாமதமின்றி எலெக்ஷன் மூலமாக நியமனஞ் செய்யப்படவேண்டும்; அவ்விதமவர்கள் செய்யாவிட்டால் டிஸ்டிரிக்ட் கோர்ட்டாரே அந்த நியமனத்தைச் செய்துவிட வேண்டும்; அல்லது டிஸ்டிரிக்ட் ஜட்ஜிக்குள்ள அதிகாரத்தை அவர் உத்தரவின் பேரில் பாக்கியாக வுள்ள கமிட்டி மெம்பர்களுஞ் செலுத்தலாம் என்பது தான். இவ்வித நியமனம் எலெக்ஷன் மூலமாகத்தான் நடத்தப்படவேண்டுமென்று இந்த செக்ஷனில் சொல்லப்படவில்லை. எந்தக் காலத்திற்குள் இந்த எலெக்ஷன் செய்யப்படவேண்டுமென்பதற்கு இந்த செக்ஷனில் ஆதாரமில்லை. காலிஸ்தானம் உடனே பூர்த்தி செய்யப்படவேண்டுமென சொல்லப்பட்டிருப்பதால் காலதாமதமின்றி இந்தப் பாக்கியாயுள்ள கமிட்டி மெம்பர்கள் காலிஸ்தானத்துக்கு பதில் நபர் நியமித்திருக்க வேண்டியது மெத்த அவசியம். தேவஸ்தானக்கமிட்டி மெம்பர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய விஷயமாக சென்னைக் கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்ட விதிகளின் கமிட்டி மெம்பர் ஸ்தானங் காலியாகி மூன்று மாதங்களுக்குப் பிறகு எலெக்ஷன் மூலமாக கமிட்டி மெம்பர் நியமனஞ் செய்ய இவர்களுக்கு அதிகாரமிருப்பதாகச் சொல்லப்படவில்லை. இந்தக்கவர்ன்மெண்டு ஆர்டரில் குறிப்பிட்டபடி 3மாதங்களுக்குள்

இவர்கள் எலெக்ஷன் மூலமாக நியமிக்காவிட்டால் அவர்களுக்கிருந்த அதிகாரம் போய்விட்டது. ஆகையால் இந்த பால்கிருஷ்ண உடையார் நியமனம் சட்டப்படி செல்லுபடியுள்ளதல்ல.

முன்னால் டிஸ்டிரிக்ட் ஜட்ஜிசெய்த வுத்தரவுப்படி பாக்கியாயுள்ள கமிட்டி மெம்பர்கள் இந்தப் பாலகிருஷ்ண உடையாரையே கமிட்டிமெம்பராக நியமிக்க இடங்கொடுக்கும் பட்சத்தில் டிஸ்டிரிக்ட் ஜட்ஜி செய்த உத்தரவை ரத்துசெய்வது அனாவசியமென நினைத்து கேஸ் ஒத்திவைக்கப்பட்டது. கமிட்டி மெம்பர்கள் இது விஷயமாக இந்தக் கோர்ட்டாருக்குத் தெரிவிக்க எவ்வித முயற்சியுஞ் செய்யவில்லை.

டிஸ்டிரிக்ட் கோர்ட்டார் செய்த உத்தரவை ரத்து செய்கிறோம். இந்தத் தீர்ப்பில் கண்ட விஷயங்களின்படி டிஸ்டிரிக்ட் கோர்ட்டார் நடந்துகொள்வதற்காக இந்தக் கேஸ் அந்தக்கோர்ட்டுக்கு அனுப்பப்பட்டது.

டிஸ்டிரிக்ட்கோர்ட்டில் கொடுக்கப்பட்ட மனுக்களின் செலவுகளைப் பற்றியாவது இந்தக் கோர்ட்டில் கொடுக்கப்பட்ட ரிவிஷன் மனுச்செலவுகளைப் பற்றியாவது நாங்கள் யாதொரு உத்தரவுஞ் செய்யவில்லை. பாக்கி கமிட்டி மெம்பர்களின் செலவு அவர்கள் சொந்தத்தினின்றுங் கொடுத்துக் கொள்ளும்படி உத்தரவுசெய்கிறோம்.

1913. M. W. N. 842.

சென்னை ஹைகோர்ட்டு.

அப்பீல் ஆர்டரின் பேரில் அப்பீல்.

1912௵த்திய நம்பர்கள் 29, 30,

உத்தரவு தேதி 4-4-13.

ஜட்ஜிகள் ஜஸ்டிஸ் பென்ஸன் துரையவர்கள் ஜஸ்டிஸ் சுந்தரமய்யரவர்கள்	கிருஷ்ணஹாண்டி அ. வாதி. V பத்மனாபஹாண்டி ஆ.அ. பிரதிவாதிகள்

6. [சீவில் புரிஸீஜர்கோடு.]

இறந்த அவிபக்த தகப்பன் பேராலுள்ள டிக்ரியை நிறைவேற்ற வேண்டிய பாத்தியம் மூத்த குமாரனுக்கு மட்டிலுண்டென்பதும் இவன் டிக்கிரி கடன்காரனுக்கு உடந்தையாக விருப்பதாக தெரிய

வந்தால் மற்றப் பாகஸ்தர்களின் நன்மையின் பொருட்டு இவனிடம் ஜாமீன் வாங்கிக்கொண்டு டிக்கிரித்தொகை கொடுபடவேண்டுமென்பதும், டிக்கிரிகடன்காரன் அத்தொகையை மானேஜிங் மெம்பரிடத்தில் மட்டில் கொடுக்க வேண்டிய தவசிய மென்பதும் மற்றப் பாகஸ்தர்களிடத்தில் கொடுத்தால் செல்லாதென்பதும், டிக்கிரித்தொகை கொடுபட்டு விட்டதாக சர்டிபை செய்ய வேண்டியது ரொக்கத்தொகைக்கே யன்றி மற்றவைக்கல்ல வென்பதும், அவ்விதம் டிக்கிரி தீர்ந்து விட்டதை சாக்ஷிகளினால் ருஜுப்பிக்கலாமென்பதும்.

ஒருபாக வழக்கு டிக்கிரி நிறைவேறு நடவடிக்கைகளில் இந்த அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது.

டிக்கிரி பெற்ற வாதி டிக்கிரியானவுடனே இறந்துவிட்டார். அவருக்கு 6 பிள்ளைகள்; இந்த நம்பர் 27-ம் பிரதிவாதி மூத்த குமாரன் இவருடைய மைனர் சகோதரன் 32-ம் பிரதிவாதி; மற்றக் குமாரர்கள் 28 முதல் 31 வரையிலுள்ள பிரதிவாதிகள். இந்தச் சகோதரர்களுக்குள் ஒற்றுமையில்லாததினாலே 27-ம் பிரதிவாதி தனக்காகவும் தன்மைனர்தம்பிக்காகவும் தகப்பன் பெற்ற டிக்கிரியை நிறைவேற்ற மனுக்கொடுத்தார். மற்ற சகோதரர்கள் 28 முதல் 31 பிரதிவாதிகள் அதே டிக்கிரியை நிறைவேற்றவேறு மனுக்கொடுத்தார்கள். சப் ஜட்ஜி 28 முதல் 31 வரையிலுள்ள பிரதிவாதிகள் கொடுத்த நிறைவேறு மனுவை மட்டில் அங்கீகரித்து அதை நிறைவேற்ற அனுமதி கொடுத்து சகோதரர்களுக்குள் ஒற்றுமையில்லாவிட்டால் அவர்கள் ஒவ்வொருவரும் அத்தொகையைப் பிரித்து எடுத்துக்கொள்ள வேண்டியதென உத்தரவு செய்தார்கள். வாதியின் குடும்ப நிலங்கள் பாகப்பிரிவினை ஏற்பட்டு சொத்து ஸ்வாதீனமாகுந் தேதிவரையில் அந்த நிலத்தின் வரும்படியில் தாமாஷாப்படிக் கூடுதலாகும். நெல்வாதிக்கு வருஷப்பிரதி வருஷம் முதல் பிரதிவாதி கொடுத்துவர வேண்டியதென டிக்கிரியிற் கண்டிருக்கிறது. இந்தத் தொகையில் சில 27-ம் பிரதிவாதியிடங்கொடுபட்டு விட்டதாக முதல் பிரதிவாதி கக்ஷியாடினார். முதல் பிரதிவாதி சொன்ன தொகையில் சில பாகத்தை 28 முதல் 31 பிரதிவாதிகள் தங்கள் நிறைவேற்று மனுவில் ஒப்புக்கொண்டார்கள். மற்றதை யொப்புக்கொள்ளவில்லை. 27-ம் பிரதிவாதி எந்தத் தொகையும் தான் வசூலித்ததாக ஒப்புக்கொள்ளவில்லை. 28

முதல் 31 வரையிலுள்ள பிரதிவாதிகளிடம் ஏதேனுந்தொகை கொடுபட்டதாக ஏற்பட்டாலும், தானதற்கு கட்டுப்பட்டவரல்லவென்றும், முழு டிக்கிரித்தொகையுந் தனக்குச் சேரவேண்டியதென்றுங் கட்சியாடினார். இவ்விதந்தொகை வரவு வந்ததாகச் சொன்னதைப்பற்றி சப் ஜட்ஜி சாக்ஷி விசாரணை செய்யவில்லை. டிஸ்டிரிக்ட் கோர்ட்டார் சப் ஜட்ஜியின் தீர்மானத்தை ஆதரித்துச்சொன்னதுமன்றி தொகை கொடுபட்டது உண்மையாகவிருந்தாலும் அது சர்டிபை செய்யப்படாததால் அது செல்லத்தக்கதல்லவென்று சொன்னார். முதல் பிரதிவாதியால் கொடுபடவேண்டிய நெல்விலையைப்பற்றியும் ஆக்ஷேபனை ஏற்பட்டது. இது விஷயமாக விசாரிக்காமல் கவர்ன்மெண்டு கெஜட்டில் போடப்பட்ட விலையையே போட்டுத் தீர்ப்புசெய்து விட்டார்கள்.

இந்த அப்பீலில் பிரதம விவாதம் என்னவென்றால் 28 முதல் 31 பிரதிவாதிகள் நிறைவேற்று மனு கொடுத்தது சரியா அல்லது 27-ம் பிரதிவாதி தான் நிறைவேற்று மனு கொடுக்கவேண்டியதா என்பதுதான். 28 முதல் 31 வரையிலுள்ள பிரதிவாதிகள் ஜாஸ்தியான மெம்பர்களாயிருப்பதால் அவர்கள் தான் நிறைவேற்று மனு கொடுக்கவேண்டுமென்று சப் ஜட்ஜி சொன்னது சரியல்ல. 27-ம் பிரதிவாதி மூத்தவராகையால், அவர்தான் குடும்ப மானேஜர்; அவர் தனக்காகவும் தன்னுடைய சகோதரர்களுக்காகவும் டிக்கிரியை நிறைவேற்றப்பாத்தியமுடையவர். ஆனதால் அவரே இந்த டிக்கிரியை நிறைவேற்ற வேண்டியதெனத் தீர்மானிக்கிறோம்.

27-ம் பிரதிவாதி முதல் பிரதிவாதிக்கு உடந்தையாகவிருப்பதாக 28 முதல் 31 பிரதிவாதிகள் சொல்லுகிறார்கள். இதைப்பற்றி விசாரிக்கப்படவில்லை. ஒரு குடும்ப மானேஜர் தனக்காகவும் தன்னுடைய பாகஸ்தர்களுக்காகவும் ஒரு டிக்கிரியை நிறைவேற்றுவதில் எவ்வித ஜாமீனும் வாங்கவேண்டியது அவசியமில்லாவிட்டாலும் இந்தக் கேசில் 28 முதல் 31 பிரதிவாதிகள் சொல்வது உண்மையென ரூஜூப்பிக்கப்படும் பட்சத்தில் மற்றச் சகோதரர்களின் நன்மையின் பொருட்டு 27-ம் பிரதிவாதியிடத்தில் ஜாமீன் வாங்கலாம்.

இரண்டாவது விவாதம் முதல் பிரதிவாதியால் டிக்கிரித்தொகை கொடுபட்டதைப்பற்றி, முதல் பிரதிவாதி டிக்கிரித்தொ

கையை 28 முதல் 31 பிரதிவாதிகளிடங் கொடுக்க எவ்வித நியாயமுமில்லை. அதற்கு 27-ம் பிரதிவாதி எவ்விதத்திலுங் கட்டுப்பட்டவரல்ல. கோர்ட்டுக்கு வெளியில் டிக்கிரித்தொகை கொடுபட்டாலும் அது (1911) 2 M. W. N. 420 தீர்ப்பிற் கண்படி செல்லுபடியுள்ளது. இவ்விதங் கொடுபட்ட தொகை சட்டப்படி சர்டிபை செய்யப்படாததினாலே நிறைவேறு நடவடிக்கைகளில் இதைப்பற்றி விசாரிக்கக்கூடாதென கக்ஷி சொல்லப்படுகிறது. சி. பு. கோடு 21-வது ஆர்டர் 2-வது ரூல் ரொக்கத் தொகையைப்பற்றிச் சொல்லப்பட்டதே யன்றி மற்றதற்கல்ல. ஆனதால் முதல் பிரதிவாதியால் நெல் கொடுபட்டதாகச் சொல்வதைப்பற்றி நிறைவேறு நடவடிக்கையில் விசாரித்துத் தீர்மானஞ்செய்யலாம். கவர்ன்மெண்டு கெஜட்டில் ஏற்பட்ட நெல்விலைப்படி தீர்மானித்தது சரியல்ல. முதல் பிரதிவாதி நெல்விலையைப்பற்றி ரூஜூப்பிக்கப் பாத்தியமுடையவர்.

ஆகையால் 28 முதல் 31 பிரதிவாதிகளின் நிறைவேற்று மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும். 27-ம் பிரதிவாதி கொடுத்த நிறைவேற்று மனுவை யங்கீகரித்துக் கீழ்கோர்ட்டார் மேலே சொன்ன விஷயங்களைப்பற்றி பூர்த்தியாக விசாரித்து முடிவு செய்யவேண்டியதற்காக இந்த நம்பர் ரிமாண்டு செய்யப்பட்டது.

1913 M. W. N. 802.

கல்கத்தா ஹைகோர்ட்டு.

1913ளூத்திய மிஸிலேனியஸ் அப்பீல் நம்பர் 162.

தீர்ப்பு 15—7—13.

ஜட்ஜிகள். மிஸ்டர் ஜஸ்டிஸ் காக்ஸ்துரையவர்கள் மிஸ்டர் ஜஸ்டிஸ்ரேய்துரையவர்கள்	ஹரிசர்ண் டட் அ. வாதி V மொன்மோஹன்நண்டி ஆ. அ. பிரதிவாதி

7. [சிவில் புரிஸீஜர் கோடு]

"டிக்கிரிகாரன் பெந்தக சொத்தை ஏலத்தில் எடுத்த பின் டிக்கிரி கடன்காரன் அந்த ஏலத்தை ரத்து செய்யவேண்டுமென மனுக் கொடுத்து பின்பு உபயவாதிகளும் இராஜியாகி டிக்கிரி கடன்காரன் தன்மனுவைத் தள்ளிக்கொள்ளுகிறதென்றும், டிக்கிரிதாரன்

தான் ஏலமேடுத்த சோத்தை வசப்படுத்தாமல் சிலகாலம் நிறுத்தி வைத்துக் கோள்ளுகிறதேன்றும், அதற்குள் டிக்கிரித் தோகையைக் கோடுத்து சோத்தை சாசனம் பேற்றுக்கோள்ளுகிறதேன்றும், அவர்களுக்குள் உடன்படிக்கை யேற்படுத்திக்கோண்டால் அதைப்பற்றி கோர்ட்டார் விசாரித்துத் தீர்மானிக்கலாமேன்பது."

ஒரு டிக்கிரிதாரன் பெந்தக சொத்தை ஏலம்போட்டு வித்து அதைத்தானே ஏலத்தி லெடுத்துவிட்டார். டிக்கிரி கடன்காரன் அந்த ஏலம் ரத்து செய்யப்பட வேண்டுமென மனுக்கொடுத்தார். பின்பு உபயவாதிகளும் இராஜியாகி அந்த ஏலம் உறுதி செய்யப் படும்படி விட்டுவிடுகிறதென்றும், டிக்கிரிதாரன் ஏலமெடுத்த சொத்தை வசப்படுத்தாமல் இரண்டு வருஷம் வரையில் நிறுத்திவைத்துக் கொள்ளுகிறதென்றும், டிக்கிரி கடன்காரன் டிக்கிரிதாரனுக்கு ரூ. 9100 ம் ஏலம் போடப்பட்ட நிலத்தின் வரும்படி ஏலம் உறுதி செய்யப்பட்ட தேதிமுதல் தொகை செல்லாகுந் தேதிவரையில் கூடுதலாகுந் தொகையில் பேர்பாதியும் கொடுத்துவிட்டால் டிக்கிரிதாரன் அந்த ஏலம்போன நிலத்துக்கு டிக்கிரி கடன்காரனுக்கு விடுதலை தஸ்தாவேஜி எழுதிக்கொடுத்துவிடுகிறதென்றும், அவர்களுக்குள் உடன்படிக்கை யேற்படுத்திக்கொண்டார்கள். டிக்கிரிதாரன் பின்பு தான்பெற்ற ஏல சர்டிபிகேட்டின்படி சொத்தை வசப்படுத்த மனுக் கொடுத்தான். டிக்கிரி கடன்காரன் தனக்கும் டிக்கிரிதாரனுக்கு மேற்பட்ட உடன்படிக்கையைப்பற்றி விசாரிக்க வேண்டுமென மனுக்கொடுத்தான். இந்த மனு சி. பு. கோடு 21 வது ஆர்டர் 2 வது ரூல்படி யில்லையென்றும் இதை விசாரிக்கக்கூடாதென்றும் சப் ஜட்ஜி உத்தரவு செய்துவிட்டார். இதைப் பற்றி பிரதிவாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்தார்.

சப் ஜட்ஜி செய்த உத்தரவின்பேரில் அப்பீல் செய்ய சட்டமில்லை யென்று டிக்கிரிதாரன் ஆக்ஷேபித்தான்.

உத்தரவு:—இது ஒரு சிக்கலான விவகாரம். இதைப்போன்ற கேஸ்களில் ஹைகோர்ட்டார்கள் சில தீர்மானங்கள் செய்திருக்கிறார்கள். (இ. லா. ரி. 31 அலகபாத் 82; இ. லா. ரி. 13 சென்னை 504) சொத்து வசமாக வேண்டுமென்று கொடுக்கும் நிறைவேற்று மனுவாகக் கொள்ளப்படாவிட்டாலும், நிறைவேற்று நடவடிக்கை சம்பந்தமான மனுவென்றே அங்கீகரிக்கப் படவேண்டியதெனத் தீர்

மானித்திருக்கிறார்கள். இந்த உத்தரவுகள் சி. பு கோடு 47 வது செக்ஷன்படி செய்யப்பட்டன. இந்தக் கேஸூம் அந்த செக்ஷன் படியே விசாரித்துத் தீர்மானிக்கப்பட வேண்டியதாக விருக்கிறது. ஆகையால் டிக்கிரி கடன்காரனுடைய அப்பீலை யங்கீகரித்து இவர் சொல்லும் ஆக்ஷேபனைகளை விசாரித்து முடிவு செய்யும்படி. நம்பர்க்கட்டுக் கீழ்கோர்ட்டுக்கு அனுப்பப்பட்டது.

20 Indian Cases 874.

அலகபாத் ஹைகோர்ட்டு.

1912 ஹூ த்திய அப்பீல் நம்பர் 237.

தீர்ப்பு 21—7—13.

ஜட்ஜிகள்.	
ஜஸ்டிஸ் ஸர் P.C. பனர்ஜிஅவர்கள்	ஹரிபன்ஸ்ராய் வு. அ. வாதிகள் V ஸ்ரீனிவாஸ் வு. அ. பிரதிவாதிகள்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் ரய்வ்ஸ் அவர்கள்	

8. [சிவில் புரிஸீஜர் கோடு.]

பேந்தகம் பேற்றவன் பேந்தக சோத்து விஷயமாக ஏற்பட்ட வழக்கின் சேலவுத் தோகைக்காக அந்தப் பேந்தக சோத்தை ஜப்தி சேய்வித்து ஏலவிற்று முதல் சேய்யலா மேன்பது.

அப்பீல்தார்களும் அவர்களின் முன் வார்சுகளும் 1887-ஹூ அக்டோபர் மாதம் 3உ சுப்பராய் எனபவருக்கு ஒரு போக்கிய அடமானபத்திரம் எழுதிக் கொடுத்திருந்தார்கள். இந்த அடமான பத்திரத்திற்கண்ட சில சொத்துகள் முன் பெந்தகதாரன் வசமிருந்தன. சில இவர்களுக்கு பெந்தக பாத்தியமா யிருந்தன. முன் பெந்தகதாரருக்குக் கொடுக்கவேண்டிய தொகையைக்கொடுத்து அதை மீட்டுக் கொடுப்பதாகவும், தங்கள் வசமுள்ள பெந்தக சொத்துக்களைப்பற்றி போர்குளோஷர் (forclosure) வழக்கிட்டு அவைகளையுங் கொடுத்துவிடுவதாகவும், அப்பீல்தாரர்கள் தாங்களெழுதிக்கொடுத்த பெந்தக பத்திரத்தில் எழுதியிருந்தார்கள். அப்பீல்தார்கள் முன் பெந்தக சொத்தைமீட்டு ஸ்வாதீனஞ்செய்து கொண்டார்கள். தங்கள் வசமிருந்த பெந்தக சொத்துக்கு போர்குளோஷர் வழக்கிட்டு தீர்ப்பும் பெற்றார்கள். ஆனால் போக்கிய அடமானம் பெற்றவருக்கு அந்தச் சொத்துக்களை ஸ்வாதீனப்படு

த்திக் கொடுக்கவில்லை. போக்கிய அடமானம் பெற்ற சுப்பராய் தனக்குள்ள பாத்தியதையை அப்பீல் பிரதிவாதிகள் ஸ்ரீனிவாஸ் ராய் கலியா லூவுக்கு மாற்றிவிட்டார். இதனால் அப்பீல் பிரதிவாதிகள் தங்களுக்குக் கிடைத்த போக்கிய பத்திரப்படி சொத்துக்கள் வசமாக வேண்டுமென வழக்கிட்டு டிக்கிரி பெற்றார்கள். இவ்வழக்கின் செலவுத் தொகை அப்பீல் வாதிகளால் அப்பீல் பிரதிவாதிகளுக்குக் கொடுபட வேண்டியதாக விருந்தது. அந்தச் செலவு தொகைக்காக அ. பிரதிவாதிகள், அ. வாதிகளுக்குள்ள தாவா பெந்தக சொத்து மீட்கும்படியான பாத்தியதையை(Redemption-right) ஜப்தி செய்து ஏலவிற்று முதலுக்குக் கொண்டுவந்தார்கள்.

போக்கிய அடமானதார்கள் இவ்வித ஜப்தி செய்தது சி. பு. கோடு 34 வது ஆர்டர் ரூல் 14 க்கு விரோதமானதென்றும், இவர்கள் வசத்தில் போக்கிய சொத்துக்களிருப்பதால் பெந்தகதாரர்களின் பாத்தியதையை ஏலவிற்று முதல் செய்ய இவர்களுக்குப் பாத்தியமில்லையென்றுங் கட்சியாடினார்கள். இவர்களின் ஆக்ஷேபனைகளைக் கீழ்கோர்ட்டார் அங்கீகரிக்காமல் தள்ளுபடி செய்துவிட்டதின்பேரில் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்திருக்கிறார்கள்.

தீர்ப்பு:—பெந்தக பாத்தியதையின் பேரில் தொகை கிடைக்கவேண்டுமென பெந்தகம் பெற்றவன் வழக்கிட்டு டிக்கிரி பெற்றிருந்தால் அந்தப்பெந்தக பாத்தியதையைப்பொறுத்து ஏலவிற்று முதல் செய்யவேண்டுமென வழக்கிடவேண்டியதேயன்றி வேறு விதமாக அந்தப் பெந்தக சொத்தை ஏலவிற்று முதல் செய்யக் கூடாதென சி. பு. கோடு 34 வது ஆர்டர் 14 வது ரூலில் சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது நாம் பார்க்கவேண்டியது தாவாவிற்கண்ட டிக்கிரி பெந்தக பாத்தியதையைப் பொறுத்து அத்தொகைக்காக ஏற்பட்ட டிக்கிரியா என்பதுதான். பெந்தக சொத்து விஷயமாக வழக்கிட்டு அதற்காக ஏற்பட்ட செலவு தொகையானதால் பெந்தக பாத்தியதையைப் பொறுத்த டிக்கிரிதான் இதுவென்று அப்பீல்வாதிகள் வாதிக்கிறார்கள். இது பெந்தக சொத்தைப் பொறுத்த டிக்கிரியல்லவென்றும், வேறு டிக்கிரிக்காக ஏற்பட்ட செலவுத் தொகையென்றும் அ. பிரதிவாதிகள் கக்ஷியாடுகிறார்கள். பெந்தகம் பெற்றவர்கள் தங்களுடைய வெண்ணலை டிக்கிரி கடனுக்காக அந்தப் பெந்தக சொத்தை ஏலவிற்று

முதல் செய்யக் கூடாதென்ற நிபந்தனைக்காக இந்த ரூல் ஏற்பட்டிருக்கிறது. தாவாவிற்கண்ட டிக்கிரி பெந்தகசொத்து விஷயமான தகவலின் பேரி லேற்பட்டதென்பதற்குச் சந்தேகமில்லை. இந்த டிக்கிரியிற் கண்ட செலவு தொகை பெந்தகசொத்தைப் பொறுத்து ஏற்பட்டதல்ல; தாவாவிற் கண்ட கேஸ் இ. லா. ரி 27 அலகபாத் 517 தீர்ப்புக்கு மிகவும் ஒற்றுமையாக விருக்கிறது. தாவா டிக்கிரித் தொகை பெந்தகத் தொகையின் ஒருபாகமாக எண்ணப்பட வேண்டுமென் அப்பீல் வாதிகள் சொல்லுகிறார்கள். இவ்வித செலவு தொகைகளைப் பற்றி சீவில் புரிஸீஜரில் யாதொன்றுஞ் சொல்லப்பட வில்லை. இதைப் பெந்தகத் தொகையின் ஒரு பாகமாக எண்ணக் கூடாது. இந்த அப்பீல் பிரதிவாதிகளே இச்சொத்தை யேலத்தில் கேட்க அனுமதி கொடுக்க லாமா கூடாதாவென்ற விஷயம் கீழ்க்கோர்ட்டார் முடிவு செய்யவேண்டியதாகவிருக்கிறது. கீழ்க்கோர்ட்டார் செய்த தீர்மானத்தை யுறுதி செய்து அப்பீலைத் தள்ளும்படி செய்கிறோம்.

20 இந்தியன் கேஸஸ் 876

சென்னை ஹைகோர்ட்டு.

1911 ௵த்திய 2 வது அப்பீல் நம்பர் 979.

தீர்ப்பு—30-7-13.

ஜட்ஜிகள்	அர்த்தொ ரூமுருகு அ. வாதிகள்
மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்ய ரவர்கள்	V
மிஸ்டர் ஜஸ்டிஸ் டியாப்ஜியவர்கள்	அர்த்தொபாத்ஹிஅூ அ.பிரதிவாதிகள்

[9 சீவில்புரிஸீஜர்கோட்]

“ எல்லா கக்ஷிக்காரர்களுக்கும் சமமாக நீதி செலுத்த வேண்டியதில் கோர்ட்டாருக்கு ஜாஸ்தி யானபாத்யங்களுண்டென்பதும், ஜமீன் கிராமங்களில் சில நிலத்தில் குடிக்காணிபாத்தியம் தனக்கிருக்கிறதென்றும் ஜமீன்தார் சொல்வாரானால் அதை ரூஜுப்படுத்த வேண்டிய கடமை ஜமீன் தாரைப் பொறுத்ததென்பதும். ”

பிராத பகிரி ஜமீன் தாரிடத்திலிருந்து 21 ஏக்கர் நிலத்தின் குடிக்காணி பாத்தியதையை 1906 வருஷத்தில் ஆகஸ்டு மாதம் 19௳ வாதிகள் வாங்கியதாகவும், 1316—1317 பசலிகளில் அந்த

சொத்துகளை யனுபவித்து வந்த தாகவும் பிரதிவாதிகள் அந்த நிலங்களில் துராக்கிரதமாகப் பிரவேசித்து மாசூல்களைக் கொண்டு போய்விட்டதாகவும் அச் சொத்து கிடைக்க வேண்டு மென்றும், வாதிகள் ஆஸ்கா டிஸ்ரிக்ட் முனிசீப் கோர்ட்டு 1908 வருஷத்திய 1061 நம்பரில் வழக்கிட்டார்கள். வாதிகளின் சாசனம் பிரயோஜனத்துடன் ஏற்படவில்லை யென்றும், அதனால் தாவா செல்லத் தகுந்த தல்ல வென்றும், தாவா நிலத்துக்கு குடிவார பத்தியம் ஜமீன்தாருக்கு எந்தக் காலத்திலு மிருந்த தில்லை யென்றும், அவைகள் தங்களுடைய குடிக்காணி பாத்திய முள்ள நிலங்களென்றும் பிரதிவாதிகள் கட்சியாடினார்கள். டிஸ்டிரிக்ட் முனிசிப் வாதியின் தாவாப்படியே தீர்ப்பு செய்து விட்டார்கள். இதைப் பற்றி பிரதிவாதிகள் அப்பீல் செய்ததில் சப்கோர்ட்டார்.

(a) தாவாசாசனத்துக்குப் பிரதி பிரயோசன மில்லாத தால் அந்தச் சாசன பாத்தியதையை முன்னிட்டு வாதிகள் வழக்கிட்டது செல்லாதென்றும்,

(b) தாவா நிலத்தைப் பிரதிவாதிகள் 1906 வருஷத்துக்கு முன்னிட்டும், அதற்குப் பின்னிட்டும் அனுபவித்து வந்திருக்கிறார்களென்றும், ஜமீன் தாருக்கு அதில் குடிவார பாத்தியதை யிருந்ததில்லை யென்றும்,

(c) தாவா நிலம் ஜமீன்தாரின் சொந்த பாத்திய நிலமென்பதை ருஜுப்பிக்க வில்லை யென்றும், முக்கியமாக அவர் அனுபவித்ததைப் பற்றி ருஜுவில்லையென்றும்,

வாதிககளின் வழக்கைத்தள்ளுபடி செய்து விட்டார்கள். அதின் பேரில் வாதிகள்ஹைகோர்ட்டில் அப்பீல் செய்திருக்கிறார்கள்.

தீர்ப்பு:—வாதிகளின் சாசனத்துக்கு பிரதிபிரயோஜன மிருக்கிறதா இல்லையா வென்பதைப் பற்றி சப்ஜட்ஜி விசாரிக்கவேண்டிய அவசியமே யில்லை. இந்தச்சாசனத்தைப் பற்றி ஜமீன்தார் ஆக்ஷேபிக்க யில்லை. பிரதிவாதிகள் இது விஷயத்தைப் பற்றி ஆக்ஷேபிக்க எவ்வித ஞாயமுமில்லை. இதுவிஷயமாக சப்ஜட்ஜி தீர்மானஞ் செய்தது பிசகு. சொத்து ஸ்வாதீன விஷயமாக சப்ஜட்ஜி தீர்மானித்தது ருஜுவம்சமாக விருப்பதால் அது விஷயத்தைப் பற்றி இரண்டாவது அப்பீலில் கவனிக்கத்தக்கதில்லை

தாவாநிலம் ஜமீன்தாரின் சொந்த குடும்ப நிலமா என்பதைப்பற்றி மெட்ராஸ் எஸ்டேட் லாண்டு ஆக்டு 185 வது செக்ஷன்

படி ஜமீன்தாரும் அவருடைய பிரதிநிதிகளும் ருஜுப்படுத்தவேண்டியதேயன்றி அது பிரதிவாதிகளைப் பொறுத்த தல்ல.

சப்கோர்ட்டில் அப்பீல் விசாரணையி லிருக்கும் போது 2ம் பிரதிவாதி யாகிய 2 வது அப்பீல் தாரன் இறந்து விட்டதாகவும் இறந்த வனுக்கு வார்சு நியமிக்கப் படாமலே நடவடிக்கைகள் நடத்தப்பட்ட தாகவும் அவ்வித நடவடிக்கை சி. பு. கோடு 22 வது ஆர்டர் 4 வது ரூல்படி விரோதமான தென்றும், அந்த 2-ம் பிரதிவாதியின் அப்பீலைப் பற்றின வரையில் சப்ஜட்ஜி தள்ளுபடி செய்து டிஸ்ரிக்ட் முனிசீப்பின் தீர்ப்பையுறுதி செய்திருக்கவேண்டுமென்றும் அப்பீல்வாதிகள் கக்ஷி சொல்லுகிறார்கள். மற்றப்பிரதிவாதிகள் தாவா நிலங்கள் தங்களுக்குச்சொந்தமான தென்றும் வாதிகளுக்குப் பாத்தியமில்லை யென்றும், பொதுவாகக் கக்ஷியாடினார்கள். சி-பு-கோடு 41 வது ஆர்டர் 4 வது ரூல்படி எல்லாப் பிரதிவாதிகளுக்கும் பொதுவாக அனுகூலமான தீர்ப்பு செய்யவேண்டியதில் 2 ம் பிரதிவாதியின் பாத்தியதையை மட்டில் நீக்கிச் செய்ய நியாயமில்லை. கோர்ட்டார் எல்லாக் கக்ஷிக்காரர்களுக்கும் பொதுவாக நியாயத்தீர்ப் பளிக்கக் கடமைப் பட்டிருக்கிறார்கள். இ-லா-ரி 24 பம்பாய் 284. தீர்ப்பிற் கண்டபடி பிரதி வாதிகளின் பொதுவான கக்ஷியையனுசரித்து தீர்ப்புச் செய்யவேண்டும். ஆகையால் அப்பீல் வாதிகளின் இந்தக் கக்ஷியையுந் தள்ளுபடி செய்து கீழ் அப்பீல் கோர்ட்டாருடைய டிக்ரியை உறுதி செய்கிறோம்.

20 Indian cases 952.

சென்னை ஹைகோர்ட்டு.

1912ளு த்திய 2 வது அப்பீல் நம்பர் 922.
தீர்ப்பு 25—8—13.

ஜட்ஜிகள்	நரசிங்கராவின் மனைவி லெக்ஷிமி நரசம்மா ஆ. அ. வாதிகள்
ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள்	V
ஜஸ்டிஸ் டியாப்ஜி அவர்கள்	அவன்சி லெக்ஷ்மம்மா அ. பிரதிவாதி

6. [லிமிடேஷனக்ட்.]

பெந்தகம் பெற்றவர்கள் இருவரிலொருவர் அத்தொகையைத் தள்ளிக்கொடுத்ததாகச் சொன்னாலும், பிந்தி வசூலித்ததை முந்தியே

வசூலித்துவிட்டதாகச் சொன்னாலும் மற்றொரு பெந்தகம் பெற்றவர் அத்தொகையை வசூலிக்கக் காலாவதி தோஷம் எதன் முதல் பார்க்க வெண்டுமென்பது.

நரசிங்கராவ், ராமமூர்த்தி என்ற சகோதரர்கள் இருவரும் ரூபாய் 1000 பெந்தகத்தின் பேரில் கடன் கொடுத்திருந்தார்கள்.

இந்த இரண்டு சகோதரர்களும் இறந்து விட்டார்கள். ராமமூர்த்தி இந்தப் பெந்தகத்தின் அசல் வட்டிக்கூடுதல் தொகை ரூபாய் 1000 சென்ற 1904-ம் வருஷம் வசூலித்து விட்டதாகவும் அதில் நரசிங்கராவின் பாகம் பாதி ரூபாய் 500-ம் அதற்கு நாளது வரையிலுள்ள வட்டியும் கிடைக்கவேண்டுமென்று அவருடைய வார்சுகள் அந்த ராமமூர்த்தியின் வார்சுகள் பேரில் 1909-ம் வருஷத்தில் வழக்கிட்டார்கள்.

இறந்த ராமமூர்த்தி தாவா பெந்தகத்தொகையில் தள்ளிக் கொடுத்தது போக ரூபாய் 1000 மட்டில் வசூலித்திருப்பதாகவும் அதில் பாதி ரூபாய் 500 மட்டில் வாதிகளுக்குக் கிடைக்கக்கூடியதென்றும், தாவா தொகை வசூலித்து மூன்று வருடங்களுக்கு மேற்பட்டு விட்டதால் வாதிகளின் தாவாகாலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுப் போய்விட்டதாகவும், பிரதிவாதிகள் கக்ஷியாடினார்கள்.

ராமமூர்த்தி 1904-ம் வருஷத்தில் பூராத்தொகையும் வசூலித்திருக்க யாதொரு தொகை வசூலிக்க வில்லை யென்று சொல்லி வந்ததாகவும், இவருடைய மோச நடவடிக்கைகள் வாதிகளுக்கு 1908 வருஷத்தில் தான் தெரியவந்தாகவும் அதனால் லிமிடேஷனாக்டு 18 வது செக்ஷன்படி பிரதிவாதிகளின் மோச நடவடிக்கைகள் வாதிகளுக்குத் தெரிய வந்த காலமாகிய 1908 வருஷம் டிசம்பர்மாதத்தில் தான் வியாஜ்ய மூல முற்பத்தியாயிருக்கிறதென்றும் லிமிடேஷனாக்டு ஷிடியூல் 120 - வது ஆர்டிகிள் தாவாகேசுக்கு ஒற்றுமை யில்லை யென்று ஏற்பட்டாலும், 62வது ஆர்டிகிள்படி வாதிகளின் தாவாவுக்கு எவ்வித காலாவதி தோஷமு மில்லை யென்றும் வாதிகள் கக்ஷிசொன்னார்கள்.

ராமமூர்த்தி ரூ 1000 மட்டில் 1906 வருஷத்தில் வசூலித்திருப்ப தாகவும், அதில் வாதிகளுக்குக் கிடைக்கக்கூடிய பாதி ரூ 500 ம் பிராதின் தேதிமுதல் வட்டியுடன் கிடைக்கவேண்டிய

தெனக் கீழ் அப்பீல் கோர்ட்டார் சப்ஜட்ஜியவர்கள் தீர்ப்பு செய்தார்கள். இத்தீர்ப்பு சட்டவிரோதமான தென்றும், தங்களின் பிராதுப்படி பாக்கியாவுள்ள தொகையும் அத்தொகை ராமமூர்த்தி வசூலித்த தேதிமுதல் நாளது வரையிலுள்ள வட்டியுங்கிடைக்கவேண்டுமென வாதிகள் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்கிறார்கள்.

தீர்ப்பு:—சட்டப்படி இப்போது கிடைக்கக்கூடிய எல்லா கேஸ்களிலும், வட்டி கிடைக்கக்கூடிய தென 1839 வருஷத்திய 32 வது ஆக்டில் சொல்லப் பட்டிருக்கிறது. மோசவகையாக எவன் தொகை வசூலிக்கிறானோ அவன் அத்தொகையை வட்டியுடன் கொடுக்கவேண்டிய தென்று பிரிவிகவுன்ஸில் லார்ட் மக்னாடன் துரையவர்கள் (1904) அப்பீல் கேஸஸ் 317 ல் சொல்லியிருக்கிறார்கள். பிரதிவாதிகளின் புருஷன் 1906 வருஷத்தில் தொகை வசூலித்த விபரம் வாதிகளுக்கு 1908 டிசம்பர் மாதத்துக்கு முன் அறிவிக்கப் படவில்லை. இவர்களுக்கு இது விபரந் தெரிந்திருந்தால் உடனே தொகையை வட்டியுடன் வசூலித்திருப்பார்கள். ஆகையால் 1906 வருஷமுதல் தொகை வசூலாகுந் தேதிவரையில் வாதிகளுக்குச் சேரவேண்டிய ரூ 500 க்கும் வட்டி கிடைக்கவேண்டிய தெனத் தீர்மானிக்கிறோம்.

(1913) M. W. N. 836.

சென்னை ஹைகோர்ட்டு.

1912 வருத்திய லெட்டர்ஸ் பேடண்ட் அப்பீல் நம்பர் 171.

தீர்ப்பு 29—4—13.

ஜட்ஜிகள்.	கோடகிரி வெங்கடாராமானுஜம் ஆ. அப்பீல் வாதிகள் (பிரதிவாதிகள்)
சீவ் ஜஸ்டிஸ் வொயிட் துரையவர்கள்	V
ஜஸ்டிஸ் மில்லர் துரையவர்கள்	படபண்ட பாலவய்யா
ஜஸ்டிஸ் ஒல்டுபீல்ட் துரையவர்கள்	அ. பிரதிவாதி (வாதி)

7. [லிமிடேஷனாக்ட்]

மாசூல்களை அக்கிரமமாக ஜப்தி செய்து அதனாலுண்டாகிய நஷ்டங்களுக்கு வழக்கிட காலாவதிதோஷம் மூன்று வருஷ மென்பது.

பிரதிவாதிகள் சட்ட விரோதமாக வாதியின் நிலத்தையும் அதிலுள்ள மாசூலையும் 1906 ஹு டிசம்பர் மாதம் 13உ ஜப்தி செய்வித்தார்கள். நிலத்தின் ஜப்தி விடுதலை செய்யப்பட்டது; மாசூலின் ஜப்தி விடுதலை செய்யப்படவில்லை. இந்த ஜப்தி பூர்ஜிதத்திலிருந்த காலத்தில் சில மாசூல் திருட்டினால் நஷ்டப்பட்டது சரியான காலத்தில் அறுவடை செய்யப்படாததாலும், அலக்ஷியத்தினாலும் சில மாசூல்கள் நஷ்டமாயின. பாக்கியாக விருந்தன கோர்ட்டாரால் ஏலம் போடப்பட்டு அவைகளை பிரதிவாதிகளே அடைந்தார்கள். இந்த முழுமாசூல் நஷ்டமும் தனக்குப் பிரதிவாதிகளிடமிருந்து கிடைக்கவேண்டுமென வாதி 1909 ஹு நவம்பர் மாதம் 19உ வழக்கிட்டார். இவர் தனக்கு வியாஜ்ஜிய மூலம் தாவாவிற்கண்ட மாசூல் ஜப்தி செய்யப்பட்ட 1906 ஹு டிசம்பர் மாதம் 13உயி லிருந்தாவது அல்லது நிலத்தின் பாத்தியம் தனக்கு ஸ்தாபிக்கப்பட்ட டிக்கிரி தேதியாகிய 1909 ஹு செப்டம்பர் மாதம் 22உ யிலாவது உற்பத்தி யென்று பிராதில் சொல்லியிருக்கிறார்.

தாவா மாசூல்கள் ஜப்தி செய்யப்பட்ட தேதியி லிருந்து லிமிடேஷனாக்ட் 29-வது ஆர்டிகிள்படி (ஜங்கம சொத்து அக்கிரமமாக ஜப்தி செய்யப்பட்டதினால் உண்டாகிய நஷ்டம் வசூலித்தல்) ஒரு வருஷத்துக்குள்ளாவது, 36-வது ஆர்டிகிள் படி (கெட்டநடவடிக்கை முதலியன வற்றாலுண்டாகிய நஷ்டம் வசூலித்தல்) இரண்டு வருஷத்துக்குள்ளாவது வாதி வழக்கிடாததால் வாதியின் தாவா காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுப் போய்விட்டதாக பிரதிவாதிகள் கக்ஷியாடினார்கள்.

கீழ்க்கோர்ட்டார் வாதிக்கு அனுகூலமாக தீர்ப்பு செய்துவிட்டதின்பேரில் பிரதிவாதிகள் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்தார்கள். இந்தக் கேசை விசாரித்த ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்களும் ஜஸ்டிஸ் சந்திரமய்யரவர்களும் வெவ்வேறான அபிப்பிராயங் கொண்டதால் லெட்டர்ஸ் பேடெண்டு 15-வது கிளாஸ்ப்படி வேறு மூன்று ஜட்ஜிகளின் தீர்மானத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

தீர்ப்பு:—அக்கிரமமாக ஜப்திசெய்யப்பட்டதினாலே நஷ்டமுண்டாய் விட்டதாகவும் அந்த நஷ்டங்கள் கிடைக்கவேண்டுமென்றும் இந்தத் தாவா செய்யப்பட்டிருக்கிறது. பிரவாதிகள் அக்கிரமமாக லாபமடைந்து விட்டார்கள்; அவைகிடைக்கவேண்டு

மென்று வாதி தாவா செய்யவில்லை. நிலத்தையும் அதிலுள்ள மாசூலையும் அக்கிரமமாக ஜப்தி செய்வித்தது ஸ்தாவர சொத்தில் ஆக்கிரமித்ததாகிறது; அந்த நஷ்டங்கிடைக்க வேண்டுமென்று தான் இந்த தாவா கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதாவது அந்த ஜப்தி செய்ததினாலுண்டாகிய நஷ்டங் கேட்கப்பட்டிருக்கிறது. இவ்வித கேஸ்களுக்கு 39-வது ஆர்டிகிள் தான் ஒற்றுமையானதென்று கல்கத்தா ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். (இ. லா. ரி 36 கல்கத்தா 141).

இ. லா. ரி. 31 சென்னை 431, 23 சென்னை லாஜர்னல் 54 இவைகள் தங்கள் கேசுக்கு ஆகாரமானவை யென பிரதிவாதி (அப்பீல் வாதி) எடுத்துச்சொல்லுகிறார். அந்தத் தீர்ப்புக்களிற் கண்டன. ஜங்கம சொத்து ஜப்தி விஷயமாக வேறுபட்டன. அவை தாவா கேசுக்கு ஒற்றுமையானதல்ல. இந்த தாவாவுக்கு 39வது ஆர்டிகிள்படி மூன்று வருஷந்தான் காலாவதி தோஷ மெனத் தீர்மானிக்கிறோம். பிரதிவாதிகளின் அப்பீல் செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

(1913) M. W. N. 869.

சென்னை ஹைகோர்ட்.

1911 ஹுத்திய 2-வது அப்பீல் நம்பர்கள் 1548—1549.

தீர்ப்பு 17—7—13.

ஜட்ஜிகள் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள் ஜஸ்டிஸ் டியாப்ஜி அவர்கள்	பலாடுகு பாசுராமய்ய அ. வாதி V வல்லி ராமச்சந்திருடு ஆ அ பிரதிவாதிகள்.

8 [லிமிடேஷனாக்ட்.]

ஒரு மாஜிஸ்டிரேட் சட்ட விரோத மாகவாவது கிரமத்துக்கு விரோதமாக வாவது கி பு கோடு 145 வது செக்ஷன் படி தற்கால பாத்தியத்தைப் பற்றி தீர்மானித்து விட்டால் அதன் பேரில் வழக்கிடக் காலாவதி தோஷம் மூன்று வருஷந்தான் என்பது.

வாதி தன்னுடைய நிலத்தைப் பிரதிவாதிகளுக்கு 1312ம் பசலிக்கு மட்டில் குதகைக்குக் கொடுத்திருந்தார். இந்தக் கெடு கடந்த பிறகும் பிரதிவாதிகள் இந்தநிலத்தை வாதியின் சம்மதி

யன்னியில் அனுபவித்து வந்தார்கள். தாவா நிலத்தினின்றும் பிரதிவாதிகளை நிர்பந்தமாக விலக்க வாதி முயற்சி செய்வதாகவும், தங்களுடைய தற்கால பாத்தியம் ஸ்தாபிக்கப்படவேண்டு மென்றும் பிரதிவாதிகள் கி. பு. கோடு 145 வது செக்ஷன்படி 1313 ம் பசலி முதலில் மாஜிஸ்டிரேட்டாரிடம் மனுக் கொடுத்தார்கள். மாஜிஸ்டிரேட் வாதியிடத்தில் வாக்கு மூலம் வாங்கிக்கொண்டு வாதி சிவில் கோர்ட்டு மூலமாக டிக்கிரி பெற்று ஸ்வாதீனஞ் செய்துகொள்ளுகிற வரையில் அந்தச் சொத்துக்கள் பிரதிவாதிகள் வசமிருக்கவேண்டியதென்று கி. பு. கோடு 145 வது செக்ஷன்படி உத்தரவு செய்துவிட்டார்கள். இந்த உத்தரவு 1903-௵ ஆகஸ்டு மாதம் செய்யப்பட்டது. இதற்கு 3 வருடங்களுக்கு மேற்பட்டு அதாவது 1909-௵ மார்ச்சு மாதத்தில் இந்த சொத்து தனக்கு வசமாக வேண்டுமென வாதி பிரதிவாதிகள் பேரில் வழக்கிட்டார். வாதியின் தாவா லிமிடேஷனுக்ட்டு ஷடியூல் 47 வது ஆர்டிகிள்படி காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுப் போய்விட்டதாக கீழ்க் கோர்ட்டார் தீர்மானித்து விட்டார்கள். அதன்மேல் வாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்கிறார். வாதியின் வக்கீல் மிஸ்டர் சேஷாசாரியார் தன் கக்ஷிக்கு ஆதாரமாக இரண்டு விஷயங்களை யெடுத்துச் சொல்லுகிறார். அவையாவன:—

(1) மாஜிஸ்டிரேட் கி. பு. கோடு 145 வது செக்ஷன்படி உத்தரவு செய்ய ஜூரிஸ் டிக்ஷனில்லை; அதனால் அந்த உத்தரவு வாதியை கட்டுப்படுத்தமாட்டாது. அதனால் 47 வது ஆர்டிகிள் தாவா கேசுக்குப் பொருத்தமானதல்ல.

(2) மாஜிஸ்டிரேட் முன்பாக விசாரணை நடந்துகொண்டிருந்தகாலத்தில் வாதிக்கு தாவா சொத்தில் ஸ்வாதீன பாத்தியமிருந்ததில்லை. அவ்வித பாத்தியம் பிரதிவாதிகள் தாவா சொத்தை விட்டுவிட வேண்டுமென்று அவர்களுக்கு வாதி நோட்டீஸ் கொடுத்த 1903-௵ டிசம்பர் மாத முதல்தான் உண்டாயிருக்கிறது. அந்த விதத்திலும் இந்த 47 வது ஆர்டிகிள் தாவா கேசுக்கு ஒற்றுமையானதல்ல.

தீர்ப்பு:—மாஜிஸ்டிரேட் இந்த 145 வது செக்ஷன்படி உத்தரவு செய்வதற்கு முந்தி கிரமமாக விசாரித்து முடிவு செய்

திருக்கலாம். இந்தக்கேசில் வாதிக்கு நோட்டீஸ்சார்வாகாமலிருந்தபோதிலும் இவர் மாஜிஸ்டிரேட் முன்பாக ஆஜராகி ஸ்டேட்மெண்டு கொடுத்திருக்கிறார். மாஜிஸ்டிரேட் சட்ட விரோதமாகவும், கிரமத்துக்கு விரோதமாகவும் நடந்திருக்கலாம். இதைக்கொண்டு இவருக்கு ஜூரிஸ் டிக்ஷனில்லையென்று சொல்லக்கூடாது. வாதி வக்கீல்சொல்லும் கல்கத்தா கேஸ்கள் தாவா கேசுக்கு ஒற்றுமையானவையல்ல. அவர் எடுத்துக்காட்டும் இ. லா. ரி. 28 பம்பாய் 601 தீர்மானமும் ஒற்றுமையானதல்ல. அது பம்பாய் இராஜதானியில் வழங்கிவரும் மாமல்டார்ஸ் ஆக்ட்டின் நிபந்தனையை யனுசரித்து ஏற்பட்டது. தாவாக் கேஸ் 9 மெட்ராஸ் லா டய்ம்ஸ் 91 பக்கத்திற்கண்ட தீர்ப்புக்கு மிகவும் ஒற்றுமையாக விருக்கிறது. இந்தக் கேஸ் போலவே சட்ட விரோதமாகவும், கிரமப் பிசகாகவும் மாஜிஸ்டிரேட் தீர்மானித்து அதன்மேல் அசல் வழக்கிடப்பட்டது. அதற்கு 47 வது ஆர்டிகிள்படி காலாவதி தோஷமெனத் தீர்மானித்திருக்கிறார்கள். தாவா கேசும் அதேவிதந் தீர்மானிக்கப்படக்கூடியதே.

மாஜிஸ்டிரேட் கி. பு. கோடு 145 வது செக்ஷன்படி நடத்திய நடவடிக்கைகளில் வாதிஇந்தப் பிரதிவாதிகளை தன்னுடைய குடியானவர்களென நினைத்து கக்ஷியாடவில்லை. தன்னுடைய சொத்துக்களை ஆக்கிரமித்துக் கட்டிக்கொண்டதாக கக்ஷியாடியிருக்கிறார். அந்தப்படி பார்த்தால் அவருக்கு வியாஜ்ஜிய மூலம் 1903ம்வருஷம் ஜூலைமாதம் 1ம்வ முதலுண்டாயிருக்கிறது. இவர் சொல்லுகிறபடி நோட்டீஸ் கொடுத்த 1903 வருஷம் டிசம்பர் மாதமல்ல. தற்காலபாத்திய ஸ்தாபனவழக்கு விஷயமாக ஸ்பெஸிவிக் ரிலீவ் ஆக்ட்டு 9 வது செக்ஷன் படி கொடுக்கப்படவேண்டிய பிராதுகள் அவ்விதம் ஆக்கிரமிக்கப்பட்ட தேதி முதல் 6 மாதங்களுக்குள் கொடுபடவேண்டியதெனச் சொல்லப்பட்டிருக்கிறது. கி பு கோடு 145 வது செக்ஷன்படி நடத்தும் நடவடிக்கைகளுக்கு 3 வருடங்கள் ஏற்பட்டிருக்கிறது. இவ்வித பாத்தியா பாத்தியங்கள் ஸ்தாபிக்கப் படவேண்டியதில் கூடியசீக்கிரத்தில் வழக்கிடப் படவேண்டு மென்பதே சட்டங்களின் கருத்து. ஆகையால் வாதியின் அப்பீல்கள் செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டன.

(1913) M-W-N - 871

சென்னை ஹைகோர்ட்டு.

1908 ஹ்த்திய அப்பீல் நம்பர் 139.

தீர்ப்பு 29-4-13.

ஜட்ஜிகள்.	
ஜஸ்டிஸ் பென்ஸன் துரையவர்கள்	வைரவன்செட்டியார் ஆ.அ. வாதிகள்
ஜஸ்டிஸ் சுந்திரமய்யரவர்கள்	V
	அவிச்சாசெட்டியார் ஆ.அ. பிரதிவாதிகள்.

9. [லிமிடேஷனுக்ட்.]

ஒரு ஏஜண்டு தன்னுடைய முதலாளியின் அனுமதியன்னியில் ஒருவனிடம் உடன்படிக்கை செய்துகொண்டு அது நிறைவேறாததா லுண்டாகிய நஷ்டத்துக்கு வழக்கிடவேண்டியதாக விருந்தால் அதற்கு மூன்றுவருஷகாலாவதி தோஷமென்பது.

சொக்கலிங்கசெட்டியார் என்ற ஒருவருக்குச் சொந்தமான வத்தல் என்னும் பெரிய படகை அவருடைய ஏஜண்டு 3-ம் பிரதிவாதி வாதிகளுக்கு விற்றுவிடுவதாக C அடையாள ஆதரவு எழுதிக்கொடுத்திருந்தார். அதில் அந்தப்படகுநாகபட்டணம் அல்லது தொண்டி துறைமுகத்துக்கு வந்துசேர்ந்த ஒருமாதகெடுவுக்குள் அதை விற்றுவிடுவதுமன்றி, சொக்கலிங்கசெட்டியார் பேராலுள்ள பாஸ் வாதிகள் பேருக்கு மாற்றப்படவேண்டியதென்றுங் கண்டிருந்தது. வாதிகளின் பிராதிற்சொல்லுகிறபடி இந்தப்படகு நாகபட்டணம் துரைமுகத்துக்கு 1904ஹ ஜனவரிமீ 10வ வந்து சேர்ந்தது. 3-ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்தபடி படகுவாதிகளுக்கு விற்கப்படவில்லை, முதலாளிசொக்கலிங்கசெட்டியார் இறந்துவிட்டார். அவரின் வார்சுகள் மைனர் குமாரர்கள் 1-2 பிரதிவாதிகளாகவும், அவர்களின் கார்டியன்கள் சீரெங்கமாச்சி சிவகாமியாச்சியாகவும், C அடையாள ஆதரவு எழுதிக்கொடுத்த ஏஜண்டு 3-ம் பிரதிவாதியாகவும், சேர்த்து ஏற்பட்ட உடன்படிக்கையின்படி படகாவது, அது விற்கப்படாததனாலுண்டாகிய நஷ்டமாவது கிடைக்கவேண்டுமென்று வாதிகள் நாகப்பட்டணம் சப்கோர்ட்டு 1907ஹ்த்திய அசல் 28-நம்பரில் 1907ஹ ஜூலைமீ 31வயில் வழக்கிட்டார்கள்.

தாவாவிற்கண்ட பெரிய படகு விற்கும்படி சொக்கலிங்க செட்டியார் 3-ம் பிரதிவாதிக்கு அதிகாரங் கொடுக்கவில்லையென்றும்; அவ்விதம் அனுமதியன்னியில் 3-ம் பிரதிவாதியால் எழுதிக்கொடுத்த உடன்படிக்கையை அந்த சொக்கலிங்க செட்டியாராவது அவர்ஜீவதிசைக்குப்பிறகு அவரின் வார்சுகள் மைனர் 1-2 பிரதிவாதிகளுக்காக அவர்களின் கார்டியன்களாவது அங்கீகரிக்கவில்லையென்றும் அதனால் 1-2 பிரதிவாதிகள்பேரில் வாதிகளுக்கு எவ்வித பரிகாரமுங்கிடைக்கத்தக்கதில்லையென்றும், வாதிகளின் தாவா காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுப் போய்விட்டனவென்றும் 1-2 பிரதிவாதிகள் கக்ஷியாடினார்கள். வாதிகளின் தாவா லிமிட்டேஷனுக்ட்டு 36-வது ஆர்டிகிள் அல்லது 115-வது ஆர்டிகிள்படி காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டு போய்விட்டதாக 3-வது பிரதிவாதி கக்ஷியாடினார். சப்கோர்ட்டார் வாதிகளின் வழக்கை தள்ளுபடிசெய்து விட்டதின்பேரில் வாதிகள் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்கிறார்கள்.

தீர்ப்பு:—3-ம் பிரதிவாதி C அடையாள ஆதரவு எழுதிக்கொடுக்க சொக்கலிங்கச்செட்டியார் எவ்வித அதிகாரமும் கொடுக்கவில்லையென்றும், அவராவது அவர் ஜீவதிசைக்குப்பின் அவரின் வார்சுகள் மைனர்குமாரர்களின் கார்டியன்களாவது அந்த உடன்படிக்கைக்கு சம்மதிக்கவில்லை யென்றும் சப்ஜட்ஜியவர்கள் கொண்ட அபிப்ராயம் சரியானதென்றே நாங்களுந் தீர்மானிக்கிறோம். C அடையாள ஆதரவு 1-2 பிரதிவாதிகளின் கார்டியன்கள் A அடையாளஆதரவில் ஒப்புக்கொண்டிருப்பதாகவும் அதனால் வாதிகளின் தாவாவுக்குஅவர்களுங்கட்டுப்பட்டவர்களென்றும் வாதிகளின் வக்கீல் வாதிக்கிறார். அது C அடையாள ஆதரவை யுறுதிபடுத்துவதற்காக ஏற்பட்டதல்ல; தாவாவிற்கண்ட படகு சொக்கலிங்கசெட்டியாரால் ஏராம்பு மூர்த்தி என்ற ஒருவருக்கு விற்கப்பட்டிருந்ததால் அவர் தாவா படகை வாதிகளுக்கு விற்றுவிடும்படி கேட்டுக்கொண்ட தஸ்தாவேஜி. அது வாதிகளுக்கு சாதகமானதல்ல. ஆகையால் வாதிகளின் வழக்கை 1-2 பிரதிவாதிகளைப்பற்றினவரையில் தள்ளுபடி செய்கிறோம்.

வாதிகளின் தாவாவுக்கு லிமிடேஷனக்டு 36-வது ஆர்டிகிள் அல்லது 115 - வது ஆர்டிகிளின்படி காலாவதி தோஷமேற்பட்டுவிட்டதென 3-ம் பிரதிவாதி சொல்லுகிறார். அந்த ஆர்டிகிள்கள் தாவா கேசுக்கு ஒற்றுமையல்லவென்றும், 120-வது ஆர்டிகிள் தான் பொருத்தமானதென்றும் வாதிகள் கக்ஷி சொல்லுகிறார்கள்.

இவைகளில் எது தாவா கேசுக்கு பொருத்தமான தென்பதை கவனிப்போம். செய்யத்தகாத காரியங்களைச்செய்தல், செய்யவேண்டியதைச் செய்யாதிருத்தல் முதலியவற்றாலுண்டாகிய நஷ்டத்தைப்பற்றி வழக்கிடவேண்டியதற்காக 36-வது ஆர்டிகிள் ஏற்பட்டிருக்கிறதேயன்றி தாவா கேசுக்கு அது ஒற்றுமையானதல்ல. ஒரு ஏஜண்டு தன்னுடைய முதலாளியிடம் அதிகாரம் பெறாமல் எந்தக் காரியமுஞ் செய்யக்கூடாது; அவ்வித அதிகாரமின்றிச் செய்தல் காண்டிராக்டுக்கு விரோதமாகச் செய்யுங் கெடுதி அதனால் 36 - வது ஆர்டிகிள் இதற்குப் பொருந்தாது. லிமிடேஷனுக்டில் குறிப்பிட்டுச் சொல்லப் படாதவும் எழுத்துமூல மானதும் ரிஜிஸ்டர் செய்யப்படாததுமான வெளிப்படையான அல்லது ஊகிக்கக் கூடியதான உடன்படிக்கையின்படி நடவாமல் அதனால் நஷ்டங்களுண்டானால் அந்த நஷ்டங்களுக்கு வழக்கிடவேண்டியதற்காக 115-வது ஆர்டிகிள் ஏற்பட்டிருக்கிறது. காண்டிராக்ட்டு ஆக்ட்டு லிமிடேஷனுக்ட்டு ஏற்பட்டதற்கு பிந்தி ஏற்பட்டிருந்தாலும் இந்த காண்டிராக்ட்டு ஆக்ட்டு இங்கிலீஷ் லாவை யநுசரித்து ஏற்பட்டிருப்பதால் இந்த லிமிடேஷனுக்ட்டு பிற்பட்டு ஏற்பட்ட காண்டிராக்ட்டு ஆக்டுக்கும்பொருத்தமானது. இந்தக் கேசின் சாராம்சத்தைப் போன்றது பிரிவிகவுன்ஸிலில் தீர்ப்பாகியிருக்கிறது (16 - வீக்லிரிபோர்ட்டர் பிரிவு கவுன்ஸல் 35) ஆகையால் தாவா கேஸ் 115-வது ஆர்டிகிள்படி 3 வருட கெடுவுக்குள் கொண்டுவந்திருக்கப்படவேண்டும். ஆகையால் இந்த 3-ம் பிரதிவாதியைப் பற்றியும் வாதிகளின் அப்பீலைச் செலவுடன் தள்ளுபடிசெய்கிறோம்.

(1913) M. W. N. 884.

சென்னை ஹைகோர்ட்.

1909 ஹுத்திய அப்பீல் நம்பர் 86.

தீர்ப்பு 28—11—12.

ஜட்ஜிகள் ஜஸ்டிஸ் மில்லர் துரையவர்கள் ஜஸ்டிஸ் அப்டுர்ரகீம் அவர்கள்	R.M.P.R.V. வெள்ளப்பசெட்டியார் ஆ. அ. வாதிகள். V S.R.M.S. நாராயணசெட்டியார் அ. பிரதிவாதி.

7. [டிரான்ஸ்பர் அவ் பிராபர்டி ஆக்ட்]

ஒரு சோத்தின், சாசனத் தோகைக்காக அந்தச் சாசனத்துக்கு முற்பட்ட தேதியில் பிராமசரிநோட்டு எழுதிக்கொடுத்திருந்தாலும், அத்தோகைக்கு சாசனசோத்தின் பாத்தியதையின்பேரில் தீர்ப்பு பெறலாமென்பதும் அந்தநோட்டின் தோகை சாசனபாக்கிக்கு ஜாமீனாக எழுதிக்கொடுத்ததாக எண்ணப்படக் கூடாதென்பதும்.

வாதி தன்னுடைய நிலங்களை பிரதிவாதிகளுக்கு ரூ17000 த்கு விற்றதாகவும், அந்தச் சாசனத்தொகைக்கு ரூ3000 உண்டியல் மூலமாகவும் பாக்கித்தொகை ரூ 14000- பிராமிசரி நோட்டு மூலமாகவும் பிரதிவாதிகளிடமிருந்தும் 1900 வருடக்கடைசியில் பெற்றுக் கொண்டதாகவும், அந்த நோட்டு 1903 ம் வருஷத்தில் புதிப்பித்துக் கொடுக்கப்பட்டதாகவும், அது சாசனபாக்கிக்காக ஏற்பட்டதாதலால் அத்தொகை சாசன சொத்தின் ஜவாப்தாரியின் பேரில் கிடைக்கவேண்டுமென்றும், தஞ்சாவூர் சப் கோர்ட்டு 1906 ஹுத்திய அசல் 39 நம்பரில் வாதி பிரதிவாதிகள் பேரில் வழக்கிட்டார்.

தாவாவிற் கண்ட பிரமிசரி நோட்டு சாசனபாக்கிக்காக ஜாமீனாக எழுதிக்கொடுக்கப் பட்ட தென்றும், வாதியின் சாசனம் 1901ஹு செப்டெம்பர் மாசத்திலேற்பட்ட தென்றும், வாதி சொல்லும் பிராமிசரி நோட்டு அதற்கு முற்பட்டதேதியி லேற்பட்டிருப்பதால் அதற்காக சாசன சொத்துக்கள் ஜவாப்தாரியாக்கப்பட சட்டமில்லையென்றும், தாவா சாசனகாலத்தில் வாதி சாசனம்பெற்ற ராமசாமிசெட்டியார் அவருடைய சகோதரர்கள் இவர்களிடமிருந்து தனக்குத் தொகை வரவேண்டியதாக விருந்ததாகவும், அத்தொகையைக் கொடுத்து விடும்படி வாதிசாட்டிவிட்டு பாக்கித்தொகை ரூ 3000க்கு உண்டியல் கொடுத்து விட்டதாகவும், வாதிக்கு யாதொரு தொகையுங் கிடைக்கத் தக்கதில்லையென்றும் பிரதிவாதி கக்ஷியாடினார்.

சப்ஜட்ஜி வாதிக்கு அநுகூலமாகத் தீர்ப்பு செய்து விட்டதின் பேரில் பிரதிவாதிகள் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்திருக்கிறார்கள்.

தீர்ப்பு.—வாதிக்கு 1897 ஹுத்தில் ஏற்பட்டசாசனம் தகுந்த பிரதி பிரயோஜனத்துட னேற்பட்ட தென்று சப்ஜட்ஜிதீர்மானித்

த்து சரியென்று நாங்கள் ஒத்துக்கொள்ளுகிறோம். பிரதிவாதிகளு க்கு 1901௵த்தில் ஏற்பட்ட சாசனத்தில் வாதிக்கு பிரதிவாதிக ளால் ரூ 17000 சேரவேண்டியதாக ரூஜவாகிறது. இந்தப் பாக் கிக்காக எழுதிக் கொடுக்கப்பட்ட பிராமிசரி நோட்டு 1903௵த் தில் புதுப்பிக்கப் படாவிட்டால் வாதியின் தாவா காலாவதி தோ ஷத்தால் பாதிக்கப் பட்டுப் போயிருக்கும். இவ்விதம் புதுப்பித்த நோட்டு காணமற் போய்விட்டது. ஆனால் இவ்விஷயம் பிரதி வாதிகளால் முன் வழக்கில் ஒப்புக்கொள்ளப் பட்டிருப்பது மன்றி சில சாக்ஷிகளும் இது விஷயமாக ரூஜச்சொல்லுகிறார்கள். அத னால் வாதியின் தாவாவுக்கு எவ்வித காலாவதி தோஷமுமில்லை. தாவாதொகைக்கு சாசன சொத்தைப் பொறுப்புச் சாட்டி டிக்கிரி செய்திருப்பது சரியா பிசகா என்ற விஷயத்தைப் பற்றி மட்டில் நாம் இப்போது கவனிக்கவேண்டும். சாசனத்தொகை பாக்கிக் காக சாசனசொத்தைப் பொறுப்புச் சாட்டி தீர்ப்பு செய்யலா மென்று டிரான்ஸவர் அவ் பிராபர்டி ஆக்ட் 55 வது செக்ஷனில் சொல்லப்பட்டிருக்கிறது. தாவாவிற் கண்ட சாசனம் ஏற்படுவ தற்கு முந்தியே யேற்பட்ட ஒரு உடன்படிக்கைக்காக தாவா நோட்டு எழுதிக் கொடுத்திருப்பதால் அத்தொகைக்கு சாசன சொத்து ஜவாப்தாரியாக்கப்படக் கூடாதென அப்பீல்தார்களின் வக்கீல் வாதிக்கிறார். தாவா நோட்டும் உண்டியலும் சாசனத் தேதிக்கு முற்பட்டிருந்தபோதிலும் அவை சாசன பாக்கிக்காக வே ஏற்பட்டிருப்பதால் அத்தொகைக்கு சாசனசொத்து ஜவாப்பு தாரியாக்கப்படலாம். தாவா பிராமிசரி நோட்டு எழுதிக் கொடு த்ததைக்கொண்டு வாதிக்கு சாசன பாக்கித்தொகையை சாசன சொத்து ஜவாப்தாரியின்பேரில் வசூலிக்கும் படியான பாத்தியம் போய்விடவில்லை. சப்ஜட்ஜி சாசனத்தைப் பொறுத்தே தீர்ப்பு செய்தது சரியானதென்று அதை யுறுதிசெய்து பிரதிவாதிகளின் அப்பீலை செலவுடன் தள்ளுபடி செய்கிறோம்.

(1913) M. W. N. 826.

சென்னை ஹைகோர்ட்டு.

1912 ௵த்திய 2 வது அப்பீல் நம்பர் 1427.

தீர்ப்பு—25-7-13.

ஜட்ஜிகள்
ஜஸ்டிஸ் மிஸ்டர்சதாசிவய்ய ரவர்கள்
ஜஸ்டிஸ் மிஸ்டர் டியாப்ஜியவர்கள்

பூலாக்கல்கட்டேர் அ.வாதி(பிரதிவாதி)
V
சென்னகடம் மம்மாடிஸ்ஸா ஆ அ. பிரதிவாதிகள்(வாதிகள்)

8 [டிரான்ஸவர் அவ் பிராபர்டி ஆக்ட்].

கக்ஷிக்காரர்களுக்குள் ஏற்பட்ட உடன்படிக்கையின்படி கொண் டு வரப்படும் சிநேகமுறையுள்ள வழக்குகள்தவிர மற்றவை விவா தமுள்ள வழக் கென்றே தீர்மானிக்கப்பட வேண்டுமென்பது.

கோதா அதான் என்பவர் பிரதிவாதிகள் பேரில் மஞ்சரி டிஸ்ரிக்ட் முனிசிப் கோர்ட்டு 1907 ௵த்திய அசல் 414 நம்பரில் வழக்கிட்டிருந்தார். அந்த வியாஜ்ஜிய மத்தியில் அந்த அதான் தனக்குள்ள அந்த தாவாவின் சொத்து பாத்தியதையை வாதி க்கு 1909௵ ஜனவரி மாசத்தில் டிரான்ஸவர் செய்து விட்டார். அந்த தாவாவிற் கண்ட நிலம் இரண்டாம் பிரதிவாதிக்குச் சொந்த மானதென்று அந்த 414 நம்பரில் தீர்ப்பாய் விட்டது. அந்தச்சொ த்து தனக்கு கிடைக்க வேண்டுமென்று அந்த மஞ்சரி டி. மு. கோர்ட்டு 1909 வருடத்திய அசல் 655 நம்பரில் பிரதிவாதிகள் பேரில் வாதி வழக்கிட்டார். பிராதிற் கண்ட A ஸ்தலத்துக்கு 2 ம் பிரதிவாதிக்கு விரோதமாக வாதி பாத்தியங்கொண்டாடுவது பிசகென்று டிஸ்ரிக்ட் முனிசிப் வாதியின் வழக்கைத் தள்ளுபடி செய்து விட்டார்கள். இது விஷயமாக வாதி அப்பீல் செய்ததில் தாவா கேசுக்கு லிஸ்பெண்டென்ஸ் தோஷமில்லை யென்று கேசின் சாராம்சத்தில் பிரவேசித்து விசாரித்து முடிவுசெய்ய வேண்டு மென சப்ஜட்ஜி கேசைக் கீழ்க்கோர்ட்டாருக்கு அனுப்பினார்கள். இதன் பேரில் பிரதிவாதிகள் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்கி றார்கள்.

தீர்ப்பு:—டிரான்ஸ்வர் அவ் பிராபர்டி ஆக்ட் 52-வது செக்ஷ னிற் கண்ட விவாதமுள்ள வழக்கு என்பது கக்ஷிக்காரர்களுக்குள் ஒரு வித உடன் படிக்கை யேற்பட்டு அதை முன்னிட்டு கொண்டு வரப்படும் சிநேகமுறை யான வழக்கல்ல என்பது தான். இவ்வித

வழக்கல்லாதன வெல்லாம் விவாத முள்ள வழக்கென்றே தீர்மானிக்கப் படவேண்டும். இ லா ரி-27 கல்கத்தா 77 தீர்ப்பிற்கண்டபடி முன் 414 நெம்பர் விவாதமுள்ள வழக்கேயன்றி வேறல்ல. அதனால் வாதியின் தாவா "லிஸ்பிண்டன்ஸ்" தோஷத்துக் குள்ளாக்கப்பட்டிருக்கிறது. பிரதிவாதிகளின் அப்பீலை யங்கீகரித்து வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

20 Indian Cases. 976.

கல்கத்தா ஹைகோர்ட்.

1911௵த்திய 2-வது அப்பீல் நம்பர் 937.

தீர்ப்பு 1—5—13.

ஜட்ஜிகள்
ஜஸ்டிஸ் ஸர் அஷுதோஷ் மூகர்ஜி அவர்கள்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் பீச்கராப்ட் அவர்கள்

ஷப் நாராயணன் மொண்டல்
வாதி அப்பீல் தாரன்.
V
வைகுந்தநாத்சந்திரா
ஆ அ. பிரதிவாதிகள்

9. [டிரான்ஸவர் அவ் பிராபர்டி ஆக்ட்.]

ஒரு பேந்தகபத்திரவழக்கில் பிரதிவாதி தனக்கு அந்தப்பேந்தக சோத்தில் முன் பேந்தகபாத்தியமும் அச்சோத்தை மீட்கும்படியான பாத்தியமும் இருக்கிறதென்று கக்ஷியாவோனாகில் அவன் தாவா பேந்தகபத்திரம் மோசடியானதென்ற கக்ஷி சோல்லலாமேன்பது.

1 முதல் 3 பிரதிவாதிகள் தாவா பெந்தகசொத்துக்கு சொந்தக்காரர்கள். அவர்கள் வாதிபேருக்கு 1897௵ நவம்பர்௴ 12௳ தாவா. பெந்தகபத்திரம் எழுதிக்கொடுத்தார்கள். அது ரிஜிஸ்டர் செய்யப்படவில்லை. 1898௵ ஆகஸ்டு௴ 2௳ கார்டிக்ஜானு என்ற ஒருவருக்கு அதேசொத்தின்பேரில் அந்த மூவரும் ஒரு பெந்தக பத்திரம் எழுதிக்கொடுத்தார்கள். அது ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது. இந்தப் பெந்தக சொத்துக்கள் இந்த பிரதிவாதிகள் பேரிலேற்பட்ட ஒருவெண்ணலை டிக்கிரிக்காக ஏலம்போடப்பட்டதில் இவர்களின் பாத்தியதையை 4-ம் பிரதிவாதி 1905௵ டிசம்பர்௴ 15௳ ஏலத்திலெடுத்துவிட்டார். 1898௵த்தில் பெந்தகம்பெற்றவன் தன்னுடைய பத்திரத்தின்பேரில் இந்த 1 முதல் 3-பிரதிவாதிகளையும் பெந்தக சொத்தை ஏலமெடுத்த 4-ம்

பிரதிவாதியையுங் கக்ஷிக்காரர்களாகச் சேர்த்து வழக்கிட்டான். 4-ம் பிரதிவாதி இந்த பெந்தகக்கடனைத் தீர்க்கவேண்டிய தற்காக இந்த சொத்துக்களை 5-6 பிரதி வாதிகளிடத்தில் 1907௵ டிசம்பர்மாதத்தில் பெந்தகம் வைத்துத்தொகைவாங்கி இந்த பெந்தகக்கடனை தீர்த்துவிட்டார். முதல் கோர்ட்டார் வாதியின் தாவாப்படி தீர்ப்பு செய்துவிட்டார்கள். அதன்பேரில் பிரதிவாதிகள் அப்பீல்செய்ததில் வாதியின் பெந்தகம் மோசடியானதென்றும் 1898௵த்தில் எற்பட்ட பெந்தகம் உண்மையானதென்றும் வாதியின்வழக்கை தள்ளுபடிசெய்துவிட்டார்கள். அதனால் வாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்கிறார்.

தீர்ப்பு;—4-ம் பிரதிவாதி ரிஜிஸ்டரான பெந்தகக்கடனைத்தீர்த்திருப்பதால் அவர் முன் பெந்தகம் பெற்றவர் ஸ்தானத்திலிருப்பதாகவும், அவர் பின் பெந்தகதாரனாகிய வாதியின் பாத்தியதை மறுக்க நியாயமில்லை யென்பதுதான் அப்பீல்தாரனுடைய முக்கிய விவாதம். இந்த விவாதம் சரியானதுதான்; இந்த 4-ம் பிரதிவாதிக்கு முன்பெந்தக பாத்தியமட்டிலில்லை; 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கிருந்த பாத்தியதையை இவரே ஏலத்திலெடுத்துவிட்டார். அதனாலிவர் பெந்தகம்வைத்தவன் ஸ்தானத்திலுமிருக்கிறார். இவருக்கு இருவிதபாத்தியங்களுமேற்பட்டிருக்கின்றன. இ-லா-ரி 10 கல்கத்தா 1035 பிரிவி கவுன்ஸல் தீர்ப்பிற்கண்டபடி தாவா பெந்தகபத்திரத்தைப்பற்றி ஆக்ஷேபிக்க பாத்தியமுடையவர் 4-ம் பிரதிவாதி. இதனால் சப்ஜட்ஜி செய்ததீர்மானத்தை யுறுதிசெய்து வாதியின் அப்பீலை செலவுடன் தள்ளுபடி செய்கிறோம்.

20 Indian Cases 864.

சென்னை ஹைகோர்ட்டு.

1912 ௵த்திய 2-வது அப்பீல் நம்பர் 1361.

தீர்ப்பு 31—7—13.

ஜட்ஜிகள்.
ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள்
ஜஸ்டிஸ் டியாப்ஜி அவர்கள்

பொத்து சந்நியாசிருஜு
அ. வாதி (பிரதிவாதி)
V
கோத்ராருமமூர்த்தி
அ. பிரதிவாதி (வாதி)

3. [காண்டிராக்ட் ஆக்ட்.]

ஒரு காரியத்தை ஒரு குறிப்பிட்ட காலத்தில் செய்கிறதென்று உடன்படிக்கை யேற்பட்டு அதன்படி நடவாவிட்டால் அந்தத் தவறுதலினால் அந்தக் காலத்தில் என்ன நஷ்டமுண்டாகுமோ அது தான் கிடைக்குமென்பது.

64½-பெட்டி வெல்லம் குறிப்பிட்ட ஒருகாலத்தில் வாதிக்கு பிரதிவாதி கொடுப்பதாக காண்டிராக்ட் செய்துகொண்டார். அந்தப்படி கொடாவிட்டால் ஒருவித ஜாஸ்தியான விலை கொடுக்கிறதென்று உபயவாதிகளுக்குள்ளும் எக்கிரிமெண்டு ஏற்பட்டிருந்தது. பிரதிவாதி ஏற்பட்ட எக்கிரிமெண்டுப்படி நடவாததால் வாதி தான்பெற்ற தஸ்தாவேஜியின்படி ஜாஸ்தியான தொகை கிடைக்கவேண்டுமென வழக்கிட்டார். குறிப்பிட்டகாலத்தில் வெல்லம் பெட்டி 1-க்கு ரூ. 17-8-6 வீதம் விற்றதால் அந்த விலையைப் போட்டு டிஸ்டிரிக்ட் முன்சிப் தீர்ப்பு செய்துவிட்டார். வாதிதன்னுடைய பிராதின்படியே கிடைக்கவேண்டுமென அப்பீல் செய்ததில் ஜாஸ்தியானதொகை கெடுத்தேதிமுதல் தொகை வசூலாகுந் தேதிவரையில் கொடுபடவேண்டியதென சப்ஜட்ஜியவர்கள் தீர்மானஞ் செய்துவிட்டார்கள். இது சட்டவிரோதமானதென்று பிரதிவாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்தார்.

தீர்ப்பு:—வெல்லப்பெட்டிகள் 64½-எந்தக் காலத்தில் கொடுபட வேண்டுமென்று எக்ரிமெண்டு செய்துகொள்ளப் பட்டதோ அந்தத்தேதியில் என்ன விலை விற்றதோ அந்த விலைபோட்டு தீர்ப்பு செய்யவேண்டியதுதான் நியாயமானது. இதே விஷயந்தான் காண்டிராக்ட் ஆக்ட் 73-வது செக்ஷன் விளக்கம் (Illustration) a ல் சொல்லப்பட்டிருக்கிறது. வட்டி கொடுக்க வேண்டுமென்று எழுத்து மூலமாகக் கேட்ட தேதிமுதற்கொண் அது கிடைக்கக்கூடியதென்று இ-லா-ரி. 31 சென்னை 250 தீர்ப்பிற் சொல்லப்பட்டிருக்கிறது. வாதி எழுத்துமூலமாக வட்டிகேட்டதாக ருஜுவில்லை. ஆனதால் வாதிக்கு பிராதின் தேதி முதற்கொண் 100 க்கு 6 வீதம் கிடைக்கத்தக்கது. வாதி தான் செய்து கொண்ட எக்ரிமெண்டுப்படி பிரதிவாதி நடக்காததால் அதனாலுண்டாகிய நஷ்டத்தைப்பற்றி கேட்டு வாதியால் கொடுபட்ட தொகைக்கு நஷ்ட மேற்பட்டதென்ற ருஜுவிருந்தால் அத்தொகைக்குக் கிரமமாக கிடைக்கக்கூடிய வட்டியை நஷ்டபரிகாரமாகத்

தீர்ப்பு செய்திருக்கலாம். வாதி தன் பிராதில் அந்தப்படி யாதொன்றுங்கேட்கவில்லை. ஆகையால் வாதிக்கு பிராதின் தேதிமுதற்கொண் வட்டி கிடைக்கக்கூடும். கீழ் அப்பீல் கோர்ட்டார் தீர்மானம் மேற்கண்ட விதம் மாற்றப்பட்டது.

(1913) M. W. N. 874.

சென்னை ஹைகோர்ட்டு.

1912ஞ்வருத்திய ஒரிஜனல் சுயிட் அப்பீல் நெம்பர். 52

1910ஞ்வருத்திய C. S. No. 184

தீர்ப்பு 27—8—13.

சீவ்ஜஸ்டிஸ் வொயிட்துரையவர்கள் ஜஸ்டிஸ் ஒல்டுபீல்டுதுரையவர்கள்	லெக்ஷிமம்மாள் அ. வாதி. V நரசிம்மராகவய்யங்கார்லு அ. பிரதிவாதிகள்.

1. [நெகோஷியபிள் இன்ஸ்டுருமெண்டு ஆக்ட்].

மைசூர் சமஸ்தானத்தில் பிறந்த பிராமிசரி நோட்டு சிலவிடத்தில் கிழிந்திருந்ததைக் கொண்டு சென்னை ஹைகோர்ட்டில் பிராது செய்யும்படியாக இருந்தது. இவ்விதஞ்செய்தது ஏற்பட்ட காண்டிராக்டின் உண்மையையும் வித்தியாச மின்மையையும் மாற்றியதாகும். அதன்பேரில் கொண்டுவரும் வழக்குசெல்லத்தக்கதல்ல.

வாதியும் பிரதிவாதிகளின் தகப்பனும் மைசூரில் ஸ்திரமாக வசித்தவர்கள். அந்தக்காலத்தில் வாதிக்கு பிரதிவாதிகளின் தகப்பன் இரண்டு தஸ்தாவேஜிகள் எழுதிக்கொடுத்திருந்தார். அந்த தஸ்தாவேஜிகளின் பேரில் பிரதிவாதிகள் சென்னபட்டணத்தில் குடியிருந்து வந்ததைக்கொண்டு சென்னை ஹைக்கோர்ட்டு ஒரிஜனல் சுயிட்டில் வழக்கிட்டாள். அந்த இரண்டு தஸ்தாவேஜிகளும் சிலவிடங்களில் கிழிந்தும் சிலவிடங்களில் துண்டிக்கப்பட்டுமிருந்ததால் அது நெகோஷியபிள் இன்ஸ்டுருமெண்டு ஆக்ட் 87-வது செக்ஷன்படி முக்கியமான திருத்தலாகுமென்று அதை மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ் துரையவர்கள் வாதியின் பிராதைத் தள்ளுபடிசெய்து விட்டார்கள். இதன்பேரில் வாதி அப்பீல் செய்கின்றாள்.

தீர்ப்பு:—இந்த இரண்டு தஸ்தாவேஜிகளும் "அல்லது உத்திரவு பெற்றவருக்காவது" என்ற வார்த்தைகள் துண்டிக்கப்பட்டிருக்கின்றன. இந்த வார்த்தைகளில்லாததால் இந்த தஸ்தவேஜிகளிரண்டும் பத்திரங்களென்று வாதியால் இந்தக் கோர்ட்டில் தாவா செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த தஸ்தாவேஜிகள் பிராமிசரி நோட்டுகளென்றெழுதப்பட்டிருக்கிறது. பிராமிசரி நோட்டுகளாவிருக்கும் பக்ஷத்தில் அவைகளில் சரியான ஸ்டாம்பு ஒட்டி எழுதப்படவில்லை. இவ்விதம் சரியான ஸ்டாம்பு ஒட்டப்படாததினாலே மைசூரில் இந்த நோட்டுகளின் பேரில் வழக்கிடமுடியாது. பிரதிவாதிகள் சொல்லுகிறபடி சிலவார்த்தைகள் தஸ்தாவேஜிகளிலிருந்தாலும் அவைகளின்படிக்கும் இந்த ஹைகோர்ட்டில் ஸ்டாம்பு ஆக்ஷேபனைகளில்லாமலே வழக்கிடக் கூடுமாதலால் தஸ்தாவேஜிகளில் சில பாகந் துண்டிக்கப்பட்டிருப்பது முக்கியமான திருத்தலாகாதென்று வாதியின் வக்கீல் மிஸ்டர் ஸ்ரீனிவாசய்யங்கார்மெத்தவாதஞ்செய்கிறார். நாம் பிரகிருத கேசில் முக்கியமாக கவனிக்கவேண்டிய விஷயம் ஏற்பட்ட காண்டிராக்டின் உண்மையும் வித்தியாச மின்மையும் மாற்றப்பட்டிருக்கிறதா இல்லையா என்பதுதான். உண்மையான விஷயங்களை மாற்றக்கூடாதென்பதற்காகத்தான் 87-வது செக்ஷனேற்பட்டிருக்கிறது. வாதிதான் ஆதியிலேற்பட்ட எக்ரிமெண்டுப்படிக்கே நடந்துகொள்ளுகிறேன் தனக்கு தீர்ப்பு கொடுக்கவேண்டுமென்று கேட்டால் எவ்விதங்கொடுக்கமுடியும். பிராமசரிரோட்டுகளாகஇருந்தனவற்றை வெண்ணலைபத்திரங்களாக மாற்றிவிட்டாள். இவை நெகோஷியபிள் இன்ஸ்டுருமெண்டு ஆக்ட் 87 - வது செக்ஷன்படி முக்கிய திருத்தல்களாகின்றன. ஆகையால் மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்துரையவர்கள் சொன்ன தீர்ப்பு சரியானதென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். வாதியின் அப்பீல் செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

(1913.) M. W. N. 833.

சென்னை ஹைகோர்ட்.

1912 ம் ஷுத்திய 2 வது அப்பில் நம்பர் 177.

தீர்ப்பு—31—7—13.

ஜட்ஜிகள்.	
ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள்	ஸ்ரீ ரெங்கம் முனிசிபல் கவுன்ஸல் செயர்மென் அ. வாதி (பிரதிவாதி)
ஜஸ்டிஸ் டியாப்ஜி அவர்கள்	V
	சுப்பபண்டிதர் அ. பிரதிவாதி (வாதி.)

1 [சென்னை டிஸ்ரிக்ட் முனிசிபாலிட்டி ஆக்ட்.]

முனிசிபல் டவுனிலுள்ள கீழ் நில மொன்று ஒருவருக்கு சுதந்தர பாத்திய மேற்பட்டு விட்டால் அதன் மேல் புடைப்பும் ஆக்கிரமிப்பு மேற்பட்டதை விலக்க முனிசிபல் சங்கத்தினருக்கு அதிகாரமில்லையென்பது.

வாதி தன்னுடைய பிராதிற்கண்ட நிலத்தில் ஸ்ரீரெங்கம் முனிசிபல் சங்கத்தினர் பிரவேசிககாமல் அவர்களுக்கு சாஸ்வத இஞ்செங்ஷன் கொடுக்கவேண்டுமென வழக்கிட்டார். 1908-வருஷத்திய லிமிடேஷனுக்ட் ஏற்படுவதற்கு பனிரெண்டு வருடங்களுக்கு முற்பட்டகால முதல் தாவாஸ்தலம் வாதியின் அனுபவத்திலிருப்பதாக ரூஜ வேற்பட்டதின் பேரில் வாதியின் தாவாப்படியே டிஸ்ரிக்ட் முனிசீப்பும் டிஸ்ரிக்ட் ஜட்ஜியவர்களுந் தீர்ப்பு செய்து விட்டார்கள். தாவாவிற்கண்ட கீழ்நிலம் வாதிக்குச் சொந்தமானதாக விருந்தாலும் அதன் பேரிலேற்பட்ட புடைப்பு ஆக்கிரமமிப்பு இவைகளை நீக்க முனிசிபல் ஆக்ட் 168 வது செக்ஷன்படி தங்களுக்கு அதிகாரமிருக்கிறதென்று பிரதிவாதி. ஹைகோர்ட்டில் அப்பீல் செய்தார்.

தீர்ப்பு:—அப்பீல் வாதி வக்கில் (1912) M. W. N. 1080. தீர்ப்பு தன்கக்ஷிக்கு ஆதாரமானதெனச் சொல்லுகிறார். இந்த நம்பரில் கவர்ன் மெண்டாரவர்களும் கக்ஷிக்காரர்களாகக் சேர்க்கப் பட்ட படியால் அவர்களின் பாத்தியதைக்குக் காலாவதி தோஷமேற்படவில்லை. அந்த வழக்கில் கீழ்நிலம் மேல்பாகம் இந்த இரண்டுக்கும் பாத்தியங்கொண்டாடப் படவில்லை. கீழ்நிலம் நீரோடும் வாய்க்கால். அது முனிசிபல் சங்கத்தினர் ஸ்வாதீனத்திலிருந்தது. மேல் பாகத்தைப் பற்றி மட்டில் தான் வழக்கு ஏற்பட்டது. தாவாவிற் கண்ட கேஸ் அப்படிக்கல்ல; கீழ் நிலம் மேல் பாகம் இவ்விரண்டுந் தனக்குச் சொந்த மென்றும் பனிரெண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலமாமாக தான் அனுபவித்து வருவ தாகவும், வாதி சொல்லுகிறார். அதனால் தாவா ஸ்தலம் தெரு என்ற தாக ஏற்படவில்லை. அதனால் முனிசிபல் ஆக்ட் 168வது செக்ஷன் தாவா கேசுக்கு பொருத்த மில்லை. இது அந்த செக்ஷன்படி ஆக்கிரமிப்பு ஆகமாட்டாது. ஆகையால்பிரதிவாதியின் அப்பீல் செலவுடன் தள்ளுபடி செய்யப் பட்டது.

(1913) M. W. N. 904.

சென்னை ஹைகோர்ட்டு.

1912 ஸூத்தியரீபரான கேஸ் நம்பர் 4.

தீர்ப்பு 16—4—13.

ஜட்ஜிகள் ஜஸ்டிஸ்பென்ஸன் துரையவர்கள் ஜஸ்டிஸ் சுந்தரமையரவர்கள்	வரதராஜுலு செட்டியார். வர்தி V பட்டர நாராயணசாமி செட்டி ஆ. பிரதிவாதிகள்.

2 [ஸ்மால் காஸ் கோர்ட்டு ஆகட்.]

பிராதிற் சோல்லும் விஷயங்களைக் கோண்டு மட்டில் அது அசல் பிராது அல்லது ஸ்மல்காஸ் பிராது என்று சோல்ல வேண்டுமேயல்லது பிரதிவாதிகக்ஷி முதலியன வற்றைக் கோண்டு சோல்லக்கூடாதேன்பதும், முதலாளி தன் ஏஜண்டுபேரிற் கோண்டுவர வேண்டிய எல்லா வழக்குகளும் அசல் தரப்பாக இருக்க வேண்டியதவசிய மில்லை யென்பதும்.

வாதியிடத்தில் பிரதிவாதிகள் வஸ்திரங்கள் வாங்கி வந்ததாகவும், அந்த வகையில் வாதிக்கு பிரதிவாதிகள் ரூ 38-6-0 கொடுக்க வேண்டியதாகவும், தன்னிடத்தில் பிரதி வாதிகள் வேறு பத்து வரவுகள் செய்து வந்ததாகவும் மொத்தத்தில் வாதிக்கு பிரதிவாதிகள் ரூ 143—11—9 கொடுக்க வேண்டியதாக கும்பகோணம் சப் கோர்ட்டு ஸ்மால் காஸ் திறப்பில் வழக்கிட்டார்.

பிரதிவாதிகள் தாங்கள் வாதியின் ஏஜண்டுகளாக விருந்து வாதியின் வஸ்திரங்களை விற்று வந்தாகவும், வாதியிடத்தில் கிரயத்துக்கு வாங்கவில்லை யென்றும் வாதிக்கு தங்களால் யாதொரு தொகையுஞ் சேரவேண்டியதில்லை யென்றுங் கக்ஷியாடினார்கள்.

வாதியிடத்தில் பிரதிவாதிகள் ஏஜண்டாக விருந்து தாவாவிற்கண்ட வஸ்திரங்களை வாங்கியதாகச் சொல்லுவதால் ஸ்மால் காஸ் கோர்ட்டு ஆகட்டு 31 வது ஆர்டிகிள்படி வாதி அசல் தரப்பில் வழக்கிடவேண்டிய தென்று சப்ஜட்ஜி வாதியின் பிராதைவாப்ஸ் செய்து விட்டார்கள். அதன் பேரில் வாதி இதை திருவாரூர் முனிசீப் கோர்ட்டில் கொடுத்தார். இந்தக் கேஸ் ஸ்மால் காஸில் செய்யப்பட வேண்டியதென அந்தக் கோர்ட்டாரும் பிராதை வாப்ஸ் செய்துவிட்டார்கள். அதனால் வாதி இதுவிஷயமாக தஞ்சாவூர் டிஸ்டிரிக்ட் கோர்ட்டில் அப்பீல் செய்தார். அந்தக் கோர்ட்டார் சீவில் புரிஸீஜர் கோடு 46 வது ஆர்டர் 7 வது ரூல்படி

ஹைகோர்ட்டாரவர்களுக்கு எழுதி "வாதியின் தாவா கும்பகோணம் சப்கோர்ட்டு ஸ்மால் காஸ் தரப்பில் கொடுபடவேண்டியதா, அல்லது திருவாரூர் டிஸ்ரிக்டு முனிசீப் கோர்ட்டில் அசல் தரப்பில் நடத்தப்படவேண்டிய நடவடிக்கையா" என்ற விபரங்களை அறிவிக்கும் படி ரிபரன்ஸ் செய்தார்கள்.

உத்தரவு:—வாதிதன்னுடைய பிராதில் பிரதி வாதிகள் தன்னுடைய ஏஜண்டு களென்றாவது தனக்குக்கணக்குகள் ஒப்புவிக்க கடமைப்பட்டவர்களென்றாவது சொல்லவில்லை. அவர்கள் தன்னிடத்தில் வஸ்திரங்கள் கிரயத்துக்கு வாங்கியிருப்பதாகவும் மற்றுஞ் சில பத்து வரவுகள் செய்து வந்திருப்பதாகவுஞ் சொல்லியிருக்கிறார். இதனால் வாதிக்கு பிரதிவாதிகள் கணக்கு ஒப்புவிக்கக்கடமைப் பட்டவர்களல்ல. ஒரு கோர்ட்டாருக்கு ஜூரிஸ்டிக்ஷனிருக்கிறதா இல்லையா வென்பதை பிராதிற் கண்ட விஷயங்களைக் கொண்டுமட்டில் தீர்மானிக்க வேண்டும். பிரதிவாதிகள் தாங்கள் ஏஜண்டுகள் தான், கணக்கு ஒப்பிவிக்கக்கடமைப் பட்டவர்கள் என்ற விஷயங்களை அவர்கள் திருப்திகரமாக ருஜூப்பித்தால் அதன்பேரில் அது ஸ்மால்காஸ் அல்ல வென்று தீர்மானிக்கலாம். ஏஜண்டுகள் பேரில் கொண்டு வரப்படும் எல்லாவழக்குகளும் அசல் தரப்பிலிருக்க வேண்டுமென்பது அவசியமில்லை. முதலாளிக்காக ஏஜண்டு சில தொகை வசூலிக்கிறான். அதை முதலாளியிடங் கொடாமல் தன் சொந்த உபயோகப்படுத்திக் கொள்ளுகிறான். இது விஷயமாக ஸ்மால்காஸ் தரப்பில் வழக்கிடலாம். (இ லா ரி 27 அலகபாத் 200; 19 மெட்ராஸ் லா ஜர்னல் 113) 31 வது ஆர்டிகிளின் படி இந்த வழக்கு ஏஜண்டுகள் வகை சொல்ல வேண்டிய கணக்கு சம்பந்தமான வழக்கா, இல்லையா, வென்பது கக்ஷிக்காரர்களின் சம்பந்தா சப்பந்தங்களை தீரவிசாரித்து முடிவு செய்யவேண்டும். வாதியின் பிராதினால் பிரதிவாதிகள் கணக்குகள் ஒப்புவிக்கக் கடமைப்பட்ட ஏஜண்டுகள் அல்லவென்று தெரிவதால் வாதியின் தாவா கும்பகோணம் சப்கோர்ட்டு ஸ்மால்காஸ் தரப்பில் செய்யப்பட வேண்டியதெனத் தீர்மானிக்கிறோம்.

(1913) M. W. N. 879.

சென்னை ஹைகோர்ட்டு.

1912ளு த்திய 158. நம்பர் உத்தரவின்பேரில் அப்பீல்

தீர்ப்பு 19—2—13.

ஜட்ஜிகள்
ஜஸ்டிஸ் பென்சன் துரையவர்கள்
ஜஸ்டிஸ் சுந்திரமய்யரவர்கள்

ஸ்ரீ ராஜா இருகந்திபிரகாசுறயாஙிம்காரு
ஆ அ. வாதிகள்
V
ஏராங்கிபெத்த வெங்கட்டராவ்
அ. பிரதிவாதி.

2. [சாக்ஷிய சட்டம்.]

ஜூரிஸ் டிக்ஷனில்லாத கோர்ட்டிலேற்பட்ட வாக்குமூலங்கள் வேறுகோர்ட்டில் ருஜூக்களாக அங்கீகரிக்கப்படலாமென்று உபய கக்ஷிக்காரர்களும் சம்மதித்து விட்டால் அவைகள் சாக்ஷியங்களாக அங்கீகரிக்கத்தக்கனவென்பது.

பெத்தப்பூர் டிஸ்டிரிக்ட் முனிசீப்கோர்ட்டில் உபயவாதிகளுக்கும் ஒரு வழக்கு இருந்தது. அதில் சாக்ஷிவிசாரணை முதலியன நடந்து தீர்ப்புசெய்யப்பட்டதின்பேரில் அப்பீல் செய்யப்பட்டது. தாவாவிற்கண்ட சொத்து பொருமானம் ஜாஸ்தியாக விருப்பதால் இந்தக்கேசை டிஸ்டிரிக்ட் முனிசீப் விசாரித்து முடிவு செய்தது பிசகென்றும் அவருக்கு ஜூரிஸ்டிக்ஷனில்லையென்றும் அந்தக்கேசை சப்ஜட்ஜிவிசாரித்து முடிவுசெய்ய வேண்டியதாக முனுசீபின் தீர்ப்பை ரத்துசெய்து பிராதை வாப்ஸ்செய்து விட்டார்கள். அந்தப்படி பிராது சப்கோர்ட்டில் கொடுக்கப்பட்டது. இந்தக்கேஸ் சாக்ஷிவிசாரணைக்கு எடுபட்டபோது பெத்தப்பூர் முனுசீப் கோர்ட்டில் ஏற்பட்ட சாக்ஷியங்களே இந்தக் கேசில் ருஜூக்களாக அங்கீகரிக்கப் படலாமென்றும், வேறு ருஜூக்கள் வேண்டியதில்லை யென்றும் உபயகக்ஷிக்காரர்களும் எழுத்துமூலமாக ஸ்டேட்மெண்டு கொடுத்து விட்டார்கள். அந்தப்படி சப்ஜட்ஜியவர்கள் டிஸ்டிரிக்ட் முனுசீப்கோர்ட்டிலேற்பட்ட சாக்ஷியங்களைக் கொண்டே தீர்ப்புசெய்து விட்டார்கள். இதன்பேரில் டிஸ்ரிக்ட் கோர்ட்டில் அப்பீல் செய்யப்பட்டதில் அந்தக் கோர்ட்டார் அதிகாரமில்லாத டிஸ்ரிக்ட் முனிசீப் விசாரித்த சாக்ஷிகளின் ருஜூக்களை சப்ஜட்ஜீ யங்கீகரித்தது பிசகென்றும் உபய கக்ஷிக்காரர்களும் அது விஷயத்தைப் பற்றி சம்மதித்தபோதிலும் அவைகள் ருஜூக்களாக அங்கீகரிக்கப்படக் கூடாதென்றும் கிரமப்படி சாக்ஷிகளைத்தருவித்து விசாரித்து முடிவுசெய்ய வேண்டுமென்றும் சப்ஜட்ஜி செய்த தீர்ப்பை ரத்து செய்து அந்தக்

கேஸைப் புனர்விசாரணை செய்யும்படி நம்பர்கட்டை சப்கோர்ட்டுக்குஅனுப்பினார்கள். இவ்விதம் புனர் விசாரணைக்கு அனுப்பியது பிசகென்று பிரதிவாதிகள் ஹைகோர்ட்டில் அப்பீல்செய்கிறார்கள்.

தீர்ப்பு:—இ லா ரி 24 பம்பாய் 591; 1 வீக்லிரிப்போர்ட்டர் 310. இந்த ரூலிங்கிஸ்களிற் கண்டபடி முன் வழக்குகளில் சாக்ஷிகள் கொடுத்த வாக்கு மூலங்கள் வேறு கேஸ்களில் கக்ஷிக்காரர்களின் சம்மதியின் பேரில் ருஜூக்களாக அங்கிகரிக்கப்படலாம்; டிஸ்ரிக்ட் முனிசீப்புக்கு அதிகாரமில்லை யென்ற ஒரு காரணத்தைக் கொண்ட மட்டில் அவைகள் ருஜூக்களாக அங்கீகரிக்கப் படக் கூடாதென சொல்லக்கூடாது. ஆகையால் டிஸ்ரிக்ட் ஜட்ஜி செய்த உத்தரவை ரத்து செய்கிறோம். டிஸ்ரிக்ட் கோர்ட்டார் அப்பீலை பயிலில் வைத்துக்கொண்டு சட்டப்படி முடிவு செய்ய வேண்டும்.

(1913).M. W. N. 800.

சென்னை ஹைகோர்ட்டு

1912 ளுத்திய 2-வது அப்பீல் நெம்பர் 1385.

தீர்ப்பு 19—9—13.

ஜட்ஜிகள்
ஜஸ்டிஸ் எயிலிங் துரையவர்கள்
ஜஸ்டிஸ் டியாப்ஜி அவர்கள்

அதித்தியம் அய்யர்
(பிரதிவாதி) அ. வாதி.
V
ராமகிருஷ்ணய்யர் ஆ
அ-பிரதிவாதிகள் (வாதிகள்)

3. [சாக்ஷியசட்டம்].

கிரயசாசன தஸ்தாவேஜியில் ஒரு தொகை கண்டிருந்தால் அது சாசனத்தொகையல்ல வென்றும் வேறு ஜாஸ்தியான தொகையென்றும் சொல்லக்கூடாதென்பது

வாதிகளுக்கு முதல் பிரதிவாதியாகிய அப்பீல்தாரன் 1905 ளு செப்டம்பர் மாதம் 27உ ரூ 1000 த்துக்கு ஒரு பெந்தகக் கடன் பத்திரம் எழுதிக்கொடுத்திருந்தார்; இந்த பெந்தகபத்திரத்தின்பேரில் வாதிகள் வழக்கிட்டார்கள். பிரதிவாதிகள் வாதிகளுக்கு சில நிலங்களை இரண்டு சாசனங்கள் மூலமாக 1907 ளு செப்டம்பர் மாதம் 4உ கொடுத்திருப்பதாகவும், அந்த வகையில் தாவா பெந்தகக் கடன்பத்திரம் தீர்ந்துவிட்டதாகவும் கக்ஷிபாடினார்கள். இந்த சாசனங்களில் தாவா பெந்தகக்கடன் தீர்ந்த விப

ரம் யாதொன்றுஞ் சொல்லப்படவில்லை. சாசனத் தொகை ரூ 36000 என்று வாய்மொழியாகப் பேசித் தீர்த்துக்கொண்டதாகவும், தாவா பெந்தகக் கடனுக்கு ரூ 1000 நீக்கிக்கொண்டு பாக்கித் தொகை ரூ 35000 த்துக்கு சாசனங்கள் ஏற்பட்டதென்றும், முதல் பிரதிவாதி தன்னுடைய ஸ்டேட்மெண்டில் சொல்லுகிறார். தஸ்தாவேஜிகளிலொன்றிருக்க அதற்கு நேர்மாறாக வாய்மொழியாக ருஜுவிடுவது சாக்ஷிய சட்டம் 92 வது செக்ஷனுக்கு விரோதமானதென்று கீழ்கோர்ட்டார்கள் இருவரும் பிரதிவாதிகளின் விவாதங்களை நிராகரித்து வாதிகளின் தாவாப்படியே தீர்ப்பு செய்துவிட்டார்கள். முதல் பிரதிவாதி அத்தீர்ப்புகள் பிசகென்று ஹைகோர்ட்டில் அப்பீல் செய்கிறார்.

தீர்ப்பு:—கீழ்கோர்ட்டார்கள் சொன்ன சட்டக் கருத்துக்கள் சரியானதா, இல்லையா வென்று நாம் தீர்மானிக்க வேண்டியவர்களாக விருக்கிறோம். சாசனத் தொகையானது கிரய சாசன ஷரத்துகளில் ஒன்றல்லவென்றும், சாசனத் தொகை தீர்த்துக்கொண்டது சாசன பத்திரவாசகத்திற்கண்ட தொகைக்கு ஜாஸ்தியாகவாவது கம்மியாகவாவது இருக்கலாமென்றும், இவ்விஷயங்களைப்பற்றி ருஜுவிடுவதை சாக்ஷியசட்டம் 92 வது செக்ஷனெவ்வித தடையுஞ் செய்யமாட்டாதென்றும் அப்பீல் வாதியின் வக்கீல் மிஸ்டர் ராமச்சந்திரய்யரவர்கள் வாதிக்கிறார்கள். இது சிக்கலான தாஷ்டாந்தமாகத்தா னிருக்கிறது. இதையாதரித்துச்சொல்லக்கூடிய ரூலிங்கிஸ்கள் ஏற்படவில்லை. அப்பீல்தாரர் தம் கக்ஷிக்கு ஆதாரமாக எடுத்துக்காட்டும் இ. லா. ரி. 5 சென்னை 6 தீர்ப்பு முதலியன தாவா கேசுக்கு ஒற்றுமையானதல்ல. சாசனத்துக்கு முக்கிய பிரதானமானது தொகை. இதிற்கண்ட தொகை சரியானதல்லவென்று சொல்லுவது 92 வது செக்ஷனுக்கு விரோதமானதுதான். சாசன வாசகத்துக்கு விரோதமாக ருஜுவிடக்கூடாதென்று இ. லா. ரி. 12 பம்பாய் 355 தீர்ப்பில் சொல்லப்பட்டிருப்பதுமன்றி இந்த 92 வது செக்ஷனின் பொதுவான நிபந்தனைகள் (1913) *M. W. N.* 650 தீர்ப்பிலு மேற்பட்டிருக்கிறது. சாசன வாசகத்துக்கு விரோதமாக ருஜுவிடக்கூடாதென்று கீழ்கோர்ட்டார்கள் செய்த தீர்மானங்களை யுறுதிசெய்து இந்த 2வது அப்பீலை செலவுடன் தள்ளுபடி செய்கிறோம்.

(1913)M-W-N - 847

சென்னை ஹைகோர்ட்டு

1912 ஹுத்திய 103-வது உத்தரவு பேரில் அப்பீல்.

தீர்ப்பு 19-9-13.

ஜட்ஜிகள்	இராமகிருஷ்ணய்யர் ஆ அ. வாதிகள் (பிரதிவாதிகள்)
ஜஸ்டிஸ் ஏயிலிங் துரையவர்கள்	V
ஜஸ்டிஸ் டியாப்ஜி அவர்கள்	அதித்தியம் அய்யர் ஆ அ. பிரதிவாதிகள் (வாதிகள்)

4. [சாக்ஷிய சட்டம்].

வாய்மொழியாகப் பேசித் தீர்த்துக்கொண்ட தொகையைக் கொண்டு பெந்தகக்கடன் தீர்ந்துவிட்டதாகவாவது அல்லது நஷ்டபரிகாரத்துக்காவது வழக்கிடக் கூடாதென்பது.

இந்த அப்பீலும் முன் சொன்ன 1335 நம்பரும் ஒன்றுக்கொன்றுசம்பந்தப்பட்டவைகள். அப்பீல் பிரதிவாதிகளாக விருக்கும் வாதிகள் தாங்கள் பிரதிவாதிகளுக்கு எழுதிக்கொடுத்த பெந்தக பத்திரம் தீர்ந்துபோய்விட்டதாகவாவது, அது தீர்ந்துவிட்டதாக வாய்மொழியாக உடன்படிக்கை செய்து கொண்டிருப்பதால் அந்த உடன்படிக்கைக்கு விரோதமாக பிரதிவாதிகள் நடந்ததால் அதனாலுண்டாகிய நஷ்டங்களுக்காவது தீர்ப்பு செய்யவேண்டுமென வழக்கிட்டார்கள். சப் ஜட்ஜி வாதிகளின் பிராதைத்தள்ளுபடி செய்துவிட்டார்கள். இதைப்பற்றி டிஸ்டிரிக்ட் கோர்ட்டில் அப்பீல் செய்ததில் நஷ்டபரிகாரங்கிடைக்க வேண்டிய விஷயத்துக்காக தனிமையான வாய்மொழியான சாக்ஷியம் விடலாமெனத்தீர்மானித்து சப் ஜட்ஜி இது விஷயத்தைப்பற்றி விசாரித்து முடிவு செய்யவேண்டியதாக கேசை ரிமாண்டு செய்தார்கள். இவ்விதம் டிஸ்டிரிக் ஜட்ஜி உத்தரவு செய்தது சரியல்லவென்று பிரதிவாதிகள் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்கிறார்கள்.

தீர்ப்பு:—வாதிகள் சொல்லும் வாய்மொழியான எக்ரிமெண்டு 1, 2 ஆதரவுகளிற் கண்ட சாசன காண்டிராக்டுக்கு விலக்கானதல்ல; அவை ஒரேவித எக்ரிமெண்டு என்பதாக வாதிகள் தங்கள் பிராது 3-வது பாராவிலொப்புக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் ருஜுவிட வேண்டியிருந்தால் இந்த சாசனங்களின்வாசகங்களுக்கு விரோதமாகத்தான் ருஜுவிடவேண்டும். வாதிகளின் கேசுக்கு சாக்ஷிய சட்டம் 92-வது செக்ஷனுக்கு 2-வது அல்லது

3-வது விலக்கு ஒற்றுமைபானதல்ல. ஆனதால் டிஸ்டிரிக்ட் ஜட்ஜி செய்த உத்தரவை ரத்துசெய்து வாதிகளின் வழக்கைச்செலவுடன் தள்ளுபடி செய்கிறோம்.

(1913) M. W. N. 850.

சென்னை ஹைகோர்ட்.

1912 ஞூத்திய கிரிமினல் ரெவிஷன் மனுக்கள் 209—253.

தீர்ப்பு 29—11—12.

ஜட்ஜிகள்.	இராமசாமி அய்யர் வாதி, மனுதார்.
ஜஸ்டிஸ் பென்ஸன்துரை யவர்கள்	V.
ஜஸ்டிஸ் சுந்தரமய்ப ரவர்கள்	வெங்கடேஸ்வா அய்யர் எதிரி (எதிரி மனுதார்).

5. [கிரிமினல் புரிஸீஜர் கோடு]

ஒருவர் வேறொருவர்பேரில் குற்றத்தைச் சுமற்றுவதற்காக தன்னுடைய சோத்துக்களை வைத்து சோதனைபோட்டு எடுத்ததாக ருஜுவானல் கோர்ட்டார் அச்சோத்தை கவர்ன்மெண்டாதாயஞ்செய்யலாமென்பது

வாதி எதிரிபேரில் திருட்டுக்குற்றஞ் சாட்டிப் பிராது கொடுத்தார். வாதிதன்னுடைய சொத்துக்களை எதிரியும் வேறொருவனும் திருடிக்கொண்டு ஓடுவதைத் தான் நேரிற் பார்த்ததாக ஸ்டேட்மெண்டு கொடுத்தார். இந்தக் கேசை விசாரித்த போலீஸ் இனிஸ்பெக்டர் எதிரி வீட்டினின்றும் சோதனை போட்டு எடுக்கப்பட்ட ரொக்கமும் சாமான்களும் வாதிபாலாவது வாதியின் மனுஷனாலாவது எதிரி வீட்டில் வைக்கப்பட்டு திருட்டுத் தடயமாக எடுக்கப்பட்டதென்றும், எதிரிபேரில் திருட்டுக்குற்றஞ் சுமற்றுவதற்காக இவ்விதங் கற்பனையாக கேஸ் உற்பத்தி செய்யப்பட்டதென்றும் கேஸை ரிபர் செய்ததின்பேரில் குடியாலம் 2 வது கிளாஸ் மாஜிஸ்டிரேட் எதிரிக்கு நோட்டீஸ் அனுப்பாமலே கிரிமனல் புரிஸீஜர் கோடு 203 வது செக்ஷன்படி வாதியின் பிராதைத் தள்ளுபடி செய்ததுமன்றி எதிரிபேரில் பொய்க்கேஸ் உற்பத்தி செய்வதற்காக பிராதிற் கண்ட தடயங்கள் எதிரிவீட்டில் வைக்கப்பட்டு சோதனைபோட்டு எடுக்கப்பட்டிருப்பதால் அவைகள் கவர்ண்மெண்டாதாயம் செய்யப் படவேண்டிய

தென்றும், உத்தரவு செய்தார்கள். இவ்விதம் சப்மாஜிஸ்டிரேட் செய்த உத்தரவு ரத்து செய்யப்பட வேண்டுமென வாதி டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்டிடத்தில் மனுக்கொடுத்தார். இந்தக்கேஸ் புனர்விசாரணை செய்யத்தகுந்த கேஸல்லவென்றும், தடயங்களைப் பற்றி சப்மாஜிஸ்டிரேட் செய்த உத்தரவு சரியானதென்றும் வாதியின் மனுவைத் தள்ளுபடி செய்து விட்டார்கள். இதன்பேரில் வாதி கி பு. கோடு 435, 439, வது செக்ஷன் களின்படி ஹைகோர்ட்டில் ரெவிஷன் மனுக் கொடுத்திருக்கிறார்.

தீர்ப்பு:—சோதனை போட்டு எடுக்கப்பட்ட வாதியின் சொத்துக்கள் கவர்ன்மெண்டா தாயமாகும்படி சப்மாஜிஸ்டிரேட் உத்திரவு செய்தது சட்ட விரோதமானதென்று வாதிசொல்லுகிறார். எதிரிபேரில் குற்றஞ் சுமற்றுவதற்காக வாதிதன்னுடைய சொத்துக்களை எதிரி வீட்டில் வைத்ததாக ருஜுவேற்பட்டிருக்கிறது. சோதனை போட்டு எடுக்கப்பட்ட தடயங்களுக்கு பாத்தியமுடையவர் இன்னவரெனத் தெரியாதிருந்தால் மட்டில் அந்தத் தடயங்கள் கவர்ண்மெண்டாதாயஞ் செய்யப்படவேண்டுமே யல்லாமல் அச்சொத்துகள் இன்னவருடையதெனத் தெரிந்த பின் அதை கவர்ண்மெண்டாதாயஞ் செய்யக்கூடாதென வாதி வக்கீல் வாதிக்கிறார். அந்தத் தடயங்களை அவைகளுக்கு பாத்தியமுடையவரிடத்தில் கொடுக்கவாவது அல்லது அது விஷயமாக கோர்ட்டாருக்கு யுக்தமாகத் தோற்றுகிற விதமாகவாவது செய்யலாமென்று கி. பி. கோடு 523 வது செக்ஷனிற் சொல்லப் பட்டிருக்கிறது. இந்தக் கேசில் சப்மாஜிஸ்டிரேட் சோதனை போட்டு எடுக்கப் பட்ட தடயங்களை சர்க்கார் ஆதாயஞ் செய்ய வேண்டியது நியாயமானதென வெண்ணி உத்திரவு செய்திருக்கிறார். சொத்தைப் பற்றி முடிவுசெய்தல் என்று 523 வது செக்ஷனில் சொல்லப் பட்டிருப்பது சர்க்காராதாயஞ் செய்யப்படுதல் என்ற அர்த்தமுங் கொடுக்கும். ஆகையால் இ லா ரி 19 சென்னை 448 தீர்ப்பை யனுசரித்து சப்மாஜிஸ்டிரேட் செய்தது சரியானதென்று தீர்மானிக்கிறோம் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட் செய்த உத்தரவு ரத்து செய்யப்பட நியாய மில்லை. வாதியின் மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

(1913) M W N. 851.

அலகபாத் ஹைகோர்ட்.

1913 ௵த்திய கிரிமனல் ரேவிஷன் மனுநம்பர் 105.

தீர்ப்பு 26-6-13.

ஜட்ஜிகள்	முனேஷர், வாதி மனுதார்.
ஜஸ்டிஸ் ஸர் ஜார்ஜ் நாக்ஸ துரை யவர்கள்.	V
	ரகுபீர் ஆ. எதிரிகள்.

6. [கிரிமினல் புரிஸீஜர் கோடு.]

ஒரு மாஜிஸ்டிரேட் தான்செய்யும் விசாரணையில் ஒருவித அபிப்பிராயத்தை வெளியிடுவதைக் கொண்டு அவரை சாக்ஷியாகவிசாரிக்க வேண்டுமென்றும் கேசை வேறு கோர்ட்டுக்கு மாற்றவேண்டுமென்றுங் கேட்கக் கூடாதென்பதும் கி பி கோடு 528 வது செக்ஷன் படி கொடுக்கப்படும் டிரான்ஸ்வர் மனுக்கள் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டி ரேட்டிடத்திலேயே கொடுக்கப் படவேண்டு மென்பது சேஷன் ஜட்ஜியிடங் கொடுக்கக் கூடாதென்பதும்.

வாதி எதிரிகள் பேரில் இ. பி. கோ 285, 109 செக்ஷன் களின்படி குற்றஞ்சாட்டி பெஞ்சு மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் பிராது கொடுத்தார். அது எதிரிகளின் மனுவின்பேரில் வேறு கோர்ட்டுக்கு மாற்றப்பட்டது. இந்தக் கோர்ட்டில் நியாயங் கிடைக்காது மூன்றாவது கோர்ட்டுக்கு மாற்ற வேண்டுமென வாதி மனுக்கொடுத்திருக்கிறார். இவ்விதம் மாற்றப்பட வேண்டியதற்கு வாதிதகுந்த காரணங்கள் சொல்லவில்லை. மாஜிஸ்டிரேட் சயித் அபுமுகமது தன்னுடைய கமிட்டல் ஆர்டரில் மனுதார் பிராதின் சில பாகத்தைப்பற்றி பலமான அபிப்பிராயஞ் சொல்லியிருப்பதாகவும் அதனால் அவரை இந்தக் கேசில் சாக்ஷியாக விசாரித்தால் தனக்கு நியாயங்கிடைக்கு மென்றுஞ் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் கேஸ் இ. பி. கோடு 436-வது செக்ஷன்படிபெருங்குற்றமாவதால் இது பப்ளிக் பிராஸிகியூடரால்நடத்தப்பட வேண்டிய கேஸ். இது செஷன் கேசாக விருந்தபோதிலும் கி. பு. கோடு 528-வது செக்ஷன்படி மாற்றப்படக் கொடுக்கப்படவேண்டிய மனுக்களெல்லாம் முதலில் டிஸ்ரிக்ட் மாஜிஸ்டிரேட்டிடத்தில் தான் கொடுக்கப்பட வேண்டும். இந்தக் கேசை மாற்ற யாதொரு காரணமுமில்லை. அதனாலிந்த மனுவைத்தள்ளுபடி செய்கிறோம்.

21 Indian Cases. 155.

அலகபாத் ஹைகோர்ட்.

1913 ௵த்திய 2-வது கிரிமினல் ரேவிஷன் மனு நம்பர் 382.

தீர்ப்பு—18-6-13.

ஜட்ஜி	டான் பர்ஷாத். மனுதார்
மிஸ்டர் ஜஸ்டிஸ் ரய்வ்ஸ் துரை யவர்கள்	V
	கணேஷ்பண்டே. எதிர்மனுதார்

7. [கிரிமனல் புரிஸீஜர் கோடு]

ஒரு மாஜிஸ்டிரேட் கி. பு. கோடு 145 வது செக்ஷன் படி நடவடிக்கைகள் நடத்துவதற்கு முந்தியே கலகங்கள் நடக்க ஹேதுவான விவாதங்க ளிருக்கின்றனவா வென்பதைக் கவனித்து அதன்பேரில்விசாரிக்கவேண்டிய தவசியமென்பதும், அவ்விதவிவாதமில்லாவிட்டால் அந்தக் கேசை விசாரிக்க அவருக்கு அதிகாரமில்லையென்பதும், உபயவாதிகளும் பொதுவான பாத்திய முடையவர்களா யிருந்தால் ஒருவர் வசம் சொத்திருக்கவேண்டும் மற்றவருக்கு இருக்கக்கூடா தென்று தீர்ப்பு செய்யக்கூடா தென்பதும்.

உபயகக்ஷிக்காரர்களும் ஒரு அவிபக்த குடும்பஸ்தர்கள். வாதி பிரதிவாதி பேரில் அஸாம்கர் டிஸ்டிரிக்ட் கோர்ட்டில் வழக்கிட்டு அது முடிவடையாமலிருந்தது. இந்த வழக்கின் மத்திய காலத்தில் தாவாவிற்கண்ட சொத்துக்கள் கலகத்துக்கிடமன்னியில் பந்தோபஸ்தாக விருக்கவேண்டியதென்று டிஸ்டிரிக்ட் ஜட்ஜி 1913 ௵ ஜனவரி மாதம் 23உ உத்தரவு செய்தார். இதைக்கொண்டு வாதியின் ஏஜண்டு அந்த அஸாம்கர் முதலாவது வகுப்பு மாஜிஸ்டிரேட் கோர்ட்டுக்குச் சென்று தாவாவிற்கண்ட நிலம் உபயவாதிகளுக்கும் பொதுவானதென்றும், குடும்பப்பொதுவான விதை முதலியனவற்றால் சாகுபடி செய்யப்பட்டு மாசூல் தயாரிக்கப்பட்டிருப்பதாகவும், பிரதிவாதிதான் தனிமையில் அந்த மாசூலைக் கொண்டுபோக பிரயத்தினங்கள் செய்வதாகவும், ஆகையால் போலீசாருடைய பந்தோபஸ்தின்பேரில் மாசூல் அறுவடை செய்யப்பட்டு டிஸ்டிரிக்ட் கோர்ட்டாருடைய உத்தரவின்படி நடந்துகொள்ள வேண்டுமென்றும் மனுக்கொடுத்தார். இதன்பேரில் மாஜிஸ்டிரேட் மனுதாரிடத்தில்வாக்குமூலத்தை வாங்கிக்கொண்டு "கிரிமினல் புரிஸீஜர் கோடு 145 வது செக்ஷன்படி நடவடிக்கைகள் நடத்தப்படட்டும்" என்று உத்தரவு செய்தார்கள். கலகங்கள் நடக்க ஹேதுவான விவாதங்க ளிருப்பதாக அந்த உத்

தரவிற் சொல்ல வில்லை. இவ்வித உத்தரவு சட்ட விரோதமான தென்று ஹைகோர்ட்டில் ரெவிஷன் மனுக்கொடுக்கப்பட்டது.

தீர்ப்பு:—இந்தக் கோர்ட்டு (1907) A W N 49. தீர்ப்பிற் கண்ட படி கலகத்துக்கு ஹேது வில்லாத கேசைப் பற்றி மாஜிஸ்டிரேட் விசாரிக்க எவ்வித அதிகாரமுமில்லை. தாவா ஸ்தலம் உபய வாதிகளுக்கும் பொதுவான தென்று இந்த மாஜிஸ்டிரேட் தெரிந்து கொண்டிருக்கிறார். இதனால் இவர் ஒருவர் வசம் சொத்திருப்பதாகவும் மற்றவர் வசம் சொத்தில்லை யென்றும் தீர்மானிக்கக் கூடாது. இது விஷயமாகக் கலகங்கள் நடக்குமானால் கி-பு கோடு 107 வது செக்ஷன்படி நடவடிக்கைகள் நடத்தலாம். அதனாலிந்த மனுவை யங்கீகரித்து மாஜிஸ்டிரேட் செய்த உத்தரவை ரத்து செய்கிறோம்.

20 Indian cases 751.

THE REGISTRAR OF BOOKS
9 -MAR 1914
MADRAS

ஹைகோர்ட்டு தீர்மானங்கள்

தமிழ்ப்பாஷை பயின்றவர்கள் வியவகார நுட்பங்களை
எளிதில் உணரும் பொருட்டு பிரசுரிக்கப்படும்
மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

புத்தகம்-1 } மாயவரம் 1913ஞு டிசம்பர்மீ { **இலக்கம் 4**

பம்பாய் ஹைகோர்ட்டு.

1912 ஞுத்திய கிரிமினல் ரெவிஷன் மனு நம்பர் 457.

தீர்ப்பு 2—4—13.

ஜட்ஜிகள்	அபயடடோப முண்டி மனுதார்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் பாச்சிலர் அவர்கள்	V
மிஸ்டர் ஜஸ்டிஸ் ஹீடன் அவர்கள்.	சக்கரவர்த்தி அவர்கள்.

3. [இந்தியன் பெனல் கோடு.]

ஒருவன் குற்றஞ்செய்ததாக போலீசாருக்கு தெரிவித்து அதன் பேரில் கிரிமனல் தரப்பில் நடவடிக்கைகள் நடந்து அந்தக் கேஸ் பொய் யென்று தள்ளுபடி செய்யப்படும் பட்சத்தில் அவ்விதம்தெரிவித்தவன் பேரில் இ. பி கோடு 211 வது செக்ஷன்படி நடவடிக்கைகள் நடத்தப்பட வேண்டியதே யன்றி 182 வது செக்ஷன் படி நடவடிக்கை நடத்தப்படக் கூடாதென்பது.

கான்யா என்ற ஒருவன் தன்னுடைய 2 ஆடுகளைத் திருடிவிட்டதாக மனுதார் போலீசாருக்குத் தெரிவித்ததின் பேரில் போலீசார் அந்த கான்யாவை திருட்டுக் குற்றத்துக்காக சார்ஜ் செய்தார்கள். மாஜிஸ்டிரேட் இந்தக் கேசை விசாரித்து திருடினதற்குத் தகுந்த ருஜுவில்லை யென்று மனுதார் பிராதைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். எதிரி தன்னை வீணாக மனுதார் அலக் கழித்து கஷ்டநஷ்டங்க ளுண்டுபண்ணியதற்காக மனுதாரிடமிருந்து தனக்கு காம்பன்சேஷன் தொகை கிடைக்கவேண்டுமென மனுக் கொடுத்தார். மனுதார் தன் பிராதிற்கண்ட விஷயங்களை தகுந்த சாக்ஷியுங்களினால்ருஜுப்பிக்கத்தவறிவிட்டாலும், பிராது கெட்ட எண்ணத்துடனாவது வேணுமென்று அலக்கழிப்பு உண்டுபண்ண

வேண்டுமென்றாவது கொடுபட வில்லையாகையால் எதிரியின் மனுப்படி யாதொரு காம்பன்ஸேஷன் தொகையுங் கொடுக்கிறதென்று உத்திரவு செய்ய வில்லை. பிறகு எதிரி இந்த மனுதார் பேரில் இ. பி கோடு 182 வது செக்ஷன்படி நடவடிக்கை நடத்தியதில் மனுதார் தெண்டிக்கப் பட்டான். இந்த செக்ஷன்படி தன்னை தெண்டித்தது சட்டவிரோதமானதென்று மனுதார் ஹைகோர்ட்டில் ரெவிஷன் மனுக்கொடுத்திருக்கிறார்.

தீர்ப்பு:—மனுதார்பேரில் நடவடிக்கை நடத்தப்பட வேண்டியிருந்தால் இ பி கோடு 211 செக்ஷன் படி நடவடிக்கை நடத்தப்பட வேண்டுமேயல்லது 182 வது செக்ஷன் படி நடத்தியது சட்ட விரோத மானதென்று மனுதார் வக்கீல் இ, லா, ரி 7 பம்பாய் 184 தீர்ப்பை தன்கக்ஷிக்கு ஆதாரமாக எடுத்துக் காட்டுகிறார். 182 வது செக்ஷன்படி நடவடிக்கைகள் நடத்துவதற்கு மாஜிஸ்டிரேட்டிடம் சாங்கிஷன் பெறவேண்டிய தில்லை. 211வது செக்ஷன்படி நடவடிக்கை நடத்த வேண்டியிருந்தால் மாஜிஸ்டிரேட்டிடம் சாங்கிஷன் பெற்றே நடவடிக்கை நடத்தவேண்டும். மாஜிஸ்டிரேட் சாங்கிஷன் கொடுக்கமாட்டாரெனத் தெரிந்தே இந்த 182 வது செக்ஷன்படி நடவடிக்கைகள் நடத்தப் பட்டிருக்கின்றன. இந்த 182, 211 செக்ஷன்களின் கருத்துக்களை நன்றாக யூகித்துப் பார்க்குமளவில் கிரிமனல் நடவடிக்கைகள் அல்லாத விஷயங்களைப் பற்றி சர்க்கார் உத்தியோகஸ்தரிடம் ஒருவன் பொய்யாகத் தெரிவிப்பானாகில் அதற்கு மட்டில் 182 வது செக்ஷன் பொருந்தியதென்றும், கிரிமனல் சம்பந்த மான நடவடிக்கைகளுக்கு 211 வது செக்ஷன் தான் பொருந்தியதென்றும் நன்றாகத் தெரிகிறது. கேசின் சாராம்சங்களில் பிரவேசித்துப் பார்க்கும் பட்சத்தில் நல்ல எண்ணத்துடனும் யோக்கியமாகவும் பிராது கொடுபட்டதாகத் தெரிகிறது. இதனால் மனுதாருக்கு தண்டனை விதித்ததை ரத்து செய்கிறோம்.

20 Indian cases. 747.

சிந்து ஜுடிஷல் கமிஷனர் கோர்ட்டு.

1913 இத்திய கிரிமனல் அப்பீல் நம்பர் 24.

தீர்ப்பு 14—3—13.

ஜட்ஜிகள்.
மிஸ்டர் ப்ராட் துரையவர்கள்
மிஸ்டர் ஹேவார்ட் துரையவர்கள்

சக்ரவர்த்தியவர்கள்
V
ஹாகி காட் சிங் குஷிராம் (எதிரி)

4 [இந்தியன் பெனல் கோடு]

டிக்கிரிதாரன் தன்னுடைய டிக்கிரிக்காக வரவு வந்த தொகையை தன்னுடைய நிறைவேறு மனுவிற் சொல்லாமல் முழுத் தொகையுந் தனக்குச் சேரவேண்டியதென்று உறுதி மொழிசெய்து மனுக்கொடுப்பது டிக்கிரி கடன் காரனை மோசஞ்செய்ய வேண்டுமென்ற எண்ணம் இவனுக்கிருந்தாலும் இல்லா விட்டாலும் இ. பி. கோடு 193 வது செக்ஷன் படி குற்றமாகு மென்பது.

எதிரி பாச்சு மாலுக் என்ற இருவர் பேரிலும் ரூ 35 க்கும் அதன்வட்டி கோர்ட்டுச் செலவுக்கும் 1907 ௵ ஜனவரி மாதம் 15௳ டிக்கிரி பெற்றான். அந்தத் தொகையில் ரூ 5 1907 ௵ ஜூலைமாதம் 1௳-யிலும் 1908 ௵ பிப்பரவரி மாதம் 1௳-யில் ரூ7ம் இந்தப்படி பலதவணைகளில் டிக்கிரித் தொகை செலுத்தப் படவேண்டியதாக டிக்கிரியிற் கண்டிருந்தது. முதல் தவணைத்தொகை ரூ 5, 1907 வருஷம் மேமாதம் 26௳ செலுத்தப்பட்டது. எதிரி 1909 ௵ ஜூன் மாதம் 3௳ கொடுத்த நிறைவேற்று மனுவில் மேற்கண்ட தொகை ரூ 5 வரவு வந்ததைச் சொல்லாமலே முழுத்தொகையுந் தனக்குக் கிடைக்கவேண்டுமென மனுக்கொடுத்தார். 1909 வருஷம் ஜூன் மாதம் 10ந் தேதியில் டிக்கிரி கடன்காரன் ரூ 12 கொடுத்து விட்டதால் மேலேசொன்ன நிறைவேறு மனுவைப்பற்றி நடவடிக்கை நடத்தாமல் அது தள்ளுபடி யாகிவிட்டது. இப்போது விவாவதத்திலிருக்கும் நிறைவேற்று மனுவானது 1912 வருஷம் பிப்பரவரி மாதம் 6ந் தேதி கொடுக்கப்பட்டது. இதில் மேலே சொன்ன படி வரவு வந்த தொகைகள் யாதொன்றுஞ் சொல்லப் படாமல் முழுத்தொகைக்கும் நிறைவேற்றியிருந்ததுடன் முதல் தவணைத் தொகை ரூ 5-ம் வரவில்லையென்றும் ஸ்பஷ்டமாகச் சொல்லப் பட்டிருந்தது. இவ்விதம் பொய்யான விஷயங்களைக்கண்டு எதிரிபேரில் நடவடிக்கை நடத்தியதில் எதிரி [illegible] முதலாவது வகுப்பு மாஜிஸ்டி ரேட்டா

ரால் விடுதலை செய்யப்பட்டார். அதன் பேரில் கவர்ண்மெண்டார் இந்த கோர்ட்டில் அப்பீல் செய்திருக்கிறார்கள்.

தீர்ப்பு:—தாவாவிற்கண்ட நிறைவேறு மனு விசாரணை நடந்தபோது டிக்கிரிகடன் காரர்களால் ரசீதுகள் தாக்கல் செய்யப்பட்டன. இவைகள் தான் கொடுத்தவை யென எதிரி ஒப்புக்கொண்டான். தனக்கு சில தொகை வரவுவந்ததாக நிறைவேறுமனு எழுதியவரிடஞ் சொன்னதாகவும், அத்தொகை எந்தெந்த தேதிகளில் வரவு வந்தன என்ற விபரந் தெரியாததால் அத்தொகைகளை மனுவிற் காட்ட வேண்டாம் டிக்கிரிகடன் காரர்கள் ரசீதுகளை தாக்கல் செய்தால் அந்தக் காலத்தில் அவைகளை யொப்புக்கொண்டு பாக்கித் தொகைக்கு நிறைவேற்றலாம் என்று அந்த மனு எழுதியவர் தனக்கு புத்திமதி சொன்னதாகவுஞ் சொன்னான். இது விஷயமாக அந்த மனு எழுதியவனை சப்ஜட்ஜி விசாரித்ததில் தானந்தப்படி யாதொன்றுஞ் சொல்ல வில்லை யெனச் சொல்லிவிட்டார். எதிரி இந்த மனு எழுதியவர் பேரில் குற்றத்தைச் சுமற்ற முடியாமற் போய்விட்டதால் வரவுவந்த தொகைகள் தனக்கு ஞாபக மில்லாததால் மனுவில் வரவு வைக்கத்தவறிவிட்டதாக வேறு கக்ஷிசொன்னார். இந்தக் கேசை விசாரித்த மாஜிஸ்டிரேட் தொகை வரவு வந்ததை எதிரி மறந்து விட்டாரென்று கண்டு பிடித்து தீர்ப்பில் எழுதவில்லை. மனு எழுதியவன் பொய் சொல்லுகிறானென்று கண்டு பிடித்ததாகச் சொல்லுகிறார். தொகை வரவுக்காக ஏற்பட்ட காலத்தில்(Column) யாதொன்று மில்லையென்று போடுவதற்கு பதிலாக சில டாஷ்கள் (அடித்தல்கள்) இருந்ததால் மனு எழுதியவன் சொல்வது பொய்யென்று அபிப்பிராயப்படுகிறார். எதிரி மனு எழுதியவனிடத்தில் வரவு வந்ததைச் சொல்லியிருக்கக் கூடுமென்றும் அவனுடைய யோஜனையின்பேரில் வரவு வந்ததைக் காட்டாதிருந்ததாகவும், கெட்ட எண்ணத்துடன் அந்தப்படி செய்யவில்லை யென்றும் டிக்கிரி கடன்காரர்கள் தாங்கள் கொடுத்த தொகையை ருஜூப்படுத்தவேண்டியதி னிமித்தம் அந்தப்படி செய்ததாகவும் அபிப்பிராயப்பட்டு எதிரியை விடுதலை செய்திருக்கிறார்கள்.

வரவு வந்த தொகை வரவு வராததுபோல் சொல்லியது பொய் யென்று தெரிந்து உறுதிமொழி செய்தது கோர்ட்டாரை யேமாற்றவேண்டுமென்ற கெட்ட எண்ணத்துடன் பொய்

யான விஷயங்கள் உண்மையானவையென நம்பும்படி செய்திருக்கிறான். இதைப்போன்ற கேஸ்களில் 16 வீக்லீ ரிபோர்ட் 37, இ. லா. ரி. '26 அலகபாத் 509 தீர்மானங்கள் ஏற்பட்டிருப்பதை கவனிக்குமளவில் எதிரி சொல்லும் டிபென்ஸ் எவ்விதத்திலும் பிரயோஜனமில்லை யென்பது நன்றாகத் தெரியும். வரவு வைக்கப்படவேண்டிய காலத்தில் யாதொன்றும் எழுதப்படாத காரணத்தைக் கொண்டு எதிரி குற்றத்தினின்றுந் தப்பித்துக்கொள்ளமுடியாது. ஏனென்றால் முழுத்தொகையுந் தனக்குச் சேரவேண்டுமென அடுத்த காலத்தில் (Column) எழுதியிருக்கிறான். அது இ. லா. ரி. 10 பம்பாய் 288 தீர்ப்பிற்கண்டபடி பொய்யானஉறுதிமொழியாகிறது.

கீழ்க்கோர்ட்டிலும் மாஜிஸ்டிரேட்டிடத்திலும் எதிரிசொன்ன டிபென்ஸ் பிசகு, ஞாபகப் பிசகினால் வரவு வைக்காதது தான் உண்மை யென்று எதிரி வக்கீல் வாதாடுகிறார். இதை நாம் நம்ப இடமில்லை. தொகை வரவு வந்ததைத் தான் மறந்துவிட்டதாக எதிரி சொல்லவில்லை. பொய்யான மனுக்கொடுத்தது இது முதற்றடவையல்ல. 1909 ஹு ஜூன் மாதம் 3உ யிலேயே பொய்யான மனுக் கொடுத்திருக்கிறார். எதிரி உண்மையில் வரவு வந்ததை மறந்திருக்கும் பட்சத்தில் சப் ஜட்ஜி இதைப்பற்றிக் கேட்டவுடனே தான் மறந்துவிட்டதாகச் சொல்லியிருக்கலாம். அந்தப்படிக்கில்லை. மேலும் டிக்கிரித்தொகை மிகவும் சொற்பம், இதில் பாதிக்கு சொற்பங் குறைவாக வரவு வந்துவிட்டது. இதை மறந்திருக்க எவ்வித ஹேதுவுமில்லை. ஆகையால் கீழ்க்கோர்ட்டார் எதிரியை விடுதலை செய்திருப்பதை ரத்து செய்கிறோம். எதிரி இ. பி. கோடு 193-வது செக்ஷன்படி குற்றஞ் செய்ததாக தீர்மானிக்கிறோம். எதிரி வயதானவனானதால் 3 மாத வெறுங்காவல் தண்டனையும் ரூ 500 அபராதமும் விதிக்கிறோம். இந்த அபராதத்தொகை செலுத்தப்படாவிட்டால் இன்னும் 3 மாதகாலம் வெறுங்காவலி லிருக்கவேண்டியதாகத் தீர்மானிக்கிறோம்.

20 Indian Cases 616.

பம்பாய் ஹைகோர்ட்டு.

1912 ௵த்திய கிரிமினல் அப்பீல் நம்பர் 518.

தீர்ப்பு 2—4—13

ஜட்ஜிகள். மிஸ்டர் ஜஸ்டிஸ் பாச்சலர்துரையவர்கள் மிஸ்டர் ஜஸ்டிஸ் ஹீட்டன்துரையவர்கள்	சக்கரவர்த்தியவர்கள் V மான்சிங் டாஜிபாடில் ஆ.

5. [இந்தியன் பெனல்கோடு.]

ஏற்பட்ட காண்டிராக்ட்டுக்கு விரோதமாக மோசவகையாக பழுதான சரக்கைக் கொடுக்க எத்தனித்தால் அவ்விதம் பிசகு செய்பவர்கள் மோசக் குற்றத்துக்கு உள்ளாக்கப்படுவோர்களென்பது.

மான்சிங் டலால்சிங் என்ற இரண்டு சகோதரர்களும் ராலிபிரதர்ஸ் கம்பெனிக்கு நல்ல பஞ்சு கொடுப்பதாக உடன்படிக்கை எழுதிக்கொடுத்தார்கள். இவ்விதம் நல்ல பஞ்சு கொடாமல் 30 டோகராஸ் கெட்ட பஞ்சு அதாவது குப்பை முதலியன கலந்ததைக் கொடுக்க எத்தனித்ததை ராலிபிரதர்ஸ் ஏஜண்டு கண்டுபிடித்து பிராது செய்ததின் பேரில் மோசஞ் செய்ய எத்தனஞ்செய்த குற்றத்துக்காக மான்சிங் டால்சிங் இருவரும் தண்டிக்கப்பட்டார்கள். இது விஷயமாக இவர்கள் அப்பீல் செய்ததில் செஷன்ஜட்ஜியவர்களை விடுதலை செய்துவிட்டார். இதனால் கவர்ன்மெண்டு திறப்பில் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்கிறார்கள்.

தீர்ப்பு:—எதிரிகள் குற்றவாளிகளல்லவென்பதற்கு செஷன் ஜட்ஜியவர்கள் இரண்டு காரணங்கள் சொல்லியிருக்கிறார்கள்.

(1) பிராஸிகியூஷன் திறப்பிற் சொல்லப்படும் விஷயங்கள் ருஜுப்பிக்கப்பட்டால் அவைகள் மோசஞ் செய்ய எத்தனித்ததாகாது, மோசஞ் செய்ய முயற்சித்ததாகும்.

(2) குப்பை சேர்ந்த பஞ்சை எதிரிகள் கொடுக்க எத்தனிப்பதற்கு முந்தியே ஏற்பட்ட காண்டிராக்ட்டு முடிந்துவிட்டதால் மோசஞ் செய்ய எத்தனிக்க ஹேதுவில்லை.

ராலிபிரதர்ஸ் ஏஜண்டு எதிரிகளின் மோசத்தை முன்னதாகத் தெரிந்துகொண்டு அவைகளைப் பெற்றுக்கொள்ளாமல் ஆக்ஷேபித்துவிட்டார். இவர் அஜாக்கிரதையாக விருந்தால் இவரை யேமாற்றி சரக்குகளைக் கொடுத்திருப்பார்கள். ராலிபிரதர்ஸுக்கும் எதிரிகளுக்கும் ஏற்பட்ட சிவில் காண்டிராக்ட்டு முடிந்துவிட்டதென்பது இந்தக் கேசுக்குப் பொருத்தமானதல்ல. எதிரிகள் குப்பைசேர்ந்தபஞ்சைக்கொடுக்க எத்தனித்தது முன்னேற்பட்ட காண்டிராக்ட்டை பூர்த்தி செய்வதற்கேயன்றி வேறல்ல. இப்போது எதிரிகளின் வக்கீல் ஆக்ஷேபிக்கும் விஷயங்கள் இரண்டு. அவையாவன:—

(1) விவாதத்திலுள்ள பஞ்சு கோகுலதாசின் கட்டடத்தில் அடக்கஞ் செய்வதற்கல்லாமல் ராலிபிரதர்ஸுக்குக் கொடுப்பதற்காகத் தான் கொண்டுவரப்பட்டதென்பதை பிராஸிகியூஷன் திறப்பில் ருஜுப்பிக்கவில்லை.

(2) மோசம் ஏதேனு மிருந்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டால் எதிரிகள் இந்த மோசஞ் செய்தார்களென்பதற்கு ருஜுவில்லை.

மாஸ்வாடிலிருந்து எதிரிகளின் ஏஜண்டு மாதவனால் கொண்டுவரப்பட்ட பஞ்சை டொகார்ஷி என்பவர் கோகுலதாசின் கட்டடத்தில் இறக்குமதி செய்ய ஆக்ஷேபித்தபோது தாருகாரன் நாராயன் இந்த பஞ்சு ராலிபிரதர்ஸுக்குத் தான் வந்திருக்கிறதென்று வாக்குறுதி சொன்னதின்பேரில் அவ்விடத்தில் இறக்குமதி செய்யப்பட்டதாக ருஜுவாயிருக்கிறது. ஆகையால் எதிரிகள் சொல்லும் முதல் ஆக்ஷேபனை பிரயோஜனமற்றதாகி விட்டது. இந்த பஞ்சு வேலை எதிரிகளிருவருஞ் சேர்ந்தே செய்துவந்திருக்கிறார்கள். பருத்திக்கொட்டை நீக்கும் யந்திரசாலை ஜலால்சிங் விசாரணையிலிருந்து வந்தாலும் பஞ்சு சம்பந்தமான விஷயங்களெல்லாம் மான்சிங்குடைய மேல்விசாரணையி லிருந்துவருவதாக ருஜுக்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதனாலிவருக்கு இந்த மோசந் தெரியாதிருக்க நியாயமில்லை. இந்த மோசவகையா லேற்பட்ட லாபங்களை யிருவருமடைகிறார்கள். ஆகையால் எதிரிகளிருவரும் ஒன்று சேர்ந்தே இந்த மோசஞ் செய்ய எத்தனித்தார்களென்று தீர்மானிக்கிறோம். செஷன் ஜட்ஜி செய்த தீர்மானத்தை ரத்து செய்து மாஜிஸ்டிரேட் குற்றவாளிகளெனக் கண்டுபிடித்ததையும் அவர் விதித்த தண்டனையையும் உறுதி செய்கிறோம்.

20 Indian Cases 598.

கல்கத்தா ஹைகோர்ட்.

1913 ஹூத்திய கிரிமனல் ரேவிஷன் மனு நம்பர் 320.

தீர்ப்பு 10—4—13.

ஜட்ஜிகள் ஜஸ்டிஸ் ஸர் ரிச்சேர்ட் ஹாரிங்டன் துரையவர்கள் மிஸ்டர் ஜஸ்டிஸ் காக்ஸ் துரையவர்கள்	ஆமத் உஸ்ஸென் எதிரி, மனுதார் V சக்கரவர்த்தியவர்கள்

6 [இந்தியன் பெனல் கோடு.]

சாங்கிஷனன்னியில் இ. பி கோடு 186-வது செக்ஷன்படி நடவடிக்கை நடத்தக்கூடாதேன்பதும், மாஜிஸ்டிரட்டால் நடவடிக்கை நடத்தப்படவேண்டுமேன்று சொல்லாத ரிப்போர்ட்டு கி. பு. கோடு 4-வது செக்ஷன் கிளாஸ் (h) படி பிராது ஆகமாட்டா தேன்பதும்.

ஒரு கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தனை அவன் வேலையைச் செய்யவொட்டாமல் எதிரி மனுதார் தடுத்ததற்காக அவன் இ.பி. கோடு 186-வது செக்ஷன்படி தண்டிக்கப்பட்டான். இவ்விதந் தன்னை தண்டித்தது சட்டவிரோதமானதென்று எதிரி ஹைகோர்ட்டில் ரெவிஷன் மனுக்கொடுத்தான். சம்பந்தப்பட்ட சர்க்கார் உத்தியோகஸ்தனுடைய சாங்கிஷனன்னியில் இ. பி. கோடு 186-வது செக்ஷன்படி சப் டிவிஷனல் மாஜிஸ்டிரேட் எதிரியை தண்டித்தது சட்ட விரோதமானதென்றும், அதை ஏன் ரத்து செய்யக்கூடாதென்பதற்குக் காரணமேதேனு மிருந்தால் அதைத் தெரிவிக்கும்படிக்கும் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்டுக்கு உத்தரவு அனுப்பப்பட்டது.

கவர்ன்மெண்டு திறப்புக்கு ஆஜரான அறிவிற் சிறந்த வக்கீல் தாவா கேஸ் சாங்கிஷன் வாங்கும்படியான கேஸல்லவென்றும், சாங்கிஷன் பெற்று நடவடிக்கை நடத்த வேண்டுமென்று எதிரி ஆக்ஷேபிக்கவில்லை யென்றும் வாதிக்கிறார். ஒரு சேவகன் அவன் வேலையைச் செய்யவொட்டாமற்றடுத்ததற்காக எதிரி பேரிற் குற்றஞ்சாட்டாப்பட்டிருக்கிறது. இந்த சேவகனல் மேலதிகாரிக்கு ஒரு ரிபோர்ட்டு செய்யப்பட்டிருக்கிறது. அதில் மாஜிஸ்டிரேட்டு கோர்ட்டில் எதிரிபேரில் நடவடிக்கை நடத்த வேணுமென்று வெளிப்படையாகவாவது அல்லது ஊகிக்கக்கூடிய

விதமாகவாவது கேட்கப்படவில்லை. இதனல் இது கி. பு. கோடு 4-வது செக்ஷன் கிளாஸ் (h) படி பிராது என்ற விதியில் வாவில்லை. ரிபோர்ட்டு பிராதாக அங்கீகரிக்கப்படத் தக்கதல்ல வாகையாலும், இந்த நடவடிக்கை நடத்த சாங்கிஷன் இல்லாததாலும் 186-வது செக்ஷன்படி நடவடிக்கை நடத்தியது சட்டவிரோதம். வாதியை பிரமாணத்தின் பேரில் விசாரித்திருப்பதினலே பிராது வாய்மொழியாகச் சொல்லிக்கொள்ளலாமென்று ஆக்ஷேபிக்கிறார். அந்த வாக்குமூலத்தைக் கவனிக்கும்பட்சத்தில் மேலே சொன்ன விதியின் கீழ் அது வரவில்லை. இதனல் எதிரிபேரில் தீர்ப்பு செய்ததை ரத்துசெய்கிறோம்.

20 Indian Cases 622.

சென்னை ஹைகோர்ட்.

1911 ஹூத்திய லெட்டர்ஸ் பேடண்டு அப்பீல் நம்பர் 33.

தீர்ப்பு 30—1—12.

ஜட்ஜிகள் ஜஸ்டிஸ் சுந்தரமய்யாவர்கள் ஜஸ்டிஸ் மில்லர் துரையவர்கள்	C. A. மகாதேவசாஸ்திரி அப்பீல் வாதி மனுதார் V கும்பகோணம் முனிசிபல் கவுன்ஸல் எதிர்மனுதார்

2. [டிஸ்டிரிக்ட் முனிசிபல் ஆக்ட்.]

அன்னிய தேசத்தினின்றும் பேன்ஷன் வாங்கினலும், அத்தோகை பெற்றுக்கொள்ளுபவர் எந்த முனிசிபல் டவுனில் வசிக்கிறரோ அந்த முனிசிபால்டியார் 53-வது செக்ஷன்படி வரி விதிக்கலாமேன்பது.

வாதி மைசூர் சமஸ்தானத்தில் இஞ்சினீர் வேலையிலிருந்து பென்ஷன் பெற்று கும்பகோணம் டவுனில் வசித்துவருகிறார். இவருக்கு முனிசிபாலிட்டியார் முனிசிபல் ஆக்ட் 53-வது செக்ஷன்படி வரி போட்டு வசூலித்து விட்டார்கள். இதனல் அந்தத் தொகை முனிசிபாலிட்டியாரிட மிருந்து திரும்ப தனக்குக்கிடைக்க வேண்டுமென கும்பகோணம் டிஸ்டிரிக்ட் முனுசிப் கோர்ட்டில் வழக்கிட்டார். வாதி பிரிட்டிஷ் இந்தியாவில் யாதொரு பென்ஷனும் பெறவில்லை யென்றும், அவர் முனிசிபல் லிமிட்டுக்குட்

பட்டு வசிப்பதால் முனிசிபலாக்ட்டுப்படி வரி விதித்தது நியாயமானதென்றும், வாதியின் வழக்கை தள்ளுபடி செய்துவிட்டார்கள். இதன்பேரில் வாதி ஹைகோர்ட்டில் ரெவிஷன் மனுக்கொடுத்தார். வாதியான பென்ஷனர் பாதி வருஷத்தில் 60 தினங்கள் முனிசிபல் எல்லைக்குள் வசித்ததால் 1884-ம் வருஷத்திய 4-வது ஆகட் 53-வது 55-வது செக்ஷன்களின்படி வாதிக்கு வரிவிதித்தது நியாயமானதென்று ஜஸ்டிஸ் வாலிஸ் துரையவர்கள் வாதியின் மனுவைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். இதன்பேரில் லெட்டர்ஸ் பேடண்டு ஆகட் 15 - வது செக்ஷன்படி வாதி அப்பீல் செய்கிறார்.

தீர்ப்பு:—டிஸ்டிரிக்ட் முனிசிபால்டி ஆகட் (1884-ம் வருஷத்திய 4-வது ஆக்ட்) 53-வது செக்ஷன் விளக்கத்தில் பென்ஷன் பெறும் நபர் என்ற பதம் பென்ஷனை வாங்கிக்கொள்ளும் நபர் என்ற அர்த்தமாகுமென்று நமக்குத்தோற்றுகிறது. அப்பீல் வாதி பென்ஷன் பெற்றுக்கொண்டு முனிசிபல் எல்லைக்குள் வசிப்பதால் அவருக்கு வரிபோட்டது நியாயமானது. வாதியின் அப்பீல் செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

(1913) M. W. N. 935.

சென்னை ஹைகோர்ட்.

1912 ௵த்திய 2-வது அப்பீல் நம்பர் 740.

தீர்ப்பு 24—7—13.

ஜட்ஜிகள்
ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள்
ஜஸ்டிஸ் டியாப்ஜி அவர்கள்

வித்யாபூர்ண தீர்த்த ஸ்வாமியார் வாதி அப்பீல்தாரன்
V
ரெங்கப்பய்யா ஆ. பிரதிவாதிகள்

10. [டிரான்ஸ்வர் அவ் பிராபர்டி ஆக்ட்.]

கிருஷி சம்பந்தமான குத்தகைக்கு டிரான்ஸ்வர் அவ் பிராபர்டி ஆக்ட் பொருத்தமாகாதென்பதும், குத்தகை பாக்கியை செலுத்திவிடுங்குடிகளை நீக்கப் பாத்தியமில்லையென்பதும்.

1863-ம் வருஷத்தில் ஒரு குத்தகைச்சீட்டு எழுதிக்கொடுக்கப்பட்டிருப்பதாகவும், அதிற்கண்ட நிபந்தனைகளின்படி பிரதி

வாதிகள் நடக்காததினால் அவர்களை சொத்தினின்றும் அப்புறப்படுத்த வேண்டுமென்றும் வாதி வழக்கிட்டார். பிரதிவாதிகளை நீக்குவதற்கு சட்டப்படிக்குள்ள பாத்தியம் வாதிக்குக்கிடைப்பதற்கு முந்தியே டிரான்ஸ்வர் அவ் பிராபர்டி ஆகட்டு 111-வது செக்ஷனிற் கண்டபடிக்கும் இ. லா. ரி 31 சென்னை 403 ரூலிங்கிலிற் கண்டபடிக்கும் குடியான பாத்தியதையை ரத்து செய்வதற்கு வாதி பூமிக்குடையவருக்கு எண்ணமிருந்ததென்பதை வெளிப்படையாகக் காட்டக்கூடியதாக பிரசித்தமான நடவடிக்கை வாதி செய்திருக்கவேண்டுமென்றும், அவ்விதம் வாதியாதொன்றுஞ் செய்யவில்லையென்றும், வாதியின் வழக்கு கீழ்க் கோர்ட்டாரால் தள்ளுபடி செய்யப்பட்டது. அவ்விதஞ் செய்தது சட்டவிரோதமானதென்று வாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்கிறார்.

தீர்ப்பு:—தாவாவிற்கண்ட குத்தகை டிரான்ஸ்வர் அவ் பிராபர்டி ஆக்ட் ஏற்படுவதற்கு முந்தியே அதாவது 1863 ௵த்திலேற்பட்டிருக்கிறது. அந்த ஆக்ட் தாவா கேசுக்கு சம்பந்தமானதுமல்ல [(1910) M. W. N. 462, 23, M. L. J. 715 இவைகளைப் பார்க்க]; ஷை ஆக்ட் 117 வது செக்ஷனில் சொல்லப்பட்டிருக்கிறபடி ஷை ஆக்ட்டிற்கண்ட விதிகள் கிருஷி சம்பந்தமான குத்தகைகளுக்கும் பொருந்தியதென்று கவர்ன்மெண்டாரவர்களால் பிரத்தியேகமாகவிளம்பரஞ்செய்தாலன்றி கீழ்க்கோர்ட்டார் சொல்லும் 111 வது செக்ஷன் தாவா கேசுக்கு எந்த விதத்திலும் பொருத்தமானதல்ல; இ. லா. ரி. 31 சென்னை 403 தீர்மானமும் இதற்குப் பொருத்தமானதல்ல; எலெக்ஷன் (Election) நியமனங்கள் இரண்டுவிதமுண்டு; ஒன்று ஒரு பாத்தியதைக்கு ஏற்றத்தைக் கொடுப்பது, மற்றொன்று அதற்கு ஏற்றத்தைக் கொடாதது; தாவா கேசில் பாத்தியதையை விட்டுவிட்ட எலெக்ஷன் ஒன்றுதானேற்பட்டிருக்கிறது. பிரதிவாதிகள் குத்தகை பாக்கியைச்செலுத்திப்போடுவதாக இந்தக் கோர்ட்டார் முன்பாக ஒப்புக்கொள்ளுகிறார்கள். கீழ்க்கோர்ட்டில் இவ்விதம் ஒப்புக்கொள்ளாததினாலே பாதகமில்லை. குத்தகை பாக்கி ஜாடாவும் எல்லாக் கோர்ட்டு செலவு தொகைகளையும் இந்தத் தேதி முதல் இரண்டு மாத கெடுவுக்குள் கோர்ட்டில் கட்டிவிடுவதின்பேரில் பிரதிவாதிகளின் பாத்தியம் விலக்கப்படமாட்டாது; கீழ்க்கோர்ட்டு டிக்கிரி யுறுதி செய்யப்படும். அந்தக் கெடுவில் மேற்சொன்ன தொகை

செலுத்தப்படாவிட்டால் வாதி தன் தாவாவிற்கண்ட சொத்தைச் சகல செலவுகளுடனும் பின்னிட்ட வரும்படிகளுடனும் வசூலிக்க பாத்தியமுடையவராவார். இந்தப்படி கீழ்க்கோர்ட்டு டிக்கிரி திருத்தப்பட்டது.

(1013) M.W.N. 901.

சென்னை ஹைகோர்ட்.

1911 ஷுத்திய 2 வது அப்பீல் நம்பர் 571.

தீர்ப்பு 13—3—13.

ஜட்ஜிகள். ஜஸ்டிஸ் பென்ஸன் துரையவர்கள் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள்	வெங்கட்ட நாராயணசாமிரெட்டி, வாதி அப்பீல்தாரன் V கன்னியம்மாள் ஆ. (பிரதி வாதிகள்)

11. [டிரான்ஸ்வர் அவ் பிராபர்டி ஆக்ட்.]

இரண்டாவது பெந்தகதாரன் தனக்குள்ள பாத்தியதையை உள் பெந்தகமாக வைத்தால் அந்தப் பெந்தகம் பெற்றவன் முன் பெந்தகக் கடனைக் கொடுத்து விட்டு அத்தொகையையுஞ் சேர்த்து வழக்கிடலா மென்பது.

2 ம் பிரதிவாதி தன்னுடைய சொத்தை வடமலை யென்பவருக்கு சாதாரண பெந்தகம் வைத்தாள். பிறகு அதே சொத்தை போக்கிய அடமானமாக முதல் பிரதிவாதிக்கு வைத்து விட்டாள். இந்த முதற்பிரதிவாதி தன்னுடைய பாத்தியதையை வாதிக்குபெந்தகம் வைத்தான். இந்த 2 ம் பிரதிவாதியால் வடமலைக்கு எழுதிக் கொடுக்கப்பட்டிருந்த பெந்தகக்கடனைத் தீர்த்து விட்டார். பிறகுஇந்தவடமலைக்குக் கொடுத்துத்தீர்த்த தொகையும், தனக்குமுதற் பிரதிவாதியால் சேரவேண்டிய தொகையுங் கிடைக்க வேண்டு மென 1-2 ம் பிரதிவாதிகள் பேரில் வழக்கிட்டார். கீழ்க்கோர்ட்டார்கள் இருவரும் வடமலைக்குச் சேரவேண்டிய தொகையை வாதி கொடுத்துத் தீர்த்து விட்டதாகக் கண்டுபிடித்தார்கள். ஆனல் வடமலைக்குச் சேரவேண்டிய கடனை வாதிகொடுத்து மீட்க பாத்திய மில்லை யென்று அந்தத் தொகைக்கு தீர்ப்பு செய்யவில்லை. அதனல் வாதி ஹைகோர்ட்டில் அப்பீல்செய்கிறார்.

தீர்ப்பு:—ஒரு ஸ்தாவர சொத்தில் பாத்தியம் அல்லது பொறுப்பு உடையவர் அந்தச் சொத்தை மீட்கலாம் அல்லது மீட்பதற்கு வழக்குக்கொண்டுவரலாமென்று டிரான்ஸ்வர் அவ் பிராபர்டி ஆக்ட் 91 வது செக்ஷனில் சொல்லப்பட்டிருக்கிறது. வாதி உள்பெந்தக தாரனகையால் வடமலையின்பெந்தகத்தை மீட்க பாத்தியமுடையவர். அதனல் மீட்டார். அந்தப் பெந்தகப் பாத்தியம் இவருக்குக் கிடைத்து விட்டது. இதற்கு விரோதமான விஷயம் ஷை ஆகட் 74 வது செக்ஷனிற் சொல்லப்படவில்லை. பின் பெந்தகதாரன் தனக்கு அடுத்த முன் பெந்தகத்தை மட்டில் மீட்கும் பாத்தியமுடையவன் என்பதல்ல. அவ்விதஞ் சொல்லுவது 91 வது செக்ஷனுக்கு விரோதமாகும். பின் பெந்தகதார்கள் பலரிருந்தால் இவர்களுக்குள் யார் யார் எவ்விதம் மீட்கிறதென்று சொல்லப் பட்டிருக்கிறது. அதனல் வாதி கொடுத்து மீட்ட தொகை ரூ220. அதற்கு வட்டியுள் படபிராது தேதியில் கூடுதல் தொகை ரூ 271. அசல் தொகை 220க்கும் 1909 வருஷம் செப்டெம்பர் மாதம் 13ந் தேதி வரையில் 100க்கு 12 வீதம் வட்டியும் பிறகு தொகை செல்லாகுந் தேதி வரையில் அந்த ரூ 220க்கும் 100 க்கு 6 வீதம் வட்டியுங் கொடுபட வேண்டியதாக தீர்மானிக்கிரேம். பெந்தக சொத்தை மீட்க 1913 வருஷம் ஜூலைமாதம் 31 தேதி வரையில். கெடுகொடுக்கப் பட்டிருக்கிறது. வாதிக்கு நேரிட்ட எல்லாக் கோர்ட்டுச் செலவு தொகைகளையும் அப்பீல் 2-3 பிரதிவாதிகள் கொடுக்கவேண்டும்.

(1913) M. W. N. 903.

அலகபாத் ஹைகோர்ட்.

1913 வருஷத்திய 2-வது அப்பீல் நம்பர் 232

தீர்ப்பு 7—9—13.

ஜட்ஜி ஜஸ்டிஸ் ஸர் P.C. பானர்ஜி அவர்கள்	அபடல் அவிஸ், அ. வாதி. V நாருயன் தாஸ் டிவாரி அ. பிரதிவாதி

2. [ஸ்பெஸிவிக்ரி லீவ் ஆக்ட்டு.]

ஸ்பெஸிவிக் ரிலீவ் ஆக்ட்டுப்படி வழக்கிட காலதாமதம் நேரிட்டால் வாதிக்கு டிக்கிரி செய்யப்படக் கூடாதென்பது.

1909 வருஷம் மார்ச்சு மாதம் 20-ந் தேதி பிரதிவாதி, வாதியின் தகப்பனுக்கு 2 வீடுகளை சாசனஞ் செய்வதாக உடன்படிக்கை செய்து கொண்டிருப்பதாகவும், பிரதிவாதி அந்த உடன்படிக்கையின்படி நடக்கத் தவறி விட்டதாகவும், வாதியின் தகப்பன் இப்பால் இறந்துவிட்டதால் அந்த உடன்படிக்கையின்படி தனக்கு சாசனஞ் செய்து கொடுக்கப்படவேண்டுமென்றும், ஸ்பெஸிவிக் பெர்வார்மென்ஸ் காண்டிராக்ட்டுப்படி (Specific performance of Contract) வாதி வழக்கிட்டார். பிரதிவாதி தாவாவிற் கண்ட உடன்படிக்கை யுண்மையென்றும், அந்தக் காண்டிராக்ட் ஏற்பட்ட காலத்தில் ரூபாய் 75 அட்வான்ஸாக வாங்கிக்கொண்டதாகவும், சாசனபாக்கித்தொகை ஜாடாவும் ஒருவார கெடுவுக்குள் கொடுபடவேண்டியதென்றும், அந்தக் கெடுவுக்குள் அத்தொகை முழுவதுங்கொடுபடாவிட்டால் ஏற்பட்ட உடன்படிக்கை ரத்தாய்விடுவதுமன்றி அட்வான்ஸாகக் கொடுபட்ட தொகை முழுவதும் இழந்துவிட வேண்டியதென்றும், உடன்படிக்கை செய்து கொண்டிருப்பதாகவும், அந்தப்படி வாதி தகப்பன் நடவாததால் வாதியின் தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றும், பிரதிவாதி கக்ஷியாடினார். இந்த வழக்கு 1912-ம் வருஷம் ஜுன் மாதம் 7-ந்தேதி கொண்டுவரப்பட்டது. அதாவது தாவா காண்டிராக்ட் ஏற்பட்டு சற்றேறக்குறைய 3 வருஷ கெடுவில் வழக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்தக் காண்டிராக்ட்டுக்குப் பிறகு வாதியின் தகப்பன் இரண்டு வருடம் வரையில் ஜீவந்தராகவிருந்தார். அவரால் யாதொரு நடவடிக்கைகளும் நடத்தப்படவில்லை. பிரதிவாதி சொல்லுங் கட்சி யுண்மையானதென கீழ்க்கோர்ட்டார்களிருவருங்கண்டுபிடித்து வாதியின் வழக்கைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். அதன் பேரில் வாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்கிறார்.

தீர்ப்பு:—காண்டிராக்ட்டின் சாராம்சம் காலத்தைப் பொறுத்ததல்லவென்றும், குறிப்பிட்டகாலத்துக்குள் சாசன பாக்கித் தொகையை வாதி கொடுக்கத்தவறிவிட்டதால் பிரதிவாதிக்கு நேரிட்ட நஷ்டத்தை வாதி கொடுத்துவிட வேண்டியதென்று நிபந்தனையின் பேரில் ஸ்பெஸிவிக் பெர்வார்மென்ஸ்படி டிக்கிரி செய்யப்பட வேண்டுமென்றும், வாதி கக்ஷி சொல்லுகிறார். இந்தக் கக்ஷி சரியானதல்லவென்று அபிப்பிராயப்படுகிறோம். கீழ்க்கோர்ட்டார்களுடைய தீர்ப்புகளினால் குறிப்பிடப்பட்டகாலந்தான் காண்டிராக்ட்டின் சாராம்சமென்று ஸ்பஷ்டமாகத்தெரிகிறது. ரூபாய் 75 அட்வான்ஸ் கொடுபட்ட ஒருவார கெடுவுக்குள்சாசனபாக்கித் தொகை பூராவுங் கொடுபடாவிட்டால் காண்டிராக்ட் ரத்து செய்யப்படுமென்பதாக பிரதிவாதி 1909 ௵த்திலேயே கக்ஷிசொல்லியிருக்கிறார். தாவா கேஸில் கெடுத் தவறியது வேணுமென்று செய்ததாகவும் அது துடர்ச்சியாக நடைபெற்று வந்ததாகவும் ஸ்பஷ்டமாகத் தெரிகிறது. வாதி தான் செய்த பிசகைப்பற்றி அதை நிவர்த்திக்க வேண்டுமென்று கேட்க நடுநியாயச்சட்டம் (equity) இடங்கொடுக்கமாட்டாது. (ஸ்பெஸிவிக் ரிலீவ் சட்டத்தைப்பற்றி டாக்டர் பனர்ஜியுடைய டாகுர் பிரசங்கங்கள்342வது பக்கத்தைப் பார்க்க) வாதி நீண்டகாலந் தாமதித்திருப்பதுடன் கெட்ட எண்ணத்துடனுமிருந்திருக்கிறான். இத்தியாதி காரணங்களினால் வாதிக்கு ஸ்பெஸிவிக் பெர்வார்மென்ஸ்படி டிக்கிரி செய்ய எவ்வித நியாயமுமில்லை. கீழ்க்கோர்ட்டார்கள் வாதியின் வழக்கைத்தள்ளுபடி செய்தது மெத்த நியாயமானது. இந்த அப்பீல் செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

21 Indian Cases 85.

பம்பாய் ஹைகோர்ட்.

1912 ௵த்திய 2 வது அப்பீல் நம்பர் 581.

தீர்ப்பு 29—7—13.

ஜட்ஜிகள்.
ஜஸ்டிஸ் மிஸ்டர் பாச்சலர் அவர்கள்
ஜஸ்டிஸ் மிஸ்டர் ஷா அவர்கள்

ராமகிருஷ்ண கோபால் ஜோஷி
அ வாதி
V
சிம்ஞஜி வியங்கடேஷ்
அ பிரதிவாதி

14. [ஹிந்து லா]

தகப்பனுடைய சகோதரி பிள்ளையை ஸ்வீகாரஞ்செய்துகொள்ளுவது செல்லத்தக்கதென்பது.

உபயகக்ஷிக்காரர்களும் பிராமணர்கள். கோபால் என்பவரின் விதந்து அந்தக்கோபாலுடைய தகப்பனுக்கு சகோதரியின்பிள்ளை யொருவனை ஸ்வீகாரஞ் செய்துகொண்டாள். அவன் தான்

கோபால் ஜோஷி என்பவரின் ஸ்வீகார குமாரன் என்ற பாத்தியம் ஸ்தாபிக்கப்பட்டு மூர்லிதார் முதலிய ஸ்வாமிகளின் பூஜை முறை பாத்தியமும் அதற்கேற்பட்ட வரும்படிகளுங் கிடைக்க வேண்டுமென்றும், இந்தப் பூஜை முறையில் பிரதிவாதிகள் பிரவேசிக்காமல் அவர்களுக்கு சாஸ்வத இன்ஜங்ஷன் கொடுபடவேண்டியதென்றும் வாதிக்குக் கிடைக்கக்கூடிய வரும்படிகளை பிரதிவாதிகள் அடைந்து வருவதால் அந்த வரும்படிகள் கிடைக்க வேண்டுமென்றும் வழக்கிட்டார்.

ஸ்வீகாரஞ் செய்துகொள்ளப்பட்டதைப்பற்றி யாதொரு ஆக்ஷேபணையுமில்லை. எவனொருவன் ஸ்வீகாரஞ் செய்துகொள்ளுகிறானோ அவன் ஸ்வீகாரப்பிள்ளையின் தாயாரைச் சட்டப்படி விவாகஞ்செய்து கொள்ளும்படியான முறையில்லாத பட்சத்தில் அந்த ஸ்வீகாரம் செல்லத்தக்கதில்லையென ஹிந்துலாவில் சொல்லப்பட்டிருப்பதால் வாதியின் ஸ்வீகாரம் செல்லுபடியற்றதென்றும் கோபால் வாதியின் தாயாரை அவள் கன்னிகையாகவிருந்தபோது விவாகஞ்செய்து கொள்ளும்படியான முறையில்லையென்றும் அதனால் வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றும் பிரதிவாதி கக்ஷியாடினார். பிரதிவாதிசொன்ன கக்ஷி சரியானதென்று கீழ்க்கோர்ட்டார்களிருவரும் வாதியின் வழக்கைத்தள்ளுபடி செய்துவிட்டார்கள். அதன் பேரில் வாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்கிறார்.

தீர்ப்பு:—இவ்வித கேஸ் விஷயமாக இந்தக் கோர்ட்டாரால் இரண்டு தீர்மானங்களேற்பட்டிருக்கின்றன. (இ-லா-ரி 32 பம்பாய் 619, 16 இந்தியன் கேஸஸ் 180) இந்தக்கேஸ்களின் ஆதாரங்கள் என்னவென்றால் ஸ்வீகாரஞ்செய்து கொள்ளுகிறவன், ஸ்வீகாரமெடுத்துக்கொள்ளும் பிள்ளையின் தாயாரை விவாகஞ்செய்து கொள்ள முறையில்லையோ, அந்த ஸ்வீகாரம் செல்லத்தக்கதில்லையென்று சொல்வது பெண்ணின்மகன், சகோதரிமகன், தாயாருடைய சகோதரிமகன் இவர்கள் வரையில் வரையறுக்கப்படவேண்டியதேயன்றி மற்றவைகளுக்கல்லவென்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தத் தீர்மானங்களை அனுசரிக்க நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம். ஆகையால் கீழ்க்கோர்ட்டு டிக்கிரிகளை ரத்து செய்கிறோம். வாதியை ஸ்வீகாரஞ்செய்து கொண்டது சட்டப்படி செல்லுபடியுள்ளதென்பதை ஸ்தாபித்து வாதியின் பிராதிற்

கேட்டபடி பூஜைமுறைப் பாத்தியமும், அந்தப் பூஜை வரும்படிகளுங் கிடைக்கக்கூடியதென்றுந் தீர்மானிப்பதுமன்றி வாதியின் பூஜைமுறையில் பிரதிவாதி பிரவேசிக்காமல் அவருக்குச் சாஸ்வத இன்ஜெங்ஷன் கொடுக்கிறோம். வாதிக்குக் கிடைக்கக்கூடிய வரும்படிகளின்னவையென்று நிறைவேறு நடவடிக்கைகளில் தீர்மானிக்கப்பட வேண்டும். எல்லாக் கோர்ட்டுச் செலவு தொகைகளும் வாதிக்குப் பிரதிவாதியால் கொடுக்கப்படவேண்டும்.

21 Indian Cases 34.

அலகபாத் ஹைகோர்ட்.

1912 ஹூத்திய 2-வது அப்பீல் நம்பர் 1322.

தீர்ப்பு 6—8—13.

ஜட்ஜிகள்

சீவ் ஜஸ்டிஸ் ஸர். ஹென்ரி ரிச்சேர்ட்ஸ். Kt. அவர்கள் மிஸ்டர் ஜஸ்டிஸ் பிக்காட் அவர்கள்	குண்டன் லால். அ. வாதி V ஷங்கர் லால் ஞ. பிரதிவாதிகள்

15. [இந்து லா.]

அவிபக்த குடும்பத்தில் ஒரு ஸ்தாவர சொத்து ஒருவர் பேரால் வாங்கப்பட்டிருக்குங் காரணத்தினால் அது அவருக்குத் தனிமையான சொத்தென்று சொல்லப்படக் கூடாதென்பதும், அது தனிமையான சொத்தென்று சொல்பவன் அந்த விஷயத்தை ருஜூப்பிக்கக் கடமைப்பட்டவனென்பதும்.

ஜவாஹிர்லால் என்பவருக்கு மூன்றுபிள்ளைகள்: மங்கல்சன், மோஹன்லால், பூபத்லால். மங்கல்சன் முதலில் இறந்தார். அவர் மகன் குண்டன்லால் இந்த நம்பர் வாதி; மோஹன்லால் பிறகு இறந்தார்; அதன் பிறகு பூபத் இறந்தார். மோஹன்லால், பூபத் இந்த இருவருக்கும் சந்ததி கிடையாது. இரண்டு வீடுகள் மோஹன்லால் பேருக்கு வாங்கப்பட்டன. மூன்றாவது வீடு வாதி குண்டன்லால் பெயரால் 1890 ஹூத்தில் வாங்கப்பட்டது. இந்த மோஹன்லால் பெயரால் வாங்கப்பட்ட வீடொன்று வாதியின் மகன் மக்கான்லால் பேரிலேற்பட்ட டிக்கிரிக் கடனுக்காக அது குடும்பப் பொதுச்சொத்தென்பதாக ஜப்தி செய்யப்பட்டது. அதனால் வாதி அந்த ஜப்தி சொத்து தனக்கு ஏகதேசத்தில்

சொந்தமானதென்றும் தன் மகன் மக்கான்லாலுக்கு அதில் எவ்வித பாத்தியமு மில்லையென்றும், அது மோகன்லாலுடைய சுயார்ஜித சொத்தென்றும் அது குடும்பப் பொதுச் சொத்தல்லவென்றும், அது தனக்கு அனந்தர வார்சுக் கிரமத்தில் கிடைத்ததென்றும் அதனால் தன் மகனுடைய கடனுக்கு அது கட்டுப்படத் தக்கதல்லவென்றும், பாத்தியஸ்தாபன வழக்குக் கொண்டு வந்தார்.

ஜவாகிர்லாலுக்கு யாதொரு பிதிரார்ஜித சொத்து மிருந்ததில்லையென்றும், அவருடைய சொத்துக்களை அவருடைய பிள்ளைகள் சர்வைவர்ஷிப் மூலமாக அடையவில்லையென்றும், மங்கல்சன், மோஹன்லால், பூபத், வாதி குண்டன்லால் இவர்கள் அவிபக்தர்களாகவே யிருந்துவந்ததாகவும், அதனால் தாவா சொத்தும் அவிபக்த குடும்பப் பொதுச் சொத்தென்றும், அதனால் வாதியுடைய மகன்பேரி லேற்பட்ட டிக்கிரிக்குத் தாவா சொத்து கட்டுப்படக் கூடியதென்றும், வாதியின் வழக்கை கீழ்க்கோர்ட்டார் தள்ளுபடி செய்துவிட்டார்கள். இவ்விதந் தள்ளியது சட்ட விரோதமானதென்று வாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்கிறார்.

தீர்ப்பு:—மங்கல்சன், மோஹன்லால், பூபத், குண்டன்லால் இவர்கள் அவிபக்தர்களா யிருந்த காரணத்தைக் கொண்டு தாவா சொத்தும் அவிபக்த குடும்பப் பொது சொத்தென் றெண்ணக் கூடாது. மோஹன்லால் பெயருக்கு வாங்கிய சொத்து குடும்பப் பொதுச் சொத்தென்று ஊகிப்பது சரியல்லவென்பது தான் அப்பீல் வாதியின் முக்கிய கக்ஷி. இவர் இ. லா. ரி. 32 சென்னை 88, 33 அலகபாத் 677 முதலிய தீர்மானங்களை தன் கக்ஷிக்கு ஆதாரமாக எடுத்துக் காட்டுகிறார். மேலேசொன்ன நால்வரும் அவிபக்தர்களா யிருந்ததைக்கொண்டு மோகன்லால் பெயரால் வாங்கப்பட்ட சொத்தும் அவிபக்த குடும்பப் பொதுச் சொத்தென்றே ஊகிக்கப்பட வேண்டுமென்பது பிரதிவாதியின் கக்ஷி.

பல பாகஸ்தர்களுள்ள ஒரு அவிபக்த குடும்பத்தில் சொத்துக்கள் எல்லோர் பெயராலும் வாங்கப்படுவதில்லை யென்பது சாதாரண அறிவினர்க்கும் விளங்கும். எல்லா நிலங்களும் குடும்ப மானேஜர் பெயரால் வாங்கப்படுகிறதென்ற வழக்கமுமில்லை. தாவா சொத்து மோகன்லாலுக்குத் தனிமையான சொத்தென்

பதை ஸ்தாபிக்கவேண்டியதற்காக இந்த வழக்குக் கொண்டுவந்திருக்கிறார். தாவா சொத்து மோகன்லாலுடைய சொந்த ஐவேஜியி னின்றும் வாங்கப்பட்டதென்பதை வாதி தான் ருஜூப்பிக்கக் கடமைப்பட்டவர். அவ்வித ருஜூ யாதொன்றுமில்லை. அல்லது அச்சொத்தை மோகன்லால் தனிமையில் அனுபவித்து வந்தாரென்பதற்கும் ருஜூவில்லை. தாவாவிற் கண்ட வீடுகள் 50 வருஷங்கள் 70 வருஷங்களுக்குமுற்பட்டு வாங்கப்பட்டன. அவை மோகன்லாலுக்குத் தனிமையான சொத்தென்ற பாத்தியங் கொண்டாடி யிருப்பதாகவுந் தெரியவில்லை. ஆகையால் இந்த அப்பீலைச் செலவுடன் தள்ளுபடி செய்கிறோம்.

21 Indian cases 13.

அலகபாத் ஹைகோர்ட்.

1911 வருஷத்திய முதலாவது அப்பீல் நம்பர் 255.

தீர்ப்பு 28—7—13.

ஜட்ஜிகள்
சீவ் ஜஸ்டிஸ் ஸர் ஹென்ரி ரிச்சேர்ட்ஸ். Kt. அவர்கள்
மிஸ்டர் ஜஸ்டிஸ் டட்பால் அவர்கள்

K. S. வாகிட் அலிகான் (பிரதிவாதி) அ வாதி
V
டோரிராம் ஷூ (வாதிகள்) அ பிரதிவாதிகள்

16. [இந்து லா.]

ஒரு விதந்து தன் புருஷனுடைய சொத்தின் வரும்படியைக் கொண்டு ஸ்தாவர சொத்துக்கள் வாங்கினால் அதை யவளிஷ்டப்படி விநியோகஞ் செய்துவிடலா மென்பது.

தான்சண்ட்என்ற இந்து இறந்தான். அவனுக்கு டான்கன்வார் லாச்மன்கன்வார் என்ற இருவர் விதந்துக ளிருந்தார்கள். அவர்களில் மூத்த விதந்து இறந்துவிட்டாள். சின்னவள் தன் புருஷன் சொத்தின் வரும்படியைக் கொண்டு தன் புருஷனிறந்த வெகு காலங் கிரமித்து ஒரு ஸ்தாபர சொத்தை ஒரு பிராமணனிடமிருந்து கிரயத்துக்கு வாங்கினாள். இந்தச்சொத்தை ஒருவருக்கு பெந்தகமும் வைத்தாள். பிறகு இதைத் தனது சகோதரனுக்கு இனாம் பத்திரம் மூலமாக 888 வருஷத்தில் கொடுத்துவிட்டாள். சொத்து ஸ்வாதீனம் இவளுடைய சகோதரனுக்கு கிடைத்த பிறகு அது அவர் குமாரர்களுக்கு வார்சுக் கிரமத்தில் கிடைத்துவிட்டது. இச்

சொத்து பெந்தகக் கடனுக்காகவும் வேறு கடன்களுக்காகவும் விற்கப்பட்டு பிரதிவாதிக்குக் கிடைத்துவிட்டது. இந்த விதந்து 1905 ௵ மார்ச்சு மாதம் 18௳ இறந்தாள். இவளுடைய அனந்தரவார்சுகள் இச்சொத்தும் தங்களுக்குக் கிடைக்க வேண்டுமென 1908 ௵ ஆகஸ்டு மாதம் 6௳ வழக்கிட்டார்கள்.

கீழ்கோர்ட்டார் வாதிகளுக்கு அனுகூலமாகத் தீர்ப்புசெய்து விட்டதின்பேரில் பிரதிவாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்கிறார்.

தீர்ப்பு:—தாவா சொத்து விதந்து வசமிருந்த அவள் புருஷனுடைய சொத்தின் வரும்படியைக்கொண்டு வாங்கப்பட்டதென்பதற்குச் சந்தேகமில்லை. இது புருஷன் சொத்துடன் சேர்க்கப்பட வேண்டுமென்ற எண்ணத்துடன் வாங்கப்பட்டாலல்லது இது புருஷன் சொத்தாகமாட்டாது. இந்தச் சொத்து வாங்கிய சொற்பகாலத்துக்குள்ளே இது இவளுடைய சொந்த சொத்தாகவே அதையவள் பெந்தகம் வைத்துக் கடன் வாங்கினாள். அதை பிறகு தன் சகோதரனுக்கு இனாமாகக் கொடுத்துவிட்டாள். இதனால் இது அவளுடைய சொந்தச் சொத்தேயன்றி அவள் புருஷனுடைய சொத்தாகமாட்டாது. ஆகையால் பிரதிவாதியின் அப்பீலை யங்கீகரித்து வாதிகளின் வழக்கைச் செலவுடன் தள்ளுபடி செய்கிறோம்.

21 Indian Cases 91.

அலகபாத் ஹைகோர்ட்.

1913 வருஷத்திய லெட்டர்ஸ் பேடெண்டு

அப்பீல் நம்பர் 46.

தீர்ப்பு 11—7—13.

ஜட்ஜிகள். சீவ் ஜஸ்டிஸ் ஸர் ஹென்ரி ரிச் சேர்ட்ஸ் துரையவர்கள் ஜஸ்டிஸ் சர் P. C. பானர்ஜி [அவர்கள்.	மகாதியோசிங் ஆ. அ வாதிகள். V ஷியே காரான்சிங் ஆ. அ. பிரதிவாதிகள்.

17. [இந்துலா.]

பெண் தன் தகப்பன் சொத்து தனக்குக் கிடைக்க வேண்டுமென வழக்கிட்டு டிக்கிரி பெற்றபின் இறந்து விட்டால் அந்த டிக்ரியை அவள் பிள்ளைகள் நிறை வேற்றிச் சொத்தை ஸ்வாதீனப்படுத்திக் கொள்ளலாமென்பது.

லக்பதி என்ற ஒருஸ்திரீ தன் தகப்பனுடைய சொத்துக்களைப்பிரதிவாதிகள் வசப்படுத்திக் கொண்டிருப்பதாகவும், அவைகள் தனக்கு ஸ்வாதீனமாக வேண்டுமென்றும், வழக்கிட்டு டிக்கிரி பெற்றாள். அந்த டிக்கிரியின் படி சொத்து ஸ்வாதீனப்படுத்திக் கொள்ளுவதற்கு முந்தியே அவள் இறந்து விட்டாள். இதனால் இவளுடைய பிள்ளைகள் அந்தடிக்கிரியை தாங்கள் நிறைவேற்ற வேண்டுமென மனுக்கொடுத்தார்கள். முதல் கோர்ட்டார் இவர்களின் மனுவைத்தள்ளுபடி செய்து விட்டார்கள். இதைப்பற்றி அப்பீல் செய்ததில் கீழ்கோர்ட்டார் செய்த வுத்திரவு ரத்துசெய்யப்பட்டு இவர்கள் அந்த டிக்ரியை நிறைவேற்றிக் கொள்ளும்படியுத்திரவு செய்துவிட்டார்கள். இந்த வுத்திரவு சட்டவிரோதமானதென்று பிரதிவாதி ஹைகோட்டில் அப்பீல் செய்தான். அந்தக் கோர்ட்டார் முதல் கோர்ட்டார் சொன்னதேசரியென்றும் இந்தப் பிள்ளைகள் அந்த டிக்கிரியை நிறைவேற்ற பாத்தியமில்லையென்றுந் தீர்ப்பு செய்துவிட்டார்கள். இதன் பேரில் லெட்டர்ஸ் பேடெண்டு ஆக்ட்டுப்படி அப்பீல் செய்யப்பட்டது.

தீர்ப்பு:—கீழ் அப்பீல் கோர்ட்டார் செய்த தீர்மானம் சரியானதென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். லக்பதி தன் தகப்பன் சொத்துக்கு வார்சாக அவர் சொத்துத் தனக்குக் கிடைக்க வேண்டுமென வழக்கிட்டாள். அவளுக்குக் கிடைத்த டிக்கிரியை அவளுடைய வார்சுகள் நிறைவேற்ற பாத்திய முடையவர்கள். இல்லாவிட்டால் இந்த அனந்தரவார்சுகள் மறுபடியும் அதே பேர்வழிகள் பேரில் அதே விஷயங்களைப் பற்றி வழக்கிடவேண்டியதாக விருக்கும். ஒரு விதந்து அவள் புருஷனுடைய சொத்துக்கு பாத்தியதை யுடையவளென பிரிவிக்கவுன்ஸல் தீர்ப்பு ஏற்பட்டிருக்கிறது. இறந்த புருஷன் சொத்தை விதந்து அடைவதற்கும் இறந்த தகப்பன் சொத்தைப் பெண் அடைவதற்கும் எவ்வித வித்தியாசங்களு மிருப்பதாகத் தெரியவில்லை. ஆகையால் இந்த அப்பீலை யங்கீகரித்து இந்தக் கோர்ட்டு ஜட்ஜியின் தீர்ப்பை ரத்து செய்து கீழ் அப்பீல் கோர்ட்டாருடைய டிக்கிரியை யுறுதிசெய்கிறோம்.

21 Indian Cases 464.

பம்பாய் ஹைகோர்ட்.

1912 ஞ்த்திய 2 வது அப்பீல் நம்பர் 808.

தீர்ப்பு 25—7—13.

ஜட்ஜிகள். மிஸ்டர் ஜஸ்டிஸ் பாச்சலர் துரையவர்கள் மிஸ்டர் ஜஸ்டிஸ் ஷாகாஅவர்கள்	சுப்பராய் மங்கேஷ சந்திரவர்க்கர் அ. வாதி, V மகாதேவி மஞ்சி பட்டா

18. [இந்துலா.]

அவிபக்த இந்து பாகஸ்தர்களில் ஒருவனுடைய கடனுக்காக குடும்பப் பொதுச்சொத்தில் அவனுக்குள்ள பாத்தியம்அக்கடனுக்கு டிக்கிரியேற்படுவதற்கு முன்னமே ஜப்திசெய்யப்பட்டு அதுவிஷயமாக மேல் நடவடிக்கை நடத்தப் படுவதற்குமுந்தியே அந்த டிக்கிரிகடன்காரன் இறந்து விடும் பட்சத்தில் அச்சொத்து பாத்தியம் சர்வைவர்ஷிப் (Survivorship) படி அவிபக்த பாகஸ்தர்களுக்குக் கிடைக்குமேயன்றி அந்த டிக்கிரிதாரனுக்குக் கிடைக்க மாட்டாதேன்பது.

அப்பீல் வாதி பெல்லபட்டா என்ற ஒருவன் பேரில்1906ஞு நவம்பர் மாதம் 1உ ஒரு வெண்ணலை டிக்கிரி பெற்றூர். இந்த டிக்கிரி பெறுவதற்கு முந்தியே 1906 வருஷம் அக்டோபர் மாதத்தில் இந்த பெல்லபட்டாவின் பாக சொத்து உடன் ஜப்தி செய்யப்பட்டிருந்தது 1907-வருஷத்தில் இந்த பெல்லபட்டா இறந்துவிட்டார். ஜப்தி செய்யப்பட்ட சொத்து அவிபக்த குடும்பப் பொதுச்சொத்து; அப்பீல் தாரன் 1909, 1911 இந்த வருடங்களுக்கு முந்தி நிறைவேறு மனுக்கொடுக்கவில்லை. இந்த பெல்லபட்டாவின் அவிபக்த பாகஸ்தர்கள் அந்தச் சொத்தின் பாத்தியம் சர்வைவர் ஷிப் பின் படி தங்களுக்குக் கிடைத்து விட்டதாகவும் அப்பீல்தாரன் நிறைவேற்று மனுத்தள்ளுபடிசெய்யப்படவேண்டுமென்றும், ஆக்ஷேபித்தார்கள். கீழ்க்கோர்ட்டார்களிருவரும் பிரதிவாதிகள் கக்ஷி நியாயமானதென்று தீர்ப்பு செய்து விட்டதின் பேரில் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்கிறூர்.

தீர்ப்பு:—பெல்லபட்டா இறப்பதற்கு முந்தி அப்பீல் தாரன் தன்னுடைய டிக்ரியை நிறைவேற்றி தாவா சொத்தின் பேரில் எவ்வித பொறுப்பும் (charge) ஏற்படுத்திக்கொள்ள வில்லை; யாதொரு நிறைவேற்று மனுவுங்கொடுக்க வேயில்லை. உடன் ஜப்தி

செய்ததானது முன்னெச்சரிக்கையே யன்றி அதுசொத்தில்பொறுப்பாகமாட்டாது. இவ்வித வுடன் ஜப்திகள் பராதீனங்களைத் தடுப்பதற்கு மட்டில் ஏற்பட்டவையென இ. லா. ரி. 11 அலகபாத் 302 தீர்ப்பிற் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த உடன்ஜப்தி பிரதிவாதிகளின் சர்வைவர்ஷிப் பாத்தியதையை எந்த விதத்திலுந் தடுக்க மாட்டாது (இ. லா. ரி. 17 சென்னை 144 தீர்மானத்தைப் பார்க்க) பெல்ல பட்டா இறந்த வெகுகாலத்துக்குப் பிறகு அப்பீல் தாரன் நிறைவேற்று மனு 1909 வருஷத்தில் கொடுத்திருக்கிறூர்.

தீர்ப்புக்கு முன் ஜப்தி செய்யப்படுவதானது நிறைவேறு நடவடிக்கைகளில் ஜப்தி செய்வது போன்றதாகுமென்றும், அது செல்லத்தக்கபொறுப்பாகுமென்றும் அந்த ஜப்திச்சொத்துப்பாத்தியம் சர்வைவர்ஷிப் பாத்தியப்படி எவருக்குங் கிடைக்கமாட்டாதென்றும், இ. லா. ரி. 26 கல்கத்தா 531. 534, இ. [illegible] ரி. 4 சென்னை 302 இந்த தீர்மானங்கள் தன்னுடைய கக்ஷிக்குஆதாரமாகக்காட்டி அப்பீல் வாதி வக்கீல் வாதாடுகிறூர். இவர் சொல்லும் தீர்மானங்களுக்கு மாறுக இப்பால் சில தீர்மானங்கள் ஏற்பட்டுவிட்டன. (இ. லா. ரி. (30)சென்னை 413, 17 சென்னை லாஜர்னல் 334; இ. லா. ரி 32 சென்னை. 429. 19 சென்னை லா ஜர்னல் 401) இவ்விதம் உடன் ஜப்திசெய்யப்பட்ட சொத்துக்களை டிக்கிரி கடன்காரன்தான் நேரில் வேறே எவருக்கும் பராதீனஞ் செய்ய பாத்தியமில்லை என்ற ஒரு காரணத்துக்கு மட்டில் தீர்ப்புக்குமுன் ஜப்திசெய்வதும், டிக்கிரிக்குப்பிறகு ஜப்தி செய்வதும் ஒன்றுதானென்று மேலே சொன்ன இ.லா.ரி 26 கல்கத்தா 531 தீர்ப்பில் சொல்லப்பட்டிருக்கிறதேயன்றி இதைப் போன்ற கேஸ்களுக்கல்ல. இந்தக்கேசில் டிக்கிரிக் கடன்காரனுல் எவ்வித பராதீனமுஞ் செய்யப்படவில்லை. ஆகையால் அப்பீலைத் தள்ளுபடி செய்கிறோம். கீழ்க்கோர்ட்டார் டிக்கிரி யுறுதி செய்யப்பட்டது.

21 Indian Cases 330.

பிரிவி கவுன்ஸில்.

சென்னை ஹைகோர்ட்டு தீர்ப்பின் பேரில் அப்பீல்.

தீர்ப்பு 7—11—12.

ஜட்ஜிகள்	
லார்ட் மக்னூடன் துரையவர்கள்	P. V. சுப்பிரமணிய பிள்ளை
லார்ட் மவுல்டன் துரையவர்கள்	V
ஸர் ஜான் எட்ஜ் அவர்கள்	
மிஸ்டர் ஆமீர் ஆலி யவர்கள்	P. V. முருகேசபிள்ளை ஆ

2. [இந்து உயில் ஆக்ட்.]

ஸக்ஸேஷ ஞக்ட் 101, 102 சேக்ஷன்களுக்கு விரோதமாகச் செய்யப்படும் உயில் செல்லாதென்பதும், ஒரு இந்து தன்னுடைய சொத்துக்களை ஐந்து பாகங்களாகப்பிரித்துத்தன்பிள்ளைகளில் புத்திரரில்லாதவர்களும், புத்திரர்களிருந்தால் பேரப்பிள்ளைகளும், தன்னுடைய சொத்துக்களை யடைகிறதென்று உயில் எழுதிவைத்தால் அது செல்லாதென்பதும்.

பரசுராம வெங்கடாசல மென்ற ஒருவனுக்கு ஏராளமான சொத்துக்களிருந்தன. அவன் தன்னுடைய சொத்துக்களைத் தனது மூத்த குமாரன் பரிபாலித்து வந்து தன்னுடைய பேரப்பிள்ளைகளுக்குப் பங்கிட்டுக் கொடுக்க வேண்டுமென உயில் எழுதிவைத்துவிட்டு 1887 ஹு த்தில் இறந்தான். 1889 ஹு ஆகஸ்டு மாதம் 31வ அப்பீல் வாதி பொரோபேட் பெற்றுர். மற்றப் பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் அப்பீல் வாதி வரவு செலவுக்கு கணக்கு ஒப்பிவிக்கவேண்டியதென்றும், ரெஸிவர் நியமித்து உயிலிற்கண்டபடி சொத்துக்களைப் பிரிவினைசெய்து கொடுக்கவேண்டுமென்றும், 1905 ஹு த்தில் வழக்கிட்டார்கள். விவாத சொத்துக்கள் பனிக்கட்டிசாலை, ஊறுகாய் முதலியனவுள்ள சாலை (Condiment factory) என்றும், அவைகளைத் தான் மிகுந்த விருத்திக்குக் கொண்டிருப்பதாகவும், அவைகள் பிரிக்கப்படக் கூடாதென்றும், ரெஸீவர் நியமிக்கப்படக்கூடாதென்றும், அப்பீல் வாதி கக்ஷியாடினுர். வாதிகள் அவிபக்த குடும்பஸ்தர்களாகையால் வாதிகள் அட்மினிஸ்டிரேஷன் வழக்குக் கொண்டுவர நியாயமில்லையென்றும், உயில்படிக்கு அவர்களுக்கு அதிகாரமில்லையென்றும், மிஸ்டர் ஜஸ்டிஸ் போடாம்துரையவர்கள் வாதிகளின்பிராதைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். இதுவிஷயமாக அப்பீல் செய்யப்பட்டதில் சீவ் ஜஸ்டிஸ் ஸர் சார்லஸ் ஒயிட் துரையவர்களும், ஜஸ்டிஸ் சங்கரநாயர் அவர்களும் கீழ்கோர்ட்டு தீர்ப்பைமாற்றி உயில் செல்லுபடியற்றதெனத் தீர்மானித்தார்கள். இந்த உயில் செய்தவருக்கு ஐந்து பிள்ளைகளிருப்பதால், தன்னுடைய சொத்துக்களை ஐந்துபாகமாகப் பிரித்து தன்னுடையபேரப்பிள்ளைகள் பிள்ளையின் பிள்ளைகள் மேஜரான பிறகு அவர்களுக்கும் ஆண் சந்ததியில்லாத பிள்ளைகளுக்கும் பங்கிட்டுக் கொடுக்க வேண்டுமென்றும் உயிலிற் சொல்லப்பட்டிருக்கிறது. இது ஸக்ஸெஷனுக்ட்டு 101, 102 வது செக்ஷன் களுக்கு விரோதமானது; அதனுலிது செல்லத்தக்கதல்ல வென்றும் உயில் செய்யாமலிறந்து போனுல் எவ்விதம்சொத்துக்கள் பிரிக்கப்படவேண்டுமோ அந்தப்படி பிரிக்கப் படவேண்டியதென்றும் அப்பீல் கோர்ட்டார் தீர்மானித்து விட்டார்கள். இந்தத் தீர்ப்பு சரியானதல்ல வென்று பிரதிவாதி பிரிவி கவுன்ஸலில் அப்பீல்செய்கிருர்.

உயிலின் ஷரதுக்களுக்கு சரியான அர்த்தஞ் செய்யப்படவில்லை யென்றும், ஸக்ஸெஷனுக்ட்டுப்படி கிரமமான அதிகாரங் கொடுக்கப்பட்டிருக் கிறதென்றும், 101-102 வது செக்ஷன்கள் தாவாகேசுக்கு ஒற்றுமையானதல்லவென்றும், அப்பீல் பிரதிவாதிகளுக்கு பாத்திய முண்டாகவில்லை யென்றும், அவர்களுக்கு வியாஜ்ஜிய மூல மேற்படவில்லை யென்றும், அப்பீல் வாதியின் கவுன்ஸல்கள் வாதித்தார்கள்.

தாவா உயிலானது இந்து லாவுக்கும் ஸக்ஸெஷனுக்ட் 101-102 வது செக்ஷன்களுக்கும் விரோதமானதென்றும், உயிலிற்கண்ட விஷயங்கள் அர்த்தம் விளங்காதனவாகவும், நிச்சயமில்லாதனவாகவு மிருப்பதாகவும் உயிலில்லாததுபோல வைத்துக்கொண்டு வாரிசுகளுக்குச் சொத்துக்கள் பிரித்துக் கொடுபட வேண்டுமென்றும் அப்பீல் பிரதிவாதிகளின் கவுன்ஸல் கவுன்ஸில் சொன்னுர்கள்.

தீர்ப்பு:— இந்த அப்பீல் தள்ளுபடி செய்யப்படவேண்டுமென மாக்ஷிமைதங்கிய சக்ரவர்த்தியவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

21 Indian Cases 282

கல்கத்தா ஹைகோர்ட்.

1909 ஷுத்திய 2 வது அப்பீல் நம்பர் 2802.

தீர்ப்பு 10—2—13.

ஜட்ஜிகள்	
மிஸ்டர் ஜஸ்டிஸ் காக்ஸ் அவர்கள்	பேகார் புக்டியார்பூர் லயிட் ரயில்வே கம்பெனி மானேஜிங் ஏஜண்டுகள் மார்டின் கம்பெனியார் (பிரதிவாதிகள்) அ-வாதிகள்
மிஸ்டர் ஜஸ்டிஸ் N-R சட்டர்ஜியா அவர்கள்	V
	ஜான்டு மாடன் வார்சு எட்வார் மாடன்

10. [ஸிவில் புரோஸீஜர் கோடு.]

ஒருவர் நிலத்திலுள்ள ஜலம் மற்றவர் நிலத்தில் வடியவேண்டிய பாத்தியமும், அவ்விதம் வடிவதைத் தடை செய்வதினாலுண்டாகிய நஷ்டத்துக்கு வழக்கிடுதலும்.

வாதி தன்னுடைய நிலம் மேடானதென்றும், தன் நிலத்தின் ஜலம் கிழக்கே வடிவது வழக்கமானதென்றும், டிஸ்டிரிக்ட் போர்டார் 25 வருடங்களுக்குமுன்பு தன் நிலத்துக்குக் கிழக்கே ரஸ்தா போட்டதாகவும், அப்போது தன்னுடையவும் தன்னுடைய அயலாருடையவும் நிலத்தின் ஜலம் வடியத்தக்கதாக அந்த ரஸ்தாவில் மதகொன்று கட்டியிருப்பதாகவும், இந்த மதகைப் பிரதிவாதிகள் அடைத்துவிட்டதாகவும் 1907 ஷு த்தில் வெள்ளம்வந்ததாகவும், அந்த ஜலம் ஷை மதகு வழியாக போகமுடியாததால் வாதியினுடைய வீடும் மகசூல்களும் நஷ்டமாகப் போய்விட்டதாகவும், வேறு மகசூல் உற்பத்தி செய்ய முடியாமற்போய்விட்டதென்றும், அதனாலுண்டாகிய நஷ்டம் பிரதிவாதிகளிடமிருந்து கிடைக்கவேண்டுமென்றும் வழக்கிட்டார். தாவாவிற்கண்ட மதகு திறந்திருந்தால் வாதிக்கு நேரிட்ட நஷ்டங்களைத் தவிர்த்திருக்க முடியாதென்றும், ஆனால் வாதி மறுபோகம் மகசூலுற்பத்தி செய்திருக்கலாமென்றும், வாதிக்குப் பிரதிவாதிகள் ரூ 50 நஷ்டங்கொடுக்கவேண்டியதென்றும், தீர்ப்புச் செய்தார்கள்.

வாதியின் நிலத்து ஜலம் வடிவதற்காக வசதி பாத்தியதையைப்பற்றி மட்டில் வாதி வழக்கிடக்கூடுமேயன்றி மற்றவைகளைப் பற்றி வழக்கிட நியாயமில்லையென்றும், தாவாவிற்கண்ட மதகு மூடப்பட்டு 5 வருடங்களுக்கு மேற்பட்டுவிட்டதால் வாதியின் தாவா காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுப் போய்விட்டதாகவும், பிரதிவாதிகள் அப்பீல் செய்கிறார்கள்.

தீர்ப்பு:—மிகுதியாகவுள்ள ஜலம் வடிவதற்காக டிஸ்டிரிக்ட் போர்டார் மதகு கட்டியதாகக் கீழ்கோர்ட்டார் கண்டுபிடித்திருக்கிறார்கள். இது விஷயமாக முனிசிபல் சேர்மன் முதலிய தகுந்த சாக்ஷிகள் ருஜுச் சொல்லியிருக்கிறார்கள். இந்தச் சாக்ஷியங்களை மறுக்கப் பிரதிவாதிகள் திறப்பில் எவ்வித ருஜுவுமில்லை. பிரதிவாதிகளின் சாக்ஷியொருவர் இந்த மதகு வெள்ள ஜலத்துக்காக ஏற்பட்டதல்லவெனச் சொல்லியிருக்கிறார். கீழ்க்கோர்ட்டார்மாறுதலான அபிப்பிராயப்பட்டுத் தீர்மானஞ் செய்வது சட்ட விரோதமானதாகமாட்டாது. (4 கல்கத்தா லா ஜர்னல் 178). வாதி தன்னிலத்தின் மிகுதி ஜலத்தை கீழ்பாகத்தில் வடியவிட சுபாவமான பாத்தியமுடையவராக விருக்கலாம். அல்லது டிஸ்டிரிக்ட் போர்டாரிடமிருந்து வசதி பாத்தியம் (Easement) அடைந்திருக்கலாம். முதலிற் சொன்ன விஷயத்துக்கு நஷ்டமுண்டான தேதி முதல் வியாஜ்ஜிய மூலம் (27. L. J. 2. B 378) இதற்கு 102 வது செக்ஷன்படி அப்பீல் செய்யலாமென்பது சந்தேகாஸ்பதமாகவிருக்கிறது. இரண்டாவது விஷயத்துக்குக்கூட லிமிடேஷனில்லை. (இ. லா. ரி. 6 கல்கத்தா 394).

டிஸ்டிரிக்ட் போர்டார் பள்ளங்களையும் மதகுகளையும் சரியான ஸ்திதியில் வைத்துக்கொள்ளவில்லை. அதனால் வாதிக்குநஷ்டமுண்டாய்விட்டதாகப் பிரதிவாதிகளின் வக்கீல் சொல்லுகிறார். இதுவிஷயமாக கீழ்கோர்ட்டார் தீர்மானத்தில்யாதொன்றுமில்லை. பிரதிவாதிகள் தாவாவிற்கண்ட மதகையடைத்துவிட்டதாக ருஜுவேற்பட்டிருக்கிறது. அதனால் டிஸ்டிரிக்ட் போர்டார் அதைத் திறந்துவிடவேண்டியது அவசியம் அல்லது அவசியமில்லையென்பதை நாம் கவனிக்கத்தக்கதில்லை. தெய்வ எத்தனமாக வெள்ளம் வந்தது அதற்குத்தாங்கள் பாத்தியப்படவேண்டியதில்லையென்று கக்ஷி சொல்லுகிறார்கள். இந்த வெள்ளம் 6 வாரம் வரையிலிருந்ததாகத் தெரிகிறது. அந்தக்காலத்தில் பிரதிவாதிகள் தாவா மதகைத் திறந்துவிடவேயில்லை. வாதியின் கேசைப்பற்றிய ருஜுக்கள் எவ்விதமிருந்தபோதிலும், அவைகளைப்பற்றி இரண்டாவது அப்பீலில் நாம் கவனிக்கத்தக்கதில்லை. பிரதிவாதிகளின் அப்பீல் செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

21 Indian Cases 893.

பம்பாய் ஹைகோர்ட்.

1912 ௵த்திய 2 வது அப்பீல் நம்பர் 520

தீர்ப்பு 24—6—13

ஜட்ஜிகள்	
மிஸ்டர் ஜஸ்டிஸ் பாச்சலர் அவர்கள்	அசுட் ராமச்சந்திரபாய் ஆ அ வாதிகள்
மிஸ்டர் ஜஸ்டிஸ் ஷா அவர்கள்	V
	நாகப்ப பாப் பல்கயா ஆ பிரதிவாதிகள்

11. [சிவில் புரோஸீஜர் கோடு.]

அப்பீல் சரியான ஸ்டாம்பு ஒட்டப்பட்டுக் காலாவதிக்குள் கொடுக்கப்படாவிட்டாலும், குறைந்த ஸ்டாம்பு செலுத்தக் கோர்ட்டார் கெடுக் கொடுக்கலா மென்பது.

வாதிகள் கீழ்கோர்ட்டு டிக்கிரியைப்பற்றி டிஸ்டிரிக்ட் கோர்ட்டில் அப்பீல் செய்தார்கள். அந்த அப்பீலில் குறைவான ஸ்டாம்பு ஒட்டப்பட்டிருந்ததால் அதைப்பற்றி டிஸ்டிரிக்ட் ஜட்ஜி வக்கீலைக் கேட்டதற்கு அவர் தன்னிடத்தில் தொகையில்லையென்றும் ஒரு கெடுக் கொடுத்தால் பாக்கி ஸ்டாம்பு செலுத்திவிடுவதாகவுஞ் சொன்னார். டிஸ்டிரிக்ட் ஜட்ஜி கெடுக்கொடுக்க இஷ்டமில்லையென்று அப்பீலைத் தள்ளுபடி செய்துவிட்டார். இதன் பேரில் வாதிகள் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்கிறார்கள்.

தீர்ப்பு:—பிராது கொடுபட்டு அது குறைந்த ஸ்டாம்பில் எழுதபட்டிருந்தால் அதை வாபஸ் செய்து, பாக்கி ஸ்டாம்பு கட்டும்படி யுத்திரவு செய்யலாம். இந்தப்படி கெடுவுக்குள் ஸ்டாம்பு கட்டப்படாவிட்டால் அந்தப்பிராதைத் தள்ளுபடி செய்யலாமென சி. பு. கோடு 7 வது ஆர்டர் ரூல் 11 (C)ல் சொல்லப்பட்டிருக்கிறது. பிராது பயில் எவ்விதஞ் செய்யப்பட வேண்டியதோ அது போலவே அப்பீலுஞ் செய்யப்பட வேண்டுமென்று சி. பு. கோடு 102 செக்ஷன் உட்பிரிவு 2ல் சொல்லப்பட்டிருப்பதால் அப்பீலும் பிராதுபோலவே வாபஸ் செய்யப்பட்டிருக்கவேண்டும். சி.பு. கோடு 41 வது ஆர்டர் ரூல் 3 தாவா கேசுக்குப் பொருந்தியதென்று பிரதிவாதிகளின் வக்கீல் கக்ஷி சொல்லுகிறார். அது அப்பீல் எழுதப்படவேண்டிய விதிகள் ஆதாரங்கள் இவைகளைப்பற்றி சொல்லப்பட்டிருக்கின்றனவேயன்றி ஸ்டாம்புக் குறைவைப்பற்றிச் சொன்னதல்ல. ஆகையால் கீழ் அப்பீல் கோர்ட்டார் செய்த

உத்தரவை ரத்து செய்து பாக்கி ஸ்டாம்பை செலுத்த ஒரு கெடுக் கொடுத்து அப்பீலைப் பயிலில் வைத்துக்கொண்டு கேஸை விசாரித்து முடிவு செய்யும்படி தீர்மானிக்கிறோம்.

21 Indian Cases 837

சென்னை ஹைகோர்ட்.

1912 ௵த்திய ரிவிஷன் கேஸ் நம்பர் 19.

தீர்ப்பு 18—7—13.

ஜட்ஜிகள்.	
மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர் அவர்கள்	லாட் கோவிந்ததாஸ் கிருஷ்ணதாஸ். வாதி
மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரநாயர் அவர்கள்	V
	ருக்மணிபாய். பிரதிவாதி.

10 [லிமிட்டேஷனாக்ட்].

கடன் வாங்கியவன் அக்கடன் தொகையில் சிலபாகம் கொடுத்துப் பத்திரத்தில் வரவுவைத்தால் அவன் அந்தவரவை எழுதக் கூடியவனாகவிருந்தால் அவனே அந்தவரவை எழுதிக்கையெழுத்து செய்தாலன்றி கையெழுத்து மட்டுஞ் செய்வது காலாவதி தோஷத்தைத் தடை செய்ய மாட்டாதென்பது.

வாதிக்குப் பிரதிவாதி 1908 வருஷம் ஆகஸ்டு மாதம் 4உ எழுதிக்கொடுத்த பிராமிசரி நோட்டின்படி ரூ 459 கிடைக்க வேண்டுமென்று சென்னை பிரஸிடென்ஸி ஸ்மால்காஸ் கோர்ட்டில் வழக்கிட்டார். இந்த நோட்டின் அசல் தொகைக்குச் சிலபாகம் 1909 வருஷம் ஜூன் மாதம் 18உ வரவு வந்ததால் அந்தவரவை காலாவதி தோஷத்துக்குப் பரிகாரமாக வைத்துக்கொண்டு கோர்ட்டு சாத்தப் பட்டிருந்ததால் திறந்தகோர்ட்டில் 1912 வருஷம் ஜூன்மாதம் 19உ தாவா செய்தார்.

பிரதிவாதி நன்றாக எழுதக்கூடியவனாகையால் அவன் சுயந்தலிகிதமாக தானே நோட்டில் வரவு வைக்காமல் கையெழுத்து மட்டில் செய்திருப்பதால் அந்த வரவு லிமிடேஷன் ஆக்ட் 20-வது செக்ஷன் படி காலாவதி தோஷத்துக்குப் பரிகாரமாகாதென்று பிரதிவாதி கக்ஷியாடினான். இவன்சொன்ன ஆக்ஷேபணை நியாயமானதென்று வாதியின் பிராது தள்ளுபடி செய்யப் பட்டது. இந்த டிக்கிரி ரத்து செய்யப்பட வேண்டுமென்று ஸ்மால் காஸ்

புல்பெஞ்சுக்கு வாதி அப்பீல் செய்துகொண்டார். அந்த புல்பெஞ்சு ஜட்ஜிகளில் இருவர் தாவா நோட்டிற் கண்ட வரவு காலாவதிக்குப் பரிகார மாகுமென்று அபிப்பிராயப் பட்டார்கள். மற்றொருவர் பிரதிவாதி எழுதத் தெரிந்தவ னென்று வாதியே ஒப்புக்கொண்டிருப்பதால் அவன் சுகஸ்த லிகிதமாக வரவு எழுதிக் கையெழுத்து செய்யாதது காலாவதிக்குப் பரிகாரமாகமாட்டாதென அபிப்பிராயப் பட்டார். இதனால் இந்தக் கேஸ் பிரஸிடென்ஸி ஸ்மால்காஸ் கோர்ட்டு ஆகட் 69 வது செக்ஷன் படி ஹைகோர்ட்டுக்கு ரிபரன்ஸ் செய்யப்பட்டது.

இந்த 69 வது செக்ஷன் ஷை ஆகட் 7 வது அத்தியாயப் படி வழக்குகள் அல்லது நடவடிக்கைகளுக்குப் பொருந்தியதேயன்றி புல்பெஞ்சு கோர்ட்டாரால் ரிபரன்ஸ் செய்வதற்கு அருகமான தல்லவென்று வாதி வக்கீல் பிரதம ஆக்ஷேபனை செய்தார். இந்த செக்ஷன்படி அடிக்கடி ஹைகோர்ட்டுக்கு ரிபரன்ஸ் செய்யப்பட்டிருப்பதாக 18 M L J. 480 இ லா ரி 31 சென்னை 490 தீர்மானங்களைப் பிரதிவாதி வக்கீல் எடுத்துக் காட்டினார். இதனால் இந்தப் பிரதம ஆக்ஷேபனை தள்ளுபடி செய்யப்பட்டது

லிமிடேஷனாக்ட்டு 19 வது செக்ஷனுக்கும் 20 வது செக்ஷனுக்கும் மெத்த வித்தியாசங் களிருக்கின்றன வென்றும், 19 வது செக்ஷன்படி கக்ஷிக்காரனாவது அவனுடைய ஏஜண்டாவது தொகையை யொப்புக் கொண்டு கையெழுத்து செய்தால் போதுமானதென்றும், முதல்தொகைக்கு வரவு வைக்கும் பட்சத்தில் கடன் வாங்கியவனால் அந்த வரவு எழுதப்பட்டாலன்றி அந்த வரவு காலாவதி தோஷத்துக்குப் பரிகாரமாக மாட்டாதென்றும் இ. லா. ரி. 24 கல்கத்தா 546 புல்பெஞ்சுத் தீர்ப்பை பிரதிவாதி வக்கீல் தன் கக்ஷிக்கு ஆதாரமாக எடுத்துக் காட்டினார்.

வாதி வக்கீல் இ. லா. ரி. 7 சென்னை 55; 7 சென்னை 76 இந்தத் தீர்மானங்கள் தன் கக்ஷிக்கு ஆதாரமானதென்றும், எவனொருவன் கையெழுத்து செய்கிறானோ அவன் மேலே எழுதிய வாசகத்தை யொப்புக் கொண்டதாகுமென்றும், கையெழுத்துச் செய்தவனே வரவு எழுதவேண்டிய தவசியமில்லை யென்றுஞ் சொல்லுகிறார்.

வாதி வக்கீல் எடுத்துச் சொல்லுந் தீர்மானங்கள் கையெழுத்து செய்யத் தெரியாமல் கீறல் மட்டில் போடத் தெரிந்தவனைப்

பற்றியும் எழுதத் தெரியாமல் கையெழுத்துமட்டில் போடத் தெரிந்தவனைப்பற்றியுஞ் சொல்லப் பட்டதே யன்றி தாவாகேசுக்கு அவைகள் ஒற்றுமையில்லையென பிரதிவாதி வக்கீல் பதிலுத்தாரஞ் சொன்னார்.

தீர்ப்பு:—இந்தக்கேஸில் நாம் பார்க்கவேண்டியது ஒரு கடன்காரனுக்கு எழுதத் தெரிந்திருந்து அவனால் முதல்தொகைக்கு வரவுவைக்கப்பட்டிருப்பதில் அவனால் எழுதப்படாமல் கையெழுத்து மட்டில் வைக்கப் பட்டிருக்கும் பட்சத்தில் அது லிமிடேஷனாக்ட் 20 வது செக்ஷன் சங்கேதப்படி அந்த வரவு வைத்த தேதிமுதல் காலாவதிக்குப் புதியகாலம் உண்டா இல்லையா என்பதுதான். பம்பாய் கல்கத்தா ஹைகோர்ட்டுத் தீர்மானங்கள் இது விஷயமாக நன்றாக விளக்கிக் காட்டுகின்றன. 19 வது செக்ஷனுக்கும் 20 வது செக்ஷனுக்குமுள்ள வித்தியாசங்கள் இவ்விஷயத்தை நன்றாகத் தெரிவிக்கின்றன, எழுதத் தெரிந்த ஒருவன் இவ்வித வரவு வைக்காமல் கையெழுத்து மட்டில் செய்தானாகில் அது 20 வது செக்ஷன்படி காலாவதி தோஷத்துக்குப் பரிகாரமாகமாட்டாது. இந்த ரிபான்ஸ் செலவு பிரதி வாதிக்கு வாதியால் கொடுபட வேண்டும்.

21 Indian casts, 302.

பம்பாய் ஹைகோர்ட்.

1912 ஞூத்திய 2-வது அப்பீல்நம்பர் 917

தீர்ப்பு 24—6—13.

ஜட்ஜிகள் ஸர் பாஸில் ஸ்காட் Kt, சீவ் ஜஸ்டிஸ் அவர்கள் மிஸ்டர் ஜஸ்டிஸ் பீமன் அவர்கள்	லால் சண்ட் நன்சண்ட் குஜார் அ. வாதி V நாராயன் ஹரி, அ பிரதிவாதி

11 [காலாவதி தோஷ சட்டம்].

கடன் தொகை அல்லது குத்தகத்தொகையைப் பற்றிய பத்திரங்கள் ரிஜிஸ்டர் செய்யப் பட்டிருந்தால் அவைகளின் பேரில் வழக்கிட 6 வருஷ காலாவதி தோஷமென்பது.

வாதி தனக்குப் பிரதிவாதியால் எழுதிக் கொடுக்கப் பட்ட ரிஜிஸ்டரான குத்தகைப் பத்திரப்படி 1910 வருஷத்தில் வழக்

கிட்டார். அதிற்கண்ட கெடுக்கள் 1905, 1906, 1907 இந்த வருஷங்களிலேற்பட்டிருந்தன; குத்தகை பாக்கி விஷயமாக வழக்கிடுவதற்கு காலாவதி தோஷம் லிமிடேஷனக்ட் ஷெடியூல் 110 வது ஆர்டிகிளில் சொல்லப் பட்டிருக்கிறது. ஆர்டிகள் 116ம் இந்தக் கேஸுக்குப் பொருந்துமென வேற்படும் பட்சத்தில் வாதியின் தாவாவுக்குக் காலாவதி தோஷமில்லை. கீழ்கோர்ட்டார்கள் தாவாகேசுக்கு இ லா ரி 21 அலகபாத் 138 தீர்மானத்திற் கண்டபடி 110 வது ஆர்டிகிள் பொருந்தியதென்று வாதியின்கேஸ் காலாவதி தோஷத்தால் பாதிக்கப் பட்டுப் போய்விட்டதாக தள்ளுபடி செய்து விட்டார்கள்.

1871 வருஷத்திய லிமிட்டேஷனட்டிற் கண்டிருப்பதற்கும் 1877 வருஷத்திய லிமிடேஷனக்ட்டும் இந்த 116 வது ஆர்டிகிள் விஷயமாக சில வித்தியாசங்களிருந்தமையால் அது விஷயமாக இந்தியா கோர்ட்டார்கள் 1880, 1881 வருடங்களில் முடிவான தீர்மானங்கள் செய்திருக்கிறார்கள்..(இ-லா-ரி 6வதுகல்கத்தா 94,3 சென்னை 76, 3 அலகபாத் 600, 6 பம்பாய் 76) ரிஜிஸ்டரான குத்தகைப்பத்திரங்களின் பேரில் வழக்கிடுவதற்கு110ஆர்டிகிள்பொருத்தமானதல்லவென்று சென்னை ஹைக்கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். இது கல்கத்தா பம்பாய் ஹைகோர்ட்டார்களால் ஆதரிக்கப்பட்டிருக்கிறது (இ லா ரி 15 கல்கத்தா 221. 9 பம்பாய் 320) ஆகையால் இந்தத் தீர்மானங்களை யனுசரித்தே நாம் தீர்மானிக்க வேண்டும். இதனால் கீழ்கோர்ட்டு டிக்கிரிகளை ரத்துசெய்து கேசை பயிலில் வைத்துக்கொண்டு விசாரித்து முடிவு செய்யும்படி தீர்மானிக்கிறோம்.

21 Indian Cases· 315.

சென்னை ஹைகோர்ட்

1908 ஞூத்திய 2 வது அப்பீல் நம்பர் 1590.

தீர்ப்பு 2—4—12.

ஜட்ஜிகள் ஜஸ்டிஸ் ஸர் ரால்ப் பென்ஸன் அவர்கள் மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள்	சுப்பிரமணிய அய்யர் என்கிற பிச்சு அய்யர் பிரதிவாதி அப்பீல்தார் V M. சுப்பாராயடு ஆ வாதிகள் அ. பிரதிவாதிகள்

12. [லிமிட்டேஷனக்ட்]

ஒரு தேவஸ்தானத்துக்காக அதற்குரிய தொகை ஒருவனிடமிருந்து கிடைக்கவேண்டுமென்று வழக்கிடுவதற்குக்காலாவதி தோஷங் கிடையாதென்பதும், ஒரு தேவஸ்தானத்துக்கு டிரஸ்டியல்லாதவன் தானே அதற்கு டிரஸ்டி யென நம்பிக்கொண்டு அந்த முறைமையில் வழக்கிட்டுத் தோல்வியடைந்து கோர்ட்டார் அச்செலவு தேவஸ்தான ஐவேஜியினின்றுங்கொடுபடக்கூடாதெனத்தீர்ப்புசெய்திருந்தால், இந்த டிரஸ்டிக்கு அவன் செலவழித்த தொகை தேவஸ்தான ஐவேஜியினின்றுங் கிடைக்கமாட்டாதென்பதும்.

மதுரை விஷ்ணு தேவஸ்தானக் கமிட்டிக்குட்பட்ட கள்ளழகர் கோவில் டிரஸ்டி ஆதப்பச்செட்டியார் அந்த டிரஸ்டி முறைமையில் அந்தக் கோவிலுக்காகப் பிரதிவாதியிடமிருந்து ரூபாய் 3087-8-6 கிடைக்கவேண்டுமென வழக்கிட்டார். வாதி தான் மேற்படி கோவிலுக்கு 1902-ம் வருஷம் மார்ச்சு மாத முதல் மே மாதம் வரையில் சட்டப்படி டிரஸ்டியாக இருந்துவந்ததாகவும், அந்தக் காலங்களில் பிரதிவாதி மேற்படி கோவிலுக்கு வரவேண்டிய தொகைகளை வசூலித்துவிட்டதாகவும், அத்தொகை வட்டியுடன் கிடைக்கவேண்டுமென்றும் 1903-ம் வருஷம் மார்ச்சு மாதம் 28-ந்தேதி வழக்கிட்டார்.

பிரதிவாதி அடியிற் கண்டபடி 1903-ம் வருஷம் மே மாதம் 8-ந்தேதி ஸ்டேட்மெண்டு கொடுத்தார்.

(a) 1898-ம் வருஷத்திலேற்பட்ட வாதியின் டிரஸ்டி நியமனம் சட்டப்படி செல்லுபடியுள்ளதல்ல; அதனாலவர் 1903-ம் வருஷத்தில் தாவா வழக்கு கொண்டுவர பாத்தியமில்லை.

(b) வாதி அவருடைய தர்மகர்த்தா வேலையினின்றும் 1901-ம் வருஷம் ஏப்பரல் மாதத்தில் கிரமப்படி தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறார். பிரதிவாதிக்கு அந்த தர்மகர்த்தா வேலை தேவஸ்தானக் கமிட்டியாரால் 1901-ம் வருஷம் அக்டோபர் மாதத்தில் கிடைத்திருக்கிறது. அதனால் பிரதிவாதி பிராதிற் சொல்லும் 1902-ம் வருஷம் மார்ச்சு மாத முதல் மே மாதம் வரையில் சட்டப்படி தர்மகர்த்தாவாக விருந்து தாவாவிற் கண்ட தொகையை வசூலித்திருக்கிறார்.

(c) இந்த ஸ்டேட்மெண்டு கொடுக்குங்காலத்தில் பிரதிவாதி தர்மகர்த்தாவாக இல்லாவிட்டாலும் தான் வேலைபார்த்த 1901-ம் வருஷம் அக்டோபர் மாதம் 15-ந்தேதி முதல் 1903-ம் வருஷம் மார்ச்சு மாதம் 30-ந்தேதி வரையில் பிராதிற் கண்ட தொகைக்கு மேலாகவே தேவஸ்தானத்துக்காக செலவழித்திருக்கிறார். தேவஸ்தானத்துக்குத் தன்னால் யாதொரு தொகையுஞ் சேரவேண்டிய தில்லை. கணக்குப்பார்க்கும் பட்சத்தில் தேவஸ்தானத்தினின்றும் பிரதிவாதிக்கு ரூபாய்1400-க்குமேல்கிடைக்கவேண்டியதாகவிருக்கிறது.

இந்த வழக்கு வளர்ந்து கொண்டுவந்த காலத்தில் தேவஸ்தானக் கமிட்டியாரால் 1903-ம் வருஷம் நவம்பர் மாதம் தர்மகர்த்தாவாக நியமிக்கப்பட்ட சுப்பாநாயடு என்பவர் அசல் வாதி ஸ்தானத்தில் வாதியாக 1905-ம் வருஷம் நவம்பர் மாதம் 22-ந் தேதி சேர்த்துக்கொள்ளப்பட்டார். இந்த நியமனம் டிஸ்டிரிக்ட் கோர்ட்டாரால் உறுதிசெய்யப்பட்டது. இது சி. பு. கோடு 591 வது செக்ஷன் (புது கோடு 105) படி முடிவாகிவிட்டது. இந்த நியமன விஷயமாக பிரதிவாதி யாதொரு ஆக்ஷேபணையுஞ் செய்யவில்லை.

பிரதிவாதி பிராதிற்கண்ட காலங்களில் ரூபாய் 2798-0-4 வசூலித்ததாகவும், அதில் கோவிலுக்காக ரூபாய் 676-5-8 செலவழித்திருப்பதாகவும் பாக்கித்தொகைக்கு பிராதின் தேதி முதல் முதல் கோர்ட்டார் செய்த டிக்கிரி தேதிவரையிலும் 100-க்கு 12 வீதம் வட்டி கிடைக்கவேண்டியதென்றும், கீழ் அப்பீல் கோர்ட்டார் தீர்ப்பு செய்தார்கள். வாதி சுப்பா நாயடு இறந்துவிட்டபடியால் இவர் ஸ்தானத்தில் மேற்படி கோவில் தர்மகர்த்தா அனந்த கிருஷ்ண நாயடு அப்பீல் பிரதிவாதியாகச் சேர்க்கப்பட்டார்.

பிரதிவாதி அடியிற்கண்ட ஆதாரங்களைக்கண்டு ஹைகோர்ட்டில் அப்பீல் செய்கிறார்.

(a) அசல் வாதி ஆதப்பசெட்டி 1898-ம் வருஷத்தில் நியமனம் பெற்றது செல்லத்தகுந்ததா வென்பதையும், அவர் 1901-ம் வருஷம் ஏப்பரல் மாதத்தில் தள்ளுபடி செய்யப்பட்டதையுங் கவனித்து கீழ்க்கோர்ட்டார் தீர்ப்பு செய்திருக்கவேண்டும்,

(b) 1905-ம் வருஷத்தில் இந்த தேவஸ்தானத்துக்குச் சரியான டிரஸ்டி நியமித்ததானது ஆதப்ப செட்டி இந்த தேவஸ்தானத்துக்கு மானேஜ்மெண்டு பாத்தியதையை ஸ்தாபிக்கக்கொண்டு வந்த வழக்கைப்பிரதிவாதி டிரஸ்டி முறைமையில் வசூலித்த தொகை தேவஸ்தானத்துக்காகக் கிடைக்க வேண்டுமென்று மாற்றச் சட்டாதாரமில்லை. ஆதப்பசெட்டி 1905-ம் வருஷத்தில் தாவாவினின்றும் விலகிக்கொண்டபோது, வழக்கு நின்றுவிட்டதாக வெண்ணி அதைத்தள்ளுபடி செய்திருக்கவேண்டும்.

(c) 1905-ம் வருஷம் நவம்பர் மாதத்தில் வேறு வாதி நியமிக்கப்பட்டபோது தாவாவிற் கண்ட தொகை வசூலிக்கப்பட்ட தேதி (1902-ம் வருஷம் மார்ச்சு - மே) முதல் மூன்று வருடங்களுக்கு மேற்பட்டுவிட்டதால் வாதியின் தாவா லிமிடேஷனுகட் 22-வது செக்ஷன்படி காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுப் போய்விட்டது.

(d) தாவா வழக்கு ஆதப்ப செட்டியால் தன் சொந்த பாத்தியம் அல்லது தன் சொந்த தேவஸ்தான பாத்தியதையை முன்னிட்டுக் கொண்டுவரப்பட்டதாகையால் அவருடைய ஸ்தானத்தில் சுப்பாநாயுடுவை வாதியாகச் சேர்த்தது சட்டத்துக்கும் நியாயத்துக்கும் விரோதமானது.

(e) தாவாவழக்கு தேவஸ்தானத்துக்காக கொண்டுவரப்பட்டதாக விருந்தாலும், அதிகாரமில்லாத தர்ம கர்த்தாவால் கொண்டுவரப் பட்ட வழக்கு கிரமமாக அதிகாரம்பெற்ற தர்மகர்த்தாவை அந்த வாதிஸ்தானத்தில் வைத்து விடுவதைக்கொண்டு செல்லுபடியுள்ள தாகாது.

(f) கீழ் கோர்ட்டாரால் கழிக்கப்பட்ட தொகையுடன் கமிட்டியார் உத்திரவுப்படி ஆதப்ப செட்டியார் பேரில் பிரதிவாதி கொண்டு வந்த வழக்கின் செலவு தொகை ரூ1608-14 அணு, அந்தவழக்கு தோல்வி யடைந்ததால் அந்த ஆதப்பசெட்டிக்குக் கொடுத்த கோர்ட்டுச் செலவு தொகை ரூ 853 - 4 அணு, தனக்கு மாதம் 1க்கு ரூ 50 வீதம் சேரவேண்டிய சம்பளத்தொகை ரூ 776-10-6, தேவஸ்தானத்துக்காகச் செலவழித்த அச்சுக்கூலி முதலியன ரூ 24-14-3 இவைகள் தேவஸ்தானம் ஜவேஜியினின்றும் பிரதிவாதிக்குச் சேரவேண்டும்.

திர்ப்பு:—மேலே சொன்ன (b) முதல் (e) வரையிலுள்ள கக்ஷிகளில் எவ்வித பிரயோஜனமுமில்லை. பிராதிற் கண்டவிஷயங்களை நன்ருக ஆலோசித்துப் பார்க்கும்போது ஆதப்ப செட்டியார் தன் சொந்த பாத்தியதையை முன்னிட்டு வழக்கு கொண்டுவரவில்லையென்றும், தேவஸ்தானத்துக்குத் தர்மகர்த்தா முறைமையில் வழக்குக் கொண்டு வந்திருப்பதாகவும் நன்ருகத் தெரிகிறது. ஆகையால் அப்பீல் வாதி வக்கீல் தன் கக்ஷிக்கு ஆதாரமாக எடுத்துக் காட்டும் 10 I. A 90 ; இ. லா. ரி. 7 சென்னை 417 முதலிய தீர்மானங்கள் தாவாக் கேசுக்குப் பொருந்தியனவல்ல. முதலில் வழக்கிட்டவர் ஸ்வாமிக்குத் தர்மகர்த்தாவாக விருக்கப் பாத்தியமில்லாவிட்டாலும், அவர்ஸ்தானத்தில் சரியானதர்மகர்த்தா 1905-வருஷத்தில் வாதியாகச்சேர்ந்து விட்டதால் வழக்கின் தவறுதல்களெல்லாம் சரியானதாகிவிட்டன. (இ. லா ரி. 32 கல்கத்தா 582, 5-இந்தியன் கேஸஸ் 404 ; 37 கல்கத்தா 229, 20 மெட்ராஸ் லாஜர்னல் 171 இவைகளைப்பார்க்க). இந்த தாவா தேவஸ்தானத்துக்காகக் கொண்டு வந்திருக்கிற படியால் முதலில் வழக்கிட்டவர் சரியான தர்மகர்த்தாவாக விருந்தாலுமில்லாவிட்டாலும் இந்தத்தாவாவுக்கு லிமிடேஷனுக்ட் 10வது செக்ஷன்படி எவ்விதகாலாவதிதோஷமுமில்லை. (இ. லா ரி. 11 சென்னை 274, 29 பம்பாய் 267 இவைகளைப்பார்க்க). ஆதப்பசெட்டிக்குப் பதிலாக சுப்பாநாயகரை நியமித்ததைப் பற்றி இந்த இரண்டாவது அப்பீலில் கவனிக்கத் தக்கதில்லை. சப்கோர்ட்டாரால் நியமித்தது டிஸ்டிரிக்ட் கோர்ட்டாரால் உறுதி செய்யப்பட்டு அது முடிவாகி விட்டது.

ஆதப்பசெட்டியார் சரியான தர்மகர்த்தா அல்லவென்றும், பிரதிவாதி கிரமமான அதிகாரம் பெற்ற தர்மகர்த்தா வென்றும் நம்பி நல்ல எண்ணத்துடன் அந்த ஆதப்ப செட்டிபேரில் வழக்கிட்டிருப்பதால், அந்த வழக்கின் செலவு தேவஸ்தான ஐவேஜியினின்றுங் கொடுபடவேண்டியது நியாயமானதென்று அப்பீல் வாதி வக்கீல் வாதிக்கிறுர். இவர் சொல்லுங் கக்ஷிக்கு யாதொரு ஆதாரமும் எடுத்துக் காட்டவில்லை. பிரதிவாதி தேவஸ்தான தர்மகர்த்தா வாக 1901 வருஷத்தில் நியமனம் பெற்றது செல்லுபடியுள்ளதா இல்லையா வென்பதைப் பற்றி அடியிற்கண்டபடி இரண்டு இஷ்ஷியுக்களை யேற்படுத்தி அவைகளைப்பற்றி விசாரித்துத் தெரிவிக்கும் படி நம்பர் கீழ் கோர்ட்க்கு அனுப்பப்பட்டது. அந்த இஷ்ஷியுக்களாவன:—

(1) 1901 வருஷத்திய அசல்44 நம்பர் நடந்தபோது தாவாவிற்கண்ட தேவஸ்தானத்துக்கு ஆதப்பசெட்டி சட்டப் படி தர்மகர்த்தாவாக இருந்தாரா இல்லையா? அவர் எந்தக்காலத்திலாவது கிரமமான தர்மகர்த்தாவாக விருந்தால் இந்தவழக்குநடந்தபோது அவருக்கு தர்மகர்த்தா பாத்தியம் இல்லாமற் போய்விட்டதா ?

(2) பிரதிவாதி அந்தத்தேதி முதல் இந்த தேவஸ்தானத்துக்குச் சட்டப்படி தர்மகர்த்தாவாக இருந்தாரா ?

இதன் பேரில் டிஸ்டிரிக்ட் ஜட்ஜி அடியிற் கண்ட பயிண்டிங் ஏற்படுத்தி அனுப்பினுர்கள்.

1901-வருஷத்திய அசல் 44 நம்பர் கொடுபட்டபோதுபிராதிற் கண்டதேவஸ்தானத்துக்கு ஆதப்பசெட்டி செல்லுபடியுள்ள நியமனம் பெற்ற தர்மகர்த்தாவாக விருந்தார். இந்த வழக்கு கொண்டு வருவதற்கு முந்தியே ஆதப்பசெட்டி சட்டப்படிக்குள்ள தர்மகர்த்தாவாக விருக்கவில்லை. பிராது கொடுக்கும்போது பிரதிவாதி சட்டப்படிக்குள்ள தர்மகர்த்தாவாக விருந்தார்.

இந்தப் பயிண்டிங்கின் பேரில் ஹைகோர்ட்டார் டிஸ்டிரிக்ட் ஜட்ஜியின் தீர்மானத்தை யுறுதி செய்து பிரதிவாதியின் அப்பீலை தள்ளுபடி செய்ததுமன்றி இந்த வழக்கின் செலவு தேவஸ்தான ஐவேஜினின்றுங் கொடுபட வேண்டியதாகத் தீர்மானஞ் செய்தார்கள்.

21 Indian Cases 421.

பஞ்சாப் சீவ் கோர்ட்டு.

1912 ஹ்லத்திய 2-வது அப்பீல் நம்பர் 1729.

தீர்ப்பு 13—5—13.

ஜட்ஜி. | அர்ஜன்தாஸ் வாதி அப்பீல்தார்
V
மிஸ்டர் ஜஸ்டிஸ் அக்னியூ அவர்கள் | கணேஷ்தாஸ் ஆ. அ. பிரதிவாதிகள்

2. [ஈஸ்மெண்டு ஆக்ட்.]

ஒரு வீட்டுக்காரன் அனுபவித்துவந்த வெளிச்சம் காற்று எப்போதும்போ லிருக்கவேண்டு மென்று அடுத்த வீட்டுக்காரன் கட்ட

சொந்தமானதென்றும் தன் மகன் மக்கான்லாலுக்கு அதில் எவ்வித பாத்தியமு மில்லையென்றும், அது மோகன்லாலுடைய சுயார்ஜித சொத்தென்றும் அது குடும்பப் பொதுச் சொத்தல்லவென்றும், அது தனக்கு அனந்தர வார்சுக் கிரமத்தில் கிடைத்ததென்றும் அதனால் தன் மகனுடைய கடனுக்கு அது கட்டுப்படத் தக்கதல்லவென்றும், பாத்தியஸ்தாபன வழக்குக் கொண்டு வந்தார்.

ஜவாகிர்லாலுக்கு யாதொரு பிதிரார்ஜித சொத்து மிருந்ததில்லையென்றும், அவருடைய சொத்துக்களை அவருடைய பிள்ளைகள் சர்வைவர்ஷிப் மூலமாக அடையவில்லையென்றும், மங்கல்சன், மோஹன்லால், பூபத், வாதி குண்டன்லால் இவர்கள் அவிபக்தர்களாகவே யிருந்துவந்ததாகவும், அதனால் தாவா சொத்தும் அவிபக்த குடும்பப் பொதுச் சொத்தென்றும், அதனால் வாதியுடைய மகன்பேரி லேற்பட்ட டிக்கிரிக்குத் தாவா சொத்து கட்டுப்படக் கூடியதென்றும், வாதியின் வழக்கை கீழ்க்கோர்ட்டார் தள்ளுபடி செய்துவிட்டார்கள். இவ்விதந் தள்ளியது சட்ட விரோதமானதென்று வாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்கிறார்.

தீர்ப்பு:—மங்கல்சன், மோஹன்லால், பூபத், குண்டன்லால் இவர்கள் அவிபக்தர்களா யிருந்த காரணத்தைக் கொண்டு தாவா சொத்தும் அவிபக்த குடும்பப் பொது சொத்தென் றெண்ணக் கூடாது. மோஹன்லால் பெயருக்கு வாங்கிய சொத்து குடும்பப் பொதுச் சொத்தென்று ஊகிப்பது சரியல்லவென்பது தான் அப்பீல் வாதியின் முக்கிய கக்ஷி. இவர் இ. லா. ரி. 32 சென்னை 88, 33 அலகபாத் 677 முதலிய தீர்மானங்களை தன் கக்ஷிக்கு ஆதாரமாக எடுத்துக் காட்டுகிறார். மேலேசொன்ன நால்வரும் அவிபக்தர்களா யிருந்ததைக்கொண்டு மோகன்லால் பெயரால் வாங்கப்பட்ட சொத்தும் அவிபக்த குடும்பப் பொதுச் சொத்தென்றே ஊகிக்கப்பட வேண்டுமென்பது பிரதிவாதியின் கக்ஷி.

பல பாகஸ்தர்களுள்ள ஒரு அவிபக்த குடும்பத்தில் சொத்துக்கள் எல்லோர் பெயராலும் வாங்கப்படுவதில்லையென்பது சாதாரண அறிவினர்க்கும் விளங்கும். எல்லா நிலங்களும் குடும்ப மானேஜர் பெயரால் வாங்கப்படுகிறதென்ற வழக்கமுமில்லை. தாவா சொத்து மோகன்லாலுக்குத் தனிமையான சொத்தென்

பதை ஸ்தாபிக்கவேண்டியதற்காக இந்த வழக்குக் கொண்டுவந்திருக்கிறார். தாவா சொத்து மோகன்லாலுடைய சொந்த ஜீவேஜியி னின்றும் வாங்கப்பட்டதென்பதை வாதி தான் ருஜுப்பிக்கக் கடமைப்பட்டவர். அவ்வித ருஜு யாதொன்றுமில்லை. அல்லது அச்சொத்தை மோகன்லால் தனிமையில் அனுபவித்து வந்தாரென்பதற்கும் ருஜுவில்லை. தாவாவிற் கண்ட வீடுகள் 50 வருஷங்கள் 70 வருஷங்களுக்குமுற்பட்டு வாங்கப்பட்டன. அவை மோகன்லாலுக்குத் தனிமையான சொத்தென்ற பாத்தியங் கொண்டாடி யிருப்பதாகவுந் தெரியவில்லை. ஆகையால் இந்த அப்பீலைச் செலவுடன் தள்ளுபடி செய்கிறோம்.

21 Indian cases 13.

அலகபாத் ஹைகோர்ட்.

1911 ஹு இந்திய முதலாவது அப்பீல் நம்பர் 255.

தீர்ப்பு 28—7—13.

ஜட்ஜிகள்	
சீவ் ஜஸ்டிஸ் ஸர் ஹென்ரி ரிச்சேர்ட்ஸ். Kt. அவர்கள் மிஸ்டர் ஜஸ்டிஸ் டட்பால் அவர்கள்	K. S. வாகிட் அலிகான் (பிரதிவாதி) அ வாதி V டோரிராம் வூ (வாதிகள்) அ பிரதிவாதிகள்

16. [இந்து லா.]

ஒரு விதந்து தன் புருஷனுடைய சொத்தின் வரும்படியைக் கொண்டு ஸ்தாவர சொத்துக்கள் வாங்கினால் அதை யவளிஷ்டப்படி வினியோகஞ் செய்துவிடலா மென்பது.

தான்சண்ட்என்ற இந்து இறந்தான். அவனுக்கு டான்கன்வார் லாச்மன்கன்வார் என்ற இருவர் விதந்துக ளிருந்தார்கள். அவர்களில் மூத்த விதந்து இறந்துவிட்டாள். சின்னவள் தன் புருஷன் சொத்தின் வரும்படியைக் கொண்டு தன் புருஷனிறந்த வெகுகாலங் கிரமித்து ஒரு ஸ்தாபர சொத்தை ஒரு பிராமணனிடமிருந்து கிரயத்துக்கு வாங்கினாள். இந்தச்சொத்தை ஒருவருக்கு பெந்தகமும் வைத்தாள். பிறகு இதைத் தனது சகோதரனுக்கு இனாம் பத்திரம் மூலமாக 1888 ஹுத்தில் கொடுத்துவிட்டாள். சொத்து ஸ்வாதீனம் இவளுடைய சகோதரனுக்கு கிடைத்த பிறகு அது அவர் குமாரர்களுக்கு வார்சுக் கிரமத்தில் கிடைத்துவிட்டது. இச்

டம் கட்டுவதைத் தடைசெய்ய நியாயமில்லையென்பதும், அடுத்த வீட்டுக்காரனுக்குள்ள பாத்தியம் தனக்குமுண்டென்பதும்.

வாதி தன்னுடைய வீட்டுக்கு பக்கத்தில் பிரதிவாதி மெத்தைக் கட்டடங்கட்டி முகப்பு வைக்கப்போவதாகவும், அந்தப் படிச்செய்யும்பட்சத்தில் தன்னுடைய வீட்டுக்குக் கிடைத்துவரும் காற்றுவெளிச்சம் இவைகள் மிகவுங் குறைந்துவிடு மென்றும், அதனால் பிரதிவாதி அந்தக்கட்டடங் கட்டாமல் தடைசெய்ய அவருக்கு சாஸ்வத இன்ஜக்ஷன் கொடுக்கப்பட வேண்டுமென்றும் தாவா செய்தார்.

பிரதிவாதி இப்போது யாதொரு கட்டடமுங் கட்டாததினால் வாதியின் வீட்டுக்கு கிடைத்துவந்த காற்று வெளிச்சம் இவைகள் எவ்வளவு வரையில் தடைசெய்யப்படும் என்பது இப்போது நிஷ்கரிக்கக் கூடாததாக விருக்கிறதென்றும், அந்தத் தடை நஷ்ட பரிகாரத்தால் ஈடாகக் கூடியதாக விருக்குமென்றும், வாதி இப்போது வியாஜ்ஜியங் கொண்டுவரப் பருவமில்லை(Premature) என்றும், அவசியமானால் அந்தக் கட்டடங் கட்டிய பிறகு வழக்குக் கொண்டுவரலா மென்றும் வாதியின் வழக்கை கீழ் அப்பீல் கோர்ட்டார் தள்ளுபடி செய்துவிட்டார்கள். இதன்பேரில் வாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்கிறார்.

தீர்ப்பு:—ஒருவனுடைய சொத்தின் அனுபவத்தில் மற்றொருவன் பிரவேசிப்பதாக பயமுறுத்தினால் கோர்ட்டார் இன்ஜக்ஷன் கொடுக்கலாமென ஸ்பெஸிபிக் ரிலீவ் ஆக்ட்டு 55 வது செக்ஷனில் சொல்லப்பட்டிருப்பதால், வாதி இப்போது வழக்குக் கொண்டுவந்தது நியாயமானதென்று அந்த செக்ஷனின் கீழுள்ள (c) (d) (f) (l) இந்த விளக்கங்களை தன் கக்ஷிக்கு ஆதாரமாக வாதி வக்கீல் எடுத்துச் சொல்லுகிறார். பிரதிவாதி அவ்வித கட்டடங் கட்டும்படி இடங்கொடுத்துவிட்டால் தன்னுடையபாத்தியங்களைத் தொடர்ச்சியாக இழந்துவிட நேருமென்று ஷை ஆக்ட்டு 56 (l) செக்ஷனைத்தனக்கு ஆதாரமாக எடுத்துச் சொல்லுகிறார். வாதிக்கு வழக்கமாக கிடைத்துவந்த காற்று வெளிச்சம் எவ்வளவு வரையில் குறைவுபடும் என்ற ருஜூஅம்சத்தைப்பற்றி பிரதிவாதிகட்ட உத்தேசிக்கும் கட்டடத்துக்கு எதிரில் மூன்று அறைக ளிருப்பதாகவும் அதற்குக் கிடைத்துவந்த வெளிச்சம் காற்று இவைகள்

குறைவுபட்டுப் போகுமெனச் சொல்லுகிறார். தாவாவிற் கண்ட முகப்பு கட்டப்படா திருப்பதினால் ருஜூஅம்சங்களைப்பற்றி நாம் இப்போது யாதொன்றுஞ் சொல்லமுடியாது. இன்ஜக்ஷன் கொடுபடவேண்டிய சட்டத்தைப்பற்றி இ. லா. ரி. 24 கல்கத்தா 260 தீர்ப்பில் விபரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது அந்தத் தீர்ப்பில்

> பயமுறுத்தப்படும் செய்கை விலக்கமுடியாத கெடுதியைக் கொடுக்கும்......அதாவது வேறு விதத்தில் அதைத் தடைசெய்ய முடியாது......ஒரு சாதாரண மனிதன் தன்னுடைய இயற்கையான புத்தியை யுபயோகித்தால் கெடுதிகளுண்டாகு மென்று நம்பத்தகுந்த ஆஸ்பதங்க ளிருந்திருக்க வேண்டும்.

என்று சொல்லப்பட்டிருக்கிறது. நெல்ஸன்ஸ் லா அவ் இன்ஜங்ஷன் புத்தகம் 1900 வருத்திய பதிப்பு 174 வது பக்கத்தில் மிகவும் தெளிவான கேஸில்லாதவரையில் இன்ஜங்ஷன் கொடுக்கப்படக் கூடாதென்று 24 L. T. 186 ; 3 W. R. 49 இவைகளை ஆதாரமாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தத் தீர்மானங்களை தாவா கேசுக்கு உபயோகித்துப் பார்க்குமளவில், கீழ் அப்பீல் கோர்ட்டாருடைய தீர்மானம் கிரமமானதென்றே அபிப்பிராயப்படுகிறோம். வாதி விசேஷ ஜனநெருக்கமுள்ள பட்டணத்தில் வசிக்கிறார். இவர் தன்னுடைய அடுத்த வீட்டுக்காரன் கட்டடங் கட்டுவதினால் தன் வீட்டுக்கு வழக்கமாக வந்துகொண்டிருக்கும் வெளிச்சம் காற்று இவைகள் குறைவுபட்டுப் போகுமென பிராது செய்கிறார். இவ்வித கேஸ்களில் கோர்ட்டார் சரியான கவனத்தைச் செலுத்தவேண்டும். ஒருவனுக்கு வழக்கமாகக் கிடைத்துவந்த வெளிச்சம் காற்று இவைகள் சாஸ்வதமாக அனுபவிக்கப் பாத்தியமில்லை, ஏனென்றால் காற்றும் வெளிச்சமும் ஒருவனுக்கு சுதந்தரமான பாத்தியமுடையதல்ல. அயல்வீட்டுக்காரனுக்கு இந்தவெளிச்சம் காற்று இவைகளில் பாகங் கிடைக்கக்கூடியது. ஆனால் வாதிக்குக் கெடுதி செய்யாமல் பிரதிவாதி கட்டடங் கட்டிக்கொள்ள பாத்தியமுடையவன். பிரதிவாதி கட்டடங் கட்டிய பிறகு வாதிக்குப் போதுமான வெளிச்சம் காற்று இவைக ளிருக்கின்றனவா வென்று கவனிக்கவேண்டும். இத்தியாதி காரணங்களினால் வாதி கேட்ட இன்ஜக்ஷனைக் கீழ் அப்பீல் கோர்ட்டார் தள்ளுபடி செய்தது கிரமமானதென்று வாதியின் அப்பீலைச்செலவுடன் தள்ளுபடி செய்கிறோம்.

21 Indian cases 249.

சென்னை ஹைகோர்ட்.

1912 ஹுத்திய லெட்டர்ஸ் பேடேண்டு அப்பீல் நம்பர் 167.

தீர்ப்பு 19—8—13.

ஜட்ஜிகள்	R. P. கோனெடிநாய்க்கர் ஆ். அ.
ஸர் சார்லஸ் அர்னுல்ட் வொயிட் சீவ் ஜஸ்டிஸ் அவர்கள்	வாதிகள்
	V
மிஸ்டர் ஜஸ்டிஸ் எயிலிங் அவர்கள் மிஸ்டர் ஜஸ்டிஸ் ஒல்ட்பீல்ட் அவர்கள்	ஜாடு கோபால அய்யர் ஆ். அ. பிரதிவாதிகள்

2. [நெகோஷியபிள் இன்ஸ்டுருமெண்டு ஆக்ட்டு.]

பிராமிசரி நோட்டு எழுதிக்கோடுத்தவர் தான் ஒருவருடைய ஏஜண்டென்று தஸ்தாவேஜியின் முதலில் எழுதிவிட்டு கையெழுத்து செய்யும்போது தான் ஏஜெண்டென்று கையெழுத்து போடா விட்டால் அந்த நோட்டின் தோகையை யவர் தன் சோந்த ஐவேஜியினின்றுங் கோடுக்கவேண்டு மென்பது.

மதுரை டிஸ்டிரிக்ட் முனிசீப் கோர்ட்டு 1908 ஹுத்திய அசல் 457 நம்பரின் பேரில் மதுரை டிஸ்டிரிக்ட் கோர்ட்டு 1910 ஹுத்திய 105 நம்பரில் அப்பீல். அந்த அப்பீலின்பேரில் சென்னை ஹைகோர்ட்டு 1911 ஹுத்திய 103 நம்பரில் 2வது அப்பீல் இதன் பேரில் லெட்டர்ஸ் பேடண்டு 15 வது செக்ஷன்படி அப்பீல்.

தீர்மானம்.

சீவ் ஜஸ்டிஸ் வொயிட் துரையவர்கள்:—இந்தக் கேசில் நாம் தீர்மானிக்கவேண்டிய முக்கியமான விஷயம் தாவா பிராமிசரி நோட்டு எழுதிக் கொடுத்தவர் இத்தொகையை தன் சொந்தத்தினின்றுங் கொடுக்கக் கடமைபட்டவரா என்பதுதான். அடியிற்கண்டதுதான் தாவா பிராமிசரி நோட்டு.

பிலவங்க வருஷம் ஆடி மாதம் 28உக்குச்சரியான 1907ஹு ஆகஸ்டு மாதம் 12உ கஸ்பா மதுரை டவுன் போலீஸ் ஸ்டேஷன் சந்து 1 நம்பர் வீட்டிலிருக்கும் ஸாதிசேஷய்யர் குமாரர்கள் கோபாலய்யர் 1 நாகஸாமி அய்யர் 2 இவர்களுக்கு மதுரை ஜில்லா மானாமதுரை தாலூக்கா வெள்ளிக் குறிச்சி கிராமத்திலிருக்கும் ஜமீன்தார் துரைராஜா அவர்களிடம் பவர் அவ் அட்டர்ணி பெற்ற ஏஜண்டு நஞ்சுண்டப்பா நாயுடுகாரு குமாரர் R. P. கோனெடி நாயுடுகாரு எழுதிக்கொடுத்த பிராமிசரி நோட்டு,

வெள்ளிக்குறிச்சி அரண்மனைக்காக வாங்கிய துணி வகையராவுக்காக ராணி செக்கனியம்மாள் பெயரால் ஏற்பட்ட பத்து வரவுகளை கணக்குத் தீர்த்துக்கொண்டதில் அசல் வட்டிக் கூடுதல் இத்தொகை நாளது தேதி வரைக்கும் ரூ 694-6 அணா. இந்தத்தொகை அறுநூற்றி தொண்ணூற்றி நாலு ரூபாய் ஆறணாவுக்கும் மாதம் 1-க்கு 100-க்கு ரூ 5-8 வீதம் வட்டி சேர்த்து வேண்டும்போது தங்களுக்காவது தங்களிடம் உத்தரவு பெற்றவருக்காவது கொடுத்து இதில் வரவு வைத்து வாங்கிக்கொள்ளுவேனாகவும்.

(ஒப்பம்) R. P. கோனெடி நாயுடு,

(தெலுங்கில்).

அப்பீல் வாதியின் கக்ஷி யென்னவென்றால் இந்த நோட்டின் தொகைக்கு ஜமீன்தாரி பாத்தியமேயன்றி தனக்குப் பாத்தியமில்லையென்பதுதான்.

பிராமிசரி நோட்டு எழுதிக்கொடுக்கும் ஒருவன் தான் ஏஜண்டு முறைமையில் கையெழுத்து செய்ததாகவாவது, தான்சொந்தத்தில் ஜவாப்தாரி யாக்கப்படமாட்டாதென்றாவது தெரிவிக்கக் கூடிய விபரங்கள் அந்த நோட்டி லில்லாவிட்டால், அந்த நோட்டில் கையெழுத்து செய்பவரே அதிற்கண்ட தொகைக்கு ஜவாப்தாரி யாக்கப்படுவாரென்று 1881 ஹுத்திய நெகோஷியபிள் இன்ஸ்டுருமெண்டு ஆக்ட்டு 28 வது செக்ஷனில் சொல்லப்பட்டிருக்கின்றது.

இந்தச் செக்ஷனிற்கண்ட விபரங்கள் தாவா நோட்டின் தலைப்பி லெழுதியிருப்பதைக்கொண்டு அதாவது ஜமீன்தாரிடம் பவர் அவ் அட்டர்ணி பெற்ற ஏஜண்டு என்ற வாசகத்தைக்கொண்டு தெரிந்துகொள்ள வேண்டுமென்று சொல்லப்படுகிறது. ஆங்கிலேய நாட்டின் தீர்மானங்களை யனுசரிக்காமல் தாவா நோட்டின் வாசகங்களைக் கொண்டு மட்டில் நான் முடிவுசெய்ய வேண்டியதாக விருந்தால் தாவா நோட்டு எழுதிக்கொடுத்தவர் ஏஜண்டு முறைமையில் கையெழுத்து செய்தாரென்றாவது, தாவா தொகைக்கு தான் சொந்த ஜவாப்தாரி யாக்கப்படக் கூடாதென்ற வெண்ண மிருந்ததாகவாவது, தெரிவிக்கக் கூடிய விஷயங்கள் தாவா நோட்டின் ஷரத்துகளில் இல்லையென்றே நான் தீர்மானிக்கவேண்டும். தாவா பிராமிசரி நோட்டு

எழுதிக் கொடுக்கத் தனக்கு அதிகாரமிருக்கிறதென்றாவது, அந்த அதிகாரத்தைக்கொண்டு தான் எழுதிக்கொடுத்ததாகவாவது, பவர் அவ் அட்டர்ணியிற் கண்டிருப்பதாகச் சொல்லப்படவில்லை. இவர் கையெழுத்துச் செய்யும்போது இன்னொருக்காக ஏஜண்டாக கையெழுத்துச்செய்ததாக வார்த்தைகளில்லை. ஆங்கிலேய தீர்மானங்களைப்பற்றி நாம் கவனிக்கவேண்டியது அனுவசியம். இதே விதமான கேஸ் இந்தக் கோர்ட்டாராலேயே தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (இ லா. ரி 35 சென்னை 588 ; 1911 M-W-N 143 இவைகளைப்பார்க்க). எவனொருவன் நோட்டில் கையெழுத்துச் செய்கிறானோ அவனே அத்தொகையைக் கொடுக்கக் கடமைப்பட்டவனென்று சொல்லப்பட்டிருக்கிறது:

தாவா நோட்டு எழுதிக்கொடுத்தவருக்கு எவ்வித பிரதிப்பிரயோஜனமுமில்லை. பிரயோஜனமடைந்தவர் மூன்றாவது மனுஷன்; தாவா தொகைக்கு இவரைக்கட்டுப்படுத்தக்கூடாது என்று இந்த கோர்ட்டில் ஆக்ஷேபிக்கப்படுகிறது; இவ்வித ஆக்ஷேபணை முனிசீப் கோர்ட்டில் செய்யப்படவில்லை; அது விஷயமாக விசாரிக்கப்படவுமில்லை. அது விஷயம் இப்போது நாம் கவனிக்கத்தக்கதல்ல அப்பீல் செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

ஜஸ்டிஸ் எயிலிங் துரையவர்கள்:—இத்தீர்ப்புக்கு நானும் சம்மதிக்கிறேன். தாவா விஷயம் சந்தேகத்துக்கிடமில்லாமலில்லை; ஆனால் தாவா நோட்டின் ஷரத்துகளை நாம் நன்றாக கவனித்துப் பார்க்குமளவில் தாவா நோட்டு எழுதிக்கொடுத்தவன் ஏஜண்டு முறைமையில் எழுதிக்கொடுத்ததாகவாவது, தனக்குச் சொந்த ஜவாப்தாரியில்லையென்ற எண்ணமிருந்ததாகவாவது தெரியவில்லை.

ஜஸ்டிஸ் ஓல்டுபீல்ட் துரையவர்கள்:—சீவ் ஜஸ்டிஸ் அவர்கள் சட்டக்கருத்து விஷயமாகச் சொன்னவைகளை நானும் ஒத்துக்கொள்ளுகிறேன். நோட்டின் ஷரத்துகளைப் பார்க்கும்போது நோட்டு எழுதிக்கொடுத்தவன் தான் சொந்த ஜவாப்தாரியாக்கப்படமாட்டாரென்று சொல்லாதிருந்ததுடன் தன்னுடைய எஜமானைக்காட்டாமலே தானே கொடுப்பதாகவுங் கண்டிருக்கிறது. ஆகையால் இந்த அப்பீல் செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

21 Indian Cases 417.

சென்னை ஹைகோர்ட்.

1912 ஷத்திய சீவில் மிஸ்லேனியஸ் அப்பீல் நம்பர் 84.

தீர்ப்பு 20—2—13.

ஜட்ஜிகள் ஜஸ்டிஸ் ஸர் ரால்வ் பென்ஸன் Kt. அவர்கள் மிஸ்டர் ஜஸ்டிஸ் சுந்திரமய்யரவர்கள்	பொன்னுசாமி செட்டி அ. வாதி V நாராயணசாமி செட்டி ஆ. அ. பிரதிவாதிகள்.

L [புரொவின்ஷியல் இன்ஸால்வென்ஸி ஆக்ட்.]

ஒருவன் தன் கைவசமுள்ள சொத்து தனக்குள்ள கடன்களுக்குக் குறைவாக விருக்கிறதென்ற காரணத்தைக் கொண்டுமேட்டில் இன்ஸால்வெண்டென்று டிக்கிளேர் செய்யப்படக்கூடாதென்பதும், தன்னுடைய சொத்துக்கள் பிறரிடமிருப்பதைத்தான் கைப்பற்றமுடியாத காரணத்தைக்கொண்டும், இன்ஸால்வெண்டென்று டிக்களேர் செய்யக்கூடாதென்பதும், எந்ததெந்த விஷயங்களிருந்தால் இன்ஸால்வெண்டென்று தீர்மானிக்கலாமென்பதும்.

அப்பீல் வாதி தன்னை இன்ஸால்வெண்டு என்பதாகத் தீர்மானிக்கவேண்டுமென்று, சேலம் டிஸ்டிரிக்ட் கோர்ட்டில் மனுக்கொடுத்து அந்தக்கோர்ட்டார் அவன்மனுவைத்தள்ளுபடிசெய்துவிட்டதின்பேரில், ஹைகோர்ட்டில் அப்பீல் செய்கிறார்.

1907-ம் வருஷத்திய 3-வது ஆக்ட்டு என்னும் புரொவின்ஷியல் இன்ஸால்வென்ஸி ஆக்ட்டு 11-வது செக்ஷன்படி அப்பீல் வாதி தன்னுடைய கடன்களைக்கொடுக்கச்சக்தியற்றவனாகவிருப்பதாகத் தன்னுடைய மனுவில் சொல்லியிருக்கிறான். அதிற்கண்டபடி அவனுடைய கடன்கள் ரூபாய் 5948-4 அணா, தானும் தன்னுடைய சகோதரரும் அவிபக்தர்களென்றும், தங்கள் குடும்ப நிலங்கள் ரூபா 3185, நகைகள் ரூபாய் 4516, ரொக்கம் ரூபாய் 20000, இவைகளிருப்பதுடன் வரவேண்டிய தொகைகள் ரூபாய் 1375 இருக்கிறதென்றும், அவைகளில் ரூபாய் 1000 காலாவதியாகப் போய்விட்டனவென்றும், சொல்லியிருக்கிறார். இவன்தானும் தன்னுடைய சகோதரனும் 5,6 வருஷங்களாக சண்டைபோட்டுக்கொண்டிருப்பதாகவும், தன்னுடைய சகோதரன் தன்னுடைய பாகத்தைப் பிரித்துக் கொடுக்கமாட்டேனென்று சொல்வ

தாகவும், பாகந்தீர்ந்துவிட்டதாக அவன் சொல்வதாகவும், தன்னுடைய வாக்மூலத்தில் சொல்வதால் இவருக்குள்ளசொத்துக்கள் இவர் கொடுக்கவேண்டியகடன்களுக்கு மிகவும் ஜாஸ்தியாகவிருக்கிறதென்று டிஸ்ரிக்ட் ஜட்ஜி இவன் மனுவைத் தள்ளும்படி செய்திருக்கிறார். இன்ஸால்வன்ஸி ஆக்ட்டு செக்ஷன் 11 உட்பிரிவு (1) கிளாஸ் (a)ப்படி தன்னுடையகடனைக்கொடுக்கத்தான்சக்தியற்றவனாகவிருப்பதாகவும், அதனால் கீழ்கோர்ட்டார் தன்னை இன்ஸால்வெண்டென்று தீர்மானித்திருக்க வேண்டியது நியாயமானதென்றும், அப்பீல் வாதி கக்ஷிபாடுகிறார். "கடன் கொடுக்க நிர்வாகமில்லை" என்ற பதங்களுக்குச்சொத்துக்கள் கடன்களுக்குக் குறைந்திருக்க வேண்டு மென்ற அர்த்தஞ் செய்யக் கூடாதென்றும், தன்னுடையசொத்துக்களை வகைசெய்து தன்னுடையகடன்களைக் கொடுக்க முடியாத நிலைமையிலிருப்பதாக அர்த்தஞ் செய்யப்படவேண்டுமென்றும், அப்பீல் வாதியின் சகோதரன் இவன் பாக சொத்தைப் பிரித்துக் கொடுக்கமாட்டேனென்று சொல்லுவதால் இவன் தன்னுடைய கடன்களைக் கொடுக்க முடியாத நிலைமையிலிருப்பதாகவும், அதனால் இவன் இன்ஸால்வேண்டென்பதாக தீர்மானிக்கப்படவேண்டு மென்றும், இவனுடைய வக்கீல் மிஸ்டர் வெங்கட்டராம சாஸ்திரிகள் வாதிக்கிறார். இப்போது நாம் யோஜிக்கவேண்டியது "கடன்களை கொடுக்க சக்தியில்லை" என்ற பதங்களுக்கு என்ன அர்த்தமென்பது தான். கடன் கொடுத்தவர்களின் நன்மைகளையுத்தேசித்து இந்த இன்ஸால் வன்ஸி ஆக்ட்டு ஏற்பட்டிருக்கிறது. கடன்களை சல்தியாகக் கொடாதவர்களின் சொத்துக்களினின்றும், எவ்விதந் தொகை வசூலிக்கப்படலாமென்ற விதிகள் சொல்லப்பட்டிருக்கின்றன. கடனிருக்க நிர்வாகமின்மை மூன்று வகைப்படும். அவையாவன (1) கடன் காரன் தன் சொத்துக்கள் விஷயமாக வர்த்தகஞ் செய்வதினாலுண்டாவது, (2) தன்னுடைய சொந்த செய்கைகளினாவது தன்னுடைய தவறுதல் களினாவது வுண்டாவது, (3) தன்னுடைய காரியங்கள் நிலைமையினின்றும் இன்ஸால் வேண்டென்பதாகக் காட்டுதல். முதலிற் சொன்ன இரண்டு விஷயங்களும் அவனுக் கேற்பட்ட கடன்களை விலக்கிக் கொள்வது அல்லது நீக்கிக்கொள்வது அவை அவனுடைய எண்ணத்தைப் பொருத்த தாக விருக்கிறது. 1907-வருஷத்திய 3-வது ஆக்ட்டு 16-வது செக்ஷன்படி இன்ஸால் வெண்டென் பதாகத் தீர்மானிக்கப் படுவதற்கு முந்தி இவன்

ஷடி ஆக்ட்டு 15-வது செக்ஷன்படி மனுக்கொடுக்க பாத்தியமுடையவனுவென்று ருசுக்களினல் கோர்ட்டார் திருப்திகரமாகத் தெரிந்துகொள்ள வேண்டும் தகுந்த ருஜுவில்லாவிட்டால் அந்த மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும். திருஷ்டாந்தமாக ஒருவனுக்குள்ள சொத்துக்கள் அவனுடைய கைக்குவருவதற்கு அதிக நாள் செல்லும். அதனால் அதன் விலை மிகவுங்குறைவாகவிருக்கும். இதன் மத்தியில் கடன் கொடுத்தவர்கள் இவனினும் சிக்கலாம்; இவ்வித கேஸ்களில் இவனுடையசொத்துக்கள் கடனுக்குமேற்பட்டு ஜாஸ்தியாக விருப்பதைக் கொண்டு இன்ஸால் வெண்டு என்று தீர்மானிக்கக்கூடா தென்று கோர்ட்டார் சொல்லக்கூடாது. ஒருவன் தன்வசமுள்ள சொத்துக்கள்தனக்குள்ள கடன்களுக்குக் குறைவாக விருக்கின்றன வென்ற ஒரு காரணத்தைக் கொண்டு மட்டில் இன்ஸால் வெண்டு என்று தீர்மானிக்கப் படக்கூடாது; இவனுடைய சொத்துக்கள் பிறர் வசமிருப்பதை தான் வசூலிக்க முடியவில்லை யென்ற காரணத்துக்காக இவன் இன்ஸால்வெண்டு என்று தீர்மானிக்கப் படக்கூடாது. அவ்விதஞ் செய்தால் தன் சொத்துக்களைச் சரியாகப்பரிபாலித்து வரும்படிகளை அடையமுடியாத வனுக்குக் கோர்ட்டார் உதவி புரிந்து அவன் சொத்துக்களை பரிபாலிப்பதாகும். அபீல்தாரனுடைய மனுப்படி இன்ஸால் வெண்டென்று தீர்மானிக்கப் படாததற்குக் காரணங்கள் இரண்டு. அவையாவன:—(1) இவனுடைய மனுவிற் கண்ட விஷயங்கள் சட்டத்தின் கருத்துப்படி இவன் தன்னுடைய கடன்களைக்கொடுக்க சக்தியற்றவன் என்று உறுதியாகச்சொல்லபடவில்லை. (2) இவனுடைய குடும்பச் சொத்தை இவனுடையபாகஸ்தனிடத்திருந்து கோர்ட்டார் பிரித்து அவைகளை விற்று கடன்களை கொடுக்கச் செய்வது இந்த இன்ஸால் வன்ஸி ஆக்ட்டுஎந்தக்கருத்துடன் ஏற்பட்டதோ அதற்கு நேர்மாறானதாகும். கடன்காரன் தன்னுடைய சவுகரியத்துக்காகக் கோர்ட்டாருடைய உதவியைக் கோரக்கூடாது. கடன்காரனை வாண்டில் பிடித்துக் கொண்டு வந்தவுடனே இவன் இன்ஸால் வெண்டு மனுக்கொடுக்கிறானா என்று கேட்கவேண்டு மென்றும், அந்தப்படி மனுக்கொடுப் பதாகச் சொன்னால் இவனை விட்டுவிட வேண்டுமென்றும் சி. பு. கோடு 55 வது செக்ஷன் கிளாஸ் 3 ல் சொல்லப்பட்டிருப்பதால் இவனை யந்தப்படி விட்டுவிட வேண்டியதுதானே யென்று அப்பீல் வாதியின் வக்கீல் கக்ஷியாடுகிறார். இந்த செக்ஷன் இன்ஸால்

வென்ஸி மனுக்கொடுப்பதற்கு சவுகரியத்தை கொடுக்குமேயன்றி இந்த செக்ஷன்படி மனு கொடுப்பவர்கள் எல்லோரையும் இன்ஸால்வெண்டு என்று தீர்மானிக்கப்பட வேண்டியது அவசியமானதல்ல. அனுவசியமாக கடன்காரனை வாரண்டிற் பிடித்து ஹிம்சித்தால் அவனைத் தகுந்தகாரணங்களுக்காக விடுதலை செய்யலாமென சி. பு. கோடு 21 வது ஆர்டர் 40 வது ரூலிற் சொல்லப்பட்டிருப்பதால், அந்தப்படி கோர்ட்டாரைக் கேட்டுக்கொண்டால் தகுந்த உத்தரவு செய்வார்கள். டிஸ்டிரிக்ட் ஜட்ஜி செய்த உத்தரவு பிசகென்று சொல்வதற்கு யாதொரு காரணமுமில்லை. ஆகையால் அப்பீல் செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

21 India Cases 293.

சென்னை ஹைகோர்ட்.

1912 ஒத்திய C. S. No 424.

தீர்ப்பு 15—4—13.

ஜட்ஜி. ஜஸ்டிஸ் பேக்வெல் துரையவர்கள்	G. நாராயணய்யா வாதி V அன்னிபெஸண்டு அம்மையார் பிரதிவாதி

1. [மைனர்களும் கார்டியனும்]

பிள்ளைகளை சம்ரக்ஷிக்கவும், அவர்களுக்குக் கல்வி கற்பிக்கவுங் கடமைப்பட்ட தகப்பன் தனக்குரிய அப்பாத்தியதைகளை வேறொருவருக்குக் கொடுத்துவிட்டால் அதை ரத்துசெய்துவிடலாமென்பதும், மைனர்கள் ஆங்கிலேய கவர்ன்மெண்டு அன்னிய தேசங்களில் வசித்தாலும், ஹைகோர்ட்டார் அந்த மைனர்கள் சம்பந்தமான விஷயங்களை விசாரிக்க அதிகாரமுடையவர்களென்பதும்.

செங்கல்பட்டு ஜில்லா அடையாறு என்ற ஊரில் பிர்ம்மஞ்ஞான சங்கம் என்றதோர் சபை ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிரதிவாதி அக்கிராசனாதிபதி. வாதி ஒரு இந்து பிராமணன்; பென்ஷன் பெற்ற தாசில்தார். அவர் இந்தச் சங்கத்தில்

1882-ம் வருஷத்தில் மெம்பராகச் சேர்ந்தார். அவருக்கு 4 பிள்ளைகள் உயிருடனிருக்கிறார்கள். வாதி பிரதிவாதிக்குள் 1908-ம் வருஷம் டிசம்பர் மாசத்தில் ஒரு காரியதரிசி வேலையை பொப்புக்கொண்டார். 1909-ம் வருஷத்தில் அவர் தன் குடும்பத்துடனும் மைத்துனன் முதலியவர்களுடனும் மேற்கண்ட சங்கத்தின் அடையாற்றிலுள்ள ஒரு கட்டடத்தில் வாடகையன்னியில் குடியிருந்து வந்தார்கள். இவருக்கு மேலே சொன்ன வேலைகளைத்தவிர வேறு வேலைகளும் கொடுக்கப்பட்டன. அவைகளையெல்லாம் அவர் சம்பளமன்னியிலேயே பார்த்துவந்தார் 1909-ம் வருஷம் செப்டம்பர் மாதத்தில் இவர் தன் பிள்ளைகள் கிருஷ்ணமூர்த்தி நித்தியானந்தன் இவ்விருவரையும்மைலாப்பூரினின்றுந் தருவித்துத்தானும்அவ்விடத்தில் வசித்த லெட் பீட்டர், கிளார்க்கு, S. V. சுப்பிரமணியம் முதலியவர்களும் அவர்களுக்குப் படிப்புச் சொல்லிக்கொடுத்து வந்தார்கள். பிரதிவாதி அந்த விடத்துக்கு 1909-ம் வருஷம் டிசம்பர் மாசத்தில் வந்தார். அப்போது இந்தப் பையன்களில் மூத்தவனுக்கு வயது 14, இளையவனுக்கு 11 வயது. கிருஷ்ணமூர்த்திக்கு ஒரு பெருத்த நன்மையுண்டாகப் போவதாகவும்லெட்பீட்டர் சொற்படியே நடக்கவேண்டுமென்றும் வாதிக்குப்பிரதிவாதி சொன்னார். 1910-ம் வருஷம் ஜனவரி மாதத்தில் வாதி அடையாற்றுக்குத் திரும்பிவந்தார். அந்த மாதக் கடைசியிலேயே கிருஷ்ணமூர்த்திக்கு தீக்ஷையென்ற ஒருவித சடங்கு நடத்தப்பட்டது. வாதி இந்தச் சங்கத்தில் ஒரு மெம்பராகவும், ஒரு உத்தியோகத்தை வகித்தவராகவும், அந்தரங்க வகுப்பு என்று சொல்லும் உட்பிரிவின் அங்கத்தினராகவும் இருந்ததால், இந்த தீக்ஷைக்குச் சம்மதித்தார். இந்தச்சடங்கின் விசேஷங்களின்னதென்பதை யிவர் நன்றாக அறிவார். 1910-ம் வருஷம் பிப்ரவரி மாதத்தில் பிரதிவாதி அடையாற்றுக்குத்திரும்பி வந்து இந்தக் கிருஷ்ணமூர்த்தி நித்தியானந்தா இருவரையும் தன் வசத்திலிருக்கச் செய்வதாகவும், ஆங்கிலக் கல்விகற்பிப்பதாகவும், சொன்னார். 1910-ம் வருஷம் மார்ச்சு மாதம் 6-ந்தேதி மேற்சொன்னஇரண்டு பிள்ளைகளுக்கும் பிரதிவாதிகார்டியனாகவிருந்து வரவேண்டுமென வாதி A. அடையாள ஆதரவு எழுதிக்கொடுத்

தார். பிரதிவாதி வசம் இந்தப் பிள்ளைகள் எந்தக் காரியத்தை உத்தேசித்து ஒப்பிவிக்கப்பட்டார்களோ அதற்கு நேர்மாறாகத் தகாத செய்கைகளையுடைய மிஸ்டர் லெட்பீட்டர் என்பவருடன் சேர்ந்திருக்கச் செய்ததாகவும், அவ்வித சாவகாசத்தால் தன் பிள்ளைகள் துன்மார்க்க நடையுடையவர்களாகிவிட்டார்களென்றும், அதனால் தன் பிள்ளைகளுக்குப் பிரதிவாதி கார்டியனாகவிருக்க அருகமற்றவராகவும், பாத்திய மற்றவராகவும் போய்விட்டதாகவும், அந்த மைனர் பிள்ளைகளுக்குத் தான் தகுந்த கார்டியனென்றும், தன்வசம் அவர்கள் இருந்துவரவேண்டுமென்றும் டிக்ளேர் செய்யவேண்டுமென்றும், அந்தப்பிள்ளைகள் தன் வசமாவது, கோர்ட்டாரவர்களுக்கு யுக்தமாகத்தோற்றுகிற வேறு நபர்கள் வசமாவது ஒப்பிவிக்கப்படவேண்டுமென்றும் வாதி தாவா செய்தார்.

லெட்பீட்டர் பிசகான நடையுடையவரெனச் சொல்வது சுத்தப் புரட்டென்றும், தன்னுடைய இருபத்தைந்து வருஷ அனுபவத்தினாலும், பிள்ளைகளைப்பெற்ற அனேக தாய்மார்கள் தகப்பன்மார்கள் கொடுத்த நற்சாட்சிப்பத்திரங்களினாலும், லெட்பீட்டர் மிகப்பரிசுத்தமான நடையுடையவரென்று தனக்கு நம்பிக்கையுண்டாயிருக்கிறதென்றும், பிரம்மஞ்ஞான சங்கத்திற் சேர்ந்த பையன்களில் ஒருவனாவது இவரால் கெடுதலடைந்தானென்று தான் விசாரித்தவரையில் தெரியவில்லையென்றும், அவர் அவ்வித கெட்ட நடையுடையவராகவிருக்கும் பட்சத்தில் இந்தச் சங்கத்திற் சேர்ந்த 25,000 பிரதான அங்கத்தினர்கள் அவரிடத்தில் கௌரவம்பாராட்டமாட்டார்களென்றும், பிள்ளைகளை இராஜத்துரோகிகளிடம் சேரவொட்டாமற்றடை செய்து அவர்களுக்கு இராஜபக்தியைப் புகட்டிவந்ததால் தனக்கும் தன்னுடைய சங்கத்துக்கும் இடையூறுகள் செய்வதாகச் சிலர் பயமுறுத்தினார்களென்றும், தன்னையும் தன் சங்கத்தையுந் தூஷித்து அனேக துண்டுப் பத்திரிகைகள் பலபாஷைகளிலும்அச்சிட்டுப்பெயர் முதலிய விபரமில்லாமல் ஐரோப்பாக் கண்டத்தில் பரவச்செய்தார்களென்றும், தன்னுடைய சங்கத்து விரோதிகள் இந்த வாதியைதூண்டித்

தன்னுடைய சங்கத்தை நிந்திக்கவேண்டியதினிமித்தம் இந்தப் பிராது கொடுக்கப்பட்டிருப்பதாகவும், பிள்ளைகளைக் கெட்ட வழிகளிற் பிரவேசிக்காமற் காப்பாற்ற வேண்டுமென்றும், வாதி இந்த தாவா இந்தக்கோர்ட்டில் செய்ய ஜூரிஸ்டிக்ஷனில்லாவிட்டாலும், தான் அது விஷயமாக வற்புறுத்தி ஆக்ஷேபிக்கவில்லையென்றும், இன்னும்பல கக்ஷிகளுங்கண்டு ஸ்டேட்மெண்டு கொடுத்தார். இந்தக்கேசில் அடியிற் சொல்லியபடி பதினொன்று இஷ்ஷியுக்கள் ஏற்பட்டன.

(1) மைனர்கள் பிரிட்டிஷ் இந்தியாவுக்கு வெளியில் வசிப்பதால் இந்தக்கோர்ட்டார் இந்த வியாஜ்ஜியத்தைப்பற்றி விசாரிக்க அதிகாரமுண்டா?

(a) இந்த ஜூரிஸ்டிக்ஷன் ஆக்ஷேபணையை பிரதிவாதிவேண்டாமென்று விட்டுவிட்டாரா?

(2) இந்த வழக்குக்கு 1890ளுத்திய கார்டியன் வார்ட்ஸ் ஆக்ட் பொருந்தியதா?

(3) வாதி தன் பிள்ளைகள் பிரதிவாதி வசத்திலும் பாதுகாப்பிலுமிருந்து வரவேண்டுமென்று கொடுத்த அதிகாரத்தை வாதி ரத்து செய்ய அவருக்குப் பாத்தியமுண்டா?

(4) வாதி தன் பிள்ளைகளைப்பற்றி ரத்துசெய்யப்படக்கூடாத அதிகாரம் பிரதிவாதிக்குக் கொடுக்க வாதிக்கு பாத்தியமுண்டா?

(5) வாதி இவ்வித அதிகாரங் கொடுத்த பிறகு பிரதிவாதிக்குள்ள ஆத்மார்த்தஞான வல்லமை (Spiritual influence) இருந்த காரணத்தினால் வாதி தன்னிஷ்டப்படி நடக்கமுடியாமல் தடைப்படுத்தப்பட்டிருந்தாரா?

(6) பிராது 5-வது பாராவிற்கண்ட செய்கைகளுக்குப் பிள்ளைகள் எவராவது வுட்படுத்தப்பட்டிருந்தார்களா ?

(7) பிரதிவாதிகளுக்கு இதுவிஷயங்கள் தெரியுமா? இந்த விஷயங்கள் பிரதிவாதிக்குத் தெரிந்தே அவ்விதசெய்கை நடத்தினவரிடஞ் சேர்ந்திருக்கும்படி அனுமதி கொடுத்தாரா?

(8) துன்மார்க்க நடையுடையவனிடம் இந்தப்பிள்ளைகள் சேர்ந்திருக்கும்படி பிரதிவாதி இடங்கொடுத்தாரா?

(9) 6, 7, 8 இஷ்ஷியுக்களிற் கண்ட விஷயங்கள் வாதிக்குத் தெரியுமா? அதனால் அவர் இந்தப்பிள்ளைகளை தம்வசத்தில் வைத்துக் கொள்ளவும், அவர்களைப் பாதுகாக்கவும் தகுதியற்றவராகி விட்டாரா?

(10) மூத்தபையன் கிருஸ்து பிரபுவாகவாவது, மெபித்திரேய பிரபுவாகவாது ஆய்விட்டதாகவாவது, ஆகப்போகிறதாகவாவது பிரதிவாதி சொன்னாரா?

(11) வாதிக்கு யேதேனும் பரிகாரங் கிடைக்கக் கூடியதாகவிருந்தால் எவ்விதமான பரிகாரங் கிடைக்கக் கூடியது?

தீர்ப்பு.

மிகவும் ஆச்சரியப்படக் கூடிய சக்தியுள்ள அந்தரங்கசங்கத்துக்குத்தலைவியாக விருக்கும் பிரதிவாதி A. அடையாள உடன்படிக்கையை எழுதிக்கொடுக்கும்படி வாதியை மிகவுந் தூண்டியிருக்கவேண்டும். அப்படிக்கு நடந்ததாகத்தெரியவில்லை; வாதி இது விஷயமாக மிகபிரசுத்தமான வக்கீலும், இந்த ஹைகோர்ட்டில் ஜட்ஜியாகவிருந்து வந்தவருமான ஒருவருரிடத்தில்வாதி இந்த A. அடையாளவுடன்படிக்கையின் ஷரத்துக்களைப்பற்றிதீரவிசாரித்துத்தெரிந்துகொண்டுஎழுதிக்கொடுத்திருக்கிறார். இவர் தன்னுடைய பெருத்தகுடும்பஸ்தர்களுடன்இச்சங்கத்தைச்சேர்ந்த விடுதிகளில் வாடகையன்னியில் குடியிருந்து வந்ததும், அச்சங்கத்தில் உத்தியோகஸ்தராகவும் உட்சபைபங்கத்தினராகவும் இருந்துவந்ததும், தன்னுடைய பிள்ளைகளால் பின்னாலடையக் கூடிய கௌரவமும், இவர்கள் ஆங்கிலக்கல்வியால் அடையக்கூடிய நன்மையும், பிரதிவாதி இவருடைய பிள்ளைகளுக்குக்கார்டியனாகவிருக்கவாதியைத்தூண்டியிருக்குமென்பதற்குச் சந்தேகமே கிடையாது. வாதியின் சாக்ஷியத்தைக் கொண்டே பிரதிவாதியின் அதிகாரத்துக்குப்பயந்து வுடன்படிக்கை எழுதிக்கொடுத்ததாகத் தெரியவில்லை. ஆகையால் 5-வது இஷ்ஷியுவிற்கண்ட விஷயமில்லையெனத் தீர்மானிக்கிறேன். இந்த உடன்படிக்கை நடந்த சிலகாலங்கிரமித்துப்பிறாது 5-வது பாராவிற்கண்ட விஷயங்களைத் தான் நேரிற் பார்த்ததாகவும், பிரதிவாதியின் வேலைக்காரன் லெக்ஷ்மணன் என்பவன் 2-வது பாராவிற்கண்ட விஷயங்களை நேரிற் பார்த்ததாகச் சொன்னதாகவும், 1911 வருஷம் பிப்ரவரி மாதத்தில் வாதி தன்

பிள்ளைகளை லெட்பீடர் வசத்தில் விடக்கூடாதென பிரதிவாதியிடத்தில் வற்புறுத்தி புகார்சொன்னதாகவும், பிறகு தன் பிள்ளைகளை லெட்பீடர் காசிக்கு அழைத்துப் போய் விட்டதாகவும், வாதி 1911 வருஷம் டிசம்பர் மாசத்தில் பிரதிவாதி தரப்பு 2-வது சாக்ஷி மிஸ்டர்ஸ் வான் ஹூக் என்பவளிடம் பேசிக் கொண்டிருந்ததில் அவள் லெட்பீடருடைய தகாத செய்கைகளைச் சொன்னதுடன் வாதி தன் பிள்ளைகளைப் பிரதிவாதிக்கு விற்றுவிட்டதாக ஜனங்கள் சொல்லிக் கொள்வதாகவும், அதனாலிவர்களை இந்தியா வாசிகள் அவமதிக்க இடமாயிருப்பதாக அவள் சொன்னதாவும் அதன் பேரில் வாதி பிரதிவாதியிடஞ் சென்று தன்னுடை பிள்ளைகள் லெட் பீடருடன் சேர்ந்திருக்கச் செய்யக்கூடாதென பிரதிவாதியைக் கேட்டதாகவும், பிரதிவாதி அந்தப் படிச் செய்யமாட்டேனென்று சொல்லிவிட்டதாகவும், பிறகு உபயவாதிகளுக்குள்ளும் சிலர் 1912 வருஷம் ஜனவரிமாதத்தில் சில சமாதானங்கள் செய்துவிட்டதின் பேரில், பிரதிவாதி தான் அந்தப் பிள்ளைகள் லெட்பீடரிடஞ் சேராமல் தடுத்து விடுவதாகச் சொன்னதாகவும், அதனால் இந்தப் பிள்ளைகள் இங்கிலாந்துக்குப்போய் வாசிக்க வாதி சம்மதித்த தாகவும், ருசுக்கள் ஏற்பட்டிருகிக்கின்றன. பிறகும் பிரதிவாதி இந்தப் பிள்ளைகளை லெட்பீடர் வசத்தில் ஒப்பிவித்ததாக அவரே ஒப்புக் கொள்ளுகிறார். இந்தப் பிள்ளைகளை பிரதிவாதி இங்கிலாந்தில் கொண்டுபோய் விட்டு 1912ம் வருஷம் அக்டோபர் மாதத்தில் பிரதிவாதி அடையாற்றுக்கு வந்துவிட்டார். அதனால் வாதியால் இந்த வழக்கு கொண்டுவரப் பட்டிருக்கிறது. 5-வது 6-வது இஷ்ஷியுக்களிற் கண்டவிஷயங்களைப் பற்றி வாதி ருசுச்சொல்வதை நான் நம்பவில்லை. லெக்ஷ்மணனுடைய சாக்ஷியத்தினாலும் குற்றம் நடந்த தாக ஏற்படவில்லை. ஆகையால் 6-வது 7-வது இஷ்ஷியுக்களைப் பற்றியும் விரோதமாகத் தீர்மானிக்கிறேன்.

மைனர் குழைந்தைகள் தகப்பன்வசமிருந்து வரவேண்டுமென்பதற்குத் தகுந்த ஆதாரங்களேற்பட்டிருக்கின்றன. ஒரு தகப்பன் தன் பிள்ளைகளை சம்ரக்ஷித்து வரவும், கல்வி கற்பிக்கவும், அவர்களை நல்ல ஸ்திதிக்குக் கொண்டுவரவும் சட்டபடிக்கும் நியாயப்படிக்கும் கடமைப்பட்டிருக்கிறான். இந்தக் கடமைகளையிவன் செய்வதற்குப் பிள்ளைகள் இவன் வசத்திலே இருக்கவேண்

டியது மெத்த அவசியம். இந்தக் கடமைகளினின்றும் இவன் நீங்கிக் கொள்ளக் கூடாது. அந்தப் பாத்தியங்களினின்றும் இவன் விலகிக் கொள்ளவும் முடியாது. ஆகையால் இந்தப் பாத்தியங்கள் வேறொருவருக்குக் கொடுக்கப் பட்டால் அதை யுடனே ரத்து செய்து கொள்ளலாம். இதற்கு விரோதமாகச் செய்து கொள்ளும் உடன்படிக்கை செல்லுபடியுள்ளதல்ல. பெற்றவர் தம்முடைய கடமைகளைச் செய்ய அருகமற்றவர்களாயிருக்கலாம். அதனால் அவர் குழந்தைகள் அவர் வசமிருக்கவேண்டிய பாத்தியங்களை இழந்து விடுகிறார். பிரஜைகள் பிள்ளைகள் போலும், அரசன் தகப்பன்போலும் எண்ணப் படவேண்டும் என்ற நீதியின்படி அரசருக்குள்ள சுதந்தர அதிகாரத்தை வகித்துவரும் கோர்ட்டார் ஒரு தகப்பன் தன் பிள்ளைகளின் நன்மைகளைக் கருதாமல் நடந்துவரும் விபரத்தை தெரிந்து கொண்டால் அவருக்குள்ள கார்டியன் பாத்தியம் அவரிடமிருந்து விலக்கப்படவேண்டியதா வென்பதைப் பற்றி நன்றாக விசாரிக்க வேண்டும். இது விஷயமாக சமீபகாலத்திலேற்பட்ட 1910-M-W N 187 தீர்ப்பையும், (1891) 1 Q B 194(1891) A C 388 24 ch D 317, இந்தத் தீர்மானங்களைப் பார்க்க. பிரதிவாதி விசேஷத் தொகை செலவழித்து பிள்ளைகளுக்கு கல்விகற்பித்ததாகச்சொல்லுகிறார். இவர் எவ்வளவு தொகை செலவழித்தபோதிலும் அவை இந்தப் பிள்ளைகள் அவர் வசமிருக்க வேண்டுமென்ற பாத்தியதையை யுண்டுபண்ண மாட்டாது. ஒரு தகப்பன் பிள்ளைக்குக் கல்விகற்பிக்க வேண்டிய விஷயத்திலும், தன்னுடைய குழந்தைகளுக்குத் தக்கபடி நல்ல பழக்கத்துக்குக் கொண்டுவரவேண்டிய விஷயத்திலும் தன் யோசனையின்படி தீர்மானிக்கப்பாத்தியமுடையவன். தனக்குச் சுபாவமாக வுள்ளவும், தன்னைச் சுற்றிலுமுள்ளவர்களுடைய நடையுடை பழக்கங்களை யனுசரித்து வந்தால் அவர்கள் மிகுந்த சந்தோஷமாக விருப்பார்கள். அன்னியதேசஞ் சென்று அத்தேசத்தவர்களிடம் பழகினால் அவர்கள் தன்னுடைய பந்து முதலியவர்களுக்கும் தன்னுடன் பழகியிருந்தவர்களுக்கும் அன்னியரே யாகிவிடுவார்கள். இதனால் இவர்களுக்குச் சந்தோஷமிருக்க நியாயமே யில்லை. பிரதிவாதி முதல் இரண்டு இஷ்ஷியு வேண்டியதில்லை யெனச் சொல்லிவிட்டார். ஆகிலும் ஜூரிஸ்டிக்ஷன் விஷயமாக தீர்மானஞ் செய்யவேண்டியது மெத்த

அவசியமான தென நினைக்கிறேன். வாதியின் பிள்ளைகள் இராஜா சக்கிரவர்த்தியவர்களின் பிரஜைகளாக விருக்கிறார்கள். அவர்கள் பிரிட்டிஷ்இந்தியவாசிகளாயிருந்தாலும், கல்விகற்க வேண்டியதற்காக இங்கிலாந்துக்குச் சென்றிருக்கிறார்கள். இந்தக் கேசைப் பற்றி விசாரிக்க இந்தக் கோட்டாருக்கு அதிகாரமுண்டு. இந்தக் கோர்ட்டார் அதிகாரவரம்பைப் பூறாவுஞ் செலுத்தலாம். இங்கிலீஷ் கோர்ட்டுகள் இந்தக் கோர்ட்டு நடவடிக்கைகளைப் பிராஸஸ் மூலமாக ஒத்தாசை செய்வார்கள். மைனர் பிள்ளைகள் கிருஷ்ணமூர்த்தி நித்தியானந்தா இருவருக்கும் வாதியே கார்டியனென்றும் பிரதிவாதி அந்தப் பிள்ளைக ளிருவரையும் 1913-வருஷம் மேமீ 26ந் தேதியிலாவது அதற்கு முற்பட்டாவது வாதி வசம் ஒப்பிவிக்கவேண்டு மென்றுந் தீர்மானிக்கிறோம்.

(1913) M. W. N. 906.

சென்னை ஹைகோர்ட்.

1912 ஹூத்திய முதலாவது அப்பீல் நம்பர் 18.

தீர்ப்பு 3—11—13.

ஜட்ஜிகள்
ஜஸ்டிஸ் சங்கரநாயர் அவர்கள்
ஜஸ்டிஸ் ஒல்ட்பீல்ட் அவர்கள்

ஶ்ரீராம அய்யர். பிரதிவாதி
அ. வாதி.
V.
ஶ்ரீராஜகோபால அய்யர் (வாதி) அ.
பிரதி வாதி.

19. [ஹிந்துலா.]

அவிபக்த இந்து குடும்ப மானேஜரால் வசூலிக்குப் பட்ட தோகையைப்பற்றி பாகஸ்தர்கள் அந்த மானேஜர் பேரில் வழக்கிட்டு ஆளைப் பொறுத்து டிக்கிரிபெறலாமென்பது.

ஒரு அவிபக்த குடும்பத்தில் பிள்ளையால் தகப்பன்பேரில்திருநெல்வேலி சப்கோர்ட்டில் பாகவழக்கு கொண்டுவரபட்டது. இது வாதிக்கு அனுகூலமாகத் தீர்ப்பு செய்யப்பட்டதின்பேரில் பிரதிவாதி அடியிற்கண்ட விஷயங்களைக்கண்டு ஹைகோர்ட்டில் அப்பீல் செய்கிறார். முதலாவது:—பிரதிவாதியின் ஸ்டேட்மெண்டில் கண்டபடி சிலகடன்கள் குடும்பச் செலவுகளுக்காக வாங்கபட்

டிருக்க, அக்கடன்களில்லையென்று சப்ஜட்ஜி சொல்வது பிசகு; இது விஷயமாக பிரதிவாதி 3பிராமசரிநோட் தாக்கல் செய்திருக்கிறார். தொகை கொடுத்தவர்கள் சாக்ஷியாக விசாரிக்கப்படவில்லை; டிரான்ஸ்பர் பெற்றவர்கள் விசாரிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த டிரான்ஸ்பர் இவ்வழக்குக்குப் பின்னேற்பட்டிருக்கிறது. இந்தக்கடன் நெல் வாங்குவதற்காகவும் வியாபாரத்துக்காகவும் வாங்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இது விஷயமாக வியாபார சம்பந்தமான கணக்கு தாக்கல்செய்யப்படவில்லை. அதனால் பிரதிவாதியின் இந்தக்கக்ஷியைத் தள்ளுபடி செய்கிறோம். இரண்டாவது:—ஷெடியூல் B யிற்கண்ட 4. 5. 6. 7. 8. டிக்கிரித்தொகைகள் வசூலிக்கப்பட்டு குறிச்சீட்டுக்குக் கொடுபட்டதாக பிரதிவாதியின் கக்ஷி இந்தக் குறிச்சீட்டு நடத்திவந்தவர்களை சாக்ஷிகளாக விசாரிக்கவில்லை; அவர்கள் பெயர்கூட தனக்குத் தெரியாதென்று பிரதிவாதி சொல்லுகிறார். குறிச்சீட்டு 1902௵த்தில் முடிந்திருக்கிறது. இந்தக் கடன் தொகை 1908௵த்தில் கொடுபட்டிருக்கிறது. இதுவிஷயமாக பிரதிவாதி யாதொரு கணக்குந் தாக்கல்செய்யவில்லை.

மூன்றாவது:—பிரதிவாதியிடமிருந்து வசூலிக்கப்படவேண்டிய தொகைக்கு ஆளைப்பொறுத்து டிக்கிரி செய்யலாமாவென்பது. சாதாரணமாக இவ்வித டிக்ரி செய்வது பிசகுதான். இவ்வித கடன்களெல்லாம் ரிஸீவர் நியமிக்கப்பட்டு வசூலிக்கப்படவேண்டும். அதன்பின்பு வாதிக்குச் சேரவேண்டிய தொகைகொடுபடவேண்டும். இந்தக்கேஸில் குடும்பத்துக்கு வரவேண்டியதொகைகளைப்பிரதிவாதி காட்டாமல் மறைத்திருக்கிறார். அதனால் ரிஸீவர் நியமிப்பதில் பிரயோஜனமில்லை ஆகையால் வாதிக்குச் சேரவேண்டிய தொகைக்கு ஆளைப்பொறுத்து சப்ஜட்ஜி டிக்கிரிசெய்தது சரியானதென்று தீர்மானிக்கிறோம். பிரதிவாதியின் அப்பீல் செலவுடன்தள்ளுபடி செய்யப்பட்டது.

(1913) *M. W. N.* 982.

கல்கத்தா ஹைகோர்ட்.

1913 ௵த்திய சீவில் ரூல் நம்பர் 923.

தீர்ப்பு 28—8—13.

ஜட்ஜிகள்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் *N*.R. சட்டர்ஜி அவர்கள்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் வாம்ஸ் லேஅவர்கள்.

லாலிட் மோஹன் பனர்ஜி சர்வேயர் அமீன் கமிஷனர் மனுதார்.
V
பாஸ்டியோ நாராயன் சிங்ஆ எதிர்மனுதார்கள்.

12. [சீவில் புரிஸீஜர் கோடு]

பாகப் பிரிவினை செய்ய நியமிக்கப்பட்ட கமிஷனர் தனக்குச் சேரவேண்டிய பீசுக்காக நிறைவேறு நடவடிக்கை நடத்தி தொகை வசூலிக்கக் கூடாதென்பது.

மனுதார் ஒரு சீவில் கோர்ட்டு அமீன். அவர் ஒரு ஸ்தாவர சொத்து சம்பந்தமான பாக வழக்கில் அந்நிலங்களைப் பிரிவினை செய்ய வேண்டியதற்காக கமிஷனராக நியமிக்கப்பட்டார். இவருக்குச் சேரவேண்டிய கமிஷன் பீஸில் சில தொகை கொடுபட்டது. பாக்கி கொடுபடவில்லை. இது விஷயத்தைப்பற்றி அமீன் கோர்ட்டாருக்குத் தெரிவித்ததின் பேரில் அந்தப் பாக்கித் தொகை ரூ 697—14 அணாவையும் சம்பந்தப்பட்ட கக்ஷிக்காரர் ஒரு வாரகெடுவில் கட்டிவிடும்படி 1912 வருஷம் ஆகஸ்டுமாதம் 17௳ உத்திரவு செய்தார்கள். கக்ஷிக்காரர்கள் அந்தப்படி தொகையைக் கோர்ட்டில் கட்டவில்லை. இதனால் அமீன் மேற்சொன்ன தொகை கக்ஷிக்காரர்களிடமிருந்து நிறைவேறு நடவடிக்கை மூலமாக வசூலிக்கப்பட வுத்திரவாக வேண்டுமென மனுகொடுத்தார். இதன் பேரில் கோர்ட்டார் செப்டெம்பர் மாதம் 24௳ அடியிற் கண்டபடி உத்திரவு செய்தார்கள்.

கக்ஷிக்காரர்களுக்கு பல தடவைகளில் உத்தரவுகள் அனுப்பியும் அவர்கள் வேணுமென்று கமிஷனர் பீசை கோர்ட்டில் கட்டாமல் அலக்ஷியஞ் செய்து வருகிறார்கள். இந்தத் தொகையை நிறைவேறு நடவடிக்கை மூலமாக அமீனு வசூலிக்க பாத்தியமுடையவர். இந்தவுத்தரவின் படி மனுதார். அமீன் ஷெடி தொகைக்காக நிவறவேறு மனுக் கொடுத்து நடவடிக்கை நடத்தினார்.

இதில் பிரதிவாதிகள் பாஸ்டியோ நாருபன் சிங், பண்டியோ நாருயன் சிங் எதிர் கக்ஷிக்காரர்கள் அந்தக் கமிஷன் தொகையைப் பற்றியும், அந்தத் தொகை மற்றுஞ்சிலருஞ் சேர்ந்து கொடுக்க வேண்டியதென்றும், ஆக்ஷேபித்தார்கள். இதன்பேரில் கோர்ட்டார் அந்தத் தொகையை ரூ 365 ஆகக் குறைத்து விட்டார்கள். இந்த வுத்தரவின் பேரில் மனுதார் இந்தக் கோர்ட்டில் அப்பீல் செய்கிறார்.

அமீனாவுக்குச் சேரவேண்டிய கமிஷன் பீஸை கோர்ட்டில் கட்டிவிடும்படி கோர்ட்டார் உத்தரவு செய்திருப்பதை கமிஷனர் நிறைவேறு நடவடிக்கை மூலமாக வசூலிக்கக் கூடாதென்றும், முடிவான டிக்கிரி செய்யப்படாதிருப்பதால் அந்தப்படிச் செய்யக் கூடாதென்றும் எதிர் கக்ஷிக்காரர் சொல்லுகிறார்கள். இதற்கு 10-கல்கத்தா வீக்லீ நோட்ஸை தங்கள் கக்ஷிக்கு ஆதாரமாக எடுத்துக் காட்டுகிறார்கள். அமீன் கமிஷனர் நிறைவேற்றியது சரியா பிசகா வென்பதை நாம் கவனிக்க வேண்டியது அவசியமானது. ரூ 697—14 அணா கோர்ட்டில் கட்டிவிடும்படி கோர்ட்டார் ஏற்கனவே வுத்தரவுசெய்து விட்டார்கள். அந்த வுத்தரவுப்படி தொகை கோர்ட்டில் கட்டப்பட்ட வுடனே கமிஷனர் தனக்குச் சேரவேண்டிய தொகையை வாங்கிக்கொள்ளலாம். மனுதார் நிறைவேறு நடவடிக்கை நடத்த வேண்டியதில்லை. 1913-வருஷம் ஆகஸ்டுமாதம் 18ந்தேதி செய்த வுத்தரவின் படி வாதி தொகையை கோர்ட்டில் கட்டியவுடனே அமீன்கமிஷனருக்கு அத்தொகை கொடுபடவேண்டியதாக வுத்தரவு செய்கிறோம்.

21 Indian Cases 191.

சென்னை ஹைகோர்ட்

1912-வது வருஷத்திய சிவில் ரிவிஷன் மனு நம்பர் 1032.

தீர்ப்பு 15—10—13.

ஜட்ஜி. ஜஸ்டிஸ் டியாப்ஜி அவர்கள்	}	ரெங்கசாமி அய்யங்கார் மனுதார்.

13. [சீவில் புரீஸீஜர் கோடு.]

ஒரு கக்ஷிக்காரன் எதிர் கக்ஷிக்காரனை சாக்ஷியாகக்கோரி விசாரிக்கக் கூடாதென்று பிரிவிகவுன்ஸல் தீர்மான மேற்பட்டிருக்கும் ஒரு காரணத்தினால் ஸ்மால் காஸ் கோர்ட்டு டிக்கிரியின் பேரில் ரிவிஷன் மனுக்கொடுக்கக் கூடாதென்பது.

கும்பகோணம் சப்கோர்ட்டு 1912ம் வருஷத்தியஸ்மால்காஸ் நம்பர் 971 தீர்ப்பின்பேரில் 1887 வருஷத்திய 9-வது ஆக்ட் 25-வது செக்ஷன்படி ஹைகோர்ட்டில் ரெவிஷன் மனு.

பிரதிவாதி வாதியை சாக்ஷியாகக் கோரி விசாரித்தது இ. லா ரி. 31 அலகபாத் 116, 122 பிரிவிகவுன்ஸல் தீர்ப்புப்படி சட்ட விரோதமானது என்பது தான் மனுதாருடைய முதல்கக்ஷி. அவ்விதம் கக்ஷிக்காரரை சாக்ஷியாக விசாரிப்பது சட்டவிரோதமானதென்று அதிற் சொல்லப்படவில்லை. ஆகையால் ரெவிஷன் மனு கொடுக்க ஆதாரமாக மாட்டாது. வாதியைப் பிரதிவாதி சாக்ஷியாகக் கோரி விசாரித்ததினாலே வாதி பிரதிவாதியின் சாக்ஷியாக எண்ணப்பட வேண்டுமென்றும், அவன் கொடுத்த வாக்கு மூலங்களுண்மையென்று தீர்ப்பு செய்யப் படவேண்டுமென்றும், இரண்டாவது கக்ஷி சொல்லப்படுகிறது. வாதியின் சாக்ஷியம் விரோதமான அக்கரையுள்ள வருடைய சாக்ஷியமாகையால் அதை நம்பாமல் சப்ஜட்ஜி தீர்மானஞ் செய்தது மெத்த நியாயமானது.

தீர்ப்பில் சில சங்கதிகள் பிசகாக எழுதப்பட்டிருக்கிறதென்பது மூன்றாவது கக்ஷி. ஒரே யொரு சங்கதிதான் அவ்வித பிசகென்பது. வாதி தன்னுடைய தாயாரை யோசிக்காமல் பிரதிவாதிக்கு தொகை கொடுத்ததாகச் சொல்வது. இது ஒரு அற்பத் தவறுதல். சப்ஜட்ஜி எல்லா சாக்ஷிகளையும் நேரிற்பார்த்து அவர்கள் சொன்ன ரூஜுக்களைக் கவனித்துத் தீர்ப்பு செய்திருக்கிறார்கள்.

பிரதிவாதிகளின் கக்ஷிகள் ஒன்றுக்கொன்று ஒற்றுமையில்லையென்பது நாலாவது வாதம். எந்த விஷயம் முக்கியமாக கவனித்துத்தீர்ப்பு செய்யவேண்டுமோ அவைகளைச்செவ்வையாக கவனித்து வாதிக்கு விரோதமாகத் தீர்மானித் திருக்கிறார்கள். இந்த மனுவை யங்கீகரித்து கேசைப் புனர் விசாரணை செய்யும்படி உத்திரவுசெய்ய எவ்வித ஆதாரமுமில்லை. அதனாலிதைத் தள்ளுபடிகிறேன்.

(1913) *M. W. N.* 998.

சென்னை ஹைகோர்ட்.

1912 ஷூத்திய *M.O.* ஆர்டரின் பேரில் அப்பீல் நம்பர் 155.

தீர்ப்பு 6—11—13.

ஜட்ஜிகள்	
ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள்.	அளகப்ப செட்டி (பிரதிவாதி) அப்பீல்தாரன்
ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர் அவர்கள்	V
	இராமசாமிசெட்டி வ-அ. பிரதிவாதிகள்

14. [சீவில் புரஸீஜர் கோடு]

டிக்கிரி மேடர் அங்கீகரிக்கமட்டில் மனுகொடுக்கக் கூடாதென்பதும், நிறைவேற்றுகிற விபரமுங்கண்டு கொடுக்கவேண்டியது மெத்த அவசியமென்பதும்.

இராமனாத புரம் சப்கோர்ட்டு 1908 வருஷத்திய அசல் 172-நம்பரின் பேரில் 1912ம் வருஷத்திய 24ம் நம்பர் நிறைவேற்று மனுவின் பேரிற் செய்யப்பட்ட வுத்திரவின் பேரில் அப்பீல்.

வாதி தன்னை மேடர்வாதியாக அங்கீகரிக்க வேண்டுமென்ற ஒரே விஷயங்கொண்டு மனுகொடுத்தார். அந்த மனுப்படி மேடர் வாதியாக அங்கீகரித்ததாக வுத்திரவு செய்து விட்டார்கள். இவ்விதம் உத்திரவு செய்தது சட்டவிரோதமானதெனப் பிரதிவாதி அப்பீல் செய்கிறார். வாதிகொடுத்த மனுவில் பிரதிவாதியை வாரண்டிற் பிடிக்க வேண்டுமென்றாவது அவருடைய சொத்துக்களை ஜப்தி செய்ய வேண்டுமென்றாவது வேறெந்தப் பரிகாரமாவது கேட்கப் படாததினாலே இ. லா ரி. 31 சென்னை 234, 14. சென்னை லா ஜர்னல் 393, இந்தத் தீர்மானங்களின்படி வாதியின் மனு தள்ளுபடி செய்யப் படவேண்டியது மெத்த அவசியமானது. அப்பீல் பிரதிவாதிகளின் வக்கீல் இந்த மனுவைத் திருத்திக்கொள்ள அநுமதிகொடுக்க வேண்டுமெனக் கேட்கிறார். இ. லா. ரி 17 - கல்கத்தா 631 தீர்மானப்படி இப்போது திருத்த அனுமதி கொடுக்கப்படமாட்டாது.

இதனால் பிரதிவாதியின் அப்பீலை யங்கிகரித்து வாதியின் மனுவைத் தள்ளுபடி செய்கிறோம்.

1913 M - N - W - 1003.

கல்கத்தா ஹைகோர்ட்.

1912 ஷூத்திய மிஸ்லேனியஸ் அப்பீல் நம்பர் 365.

தீர்ப்பு 28—8—13.

ஜட்ஜிகள்-	
ஜஸ்டிஸ் ஸர் ஹாரிஸ்டீபன் Kt.	மியாஜான் மனுதாரன் அப்பீல்தாரன்
மிஸ்டர் ஜஸ்டிஸ் முல்லிக்	V
	ரூப் சந்திரசர்மா எதிர்மனுதாரன்

15. [சிவில் புரோஸீஜர் கோடு.]

கோர்ட்டார் உத்திரவின் படி டிக்கிரி பெற்ற வனுடைய வக்கீலிடம் டிக்கிரித்தொகை கொடுப்பது அத்தொகை கோர்ட்டில் கட்டப்பட்டது போலாகுமென்பதும், ஜப்திசெய்யப்பட்ட சொத்து கோர்ட்டாருடைய அனுமதி பெற்று ஒருவருக்கு டிக்கிரிகடன் காரனால் சாசனஞ் செய்யப்பட்டால், அதைக் கோர்ட்டார் உறுதிசெய்யவேண்டியது அவசியமில்லை யென்பதும், இந்தச் சந்தர்ப்பத்தில் வேறுகடன் காரன் இச்சொத்தை ஜப்தி செய்தால் அவனுக்குரிய பாத்தியமும்.

ஒரு ஸ்தாவர சொத்து ஏல விற் பனைக்காக ஏல இஸ்தியார் பிறப்பிக்கப்பட்டிருந்தது. அந்த டிக்கிரி கடன்காரன் அந்தச் சொத்தைத் தான் தனிமையில் விற்று டிக்கிரித்தொகையைக்கோர்ட்டில் கட்டிவிடுவதாக சீவில் புரிஸீஜர் கோடு 21 வது ஆர்டர் கோர்ட்டாரிடம் 1911-ம் வருஷம் ஜனவரி மாதம் 15-ந்தேதி சர்டிபிகேட் பெற்றார். 1911-ம் வருஷம் ஜனவரி மாதம் 24-ந் தேதி இந்த சொத்து வேறொரு டிக்கிரி கடன்காரனால் ஜப்தி செய்யப்பட்டது. 1911-ம் வருஷம் ஜனவரி மாதம் 31-ந்தேதி டிக்கிரீ கடன்காரன், டிக்கிரிபெற்றவன், அச்சொத்தை வாங்கப்போகிறவன் இந்த மூவரும் கோர்ட்டில் ஆஜரானார்கள். டிக்கிரி பெற்றவனுடைய வக்கீல் சொத்தை டிக்கிரி கடன்காரன் தான் சுயமாக விற்றுவிட்டதாகச்சொன்னார். அதனால் அச்சொத்தை கிரயம் வாங்கப்பேசியவனை டிக்கிரித்தொகையை டிக்கிரி பெற்றவனிடங் கொடுத்து விடும்படி உத்தரவுசெய்தார்கள். பிறகு கக்ஷிக்காரர்கள் கோர்ட்டைவிட்டுப்போய்விட்டார்கள்.

இதன் பிறகு இவ்விதம் சாசனம் பெற்றவன் 1911-ம் வருஷம் ஜனவரி மாதம் 24-ந் தேதி மற்றொரு கடன்காரனால்

செய்யப்பட்ட ஜப்தி விடுதலை செய்யப்படவேண்டுமென கோர்ட்டில் மனுக்கொடுத்தான். சாசனத்தொகை கோர்ட்டில் கட்டப்படாததாலும், அது கோர்ட்டாரால் உறுதிசெய்யப்படாததாலும் ரூல் 83-வது படி நடவடிக்கை நடந்ததாகமாட்டாதென்றும், மனுதாரனுக்கு யாதொரு கிரய பாத்தியமுமுண்டாக மாட்டாதென்றும், அதனால் ஜப்தி விடுதலை செய்யப்பட நியாயமில்லையென்றும் அந்த ஜப்தி செய்த டிக்கிரி பெற்றவன் ஆக்ஷேபணை செய்தான். அந்த 83-வது செக்ஷன்படி சரியான நடவடிக்கைகள் நடந்திருப்பதாக முனிசீப் ஜப்தியை விடுதலை செய்துவிட்டார். இதன்பேரில் டிஸ்ரிக்ட் கோர்ட்டில் அப்பீல் செய்யப்பட்டதில், சட்டப்படி 83-வது செக்ஷன்படி நடவடிக்கைகள் நடத்தப்படவில்லையென்றும், மனுதாருக்கேற்பட்ட கிரயம் ஊர்ஜிதஞ் செய்யப்படவில்லையென்றும், அதனால் ஜப்திவிடுதலை செய்யப்பட நியாயமில்லையென்றும், முனிசீப் செய்த உத்தரவை ரத்து செய்துவிட்டார்கள். இதனால் பிரய்வேட்டாக சாசனம் பெற்றமனுதாரன் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்கிறார்.

21 வது ஆர்டர் 83 வது ரூல்படி செல்லுபடியுள்ள கிரய மேற்பட்டிருக்கிறதாவென்பதுதான் இந்த 2 வது அப்பீலில் முக்கியமான கேள்வி கோர்ட்டில் தொகை கட்டப்படவேண்டியதும், கிரயம் உறுதி செய்யப்படவேண்டியதும், அவசியமானதென்று சொல்லப்பட்டிருக்கும் 83 வது ரூலின் உட்பிரிவு 2 சங்கேதத்தின் அர்த்தத்தைப் பொறுத்ததாகவிருக்கிறது. கோர்ட்டில் தொகை கட்டுவதற்கு ஒழுங்கு (form) யாதொன்றுங் கிடையாது. கோர்ட்டாருடைய உத்தரவுப்படி டிக்கிரி பெற்றவரின் வக்கீலிடந் தொகை கொடுபட்டதானது கோர்ட்டில் தொகை கட்டியதாகவே நாம் தீர்மானிக்கிறோம். தொகையை வாங்குவதற்காக பிளீடர் கோர்ட்டாருடைய ஏஜண்டாகவிருக்கிறார். இந்தக் கிரயம் உறுதி செய்யப்பட்ட விஷயமாக ரிகார்டு செய்யப்படாததினாலே, இந்த சாசனம் உறுதி செய்யப்படவில்லையென டிஸ்டிரிக்ட் ஜட்ஜி சொல்லுகிறார். இவ்விதம் சாசனம் உறுதி செய்யப்பட அப்பிளிகேஷன் கொடுபடவேண்டியது அவசியமில்லையெனத் தோற்றுகிறது. அவ்விதம் ரிகார்டு செய்யப்படவேண்டுமென்பதற்கு விதிகளிருப்பதாகவுந் தெரியவில்லை. ஸேல் சர்டிபிகேட் (Sale certficate) கொடுபடுவதற்கு எழுத்துமூலமான மனுவேண்

டியது அவசியமில்லையெனத் தீர்மானமேற்பட்டிருக்கிறது. (இ. லா. ரி. 13 பம்பாய் 670). இதனால் கிரயம் உறுதி செய்யப்பட மனு கொடுபடவேண்டியதும் அது ரிகார்டுசெய்யப்படவேண்டியதும் அவசியமென்பதற்கு யாதொரு காரணமுமிருப்பதாகத் தெரியவில்லை. ஆகையினால் டிக்கிரி பெற்றவனிடம், சாசனத்தொகையைக்கொடுத்துவிடும்படி முனிசீப் உத்தரவுசெய்ததும் அந்த சாசனத்தைப்பற்றியாதொரு ஆக்ஷேபணையுஞ் செய்யாதிருந்ததும், அந்தச் சாசனத்தை யுறுதி செய்ததாக எண்ணப்படவேண்டும். கோர்ட்டில் தொகை கட்டப்படவேண்டுமென்ற விதியானது அந்தத்தொகையின் வரவு செலவு கோர்ட்டு புத்தகங்களிலேற்படாவிட்டாலும், சரிவர அனுஷ்டிக்கப் பட்டிருக்கிறது. விற்பனை நடந்த 30 தினங்களுக்குப் பிந்தித்தான் கிரயம் ஊர்ஜிதம் செய்யப்படவேண்டும். அதற்கு முந்தி உறுதி செய்தது செல்லாதென எதிர்மனுதார் வக்கீல் சி. பு. கோடு 21 வது ஆர்டர் 92 வது ரூலையெடுத்துச் சொல்லுகிறார். 83 - வது ரூல்படி பிரய்வேட் (Private) கிரயத்துக்கு இந்த 92 வது ரூல் சம்பந்தப்படுமென்பது சந்தேகத்துக்கிடமாயிருக்கிறது. இது அவ்விதம் சம்பந்தப் படுவதாக வைத்துக் கொண்டாலும், சாசனம் நடந்த 30-தினங்களுக் குள்ளேயே அது உறுதி செய்யப்படுவது சட்டவிரோதமாக மாட்டாது. நிறைவேறு நடவடிக்கை மூலமாக விற்கப்பட்ட தொகையை டிக்கிரி பெற்றவன் அந்தக் கிரயம் உறுதி செய்யப் படுவதற்கு முந்தியே வாங்கிப் போகலாமென்று தீர்மானமேற் பட்டிருக்கிறது. (இ-லா-ரி. 12 கல்கத்தா 252.) கிரயம் உறுதி செய்யப் பட்டபோதிலும் அந்தக் கிரயம் மோசடியானதென்றும், ரத்து செய்யப் படவேண்டுமென்றுங் கொடுபடும் மனுவுக்கு அது எவ்விதத்திலுந் தடை செய்யமாட்டாது. (இலா ரி 17 கல்கத்தா 769). இன்ன காலத்திற்றான் ஏலம் உறுதிசெய்யப்பட வேண்டுமென்பதற்குச் சட்டமில்லை. சாசனமேற்பட்ட 30 தினங்களுக்கு முந்தி அது உறுதி செய்யப் பட்டது சட்டவிரோதமானதல்ல. இதனால் இந்தக் கிரயம் பெற்றவனுக்கு பூர்ணபாத்தியங் கிடைத்து விட்டது. 1911 வருஷம் ஜனவரி மாதம் 24க்கு செய்த ஜப்தி பிரயோஜனமற்றதாகிவிட்டது. இந்த ஜப்தி செய்திருக்கும் டிக்கிரி பெற்றவன சாசனத் தொகையைக் கொடுத்துவிடும்படி முனிசீப் உத்திரவுசெய்த அந்தடிக்கிரிபெற்றவன் பேரில் பரிகாரந் தேடிக்கொள்ளலாம். இந்தச் சாசனம் பெற்

றவன் சம்பந்தப் பட்டவரையில் இவனுடைய சாசன சொத்துக்கள் மறுபடியும் விற்பனை செய்யப் படக்கூடாது. தாவா சாசனம் கிரமப்படி யுறுதிசெய்யப்படவில்லை யென வேற்பட்டாலும், அதை மறுபடியுங் கிரயஞ் செய்வதானது கடைசியாக ஜப்தி செய்த டிக்கிரி பெற்றவனுக்கு எவ்வித உதவியுஞ் செய்யமாட்டாது. கோர்ட்டாரிடம் அனுமதிபெற்றுக்கொண்டு சாசனம் பெற்றவன் தனக்கிஷ்டபட்டபோது அதை யுறுதிசெய்ய வேண்டுமென்று கோர்ட்டாரைக் கேட்கலாம். நடு நியாயப்படிக்குள்ள அவருடைய பாத்தியம் உடனே பூர்த்தியாகி விடுகிறது. இது இந்த சொத்து பின்னால் ஏலவிற்பனை செய்யப்பட்டு அது வுறுதிசெய்யப்பட்ட போதிலும், அந்த ஏலத்தி லெடுத்தவனுக்கு முந்திய பாத்தியமாய்விடும் (இ· லா. ரி 17 பம்பாய் 375) எதிர் மனுதாரனுடைய கக்ஷி நிறைவேறுவதாக வைத்துக்கொண்டாலும் அது பிரயோஜன மற்றதாகவே ஆகிவிடும்.

டிஸ்ரிக்ட் ஜட்ஜியின் சட்ட தாத்பரியத்தைநாங்கள் அங்கீகரிக்கவில்லை. அதனாலவர் செய்த உத்திரவை ரத்து செய்கிறோம். இந்த அப்பீல்படி செலவுடன் டிக்கிரி செய்யப்பட்டது. வக்கீல் பீஸ் இரண்டு தங்க மோகராக்கள்.

21 Indian Cases 210

பம்பாய் ஹைகோர்ட்.

1911 ஸ்ரீ ஷத்திய 2 வது அப்பீல் நம்பர் 640

தீர்ப்பு 23—7—13

ஜட்ஜிகள் ஸர் பேஸில் ஸ்காட் Kt. சீவ் ஜஸ்டிஸ் மிஸ்டர் ஜஸ்டிஸ் ஹீட்டன்	டட்டு ஆத்மரும் ஹஸாம்நிஸ் அ வாதி V ஷங்கர் தட்டடிசயா அ. பிரதிவாதி

16 [சிவில் புரோஸீஜர் கோடு.]

தவணைகள் கண்ட இராஜினாமா பெந்தக டிக்கிரி கடைசித் தவணை கடந்த 3 வருடங்களுக்குப் பிறகு உறுதிசெய்யவேண்டுமென்று கேட்க நியாயமில்லை யென்பது.

ராஜினாமா ஷரத்துப்படி பிரதிவாதியின்சொத்து பெந்தக பாத்தியப்படி டிக்கிரி செய்யப்பட்டிருப்பதை யுறுதி செய்யவேண்டுமென்று மனுக் கொடுபட்டிருக்கிறது. இந்த டிக்கிரித்தொகை பல தவணைகளில் கொடுபடவேண்டியதாக இராஜினாமாப்படி ஷரத்துகளேற்பட்டிருக்கின்றன. கடைசித் தவணையிலிருந்து மூன்றுவருஷம் 1910 ஸ்ரீ ஜூலை மாதத்துடன் சரியாகப் போய்விடுகிறது. இந்த மனு இதற்குப் பிந்தி கொடுபட்டிருக்கிறது. இது காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுப் போய்விட்டதா இல்லையா வென்பதுதான் விவாதம். வாதிக்குச் சேரவேண்டிய கடன் ஜங்கம சொத்தென்றும், இதனால் டிக்கிரி யுறுதி செய்யப்பட வேண்டுமென மனு கொடுக்கப்பட வேண்டியதில்லையென்றும், கீழ்கோர்ட்டார்கள் இ. லா. ரி. 26 பம்பாய் 305 தீர்மானத்தை யாதாரமாகக் காட்டித் தீர்மானித்திருக்கிறார்கள். அந்தக் கேஸில் சிவில் புரிஸீஜர் கோடு சரியான செக்ஷன்படி நிறைவேறு நடவடிக்கைகள் நடத்தப்பட்டதாவென்ற கேள்வி யேற்பட்டது. இந்தக் கேஸில் அவ்வித விவாதமில்லை. கீழ்க் கோர்ட்டார் சொல்லுங் காரணங்களை நாம் அங்கீகரிக்காவிட்டாலும் வாதியின் மனு தள்ளுபடி செய்யப்படவேண்டியதென நினைக்கிறோம். இந்த மனு சிவில் புரிஸீஜர் கோடு 34 ஆர்டர்படி டிக்கிரி செய்யப்படவேண்டுமென கொடுபட்டிருக்கிறது. வேறு ஆர்டர்களின்படிக் கல்லவென்றும், அப்பீல் வாதி கக்ஷியாடுகிறார். ஆகையால் இது சிவில் புரிஸீஜர்படி நடத்தப்படும் நடவடிக்கை. அதனால் லிமிட்டேஷனுக்ட் 181 வது ஆர்டிகிள்தான் இதற்குப் பொருத்தமானது (இ. லா. ரி. 38 கல்கத்தா 913) இந்த ஆர்டிகிளின்படி மனுக் கொடுக்கப் பாத்திய மேற்பட்ட 3 வருட கெடுவுக்குள் அப்பிளிக்கேஷன் கொடுத்திருக்கவேண்டும். அந்தப்படி கொடுபடவில்லை. அதனால் காலாவதி தோஷ மேற்பட்டுவிட்டது. ஆகையால் அப்பீலை செலவுடன் தள்ளுபடி செய்கிறோம்.

21 Indian Cases 318.

சென்னை ஹைகோர்ட்.

1911 ஸ்ரீ ஷத்திய அப்பீல் நம்பர் 15.

தீர்ப்பு 1—4—13.

ஜட்ஜிகள். ஸர் அர்னல்ட் வொயிட் Kt. சீவ் ஜஸ்டிஸ் மிஸ்டர் ஜஸ்டிஸ் டியாப்ஜி	பாக்ஷாசாகீப் அ. அவாதி. V அப் தல் கன்னி ஷு. அ. பிரதி வாதிகள்.

17. [சீவில் புரிஸீஜர் கோடு]

சி பு கோடு 2-வது ஷிடியூல் 16-வது பாராப்படி அவார்டேப்படி தீர்ப்பு டிக்கிரியுஞ் செய்யப் படுவதைப் பற்றி அப்பீலாவது ரேவிஷனாவது செய்யக்கூடா தென்பது.

சீவில புரிஸீஜர் கோடு 2-வது ஷிடியூல் 16-வது பாராப்படி (award) அவார்டின் பேரிலேற்பட்ட தீர்ப்பின் படி டிக்கிரி செய்யப் பட்டதைப் பற்றி அப்பீல். அடியிற் கண்ட இரண்டு காரணங்களினால் இந்த டிக்கிரி பிசகான தென்று அப்பீல் வாதி கக்ஷியாடுகிறார்.

முதலாவது:—யாதொரு அவார்டும் ஏற்படவில்லை. இரண்டாவது. அவார்டின்படி தீர்ப்புசொல்ல வேண்டுமென்று டிஸ்டிரிக் ஜட்ஜி யிடங் கொடுத்த மனுவின் பேரில் அறிவிற் சிறந்த ஜட்ஜியாற் சொல்லப்படும் ஒற்றுமைக்கு வராத பஞ்சாயத்தரைத் தருவித்து சாக்ஷி சொல்லும் படி இடங் கொடுத்திருக்க வேண்டும். அவ்விதஞ் செய்யாமல் அவர் செய்த தீர்ப்புச் செல்லத்தக்கதல்ல.

இந்தப் பஞ்சாயத்துத் தீர்ப்பின்பேரில் அப்பீல் செய்ய சட்டமில்லை யென்பது எதிர்க்கக்ஷிகாரர்களின் பிரதம ஆக்ஷேபனை. 21-சென்னை லா ஜர்னல் 263 பக்கத்திற்கண்ட புல் பெஞ்சி தீர்மானப்படி எதிர்கக்ஷிகாரர்களின் பிரதம ஆக்ஷேபனை நியாயமான தென்றே நினைக்கின்றோம். அது 1882 வருஷத்திய சி பு. கோடின்படி ஏற்பட்ட தீர்ப்பின்பேரில் செய்யப்பட்ட புல்பென்சு தீர்ப்பு. புதிய கோடு 2-வது ஷிடியூலினால் பழய கோடிலுள்ள சந்தேகங்கள் நிவர்த்தியாய்விட்டன. ஷை 15 வது பாராவின் கடைசியில் "வேறெந்த விதத்திலாவது செல்லும்படியற்றதாக விருந்தால்" என்ற பதங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இந்த அவார்டு அதாவது பஞ்சாயத்துத் தீர்ப்பு செய்யப்படுவதற்கு சரியான காலத்தில் மனு கொடுக்கப்பட்டிருந்தால் மேலேசொன்ன வார்த்தைகளை யனுசரித்து இந்த அவார்ட் ரத்து செய்யப்பட்டிருக்கலாம். இந்த அவார்ட் ஜூன் மாதம் 29 உ கொடுபட்டிருக்கின்றது. இது ரத்துசெய்யப்பட வேண்டுமென்று கொடுபட்ட மனு ஜூலை மாதம் 18 உ கொடுபட்டிருக்கிறது. இந்த அவார்டின் பேரில் எந்தக்காலத்தில் தீர்மான மேற்பட்டதோ அந்தக் காலத்தில் தான் இந்த மனுவுந் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. அதாவது செப்டம்பர் மாதம்

THE REGISTRAR OF BOOKS
9 MAR 1914
MADRAS

ஹைகோர்ட்டு தீர்மானங்கள்.

தமிழ்ப்பாஷை பயின்றவர்கள் வியவகார நுட்பங்களை
எளிதில் உணரும் பொருட்டு பிரசுரிக்கப்படும்
மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

புத்தகம்-1 | மாயவரம் 1914வரு ஜனவரிமீ | இலக்கம்-5

2 உ இவ்வித அவார்ட் ரத்து செய்யப்படுவதற்கு மனுக் கொடுபட வேண்டிய காலத்துக்குப் பிறகு இந்தத் தீர்ப்புச்செய்யப்பட்டிருக்கிறது. இவ்வித மனுக் கொடுபட்டு அது தள்ளுபடி செய்யப்பட்டிருக்கும் பட்சத்தில் குறிப்பிட்ட பத்து தினங்களுக்கு முந்தியே தீர்ப்புச்செய்யக் கோர்ட்டாருக்கு அதிகாரமுண்டு. இந்தத் தீர்ப்பு மேற்படி 2 வது ஷிடியூல் 16 (2) பாராப்படி செய்யப்பட்டிருக்கின்றது.

இந்த அப்பீலை ரெவிஷன் மனுவாக வைத்துக்கொண்டு தீர்மானஞ் செய்யவேண்டுமென அப்பீல் வாதி வக்கீல் கேட்டுக்கொள்ளுகிறார். 3 வது பஞ்சாயத்தார் சில விஷயங்களில் ஒற்றுமைப்படவில்லை யென்றும், அதனாலவர் அவார்டில் கையெழுத்து செய்யவில்லை, அதனால் இந்த அவார்ட்ரத்து செய்யப்பட வேண்டுமெனக் கேட்கிறார். கீழ்க்கோர்ட்டுஜட்ஜி தமது அபிப்பிராயத்தைப்பிசகான வழியில் உபயோகித் திருந்தால் நாங்கள் இது விஷயத்தில் பிரவேசித்துத் தீர்ப்பு செய்யலாம். அவார்டின்படியே தீர்ப்பு செய்யப்பட வேண்டுமென்று சட்டத்தில் ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அவார்டின்படியே தீர்ப்பு செய்யப்பட்டால் அதன் பேரில்அப்பீல் செய்யப்படக் கூடாதென இந்தக் கோர்ட்டாரால் தீர்மான மேற்பட் டிருக்கிறது. (இ. லா. ரி. 32 சென்னை 510) இதை யனுசரித்து அப்பீலைத் தள்ளுபடி செய்கிறோம். ரெவிஷனுக்கும் ஆதாரங்கள் கிடையா.

21 Indian Cases 308.

சென்னை ஹைகோர்ட்.

1911 ஷுத்திய 2 வது அப்பீல் நம்பர் 1979.

தீர்ப்பு 22—7—13.

ஜட்ஜிகள்	சக்கரபாணி மிஸ்ரோ அ. வாதி
மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள்	V
மிஸ்டர் ஜஸ்டிஸ் டியாப்ஜி அவர்கள்	சதாசிவஸோடாங்கி ஆ அ. பிரதிவாதிகள்.

13. [லிமிட்டேஷனுக்ட்].

கிராமப் பொது நிலங்களில் சிலவற்றை ஒருவர் ஏகதேசத்தில் அனுபவித்தால் அதற்குங்காலாவதி தோஷ முண்டென்பது

ஒரு கிராமத்திய குடிகளுக்கு 150 பங்கு (சாரானங்கள்) நிலங்கள் பொதுவாக இருந்துவந்தன. அவைகளில் 13பங்குக்குச் சொந்தமான குடிகளுக்குள்ள பாத்தியதையை அப்பீல் வாதி கோர்ட்டு ஏலத்தி லெடுத்து விட்டார். இவர் தாம் ஏலமெடுத்த நிலங்களைத் தம்முடைய கடன்காரர்கள் தனிமையில் அனுபவித்து வந்ததாகவும், அவை யிப்போது 1 முதல் 10 பிரதிவாதிகள் வச மிருப்பதாகவும், அவைதமது வசமாகவேண்டுமென்றும் வழக் கிட்டார். தாவா நிலங்கள் டிக்கிரிக் கடன்காரன் வசத்திலிருக்க வில்லை யென்றும், அவைகளைத் தாங்கள் தனிமையில் 15 வருட காலமாக அனுபவித்து வருவதாகவும், வாதிக்கு அந்த நிலங்கள் கிடைக்கத்தக்க தில்லையென்றும் பிரதிவாதிகள் கக்ஷியாடினார்கள். வாதிக்குத் தனிமையில் தாவாசொத்துக்கள் கிடைக்கதக்க தில்லை யென்று வாதியின் வழக்கைக் கீழ்க் கோர்ட்டார்கள் தள்ளுபடி செய்து விட்டார்கள்.

தமக்குப் பாத்தியமுள்ள 13-பங்கு களுக்கு 1 முதல் 10-பிரதி வாதிகளுடன் கூட்டு ஸ்வாதீனமாவது கிடைக்க வேண்டுமென்று இந்த 2-வது அப்பீலில் வாதிகேட்கிறார். ஒருவனுக்கு ஒரு சொத்தில் அனுபவமில்லா விட்டால் அவனுக்குக் கூட்டுஸ்வாதீ னங் கிடைக்கமாட்டாதென பிரிவிக் கவுன்ஸலில் தீர்மானிக்கிறார் கள். (இ.லா.ரி. 18 கல்கத்தா 10 ; 17. I. A. 110) அப்பீல் வாதி தமக்கு ஆதாரமாக எடுத்துக் காட்டும் இ. லா. ரி. 26 பம்பாய் 141தீர்ப்புத்தாவாக்கேசுக்கு ஒற்றுமையானதல்ல. அது அவிபக்த இந்துக் குடும்பத்தில் ஒருவனுக்குச் சொத்து ஸ்வாதீன மில்லா

திருந்து அவன் பாத்தியதையைக் கோர்ட்டு ஏலத்தி லெடுத்த வரைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. பிரிவிக் கவுன்ஸல் தீர்ப்பு தாவாக் கேசுக்கு ஒற்றுமையாக இருப்பதால் வாதியின் அப்பீல் தள்ளுபடி செய்யப்பட்டது.

21 Indian Cases, 314.

கல்கத்தா ஹைகோர்ட்டு.

1911 ஷுத்திய 2-வது அப்பீல் நம்பர் 188.

தீர்ப்பு 30—4—13.

ஜட்ஜிகள்	பங்காபதி சதுராணி (பிரதிவாதி)
ஜஸ்டிஸ் ஸர் அஷுடோஷ் மூகர்ஜி	அ. வாதி
Kt.	V
மிஸ்டர் ஜஸ்டிஸ் பீச்கிராப்ட்	மொணிஹாசிங் அ. பிரதிவாதி (வாதி)

4. [காண்டிராக்ட் ஆக்ட்].

விதந்துவின் சொத்து ஏலம் போடப்பட்டால் அவள் புருஷனு டைய அனந்தரவார்சு அந்த டிக்கிரித் தொகையை கோர்ட்டில் கட் டிவிட்டு அத்தொகைக்கு அந்த விதந்துபேரில் வழக்கிடலாமென் பது.

அப்பீல் வாதி மதூர்லால்சிங் என்பவருடைய விதந்து: கான் ஷியாம் மிஸ்ஸர் என்பவர் இவள் கொடுக்கவேண்டிய குத்தகைத் தொகைக்காக வழக்கிட்டு டிக்கிரி பெற்று இவளுக்குக் குடிக் காணிபாத்திய முள்ள சொத்தை ஜப்தி செய்யாமல் வேறு சொத் தை ஜப்திசெய்து ஏலவிற்று முதல் செய்துவிட்டார். அச்சொத் தை வேறொருவன் ஏலத்திலெடுத்துவிட்டான். அதனால் வாதி தான் அந்தச் சொத்துக்கு அனந்தரவார்சு பாத்தியமுடையவனெ ன்றும், தான் அந்த டிக்கிரித்தொகையை கோர்ட்டில் கட்டிவிடுவ தாகவும், ஏலத்தை ரத்து செய்யவேண்டுமென்றும், சி. பு. கோடு 310 A செக்ஷன்படி மனுக்கொடுத்தான். இது விஷயமாகச் சில ஆக்ஷேபனைகள் நடந்து முடிவில் இவனுடைய மனுவை யங்கீகரி த்து டிக்கிரித்தொகை முதலியன கோர்ட்டில் கட்டப்பட்டதின் பேரில் அந்த ஏலம் ரத்துசெய்யப்பட்டது. வாதி பிறகு அந்தத் தொகை பிரதிவாதி விதந்துவிட மிருந்து தனக்குகிடைக்கவேண்டு மென வழக்கிட்டான். கீழ்க்கோர்ட்டார்கள் வாதியின் தர்வாப்படி

யே தீர்ப்பு செய்துவிட்டார்கள். இதன்பேரில் பிரதிவாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்கிறான்.

வாதி தன் சுயேச்சையாக தாவாவிற்கண்ட தொகையை கோர்ட்டில் கட்டியிருப்பதாகவும், பிரதிவாதிக்குள்ள ஆயுள்பரியந்தம் அனுபவிக்கக்கூடிய பாத்தியமட்டில் ஏலம் போடப்பட்டிருப்பதால், வாதி இந்தத் தொகையை கோர்ட்டில் கட்டி ஏலத்தை ரத்து செய்யும்படியான அவசியமாவது அக்கரையாவது இருக்கவில்லையென்றும், அதனால் வாதியின் வழக்குத்தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றும், உ.இ.அ. 275, இ.லா ரி 16 கல்கத்தா 511, 26 கல்கத்தா 285, 30 கல்கத்தா 550 இந்தத் தீர்மானங்களை அ. வாதியின் வக்கீல் தன் கக்ஷிக்கு ஆதாரமாக வெடுத்துக் காட்டுகிறார். இந்தக் கேசில் எவ்விதமான பாத்தியம் ஏலம் போடப்பட்டது என்பதைப்பற்றி நாம் விசாரிக்கவேண்டிய தனவசியம். இப்போது பார்க்கவேண்டிய விஷயங்கள் இரண்டு. அவையாவன:—(1) கிரயத்தினால் முடிவடைந்த கடனுடைய தன்மை (2) நிறைவேறு நடவடிக்கைகளின் கருத்து. இவ்வித சந்தர்ப்பங்களில் அனந்தரவார்சு ஒருவன் 1882-ம் வருஷத்திய சி. பு. கோடு 310 A செக்ஷன்படி டிக்கிரித் தொகையை கோர்ட்டில் கட்டி அந்த ஏலத்தை ரத்து செய்வானாகில் உ. இ. அ. 131 பக்கம் 143, 23 வீக்லீ ரிபோர்ட் 305 இந்தத் தீர்மானங்களிற் கண்டபடி டிக்கிரி கடன்காரன் சட்டப்படி கொடுக்கவேண்டிய தொகையை அச்சொத்தில் அக்கரையுள்ளவன் அந்த டிக்கிரித்தொகையைக் கோர்ட்டில் கட்டியதாக ஆகிறது. இவ்விதங் கட்டுவது சுயேச்சையாகக் கட்டியதாகமாட்டாது. ஒருவன் கொடுக்கவேண்டிய தொகையை மற்றொருவன் கொடுக்கவேண்டிய அக்கரை என்று காண்டிராக்ட் ஆக்ட்டு 69-வது செக்ஷனிற்சொல்லப்படுவது எந்தவிதமான நஷ்டம் அல்லது அசவுகரியம் என்றும் அர்த்தமாகும். தொகையால் நிஷ்கரிக்கக்கூடியது மட்டில்லல. வாதி தாவாவிற்கண்ட தொகையை கோர்ட்டில் கட்டி ஏலத்தை ரத்துசெய்ய அக்கரையுள்ளவனென்றே தீர்மானிக்கிறோம். வாதிக்கு பிரதிவாதி ரூபாய் 1825ம் அதற்குள்ள வட்டியுஞ் செலவுங் கொடுக்கும்படி தீர்மானிக்கிறோம்.

21 Indian Cases 207

அலகபாத் ஹைகோர்ட்.

1912 ஹூத்திய 2-வது அப்பீல் நம்பர் 1565

தீர்ப்பு 18—6—13.

ஜட்ஜி
மிஸ்டர் ஜஸ்டிஸ் லேயிலி அவர்கள் } க்ளாரென்ஸ் கிர்கபாட்ரிக் அ. வாதி
V
செட்ரும் ஆ. அ பிரதிவாதிகள்

5. [காண்டிராக்ட் ஆக்ட்]

கடன்காரன் பேரிலும் ஜாமீன்தார்பேரிலும் ஏககாலத்தில் வழக்கிடக்கூடாதென்பது.

இறந்த ஒருவருடைய சொத்துக்களுக்கு வாதிகள் எக்ஸிகியூடர்கள். அந்த எஸ்டேட்டில் கோபினாத் என்பன் வேலைபார்த்தான். அவனால் அந்த எஸ்டேட் தொகைகள் அபகரிக்கப்பட்டாலும் வேறெவ்விதத்திலாவது நஷ்டங்களுண்டு பண்ணப்பட்டாலும் செட்ரும் என்பவன் தான் அத்தொகைக்கு ஜவாப்தாரியாகவிருப்பதாக ஜாமீன் பத்திரமெழுதிக்கொடுத்தான். கோபினாத் சில தொகைகளை யபகரித்ததாக வாதிகள் அவன் பேரில் வழக்கிட்டு டிக்கிரிபெற்று அத்தொகையில் சிலபாகமட்டில வசூலித்தார்கள். மற்றத்தொகை வசூலிக்கப்பட ஹேதுவில்லாததால் ஜாமீன்தார் பிரவாதிபேரில் அத்தொகைக்கு வழக்கிட்டார்கள். கீழ்க்கோர்ட்டார் வாதியின் தாவாப்படியே தீர்மானஞ் செய்துவிட்டார்கள். இது விஷயமாகப் பிரதிவாதி அப்பீல் செய்ததில் (1) காண்டிராக்ட் ஆக்ட்டு 139-வது செக்ஷன்படி ஜாமீன்தாரின் ஜவாப்தாரி விலகிவிட்டதென்றும் (2) வாதிகள் நஷ்டமடைந்ததற்கு ருஜுவில்லையென்றும் அப்பீலை யங்கீகரித்து வாதிகளின் வழக்கைத் தள்ளுபடிசெய்துவிட்டார்கள். இதன்பேரில் வாதிகள் இந்தக் கோர்ட்டில் அப்பீல் செய்கிறார்கள்.

இந்த 139-வது செக்ஷன் தாவாக் கேசுக்கு எவ்விதம் பொருத்தமானதென்பது எங்களுக்குத்தெரியவில்லை. செட்ருமை முதல் வழக்கில் சேர்த்திருக்கவேண்டுமென்று கீழ் அப்பீல் கோர்ட்டார் சொல்வதை நாங்கள் ஒத்துக்கொள்ளவில்லை. கோபினாத் தொகையை யபகரித்ததாக ருஜுப்பிக்கப்படுகிற வரையில் செட்ரும் பேரில் எவ்வித வியாஜ்ஜிய மூலமு மேற்படவில்லை. இந்த இருவர்பேரிலு "மேற்படக்கூடிய வியாஜ்ஜிய மூலங்கள் வெவ்வேறு.

கோபினாத்பேரில் ஏற்பட்டவழக்கில் இந்த செட்றாமும் பிரதிவாதியாகச் சேர்க்கப்பட்டிருக்கும் பட்சத்தில் இந்த செட்றாம் பேரில் வியாஜ்ஜியஞ்செய்யப் பருவம்வரவில்லை (premature) என்று இவர் பேரிலேற்படுந் தாவா தள்ளுபடி செய்யப்பட்டிருக்கும். கோபினாத்பேரில் செட்றாம் வழக்கிடக்கூடிய பாத்தியதையை இவரின்னும் இழந்துவிடவில்லை. கோபினாத்தால் அபகரிக்கப்பட்ட தொகையை இவர் கொடுத்துவிட்ட பின்பு தான் இவர்க்கு வியாஜ்ய மூலமேற்படும். வாதிகள் நஷ்டமடைந்ததற்கு ருஜுவில்லையென்று கோர்ட்டார் சொல்வது சரியல்ல; தகுந்த ருஜுக்களிருக்கின்றன. இதனால் கீழ் அப்பீல் கோர்ட்டார் செய்த டிக்கிரியை ரத்துசெய்து முதல் கோர்ட்டார் செய்த டிக்கிரியையுறுதி செய்திருக்கிறோம். அப்பீல் அங்கிகரிக்கப்பட்டது.

21 Indian Cases 437.

சென்னை ஹைகோர்ட்.

1912 ஷுத்திய 2 வது அப்பீல் நம்பர்கள் 323, 433, 434.

தீர்ப்பு 9—10—13.

ஜட்ஜிகள்.	பிடாபூர் ராஜா அ. வாதி.
	V
ஜஸ்டிஸ் சங்கரநாயர் அவர்கள்	கொனி வெங்கடசுப்பராவ்
ஜஸ்டிஸ் சதாசிவய்யர் அவர்கள்	ஆ. அ. பிரதிவாதிகள்.

2. [எஸ்டேட் லாண்டு ஆக்ட்].

எஸ்டேட்லாண்டு ஆக்ட் ஏற்படுவதற்கு முந்தி பூமிக்குடையவருக்கு வரவேண்டிய குத்தகைத் தொகை வசூலிக்கக் காலாவதி தோஷம் இந்த ஆக்ட் 211 - வது செக்ஷன்படி பார்க்கவேண்டியதா அல்லது 77 ஷுத்திய லிமிடேஷனாக்ட்டுப்படி பார்க்கவேண்டியதா வென்பது.

வாதி பிடாபூர் ராஜா தம்முடைய குடிகளிடமிருந்து எஸ்டேட் லாண்டு ஆக்ட் 189-வது செக்ஷன்படி குத்தகைத்தொகை கிடைக்கவேண்டுமென்று கோதாவரி டிப்டி கலெக்டரிடம் பிராது கொடுத்தார். அதன்பேரில் கோதாவரி டிஸ்டிரிக்ட் கோர்ட்டில் அப்பீல் செய்ததில் வாதியின் தாவா காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுப் போய்விட்டதாக வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டதின்பேரில் வாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்கிறார்.

தீர்ப்பு:—ஜஸ்டிஸ் சங்கரநாயரவர்கள்: — எஸ்டேட்லாண்டு ஆக்ட் 210 - வது செக்ஷன்படி கெடுக்கடந்து 3 வருஷங்களுக்குள் வழக்கிடப்படாவிட்டால், காலாவதி தோஷ மேற்பட்டுவிடுகிறது. வியாஜ்ஜிய மூல மேற்பட்ட காலத்தில் வாதி மைனராகவிருந்ததால் லிமிடேஷனாக்ட்டு 7 வது செக்ஷன்படி வாதி மேஜராகி 3 வருடங்களுக்குள் வழக்கிடலாமென்றும், இந்த எஸ்டேட்லாண்டு ஆக்ட் ஏற்படுவதற்கு முந்தியே வியாஜ்ஜிய மூல மேற்பட்டிருப்பதால் அந்த லிமிடேஷனாக்ட்டுதான் தாவா கேசுக்குப் பொருந்தியதென்றும், மேற்சொன்ன 210 வது செக்ஷன் இந்தக் கேசுக்குப் பொருந்தியதல்லவென்றும், வாதியின் வக்கீல் (1912) M. W. N. 652, (1913) M. W. N. 303 இந்தத்தீர்மானங்களைத்தத்தம் கக்ஷிக்குஆதாரமாகஎடுத்துக்காட்டுகிறார். முன்னேற்பட்ட ஆகட் ரத்தாகி புதிய ஆகட் ஏற்பட்டுவிட்டதானால் இந்தப் புதிய ஆக்டின் நிபந்தனைகளைத்தான் நாம் அனுசரிக்கவேண்டும். லிமிடேஷனாக்ட்டு 7-வது செக்ஷன் குத்தகை சம்பந்தமான வழக்குக்கு செல்லத்தக்கதல்லவென்று சென்னை கல்கத்தா ஹைகோர்ட்டுகளில் தீர்மானங்களேற்பட்டிருக்கின்றன. (இ. லா. ரி. 20 சென்னை 476, 17 கல்கத்தா 262). ஜமீன்தார் முதலிய பூமிக்குடையவர்கள் குடிகளை ஹிம்சிக்கக்கூடாது. பழைய கடன்கள் நிர்ப்பந்தமாக வசூலிக்கும் பக்ஷத்தில் குடிகள் தாங்கள் மறு வருஷத்தில் சாகுபடி செய்ய வகையில்லாமல் கஷ்டப்படுவார்கள் என்ற நோக்கத்துடனே சட்டநிருபண சபையார் ஒரு குறுகிய காலத்தை காலாவதி தோஷத்துக்காக ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதனால் கீழ்க் கோர்ட்டு டிக்கிரியை உறுதிசெய்து அப்பீலைச்செலவுடன் தள்ளுபடி செய்கிறோம்.

ஜஸ்டிஸ் சதாசிவய்யர் அவர்கள்:—வாதியின் தாவாவுக்குக் காலாவதிதோஷம் 1877-ம் வருஷத்திய லிமிடேஷனாகட்டுப்படி பார்க்கவேண்டியதா அல்லது எஸ்டேட் லாண்டு ஆகட் 210, 211, இந்தச்செக்ஷன்களின்படி பார்க்கவேண்டியதாவென்பதைப் பற்றிக் கவனிக்கவேண்டும். இந்த லிமிடேஷனாக்ட் 7 - வது 8-வது செக்ஷன்கள் எஸ்டேட் லாண்டு ஆக்டுக்கு சம்பந்தப்படமாட்டாதென்று இந்த ஆகட்டு 211-வது செக்ஷனில் வியக்தமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த எஸ்டேட் லாண்டு ஆக்ட் ஏற்படுவதற்கு முந்தியே வசூலிக்கப்படவேண்டிய தொகை

களுக்கு இந்தப் புதிய ஆக்ட் பொருந்துமா பொருந்தாதா வென்பதை நாம் பார்க்கவேண்டும். இது விஷயமாக ஜட்ஜிகள் ஒற்றுமையான அபிப்பிராயங்கள் சொல்லவில்லை (1912 M. W. N. 552, 1913 M W N. 303). பிரிவிக்கவுன்ஸில் தீர்மானங்களையும் அதற்குமாறாக 1913 M. W N. 303 டிவிஷனல்பெஞ்சு தீர்மான மேற்பட்டிருப்பதையுஞ் சீர்தூக்கிப்பார்க்குமளவில் இந்த டிவிஷனல் பெஞ்சு தீர்மானத்தையே நாம் அனுசரிக்கவேண்டியதெனத் தீர்மானிக்கிறோம். கீழ்கோர்ட்டு டிக்கிரியை ரத்துசெய்து காலாவதி தோஷம் நீங்கலான மற்ற இஷ்ஷியுக்களைப்பற்றிக் கீழ்க்கோர்ட்டார் விசாரித்து முடிவு செய்யவேண்டியதாக நம்பரை கீழ்க்கோர்ட்டுக்கு அனுப்புகிறோம்.

1913 *M. W. N.* 989.

சென்னை ஹைகோர்ட்.

1911 ஷுத்திய 2 வது அப்பீல் நம்பர் 1416.

தீர்ப்பு 7—10—12.

ஜட்ஜிகள்- ஜஸ்டிஸ் சுந்தரமய்யரவர்கள்	காஜிசாயத் ஹுஸ்ஸென் சாகிப் அ. வாதி.
	V
ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள்	எட்ஜி நரசிம்மப்பா ஆ. அ. பிரதிவாதிகள்.

1 [டாயேஜ் சட்டம்].

ஒருவன் தான் போதுப் பாதையை அதிகமாக அனுபவிக்குங் காரணத்தினால், வேறொருவன் அந்தப் பாதையை அடைக்கக்கூடாதென்று வழக்கிடக்கூடாதென்பதும். அவ்விதம் அடைப்பதினால் நஷ்ட பரிகாரம் எந்தெந்த இனங்களிற் கோடுபடலாமென்பதும்.

பிரதிவாதி ஒரு பொது வண்டிப்பாதையை அடைத்து ஒரு அணை போட்டதாகவும், அது பிரிக்கப்பட இன்ஜங்ஷன் கொடுபட வேண்டுமென்றும், அந்தத் தடையினால் தனக்குண்டாகிய நஷ்டம் 8 அணா தனக்குக் கிடைக்கவேண்டுமென்றும் வழக்கிட்டார். தாவாவிற்கண்ட ஸ்தலம் வண்டிகள் போகத் தக்க பொதுப் பாதையல்லவென்றும், வாதிக்கு யாதொரு முக்கிய நஷ்டமுமுண்டாகவில்லையென்றும்,பிரதிவாதி கக்ஷியாடினார். தாவாப் பாதையில்

வாதிக்கு வசதி பாத்தியமுண்டென்றும்,அதைப்பிரதிவாதி தடைசெய்ததால் வாதி கேட்கும் நஷ்டங் கொடுபட வேண்டியதென்றும் டிஸ்டிரிக்ட் முனிசீப் தீர்ப்பு செய்துவிட்டார்கள். இதைப் பற்றிப் பிரதிவாதி அப்பீல் செய்ததில் வண்டிகள் போகத்தக்க பொதுப் பாதையில் பிரதிவாதி அணைபோட்டுத் தடுத்ததாகவும், ஆனால் வாதி தனக்கு முக்கியமான நஷ்டமுண்டானதாகத்தன்னுடைய பிராதிற் சொல்லவில்லையென்றும், அதுவிஷயமாக ருஜுவும் விடவில்லையென்றும், வாதி கேட்கும் நஷ்டங் கிடைக்கத் தக்கதில்லையென்றும், வாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்கிறார்.

தாவாவிற்கண்ட ஸ்தலத்தின் வழியாக வாதி தன்னுடைய நிலத்துக்குப்போகவேண்டியிருக்கிறதென்றும்,பிரதிவாதி அதைத் தடைசெய்து விட்டதால் தனக்கு விசேஷ அசவுகரியங்களுண்டாய்விட்டதாகவும், தன்னுடைய வண்டியை அப்பாதைவழியாக ஓட்டிப்போனதாகவும், பிரதிவாதி அந்த வண்டி போகமுடியாமல் தடைசெய்ததால் தனக்கு நஷ்டமுண்டாய் விட்டதாகவும், இந்த அப்பீலில் வாதிக்கப்படுகிறது. வாதி தன் வண்டியில் கற்கள் ஏற்றிக்கொண்டு போனதாகவும், பிரதிவாதியின் தடையால் கற்களையவ்விடத்தில் போட்டுவிட்டு வண்டி திரும்பிவந்து விட்டதாகவும் இந்தக்கேஸ் விசாரணை காலத்தில் ருஜுப்பிக்க யத்தனஞ் செய்தார். அந்தக் கற்களை யெறிந்து விட்டதினாலுண்டாகிய நஷ்டந் தனக்குக் கிடைக்கவேண்டுமென்பது வாதியின் கக்ஷியல்ல; சப் ஜட்ஜியவர்கள் குறிப்பிட்டபடி வாதி இது விஷயமாகத் தன் பிராதிலுஞ் சொல்லவில்லை. இப்போது நாம் பார்க்கவேண்டியது வாதி தாவாப்பாதைவழியாகப்போகாமல் தடைசெய்யப்பட்டதால்,முக்கிய நஷ்டங்களுண்டாயிருக்கின்றனவா என்பது தான். ஒருவன் மற்றொருவனைப்பார்க்கிலும் ஒரு பாதை வழியாக ஜாஸ்தியாகப் போகவேண்டியதாகவிருந்து ஒருவிதத்தடையினால் தனக்கு ஜாஸ்தியான அசவுகரியங்களிருப்பதைக் கொண்டு மட்டில் அந்தப் பாதைத் தடைசெய்யப்பட்டதற்காக வழக்கிடக் கூடாது. இவ்வித வழக்குக்கொண்டுவரத் திரவியச் செலவான நஷ்டமுண்டாக வேண்டுமென்பதவசியமில்லை யென வாதி வக்கீல் இ. லா. ரி 22 கல்கத்தா 551 தீர்மானத்தைத் தன்கக்ஷிக்கு ஆதாரமாகஎடுத்துக் காட்டுகிறார். இந்தக் கேசிற்கண்ட விஷயங்கள் வேறு,இது கால்நடைகள் மேயக்கூடியஇடத்துக்குப்போகும்படியான பாதை.அந்

தப்பாதையைத்தவிர வேறு பாதையில்லாததால் வாதிக்குமுக்கியமான நஷ்டமுண்டாகித் தீர்ப்பு செய்திருக்கிறார்கள். இ. லா. ரி 14 சென்னை 177 ஜஸ்டிஸ் முத்துசாமி அய்யரவர்களுடைய தீர்மானமும் இதைப்போன்றதே. தாவாக் கேஸ் அப்படிக்கல்ல. வாதி தனக்கு முக்கியமான நஷ்டமுண்டாயிருப்பதாகத் தன்னுடைய பிராதிற்சொல்லவுமில்லை. அதுவிஷயமாக ருஜுவுமில்லை. 4 அணு 8 அணு நஷ்டமுண்டானது முக்கியமான நஷ்டமென்று சொல்லக்கூடாது. இதைப்போன்ற வழக்குகளுக்குஇடங்கொடுத்தால்ஒவ்வொருவரும் புத்திக்கூர்மையுள்ள வக்கீல்களின் யோசனையின்பேரில் முக்கியமல்லாத பலநஷ்டங்களுக்கும் வழக்குக்கொண்டுவருவார்கள். ஆகையால் வாதியின் அப்பீல் செலவுடன்தள்ளுபடி செய்யப்பட்டது.

1913 M - N - W - 991.

சென்னை ஹைகோர்ட்.

1912 ஷெத்திய 2-வது அப்பீல் நம்பர் 808.

தீர்ப்பு 9—10—13.

ஜட்ஜிகள்.	
ஜஸ்டிஸ் எயிலிங் அவர்கள்	கொண்டபானெனி கோடய்யா ஆ. அ. வாதிகள்.
	V
ஜஸ்டிஸ் டியாப்ஜி அவர்கள்.	கங்காரு சேஷய்யா என்கிற பெத்தசேஷய்யா ஆ. அ. பிரதி வாதிகள்.

3. [ஸ்பெஸிவிக் ரிலீவ் ஆக்ட்.]

அவிபக்த குடும்ப மானேஜர் அந்தக் குடும்பத்துக்காக தான் ஒரு சொத்தை வாங்க ஒருவனிடம் உடன் படிக்கை செய்து கொண்டு அதுவிஷயமாக வழக்கிட வேண்டியதாக விருந்தால் அந்தக் குடும்ப மெம்பர்கள் எல்லோரும் வாதிகளாகச் சேர்ந்து வழக்கிடவேண்டியது அவசியமில்லையென்பது.

வாதி தன்னுடைய குடும்பத்துக்காக பிரதிவாதிகளுக்குச் சொந்தமான சில நிலத்தை வாங்க வுடன் படிக்கை செய்து கொண்டதாகவும், முதல் பிரதிவாதி அந்த வுடன்படிக்கையின் படி சாசனஞ் செய்து கொடுக்கவில்லையென்றும், அதனால் பிரதிவாதிகளால் அந்த உடன் படிக்கையின் படி வாதிகள் பெய

ருக்குச்சாசனஞ்செய்து கொடுக்கப்படவேண்டுமென்றும், ஸ்பெஸிவிக் ரிலீவ் ஆக்டுப்படி வழக்கிட்டார்கள். வாதிகளின் குடும்ப மெம்பர்கள் சிலர் வாதிகளாகச் சேர்ந்து வழக்கிட வில்லை. ஒருவர் வாதியாகச்சேராததால் அவர் பிரதிவாதி வர்க்கத்திற் சேர்க்கப்பட்டார். தாவாவிற் கண்ட தஸ்தாவேஜி சாசனமாக எண்ணப்படவேண்டுமென்றும் அது ரிஜிஸ்டிரேஷனுக்ட்டு 17-வது செக்ஷன்படி ரிஜிஸ்டர் செய்யப் படாததினால் வாதியின் வழக்கு செல்ல மாட்டாதென்றும், அவிபக்த குடும்பஸ்தர்களில் எல்லோருடைய நன்மைக்காகவும் தாவா செய்யப்பட்டிருப்பதால் அவர்கள் எல்லோருஞ் சேர்ந்து வழக்குக் கொண்டு வந்திருக்க வேண்டியது மெத்த அவசியமானதென்றும், அவ்விதஞ் சேர்ந்து வழக்குக்கொண்டுவரப் படாததினால் வாதிகளின் தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றும், பிரதிவாதிகள் கக்ஷியாடினார்கள். கீழ்க்கோர்ட்டார் வாதிகளுக்கு அனுகூலமாகத் தீர்ப்பு செய்து விட்டதின் பேரில் பிரதிவாதிகள் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்கிறார்கள். இவர்கள் தங்கள் கக்ஷிக்கு ஆதாரமாக இ. லா. ரீ. 34 கல்கத்தா 832. 1912, M. W. N. 413 இந்தத் தீர்மானங்களை யெடுத்துக் காட்டுகிறார்கள்.

ஸ்பெஸிவிக் ரிலீவ் ஆக்ட்டு 22-வது செக்ஷன் படி டிக்கிரி செய்யவேண்டியது கோர்ட்டாருடைய அபிப்பிராயத்தைப் பொறுத்ததாக விருக்கிறது. இவ்வித வுடன்படிக்கையினால் நன்மையடையக்கூடியவர்கள் வாதிகளாகச் சேர்ந்து வழக்கிடாத விஷயத்தைப்பற்றிக் கோர்ட்டார் ஆழ்ந்து யோசித்து யுக்தப்படி தீர்மானிக்க வேண்டும். பிரதிவாதிகள் எடுத்துச் சொல்லுந் தீர்மானங்களிற் கண்ட விஷயங்கள் வேறு. சென்னை ஹைகோர்ட்டார் தீர்மானத்தில் நன்மை யடையக் கூடிய மூவரில் ஒருவர் தான் வாதியாக விருந்து வழக்கிட்டார். கல்கத்தா ஹைகோர்ட்டார் தீர்மானத்தில் எத்தனை பேர்கள் வாதிகளாகச் சேர்ந்து வழக்கிட்டார், எத்தனை பேர்கள் பிரதிவாதி வர்க்கத்திற் சேர்க்கப்பட்டார்களென்று தெரியவில்லை. தாவாவிற் கண்ட விஷயங்கள் அவ்விதமல்ல. முதல் வாதி பேருக்குச் சாசனஞ் செய்ய வேண்டியதாகத்தான் உடன் படிக்கை யேற்பட்டது. வாதிகளின் குடும்ப நன்மைக்காக அந்தச் சாசனவுடன்படிக்கை யேற்பட்டதால் அந்தக் குடும்பஸ்தர்கள் எல்லோர் பேர்

களாலும் சாசனஞ் செய்யப்பட வேண்டு மென்று பிராதிற் கேட்கப் பட்டிருக்கிறது. எல்லா வாதிகள் பேராலுஞ் சாசனஞ் செய்யப்பட வேண்டியது அவசியமில்லை. உடன் படிக்கை எழுதி வாங்கிய முதல் வாதி பேருக்கு மட்டில் சாசன மேற்பட்டால் போதுமானது. அந்தப்படி பிராதைத் திருத்திக் கொள்ள அனுமதி கொடுக்க வேண்டுமென்று இந்தக் கோர்ட்டில் முதற்றடவையாக வாதிகளின் வக்கீல் கேட்டுக் கொள்ளுகிறார். இந்தக் கேசில் கோர்ட்டார் தங்களுடைய அபிப்பிராயத்தை யுபயோகிக்கக் கூடுமாதலால் வாதிகளின் வக்கீல் கேட்டுக் கொண்டபடி திருத்திக் கொள்ளும்படி அனுமதி கொடுத்தோம். கீழ்க்கோர்ட்டு டிக்கிரி அந்தப்படி திருத்தப் படவேண்டியதாகத் தீர்மானிக்கிறோம். வேறொரு திருத்தம் செய்யப் படவேண்டியது மெத்த அவசியமாகவிருக்கிறது. 2-ம் பிரதிவாதி முதல் பிரதிவாதியின் அவிபக்த மைனர் குமாரன். தாவா A அடையாள உடன் படிக்கையில் 2-ம் பிரதிவாதியின் பேர் காணப் படவில்லை. முதல் பிரதிவாதி தனக்காகவும் தன்னுடைய மைனர் குமாரனுக்காகவும் தாவா உடன் படிக்கை யெழுதிக் கொடுத்ததாக அதிற் சொல்லப் படவில்லை. முதல் பிரதிவாதி மட்டில் தாவா உடன் படிக்கைப்படி சாசனஞ்செய்து கொடுக்கும்படி டிக்கிரி செய்யப்பட வேண்டியதே யன்றி இரண்டு பிரதிவாதிகளுஞ் சேர்நது சாசனஞ் செய்து கொடுக்கும் படி கீழ்க்கோர்ட்டார் டிக்கிரி செய்தது பிசகென்று பிரதிவாதிகளின் வக்கீல் இ.லா.ரி. 26 சென்னை 74, 32, சென்னை 320 இந்தத் தீர்மானங்களை தம் கக்ஷிக்கு ஆதாரமாக எடுத்துக் காட்டுகிறார். தகப்பனுடைய பூர்வகடன்களைத் தீர்ப்பதற்காக தாவா வுடன் படிக்கையிற் கண்ட சாசன யேற்பாடு நடந்திருப்பதாக சப் ஜட்ஜி கண்டு பிடித்துத் தீர்ப்பு செய்திருப்பதால் 2-ம் பிரதிவாதியாலும் தாவா சாசன மெழுதிக் கொடுக்கப்பட வேண்டியது அவசிய மென்று வாதிகளின் வக்கீல் சொல்லுகிறார். 2-ம் பிரதிவாதி இந்தத் தாவாவுக்குக் கட்டுபட்டவனென்பதைப் பற்றி டிஸ்டிரிக்ட் முனிசிப் கோர்ட்டில் எவ்வித இஷ்ஷியுவு மேற்படவில்லை. இது விஷயங்களைப் பற்றி உபயதாப்பிலும் ருஜூவிட்டிருப்பதுஞ் சந்தேகமாக விருக்கிறது. இந்த வழக்கிலேயே 2-ம் பிரதிவாதி கட்டுப்படக் கூடியவனென்று விசாரித்து முடிவு செய்யலாம். வாதியின் பிராதுக்கு அந்த அர்த்தஞ் செய்யக் கூடவில்லை. ஆகையால் முதல் பிரதிவாதி மட்டில் தாவா சாசனம் எழுதிக்கொடுக்கும் படி தீர்மானிக்கிறோம். 2-ம் பிரதி வாதியின் பாத்தியம் வேறு வழக்கில் தீர்மானிக்கப் படவேண்டும்'

1913, M W N 995.

அலகபாத் ஹைகோர்ட்.

1913 ஷுலத்திய 2-வது அப்பீல் நம்பர் 241.

தீர்ப்பு 15-7-13.

ஜட்ஜிகள் ஸர் ஹென்ரி ரிச்சேர்ட்ஸ் Kt. சீவ் ஜஸ்டிஸ் ஜஸ்டீஸ் ஸர் P. C. பனர்ஜி Kt.	அப்டல் ஹாபிட் அ. வாதி V அபடல் மாஜிட் அ. பிரதிவாதி

4. [சாக்ஷிய சட்டம்]

ஸ்தாவர சொத்து பிரிவினை விஷயமாக தகுந்த தஸ்தாவேஜி ஏற்பட்டிருந்தால், அதன் ஷரத்துக்கு விரோதமாக வேறு தொகை ஒருவர் பாகத்துக்குக் கொடுக்கவேண்டுமென்று வாய்மொழியாக ருஜூவிடுவது செல்லத்தகுந்ததல்லவென்பது.

வாதியும் பிரதிவாதியும் சகோதரர்கள். அவர்கள் தங்களுக்குச் சொந்தமாயுள்ள வீட்டை பாகப்பிரிவினை செய்துகொண்டார்கள். பிளானிற் கண்டபடி பிரிவினை செய்யப்பட்டது. இது விஷயமாக வேற்பட்ட ராஜீ எக்கிரிமெண்டுப்படி டிக்கிரியுஞ் செய்யப்பட்டது. வாதி தன்னுடைய பாகம் சிறிதாக விருப்பதால் அதற்காகப் பிரதிவாதி தனக்கு ரூபாய் 600 கொடுப்பதாக ஒப்புக்கொண்டிருப்பதாகவும், அத்தொகை கிடைக்கவேண்டுமென்றும் வழக்கிட்டார். இது விஷயம் ராஜீ எக்கிரிமெண்டில் சொல்லப்படவில்லை. இவ்விஷயம் எழுத்து மூலமாக மேற்படாததற்கும், டிக்கிரியில் சொல்லப்படாததற்குங் காரண மென்னவென்றால் இத்தொகை மூன்றாவது மனிதன் வசமிருந்துவந்ததென்றும் அத்தொகை வாதிக்குக் கொடுபட்டுவிடுமென்று நினைத்ததாகவுஞ் சொல்லப்படுகிறது. வாதி சொல்வது உண்மையானதென்று கீழ்க்கோர்ட்டார் வாதியின் தாவாப்படியே தீர்ப்பு செய்துவிட்டார்கள். இதைப்பற்றி அப்பீல் செய்ததில் சாக்ஷிய சட்டம் 9-வது செக்ஷனுக்கு விரோதமாக வாதியின் வாய்மொழியான சாக்ஷியத்தை நம்பித் தீர்ப்பு செய்தது சட்ட விரோதமானதென்று கீழ்கோர்ட்டு டிக்கிரி ரத்து செய்யப்பட்டது. இதன்பேரில் வாதி இந்தக் கோர்ட்டில் அப்பீல் செய்திருக்கிறார்.

சாக்ஷிய சட்டம் 92-வது செக்ஷன் கீழுள்ள 2-வது விலக்கு தன் கக்ஷிக்கு ஆதாரமானதென்று அப்பீல் வாதி சொல்லுகிறார். அடியிற் சொல்வது அந்த செக்ஷன்:—

"ஒரு உடன்படிக்கை, இனாம் அல்லது வேறுவிதமான சொத்துப் பாரதீன விஷயமான ஷரத்துக்கள், சட்டப்படி தஸ்தாவேஜி மூலமாக எழுதப்பட வேண்டிய விஷயங்கள். மேலே சொன்ன செக்ஷன்படி ருஜுப்பிக்கப்பட்டால், அதை மறுத்துச் சொல்வதற்காவது, திருத்துவதற்காவது, சேர்ப்பதற்காவது, குறைப்பதற்காவது அந்த தஸ்தாவேஜிகள் செய்து கொண்ட கக்ஷிக்காரர்களுக்குள்ளாவது அல்லது சம்பந்தப்பட்ட அவர்களின் பிரதிநிதிகளுக்குள்ளாவது வாய்மொழியானது எக்ரிமெண்டு அல்லது ஸ்டேட்மெண்டு சம்பந்தப்பட்ட எவ்வித ருஜுக்களும் விடக்கூடா.

அடியிற் சொல்வது 2-வது விலக்கு:—

தஸ்தாவேஜியிற் சொல்லப்படாததும் அதன் ஷரத்துகளுக்கு ஒற்றுமையின்மை யில்லாதிருப்பதுமான எந்த விஷயங்களைப் பற்றியும் யாதொரு தனிமையான வாய்மொழியான உடன்படிக்கை யிருப்பதைப்பற்றி ருஜுப்பிக்கலாம்.

தாவாக் கேசில் எழுத்து மூலமாக உபயக்கக்ஷிக்காரர்களுஞ் செய்துகொண்ட தஸ்தாவேஜியானது சகோதரர்கள் தங்கள் சொத்துக்களை பாகப்பிரிவினை செய்து கொள்வதற்காகவும் வழக்குச் செலவுகளைப்பற்றி எவ்வித ஏற்பாடு செய்து கொள்ளுகிறதென்பதைப்பற்றியு மேற்பட்டது. அது நன்றாக யோசித்து ஒழுங்காக எழுதப்பட்டது. சில இனப்பத்துக்காகத் தொகை கொடுபடவேண்டியதாகச் சொல்லப்படும் எக்ரிமெண்டு அந்தக் கண்டிராக்ட்டின் ஒரு பாகமாக விருக்கவேண்டியது மெத்த அவசியமானது. இது எழுத்துமூலமாக ஏற்பட்டிருக்க வேண்டியது மெத்த அவசியமானது.

இக்காரணத்தினால் கீழ் அப்பீல் கோர்ட்டாருடைய டிக்ரி சரியானதென்று அதை யுறுதிசெய்து அப்பீலைச் செலவுடன் தள்ளுபடி செய்கிறோம்.

21 Indian Cases 305.

கல்கத்தா ஹைகோர்ட்.

1910 ஹுத்திய அப்பீல் நம்பர் 539.

தீர்ப்பு 2—8—12.

ஜட்ஜி
மிஸ்டர் ஜஸ்டிஸ் சவுத்திரி }

சரத்சந்திர கோஷ் வாதி
V
பிரதாபசந்திரகோஷ் பிரதிவாதி

1. [டிரஸ்டு ஆக்ட்].

இன்னவித தர்மஞ்செய்கிறதென்று குறிப்பிடாமல் டிரஸ்டியின் இஷ்டப்படி பொது ஜனப்பிரயோஜனமான தர்மங்களைச் செய்கிறதென்று டிரஸ்டு பத்திரமேற்பட்டிருந்தால் அது செல்லத்தகுந்ததல்லவென்பது.

வாதி தன்னுடைய தாயார் பத்மாவதி தாஸியாற் செய்து வைக்கப்பட்ட டிரஸ்டு பத்திரம் செல்லத்தகுந்ததல்லவென்றும், நடவடிக்கைக்குக் கொண்டு வரக்கூடாததாக விருப்பதாகவும், அதனால் அவ்விஷயத்துக்கேற்பட்ட சொத்துக்களைத் தானும் அவளுடைய மற்றவார்சுகளும் பாகப்பிரிவினை செய்து கொள்ளவேண்டுமென்றும் பாத்தியஸ்தாபன வழக்கு செய்தார். வாதி இது விஷயமாக சாக்ஷி விசாரிக்கப்பட வேண்டியதில்லை யென்றும், டிரஸ்டு பத்திரம் 6-வது பாராவிற் சொல்லப்பட்டவை செல்லுபடியற்றதென்றும் நடவடிக்கைக்குக்கொண்டுவரக் கூடாததாக விருப்பதாகவுஞ் சொல்லுகிறார், அந்தப் பாராவின் வாசகங்களாவன:-

மேலேசொன்ன எல்லாச் செலவுகளுஞ் செய்தபின் மிகுதியிருக்குந் தொகையில் ஆயிரம் ரூபாய்க்கு மேற்படாத தொகை ஏழைகள், குருடர்கள், ஆதரவற்றவர்கள் இவர்களுக்கு உதவி செய்வதற்காகவும், கல்விகற்பிப்பதற்காகவும், உபநயனச் செலவுகளுக்கும், விவாக விஷயமாக வேற்படும் சங்கடங்களை நிவர்த்தி செய்வதற்காகவும், அல்லது பொதுநன்மையான விஷயங்களுக்கும் அதாவது டிரஸ்டியின் யுக்தப்படி ஔஷதசாலை, தர்மவைத்திய சாலை, தர்மஸ்தாபன சங்கங்கள், பள்ளிக்கூடங்கள், அல்லது பிள்ளைகளுக்குக் கல்விகற்பித்தல், ஏழைகளுக்கு அன்னம்போடுதல்முதலியன, விவாகமுதலியன, குளம் வெட்டுதல், பாலங்கட்டுதல் முதலியன டிரஸ்டியானவர் ஆயிரம் ரூபாய்க்கு மேற்படாமல் செலவழிக்க வேண்டும்; எந்தெந்தத் தர்மங்களில் தொகை

செலவழிக்க வேண்டு மென்பது டிரஸ்டியின் அபிப்பிராயத்தைப் பொறுத்தது. மேற்சொன்ன தர்மங்கள் என்னுடைய சந்ததியார்களுக்கும் பொருந்தியது.

இவைகளைப்போன்ற ஷரத்துகளுள்ள டிரஸ்டு பத்திரங்கள் செல்லுபடி யற்றதெனத் தீர்மானங்களேற்பட்டிருக்கின்றன. (இ-லா-ரி 31 பம்பாய் 583, 1905 A.C. 124 இவைகளைப்பார்க்க). இவ்வித ஷரத்துக்களைத் திருத்திப் பொருந்திய தர்மங்கள் செய்யும்படி தீர்மானிக்கக் கோர்ட்டாருக்கு அதிகாரமில்லை. (இ. லா. ரி 26 பம்பாய் 632, 23 பம்பாய் 725,4 கல்கத்தா 508 இவைகளைப் பார்க்க). ஆகையால் 6-வது பாராவிற் கண்ட விஷயங்கள் செல்லுபடி யற்றதும் நடவடிக்கைக்குக் கொண்டு வரமுடியாத தாகவு மிருப்பதாகத் தீர்மானிக்கிறோம். விசேஷ செலவுக்கிட மன்னியில் இது விஷயமாக ஒரு வித ஏற்பாடு (Scheme) செய்து கொள்ளுவதாக உபயகக்ஷிக் காரர்களுந் தெரிவித்துக் கொள்ளுவதால் அந்தப்படி செய்ய அனுமதி கொடுக்கிறோம்.

21 Indian cases 194.

கல்கத்தா ஹைகோர்ட்.

1909 ஷுத்திய அப்பீல் நம்பர் 222.

தீர்ப்பு 25—2—13.

ஜட்ஜிகள் ஜஸ்டிஸ் ஸர் ரிச்சேர்ட் ஹாரிங்டன் பாரிஸ்டர் ஜஸ்டிஸ் ஸர் ஹெர்பர்ட் கார்ண்டப் Kt.	ஹரிஹர் பிரசாத்சிங் வாதி V ஷியாம்லால் சிங் பிரதிவாதி

1. [கோர்ட் பீஸ் ஆக்ட்]

ஒரு டிக்ரி மோசடியான தென்றும் போர்ஜரி யென்றும், அதற்குத் தன் சொத்துக்கள் கட்டுப்படமாட்டாவென்றும் வழக்கிடுபவன் அந்த டிக்கிரியின் பொருமானத்தின் பேரில் ஸ்டாம்பு கட்டி வழக்கிடவேண்டுமேயல்லது, சோத்தின் பொருமானத்தின்பேரில் ஸ்டாம்பு கட்டக்கூடாது என்பது.

ரூபா 2794-14-3க்கு ஏற்பட்ட ஒரு டிக்கிரியானது சிருஷ்டிணை செய்யப்பட்டதென்றும், மோசடியான தென்றும், பொய்யானதென்றும், சதியோஜனையின் பேரிலேற்பட்டதென்றும், நடவடிக்கைக்குக் கொண்டுவரக்கூடாதென்றும், நிறைவேற்ற அருகமற்றதென்றும் தீர்மானிக்கப்படவேண்டுமென்றும், தன்னுடைய ரூபாய் 7000 பொருமானமுள்ள சொத்துக்கள் அந்த டிக்கிரிக் கடனுக்கு ஏலம்போடப்படக்கூடாதென்று தீர்மானிக்கவேண்டுமென்றும் வாதி வழக்கிட்டார். இந்த முழுச் சொத்துந் தனக்குப் பாத்தியமில்லையென்று கோர்ட்டாருக்குத்தோற்றினால் தன்பாகச் சொத்தாவது அந்த டிக்கிரிக்குக் கட்டுப்பட மாட்டாதெனத் தீர்மானிக்கப்பட வேண்டுமென்றுங் கேட்கப்பட்டிருந்தது. கோர்ட் பீஸ் ஆக்ட்டு 7-வது செக்ஷன் உட்பிரிவு 5 இதன்படி அந்த நிலத்தின் சர்க்கார் கிஸ்திக்கு ஒன்றுக்கு பதின்மடங்குக்குள்ள தொகைக்கு ஸ்டாம்பு பிராதி லொட்டப்பட்டிருந்தது. இதற்குச் சரியான ஸ்டாம்பு ஒட்டப்படவில்லையென்று கீழ்க் கோர்ட்டார் பிராதைத்தள்ளுபடி செய்துவிட்டதின்பேரில் இந்தக் கோர்ட்டில் அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது.

வாதி சொல்லும் செக்ஷன் சொத்து வசமாகவேண்டியதற்காக ஏற்பட்டது. இந்தத் தாவா நிலங்கிடைக்க வேண்டுமென்ற வழக்கல்ல. இதன் முன்னாற்கண்ட செக்ஷன்படி ஸ்டாம்பு கட்ட வேண்டும். டிக்கிரி மோசடியானதென்று தீர்மானிக்கப்படவேண்டியதற்காக தாவா செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால் அந்த டிக்கிரித்தொகை ரூபாய் 2794 சொச்சத்தின் பேரில் ஸ்டாம்பு கட்டப்படவேண்டும். கோர்ட்டு பீஸுக்கு ஒருவிதமாகவும் ஜுரிஸ்டிக்ஷனுக்காக வேறு விதமாகவும் வாதி மதிப்பிட்டது பிசகு. இரண்டும் ஒரே விதமாகத்தான் மதிப்பிடவேண்டும். இந்த டிக்கிரித் தொகையின் பேரிற்றான் இந்த இரண்டு விஷயமு மொன்றாக மதிப்பிடவேண்டும். ஆகையால் வாதியின் அப்பீல் செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

21 Indian Csses 404.

சென்னை ஹைகோர்ட்.

1913 ஷுத்திய கிரிமினல் ரெவிஷன் மனுக்கள் 82-349.

தீர்ப்பு 14—7—13.

ஜட்ஜி ஜஸ்டிஸ் சதாசிவய்யர் அவர்கள்	பாரதிவலாப்பில் மொய்தீன் அப்பீல் மனுதாரன்

8. [கிரிமினல் புராஸீஜர் கோடு]

தகுந்த சொத்துடையவர் வசத்தில் ஒருவனுடைய பிள்ளையிருந்தாலும் தகப்பன் அந்தப் பிள்ளைக்கு ஜீவனாம்சங் கொடுக்கக் கடமைப்பட்டவனென்பது.

தெல்லிச்சேரி ஜாயிண்டு மாஜிஸ்டிரேட் செய்த தீர்மானம் ரத்தாக வேண்டுமென்று ஹைகோர்ட்டில் கி. பு. கோடு 435 439-வது செக்ஷன்களின்படி மனு.

மனுதார் மகம்மதிய மதம் மாப்பிளா வகுப்பைச்சேர்ந்தவர். இவர்கள் வகுப்பார் மறுமுக்தாயம் சட்டத்தை யனுசரித்து நடப்பவர்கள். மனுதார் தன்னுடைய மனைவியை வேண்டாமென்று விலக்கிவிட்டார். இவருடைய இரண்டு குழைந்தைகள் அந்த மனைவியிடத்திலே யிருந்துவந்தன. அவள் இந்தக் குழந்தைகளுக்கு ஜீவனாம்சங் கிடைக்கவேண்டுமென்று கி. பு. கோடு 488வது செக்ஷன்படி தன் புருஷன்பேரில் வழக்கிட்டதில் இந்தக் குழந்தைகளுக்கு மாதம் 1-க்கு ரூபாய் 6 விதம் அ. மனுதார்கொடுக்க வேண்டியதாகத் தீர்மானித்தார்கள். அப்பீல் மனுதார் அடியிற் கண்ட ஆதாரங்களைக்கண்டு இந்தக் கோர்ட்டில் மனுக்கொடுத்திருக்கிறார்.

(1) நல்ல சொத்துள்ள குடும்பத்தில் பிள்ளைகள் வளர்க்கப்பட்டு வருவதால் மனுதார் அவர்களுக்கு ஜீவனாம்சங் கொடுக்கும்படி தீர்ப்பு செய்தது சட்டவிரோதம்.

(2) மனுதார் வசமிருக்கவேண்டிப் பத்து வயது குழந்தைக்கு கோர்ட்டார் ஜீவனாம்சங் கொடுக்கும்படி உத்தரவு செய்தது சட்ட விரோதம்.

(3) மனுதார் இந்தப்பிள்ளைகளை அழைத்துப்போய் தான் அவர்களை சம்ரக்ஷித்து வருவதாகச் சம்மதித்தால் கீழ்க் கோர்ட்டார் செய்த உத்தரவு சட்ட விரோதமானது. மனுதார் மகதிய லாவை யனுசரித்து நடந்துவந்தால் இரண்டாவது சொன்ன கக்ஷி நியாயமானது தான். இவர்கள் மறுமுக்தாயம் சட்டத்தை யனுசரித்து நடந்து வருவதால் இந்த கக்ஷியிவருக்கு உபயோகப்படமாட்டாது. கி. பு. கோடு 488-வது செக்ஷன் கிளாஸ் (4) தன் புருஷனுடன் சேர்ந்து வசிக்கமாட்டேனென்றுசொல்லும் மனைவிக்கு ஏற்பட்டதே யன்றி சட்டப்படிக்குள்ள கார்டியன் வசமுள்ள

குழந்தைகளுக்கு அது பொருந்தாது. அதனால் மூன்றாவது கக்ஷியும் பிரயோஜனமில்லை. ஜீவனஞ் செய்ய மார்க்கமில்லாத குழந்தைகளுக்கு மட்டில் ஜீவனாம்சங் கொடுக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறதே யன்றிச் சொத்துள்ள குழந்தைகளுக்குச் சொன்னதல்ல வென்று மனுதார் வக்கீல் கக்ஷி சொல்லுகிறார். இந்த செக்ஷனுக்கு அவ்வித அர்த்தஞ் செய்வது சரியல்ல. இரோகர் இடமாகவும் புத்திக்கூர்மை யுடையவுமான பிள்ளைகளுக்காக சொல்லப்பட்டன. வறுமையைப்பற்றியாவது, ஜீவனஞ் செய்ய மார்க்கமின்மையைப்பற்றியாவது சொல்லப்படவில்லை. ஆனதால் முதலாவது கக்ஷியுஞ் சரியானதல்ல. ஆனதால் அப்பீல்தாரன் மனுத் தள்ளுபடி செய்யப்பட்டது.

1913 *M. W. N.* 997.

சென்னை ஹைகோர்ட்.

1912 வருஷத்திய சிவில் ரிவிஷன் மநு நம்பர் 38.

தீர்ப்பு 23—10—13.

ஜட்ஜிகள்	பொன்னுசாமிபிள்ளை ஆ அ. மனுதார்கள்
	V.
ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள் ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர் அவர்கள்	சொக்கலிங்கம்பிள்ளை வாதி

9. [கிரிமினல் புராஸீஜர் கோடு].

நிறைவேறு மனு நடவடிக்கைகளில் பிசகுகள் நடந்தால் அந்த நடவடிக்கையிலேயே சாங்கிஷன் கொடுக்க வேண்டுமே யல்லது, அது முடிந்த பின்பு வேறு மனுவின்பேரில் சாங்கிஷன் கொடுக்கக் கூடாதென்பதும், அவ்வித சாங்கிஷன் கொடுக்க ஹைகோர்ட்டாருக்கு அதிகாரமுண்டென்பதும்.

சீர்காழி டிஸ்டிரிக்ட் முனிசிப் கோர்ட்டு 1911-ம் வருஷத்திய 594 நம்பர் நிறைவேறு மனு நடவடிக்கைகளின் பேரில் 1908-ம் வருஷத்திய 5-வது ஆக்ட்டு 115-வது செக்ஷன்படி ஹைகோர்ட்டில் மனுக்கொடுக்கப்பட்டது. 1911-ம் வருஷத்திய 166 நம்பர் நிறைவேறு நடவடிக்கையில் இ. பி. கோடு 186-வது செக்ஷன்படி குற்றம் நடந்ததாக சீர்காழி டி. மு. கோர்ட்டார் 1911-ம் வருஷம் ஜூலைமாதம் 18-ந்தேதி தெரிந்துகொண்டார்கள். அது

அவ்வருஷம் ஜூலை மாதம் 27-ந்தேதி முடிவடைந்து தள்ளுபடி செய்யப்பட்டது. பிறகு வாதி கொடுத்த 1911-ம் வருஷத்திய O. P. 594 நம்பரின்பேரில் டிஸ்டிரிக்ட் முனிசீப், கி. பு. கோடு 476-வது செக்ஷன்படி அப்பீல் மனுதார்களைத் தண்டிப்பதற்காக 1911-ம் வருஷம் நவம்பர் மாதம் 25-ந்தேதி சாங்கிஷன் கொடுத்தார்கள். இந்த சாங்கிஷன் சட்ட விரோதமானதென்று பிரதிவாதிகள் ரெவிஷன் மனுக்கொடுத்திருக்கிறார்கள். நிறைவேறு நடவடிக்கைகள் ஜூடிஷல் நடவடிக்கைகள் (12 கல்கத்தா லா ஜர்னல் 45 இ. லா. ரி 32 கல்கத்தா 367) நாம் அங்கீகரிக்கத்தக்கதல்ல. இ. லா. ரி 32 சென்னை 48 புல்பெஞ்சு தீர்ப்புப்படி கி. பு. கோடு 476-வது செக்ஷன்படி டிஸ்டிரிக்ட் முனிசீப் உத்தரவு செய்தது சட்ட விரோதமானது. அதனாலதை ரத்து செய்கிறோம்.

இந்தக் கோர்ட்டாருக்கு ரெவிஷன் அதிகாரமிருப்பதால் டிஸ்டிரிக்ட் முனிசீப் செய்திருக்க வேண்டிய உத்தரவை இந்தக் கோர்ட்டார் செய்யலாம். முதல் மனுதார் இப்பால் இறந்துவிட்டபடியால் 2, 3 மனுதார்கள் பேரில் இ. பி. கோடு 186 - வதுசெக்ஷன்படி நடவடிக்கைகள் நடத்த நாம் சாங்கிஷன் கொடுக்கிறோம்.

1913 M. W. *N*. 1002.

சென்னை ஹைகோர்ட்.

புல்பெஞ்சு தீர்ப்பு

1911 ௵த்திய கிரிமினல் ரிவிஷன் கேஸ் நம்பர் 637.

1912 ௵த்திய கிரிமினல் ரிவிஷன் மனு நம்பர் 524.

தீர்ப்பு 13—3—13.

ஜட்ஜிகள் ஸர் ஆர்னல்ட் வொயிட் Kt. சீவ் ஜஸ்டிஸ் அவர்கள்	சோலைக்கவுண்டன் ஆ
மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரநாயர் அவர்கள் மிஸ்டர் ஜஸ்டிஸ் டயாப்ஜி அவர்கள்	எதிரிகள். மனுதார்கள்

10. [கிரிமினல் புரிஸீஜர் கோடு.]

அதிகாரமில்லாத கோர்ட்டார் நல் நடத்தைக்கு ஜாமீன் வாங்கினாலும் அப்பீல் அல்லது ரெவிஷன் கோர்ட்டார் அதை ரத்து செய்து தாங்களே நல் நடத்தைக்கு ஜாமீன் வாங்கலாமென்பது.

சேலம் ஸ்டேஷனரி 2-வது கிளாஸ் மாஜிஸ்டிரேட் கோர்ட்டு 1912 வருஷத்திய கியாலண்டர் நம்பர் 261ன் பேரில் சேலம் சப்டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டாரிடம் செய்யப்பட்ட 1912 வருஷத்திய கிரிமனல் அப்பீல் நம்பர் 113-ல் அந்தக் கோர்ட்டார் செய்த தீர்மானம் பிசகென்பதாக கி பு கோடு 435, 439 வது செக்ஷன்களின்படி ரெவிஷன் மனுக் கொடுக்கப்பட்டு இதுபுல்பெஞ்சுத் தீர்மானத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

கி. பு. கோடு 106 வது செக்ஷன் உட்பிரிவு 1-ல் கண்டகோர்ட்டார்களால் தண்டிக்கப்படாமல் 2-வது அல்லது 3-வது வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகளால் தண்டனை யடைந்தவர்களிடம் அப்பீல் கோர்ட்டார் மேற்படி 106 வது செக்ஷன் உட்பிரிவு 3-ன்படி நல் நடத்தைக்கு ஜாமீன் வாங்கலாமா கூடாதா வென்பதுதான் நாம் கவனிக்க வேண்டிய விஷயம்.

2-வது அல்லது 3-வது வகுப்பு மாஜிஸ்டிரேட் கோர்ட்டார்களால் தண்டிக்கப்பட்ட கேஸ்களில் அப்பீல் கோர்ட்டார் நல் நடத்தைக்கு ஜாமீன் வாங்கக்கூடாதென்று இ. லாரி 29 சென்னை 190,30 சென்னை 48,35 கல்கத்தா 434, இந்தத் தீர்மானங்களைத் தன் கக்ஷிக்கு ஆதாரமாக மனுதார் எதிரிகளின் வக்கீல் எடுத்துச் சொல்லுகிறார். இந்தத் தீர்மானங்களுக்கு நேர்மாறாக இப்பால் இ. லா. ரி. 30 சென்னை 182 தீர்மான மேற்பட்டிருக்கிறது. இந்த இரண்டு தீர்மானங்களில் எதை யனுசரித்து உத்திரவு செய்ய வேண்டுமென்பதைப் பற்றி இது புல் பெஞ்சுத் தீர்மானத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

அப்பீல் கோர்ட்டு என்ற பதங்கள் பொதுவாக விருக்கின்றன. நல்நடத்தைக்கு ஜாமீன் வாங்கும் கோர்ட்டாரே எதிரிகளுக்கு தண்டனை விதித்திருக்க வேண்டுமென்ப தவசியமில்லை. இ. லா. ரி. 30 சென்னை 48 தாவாக் கேசுக்குப்பொருந்தியதல்ல, இ. லா. ரி. 29 சென்னை 190 தீர்மானத்தை நாங்கள் அங்கீகரிக்கவில்லை. அப்பீல் கோர்ட்டாருக்கு இந்த அதிகாரமிருக்கிறதென்றே தீர்மானிக்கிறோம்.

21 Indian Cases 174.

கல்கத்தா ஹைகோர்ட்.

1913 ௵த்திய கிரிமினல் ரெவிஷன் மனு நம்பர் 318.

தீர்ப்பு 17—4—13.

ஜட்ஜிகள்.	
மிஸ்டர் ஜஸ்டிஸ் இமாம் அவர்கள்	சால்கு தேவாரி. ஆ எதிரிகள் மனுதார்கள்,
மிஸ்டர் ஜஸ்டிஸ் சாப்மன் அவர்கள்	V
	சக்கரவர்த்தி. எதிர் மனுதார்.

7. [இந்தியன் பெனல் கோடு].

ஒருவன் ஒரு நிலத்தில் சாகுபடி செய்து ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண்டிருந்தால் மற்றொருவன் அந்த மகசூலை அறுக்க எத்தனிப்பதைத்தடுத்துத் துன்பஞ்செய்வது குற்றமாகமாட்டாதென்பதும் ஆனால் கொடுந் துன்பஞ் செய்யக் கூடாதென்பதும், ருஜுக்களைப் பற்றிக் கீழ் அப்பீல் கோர்ட்டார் அபிப்பிராயப் படுவதையே ஹைகோர்ட்டார் அங்கீகரிக்க வேண்டு மென்பதும்.

முஸாமத் சுலாசன்கூயர் என்பவளுக்குச் சொந்தமானசொத்துக்களை அவளிடமிருந்து செட்டில்மெண்டுப்பத்திரமூலமாக எதிரிகள் அடைந்ததாகவும், இவர்களின் எதிர்கக்ஷிக்காரர்கள் அவளுடைய சொந்தக்காரரிட மிருந்து செட்டில் மெண்டுப் பத்திரமூலமாக அடைந்ததாகவுஞ் சொல்லி இருதறப்பாருஞ் சண்டையிட்டதில் எதிரிகள் கலகஞ் செய்த தற்காகவும் துன்பம்கொடுந்துன்பம் இவைகளுக்காகவும் டிப்டி மாஜிஸ்டிரேட்டால் தண்டனையடைந்தார்கள்: இது அஸிஸ்டெண்டு செஷன் ஜட்ஜியாலும் உறுதி செய்யப்பட்டது. இதன் பேரில் எதிரிகள் ஹைகோர்ட்டில் ரெவிஷன் மனுக்கொடுத் திருக்கிறார்கள்.

அஸிஸ்டெண்டு செஷன் ஜட்ஜி சொல்லியிருக்கும் விஷயங்களை ஆழ்ந்து யோஜிக்கும் போது தாவா நிலம் எதிரிகள் ஸ்வாதீனத்திலிருந்ததாகவும், அவர்கள் நெற்பயிர் செய்திருந்ததாகவும், அவர்களதையறுவடைசெய்து மகசூலைக்கைப்பற்றபாத்தியமுடையவர்களென்றுந் தெரிகிறது. அவ்வித ருஜு விருக்கும் போது இவர்களை இ பி கோடு 148 வது செக்ஷன்படி கலகத்துக்குத் தண்டிக்கலாமா வென்பதை நாம் பார்க்கவேண்டும். இவ்விதம் எதிரிகள் ஸ்வாதீனத்தில் தாவாஸ்தலமில்லை. செஷன் ஜட்ஜி

ருசுவம்ஸங்களைச் சரியாக்க் கவனித்துத் தமது அபிப்பிராயம் சொல்லவில்லையென எதிர்தரப்பில் ஆக்ஷேபிக்கிறார்கள். ருசுவம்ஸங்களைப்பற்றிப் பலர் பலவிதமாக அபிப்பிரயப்படலாம். செஷன் ஜட்ஜியின் அபிப்பிராயத்தைத் தான் நாம் அங்கீகரிக்கக் கடமைப் பட்டிருக்கிறோம். இதனால் 148 வது செக்ஷன்படி தண்டனை விதித்தது பிசகென்பதாக அதை ரத்து செய்கிறோம்.

இ பி கோடு 323 வது செக்ஷன்படி தண்டனை விதித்தது சரியா, அல்லது அது தற்காப்புக்காக ஏற்பட்டது அதுகுற்றமாக மாட்டாது எனத் தீர்மானிக்கப் படவேண்டியதா என்பதை நாம் கவனிக்கவேண்டும். இந்தக் கேசின் விஷயங்களைக் கவனித்துப் பார்க்கும்போது எதிரிகளுக்கு எவ்வளவு வரையில் தற்காப்பு (private defence) உண்டோ அந்த அளவுக்கு அவர்கள் அதிகரிக்கவில்லையென் ஸ்பஷ்டமாகத் தெரிகிறது. அதனால் அந்த செக்ஷன்படி தண்டனை விதித்ததையும் மாற்றுகிறோம். ஸகால் ஆஹிர் என்பவன் மட்டில் கர்ன்ஸா என்ற ஆயுதம் வைத்துக் கொண்டு கொடுந் துன்பஞ் செய்ததாக ருஜுவாவதால் அவன் பேரில் அந்த இ பி கோடு 326- வது செக்ஷன்படி யேற்பட்ட தண்டனை மட்டில் மாற்றத்தக்கதில்லை. மற்றதை மாற்றியிருக்கிறோம்.

21 Indian Cases 382.

சென்னை ஹைகோர்ட்.

1912 ௵த்திய 2 வது அப்பீல் நம்பர் 1041.

தீர்ப்பு 4—8—13.

ஜட்ஜிகள்.	
மிஸ்டர் ஜஸ்டிஸ் எயிலிங் அவர்கள்	மைனர் சுப்பிரமணிய நாடானுக்கு மாமனும் அடுத்த சிநேகிதனுமான கூத்தலிங்க நாடான், வாதி அப்பீல்தாரன்
மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யர் அவர்கள்	V
	ராமசாமி நாடான் ஆ. அ. பிரதிவாதிகள்.

20. [ஹிந்துலா].

அவிபக்த இந்துக் குடும்பச்சொத்தை மைனர்பாக முள்பட கிரயம் பெறுகிறவர்கள் அந்தத் தொகை குடும்ப அவசியச் செலவுக்கு

வாங்கப்பட்டதென்பதை யாவது அல்லது அந்த அவசியச் செலவுக்கென்று தான் நம்பி தொகை கொடுத்து வாங்கினதாகவாவது ருஜுப்பிக்கவேண்டுமென்பது.

வாதியின் அவிபக்த தகப்பன் முதல் பிரதிவாதி குடும்பப் பொதுச்சொத்தை 17-ம் பிரதிவாதிக்குப்பெந்தகம்வைத்துக்கடன் வாங்கியது தன் பாக சொத்தைக் கட்டுப்படுத்தமாட்டாதென்று திருநெல்வேலி ஜில்லா அம்பாசமுத்திரம் டிஸ்டிரிக்ட் முனிசீப் கோர்ட்டு 1910-ம் வருஷத்திய அசல் 93 நம்பரில் வழக்கிட்டார். இந்தப் பெந்தக ஐட்டத்தொகைகள்மூன்றில்இரண்டுபாகம்ரூபாய் 677 குடும்ப மானேஜராகிய முதல் பிரதிவாதி வாங்கிய சில சாசனத்தொகை கொடுப்பதற்கோ அல்லது கொடுக்கவேண்டிய உத்தேசத்துடனோ வாங்கப்பட்டதென்றும் இந்த ஐட்டங்களுக்கு வாதி கட்டுப்பட்டவனல்லவென்றும் டிஸ்டிரிக்ட் முனிசீப் தீர்ப்பு செய்துவிட்டார்கள். இந்தச் சாசனம் குடும்பத்துக்குப் பிரயோஜன மற்றதென்றாவது வாதியின் பாத்தியதைக்கு விரோதமென்றாவது வாதி ருஜுப்பிக்கவில்லையென்று டிஸ்டிரிக்ட் ஜட்ஜி வாதியின் வழக்கை தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

இவ்விதம் டிஸ்டிரிக்ட் ஜட்ஜி அபிப்பிராயங்கொண்டது சரியல்ல. குடும்ப மானேஜரால் செய்யப்பட்ட பெந்தகம் மைனர் பாகஸ்தன் பாகமுள்படச் சேர்ந்ததென்றும், அது குடும்ப அவசியத்துக்கு வாங்கப்பட்டதென்றாவது அது குடும்ப அவசியமான செலவுக்கென்று தான் நல்ல எண்ணத்துடன் நம்பியதாகவாவது கிரயம் பெற்றவன் ருஜுப்பிக்கவேண்டும். (3 பம்பாய் லா ரிபோர்ட்டு 213 தீர்மானத்தைப்பார்க்க.) அவசியமின்னதென்று சொல்லப்படவுமில்லை, அது ருஜுப்பிக்கப்படவுமில்லை. கிரயம் பெற்றவன் பிரதிவாதி தரப்பு 4-வது சாக்ஷியாக விசாரிக்கப்பட்டதில் தான் யாதொரு விஷயத்தையும் விசாரித்துத் தெரிந்து கொள்ளவில்லையென ருஜுச் சொல்லுகிறார். பெந்தகமானது இந்த ஐட்டங்கள் சம்பந்தப்பட்ட வரையில் வாதியைக் கட்டுப்படுத்தாதென அபிப்பிராயப்படுகிறோம்.

மூன்றாவது ஐட்டத்தைப்பற்றிய வரையில் டிஸ்டிரிக்ட் ஜட்ஜியின் தீர்மானம் சரியானதென்று நினைக்கிறோம். இதனால் 8

அடையாள பெந்தக பத்திரம் வாதியின் பாகத்தைப் பற்றிய வரையில் ரூபா 723-ல் பாதித்தொகைக்கும், அதன் வட்டிக்கு மட்டில் கட்டுப்படக்கூடியதெனத் தீர்மானிக்கிறோம். 17, 19 பிரதிவாதிகளுக்கு வாதி செலவு தொகை கொடுக்கவேண்டுமென்று டிஸ்டிரிக்ட் ஜட்ஜி செய்த தீர்மானத்தையும் ரத்து செய்கிறோம். மற்ற விஷயங்களில் அந்தக் கோர்ட்டுத் தீர்மானத்தை யுறுதி செய்கிறோம்.

21 Indian Cases, 656.

கல்கத்தா ஹைகோர்ட்.

1911 ஹூத்திய லெட்டர்ஸ் பேடெண்டு அப்பீல் நம்பர் 158.

தீர்ப்பு 12—6—13.

ஜட்ஜிகள் ஸர் லாரென்ஸ் ஜெங்கின்ஸ் Kt. சீவ் ஜஸ்டிஸ் ஜஸ்டிஸ் ஸர் அஷுடோஷ் மூகர்ஜி Kt.	ஷிக் அப்டல் ரகிமான் (வாதி) அப்பீல் தாரன் V ஜாடு நந்தன் சிங் ஜா. ஆ. அ பிரதிவாதிகள்.

21. [இந்துலா].

மிதக்ஷராலாவை யனுசரித்து நடக்கும் அவிபக்த குடும்ப மெம்பர் ஒருவர் தன் பாகத்தைப்பராதீனஞ் செய்வது செல்லாதென்பதும், அவரிடம் எக்கிரிமெண்டு பெற்றவர் அந்தப் பாகஸ்தர் பாகத்தைப் பிரித்துக்கொடுக்க வேண்டுமென்று கேட்கக்கூடாதென்பதும் சட்டவிரோதமாக எக்கிரிமெண்டு செய்து கொண்டதாலுண்டாகிய நஷ்டத்துக்கு வழக்கிடலாமென்பதும்.

1, 2, 3 பிரதிவாதிகளும் ரெகு நந்தன் என்பவரும் ஒரு அவிபக்த இந்து குடும்ப சகோதரர்கள். இந்த நால்வருக்கும் பொதுவாயுள்ள சில நிலத்தை 1, 2, 3 பிரதிவாதிகள் வாதிக்கு முதலில் குத்தகைக்குக் கொடுப்பதாக வுடன்படிக்கை செய்து கொடுத்து வாதியிடம் ரூ 5 அட்வான்சும் பெற்று விட்டார்கள். பிறகு இந்த ரெகு நந்தன் குத்தகைச் சீட்டு எழுதிக் கொடுக்க ஒத்து வாராமையால் இந்த நால்வருஞ்சேர்ந்து 4-ம் பிரதிவாதிக்கு ஷை நிலத்தைக் குத்தகைக்குக் கொடுத்துப் பத்திரத்தை ரிஜிஸ்டர் செய்து கொடுத்து விட்டார்கள். இதன் பிறகு 1, 2, 3 பிரதிவாதிகள் தங்கள் வீதம் முக்கால்பங்கை மட்டில் குத்தகை

கொடுப்பதாக முன் செய்த எக்கிரிமெண்டைத் திருத்திக்கொடுத்தார்கள். இதன்படி 1, 2, 3 பிரதிவாதிகளின் பாகம் பிரிபட்டுத் தனக்கு வசமாக வேண்டுமென வாதி வழக்கிட்டார். இந்த நம்பர் 2-வது அப்பீலுக்கு வந்ததில், 1, 2, 3 பிரதிவாதிகளுக்குத் தாவாவிற் கண்ட சொத்தில் பாகவேற்பாட்டுக்கு முந்திக் குறிப்பிட்ட பாகமில்லாததினாலே அவர்களின் பாகத்தைப் பராதீனஞ் செய்தது சட்டப்படி செல்லாதென 12 வீக்லி ரிபோர்ட் 1. (புல் பெஞ்சு தீர்ப்பு) 20 இந்தியன் அப்பீல் 116, பக்கம் 125, இந்தத் தீர்மானங்களை யனுசரித்து வாதியின் வழக்கைத் தள்ளுபடி செய்து விட்டார்கள். ரெகுநந்தன் கெடுகிலும் அவிபக்தனாகவிருந்துவந்ததாகக் கீழ்க்கோர்ட்டார் கண்டு பிடித்திருக்கிறார்கள். வாதிக்கு ஆதியில் எழுதிக்கொடுத்த எக்கிரிமெண்டுப்படி முழுப் பாகத்தைக் கேட்கவும் முடியாத விஷயம்; அது செல்லுபடியற்றதென வேற்படும் பட்சத்தில் இரண்டாவது செய்துகொண்டது புதிய காண்டிராக்ட்டு. 4-ம் பிரதிவாதிக்கு இந்தப் புதிய காண்டிராக்ட்டுக்கு முந்திக் கிரமமான பாத்தியங் கிடைத்துவிட்டது. 1, 2, 3 பிரதிவாதிகளின் நடவடிக்கைகள் கண்டனைக்கு ஹேதுவானவை. அதனால் வாதிக்கு ஏற்பட்ட நஷ்டங்களை அவர்கள் கொடுக்கக் கடமைப்பட்டவர்கள். இந்த அப்பீலைச் செலவுடன் தள்ளுபடி செய்கிறோம்.

21 Indian Cases 528.

சென்னை ஹைகோர்ட்.

1911 ஹூத்திய 2வது அப்பீல் நம்பர் 756.

தீர்ப்பு. 16—10—13.

ஜட்ஜிகள்.	இறந்த சிங்க அய்யர் ஆ. பிதிவாதிகள். அப்பீல்தார்கள்.
ஜஸ்டிஸ் மில்லர் அவர்கள்	V
ஜஸ்டிஸ் டியாப்ஜி அவர்கள்.	வெங்கட்டரமண அய்யர் ஆ. (வாதிகள்) அ. பிரதிவாதிகள்.

22. [இந்துலா.]

ஒரு இந்து தகப்பன் தன் மூத்ததாரத்தின் மேஜரான பிள்ளைகளுடனும், தன்னுடைய இரண்டாந்தாரத்தின் மைனர் குமாரனுடனும் பாகப் பிரிவினை செய்து கொண்ட பத்திரத்தில் இரண்டு

பங்குக்குள்ள 12 ஸ்தாபர சொத்துக்களைத் தானும் தனது மைனர் குமாரனுமடைகிற தென்றும், மற்றச் சொத்துக்களில் இன்னின்னவை யின்ன பிள்ளைகளு மடைகிறதென்றும் எழுதப் பட்டிருந்தால் இந்தத்தகப்பனும் மைனர் குமாரனும் அவிபக்தர் ளென்பதும், தகப்பனால் அச் சொத்து சாசனஞ் செய்யப்பட்டால்பிள்ளையின் பாகமும் அதிற்சேர்ந்த தென்பதும்.

கோயம்புத்தூர் டி. மு. கோர்ட்டு 1908 வருஷத்திய அசல் 77 நம்பரின் பேரில் 1910 வருஷத்திய அப்பீல் நம்பர் 169 கோயம்புத்தூர் சப் ஜட்ஜியால் தீர்மானிக்கப் பட்டதின் பேரில் ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல். சேஷப்பர் என்பவருக்கு இரண்டு தாரங்கள். மூத்ததாரத்துக்குப் பிச்சுவையர் என்ற சிதம்பர அய்யன் 1 அனந்த வெங்கடேசய்யர் 2 இந்த இரண்டு குமாரர்கள். இரண்டாந்தாரத்துக்கு 4 வயதுள்ள வெங்கடரமணன் என்ற ஒரே குமாரன். இவர்களுக்குள் 1891 வருஷம் டிசம்பர் மாதம் 14உ ஒரு பாகப்பத்திர மேற்பட்டது. இந்தப் பாகப்பத்திர மேற்பட்ட நாலுவருடங்களுக்குப்பின் தகப்பன் தனக்கும் மைனர் குமாரனுக்குமாக வைத்துக்கொண்ட சொத்துக்களி லொன்றை விற்றுவிட்டார். இந்த மைனர் வெங்கடரமணன் மேஜரான வுடன் அந்த விற்ற சொத்தில் தன்பாகங் கிடைக்க வேண்டுமெனக் கிரய சாசனம் பெற்றவர் வகையரா பேரில் வழக்கிட்டார். கீழ்க்கோர்ட்டார் வாதிக்கு அனுகூலமாகத் தீர்ப்புசெய்து விட்டதால் பிரதிவாதிகள் இந்தக் கோர்ட்டில் அப்பீல் செய்கிறார்கள்.

அப்பீல் வாதிகள் பெற்றிருக்கும் 1 a அடையாள ஆதாரவிற் கண்ட நிலம் முழுப்பாகத்துக்குஞ்செல்லத் தக்கதா அல்லது பாதிக்கு மட்டில் செல்லத்தக்கதா வென்பதுதான் நா மிப்போது கவனிக்கவேண்டிய விஷயம். இது வாதியின் பாத்திய முள்படவிற்க முதல்பிரதி வாதிக்குச்சட்டப்படி பாத்தியமுண்டா வென்பதைப் பொறுத்ததாக விருக்கிறது. இவ்விதபாத்தியம் முதல்பிரதி வாதிக்குஇருக்கிறது அல்லதுஇல்லையென்பது A அடையாளபாகப் பத்திரத்தின் ஷரத்துகளினாற்றெரிந்துகொள்ளவேண்டும். பாகபத்திரகாலத்தில் வாதிக்கு வயது நான்கு. பாகபத்திரத்தில் இவருக்கும் தகப்பனும் கார்டியனும் முதல் பிரதிவாதி யென்று கண்டிருக்கிறது. குடும்பத்தில் கொடுக்கவேண்டிய கடன்களை முதல் பிரதிவாதிகொடுத்துத் தீர்த்துவிடுகிறதென்று இரண்டு ஸ்தாவர

சொத்துக்களை விலக்கி மற்ற சொத்துக்களைப் பாகப்பிரிவினை செய்து கொண்டதாகக் கண்டிருக்கிறது. 2000 ரூபாய் மதிப்புள்ள 2,3ஐட்ட ஸ்தாவர சொத்துக்களைசேஷப்பரும் மைனர் வெங்கடரமணன்வகையாரவும் பங்கு 1-க்கு ரூ1000 வீதம் இரண்டு பங்குகளுக்காக அடைந்து அனுபவித்துக்கொள்ளுகிற தென்றும், பாக்கிச் சொத்தில் பாதி ரூபாய் 1000 மதிப்புள்ளதை பிச்சுவய்யர் என்ற சிதம்பரய்யர் அடைகிறதென்றும், மற்றப்பாதி ரூபாய் 1000 மதிப்புள்ளதை அனந்த வெங்கடேசய்யர் அடைகிறதென்றும், ஜங்கமச் சொத்துக்கள் அவரவர்கள் வசமுள்ளதை யவரவர்களே அடைகிறதென்றும் இனி ஒருவருக்கொருவர் சினேக சம்பந்தமேயன்றி சொத்து சம்பந்தம் யாதொன்றுமில்லை யென்றுங் கண்டிருக்கிறது இந்த தஸ்தாவேஜியின் கருத்துக்களை ஆழ்ந்து யோஜிக்குமளவில் முதல் பிரதிவாதியும் வாதியுந் தனித்தனியே பிரிந்திருக்கவேண்டுமென்ற எண்ணமிருந்திருப்பதாகத் தெரியவில்லை. கூட்டுபங்குக் குடியானவர்போலச் சேர்ந்திருக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் ஏற்பட்டதாகவே தெரிகிறது. பங்கு 1-க்கு ரூபாய் 1000 வீதம் இரண்டு பங்குகளுக்குள்ளதை வாதியும் முதல் பிரதிவாதியும் அடைகிறதென்று எழுதியிருப்பதினால் அது இவர்களுக்குள் பாகப்பிரிவினையைக் காட்டுவதாக வாதியால் தர்க்கிக்கப்படுகிறது. அது பாக வேற்பாட்டுக்கு மதிப்பைக் காட்டுவதற்கு ஏற்பட்டதே யன்றி அவர்களுக்குள் பிரிவினை ஏற்பட்டுவிட்டது என்பதைக் காட்டுவதற்காக ஏற்பட்டதல்ல. இவ்விருவரும் பாகம்பிரிந்தபின் தனித்தனியே யிருந்துவரவேண்டுமென்பது அந்த தஸ்தாவேஜியினாற்றெரியவில்லை. மற்றப் பிள்ளைகள் தனித்தனியே யிருந்துவரவேண்டுமென்று கண்டிருக்கிறது. பாகப்பத்திர காலத்தில் வாதி மைனராக இருந்துவந்தால் இவன் வசத்தில் யாதொரு ஜங்கம சொத்துக்களுமிருக்க நியாயமில்லை. இவன் வசம் ஜங்கம சொத்துக்கள் இருந்தனபோல் எழுதியிருப்பது அச்சொத்துக்கள் வாதிக்கும் முதல் பிரதிவாதிக்கும்பொதுவானதென்றே ஏற்படவேண்டும். இவ்விருவருக்குள்ளும் பாகம் பிரிந்துவிட்டதென்பதை ஸ்பஷ்டமாகக் காட்டக்கூடிய வாசகங்களிதிலில்லை. இந்த தஸ்தாவேஜிக்கு சப் ஜட்ஜி வியாக்கியானஞ் செய்தது சரியல்ல. இவ்விருவரும் அவிபக்தர்களாயிருந்தார்களென்றே ஏற்படுகிறது. ஆகையால் அப்பீலை யங்கீகரித்து வாதியின் பிராதைத்தள்ளுபடி செய்கிறோம்.

1913 M. W. N. 1016.

பம்பாய் ஹைகோர்ட்

1910 ஹூத்திய 2-வது அப்பீல் நம்பர்கள் 160, 161-

தீர்ப்பு 10—7—13.

ஜட்ஜிகள் ஸர் பாஸில் ஸ்காட் Kt. சீவ் ஜஸடிஸ் மிஸ்டர் ஜஸ்டிஸ் பீமன்	மகாபிளேஷ்வார் கிருஷ்ணப்பா அ. வாதி V ராமச்சந்திர மங்கேஷ் குல்கார்னி அ. பிரதிவாதி

23 [இந்து லா]

ஒருவன் தன் மனைவியிருக்கும்போது தன் பிள்ளைகளுக்கு வேறு கார்டியன் நியமித்துச் சொத்துக்களைப் பரிபாலிக்க ஏற்பாடு செய்யலாமென்பதும் அந்த ஏற்பாட்டுக்குப் பிள்ளைகள் கட்டுப்பட்டவர்களென்பதும்.

ஒரு இந்துவுக்கு மனைவியும் மைனர்ப் பிள்ளைகளுமிருந்தார்கள். இவருடைய எஸ்டேட்டுக்கு வரவேண்டிய கடன்கள் முதலியன விருந்தன. இவர் தன்னுடைய ஜீவதிசையிலும் தன் ஜீவதிசைக்குப் பின் தனது மூத்த குமாரன் மேஜராகிற வரையிலும் தன்னுடைய எஸ்டேட்டை மஞ்சப்பா என்பவர் பரிபாலித்துத் தன் குடும்பத்தாரை சம்ரக்ஷித்து வரவேண்டியதென ஒரு செட்டில்மெண்டுப் பத்திரமெழுதிக் கொடுத்தார். இந்தப் பத்திரஷரத்துப்படி மஞ்சப்பா குடும்ப மானேஜ்மெண்டு செய்து வந்ததில் குடும்பச் சொத்துக்கள் சில இவரால் விற்கப்பட்டுப் போய்விட்டன. இந்தப் பராதீனம் ரத்து செய்யப்பட்டு சொத்துக்கள் சுவாதீனமாக வேண்டுமென இந்த கிருஷ்ணப்பாவின் மூத்தகுமாரன் தனக்காகவும், தன்னுடைய மைனர் தம்பிக்கு அடுத்த சிநேகிதனாகவும் வழக்கிட்டான். பிரதிவாதி தனக்கேற்பட்ட பராதீனஞ் செல்லத் தகுந்ததென்றும், முதல் வாதி மேஜரான பின் மூன்று வருடங்களுக்கு மேற்பட்டு வழக்குக் கொண்டுவந்திருப்பதால் வாதிகளின் தாவாவுக்குக் காலாவதி தோஷமேற்பட்டுவிட்டதென்றுங் கக்ஷியாடினார்கள். கீழ்க்கோர்ட்டார்களிருவரும் வாதிகளின் வழக்கைத் தள்ளுபடி செய்து விட்டார்கள். அதன் பேரில் இந்தக் கோர்ட்டில் அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது.

மைனர்ப் பிள்ளைகளும் பெண் பிள்ளைகளுமிருக்குங் குடும்பங்களில் விதந்துகள் ஒருவருக்கொருவர் சண்டை சச்சரவுகள்

செய்து கொள்ளாதபடி கார்டியன் நியமித்து மானேஜ்மெண்டு செய்யும்படி ஏற்பாடு செய்யவேண்டியது மெத்த அவசியமானது. ஒரு குடும்பத்தில் பல விதந்துகளிருந்தால் பெற்ற தாயாரை அவள் பிள்ளைகளுக்கு கார்டியனாக நியமிக்காமல் வேறு விதந்துவை எல்லாப் பிள்ளைகளுக்குங் கார்டியனாக நியமித்தது நியாயமானதென்று வங்காள ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். (7 வீக்லீ ரிபோர்டர் 73 தீர்மானத்தைப் பார்க்க). தன் பிள்ளைகள் தன் விதந்துகள் இவர்களைப்பற்றி மட்டில் ஏற்பாடு செய்யலாமென விதிகளேற்பட்டிருக்கின்றன. இந்தக் கேசில் இவருடைய சகோதரரின் பிள்ளைகளைப் பற்றியும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இது விஷயமாக எவ்வித ஆக்ஷேபனையு மேற்படவில்லை. ஆனுலிந்த சகோதரரின் குமாரர்கள் எல்லோரும் இந்த வழக்குக்கு முன்னிறந்து விட்டார்கள். அவர்களின் பாத்தியம் சர்வைவர்ஷிப்பின்படி வாதிகளுக்குக் கிடைத்துவிட்டது. முதல் வாதி 18 வயதில் மேஜராய்விட்டதால் அந்தத் தேதி முதல் 3 வருடங்களுக்குள் வழக்கிடாததால் இந்த தாவா லிமிட்டேஷனுக்ட்டு 44 வது ஆர்டரின் படி காலாவதி தோஷத்தால் பாதிக்கப் பட்டுப் போய் விட்டது. இவருக்குக் காலாவதி யேற்பட்டு விட்டதால் இவருடைய மைனர் தம்பி 2ம் வாதியின் பாத்தியமும் லிமிடேஷனுக்ட்டு 7 வது செக்ஷன் படி காலாவதியாகப் போய் விட்டது. ஆகையால் கீழ்க் கோர்ட்டு டிக்கிரிகளை யுறுதி செய்து அப்பீல்களைத் தள்ளுபடி செய்கிறோம்.

21 Indian Cases 350.

சென்னை ஹைகோர்ட்.

1912 ஞூத்திய 2 வது அப்பீல் நம்பர் 2280 முதல் 2284

தீர்ப்பு 10—10—13.

ஜட்ஜிகள் மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர் அவர்கள் மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர் அவர்கள்	ராமலிங்க வாகுண ராமபாண்டிய சின்னத்தம்பியார் அவர்கள், சிவகிரி ஜமீன்தார் (பிரதிவாதி) அப்பீல்தார் V மிகேயல் என்கிற சங்கரலிங்கம், ராயப்பன், பெரியமாடன், பெரியசிவன், இன்னுசி மேற்கண்ட நம்பர்களில் வாதிகள்

3. [சென்னை எஸ்டேட் லாண்டு ஆக்ட்].

குடியானவனுக்குப் பட்டா டெண்டர் செய்து அதை யவன் வாங்கிக்கொள்ளாவிட்டால் அந்த நோட்டீஸ் சம்பந்தப்பட்ட நிலத்தில் ஒட்டப்பட வேண்டியதேயன்றி அவன் வீட்டில் ஒட்டுவது பிசகென்பதும், அது சரியானடெண்டரென்று குடியானவனுடைய சொத்துக்களை ஜப்தி செய்வது செல்லாதென்பதும்.

பிரதிவாதியாகிய ஜமீன்தார் மேலே சொன்ன நம்பர்களின் வாதிகளாகிய குடிகளுக்கு நேரில் பட்டா டெண்டர் செய்தார். அவர்களதை வாங்கிக் கொள்ளாமல் நிராகரித்துவிட்டதால் இந்தக் குடியானவர்களின் வீடுகளில் அந்த நோட்டீஸ்களை ஒட்டச் செய்தார். இது சரியான டெண்டரென்று நினைத்து ஜமீன்தார் தனக்குச்சேரவேண்டிய கிஸ்தித்தொகைக்கு குடியானவர்களின் நிலங்களை ஜப்தி செய்வித்தார். மேலே சொன்னபடி வீடுகளில் நோட்டீஸ் ஒட்டியது சட்டப்படிக்குச் சரியான டெண்டால்லவென்றும், அதனால் வாதிகளின் நிலங்களை ஜப்தி செய்தது சட்டப்படி செல்லத்தக்கதல்லவென்றும், வாதிகள் டிப்டிக் கலெக்டர் கோர்ட்டில் வழக்கிட்டார்கள். ஜமீன்தாரின் சிப்பந்திகள் குடிகளாகிய பட்டாதார்கள் வீடுகளுக்கு பட்டாக்களுடன் போனதாகவும், அவர்கள் அவ்வீடுகளிலிருந்ததாகவும், அவைகளை வாங்க மாட்டோமென நிராகரித்து விட்டதாகவும் ஆகையால் அவைகள் அவர்களின் வீடுகளில ஒட்டப் பட்டன வென்றும், நிலங்களில் பட்டாக்கள் ஒட்டப்பட வேண்டு மென்று சொல்லப் பட்டிருப்பது ஊரில் ஆஜரில்லாதவர்களுக்கு ஏற்பட்டதே யன்றி மற்றவர்களுக்கல்ல வென்றும் நிலங்களில் பட்டாக்கள் ஒட்டப்பட வேண்டிய தவசியமில்லையென்றும் டிப்டிக் கலெக்டர்வாதியின் வழக்கைத் தள்ளுபடி செய்து விட்டார்கள். இதன் மேல் டிஸ்ரிக்ட் கோர்ட்டில் அப்பீல் செய்யப் பட்டதில் எஸ்டேட் லாண்டு ஆகட்டு 78 (2) வது செக்ஷன் படி குடியானவருக்குப் பட்டா அல்லது நோட்டீஸ் நேரில் டெண்டர் அல்லது சர்விஸ் செய்வது மட்டில் போதாதென்றும், குடியானவர் நேரில் அவைகளை பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும், எந்தக் காரணத்தினுலாவது அவ்விதம் பெற்றுக்கொள்ளாவிட்டால், இந்த செக்ஷன்படி சம்பந்தப்பட்ட நிலத்திலொட்டி சர்வ் செய்திருக்க வேண்டியது மெத்த அவசியமானதென்றும், கீழ்க் கோர்ட்டாருடைய டிக்கிரியை ரத்து செய்து வாதிகளின் பிரார்த்தனையின்படி ஜப்தியை விடுதலை செய்துவிட்டார்கள்.

78 (2) செக்ஷனிற் கண்ட விதிகள் டெண்டர் செய்யப்பட்டதென்பதை ருஜூப்பிக்க வேண்டிய ஒருவித மார்க்கமேயன்றி

வேறல்லவென்றும் 54 வது செக்ஷன்படி வேறெந்த வகையிலாவது சர்வ் செய்யலாமென்றும் அப்பீல் வாதி கக்ஷி சொல்லுகிறார். இவர் சொல்லுங் கட்சி பழைய 1865 வருஷத்திய ஆக்ட்டு 7-வது செக்ஷன்படி செல்லுபடியுள்ளதே. புதிய ஆக்ட்டிலே அப்படிக்கில்லை. இதில் டெண்டர் எவ்விதஞ் செய்யப்படவேண்டியதென்று நன்றாகச் சொல்லப்பட்டிருக்கிறது: கூடும் (may) என்றது அந்த செக்ஷனிற் சொல்லப்படும் விதங்களில் எந்த விதமாவது செய்யலாமென்ற அர்த்தமேயன்றி வேறு விதத்திலுஞ் செய்யலாமென்ற அர்த்தமல்ல. அப்பீல்தாரர் சொல்லும் வியாக்கியானத்துக்கு அதன் வாசகங்கள் மிகத் தெளிவாயிருக்க வேண்டும். 54-வது செக்ஷனையும் 7- (2) வது செக்ஷனையும் வாசித்துப் பார்க்கும்போது குடியானவரிடங் கொடுப்பது பட்டா டெண்டரென்று கொள்ளப்பட வேண்டும். இவ்விதம் நேரில் கொடுபட்டுக் குடியானவர் பெற்றுக்கொள்ளாததினாலே குடியானவர் வீட்டிலொட்டப்பட்டிருக்கிறது. நேரில் சர்வ் செய்ய முடியாவிட்டால் நிலத்தில் ஒட்டப்படவேண்டியதென்று 78 (2) செக்ஷனிற் சொல்லப்பட்டிருக்கிறதேயன்றி வீட்டிலொட்டலாமெனச் சொல்லப்படவில்லை. இவ்விதம் வீட்டிலொட்டியது செல்லுபடியுள்ளதல்ல. இது பட்டா டெண்டர் செய்ததாக ஏற்றுக்கொள்ளப்படக்கூடாது. இதனால் அப்பீல்களைச் செலவுடன் தள்ளுபடி செய்கிறோம்.

21 Indian Cases 587.

சென்னை ஹைகோர்ட்.

1913 ௵த்திய சீவில் மிஸ்லேனியஸ் அப்பீல் நம்பர் 3.

தீர்ப்பு 7—11—13.

ஜட்ஜிகள்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள்

மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர் அவர்கள்.

சொக்கலிங்க சேர்வை மனுதார். அப்பீல்தாரன்

V

ராமேஸ்வரம் தேவஸ்தானம் டிரஸ்டி R. சீனிவாசய்யர் எதிர் மனுதார

18. [சீவில் புரஸீஜர் கோடு]

ஒரு குடியானவனுடைய பாத்தியதை ஏலவிற்று முதல் செய்யப்பட வேண்டியதாக விருந்தால் எந்தத் தோகைக்கு ஏல இஸ்தியார் பிறப்பிக்க வேண்டுமென்பது.

இராமநாதபுரம் சப்கோர்ட்டு 1909 ௵த்திய அசல் 276 நம்பரில் ஏற்பட்ட 1911 வருஷத்திய நிறைவேற்று மனுநம்பர் 15. இதன் பேரில் 1912-ம் வருஷத்திய நிறைவேறு அப்ளிகேஷன் நம்பர் 318 டிஸ்டிரிக்ட் கோர்ட்டார் செய்தவுத்திரவின் பேரில் ஹைகோர்ட்டில் அப்பீல்.

ராமேஸ்வரம் தேவஸ்தானம் டிரஸ்டி மனுதார் பேரில் பெற்றிருந்த டிக்கிரிக்கடனுக்காக மனுதார் குடியானவனுக்குள்ள பாத்தியம் ஏலவிற்பனை செய்ய இஸ்தியார் பிறப்பிக்கப்பட்டது. ஜப்தி செய்யப்பட்ட நிலத்தின் மொத்த வருஷ வரும்படி ரூபா 1560 என்றும், செலவுகள் நீக்கி பாக்கி அயன்வரும்படி வருஷத்துக்கு ரூபா 720 கிடைக்கக்கூடுமென்றும், அமீனா ரிபோர்ட்டு செய்தார். இதன்பேரில் கோர்ட்டார் அச்சொத்தை ரூபா 1560க்கு மதிப்பிட்டு ஏல இஸ்தியார் பிறப்பித்தார்கள். அதை வாதியே ரூபா 1561-க்கு ஏலத்தி லெடுத்து விட்டார். மனுதார் குடியானவன் தன்னுடைய பாத்தியதையைக் குறைத்து மதிப்பிட்டு இஸ்தியார் பிறப்பித்ததால் தணிந்த தொகைக்கு ஏலவிற்பனை செய்யப்பட்டதென்றும், அதனால் தனக்கு மிகுந்த நஷ்டங்களுண்டாயிற்றென்றும், அவ்விதம் இஸ்தியார் பிறப்பித்தது பிசகானதென்றும், அதனால் அந்த ஏலம் ரத்து செய்யப்படவேண்டுமென்றும் மனுக் கொடுத்ததில், கீழ்க்கோர்ட்டார் இவன் மனுவைத் தள்ளுபடி செய்துவிட்டதின்பேரில் இந்தக்கோர்ட்டில் அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது.

மனுதாருக்குப் பனிரெண்டு வருடங்களுக்குக் குத்தகையேற்பட்டிருக்கிறது. அமீனாவின் மதிப்பின்படி அயன் வரும்படி வருஷத்திற்கு ரூபா 720 ஆகவிருந்தாலும் மனுதாரின் பாத்தியம் ரூபா 6000. த்துக்கு மேலாகிறது. இந்த மனுதார் பாத்தியதையை ரூபா 1560-க்கு மதிப்பிட்டது கிரமவிரோதமானது; இதனால் ஜப்தி சொத்து சரியான விலைக்கு ஏலத்தில் விற்கப்படவில்லை. இவ்விதம் குறைந்த மதிப்பிட்டு இஸ்தியார் பிறப்பித்தது சட்டவிரோதமானது. (1913 M. W. N. 847, இ. லா. ரி. 40 கல்கத்தா 635, 20 அலகபாத் 412 இந்தத் தீர்மானங்களைப் பார்க்க.) இதனால் இந்த ஏலத்தை ரத்து செய்கிறோம். மனுதார் குடியானவன் எந்தத் தேதிமுதல் எந்தத் தேதி வரையில் தர்வா நிலத்தை யனுபவிக்கும்படியான பாத்தியமிருக்கிறது, அந்நிலத்தின் வரும்

படிகளில் சகல செலவுகளும் போக குடியானவனுக்கு வருஷம் 1-க்கு என்ன வரும்படி கிடைக்கும், இந்த வரும்படியின் பேரில் சொத்தை மதிப்பிட்டும், மற்றும் பல விஷயங்களைக் கண்டும் வேறு இஸ்தியார் பிறப்பித்து மறு ஏலம் போடும்படி யுத்திரவு செய்கிறோம்.

21 Indian cases 592.

கல்கத்தா ஹைகோர்ட்.

1911 ஹுத்திய 2-வது அப்பீல் நம்பர் 3208.

தீர்ப்பு 7—5—13.

ஜட்ஜிகள்	
ஜஸ்டிஸ் ஸர் அஷுதோஷ்மூகர்ஜி Kt.	ஹிமட்கான் வ. அ. வாதிகள்
	V
மிஸ்டர் ஜஸ்டிஸ் பீச்க்ராப்ட்	ஷெர்கான் அ. பிரதிவாதி

19. [சிவில் புரிஸீஜர் கோடு.]

மிஸ் ஜாயிண்டர் அவ்பார்டி, மிஸ் ஜாயிண்டர் வியாஜ்ஜிய மூலம் இவைகளைப்பற்றி முதல் கோர்ட்டார் தீர்மானஞ் செய்துவிட்டால் அது விஷயமாக அப்பீல் செய்யக்கூடாதென்பது.

வாதி ஒரு கிராமத்தில் நாலிலொரு பாகத்துக்குப் பாத்தியஸ்தனென்றும், பிரதிவாதி அந்தக் கிராமத்துக்கு லம்பார்டார் பாத்தியமுள்ளவனென்றும், அவன் பலவித கிராமவரும்படிகளையும் வசூலித்து வாதிக்குக் கணக்குக் கொடுக்கக் கடமைப்பட்டவனென்றும், பிரதிவாதி அந்தக் கணக்குக் கொடுக்கவேண்டுமென்றும், வரும்படிகள் பிரதிவாதியிடமிருந்து கிடைக்கவேண்டுமென்றும், வாதி வழக்கிட்டார். முதல் கோர்ட்டார் கேஸின் சாராம்சங்களில் பிரவேசித்து விசாரித்து வாதியின் தாவாப்படி தீர்ப்பு செய்துவிட்டார்கள். பிரதிவாதி அப்பீல் செய்ததில் வாதியின் பிராது சரியாகத் தயாரிக்கப்படவில்லையென்றும், வாதியின் தாவா மிஸ் ஜாயிண்டர் கக்ஷிக்காரர் தோஷத்துக்கும், மிஸ் ஜாயிண்டர் வியாஜ்ஜியமூலத்துக்கும் உள்ளாக்கப்பட் டிருக்கிறதென்றும், வாதியின் வழக்கைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். இதன் பேரில் வாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்கிறார்.

வாதியின் தாவா ரூபா 500-க்குட்பட்ட மதிப்புள்ளதாகையால் சி. பு. கோடு 102-வது செக்ஷன்படி 2-வது அப்பீல் இல்லை

யென்று பிரதிவாதி பிரதம ஆக்ஷேபனை செய்கிறார். ப்ரொவின்ஷியல் ஸ்மால்காஸ் கோர்ட்டு ஆக்ட்டு ஷிடியூல் 31-வது ஆர்டிகிள்படி வாதியின் தாவா கணக்குக் கொடுக்கப்படவேண்டுமென்ற வழக்காகையால் இதைப்பற்றி 2-வது அப்பீல் செய்யலாம். மிஸ் ஜாயிண்டர் கக்ஷிக்காரர் மிஸ் ஜாயிண்டர் வியாஜ்ஜியமூலம் இவைகளைப்பற்றி முதல் கோர்ட்டார் வாதிக்கு அனுகூலமாகத் தீர்ப்பு செய்துவிட்டால் அந்த டிக்கிரி மாற்றப்படக்கூடாதென்றும், அதில் முக்கியமான திருத்தல்கள் செய்யப்படக்கூடாதென்றும், அது விஷயமாக மறு விசாரணை செய்யும்படி அப்பீல் கோர்ட்டார் கேசை ரிமாண்டு செய்யக்கூடாதென்றும் சி. பு. கோடு 99-வது செக்ஷனில் சொல்லப்பட்டிருக்கிறது. முதல் கோர்ட்டார் இது விஷயமாக முடிவு செய்த பிறகு பிரதிவாதி இது விஷயமாக அப்பீலில் ஆக்ஷேபிக்கத் தடைப்பட்டிருக்கிறார். சப் ஜட்ஜி இதுவிஷயமாகத் தீர்ப்புச் செய்ய அதிகாரமில்லை. இதனால் அப்பீலை யங்கீகரித்து சப் ஜட்ஜி செய்த தீர்ப்பை ரத்து செய்கிறோம். சப் ஜட்ஜி சாராம்சங்களில் பிரவேசித்துக் கேசை விசாரித்து முடிவு செய்யும்படி உத்திரவு செய்கிறோம்.

21 Indian Cases 538.

அலகபாத் ஹைகோர்ட்.

1912 ஹுத்திய முதலாவது சிவில் அப்பீல் நம்பர் 114.

தீர்ப்பு 15—5—13.

ஜட்ஜிகள்.	
மிஸ்டர் ஜஸ்டிஸ் டட்பால் அவர்கள்	பிந்தராபன் வ. அ. வாதிகள்
	V
மிஸ்டர் ஜஸ்டிஸ் ராபீக் அவர்கள்	சகோத்ரா வ. அ. பிரதிவாதிகள்

20. [சிவில் புரஸீஜர் கோடு].

ஒரு மகசூலை யொருவன் கிரயம் பெற்று அதில் தனக்குள்ள பாத்தியம் ஸ்தாபிக்கப்பட்டு அந்த மகசூலாவது அதன் மதிப்புத் தொகையாவது கிடைக்கவேண்டுமெனக் கொண்டுவரும் வழக்கு ஸ்மால்காஸ் வழக்கென்பது.

முசாமத் ஸன்பதி என்றவள் பிரதிவாதிகளுடன் சேர்ந்து தாவாவிற்கண்ட நிலத்தைச் சாகுபடி செய்ததாகவும், அந்த நிலத்தின் மகசூலில் அவளுக்குப் பாதி பாத்தியமுண்டென்றும், அதைத் தனக்கு விற்றுவிட்டதாகவும், அந்தப் பாதி மகசூலாவது அல்லது

அதன் மதிப்புத் தொகை ரூபா 156-6 அணு வாவது தனக்குக் கிடைக்கவேண்டுமென்றும் வாதிகள் பிரதிவாதிகள் பேரில் வழக்கிட்டார்கள். இந்தத் தொகை ரூபா 156-6க்கு பொருமானங் கட்டி ஸ்டாம்புகட்டி வழக்கிட்டார்கள். கீழ் கோர்ட்டார்கள் வாதிகளுக்கு விரோதமாகத் தீர்ப்பு செய்துவிட்டதின் பேரில் ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்கிறார்கள்.

வாதிகளுக்குக் கிடைத்த சாசனபாத்தியதையை ஸ்தாபித்து அதிற் கண்ட மகசூலாவது, அல்லது அதன் மதிப்புத் தொகையாவது கிடைக்கவேண்டுமென வழக்கிட்டிருக்கிறார்கள். இது ரூபா 156-6 பொருமானமுள்ள ஜங்கம சொத்தாவது, அதன் மதிப்புத் தொகையாவது கிடைக்க வேண்டுமென்று கொண்டுவரப்பட்டதாவா. இது ஸ்மால்காஸ் நடவடிக்கை; இதைப்பற்றி 2-வது அப்பீல் கிடையாது. இந்தப் பிரதம ஆக்ஷேபனையை யங்கீகரித்து இந்த அப்பீலைச் செலவுடன் தள்ளுபடி செய்கிறோம்.

21 Indian Cases 638.

சென்னை ஹைகோர்ட்.

1912 ஹுத்திய சிவில் ரேவிஷன் மனு நம்பர் 772.

தீர்ப்பு 13—10—13.

ஜட்ஜி ஜஸ்டிஸ் மில்லர் அவர்கள்	ஒட்டபுறக்கால் தாயாத்சுப்பி ஆ. மனுதார்கள் V குன்ஹிகோயா எதிர் மனுதார்

21. [சிவில் புரிஸீஜர் கோடு.]

கோர்ட்டாருடைய இன்ஜெங்ஷனை மீறி நடப்பவருடைய சொத்துகளை ஜப்தி செய்தல் அல்லது அவரைத் தண்டித்தல் இது விஷயமான உத்தரவின் பேரில் அப்பீல் செய்யலா மென்பதும், அந்த ஜப்தியும் தண்டனையும் ஏககாலத்தில் செய்யவேண்டு மென்ப தவசியமில்லை யென்பதும்.

கோர்ட்டாருடைய இன்ஜெங்ஷனை மீறியதற்காக மனுதார்களைத் தண்டிக்கவேண்டு மென்று கவுண்டர் மனுதார் சி. பு. கோடு 39-வது ஆர்டர் ரூல் 2-ன்படி டிஸ்டிரிக்ட் முனிசிப் கோர்ட்டில் மனுக்கொடுத்ததில் அந்த மனுத் தள்ளுபடி செய்யப்பட்டது.

இதன் பேரில் கவுண்டர் மனுதார் டிஸ்டிரிக்ட் கோர்ட்டில் அப்பீல் செய்ததில் மனுதார்கள் தண்டிக்கப்பட்டார்கள். இவ்விதந் தண்டித்ததும் டிஸ்டிரிக்ட் முனிசிபால் மனுத் தள்ளுபடி செய்யப்பட்டதின் பேரில் அப்பீல் செய்ததும் சட்டவிரோதமானவை யென ரெவிஷன் மனுக் கொடுபட்டிருக்கிறது. கோர்ட்டாருடைய வுத்திரவுக்கு அவமதிப்பு உண்டுபண்ணிய விஷயமாக அந்தக் கோர்ட்டாரே மன்னித்துக் குற்றஞ் செய்தவரை விடுதலை செய்துவிட்டால் அது விஷயமாக அப்பீல் செய்யக்கூடாதென்றும், கோர்ட்டாருடைய இன்ஜெங்ஷனை மீறுவது வழக்கின் கக்ஷிக்காரர்களுக்கு விரோதமானதல்ல வென்றும், அது கோர்ட்டாருக்கு மட்டில் விரோதமானதேயன்றி யாதொருவருக்கும் அதனால் கெடுதியில்லையென்றும், அதனால் முனிசிப் செய்த உத்திரவின்பேரில் அப்பீல் செய்தது சட்ட விரோதமானதென மனுதார்கள் ஆக்ஷேபிக்கிறார்கள். இந்தக் கக்ஷி சரியானதல்ல. கோர்ட்டாருடைய இன்ஜெங்ஷனை மீறுவதால் எந்தக்கக்ஷிக்காரனுக்காவது நஷ்டங்களுண்டாகுமேயன்றி நஷ்டமில்லாமலிராது. இன்ஜெங்ஷனை மீறி நடப்பவருடைய சொத்துக்களை ஜப்தி செய்து அதையேல விற்றுமுதல் செய்து அத்தொகையில் இன்ஜெங்ஷனை மீறி நடந்ததினுலுண்டாகிய நஷ்டத்தைச் சம்பந்தப்பட்ட கக்ஷிக்காரனிடங் கொடுக்கவேண்டுமென்று மேற்படி 39-வது ஆர்டர் ரூல்-2 பாரா4-ல் சொல்லப்பட்டிருப்பதால் இன்ஜெங்ஷனைமீறுவதால் நஷ்டங்கள் வருமென்பதே ஸ்பஷ்டமாகத் தெரிகிறது. கோர்ட்டார் இது விஷயத்தைக் கவனியாமல் குற்றஞ் செய்தவனை மன்னித்துவிட்டாலும், நஷ்டமடைந்தவன் இதுவிஷயமாக அப்பீல் செய்யப் பாத்தியமுடையவன். இவ்வித கேஸ்களில் அப்பீல் செய்யப்படலாமென்று இ. லா. ரி. 10 சென்னை 179 தீர்மான மேற்பட்டிருப்பதால், அதை நாமனுசரிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். டிஸ்டிரிக்ட் ஜட்ஜி செய்த உத்திரவினுல் அபந்யாய மேற்பட்டதாக மனுதாகள் யாதொன்று மெடுத்துக்காட்டவில்லை. இந்த 39-வது ஆர்டர் ரூல் 2-ன்படி உத்தரவை மீறினவனுடைய சொத்துக்கள் ஜப்தி செய்யப்படுவதுடன் தண்டனையும் விதிக்கவேண்டுமென்று சொல்லியிருப்பதால் அவ்விதம் ஜப்தி செய்யாமல் தண்டனைமட்டில் விதித்தது சட்டவிரோதமானதென்று ஆக்ஷேபிக்கப்படுகிறது! அந்த செக்ஷனின் கருத்து அப்படிக்கல்ல. கோர்ட்

டாருக்கு இஷ்டமிருந்தால் இருவித சிக்ஷையுஞ் செய்யலாமென்று சொல்லப்பட் டிருக்கிறதேயன்றி இரண்டுவித தண்டனையுஞ் செய்யவேண்டியது அனுவசியம். அவர்களுக்கு இஷ்டப்பட்ட இருவித தண்டனையாவது அல்லது இரண்டிலொன்றாவது செய்யலாம். இதனால் டிஸ்டிரிக்ட் ஜட்ஜி செய்த உத்திரவை மாற்ற எவ்வித நியாயமுமில்லை. இந்த மனு செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

(1913) M. W N. 1019.

சென்னை ஹைகோர்ட்.

1912 ஞூத்திய 2 வது அப்பீல் நம்பர் 1001.

தீர்ப்பு 6—11—13.

ஜட்ஜிகள்.	
ஜஸ்டிஸ் சங்கரநாயரவர்கள்	K. வெங்கடய்ய ஹெக்காடி - வாதி அப்பீல்தாரன்
	V
ஜஸ்டிஸ் ஒல்ட்பீல்ட் அவர்கள்	குப்பண்ணு என்கிற ருகவேந்திர ராவ் அ. பிரதிவாதிகள்.

22. [சிவில் புரிஸீஜர் கோடு].

ஒருவன் தன்னுடையடிக்கிரியை நிறைவேற்றித் தன்னுடைய டிக்கிரிக் கடன்காரனுடைய டிக்கிரியை ஜப்திசெய்து தன்னுடைய நிறைவேற்று மனுவில் தன்னுடைய டிக்கிரித் தொகை விபரமும் ஜப்தி செய்யப்பட்ட டிக்கிரித் தொகை முதலிய விபரமுங் கண்டிருந்தால் அந்த டிக்கிரித் தொகை வசூலிக்கப்பட்டதில் இவருக்குப் பாக முண்டேன்பது.

ருகவேந்திர ராவ் என்பவர் 1906 வருஷத்திய அசல் 562-நம்பரில் வழக்கிட்டு அந்த நம்பர் தீர்ப்பு செய்யப்படுவதற்கு முன்னமே தன்னுடைய பிரதிவாதி பெற்றிருந்த 1909-வருஷத்திய அசல் 135-நம்பர் டிக்கிரியை ஜப்திசெய்வித்தார். வாதியும் இதே பிரதிவாதிபேரில் டிக்கிரி பெற்றிருந்ததால் அவரும் அந்த 135-நம்பர் டிக்கிரியை ஜப்தி செய்தார். இந்த ருகவேந்திர ராவ் தன்னுடைய வழக்கு டிக்கிரியான பிறகுதான் ஜப்தி செய்த 135-நம்பரில் ஜப்தி வாதியாக அந்த டிக்கிரியை நிறைவேற்றித் தொகை வசூலித்தவுடன் அத்தொகை இவருக்கும் வாதிக்கும் பகிர்ந்து கொடுக்கப்பட்டது. பிறகு வாதி இந்த ருகவேந்திர ராவ் தன் சொந்த டிக்கி

ரியை நிறைவேற்றாமல் ஜப்திசெய்த டிக்கிரியைமட்டில் நிறைவேற்றியது சட்ட விரோதமானதென்றும், அதனால் அந்த 135-நம்பர் டிக்கிரித் தொகையில் அவருக்கு யாதொன்றுங் கிடைக்கத்தக்கதில்லையென்றும், அந்த ருகவேந்திர ராவ் முதல் பிரதிவாதியாகவும், டிக்கிரி கடன்காரனை 135-நம்பர் வாதி இரண்டாம் பிரதிவாதியாகவுஞ் சேர்த்து தென் கன்னடம் ஜில்லா உடுப்பி டிஸ்டிரிக்ட் முன்சிப் கோர்ட்டு 1909ஞூத்திய அசல்391-நம்பரில் வழக்கிட்டார். கிழ்க்கோர்ட்டார்களிருவரும் வாதியின் வழக்கைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். அதனாலவர் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்கிறார்.

தன்னுடைய டிக்கிரியை நிறைவேற்ற மனுக்கொடுத்த டிக்கிரிதாரனுக்குமட்டில் விதாசாரத் தொகை கிடைக்குமென்றும், தீர்ப்புக்கு முந்தி ஜப்தி செய்திருந்தால் அதைக்கொண்டு எவ்வித விதாசாரத் தொகையுங் கிடைக்கமாட்டாதென்றும் அப்பீல் வாதி கக்ஷியாடுகிறார். இந்தக் கேசில் முதல் பிரதிவாதி 135-நம்பர் டிக்கிரியை ஜப்தி செய்த டிக்கிரிதாரன் முறைமையில் நிறைவேற்றியிருக்கிறார். இவர் இந்த டிக்கிரியை நிறைவேற்றியதில் தன்னுடைய சொந்த டிக்கிரித்தொகை யின்னதென்பதையும், தான் ஜப்திசெய்த முறைமையில் நிறைவேற்றுவதையுஞ் சொல்லியிருக்கிறார். இதனாலிவர் தன்னுடைய டிக்கிரியை நிறைவேற்றி அந்த வகையில் ஜப்திசெய்த டிக்கிரியை நிறைவேற்றியதாகும். பழைய சி. பு. கோடு 235-வது செக்ஷனை யனுசரித்து நிறைவேற்று மனுக்கொடுத்திருக்கவேண்டும். அந்தப்படிச் செய்யாததினால் ஜப்திசெய்த டிக்கிரித்தொகையில் அவருக்குப் பாத்தியமில்லையென வாதி கக்ஷியாடுகிறார். இது ஒரு மிகவும் அற்பமான விதி. முதல் பிரதிவாதி தன்னுடைய சொந்த டிக்கிரி விபரமும் ஜப்தி செய்யப்பட்ட டிக்கிரி விபரமுஞ் சொல்லியிருக்கிறார். இப்போது நிறைவேற்றிய மாதிரியல்லாமல் வேறெந்தவிதமாக தன்னுடைய டிக்கிரியையும் ஜப்தி டிக்கிரியையும் நிறைவேற்ற வேண்டுமோ அது எங்களுக்குப் புலப்படவில்லை. இதனால் முதல் பிரதிவாதிக்கு தாவா டிக்கிரித் தொகையில பாத்திய முண்டென்றே தீர்மானிக்கிறோம். வாதியின அப்பீல் செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

(1918) M. W. N. 1022.

அலகபாத் ஹைகோர்ட்.

1913 ௵த்திய அப்பீல் நம்பர் 100.

தீர்ப்பு 29—7—13.

ஜட்ஜிகள்.	மக்கான் தாஸ் (பிரதிவாதி) அ. வாதி
ஸர் ஹென்ரி ரிச்சர்ட்ஸ் Kt.	V
சீவ் ஜஸ்டிஸ்	மன்னுலால் (வாதிகளூ).
மிஸ்டர் ஜஸ்டிஸ் பிக்கார்ட்.	அ. பிரதிவாதிகள்

23. [சிவில் புரிஸீஜர் கோடு.]

ஒருவனுக்குப் பிறந்த சம்மனை யவன் சிற்றப்பனிடம் சர்வ் செய்தது சம்மன் கிரமமாக சர்வானதாக எண்ணப்படக்கூடா தென்பது.

பிரதிவாதி தனக்கு நேரில் சம்மன் சர்வாகவில்லை யென்றும், தன்னை எக்ஸ்பார்ட்டி செய்து டிக்கிரி செய்திருப்பதை ரத்து செய்து கேசைப் புனர் விசாரணை செய்யவேண்டுமென மனுக் கொடுத்தார். பிரதிவாதிக்குப் பிறந்த சம்மனை அவனுடன் வசித்துவரும் அவனுடைய சிற்றப்பனிடம் சர்வ் செய்ததானது கிரமமான சர்வீஸென்றும், எகஸ்பார்ட்டி ரத்து செய்யப்பட நியாயமில்லையென்றும், கீழ்க்கோர்ட்டார் பிரதிவாதியின் மனுவைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். அதன்பேரில் இந்தக் கோர்ட்டில் அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது. தனக்குப் பிறந்த சம்மனை தன்னுடைய சிற்றப்பனிடம் சர்வ் செய்தது சம்மன் சர்வ் செய்த தாகமாட்டா தென்பதுதான் அப்பீல் தாரனுடைய முக்கிய விவாதம். சம்மனனது கூடுமான மட்டில் நேரிற் சர்வ் செய்ய வேண்டுமென கோடில் சொல்லப்பட்டிருக்கிறது. அப்பீல்தாரனைக்கண்டுபிடிக்க முடியவில்லை, அதனால் அவனுடன் வசித்து வரும் அவனுடைய சிற்றப்பனிடம் சர்வ் செய்யப்பட்டது என்ப தாகக் கோர்ட்டாருக்குத் திருப்திகரமாக ருஜுப்பிக்கப்பட்டால் இவ்விதம் சிற்றப்பனிடம் சர்வ் செய்தது போதுமான தென்று கோர்ட்டார் தீர்மானித்திருக்கலாம். அப்பீல்தாரான பிரதிவாதியைக் கண்டுபிடிக்க முடியவில்லையென்பதற்கு யாதொரு ருஜுவுமில்லை. இதனால் அப்பீலையங்கீகரித்துக் கீழ்க்கோர்ட்டார் செய்த உத்தரவை ரத்து செய்கிறோம். கேசைப் பயிலில் வைத்துக் கொண்டு புனர் விசாரணை செய்து சட்டப்படி முடிவு செய்யும்படி உத்தரவு செய்கிறோம்.

21 Indian Csses 614.

கல்கத்தா ஹைகோர்ட்.

1913 ௵த்திய சீவில் மிஸ்லேனியஸ் அப்பீல் நம்பர் 239.

தீர்ப்பு 8—7—13.

ஜட்ஜிகள்	லாலா நிருஸ் நாறாயன் அ வாதி
மிஸ்டர் ஜஸ்டிஸ் ரிச்சேர்ட்ஸன்	V
மிஸ்டர் ஜஸ்டிஸ் நியுபௌல்ட்	பியாரிதாய் தேவி ஆ
	அ. பிரதிவாதிகள்

24. [சீவில் புரஸீஜர் கோடு]

டிக்கிரி கடன்காரனை குறிப்பிட்டகாலத்தில் ஆஜர் செய்வதாக வேறொருவன் ஜாமீன் முச்சலிகா எழுதிக்கொடுத்தால் அது ஏற்பட்ட ஒரு நிறைவேறு மனு நடவடிக்கைகளுக்கு மட்டில் செல்லு மென்பது.

பியாரிதாய் தேவி என்பவள் ரும் நெக்காரூப் என்பவர் பேரில் பெற்றிருந்த டிக்கிரியை நிறைவேற்ற 1911-வருஷம் ஆகஸ்டு மாதம் 8-தேதி மனு கொடுத்தாள். இந்த மனு நடவடிக்கையில் தடைதார் ஷியோடாகல்ரூப் 1912-வருஷம் ஜனவரி மாதம் 16-ந்தேதி வாரண்டில் பிடிக்கப்பட்டான். இந்தத் தடைதாரைக் கோர்ட்டார் எந்தத்தேதியில் ஆஜர்செய்யவேண்டுமென்று உத்தரவு செய்கிறார்களோ அதற்கு ஒரு வாரத்துக்கு முன் தெரிவித்தால் அந்தத் தடைதாரைக் குறிப்பிட்ட தேதியில் ஆஜர் செய்விப்பதாகவும், அந்தப்படி ஆஜர் செய்யத் தவறினால் ரூபா 354-12 தானும் தன் சொத்தினின்றுங் கொடுப்பதாகவும், மேற்படி ஜனவரி மாதம் 16-தேதியிலேயே அப்பீல்வாதி கோர்ட்டாருக்கு ஒரு ஜாமீன் முச்சலிக்கா எழுதிக்கொடுத்தார். இது எழுதிக் கொடுத்த மறு தேதியில் ஷியோடாகல்ரூய் விடுதலை செய்யப்பட்டான். இந்த நிறைவேறு மனு டிக்கிரிதாரி சரியாக நடவடிக்கை நடத்தாததினால் 1912-வருஷம் ஜூலை மாதம் 5-தேதி தள்ளுபடி செய்யப்பட்டது. இந்த மனுவை மறுபடியும் பயிலில் வைத்துக்கொள்ள வேண்டுமெனக் கொடுத்த மனுவுந் தள்ளுபடியாகிவிட்டது. பிறகு டிக்கிரிதாரி 1912-வருஷம் ஆகஸ்டு மாதம் 22-தேதி வேறு நிறைவேறு மனுக்கொடுத்து அப்பீல்தார் பேரில் ஜாமீன் முச்சலிகாவிற் கண்ட தொகைக்கு ஏன் நிறைவேற்றக் கூடாதென்பதற்குக் காரணமிருந்தால் தெரிவிக்கும்படி நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்டது. அப்பீல்தார் ஆஜராகிச் சில ஆக்ஷேபனை

கள் செய்தார். கீழ்கோர்ட்டார்களிருவரும் இவருடைய ஆக்ஷேபனைகளைத் தள்ளுபடி செய்து விட்டார்கள். அதன் பேரில் இந்த கோர்ட்டில் அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது.. இந்த அப்பீல்தாரன் எந்த நிறைவேறு மனுநடவடிக்கைக்காக ஜாமீன் கொடுத்தானோ, அந்த மனுத் தள்ளுபடி செய்யப்பட்டுப் போய்விட்டபடியால் தன்னுடைய ஜவாப்தாரி நீங்கிவிட்டதென்று இந்தக்கோர்ட்டில் முதல் முதல் ஆக்ஷேபனை செய்யப்படுகிறது. இந்த ஆக்ஷேபனைகள் கீழ்கோர்ட்டுகளிற் சொல்லப்படவில்லை. இந்தக் கக்ஷி சரியானதென்று தோற்றுவதால் நாமதை ஆலோசிக்க வேண்டியது அவசியமானது. சிவில் புரஸீஜர் கோடு 55-வது செக்ஷன்படி தாவா ஜாமீன் முச்சலிகா எழுதிக்கொடுக்கப்பட்டதென்றும் அப்பீல்தாரன் பேரில் அதிற்கண்ட தொகைக்கு நிறைவேற்றலாமென்றும் டிக்கிரிதாரியின் வக்கீல் ஆக்ஷேபிக்கிறார். தடைதார் ஷியோடாகல் தான் இன்ஸால்வெண்டு மனுக்கொடுக்கப்போவதாகச் சொல்லவில்லை. இந்த ஜாமீன்தார் அப்பீல்தாருக்கு பிறந்த நோட்டீசில் அந்தத் தடைதாரை கோர்ட்டில் ஆஜர் செய்யும்படி காணவில்லை. அந்தப்படி யாதொரு உத்தரவுஞ் செய்யப்படாததால் சி. பு. கோடு 145-வது செக்ஷன்படி அப்பீல்தார் பேரில் நிறைவேற்றியது சரியல்ல. 55—வது செக்ஷன் 4-வது கிளாஸிற் கண்ட நிபந்தனையின்படி தாவா ஜாமீன் முச்சலிகா எழுதிக் கொடுக்கப்படவில்லை. கோர்ட்டாரிடமிருந்து நோட்டீஸ் கிடைத்த ஒரு வாரத்துக்குள் இந்த ஷியோடாகலை கோர்ட்டில் ஆஜர் செய்கிறதென்றும், அந்தப்படி ஆஜர் செய்யாவிட்டால் தொகை கொடுக்கிறதென்றுங் கண்டிருக்கிறது. இது குறிப்பிட்ட 518 நம்பர் நிறைவேறு மனு நடவடிக்கைக்கு மட்டில் செல்லுமேயன்றி வேறு மனுக்களுக்கு செல்லத் தகுந்ததல்ல (இ. லா. ரி. 14 கல்கத்தா 757 தீர்மானத்தைப் பார்க்க.) இந்த நிறைவேறு மனுத்தள்ளுபடி செய்யப்பட்டிருந்தால் டிக்கிரி கடன்காரன் விடுதலை செய்யப்படவேண்டியது மெத்த அவசியம். இவன் விடுதலை செய்யப்படும் பட்சத்தில் ஜாமீன்தாருடைய பாத்தியமும் அத்துடன் போய்விடுகிறது. இதனால் அப்பீலையங்கீகரித்து அப்பீல்தாரன்பேரில் டிக்கிரி நிறைவேற்றப்படக் கூடாதென உத்திரவு செய்கிறோம்.

21 Indian Cases, 612.

கல்கத்தா ஹைகோர்ட்

1910 ஹுத்திய ரெகுலர் சீவிஸ் அப்பீல் நம்பர் 157.

தீர்ப்பு 30—4—12.

ஜட்ஜிகள்.	கிரோதா மாயிதாஸி ஆ அ. வாதிகள்
ஜஸ்டிஸ் ஸர் ஸிஸில் பிரெட் Kt.	V
மிஸ்டர் ஜஸ்டிஸ் ஷாபுர்டீன்	அதார் சந்திரகோஸ் ஆ அ. பிரதிவாதிகள்.

25. [சீவில் புரிஸீஜர் கோடு.]

பயினல் டிக்கிரி (Final decree) ஆனபிறகு பிரிலிமினரி டிக்கிரியைப்பற்றி மட்டில் அப்பீல் செய்யக்கூடாதென்பது.

பந்தாரா பட்டணத்திலுள்ள சொத்துக்களைப் பற்றியும் ஹவுரா நகரிலுள்ள ஒரு வீட்டைப்பற்றியும் வாதிகள் 1-முதல் 4-பிரதிவாதிகள் பேரில் பாக வழக்கிட்டார்கள். ஹவுரா நகரிலுள்ள வீட்டை முதல் பிரதிவாதி 5-ம் பிரதிவாதிக்கு பெந்தகம் வைத்திருந்ததால் அவரும் பிரதிவாதியாகச் சேர்க்கப்பட்டார். இந்த வீடு முதல் பிரதிவாதிக்கும் அவருடைய மனைவிக்கும் சொந்தமான சொத்தென்றும், குடும்பப் பொது சொத்தல்லவென்றும் 1-5-பிரதிவாதிகள் ஆக்ஷேபனை செய்தார்கள். இவர்களின் கக்ஷி நியாயமானதெனக் கண்டுபிடித்து இந்த வீட்டை நீக்கி பந்தாரா சொத்துக்களைப்பற்றி மட்டில் 1910-வருஷம் மார்ச்சு மாதம் 29-தேதி பிரிலிமனரி டிக்கிரி செய்தார்கள். இந்த டிக்கிரி ஏப்ரல் மாதம் 2 - தேதி கையெழுத்து செய்யப்பட்டது. இந்தப் பாக வழக்கிடுவதற்கு முந்தியே 5-ம் பிரதிவாதி தன்னுடைய பெந்தக பத்திரத்தின் பேரில் வழக்கிட்டு டிக்கிரிபெற்றுப் பெந்தக சொத்தை யேல விற்பனை செய்ய மனுக்கொடுத்திருந்தார். இந்த பாக வழக்கின் பிரிலிமினரி டிக்கிரியை யுறுதிசெய்து பைனல் டிக்கிரி செய்வதற்காக ஏப்ரல் மாதம் 19-தேதி கெடு குறிக்கப்பட்டிருந்தது. இந்தக் கெடுவுக்கு வாதிகளாவது பிரதிவாதிகளாவது ஆஜராகவில்லை இதனால் வாதிகளின் பாகவழக்கைத் தள்ளிப் பயினல் டிக்கிரி செய்துவிட்டார்கள். இந்த டிக்கிரி ஏப்ரல் மாதம் 26-தேதி கையெழுத்து செய்யப்பட்டது. வாதிகள் மேலே சொன்ன பிரிலிமினரி டிக்கிரியைப்பற்றி மட்டில் ஏப்ரல் மாதம் 20-தேதி அப்பீல் செய்தார்கள். முடிவான டிக்கிரி (Final decree) ஆனபிறகு பிரதம டிக்கிரியைப்பற்றி மட்டில் அப்பீல் செய்தது

சரியல்லவென்றும், இது தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றும் இ. லா. ரி. 36-கல்கத்தா 762-தீர்மானத்தை ஆதாரமாகக் காட்டி பிரதிவாதிகள் கக்ஷிபாடுகிறார்கள்.

ஏப்ரல்மாதம் 19-தேதி செய்யப்பட்ட முடிவான டிக்கிரியினால் பந்தாரா பட்டணத்தின் சொத்துக்களையன்றி ஹவுரா வீட்டைப் பற்றிய வழக்குந் தள்ளுபடியாகிவிட்டது. பிரதம டிக்கிரிக்கும் முடிவான டிக்கிரிக்கும் வித்தியாசமிருக்கும்பட்சத்தில் பிரதம டிக்கிரியைப்பற்றி மட்டில் அப்பீல் செய்வதில் எவ்வித பிரயோஜனமுமில்லை. பிரதம டிக்கிரியினால் நஷ்டமடைந்தவர் அதைப் பற்றி அப்பீல் செய்யாதிருந்துவிட்டால் அது பிசகென்பதாக முடிவான டிக்கிரி செய்யப்பட்ட பின்பு அப்பீல் செய்யக்கூடாதென்பதாக சி. பு. கோடு 97-வது செக்ஷனிற் சொல்லப்பட்டிருப்பதை தங்கள் கக்ஷிக்கு ஆதாரமாக அப்பீல் வாதிகள் வக்கீல் எடுத்துச் சொல்லுகிறார். இந்தப்படி பிரதம டிக்கிரியைப்பற்றி அப்பீல் செய்யவேண்டியது மெத்த அவசியந்தான். இந்தக் கேஸ் அப்படிக்கல்ல; முடிவான டிக்கிரி செய்யப்படுவதற்கு கெடு குறிக்கப்பட்டிருந்த தேதி வாதிகளுக்கு நன்றாகத் தெரியும். இவர்கள் கோர்ட்டில் ஆஜராகி தாங்கள் அப்பீல் செய்யப் போவதாக கெடுவை யொத்திக் கேட்டிருக்கலாம்; அல்லது அதைப் பற்றிக் கக்ஷியாடியிருக்கலாம். அந்தப்படிச் செய்யாமல் தங்களுடைய தவறுதலினால் வழக்குத்தள்ளுபடி செய்யப்படும்படியாகச் செய்துவிட்டு பிரதமடிக்கிரியைப்பற்றி மட்டில் அப்பீல் செய்வது எவ்விதத்திலுஞ் சரியானதல்ல. இந்த முடிவான டிக்கிரி ஏப்ரல் மாதம் 26-தேதி தான் கையெழுத்துசெய்யப்பட்டிருக்கிறதென்றும் அதற்கு முந்தியே அதாவது ஏப்ரல் மாதம் 20 தேதியிலேயே அப்பீல் செய்யப்பட்டிருப்பதால் தாங்கள்செய்த அப்பீல் சரியானதென்று அப்பீல் வாதிகளின் வக்கீல் சொல்லுகிறார். தீர்ப்பு எந்தத் தேதியிலேற்படுகிறதோ அதே தேதிதான் டிக்கிரியிலுமிருக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருப்பதால் டிக்கிரியில் கையெழுத்து செய்த தேதியைக்கொண்டு கணக்கிடக்கூடாது. முடிவான டிக்கிரி செய்யப்பட்ட பிறகு பிரதமடிக்கிரியைப் பற்றி மட்டில் அப்பீல் செய்தது சரியல்ல. ஆகையால் இந்த அப்பீலை செலவுடன் தள்ளுபடி செய்கிறோம்.

21 Indian Cases 516.

161286
600 008.

கல்கத்தா ஹைகோர்ட்.

1910 ஹூத்திய 2வது அப்பீல் நம்பர் 178[illegible]

தீர்ப்பு 5—2—13.

ஜட்ஜிகள்	ஜிப்ஷுகான்ஷா அ. வாதி
மிஸ்டர் ஜஸ்டிஸ் சிட்டி அவர்கள்	V
மிஸ்டர் ஜீஸ்டிஸ் டியூனன் அவர்கள்	ஜானகிநாத் டேய் அ. பிரதிவாதி

26. [சீவில் புரிஸீஜர் கோடு.]

வாதிக்கு அனுகூலமாக சில பிரதம இஷ்ஷியுக்களைப் பற்றித் தீர்மானிப்பது சி. பு. கோடு 2 (2) செக்ஷன்படி டிக்கிரியல்லவென்பது.

ஒரு நம்பரில் பல இஷ்ஷியுக்கள் ஏற்பட்டிருந்தன. அவைகளில் 5 - 6 இஷ்ஷியுக்கள் காலாவதி தோஷத்தைப்பற்றியும் ரெஸ்ஜூடிகேடா தோஷத்தைப் பற்றியும் ஏற்பட்டிருந்தன. இந்த இரண்டு இஷ்ஷியுக்களைப் பற்றியும் முதல் கோர்ட்டார் விசாரித்து வாதிக்கு அனுகூலமாகத் தீர்மானஞ் செய்துவிட்டார்கள். இது விஷயமாக பிரதிவாதி டிஸ்டிரிக்ட் கோர்ட்டில் அப்பீல் செய்தார். மேலே கண்டபடி இரண்டு இஷ்ஷியுக்களைப்பற்றி மட்டில் தீர்மானித்தது டிக்கிரியல்லவென்றும், அந்தத் தீர்மானத்தைப்பற்றித் தனிமையில் அப்பீல் செய்யச் சட்டமில்லையென்றும் வாதி ஆக்ஷேபித்தார். டிஸ்டிரிக்ட் கோர்ட்டார் வாதியின் ஆக்ஷேபணையைக் கேளாமல் அந்தத் தீர்மானம் டிக்கிரியென்றே தீர்ப்பு செய்தார். இதைப்பற்றி இந்தக் கோர்ட்டில் வாதியால் அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது.

டிஸ்டிரிக்ட் ஜட்ஜி சொல்லும் அபிப்பிராயம் பிசகானது. இந்தப்படி பார்க்கும் பட்சத்தில் ஒவ்வொரு இஷ்ஷியூவுக்கும் ஒவ்வொரு அப்பீலாக அளவிறந்த அப்பீல்கள் செய்ய நேரும். இந்தக் கேசில் யாதொரு முடிவுஞ் செய்யப்படாதிருக்கும்போது பிரதிவாதி அப்பீல் செய்தது சட்ட விரோதம். ஆதலால் டிஸ்டிரிக்ட் கோர்ட்டார் செய்த தீர்மானத்தை ரத்து செய்கிறோம்.

21 Indian Cases 387.

5L
Z211, 83 m N13
N13.1

சென்னை ஹைகோர்ட்.

1913 வருத்திய சிவில் ரேவிஷன் மனு நம்பர் 187.

தீர்ப்பு 31—10—13.

ஜட்ஜி. ஜஸ்டிஸ் மில்லர் அவர்கள்	நித்தியானந்த முத்துசாமி மணிகாரன் வாதி மனுதாரன் V விஸ்வனாத மணிகாரன் ஆ.

27. [சிவில் புரிஸீஜர் கோடு]

பிரமாண பத்திரிகைகள் வாசிக்கப்பட்டன, வக்கீல்களின் விவாதங்கள் கேட்கப்பட்டன, எக்ஸ்பார்டி டிக்கிரி ரத்து செய்யப் பட்டது என்று உத்திரவு செய்யப்பட்டிருந்தால் அது ருஜு வம்சங்களை விளங்கி உத்திரவு செய்ததாகுமென்பதும் இதன்மேல் ரேவிஷன் மனு கொடுக்க நியாயமில்லை யென்பதும்.

திண்டுக்கல் டிஸ்டிரிக்ட் முனிசீப் கோர்ட்டு 1912 வருஷத்திய அசல் 694-நம்பரில் முதல் பிரதிவாதியை எக்ஸ்பார்ட்டி செய்து டிக்கிரி செய்யப்பட்டது. முதல் பிரதிவாதி தனக்கு நேரில் சம்மன் சர்வாகவில்லையென்றும் தனக்கு வந்த சம்மனை தன்னுடைய சகோதரன் 2-ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டது தனக்குத் தெரியாதென்றும், அதனால் தன்பேரிலேற்பட்டிருக்கிற எக்ஸ்பார்டி டிக்கிரியை ரத்து செய்யவேண்டு மென்றும், முதல் பிரதிவாதி மனுகொடுத்தார். இதை யாதரித்தே இரண்டாம் பிரதிவாதி சொன்னார். 1. 2 பிரதிவாதிகள் சொல்லுவது பொய்யென்றும், இந்த வழக்கு விஷயம் 1-ம் பிரதிவாதிக்குத் தெரியுமென்றும், வாதி கவுண்டர் அபிடவிட் கொடுத்தார். இதன்பேரில் டிஸ்டிரிக்ட் முனிசீப் அடியிற் கண்ட வுத்திரவு செய்தார்கள். "பிரமாண பத்திரிகைகள் வாசிக்கப்பட்டன, இருதிறப்பு வக்கீல்களின் விவாதங்களுங் கேட்கப்பட்டன, இந்தக் கேசிலேற்பட்ட எக்ஸ்பார்டி டிக்கிரி ரத்து செய்யப்படும். கேசை பயிலில் வைத்துக்கொள்ளப்பட்டது". இந்த வுத்திரவின்பேரில் இந்தக் கோர்ட்டில் ரெவிஷன் மனு கொடுக்கப்பட்டிருக்கிறது.

மனுவிற்கண்ட விஷயங்களை விசாரியாமல் எக்ஸ்பார்டி டிக்கிரியை ரத்து செய்தது முக்கியமான தவறுதலென்றும், இ. லா. ரி. 26 சென்னை 599 தீர்மானத்திற் கண்டபடி எக்ஸ்

பார்டி டிக்கிரியை ரத்து செய்ய கோர்ட்டாருக்கு சகஜமான அதிகாரமிருப்பதாக எண்ணிச் செய்துவிட்டதாகவும், இத்தீர்ப்பு சரியானதல்லவென்று இப்பால் (1913) M. W. N. 165 தீர்மானமேற்பட்டுவிட்டதென்றும், அதன்படி தகுந்த காரணங்களுக்கன்றி எக்ஸ்பார்டி ரத்து செய்யப்படக்கூடாதென்றும் வாதி வக்கீல் க்ஷியாடுகிறார்.

டிஸ்டிரிக்ட் முனிசீப் பிரமாண பத்திரிகைகளின் ஆதாரத்தின் பேரில் முடிவு செய்திருக்கிறாரென்பதற்குச் சந்தேகமில்லை. அது ருஜுவம்சமேயன்றி வேறல்ல. வேறு ருஜுக்கள் விட்டதாகவாவது அவை யங்கீகரிக்கப்படவில்லை யென்றாவது சொல்லப்படவில்லை. இந்த வழக்கு விபரம் முதல் பிரதிவாதிக்குத் தெரியாதென்றும், இவருக்கு இந்த விஷயத்தைப் பற்றி 2-ம் பிரதிவாதி சொல்லவில்லையென்றும் வைத்துக்கொள்ளுவோம். இப்போதுள்ள விஷயங்களைக் கொண்டு டிஸ்டிரிக்ட் முனிசீப் எக்ஸ்பார்டி டிக்கிரியை ரத்து செய்யாதிருந்தால் நியாயமாகவிருக்கும். ஆனால் முதல் பிரதிவாதியின் தெரியாத்தன்மையே அவர் ஆஜராகாமலிருந்ததற்குத் தகுந்த காரணமென்று டிஸ்டிரிக்ட் முனிசீப் அபிப்பிராயப்படலாம். அது பிசகென்று நாம் சொல்லக்கூடாது. இந்த மனு செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

21 Indian Cases 457.

சென்னை ஹைகோர்ட்.

1912 வருத்திய சிவில் ரிவிஷன் மனுக்கள் நம்பர்கள் 123 - 124.

தீர்ப்பு. 13—10—13.

ஜட்ஜி. மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லரவர்கள்	சுப்பு ரெட்டியார் ஆ. பாத்திய மனுதார்கள் V குமாரசாமி ரெட்டியார் டிக்கிரிதாரன் எதிர் மனுதாரன்

28. [சிவில் புரிஸீஜர் கோடு]

பாத்திய மனு தள்ளுபடி செய்யப்பட்டதின்பேரில் ரேவிஷன் மனு கொடுக்க சட்டமில்லை யென்பது.

மதுரை சப் கோர்ட்டு 1910 வருஷத்து நிறைவேற்று மனு நம்பர் 112-ல் பாத்திய மனு கொடுக்கப்பட்டு அதிலேற்பட்ட உத்திரவின் பேரில் ரெவிஷன் மனு.

குமாரசாமி ரெட்டியாருக்கு சங்கரலிங்க ரெட்டியாரென்பவர் ஒரு பிராமசரி நோட் எழுதிக் கொடுத்திருந்தார். அவர் இறந்துவிட்டபடியால் அவர் விதந்து பேரிலும் ஸ்வீகார பிள்ளையென்று பாத்தியங் கொண்டாடுகிறவர் பேரிலும் அந்த நோட்டின் பேரில் வழக்கிட்டு ரூபா 4000 த் துக்கு டிக்கிரி பெற்றார். இந்த டிக்கிரியை நிறைவேற்றி இறந்தவர் சொத்தென்று சில சொத்துக்கள் ஜப்தி செய்யப்பட்டன. இச்சொத்துக்கள் தங்களுக்குப் பூர்வீகச் சொத்துக்களென்றும், சங்கரலிங்கர் எழுதி வைத்திருக்கும் உயில்ப்பட்டித் தங்களுக்குக் கிடைத்து தங்கள் வசம் அச்சொத்துகளிருப்பதாகவும், பாத்திய மனுக்கொடுத்தார்கள். இதன்பேரில் சப்ஜட்ஜி அடியிற்கண்ட வுத்திரவு செய்தார்கள்.

இறந்தவரால் கொடபட வேண்டிய பிராமசரி நோட்டுக் கடனுக்காக அவர் விதந்துபேரிலும் மஞ்சணீர் பிள்ளை பேரிலும் ரூபா 4000 சொச்சத்துக்கு டிக்கிரி செய்யப்பட்டிருக்கிறது. பிரோபேட் அண்டு அட்மினிஸ்டிரேஷனுகட்டு 105 - 110-வது செக்ஷன்களின்படி டிக்கிரிதாரன் மாணசாதனப் பொருள் பெற்றவன் (அதாவது லெகடியிடமிருந்து வீதாசாரப்படி தொகையை யடைய பாத்திய முடையவன் பாத்திய மனுதார்களும் அதேவித பாத்தியமுடையவர்களே யன்றி இவர்களுக்கு மட்டில் ஜாஸ்தியான் பாத்தியங் கிடைக்க நியாயமில்லை. டிக்கிரிதாரன் இறந்தவனுடைய எல்லாச் சொத்துக்களையும் ஜப்தி செய்யப் பாத்தியமுடையவன். பாத்திய மனுதள்ளுபடி செய்யப்பட்டது.

இந்த வுத்திரவின் பேரில் ரெவிஷன் மனுக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

சி. பு. கோடு 21-வது ஆர்டர் ரூல் 58 முதல் 63 இவைகளின்படி ஜப்தி சொத்து யார் ஸ்வாதீனத்திலிருக்கிறதென்பதைக் கண்டு பிடிக்கவேண்டுமென்றும், அது மூன்றுவது மனுஷன் ஸ்வாதீனத்திலிருந்தால் அவன் டிக்கிரி கடன்காரனுக்காகவாவது அல்லது அவனுக்கு டிரஸ்டியாகவாவது அனுபவிக்கிறானேவென்

றும், விசாரித்துத் தீர்மானிக்கவேண்டியது மெத்தஅவசியமென்றும், இவ்விதம் விசாரியாமல் முடிவு செய்ய சப் ஜட்ஜிக்கு ஜூரிஸ் டிக்ஷனில்லையென்றும், பாத்தியமனுதார் வக்கீல் சொல்லுகிறார்.

21-வது ஆர்டர் 63-வது ரூல்படி செய்யப்படும் உத்தரவு முடிவானதென்றும், அதன்பேரில் ரெவிஷன் மனுக்கொடுக்கச் சட்டமில்லையென்றும் டிக்கிரிதாரன் வக்கீல் கக்ஷி சொல்லுகிறார்.

இந்த 63-வது ரூல் தாவா கேசுக்கு ஒற்றுமையானதல்லவென்றும், கோர்ட்டாருக்கு ஜூரிஸ்டிக்ஷனிருந்தால் மட்டில சரிபாகவோ அல்லது பிசகாகவோ கோர்ட்டார் உத்தரவு செய்துவிட்டால் அதன்பேரில் ரெவிஷன் மனு கொடுக்கக்கூடாதென்றும் கோர்ட்டார் தங்கள் அதிகாரவரம்பை மீறி உத்தரவு செய்யும் பட்சத்தில் ரெவிஷன் மனு கொடுக்கலாமென்றும், பாத்தியமனுதார் வக்கீல் கக்ஷியாடுகிறார்.

ஏற்பட்ட ரூல்களின்படி பாத்திய .மனுதார் அசல் வழக்கு மூலமாக தனக்கு வேண்டிய பரிகாரத்தைத் தேடிக் கொள்ளலாம். அதனால் இந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

21 Indian Cases 461.

சென்னை ஹைகோர்ட்டு

1912 ஒருத்திய சிவில் வழக்கு நம்பர் 7.

தீர்ப்பு 10—9—18.

ஜட்ஜி	K. R. V. கம்பெனி வாதி
	V
மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலீஸ் அவர்கள்	சத்யவத சீதாராமஸ்வாமி பிரதிவாதி

13. [லிமிடேஷனுக்ட்]

கூட்டு வர்த்தகத்தின் அவசியச் செலவுக்காவது அத்தொழில் நடத்துவதற்காவது ஒரு கூட்டாளி எழுத்து மூலமாக எழுதிக் கொடுத்தால் அல்லது கடனை யொப்புக்கொண்டு கையெழுத்து செய்தால் மற்ற கூட்டாளிகளைக் கட்டுப்படுத்தாதென்பது.

வாதி சென்னையிலுள்ள ஒரு கம்பெனியார்; பிரதிவாதிகள் சகோதரர்கள் கோதாவரி ஜில்லாவிலுள்ள வர்த்தகர்கள். வாதி

யிடத்தில் பிரதிவாதிகள் சாமான்கள் வாங்கி பத்து வரவு செய்து வந்ததாகவும், அந்தவகையில் பிரதிவாதிகளால் வாதிக்கு ரூபா 3976-0-6 சேரவேண்டியதாகக்கணக்குத்தீர்த்து முதல்பிரதிவாதி 1909 வருஷம் ஜனவரிமாதம் 7-தேதி வாதிகளின் கணக்குப் புத்தகத்தில் கையெழுத்து செய்துகொடுத்தார். இந்தக் கணக்கு பாக்கியின் பேரில் வாதி பிரதிவாதிகள் பேரில் வழக்கிட்டதில் 1 3 பிரதிவாதிகள் கக்ஷியாடவில்லை. 2-ம் பிரதிவாதி தான் 1-3 பிரதிவாதிகளுடன் கூட்டுவியாபாரஞ் செய்யவில்லையென்றும், முதல் பிரதிவாதி மட்டில் ஏகதேசத்தில் வர்த்தகஞ் செய்து வருவதாகவும், பிராதிற் கண்ட வர்த்தகம் குடும்ப வியாபாரமல்லவென்றும் குடும்பத்துக்கு யாதொரு சொத்துமில்லாததினால் பிரதிவாதிகள் அவிபக்தர்களென்று சொல்வது பிசகென்றும், தன்னைப் பற்றினவரையில் வாதியின் தாவா காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுப் போய்விட்டதென்றுங் கக்ஷியாடினார்.

வாதியின் கணக்குபுத்தகத்திற் கண்டபடி முதல் பிரதிவாதி பேரால் தொழில் நடத்தப்பட்டு வந்தபோதிலும் பிரதிவாதிகள் அவிபக்தர்களென்பதும், அவர்கள் ஒன்றாகச் சேர்ந்தே தொழில் நடத்தி வருகிறார்களென்பதும் இந்த 2-ம் பிரதிவாதி எழுதிய கடிதங்களினாலேயே தெரியவருகிறது. 2-ம் பிரதிவாதியின் வக்கீல் இப்பால் பிரதிவாதிகள் அவிபக்தர்களென்பதை யொப்புக்கொள்கிறார். ஆனால் முதல் பிரதிவாதி தாவா கடனை யொப்புக்கொண்டு கையெழுத்து செய்திருப்பதற்கு 2-ம் பிரதிவாதியைக் கட்டுப்படுத்த நியாயமில்லை யென்று கக்ஷியாடுகிறார். இவர் தம்முடைய கக்ஷிக்கு இ. லா. ரி. 32 சென்னை 421, 35 சென்னை 142 இந்தத் தீர்மானங்களை ஆதாரமாக எடுத்துக் காட்டுகிறார்.

ஒரு கூட்டு வர்த்தக முறைமையில் ஒரு கூட்டாளி அந்த வர்த்தக சம்பந்தமான பத்து வரவு பாக்கியை யொப்புக்கொண்டு கையெழுத்து செய்வதானது காலாவதி தோஷத்துக்கு பரிகாரமாகுமென்று இ. லா. ரி. 10 அலகபாத் 418 தீர்மானமேற்பட்டிருக்கிறது. வர்த்தகத்தின் அவசியத்துக்காக அல்லது அத்தொழில் நடத்துமுறைமையில் ஒரு கூட்டாளி ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தால் அது மற்ற கூட்டாளிகளின் அனுமதியின் பேரிற் செய்யப்பட்டதாக எண்ணப்பட வேண்டுமென்று இ. லா. ரி. 26 பம்பாய் 42 தீர்மானமேற்பட்டிருக்கிறது. இந்தக்

கோர்ட்டாரால் செய்யப்பட்ட தீர்மானங்கள் இவைகளுக்கு நேர் விரோதமாகவிருக்கின்றன. இந்தக் கோர்ட்டார் தீர்மானத்தின்படி ஒரு கூட்டாளி கையெழுத்து செய்ய மற்ற கூட்டாளிகள் அதிகாரங் கொடுத்திருக்கிறார்களென்பது ருஜூப்பிக்கப்படவேண்டியது மெத்த அவசியம். இவ்வித அதிகாரமிருக்கிறதென்று ஊகிக்கக்கூடாது. அலகபாத் பம்பாய் இந்த இரண்டு கோர்ட்டு தீர்மானங்கள் சரியானவைகளா, இந்தக் கோர்ட்டு தீர்மானங்கள் சரியானவைகளா என்பது சந்தேகத்துக்கிடமான விஷயங்களாயிருந்தபோதிலும், நாம் இந்தக் கோர்ட்டார் தீர்மானத்தையே அனுசரிக்கச் சட்டப்படி கடமைப்பட்டிருக்கிறோம். முதல் பிரதிவாதி ஒப்புக்கொண்டு கணக்கில் கையெழுத்து செய்திருப்பதில் நான் என்று சொல்லாமல் நாங்கள் என்று சொல்லியிருப்பதினாலேயே பிரதிவாதிகளின் கம்பெனிக்காக முதல் பிரதிவாதி கையெழுத்து செய்ததாக வேற்படுகிறது. அதனால் 2-ம் பிரதிவாதியையும் தாவா கடனுக்குக் கட்டுப்படுத்தவேண்டுமென வாதிகக்ஷியாடுகிறார். முதல் பிரதிவாதி சென்னைக்கு வந்து வாதி கணக்கில் கையெழுத்துச் செய்வது வழக்கமென்பதும் ருஜூவாகிறது. இதைக்கொண்டு மற்ற பிரதிவாதிகள் தங்களுக்காக முதல் பிரதிவாதி கையெழுத்து செய்யும்படி அதிகாரங் கொடுத்தார்களென்று சொல்லக்கூடாது. இவ்விதங் கையெழுத்து செய்ய அதிகாரங் கொடுத்தார்களென்பதற்கு எவ்வித ருஜூவுமில்லை. ஆகையால் வாதியின் தாவா 2 - 3 பிரதிவாதிகளைப் பற்றினவரையில் காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுப் போய்விட்டதாகத் தீர்மானிக்கிறோம். ஆகையால் தாவா தொகை 100-க்கு 6-வீதம் வட்டியுடன் முதல் பிரதிவாதியாலும் பிரதிவாதிகளின் குடும்பப் பொது சொத்திலிருந்து வசூலிக்கப்பட வேண்டியதாகத் தீர்மானிக்கிறோம்.

21 Indian Cases 635.

அலகபாத் ஹைகோர்ட்.

1913 ஞூ த்திய 2-வது அப்பீல் நம்பர் 407.

தீர்ப்பு 7—8—13.

ஜட்ஜி. மிஸ்டர் ஜஸ்டிஸ் பிக்காட் அவர்கள்	}	ரூமடுல்லா ஆ (வாதிகள்) அப்பீல்தார்கள்
		V
		ஷாம்ஸூடின் ஆ அ. பிரதிவாதிகள்

14. [லிமிடேஷனுட்டு].

ஒருவருக்குச் சோந்தமான நிலம் மற்ருெருவர் பேரால் பட்டா மாறுவதைக் கோண்டு மட்டில் பாத்தியஸ்தாபன வழக்குக் கோண்டுவோ வேண்டியது அவசியமில்லையேன்பதும். அந்த விஷயத்தைப் பற்றி வழக்கிடக் காலாவதி தோஷமும்.

கல்வா என்பவர் பேராலிருந்த பட்டா அவர் இறந்தவுடன் அவருடைய விதந்து முஸாமத் ஜாண்டியா பெயரால் மாறிவிட்டது. இவ்வித பட்டா மாறுதலான அனேக வருடங்கள் கழித்து அந்த விதந்து தன் பேரால் பட்டாவுள்ள சில நிலத்தை ஷாம்ஸூடின் என்பவருக்கு விற்ருள். அந்த ஷாம்ஸூடின் தனக்குச் சாசனஞ்செய்யப்பட்ட நிலத்தின்வரும்படி வாதிகளிடமிருந்து கிடைக்கவேண்டுமென வழக்கிட்டார். இதனுல் வாதிகள் தாங்கள் இறந்த கல்வாவுக்கு நேரான வார்சுகளென்றும், அவருடைய பூஸ்திதிகள் முதலியன அவருடைய ஜீவதிசைக்குப் பின் தங்கள் ஸ்வாதீனத்திலேயே யிருப்பதாகவும், அவைகளில் விதந்து ஜாண்டியா அவனிடஞ் சாசனம் பெற்ற ஷாம்ஸூடீன் இவர்களுக்கு எவ்வித பாத்தியமுமில்லை யென்றும், அவ்விருவரையும் பிரதிவாதிகளாகச் சேர்த்து வழக்கிட்டார்கள். தாவாவிற் கண்ட சொத்துக்களில் முக்கால் பாகத்துக்கு முதல் கோர்ட்டார் வாதிகளின் தாவாப்படியே தீர்ப்பு செய்து விட்டார்கள். இதைப் பற்றி பிரதிவாதிகள் அப்பீல் செய்ததில் வாதிகளுக்கு வியாஜ்ஜியமூல மேற்பட்டு 6 வருடங்களுக்குப் பிறகு வழக்கிட்டிருப்பதால் லிமிடேஷனுகட்டு முதலாவது ஷிடியூல் 120—வது ஆர்டிகிளின்படி வாதிகளின் தாவா காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுப் போய்விட்டதாக அப்பீலை யங்கீகரித்து வாதிகளின் வழக்கைத்

தள்ளுபடி செய்துவிட்டார்கள். இதன்பேரில் வாதிகள் இந்தக் கோர்ட்டில் அப்பீல் செய்திருக்கிருர்கள்.

2-ம் பிரதிவாதி பேரால் பட்டா மாறுதலாகி 28 வருடங்களாய் விட்டனவென்றும், 16 வருடங்களுக்கு முன் நடந்த செட்டில்மெண்டிலும் அவள் பேரால் பட்டா ஆய்விட்டதென்றும், அதனுல் வாதிகளின் தாவா காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுப் போய்விட்டதாக கீழ் அப்பீல் கோர்ட்டார் சொல்லுகிருர்கள். இந்தப் பட்டா மாறுதலைப்பற்றி வாதிகள் ஆக்ஷேபிக்காதிருந்தது இவர்களுக்கு விரோதமான பாத்தியமெனச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஜாண்டியா தன் பேராலுள்ள பட்டாவிற் கண்ட நிலங்களின் வரும்படிகளை யடைந்து வந்திருக்கிருளென்பதற்கு ருஜூவில்லை. இவள் தன் புருஷனிறந்தவுடனே ஊரை விட்டுப் போய்விட்டதாகவும், தாவாவிற் கண்ட நிலங்களின் வரும்படிகளில் யாதொன்றும் அவளடைந்ததில்லையென்றும், வாதிகள் சொல்லுகிருர்கள். இவள்பேரால் பட்டா மாற்றப்பட்டதினுல் வாதிகளுக்கு எவ்வித பாதகமுமில்லாததால் இவர்கள் அப்போது பாத்தியஸ்தாபன வழக்குக் கொண்டுவரவேண்டிய அவசியமாவது நியாயமாவது இருந்ததில்லை. இந்த விதந்து தன் பேரால் பட்டாவுள்ள நிலத்தில் சிலவற்றை முதற் பிரதிவாதிக்கு விற்றதுமன்றி முதல் பிரதிவாதி அந்தக் கிரய நிலத்தின் வரும்படி வாதிகளிடமிருந்து கிடைக்கவேண்டுமென்று வழக்கிட்டதால் வாதிகள் தங்களுக்குரிய பாத்தியங்களை ஸ்தாபித்துக்கொள்ள வேண்டிய அவசியம் நேர்ந்தது. பிரதிவாதிகளின் செய்கைகள் வாதிகளுக்கு வியாஜ்ஜியமூல முண்டுபண்ணிற்று. முதல் பிரதிவாதி 2-ம் பிரதிவாதியிடம் சாசனம்பெற்றது 6 வருடங்களுக்குட்பட்டிருப்பதால் வாதிகளின் தாவாவுக்கு எவ்வித காலாவதிதோஷமும் மேற்படவில்லை. அதனுல் கீழ் அப்பீல் கோர்ட்டார் மற்ற இஷ்யூக்களைப் பற்றி விசாரித்து முடிவு செய்ய வேண்டியதாகக் கேஸ் ரிமாண்டு செய்யப்பட்டது.

21 Indian cases 609.

சென்னை ஹைகோர்ட்.

1911 வருஷத்திய 2-வது அப்பீல் நம்பர் 881-882.

தீர்ப்பு 30—1—13.

ஜட்ஜிகள்.	
ஜஸ்டிஸ் சங்கரநாயர் அவர்கள்	ராமன் கவுண்டன் 4-ம் பிரதிவாதி அப்பீல்தாரன்.
	V
ஜஸ்டிஸ் டியாப்ஜி அவர்கள்	ராமலிங்க முதலியார் ஆ. (வாதிகள். 1, 2, 3, பிரதிவாதிகள்) அ. பிரதிவாதிகள்.

12. [டிரான்ஸ்பர் அவ் பிராபர்டி ஆக்ட்]

பெந்தகச் சொத்தைக் கிரயம் பெற்றவன் பெந்தக டிக்கிரித் தொகையை கொடுக்கவேண்டியதென்றும், அந்தக் கிரய சொத்து விற்பனையால் அந்த டிக்கிரி கடன் உளவடையாத பட்சத்தில் மற்ற பிரதிவாதிகளின் சொத்துக்களைத் தொடர்ந்து தொகை வசூலிக்கப் படவேண்டியதென்றும் டிக்கிரி செய்யப்பட்டிருந்தால் அந்தக் கிரயம் பெற்றவன் வீதாசார வழக்கு (Contribution suit) கொண்டுவரக் கூடாதென்பது.

1 முதல் 3 பிரதிவாதிகள் கயா செட்டியார் என்பவருக்கு எழுதிக் கொடுத்திருந்த ஒருபெந்தகப் பத்திரத்தின்பேரில் அவர் ரூபா 3000 த்துக்கு வழக்கிட்டார். இந்தப் பெந்தக சொத்தை பின்னால் சாசனம் பெற்றவர்கள் 4, 5 பிரதிவாதிகளாகச் சேர்க்கப் பட்டார்கள். இந்த 4-ம் பிரதிவாதி இந்த கயா செட்டியாரின் பெந்தகக் கடனைக் கொடுத்துவிடுவதாகத் தனது சாசனத்தில் ஒப்புக்கொண்டதாக கயா செட்டியார் தன் பிராதிற் சொல்லி யிருந்தார். இதனால் இந்த 4-ம் பிரதிவாதி கிரயம் பெற்ற பெந்தக சொத்து முதலில் ஏலம் போடப்படவேண்டியதென்றும், அதனால் அந்த டிக்கிரித்தொகை யுளவடையாதபட்சத்தில் மற்ற பிரதிவாதிகளிடமுள்ள சொத்துக்கள் ஏலம்போடப்பட வேண்டியதென்றுந் தீர்ப்பு செய்து விட்டார்கள். இதன் பேரில் இந்த 4-ம் பிரதிவாதி இந்தபெந்தக டிக்ரிதொகை முழுவதுங்கொடுத்து விட்டு, தானும் 1,2,3-பிரதிவாதிகளும் இந்த பெந்தகசொத்தைப் சாசனம் பெற்ற வேறொருவரும் இந்த டிக்கிரித் தொகையைக் கொடுக்கக் கடமைப்பட்டவர்களென்றும் அந்தத் தொகைகளைத் தான் ஏகதேசத்தில் கொடுத்து பெந்தக டிக்கிரிக் கடனைத்தீர்த்து

விட்டதால் தன் வீதம் போக பாக்கித்தொகை அந்த பிரதிவாதிகளிடமிருந்து கிடைக்க வேண்டுமென்றும், கோயம்புத்தூர் டிஸ்டிரிக்ட் முனிசீப் கோர்ட்டில் வழக்கிட்டார். கீழ் அப்பீல் கோர்ட்டார் இந்த நம்பர் வாதிக்கு அனுகூலமாகத் தீர்ப்பு செய்துவிட்டதன்பேரில், இந்த நம்பர் 3, 4 பிரதிவாதிகள் இந்த கோர்ட்டில் அப்பீல் செய்திருக்கிறார்கள்.

கயா செட்டியார் பெற்ற டிக்கிரியில் அந்த டிக்கிரித் தொகை இந்த நம்பர் வாதி சாசனம் பெற்ற சொத்தின் ஏல விற்பனையால் உளவடைக்கப்பட வேண்டுமென்று கண்டிருப்பதால் அவரே அத்தொகையைக் கொடுக்கக் கடமைப்பட்டவரென்றும், வீதாசார வழக்கிட்டது செல்லத்தக்கதல்ல வென்றும், இந்த அப்பீல் வாதி கக்ஷியாடுகிறார். டிக்கிரித் தொகை வசூலிக்கப்பட வேண்டிய வழியைப்பற்றி அதிற் சொல்லப்பட்டதேயன்றி வேறல்லவென்று வாதி கக்ஷி சொல்லுகிறார். ஆகையால் அந்தக் கயா செட்டியார் பெற்ற தீர்ப்பின் அம்சங்களை நாம் கவனித்துப் பார்க்கவேண்டும். இந்த நம்பர் வாதி கயா செட்டியார் வழக்கில் 4-ம் பிரதிவாதியாக வழக்காடியதில் தனக்கு அந்தப் பெந்தக பத்திரமிருந்தது தொரியாதென்று முதலிற் சொன்னார். இவருடைய சாசனத் தொகை கொடுபட்டதைப்பற்றி ருஜுவிளங்கியதில் இருவருடைய ஸ்டேட்மெண்டு விரோதமாகப் போய்விட்டதால் தான் முன் சொன்ன கக்ஷியை விலக்கிக் கொண்டார். இவருடைய பெந்தகப் பத்திரத்திற் கண்ட தொகையை அந்த வாதி கயா செட்டியாருக்குக் கொடுத்து விடுவதாக இவருடைய பிளீடர் ஒப்புக்கொண்டிருக்கிறார். இவர் வசமுள்ள சொத்துக்கள் ரூபா 6000 பொறுமான முள்ளதென்று 2-ம் பிரதிவாதியால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இவர் வசமுள்ள சொத்துக்களும் 1 முதல் 3-வரையிலுள்ள பிரதிவாதிகள் வசமுள்ள சொத்துக்களும் ஏலம் போடப்பட்டு கயா செட்டியாரின் டிக்கிரித் தொகை யுளவடையாத பட்சத்தில் மற்றொரு சாசனக்காரரான இந்த அப்பீல் வாதியின் சொத்து ஏலம்போடப்பட வேண்டியதாக அந்த கயா செட்டியார் டிக்கிரியிற் கண்டிருக்கிறது. அந்த டிக்கிரியின் விஷயங்களைக் கவனிக்குமளவில் இந்த கயா செட்டியாரின் தொகை முழுவதும் இந்த நம்பர் வாதியே கொடுக்கக் கடமைப்பட்டவ ரென்றும், அந்தச் செட்டியாரின் பெந்தகத் தொகையை கொடுத்துத் தீர்ப்ப

தற்காகவே இந்த வாதி சாசனம் பெற்றதாகவுந் தெரிகிறது. அதனால் இந்த அப்பீலையங்கீகரித்து கீழ்கோர்ட்டார்டிக்கிரிகளை ரத்து செய்து வாதியின் வழக்கை செலவுடன் தள்ளுபடி செய்கிறோம்.

(1913) *M. W. N.* 1022.

சென்னை ஹைகோர்ட்.

1911 ஹு த்திய லெட்டர்ஸ் பேடெண்டு அப்பீல் நம்பர் 59.

தீர்ப்பு 28—4—13.

ஜட்ஜிகள்	
ஸர் அர்னால்ட் வொயிட் Kt. சீவ் ஜஸ்டிஸ் அவர்கள்.	அங்கம்மாள் - அ. வாதி
மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர் அவர்கள்	V
மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கர நாயரவர்கள்	மாலிக் மகமத்சயித் அஸ்லாமிசாகிப்

13 [டிரான்ஸ்வர் அவ் பிராபர்டி ஆக்ட்டு.]

குத்தகை நிலத்தில் குடியானவன் வீடு கட்டி குத்தகை கெடுவுக்குள் அந்தக்கட்டடத்தைப் பிரித்து எடுத்துப்போகாமலிருந்தால் அக்கட்டடங்கிடைக்க வேண்டியதைப்பற்றியாவது அதற்கு நஷ்டபரிகாரமாவது கேட்கக் கூடாதென்பது.

சென்னை ஹைகோர்ட்டு 1908ஹு த்திய அசல் 16 நம்பரின் பேரில் 1910ஹு த்திய அப்பீல் நம்பர் 7 சீவ் ஜஸ்டிஸ் அவர்களால் தீர்மானிக்கப்பட்டது. இதன்பேரில் லெட்டர்ஸ் பேடெண்டு ஆகட்டு 15-வது செக்ஷன்படி அப்பீல்.

ஒருகுடியானவன் தான் குத்தகைக்கு ஒப்புக்கொண்டநிலத்தில் ஒருகட்டடங்கட்டி அனுபவித்துவந்தான். அந்தக்குத்தகை கெடுவுக்குள் அந்த கட்டடத்தை பிரித்து எடுத்துக் கொள்ளவில்லை. 1883ஹு த்தில் இந்தக் குத்தகை யேற்பட்டது. பின்பு இந்த குத்தகை 1898ஹு த்தில் புதுப்பிக்கப்பட்டது. இந்த குடியானவன் பேரில் 1906 வருஷத்தில் குடியானபாத்தியம் விலக்கப்படவேண்டுமென வழக்கு கொண்டுவரப்பட்டது. 1907வருஷம் பிப்பரவரிமாதம் 27உயிலாவது அதற்குமுன்னாவது அச்சொத்தை விட்டுவிடவேண்டுமென்று தீர்ப்பு செய்யப்பட்டது. குடியானவன் சொன்ன கக்ஷிகள் யாதொன்றைப்பற்றியுந் தீர்மானிக்க

வில்லை. பிறகு குடியானவன் தனக்கு அந்தவீடுகிடைக்கவேண்டுமென்றும், அதுகிடைக்காவிட்டால் தான் அதைப்பிரித்து எடுத்துப் போகவேண்டுமென்றும், அதுவுங்கிடைக்காவிட்டால் அந்தக் கட்டடத்தின் நஷ்டந் தனக்குக் கிடைக்கவேண்டுமென்றும் வழக்கிட்டான்.

சீவ் ஜஸ்டிஸ் வொயிட் அவர்கள்:—நான் முன் சொன்ன தீர்மானத்தையே யாதரிக்கிறேன். வாதியின் அப்பில் செலவுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

ஜஸ்டிஸ் மில்லர்துரையவர்கள்:—வாதியும் அவன் புருஷனும் குத்தகைக்கு ஒப்புக்கொண்டது நிலம்; கட்டடம் அந்தக்குத்தகையில் சம்பந்தப்படவில்லை யென்று கீழ்கோர்ட்டில் கக்ஷிசொல்லவில்லை. டிரான்ஸ்வர் அவ் பிராபர்டி ஆகட்டு 108-வது செக்ஷன் தாவா கேசுக்குப் பொருத்தமில்லை யென்று தீர்மானிப்பது அவசியமென்று எனக்குத் தோற்றவில்லை. முந்திய கெடுவுடன் தாவா கட்டடம் பூமிக்குரியவருக்கு விடுபட்டதாகவே யாகிறது. குத்தகை நிலத்தில் கட்டடங்கள் பூமிக்குடையவருடைய சம்மதியின்பேரிலோ அல்லது சம்மதியன்னியிலோ கட்டப்பட்டால் இந்தக் கட்டடத்துக்கு நஷ்டங்கேட்க சட்டாதாரமில்லை; இதுவிஷயமாக காண்டிராக்ட் இருந்தாலாவது எஸ்டாபல்(Estoppel)ஏற்பட்டாலாவது நஷ்டங்கேட்கலாம். இதுவிஷயங்களில் மட்டில் பூமிக்குடையவருடைய சம்மதி குடியானவனுக்குப் பிரயோஜனத்தைத் தரும். இவ்வித கேஸ் விஷயமாக இந்தக் கோர்ட்டாரால் செய்யப்பட்ட இ. லா. ரி 27 சென்னை 211 பக்கம் 216 தீர்மானத்தைப் பற்றி சந்தேகிக்க யாதொரு காரணமுந் தென்படவில்லை. பூமிக்குடையவருக்குத் தெரிந்தே இந்தக் கட்டடங் கட்டப்பட்டதென்று சொல்வது போதுமானதல்ல. குத்தகை காலத்தில்தாவா நிலத்தில் குத்தகைதாருக்கு சுதந்திர பாத்தியமுண்டு. அந்த கட்டடங்கட்டியதைப் பற்றி பூமிக்குடையவர் யாதொன்றுஞ் செய்யாதிருந்தது எஸ்டாபலாக மாட்டாது; எக்கிரிமெண்டுக்கு ருஜுவாகவுங் கொள்ளப்படக் கூடாது.

குத்தகை கெடு முடிந்தபின் கட்டடத்தைப் பிரித்துப்போகும் பாத்தியதையைக் குடியானவன் இழந்துவிட்டானா இல்லையா வென்பதைப்பற்றி கவனிப்போம். குத்தகை முடிவடைவதற்கு முந்தி கட்டடம் பிரிக்கப்பட்டு அப்புறப்படுத்தப் படாவிட்டால்,

அந்தக் கட்டடத்தில் யாருக்கு என்னபாத்திய மென்பதைப்பற்றி டிரான்ஸ்வர் அவ் பிராபர்டி ஆக்ட் 108 (L) செக்ஷனில் யாதொன்றுஞ் சொல்லப்படவில்லை. கெடுவுக்குள் கட்டடம் பிரிக்கப்படாவிட்டால் அதன் பாத்தியதையை இழந்துவிட்டாரா வென்ற கேள்வியுண்டாகிறது. இது விஷயமாக யாதொரு காண்டிராக்ட்டும் இல்லாதிருந்தால் தேசவழக்கத்தை யனுசரித்துத் தீர்ப்புசெய்ய வேண்டும். 6 வீக்லிரிபோர்டர் 228 தீர்மானத்திற் கண்டபடி குத்தகைக்குக் கொடுத்தவன் அந்தக் கட்டடத்தின் நஷ்டத்தைக் கொடுத்து அதை யெடுத்துக் கொள்ளவேண்டும். அல்லது அதைக் குடியானவன் பிரித்து எடுத்துக்கொண்டு போக அவனுக்கு அனுமதி கொடுக்கவேண்டும். இவ்வித பாத்தியம் குத்தகை கெடு முடிந்தபிறகுதான் உண்டாகிறது. இவ்வித கட்டடங்களை பிரித்துப்போகக் கெடுக் கொடுக்கப் படவேண்டுமென்று பிரிவிகவுன்ஸில் தீர்மானித்திருக்கிறார்கள். (இ.லா. ரி. 21 அலகபாத் 496 தீர்மானத்தைப்பார்க்க). தாவாவிற் கண்ட இஜெக்டுமெண்டு தீர்ப்பு பிரஸிடென்ஸி ஸமால்காஸ் கோர்ட்டாரால் செய்யப்பட்டது. இந்தக் கோர்ட்டு டிக்கிரி மற்றக் கோர்ட்டு டிக்கிரிகள்போல் நிறைவேறு நடவடிக்கைகளை தள்ளிவைக்கச் சட்டமில்லை. குடியானவன் கட்டடத்தைப் பிரித்துப்போக தகுந்த சாவகாசங் கொடுக்க வேண்டியது அவசியமே. இவ்வித கெடு இஜெக்ட்மெண்டு வுத்தரவுதின முதற்கொண்டு பார்க்கவேண்டியதேயன்றி குடியான பாத்திய முடிவடைந்த தேதிமுதற்கொண்டல்ல. இந்தப்படி தகுந்த சாவகாசங்கொடுத்து கெடு கொடுக்கப்பட்டதா, அப்படிக்கில்லாவிட்டால் கோர்ட்டார் அந்தக் கெடு இப்போது கொடுக்கலாமா அல்லது நஷ்டத்துக்குத் தீர்ப்பு செய்யலாமா? அப்படிக்கானால் அந்தக் கட்டடத்தை அப்புறப்படுத்த குடியானவனுக்கு பாத்தியமில்லாமற் போய்விட்டதா? என்ற கேள்விகளுண்டாகின்றன. சொத்து ஸ்வாதீனத்தைப்பற்றி 1907 வருஷம் பிப்பரவரி மாதம் தீர்மானஞ் செய்யப்பட்டபிறகு தகுந்த காலம் கொடுபட்டிருக்கிறது; கட்டடத்தை அப்புறப்படுத்தத் தகுத்த சாவகாசமிருந்திருக்கிற தென்பதைப்பற்றிச் சந்தேகமே கிடையாது. அதனால் வாதியின் தாவா தள்ளுபடி செய்யப்பட்டது மெத்த நியாயமானது. அதனால் இந்த அப்பீல் செலவுடன் தள்ளுபடிசெய்யப்பட்டது.

ஜஸ்டிஸ் சங்கரநாயரவர்கள்.—தாவா கட்டடம் வாதிக்குச் சொந்தமானதென்றும், பிரதிவாதி அதன் கிரயத் தொகையைக் கொடுக்கச் சம்மதிக்காவிட்டால் வாதி அதைப் பிரித்து எடுத்துக் கொண்டு போகவேண்டுமென்றும், ஜஸ்டிஸ் மில்லர் அவர்கள் செய்த தீர்மானத்தை நானும் ஒத்துக்கொள்ளுகிறேன். தகுந்த காலத்துக்குள் வாதி அந்தப்படி எடுத்துப்போகாதபட்சத்தில் அவளுடைய பாத்தியதையை இழந்துவிட்டாளென்பதை மட்டில் நான் ஒத்துக்கொள்ளவில்லை. அந்தச் சொத்தை யொப்புக் கொடுப்பதற்கு முந்தியாவது தகுந்தகாலத்துக்குள்ளாவது கட்டடத்தைப் பிரித்து எடுத்துப்போக வாதி கடமைப்பட்டிருக்கிறாள். அப்படிச் செய்யாதவரையில் அச்சொத்தின் பாத்தியம் பிரதிவாதிக்கு எவ்விதங் கிடைக்குமென்பது தான் எனக்குத் தெரியவில்லை. பூமிக்குடையவர் அதை முன்னிருந்த ஸ்திதியில் செய்து நஷ்டத்தை வாதியிடம் வசூலிக்கலாம். இ. லா. ரி. 27 சென்னை 211 தீர்மானம் இங்கிலீஷ் சட்டத்தை யனுசரித்து தீர்மானிக்கப்பட்டது. இங்கிலீஷ் சட்டம் குடிகளுக்குக் கொடுமையுந் துன்பத்தையுங் கொடுக்கக் கூடியது. அது நீதிக்கும் நடு நியாயத்துக்கும் நல்ல மனச்சாட்சிக்கும் பொருந்திய சட்டமல்ல. அந்தச் சட்டத்தை யனுசரிக்கூடாதென்பதே இவ்விந்தியா சட்ட சபையாரின் நோக்கம். மிகுந்த அனுபோகமும் கியாதியும் பெற்ற ஜட்ஜிகள் ஹாலோவே, இன்னஸ் இவர்களின் தீர்மானங்கள் மேலானதென்று நினைக்கிறேன். 6 சென்னை ஹைகோர்ட்டு ரூலிங்கில் 245 தீர்மானத்தை யனுசரித்து தீர்மானஞ் செய்கிறேன். தாவா கட்டடம் குத்தகையில் சம்பந்தப்பட்டதல்லவென்று வாதி கீழ்க் கோர்ட்டில் சொல்லவில்லையென்பது உண்மையே. 2 அடையாள ஆதரவை யனுசரித்தே வாதி கக்ஷி சொல்லியிருக்கிறாள். அதற்கு மாறான விஷயத்தைப்பற்றி பிரதிவாதி தான் கக்ஷி சொல்லியிருக்கவேண்டும்.

அப்பீல் தள்ளுபடி செய்யப்பட்டது.

21 Indian Cases 583.

சென்னை ஹைகோர்ட்.

1912 ஹுத்திய 2-வது அப்பீல் நம்பர் 1018.

தீர்ப்பு 7—11—13.

ஜட்ஜிகள்-	சின்னவீராசாமி (முதல்வாதி) அப்பீல் தாரன்.
	V-
மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்யிலிங் அவர்கள்	சின்னசத்திய நாராயண மூர்த்திக்கு அடுத்த சினேகிதியும்தாயாருமான அச்சம்மா. ஆ. அ.
மிஸ்டர் ஜஸ்டிஸ் ஓல்ட்பீல்ட் அவர்கள்	பிரதிவாதிகள்.

14 [டிரான்ஸ்வர் அவ் பிராபர்டி ஆக்ட்.]

ஒருவன் குடியானவனென்றும், அவனை விலக்கவேண்டுமென்றும் முதலில் வழக்கிட்டு அது ருஜுப்பிக்கப்படாததால் அவன் ஆக்கிரமித்து சொத்தைக் கட்டிக் கொண்டவனென்று பிறகு கக்ஷி சொல்லக் கூடாதென்பது.

"பிரதிவாதி குடியானவனென்றும் அவனை விலக்கி சொத்து ஸ்வாதீனமாக வேண்டுமென்றும் வாதிகள் வழக்கிட்டார்கள். பிரதிவாதி குடியானவனல்லவென்று கீழ்க்கோர்ட்டார்கள் தீர்மானித்துவிட்டார்கள். அப்பீல்வாதி தாவா நிலத்தில் தனக்குள்ள பாத்தியதையை ஸ்தாபித்துத் தீர்ப்புப் பெற பாத்தியமுண்டென்றும், அது ருஜுப்பிக்கப்படும் பட்சத்தில் பிரதிவாதி தன்னிலத்தில் ஆக்கிரமித்துக் கட்டிக் கொண்டவனென அவனை நீக்கிவிடலாமென்றும் அப்பீல்வாதி கக்ஷியாடுகிறார். கொடுபட்ட பிராதுக்கு விரோதமாக ருஜுவை யங்கீகரிப்பது பிராதின் அம்சத்தையே மாற்றுவதாகிறது. பிராதைத் திருத்திக்கொள்ள அனுமதிகொடுப்பது சப்ஜட்ஜியின் அபிப்பிராயத்தைப் பொறுத்தது. இப்போதுள்ள பிராதின் வாசகங்களின்படி சொத்தின் பாத்தியத்தைப் பற்றி விசாரிப்பது முடியாத விஷயம். அதனால் இந்த அப்பீல் செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

21 Indian Cases 560.

அலகபாத் ஹைகோர்ட்.

1912 ஹுத்திய 2-வது அப்பீல் நம்பர் 811

தீர்ப்பு 22—4—13.

ஜட்ஜி	முகமத் பயாஸ் அலிகான், (பிரதிவாதி அ. வாதி
	V
மிஸ்டர் ஜஸ்டிஸ் ராபீக் அவர்கள்	பிகம்பர்தாஸ், (வாதி) அ. பிரதிவாதி

15. [டிரான்ஸ்வர் அவ் பிராபர்டி ஆக்ட்.]

பேந்தக சொத்துக்களை மீட்கும்படியான பாத்தியமும் அவ் வழக்கிட காலாவதி தோஷமும், ரேஸ்ஜுடிகேடா தோஷமும், விதந்து செய்யும் இராஜிநாமாவுக்கு அனந்திரவார்சுகள் கட்டுப்பட்டவர்களல்லவென்பதும்.

ஷேர்சிங் காமன்சிங் என்ற சகோதரர்களுக்குச் சமமான பாத்தியமுள்ள சில நிலங்களைக் குலாப்ரூப் குண்டன்லால் என்ற இருவருக்கும் 1855 வருஷத்தில் ரூபா 1000-க்கு போக்கிய அடமானம் வைத்தார்கள். இந்த போக்கிய அடமானதாரர்கள் தங்களுக்குள்ள பாத்தியங்களை நவாப் பயிஸாஸ் அலிகான் என்பவருக்கு 1861 வருஷம் டிசம்பர் மாதம் 22-தேதி விற்றுவிட்டார்கள். இந்தச் சாசன தேதிக்குப் பிறகு ஷேர் சிங்குக்குள்ள மீட்கும்படியான பாத்தியம் அவர்பேரிலேற்பட்ட டிக்கிரி கடனுக்காக ஏலவிற்றுமுதல் செய்யப்பட்டதில் அந்தப் பாத்தியதையை டியோகிநந்தன் என்பவர் ஏலத்திலெடுத்துவிட்டார். காமன்சிங் இறந்த பின்பு அவருடைய விதந்து பேரிலேற்பட்ட டிக்கிரி கடனுக்காக காமன்சிங் என்பவருக்குள்ள மீட்கும்படியான பாத்தியம் ஏலவிற்றுமுதல் செய்யப்பட்டதில் இந்த டியோகிநந்தனுடைய சகோதரனே ஏலத்திலெடுத்துவிட்டார். இந்த டியோகிநந்தனுடைய சகோதரன் எவ்வித சந்ததியுமின்றியே இறந்துவிட்டதால் 1855 வருஷத்திலேற்பட்ட போக்கிய அடமானத்தை மீட்கும்படியான முழு பாத்தியமும் இந்த டியோகிநந்தனுக்குக் கிடைத்துவிட்டது. இதன்பின்னவர் அந்தப் போக்கிய சொத்து மீட்கப்படவேண்டுமென நவாப் பயிஸாஸ் அலிகான் பேரில் 1897 வருஷத்தில் வழக்கிட்டார். இந்தக் கேஸை விசாரித்த சப் ஜட்ஜி ரூபா 1000 பிரதிவாதிக்குக்கொடுத்து சொத்தைமீட்டுக்கொள்ளுகிறதென்று 1898

வருஷம் செப்டம்பர்மாதம் 13 தேதி தீர்ப்புச்செய்தார்கள். இந்த தீர்ப்பு விஷயமாக உபயவாதிகளும் அப்பீல் செய்தார்கள். இந்த அப்பீல்களின் விசாரணை முடிவடைவதற்கு முன் டியோகிஷன் 1899 வருஷத்தில் இறந்துவிட்டதால் இவருடைய விதந்து அவரின் வார்சாக அப்பீல்களிரண்டிலும் கக்ஷிக்காரியாகச் சேர்க்கப்பட்டாள். பின்பு இந்த விதந்து கங்காவும் நவாப் பயிஸ்ராஸ் அலிகானும் இராஜியாகி இந்த விதந்துவுக்கு ரூபா 4000 நவாப் கொடுத்து விடுவதின்பேரில் அவள் தனக்குள்ள மீட்கும்படியான பாத்தியதையை இழந்துவிடுகிறதென்று ராஜினாமா மனு கொடுத்தார்கள். இந்த மனுப்படியே 1900 வருஷம் ஆகஸ்டு மாதம் 28 தேதி டிக்கிரி செய்யப்பட்டது. இதன்படி நவாப் பயிஸ்ராஸ் அலிகான் ரூபா 4000 விதந்து கங்காவுக்குக் கொடுத்துவிட்டார். இந்த டிக்கிரி தேதிக்குப் பிறகு காமன் சிங்குடைய அனந்தர வார்சுகள் அந்த காமன் சிங்குடைய விதந்து பேரில் பெற்ற டிக்கிரிக் கடனுக்காக காமன் சிங்குடைய மீட்கும்படியான பாத்தியதையை ஏலம் போட்டதானது அந்த விதந்துவின் ஜீவதிசை வரைக்குமுள்ள பாத்தியமேயன்றி வேறல்லவென்றும், அந்த ஏலச்சொத்தில் காமன் சிங்குக்கு பாதி பாத்தியமுண்டாகையால் அச்சொத்தைமீட்க தங்களுக்கு பாத்தியமுண்டென்றும், இந்த நவாப் பயிஸ்ராஸ் அலிகான்பேரில் வழக்கிட்டார்கள். முடிவாக இந்த அனந்தர வார்சுகளுடைய வழக்குப்படியே இந்த கோர்ட்டார் தீர்மானித்துவிட்டார்கள் (இ. லா. ரி. 30 அலகபாத் 394 தீர்மானத்தைப் பார்க்க). டிபோகிஷன் என்பவரின் விதந்து கங்கா 1907 வருஷத்தில் இறந்தாள். இவளிறந்த பிறகு டிபோகிஷனுடைய அனந்தர வார்சுகள், விதந்து கங்காவும் நவாப் பயிஸ்ராஸ் அலிகானும் செய்து கொண்ட ராஜினாமா மோசடியானதென்றும், உடந்தையாயிருந்து செய்துகொண்டதென்றும், ராஜினாமா செய்யும்படியான பாத்தியம் விதந்துவுக்குக் கிடையாதென்றும், அவ்வித ராஜி செய்யவேண்டிய அவசியம் யாதொன்றுமிருந்ததில்லையென்றும், அதனால் மற்ற பாதியாகவுள்ள போக்கிய நிலம் மீட்கப்படவேண்டுமென்றும் 1910 வருத்தில் வழக்கிட்டார். இந்த தாவா விஷயமாக பிரதிவாதி பலவித கக்ஷிகள் சொன்னதில் 1 ரெஸ்ஜுடிகேடா தோஷம், 2 காலாவதி தோஷம், 3 ராஜினாமா செல்லத்தகுந்ததென்பது, 4, வாதி இந்த ராஜினாமாவுக்கு சம்மதித்திருந்துவிட்டது, விதந்து கங்காவுக்குக் கொடுத்த ரூபா

4000 மும் கொடுத்து வாதி தாவா சொத்தை மீட்கவேண்டுமென்பது இவைகள் பிரதானமானவை. இந்தக் கேசை விசாரித்த சப் ஜட்ஜி பிரதிவாதி சொன்ன எந்தக் கக்ஷியையும் ஏற்றுக்கொள்ளாமலே வாதியின் தாவாப்படியே தீர்ப்பு செய்துவிட்டார்கள். இந்தத் தீர்ப்பு அப்பீலிலும் உறுதி செய்யப்பட்டது. இதன் பேரில் பிரதிவாதி இந்தக் கோர்ட்டில் இரண்டாவது அப்பீல் செய்திருக்கிறார்.

விதந்து கங்காவும் அப்பீல் வாதியும் 1800 வருஷம் ஆகஸ்டு மாதத்தில் செய்துகொண்ட ராஜினாமா செல்லத்தக்கதல்லவென்று சொல்லுவதால், அது விஷயமாக ஏற்பட்ட டிக்கிரியும் ரத்தாகிவிட்டதென்றும் அதனால் 1898 வருஷம் செப்டம்பர் மாதத்திலேற்பட்ட டிக்கிரி யூர்ஜிதத்திலிருக்கிறதென்றும், தாவா சொத்தை மீட்கும்படியான டிக்கிரி ஊர்ஜிதத்திலிருக்கும்போது அதே விஷயத்தைப்பற்றி அதாவது தாவா சொத்தை மீட்கும்படி டிக்கிரி செய்யவேண்டுமென்று கேட்கும் வழக்கு ரெஸ்ஜுடிகேடா தோஷத்துக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறதென்றும், இ. லா. ரி. 25 சென்னை 300, 29 அலகபாத் 481, இந்தத் தீர்மானங்களைத் தன் கக்ஷிக்கு ஆதாரமாக அப்பீல் வாதி யெடுத்துச் சொல்லுகிறார். அப்பீல் வாதி சொல்லும் இந்தக் கக்ஷி சரியானதென்று நினைத்தால் ராஜினாமா டிக்கிரி மட்டில் ரத்து செய்யப்பட்டு அப்பீல் நடவடிக்கை முன்னிருந்த ஸ்திதியிலேயே யிருக்கும். அந்த டிக்கிரி ரத்து செய்யப்படுதலானது கீழ்க்கோர்ட்டு டிக்கிரியை யூர்ஜிதத்துக்குக் கொண்டுவந்ததாக மாட்டாது. ஆனால் இந்த விவாதம் நியாயமானதல்ல. இந்த இராஜினாமா செல்லுபடியற்றதென்று வாதி ஸ்தாபிக்கும்பட்சத்தில் அந்த நடவடிக்கைகள் முழுவதும் ரத்தாகிவிடுகிறது. மீட்கும் வழக்கு டியோகிஷனால் கொண்டுவரப்படாத நிலைமையிற்றானிருக்க வேண்டும். 1898-ம் வருஷத்திலேற்பட்ட டிக்கிரி யூர்ஜிதத்திலில்லாததினாலே வாதியின் தாவாவுக்கு எவ்வித ரெஸ்ஜுடிகேடா தோஷமுமில்லையென்று தீர்மானிக்கிறோம். அப்பீல் வாதி சொல்லுந் தீர்மானங்கள் தாவா கேசுக்கு எவ்விதத்திலும் ஒற்றுமையானதல்ல.

இந்த ராஜினாமா டிக்கிரி 1900 வருஷம் ஆகஸ்டு மாதம் 28உ ஏற்பட்டிருப்பதால் இதை ரத்துசெய்வதற்கு அந்த டிக்கிரி தேதிமுதல் 6 வருடங்களுக்குள் வழக்குக் கொண்டுவந்திருக்க

வேண்டுமென அப்பீல்வாதி லிமிடேஷனாக்ட்டு முதலாவது ஷெடியூல் 95வது ஆர்டிகிளை தன்கக்ஷிக்கு ஆதாரமாக எடுத்துச் சொல்லுகிறார். இந்த டிக்கிரியை ரத்து செய்து கொள்ளவேண்டுமென்ற அவசியம் அப்பீல்பிரதிவாதிக்கு வேண்டியதில்லை. ஆகையால் இந்தத் தாவாவுக்கு காலாவதி தோஷமுமேற்படவில்லை.

அப்பீல்வாதியும் விதந்து கங்காவுஞ் செய்து கொண்ட ராஜிநாமாவானது மோசடியாகச் செய்து கொண்டதல்லவென்றும், மிகுந்த சங்கடமுள்ள ருஜுவம்சங்களையும் சட்டக் கருத்துகளையும் நிவர்த்தித்துக் கொள்ள வேண்டியதினிமித்தம் தீர்க்காலோசனையின்பேரில் நல்ல எண்ணத்துடன் செய்து கொள்ளப்பட்டதாகையால் அதற்கு அனந்தரவாரிசுகள் கட்டுப்பட்டவர்களென்றுங் கக்ஷி சொல்லுகிறார். இந்த ராஜிநாமா மோசடியானதென்று கீழ்க்கோர்ட்டார்கள் சொல்வதற்குத் தகுந்த காரணங்களில்லையென்றும், அப்பீல் பிரதிவாதி இதற்கு சம்மதித்து இருந்துவிட்டதால் இது நியாயமானதென்றும் வாதிக்கப்படுகிறது. இந்தவிதந்து தன் புருஷன் ஏற்படுத்தியிருந்த வக்கீலைவைத்து நடவடிக்கை நடத்தாமலிருந்து விட்டதும், ரிடெம்ஷன் டிக்கிரிக்கு குறைந்த தொகையை வாங்கிக் கொண்டு சொத்தை விட்டுவிட்டதும் மோசடியானதெனக் கீழ்க்கோர்ட்டார்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். அவர்கள் செய்ததீர்மானஞ் சரியானதென்றே நாங்களும் அபிப்பிராயப்படுகிறோம். இந்த இராஜிநாமா விஷயம் வாதிக்கு பின்னால் தெரிந்திருக்கும். அந்த விதந்துவின் ஜீவதிசைவரையில் அவர் நடவடிக்கை நடத்தாதிருந்ததானது வாதி அந்த ராஜிநாமாவுக்கு சம்மதித்து சும்மாவிருந்து விட்டதாக எண்ணப்படக் கூடாது.

விதந்துவிடங்கொடுபட்ட ரூபா 4000-ம் கொடுத்துவிட்டுத் தான் தாவா சொத்து மீட்கப்படவேண்டுமென்பது கடைசி கக்ஷி. வாதி இந்த இராஜிநாமாவில் சம்பந்தப்படவில்லை. அதன் பிரயோஜனம் யாதொன்றையும் இவர் அடையவில்லை. அதனால் அத்தொகை அப்பீல்வாதிக்குக் கிடைக்கத்தக்கதில்லை. இந்த அப்பீல் செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

21 Indian Cases 605.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
6 -MAR 1914
MADRAS

ஹைகோர்ட்டு தீர்மானங்கள்.

தமிழ்ப்பாஷை பயின்றவர்கள் வியவகார நுட்பங்களை
எளிதில் உணரும் பொருட்டு பிரசுரிக்கப்படும்
மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

புத்தகம்-1 } மாயவரம் 1914ஆ பிப்ரவரிமீ { இலக்கம்-6

சென்னை ஹைகோர்ட்.

1909 ஆ த்திய சிவில் ரெவிஷன் மனு நம்பர் 596.

தீர்ப்பு 29—10—13.

ஜட்ஜிகள்.	வேலூர் தாலூகா போர்டு வாதி பிரஸிடெண்டு. மனுதார்,
ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள்	V
ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர் அவர்கள்	கோபாலசாமி நாயுடு பிரதிவாதி கவுண்டர் மனுதார்.

6. [காண்டிராக்டு ஆக்ட்டு].

உடன்படிக்கையின்படி நடவாவிட்டால் டிபாஸிட் தொகை கட்டியதை இழந்துவிடுவதுமன்றி அவ்வுடன்படிக்கை சரியாக நிறைவேறாததாலுண்டாகிய நஷ்டங்களும் வசூலிக்கப்பட வேண்டுமென்று தஸ்தாவேஜி ஏற்பட்டிருந்தால் எந்தத் தொகைக்கு வழக்கிடப்படலாமென்பது.

இந்த நம்பர் வாதி வேலூர் டிஸ்டிரிக்ட் போர்டு பிரஸிடெண்டு; பிரதிவாதி இந்த தாலூக்கா போர்டுக்கு வுட்பட்ட காராடிக்குடி சந்தைக் கடைக்காரர்களிடம் வரி வசூலிக்கக் குத்தகை யொப்புக் கொண்டவர். இவர் இந்தக் குத்தகையை ஒப்புக் கொண்டு வாதிக்கு எழுதிக்கொடுத்திருக்கும் தஸ்தாவேஜியில் தான் [illegible]ண்டு மாதக் குத்தகைத்தொகை ரூபா 36—2—8 டிபாஸி[illegible] கொடுத்திருப்பதாகவும், தான் மாதா மாதம் தவறாமல் குத்தகைத் தொகைகளை கெடுக்களில் தவறாமற் செலுத்திவருகிறதென்றும், எந்தக் கெடுவிலாவது குத்தகைத்தொகை செலுத்தத்

தவறினால் பிந்திய குத்தகைப் பாத்தியதையை இழந்து விடுவதுமன்றி அந்தக் குத்தகை மறு ஏலம் போடப்பட்டு அதனால் நஷ்டமுண்டானால் அந்த நஷ்டத்தைத் தனக்குச் சொந்தமான ஸ்தாவர ஜங்கம சொத்துக்களினின்றுங் கொடுப்பதுமன்றி தன்னால் டிபாஸிட்டு கட்டப்பட்டிருக்குந் தொகையையும் இழந்துவிட வேண்டியதென்றுங் கண்டிருக்கிறது. பிரதிவாதி இதிற் கண்ட நிபந்தனைகளின்படி நடக்கவில்லை. அதாவது கெடுக்களின்படி குத்தகைத் தொகை செலுத்தவில்லை. இதனால் தாலூக்கா போர்டார் பிரதிவாதியின் குத்தகையை ரத்து செய்து அதை மறுயேலம் போட்டுவிட்டார்கள். இவ்விதம் மறு ஏலம் போடப்பட்டதா லுண்டாகிய நஷ்டங்கள் பிரதிவாதியிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டியதென்றும், பிரதிவாதி டிபாசிட்டு கட்டிய தொகையை இழந்துவிட்டதாக தீர்மானிக்க வேண்டியதென்றும், மேற்படி தாலூக்கா போர்டு பிரஸிடெண்டு பிரதிவாதிபேரில் வேலூர் டிஸ்டிரிக்ட் முனிசீப் கோர்ட்டு 1909 வருஷத்திய ஸ்மால்காஸ் 133 நம்பரில் வழக்கிட்டார். டிஸ்டிரிக்ட் முனிசீப் அந்தக்குத்தகை மறு ஏலம் போடப்பட்டதாலுண்டாகிய நஷ்டத்துக்கு மட்டில் தீர்ப்பு செய்தார்கள், டிபாசிட்டு கட்டிய தொகை இழந்துவிட வேண்டுமெனத் தீர்ப்பு செய்யவில்லை. அந்த ஷரத்து காண்டிராக்ட்டு ஆக்ட்டு 74 வது செக்ஷன்படி செல்லத் தக்கதல்லவென்று அதை விலக்கித் தீர்ப்பு செய்தார்கள். இந்தத் தொகையை விலக்கித் தீர்ப்பு செய்தது சரியல்லவென்று வாதி இந்தக் கோர்ட்டில் ரெவிஷன் மனுக் கொடுத்திருக்கிறார்.

ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர் அவர்கள்:—இந்தக் கோர்ட்டு புல்பெஞ்சு தீர்மானம் (1913) M. W. N. 341 ல் டிபாஸ்ட் செய்யப்படுந் தொகை கொடுபடவேண்டிய தொகையில் சில பாகமாக விருப்பதுமன்றி உடன்படிக்கையின் ஷரத்துக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டியதற்காகவும், ஏற்பட்ட காண்டிராக்ட்டைப் பூர்த்தி செய்யவேண்டுமென்ற பயமிருக்க வேண்டியதற்காகவும் ஏற்பட்டதென்று அறிவிற் சிறந்த சீவ் ஜஸ்டிஸ் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். காண்டிராக்ட்டி லேற்பட்ட ஷரத்துகளுக் [illegible] ரோதமான எண்ணத்துடன் தஸ்தாவேஜி யேற்பட்டதென் [illegible] மென்னிக்கவேண்டுமென்றும் சொல்லியிருக்கிறார்கள். [illegible]டிராக்ட்டு நிறைவேற்றப்படுவதற்கு ஜாமீன் அல்லது உத்தரவாதமாக

எண்ணப்படவேண்டும். உடன்படிக்கைக்கு மாறாக நடந்தால் கொடுபடவேண்டிய தொகையென்று எண்ணக்கூடாது. ஏற்பட்ட எக்கிரிமெண்டுப்படி டிபாஸிட்டுத் தொகையை இழந்துவிட்டாலும், நஷ்ட மேற்படுவதில் அத்தொகை யீடு செய்யப்படவேண்டுமென்பதாக டாமேஜ் விஷயமாக மெயின்துரை எழுதிய புத்தகம் 249 புக்கத்திற் சொல்லப்பட்டிருப்பதை அப்பீல் பிரதிவாதி வக்கீல் தனக்கு ஆதாரமாக எடுத்துக்காட்டுகிறார். அது தாவா கேசுக்கு ஒற்றுமையானதல்ல; கக்ஷிக்காரர்கள் அவர்களுக்குள் ஒருவித வுடன்படிக்கை யேற்படுத்திக்கொண்டால், அதற்குக் கட்டுப்பட்டுத்தான் அவர்கள் நடந்துகொள்ளவேண்டும். காண்டிராக்ட்டு நிபந்தனைகளுக்குள் அகப்படாத விஷயங்களில் அந்தப்படிதான் செய்யவேண்டும். ஆகையால் டிஸ்டிரிக்ட் முனிசீப் செய்த தீர்மானத்தைத் திருத்தி ரூ 86-0-8 பிரதிவாதி கொடுக்க வேண்டியதெனத் தீர்மானிக்கிறேன்.

ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள்:—இந்தக் கேசின் விஷயங்களை அறிவிற் சிறந்த சகோதரர் தம்முடைய தீர்மானத்திற் சொல்லிவிட்டதால் அது விஷயமாக நான் யாதொன்றுஞ் சொல்லவேண்டுவதில்லை. வாதி இந்த வழக்கிடுவதற்கு முந்தியே பிரதிவாதி டிபாஸிட்டாகக் கட்டிய தொகை ரூ 36-2-8 யும் போர்டாதாயஞ் செய்தது நியாயமானதே. இது விஷயமாக ஏற்பட்ட இந்தக் கோர்ட்டு (1913) *M. W. N.* 341 தீர்மானத்துக்குக் கட்டுப்பட்டு நாம் நடக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். ஒரு சொத்தை விற்றவன் தனக்குண்டாகிய நஷ்டத்துக்கு வழக்கிடுவதாயிருந்தால் இவர் டிபாசிட்டு வாங்கிய தொகையை அந்த நஷ்டத்துக்கு உளவடைத்துக்கொண்டு பாக்கிக்குத்தான் வழக்கிட வேண்டுமென்று நஷ்ட விஷயமாக மெயின்துரை எழுதிய புஸ்தகம் 243, 249 பக்கங்களிற் சொல்லப்பட்டிருக்கிறது. அச்சொத்தை வாங்கியவன் கிரயத்தொகையைக் கொடாவிட்டால் அதை மறுபடியும் விற்று முதல்செய்து தனக்குண்டாகிய நஷ்டத்தை வசூலிக்கலாம். தான் முதலில் விற்ற விலைக்கும் இரண்டாவது விற்ற விலைக்குமுள்ள வித்தியாசத் தொகையை வசூலிக்கலாம். டிபாஸிட்டுத் தொகையினை உளவடைந்த தொகை பாக்கித் தொகை மட்டில் வசூலிக்க பாத்தியமுண்டு. (1884 27 L. J. Q B. 361 தீர்மானத்தை பார்க்க). இதனால் வாதியின் ரெவிஷன் மனுவை செலவுடன் தள்ளுபடி செய்கிறோம்.

(1913) M. W. N. 1025.

சென்னை ஹைகோர்ட்டு.

1912 ஹூத்திய 2-வது அப்பீல் நம்பர்கள் 703, 704, 1299, 483, 484, 485, 486.—

1912 ஹூத்திய சிவில் ரேவிஷன் மனுக்கள் நம்பர் 172, 173.

தீர்ப்பு 20—10—13.

ஜட்ஜிகள்.

ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள்

ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர் அவர்கள்

ஸ்ரீ எர்ருகாந்தி சின்ன வெங்கடநாராயணன்காரு வ (பிரதிவாதிகள்) அப்பீல்தார்கள்.

V

கோடகிரி வெங்கடநரசிம்ம நாராயணன்காரு வ (வாதிகள்) அ. பிரதிவாதிகள்.

3. [நெகோஷியபிள் இன்ஸ்டுருமெண்டு ஆக்ட்டு].

வாங்கிய கடன் திருப்பிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படும் என்று எழுதப்பட்டிருந்தால் அது தானே தொகை கொடுப்பதாகச் சொன்னதாக வெண்ணப்படு மேன்பதும், நெகோஷியபிள் இன்ஸ்ட்ருமேண்டில் தலைப்பில் தான் ஒருவருடைய ஏஜண்டென்பதாக வெழுதிக் கையெழுத்துச் செய்யும்போது தான் ஏஜண்டென்று கையெழுத்துச் செய்யாவிட்டால் அத்தொகையை யவர் தம் சொந்த ஜவாப்தாரியின் பேரில் கொடுக்கவேண்டு மென்பதும்.

முதல் பிரதிவாதி சீடிகாடா எஸ்டேட்டுக்குச் சொந்தக்காரர். இவர் தன்னுடைய இளைய சகோதரருக்குச் சொந்தமான ஸ்ரீ புரம் எஸ்டேட்டை மானேஜ்மெண்டு செய்தவர அவரிடம் பவர் அவ் அட்டரணி யென்ற அதிகாரப்பத்திரம் பெற்றிருந்தார். இந்த எல்லா அப்பீல்களிலுங் கண்ட விஷயங்களெல்லாம் ஒரேமாதிரியானவை. இந்தத் தாவாக்களிற் கண்ட பிராமஸரி நோட்டுகளின் வாசகங்களெல்லாம் ஒரேவிதமானவை. அதனால் இந்தத் தாவாக்களிற் கண்ட தொகைகள் யாவும் முதல் பிரதிவாதி தன் சொந்த ஜவாப்தாரியின் பேரில் கொடுக்கவேண்டு மென்பதாகக் கீழ்கோர்ட்டார்கள் தீர்மானித்து விட்டார்கள்.

இந்தக் கேஸ்களிற் கண்ட பிராமசரி நோட்டுகளின் வாசகங்கள் ஒரேவிதமான தாகையால் 1912 ஹூத்திய 2 வது அப்பீல் 703 நம்பரிற்கண்ட பிராமசரி நோட்டை மட்டில் திருஷ்டாந்தமாகச் சொல்வோம்.

வாலிலவால்ஸா K. வெங்கடநரசிம்ம நாராயனிம்காருக்கு மகா-ா-ா-ஸ்ரீ, ஸ்ரீபுரம் அங்கார்டாவூ எஸ்டேட்டுகளின் ஏஜண்டு ஸ்ரீ எர்ருகாந்தசின்ன வெங்கட்ட ராயினம்காரு எழுதிக் கொடுத்த பிராமசரி நோட்டு மேற்கண்ட எஸ்டேட்டுகளின் அவசர செலவுகளுக்கு நாளது தேதியிற் கடன் வாங்கினது ரூ 1500. இந்தத் தொகைக்கு மாதம் 1 க்கு ரூ 100 க்கு 12 அணு வட்டி. இந்த அசல் வட்டித் தொகைகளை உங்களுக்காவது உங்களிடம் உத்தரவு பெற்றவர்களுக்காவது வேண்டும் போது கொடுக்கும்படி செய்துவிட்டு இந்தப்பிராமசரிநோட்டைத் திருப்பி வாங்கிக்கொள்ளுவோம்; இதிற் கண்ட தொகை ரொக்கமாக வுடனே 1907 வருஷம் டிசம்பர் மாதம் 27-ந் தேதியில் வாங்கிக் கொள்ளப்பட்டது.

ஒப்பம்

எர்ருகாந்தி சின்ன வெங்கடநாயுகோரு.

தாவா பிராமசரி நோட்டுகளில் முதல் பிரதிவாதி இவ்விதங் கையெழுத்துச் செய்திருப்பதினல் அந்த நோட்டுகளின் தொகைகளை யவர் தன் சொந்த ஜவாப்தாரியின் பேரில் கொடுக்கக் கடமைப் பட்டவரா என்பதைப் பற்றித் தான் நாம் ஆலோஜிக்க வேண்டும். ஒருவருக்குப் பிரதிவாதியாக ஏஜண்டு ஒரு உடன்படிக்கையில் கையெழுத்துச் செய்தால் அவனுடைய ஜவாப்தாரி என்ன வென்பதைப் பற்றி ஹாலீஸ்பரியுடைய இங்கிலாந்து சட்டம் முதலாவது வாலியூம் 10-வது பாரா 463-வது உட்பிரிவிற் சொல்லப்பட்டிருக்கிறது. இது விஷயம் இந்தியன் நெகோஷியபிள் இன்ஸ்டுருமெண்டு ஆக்ட்டு 28-வது செக்ஷனிலும் இங்கிலீஷ் பில்ஸ் அவ் எக்ஸ்சேஞ்சு சட்டம் 206-வது செக்ஷனிலுஞ் சொல்லப்பட்டிருக்கிறது. இது விஷயத்தைப் பற்றிய இங்கிலீஷ் சட்டமும் இவ்விந்தியா சட்டமும் ஒன்றுதான் என்பதாக சீவ் ஜஸ்டிஸ் அவர்கள் தீர்மானித்திருக்கிறார்கள் (1912. M. W. N. 984. தீர்மானத்தைப் பார்க்க). தாவாவிற் கண்ட விஷயங்கள் அந்த புல்பெஞ்சு தீர்ப்புக்கு மெத்த ஒற்றுமையாகவே யிருக்கின்றன. அந்தத் தீர்ப்பிற் கண்ட பிராமசரி நோட்டின் தலைப்பில் முதலாளியிடம் பவர் பெற்ற ஏஜண்டு என்பதாகக் கண்டிருக்கிறது. கையெழுத்துச் செய்ததில் அந்த முதலாளிக்காக கையெழுத்து செய்ததாகவாவது முதலாளியின் ஏஜண்டு முறைமையில் கையெழுத்து செய்ததாகவாவது அதில் யாதொரு விபரமு

மில்லை. அதில் அரண்மனை ஜமீன்தார்வீட்டுத் திரைசாணிகளுக்கு புடவைகள் கொடுத்த வகையில் கணக்கு பாக்கியென்று சொல்லப்பட்டிருக்கிறது. தாவா நோட்டுகளில் 2-ம் பிரதிவாதியின் எஸ்டேட்டின் அவசர செலவுகளுக்காக வாங்கப் பட்டதாகக் கண்டிருக்கிறது.

அந்த புல்பெஞ்சு தீர்ப்பிற் கண்ட விஷயங்களுக்கும் தாவா கேஸ்களுக்கும் மெத்த வித்தியாசங்க ளிருப்பதாகவும் தாவா நோட்டுகளில் சில முதல் பிரதிவாதி ஏஜண்டு முறைமையில் எழுதிக் கொடுத்ததையும், தாவா நோட்டுகளின் வட்டித் தொகைகள் 2-ம் பிரதிவாதியின் எஸ்டேட் ஐவேஜியினின்றுங் கொடுபட்டதையும் வாதிகளே ஒப்புக்கொண் டிருப்பதால், முதல் பிரதிவாதியைக் கட்டுபடுத்தக் கூடாதென்று ஆக்ஷேபிக்கிறார்கள். இந்த ஒரு விஷயத்தைக் கொண்டு அந்த புல்பெஞ்சு தீர்ப்புக்கும் தாவா கேஸ்களுக்கும் ஒற்றுமையில்லை யென்று சொல்லக்கூடாது. வழக்கிடப்படும் தஸ்தாவேஜிகளைக் கொண்டு நாம் பார்க்கவேண்டியதேயன்றி சுற்றுப்பட்ட விஷயங்களைக் கவனிக்கக் கூடாது. இங்கிலாந்து தேச ஏஜண்டுகள் செய்யும் விதங்களை இந்தியா தேசத்து ஜனங்களின் பழக்கம் வழக்கங்களுக்கு ஒத்திட்டுச் சொல்லக் கூடாது. இங்கிலீஷ் கோர்ட்டு நடவடிக்கைகளுக்கு முதலாளிக்காக ஏஜண்டுகள் கையெழுத்துச்செய்வதற்காக சிலவிதிகளேற்பட்டிருக்கின்றன வென்றும், இவ்விந்தியாவில் அவ்வித விதிகளில்லை யென்றும், நெகோஷியபிள் இன்ஸ்டுரூமெண்டு ஆக்ட்டு 1-வது செக்ஷனையும் இ. லா. ரி. 38 கல்கத்தா 468 - 474 (1908) 4 சென்னை லா டயம்ஸ் 309. இந்தத் தீர்மானங்களையும் தன் கக்ஷிக்கு ஆதாரமாக மிஸ்டர் S. ஸ்ரீனிவாசய்யங்காரவர்கள் எடுத்துச் சொல்லுகிறார்கள். நெகோஷ்யபிள் இன்ஸ்டுரூமெண்டு ஆக்ட்டு 28-வது செக்ஷன் இங்கிலீஷ் பாஷையில் எழுதப்பட்ட தஸ்தாவேஜுகளுக்கு மட்டில் பொருந்தியதென்றுஞ் சொல்லுகிறார்கள். ஏஜண்டு முறைமையில் கையெழுத்து செய்கிறவர்கள் தான் ஏஜண்டாகக் கையெழுத்துச் செய்வதாகத் தெரிவிக்க வேண்டும்; அவ்விதஞ் செய்யாதவரையில் தன்னுடைய சொந்த ஜவாப்தாரியை நீக்கிக் கொண்டதாக எண்ண முடியாது. முதல் பிரதிவாதி தான் தொகையை கொடுப்பதாக ஸ்பஷ்டமாச் சொல்லிவிட்டுத் தன்னுடைய ஜவாப்தாரியினின்றுந் தப்பித்துக்கொள்ள முடி

யாது. இந்தக்கோர்ட் புல்பெஞ்சதீர்மானங்களாகிய இ-லா-ரி. 30 சென்னை 88 (1912) M. W. N. 984 தாவாவிற் கண்ட விஷயங்களை நிஷ்கரித்து விட்டன. அவைகளை நாம் அனுசரிக்கக் கடமைப்பட் டிருக்கிறோம்; ஆயைாவிந்த அப்பீல்களையும் ரெவிஷன் மனுக்களையுஞ் செலவுடன் தள்ளுபடி செய்கிறோம்.

(1913) M. W. N. 1005.

பம்பாய் ஹைகோர்ட்.

1913 ஞூத்திய 2-வது அப்பீல் நம்பர் 96.

தீர்ப்பு 3—7—13.

ஜட்ஜிகள்.	
ஸர்பாஸில் ஸ்காட் Kt. சீவ் ஜஸ்டிஸ்	முலியா பனு (பிரதிவா) அ. வாதி
	V
மிஸ்டர் ஜஸ்டிஸ் பீமன் அவர்கள்	சுந்தர்தானு. (வாதி) அ. பிரதிவாதி

3. [இஸ்மெண்டு ஆக்ட்டு]

ஒருவர் வீட்டின் வாரி மற்றொருவர் நிலத்தில் நீட்டி யிருந்து வசதி பாத்தியமேற்பட்டு விட்டால் அது எதுவரையில் நீட்டப்பட்டிருந்ததோ அதுவரையில் சர்வ சுதந்திர பாத்தியமா யனுபவிக்கலாமென்பதும், ஒருவர் மற்றொருவர் வீட்டிலுள்ளதை பார்க்கும்படி ஜன்னல் வைக்கக்கூடாதென உடன்படிக்கை யேற்பட்டிருந்தால் அதன்படி நடக்கக் கடமைப்பட்டவர்க ளென்பதும்.

பிரதிவாதிகள் வீட்டு வாரியை வாதியின் நிலத்தில் நீட்டிக் கட்டியிருப்பதாகவும், அதை யெடுத்துவிட வேண்டுமென்றும் வாதியின் வீட்டிலுள்ளதைப் பார்க்கக்கூடியதாக பிரதிவாதி தன் வீட்டுச் சுவற்றில் சன்னல்முதலியன வைத்திருப்பதை அடைத்துவிடவேண்டுமென்றும், வாதி வழக்கிட்டார். வாதியின் பாத்தியங்களை பிரதிவாதி மறுத்ததுமன்றி தாவாவிற் கண்டவாரியைத் தான் வெகு நீண்டகாலமாக அனுபவித்து வருவதால் தனக்கு வசதி பாத்திய மேற்பட்டுவிட்டதென்றும், வாதி கேட்டும் பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதில்லை யென்றுங் கக்ஷிபாடினார். கீழ் அப்பீல் கோர்ட்டார் வாதிக்கு அனுகூலமாகத் தீர்ப்பு செய்துவிட்டதின் பேரில் பிரதிவாதி இந்தக் கோர்ட்டில் அப்பீல் செய்கிறார்.

பிரதிவாதி தன் வாரியை வாதியின் நிலத்தில் 10-அங்குலம் வரையில் நீட்டிக் கட்டி 25 வருடங்களாக அபனுபவித்து வருகிறாரென்று ருஜுப்பிக்கப் பட்டிருக்கிறது. மழை ஜலம்விழுவதற்கன்றி மற்றப்படி வேறுவிதமான பாத்தியம் பிரதிவாதிக்குக் கிடைக்கமாட்டாதென்றும் பிரதிவாதி வாரியை நீட்டியிருப்பது ஆக்கிரமிப்பென்று டிஸ்டிரிக்ட் ஜட்ஜி சொல்லியிருப்பது சரியல்ல. மழை ஜலம் வாதிநிலத்தில் விழச் செய்யும்படியான பாத்தியம் பிரதிவாதிக்கு ஏற்பட்டிருப்பதால் அந்த ஜலம் விழத்தக்கதாக வாரியை நீட்டிக்கட்டவேண்டிய பாத்தியமும் பிரதிவாதிக்குண்டு. (20-இந்தியன் கேஸஸ் 446. இ. லா. ரி. 37 பம்பாய் 491. இந்த தீர்மானங்களைப் பார்க்க). 10-அங்குல நீளம் வாரியை நீட்டி அனுபவிக்கும் பாத்தியம் பிரதிவாதிக் கேற்பட்டுவிட்டதால் இந்த அளவுக்கு மேற்படாமல் பிரதிவாதி கட்டி அனுபவிக்கும்படியான பாத்தியமுண்டு; இந்த அளவுக்கு மேல் நீட்டியது பிசகாகையால் இதை யெடுத்துவிட வேண்டும். இந்தப்படி டிக்கிரி திருத்தப் படவேண்டியதாகத் தீர்மானிக்கிறோம்.

இந்த குஜராத் தேசத்தில் நடைபெற்று வரும் வழக்கங்களின்படி ஒருவன் வீட்டிலுள்ளதை அடுத்த வீட்டுக்காரர் பார்க்கும்படி ஜன்னல், கதவுமுதலியன வைத்துக் கட்டக்கூடாதெனச் சொல்லப்பட்டிருக்கிறது. வாதியின் வீட்டு ஜனங்கள் தூங்குவதை பிரதிவாதி வீட்டிலிருந்து பார்க்கக்கூடு மென்பதை பிரதிவாதியே ஒப்புக் கொள்ளுகிறார். (1862) 9 Harrington 274, 8 B H C R A C J 87 இந்தத் தீர்மானங்களிற் கண்டபடி வாதியின் வீட்டிலுள்ள விஷயங்களை பிரதிவாதி வீட்டிலுள்ளவர்கள் பார்க்கத்தகுந்த ஜன்னல் கதவு முதலியன வைத்துக் கட்டுவது கூடாத விஷயம். மேலும் பிரதிவாதியின் தகப்பன் அவ்வித ஜன்னல் முதலியன வைத்துக் கட்டுகிறதில்லை யென்று 1879 வருஷம் ஏப்பரல் மாதத்தில் ஒரு உடன் படிக்கை எழுதிக் கொடுத்திருக்கிறார். அதனால் கீழ்க்கோர்ட்டார் இது விஷயமாகச் செய்த தீர்மானத்தில் நாம் பிரவேசிக்கத்தக்கதில்லை. ஆகையால், பிரதிவாதி வைத்திருக்கும் ஜன்னல்கள் ஜாலீஸ் இவைகளை யடைத்து விடும்படிக்கும், வாதியின் நிலத்தில் பிரதிவாதி 10-அங்குலத்துக்குமேல் நீட்டிக்கட்டாமல் பிரதிவாதிக்கு இன்ஜங்ஷன் கொடுக்கப்படவேண்டிய தென்றுந் தீர்மானிக்கிறோம்.

21 Indian cases 352.

அலகபாத் ஹைகோர்ட்.

1911 ஹு த்திய 2வது அப்பீல் நம்பர் 1372.

தீர்ப்பு 1—7—1912.

ஜட்ஜிகள்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸாமியர் அவர்கள்
மிஸ்டர் ஜஸ்டிஸ் ருவீக் அவர்கள்

கோகாமால். அ. வாதி
V
ஜி. ஐ. பி ரெயில்வே அ. பிரதிவாதி

1. [ரெயில்வே ஆகட்டு.]

ஒரு ரெயில்வே கம்பெனியாரிடம் ஒப்புவிக்கப்பட்ட சாமான் வேறொரு கம்பெனியார் மூலமாக சொத்துக்காரனிடம் ஒப்பிவிக்கப் படவேண்டியதில் நிறை குறைவது முதலியனவற்றைப் பற்றி எந்த கம்பெனி பேரில் எதுவிஷயத்தைப் பற்றி வழக்கிடலா மென்பது.

வாதிக்குச் சொந்தமான மிளகாய் மூட்டைகளை 1909 வருஷம் செப்டம்பர் மாதம் 19-தேதியிலும் அவ் வருஷம் அக்டோபர் மாதம் 4-தேதியிலும் வடமேற்கு ரயில்வே கம்பெனியார் மூலமாக ஆக்ராநகர் கோட்டைக்கு ஒரு வர்த்தகர் அனுப்பினார். அவைகள் முறையே அக்டோபர் 19-ந் தேதி 20-ந் தேதிகளில் அந்நகர் வந்து சேர்ந்தன. வாதியின் ஏஜண்டு அந்தச் சரக்குகளை யெடுக்கப் போனதில் மூட்டைகள் தளர்ச்சியாக இருந்ததாகவும், ரயில்வே ஸ்டேஷன் உத்தியோகஸ்தர்களை அவைகளை நிறுத்து குறைவதை பதிவு செய்து கொள்ளும்படி கேட்டதாகவும், அவர்கள் அந்தப்படிச் செய்ய சம்மதிக்கவில்லை யென்றுஞ் சொல்லப் பட்டிருக்கிறது. இது விஷயமாக வாதிக்கும் ரயில்வே கம்பெனியாருக்கும் வர்த்தமான கடிதங்கள் நடைபெற்றன. கடைசியாக பிரதிவாதி கம்பெனியார் அந்த மிளகாய் மூட்டைகளை 1910 வருஷம் மார்ச்சு மாதம் 8-ந் தேதியில் விற்று முதல் செய்து தங்களுக்கு கிடைக்க வேண்டிய ரயில்வே சார்ஜுகளை யெடுத்துக் கொண்டு பாக்கியை வாதிக்கு கொடுக்க முயன்றார்கள். வாதி அதை வாங்கிக் கொள்ளவில்லை. பின் அந்த மிளகாய் மூட்டைகளின் நஷ்டம் தனக்கு ஜி. ஐ. பி. ரயில்வே கம்பெனியாரிடமிருந்து கிடைக்கவேண்டுமென 1910ஹு நவம்பர் மாதம் 23உ வழக்கிட்டார். மூட்டைகள் சரியான ஸ்திதியிலிருந்ததாகவும், மூட்டைகளின் நிறை குறைவதைப்பற்றி வாதி தங்கள் புத்தகங்களில் பதிவு செய்வதைப்பற்றி தங்கள் சிப்பந்திகள் ஆக்ஷேபிக்கவில்லை யென்றும், ஆனால் மூட்டைகள் கெட்டியாக விருந்தன

வென்பதைப்பற்றியும் பதிவு செய்யவேண்டுமெனக் கேட்டதாக வும், வாதியின் தாவா காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுப் போய் விட்டதென்றும், வாதி கேட்கும் நஷ்டம் கம்பெனியிலிருந்து கிடைக்க நியாயமில்லை யென்றுங் கக்ஷிபாடினார்கள்.

தாவாவிற்கண்ட மூட்டைகள் தளர்ச்சியாக இருந்தன வென்றும், ஆனால் மூட்டைகள் கிழியவில்லை யென்றும், அவைகளை திறக்கவாதி பாத்தியமுடையவரென்றும், பிரதிவாதியின் சிப்பந்திகள் அவைகளை திறக்க மாட்டோமெனச் சொல்லி விட்டதாகவும் முதல் கோர்ட்டார் கண்டு பிடித்தார்கள். ஆனால் வாதியின் தாவா காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுப் போய் விட்டதென்றும், தாவாவிற்கண்ட சரக்குகள் வாதிக்கு ஒப்பிவிக்கப் படாததைப்பற்றி பிரதிவாதி கம்பெனியார் பேரில் வழக்கிடக் கூடாதென்றும், வாதியின் தாவா மிளகாய் மூட்டைகள் ஒப்புவிக்கப் படாததைப்பற்றி கணக்குச் சம்பந்தமான ஓர்வழக்கென்றும் வாதியின் வழக்கைத் தள்ளுபடி செய்து விட்டார்கள். இது சப் கோர்ட்டாராலும் உறுதி செய்யப்பட்டது. அதன் பேரில் இந்த அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது.

இ. லா. ரி. 29 அலகபாத் 228 தீர்மானத்திற் கண்டபடி சரக்குகள் ஒப்பிவிக்கப் படாததைப் பற்றி பிரதிவாதி கம்பெனியார் பேரில் வழக்கிட்டது செல்லத் தகுந்ததல்ல. காண்டிராக்ட் ஏற்படுத்திக்கொண்ட வடமேற்கு ரயில்வேகம்பெனியார் பேரில் வழக்கிட்டிருக்கவேண்டும். மூட்டைகள் தளர்ச்சியாக விருந்தபோதிலும் மூட்டைகள் கிழிந்திருக்க வில்லை. இது விஷயமாகக் கம்பெனி புத்தகத்திலெழுத வாதிக்குப் பாத்தியமில்லை; வேறு விதமாக கம்பெனியாருக்கு இது விஷயத்தைப் பற்றித் தெரிவித்திருக்கலாம். அந்தப்படி வாதியாதொன்றுஞ் செய்யவில்லை. வாதி சரக்குகளை ஒப்புக்கொள்ளாததற்கு முக்கியகாரணம் அவைகளை கம்பெனியார் மறுபடியும் திறக்க ஆக்ஷேபித்ததல்ல, அவர்கள் புத்தகங்களில் பிசகான விஷயங்களைக் கண்டு எழுதுவதை தடுத்தது. வாதி ஆதி முதல் பிசகான வழியிலேயே நடந்திருக்கிறார். இவர் காரணமில்லாத விஷயங்களைப் பற்றிக் கேட்டிருக்கிறார். பிரதிவாதி கம்பெனியார் வடமேற்கு ரயில்வே கம்பெனியாரின் ஏஜண்டு முறைமையில் வாதி ஏற்படுத்திய நிபந்தனைகளுக் குட்பட்டு சரக்குகளை யொப்புக்கொடுக்க ஆக்ஷேபிக்க பாத்தியமுடைய

வர்கள். வாதி தாவா சரக்குகளை யொப்புக்கொண்டு ரயில்வே சந்தாதாரை கொடுத்திருக்க வேண்டிய அவசியம். இச்சரக்குகளை வாதி யொப்புக்கொள்ளாததினாலே கிரமப்படி வாதிக்கு நோட்டீஸ் கொடுத்துவிட்டு சரக்குகளை விற்று முதல் செய்ய பிரதிவாதி கம்பெனியார் பாத்தியமுடையவர்கள். இவ்விதம் பார்க்கையில் லிமிடேஷனாக்ட்டு 30 வது செக்ஷனாவது 31-வது செக்ஷனாவது தாவா கேஸுக்கு ஒற்றுமையானதல்ல. தாவா சரக்குகள் கொடாததைப்பற்றி வடமேற்கு ரயில்வே கம்பெனியார்பேரில் வாதி வழக்கிட்டிருக்கவேண்டியதென நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். கீழ்கோர்ட்டார் கண்டுபிடித்திருக்கிறபடி அந்த வழக்குந் தவறிப்போயிருக்கும். அப்பீல் செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

21 Indian Cases 428.

அலகபாத் ஹைகோர்ட்.

1913 ஸுத்திய நிறைவேறு நடவடிக்கை 2 வது அப்பீல் நம்பர் 386.

தீர்ப்பு 22—7—13.

ஜட்ஜிகள். மிஸ்டர் ஜஸ்டிஸ் டட்பால் அவர்கள் மிஸ்டர் ஜஸ்டிஸ் பிக்காட்டு அவர்கள்	மம்டாஸ் ஆமத் வ. (டிக்கிரி கடன்காரர்கள்) அப்பீல்தாரர்கள் V ஸ்ரீராம் வ. (டிக்கிரிதாரர்கள் எதிர் கக்ஷிக்காரர்கள்

2. [ரிஜிஸ்டிரேஷ னாக்ட்டு].

பெந்தக டிக்கிரி டிரான்ஸ்வர் செய்யப்பட்டால் அது ரிஜிஸ்டர் செய்யப்பட வேண்டிய அவசியமில்லை யென்பது.

சி. பு. கோடு 34-வது ஆர்டர் 5-வது ரூல்ப்படி ஏலவிற்பனை செய்யப்பட ஒரு டிக்கிரி உறுதிசெய்யப்பட்டது. அந்த டிக்கிரி தாரன் தனக்கிருந்த பாத்தியதையை ரிஜிஸ்டர் செய்யப்படாத பத்திர மூலமாக எதிர் கக்ஷிக்காரருக்குக் கொடுத்துவிட்டார். அந்த டிரான்ஸ்வர்பெற்றவன் தன்னை டிக்கிரிதாரனாக அங்கீகரித்துக்கொண்டு டிக்கிரியை நிறைவேற்ற வேண்டுமென மனுக்கொடுத்தார். டிக்கிரி கடன்காரர்களுக்கு நோட்டீஸ் ஜாட்டிசார்வ செய்யப்பட்டு எதிர் கக்ஷியன்னியில் மேற்படி உறுதிசெய்யப்பட்டது. பின்பு இந்த டிக்கிரி நிறைவேற்றப்பட்டதில் தாவா மேற்படி பத்

திரம் ரிஜிஸ்டர் செய்யப்படாததினாலே பெந்தக டிக்கிரி பாத்தியம் இவருக்கு கிடைக்கமாட்டாதென்று, நிறைவேறுமனு தள்ளுபடி செய்யப்படவேண்டு மென்றும், பிரதிவாதிகள் கக்ஷியாடினார்கள். கீழ்க்கோட்டார் இ. லா. ரி 13 அலகபாத் 89, 6 கல்கத்தா வீக்லீ நோட்ஸ் 5 இவைகளை யாதாரமாகக் காட்டி பிரதிவாதிகளின் ஆக்ஷேபணைகளைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். இதன்பேரில் பிரதிவாதிகள் தாவா மேடர் பத்திரமானது ஒரு ஸ்தாவர சொத்தைப்பற்றிய தென்றும், அதனால் ரிஜிஸ்ட்ரேஷனாக்ட்டுசெக்ஷன் 17 (b) செக்ஷன் 49 கிளாஸ் (a) இவைகளின்படி மேடர் பெற்றவருக்கு தாவா டிக்கிரி சொத்தில் எவ்வித பாத்தியமு மேற்படாதென்றும், இ. லா. ரி. 1 பம்பாய் 267-15 இந்தியன் கேஸஸ் 853, இவைகளை தங்களுக்கு ஆதாரயாகக்காட்டி பிரதிவாதிகள் கக்ஷி சொல்லுகிறார்கள். இவர்கள் சொல்லும் முதல் தீர்ப்பு 1876ம் வருடத்தி லேற்பட்டது; அதில் சரியான காரணஞ் சொல்லப்படவில்லை. 2-வது சொல்லுந்தீர்மானம் தாவா கேசுக்கு எவ்விதத்திலும் ஒற்றுமையானதல்ல; அது ரிஜிஸ்டராகாத பெந்தகபத்திரம் மேடரைப் பற்றிச் சொல்லப்பட்டது. இந்த அப்பீல் செய்திருக்கும் பிரதிவாதிகள் 21-வது ஆர்டர் ரூல் 16ன்படி மேடர் அங்கீகரிக்க மனுக்கொடுத்த காலத்தில் இந்த ஆக்ஷேபணைகள் செய்திருக்க வேண்டும். இ. லா. ரி. 23 கல்கத்தா 450 தீர்மானம் தாவா கேசுக்கு மிகவும் ஒற்றுமையானது. இதிற்கண்டபடி டிக்கிரி யென்பது ஸ்தாவர சொத்தல்ல. இந்த டிக்கிரி டிரான்ஸ்வர் செய்ததானது தாவர சொத்தில் பாத்தியதையை யுண்டுபண்ணிபதல்ல. ஆகையால் இந்த டிரானஸ்வர் பத்திரம் ரிஜிஸ்டர் செய்யப்படவேண்டு மென்பது அவசியமானதல்ல. ஆகைபால் பிரதிவாதிகளின் அப்பீல் செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

21. Indian Caaes. 462

கல்கத்தா ஹைகோர்ட்.

1913 வருஷத்திய கிரிமினல் அப்பீல் நம்பர் 617

தீர்ப்பு 31—7—13.

ஜட்ஜிகள்.	
ஜஸ்டிஸ் ஸர் அஷுடோஷ் மூகர்ஜி Kt.	குசர்மாப், ஷாகெபார்மா (எதிரிகள்). அப்பீல்தார்கள்
மிஸ்டர் ஜஸ்டிஸ் பீச்கராப்டி.	V சக்கரவர்த்தி.

5. [சாக்ஷிய சட்டம்.]

ஒருவர் நல்ல எண்ணத்துடன் குற்றமில்லாத காரியமென நம்பி செய்ததாகச் சொன்னால் அது குற்றத்தை யொப்புக்கொண்டதாகா தென்பது.

ஷாகே பர்மா என்பவள் 16-வயதுள்ள பெண். இவளை 3 வருடங்களுக்கு முன் இஸ்ஸருல்லா என்றவருக்கு விவாகஞ் செய்து கொடுத்திருந்தார்கள். இவளை அவள் புருஷனும், மாமியாரும் கடுமையாக நடத்திவந்ததால் இவள் அடிக்கடி தன் புருஷன் வீட்டைவிட்டு போய்க்கொண்டிருந்தாள். குற்றம் நடந்த ௬ மாதத்துக்கு முன் இவள் தன் சிற்றப்பன் வீட்டுக்குப் போய்விட்டாள். அங்கே அவள் தகப்பனும் வந்திருந்தார். இவள் அங்கே வசித்துவரும் போது 20-வயதுள்ள விவாகமாகாத குசர்பாப் என்பவன் இவளுடன் சம்பந்தப்பட்டுவந்தான். இவள் தகப்பன் சிற்றப்பன் இவர்கள் வீட்டிலில்லாத சமயம்பார்த்து அவனிவளிடம் வந்து போய்க்கொண்டிருந்தான். இந்த கெட்ட பெயர் வந்துவிட்ட விபரம் இவளுடைய தகப்பனிவர்களுக்குத் தெரிந்தவுடனே பிப்பாவரி மாதம் 21உ சாயங்காலம் இவளை அவன் புருஷன் வீட்டுக்குக் கொண்டுவந்து விட்டுவிட்டார்கள். அன்றிரவு அவள் புருஷன் வீட்டில் ஒரு விருந்து நடந்தது; அந்த விருந்தினர்களில் பக்கிரி நாமியா என்றவனொருவன். அன்றிரவு இந்தப் பெண் ஷாகே பர்மா கோழிக்கறி சமைத்து எல்லோருக்கும் போட்டாள். விருந்தினர் இதைச் சாப்பிட்டவுடனே எல்லோருஞ் சீக்காய் விழுந்துவிட்டார்கள். பக்கிரி இறந்துவிட்டார். இது விஷயமாகக் குழப்பமுண்டானவுடனே இவள் ஓடிப்போய்விட்டாள்; ஒரு சவுக்கிதார் வீட்டினின்றும் கண்டு பிடிக்கப்பட்டாள். இவள் தன்னுடைய வைப்பு புருஷன் குசர்பாதினால் கொடுக்கப்பட்ட ஒரு வெள்ளையான வஸ்துவை சமைத்த கோழிக் கறியில் போட்டதாக சிலரிடத்தில் ஒப்புக்கொண்டாள். அந்த வஸ்துவை அவள் புருஷனுக்கும் மாமியாருக்குங் கொடுத்துவிட்டால் அவர்கள் இவள் சொற்படி கேட்பார்களென்றும், இவள் பேரில் பிரியமாக விருப்பார்களென்றும் இவளைக் கொடுமையாக நடத்தமாட்டார்களென்றும் இவளுடைய வைப்பு புருஷன் சொன்னதாகச் சொன்னாள். விசாரணை முடிவாகும் வரையில் இதே விஷயந்தான் சொல்லி வந்தாள். இவள் சொல்வதை குசர்பாப் ஒப்புக்கொள்ளவில்லை.

மரணத்தை யுண்டு பண்ணக்கூடிய பாஷாணம் என்று தெரிந்தே இந்த ஷாகிபர்பியா விருந்தினர்க்கு பாஷாணத்தைக் கொடுத்தாளென்பதாக இவளுக்கு இ. பி. கோடு 302-வது செக்ஷன்படி ஆயுள் பரியந்தம் தீபாந்திர சிக்ஷை விதித்துவிட்டார்கள்; இவள் தன் புருஷனுக்கும் மாமியாருக்கும் பாஷாணங் கொடுக்கும்படி குசர்பாப் செய்ததாக அவனுக்கு இ. பி. கோடு 302-வது 109-வது செக்ஷன்படி ஆயுள் பரியந்தம் தீபாந்திர சிக்ஷையும் செஷன் ஜட்ஜி விதித்து விட்டார்கள். இதன் பேரில் இந்த எதிரிகள் இருவரும் இந்தக் கோர்ட்டில் அப்பீல் செய்திருக்கிறார்கள்.

இந்த தேசங்களில் ஒரு வித மருந்து கொடுத்தால் அது வசியமாக்கி விடுமென்ற விஷயம் யாவரும் அறிந்திருக்கிறார்களென்று ருஜுப்பிக்கப்பட்டிருக்கிறது. இவள் தன் புருஷனாலும் மாமியாராலுங் கொடுமையாக நடத்தப்பட்டிருக்கிறாளென்பதும், அதிக இளவயதுடையவளென்பதும், மந்த புத்தி யுள்ளவளென்பதும் ருஜுப்பிக்கப்பட்டிருக்கிறது. இதனாலிவள் தனது புருஷன் முதலியவர்கள் தன் சொற்படி நடக்கச் செய்யவேண்டியதினிமித்தம் இந்த மருந்து கொடுப்பாளென்பது அவளுடைய செய்கைகளினால் தெரிகிறது. இந்த பாஷாண மருந்து சாப்பிட்டவர்களில் சில குழந்தைகள் இவளுக்கு மெத்த பிரியமானவர்கள். இவள் தன் புருஷன் வீட்டுக்கு வந்த தினத்தினிரவிலேயே இவ்விஷயம் நடந்திருப்பதினால் இவள் தன்னுடைய புருஷனும் மாமியாருந் தன்னைக் கொடுமையாக நடத்தாதிருக்க வேண்டியதை யுத்தேசித்தே மிகுந்த ஆவலாகக் கொடுத்திருக்கிறாளென்பது நன்றாக விளங்குகிறது. இதனால் இவள் குற்றவாளியல்லவென்று இவளுடைய அப்பீலை யங்கீகரித்து இவளுக்கு விதித்த தண்டனையை ரத்து செய்திருக்கிறோம்.

எதிரி குசர்பாயின் பேரில் குற்றஞ் சுமத்தியதற்கு சாகாயர்மியாவுடைய ஸ்டேட்மெண்டை ருஜுவாக அங்கீகரித்திருக்கிறார்கள். அது சாக்ஷிய சட்டம் 10-வது செக்ஷன் 30-வது செக்ஷன்களின்படி ருஜுவாக அங்கீகரிக்கப்பட்டதென்று சொல்லப்பட்டிருக்கிறது. இவனைப்பற்றின வரையில் இவன் வீட்டில் பசையுள்ள சில வஸ்து சோதனையிலகப்பட்டதாகவும், அதை பரிசோதித்து பார்த்ததில் பாஷாண மிருந்ததாகவும் சொல்லப்பட்டி

கிறது. அதில் எவ்வளவு பாகம் பாஷாணமென்றும், அது ஒருவனை கொல்லக்கூடியதென்றும், ருஜுப்பிக்கப்படவில்லை. இந்தப் பெண்ணின் புருஷனிறந்து விடுவதால் இவனுக்குச் சாதகமிருக்கிறதென்றும், அதனால் பாஷாணங் கொடுத்ததாகவும் சந்தேகிக்கலாம். இவனுடைய வீட்டில் இந்தப்பெண் வசிக்காமையாலும், இவளுடைய சிற்றப்பன் வீட்டில் வசித்து வந்ததாலும், அந்தச் சந்தேகங்கொள்ள இடமில்லை. இவன் பேரிற் சந்தேகப்படக்கூடியதாக விருந்தாலும் இப்போதுள்ள ருஜுக்களைக் கொண்டு இவன் பேரிற் குற்றஞ் சுமத்த இடமில்லை. இந்தப்பெண்ணின் பேரிற் கொண்டுவந்த கேசை வாபஸ்வாங்கிக்கொண்டு இந்த குசர்பாயின் பேரிலேற்பட்ட கேசில் பிராஸிக்யூஷன் தரப்பில் இவளை சாக்ஷியாக விசாரித்திருக்கவேண்டும். இவன் பேரிற் குற்றஞ் சுமத்தத்தகுந்த ருஜுவில்லை. அதனாலிவனுக்கு விதித்த தண்டனையை ரத்து செய்கிறோம்.

21. Indian Cases 378.

கல்கத்தா ஹைகோர்ட்.

1910 ஹத்திய 2-வது அப்பீல் நம்பர் 8751.

தீர்ப்பு 4—9—13.

ஜட்ஜிகள். ஜஸ்டிஸ் ஸர் ஹாரி ஸ்டெபன் Kt. அவர்கள்	அபடல் அலி. அ: வாதி
	V
மிஸ்டர் ஜஸ்டிஸ் மூல்லீக் அவர்கள்	சயித் சொஜான் அலி ஆ. அ. (பிரதிவாதி)

6. [சாக்ஷிய சட்டம்]

சிலர் தனிமையில் செய்து கொள்ளும் தஸ்தா வேஜிகள் முதலியனவற்றிற்கு வேறு மனுஷன் கட்டுப்பட நியாயமில்லை யென்பதும், அந்த தஸ்தா வேஜி சாக்ஷிய சட்டம் 13-வது செக்ஷன்படி அங்கீகரிக்கக் கூடாதென்பதும்.

வாதியின் தாயைப்பெற்ற பாட்டனுக்கு ஒரு கிராமத்தில் பாதி பங்கு பாத்திய மிருந்ததாகவும், அதிற் பாதியை தன்னுடைய தாயாருக்கும் மற்றொரு பாதியை தனக்குங் கொடுத்துவிட்டு அவர் இறந்துவிட்டதாகவும், தனக்குரிய கால் பங்குநிலம் தனக்குக் கிடைக்கவேண்டுமென்றும், வாதியின் பாட்டனுடைய சகோதரர்கள் பேரில் வழக்கிட்டான். வாதியின் பாட்

டன் அப்பாஸ் அலிக்கு பாதிபங்கு பாத்தியமில்லை யென்றும், தங்களுக்கும் அந்த அப்பாஸ் அலிக்கும் பொதுவில் பாதி பங்குதான் பாத்தியமென்றும், அதில் தன் பாகம் பாதிபோக வாதியின் பாட்டனுக்கு கால் பங்குதான் பாத்திய முண்டென்றும், அதில் வாதியின் தாயாருக்கு கொடுபட்டது போக பாக்கி அரைக்கால் பாகந்தான் வாதிக்குக் கிடைக்கக்கூடியதென்றும் பிரதிவாதிகள் கக்ஷிபாடினார்கள். முதல் கோர்ட்டார் வாதியின் தாவாப்படியே தீர்ப்பு செய்து விட்டார்கள். வாதியின் தாயார் முதல் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்திருக்கும் ஒரு தஸ்தாவேஜியில் வாதியின் பாட்டனுக்கு கால் பங்குதான் பாத்திய முண்டென்றும், தவறுதலாக அரைப்பங்கென்று எழுதிக்கொடுத்ததாகவும் வாதியின் தாயாருக்கு கால் பங்கு எழுதிக்கொடுத்திருந்த போதிலும் அரைக்கால் பங்குதான் கிடைக்கக்கூடியதென்று கண்டிருந்தது. மற்றொரு பொட்டா என்னும் தஸ்தாவேஜி வாதியின் தாயாரும் வாதியின் பாட்டனுஞ் சேர்ந்து எழுதிக்கொடுத்த தஸ்தாவேஜி. இதிலும் கக்ஷிபாடும் பிரதிவாதிக்கு தாவாவிற்கண்ட சொத்தில் பாதிபங்கு பாத்தியமுண்டென்று கண்டிருக்கின்றது. இரண்டு தஸ்தாவேஜிகளும் சாஷியம் சட்டம் 13-வது செக்ஷன்படி அங்கிகரிக்கத்தக்க ருஜுக்களென்று கீழ் அப்பீல் கோர்ட்டார் வாதிக்கு அரைக்கால் பங்கு மட்டில் கிடைக்கக் கூடியதென தீர்ப்பு செய்து விட்டார்கள். இதன் பேரில் வாதி அந்த இரண்டு தஸ்தாவேஜிகளும் ருஜுக்களாக அங்கீகரிக்கத் தக்கனவல்ல வென்று இந்த கோர்ட்டில் அப்பீல் செய்கிறார். பிரதிவாதிகள் 23 வீக்லீ ரிபோர்டர் 293, இ. லா. ரி 16 சென்னை 194 இந்த தீர்மானங்களை தங்கள் கக்ஷிக்கு ஆதாரமாக எடுத்துக்காட்டுகிறார்கள். இவை தாவா கேஸுக்கும் எவ்விதத்திலு மொற்றுமையுள்ளனவல்ல. சிலர் தனிமையில் செய்து கொள்ளுந் தஸ்தாவேஜுகளுக்கு மூன்றாவது மனுஷன் கட்டுப்பட எவ்வித நியாயமுமில்லை. சாக்ஷிய சட்டம் 13-வது செக்ஷன் தாவா கேசுக்குப் பொருந்தியதல்ல. ஆகையால் அப்பீலை யங்கீகரித்து கீழ் அப்பீல் கோர்ட்டாருடைய டிக்கிரியை மாற்றி முனிசீபின் டிக்கிரியை உறுதி செய்கிறோம்.

21 Indian Cases 618.

சென்னை ஹைகோர்ட்.

1912 ஹுத்திய 2-வது அசல் நம்பர் 260.

தீர்ப்பு 12—11—12.

ஜட்ஜி மிஸ்டர் ஜஸ்டிஸ் பேக்வெல் அவர்கள்	K. ஷேக் மீரான் சாகிப் (வாதி) V C. ரெத்னவேலு முதலி பிரதிவாதி.

2. [டாபேஜ் சட்டம்.]

சாக்ஷி விசாரணை செய்ய எதிரிக்கு சம்மன் அனுப்பியபிறகு கேஸ் தள்ளுபடியானால் மட்டில் மானநஷ்டவழக்குக் கொண்டுவரலாமென்பது.

வாதி பேரில் பிரதிவாதி அவதூறு குற்றஞ்சாட்டி பிராது செய்ததாகவும், அது விஷயமாக மாஜிஸ்டிரேட் பிரதம விசாரணை செய்து கேசை ஜூலை மாதம் 30வ தள்ளுபடி செய்துவிட்டதாகவும், தன் பேரில் கெட்ட வெண்ணத்துடன் நடவடிக்கை நடத்தியதால் பிரதிவாதியிடமிருந்து நஷ்டங் கிடைக்கவேண்டுமென்றும், வழக்கிட்டார். வாதி பேரில் பிராஸிகியூஷன் நடவடிக்கைகள் நடத்தப்படவில்லை யென்றும், பிராதில் வியாஜ்ஜிய மூலம் சொல்லப்படவில்லை யென்றும், அதனால் வாதியின் தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றும் பிரதிவாதி கக்ஷியாடினார்.

மாஜிஸ்டிரேட் முன்பாக வாதி ஆஜராகும்படி, எவ்வித பிராஸஸும் பிறப்பிக்கப்படவில்லையென ஒப்புக்கொள்ளப்படுகிறது. ஆனால் மாஜிஸ்டிரேட் A. அடையாள நோட்டீஸ் வாதிக்கு அனுப்பி கி. பு. கோடு 202-வது செக்ஷன்படி கேசை விசாரித்து உபய கக்ஷிக்காரர்களின் வக்கீல்களின் விவாதங்களைக் கேட்டு பிராதைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். இந்த நோட்டீசானது பிரதிவாதி கொடுத்திருக்கும் பிராது விஷயமாக நடவடிக்கை நடத்தப்போவதாக முன்னெச்சரிக்கை செய்ததேயன்றி இது வாதியை தருவிப்பதற்காக ஏற்பட்ட சம்மனல்ல, அல்லது அவர் ஆஜராகி வேறெந்த நடவடிக்கையாவது நடத்துவதற்காக வேற்பட்டதல்ல. கி. பு. கோடு 5-வது ஷிடியூலில் இதற்கு எவ்வித விதிபு மேற்படவில்லை. கோடில் இது விஷயத்தைப் பற்றி யாதொன்றுஞ் சொல்லப்படவுமில்லை. சட்டத்தின் கருத்துமில்லை. சம்மன் அல்லது வாரண்டு பிறப்பிக்கப்படடபட்ட பிறகு

தான் கேசின் நடவடிக்கை யாரம்பிக்கப்பட்டதாக வெண்ணப்படும். மாஜிஸ்டிரேட் வாதிக்கு நோட்டீஸ் அனுப்பி விசாரித்தது சட்ட விரோதமானது. அந்தப் பிசகுக்காக பிரதிவாதி நஷ்டங்கொடுக்க நியாயமில்லை. மாஜிஸ்டிரேட் பிராதை யங்கிகரித்து பிராஸஸ் பிறப்பித்த பிறகுதான் கேஸ் ஆரம்பித்ததாகுமேயன்றி அதற்கு முன் நடத்தும் நடவடிக்கைகள் எதிரிபேரில் நடவடிக்கை நடத்த எத்தனித்ததாகும். இ. லா. ரி. 37 கல்கத்தா 358, 38 கல்கத்தா 880 இந்தத் தீர்மானங்களிற் கண்டபடி பிரதிவாதி பேரில் வாதிக்கு எவ்வித வியாஜ்ஜிய மூலமுமில்லை. வாதியின் தாவா தள்ளுபடி செய்யப்பட்டது.

21 Indian cases 703.

சென்னை ஹைகோர்ட்.

1913 ஹு த்திய கிரிமனல் ரெவிஷன் கேஸ் நம்பர் 381.
1913 ஹு த்திய கிரிமனல் ரெவிஷன் மனு நம்பர் 307.
தீர்ப்பு 19—9—13.

ஜட்ஜி மிஸ்டர் ஜஸ்டிஸ் ஓல்டுபீல்டு அவர்கள் } காங்கு ரெட்டி—மனுதார் V C. சமராபதி முதலி.எதிர்மனுதார்.

11. [கிரிமனல் புரிஸீஜர் கோடு.]

வாதியுடைய நடவடிக்கையும் அவன் சொல்லும் முகாந்திரமும் நம்புவதற்கு அருகமில்லை யென்ற காரணத்துக்காக பிராதைத் தள்ளுபடி செய்யக்கூடாதென்பது.

மனுதார் எதிர்மனுதார் பேரில் இ. பி. கோடு 498, 497-வது செக்ஷன்களின்படி குற்றஞ்சாட்டி பிராது கொடுத்தார். குற்றம் நடந்த நீண்ட காலத்துக்குப் பிறகு பிராதுகொடுபட்டிருப்பது வேறுவிததப்பான எண்ணத்தைக் காட்கிறதென்று எதிரிக்கு சம்மன் அனுப்பாமலே பிராதைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். இதன் பேரில்வாதி ரெவிஷன் மனுக்கொடுத்திருக்கிறார். பிராதைப் பற்றி மேல் நடவடிக்கை நடத்தத் தகுந்த காரணங்களில்லாவிட்டால் பிராதைத் தள்ளுபடி செய்து விடலாமென கி. பு. கோடு 203-வது செக்ஷனிற் சொல்லப்பட்டிருக்கிறது. தகுந்த

காரண மென்பதற்கு நியாயமான ஆலோஜனைசெய்து அதன் பேரில் ஒருவித அபிப்பிராயங் கொள்ளவேண்டும். மேலே கண்டபடி மாஜிஸ்டிரேட் சொல்லியிருப்பது சரியான ஆலோஜனையின்பேரிற் செய்ததல்ல. பிராது பொய் யென்றுவது ருஜுப்பிக்கப்படக்கூடிய சாக்ஷியங்கள் தகுதியற்றன வென்றுவது தீர்மானமேற்படாத வரையில் அது பிசகான நடவடிக்கையாகும். அதை இந்தக் கோர்ட்டார் சார்டர் ஆக்ட்டு அதனுல் 15-வது செக்ஷன்படி ரத்து செய்ய அதிகாரமுண்டு. கீழ்க் கோர்ட்டார் செய்த வுத்திரவை ரத்துசெய்து சீவ் பிரஸிடென்ஸி மாஜிஸ்டிரேட்டாவது அல்லது அவர் உத்திரவு செய்கிறபடி வேறு மாஜிஸ்டிரேட்டாவது இந்தக் கேஸை விசாரித்து முடிவு செய்யவேண்டியதாக நம்பரை யனுப்பியிருக்கிறோம்.

21 Indian Cases 681.

சென்னை ஹைகோர்ட்.

1913 ஹு த்திய கிரிமினல் ரிவிஷன் கேஸ் நம்பர் 444.
C. R. No. 66 of 1913.
தீர்ப்பு. 25—9—13.

ஜட்ஜி மிஸ்டர் ஜஸ்டிஸ் எயிலிங் அவர்கள் } மொய்தீன் பாஷா சாகிப் எதிரி

12. [கிரிமனல் புரிஸீஜர் கோடு]

ஒரு குற்றத்தை விசாரிக்க கோர்ட்டாருக்கு அதிகாரமிருக்கும் பட்சத்தில் ருஜுக்கள் பெருங்குற்றத்தைக் காட்டுகிறதென்ற காரணத்துக்காக ஏற்பட்ட தீர்ப்பை ரத்து செய்யக்கூடாதென்பது.

இராமனுதபுரம் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட் கி. பு. கோடு 438-வது செக்ஷன்படி ஹைகோர்ட்டு ரிபர் செய்த கேஸ்.

வாதியை எதிரி தலையிலடித்து விட்டு வாதியிட மிருந்த ஒரு கூடை மிட்டாய்களைப் பிடுங்கிக்கொண்டு போய் விட்டதாக கேஸ் கொண்டுவந்ததில் சப்மாஜிஸ்டிரேட் எதிரி பேரில் இ. பி. கோடு 352, 379, 426-வது செக்ஷன்களின்படி குற்றஞ்சாட்டி தெண்டித்து விட்டார். இதைப்பற்றி அப்பீல் செய்ததில் சப்டிவிஷனல் மாஜிஸ்டிரேட் பிராதுப்படிக்கும் ஏற்பட்ட ருஜுக்களின் படிக்

கும் எதிரி இ. பி. கோடு 392-வது செக்ஷன்படி கொள்ளை யென்ற குற்றஞ் செய்தவனுகிருனென்றும், இந்தக் கேசை விசாரித்தவர் 2-வது வகுப்பு மாஜிஸ்டிரேட்டாக விருப்பதால் அவரிந்தக் கேசை விசாரிக்க அதிகாரமில்லை யென்றும், கீழ்க்கோட்டார் செய்த தீர் மானத்தை ரத்துசெய்து நம்பர்கட்டை கீழ்க்கோர்ட்டுக்கு அனுப் பினுர்கள். கி-பு-கோடு 346-வது செக்ஷன்படி சம்பந்தப்பட்ட கோர்ட்டுக்கு கேசைமாற்றவேண்டியதினிமித்தம் அனுப்பினுர் கள். இவ்வித நடவடிக்கையைப்பற்றி டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட் ஹைகோர்ட்டாரவர்களுக்குத் தெரிவித்தார்கள்.

சப்மாஜிஸ்டி ரேட் செய்த தீர்ப்பு பிசகென்று சப்டிவிஷனல் மாஜிஸ்டிரேட் சொல்வது மெத்தப் பிசகு. ஏற்பட்ட ருஜுக் களின்படி எதிரியை தெண்டிக்கக்கூடிய அதிகார மிருக்கும் பட் சத்தில் அதுவேறு செக்ஷன்படி பெருங்குற்றமுமாகுமென்ற கார ணத்துக்காக அந்த தீர்மானத்தை ரத்து செய்யக்கூடாதென்றும், அந்த நடவடிக்கையினுல் எதிரி பேரில் ஒருவித தப்பான எண் ணங் கொள்ள நேர்ந்தாலும், அல்லது விதித்ததண்டனை போது மானதாக வில்லாவிட்டாலும் அத்தீர்மானம் ரத்து செய்யப்பட லாமே யன்றி வேறேக்காரணத்தை முன்னிட்டும் ரத்துசெய்ய நியாய மில்லை யென்றும் இ. லா. ரி. 13 பம்பாய் 502, 24 சென்னை 675 தீர்மானங்க ளேற்பட்டிருக்கின்றன. எதிரிக்கு விதித்த தண்டனை சரியானதாக விருக்கிறது, எதிரிபேரில் தப் பெண்ண மேற்படவுமில்லை. ஆகையால் சப்டிவிஷனல் மாஜிஸ்டி ரேட் செய்த வுத்திரவை ரத்து செய்கிறோம். ஆகையால் அவர் அப்பீலை பயிலில் வைத்துக்கொண்டு சட்டப்படி தீர்மானிக்க வேண்டியது.

21 Indian Cases 688.

சென்னை ஹைகோர்ட்.

1913 ஹூத்திய கிரிமனல் ரெவிஷன் கேஸ் நம்பர் 458.
1913 ஹூத்திய கிரிமனல் மனு நம்பர் 969.
உத்திரவு. 1—9—13.

ஜட்ஜிகள்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர் அவர்கள்
மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள்

கோவிந்தச் செட்டி ஆ. மனுதார்கள்.
V
பெருமாள் செட்டி ஆ.
எதிர் மனுதார்கள்.

13. [கிரிமனல் புரிஸீஜர் கோடு].

தற்காலம் அவசரமாக தடுக்கப்பட வேண்டிய விஷயங்களுக்கு மட்டில் டெம்பரரியாக இஞ்செங்ஷன் கொடுக்கவேண்டுமே யல்லது சாஸ்வதமாக இன்ஜங்ஷன் கொடுத்தால் அவ்விஷயத்தில் ஹை கோர்ட்டார் பிரவேசித்து உத்திரவு செய்யலா மென்பது.

கலகத்துக்கு ஹேதுவாயிருக்கிற தென்று சேலம் போலீஸ் சப் இன்ஸ் பெக்டர் 1913 வருஷம் ஜூன் மாதம் 22-ந் தேதி ரிபோர்ட்டு செய்ததின் பேரில் மனுதார் ஊர்கோலம் விடக்கூடா தென்று சேலம் டவுன் சப் மாஜிஸ்டிரேட் 1913 வருஷம் ஜூன் மாதம் 27-ந் தேதி கி. பு கோடு 144-வது செக்ஷன்படி டெம் பரரி இன்ஜங்ஷன் கொடுத்தார்கள். இது விஷயத்தைப் பற்றி டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்டாரவர்களிடம் அப்பீல் செய்ததில் சப் மாஜிஸ்டிரேட் செய்த வுத்திரவை ரத்து செய்யவில்லை. அதன் பேரில் கி. பு. கோடு 435-வது, 439-வது செக்ஷன்களின்படி இந்தக் கோர்ட்டில் ரெவிஷன் மனு கொடுபட்டிருக்கிறது.

சப் மாஜிஸ்டிரேட் இந்த வுத்திரவு செய்ய அவருக்கு அதி காரமில்லை யென்று சொல்ல நியாயமில்லை. சப் இன்ஸ் பெக்டர் எழுதிய முழு ரிபோர்ட்டையும் நாம் தருவித்து பார்வையிடுவ தற்கு முந்தி இந்த உத்திரவு நிலைபெற்று நிற்கக்கூடிய இரண்டு மாதகாலமுந் தாண்டிவிடும். அதன் பிறகு இந்த வுத்திரவை ரத்து செய்வதில் பிரயோஜன மில்லை. அதனுலிந்த மனுவைத் தள்ளு படி செய்கிறோம். கீழ் கோர்ட்டார்களின் நடவடிக்கைகளைப் பற்றி சில அபிப்பிராயங்கள் சொல்ல வேண்டிய தவசியம். டிஸ்டி ரிக்ட் மாஜிஸ்டிரேட்டினுடைய வுத்திரவினுல் தாவாவிற் கண்ட ஊர்கோலம் சாஸ்வதமாகத் தடைசெய்யப் பட்டதாகத் தெரி கிறது. டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்டாருடைய வுத்திரவுகளுக் குக் கீழ்படிந்து நடக்க சப் மாஜிஸ்டிரேட் கடமைப்பட்டவராக விருந்தபோதிலும், சப் இன்ஸ்பெக்டருடைய ரிபோர்ட்டை சரி யாக கவனித்து கி. பு. கோடு 144-வது செக்ஷன்படி உத்திரவு செய்யவேண்டியது அவசியமா வென்பதை தீர்க்காலோசனை செய்து வுத்திரவு செய்யவேண்டியதவசியம். டிஸ்டிரிக்ட் மாஜி ஸ்டிரேட் பொதுவாக வுத்திரவு செய்வதற்கு சப் மாஜிஸ்டிரேட் கட்டுப்படக்கூடாது. மாஜிஸ்டிரேட்டுகள் கி. பு. கோடு 144-வது

செக்ஷன்படி தங்களுக்கு அதிகாரமிருக்கிற ஆதாரத்தைக் கொண்டு சாஸ்வத இன்ஜெங்ஷன் கொடுப்பது தங்கள் அதிகார வரம்பை மீறியதாகிறது. அவ்விதஞ் செய்தால் சார்டர் ஆக்ட்டு 15-வது கிளாஸ்படி ஹைகோர்ட்டார் அந்த வுத்திரவுகளை ரத்து செய்யலாம். அடுத்தடுத்து இன்ஜங்ஷன் உத்திரவு பிறப்பிப்பது கி. பு. கோடுக்கு விரோதமான நடவடிக்கையாகும். (இ. லா. ரி. 25-கல்கத்தா 852–7-கல்கத்தா வீக்லீ நோட்டீஸ் 140 இவைகளைப் பார்க்க). டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட் செய்த வுத்திரவில் தற்கால ஆபத்துகள் இருந்த தென்றாவது, மனுதார்களின் பாத்தியதையைத் தடுக்கத் தகுந்த போலீஸ் உத்தியோகஸ்தர்களில்லையென்றாவது சொல்லவில்லை. அவ்விதம் யாதொரு விஷயமுஞ் செய்யாததினால் மறுபடியும் மாஜிஸ்டிரேட் உத்திரவு செய்ததானது 144-வது செக்ஷனுக்கு விரோத மானது. இவர்கள் தங்கள் அதிகார வரம்பை மீறிச்செய்த வுத்திரவாகிறது. இந்த அபிப்பிராயங்களைச் சொல்லி இந்த ரிவிஷன் மனுவைத் தள்ளுபடி செய்கிறோம்.

21 Indian Cases 381.

அலகபாத் ஹைகோர்ட்.

1913 ஹுத்திய கிரிமனல் ரெவிஷன் மனு நம்பர் 534.

தீர்ப்பு 15—7—13.

ஜட்ஜி மிஸ்டர் ஜஸ்டிஸ் டட்பால் அவர்கள்	ஒச்சான் மனுதார் V சக்கரவர்த்தி எதிர் கக்ஷிக்காரர்

14. [கிரிமனல் புரிஸீஜர் கோடு]

சாங்ஷன் வாங்காமல் பிராது கோடேட்டு நடவடிக்கை நடத்தப்பட்டால் அந்தப் பிராது செல்லத்தக்கதல்ல வென்று முன்னதாக ஆக்ஷேபிக்க வேண்டியதேயன்றி பிந்தியாக்ஷேபிக்கக் கூடாதென்பது.

புட்டுசிங்கு என்பவன் திருடினதாக மனுதார் போலீசாருக்குத் தெரிவித்ததின் பேரில் போலீசார் புட்டுசிங்கை மாஜிஸ்டிரேட்டு முன்பாக விசாரணைக்குக் கொண்டுவந்தார்கள். இந்தக்

கேஸ் பொய்யென்பதாக மாஸ்ஜிடிரேட் இந்த புட்டு சிங்கை விடுதலை செய்துவிட்டார். மனுதார் புட்டு சிங்கு பேரில் பொய் பிராதுகொடுத்ததற்காக போலீஸ் சூப்பரின்டென்டென்டு மனுதார் பேரில்பிராது கொடுத்ததின் பேரில் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட் மனுதாருக்கு இ.பி.கோடு 211-வது செக்ஷன்படி 18 மாதங்கடுங் காவல் தண்டனை விதித்தார்கள். சாங்கிஷனன்னியில் பிராது கொடுத்ததைப்பற்றி இந்தக்கோர்ட்டில் மனுதார் எவ்வித ஆக்ஷேபனையுஞ் செய்யவில்லை. மனுதார், இந்த தண்டனையைப் பற்றி செஷன் கோர்ட்டில் அப்பீல் செய்ததில் சாங்கிஷனன்னியில் பிராது கொடுத்தது செல்லாதென மனுதார் ஆக்ஷேபித்தார். இவ்விஷயத்தைப் பற்றி கீழ்க் கோர்ட்டில் ஆக்ஷேபிக்காததினாலும், இதினால் மனுதார் பேரில் எவ்வித தப் பெண்ணமுங் கொள்ள இடமில்லாதிருந்ததாலும், மனுதார் பேரிற் கொண்டுவந்த கேஸ் திருப்திகரமாக ருஜுப்பிக்கப்பட்டிருந்ததாலும்சாங்கிஷன்பெற்று நடவடிக்கை நடத்தாதது பிசகானதல்ல வென்று கி. பு. கோடு 537-வது செக்ஷனை யனுசரித்து கீழ்க்கோர்ட்டு தீர்ப்பை யுறுதி செய்துவிட்டார்கள். திருட்டுக் குற்றத்தைப் பற்றி விசாரித்த சப் டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டாரிடமிருந்து கி.பு.கோடு 195-வது செக்ஷன்படி சாங்கிஷன் பெற்று நடவடிக்கை நடத்தாதது சட்ட விரோதமான தென்றும், பிசகான நடவடிக்கை யென்றுமட்டில் சொல்லக்கூடா தென்றும் இந்தக் கோர்ட்டில் ரிவிஷன் மனுக் கொடுத்திருக்கிறார்கள்.

கி. பு. கோடு 537-வது செக்ஷனுடைய வாசகமே இதற்கு சரியான ஜவாப்பென்று அபிப்பிராயப் படுகிறோம். இந்த செக்ஷன் தப்பான நடவடிக்கைகளைப் பற்றி மட்டில் சொல்லவில்லை; தவறுதல்கள், விட்டுப்போனவை இவைகளைப் பற்றியுஞ் செல்லப் பட்டிருக்கிறது. மனுதார் சொல்வது தவறுதலைச் சேர்ந்தது. இந்தத் தவறுதலினால் நியாய விரோத மேற்பட்டதா வென்பதைக் கவனிப்பதற்கு மனுதார் இந்த சாங்கிஷனைப் பற்றி முதல் கோர்ட்டில் எவ்வித ஆக்ஷேபனையுஞ் செய்யவில்லை. ருஜுவம்சங்களைப் பற்றி கவனிக்கும் போது திருட்டுக் குற்றஞ் சாட்டியது பொய்யென்றே கீழ்க் கோர்ட்டார்கள் அபிப்பிராயப்பட்டது சரியென்று தெரிகிறது. இ. பி. கோடு 211 வது செக்ஷன்படி 18 மாதங் கடுங்காவல் தண்டனை விதித்தது ஜாஸ்தியான தல்லவென அபிப்பிராயப்படுகிறோம். இந்த மனு செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

21, Indian Cases. 479.

அயோத்தி ஜுடிஷல் கமிஷனர் கோர்ட்.

1913-ம் வருஷத்திய கிரிமனல் அப்பிளிகேஷன் நம்பர் 123.

தீர்ப்பு—27—8—13.

ஜட்ஜி மிஸ்டர் B. லிண்ட்ஸே J. C.	ஜெகன்னாத் எதிரி மனுதார் V

15 [கிரிமனல் புரிஸீஜர் கோடு.]

சம்மரி டிரயலில் சாக்ஷிகளை பதிவு செய்யாவிட்டாலும், எதிரியைத்தண்டித்ததற்குத் தகுந்த காரணங்களை தீர்ப்பில் எழுதவேண்டியது மெத்த அவசியமென்பது.

லெக்ஷமணபுரி நகரம் மாஜிஸ்டிரேட் எதிரிபேரில் சம்மரியாக விசாரித்து இ. பி. கோடு 457-வது செக்ஷன்படி குற்றஞ் சாட்டி 3 மாதங் கடுங்காவல் தண்டனை விதித்தார்கள். இதைப் பற்றி செஷன்கோர்ட்டில் ரெவிஷன்மனு கொடுபட்டதில் அதைத் தள்ளுபடி செய்து விட்டார்கள். அதன்பேரில் இந்தக் கோர்ட்டில் ரெவிஷன் மனு கொடுக்கப்பட்டிருக்கிறது.

எதிரியை இ. பி. கோடு 457—வது செக்ஷன்படி தண்டித்ததற்கு என்னகாரணமென்பதைப்பற்றி ஸிட்டி மாஜிஸ்டிரேட்தன்னுடைய தீர்ப்பில் யாதொன்றுஞ் சொல்லவில்லை. கி. பு. கோடு 263-வது செக்ஷன்படி சம்மரியாக விசாரிப்பதில் ருஜுக்களை பதிவு செய்யவேண்டியது அவசியமில்லை யென்பது சரியானதே, ஆனால் எதிரியை தண்டிப்பதற்குத்தகுந்தகாரணங்கள் சொல்லக் கடமைப்பட் டிருக்கிறார். அவ்விதஞ் சொல்லாவிட்டால் தண்டிப்பதற்குத்தகுந்த விஷயங்கள் இருந்தனவா இல்லையா வென்பதைப்பற்றிமேல் கோர்ட்டார் ரிவிஷன் மனுக்களில் கவனிக்கமுடியாது. (ஸிட்டி மாஜிஸ்டிரேட் இவ்விதஞ் செய்தது ஆக்ரா வீக்லீ நோட்ஸ் (1883) 114, இ லா. ரி 21 அலகபாத் 189, பக்கம் 191, இந்தத் தீர்மானங்களிற் கண்டபடி மெத்தப்பிசகானது. வாதியின் வீட்டிற்குள் இரவு 3 மணிக்கு எதிரியிருந்ததாகவும், அவ்விடத்தில் அவன் வந்ததற்கு சரியான சமாதானஞ் சொல்லவில்லையென்றும், அதனால் அவன் இ. பி. கோடு 457-வது செக்ஷன்படி குற்றஞ் செய்திருக்கிறானென்றும், தீர்ப்பிற்கண்ட காரணங்களெனத்தெரிகிறது. இந்த செக்ஷன்படித்தான் குற்றஞ் செய்திருக்க வேண்டும். உண்மையில் வேறு செக்ஷன்படி ஏன் குற்றஞ்செய்

திருக்கக்கூடாதென்பதற்குத் தகுந்த காரணஞ் சொல்லப்படவில்லை. அதனாலிந்த மனுவை யங்கீகரித்து எதிரி குற்றவாளியென்று கண்டுபிடித்ததையும் அவனுக்கு விதித்ததண்டனையையும் ரத்து செய்து அவனை விடுதலை செய்திருக்கிறோம்.

21 Indian Cases 466.

சென்னை ஹைகோர்ட்.

1913 ளு த்திய கிரிமினல் ரெவிஷன் கேஸ் நம்பர் 524

1913 ளு த்திய ரிபர் கேஸ் நம்பர் 76.

தீர்ப்பு 10—9—13.

ஜட்ஜி மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யர் அவர்கள்	காமாக்ஷம்மா எதிரி V சக்கரவர்த்தி மனுதார்

16. [கிரிமினல் புரிஸீஜர்கோடு.]

ரிகார்டுகள் கெட்டுப் போவதால் விதித்த தெண்டனையை மாற்றக் கூடாதென்பதும், தீர்ப்பு கெட்டுப்போய் விட்டால் அதை புதிதாக எழுதி வைத்து விடலா மென்பதும்.

பல்லாரி அடிஷனல் செஷன் ஜட்ஜி கோர்ட்டிலிருந்த தீர்ப்பு முதலியன கெட்டுப்போய்விட்டதால், விதித்ததண்டனையை ரத்து செய்துகேசை புனர்விசாரணை செய்யலாமாகூடாதா வென்பதைப் பற்றி கி. பு. கோடு 438 வது செக்ஷன்படி ஷெ செஷன் ஜட்ஜியவர்கள் ஹைகோர்ட்டுக்கு 1913 ளு ஆகஸ்டு மாதம் 13௳ தெரிவித்தார்கள்.

உத்தரவு:—செஷன் விசாரணையிலேற்பட்ட ரிகார்டுகள் கெட்டுப்போவதைக்கொண்டு செஷன் ஜட்ஜியின் தீர்மானத்தையும், அவர் விதித்த தண்டனையையும் ரத்து செய்ய ஹைகோர்ட்டாருக்கு அதிகாரமில்லை யெனத் தெரிகிறது. தண்டனை யடைந்தவன் அப்பீல் செய்தால் அவசியமிருந்தால் அந்த தஸ்தாவேஜிகள் விஷயமாக யோஜிக்கலாம். ஒருவன் குற்றவாளியெனக் கண்டுபிடிக்கும்போதும், தண்டனை விதிக்கும்போதும், அந்தக் கேஸ் சம்பந்தமான எல்லா ரிகார்டுகளு மிருக்கவேண்டுமென்று சட்டங்களில் எந்தவிதியு மேற்படவில்லை; அந்த ரிகார்டுகள் இல்லாதிருப்பதினாலே செஷன் ஜட்ஜி தீர்ப்பு செய்ய அதிகாரமில்லை யென்று

சொல்லக்கூடாது. தீர்ப்பின் சில பாகத்தை வாசிக்காதது சாதாரண தவறுதலென்று, 2 வீயர்ஸ் ரூல் 711 ல் சொல்லப்பட்டிருக்கிறது. தீர்ப்பு எழுதாமலே தண்டித்தது பிசகல்லவென்று 1 பம்பாய் லா ரிபோர்ட்டு 117 தீர்மான மேற்பட்டிருக்கிறது. தீர்ப்பு கெட்டுப்போய்விட்டால் வேறு தீர்ப்பு எழுதிவைக்க ஜட்ஜி கடமைப்பட்டவர் (1 பம்பாய் லா. ரிபோர்ட்டு 160. தீர்மானத்தை பார்க்க.).ஆகையால் செஷன்ஜட்ஜி புதிதாகத் தீர்ப்பெழுதி வைத்துவிடவேண்டும்.

21 Indian Cases 467.

அலகபாத் ஹைகோர்ட்.

1913 ௵த்திய கிரிமனல் அப்பீல் நம்பர் 531

தீர்ப்பு 1—11—13

ஜட்ஜிகள்	ரூம்டியால் ஆ. எதிரிகள் அப்பீல் தார்கள்
மிஸ்டர் ஜஸ்டிஸ் டட்பால்	V
மிஸ்டர் ஜஸ்டிஸ் ரய்வ்ஸ்	சக்கரவர்த்தி. எதிர்மனுதார்.

8. [இந்தியன் பெனல் கோடு.]

ஒருவன் உடன் கட்டை யேறுவதற்கு வேண்டியதைச் சேகரித்துக்கொடுப்பதும், அதைத் தடை செய்யாதிருப்பதும் குற்றமாகுமென்பது.

மைனுபுரி ஜில்லா ஜாராவி என்ற வோர் கிராமத்தில் ரும்லால் என்ற பிராமணன் அதிக சீக்காக விருந்து ஜூன்மாதம் 2உ பொழுது விடியுஞ் சமயம் இறந்து போனார். அவருக்கு ஜேதேவி யென்ற பாலிய மனைவியிருந்தாள். அவளுக்கு ஒரு கைக்குழந்தையு மிருந்தது. இறந்தவருக்கு டாட்ரூஜ் என்ற சிற்றப்பனும் ரும்தயால் என்ற சிற்றப்பன் மகனு மிருந்தார்கள். இந்த மனைவி ஜேதேவி தன் புருஷனுடன் தானுடன்கட்டை யேறத் தீர்மானித்திருப்பதாகச் சொன்னாள். அவள் குடும்பத்திலுள்ள ஆண்பிள்ளைகளும், அயலார்களும் அவ்விதம் உடன் கட்டையேறக் கூடாதெனத் தடுத்துச் சொன்னார்கள். அவள் கேட்காமல் மெத்த பிடிவாதஞ் செய்தாள். இதனால் இவள் சொல்லும் விஷயத்தைப்பற்றி போலீசாருக்குத் தெரிவித்தார்கள். அந்தக் கிராமத்துக்கும் போ

லீஸ் ஸ்டேஷனுக்கும் 8 மயில் தூரமிருக்கிறது. அன்று காலையில் மழை பெய்தது. பகல் 9-மணிக்குப் பிரேதத்தைச் சுடுகாட்டுக்குக் கொண்டுபோக வேண்டுமென ஜேதேவி சொன்னதின் பேரில் மேலே சொன்ன டாட்ரூஜ், ரும்தயால், இருவருடன் கங்குவார், அதார்சிங் இந்த நால்வரும் பாடைதூக்கிப்போனார்கள். சோட் என்பவன் அந்தப்பாடையின் பின்னாற் சென்றான். இந்த ஜேதேவியுங் கூடவே சென்றாள். இவ்விதம் உடன் கட்டை யேறப் போகும் விபரம் அயல் கிராமத்தார்களுக்குத் தெரிந்ததின் பேரில் இதைப்பார்க்க 1500 முதல் 2000 ஜனங்கள் வரையில் கூடினார்கள். சுடுகாட்டுக்கு வந்தவுடன் பிரேதந் தகனஞ் செய்வதற்கு ஒருஇடத்தைக்குறிப்பிட்டு அதில் சிதையடுக்கும்படி சொன்னாள். பிறகு வரட்டி சேகரித்தார்கள். ரும்தயால் டாட்ரூஜ் இவர்கள் சிதை யடுக்கினார்கள். மற்றமூவரும் அதற்கு வேண்டிய சாமான்களை யெடுத்துக்கொடுத்தார்கள். இதன் பிறகு முன் சொன்ன இருவரும் பிரேதத்தைத்தூக்கி அந்தச் சிதையில் வைத்தார்கள். இதன் பிறகு ஜேதேவி அந்தப்பிரேதத்தை ஏழுதரம் சுற்றி வந்து அந்தச் சிதையிலேறியுட்கார்ந்தாள். அந்தப் பிரேதத்தின் சிரசைத் தன் மடியிற்றூக்கி வைத்துக்கொண்டாள். பிறகு தான் தரித்திருந்த ஆபரணங்களை யெல்லாங் கழட்டி சோடி, டாட்ரூஜ் இவர்கள் பிடித்துக்கொண்டிருந்த துணியிலெறிந்தாள். இதன் பிறகு நெய் வேண்டுமெனக்கேட்டாள். டாட்ரூஜ் ஒரு லோட்டா நெய் கொடுத்தார். அந்த நெய்யைச் சிதையிலும் தன் திரேகத்திலும் ஊற்றிக்கொண்டாள். பின்னும் ஜாஸ்தி நெய் வேண்டுமெனக் கேட்க ரும்தயால் கொண்டு வந்து கொடுத்தார். அதையும் தன் திரேகத்திலும் சிதையிலு மூற்றிக்கொண்டாள். பிறகு ரும்தயாலும் நெய்யை அவள் பேரிலும் சிதையிலும் ஊற்றினார். சிதை பற்றிக்கொண்டது; யார் நெருப்பு வைத்தார்கள் என்பதைப்பற்றி சாக்ஷிகள் ருஜுவாச்சொல்லவில்லை. சில நேரத்துக்கெல்லாம் இந்த பிரேதமும் ஸ்திரீயுமெரிந்து விட்டார்கள்.

போலீஸ் அந்த விடத்துக்குப் பகல் 3-மணிக்கு வந்து சேர்ந்தார்கள். இவர்கள் பார்க்கையில் சாம்பலும் எரிந்த எலும்புகளுமிருந்தன. சவுக்கிதார் ஒருவனும் அவ்விஷயத்தைப் பார்த்திருந்தான். இது விஷயத்தைப்பற்றி போலீசார் நடவடிக்கைகள் நடத்தியதில் மேலேசொன்ன ஐவரும் தற்கொலை செய்து கொண்

டதற்கு உடந்தையாக விருந்ததாக இ. பி. கோடு 306-வது செக்ஷன்படி அவர்கள் பேரில் குற்றஞ்சாட்டப்பட்டு செஷ்ஷன் ஜட்ஜியால் ரும்தயால் டாட்ருஜ் இருவரும் இரண்டு வருட கடுங்காவல் தண்டனையும், மற்ற மூவரும் 1½-வருட கடுங்காவல் தண்டனையும் விதிக்கப் பெற்றார்கள். இதைப் பற்றி ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்ததில் செஷ்ஷன் ஜட்ஜி விதித்த தண்டனையை யேன் ஜாஸ்தி செய்யக்கூடா தென்பதற்குத் தகுந்த காரணங்களிருந்தால் தெரிவிக்கும்படி இந்த எதிரிகளுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டது. இந்த அப்பீல் ரெவிஷன் இந்த இரண்டு விசாரணைகளும் ஏக காலத்தில் நடந்தன.

இந்த ரும்தயாலும் டாட்ருஜ் இருவரும் இந்த ஸ்திரீ உடன் கட்டை யேறக்கூடாதென பலவிதமாக தடுத்துக் கேட்டுக் கொண்டதாக பிராஸிகியூஷன் தீர்ப்பு சாக்ஷிகள் ருஜு சொல்லுகிறார்கள். எல்லாந் தயாரான வுடனே இந்த ஸ்திரீ நெருப்பு கேட்டதாகவும் ரும்தயாலும் டாட்ருஜும் நெருப்புக்கொடுக்கமாட்டோமென்றும் அவள் பதிவிரதையாக விருக்கும் பட்சத்தில் அவளே அந்த நெருப்பை யுண்டுபண்ணிக் கொள்ளலாமென்றும், சொன்னதாகவும், அதன்பேரில் அவள் அந்தப் பிரேதத்தின் காதுடன் சில வார்த்தைகள் முணுமுணுத்துச் சொல்லிவிட்டு தன்னுடைய இரண்டு கைகளையும நீட்டிக்கொண்டு ஸ்வாமியைப் பிராத்தித்ததாகவும் உடனே சிதை பற்றிக்கொண் டெரிந்ததாகவும் ருஜுச் சொல்லுகிறார்கள். அன்று காலையில் இவள் தன் கைகளிரண்டிலும் சூடத்தைக் கொளுத்தி யெரியச் செய்ததாகவும், இவளையவமதித்து பேசிய ஒருவனை யிவள் தனது பார்வையால் பயித்தியங் கொள்ளும்படி செய்துவிட்டதாகவும், பின்பு அவனை நல்ல ஸ்திதியிலாக்கி விட்டதாகவும், காலை 9-மணிக்கு மழை நின்றுவிடச் செய்துவிட்டதாகவும் ருஜுப்பிக்கப் பட்டிருக்கிறது. இவள் உடன் கட்டை யேறுவதை தடைசெய்கிறவர்களை இவள் சபித்து அவர்களை எரிந்துவிடச் செய்வதாக அவள்பயமுறுத்தினதாக எதிரிகள் சொல்லுகிறார்கள். இந்த சாக்ஷிகள் எதிரிகளுக்கு அனுகூலமானவர்கள். நெருப்பு வைத்தது இன்னாரென்று சொல்லக்கூடாதென இவர்களுக்குள் ஒருவித கட்டுப்பாடுகள் செய்து கொண்டிருக்கிறார்கள்; தெய்வசக்தி யெனச் சொல்வதெல்லாம் கற்பனை; தானே நெருப்புப்பற்றிக்கொண்டதென்று சொல்வது நம்பு

வதற்கு அருகமற்றது. இந்த நெருப்பு இவளே வைத்துக்கொண்டிருக்கவேண்டுமென்றும், அல்லது எதிரிகள்ரும்தயால் டாட்ருஜ் இவ்விருவருஞ் சேர்ந்தாவது இவ்விருவரி லொருவராவது வைத்திருக்க வேண்டுமென்றும்இருக்கப்பட்டவிஷயங்களினால் சந்தேகமறத் தெரிகிறது. இப்போதேற்பட்டிருக்கும் ருஜுக்களைக் கொண்டு, எதிரிகள் பேரில் உடந்தைக்குற்றஞ் சாட்டக்கூடாதென கக்ஷியாடுகிறார்கள். போலீசாருக்குச் சொல்லி யனுப்பியவர்கள் போலீசார் வருகிறவரையில் தடைசெய்திருக்க வேண்டியது மெத்த அவசியம். இந்த ஸ்திரீ தன் புருஷனுடன் எரிந்துவிடத் துணிந்து விட்டாளென்ற விபரம் நன்றாகத் தெரிந்து அவள் தற்கொலை செய்துகொள்வதற்கு வேண்டிய சாமான்களெல்லாம் சேகரித்துக் கொடுத்திருக்கிறார்கள். அவள் நெருப்பு வைத்துக் கொள்வதையாவது, நெருப்புங் குச்சி யெடுத்துக் கொளுத்துவதையாவது தடை செய்ய எவ்வித பிரயத்தனமுஞ் செய்ததாகச் சொல்லவில்லை. தற்கொலை செய்து கொள்வதைத் தடைசெய்யாமல் கொளுத்திக் கொள்வதை சீக்கிரப்படுத்திவிட்டார்கள். இவர்களிடத்தில் நல்லெண்ண மிருந்தால் காலதாமதப் படுத்தியிருக்கலாம். இந்த எதிரிகள் இவளை முதலிற் றடுத்தது வுண்மையாக விருந்தாலும் பிற்பாடு இவளிஷ்டப்படியே நடத்த இடங்கொடுத்ததுமன்றி இவளுடைய செய்கைக்கு வுடந்தையாகவு மிருந்திருக்கிறார்கள். ரும்தயால் டாட்ருஜ் இவ்விருவருக்கும் விதித்த தண்டனை மிகவும் சொற்பமானதால் அவர்களுக்கு தகுந்த தண்டனை விதிக்காவிட்டால் இவ்வித கெடுதிகள் இனியும் நடக்க ஹேதுவாகும். அதனாலிவர்களுக்கு 4 வருட வீதம் கடுங்காவல் தண்டனை விதிக்கிறோம். மற்ற எதிரிகளுக்கு விதித்த தண்டனையை யுறுதி செய்திருக்கிறோம்.

21. Indian Cases. 682

அலகபாத் ஹைகோர்ட்.

1913 ஹுலத்திய கிரிமனல் அப்பீல் நம்பர் 401.

தீர்ப்பு 17—7—13.

ஜட்ஜிகள்.	
மிஸ்டர் ஜஸ்டிஸ் டட்பால் அவர்கள்	சக்கரவர்த்தி அவர்கள் அ. வாதி
மிஸ்டர் ஜஸ்டிஸ் ரய்வ்ஸ் அவர்கள்	V
	ரும் நெவாஸ். அ. பிரதிவாதி

9 [இந்தியன் பெனல் கோடு]

மூவர் தடிக் கழிகள் வைத்துக்கொண் டிருந்ததாகவும், அவர்களிருவர் ஒருவனையந்தக் கழிகளாலடித்ததாகவும் அவ்வித மடித்த தினமே அவனிறந்துவிட்டதாகவும் ருஜுவேற்பட்டால் அம்மூவரும் கொலைக் குற்றத்துக்கு தெண்டிக்கப்பட வேண்டு மென்பது.

ரூம்பரோஸ் என்பவன் ஜாலோடியோ என்பவனுடைய பெண்ணிடம் கள்ளப் புணர்ச்சி செய்ய வேண்டியதற்காக ஜலோடியோ வீட்டிற்குள் பிரவேசித்தான். வீட்டிலுள்ளவர்கள் கூச்சல் போட்டவுடன் பக்கத்து வீட்டுக் காரர்களோடி வந்து பரோஸைப் பிடித்து அவனை யடித்தார்கள். அவ்விதம் அடித்தவர்களில் ரூமஸாரன் என்றவனுமொருவன். இந்த ரூம்பரோஸ் பேரில் நடவடிக்கை நடத்தப்பட்டதில் இவன் நாலுவாரங் கடுங்காவல் தெண்டனை யடைந்தான். இவன் ஜனவரி மாதம் ஜெயிலினின்றும் விடுதலையாகி வந்தான். மேலே சொன்ன ரூம்ஸாரன் என்பவன் ஒரு கிராமத்தினின்றும் இந்த ரூம்பரோஸும் அவன் சகோதரர்கள் ரூம்பிலால் ரூம் நியுவாஸ் இவர்கள் வசித்த கிராமத்தின் வழியாக 1913 வருஷம் ஜனவரி மாதம் 24-ந் தேதி வரும்போது இந்த ரூம்பரோஸும் அவனுடைய சகோதரர்களிருவரும் தடிக் கழிகள் வைத்துக் கொண்டு இந்த ரூம்ஸாரனை யெதிர்த்தார்கள். அவனை யடித்துக் கீழே தள்ளியபிறகும் தடிக் கழியாலடித்துக் கொண்டிருந்தார்கள் சில சாக்ஷிகள் அவ்விடம் வந்து விட்டவுடனே விட்டு விட்டு ஓடிவிட்டார்கள். இந்த ரூம்ஸாரனுடைய பெந்துக்களுக்கு இது விபரந் தெரிந்தவுடன் இவனைத் தூக்கிக் கொண்டு போனார்கள். இவனுடைய சகோதரன் ரூம்கிஷோர். இவ்விதம் அடிபட்ட விபரத்தையும் சாக்ஷிகள் நேரிற் பார்த்ததையும் உடனே போலீசாரிடம்போய் அறிவித்தார். ரூம்ஸாரன் அந்த அடிபட்டகாயங்களினாலேயே அன்றிரவே இறந்துவிட்டான். இந்த ரூம்பரோஸ் முதலிய மூன்று சகோதரர்கள் பேரிலும் நடவடிக்கைகள் நடத்தப்பட்டதில் இந்த ரூம் பரோஸ், ரூம்பிலால் இந்தஇருவர் பேரிலும் இ. பி. கோடு 304-வது செக்ஷன்படி குற்றஞ்சாட்டி 10 வருடங் கடுங்காவல் தண்டனை விதித்தார்கள். ரூம்நிவாஸ் பேரில் குற்றமில்லை யென்று அவனை விடுதலை செய்து விட்டார்கள். ரூம்பரோஸ் தன்னை தண்டித்தது பிசகென்பதாக இந்தக் கோர்ட்டில் அப்பீல் செய்தார். இந்த நம்பர் கட்டை கோர்ட்டார் தரு

வித்துப் பார்வை யிட்டதில் இந்த ரூம்பரோஸும், ரூம்பிலால் இருவரையுங் கொலைக் குற்றத்துக்கு ஏன் தண்டிக்கக் கூடாது என்பதற்கு காரணமேதேனு மிருந்தால் தெரிவிக்கும்படி இவர்களுக்கு நோட்டீஸ் அனுப்பிவிசாரித்து இவ்விருவருக்கும் மரணதண்டனை விதித்து விட்டார்கள். அப்போது ரூம் நிவாஸ் என்பவன் குற்றவாளியா இல்லையா வென்பதைப்பற்றி கவனிக்கவேயில்லை இவனை செஷன்ஜட்ஜி விடுதலைசெய்தது பிசகென்பதாக லோக்கல் கவர்ண்மெண்டார், இந்தக் கோர்ட்டில் அப்பீல் செய்கிறார்கள். இறந்தவனைக் கொலை செய்யவேண்டுமென்ற முன்யோஜனை யிருந்ததில்லையென்றும், இறந்தவனை நேரிற் கண்டவுடன் திடீரென தாக்கியதாகவும், இந்த ரூமநிவாஸ் இந்தக் குற்றம் நடந்த விஷயத்தில்பிரதானமானவ னல்லவென்றும் இவனுடைய வக்கீல் கக்ஷியாடுகிறார். இறந்தவன் ஒரு அடியினாலிறக்கவில்லை, பல அடிகள் மண்டையிலடித்ததினாலிறந்திருக்கின்றான். தடிக்கழிகொண்டு அடித்ததினால் அதிக கொடுந்துன்பமுண்டாகு மென்பது இவர்களுக்கு நன்றாகத் தெரிந்த விஷயம். அத்துன்பத்தினால் மரணம் சம்பவிக்கக் கூடியது வெகுசுலபமானது. இவ்விதந்தாக்கியது ஏற்கனவே யேற்பட்ட விரோதத்தின் பேரில் நடந்தது. மிருகத்தன்மையாகவும் மூர்ட்டுத்தனமாகவும் அடித்திருக்கிறார்கள். இந்த ரூம் நிவாஸும் தடிக்கழியுடனிருந்து இவனையடித்ததாகவே ருஜுவாயிருக்கிறது. இதனாலிவனுங் கொலைக்குற்றஞ் செய்தவனாகிறான். இந்த எதிரி 20வயதுள்ள சிறுபையனாயிருக்கிறான். இவன் தன்னுடைய சகோதரர்களின் சொற்படி நடந்திருக்கிறான். கொலைக்குற்றத்துக்கேற்பட்ட இருவித தண்டனைகளில் குறைந்த தண்டனை விதிக்கிறோம். இவனுக்கு இ. பி. கோடு 302-வது செக்ஷன்படி ஆயுள் பரியந்தம் தீபாந்தர தண்டனை விதிக்கிறோம்.

21 Indian Cases 663.

பஞ்சாப் சீப் கோர்ட்

1913 [illegible] கிரிமினல் அப்பீல் நம்பர் 245

தீர்ப்பு 28—5—13.

ஜட்ஜி
மிஸ்டர் ஜஸ்டிஸ் [illegible]
அவர்கள்

மேரூ. எதிரி அப்பீல்தார்கள்
V.
சக்கரவர்த்தி. வாதி. எதிர் மனுதார்

10. [இந்தியன் பெனல் கோடு]

திருட்டுச் சொத்து புதைக்கப்பட்டதை காட்டுகிறவன் இ. பி. கோடு 411-வது செக்ஷன்படி குற்றவாளி யெனத் தீர்மானிக்கக் கூடாதென்பது.

எதிரி பேரில் குற்றஞ் சுமத்திய தெல்லாம் இவன், போலீசார் வந்தவுடன் கிராம லம்பார்டிதார்கள் மூவரை யழைத்துக் கொண்டு போய் சவக்குழி முற்றத்தில் புதைக்கப் பட்டிருந்த திருட்டுச் சொத்துகளில் சில சாமான்களை காட்டியது. இவ்வித ருஜூ ஒருவனை இ. பி. கோடு 411-வது செக்ஷன்படி தண்டிக்கப் போதுமானதல்ல வென்று இ. லா. ரி. 17 அலகபாத் 576, தீர்மான மேற்பட்டிருக்கிறது. அதனால் அப்பீலை யங்கீகரித்து எதிரியை விடுதலை செய்கிறோம்.

21 Indian Cases 474.

பஞ்சாப் சீவ் கோர்ட்.

1910 ளூலத்திய கிரிமனல் அப்பீல் நம்பர் 534.

தீர்ப்பு 10—4—13.

ஜட்ஜிகள்.	
மிஸ்டர் ஜஸ்டிஸ் ராட்டிங்கன் அவர்கள்	பட்டா எதிரி அப்பீல்தார்
மிஸ்டர் ஜஸ்டிஸ் படன் அவர்கள்	V
	சக்கரவர்த்தி வாதி

11. [இந்தியன் பெனல் கோடு]

ஓடி யொளிவதினால் குற்றவாளி யென்று சொல்லக்கூடாதென்பதும், கொள்ளைச்சம்பந்தமான கேசில் தானும் மற்றவர்களுஞ் சம்பந்தப்பட்டதாக வொப்புக்கொள்ளுதலும் திருட்டுச் சொத்துக்களில் சிலதை ஆஜர் செய்வதும் ஒருவன் குற்றவாளி யென்று தீர்மானிக்க போதுமானதல்ல வென்பதும்.

1910 வருஷம் மார்ச்சு மாதம் 1-ந் தேதி நடந்த கொள்ளை விஷயமாக 5-பேர் குற்றவாளிகளாக சார்ஜ் செய்யப்பட்டார்கள். செஷன் ஜட்ஜி மூன்று பெயர்களை விடுதலை செய்து பாக்கி இரண்டு பெயர்களுக்கு மட்டில் ஆயுள் பரியந்தம் தீபாந்திர தண்டனை விதித்தார்கள். இவ்விதந் தண்டனை யடைந்த பட்டா, முகமது இவர்கள் அப்பீல் செய்தார்கள். அதன் பிறகு பட்டா என்பவன் ஜெயிலினின்றும் ஓடிப்போய் விட்டான். முகமது குற்றவாளியல்ல வென்று அவனை ஹைகோர்ட்டார் விடுதலை செய்து விட்டார்கள். பட்டா என்பவன் நேரில் ஆஜரானாலன்றி அவனுடைய அப்பீலைப் பற்றி தீர்மானிப்பதில்லை யெனச் சொல்லி விட்டார்கள். இவனை மறுபடியும் பிடித்து ஆஜர் செய்வித்ததின் பேரில் இந்த அப்பீல் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த பட்டா ஓடிப்போனதைக் கண்டு இவன் குற்றவாளி யென்று சொல்லக்கூடாது. இவன் செய்திருக்கும் அப்பீல் எவ்விதமாகுமோ வென்று பயத்தினாலோடி யிருக்கலாம். இந்தப் பட்டாவால் தாகல் செய்யப்பட்ட ஒரு நகை தடைய ஜாப்தாவிற் கண்ட நகைக்கு வொற்றுமையாக விருந்தது. போலீசார் வந்த பின்பு பிராஸிகியூஷன் திரப்பு 7- 8. சாக்ஷிகள் முன்பாக இந்த எதிரி ஒரு தடயத்தை ஒரு நிலத்தினின்று எடுத்துவந்து ஒப்புக் கொண்டதாக ருஜூப்பிக்கப் பட்டிருக்கிறது. இந்த ருஜூக்கள் திருப்திகரமான தென்றாவது, போதுமான தென்றாவது எங்களுக்குத் தோற்றவில்லை. இதனால் இவன் குற்றவாளி யென்று சொல்லக்கூடாது. இதனாலிவனுடைய அப்பீலை யங்கீகரித்து கீழ்கோர்ட்டார் விதித்த தண்டனையை ரத்து செய்து இவனை விடுதலை செய்கிறோம்.

21 Indian Cases. 473.

பஞ்சாப் சீவ் கோர்ட்.

1913 ளூலத்திய கிரிமனல் ரெவிஷன் மனு நம்பர் 807.

தீர்ப்பு 27—5—13.

ஜட்ஜி	
	பன்வரிலால் எதிரி, மனுதாரன்
	V
மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்காட் ஸ்மித் அவர்கள்	வாதிஅலிமுகமதுக்காக சக்கரவர்த்தி அவர்கள், எதிர் மனுதார்

12. [இந்தியன் பெனல் கோடு]

ஒரு ஸ்திரீ யொருவன் பெண்ஜாதி யெனத் தெரிந்து அவளைத் தானொரு வீடு திட்டஞ் செய்து அதிலவளைக் குடியிருக்கச் செய்வானாகில் அவன் இ. பி. கோடு 498-வது செக்ஷன்படி தெண்டிக்கப் படலாமென்பது.

மனுதார் பான்ஸிலால் ஜெய்னுப் என்ற விவாகமான பெண்ணை தன் ஸ்வாதீனத்தில் வைத்திருந்ததாக அவன் இ. பி. கோடு 498-வது செக்ஷன்படி தெண்டிக்கப்பட்டான். இது அப்பீலிலும் உறுதி செய்யப்பட்டபடியால் இந்தக் கோர்ட்டில் கி. பு. கோடு 439-வது செக்ஷன்படி ரெவிஷன் மனு கொடுக்கப்பட்டிருக்கிறது.

இவளுக்கு ஆசை வார்த்தை சொல்லி அழைத்துப்போன விஷயம் ருஜுப்பிக்கப்படவில்லை. மனுதார் திட்டஞ் செய்து கொடுத்த வீட்டில் இவள் இந்த மனுதாருடைய சம்ரக்ஷணையில் இவனுடைய வைப்பாட்டியாக இருந்து வருவதாக ருஜுப்பிக்கப் பட்டிருக்கிறது. இவன் வாதியின் மனைவி யென்று இவனுக்குத் தெரியுமென்ற விஷயமும் ருஜுப்பிக்கப் பட்டிருக்கிறது. மனுதாருடைய நடவடிக்கை இ. பி. கோடு 498-வது கெக்ஷன்படி இந்த ஸ்திரீயை தன் ஸ்வாதீனத்தில் வைத்துக் கொண்டதாகுமா வென்பதுதான் கேள்வி. மனுதார் இவளுக்கு வீடு திட்டஞ் செய்து கொடுத்ததே இவள் தன் புருஷனை விட்டு நீங்கும்படி தூண்டுதல் செய்ததாகிறது. இவனுடைய நடத்தையே இந்த செக்ஷன்படி இவனை குற்றவாளியாக்கிவிடப் போதுமான தென்று அபிப்பிராயப்படுகிறோம். இவனுக்கு விதித்த தண்டனையைப்பற்றின வரையில் கீழ் கோர்ட்டார் செய்ததை மாற்றி ரூபா 250 அபராதமாவது அல்லது 3-மாதக் கடுங்காவல் தண்டனையாவது விதிக்கிறோம்.

21. Indian Cases 467.

சென்னை ஹைகோர்ட்

1912 ஹூத்திய 2-வது அபீல் நம்பர் 602.

தீர்ப்பு 5—11—13.

ஜட்ஜிகள்.	சுப்பய்யா முதலியார், வாதி. அப்பீல்தாரன்
ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள் ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர் அவர்கள்	V துளசி முதலியார் ஆ. அ. பிரதிவாதிகள்.

24. [இந்து லா]

தகப்பன் செய்த பராதீனத்தை பிள்ளை ரத்து செய்ய பாத்தியமும், எவ்விதமான பரிகாரங் கிடைக்கக் கூடியது என்பதும், அன்னிய நாட்டிலுள்ள சோத்தின் பாரதீனமும்.

ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள் :—

இந்த தாவா நாகபட்டணத்துக்கு சமீபமாகவுள்ள ஓர் கிராமத்திலுள்ள சொத்துக்களைப் பற்றியது. வாதி 1888 வருஷத்தில் பிறந்தார்; அப்போது வாதிக்கும் அவர் தகப்பனுக்கும் இங்கிலீஷ் இலாகாவில் ரூபா 800-பெருமான முள்ள சொத்தும் பிரான்ஸிலாகா காரைக்காலில் ரூபா 4000—பொருமான முள்ள சொத்துக்களு மிருந்தன. வாதி பிறந்தவுடன் இச் சொத்துக்களுக்கு வாதியும் அவர் தகப்பனும் உடன் பங்காளிகளா யிருக்கிறார்கள். வாதியின் தகப்பன் முதல் பிரதிவாதி; வாதி பிறப்பதற்கு நீண்ட காலத்துக்கு முந்தி 1881 வருஷத்தில் தாவா சொத்தை பெந்தகமாக வைத்து கடன் வாங்கியிருந்தார். அந்த முதற் பிரதிவாதி தாவா சொத்தை 1891 வருஷத்தில் விற்றதில் அந்த பெந்தகக் கடன் ரூபா 350-போக பாக்கித் தொகை ரூபா 450 ரொக்கமாக வாங்கிக் கொண்டார். இத் தொகை குடும்ப அவசியச் செலவுகளுக்கு வாங்கப்பட்ட தென்றாவது, பூர்வ கடனை தீர்ப்பதற்காக வாங்கப்பட்ட தென்றாவது ருஜுப்பிக்கப்பட வில்லை. தாவா சொத்தை சாசனம் பெற்ற 4-ம் பிரதிவாதி தகப்பனுக்கு முதல் பிரதிவாதி ஒரு ஜாமீன் பத்திரம் எழுதிக் கொடுத்திருக்கிறார். அதில் இந்த வாதி மைனர் நீங்கி தாவா சொத்து விஷயமாக வழக்கிடும்பட்சத்தில் அந்த நஷ்டத்தை முதற் பிரதிவாதி கொடுக்கவேண்டிய தென்றும், இது அந்த ஜாமீன் பத்திர தேதி முதல் 18 - வருஷம் வரையில் அதாவது 1909 வருஷம் அக்டோபர் மாதம் வரையில் ஊர்ஜிதத்திலிருக்க வேண்டிய தென்றும், அதற்குப் பின் செல்லத் தக்கதில்லை யென்றுங் கண்டிருக்கிறது. வாதி தான் மேஜராகி 3 வருடங்களுக்குள் அதாவது 1909 வருஷம் ஆகஸ்டு மாதம் 25-ந் தேதி தாவா சாசன சொத்தில் தன்வீதம் பாதி கிடைக்க வேண்டுமென வழக்கிட்டார்.

1897 வருஷத்தில் வாதிக்கு 9-வயதா யிருக்கும்போது பிரான்ஸ் இலாகாவிலிருந்த குடும்ப சொத்துக்களை முதற் பிரதிவாதி இந்த வாதிக்கு 4 அடையாள இனம் சாசனஞ் செய்து கொடுத்து அதை வாதிக்காக வாதியின் தாயார் பெற்றுக்கொண்டிருக்கிறாள். கீழ் அப்பீல் கோர்ட்டார் அடியிற் கண்ட காரணங்களுக்காக வாதியின் வழக்கைத் தள்ளுபடி செய்து விட்டார்கள்

(a) முதல் பிரதிவாதி தனக்கிருந்த எல்லா சொத்துக்களையும் வாதிக்கு இனாம் சாசனஞ் செய்து கொடுத்துவிட்டு அவரிடம் சாசனம் பெற்றவரின் குமாரன் 4-ம் பிரதிவாதியையும், அந்த 4-ம் பிரதிவாதியிடம் வாங்கிய 5-ம் பிரதிவாதியையும் மோசஞ் செய்யவேண்டியதி னிமித்தம் வாதியைக் கொண்டு இந்த வழக்கிடச் செய்திருக்கிறார்.

(b) தாவா 4-அடையாள இனாம் சாசன மேற்படாவிட்டால் வாதியும் 1-ம் பிரதிவாதியும் பாகப்பிரிவினை செய்துகொண்டால், இந்த இனாம் சாசன சொத்தில் முதல் பிரதிவாதியின் பாகத்துக்குக் கிடைக்கக்கூடிய சொத்தினின்றும் 4 - 5 பிரதிவாதிகள் தங்கள் பரிகாரத்தைத் தேடிக் கொண்டிருப்பார்கள்.

(c) ஜாமீன் பத்திரத்தில் 18-வருட கெடு நிபந்தனை யேற்பட்டிருப்பதில் அது இந்த வழக்கு மத்தியில் காலாவதியாகப் போய்விட்டபடியால், அந்த பத்திரத்தினால் எவ்வித பிரயோஜனமு மில்லை.

வாதியின் தகப்பன் குற்றமான எண்ணத்தினால் தற்போது வழங்கி வரும் இந்து லாப்படி வாதிக்கு கிடைக்கக்கூடிய பாத்தியதையை வாதி இழந்துவிட நியாயமில்லை. வாதி மோச எண்ணத்துடன் இனாம் சாசனம் பெற்றதாக சப் ஜட்ஜி சொல்லும் இரண்டாவது காரணம் சரியான தாகவில்லை. வாதிக்கு ஒன்பது வயதாக விருக்கும்போது பிரான்ஸ் இலாகாவிலுள்ள சொத்து பாரதீனஞ் செய்யப்பட்டிருக்கிறது. இதனால் மைனர் பேரில் மோசக் குற்றஞ் சாட்டக்கூடாது. ஜாமீன் பத்திரம் பிரயோஜன மற்றுப் போய்விட்ட தென்பது மூன்றாவது காரணம். இதனால் வாதி தன்னுடைய பாத்தியதையை இழந்துவிட எவ்வித நியாயமுமில்லை. 4-ம் பிரதிவாதியின் தகப்பன் அலக்ஷியமாக 18-வருடக் கெடுக் கொண்டு ஜாமீன் பத்திரம் வாங்கியது அவர் பேரிற் பிசகு. மேற்சொன்னபடி மூன்றுவித காரணங்களும் பிரயோஜன மற்றுப் போய்விட்டாலும், அப்பீல் பிரதிவாதிகளின் வக்கீல் அடியிற்கண்ட புதிய ஆக்ஷேபனைகள் செய்கிறார்.

(1) வாதி சொல்லுங் கட்சிப்படி தாவா சாசனத்துக்கு வாதியின் வீதம்பாதிக்கு ரூபா400பிரதிபிரயோஜனமில்லையென்று வைத்துக். கொள்ளுவோம். முதற் பிரதிவாதி ரூபா 450 சாசன

காலத்தில் ரொக்கம் பெற்றுக்கொண்டிருப்பதால் பிரதிபிரயோஜனமில்லை யென்று சொல்லுகிற ரூபா 400 யும் முதல் பிரதிவாதி 4-ம் பிரதிவாதிக்குத் திருப்பிக் கொடுக்கக் கடமைப் பட்டிருக்கிறார். இது பூர்வீக, கடனாகையால் வாதி இந்தக் கடனைக் கொடுக்கக் கடமைப்பட்டவராகிறார்.

(2) பூர்வீகக் கடன் ரூபா 350 இருந்திருப்பதால் அந்தத் தொகைக்கும் மற்றும் ரூபா 50-க்கும் வாதியின் வீதம் பாதி சொத்து விற்கப்பட நியாயமிருப்பதால் அந்தப்படி விற்கப்பட்டிருக்கிறது. அதனால் வாதியின் தாவா செல்லத்தகுந்ததல்ல.

(3) ஒரு விதந்து தன் புருஷனுடைய கடனை நிவர்த்திப்பதற்கு அந்தக் கடன் எவ்வளவோ அதற்குத் தகுந்த சொத்தை மட்டில் விற்க வேண்டுமென்ப தவசியமில்லை; ஜாஸ்தியான சொத்துக்களை ஜாஸ்தியான தொகைக்கு விற்கலாமென இந்துலாவிற் சொல்லப்பட்டிருப்பதனால் தகப்பன் தனக்குள்ள கடனுக்கு மேற்பட்டு பொருமான முள்ள சொத்துக்களை விற்க பாத்தியமுண்டு.

முதலாவது கக்ஷி பிரயோஜனமற்றது. வாதி தன் தகப்பன் செய்தக்கிரயம் பிரயோஜனமற்றதென்று வழக்கிட்டு அதனால் தாவா சாசனத்துக்கு பிரதிபிரயோஜனமில்லை யென்று ஏற்பட்டு அந்தத் தொகைக்கு முதல் பிரதிவாதி பேரில் பிந்தி வழக்கிடுவது பூர்வீக கடனல்ல. இரண்டாவது கக்ஷியுமப்படியே பிரயோஜன மற்றது. தகப்பன் முழு சொத்தையும் ரூ 800-க்கு விற்கும்போது அதை இரண்டு பாகமாகப்பிரித்து அதில் வாதியின் வீதம் பாதிக்கு மட்டில் பூர்வீக கடன் ரூ 350-யை வைத்தும் ரூ 50 வாங்கியும் சாசனஞ் செய்யவில்லை; இரண்டு பாகஸ்தர்களி லொருவர் குடும்பப் பொதுச் சொத்தை விற்கும்பட்சத்தில் பிரதிப் பிரயோஜனம் முழு சொத்துக்கு மேற்பட்டதென்றும், அச்சொத்தை விற்காத பாகஸ்தன் தன் பாகத்தை மீட்கவேண்டுமானால் அந்தச் சாசனத்துக்கு என்ன பிரதிப் பிரயோஜன மேற்பட்டிருக்கிறதோ அதில் இவன் வீதம் பாதியைக் கொடுத்து மீட்கவேண்டுமென்று நானும் ஜஸ்டிஸ் சுந்தரமய்யரவர்களுந் தீர்மானஞ் செய்திருக்கிறோம். (1912 M. W. N. 851). ஆகையால் பூர்வீகக்கடன் ரூ 350 வாதியின் வீதம் பாதி ரூ 175 தான் வாதி கொடுத்து தன் பாகத்தை மீட்கக் கடமைப்பட்டவர். அப்பீல் பிரதிவாதி சொல்லும் மற்றொருகக்ஷி தாவா கேசுக்கு ஒற்றுமையானதல்ல.

அந்த 1912௵த்திய 2-வது அப்பீல் 1429 நம்பரிற்கண்ட சாசனத் தொகையில் பெரும்பாகம் புருஷனுடைய கடன்களைத் தீர்க்க வேண்டியதற்காகவே யேற்பட்டிருக்கிறது. பிரிடிஷ் இந்தியாவுக்கு வெளியிலுள்ள சொத்துக்களைப்பற்றி பாகப் பிரிவினை செய்ய இவ்விந்தியா சட்டங்கள் இடங்கொடுக்கவில்லை. தாவா சொத்துக்கள் நல இளப்பஞ் சரிக்கட்டி சமபாக மாகப் பிரிவினை செய்யப்பட்டபின் பூர்வீகக்கடனில் வாதியின் வீதம் பாதி ரூபா 175 டிஸ்டிரிக்ட் முனிசீப் கோர்ட்டில் கட்டிவிட்டு வாதி தன் பாகத்தை வசப்படுத்திக் கொள்ளவேண்டியதாகத் தீர்மானிக்கிறேன்.

ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர் துரையவர்கள்:—தாவா பாக வழக்கில் அன்னிய நாட்டிலுள்ள குடும்பசொத்தைப்பற்றியும், விசாரித்து கீழ் அப்பீல் கோர்ட்டார் தீர்ப்பு செய்தது பிசகென்பதாக இ. லா. ரி- 25. பம்பாய் 597, 18 பம்பாய் 389 இந்த தீர்மானங்களை தன் கக்ஷிக்கு ஆதாரமாகக்காட்டி அப்பீல் வாதியின் வக்கீல் கக்ஷியாடுகிறார். பிரிடிஷ்இந்தியாவுக்கு வெளியேயுள்ள சொத்துக்களைப் பற்றி தீர்மானிக்க இந்தியா கோர்ட்டாருக்கு அதிகாரமில்லையென்பது சரியே; ஆனால் இது பிரசித்தமான I Ver Sen 443 இங்கிலீஷ் கேஸினால் சந்தேகத்துக்கிடமாயிருக்கிறது. பாரதீன மேற்பட்ட காலத்தில் குடும்பஸ்திதி எவ்விதமிருந்த தென்பதைபார்த்து பாக வழக்கு நடு நியாயப்படி தீர்மானிக்கப்பட வேண்டு மென்று இ. லா. ரி 25 சென்னை 690, 1911 M. W. N. 289 தீர்மானங்களேற்பட்டிருக்கின்றன. எனது அறிவிற் சிறந்த சகோதரர் எடுத்துச் சொல்லும் 1912 M. W. N. 851 ஒரு சகோதரன் மற்றொரு பாகஸ்தன் பேரிற்கொண்டு வந்த வழக்கு. இந்த கேஸின் சாராம்சங்களை யெல்லாங் கவனித்துப்பார்த்து சாசனம் பெற்றவருக்கும் வாதிக்குமுள்ள பொது நியாயங்களை யோஜிக்கும் போதுமோசக் கருத்துடன் வாதி வழக்கிட்டிருப்பதாக சப்ஜட்ஜி கண்டுபிடித்து வாதியின் வழக்கை தள்ளியிருப்பது சரியானதென்று அபிப்பிராயப்படுகிறேன். அதனால் இந்த 2-வது அப்பீலை செலவுடன் தள்ளுபடி செய்கிறேன்.

தீர்மானம்:—சி. பு. கோடு 98-வது செக்ஷன்படி இந்த 2-வது அப்பீல் செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

1914 M. W. N. 16.

அலகபாத் ஹைகோர்ட்.

1912-ம் வருஷத்திய முதலாவது அப்பீல் நம்பர் 215.

தீர்ப்பு

ஜட்ஜிகள் ஸர் ஹென்ரி ரிச்சர்ட்ஸ் Kt சீவ் ஜஸ்டிஸ்	ஜுகல் கிஷோர் ஆ. வாதிகள் அப்பீல் தார்கள்
	V
ஜஸ்டிஸ் ஸர் P. C. பனர்ஜி Kt.	கங்காசிங் ஆ. அ. பிரதிவாதிகள்.

25. [ஹிந்துலா.]

பெந்தக பத்திர வழக்கில் அவிபக்த இந்து பாகஸ்தர்கள் அனைவரும் கக்ஷிக்காரராகச் சேர்க்கப்படாவிட்டால் அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டு மென்பது.

1878௵ ஜுன்மாதம் 12௳ பிறந்த ஒரு பெந்தக பத்திரத்தின் பேரில் வாதிகள் வழக்கிட்டதில் பிரதிவாதிகள் பலவிதகக்ஷிகளாடியதுமன்றி தாவா பெந்தகக்கடன் தீர்ந்து விட்டதென்றும் தாவா பெந்தக சொத்தில் பாத்தியமுள்ள அவிபக்த பாகஸ்தன் டியோகிஷன் கக்ஷிக்காரராகச் சேர்க்கப்படவில்லை யென்றும், அதனால் வாதியின் தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றுங் கக்ஷியாடினார்கள். தாவா பெந்தக சொத்து 1986௵. செப்டம்பர் மாதம் 20௳ ஏலவிற்று முதல் செய்யப்பட்டு அதை யெதிர் கக்ஷியாடும் பிரதிவாதிகள் வாங்கியிருக்கிறார்கள். வாதிகள் நீண்டகாலமாக வழக்கிடாமலிருந்ததற்கும் பெருத்த தொகை வட்டியில் நஷ்டப்பட ஹேது வாயும் இருந்ததற்குக் காரணந்தெரியவில்லை. இந்த டியோகிஷன் அவிபக்த பாகஸ்தனென்றும், அவர் ஸ்வாதீனத்திலும் தாவா பெந்தக சொத்திருப்பதாகவும், அவரை கக்ஷிக்காரராகச் சேர்க்காதது பிசகென்றும், வாதிகளின் வாழ்க்கை கீழ்கோர்ட்டார் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். மானேஜிங் மெம்பர் பிரதிவாதியாகச் சேர்க்கப்பட்டால் அவர் மூலமாக மற்ற பாகஸ்தர்கள் தங்கள் பாத்தியங்களைக் கொண்டாடுகிறார்களென்று இ-லா.ரி- 34 சென்னை 549 தீர்மான மேற்பட்டிருப்பதிற் சந்தேகமில்லை. இந்தவழக்கில் மானேஜிங் மெம்பர் கக்ஷிக்காரராகச் சேர்க்கப்பட்டிருக்கிறார் என்பதை வாதி ருஜுப்பிக்கத்தவறி விட்டார். இந்த டியோகிஷன் குடும்ப மானேஜிங் மெம்பரென்று, நம்பத் தகுந்த காரணங்களிருக்கின்றன. வாதிகள் காலதாமதஞ் செய்யாமல் வழக்கிட்டிருப்பார்களானால் இந்தடியோகிஷன் கக்ஷிக்

காரனாக சேர்க்கப்படவேண்டுமென கக்ஷிசொன்னவுடனேகோர்ட்டார் அந்தப்படி அவரை கக்ஷிகாரராகச் சேர்க்க அனுமதிகொடுத்திருப்பார்கள். நீண்டகாலங் கழித்து வாதிகள் இந்த தாவா செய்திருப்பதினால் இந்த டியோகிஷனை கக்ஷிக்காரனாகச் சேர்ப்பதற்கு முந்தி அவர்பேரில் வழக்கிட காலாவதி தோஷமேற்பட்டுவிடுகிறது. ஆகையால் வாதிகளின் அப்பீலை செலவுடன் தள்ளுபடி செய்கிறோம்.

21 Indian cases 712.

சென்னை ஹைகோர்ட்.

1911 ஹுத்திய 2-வது அப்பீல் நம்பர் 355.

தீர்ப்பு. 30—8—12.

ஜட்ஜிகள்	
ஜஸ்டிஸ் சுந்தர மய்யரவர்கள் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள்.	D. ஸ்ரீனிவாசய்யங்கார் முதல் பிரதிவாதி அப்பீல்தாரன். V மைனர் திருவேங்கடத் தய்யங்காருக்கு கார்டியன் கிருஷ்ணசாமி அய்யங்காரும், மற்றொருவரும் (அ. பிரதிவாதிகள்).

[26. ஹிந்து லா.]

குடும்ப மானேஜரின் நடவடிக்கையினாலன்றி வேறெந்தக் காரணத்தினாலாவது அவிபக்த குடும்பத்திலுள்ள மைனர் ஒருவன் தனியேயிருந்துவரும் பட்சத்தில் அவனுக்கு குடும்ப சொத்தின் சென்ற வரும்படிகள் கிடைக்கத்தக்கதில்லை யென்பதும், குடும்ப ஐவேஜியினின்றும் உபநயனஞ்செய்து வைக்கவேண்டியது பெண்களை விவாகஞ் செய்து கொடுக்கவேண்டியதும் அவசிய மென்பதும், பிள்ளைகளின் கல்லியாணச் செலவு எத்தொகையினின்றுங் கொடுபட வேண்டு மென்பதும்.

குளித்தலை டிஸ்டிரிக்ட் முனிசிப் கோர்ட்டு 1907ஹுத்திய அசல் 351 நம்பரின் பேரில் திருச்சினாப்பள்ளி சப் கோர்ட்டு 1910 ஹுத்திய 52 நம்பர் அப்பீல் அதன் பேரில் இந்த கோர்ட்டில் 2-வது அப்பீல்,

தீர்ப்பு.

ஜஸ்டிஸ் சுந்திர மய்யரவர்கள்:— இது ஒரு இந்து மைனரால் கொண்டு வரப்பட்ட பாக வழக்கு. 1 பிரதிவாதி சக்களத்தாயாரின் மகன். 5-ம் பிரதிவாதி வாதியின் தாயார்; முதல் பிரதிவாதிக்கு சக்களத் தாயார். 6-ம் பிரதிவாதி வாதியின் மூத்த சகோதரி; 5-ம் பிரதிவாதியின் ஜீவனாம் சத்துக்கு வகைசெய்ய வேண்டுமென்றும், 6-ம் பிரதிவாதியின் சம்ரக்ஷணை விவாக முதலியன வற்றிற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டு மென்றும் அவர்கள் பிரதிவாதி வர்க்கத்திற் சேர்க்கப்பட் டிருக்கிறார்கள்.

வாதியின் தகப்பன் துரைசாமி அய்யங்கார் லைப் இன்ஷியூரன்ஸ் கம்பெனியில் போடப்பட்ட தொகை வசூலிக்கப்பட்டது. இத்தொகை வாதியின் மாற்றாந் தாயாருக்கும் அவள் பிள்ளைகளுக்குங் கொடுபடவேண்டியதாக பாலிஸி யேற்பட்டிருந்தது. இதிற் கண்ட மாற்றாந் தாயாரும் பிள்ளைகளி லொருவரும் இந்த துரைசாமி அய்யங்காரின் ஜீவதிசையிலேயே இறந்துவிட்டதால் அத்தொகை முழுவதும் முதல் பிரதிவாதி தனக்கு ஏகதேசத்தில் கிடைக்கவேண்டிய தென்றும் வாதிக்கு அதில் எவ்வித பாத்தியமில்லை யென்றும், அ - வாதியின் முதல் ஆக்ஷேபனை. இந்த லைப் இன்ஷியூரன்ஸ் கம்பெனியில் குடும்பப் பொதுத் தொகை போட்பட்டிருப்பதால் அத்தொகையில் வாதிக்கும் வீதமுண்டென்று கீழ்கோர்ட்டார்க ளிருவருந் தீர்மானித்துவிட்டார்கள். இந்தத் தீர்மானத்தில் நாம் பிரவேசிக்கத்தக்கதில்லை.

தாவாவுக்கு இரண்டு வருடங்களுக்கு முந்திய குடும்பசொத்தின் வரும்படிகளில் வாதியின் வீதங்கொடுபடவேண்டியதென்று கீழ்கோர்ட்டார் தீர்ப்பு செய்தது பிசகென்பது இரண்டாவது வாதம். வாதியும் அவன் தாயாரும் வீட்டைவிட்டு அப்புறப்படுத்தப்பட்டார்களென்றும், அதனால் வேறிடங்களிற் போய் வசிக்கும்படி நேர்ந்ததென்றும், அதனாலிந்த வரும்படிகள் கிடைக்க வேண்டுமென்றும், வாதியால் கேட்கப்பட் டிருக்கிறது. வீட்டைவிட்டு வெளிப்படுத்தப்பட்ட விஷயத்தை வாதி ருஜுப்பிக்கத் தவறிவிட்டதாக சப் ஜட்ஜி தீர்மானித்திருக்கிறார். ஆனால் பாக வழக்கில் வாதிக்கு வரும்படி கிடைக்கக்கூடிய தென்று தீர்ப்புசெய்திருக்கிறார்கள். இந்த அபிப்பிராயத்துக்கு எவ்வித

அஸ்திவாரமுமில்லை. வாதி மைனராகையால் குடும்ப மானேஜருக்கு அதிகாரங்கொடுக்க நியாயமில்லை. ஒரு குடும்ப மெம்பர் தனியே வசித்துவருங் காரணத்துக்காக முன்னூற் கிடைத்த வரும்படிகளில் பாகங்கேட்க நியாயமில்லை. குடும்ப மானேஜரால் குடும்பத்தினின்றும் விலக்கப்பட்ட மெம்பர்கள் அவ்விதம் விலக்கப்பட்டிருந்த காலத்திற் கிடைத்த வரும்படிகளுக்குக் கணக்குக்கேட்கலாம். குடும்ப மானேஜர் வரவு செலவுகளுக்கு கணக்குக் கொடுக்காத இனங்களில் மற்ற மெம்பர்கள் பாகங்கேட்கலாம். அவிபக்தர்களாய் ஒரே யோகக்ஷேமமாக விருந்து வருகிறவர்கள் மானேஜர் செய்யுங் காரியங்களில் கலந்து அல்லது சம்மதித்து நடந்து வருகிறவர்களாகிறார்கள். ஆகையால் இவர்கள் குடும்ப மானேஜரை கணக்குக் கேட்க நியாயமில்லை (5 பம்பாய் லா. ரி 354 தீர்மானத்தைப் பார்க்க); மைனர் வரும்படி கேட்க நியாயமில்லை. ஆகையால் சப் ஜட்ஜி இது விஷயமாகத் தீர்மானித்திருப்பதை ரத்து செய்திருக்கிறோம்.

வாதியின் உபநயன கலியாணச் செலவுக்கும், 6-ம் பிரதிவாதியின் விவாகச் செலவுக்கும் இந்த பாகவழக்கில் தொகையேற்படுத்தியிருப்பது கிரமமானதா வென்பது மூன்றாவது விவாதம். இவ்விஷயங்களைப்பற்றி 13 மெட்ராஸ் லா ஜர்னல் 75 தீர்மானத்தில் மிகத் தெளிவாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. இது விஷயமாக இருவித எதிர்கக்ஷிகள் சொல்லப்படுகின்றன.

(1) இந்தச் செலவுகளுக்கு உபயவாதிகளின் தகப்பனுடைய சுயார்ஜிதமும் தனிமையானவுமான தொகை யுபயோகப்படுத்தப்பட வேண்டியதேயன்றி பாட்டனிடமிருந்து தகப்பனுக்குக் கிடைத்த சொத்தை யுபயோகப்படுத்தக் கூடாதென்பது.

(2) உபநயனத்துக்கு மட்டில் தொகை யேற்படுத்தலாமேயன்றி சகோதரியின் கலியாணத்துக்கு யாதொரு தொகையும் ஏற்படுத்தக் கூடாதென்பதும், அது இந்துலாப்படி அவசியமான சமஸ்காரமல்ல வென்பதும்.

முதலாவது கக்ஷிக்கு எவ்வித ஆதாரமுங் கிடையாது; தீக்ஷை செய்விக்கவேண்டிய தகப்பன் அச்சடங்கு செய்விப்பதற்கு முன் இறந்து விடுவாரகில் அத்தீக்ஷை செய்துகொண்ட சகோதரர்கள்

தீக்ஷை செய்துகொள்ளாத சகோதரர்களுக்கு அச்சடங்குகளை நடத்திவைக்க வேண்டுமென்று மிடக்ஷரா முதலாவது அத்தியாயம் 7-வது செக்ஷன் 3-வது செய்யுளில் வியக்தமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. தகப்பனிறந்த பிறகு பாகப்பிரிவினை செய்துகொள்ளும் சகோதரர்கள் குடும்பப் பொதுச் சொத்தினின்றும் அந்த தீக்ஷை செய்துகொள்ள வேண்டுமென்று 4வது சுலோகத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. இதனால் வாதியின் உபநயனச் செலவு குடும்பப் பொது பிதிரார்ஜித சொத்தினின்றுங் கொடுபடவேண்டியதாகத் தீர்மானிக்கிறோம்.

பிராமண ஆண் பிள்ளைகளுக்கு விவாகச் சடங்கு அவசியமான கர்மமல்லவென்று 27 சென்னை 206 தீர்மானத்தை யாதாரமாகக்காட்டி ஆக்ஷேபிக்கப்படுகிறது. இத்தீர்மானம் இப்பாலேற்பட்ட 34 சென்னை 422 தீர்மானத்தினால் ரத்து செய்யப்பட்டிருக்கிறது. இதில் பிராமணர்களுக்கு விவாகச் சடங்குகிரமமானதுஞ் செய்யக் கடமைப்பட்டதுமான அவசியமான கர்மமென்று சொல்லப்பட்டிருக்கிறது. வாதி நைஷ்டிக பிரமசாரியாகவாவது, சந்நியாசியாகவாவது இருக்கவேண்டுமென்று முதல் பிரதிவாதி கட்டாயப்படுத்தக் கூடாது. வாதி கிருகஸ்தனாகி அதற்குரிய காரியங்களைச் செய்யக் கடமைப்பட்டவன். இவனுடைய கலியாணத்துக்கு குடும்ப சொத்து வுபயோகப்படுத்தப்படவேண்டும். முதல் பிரதிவாதிக்கு குடும்பச் சொத்தினின்றுங் கலியாணம் நடந்திருப்பதால் வாதிக்கும் அந்தச் சொத்தினின்று விவாகம் நடத்தப்படவேண்டும். வரும்படியைப்பற்றி மட்டில் அப்பீலை யங்கீகரித்து மற்ற விஷயங்களைப்பற்றிய அப்பீலைச் செலவுடன் தள்ளுபடி செய்கிறோம்.

எதிர்கக்ஷி மெமோராண்டம்:—வாதியின் தாயார் 5-ம் பிரதிவாதியின் ஜீவனாம்சத்துக்காக கீழ்கோர்ட்டார் யாதொரு ஏற்பாடுஞ் செய்யாதிருப்பது பிசகென்று வாதி ஆக்ஷேபிக்கிறான். அந்த 5-ம் பிரதிவாதி தன்னுடைய ஜீவனாம்சத்தைப்பற்றி இந்தக் கோர்ட்டில் அப்பீல் செய்யாதிருக்க வாதி அது விஷயமாக கக்ஷி சொல்வது பிசகென்று அப்பீல் வாதி வக்கீலின் பிரதம ஆக்ஷேபனை. இந்த ஜீவனாம்சம் வாதியின் வீதம் பாதி சொத்தினின்றுங் கொடுபடவேண்டியதென்றும், முதல் பிரதிவாதியின் சொத்தினின்றுங் கொடுபட நியாயமில்லையென்றும் சப் ஜட்ஜி தீர்மானித்திருக்கி

றார்கள். இந்த 5-ம் பிரதிவாதி இந்த 2-வது அப்பீலில் கக்ஷிக்காரியாகச் சேர்க்கப்பட்டிருக்கிறாள். சி. பு. கோடு 41-வது ஆர்டர் 33-வது ரூல்படி ஒரு கேசில் சம்பந்தப்பட்ட சகல கக்ஷிக்காரர்களின் பாத்தியா பாத்தியங்களைப்பற்றி தீர்மானிக்க கோர்ட்டாருக்கு அதிகாரமிருக்கிறது. ஆகையால் அ. வாதி வக்கீல் சொல்லும் பிரதம ஆக்ஷேபனையைத் தள்ளுபடி செய்கிறோம்.

இது விஷயம் நீண்ட காலத்துக்கு முன் ஜட்ஜிகள் ஹாலோவே இன்னஸ் இவர்களால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது (5 சென்னை ஹைகோர்ட்டு ரிபோர்ட்டு 377 தீர்மானத்தை பார்க்க). ஸ்மிருதி சந்திரிகா 41வது அத்தியாயம் 14வது சுலோகம் இவளுடைய கக்ஷிக்கு ஆதாரமாக விருக்கிறது. தாயார் என்ற பதம் சக்களத் தாயாருக்கும் பொருந்தும்; சப் ஜட்ஜி எடுத்துச் சொல்லும் இ. லா. ரி. 16 கல்கத்தா 758 தீர்மானம் தாயபாகா சாஸ்திரத்தை யனுசரித்தது. ஆகையால் சப் ஜட்ஜி இந்த 5ம் பிரதிவாதிக்கும் ஸ்திரீதன நகைகளன்னியில் குடும்பத்துக்குச் சொந்தமான நகைகளிருக்கின்றனவா வென்பதைப்பற்றி விசாரித்து ஒருமாத கெடுவுக்குள் பயிண்டிங் அனுப்பவேண்டும். அதன் மேல் ஆக்ஷேபனைகள் ஒரு வாரத்துக்குள் செய்துகொள்ள வேண்டும்.

ஜஸ்டிஸ் சதாசிவய்யவர்கள்:—அறிவிற் சிறந்த என்னுடைய சகோதரருடைய தீர்மானமுழுவதும் ஆராய்ந்து பார்த்ததில் ஒரு விஷயம் நீங்கலாக மற்ற வைகளெல்லாவற்றையும் ஒத்துக்கொள்ளுகிறேன். அது முக்கியமான தல்லவென்று சொல்லக்கூடாது. ஆகையால் நான் தனிமையில் வேறு தீர்மானம் எழுதவேண்டியதாக விருக்கிறது.

பழய இந்து சட்டங்களில் ஒரு தகப்பனுடைய பிதிரார்ஜித சொத்துக்கும் சுயார்ஜித சொத்துக்கும் வித்தியாச மிருப்பதாகத் தெரியவில்லை. பிதிரார்ஜித சொத்தென்பது இந்து சட்ட புத்தங்களின்படி தகப்பனுடைய சுயார்ஜித சொத்து மட்டிலல்ல; ஒருவன் பிள்ளை முறைமையில் தகப்பனிடமிருந்து வார்சாக அல்லது பிள்ளையென்ற வுறவின்பேரில் அடையக்கூடிய சொத்தென்று அர்த்தம். தீக்ஷை செய்துகொண்ட அதாவது உபநயனஞ் செய்துகொண்ட சகோதரர்கள் அச்சடங்குகள் நடத்தப்படாத சகோதர சகோதரிகளுக்கு பிதிரார்ஜித சொத்தினின்

றும் அச்செலவுகள் செய்யப்படவேண்டுமென்று சொல்வது தகப்பனுடைய சுயார்ஜித சொத்தென்று அப்பீல் வாதியின் வக்கீல் சொல்லுகிறார். தகப்பன் சொத்து யாதொன்று மில்லாவிட்டால் ஏற்கனவே உபநயனம் பெற்ற சகோதரர்கள் தங்கள் சொந்த ஐவேஜியினின்றும் அச்செலவுகளைச் செய்யவேண்டுமென்று நாரதர் கிரந்தத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. இதனால் தகப்பன் சொத்தை யடைந்த உபநயனம் பெற்ற சகோதரர்கள் உபநயனஞ் செய்யப்படாத சகோதரர்களுக்கு அச்சடங்குகளைச் செய்து வைக்கக் கடமைப்பட்டவர்களென்பது ஸ்பஷ்டமாகத் தெரிய வரும். ஸ்ரீமத் பாகவத முதலியனவற்றிற் சொல்லப்படும் துவிஜாதி சமஸ்காரம் என்பது உபநயனச் சடங்குக்குமட்டிற் பொருந்தும். ஆதிகாலத்தில் ஸ்திரீகளுக்கும் உபநயனமேற்பட்டிருந்தது. இந்த சமஸ்காரங்கள் 8 முதல் 48 வரையிலும் இன்னும் மேற்கொண்டுஞ் சொல்லப்பட்டிருக்கிறது. விவாகச் சடங்கு 14 அல்லது 16 சடங்கு. பழய சாஸ்திரங்களை பார்வையிடுவதில் விவாகச் சடங்கு செய்யப்படவேண்டிய அவசியமான சமஸ்காரமென்று தெரியவில்லை. கிரகஸ்தாசிரமம் மேலானதென்று புகழ்வதெல்லாம் மற்ற மூன்று ஆசிரமத்திலுள்ளவர்களை சம்ரக்ஷணை செய்யவேண்டியிருப்பதினாற்றான். இதனால் இந்த ஆசிரமம் மேலானதென்று சொல்லக்கூடாது. விவாகம் என்பது விகல்ப விதி. இது நித்தியவிதியுமல்ல; அபூர்வவிதியுமல்ல. விவாகம் என்பது ஒருவன் தனக்கு போதுமான வயது வந்த பிறகு செய்யும் சடங்கு. இது இவனுடைய இஷ்டத்தையும் அபிப்பிராயத்தையும் பொறுத்தது. இதனால் உபநயனஞ் செய்துகொண்ட சகோதரன் உபநயனஞ் செய்துகொள்ளாத சகோதரனுடன் பாகப்பிரிவினை செய்துகொள்ளும்போது இவனுடைய விவாகச் சடங்கும் பொது குடும்பச் சொத்தினின்றும் செலவழிக்க வேண்டுமென்று தொகையேற்படுத்த வேண்டியது அவசியமில்லை. பிள்ளைகளுக்கு போதுமான படிப்பு கற்பிக்கப்படுகிற வரையில் விவாகஞ் செய்யக்கூடாதாகையால் நீண்ட காலத்துக்குப் பிறகு நடத்தப்படவேண்டிய விவாகத்துக்கு இப்போதே தொகை யேற்பாடு செய்வது நியாயமானதல்ல. அவ்வித ஏற்பாடு செய்யும் பட்சத்தில் மைனரின் தாயார் இவனுக்கு சீக்கிரத்தில் விவாகஞ் செய்ய ஏற்பாடு செய்வாள். இதனால் இவனுக்கு படிப்பு கெட்டுப்போய் விடும். பாலியத்தில் விவாகஞ் செய்வது சாஸ்திரத்துக்கும் விரோதம். மேலும்

இந்தக் காலத்தில் வரசுல்கம் விசேஷமாக நடந்து வருகிறது. அதனால் பிள்ளை வீட்டுக்காரர் எந்தச் செலவுஞ் செய்யவேண்டிய தவசியமில்லை. இப்போது வாதிக்கு 5 வயதாகிறது. சாஸ்திரப்படி இவனுக்கு 24 வயதுக்கு மேற்றான் விவாகஞ் செய்யவேண்டும். ஆகையால் கீழ்கோர்ட்டார் வாதியின் கலியாணச் செலவுக்காக ரூபா 150 ஏற்பாடு செய்திருப்பதை ரத்து செய்திருக்கிறேன்.

ஜஸ்டிஸ் சுந்திரமய்யரவர்கள் வாதியின் கலியாணச் செலவு விஷயமாக எனக்கும் என்னுடைய அறிவிற் சிறந்த சகோதரருக்கும் அபிப்பிராய பேதங்களிருப்பதால் "இரண்டு பாகஸ்தர்களில் ஒருவனுக்கு மட்டில் குடும்பச் செலவில் விவாகம் நடந்திருக்கும்போது பாகப்பிரிவினை காலத்தில் மற்றொருவனுடைய விவாகத்துக்கு குடும்பச் சொத்தினின்றும் ஏதேனுந் தொகை யொதுக்கி வைக்கப்படலாமா" என்பதைப்பற்றி சி. பு. கோடு 98-வது செக்ஷன்படி மூன்றாவது ஜட்ஜியின் அபிப்பிராயத்துக்கு அனுப்பப்பட்டது.

1913 M. W. N. 1035.

சென்னை ஹைகோர்ட்.

1910 ஸெகண்டு அப்பீல் நம்பர் 161.

தீர்ப்பு 17—11—13.

ஜட்ஜிகள்.	
ஜஸ்டிஸ் மில்லர் அவர்கள் ஜஸ்டிஸ் ஓல்ட்பீல்ட் அவர்கள்	பங்கா சீதையம்மாள் அப்பீல்தார் (வாதி) V பங்கா நாச்சியார் அம்மாள் ஆ அ. பிரதிவாதிகள்

27. [ஹிந்து லா.]

மிடாக்ஷரா சாஸ்திரப்படி சக்களத்தாயார் சக்களத்தியின் பிள்ளைக்கு வார்சல்ல வென்பதும், தீர்ப்பில் விவாதஞ்செய்து சொல்லப்படாத விஷயங்கள் ரேஸ்ஜூடிகேடா தோஷமாக மாட்டாதென்பதும், பிராதிலாவது முதல் விசாரணையிலாவது சொல்லாத விஷயங்களைப்பற்றி சாக்ஷிவிசாரணை யாரம்பிப்பதற்கு முன் இஷ்ஷியு ஏற்படுத்த வேண்டுமென கேட்டுக்கொண்டால் அந்த இஷ்ஷியு ஏற்படுத்த கோர்ட்டார் கடமைப்பட்டவர்களென்பதும்.

வாதியும் முதல் பிரதிவாதியும் விவாதப்படும் சொத்துக்கு பாத்தியஸ்தரா யிருந்து, இறந்தபோன கடைசி ஆண்வார்சுடைய சக்களத்தாயார்கள். அந்த ஆண்வார்சுடைய பாட்டனுடையபிள்ளையிடமிருந்து தாவா சொத்தை முதல் பிரதிவாதி சாசனம் பெற்றுவிட்டாள். வாதி தனக்கு அச்சொத்து கிடைக்க வேண்டுமென கும்பகோணம் சப்கோர்ட்டில் வழக்கிட்டாள். இந்த கோர்ட்டார் இவளுக்கு விரோதமாகத் தீர்ப்பு செய்துவிட்டதின் பேரில் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்கிறாள்.

பிள்ளைக்குத் தாயார் வார்சாகையால் சக்களத்தாயாரும் தாயார் ஸ்தானத்தில் வார்சென்றும், அவள் கோத்திரசபிண்டரானதால் அந்த முறைமையிலும் தாவா சொத்து கிடைக்கக் கூடியதென்றும், அந்த முறையில்லை யென்றாலும் உறவினர் என்ற ஸ்தானத்தில் தாவா சொத்தையடைய பாத்திய முண்டென்றும், தன் கக்ஷிக்கு விரோதமாகச்சொல்லப்படுகிற இ. லா. ரி. 8 சென்னை 107 தீர்மானத்தில் சக்களத்தாயாரைப்பார்க்கிலும் சிற்றப்பனுக்கு ஜாஸ்தியான பாத்தியமென்று சொல்லப்பட்டதேயன்றி சக்களத்தாயார் வார்சுகளல்ல வென்று சொல்லவில்லை யென்றும், சபிண்டர்கள் பெந்துக்கள் முதலிய எல்லாவித வுறவினர்களும் நாஸ்தியாகப்போனால் மட்டில் இராஜாங்கத்தார் அசசொத்தையடைய பாத்தியஸ்தரே யன்றி, எந்த வுறவினராவது இருந்தால் இராஜாங்கத்தாருக்கு பாத்தியமில்லையென்றும், பந்துக்கள் இல்லாவிட்டால் அன்னியர்களும் சொத்தை யடையலாமென மிடக்ஷராவில் சொல்லப்பட்டிருப்பதால் பந்துக்கள், சபிண்டர்கள் அல்லது மிடக்ஷரா 2-வது அத்தியாயம் 2-வது வகுப்பிற் சொல்லப்படும் வார்சுகள் இந்த இனங்களில் வாராதவர்களும், அச்சொத்தையடைய பாத்தியஸ்தர்களென்றும், வாதியின் வக்கீல் மிஸ்டர் T. V. சேஷகிரி அய்யர் தன்கக்ஷிக்கு ஆதாரமாக 8 சென்னை ஹைகோர்ட்டு ரூலிங்கில் 88, 93, 12 மூவர்ஸ் இந்தியன் அப்பீல் 448, 467, இ. லா. ரி. 18 சென்னை 193 - 199 இந்தத் தீர்மானங்களை யெடுத்துச் சொல்லுகிறார்.

சக்களத்தாயார் கோத்தரஜ சபிண்டா முறைமையில் வார்சாக வருவாளென்ற கக்ஷி இ. லா. ரி. 8 சென்னை 107 புல்பெஞ்சு தீர்ப்பில் நிராகரிக்கப்பட்டிருக்கிறதென்றும், இந்த சென்னை இராஜதானியில் சில ஸ்திரீகள் மட்டில் வார்சாக வருவார்களென்று ஜஸ்டிஸ் முத்துசாமி அய்யரவர்கள் தெளிவாய்ச் சொல்லியிருக்கிறார்களென்றும், வாதி வக்கீல் எடுத்துக்காட்டும் 8 சென்னை ஹைகோர்ட்டு ரூலிங்கிஸ் 88, 93 தீர்மானம், பிசகென்றுஇ லா.ரி. 16 கல்கத்தா 367 தீர்ப்பில் சொல்லப்பட்டிருப்பது மன்றி 5 சென்னை 241 தீர்ப்பிலும் விவரித்துச் சொல்லப்பட்டிருக்கின்றதென்றும், வாதி வக்கீல் சொல்லும் இ. லா. ரி. 18 சென்னை 193, 199 தீர்மானம், 21 சென்னை 263 தீர்மானத்தினால் மறுக்கப் பட்டிருக்கிறதென்றும், பிரதி வாதிகளின் வக்கீல் மிஸ்டர் K. பார்த்தசாரதி அய்யங்கார் கக்ஷியாடுகிறார்.

தீர்ப்பு

சக்களத்தாயார் தன் சக்களத்தி பிள்ளைக்கு எந்த முறையிலாவது வார்சாக வரலாமா வென்பதைப்பற்றி நாம் ஆலோஜிக்க வேண்டும். இவள் கோத்தரஜ சபிண்டா முறையில் இவளுக்கு வார்சுக் கிரமம் கிடைக்க மாட்டாதா? அந்த முறையில் கிடைக்காவிட்டாலும் மிடக்ஷராவின் கருத்துப்படி சபிண்டாவாக முறையில்லையா? அந்த முறையிலாவது இராஜாங்கத்தாருக்கு சிரேஷ்டமான பாத்தியம் இவளுக்குகிடைக்க மாட்டாதா என்ற கேழ்விகளுண்டாகின்றன. இ. லா. ரி. 8 சென்னை 107 தீர்மானம் பெண் வார்சைப்பார்க்கிலும் ஆண்வார்சுக்கு ஜாஸ்தியான பாத்தியமுண்டு என்று மட்டில் சொல்லவில்லை. மிடக்ஷரா ஸ்மிருதியில் சொல்லப்படாத ஸ்திரீகளுக்கு வார்சு பாத்தியமில்லை யென்று சொல்லப்பட்டிருக்கிறது. சக்களத்தாயார் சபிண்டாவாக வருவாளென்று அந்த தீர்ப்பிற் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் எல்லா ஸ்திரீ சபிண்டாக்களும், இந்த சென்னை இராஜதானியில் வார்சாக வரமாட்டார்கள். சக்களத்தாயார் சக்களத்தியின் பிள்ளையின் சொத்தையடைந்து வருவது தொன்று தொட்டு வழக்க மிருக்கிறதென்று தகுந்த சாக்ஷியங்களினால் ருஜுப்பிக்காத வரையில் மேலே சொன்ன இந்தக் கோர்ட்டு புல்பெஞ்சு தீர்ப்பை யனுசரித்து தீர்மானிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

மிஸ்டர் சேஷகிரி அய்யர் ஆக்ஷேபிக்கும் இரண்டாவது விஷயத்தைப்பற்றி யாலோஜிப்போம். குறிப்பிட்டுச் சொல்லப்பட்டவர்கள், கோத்திரஜர்கள், பெந்துக்கள் இவர்களல்லாத வுறவினர்களுக்கு வார்சு பாத்தியமிருப்பதாக மிடக்ஷராவில் சொல்லப்பட்டிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. உறவினர்களொருவருமில்லாவிட்டாற்றான் இராஜாங்கத்தாரைச்சேருமென்று வாதி வக்கீல் எடுத்துச் சொல்லுந் தீர்மானங்கள் சரியே; ஆனால் இந்தத் தீர்மானங்களின் கருத்துகளின்னதென்பதை இ.லா.ரி. 5 சென்னை 241 தீர்மானத்தில் விளக்கிக் காட்டியிருக்கிறார்கள். அதில் சகோதரி பந்து முறைமையில் வார்சாக வரலாமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதைக் கொண்டு எல்லா வுறவினர்களும் வார்சாக வரலாமென்று சொல்லக்கூடாது. சக்களத்தாயார் பெந்து வர்க்கத்தில் சேர்ந்தவளல்ல; அவள் வார்சாக வந்தால் கோத்ரஜசபிண்டாவாக வரலாம். சகோதரனுடைய விதந்து கோத்ரஜசபிண்டாவென்றும் அவள் தன்னுடைய புருஷனுடைய சகோதரர்களின் சொத்துக்களை யடைய பாத்தியமில்லை யென்றும் இராஜாங்கத்தாரின் பாத்தியம்மேலானதென்றும் இ. லா. ரி. 16 கல்கத்தா 367 தீர்மான மேற்பட்டிருக்கிறது. அதனால் சக்களத்தாயாரின்பாத்தியதையைத்பார்க்கிலும் இராஜாங்கத்தாரின் பாத்தியம் மேலானதென்றே சொல்லவேண்டும்.

முதல் பிரதிவாதிக்கு சாசனஞ்செய்து கொடுத்தவர் பேரில் ஒருவன் தாவா சொத்து தனக்குக் கிடைக்கவேண்டுமென வழக்கிட்டதாகவும், அதில் இந்த நம்பர் வாதி முதல் பிரதிவாதியாகவும், இந்த நம்பர் முதல் பிரதிவாதி அதில் இரண்டாம் பிரதிவாதியாக இருந்து வந்ததாகவும் கடைசியாக இறந்தவருக்கு எவ்வித தாயாதியுமில்லை யென்று இந்த வாதி அதில் கக்ஷிபாடியதாகவும், அது வாதிக்கு விரோதமாகவும், முதல் பிரதிவாதிக்கு சாசனஞ் செய்து கொடுத்தவருக்கு சாதகமாகவும் தீர்ப்பு செய்யப்பட்டிருப்பதால் வாதியின் இந்த தாவா ரெஸ்ஜூடிகேடா தோஷத்துக்குள்ளாக்கப்பட்டிருக்கிறதென்று முதல் பிரதிவாதி கட்சிபாடுகிறார்; அந்த வழக்கில் முதல் பிரதி வாதிக்கு சாசனஞ் செய்தவர் இறந்த கடைசி ஆண்வார்சுக்குச் சமீப அனந்தரவார் சென்று சப் ஜட்ஜி சொல்லியிருப்பது சரியே; அவ்விஷயம் அந்தக் கேஸின் முடிவைப்பற்றிச் சொன்னது. இந்த இரண்டு விதந்துகளின்

பாத்திய பாத்தியங்களைப்பற்றி விசாரித்துத்தீர்ப்பு செய்யவில்லை; அதனால் இந்த தாவாவுக்கு எவ்வித ரெஸ்ஜூடிகேடா தோஷமு மில்லையெனத் தீர்மானிக்கிறோம்.

இந்தக்கேஸ் கீழ்க்கோர்ட்டில் விசாரணை முடிவு செய்வதற்கு முந்தி எஸ்டாபல் தோஷத்தைப்பற்றியும் ஜாதிவழக்கத்தைப் பற்றியும் இரண்டு இஷ்ஷியுக்கள் ஏற்படுத்தப்படவேண்டுமென முதல் விசாரணைக்கும் இஷ்ஷியுக்கள் ஏற்பட்டதற்கும் பிறகு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. எஸ்டாபல் தோஷத்தைப்பற்றி எவ்வித இஷ்ஷியுமேற்படுத்த வேண்டியதில்லை யென்று சப்ஜட்ஜி சொல்லி விட்டது சரியான தென்றே நினைக்கிறோம். "இந்த சென்னை இராஜதானியில் வழங்கிவரும் வழக்கப்படி சக்களத்,நாயார் இந்துலாப்படி வார்சா" என்ற இஷ்ஷியு ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறது. குறிப்பிட்ட ஜாதி வழக்கத்தைப்பற்றி வாதி சொல்லவில்லை; இந்தக்காரணத்தினால் இந்த இஷ்ஷியு கூடாதெனச்சொல்வது சரியல்லவென்று நினைக்கிறோம். இவ்விஷயம் பிராதில் சொல்லப்படவில்லை; முதல் விசாரணை கெடுவிலுஞ் சொல்லப்படவில்லை; ஆனால் இவ்விஷயம் சாக்ஷி விசாரணைக்கு ஆரம்பிப்பதற்குமுந்தியே சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் இந்த இஷ்ஷியுவைப்பற்றி விசாரிக்கவேண்டியது அவசியமென்றே தீர்மானிக்கிறோம்.

"வாதி முதல் பிரதிவாதி இவர்களின் குலாசார வழக்கப்படி சக்களத்தியின் பிள்ளையின் சொத்தை சக்களத்தாயார் வார்சாக அடைய பாத்தியமுண்டா" என்ற இஷ்ஷியுவைப்பற்றி கீழ்க்கோர்ட்டார் சாக்ஷி விசாரணை செய்து தெரிவிக்கும்படி யுத்திரவு செய்கிறோம். இவ்விதபாத்திய முண்டென்று சப்ஜட்ஜி அபிப்பிராயப்படும் பட்சத்தில் சப்ஜட்ஜி அடியிற் கண்ட இரண்டு இஷ்ஷியுக்களைப்பற்றியும் விசாரித்துத்தெரிவிக்க வேண்டும்.

(1) முதல் பிரதிவாதியின் எழுத்து மூலமான ஸ்டேட்மெண்டு 3-வது பாராவிற் கண்டபடி ரெங்கசாமி செட்டி வாசுதேவ செட்டி இருவரும் வாதியின் சக்களத்தி பிள்ளை இராமசாமி செட்டிக்கு வார்சுகளா?

(2) அப்படிக் கிருக்கும்பட்சத்தில் நடைபெற்று வரும் வழக்கப்படி அந்த இருவர்களுக்கு மேலான பாத்தியம் வாதிக்குண்டா?

இந்த இஷ்ஷியுக்களைப் பற்றியும் ருஜுக்களை விளங்கித் தெரிவிக்க வேண்டும்.

கீழ்க்கோர்ட்டார் இவ்விஷயங்களைப் பற்றி விசாரித்து அடியிற்கண்ட பயிண்டிங் (Finding) அனுப்பினார்கள்.

பயிண்டிங்.

ஏற்பட்டிருக்கும் எல்லா ருஜுக்களையும் ஆலோசிக்குமளவில் இந்தக் கேசில் சொல்லும் குறிப்பிட்ட வழக்கம் நீண்டகாலமாக விருக்கிறதென்றாவது, நிலைமையாக விருக்கிறதென்றாவது, தெளிவாகவும் சந்தேகத்துக் கிடமன்னியிலும் ருஜுப்பிக்கப் பட்டிருக்கிறதென்றாவது என்றுஞ் சொல்லமுடியவில்லை. ஆகையால் வாதி சொல்லும் வழக்கத்தை அவள் ருஜுப்பிக்கத் தவறிவிட்டாளென்று கண்டுபிடிக்கிறேன். இந்த இஷ்ஷியு தவறிவிட்டதால் மற்ற இஷ்ஷியுக்களைப் பற்றி விசாரிக்க வேண்டியது அனாவசியம்.

தீர்மானம்.

வாதியால் விடப்பட்ட ருஜுக்களால் வாதி சொல்லும் வழக்கம் இல்லை யென்று சப் ஜட்ஜி சொல்லும் அபிப்பிராயத்தை நாங்களும் ஒத்துக் கொள்ளுகிறோம்.

இந்த அப்பீல் செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

I Law Weekly 11.

சென்னை ஹைகோர்ட்.

1911 ௵த்திய 210, 211, நம்பர் உத்திரவுகளின் பேரில் அப்பீல்

தீர்ப்பு 20—11—13

ஜட்ஜிகள்.	இராமநாதன் செட்டிது 210 நம்பரில் அப்பீல்தாரர்கள்.
ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள்	காசி விசுவநாதன் செட்டி. 211 நம்பரில் அப்பீல்தாரன்.
ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர் அவர்கள்	V
	அருணாசலம் செட்டி, இரண்டு கேஸ்களிலும் எதிர் கக்ஷிக்காரர்.

29. [சீவில் புரிஸீஜர் கோடு.]

ஸ்தாபர சொத்து ஏலத்தை நிறுத்திவைக்கவேண்டு மென்று ஹைகோர்ட்டடார் செய்த உத்திரவுக்குப் பிறகும் அந்த விபரம் கீழ்கோர்ட்டாருக்கு தெரிவிப்பதற்கு முந்தியும் ஏலம்போடப்பட்டால் அந்த எலம் ரத்துசெய்யப்படவேண்டு மென்பது.

இராமனாதபுரம் சப் கோர்ட்டார் செய்த உத்திரவின் பேரில் ஹைகோர்ட்டில் அப்பீல்.

அப்பீல்தார்களுடைய ஸ்தாபர சொத்துக்கள் ஏலவிற்பனைக்காக 1911௵ ஜூலை மாதம் 17௳ துவக்கஞ்செய்யப்பட்டு ஜூலை௴ 21௳ முடிவடைந்தது. இந்த ஏலத்தை நிறுத்திவைக்கும்படி ஹைகோர்ட்டாரவர்களால் ஜூலை௴ 20ந்௳ உத்திரவு பிறப்பிக்கப்பட்டது. இது விஷயமாகசென்னை வக்கீல் மதுரை வக்கீலுக்குக்கொடுத்த தந்தி அன்று தினம் மத்தியானத்துக்குப் பிறகு கிடைத்தது. உடனே இவ்விஷயத்தைப்பற்றி மனுவொன்று பிரமாணபத்திரிகையுடன் சப் ஜட்ஜியவர்களிடங் கொடுபட்டது. இவர்கள் தனக்கு அபிஷலாக சமாசாரந் தெரிவிக்கப்படவில்லை யென்ற காரணத்துக்காக இந்த மனுவைத்தள்ளி ஏலம் நடத்தும்படி யுத்திரவு செய்து விட்டார்கள். அடுத்ததினம் ஏலம் முடிவடைந்தது. ஹைகோர்ட்டாரிடமிருந்து நிறுத்தும் உத்திரவு வந்த பிறகு இந்த ஏலம் செப்டம்பர் மாதம் 2௳ உறுதி செய்யப்பட்டது. ஹைகோர்ட்டார் செய்த மறியல் உத்திரவு பிரயோஜன மற்றுப் போய்விட்டதினாலே, அவர்கள் தாங்கள் செய்த வுத்திரவை ஆகஸ்டு மாதம் 3௳ ரத்து செய்து விட்டார்கள். இந்த ஏலத்தை ரத்து செய்ய வேண்டுமெனக் கொடுத்த மனுக்களை சப்ஜட்ஜியவர்கள் ஆகஸ்டு மாதம் 29௳ தள்ளுபடி செய்து விட்டார்கள். டிக்கிரி கடன் காரரும் அவர் பிள்ளைகளும் அப்பீல் செய்திருக்கிறார்கள்.

இப்போது ஏற்பட்டிருக்கும் விவாதங்கள் இரண்டு. அவை யாவன (1) ஹைகோர்ட்டாரால் பிறப்பிக்கப்பட்டிருக்கிற மறியல் உத்திரவு அது செய்யப்பட்ட நேரமுதற் கொண்டே செல்லத்தக்கதா, அல்லது எந்தக் கோர்ட்டார் ஏலம் போடுகிறார்களோ அந்தக் கோர்ட்டாருக்கு இது விபரம் அறிவிக்கப்பட்ட கால முதற் கொண்டு செல்லத்தகுந்ததா. (2) அந்த வுத்திரவுக்கு விரோதமாக முடிவு செய்யப்பட்ட ஏலமானது செல்லத்தக்கதல்லவா, அல்லது

அது ஒரு சாதாரண தவறுதலா ; அதனால் டிக்கிரிகடன்காரர்கள் அந்த ஏலத்தை ரத்து செய்ய வேண்டுமென பாத்தியங்கொண்டாடுவதற்கு முந்தி அவர்கள் தங்களுக்கு மிகுந்த நஷ்டங்களுண்டாயிருக்கின்றன வென்று ருஜுப்பிக்க வேண்டியதவசியமா.

ஹைகோர்ட்டாரால் செய்யப்படும் உத்திரவு கீழ்க்கோர்ட்டுக்கு அறிவிக்கப்பட்டகால முதற்றான் அந்தவுத்திரவு செலாவணியாகு மென்பதாக இ. லா. ரி. 33 சென்னை 74 தீர்மான மேற்பட்டிருக்கிறது. இது சரியா பிசகா வென்பதை கவனிக்கவேண்டும். அந்த தீர்ப்பிற்கண்ட விஷயத்துக்கும் தாவா கேசுக்கும் மெத்த வித்தியாசங்களிருக்கின்றன. அந்தக்கேசில் ஏலம் முடிவாதற்கு முந்தி மேல் கோர்ட்டார் செய்த வுத்திரவு அறிவிக்கப்படவே யில்லை. தாவா கேசிலோ அப்படிக்கில்லை; இந்த வுத்திரவு நிஜமென்று நம்பத்தகாத விதமாக தெரிவிக்கப்பட்டதென்பதற்கு ருஜுவில்லை. அப்பீல் தார்கள் கொடுத்த மனுவை சப்ஜட்ஜி நம்பாதிருந்தாலும் இதனுண்மையைத் தெரிந்து கொள்ள வேண்டியதற்காகவாவது ஏலத்தை ஒத்திவைத்திருக்கலாம். ஹைகோர்ட்டு நடவடிக்கை நடத்திய வக்கீல் கொடுத்த தந்தியை நம்பாமல் கீழ்க்கோர்ட்டார் ஏலத்தை முடிவு செய்தது பிசகென்பதாக கல்கத்தா ஹைகோர்ட்டார் தீர்மானஞ் செய்திருக்கிறார்கள். (16 C. W. N. 1031); மறியல் உத்திரவு ஹைகோர்ட்டாரால் பிறப்பிக்கப்பட்டதென்று அந்தக் கோர்ட் வக்கீல் எழுதிய கடிதத்துடன் பிரமாண பத்திரிகையுங் கொடுத்து ஏலத்தை நிறுத்தவேண்டு மென்று டிக்கிரி கடன்காரன் கொடுத்த மனுவை டிஸ்டிரிகட் முனிசிப் தள்ளுபடி செய்தது மேல் கோர்ட்டார் செய்த வுத்திரவை அவமதித்ததாகுமென்று கல்கத்தா ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள் (Cal L.J. 335). இந்தக்கேசில் வாதி யொருவரே 20ந்தேதியிலும் 21ந்தேதியிலும் ஏலங்கேட்டிருக்கிறார். இதனால் அப்பீல்தாரர்களுக்கு மிகுந்த நஷ்ட முண்டாயிருக்கிறது. மேல் கோர்ட்டார் எந்த நிமிஷத்தில் மறியல் உத்திரவு பிறப்பிக்கிறார்களோ அந்த நிமிஷம் முதல் கீழ்க்கோர்ட்டார் ஏலம் போட அதிகார மில்லை. இதனால் சப்ஜட்ஜி ஏலம் போடுவித்தது தன்னுடைய அதிகார வரம்பை மீறிச் செய்ததாகிறது. ஆகையால் இந்த அப்பீலை யங்கீகரித்து சப்ஜட்ஜி முடிவு செய்த ஏலத்தை ரத்து செய்திருக்கிறோம்.

I. L. W. 23.

சென்னை ஹைகோர்ட்.

1911 வருஷத்திய சீவில் மிஸ்லேனியஸ் அப்பீல் நம்பர் 231.

தீர்ப்பு—26—2—13.

ஜட்ஜிகள்
ஜஸ்டிஸ் ஸர் ரால்வ் பென்ஸன் Kt. அவர்கள்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் சுந்தரமய்யரவர்கள்

சபாபதி பிள்ளை ஆ. அ. வாதிகள்.
V
சொக்கலிங்க பிள்ளை அ. பிரதிவாதி

30. [சீவில் புரிஸீஜர் கோடு.]

ஏல விற்பனமுதல் தொகையை முதலில் கோர்ட்டுச் செலவுக்கும் பிறகு வட்டிக்கும் பாக்கியாகவுள்ளதை முதலுக்கும் உளவடைத்துக்கொள்ள வேண்டியது அவசியமென்பது.

மாயவரம் சப் கோர்ட்டு 1911 வருஷத்திய 38-வது நம்பர் நிறைவேறு ரிவிஷன் மனுவின் பேரில் ஹைகோர்ட்டில் அப்பீல்.

முதல் பிரதிவாதி எழுதிக் கொடுத்த பெந்தக பத்திரத்தின் பேரில் வழக்கிடப்பட்டதில் 2-ம் பிரதிவாதி முதல் பிரதிவாதிக்கு பாகஸ்தனானதால் அவரும் கக்ஷிக்காரராகச் சேர்க்கப்பட்டார். அதன்பேரில் ஏற்பட்ட டிக்கிரியில் முதல் பிரதிவாதி ரூபாய் 39,291-15-ம் பிராது தேதி முதல் வட்டியுடன் கொடுக்க வேண்டிய தென்றும், அவர் ரூபா 1844—6 செலவு தொகைக்காகக் கொடுக்கவேண்டிய தென்றும், அந்தப்படி தொகைகள் கொடுக்கத் தவறினால் முதல் பிரதிவாதிக்கு பாத்தியமுள்ள பாதி பெந்தக சொத்து ஏல விற்பனை செய்து டிக்கிரித் தொகைஉளவடைக்கப்படவேண்டிய தென்றும், இந்த ஏல விற்பனையால் டிக்கிரித்தொகையுளவடையாமல் பாக்கி யிருக்கும் பட்சத்தில் அந்த பாக்கித் தொகை முதல் பிரதிவாதியின் சரீர ஜவாப்தாரியின் பேரில் வசூலிக்கப்பட வேண்டிய தென்றும், இரண்டாம் பிரதிவாதியும் இந்தச் செலவு தொகை ரூபா 1844-6-க்குக்கட்டுப்படவேண்டிய தென்றுங் கண்டிருந்தது. இந்தப் பாதி பெந்தக சொத்து ஏல விற்று முதலா லேற்பட்ட தொகை ரூபா 41500-முழு பெந்தகக் கடன் வட்டி செலவு இவைகளை வுளவடைக்கப் போதுமானதாக வில்லை. இதனால் வாதி ஏல விற்றுமுதல் தொகையை டிக்கிரித் தொகைக்கும் வட்டித் தொகைக்கும் உளவடைத்துக் கொண்டதாகவும், டிக்கிரி ஷரத்துப்படி செலவு தொகையை இரண்டாம்

பிரதிவாதியிடம் வசூலிக்கத் தனக்குப் பாத்தியமிருக்கிற தென்றும், அவர்பேரில் நிறைவேறு மனுக்கொடுத்தார். தன் பேரில் நிறைவேற்ற டிக்கிரி காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுப் போய் விட்டதென்றும், ஏலவிற்று முதல் தொகை பெந்தகத் தொகையின் வட்டிக்கும் கோர்ட்டு செலவுக்கும் முதலில் உளவடைத்துக் கொண்டு பாக்கியைத் தான் அசல் தொகைக்கு வரவு வைத்துக் கொள்ள வேண்டியது அவசிய மென்றும், இப்போது வசூலித்த தொகையினால் செலவு தொகை செல்லாகி விட்டதால் தன் பேரில் டிக்கிரி நிறைவேற்றியது பிசகென்றும் இரண்டாம் பிரதிவாதி கக்ஷியாடினார். சப் ஜட்ஜி இந்த 2-ம் பிரதிவாதியின் கக்ஷியையேற்றுக் கொள்ளாமல் வாதி கேட்டபடி நிறைவேற்ற வுத்திரவு செய்திருக்கிறார்கள்.

இந்த நம்பரின் பேரில் அப்பீல் நடந்திருப்பதாலும், அந்த அப்பீல் தேதி முதல் 3-வருடங்களுக்குள் டிக்கிரி நிறைவேற்றப் பட்டிருப்பதாலும் வாதியின் நிறைவேற்று மனுவுக்குக் காலாவதி தோஷமில்லை. இப்போது நாம் கவனிக்கவேண்டியது ஏலவிற்று முதற் றொகையினின்றும் டிக்கிரி செலவு தொகை யுளவடைந்து விட்டதா இல்லையா என்பதுதான்.

ஏலவிற்று முதற் றொகையினின்றும் முதலில் செலவு தொகையை யுளவடைத்துக்கொள்ள வாதி கடமைப்பட்டவரல்லவென்றும் இந்த இரண்டாம் பிரதிவாதி செலவு தொகை கொடுக்க வேண்டுமென்று ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டிருப்பதால் இந்தச் செலவு தொகைக்கு நிறைவேற்றியது கிரமமான தென்றும், அப்பீல் பிரதிவாதியின் வக்கீல் கக்ஷியாடுகிறார்.

அ. வாதி வக்கீல் சி. பு. கோடு 34-வது ஆர்டர் 13-வது ரூலைத் தன் கக்ஷிக்கு ஆதாரமாக எடுத்துக்காட்டி அதன் முறை தாவா கேசுக்கு ஒற்றுமையில்லாவிட்டாலும் அதன் விதி அல்லது தத்துவம் தாவா கேசுக்கு அனுசரிக்கப்படவேண்டுமென்றும், கக்ஷியாடுகிறார்: அந்த 13வது ரூல் 12வது ரூல்படி ஏலவிற்றுமுதல் செய்யப்பட்ட கேஸுக்கு மட்டில் பொருந்தியதேயன்றி தாவா கேசுக்கு பொருந்தியதல்ல வென்று அப்பீல் பிரதிவாதி வக்கீல் எதிர் கக்ஷிசொல்லுகிறார்.

ஏலவிற்று முதல் தொகையினின்றும் முதலில் ஏல சம்பந்தமான சகல செலவுகளும், இரண்டாவது முந்திய பெந்தகத்தொகை

யும் அது சம்பந்தமான செலவுகளும் மூன்றாவது எதற்காக ஏலம் போடப்படுகிறதோ அதன் வட்டித் தொகையும் அந்த டிக்கிரி சம்பந்தமா யேற்பட்ட செலவு தொகையும் நாலாவது பெத்தகத்துக்காக ஏற்பட்ட முதல் தொகையும், கடைசியாக பாக்கித் தொகை யேதேனுமிருந்தால் ஏலவிற்று முதல் செய்யப்பட்ட சொத்துக்கு பாத்தியமுள்ளவர்கள் இந்த வரிசைக் கிரமப்படி கொடுபட வேண்டுமென்று மேற்கண்ட 13வது ரூலிற் சொல்லப்பட்டிருக்கிறது. இது 12-வது ரூல்படி ஏலம் போடப்பட வேண்டிய முன் பெந்தக டிக்கிரி சம்பந்தமா யேற்பட்டது. ஏலவிற்று முதற் றொகையினின்றும் முதலில் வட்டித் தொகை செலவுதொகை யுளவடைக்கப்பட வேண்டுமென்பதற்கு சிவில்புரிஸீஜரில் எந்த விதியுமேற்படவில்லை. முன் பாத்தியமுள்ள சொத்துக்கள் ஏலவிற்று முதல் செய்யப்பட வேண்டிய விஷயமாக ஏற்பட்ட சி. பு. கோடு 73-வது செக்ஷனில் முதலில் செலவு தொகையும் இரண்டாவது எந்த டிக்கிரிக்காக ஏலவிற்று முதல் செய்யப்படுகிறதோ அந்தத் தொகையும் மூன்றாவது பின் பாத்தியத் தொகை முதலியனவுங் கொடுபட வேண்டியதெனக் சொல்லப்படுகிறது. 13-வது ரூலின் கருத்து என்னவென்பதை யோஜிக்குமளவில் முதலில் செலவு தொகைக்கு சொத்தை பாத்தியப்படுத்தவேண்டு மென்றும், இரண்டாவது பெந்தகத்தொகையின் வட்டிக்காக அச்சொத்தை பாத்தியப் படுத்த வேண்டுமென்றும், சட்ட நிரூபண சபையார் இந்த ரூலை யேற்படுத்தியிருக்க வேண்டுமென்று தெரிகிறது. இது பெந்தகத்தின் பேரில் தொகை கொடுப்பவரின் நன்மையை யுத்தேசித்து ஏற்பட்டது. கோர்ட்டாரால் வசூலிக்கப்பட்ட தொகையை எந்தெந்த பாபத்துக்காக வரவு வைத்துக்கொள்ளவேண்டு மென்பது கோர்ட்டாரின் கடமையே யன்றி கக்ஷிக்காரன் இஷ்டத்தைப்பொறுத்ததல்ல. ஆகையால் கோர்ட்டார் முதலில் செலவு தொகைக்கும், பின்பு வட்டிக்கும் பாக்கியை அசலுக்கும் வரவு வைத்துக் கொள்ளவேண்டிய தவசியம். இதன் படி செலவு தொகை யேற்கனவே செல்லாகி விட்டதால், வாதி 2ம் பிரதிவாதி பேரில் நிறைவேற்ற எவ்வித பாத்தியமு மில்லை.

இதனால் கீழ்க்கோர்ட்டார் செய்த வுத்திரவை ரத்து செய்து வாதியின் நிறை வேற்று மனுவைத் தள்ளுபடி செய்து இரண்டு

கோர்ட்டு செலவு தொகைகளும் அ. வாதிகளுக்கு அ. பிரதிவாதி கொடுக்க வேண்டியதெனத் தீர்மானிக்கிறோம்.

21 Indian Cases 691.

சென்னை ஹைகோர்ட்.

1912 ஹுத்திய 152 நம்பர் உத்திரவின் பேரில் அப்பீல்
தீர்ப்பு 9—12—13

ஜட்ஜிகள்	வெள்ளையப்பச் செட்டி
ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள்	(பிரதிவாதி) அப்பீல்தாரன்,
ஜஸ்டிஸ் டியாப்ஜி அவர்கள்.	V
	வீரப்பச்செட்டி ஆ. (வாதிகள்) எதிர்க்கக்ஷிக்காரர்கள்

[31. சிவில் புரிஸீஜர் கோடு]

"1-2-5-6 பிரதிவாதிகள் ஆஜரில்லை எக்ஸ் பார்டி" யென்று மட்டில் ரிகார்டில் எழுதுவது சி. பு கோடு 5வது ஆர்டர் 19-வது ரூல்படி போதுமான சர்வீஸ் என்று டிக்ளரேஷன் செய்வதாக மாட்டாதென்பதும், அதனால் அந்தப் பிரதிவாதிகள் எக்ஸ் பார்டி டிக்கிரியை ரத்துசெய்து கொள்ளலா மென்பதும்.

இராமனாதபுரம் சப்கோர்ட், 1911-வது வருஷத்திய அசல் 342ம் நம்பரில் 1912-வது வருஷத்திய 1 A. 349-வது நெம்பர் உத்திரவின் பேரில் ஐக்கோர்ட்டில் அப்பீல்.

வாதிகள் இராமனாதபுரம் சப் கோர்ட்டில் பிரதிவாதிகள் பேரில் பாக வழக்கிட்டு தீர்ப்பு செய்யப்படுவதற்கு முன் சில சொத்துக்கள் ஜப்தி செய்யப்பட வேண்டுமென்று மனுக்கொடுத்தார்கள். கோர்ட்டார் பிரதிவாதிகளுக்கு சம்மன் பிறப்பித்தது மன்றி ஜப்திக்காக இன்டரிம் (Interim) உத்திரவுஞ் செய்தார்கள். இந்த நோட்டீஸ் பிரதிவாதிகளுக்கு நேரில் சர்வ் செய்யப்படக் கூடவில்லை. பிரதிவாதிகள் வசித்த வீடுகளின் கதவுகளில் ஒட்டி ரிட்டர்ன் செய்யப்பட்டது. இதன்பேரில் ஜப்திக்குப் பிறந்த இன்டரிம் உத்திரவை கோர்ட்டார் உறுதிசெய்து விட்டார்கள். பிறகு வாதிகள் தீர்ப்புக்கு முந்தி ஜப்திசெய்யப்படவேண்டுமென்று 2-வது தடவை மனுக்கொடுத்தார்கள். இதன் பேரிற் பிறந்த நோட்டீஸ் பிரதிவாதிகளுக்கு நேரில்சர்வ் செய்யப்பட்டது. இந்த நோட்டீஸின் உட்புறத்தில் இதற்கு ஆக்ஷேபனையைத் தெரிவிப்பதற்கு பிப்ரவரி மாதம் 22 தேதி குறிப்பிடப்பட்

டிருந்தது. இதற்கு வெளிப்புறத்தில் பென்ஸலால் மார்ச்சு மாதம் 22தேதி யென்று எழுதப்பட்டிருந்தது. இதன் மத்தியில் இந்த வழக்குக்காகப்பிறந்த சம்மன் ஒட்டப்பட்டே சர்வாகியிருந்தது. மதுரை முதலிய விடங்களுக்கு 3—4 தினங்களுக்கு முன் போய்விட்டதாக சம்மன் கொண்டுபோன வுத்தியோகஸ்தன் எழுதியிருந்தான். இதன் பேரில் சப்ஜட்ஜி வேறு சம்மன் பிறப்பிக்கப்படவேண்டுமென வுத்திரவு செய்தார்கள். இந்த சம்மன்களும் முன் சொன்னது போலவே ரிட்டர்ன் செய்யப்பட்டன. இதன் பேரில் சப்ஜட்ஜி பிரதிவாதிகளுக்குக் கிரமப்படி சம்மன் சர்வானதாக டிக்ளேர் செய்து அவர்களை எக்ஸ்பார்ட்டியாக்கி வாதிகளின் வழக்குப்படி பிப்ரவரி மாதம் 22ந்தேதி பிரதம டிக்கிரி செய்து விட்டார்கள். இதன்பேரில் முதல் பிரதிவாதி தான் இந்த வழக்கு விசாரணைக்கு இரண்டு மாதங்களுக்கு முன்பாகவே தன்னுடைய வியாதி சிகிச்சை செய்து கொள்ள மதுரைக்கு வந்து விட்டதாகவும், தான் பிப்ரவரி மாதம் 22ந்தேதி சாயங்காலம் வேறு வேலையாகக்கோர்ட்டுக்குப்போயிருந்த சமயம் இந்த வழக்கு விபரமும் தீர்ப்பு சங்கதியுந்தெரிய வந்ததென்றும் தனக்குப்பிறந்த சம்மன் தனக்கு சர்வ் செய்யப்படவில்லை யென்றும், தனக்குப்பிறந்த இரண்டாவது சம்மன் கிரமமாக சர்வ் செய்யப்பட்டதாக டிக்ளேர் செய்தது பிசகென்றும், அதனால் தன்பேரில் ஏற்பட்ட எகஸ் பார்ட்டி டிக்கிரியை ரத்துசெய்து கேஸை பயிலில் வைத்துக்கொண்டு விசாரிக்க வேண்டுமென்றும் மனுக்கொடுத்தார்.

இந்த வழக்கு விபரம் பிரதிவாதிக்கு வெகு நாளாகத்தெரியுமென்றும், இந்த பிப்பரவரிமாதம் 22ந்தேதிக்கு முந்தி இந்த பிரதிவாதியை இந்தக்கோர்ட்டில் பல தடவைகளில் பார்த்திருப்பதாகவும், எகஸ்பார்ட்டிடிக்கிரியை ரத்துசெய்யத்தகுந்த காரணங்களில்லையென்றும் வாதிகள் கக்ஷிபாடினார்கள். பிரதி வாதிக்கு இந்த வழக்கு விபரந்தெரியுமென்பதைப்பற்றி உடன் ஜப்திநடவடிக்கைகளையெடுத்துக்காட்டினார்கள். சப் ஜட்ஜி முதல் பிரதிவாதியின் மனுவைத் தள்ளுபடிசெய்துவிட்டதின் பேரில் இந்த அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது.

பிரதிவாதி தற்காலம் வீட்டிலில்லையென்று சம்மன் திருப்பப்பட்டிருப்பதினால் பிரதிவாதிக்கு நேரில் சம்மன் சர்வ் செய்

விக்க முயற்சிக்க வேண்டியது வாதியினுடைய கடமையென்றும் சம்மனைப் பெற்றுக்கொள்ள வீட்டில் ஆண்பிள்ளைகளாவது, அதிகாரம் பெற்ற ஏஜண்டுகளாவது இல்லையென்றும் சம்மன் இரண்டாவது தடவை திருப்பிவிடப்பட்டது முதல் தடவை திருப்பிவிட்டது போலிருப்பதால், அது போதுமானதென்று டிக்ளேர் செய்யக் காரணமில்லையென்றும், இரண்டாவது தடவை சம்மன் சர்வ் செய்தது போதுமானதென்று டிக்ளேர் செய்திருப்பது சுத்தப் பிசகென்றும், இ. லா. ரி. 24 அலகபாத் 302, 29 சென்னை 324 இந்தத் தீர்மானங்களைத் தன் கக்ஷிக்கு ஆதாரமாகக் காட்டி பிரதிவாதியின் வக்கீல் வாதிக்கிறார்.

இந்த வழக்கு விபரம் முதல் பிரதிவாதிக்குத் தெரியுமென்றும், ஜப்தி நடவடிக்கைகள் அதிக முக்கியமாக இரண்டாவது நோட்டீஸ் வழக்கைப்பற்றித் தெரிவித்திருக்குமென்றும், வீட்டிலுள்ள பெண் பிள்ளைகள் சொன்னதைக் கொண்டு பிராஸஸ் சர்வர் சம்மனில் இண்டார்சு செய்திருக்கிறாரென்றும், இவர்கள் போன ஒவ்வொரு தடவையும் பிரதிவாதி 3 அல்லது 4 தினங்களுக்கு முன் வீட்டை விட்டுப் போனதாகச் சொல்லப்பட்டிருப்பதால் அது பிரதிவாதி டிக்கிரி தேதிக்கு இரண்டு மாதங்களுக்கு முன் முதல் மதுரையிலிருந்து சீக்கு சிகிச்சை செய்துகொண்டிருந்தாரென்று சொல்வதைப் பொய்யாக்கி விடுகிறதென்றும், வாதிகளின் வக்கீல் கக்ஷி சொல்லுகிறார்.

தீர்ப்பு

வழக்குக்காகப் பிறந்த சம்மன் பிரதிவாதிக்கு கிரமமாக சர்வாகவில்லையென்று ருஜுப்பிக்கும் பட்சத்தில் பிரதிவாதி தன் பேரிலேற்பட்ட எகஸ்பார்ட்டி டிக்கிரியை சி.பு. கோடு 9-வது ஆர்டர் 13-வது ரூல்படி ரத்து செய்துகொள்ள பாத்தியமுடையவர்.

29—1—12-ல் சப் ஜட்ஜி “1. 2. 5. 6. பிரதிவாதிகள் ஆஜரில்லை எக்ஸ்பார்ட்டி” என்று பதிவு செய்திருக்கிறார்கள். சி. பு. கோடு 5-வது ஆர்டர் 19—வது ரூல்படி கிரமமாக சர்வ் செய்யப்பட்டதாகவும் அவ்விதம் சர்வாகியிருந்தும் பிரதிவாதி ஆஜரில்லையென்றும் சப் ஜட்ஜி அபிப்பிராயப் பட்டதாக அந்த வுத்திரவினால் தெரிகிறது. இரண்டாவது சம்மன் சர்வானது சரியானதாக வைத்துக்கொண்டாலும் இ. லா. ரி. 21 சென்னை 419, 29

சென்னை 324 இந்தத் தீர்மானங்களிற் கண்டபடி அது கிரமப்படி சர்வ் செய்யப்பட்டதாக மாட்டாது. அதனால் பிரதிவாதி தன் பேரிலேற்பட்ட எக்ஸ்பார்ட்டி டிக்கிரியை ரத்து செய்துகொள்ள பாத்தியமுடையவர். இதனால் சப் ஜட்ஜி செய்த வுத்திரவை ரத்து செய்து முதல் பிரதிவாதி பேரிலேற்பட்ட எக்ஸ்பார்ட்டி டிக்கிரியை மாற்றிவிட்டோம்.

1 Law weekly 1

பிரிவி கவுன்ஸில்

பங்காளம் ஹைகோர்ட்டு தீர்மானத்தின் பேரில் அப்பீல்

தீர்ப்பு 1—12—13.

ஜட்ஜிகள்	
லார்ட் மவுல்டன் அவர்கள்	பர்காம் டியோ பிரசாத் ஆ அப்பீல் வாதிகள்
ஸர் ஜான் எட்ஜ் அவர்கள்	V
மிஸ்டர் அமீர் ஆலி அவர்கள்.	டாராசண்டு ஆ. அ. பிரதிவாதிகள்.

16. [டிரான்ஸ் அவ் பிராபர்டி ஆக்ட்.]

ஒருவனுக்கு முதல் பெந்தகமும் மூன்றாவது பெந்தகமும் ஏற்பட்டிருந்து அவன் முதல் பெந்தக பத்திரத்தின் பேரில்வழக்கிட்டு டிக்கிரி பெற்று நிறைவேற்றித் தொகை வசூலித்து அந்த பெந்தகக் கடன் போக பாக்கித் தொகை கோர்ட்டில் டிபாஸிட்டு செய்யப்பட்டிருந்தால் அது இரண்டாவது பெந்தகக்கடனுக்கு உளவடைக்கப் படவேண்டியதேயன்றி மூன்றாவது பெந்தகத்துக்கு எடுத்துக்கொள்ளக்கூடாதென்பதும், இரண்டாவது பெந்தகதாரன் கொண்டுவரவேண்டிய வழக்குக்கு காலாவதி தோஷமும்.

கனுபாபு தனக்குச் சொந்தமான மவுஸாசாக் முதலிய ஸ்தாவர சொத்துக்களை பர்காம் டியோ பிரசாத் ரும்ஸம்ரான் பிரசாத் இவர்களுக்கு 1887ம் வருஷம் மேமாதம் 21ந்தேதி பெந்தகம் வைத்தார். அவர் அதே சொத்துக்களை 1887ம் வருஷம் செப்டம்பர் மாதம் 19ந்தேதி வாதிகளுக்கும் பெந்தகம் வைத்தார். பிறகு இதே சொத்துக்களை 1889ம் வருஷம் ஜூலைமாதம் 19ந்தேதி இந்த பர்காம் டியோ பிரசாத் ரும்ஸம்ரான் பிரசாத் இவர்களுக்கே மூன்றாவது பெந்தகம் வைத்தார். இந்த இருவரும் தங்களுக்கு 1887ம் வருஷம் மேமாதம் 21ந்தேதி பெந்தக

பத்திரப்படி கிடைக்கவேண்டிய தொகைக்கு வழக்கிட்டு 1890ம் வருஷத்திய அக்டோபர்மாதம் 8ந்தேதி டிக்கிரி பெற்றார்கள். இந்த வழக்கில் வாதிகளும் கக்ஷிக்காரர்களாகச் சேர்க்கப்பட்டார்கள்; ஆனாலவர்கள் ஆஜராகவில்லை. இந்த டிக்கிரி நிறைவேற்றப்பட்டதில் மவுஸாசாக் விற்கப்பட்டு அந்த டிக்கிரித் தொகைக்கு வுளவடைந்தது போக பாக்கித் தொகை ரூபா 12197—8—3 சப் கோர்ட்டு டிபாஸிட்டிலிருந்தது. இந்த பர்காம்டியோ பிரசாத் ரும்சம்ரான் பிரசாத் இவர்கள் தங்களுக்குச் சேரவேண்டிய 1889ம் வருஷம் ஜூலைமாதம் 19 ந்தேதியுள்ள பெந்தக பத்திரத்தின் பேரில் வழக்கிட்டு டிக்கிரி பெற்று அதை நிறைவேற்றிகோர்ட்டு டிபாஸிட்டிலிருந்த அந்த ரூபா 12197—8—3யும் 1892ம் வருஷம் ஏப்ரல் மாதம் 22-ந் தேதி பெற்றுக்கொண்டு விட்டார்கள். வாதிகளுக்கு இரண்டாவது பெந்தகம் ஏற்பட்டிருக்கும் விபரம் இவர்களுக்கு நன்றாகத் தெரிந்திருந்தும் அவர்களை இவ்வழக்கில் கக்ஷிக்காரர்களாகச் சேர்க்கவுமில்லை; இவர்கள் பெற்றிருக்கும் இந்த டிக்கிரிக்காக இந்த டிபாஸிட்டுத் தொகையை வாங்கப் போவதாக வாதிகளுக்கு நோட்டீசுங் கொடுபடவில்லை. வாதிகள் தங்களுக்கு கிடைத்த 1887ம் வருஷம் செப்டம்பர்மாதம் 19 - ந் தேதியுள்ள பெந்தக பத்திரத்தின் பேரில் வழக்கிட்டு 1900ம் வருஷம் நவம்பர் மாதம் 17-ந் தேதியில் கோர்ட்டு டிபாஸிட்டிலிருந்து வாப்ஸ் வாங்கிய தொகையைப் பிரதிவாதிகள் தங்களுக்குத் திருப்பிக் கொடுத்துவிடவேண்டுமெனக் கேட்டார்கள்.

இந்த வாதிகள் தங்கள் வழக்கில் கக்ஷிக்காரர்களாகச் சேர்க்கப்பட்டிருந்தும் கோர்ட்டு டிபாஸிட்டு செய்யப்பட்டிருந்த மிகுதித் தொகையை வாதிகள் தங்களுக்குச் சேரவேண்டியபெந்தகக் கடனுக்கு வுளவடைத்துக்கொள்ள முயற்சியாமல் அலக்ஷியமாகவிருந்து விட்டதால் அவர்களின் பாத்தியங்களை இழந்து விட்டார்களென்றும், தங்களைப்பற்றின வரையில் வாதியின் தாவா காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுப்போய் விட்டதென்றும், பிரதி வாதிகள் கக்ஷியாடினார்கள். வாதிகளின் தாவா காலாவதி தோஷத்தால் பாதிக்கப்படவில்லை யென்றும்,கோர்ட்டு டிபாஸிட்டிலிருந்த மிகுதித் தொகையை வாதிகள் தங்கள் பெந்தகக்கடனுக்கு வுளவடைத்துக்கொள்ள பாத்திய முடையவர்களென்றும் இந்தக் கேசின் நிலைமையில் வாதிகளுக்கு அத்தொகைக்கு வட்டி கிடைக்கத்தக்கதில்லை யென்றும் சப் ஜட்ஜி தீர்மானஞ் செய்துவிட்டார்கள். இது விஷயமாக அப்பீல் செய்யப்பட்டதில் வாதிகளின் தாவாவுக்கு காலாவதி தோஷம் பார்க்கவேண்டியது 120-வது ஆர்டிகிள்படிக்கா அல்லது 132-வது ஆர்டிகிள் படிக்கா என்று ஜட்ஜிகளிருவருக்குள் அபிப்பிராய பேதங்களேற்பட்டு

விட்டதால் மூன்றாவது ஜட்ஜியின் தீர்மானத்துக்கு அனுப்பப்பட்டதில் அவர்கள் வாதிகளின் தாவாவுக்கு காலாவதி தோஷமில்லையென்று கீழ்கோர்ட்டார் செய்ததீர்மானத்தை யுறுதிசெய்து பிரதி வாதிகளின் அப்பீலைத்தள்ளுபடி செய்து விட்டார்கள்; அதனால் அவர்கள் மாக்ஷிமை தங்கிய சக்கரவர்த்தியவர்களின் கவுன்ஸிலில் அப்பீல் செய்திருக்கிறார்கள்.

அப்பீல் தார்களுக்குக் கிடைக்க வேண்டிய முன் பெந்தக் டிக்கிரி கடனுக்காக அச்சொத்துக்கள் ஏலம் போடப்பட்டபோது அ. பிரதிவாதிகளுக்கு (வாதிகள்) இருந்த பாத்தியம் போய் விட்டதென்றும், அந்த பெந்தக வழக்கில் வாதிகளும் கக்ஷிக்காரர்களாகச் சேர்க்கப்பட்டிருக்கிறார்களென்றும், அந்த ஏலத்தினாலே அந்தக் கிராமத்தில் வாதிகளுக்கிருந்த பொறுப்புப் போய் விட்டதென்றும், பெந்தகம் வைத்தவர்கள் வாதிகளுக்கு அடமானமாக வைத்தது அவர்களுக்கிருந்த மீட்கும்படியான பாத்தியமென்றும், மேலே சொன்ன ஏலவிற்று முதலினால் வாதிகளுக்கிருந்த பாத்தியம் போய் விட்டதென்றும், அதனால் மிகுதியாயிருந்த தொகை வாதிகளுக்கு பாத்தியமுள்ள பெந்தகப் பொறுப்புத் தொகையல்லவென்றும், அதைப்பிசகாக கோர்ட்டிலிருந்து வாங்கினவர் பேரில் வழக்கிடுவது ஒரு ஸ்தாவர சொத்தின் பொறுப்பின் பேரில் வழக்கிடுவதாக மாட்டாதென்றும், அதனால் லிமிட்டேஷனைச் 132-வது ஆர்டிகிள் தாவா கேசுக்கு ஒற்றுமையில்லையென்றும், 120-வது ஆர்டிகிள் தான் ஒற்றுமையானதென்றும், டிரான்ஸ்வர் அவ் பிராபர்டி ஆக்ட் 88-வது 89-வது செக்ஷன்கள், பழைய சிவில் புரஸீஜர்கோடு 295-வது செக்ஷன் இவைகளை யாதாரமாகக்காட்டி அப்பீல் தார்களின் வக்கீல் கக்ஷியாடுகிறார்.

தீர்ப்பு.

வாதிகளின் தாவா ஸ்தாவர சொத்தின் பொறுப்பின் பேரில் தொகை கிடைக்க வேண்டுமென்ற வழக்கல்லவாகையால், வாதிகளின் தாவாவுக்கு காலாவதி தோஷம் 120-வது ஆர்டிகிளின் படிதான் பார்க்க வேண்டுமென்பது அப்பீல் தார்களின் முக்கிய விவாதம். தாவா தொகையை வாங்க பாத்தியமற்ற அப்பீல் தார்கள் அத்தொகையை வாங்கி விட்டதால் இது பழைய சிவில் புரஸீஜர் கோடு 295-வது செக்ஷன்படி அதிற்கண்ட கெடுவுக்குள் வழக்கிட வேண்டுமென்றுங் கக்ஷிபாடுகிறார்கள். இந்தக்கடைசிக் கட்சி தாவா கேசுக்கு எந்த விதத்திலும் ஒற்றுமையில்லை. அப்பீல்தார்கள் ஏலம் போட்டு தங்களுக்குச் சேரவேண்டிய முன் பெந்தக டிக்கிரிக்கடனை யுளவடைத்துக்கொண்டது போக மிகுதியாயிருந்தது வாதிகளின் பெந்தக்கடனுக்குக் கட்டுப்படத்தக்கவை. வாதிகளை மோசஞ்செய்ய வேண்டியநிமித்தம் அப்பீல் தார்

கள் கோர்ட்டு டிபாஸிட்டிலிருந்த தொகையைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். அந்தத்தொகையில் வாதிகளுக்கு பாத்தியமிருந்து கொண்டிருக்கிறது. இந்த வழக்குக்கு 132-வது செக்ஷன்படி 12 வருட காலாவதி தோஷமேயன்றி வேறல்ல; இந்த அப்பீல் பிரயோஜனமற்றது.

இந்த அப்பீலைத்தள்ளுபடி செய்யும்படி மாக்ஷிமை தங்கிய சக்கரவர்த்தியவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

அப்பீல் தள்ளுபடி செய்யப்பட்டது.

1914 M. W. N. 83.

சென்னை ஹைகோர்ட்.

1912 ௵த்திய சீவில் ரிவிஷன் மனுநம்பர் 373.
தீர்ப்பு 9—12—13.

ஜட்ஜி	ருகவ அய்யங்கார். மனுதார் (வாதி)
	V
சதாசிவய்யரவர்கள்	சாமாசாரியார் எதிர் மனுதார் பிரதி [வாதி

17. [டிரான்ஸ்பர் அவ் பிராபர்டி ஆக்ட்]

ஒருவன் ஒரு சொத்தை அத்தறுதியாக விற்றதாக தஸ்தாவேஜி எழுதிக்கொடுத்து விட்டு தனக்கு அச்சொத்து பாத்தியமில்லாததால் அதை ஸ்வாதீனபடுத்திக் கொடுக்க முடியாவிட்டால் அந்தக் கிரயத் தொகையைத் திருப்பிக்கொடுத்து விடவேண்டியதவசியமென்பது.

சிதம்பரம் டிஸ்டிரிக்ட் முனிசீப் கோர்ட்டு 1911௵த்திய ஸ்மால்காஸ் 2656 நம்பர் தீர்ப்பின் பேரில் ஹைகோர்ட்டில் ரிவிஷன் மனு.

ஒரு நிலம் கவர்ன்மெண்டுக்குச் சொந்தமாயிருந்தது. அதை தர்க்காஸ்தின் பேரில் அடமானஞ் செய்யவேண்டுமென்று D. B. இருவரும் மனுக்கொடுத்திருந்தார்கள். முதலில் D. என்றவருக்கு அடமானஞ் செய்யப்பட்டது. இவர் உடனே இந்த சொத்தை பிரதி வாதிக்கு விற்று விட்டார். இந்த தர்க்காஸ்து அடமானத்தின் பேரில் B. அப்பீல் செய்ததில் Dக்கு ஏற்பட்ட அடமானத்தை ரத்து செய்து Bக்கு அடமானஞ்செய்து விட்டார்கள். இந்த நிலம் பிரதிவாதியால் வாதிக்கு 1910௵ ஆகஸ்டு மாதம் 25ந்தேதி விற்கப்பட்டது. "இந்த நிலவிஷயமாக என் மூலமாக ஏதேனும் விவாதங்களேற்படுமானால் நான் அதைத் தீர்த்து வைக்கிறேன்" என்று அந்த சாசனத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இந்த நிலத்தை வாதிக்கு பிரதிவாதி ஸ்வாதீனப்

படுத்திக் கொடுக்கவில்லை. தாவா சொத்தில் பிரதிவாதிக்கு எவ்வித பாத்தியமுமில்லாததால் இந்த சாசனத்தொகை கிடைக்க வேண்டுமென பிரதிவாதி பேரில் வழக்கிட்டார். தாவா சொத்தில் பிரதிவாதிக்கு சரியான பாத்தியமில்லையென்று வாதிக்கு நன்றாகத் தெரிந்தே வாதி சாசனம் பெற்றதாகவும், பிரதிவாதி தன்னிடமிருந்த மூலாதாரவுகளைக் கொடுத்து தனக்கிருந்த பாத்தியங்களைச் சொல்லியே சாசனஞ்செய்ததாகவும், தனக்கு பாத்தியக் குறைவு இருந்ததை மறைத்து சொல்லவில்லையென்றும் டிஸ்டிரிக்ட் முனிசிப் வாதியின் வழக்கைத்தள்ளுபடி செய்துவிட்டார்கள். அதன் பேரில் இந்த ரிவிஷன் மனு கொடுபட்டிருக்கிறது.

தீர்ப்பு.

பிரதிவாதிக்கு சொத்து பாத்தியமில்லாவிட்டாலும், பிரதிவாதி விற்கும் நிலத்தை வாதி பெற்றுக்கொள்ளுகிறதென்று வாதி சம்மதித்திருந்ததாக முனிசிப் கண்டுபிடிக்கவில்லை. டிரான்ஸ்பர் அவ்பிராபர்டி ஆக்ட்டு 55-வது செக்ஷன் a முதல் f வரையிலுள்ள கிளாஸ்படி சாசனஞ்செய்பவன் செய்யவேண்டிய விஷயங்களெல்லாஞ் செய்துவிட்டதாகவும், அவைகளில் எவ்வித தவறுதல்களுமில்லையென்றும் முன்சீப் கண்டுபிடித்திருக்கிறார். இதுவும் சரியானதல்ல, ஏனென்றால் விற்ற சொத்தை வாதிக்கு ஸ்வாதீனஞ் செய்துகொடுக்க பிரதிவாதியால் முடியவில்லை. தகுந்த பாத்தியமுடையவன் வசத்தில் அச்சொத்து இருந்து வருகிறது. இந்த நில விஷயமாக தன் மூலமாக ஏதேனும் விவாதங்கள் ஏற்படுமானால் தானே தீர்த்துவைக்கிறதென்று பத்திரத்தில் ஏற்பட்டிருப்பதால் சொத்து பாத்தியதையைப்பற்றி எவ்வித உடன்படிக்கையு மேற்படவில்லையென பிரதிவாதியின் வக்கீல் ஆக்ஷேபிக்கிறார். இந்த வாசகத்தின் கருத்து அதுவல்லவென்று நான் நினைக்கிறேன். தாவா சொத்தில் பிரதிவாதிக்கு பாத்தியமில்லாமையைப்பற்றியாவது: அல்லது பிரதிவாதியின் நடவடிக்கையினாலாவது வாதிக்கு முழு சுதந்தரமாவது பாத்தியமும் சமாதானமுமாகிய ஸ்வாதீன பாத்தியமாவது கிடைக்காவிட்டால், அந்தக் குறைவுகளை நிவர்த்தி செய்துகொடுத்து விடுவதாக பிரதிவாதி யொப்புக்கொண்டிருக்கிறார். இ. லா. ரி. 25 கல்கத்தா 293 தாவா கேசுக்கு மிகவும் ஒற்றுமையாகவிருக்கிறது. ஆகையால் டிஸ்டிரிக்ட் முனிசிப் செய்த தீர்ப்பை ரத்துசெய்து வாதியின் தாவாப்படியே தொகையும் இந்த இரண்டு கோர்ட்டுச் செலவுகளும் வாதிக்குக் கிடைக்கவேண்டியதாகத் தீர்மானிக்கிறோம்.

1 The Law weekly 8.

OFFICE OF THE REGISTRAR ... 6 APR 1914 ... MADRAS

ஹைகோர்ட்டு தீர்மானங்கள்

தமிழ்ப்பாஷை பயின்றவர்கள் வியவகார நுட்பங்களை எளிதில் உணரும் பொருட்டு பிரசுரிக்கப்படும் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

புத்தகம்-1 } மாயவரம் 1914ஹு மார்ச்சுமீ { இலக்கம்-7

சென்னை ஹைகோர்ட்.

1912ஹுத்திய 51-நம்பர் ஆர்டரின் பேரில் அப்பீல்.

தீர்ப்பு 19—9—13.

ஜட்ஜிகள்.	முத்துராக்கு மானியகாரன். (வாதி) அப்பீல்தாரன்
ஜஸ்டிஸ் மில்லரவர்கள்	V
ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள்	ராக்கப்ப மானியகாரன் ஆ. அ. பிரதிவாதிகள்.

7. [காண்டிராக்ட் ஆக்ட்.]

பிரதம ஆதாரத்தின் பேரில் தீர்மான மேற்படாத கேஸ்களில் கீழ்க்கோர்ட்டு தீர்ப்பை ரத்து செய்யாமல் கேசை ரிமாண்டு செய்ய வேண்டுமென்பதும், பெந்தகம் வைக்கப்பட்ட இரண்டு சொத்துக்களில் ஒன்றை முன் பாத்தியதைக்கு உட்படுத்தாமல் விற்கும்பட்சத்தில் அந்தச் சாசனம் பெற்றவன் அந்தப் பெந்தகத் தொகையைக் கொடுத்துவிட்டு மற்ற சொத்தை வாங்கினவன் பேரில் அத்தொகைக்கு வழக்கிடலாமென்பது.

பிராதிற் கண்ட இரண்டு ஷெடியூல் சொத்துக்களுக்கும் முதற் பிரதிவாதி சொந்தக்காரராயிருந்தார். அவைகளில் முதல் ஷெடியூல் சொத்தை வாதியின் தகப்பனாருக்கு 1895-வருஷம் ஜூலை மாதம் 31-ந் தேதியில் விற்றார். அது ஜமீன்தாருக்கு 1889 வருஷத்தி லேற்பட்டிருந்த முன் பாத்திய மனனியில் விற்கப்பட்டதாகத் தெரிவிக்கக் கூடிய விஷயங்களிருந்தன. இதற்கு மறு தேதியில் அதாவது 1895 வருஷம் ஆகஸ்டு மாதம் 1-ந் தேதியில்

2-வது ஷிடியூல் சொத்து 2-ம் பிரதிவாதிக்கு விற்கப்பட்டது. அந்தச் சாசனத் தொகையில் சில பாகம் ஜமீன்தாருக்கு ஏற்பட்ட 1889 வருஷத்திய பெந்தகக் கடன் தீர்க்க வேண்டியதாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இந்த 2-ம் பிரதிவாதி இந்த ஜமீன்தாருடைய கடனைக் கொடுக்கவில்லை. ஜமீன்தார் முதல் பிரதிவாதி பேரிலும் வாதியின் தகப்பன் பேரிலும் பிராது செய்ததில் இரண்டு ஷிடியூல் சொத்துக்களை ஏலவிற்பனை செய்கிறதென்றும், முதல் பிரதிவாதி வாதியின் தகப்பன் இவர்களைத் தொடர்ந்தும் தொகை வசூலித்துக்கொள்ளுகிறதென்றும் கேட்டிருந்தார். இந்த வழக்கு மத்தியில் வாதியின் தகப்பனிறந்துவிட்டபடியால் இரண்டு ஷிடியூல் சொத்துக்களைப் பொருத்தும் முதல் பிரதிவாதி பேரிலும் டிக்கிரி யேற்பட்டது. இந்த 1901 வருஷத்திய டிக்கிரி நிறைவேற்றப்பட்டு வாதிக்குச் சொந்தமாயுள்ள முதல் ஷிடியூல் சொத்து ஏல விற்பனைக்குக் கொண்டுவரப் பட்டதில் வாதி தன் சொத்தை காப்பாற்ற வேண்டிய நிமித்தம் அந்த டிக்கிரித் தொகை முழுதும் செலுத்திவிட்டு அந்தத் தொகை 2-வது ஷிடியூல் சொத்தின் பொறுப்பின் பேரிலும் முதல் பிரதிவாதியின் சரீர ஜவாப்தாரியின் பேரிலும் கிடைக்க வேண்டுமென்று தூத்துக்குடி டிஸ்டிரிக்ட் முனிசீப் கோர்ட்டில் வழக்கிட்டார்.

ரூபா – 260-ம் அதற்கு 1908 வருஷம் டிசம்பர் மாதம் 16-ந் தேதி முதல் டிக்கிரித் தேதிவரையில் 100-க்கு 4-வீதமும், வட்டி டிக்கிரி தேதி முதற்கொண்டு ரூபா 100-க்கு 6-வீதமும் வட்டி கொடுபடவேண்டியதென்றும், டிஸ்டிரிக்ட் முனிசீப் உத்திரவு செய்தார்கள். 2-ம் பிரதிவாதியின் சரீர ஜவாப்தாரியின் பேரிலும் டிஸ்டிரிக்ட் முனிசீப் டிக்கிரி செய்ததாகத் தெரிகிறது.

இதைப் பற்றி டிஸ்டிரிக்ட் கோர்ட்டில் அப்பீல் செய்ததில் வாதியின் தகப்பனுக்கும் 2-ம் பிரதிவாதிக்கும், உடன்படிக்கையின் இரகசியம் (Privity of Contract) கிடையாதாகையால் ஜமீன்தாரின் கடனைக் கொடுப்பதாக 2-ம் பிரதிவாதி வாக்குறுதி சொல்லியிருந்தபோதிலும் ஜமீன்தாருக்கு வாதி கொடுத்த முழுத்தொகையும் 2-வது ஷிடியூல் சொத்தின் பொருப்பின் பேரில் 2-ம் பிரதிவாதியிடமிருந்து வசூலிக்கக் கூடாதென்றும், 1-வது, 2-வது ஷிடியூல் சொத்தின் பொருமானத்தின் தாயாஷாவின் பேரில் வாதி கொடுத்திருக்கும் பெந்தகக் கடன் தொகையை வீதாசாரஞ்

செய்து வாதி வீதம் போக பாக்கித் தொகைக்கு மட்டில் 2-வது ஷிடியூல் சொத்தின் பேரில் வீதசாரத் தொகை வசூலிக்கலாமென்றும், காண்டிராக்ட்டு ஆக்ட்டு 69-வது செக்ஷன் தாவா கேசுக்கு ஒற்றுமையானதல்லவென்றும், தீர்மானஞ் செய்தார்கள். அதனால் அந்த 2-வது அப்பீலில் வாதியின் வக்கீல் அடியிற் கண்ட விஷயங்களைக் கண்டு கக்ஷிபாடுகிறார்.

(a) வாதியின் தகப்பனுக்கும், 2-ம் பிரதிவாதிக்கும் உடன்படிக்கையின் இரகசியம் அதாவது பிரிவிடி அவ் காண்டிராக்ட் ஏற்பட்டிருக்கிறதென்று டிஸ்டிரிக்ட் ஜட்ஜி கண்டுபிடித்திருக்க வேண்டும்.

(b) காண்டிராக்ட்டு ஆக்ட்டு 69-வது 70-வது செக்ஷன்களின்படி ரூபா 260 சொச்சம் முழுவதும் 2-ம் பிரதிவாதியிடமிருந்து வசூலிக்க வாதி பாத்தியமுடையவர்.

(c) பொது சட்டத்தின் படிக்கும் அந்தப்படி வசூலிக்க வாதி பாத்தியமுடையவர்.

(d) முதல் பிரதிவாதியின் ஜவாப்தாரியை நீக்கி டிஸ்டிரிக்ட் முனிசீப் செய்த தீர்மானத்தின் பேரில் வாதி அப்பீல் செய்யாதிருந்தாலும் டிஸ்டிரிக்ட் ஜட்ஜி முதல் பிரதிவாதி பேரில் டிக்கிரி செய்திருக்கவேண்டும்.

(e) பிரதம ஆதாரத்தின் பேரில் (Preliminary ground) டிஸ்டிரிக்ட் முனிசீப் தீர்மானஞ் செய்யாதிருப்பதினாலே டிஸ்டிரிக்ட் ஜட்ஜி கீழ்க் கோர்ட்டு டிக்கிரியை ரத்து செய்து கேசை திரும்ப அனுப்பியது (ரிமாண்டு செய்தது) பிசகு.

கடைசி கக்ஷியை முதலில் கவனிப்போம். சட்டக் கருத்து ருஜுவம்சம் இந்த இரண்டு விஷயங்களைப் பற்றிய கேசாகவிருந்தாலும் வாதிக்கு 2-ம் பிரதிவாதியாலும் 2-வது ஷிடியூல் சொத்தாலுங் கிடைக்கக் கூடிய வீதாசாரத் தொகையின்னதென்பதைப் பற்றி விசாரித்து தெரிவிக்கும்படி (1913) 20 Indian Cases 39 தீர்மானத்திற் சொல்லியபடி கேசை ரிமாண்டு செய்யலாமேயன்றி முதல் கோர்ட்டார் தீர்ப்பை டிஸ்டிரிக்ட் ஜட்ஜி ரத்து செய்தது பிசகு. ஆகையால் கீழ் அப்பீல் கோர்ட்டார் செய்த வுத்திரவு எந்த விதத்திலும் ரத்து செய்யப்படவேண்டும்.

முதலாவது விவாதத்தைப் பற்றி ஆலோஜிப்போம். வாதியின் தகப்பனுக்கும், 2-ம் பிரதிவாதிக்கும் பிரிவிடி அவ் காண்டிராக்ட் இருந்ததா வென்பது ருஜுவம்சம். இவ்வித காண்டிராக்ட் இல்லை யென்று கீழ் அப்பீல் கோர்ட்டார் கண்டுபிடித்தது பிசகென்று சொல்ல நான் தயாராக விருக்கவில்லை.

சட்டத் தாத்பரியமுள்ள மற்ற மூன்று விஷயங்களுக்குள் விவாதம் (d) யை முதலில் எடுத்துக் கொள்ளுவோம். முதல் பிரதிவாதியை நீக்கி டிஸ்டிரிக்ட் முனிசிப் செய்த தீர்மானத்தின் பேரில் வாதி அப்பீல் செய்யாதிருந்தாலும், முதல் பிரதிவாதி பேரில் டிக்கிரி செய்ய டிஸ்டிரிக்ட் ஜட்ஜிக்கு அதிகார மிருக்கிறதென்பதற்குச் சந்தேகமில்லை. (41-வது ஆர்டர் 33-வது ரூலைப்பார்க்க). ஆனால் இந்தக் கேசில் கீழ் அப்பீல் கோர்ட்டார் முதல் பிரதிவாதி பேரிற் டிக்கிரி செய்திருக்க வேண்டுமென்று நான் சொல்லக்கூடாது. ஏனென்றால் முதற் பிரதிவாதியிடத்தில் 2-ம் பிரதிவாதி ஒப்புக் கொண்டபடி ஜமீன்தாருக்குக் கொடுபட வேண்டிய தொகையை 2-ம் பிரதிவாதி கொடுக்காம லிருந்தது அவர் பேரிற் பிசகு; இதனாற்றான் எல்லாச் சங்கடங்களும் நேர்ந்தன. வாதியை மோசஞ் செய்த விஷயம் முதற் பிரதிவாதிக்குத் தெரியமாட்டாது.

இப்போது நாம் ஆலோஜிக்க வேண்டியதாக பாக்கியாகவுள்ளது b. c. இந்த இரண்டு விவாதங்கள்.

(b) காண்டிராக்ட்டு ஆக்ட்டு 69-வது, 70-வது செக்ஷன்களின்படி 2-ம் பிரதிவாதியிட மிருந்து முழுத் தொகையும் வசூலிக்க வாதிக்குப் பாத்தியமுண்டு.

(c) பொது சட்டப்படிக்கும் அத் தொகை முழுவதும் வசூலிக்க வாதிக்குப் பாத்தியமுண்டு. இந்த இரண்டு கக்ஷிகளும் சரியானதென்று நினைக்கிறோம். பெந்தகம் வைத்தவனிடமிருந்து வாதி அச்சொத்தை சாசனம் பெற்று அந்தப் பெந்தகத் தொகையை கொடுத்துத்தீர்ப்பதாகஅந்தத்பெந்தகம் வைத்தவனிடம் ஒப்புக்கொண்ட பிரதிவாதி தான் ஒப்புக்கொண்டபடி கடனைக் கொடுத்துத் தீர்க்காததினாலே வாதி அந்தப் பெந்தகபத்திரத்தின்பேரி லேற்பட்ட டிக்கிரித் தொகையை வாதி கொடுத்துவிட்டு அத்தொகையைப் பற்றி பிரதிவாதி பேரில் வழக்கிட்டு வசூலிக்கலாமென்று (1913) 19 Indian Case 676 தீர்மானமேற்

பட்டிருக்கிறது. பெந்தகம் வைத்தவன் பிரதிவாதிபேரில் வழக்கிட்டு அத்தொகையை வசூலிக்க பாத்தியமுடையவனாகவிருப்பதால். அவன் ஸ்தானத்திலிருக்கும் வாதியும் அத்தொகையை வசூலிக்கலாமெனத் தீர்ப்பு செய்திருக்கிறார்கள். இது நீதிக்கும் நடு நியாயத்துக்கும் (Equity) நல்ல மனச் சாட்சிக்கும் பொருந்தியதாக விருக்கிறது. ஆகையால் (c) கக்ஷியை நான் ஆதரிக்கிறேன். (b) கக்ஷியைப்பற்றி கவனிப்போம். பிரதிவாதி B க்கு சில தொகை கொடுத்துவிடுவதாக தகுந்த பிரதிப் பிரயோஜனத்தின் பேரில் A யிடம் ஒப்புக்கொள்ளுகிறார். B அந்த கண்டிராக்ட்டை நிறைவேற்றலாமென்று 1912 C W. N. 1143 தீர்மானமேற்பட்டிருக்கிறது. ஜமீன்தாருடைய டிக்கிரிக்கடனை தீர்க்கக் கடமைபூண்ட 2ம் பிரதிவாதி அத்தொகையைக் கொடாததினாலே அக்கடனை நிவர்த்திக்க பாத்தியப்பட்ட வாதி அத்தொகையைக் கொடுத்துவிட்டு பிரதிவாதி பேரில் அத்தொகைக்கு வழக்கிட வாதிக்குப் பாத்தியமுண்டு. கான்டிராக்ட்டு ஆகட்டு 69-வது செக்ஷன் தாவா நேசுக்குப் பொருத்தமானது. இ லா. ரி. 26 சென்னை 497, 33 சென்னை 232, 28 அலகாபாத் 563, 2 M. W. N. 285, இவைகள் தாவா கேசுக்கு ஒற்றுமையானவை. இதனால் டிஸ்டிரிக்ட் ஜட்ஜி செய்த தீர்மானத்தை ரத்து செய்து டிஸ்டிரிக்ட் முனிசீப்பு செய்த தீர்மானத்தை யுறுதி செய்கிறோம். ஆனால் இந்த டிக்கிரித் தொகைக்கு 2ம் பிரதிவாதி பேரில் சரீர பாத்தியமில்லை. இவ்விஷயம் டிஸ்டிரிக்ட் முனிசீப்பின் டிக்கிரியிற் றெளிவாயிருக்க வேண்டும்.

1913 M. W. N. 1047.

சென்னை ஹைகோர்ட்.

1911 ஞூத்திய சீவில் ரிவிஷன் மனு நம்பர் 719

தீர்ப்பு 20—11—13

ஜட்ஜிகள்.	சொர்ணலிங்க முதல் வாதி மனுதார்
	V
ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள்	பாச்சிநாய்க்கன் என்கிற பாச்சியப்ப நாய்க்கன் ஆ
ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர் அவர்கள்	பிரதிவாதிகள் எதிர் மனுதார்கள்

3. நெகோஷியபில் இன்ஸ்ட்ருமெண்டு ஆக்ட்டு.

சிலர் வாங்கிக்கொண்ட தொகையை பலர் கொடுத்துவிடுவதாக வாக்குறுதி சொல்லும்பட்சத்தில் அதுவே எல்லோருக்கும் பிரதிப் பிரயோஜனமாகுமென்பது.

1 முதல் 5 பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்த பிராமிசரி நோட்டின்படி அவர்கள் எல்லோராலுந்தொகை கிடைக்கவேண்டுமென வாதி வழக்கிட்டார். 5-ம் பிரதிவாதி தான் யாதொரு தொகையும் அடையவில்லையென்றும், தான் மற்ற பிரதிவாதிகளுடன் சேர்ந்து தாவா பிராமசரி நோட்டில் கையெழுத்து செய்யும்பட்சத்தில் மற்ற பிரதிவாதிகள் இந்த நோட்டின் தொகையை கொடுத்து தீர்த்து விடுவார்களென்று வாதி சொன்னதை நம்பி தாவா நோட்டில் கையெழுத்து செய்ததாகவும், தன்னால் யாதொரு தொகையுங் கிடைக்கத்தக்கதில்லை யென்றும் இந்த 5-ம் பிரதிவாதி கக்ஷிபாடினார். வாதிக்கும் 5-ம் பிரதிவாதிக்கும் எவ்வித பிரதிப் பிரயோஜனமில்லையென்று 5-ம் பிரதிவாதியை இந்த தாவாவினின்றும் நீக்கி மற்ற பிரதிவாதிகள் பேரில் மட்டில் டிஸ்டிரிகட் முனிசீப் தீர்ப்பு செய்தார். இதன் பேரில் வாதி இந்த 5—ம் பிரதிவாதியையுங் கட்டுப்படுத்தித் தீர்ப்பு செய்யவேண்டுமென இந்த ரிவிஷன் மனுக்கொடுத்திருக்கிறார்.

தீர்ப்பு.

சிலரிடங் கொடுபட்ட தொகையை பலர் சேர்ந்து கொடுப்பதாக ஒப்புக்கொண்டபோதிலும் தொகை பெற்றுக்கொள்ளாதவர்களுக்கு எவ்விதப் பிரதிப் பிரயோஜனமுமில்லாததால் அவர்களைக் கட்டுப்படுத்தக் கூடாதென்று டிஸ்டிரிக்ட் முனிசிப் தீர்ப்பு செய்தது பிசகு. சிலரிடந் தொகை கொடுபட்டதே அத்தொகையைக் கொடுப்பதாக வொப்புக்கொண்ட மற்றெல்லோருக்கும் பிரதி பிரயோஜனமாகும். தாவா பிராமிசரி நோட்டில் எல்லோருஞ் சேர்ந்து கொடுப்பதாக வொப்புக்கொண்டுவிட்டு அதே சமயத்தில் தான்மட்டில் அத்தொகையை கொடுக்கவேண்டியதில்லையென்று எக்கிரிமெண்டு ஏற்பட்டிருப்பதாக 5-ம் பிரதிவாதி கக்ஷி சொல்வது சாக்ஷிய சட்டம் 92-வது செக்ஷனுக்கு நேர் விரோதமாயிருக்கிறது. 5ம் பிரதிவாதியின் விவாதத்தினால் அவர் தாவா தொகைக்கு ஜாமீன்தாராக இருந்ததாகத் தெரிகிறது.

பிரதான கடன்காரன் தொகையை வாங்கிக்கொள்வது ஜாமீன்தாரனை கட்டுப்படுத்துவதற்கு போதுமானப் பிரதிப்பிரயோஜனமென்று காண்டிராக்ட் ஆக்ட்டு 127-வது செக்ஷனிற் சொல்லப்பட்டிருக்கிறது. கடன்காரன்போலவே ஜாமீன்தாரனுங் கட்டுப்படவேண்டுமென அந்த ஆக்ட்டு 128-வது செக்ஷனிற் சொல்லப்பட்டிருக்கிறது. எதிர் மனுதார் வக்கீல் எடுத்துக்காட்டும் 20 சென்னை லா ஜர்னல் 144 கேஸ் இந்தக் கேசுக்குப் பொருந்தியதல்ல. அது ஒரே யொருவன் எழுதிக்கொடுத்த பிராமசரிநோட்டுக்கு பிரதிப் பிரயோஜனமில்லையென்று கக்ஷிபாடியது. பலர் சேர்ந்து ஒரு தஸ்தாவேஜு எழுதிக்கொடுத்திருந்தால் ஒருவன் தான் அந்த தொகைக்கு ஜாமீன்தாரனே யன்றி தான் அத்தொகையைப் பெற்றுக்கொள்ளவில்லையென்ற கக்ஷி சொல்வது பிரயோஜனமற்றதென்று (1913) M. W. N. 336 தீர்மானத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. வாதியின் தாவாப்படியே இந்த 5ம் பிரதிவாதியும் தாவா கடனுக்கு கட்டுப்பட்டவனாகிறான். அதனால் அவன் பேரிலுந் தீர்ப்பு செய்கிறோம். இந்த ரிவிஷன் மனுச் செலவு வாதிக்கு 5ம் பிரதிவாதி கொடுக்கவேண்டும்.

(1914) M. W. N. 27.

சென்னை ஹைகோர்ட்டு.

1912ளுத்திய சீவில் ரிவிஷன் மனு நம்பர் 821.

தீர்ப்பு 27—11—13.

ஜட்ஜி	}	அண்ணாசாமி சாஸ்திரிகள் ஆ. மனுதார்கள் (பிரதிவாதிகள்)
		V
ஜஸ்டிஸ் மில்லரவர்கள்	}	ராமசாமி சாஸ்திரிகள் ஆ எதிர் மனுதார்கள் (வாதிகள்)

2. [ஸ்மால் காஸ் கோர்ட்டு ஆக்ட்.]

அவிபக்த இந்து சகோதரர்கள் தங்கள்குடும்ப சொத்துக்களை பாகப்பிரிவினைசெய்துகொண்ட காலத்தில் தங்கள் தாயாருடையஜீவனாம்சத்துக்கு குடும்ப சொத்தினின்றும் நெல் கொடுக்கப்பட வேண்டியதாக ஏற்பாடு செய்துகொண்டிருந்தால் அந்த ஜீவனாம்சத்தைப் பற்றி ஸ்மால்காஸ் திரப்பில் நடவடிக்கை நடத்த வேண்டுமென்பது.

மாயவரம் சப் கோர்ட்டார் செய்த தீர்மானத்தின் பேரில் ஹைகோர்ட்டில் 1887 வருஷத்திய 9-வது ஆக்ட்டு 25-வது செக்ஷன்படி ஹைகோர்ட்டில் ரிவிஷன் மனு.

வாதிகளின் தகப்பன் S. என்பவரும் பிரதிவாதிகளின் தகப்பன் V. என்பவரும் அவிபக்த சகோதரர்கள். அவர்கள் 1903 வருஷத்தில் பாகப் பிரிவினை செய்து கொண்டபோது அவர்களின் தாயாரை அவள் ஜீவதிசை வரையில் S சம்ரக்ஷித்து வரவேண்டியதென்றும், அவளுக்கு V. கொடுக்கவேண்டிய ஜீவனாம்சத்தை சில ஸ்தாபரசொத்தின் வரும்படியைக் கொண்டு சில நெல் வருஷப் பிரதிவருஷம் பிப்ரவரி மாதம் 26-தேதிக்குள் S. இடத்தில் V. கொடுத்து வரவேண்டியதென்றும் பாக பத்திரத்தில் நிபந்தனை யேற்படுத்திக் கொண்டார்கள். அந்த ஏற்பாட்டின்படி அந்தத் தாயார் S. இடத்தில் வசித்து வந்தாள். பாக பத்திரம் ஏற்பாட்டின்படி இவளுக்கு V. நெல் கொடுக்கவில்லை. இந்த நெல் கிடைக்க வேண்டுமென 1909 வருஷம் பிப்பரவரி மாதம் 26-ந் தேதி வரையில் கிடைக்கக் கூடிய ஜீவனாம்சத் தொகையைப்பற்றி S. தன்னுடைய சகோதரர் V பேரில் வழக்கிட்டு டிக்கிரி பெற்றார். S 1910 வருஷம் டிசம்பர் மாதம் 23-ந் தேதி இறந்தார். இதற்குப் பிறகு இந்தக் கிழவி 1911 வருஷம் ஜூலை மாதம் 13-ந் தேதி வரை வாதிகளுடன் வசித்து வந்தாள். பின்பு இவள் அவளுடைய பெண் வீட்டுக்குப் போயிருந்து 1911 வருஷம் டிசம்பர் மாதத்தில் இறந்தாள். V யும் இறந்துவிட்டபடியால் S ன் பிள்ளைகளாகிய வாதிகள் Vன் பிள்ளைகளாகிய பிரதிவாதிகள் பேரில் 1909 வருஷம் பிப்பரவரி மாதம் 27 தேதி முதல் 1911 வருஷம் ஜூலைமாதம் 13 தேதி வரையிற் கிடைக்கக்கூடிய பாட்டியாரின் ஜீவனாம்சத் தொகையைப்பற்றி வழக்கிட்டார்கள். இந்த தாவா ஜீவனாம்சம் சம்பந்தப்பட்ட வழக்காக விருப்பதினாலே ஸ்மாலகாஸ்திரப்பில் வழக்கிட்டது செல்லாதென்றும், பாகபத்திரத்திற் கண்ட ஏற்பாடு கிழவியின் ஜீவனாம்சத்துக்காக ஏற்பட்டதல்லவென்றும், அவளுக்குச் சொந்தமான நிலத்தின் வரும்படியைப்பற்றி யேற்பட்டதென்றும், அவள் வாதிகளுடனாவது வாதிகளின் தகப்பனுடனாவது வசித்துவரவில்லையென்றும், வாதிகள் அவர்களுடைய சொந்த சொத்தினின்றும் அவளை சம்ரக்ஷித்து வரவில்லையென்றும்,

பிரதிவாதிகள் கக்ஷியாடினார்கள். S அவருடைய தாயாரை தனிமையில் சம்ரக்ஷித்து வரவேண்டியதற்காகவே அவருக்கு நெல் கொடுத்து வரவேண்டுமென்று எக்கிரிமெண்டு ஏற்பட்டதாகவும், அந்த ஏற்பாட்டை நிறைவேற்ற வேண்டியதற்காக இந்த தாவா செய்திருப்பதினாலே ஸ்மால்காஸ் திரப்பில் இந்த வழக்கு கொண்டுவர வேண்டியதென்று தீர்மானித்ததுடன் மற்ற விஷயங்களைப்பற்றியும் வாதிகளுக்கு அனுகூலமாகத் தீர்ப்பு செய்து விட்டார்கள். அதனால் பிரதிவாதிகள் இந்த ரிவிஷன் மனுக் கொடுத்திருக்கிறார்கள். சப் ஜட்ஜி மனுதார்களின் விவாதங்களை பிசகானதாக வெண்ணி விட்டார்களென்றும், தாவா ஜீவனாம்சத் தொகைக்காக வழக்கல்லவென்றும், ஜீவனாம்ச சம்பந்தப் பட்ட வழக்கென்றும், வேறுவித வியாஜ்ஜிய மூலத்தின் பேரில்தாவா ஏற்பட்டாலும் இது ஜீவனாம்சத் தொகை கொடுபட வேண்டியதற்காக ஏற்பட்ட வழக்கென்றும், பாக பத்திரத்தின் ஷரத்துப் படிக்கே ஜீவனாம்சத்துக்கு நில பாத்திய மேற்பட்டு அது பிரதிவாதிகளின் தகப்பன் வசம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறதென்றும், அதனால் இந்தத் தாவா டிரஸ்டு சம்பந்தமான வழக்கென்றும், அதனால் ஸ்மால்காஸ் தீர்ப்பில் வழக்கிட்டது செல்லாதென்றும், மனுதார்களின் வக்கீல் இ. லா. ரி. 4. சென்னை 341, 16-பம்பாய் 537 முதலிய தீர்மானங்களை தன் கக்ஷிக்கு ஆதாரமாகக் காட்டி கக்ஷியாடினார். எதிர் மனுதாரின் வக்கீல் 14. சென்னை லா ஜர்னல் 480 தீர்மானத்தை தன் கக்ஷிக்கு ஆதாரமாக எடுத்துக் காட்டி கக்ஷி சொன்னார்.

தீர்ப்பு.

வாதிகளின் தகப்பனும், பிரதிவாதிகளின் தகப்பப்பனும் அவர்களின் தாயாரை சம்ரக்ஷிக்கக் கடமைப் பட்டவர்கள். அவர்களுக்குள் ஏற்பட்ட பாக பத்திரத்தின்படி பிரதிவாதிகளின் தகப்பன் வாதிகளின் தகப்பனுக்கு சில நெல் கொடுத்து வருவதாக ஒப்புக்கொண்டிருக்கிறார். தாயாரை வாதிகளின் தகப்பன் சம்ரக்ஷித்து வரவேண்டியதுதான் இதற்கு பிரதிப் பிரயோஜனமென்று தெரிகிறது. அவளை வாதிகளின் தகப்பன் ஜீவதிசையில் அவரும் அவருக்குப் பிறகு பிரதி வாதிகளும் சம்ரக்ஷித்து வந்திருப்பதாக சப் ஜட்ஜி கண்டுபிடித்திருக்கிறார். அது சரியானதென்று நான் அபிப்பிராயப் படுகிறேன். இந்தத் தாவா

வாதிகளின் தகப்பனுக்கும் பிரதிவாதிகளின் தகப்பனுக்கும் ஏற்பட்ட எக்கிரிமெண்டை யனுசரித்து இந்த வழக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்த கிழவிக்கு ஜீவனும்சம் ஏற்பட்டிருப் பதைகொடுப்பதற்காக ஏற்பட்டது. 14 சென்னை லா ஜர்னல் 480 தாவா கேசுக்கு சற்றேறக்குறைய ஒற்றுமையாக விருக்கிறது. இது ஸ்பெஸிவிக் பெர்பார்மன்ஸ் அவ் கண்டிராகட்டு(Specific Performance of contract) என்றும், டிரஸ்டு சம்பந்தமான வழக்கென்றும் மனுதார்கள் வக்கில் கக்ஷி சொல்லுகிறார். கீழ்கோர்ட்டில் இவ்வித ஆக்ஷேபனைகள் செய்யவில்லை. இந்த காண்டிராக்ட்டின்படி தொகை கிடைக்கவேண்டுமெனக் கொண்டுவரப்பட்ட வழக்கு. அதனால் இது ஸ்மால்காஸ் திரப்பில் கொண்டுவரவேண்டிய வழக்கேயன்றி வேறல்ல. இதனால் இந்த ரிவிஷன் மனு செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

1 L. W. 19.

சென்னை ஹைகோர்ட்.

1912 ஞூத்திய C. M. A. நம்பர் 167

தீர்ப்பு—20—11—13.

ஜட்ஜிகள்
ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள்
ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர் அவர்கள்

சரஸ்வதி அம்மாள் அ. வாதி
V
R. சுப்பய்யர் ஆ அ. பிரதிவாதிகள்

1. [வார்சு சர்டிபிகேட் ஆக்ட்.]

எந்த கேஸ்களிலும் விசாரணையன்னியில் சர்டிபிகேட் கொடுக்கக் கூடாதென்பதும், புருஷனுக்கு வரவேண்டிய கடன்கள் விதந்து தனக்கு உயில்மூலமாக கிடைத்துவிட்டதாகச் சொல்வாளாகில் அதைப்பற்றி சாக்ஷி விசாரணை செய்யவேண்டியது மெத்த அவசியமென்பதும்.

அப்பீல்தாரியின் புருஷன் ஓவர்சீயர் வேலையிலிருந்து இறந்து போனார். அவர் பண்டாபீசிலும் சேவிங்கிஸ் பாங்கிலும் சில தொகை போட்டிருந்ததுமன்றி வேறு இனங்களிலும் இவருக்கு வரவேண்டிய தொகைகளிருந்தன. இத்தொகைகள் முழுவதும் இறந்த ஓவர்சீயருக்கும் அவருடைய அவிபக்த சகோதார்களுக்கும் பொதுவிற் சொந்தமென்ற விவாதமேற்பட்டது. இத்தொ

கை தன் புருஷனுக்கு ஏகதேசத்திற் சொந்தமென்றும், இவைகளை தன் புருஷன் தனக்கு உயில்மூலமாகக் கொடுத்து விட்டதாகவும் விதந்து கக்ஷியாடினாள். டிஸ்டிரிக்ட் ஜட்ஜி இந்த விதந்துவுக்கு விரோதமாக உத்திரவு செய்துவிட்டபடியால் அவள் இந்தக் கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டிருக்கிறாள்.

சில விஷயங்கள் உபயகக்ஷிக்காரர்களாலும் ஒப்புக்கொள்ளப் பட்டதினின்றும், தொகையின் பாத்தியம் ஒருவருக்குத்தானுண்டென்று ஸ்பஷ்டமாகத் தெரியும்பட்சத்தில் பாத்தியதாருக்கு கோர்ட்டார் சர்டிபிகேட் கொடுத்துவிடலாம். (1913 M. W. N. 175 தீர்மானத்தை பார்க்க.) இவ்வித கேஸ்கள் மெத்த அபூர்வமாகவிருக்கும். மற்ற கேஸ்களில் உபயகட்சிக்காரர்களால் ஒப்புக்கொண்டபோதிலும் சாதாரணமாக விசாரித்தே முடிவு செய்யவேண்டும். தாவா கேசில் டிஸ்டிரிக்ட் ஜட்ஜி எவ்வித விசாரணையு மன்னியில் முடிவு செய்திருக்கிறார். அதனாலதை ரத்து செய்து அடியிற் கண்டதைத் தவிர மற்ற விஷயங்களைப்பற்றியும் விசாரித்து முடிவு செய்யும்படி உத்திரவு செய்கிறோம்.

(1) மனுதாரி சொல்லும் உயில் உண்மையானதா.

(2) இவன் மனுவிற்கண்ட தொகைகள் இறந்தவருடைய தனியான அல்லது சுயார்ஜிதமான சொத்துக்களா.

(1914) M. W. N. 24.

சென்னை ஹைகோர்ட்டு,

1912 ஞூத்திய 2-வது அப்பீல் நம்பர் 1282

தீர்ப்பு 15—10—13.

ஜட்ஜிகள்
ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள்
ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர் அவர்கள்

அய்யாக்குட்டி மண்கொண்டான்
அப்பீல்தார் (வாதி)
V
பெரியசாமி கவுண்டன் ஆ
எதிர்கக்ஷிக்காரர் (பிரதிவாதிகள்.)

2. [ரிஜிஸ்டிரேஷனுக்ட்டு.]

பாகஸ்தர்களின் பங்குவீத சொத்துக்களை காட்டுகிற மெமோராண்டம் ரிஜிஸ்டர் செய்யப்படவேண்டிய தவசியமில்லையென்பதும், அது ருஜுவாக அங்கீகரிக்கப்படலாமென்பதும் ஒப்படைப்பு

வசம் கொடுக்கப்படுவேதானது சொத்தினின்றும் அப்புறப்படுத்திய
தாகாதென்பதும், அதற்கு ஒரு வருஷ காலாவதி தோஷமல்ல
வென்பதும்.

*திண்டுக்கல் டிஸ்டிரிக்ட் முனிசீப் கோர்ட்டு டிக்கிரியின்
பேரில் மதுரை டிஸ்டிரிக்ட் கோர்ட்டில் அப்பீல், அதன்பேரில்
ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல்.*

ஒரு இந்து குடும்பத்தில் மூன்றுபெயர் பாகஸ்தர்கள். அவர்
களிலொருவர் 1 முதல் 5 ஐடசொத்துக்களை குப்பன்ன நாடாரு
க்கு பெந்தகம் வைத்திருந்தார். இந்த நாடார் அந்த பத்திரத்
தின்பேரில் திண்டுக்கல் டிஸ்டிரிக்ட் முனிசீப் கோர்ட்டில் வழக்
கிட்டதில் 1 முதல் 4 ஐடசொத்துக்களில் தன்னுடைய கடன்கி
ரர்வீதம் மூன்றிலொருபாகமும், அவருக்கு சுயார்ஜிதமாயுள்ள 5
ஐடசொத்தும் ஏல விற்பனை செய்யப்படவேண்டுமென கேட்டு
அந்தப்படி டிக்கிரிபெற்று அந்த சொத்துக்களைத் தானே ஏலத்தி
லெடுத்தார். இந்த ஏல சர்டிபிகேட்டின்படி சொத்துக்களை வசப்
படுத்தப் போனபோது இந்த டிக்கிரி கடன்காரனுடைய தகப்ப
னுக்கு சகோதரர்களாயுள்ள இருவர் அச்சொத்து வசப்படுத்தப்
படக்கூடாதென தடைசெய்து விட்டார்கள். இந்தத் தடையை
நிவர்த்தித்து வசப்படுத்த வேணுமென்று ஏலதார் மனுக்கொடுத்
தார். இந்த ஏலதாருக்கு ஒப்படைப்பு வசமட்டில் கிடைக்கக்
கூடியதென்று அந்தப்படி வசப்படுத்தும்படி உத்திரவு செய்து
விட்டார்கள். பிறகு இந்த ஏலதார் தனக்குள்ள பாத்தியதையை
வாதிக்கு விற்றுவிட்டார். வாதி இந்த 1 முதல் 4 வரையிலுள்ள
சொத்தில் மூன்றிலொருபாகம் பிரிவினை செய்தும் 5 ஐடசொத்
தும் தனக்கு வசமாக வேண்டுமென பிரதிவாதிகள் பேரில் வழக்
கிட்டார்.

இந்த தாவாவிற்கண்ட சொத்துக்கள் முழுவதும் தங்கள்
பாகத்துக்கு கிடைத்த சொத்துக்களென்றும், அவை வாதி சாச
னம் பெற்ற கருப்பண்ண நாடாருடைய டிக்கிரி கடன்காரருக்குச்
சொந்தமானதல்லவென்றும், டிஸ்டிரிக்ட் முனிசீப் அசல் வழக்கிட்
டுக்கொள்ளும்படி, உத்திரவு செய்த தேதிக்கு ஒரு வருடங்கழி
த்து இந்த வழக்கு கொண்டுவந்திருப்பதால் வாதியின் தாவா
காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுப் போய்விட்டதென்றும்,
பிரதிவாதிகள் கக்ஷியாடினார்கள்.

பிரதிவாதிகள் சொல்லும் பாகப்பிரிவினை ருஜூப்பிக்கப்பட
வில்லையென்றும், கோர்ட்டு ஏலத்திலெடுத்தவருக்கு அனுகூலமா
கச் செய்யப்பட்ட உத்திரவை நிறைவேற்றுவதற்காக இந்த வழ
க்கு கொண்டுவரப்பட்டிருக்கிறதே யன்றி அதை ரத்து செய்வதற்
கல்லவென்றும், அதனால் வாதியின் தாவா காலாவதி தோஷத்
தால் பாதிக்கப்படவில்லையென்றும், வாதியின் தாவாப்படிக்கே
டிஸ்டிரிக்ட் முனிசீப் தீர்ப்பு செய்துவிட்டார். இந்த கோர்ட்டு
விசாரணையில் பிரதிவாதிகள் பாகப்பிரிவினை விஷயமாக ஒரு தஸ்
தாவேஜி தாகல் செய்தார்கள். அது இந்தியன் ரிஜிஸ்டிரேஷன்
சட்டு 17-வது செக்ஷன் கிளாஸ் (h) படி ரிஜிஸ்டர் செய்யப்ப
டாததினாலே அதை டிஸ்டிரிக்ட் முனிசீப் ருஜூவாக அங்கீகரிக்க
வில்லை.

இத்தீர்ப்பைப் பற்றி பிரதிவாதிகள் டிஸ்டிரிக்ட் கோர்ட்டில்
அப்பீல் செய்ததில் பிரதிவாதிகள் தாகல் செய்த தஸ்தாவேஜி,
பாகப் பிரிவினையை யொப்புக்கொண்ட ஒரு மெமோராண்டமென்
றும் அது ரிஜிஸ்டர் செய்யப்படவேண்டிய தவசியமில்லை யென்
றும் அதனால் முதல் கோர்ட்டார் அந்த தஸ்தாவேஜியை அங்கீ
கரித்துக்கொண்டு அதைப்பற்றியும் மற்ற முக்கிய இஷ்யுக்க
ளைப்பற்றியும் ருஜூக்களை விளங்கி பயிண்டிங் (Finding) அனுப்
பும்படி நம்பரை கீழ்கோர்ட்டுக்கு அனுப்பினார்கள். அதன்படி
முதல் கோர்ட்டார் அந்த தஸ்தாவேஜியை 8 அடையாள ஆதிர
வாக தாகல் செய்துகொண்டு வேறு சாக்ஷிகளையும் விசாரித்து
திருத்திய பயிண்டிங் அனுப்பினார்கள். மறுபடியும் இந்தக் கேஸ்
டிஸ்டிரிக்ட் கோர்ட்டார் முன்பாக விசாரணைக்கு எடுத்தபோது
இவ்விதம் திருத்திய பயிண்டிங் அனுப்பும்படி டிஸ்டிரிக்ட் கோர்
ட்டார் செய்த வுத்திரவு சட்ட விரோதமானதென்று வாதி ஆக்ஷே
பித்தார். டிஸ்டிரிக்ட் கோர்ட்டார் இந்த ஆக்ஷேபனையை நிரா
கரித்து கீழ்கோர்ட்டார் அனுப்பிய திருத்திய பயிண்டிங்கை யங்
கீகரித்து தாவா சொத்துக்கள் பிரதிவாதிகளுக்குச் சொந்தமான
வையென்று வாதியின் வழக்கைத் தள்ளும்படி செய்துவிட்டார்கள்.
அதனால் வாதி இந்த 2-வது அப்பீல் செய்திருக்கிறார்.

8 அடையாள ஆதிரவு ரூபா 100-க்கு மேல் பொருமான
முள்ள சொத்தின் பாகப்பிரிவினையைக் காட்டுவதால் அது ரிஜிஸ்ட
ராகாதிருப்பதினால் அதை ருஜூவாக அங்கீகரித்தது பிசகென்

றும், திருத்திய பயிண்டிங் அனுப்பும்படி உத்திரவு செய்தது முதல் கோர்ட்டாரின் அபிப்பிராயத்தைத் தடைப்படுத்துவதால் அந்த வுத்திரவு சட்ட விரோதமானதென்றும், 19 சென்னை லா ஜர்னல் 228 நம்பர் கேஸ் பிசகானதென்றும், 17 சென்னை லா ஜர்னல் 469, இ. லா. ரி. 13 சென்னை 281, 15 கல்கத்தா வீக்லீ நோட்ஸ் 375 தாவா கேசுக்குப் பொருந்தியதென்றும், இந்த பாக விஷயமாகமுன் நம்பர் நிறைவேறுநடவடிக்கையில் பிரதிவாதிகளுக்கு விரோதமாக B அடையாள வுத்திரவு ஏற்பட்டிருப்பதினால் அவ்வுத்திரவு ஒரு வருட கெடுவுக்குள் ரத்து செய்யப்படாமலிருக்கிற நிலைமையில் அதைப்பற்றி பிரதிவாதிகள் ஆக்ஷேபிக்கத் தடைப்பட்டிருக்கிறார்களென்றும், இவ்விஷயம் முதல் கோர்ட்டிலேயே தெரிவிக்கப்படாவிட்டாலும் அது சட்டக்கருத்தைப் பற்றியதாகையால் அது எந்த காலத்திலுந் தெரிவிக்கலாமென்றும், ஒப்படைப்பு வசமென்பது ஒருவனை யச்சொத்தினின்றும் அப்புறப்படுத்தலாகுமென்றும், இ. லா. ரி. 27 சென்னை 262 பக்கம் 270 இந்தத் தீர்மானத்தை தன் கக்ஷிக்கு ஆதாரமாக எடுத்துக் காட்டி வாதியின் வக்கீல் கக்ஷியாடினார்.

8 அடையாள ஆதிரவு குறிப்பிட்ட ஒரு ஸ்தாவர சொத்தின் பாத்தியதையை யுண்டுபண்ணவாவது, தெரிவிக்கவாவது இல்லையென்றும், அது ஒரு மெமோராண்டமாகையால் அது ரிஜிஸ்டர் செய்யப்படவேண்டிய தவசியமில்லையென்றும், 19 சென்னை லா ஜர்னல் 228 தாவா கேசுக்கு மெத்தப் பொருத்தமானதென்றும், B அடையாள ஒப்புதல் வசம் அந்த டிக்கிரி கடன்காரனை மட்டில் கட்டுப்படுத்துமே யன்றி அது மூன்றாவது மனுஷனை கட்டுப்படுத்தமாட்டாதென்றும், அது சொத்தினின்றும் அப்புறப்படுத்தியதாகவாவது நீக்கியதாகவாவது ஆகமாட்டாதென்றும், தன் கக்ஷிக்காரன் பேரில் எவ்வித வுத்திரவுஞ் செய்யப்படாததினாலே அதை ரத்து செய்யவேண்டிய அவசியமிருந்ததில்லை யென்றும் B அடையாள உத்திரவு பாக விஷயமாக யாதொரு தீர்மானமுஞ் சொல்லாமலே கோர்ட்டு ஏலத்திலெடுத்தவனை அசல் வழக்கிட்டுக் கொள்ளும்படி செய்த உத்திரவென்றும், 9 சென்னை லா ஜர்னல் 175 தீர்மானத்தைக் காட்டி பிரதிவாதிகளின் வக்கீல் எதிர்வாதஞ் செய்தார்.

தீர்ப்பு.

ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர் அவர்கள்:—டிஸ்டிரிக்ட் முனிசீப் புதிய சாக்ஷிகளை விளங்கி தெரிவிக்க வேண்டுமென்று கீழ் அப்பீல் கோர்ட்டார் உத்திரவு செய்தது பிசகென்பது முதலாவது ஆக்ஷேபனை. அப்பீலை முடிவுசெய்த டிஸ்டிரிக்ட் ஜட்ஜி தனக்கு முன்னிருந்தவருடைய நடவடிக்கைகளினாலாவது அவர் செய்த வுத்திரவின்படி டிஸ்டிரிக்ட் முனிசீப் அனுப்பிய தீர்மானத்தினாலாவது தப்பெண்ணங் கொள்ளவில்லையென்று எங்களுக்கு திருப்திகரமாகத் தெரிகிறது. அந்த சாக்ஷியம் எந்த விதத்திலும் அவசியமானதென்றே தெரிகிறது. 8 அடையாள ஆகரவு ரிஜிஸ்டர் செப்பப்படாத தஸ்தாவேஜியாகையால் அதை சாக்ஷியமாக அங்கீகரித்திருக்கக்கூடாதென்பது இரண்டாவது ஆக்ஷேபனை. அது ரிஜிஸ்டிரேஷனாக்டு 17-வது செக்ஷன்படி ஒரு ஸ்தாபரசொத்தில் பாத்தியம், சொந்தம், அல்லது சம்பந்தம் இவைகளை யுண்டு பண்ணுதல், ஸ்தாபித்தல், மாற்றல், வரையறுத்தல் அல்லது போக்கடித்தல் இவைகளைச் செய்யக்கூடியதா வென்பதை நாம் ஆலோஜிக்கவேண்டும். அந்த 8 அடையாள ஆதிரவை பார்வையிடுவதில் பாகப்பிரிவினை யேற்படுவதற்கு முன்பு அவிபக்த பாகஸ்தர்கள் ஒவ்வொருவரிடத்திலுமுள்ள சொத்துக்களுக்கு ஜாப்தாக்கள் எடுத்திருப்பதாகவும் அது பாகவேற்பாட்டுக்கு உபயோகப்படக்கூடியதாகவுந் தெரிகிறது. கடைசியாகச் எல்லா சொத்துக்களையும் மதிப்பிட்டிருப்பதுடன் ஒவ்வொரு பாகத்துக்கும் மதிப்பு போடப்பட்டிருக்கிறது. அடியிற்கண்ட சாக்ஷிகள் முன்பாக பாகப்பிரிவினை செய்துகொண்டோமென்று எழுதப்பட்டிருக்கிறது. இதன் கீழே குடும்ப மூன்றுபாகஸ்தர்களும் கையெழுத்து செய்திருக்கிறார்கள். இதற்கு பின்னால் சாக்ஷிகள் கையெழுத்து செய்திருக்கிறார்கள். இது பாகவேற்பாட்டைப் பற்றிய குறிப்பு அல்லது நியாபக பத்திரம் (memorandum) என்று தெரிகிறது. அது குறிப்பிட்ட ஒரு சொத்தில் பாத்தியதையை யுண்டு பண்ணக்கூடியது அல்லது ஸ்தாபிக்கக்கூடியதல்ல. அது ஏற்கனவே பிரிக்கப்பட்ட சொத்தில் ஒருவருக்குத் தனிமையான பாத்தியதையை ஸ்தாபிக்கக்கூடியதுமல்ல. இந்த தஸ்தாவேஜியினால் ஒரு மெம்பருக்கு தனிமையான சொத்து இன்னதென்று தெரிந்து கொள்ள முடியாது. இது ஒரு பூர்த்தியாகாத தஸ்தாவேஜி. இது

ரிஜிஸ்டர் செய்யப்பட தாகல் செய்யும்பட்சத்தில் இது பிரயோஜனமற்றதென தள்ளிவிடுவார்கள். இது பின்னால் சரியான பாக பத்திரம் ஏற்படுத்திக் கொள்ளவேண்டியதற்காக ஒரு சாக்ஷியமாக விருக்கிறது. ஆனால் பிறகு யாதொரு தஸ்தாவேஜியும் ஏற்படவில்லை. இது பாகம் பிரிவினை செய்யப்பட்ட சொத்து இன்னதென்று காட்டுகிறது. பாகம்பிரிந்ததை மட்டில் தெரிவிக்கும் தஸ்தாவேஜி ரிஜிஸ்டர் செய்யப்படவேண்டிய அவசியமில்லை. அ. பிரதிவாதிகள் 19 சென்னை லா ஜர்னல் 228 தீர்மானத்தை தங்கள் கக்ஷிக்கு ஆதாரமாக எடுத்துச் சொல்லுகிறார்கள் அதனால் 8 அடையாள தஸ்தாவேஜி ரிஜிஸ்டர் செய்யப்படவேண்டுமெனச் சொல்லுங் கக்ஷி பிரயோஜனமற்றது.

திண்டுக்கல் டிஸ்டிரிக்ட் முனிசீப் கோர்ட்டு நிறைவேறு நடவடிக்கையில் 1906 ௵ செப்டம்பர் மாதம் 7ௐ செய்த உத்தரவு முடிவானதென்பதும், அதைப்பற்றி ஒருவருஷத்துக்குள் மேல் நடவடிக்கை நடத்தாததினால் அதிற் சொல்லும் பாகவேற்பாடு முடிவாய்விட்டதென்பதும் மூன்றாவது கக்ஷி இந்த விஷயத்தைப் பற்றி பிராதிற் சொல்லவில்லை. இது விஷயமாக உபயவாதிகளின் விவாதங்களைக் கேட்டதில் இந்தக் கக்ஷியும் நிலைநிற்கக் கூடியதென்று நான் நினைக்கவில்லை. லிமிடேஷனுக்ட்டிற் கண்ட ஆர்டிகிலும், சி. பு. கோடு 21-வது ஆர்டர் 103-வது ரூலும் பாகம் பிரிந்துவிட்டதென்று இந்த வழக்கில் கக்ஷி சொல்லுவதை தடைசெய்ய மாட்டாது. B அடையாள டிஸ்டிரிக்ட் முனிசீப்பின் உத்திரவை நன்றாகக் கவனிக்குமளவில் பாக வேற்பாட்டைப் பற்றி முடிவான தீர்மானஞ் செய்ததாகவாவது, சொத்து ஸ்வாதீனப் படுத்தப்பட வேண்டிய டிக்கிரிதாரன் ஏலதாரன் இவர்களுடைய பாத்தியங்களைப் பற்றி முடிவான அபிப்பிராயஞ் சொன்னதாகவாவது எண்ணப்படக்கூடாது. பிரதிவாதிகள் சொல்லுகிறபடி பாகம் முடிவானதாக தான் நினைக்கவில்லை யென்று அபிப்பிராயப் பட்டிருக்கிறார். அது ஒரு சம்மரி யுத்திரவு; அதில் ருஜுக்களை சரியாக விடவில்லை. பழய சி. பு. கோடு 318-வது செக்ஷன்படி ஏலதாரனுக்கு கிரமமாக வசம் ஏற்படாதது அவனுக்கு பிரதிகூலமானதுதான். அது அப்பீல் பிரதிவாதிகளுக்கு முற்றிலும் அனுகூல மில்லாததென்று சொல்லக்கூடாது. இந்தக் கேஸ் 9-சென்னை லா ஜர்னல் 175.

-600 008.

தீர்மானத்துக்கு மெத்த ஒற்றுமையாக விருக்கிறது. இதனால் இந்த இரண்டாவது அப்பீல் தள்ளுபடி செய்யப்பட வேண்டியதென்று அபிப்பிராயப் படுகிறேன்.

ஜஸ்டிஸ் சதாசிவய்யர் அவர்கள்:—8 அடையாள ஆதிரவில் ஒவ்வொரு பாகஸ்தரும் இனி தனிமையில் எந்த சொத்தையனுபவிக்கிறதென்ற விபரமில்லை. அல்லது முழு சொத்தும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பாகஸ்தர்கள் தனிமையிலாவது கூட்டுப் பயிரிடுங் குடியானவர் போலாவது அனுபவித்து வருகிறதென்றுந் தெரியவில்லை. ஆனால் இந்த பாகஸ்தர்களுக்கு ஸ்தாபர சொத்தில் பொதுவாயிருந்த பாத்தியம் ரத்தாகி விட்டதாக காட்டுகிறது. இதனால் இந்த 8 அடையாள ஆதிரவு ரிஜிஸ்டர் செய்யப்பட வேண்டிய தவசியமென அபிப்பிராயப் படுகிறேன். சாஸ்வத குத்தகைக்கு ஏற்பட்ட தஸ்தாவேஜி ரிஜிஸ்டர் செய்யப்படாவிட்டால் அது செல்லத்தக்கதில்லை யென 17 சென்னை லா ஜர்னல் 469-தீர்மான மேற்பட்டிருக்கிறது. ஒரு ஸ்தாபர சொத்து விஷயமாக பின்னாலேற்பட வேண்டிய ஒரு தஸ்தாவேஜிக்கு ஆதாரமாக முன்னால் வேறு தஸ்தாவேஜி ஏற்பட்டால் அதிற் கண்ட ஸ்தாபர சொத்தின் பொருமானம் ரூபா 100-க்கு மேற்பட்டிருப்பதால் அந்த தஸ்தாவேஜு அவசியம் ரிஜிஸ்டர் செய்யப்பட வேண்டியதென்றும், அது ருஜுவாக அங்கீகரிக்கத் தக்கதல்ல வென்றும், அதிற் கண்ட ஜங்கம சொத்துக்களைப் பற்றியும் ருஜு விடக்கூடாதென்றும், இ லா. ரி. 18. சென்னை 28 தீர்மான மேற்பட்டிருக்கிறது. இயல்பான ஸ்வாதீனங் கொடாவிட்டாலும், ஒப்படைப்பு வசங்கொடுப்பதே டிக்கிரி கடன்காரன் சம்பந்தப்பட்ட வரையில் சரியானவசமென்றே சொல்லப்பட வேண்டும். இது அச் சொத்தை ஸ்வாதீனமாக அனுபவித்து வருகிற மூன்றாவது மனுஷனுடைய பாத்தியதைக்கு விரோதஞ் செய்யமாட்டாது. இந்த மூன்றாவது மனுஷன் அந்த வுத்திரவை ஒரு வருட கெடுவுக்குள் ரத்து செய்துகொள்ள வேண்டிய அவசியம் யாதொன்றுமில்லை. ரிஜிஸ்டர் செய்யப்பட வேண்டியது மெத்த அவசியமானதாகவுள்ள 8 அடையாள ஆதிரவை கீழ் அப்பீல் கோர்ட்டார் அங்கீகரித்தது பிசகு. ஆகிலும் என்னுடைய அறிவிற் சிறந்த சகோதரர் கீழ் கோர்ட்டு தீர்ப்பை யுறுதிசெய்து விட்டபடியால் சி. பு. கோடு 98-வது செக்ஷன்

கிளாஸ் 2-படி இந்த 2-வது அப்பீல் செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

1—L. W. 31.

பம்பாய் ஹைகோர்ட்டு

1913 ஷூத்திய கிரிமினல் அப்பீல் நம்பர் 282

தீர்ப்பு 18—9—13.

ஜட்ஜிகள். மிஸ்டர் ஜஸ்டிஸ் மாக்னியாட் மிஸ்டர் ஜஸ்டிஸ் ஹீடன் மிஸ்டர் ஜஸ்டிஸ் ஷா	}	கங்கபாகார்டெபா ஆ எதிரிகள் அப்பீல்தார்கள் V சக்கரவர்த்தி.

7. [சாக்ஷிய சட்டம்.]

பல எதிரிகளுள்ள கேசில் எல்லா எதிரிகளுஞ் சேர்ந்து குற்றஞ் செய்ததாக சில எதிரிகள் மட்டில் ஒப்புக்கொள்ளும்பட்சத்தில் அந்த ஆதாரத்தின்பேரில் ஒப்புக்கொள்ளாத எதிரிகளை தண்டிக்கக்கூடாதென்பது.

அமீனப்பா என்ற ஒருவர் வீட்டில் 1 முதல் 11 எதிரிகள் சேர்ந்து கொள்ளையடித்ததாக இ. பி. கோடு 395-வது செக்ஷன்படி குற்றஞ் சாட்டப்பட்டு எல்லோரும் தண்டனையடைந்தார்கள். இந்த எதிரிகளில் 4, 9, 10, 11 எதிரிகள் மட்டில் அப்பீல் செய்திருக்கிறார்கள். இந்த எதிரிகளை தண்டித்தது நியாயமானதென்றும், மற்ற எதிரிகள் இந்த அப்பீல்தார்கள் பேரிலுங் குற்றஞ் சாட்டி ஒப்புக்கொண்டது சாக்ஷியமாக அங்கீகரிக்கப்படலாமென்றும், செஷன் ஜட்ஜியின் தீர்ப்பை யுறுதி செய்துவிட்டார்கள். இவ்விதம் மற்ற எதிரிகள் ஒப்புக்கொள்ளுதலை மட்டில் அனுசரித்து இந்த அப்பீல்தார்களை தண்டித்தது நியாயமானதல்லவென்று செஷன் ஜட்ஜியின் தீர்ப்பை ரத்து செய்துவிட்டார்கள். இந்த ஜட்ஜிகளுக்குள் அபிப்பிராய விரோதங்களேற்பட்டுவிட்டதால் மூன்றாவது ஜட்ஜியின் பரிசீலனைக்குக் கொண்டுவரப்பட்டது.

தீர்ப்பு.

1913 வருஷம் ஜனவரி மாதம் 18-19 தேதிகளில் நடந்த கொள்ளையில் இந்த அப்பீல்தார்களை சம்பந்தப்படுத்த எந்த ரிகா

ர்டுகளுமில்லை. இந்த அப்பீல்தார்களுடன் சேர்ந்து விசாரிக்கபட்ட மற்ற எதிரிகள் தாங்களும் இந்த அப்பீல்தார்களுஞ் சேர்ந்து கொள்ளையடித்தோமென்று ஒப்புக்கொண்டதை ருஜுவாக அங்கீகரித்து இவர்களையுந் தண்டித்திருக்கிறார்கள். இவ்விதம் ஒப்புக்கொண்டதும் எல்லாக் கோர்ட்டுகளிலுமில்லை; சில கோர்ட்டுகளில் ஒப்புக்கொண்டார்கள்; சில கோர்ட்டுகளில் மறுதளித்திருக்கிறார்கள். "ஒரே குற்றத்தைப்பற்றி ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் குற்றவாளிகளாக விசாரிக்கப்படுவதில் அவர்களிலொருவன் தானும் மற்றவருஞ் சேர்ந்து செய்ததாக குற்றத்தை யொப்புக்கொண்டால் கோர்ட்டார் அவ்விதம் ஒப்புக்கொள்ளுதலைப்பற்றி அவன் சொல்லும் எதிரிகளும் அவனும் அந்தக் குற்றத்தைச் செய்ததாக அனுமானிக்கலாம்" என்று சாக்ஷிய சட்டம் 30-வது செக்ஷனிற் சொல்லப்பட்டிருக்கிறது. இதற்குப் பலர் பலவிதமான அபிப்பிராயங் கொள்ளவும் பலவித விவாதங்களுண்டாகவுமிடமாயிருக்கிறது. இது ருஜுவென்றுஞ் சொல்லலாம்; விஷயமென்றுஞ் சொல்லலாம். ஒருவன் தான் குற்றஞ் செய்ததாக யொப்புக்கொள்ளுதல் ருஜு, மற்றவனுந் தானுஞ் சேர்ந்து குற்றஞ் செய்ததாக வொப்புக்கொள்ளுவது மற்றவனைப் பற்றினவரையில் ருஜுவாகமாட்டாது. கூட்டாளி எதிரிகள் ஒப்புக்கொள்வதை மட்டில் பொறுத்து மற்ற எதிரிகளை தண்டிப்பது பிசகென்று இந்தக் கோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (இ. லா. ரி. 15 பம்பாய் 66) இந்தத் தீர்மானம் ஊர்ஜிதத்திலிருந்து வருவதால் அதையே நாம் அனுசரிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். சாக்ஷிய சட்டம் 114 செக்ஷன் விளக்கம் (b) அப்ரூவர் சாக்ஷியத்தைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அவன் பிரமாண வாக்கு மூலத்தின் பேரில் விசாரிக்கப்படுவதால் அவன் வாக்குமூலத்தை மற்ற ருஜுக்கள் உறுதிப்படுத்தினால் அதை சாக்ஷியமாக அங்கீகரிக்கலாமெனச் சொல்லப்பட்டிருக்கிறது. மாஜிஸ்டிரேட் முன்பாக குற்றத்தை யொப்புக்கொள்ளுதலைப்பற்றிச் சொல்லப்படவில்லை இந்த அப்பீல்தார்களை விடுதலை செய்யவேண்டுமென்று எனது சகோதரர் ஷா சொன்னது சரியென நான் ஒத்துக்கொள்ளுகிறேன். ஆகையால் கீழ்கோர்ட்டார் செய்த தீர்மானத்தை ரத்துசெய்து அப்பீல்தாரர்களை விடுதலை செய்திருக்கிறோம். 4 எதிரியிடமிருந்து எடுத்துக் கொள்ளப்பட்ட ரூபா 240-ம் அவரிடம் வாப்ஸ் கொடுக்கப்படவேண்டும்.

21 Indian Cases 673.

சென்னை ஹைகோர்ட்.

1912ளுத்திய சிவில் ரிவிஷன் மனு நம்பர் 1026.

தீர்ப்பு 16—12—13.

ஜட்ஜிகள்.	
ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள் ஜஸ்டிஸ் ஸ்பென்ஸரவர்கள்	அடப்ப சுப்பராயடு ஆ. மனுதார்கள் (பிரவாதிகள்.) V டிப்ப போட்ள லக்ஷிமிநரசய்யா ஆ எதிர் மனுதார்கள் (வாதிகள்)

32. [சிவில் புரிஸீஜர் கோடு.]

ஒரு ஸ்தாவர சொத்து ஏலம் போடப்பட்ட பிறகு அச்சொத்தை டிக்கிரி கடன் காரன் வேறொருவனுக்கு விற்றுவிட்டால் இந்த டிக்கிரி கடன்காரன் அந்த ஏலம் ரத்தாக வேண்டுமென மனுக்கொடுக்க பாத்திமில்லை யென்பதும், இது விஷயமாக ஹைகோர்ட்டில் ரிவிஷன் மனுக் கொடுக்க அதிகாரமில்லை யென்பதும்.

டிக்கிரி கடன்காரனுடைய ஸ்தாவர சொத்து 1911 வருஷம் ஏப்பரல் மாதம் 10-ந் தேதி கோர்ட்டாரால் ஏல விற்பனை செய்யப்பட்டது. இவன் இந்த டிக்கிரி கடனை பைசல் செய்யவேண்டிய நிமித்தம் இச் சொத்தை மூன்றாவது மனுஷனுக்கு 1911-வருஷம் மே மாதம் 3-ந் தேதி விற்று முதல் செய்து அத்தொகையினின்றும் இந்த டிக்கிரித் தொகையை 1911 வருஷம் மே மாதம் 6-ந்தேதி கோர்ட்டிற் கட்டி இந்த ஏலம் ரத்து செய்யப்பட வேண்டுமென சி. பு. கோடு 21-வது ஆர்டர் 89-வது ரூல்படி மனுக்கொடுத்தான். டிஸ்டிரிக்ட் முனிசீப் இந்த மனுப்படி ஏலத்தை ரத்து செய்துவிட்டார். இது விஷயமாக வாதிகள் டிஸ்டிரிக்ட் கோர்ட்டில் அப்பீல் செய்ததில் டிக்கிரி கடன் காரன் இந்த ஏலசொத்து முழுவதையும் வேறொருவருக்கு விற்றபடியால் இந்தப் பிரதிவாதிகள் இந்த ஏலம் ரத்து செய்யப்பட மனுக் கொடுக்கபாத்திய மற்றவர்களாகி விட்டதாக டிஸ்டிரிக்ட்முனிசீப் செய்த வுத்திரவை ரத்து செய்து பிரதிவாதிகளின் மனுவைத் தள்ளுபடி செய்து விட்டார்கள். இதன் பேரிலிந்த பிரதிவாதிகள் ஹைகோர்ட்டில் சி. பு. கோடு 115-வது செக்ஷன்படி ரிவிஷன் மனுக் கொடுத்திருக்கிறார்கள்.

பழய சி. பு. கோடு 310 A செக்ஷன்படி டிக்கிரி கடன்காரனுக்கு ஏற்பட்டிருந்த பாத்தியம் இப்போதுமிருந்துகொண்டிருக்

கிறதென்றும், ஏல சொத்தின் பாத்தியங்களை யிழந்த டிக்கிரி கடன்காரர்களும் இந்த செக்ஷன்படி மனுக் கொடுக்கலாமென்று இ. லா. ரி. 25 பம்பாய் 631, 32 கல்கத்தா 107 தீர்மானங்களேற்பட்டிருக்கின்றன வென்றும், இந்த ஏலம் ரத்து செய்யப்படுவதால் நன்மையை அடையக்கூடியவர் டிக்கிரி கடன்காரராகையால் இவரே இந்த மனுக் கொடுக்க பாத்தியமுடையவரென்றும், அந்த சொத்துக்கு சொந்தமுள்ள எவனாவது என்று சொல்லப்பட்டிருப்பதால் ஏல தேதியில் எவனுக்கு அச் சொத்து பாத்தியமாகவிருந்ததோ அவனே இந்த மனுக் கொடுக்கலாமென்றும், இவன் தான் சாசனஞ் செய்து கொடுத்தவர்க்காக இவர் மனுக் கொடுத்ததாக அதை யங்கீகரிக்கலாமென்றும், நன்மையை யடைந்தவரும் பேரிரவலாகவுள்ளவரும், இந்த மனுக் கொடுத்தது பிசகென்று கோர்ட்டார் சந்தேகிக்கும் பட்சத்தில் இவரிடம் சாசனம் பெற்றவரையும் இந்த மனுவிற் சேர்த்துக் கொள்ள கோர்ட்டார் அனுமதி கொடுக்கலாமென்றும், மனுதார்களின் வக்கீல் கக்ஷியாடுகிறார்.

ரிவிஷன் கோர்ட்டார் மனுக்களில் திருத்தல் செய்ய அனுமதி கொடுக்கக் கூடாதென்றும், தாவா மனு 115-வது செக்ஷனுக்கும் பொருந்தியதல்ல வென்றும், அது சட்டக் கருத்துகளைப் பற்றி யேற்பட்டதேயன்றி ஜூரிஸ்டிக்ஷனைப் பற்றி யேற்பட்டதல்ல வென்றும், மனுதார்களிட மிருந்து கிரயம் பெற்றவரின் பாத்தியம் காலாவதி தோஷத்தாற் பாதிக்கப்பட்டுப் போய்விட்டதென்றும் எதிர்மனுதார்களின் வக்கீல் கக்ஷி சொல்லுகிறார்.

தீர்ப்பு.

சி. பு. கோடு 21-வது ஆர்டர் 89-ரூல்படி ஏலத்தை ரத்து செய்யவேண்டுமென்று டிக்கிரி கடன்காரனால் இந்த மனு கொடுபட்டிருக்கிறது. இவன் இந்த ஏலத்துக்குப் பிறகு ஏல சொத்தை வேறொருவருக்கு விற்றுவிட்டதால் இந்த மனுக்கொடுக்க இவனுக்கு பாத்தியமுண்டா இல்லையா வென்பதுதான் விவாதம்.

ஏலசொத்து எவனுக்குச் சொந்தமோ அல்லது எவனுக்கு பாத்தியமிருக்கிறதோ வென்று 21-வது ஆர்டர் 89-வது ரூலிற் சொல்லப்பட்டிருப்பது இந்த மனு கொடுக்குங்காலத்தில் எவருக்குச் சொந்தம் அல்லது பாத்தியமிருக்கிறது என்பது அந்த சட்

டத்தின் கருத்து. டிக்கிரி கடன்காரன் ஏலம் உறுதி செய்யப்படுவதற்கு முந்தி அதாவது ஏலம்போடப்பட்ட 30 தினங்களுக்குள் தான் அச்சொத்தை ஏலத்துக்குப் பிறகு எவருக்குஞ் சாசனஞ் செய்யாதிருந்தால் இவ்வித மனு கொடுக்கலாம். இந்தக் கேசில் இந்த மனுத்தேதியில் மனுதார் டிக்கிரி கடன்காரருக்கு எவ்வித பாத்தியமுமில்லை. அதனால் கீழ் அப்பீல் கோர்ட்டார் மனுதார்களின் மனுவைத் தள்ளுபடி செய்தது மெத்த நியாயமானதே இ. லா. ரி. 32 கல்கத்தா 107, 25 பம்பாய் 631 இத்தீர்மானங்கள் தங்கள் கக்ஷிக்கு ஆதாரமானவை யென மனுதார்கள் சொல்லுகிறார்கள். இத்தீர்மானங்கள் பழய சிவில் புரிஸீஜர் கோடு அனுஷ்டானத்திலிருந்தபோது ஏற்பட்டவை; புதிய சி. பு. கோடின்படி ஏற்பட்ட (1913) M. W. N. 101 தீர்மானத்தை நாம் அனுஷ்டிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அதில் டிக்கிரிதாரன் ஏலத்துக்குப் பிறகு அந்த ஏலசொத்தை சாசனஞ் செய்துவிட்டால் அந்த சாசனம் பெற்றவன்தான் இவ்வித மனு கொடுக்க பாத்தியமுடையவனெனச் சொல்லப்பட்டிருக்கிறது.

கீழ் அப்பீல் கோர்ட்டார் சட்டவிரோதமாகவாவது, தன்னதிகாரவரம்பை மீறியாவது விசேஷ தவறுதலாக நடவடிக்கை நடத்தியாவது, எவ்வித தீர்மானமுஞ் செய்யாததினாலே கீழ் அப்பீல் கோர்ட்டார் செய்த வுத்திரவை ரத்து செய்ய நியாயமில்லை. சி. பு. கோடு 115 வது செக்ஷன் தாவா கேசுக்கு ஒற்றுமையானதல்ல. ஆகையால் இந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

1—L. W. 59.

சென்னை ஹைகோர்ட்டு

1912 ஹூத்திய 2வது அப்பீல் நம்பர் 2622

தீர்ப்பு 9—12—13.

ஜட்ஜிகள்
ஜஸ்டிஸ் எயிலிங் அவர்கள்
ஜஸ்டிஸ் ஓல்ட்பீல்ட் அவர்கள்

ரூஸாகவுண்டன்
அப்பீல்தாரன் (வாதி)
சின்னப்பய்யன் என்கிற
செல்லப்பக்கவண்டன் ஆ
எதிர்கக்ஷிக்காரர் (பிரதிவாதிகள்.)

8. [சாக்ஷிய சட்டம்.]

குடிக்காணி பாத்தியமுள்ள நிலத்தை ஏலமெடுத்தவனுக்குள்ள பாத்தியமும், அந்த நிலஸ்வதந்தர பாத்தியதையைப்பற்றி யார் ருஜு விடவேண்டு மென்பதும்.

நாமக்கல் டிஸ்டிரிக்ட் முனிசீப் கோர்ட்டு தீர்ப்பின்பேரில் திருச்சினாப்பள்ளி டெம்பரரி சப் கோர்ட்டில் அப்பீல் விசாரணை நடந்து, அதன்பேரில் ஹைகோர்ட்டில் அப்பீல்.

செங்கோடம்பிள்ளை யென்பவர் தனக்குச் சொந்தமான நிலத்தை 1-2 பிரதிவாதிகளுக்கு 1898 வருஷத்தில் 2 அடையாள ஆதிரவின்படி போக்கிய அடமானம் வைத்தார். இந்த நிலத்துக்கு செலுத்தப்படவேண்டிய குத்தகைத் தொகை செலுத்தாததினால் மிட்டாதார் இந்த நிலத்தை ஏலம் போடுவித்ததில், அதை பழனியாண்டி கவுண்டன் என்பவன் ஏலமெடுத்து அதை வாதிக்கு 1908 வருஷம் ஜூலைமாதம் 24 தேதி விற்றுவிட்டார். வாதி அந்த போக்கிய சொத்து மீட்கப்படவேண்டுமென 1 - 2 பிரதிவாதிகள்பேரிலும், அந்த போக்கிய நிலத்தை யனுபவிக்கும் 3-ம் பிரதிவாதி பேரிலும் வழக்கிட்டார். எதிர் கக்ஷிபாடும் 2-3 பிரதிவாதிகள் தாவா நிலம் கர்ணனுடைய சர்விஸ் இனாம் நிலமென்றும், அதற்கு யாதொரு குத்தகைத் தொகையுஞ் செலுத்தப்படவேண்டியதில்லை யென்றும், அத்தொகை எந்தக் காலத்திலுஞ் செலுத்தப்பட்டு வந்ததில்லையென்றும், குத்தகை பாக்கியிருந்ததில்லையென்றும், பட்டா டெண்டர் செய்யப்படவில்லை யென்றும், நோட்டீஸ் கொடுக்கவில்லை யென்றும், அதனால் குத்தகை பாக்கிக்காக ஏலம்போட்டது சட்ட விரோதமானதென்றும், அது செல்லத்தகுந்தல்ல வென்றும், கிராம மணியகாரனை வாதி கிராமக் கர்ணன் மிட்டாதார், இவர்களுடைய உடந்தையின் பேரில் மோசடியாக வாதி வழக்கிட்டிருப்பதாகவும், ஏலதாரனிடத்திருந்து வாதி தாவா நிலத்தை வாங்குவதற்கு முந்தியே நிலத்தின் சொந்தக்காரனிடமிருந்து தாங்கள் சாசனம் பெற்றுவிட்டதாகவும், பிரதிவாதிகள் கக்ஷிபாடினார்கள்.

தாவா நிலம் குத்தகை பாக்கிக்காக ஏலம் போடப்பட்டது உண்மையென்றும், வாதி சாசனம் பெற்ற காலத்தில் அது ஏலதார் பழனியாண்டிக் கவுண்டனுக்கு சொந்தமாயிருந்ததென்றும், தாவாவிற் சொல்லும் ஏலத்துக்கு பிரதிவாதிகள் கட்டுப்பட்டவர்களென்றும், வாதியின் தாவாப்படியே முதற்கோர்ட்டார் தீர்ப்பு செய்துவிட்டார்கள். குத்தகை பாக்கிக்காக போடப்பட்ட ஏலம் செல்லுபடியுள்ளதென்றும், பிரதிவாதிகளைக் கட்டுப்படுத்தக் கூடியதென்றும், ஸ்தாபிக்கக்கூடிய சட்டப்படிக்குள்ள நடவடிக்

கைகள் நடத்தப்பட்டதென்பதை வாதி ருஜுப்பிக்கத் தவறிவிட்டாரென்றும் அதனால் வாதியின் தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றும், பிரதிவாதிகள் அப்பீல் செய்தார்கள். சப் ஜட்ஜியவர்கள் பிரதிவாதிகளின் விவாதங்களை யங்கீகரித்து வாதி தன் கக்ஷியை ருஜுப்பிக்கத் தவறிவிட்டதாக வாதியின் வழக்கைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். இதன்பேரில் வாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்கிறார்.

இ. லா. ரி. 30 சென்னை 248, 27 சென்னை 94 இந்தத் தீர்மானங்களிற்கண்டபடி ருஜுபளு வாதியைச் சார்ந்ததாக விருந்தபோதிலும் அத்தீர்மானங்களின் விஷயங்களுக்கும், தாவா கேசுக்கும், மெத்த வித்தியாசங்களிருக்கின்றன வென்றும், அவைகளிற் கண்ட வழக்குகள் மூன்று வருடங்களுக்குள் கொண்டுவரப்பட்டிருப்பதால் ஏலத்துக்குமுன் நடத்தப்பட வேண்டிய அவசிய நடவடிக்கைகள் கிரமமாக நடந்ததென்று ஜரூக்கள் சேகரிக்க சவுகரியங்களிருந்தன வென்றும், தாவாவழக்குஏலம்நடத்தப்பட்டு சற்றேறக்குறைய 12 வருடங்களுக்குப் பிறகு கொண்டுவந்திருப்பதால், தஸ்தாவேஜியாயுள்ள ஜரூக்கள் சேகரிக்க முடியவில்லை யென்றும், வாதியினிடத்தில் எவ்வித தவறுதலும் கிடையாதென்றும், தாவாகேசின் சந்தர்ப்பங்களை உத்தேசித்து ருஜுபளு வாதியின்மேல் சுமற்றுவது பிசகென்றும், அப்பீல்தார் வாதியின் வக்கீல் மிஸ்டர் C. A. சேஷகிரி சாஸ்திரி கக்ஷியாடுகிறார்.

வாதி சீக்கிரத்தில் வழக்கிடுவதற்கு ஒரு தீர்மானமும், நாட்பட்டு வழக்கிடுவதற்கு வேறு தீர்மானமுமிருக்கிறதென்று வாதி சொல்வது அசாதாரண விஷயமென்றும், அவ்வித விதியிருக்குமானால், அது வழக்குகளை விலைக்கு வாங்குவதற்கு இடங்கொடுக்குமென்றும், லிமிடேஷனுக்கட்டு ஏற்பட்டிருப்பதின் பிரயோஜனத்துக்கு விரோதமானதென்றும், ஏலத்துக்குமுன் நடத்தப்பட வேண்டிய ஒழுங்குகள் சரியாக நடந்தனவென்பதை ருஜுப்பிக்க வாதி இ. லா. ரி. 9 கல்கத்தா 619, 13 கல்கத்தா 197, 27 சென்னை 94, 19 கல்கத்தா 689 இந்தத் தீர்மானங்களிற் கண்டபடி கடமைப்பட்டிருக்கிறாரென்றும், சாக்ஷிய சட்டம் 114 வது செக்ஷன் வாதிக்கு அனுகூலஞ் செய்யமாட்டாதென்றும், குத்தகை பாக்கிக்காக ஏலம் போடுவது உத்தியோக முறைமையிற் செய்யப்பட்ட

தாக விருந்தபோதிலும், அந்த ஏல விஷயமான நோட்டீசும் குடியானவனிடத்தில் அதை சர்வ் செய்வதும் உத்தியோகமுறைமையிற் செய்ததல்லவென்றும், அதனால் அந்த 114 வது செக்ஷன் தாவா கேசுக்கு ஒற்றுமையானதல்ல வென்றும், சட்டத்திற் சொல்லியிருப்பது எண்ணக்கூடும் (may presume) என்றதினால் கோர்ட்டார்கள் தங்கள் அபிப்பிராயங்களை உபயோகிக்கலாமென்றும், கீழ் அப்பீல் கோர்ட்டார் அவ்வித அபிப்பிராயங்கொள்ளாதது ருஜு அம்சமென்றும் ருஜு அம்சங்களைப்பற்றிய அபிப்பிராயங்களில் ஹைகோர்ட்டார் பிரவேசிக்கக்கூடாதென்றும், அப்பீல் பிரதிவாதிகளின் வக்கீல் மிஸ்டர் K. S. கிருஷ்ணசாமி அய்யங்கார் எதிர்கக்ஷி சொல்லுகிறார்.

தீர்ப்பு.

செங்கோடம்பிள்ளை 1898 ஷ்த்தில் 1-2 பிரதிவாதிகளுக்கு எழுதிக்கொடுத்திருக்கும் 2 அடையாள போக்கிய அடமான பத்திரத்தின்படி சொத்து மீட்கப்பட வேண்டுமென்று தாவா செய்யப்பட்டிருக்கிறது. 1865 ஷ்த்திய 8 வது ஆக்ட்டுப்படி போடப்பட்ட ஏலத்தில் தாவா நிலத்தை ஏலத்தி லெடுத்த பழனியாண்டி கவண்டனிடமிருந்து வாதி தாவா நிலத்தை மீட்கும்படியான பாத்தியதையை 1908 ஷ்த்தில் சாசனம் பெற்றார். குத்தகை பாக்கிக்காக கிரமமாக ஏலம் போடப்பட்டதென்பதையும், அதனால் வாதிக்கு சாசனஞ் செய்து கொடுத்தவருக்கு தாவா சொத்தில் பாத்தியமுண்டாய்விட்டதென்பதையும் வாதி ருஜுப்பிக்கவில்லை யென்ற ஒரே காரணத்துக்காக கீழ் அப்பீல் கோர்ட்டார் வாதியின் வழக்கைத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். தாவா சொத்தை யனுபவிப்பதால் 3-ம் பிரதிவாதி இதிற் கக்ஷிக்காரராகச் சேர்க்கப்பட்டிருக்கிறார். அவரும் 2-ம் பிரதிவாதியும் தாவா சொத்தை மீட்கும்படியான பாத்தியதையை செங்கோடம்பிள்ளையிடமிருந்து வாங்கிவிட்டதாகச் சொல்லுகிறார்கள். 2 அடையாள போக்கிய ஆதாரவைப்பற்றி ஆக்ஷேபிக்கவில்லை. பழனியாண்டி ஏலத்திலெடுத்ததை முக்கியமாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆனாலந்த ஏலம் வாதியும் அவர் மைத்துனன் ஏலதாரனும் பூமிக்குடையவரும் ஒன்றுசேர்ந்து மோசவகையாக ஏலத்திலெடுத்ததாகவும், பட்டா டெண்டர் செய்யப்படாமையாலும், பாக்கியாதொன்றுமில்லாததாலும், பாக்கித்தாரனு

க்கு அவசியம்கொடுபடவேண்டிய நோட்டீஸ்கொடுபடாததாலும், முக்கியமான விஷயங்களில் பல தவறுதல்களிருக்கின்றனவென்று கக்ஷி சொல்லுகிறார்கள். வாதி சொல்லும் ஏலத்துக்கு ஆதாரமாக இந்த விஷயங்களைப்பற்றி நேரான ருஜு வாதி விடாததால் கீழ் அப்பீல் கோர்ட்டார் வாதியின் வழக்கை தள்ளுபடி செய்தது கிரமமானதா? அந்த ஏலம் செல்லுபடியுள்ளதென்பதை வாதி வேறு விதமாக ருஜுப்பிக்க ஏற்பாடு செய்ய அந்த ருஜுக்களை யங்கீகரிக்கமாட்டோமென்று கீழ் அப்பீல் கோர்ட்டார் சொல்லியது நியாயமா? என்ற விஷயங்களை நாம் ஆலோசிக்க வேண்டும்.

இந்த சாக்ஷியம் குறுக்கடியான சாக்ஷியமாகத்தானாலும், அதனால் அது பிரயோஜனத்திற் குறைந்ததாக மாட்டாது. ஏலம் போடபட்டதினால் அதன்பிறகு ஏலதாரன் பெயரால் பட்டா மாற்றப் பட்டதும், ஏலதாரன் தொடர்ச்சியாக தீர்வை செலுத்தி வந்ததும், போக்கியப்படி 1-2 பிரதிவாதிகளுக்குக் கிடைத்த அனுபோக பாத்தியம்நீங்கலாக மற்றெல்லாச் சுதந்திர பாத்தியங்களுங் கிடைத்துவிட்டதையும், வாதி ருஜுப்பிக்க எத்தனஞ் செய்தார். ஏலம் செல்லுபடியுள்ளதென்ற பொதுவான ருஜுவும், அதை பெந்தகம் வைத்தவன் ஒப்புக்கொண்டு சம்மதித்திருந்ததும், ருஜுப்பிக்கப்பட்டிருப்பதினாலே, அதில் குறிப்பிட்ட ஆக்ஷேபணைகளைப் பற்றிய ருஜுப்பளு அதை யாக்ஷேபிப்பவர்களைப் பொறுத்ததென்பது வாதியின் விவாதம். தாவா சொத்தின் போக்கியத்தை மீட்க வாதி கடமைப் பட்டுவிட்டதால் தாமதம் நேரிட்டதென்றும், இவ்வழக்கிட காலதாமத மேற்பட்டதினால், பாக்கியைப் பற்றியும் ஏலத்தைப்பற்றியு மேற்பட்ட தஸ்தாவேஜிகளை சேகரிக்க முடியவில்லையென்றும், அதனால் வேறு விதங்களில் தன் பாத்தியதையை ருஜுப்பிக்க வேற்பாடு செய்வதாகவுஞ் சொல்லுகிறார். இவ்விஷயம் ருஜுப்பிக்கப்படும் பட்சத்தில் வாதிக்கு அனுகூலமாக தீர்ப்பு செய்யப்பட வேண்டியது மெத்த நியாயமானது. கீழ் அப்பீல் கோர்ட்டார் வாதி விட்ட ருஜுக்களை யங்கீகரிக்கமாட்டோமென்று சொன்னதற்கு ஆதாரமாகவுள்ள தீர்மானங்களெல்லாம் இந்த இராஜதானியைப் பற்றிய தீர்மானங்கள். யார் ஏல பாத்தியங் கொண்டாடுகிறார்களோ அவர்களதை ருஜுப்படுத்த வேண்டுமென்று, அந்தத் தீர்மானங்களிற் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தக் கருத்துகளைப் பற்றி நாங்கள் ஆக்ஷே

OFFICE OF THE REGISTRAR OF ... REGISTERED 5 - APR 1914 MADRAS

பிக்கவில்லை. இவ்விஷயத்தை பூமிக்குடை[illegible] அல்லது ஏலதார் ருஜுப்பிக்க வேண்டியதுடன் எதிர்க் கக்ஷிக்கா[illegible]கிறபடி குறிப்பிட்ட ஒரு வழியாகத்தான் ருஜுப்பிக்க வேண்டுமென்று கீழ் அப்பீல் கோர்ட்டார் சொல்லுவது தவறுதலான காரியம். இந்தக் கேஸ்களிலெல்லாம் ஏலமெடுத்த சொற்ப காலத்துக்குள் வழக்குகள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. இந்த ருஜுக்கள் விடப்படும் பட்சத்தில் கவனிக்கத் தகாதனவாக வேற்படுமென்றுவது, அல்லது அவைகளை நம்பும்பட்சத்தில் அவ்விஷயம் ருஜுப்பிக்கத் தவறிவிட்டதாக ஆகுமென்றுவது எதிர் கக்ஷியில் எடுத்துக் காட்டவில்லை.

• இந்தக் காரணங்களினால் கீழ் கோர்ட்டார் தீர்மானத்தை ரத்து செய்திருக்கிறோம். அப்பீலை பயிலில வைத்துக் கொண்டு மேற்கண்ட விஷயங்களைப் பற்றி விசாரித்து முடிவு செய்யும்படி ரிமாண்டு செய்திருக்கிறோம்.

1. L. W. 55.

1914 வருஷம் ஜனவரி மாதத்தில் சென்னை ஹைகோர்ட்டாரவர்களாற் செய்யப்பட்ட தீர்மானங்களின் சுருக்கங்கள்.—

ஜஸ்டிஸ் எயிலிங் அவர்கள். 5-1-14.

1911 வருஷம் C. R. P. No. 827.

சி. பு. கோடு 33-வது ஆர்டர் 2-ரூல்படி கொடுபடும் பாபர் மனுக்களில் மனுதார் தனக்குச் சொந்தமான சொத்துக்களில் சொற்ப சொத்தை மறைத்து எழுதினாலும் அந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

* * *

ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்களும் டியாப்ஜி அவர்களும் 6-1-14.

1913 வருஷம் C. M. A. No. 176.

ஒரு பெந்தக பத்திரத்திற் கண்ட சொத்தின் நான்கெல்லையில் ஒன்று பிசகாக எழுதப்பட்டு டிக்கிரியும் அந்தப்படி யேற்பட்டு நிறைவேறு நடவடிக்கைகளில் இந்தப் பிசகுகள் வெளிப்படுமானால் இது கிளார்க்கின் தவறுதலாகும். இதற்குச் சரியான நான்கெல்லை கண்டு டிக்கிரியைத் திருத்த கோர்ட்டாருக்கு அதிகாரமுண்டு.

* * *

ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள் 7-1-14.

1913 வருஷம் C. R. P. No. 353.

சி. பு. கோடு 6-வது ஆர்டர் 17-வது ரூல்படி பிராதைத் திருத்த மாட்டோமென கீழ் கோர்ட்டார் செய்த வுத்திரவு சட்ட விரோதமானதாக விருந்தாலும், சி. பு. கோடு 115-வது செக்ஷன்படி ஹைகோர்ட்டார் இது விஷயத்தில் பிரவேசிக்கமாட்டார்கள்.

* * *

சீவ் ஜஸ்டிஸ், ஜஸ்டிஸ் சங்கர நாயரவர்கள், ஜஸ்டிஸ் ஒல்டு பீல்ட் அவர்கள்.

7-1-14 L. P. A. 1912 வருஷத்திய No. 228.

வெளிப்படையாக சாசனமென்று தெரிகிற ஒரு தஸ்தாவேஜி உண்மையில் பெந்தகம் என்று காட்டக்கூடிய தஸ்தாவேஜி ரிஜிஸ்டர் செய்யப்படாத கடிதமாக விருந்தால் பிரதிவாதி வசத்தில் அச்சொத்து எவ்விதம் வந்ததென்பதை ருஜுப்பிக்க அதை ருஜுவாக அங்கிகரிக்கக்கூடாது.

* * *

ஜஸ்டிஸ் சங்கரநாயரவர்கள் 9—1—14

1913 வருஷத்திய C. R. C. No 513-514

கவர்ன்மெண்டு ரிஸர்வ் காட்டில் ஒருவனுடைய ஆடுகள் பிரவேசித்து மேய்ந்தால் அவை மேய்ப்போன் வசம் ஒப்புவிக்கப்பட்டிருக்கும் பட்சத்தில் அந்த ஆடுகளின் சொந்தக்காரனை 1882 வருஷத்திய சென்னை காட்டிலாகா 5-வது சட்டம் 21-வது செக்ஷன் கிளாஸ் (d) படி தண்டிக்கக்கூடாது.

* * *

ஜஸ்டிஸ் எயிலிங் அவர்கள் 12—1—14

1912 வருஷத்திய C. R. P. No 94.

அப்பீல் கொடுக்க காலாவதி தோஷ மேற்பட்டு விட்டதென கோர்ட்டார் அப்பீலை யங்கிகரிக்க மாட்டோமென நிராகரித்து விட்டால் அவ்விதஞ் செய்தது சட்ட விரோத மானதாக விருந்தாலும், இது விஷயமாக ஹைகோர்ட்டில் சி. பு. கோடு 115-வது செக்ஷன்படி ரிவிஷன் மனு கொடுக்கக்கூடாது.

* * *

சீவ் ஜஸ்டிஸ் அவர்களும், ஜஸ்டிஸ் சங்கரநாயரவர்களும் 12-1-14.

1912 வருஷத்திய L. P. A. No. 203.

ஒரு பாக வழக்கில் நியமிக்கப்பட்ட ரிசீவரை அந்த பிரதம டிக்கிரி விஷயமாக ஹைகோர்ட்டாரிடம் அப்பீல் செய்திருந்தால் அந்த ரிஸீவரைத் தள்ளுபடி செய்ய அந்தக் கோர்ட்டாருக்கு அதிகார முண்டு.

* * *

ஜஸ்டிஸ் எயிலிங் அவர்களும், ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர் அவர்களும்.

15-1-14. 1913 வருஷத்திய C. M. A. No. 100.

இறந்த கக்ஷிக்காரருக்கு, வார்சு சேர்க்கப்படாமல் அப்பீல் நிறுத்தப்பட்டு அது தள்ளுபடியாகி அச்செலவு இறந்தவருடைய சொத்தினின்றும் வசூலிக்கப்பட வேண்டுமென டிக்கிரி யேற்படும் பட்சத்தில், இறந்தவனுடைய சொத்து மகனிட மிருப்பதைத் தொடர்ந்து வசூலிக்கக்கூடாது. இந்த டிக்கிரி சி. பு. கோடு 50, 52, 53-வது செக்ஷன்களின்படிக் கேற்பட்டதல்ல வாகையால் அச் சொத்தைத் தொடர்ந்து வசூலிக்க நியாயமில்லை.

சென்னை ஹைகோர்ட்டு.

1912 ளுத்திய 2-வது அப்பீல் நம்பர் 1716 முதல் 1756

தீர்ப்பு 24—10—13.

ஜட்ஜிகள்.	சின்னன் ஆ. அ. வாதிகள்
ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள்	V
ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர் அவர்கள்	கொண்டம நாயடு ஆ. அ பிரதிவாதிகள்

4 [எஸ்டேட் லாண்டு ஆகட்]

மோகாஸா கிராமம் சுரோத்திரயங் கிராமமாக மாற்றப்பட்டால் அந்த பூஸ்திதிக்குடைய வருக்குக் குடிவார பாத்தியமும் உண்டென்பதும் இது சம்பந்தமான வழக்கு எஸ்டேட் லாண்டு ஆக்ட்படி நடத்தப்படக்கூடாதென்பதும்.

செங்கல்பட்டு ஜில்லா தலம்பூர் கிராமம் முதல் பிரதிவாதியின் முன்னோருக்கு பாளையக்காரர் உத்தியோகத்துக்காகமோகா

ஸா இனமாக கொடுபட்டிருந்தது. இந்த உத்தியோகம் 1802-ம் வருஷத்தில் தள்ளுபடி செய்யப்பட்டபோது இது சுரோத்திரியங் கிராமமாக மாற்றப்பட்டது. ஆஜர் செய்யப்பட்டிருக்கிற அநேக தஸ்தாவேஜிகளில் பிரதிவாதிகளும் அவர்களின் முன்னோர்களும் ஏகபோக மிருசுதார்களென்றும், கிராமத்தார்களென்றுஞ் சொல்லப்பட்டிருக்கிறார்கள். அந்த கிராமத்திலுள்ள மற்றவர்கள் சுகவாசிகள், உள்ளூரார், கம்பத்தம் முதலிய பெயர்களால் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். வாதிகள் இந்தக் கிராமத்தின் குடிகள். தாவா கிராமம் சென்னை எஸ்டேட் லாண்டு ஆக்ட்டுப்படி எஸ்டேட் என்றும், பிராது A. ஷிடியூலிற்கண்ட நிலங்கள் வாதிகளுக்கு குடிக்காணி பாத்தியமுள்ள நிலங்களென்றும், ஒவ்வொரு பிராதிலுங்கண்ட B ஷிடியூல் பாரப்படி மசோதா பட்டாவிற் கண்ட ஷரத்துக்கள் கண்டபடி பட்டாக்கள் பிரதிவாதிகளிடமிருந்து வாதிகளுக்கு கொடுபடவேண்டுமென்றும், வாதிகள் வழக்கிட்டார்கள்.

பிரதிவாதிகளாகிய சுரோத்தியம்தார்கள் தாங்கள் அந்த கிராமத்துக்கு மிராசுதார்களென்றும், அதனல் தங்களுக்குகுடிக் காணி பாத்தியமுமிருக்கிறதென்றும், வாதிகள் பிரதிவாதிகளினிஷ்டம்போல் அப்போதைக்கப்போது வைக்கவும் நீக்கவுங் கூடிய குடிகளென்றும், அவர்களுக்கு தாவா நிலத்தில் சாஸ்வதமான பாத்தியங்கள் கிடையாதென்றும், சென்னை எஸ்டேட் லாண்டு ஆக்ட் 3-வது செக்ஷன் கிளாஸ் 2 (d) படி தாவா கிராமம் எஸ்டேட் ஆகமாட்டாதென்றும், அதனல் ரெவினியூ கோர்ட்டார் இந்தக் கேசைப்பற்றி விசாரிக்க எவ்வித அதிகாரமுமில்லையென்றும், அதனல் வாதிகள் பிரதிவாதிகளிடமிருந்து பட்டாக்கள் கேட்க பாத்தியமில்லையென்றுஞ் சொன்னதுமன்றி பட்டாவின் ஷரத்துக்களை பற்றியுங் கக்ஷி சொன்னார்கள்.

இந்தக் கேசை விசாரித்த செங்கல்பட்டு சப் கலெக்டர் வாதிகள் கேட்டபடி ரொக்கக் குத்தகையாகத் தீர்மானிக்காமல் பிரதிவாதிகளின் கக்ஷிப்படி விளைந்த மகசூலில் பிரதிவாதிகளுக்கு 100-க்கு 40-வீதம் வாரமாகக் கொடுத்துவர வேண்டியதென்று கண்டு வாதிகள் கேட்டபடியே பட்டாக்கள் கொடுக்க பிரதிவாதிகள் கடமைப்பட்டவர்களெனத் தீர்ப்பு செய்து விட்டார்கள். இத்தீர்ப்பைப் பற்றி டிஸ்டிரிக்ட் கோர்ட்டுக்கு அப்பீல்

செய்ததில் பிரதிவாதிகள் தாவா கிராமத்துக்கு சுரோத்திரியந்தார்களாக விருப்பதுடன் அந்த கிராமத்துக்கு மிராசுதாரர்களாகவுமிருக்கிறார்களென்றும், சுரோத்தியந்தார் முறைமையில் மேல்வாரமும் மிராசுதார் முறையில் குடிவாரமும் பிரதிவாதிகளுக்கு ஏற்பட்டிருக்கின்றனவென்றும், யாருக்கு நிலத் தீர்வை (Land Revenue) கவர்ண்மெண்டாரவர்களால் சுரோத்திரியமாகக் கொடுக்கப்பட்டதோ அவர்கள் அந்தக் காலத்தில் குடிவாரமும் பாத்தியமுள்ள மிராசுதாரர்களாக இருந்திருப்பதினலே எஸ்டேட் லாண்டு ஆக்ட்டு 3-வது செக்ஷன் கிளாஸ் 2 (d) ப்படி தாவா கிராமம் எஸ்டேட் ஆகமாட்டாதென்றும், அதனல் இந்த வழக்கை ரெவனியு கோர்ட்டார் விசாரிக்க அதிகாரமில்லையென்றும், கீழ் கோர்ட்டு தீர்ப்பை ரத்து செய்து வாதியின் வழக்கைத் தள்ளுபடி செய்து விட்டார்கள். இதன் பேரில வாதிகள் தாவாக் கிராமம் சென்னை எஸ்டேட் லாண்ட் ஆக்டுப்படி எஸ்டேட்டென்றும், வாதிகளுக்குத் தாவாக் கிராமத்தில் குடிக்காணி பாத்திய மிருக்கிறதென்றும், இந்த கோர்ட்டில் 2-வது அப்பீல் செய்திருக்கிறார்கள். இந்தக் கேஸ்களிற் செய்யப்படவேண்டிய தீர்மானங்கள் பிரதிவாதிகளின் முன்னோர்களுக்கு தாவா கிராமம்சுரோத்திரியமாக கவர்ன்மெண்டாரவர்களால் கொடுபட்ட காலத்தில் இவர்களுக்கு குடிவார பாத்தியமுமிருந்து வந்ததா, அந்தக் காலத்திலேயே வாதிகளாகிய குடிகளுக்கு குடிவாரபாத்தியமுங் குடிக்காணிபாத்தியமு மிருந்திருக்கிறதா என்ற விஷயங்களைப் பொருத்ததாகவிருக்கிறது.

17-ம் நூற்றாண்டில் ஆற்காடு நவாப்பால் போத்தி ரெட்டி குடும்பஸ்தர் என்ற ஒருவருக்கு பாளையக்காரர் உத்தியோகத்துக்காக தாவா கிராமத்தின் மேல்வார பாத்தியங் கொடுபட்டதாகத் தெரிகிறது. பாளையக்காரராக நியமனம் பெற்ற போத்திரெட்டி நாய்க்கன் ஏகபோக மிராசுதார் என்ற ருஜுக்களிருக்கின்றன. இதனல் தாவா கிராமத்தின் எல்லா நிலத்திலுமிவருக்கு குடிவார பாத்தியமு மிருந்திருப்பதாகத் தெரிகிறது.

குலத்துங்கன் என்ற சோழராஜன் காலத்தில் செங்கல்பட்டு ஜில்லாவில் மிராசுபாத்தியம் ஏற்பட்டதாக ஐதீகமான பிரமாணங்களேற்பட்டிருக்கின்றன. அவருடைய வைப்பாட்டி மகன் ஆதண்டன் காஞ்சிபுரத்துக்குச் சுற்றிலுமுள்ள தேசங்களை ஜெயித்து

கைக்கொண்டார். இவ்விதம் ஜெயித்தகாலம் 8-வது நூற்றாண்டு முதல் 12-வது நூற்றாண்டு வரையிற் சொல்லப்பட்டிருக்கிறது. சோழராஜனால் இந்த மிராசு பாத்தியங்கொடுபட்டது. அவர்களெல்லோரும் வேளாளர்கள். இவர்கள் தங்கள் முயற்சியினாலாவது, இந்த மிராசுதார்களால் அமர்த்தப்படும் காணியாக்ஷிக்காரர் என்று இந்துக்கள் அரசாட்சியில் வழங்கிவரும் பாயக்காரிகளைக் கொண்டாவது சாரமற்றுப் போயிருக்குங் கிராமங்களை சாகுபடிக்குக் கொண்டுவரவேண்டியதற்காக, இந்த மிராசு பாத்தியங் கொடுபட்டிருக்கிறது. இந்த மிராசுதார்களே இந்த கிராம முழுவதும் தங்களால் சாகுபடி செய்யமுடியாது. நிலங்களின் சாகுபடிக்காக அமர்த்தப்பட்ட பாயக்காரிகள் சாஸ்வதமாக அவர்களும், அவர்களின் சந்ததியார்களும், 100-வருடங்களுக்கு மேல் சாகுபடி செய்து வருவார்களானால் இவர்கள் இந்து லாப்படிக்கும் வழக்கப்படிக்கும், சாஸ்வத குடிக்காணி பாத்தியமுள்ள உள் குடி பாயக்காரர்களாகிறார்கள் அதாவது இவர்கள் சாகுபடி செய்து வரும் நிலத்தில் குடிவார பாத்தியதைபை அடைகிறார்கள். இவ்வித சாஸ்வத பாத்தியமிவர்களுக்கு கிடைத்தபோதிலும் கவர்ன்மெண்டாரிடமிருந்து குடிவார பாத்தியதையை அடைந்திருக்கும் மிராசுதார் இந்த உள் குடி குடிவாரதார்களிடமிருந்து தண்டுவாரம் என்ற ஒருவித சுதந்திரத்தை வசூலிக்க பாத்தியமுடையவர்கள். இந்த தண்டுவாரமென்பது உள்குடி குடியானவர்களால் உற்பத்தி செய்யப்பட்ட மகசூல்களில் ஒருவித பாகமுள்ள சுதந்திரம். இது குடிவாரத்திலிருந்த அற்ப பாகமாகவிருந்தபோதிலும், மிராசுதார்கள் இதை வசூலிக்கத் தவறுகிறதில்லை. மேல் வாரம் 100-க்கு 40-ம், குடிவாரம் 60-மாக வேற்பட்டிருக்கிறது. இந்த 60-ல் மிராசுதார்களுக்கு சுதந்திரம் சில பாகமுண்டு. மிராசு பாத்தியங்கள் விஷயமாக ஹாட்டில்ஸ்டோன் எழுதிய பேபர்கள், கொரோனுடைய செங்கற்பட்டு டிஸ்டிரிக்ட் மானியூல் முதலிய ஆதாரங்களினால் மேற்கண்ட விஷயங்கள் தெரிகின்றன.

1802 வருஷத்திற்கு சில வருடங்களுக்குப் பிறகும், இந்த கிராமத்திற் சாகுபடி செய்துவந்த குடிகள் தங்கள் அநுபோக பாத்தியதையை பராதீனஞ் செய்ய பாத்தியங் கொண்டாடாமல் சுரோத்திரியந்தார் ஏகபோக மிராசுதாரென்பதாக வொப்புக் கொண்டிருக்கிறார்கள் ; அதாவது அவர்களுக்கு தாவா கிராமத்-

தில் குடிவார பாத்திய மிருப்பதாக வொப்புக் கொண்டிருக்கிறார்கள். சுரோத்திரயம் என்பது பிராமணன் அல்லது கவர்ன்மெண்டு வுத்தியோகஸ்தன் செய்த வேலைக்காக சொற்ப வரிமட்டில் வசூலித்துக்கொண்டு நிலம் அல்லது நிலத்தீர்வையை இனாமாகக் கொடுப்பது. மொகாஸா என்பது அரபிக் வார்த்தை, அதன் பதார்த்தம் "ஒருவனுக்குச் சொந்தம்" என்பது. அதாவது வேலைபார்ப்பதற்காக தீர்வையில்லாமலாவது சொற்பதீர்வை ஏற்படுத்தியாவது ஒரு கிராமம் அல்லது நிலம் ஒருவருக்குக் கொடுப்பது. இந்த செங்கல்பட்டு ஜில்லாவில் பிரடிஷ் அரசாட்சி ஆரம்பித்தது 1760-ம் வருடம். இதற்கு 12 வருடங்களுக்கு பிறகும், சுரோத்திரியம் ஆக்கப்படுதற்கு 30-வருடங்களுக்கு முந்தி 1772-ம் வருஷத்தில் குத்தகையை நிர்த்தாரணஞ் செய்த வாரச்சட்டம் என்ற தஸ்தாவேஜி 4-அடையாள ஆதிரவாக தாகல்செய்யப்பட்டிருக்கிறது. இதில் காணியாக்ஷிக் காரர்கள் என்று சொல்லப்பட்ட போத்திரெட்டி வெங்கிட கிருஷ்ணம நாய்க்கன் என்ற இருவரும் கம்பத்தம் அல்லதுபண்ணை நிலம் சாகுபடிசெய்ததாகவும், மற்ற நிலங்கள் உள்ளூர் சுகவாசிகள் என்ற குடிகளாற் சாகுபடி செய்யப்பட்டதாகவுஞ் சொல்லப்பட்டிருப்பதுமன்றி கண்டு முதலாகும், 100-கலந் தானியத்தில் சில்லரைச் செலவுகள் போக கவர்ன்மெண்டார் 34-கலம் 5-மறக்கால் 4-படி எடுத்துக்கொண்டதாக எழுதப்பட்டிருக்கிறது. இந்த கம்பத்தம் நிலம் சுகவாசிகள் சாகுபடி செய்த நிலம்; இந்த நிலங்கள் இரண்டிற்கும் ஒரே விதமான ஏற்பாடுதானிருந்திருக்கிறது. காணியாக்ஷி என்ற பதத்துக்கு, காணி=பூமி, ஆக்ஷி=சொந்தக்காரன், என்பது அர்த்தம். இந்த காணியாக்ஷிக்காரர் என்பது இப்பால் மிராசுதாரென்று வழங்கி வருகிறது. மிராசு என்பது அராபிக் வார்த்தையாகிய மிருசி என்பதிலிருந்து வந்தது. மகம்மதியர்கள் தட்சணதேசத்தைக் கைக்கொண்ட பிறகு நிலங்களில் அல்லது அவைகளின் மகசூல்களில் வம்ச பரம்பரையாக ஒருவித சுதந்திர பாத்தியதையைக் கொடுத்து மிராசுதார்கள் என்ற பெயர் கொடுத்தார்கள். மிராசுதார் ஒரு வருஷத்தில் நிலத்தை சாகுபடி செய்யாவிட்டால் சர்க்காரில் அந்த நிலத்தை யெடுத்துக் கொள்ளுவதில்லை. சர்க்காரில் ஒரு குடியானவனை திட்டஞ் செய்து அவனிடம் கவுல் வாங்கிக் கொண்டு அந்த நிலத்தை சாகுபடி செய்யச் சொல்வது வழக்கம். இதனால் மிராசுதாரர்கள்தான் நிலங்களை

சாகுபடி செய்ய குடிகளை திட்டஞ் செய்வது வழக்கமென்று நன்றாகத் தெரிகிறது. இதனால் பிரவாதிகளின் முன்னோர்களுக்கு சுரோத்திரியம் ஏற்பட்ட 1802 வருஷத்தில் இவர்களுக்கு குடிவார பாத்தியமு மிருக்கிறது. அதனால் இந்த வழக்கு சென்னை எஸ்டேட் லாண்டு ஆக்ட்டுப்படி விசாரிக்கப்படத் தக்கதல்ல; டிஸ்டிரிக்ட் ஜட்ஜி இதை தள்ளுபடி செய்தது மெத்த நியாயமானது. அதனால் இந்த அப்பீல்கள் செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டன.

வாதிகளாவது அவர்களின் முன்னோர்களாவது இந்த சுரோத்திரியம் இனாம் ஏற்பட்ட பிறகு குடிக்காணி பாத்தியதையை யடைந்திருக்கிறார்கள் அல்லது இல்லை என்பதைப் பற்றி எங்களுடைய அபிப்பிராயத்தை வெளியிடுவது அனாவசியமென்று நினைக்கிறோம். ஏனென்றால் இதே விஷயத்தைப்பற்றி பின்னால் சிவில் கோர்ட்டுகளில் தாவா செய்யும்படியாக விருக்கும்.

1 Law Weckly 41.

சென்னை ஹைகோர்ட்டு

1912௵த்திய 2-வது அப்பீல் நம்பர் 722.

தீர்ப்பு 17—11—13.

ஜட்ஜிகள்.	பழணியப்பன் ஆ. அப்பீல்தார்கள் (வாதிகள்)
ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள் ஜஸ்டிஸ் ஸ்பென்ஸரவர்கள்	V சுப்பாராய கவுண்டன் ஆ. 4 பெயர்கள் அப்பீல் பிரதிவாதிகள்.

18· [டிரான்ஸ்வர் அவ் பிராபர்டி ஆக்ட்]

ஒரு ஸ்தாவர சொத்தைப் பற்றிய சாசனம் ஒரு தேதியிலும் அந்த சாசனத் தொகையை குறித்த கெடுவில் கொடுத்து விடுவதாக அந்த சாசன தேதிக்கு இரண்டு தினங்கழித்து ஒரு உடன்படிக்கையு மேற்பட்டிருந்தால் அது கண்டிஷனல் கிரயம் என்னும் பெந்தகமாகு மென்பதும், அச் சொத்து கெடுகடந்த பின்பும் மீட்கப்படலா மென்பதும்.

ஈரோடு டிஸ்டிரிக்ட் முனிசிப் கோர்ட்டு தீர்ப்பின் பேரில் கோயம்புத்தூர் சப் கோர்ட்டில் அப்பீல் விசாரணை நடந்தது,

அதன் பேரில் ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது.

1-முதல் 3-வாதிகளின் தகப்பன் M என்பவன் முதற் பிரதிவாதி S-க்கு 1902 வருஷம் சூன் மாதம் 23-ந் தேதியில் தாவ ஸ்தாவர சொத்தை ரூபா 300-க்கு சுத்தக் கிரய சாசனம் எழுதிக் கொடுத்திருக்கிறான். இதற்கு இரண்டு தினங் கழித்து அதாவது சூன் மாதம் 25-ந் தேதி முதற் பிரதிவாதி வாதிகளின் தகப்பனுக்கு ஒரு எதிர் நடைச் சீட்டு எழுதிக் கொடுத்திருக்கிறார். அதில் சாசனத் தொகை ரூபா 300-யும் ஆறாவது வருட முடிவிற் கொடுத்தால் தாவா நிலத்தை வாதிகளின் தகப்பனுக்கு விட்டுவிட வேண்டியதென்றும், ஆனாலந்தத் தொகை சாசன சொத்தை விற்பதினாலாவது வேறு விதமாக பராதீனஞ் செய்தாவது தொகை கொடுக்கக்கூடாதென்றும், சொந்த சம்பாத்தியத்தினின்றும் அத்தொகை கொடுக்கப்பட வேண்டியதென்றும், இத்தொகை குறித்த ஆறாவது வருட கெடுவில் கொடுபடா விட்டால் அச்சொத்துக்கு மவருக்கும் எவ்வித பாத்தியமில்லை யென்றுங் கண்டிருக்கிறது.

இந்த சாசனமும் இதற்கு இரண்டு தினத்துக்குப் பின்னேற்பட்ட எதிர் நடை சீட்டும் ஒரே தேதியில் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது. இந்த எதிர் நடை சீட்டின்படி போக்கிய சொத்தை வாதிகளின் தகப்பன் மீட்கவில்லை. தாவா செத்து 2-முதல் 5-பிரதிவாதிகளுக்கு போக்கியமாக வைக்கப்பட்டிருந்து முதல் பிரதிவாதி இந்த போக்கியத்தை மீட்கவில்லை. மேற்சொன்ன எதிர் நடை சீட்டிற் கண்ட 6-வருடங் கழித்து வாதிகள் இந்த சாசனமும் எதிர் நடை சீட்டுஞ் சேர்ந்து கண்டிஷனல் கிரயமென்னும் பெந்தகமென்றும், தாவா சொத்து சாசனத் தொகை கொடுத்து மீட்கப்பட வேண்டுமென்றும், பிரதிவாதிகள் பேரில் வழக்கிட்டார். மேற்கண்ட தஸ்தாவேஜிகளிரண்டுந் தனித்தனி சங்கதிகளென்றும், வாதிகளின் தகப்பனாலெழுதிக் கொடுக்கப்பட்ட சாசனம் அத்தறுதியான சாசனமென்றும், பின்னாலேற்பட்ட தஸ்தாவேஜி அச்சொத்தை மறு சாசனஞ் செய்வதற்காக ஏற்பட்ட தனிமையும் சுவாதீனமுமான வுடன்படிக்கை யென்றும், அந்த இரண்டு தஸ்தாவேஜிகளுஞ் சேர்ந்து கண்டிஷனல் கிரயமென்னும் பெந்தகமாகமாட்டாதென்றும், முதற் பிரதி

வாதி கக்ஷியாடினார். கீழ் கோர்ட்டார்களிருவரும் மேற்கண்ட தஸ்தாவேஜிகள் கண்டிஷனல் கிரயமென்னும் பெந்தகமாகமாட்டாதென வாதிகளின் வழக்கைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். அதனால் வாதிகள் இந்தக் கோர்ட்டில் இரண்டாவது அப்பீல் செய்திருக்கிறார்கள்.

கிரய சாசனமும், எதிர் நடை சீட்டும் ஒன்றாக வாசிக்கப்பட வேண்டுமென்றும், அவைகளிரண்டும் ஒரு சங்கதியென்றும், அவை டிரான்ஸ்வர் அவ் பிராபர்டி ஆக்டிடு செக்ஷன் 58-கிளாஸ் C ப்படி கண்டிஷனல் கிரயமென்னும் பெந்தகமென்றும், இரண்டு தஸ்தாவேஜிகளும் இரண்டு தினங்கள் மத்தியிலேற்பட்டிருக்கின்றனவென்றும், அவை யிரண்டும் ஒரே தேதியில் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருப்பதால் அவையிரண்டும் ஒரே சங்கதியென்றும், முதற் பிரதிவாதி சொத்து ஸ்வாதீனஞ் செய்துகொள்ளவில்லையென்றும், அது போக்கியதாரன் வசமேயிருந்து வருகிறதென்றும், வாதிகளின் தகப்பன் பெயராலேற்பட்ட பிராசு மாற்றப்படாமல் அவர் பெயராலேயேயிருந்து வருகிறதென்றும், இந்த சாசனமேற்பட்டபிறகும், வாதிகளே சர்க்கார்த் தீர்வை செலுத்தி வருவதாகவும், இந்த தஸ்தாவேஜிகள் எந்த விஷயத்தைப்பற்றியேற்பட்டதென்பதை வாய் மொழியான சாக்ஷியங்களினால் ருஜுப்பிக்கத் தங்களுக்கு பாத்தியங்களிருக்கிறனவென்றும், அப்பீல் வாதிகளின் வக்கீல் மிஸ்டர் P. R. சீனுவாசய்யங்காரும் மிஸ்டர் K. N. கோபால் அவர்களும் கக்ஷியாடினார்கள்.

சொத்தை சாசனஞ்செய்தவன் சாசனம் பெற்றவன் இங்விருவர்களுக்குள்ளும் கடன் கொடுத்தவன் கடன் வாங்கினவன் என்ற பாத்தியமிருந்துவந்ததைக் காட்டக்கூடிய வெளிப்படையான வார்த்தைகள் கிரய சாசனம் எதிர் நடை சீட்டு இவைகளிலிருக்கவில்லையென்றும், அதனால் இந்த சங்கதி பெந்தகமாக எண்ணப்படக் கூடாதென்றும், A அடையாள எதிர் நடைச்சீட்டினால் வெளிப்படையாகத் தெரிகிறபடி சொத்தை மீட்கும்படியான பாத்தியம் அந்த எதிர் நடைச் சீட்டு எழுதி வாங்கியவருக்கு மட்டிற் செல்லுமேயன்றி அப்பாத்தியம் வேறொருவருக்கு மாற்றப்படுவது செல்லத் தகுந்ததல்லவென்றும், இரண்டு தஸ்தாவேஜிகளும் ஒரே தினத்திலேற்படாமல் ஒன்று மற்றொன்றுக்கு இரண்டு தினங்கழித்து ஏற்பட்டிருப்பதால் அது ஒரே சங்கதியாகமாட்டா

தென்றும், அவை தனித்தனி விஷயங்களாக எண்ணப்பட வேண்டுமென்றும், கக்ஷிக்காரர்களுக்குள் எவ்விதமான எண்ணங்களிருந்தனவென்பதை வாய் மொழியான சாக்ஷியங்களினால் ருஜுப்பிக்க்கூடாதென்றும், அப்பீல் பிரதிவாதிகளின் வக்கீல் மிஸ்டர் T. V. கோபால சாமி முதலியார் எதிர்கக்ஷி சொன்னார்

தீர்ப்பு.

இந்த வழக்கில் தாகல் செய்யப்பட்டிருக்கும்கிரயசாசனமும் எதிர் நடை சீட்டும் ஒன்றுக்கொன்று இரண்டு தினங்கழித்து ஏற்பட்டிருந்த போதிலும் அவைகளிரண்டும் ஒரே தினத்தில் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கின்றன. இந்த சாசன சொத்து 2-முதல் 5-பிரதிவாதிகளிடம் ரூபா 200-க்கு போக்கியமாக வைக்கப்பட்டிருந்ததால் 1 அடையாள ஆதிரவு ஏற்பட்ட காலத்தில் தாவா சொத்தை முதற் பிரதிவாதி கைப்பற்றவில்லை; அவைகளின்னும் போக்கியதாரன் வசமேயிருந்து வருகிறது. தாவா சாசனம் 8-வருடங்களுக்கு முன்னேற்பட்டிருந்தபோதிலும் முதற் பிரதிவாதி பெயரால் மாற்றப்படவில்லை. வாதிகளும் வாதிகளின் தகப்பனும் தாவா நிலங்களின் சர்க்கார் கிஸ்தியை நாளது தேதிவரையிலும் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். இவ்விஷயங்கள் ஆக்ஷேபிக்கக் கூடாதனவாகவிருக்கின்றன. இரண்டு தஸ்தாவேஜிகளும் வெவ்வேறு தேதிகளிலேற்பட்டிருப்பதால் தாவா சாசனம் அத்தறுதி சாசனமென்றும், A அடையாள ஆதிரவு மறு சாசனஞ் செய்யப்படுவதற்காக ஏற்பட்ட எக்கிரிமெண்டாகுமென்றும், அதிற்கண்ட 6-வருட கெடுவுக்குள்வழக்கிடாமல் அக்கெடுக் கடந்து 18-மாதங்கள் கிரமித்து வழக்குக் கொண்டுவந்திருப்பதால் வாதிகளின் தாவா செல்லத் தகுந்ததல்லவென்றும் கீழ்கோர்ட்டார் வாதிகளின் வழக்கைத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள்.

பெந்தகம் வைக்கும் ஒருவன் தன் சொத்தை வெளிப்படையாக கிரய சாசனஞ் செய்து குறித்த ஒரு தேதியில பெந்தகத் தொகை செலுத்தப்படா விட்டால் சாசனம் உறுதி செய்யப்படுமென்றும், அல்லது அந்தத் தொகை கொடுபடுவதின் பேரில் சாசனம் ரத்தாய்விடுகிற தென்றும், அல்லது அந்தத் தொகை கொடுபடுவதின் பேரில் வாங்கினவர் அதை விற்றவருக்குத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டுமென்றும் ஏற்பாடு செய்துகொள்ளும்

விஷயத்துக்கு கண்டிஷனல் கிரயமென்றும் பெந்தகமென்று டிரான்ஸவர் அவ் பிராபர்டி ஆக்ட்டு 58-வது செக்ஷன் கிளாஸ் (c) ல் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வெளிப்படையான கிரயமும், அது உறுதி செய்யப்படும் அல்லது ரத்து செய்யப்படும், அல்லது மறு சாசனஞ் செய்யப்படுவதினால் ரத்து செய்யப்படும் என்று எழுதப்படும் நிபந்தனைகளும் ஒரே தஸ்தாவேஜியில் எழுதப்பட்டிருக்கவேண்டுமென்று கண்டிஷனல் கிரய மென்னும் பெந்தகத்துக்காகச் சொல்லப்பட்டிருக்கும் வாசகங்களினாற் றெரியவந்தாலும், இவ்விரண்டு விஷயங்களுந் தனித் தனியே இரண்டு தஸ்தாவேஜிகளிலேற்பட்டிருந்தபோதிலும், அவ்விஷயங்கள் ஒன்றானதாக உபய கக்ஷிக்காரர்களின் எண்ண மிருந்ததாகத் தெரியவரும் பட்சத்தில் அவை யிரண்டும் ஒரே விஷயமென்றும், அவை கண்டிஷனல் கிரியமென்னும் பெந்தகமாகு மென்றும், இ. லா. ரி. 22 அலகபாத் 149, பிரிவி கவுன்ஸல் தீர்ப்பும், இ. லா. ரி. 23-சென்னை 114, 33 அலபாத் 122-தீர்மானங்களு மேற்பட்டிருக்கின்றன. இ. லா. ரி. 27 சென்னை 348- 349-தீர்மானத்தில் அபிஷியேடிங் சீவ் ஜஸ்டிஸ் ஸர் யஸ் சுப்பிரமணிய அய்யரவர்களும், ஜஸ்டிஸ் பாஷியம் அய்யங்காரவர்களும் குறிப்பிட்டபடி பெந்தக சங்கதிகள் வெவ்வேறு கடிதாசிகளில் சேர்க்கப்பட்டிருந்தாலுஞ் சரியே, தனித் தனியே யிருந்தாலுஞ் சரியே, எந்த விதமாகவாவது எழுதப்படலாம். அவைகள் ஒரே விதமாகத்தானிருக்க வேண்டுமென்ப தவசியமில்லை. வெவ்வேறு தஸ்தாவேஜிகளிலிருக்கப்பட்ட சங்கதிகள் ஒன்றுக் கொன்று ஒற்றுமையில்லாமலாவது, விரோதமாகவாவது இருக்கும்பட்சத்தில், அந்த விஷயங்களெல்லாங் கண்ட எல்லா தஸ்தாவேஜிகளும், ஒரே தஸ்தாவேஜியாக வாசித்துப் பார்த்து உபய கட்சிக்காரர்களின் எண்ணங்களின்னதென்பதை கண்டுபிடிக்க வேண்டும். A அடையாள ஆதிரவு I அடையாள ஆதிரவு இவையிரண்டும் தனித்தனி சங்கதிகளாக எண்ணப்படவேண்டியதா, அதாவது ஒன்று கிரயசாசனம் மறுசாசனஞ் செய்யப்படவேண்டியதாக மற்றொரு தஸ்தாவேஜி, என்ற விஷயம் இரண்டு தஸ்தாவேஜிகளையும் நன்றாக வாசித்து அவைகளினர்த்தங்களைக் கொண்டும், அதன் சுற்றுப்பட்ட விஷயங்களைக் கொண்டுந் தெரிந்து கொள்ளவேண்டும். தஸ்தாவேஜிகளின் வாசகங்களைக் கொண்டு

கக்ஷிக்காரர்களின் நோக்கம் எண்ணம் என்னவிருந்ததென்பதைப் பற்றி விடப்பட்ட வாய்மொழியான சாக்ஷியம் ஏற்றுக்கொள்ளக் கூடாது. தஸ்தாவேஜிகளின் அர்த்தங்களைத் தெரிந்துகொள்ளுவதற்காகவும், கக்ஷிக்காரர்களின் எண்ணங்களைப்பற்றி வாய்மொழியான ருஜு அங்கீகரிக்கத் தக்கதல்லவென பிரிவிகவுன்ஸில் இ. லா. ரி 22 அலகபாத் 149 தீர்மானத்தில் ஜட்ஜிகள் சொல்லியிருக்கிறார்கள்.

இரண்டாவது தஸ்தாவேஜி இரண்டு தினங்கழித்து ஏற்பட்டிருந்தபோதிலும், இது முதல் தஸ்தாவேஜுக்கு எதிர்நடை தஸ்தாவேஜி யென்று சொல்லப்பட்டிருப்பதால், இரண்டு மொரே விஷயமாகத்தான் கொள்ளப்படவேண்டும். இரண்டு தினங்கழித்து ஏற்பட்டிருப்பதினால் பாதகமில்லை. இ. லா. ரி 22 அலகபாத் 149 தீர்ப்பு தாவா கேசுக்கு மெத்தப் பொருத்தமாக விருக்கிறது. இரண்டு தஸ்தாவேஜிகளும், கண்டிஷனல் கிரியமென்றும் பெந்தகமாகுமென்று இ. லா. ரி 23 சென்னை 114 தீர்மான மேற்பட்டிருப்பதால் அதை யனுசரிக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம். கடன்கொடுத்தவன் கடன்வாங்கினவன் என்ற விஷயங்களை வெளிப்படையாகக் காட்டக்கூடிய வார்த்தைகள் முதல் தஸ்தாவேஜியி லிருந்தாலொழிய அது கண்டிஷனல் கிரயமென்னும் பெந்தக தஸ்தாவேஜி யாகமாட்டாதென அப்பீல் பிரதிவாதியின் வக்கீல் கக்ஷியாடுகிறார். இங்கிலீஷ் கோர்ட்டாருடைய நடுநியாய சட்டம் (Equity) இ. லா. ரி 22 அலகபாத் 149 தீர்மானத்தில் ஜட்ஜிகள் தங்கள் அபிப்பிராயத்தை வெளியிட்டிருப்பது இந்த ஆதாரங்களின் பேரிலேதான். கண்டிஷனல் கிரய மென்னும் பெந்தகம் எவ்வித மிருக்கவேண்டுமென்று டிரான்ஸவர் அவ் பிராபர்டி ஆக்ட்டு 58-வது செக்ஷனில் விவரமாகச் சொல்லப்பட்டிருக்கும்போது இங்கிலீஷ் சட்டங்களை யிந்தியாவில் உபயோகப்படுத்தக் கூடாது. இந்தியாவின் பெந்தகம் விஷயமாக டாக்டர் கோஸ் என்பவர் எழுதியிருக்கும் புத்தக நான்காவது பதிப்பு 85-வது பக்கத்தில் இங்லீஷ் சட்டங்கள் இந்தியாவில் உபயோகப்படுத்தக் கூடாதெனச் சொல்லியிருக்கிறார். இவ்விஷயம் இ. லா. ரி. 26-பம்பாய்252-தீர்மானத்திலுஞ் சொல்லப்பட்டிருக்கிறது. சந்தேகப்பட்ட கேஸ்களில் கோர்ட்டார் சொத்து மீட்கப்பட வேண்டுமென்று பாத்தியங் கொண்டாடுகிறவனுக்கு அனுகூலமாகவே

தஸ்தாவேஜிகளுக்கு அர்த்தஞ் செய்ய வேண்டுமென மேற்படி புத்தகம் 87-வது பக்கத்திற் சொல்லியிருக்கிறார். மீட்கும்படியான பாத்தியம் தஸ்தவேஜி எழுதி வாங்கினவருக்கு மட்டிலுண்டு ; மற்றவர்களுக்கில்லை யென்பது செல்லத் தகுந்ததல்ல (இ. லா. ரி. 3 அலகபாத் 369 தீர்மானத்தை பார்க்க). இதனால் கீழ் கோர்ட்டார்களின் தீர்மானங்களை ரத்து செய்து இந்தத் தேதி முதல் 3-மாத கெடுவுக்குள் முதல் கோர்ட்டில் பிரதிவாதிகளுக்காக ரூபா 300-வாதிகள் கட்டிவிடுவதின் பேரில் வழக்கம் போல் ரிடம்ஷன் (Redemption) டிக்கிரி செய்யப்படும்.

1—L. W 80

சென்னை ஹைகோர்ட்

1911ளு வருஷத்திய அப்பீல் நம்பர் 15.

தீர்ப்பு 1—4—13.

ஜட்ஜிகள்.

சீவ் ஜஸ்டிஸ் வொயிட் அவர்கள்
ஜஸ்டிஸ் டியாப்ஜி அவர்கள்

பாக்ஷாசாகிப் பிரவாதி
அப்பீல்தாரன்
V
அப்தல்கன்னி வூ வாதிகள்
எதிர்கக்ஷிக்காரர்கள்

32. [சீவில் புரிஸீஜர் கோடு.]

பஞ்சாயத்து தீர்மானத்தின்படி கோர்ட்டார் டிக்கிரி செய்யும் பட்சத்தில் அதன்பேரில் அப்பீல் செய்யப்படக் கூடாதென்பதும் ரேவிஷனுக்கு பிரத்தியேகமான மனு வேண்டியதில்லை யென்பதும். கோயம்புத்தூர் டிஸ்டிரிக்ட் கோர்ட்டு தீர்ப்பின் பேரில் அப்பீல்.

சீவ் ஜஸ்டிஸ் அவர்கள்:—சிவில் புரிஸீஜர் கோடு 2-வது ஷிடியூல் 16-வது பாராப்படி செய்யப்பட்ட பஞ்சாயத்து தீர்மானத்தின்படி டிக்கிரி செய்யப்பட்டிருப்பதைப்பற்றி இந்த அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது. இந்த டிக்கிரி சரியல்ல வென்பதற்கு இருவித ஆக்ஷேபனைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. (1)யாதொரு எவார்டுஞ் செய்யப்படவில்லை (2) எவார்டின்படி தீர்ப்புசெய்ய வேண்டுமென டிஸ்டிரிக்ட் ஜட்ஜியிடம் மனுக் கொடுத்தபோது அந்தக் கோர்ட்டார் விரோதமான அபிப்பிராயப்பட்ட பஞ்சாயத்தாருக்கு சம்மனனுப்பி சாக்ஷியாக விசாரித்து அதன்பேரில் டிக்கிரி செய்திருக்கவேண்டும். அவ்விதஞ் செய்யாதது பிசகு.

இந்தத் தீர்ப்பின் பேரில் அப்பீல் செய்ய சட்டமில்லையென்று எதிர்க்கக்ஷிக்காரர் பிரதம ஆக்ஷேபனை செய்கிறார்கள். இது 1. M. W. N. 151-தீர்மானத்திற் கண்டபடி சரியான ஆக்ஷேபனையென்றும், அது ஏற்றுக்கொள்ளத் தகுந்ததென்றும். அபிப்பிராயப்படுகிறோம். இந்த புல்பெஞ்சு தீர்மானம் பழைய சீவில் புரிஸீஜரின்படி ஏற்பட்டது. பழைய கோர்டில் சந்தேகாஸ்பதமாயிருந்த விஷயங்களெல்லாம் புதிய கோடில் நிவர்த்தி செய்யப்பட்டிருக்கின்றன. பழைய கோடு 521-வது செக்ஷனுக்கு ஒற்றுமையாகவுள்ள புதிய கோடு 2-வது ஷிடியூல் 15-வது பாராவில அடியிற் கண்ட காரணங்களில் ஒன்றேனுமிருந்தாலொழிய எவார்டு ரத்து செய்யப்படக் கூடாதெனச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த 15-வது பாரா (1) (c)யில் புதிய ஆதாரம் ஏற்பட்டிருக்கிறது. கோர்ட்டாரால் கெடுக் குறிக்கப்பட்டிருக்கிற காலத்துக்குப் பிற்பட்டு செய்யப்படும் எவார்டு செல்லத்தக்கதில்லை யெனச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப் பாராவின் கடைசியில் "வேறெந்த விதத்திலாவது செல்லத்தகாததா யிருந்தால்" என்ற வார்த்தைகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவைகள் முன்னேற்பட்ட சந்தேகங்களை நிவர்த்திப்பதற்காக ஏற்பட்டிருக்கின்றன. அப்பீல் இல்லையென்று சொல்வது புழைய கோடின்படி சரியானதாகவிருந்தாலும் புதிய கோடின்படிக்கும் அது சரியானதே. பஞ்சாயத்தாருடைய எவார்டு ரத்து செய்யப்பட மனுக் கொடுக்க வேண்டியதாக விருந்தால் எவார்டு கோர்ட்டில் கொடுத்த 10-தினங்களுக்குள் கொடுக்கப்பட வேண்டும் (1908 - வருஷத்திய லிமிட்டேஷனுக்ட்டு 1-வது ஷிடியூல் ஆர்டிகில் 158). சி.பு. கோடு 2-வது ஷிடியூல் 15-வது பாராப்படி "வேறெந்தக் காரணத்தினாலாவது செல்லத்தகாததாக விருந்தால்" என்ற ஆதாரத்தின் பேரில் இந்தக் கேசில் மனுக் கொடுத்திருக்கலாம். ஆனால் அந்த மனு குறிப்பிடப்பட்ட காலத்துக்குள் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். தாவா கேசில் எவார்டு ஜூன் மாதம் 29ந்தேதி தாக்கல் செய்யப்பட்டது. அந்த எவார்டு ரத்து செய்யப்படவேண்டுமென்ற மனு ஜூலை மாதம் 18-ந் தேதி கொடுபட்டிருக்கிறது. இந்த மனு செப்டம்பர் மாதம் 2-ந் தேதி தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. இந்த எவார்டின்படி செய்யப்பட்ட தீர்மானம் ஆக்ஷேபனைக்குக் குறிப்பிடப்பட்ட காலத்துக்குப்பிறகுதான் செய்யப்பட்டிருக்கிறது. இத் தீர்மானம் 16-வது பாராப்படி செய்யப்

பட்டிருக்கிறது. அது பாரா 16 (2) ன்படி முடிவானதாகி விட்டது.

இந்தக் கேசிற் கண்ட விஷயங்களை ரிவிஷன் அதிகாரத்திற் கவனிக்கலாமென கேட்டுக் கொள்ளப்படுகிறது. சி. பு. கோடு 115-வது செக்ஷன்படி எங்கள் முன்பாக அது விஷயமாக பிரத்தியேகமான மனுவில்லை. ரிவிஷனில் கவனிக்கலா மென்பதற்கு அப்பீல்தார் வக்கீல் 1. M. W. N 141 என்ற ஒரே தீர்மானந் தான் எடுத்துக் காட்டுகிறார். அந்தக் கேசிற் கண்ட விஷயங்கள் வேறு, அந்தத் தீர்மானம் எவார்டு தாக்கல் செய்யப்பட்ட இரண்டு தினங்களுக்குள் செய்யப்பட்டது. சி. பு. கோடு 2-வது ஷெடியூல் 16-வது பாராவிற் கண்ட நிபந்தனைக்கு விரோதமாகச் செய்யப் பட்டதென்ற ஆதாரத்தின் பேரில் ரிவிஷனில் அதை ரத்து செய்திருக்கிறார்கள். எவார்டின் பேரிற் செய்யப்படும் தீர்மானத்தின் பேரில் அப்பீல் செய்யப்படக்கூடாதென்று இ. லா. ரி. 32 சென்னை 510 தீர்மானமேற்பட் டிருக்கிறது. அதை நாமனுசரிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்த அப்பீல் செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

(1914) M. W. N. 142.

சென்னை ஹைகோர்ட்டு

1913 ஞ்த்திய நம்பர் I உத்தரவின்பேரில் அப்பீல்

தீர்ப்பு 18—12—13

ஜட்ஜிகள்	
ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள் ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர் அவர்கள்	முத்துகருப்பன் செட்டியாரின் ஏஜண்டு முத்துவைரபிள்ளை. அ. வாதி V M. A. சின்னசாமி பிள்ளை யென்கிற முத்துகருப்பபிள்ளை அ. பிரதிவாதி.

33. [சிவில் புரிவீஜர் கோடு.]

பெந்தக பத்திரத்தின் பேரிற் செய்யப்படும் டிக்ரி பாரப்படி எழுதப்படாமல் ஆளைப்பொறுத்து டிக்கிரி செய்யப்பட்டிருந்தால் அதன் ஷரத்துப்படிக்குத்தான் நிறைவேற்றப்படவேண்டிய தவசிய மென்பது.

ஈரோடு டி. மு. கோர்ட்டார் செய்த உத்திரவின் பேரில் கோயம்புத்தூர் டிஸ்டிரிக்ட் கோர்ட்டில் அப்பீல். அதன்பேரில் 2-வது அப்பீல்.

ஒரு பெந்தக பத்திரத்தின்பேரில் வழக்கிட்டதில் டிஸ்டிரிக்ட் முனிசிப் ஆளைப்பொறுத்தும் பெந்தக சொத்து ஏலவிற்று முதலினுந் தொகை கிடைக்கவேண்டியதென தீர்ப்பு செய்துவிட்டார்கள். இந்த ஷரத்துப்படியே டிக்கிரியை நிறைவேற்ற டிஸ்டிரிக்ட் முனிசிப் உத்திரவு செய்துவிட்டார். இதைப்பற்றி பிரதிவாதி அப்பீல் செய்ததில் டிஸ்டிரிக்ட் முனிசிப் செய்தவுத்திரவு ரத்து செய்யப்பட்டது. இது சட்ட விரோதமானதென்று வாதி 2-வது அப்பீல் செய்திருக்கிறார்.

21 சென்னை லா ஜர்னல் 1036 தீர்மானத்திற் கண்டபடி பெந்தக டிக்கிரிதாரன் பெந்தக சொத்தைத் தொடர்ந்து தொகை வசூலிப்பதற்கு முந்தியே டிக்கிரியின் ஷரத்துப்படி ஆளைப் பொறுத்தே டிக்கிரியை நிறைவேற்றலாம். இதனால் டிஸ்டிரிக்ட் ஜட்ஜி செய்த தீர்ப்பை ரத்து செய்து முனிசிப் செய்த உத்திரவை உறுதி செய்கிறோம்.

(1914) M. W. N. 153.

சென்னை ஹைகோர்ட்டு

1909 ஞ்த்திய 2-வது அப்பீல் நம்பர் 1115.

தீர்ப்பு 21—1—14.

ஜட்ஜிகள்	
ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள் ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர் அவர்கள்	சொக்கப்பரெட்டி அப்பீல்தாரன் V சிங்கனரெட்டி ஆ் எதிர்கக்ஷிக்காரர்.

34. [சிவில் புரிவீஜர் கோடு.]

ஒருவன் தன் கடன்காரர்களை மோசஞ் செய்யாதிருந்தால் மோசக்கருத்துடன் பெயரிரவலாகச் செய்துவைத்த தஸ்தாவேஜு தனக்கு பாத்தியமென வழக்கிடலாமென்பதும், அப்பீல் கோர்ட்டார் அந்தக் கோர்ட்டில் கக்ஷிக்காரராக சேர்க்கப்படாதவர் பெயரிலேற்பட்ட டிக்கிரியையும் மாற்றிவிடலாமென்பதும்.

மானாமதுரை டிஸ்டிரிக்ட் முனிசிப் கோர்ட்டு தீர்ப்பின் பேரில் மதுரை சப் கோர்ட்டில் அப்பீல் விசாரணை நடந்து அதன் பேரில் 2-வது அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது.

1 முதல் 3 பிரதிவாதிகளின் முன்னோர்களால் தாவா சொத்து 4-5-பிரதிவாதிகளுக்கு பெந்தகமாக வைக்கப்பட்டிருந்தது. இந்த 4-5-பிரதிவாதிகள் தங்களுக்குள்ள பெந்தக பாத்தியங்களை வாதிக்கு உள்பெந்தகமாக வைத்தார்கள். அந்த உள் பெந்தகத்தின் பேரில் வாதி மேலே சொன்ன எல்லா பிரதிவாதிகள் பேரிலும் வழக்கிட்டதுடன் பெந்தகசொத்தை யனுபவிப்பதாக 6-ம் பிரதிவாதியும் இதிற் கக்ஷிக்காரராகச் சேர்க்கப்பட்டார்.

தாவா உள் பெந்தகம் 6-ம் பிரதிவாதிக்காக பெயர் இரவலாக வாதி பெயராலேற்பட்டதென்றும், வாதிக்கு தாவா பெந்தகத்தில் எவ்வித பாத்தியமுமில்லையென்றும், 6-ம் பிரதிவாதி தன்னுடைய கடன்காரர்களை மோசஞ் செய்யவேண்டியதினிமித்தம் வாதி பெயரால் ஏற்படுத்திவைக்கப்பட்டதென்றும், அது சட்டவிரோதமானதென்றும், அதற்கு எவ்விதப் பிரதிப் பிரயோஜனமுமில்லையென்றும், 4-5-6 பிரதிவாதிகள் கக்ஷியாடினார்கள்.

தாவா பெந்தக பத்திரம் உண்மையானதென்றும் அதற்கு பிரதி பிரயோஜன முண்டென்றும், அது 6-ம் பிரதிவாதிக்காக பெயரிரவலாக ஏற்பட்டதல்ல வென்றும், டிஸ்டிரிக்ட் முனிசீப் கண்டுபிடித்து வாதி கேட்டபடி ஏலத்துக்கு தீர்ப்பு செய்ததுமன்றி 4-5-பிரதிவாதிகளின் சரீர ஜவாப்தாரியின் பேரிலுந் தீர்ப்பு செய்தார்கள்.

இத்தீர்ப்பு விஷயமாக 6-ம் பிரதிவாதி டிஸ்டிரிக்ட் கோர்ட்டில் அப்பீல் செய்ததில் வாதி பெயரிரவலானவரென்றும் எந்தக் கடன்காரர்களை மோசஞ்செய்யவேண்டுமென இது பெயரிரவலாக எழுதி வாங்கப்பட்டதோ அக்கடன்காரர்களுக்கு தொகை கொடுபட்டு தீர்ந்துவிட்டதென்றும், 6-ம் பிரதிவாதி தன்னுடைய பாத்தியதையை ஸ்தாபிக்கத் தடைப்படுத்தப்பட்டிருக்கவில்லையென்றும், வாதியின் வழக்கை டிஸ்டிரிக்ட் ஜட்ஜி தள்ளுபடி செய்து விட்டார்கள்.

தாவா சொத்தை 6-ம் பிரதிவாதியின் கடன்காரர்கள் கைப்பற்றாமல் மோசவகையாக மறைத்துவைத்திருந்ததாக டிஸ்டிரிக்ட் முனிசிப் கண்டுபிடித்ததை டிஸ்டிரிக்ட் ஜட்ஜியும் ஒத்துக்கொண்டிருப்பதாகவும், அதனால் 6-ம் பிரதிவாதி தன்னுடைய பாத்தியதையை ஸ்தாபிக்கத் தடைப்படுத்தப்பட்டிருக்கிறாரென்றும், இவருடைய கடன்காரர்களுக்குச் சேரவேண்டிய தொகை

கொடுபட்டுவிட்டன வென்பது இந்த தாவாவுக்கு எவ்வித சம்பந்தமுமில்லை யென்றும் - 4-5 பிரதிவாதிகளின் சரீர ஜவாப்தாரியின் பேரில் டிஸ்டிரிக்ட் முனிசீப் செய்த தீர்ப்பை டிஸ்டிரிக்ட் ஜட்ஜி ரத்து செய்தது பிசகென்றும் அப்பீல் வாதியின் வக்கீல் கக்ஷியாடுகிறார்.

தீர்ப்பு.

6-ம் பிரதிவாதியின் கடன்காரர்கள் எவரும் மோசஞ் செய்யப்படவில்லை யென்று 6-ம் பிரதிவாதி சொல்லியது உண்மையானதென கீழ் அப்பீல் கோர்ட்டார் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதை நாங்கள் ஒத்துக்கொள்ளுகிறோம். வாதிக்கு தாவா பெந்தக பத்திரத்தில் எவ்வித பாத்தியமுமில்லையென்றும், அது 6-ம் பிரதிவாதிக்குத் தான் சொந்தமானதென்றும் ருஜுப்பிக்க எவ்வித தடையுங் கிடையாது. (இ. லா. ரி. 35 கல்கத்தா 551 தீர்மானத்தை பார்க்க.)

6-ம் பிரதிவாதி செய்த அப்பீலில் 4-ம் பிரதிவாதி கக்ஷிக்காரனாகச் சேர்க்கப்படாவிட்டாலும் சி. பு. கோடு 41 வது ஆர்டர் 10 வது ரூல் தாவா கேசுக்குப் பொருத்தமாயிருக்கிறது. அப்பீல் கோர்ட்டார் 4-ம் பிரதிவாதிக்கும், அனுகூலமாகத் தீர்ப்பு செய்யலாம். இந்த 2-வது அப்பீல் செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

I. L W. 169.

சென்னை ஹைகோர்ட்டு.

1912 ஷலத்திய 2-வது அப்பீல் நம்பர் 1125

தீர்ப்பு 23—12—13.

ஜட்ஜிகள்	கிருஷ்ணம்மாள் ஆ அப்பீல்தார்கள் (1-2 பிரதிவாதிகள்)
ஜஸ்டிஸ் சங்கரநாயரவர்கள்	V
ஜஸ்டிஸ் டியாப்ஜி அவர்கள்	மாரங்கியார் சுந்தரராஜ அய்யர் அ. பிரதிவாதி (வாதி)

35. [சிவில் புரொஸீஜர் கோடு.]

குடியானவன் வசத்திலிருந்த நிலத்தை சாசனஞ் செய்வதாக அந்த நிலத்துக்குடையவன் எழுதிக்கொடுத்த உடன்படிக்கையின்படி நடவாததால் சாசனஞ் செய்து கொடுக்கப்படவேண்டுமென

வழக்கிட்டுத் தீர்ப்பாகி சாசனமேற்பட்ட பிறகு அதிற் கண்ட நிலம் கிடைக்கவேண்டுமென வேறு வழக்கிடலாமென்பதும், இரண்டு விஷயங்களைப்பற்றியும் ஒரே வழக்கிடவேண்டிய தவசியமில்லை யென்பதும்.

நாகபட்டணம் முனிசீப் கோர்ட்டு டிக்கிரியின்பேரில் நாக பட்டணம் சப் கோர்ட்டில் அப்பீல் விசாரணை நடந்து, அதன் பேரில் ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்யப்பட்டது.

1-2 பிரதிவாதிகள் தங்களுக்குச் சொந்தமான நிலத்தை வாதிக்குச் சானஞ் செய்து கொடுத்து அதை ரிஜிஸ்டர் செய்து கொடுப்பதாகவும், அந்த நிலத்தை யனுபவித்துவரும் குடியானவனை யப்புறப்படுத்திவிட்டு அதை 1896 வருஷம் ஜூலை மாதம் 26 தேதிக்குள் ஸ்வாதீனஞ் செய்து கொடுப்பதாகவுங் கண்டு 1-2 பிரதிவாதிகள் 1896 வருஷம் மே மாதம் 26 தேதி ஒரு உடன்படிக்கை யெழுதிக்கொடுத்தார்கள். பிரதிவாதிகள் அந்தப்படி சாசனஞ் செய்து கொடுக்கத்தவறி விட்டதால் வாதி அது விஷயமாக வழக்கிட்டு ஏற்பட்ட உடன்படிக்கையின்படி பிரதிவாதிகள் சாசனஞ் செய்து கொடுக்கவேண்டியதென்று டிக்கிரி பெற்றார். பிரதிவாதிகள் இந்த டிக்கிரிப்படி சாசனஞ் செய்து கொடுக்காததினாலே அவர்கள் ஸ்தானத்தில் கோர்ட்டார் தாவா சாசனமெழுதிக் கொடுத்தார்கள். இவ்விதம் விற்கப்பட்ட நிலத்தை விடுவதில்லையென பிரதிவாதிகள் மறுத்துவிட்டபடியால் கோர்ட்டாரால் எழுதிக்கொடுக்கப்பட்ட சாசனப்படி சொத்து ஸ்வாதீனமாக வேண்டுமென வாதி வழக்கிட்டார்; வாதி முன் செய்த பிராதில் சொத்து ஸ்வாதீனமுங் கிடைக்கவேண்டுமென்று கேட்கத் தவறிவிட்டதால் இந்த தாவா சி. பு. கோடு 2-வது ஆர்டர் 2-வது ரூல்படி காலாவதியாகப் போயவிட்டதாக பிரதிவாதிகள் கக்ஷியாடினார்கள். குடியானவனை யப்புறப்படுத்த வேண்டியதாக விருந்ததால் முன்வழக்கில் சொத்து ஸ்வாதீனங் கேட்கக் கூடாமையாக விருந்ததென்று கீழ்கோர்ட்டார்களிருவரும் வாதியின் வழக்குப்படியே தீர்ப்பு செய்துவிட்டார்கள். அதன்பேரில் பிரதிவாதிகள் 2-வது அப்பீல் செய்திருக்கிறார்கள்.

குடியானவர்கள் அப்புறப்படுத்தப்பட வேண்டியதாக விருந்ததென்றும், அதனால் முன் வழக்கில் சொத்து ஸ்வாதீனங் கொடுக்கக் கூடாமையாகவிருந்ததென்றும் கீழ்கோர்ட்டார்கள் சொல்

வது பிசகென்றும், அந்த வழக்கு காலத்தில் குடியானவர்கள் தாவா ஸ்தலத்தை காலி செய்து விட்டதாகவும், நிலம் ஸ்வாதீனப் படுத்திக் கொடுக்கத் தயாராகவிருந்த போதிலும் பிரதிவாதிகள் ஸ்வாதீனப்படுத்திக் கொடுக்கவில்லையென்றும், முந்திய பிராதில் தெளிவாகச் சொல்லப்பட்டிருப்பதாகவும், சொத்து ஒப்புக் கொடுக்கப்படுவதற்கு முந்தி குடியானவர்கள் அப்புறப்படுத்தப்பட வேண்டுமென்ற காரணத்துக்காக சொத்துக் கிடைப்பதற்காக ஏற்பட்ட வியாஜ்ஜிய மூலம் ஸ்பெஸிவிக் பர்வார்மென்ஸ் (Specfic Performance) என்பதுடன் உண்டாகவில்லை யென்று கீழ்கோர்ட்டார்கள் தாவா உடன்படிக்கைக்கு தப்பான அர்த்தஞ் செய்து தீர்மானித்திருக்கிறார்களென்றும், இரண்டு மாத கெடுவுக்குள் பிரதிவாதிகள் சாசனமெழுதிக் கொடுக்கவேண்டியதுடன் அதற்குள் சொத்துஸ்வாதீனமுஞ் செய்து கொடுக்கவேண்டுமென உடன்படிக்கையிற் சொல்லப்பட்டிருப்பதால் சொத்து ஸ்வாதீனங் கிடைப்பதற்கு வியாஜ்ஜியமூலம் அந்த உடன்படிக்கையின் பேரிற்றானேற்பட்டிருக்கிறதென்றும், அது ஸ்பெஸிவிக் பர்வார்மென்ஸுடன் சேர்க்கப்பட்டிருக்கவேண்டுமென்றும், சாதாரணமாக சொத்து ஸ்வாதீனத்துக்கு வியாஜ்ஜியமூலம் கிரயசாசனம் எழுதிக்கொடுப்பதின் பேரிலேற்பட்டிருந்த போதிலும் சாசனஞ் செய்து கொடுப்பதாக வேற்பட்ட உடன்படிக்கையில் சொத்து ஸ்வாதீனமுங் கிடைக்க வேண்டுமென்ற ஷரத்து ஏற்பட்டிருப்பதால் சாசனமெழுதிக் கொடுக்கிறபோதே சொத்து ஸ்வாதீனமுங் கிடைத்திருக்கவேண்டியதென்றும், முன் ஸ்பெஸிவிக் பர்வார்மன்ஸுக்கு வழக்கிடும்போது சொத்து ஸ்வாதீனமுங் கேட்டிருக்கவேண்டியதென்றும், ஏற்பட்ட எக்கிரிமெண்டுப்படி சொத்து ஸ்வாதீனம் 1896 வருஷம் ஜூலை மாதம் 26ந்தேதிக்கு முந்தியே கிடைத்திருக்கவேண்டிய தாகையால் அந்தத் தேதிக்கு 12 வருடங்களுக்குப் பிறகு இந்த தாவா செய்திருப்பதால் வாதியின் தாவா காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுப் போய்விட்டதாகவும் முன் வழக்கிலேயே சொத்து ஸ்வாதீனமுங் கேட்டிருந்தால்இந்த அனாவசியமான செலவுகளேற்பட்டிருக்க மாட்டாவென்றும், அதனால் இந்த தாவாவின் செலவு தொகைக்கு பிரதிவாதிகள் எந்த விதத்திலுங் கட்டுப்பட்டவர்களல்லவென்றும், பிரதிவாதிகளின் வக்கீல் மிஸ்டர் T. V. கோபாலசாமி முதலியார் இ. லா. ரி. 22· செ

ன்னை 24, 12 சென்னை லா ஜர்னல் 71 இந்தத்தீர்மானங்களை தன் கக்ஷிக்கு ஆதாரமாக வெடுத்துக்காட்டி கக்ஷியாடுகிறார்.

சொத்து ஸ்வாதீனத்துக்குரிய பாத்தியம் கிரய சாசனத்தின்பேரில் தனிமையிலுண்டாகிறதென்றும், எக்கிரிமெண்டில் சொத்து ஸ்வாதீனத்தைப் பற்றிய ஷரத்து ஏற்பட்டிருந்த போதிலும், அதற்கும் சொத்து ஸ்வாதீனத்துக்கும் எவ்வித சம்பந்தமுமில்லையென்றும், டிரான்ஸ்வர் அவ் பிராபர்டி ஆக்டுப்படி சொத்துக்கு பாத்தியம் கிரயசாசனமேற்படுந் தேதி முதற்கொண்டு உண்டாகிறதென்றும், எக்கிரிமெண்டில் சொத்து ஸ்வாதீனமுங் கண்டிருக்குங் காரணத்தினால் அந்த பாத்தியம் விலகமாட்டாதென்றும், கீழ் கோர்ட்டார்கள் செய்த தீர்மானங் கிரமமானதென்றும் சாசனத்தொகையைப் பெற்றுக்கொண்டு சொத்தை விடமாட்டோமென பிரதிவாதிகள் சொல்லக்கூடாதென்றும் நடுநியாயப்படி வாதிக்கு சொத்து கிடைக்கக்கூடியதென்றும், வாதியின் வக்கீல் மிஸ்டர் T. R. வெங்கட்டராம சாஸ்திரிகள் எதிர்வாதஞ் செய்தார்.

தீர்ப்பு.

வாதியின் தாவா சி. பு. கோடு 2-வது ஆர்டர் 2-வது ரூல்படி காலாவதியாகப் போய்விட்டதா வென்பது கேள்வி. வாதி தனக்கு பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்த எக்கிரிமெண்டுப்படி கிரயசாசனம் எழுதிக்கொடுக்கப்பட வேண்டுமென வழக்கிட்டு டிக்கிரி பெற்று அதை நிறைவேற்றி சாசனம் பெற்றுக்கொண்டு அந்தச் சாசனப்படி சொத்து ஸ்வாதீனமாக வேண்டுமென வழக்கிட்டிருக்கிறார். முன் வழக்கில் சொத்து ஸ்வாதீனமுங் கிடைக்க வேண்டுமென்று கேட்கத் தவறிவிட்டதால் இந்த வழக்குக்கு காலாவதி தோஷமேற்பட்டுவிட்டதென்று இ. லா. ரி. 22 சென்னை 24 தீர்மானத்தை தங்கள் கக்ஷிக்கு ஆதாரமாகக் காட்டி பிரதிவாதிகள் எதிர்க்கக்ஷியாடுகிறார்கள்.

கிரயசாசனம் எழுதிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டதுடன்சொத்து ஸ்வாதீனமுங் கிடைக்க வேண்டுமென்று முன் வழக்கில் வாதி கேட்டிருக்கலாம். அது அவனுடைய அபிப்பிராயத்தை பொறுத்தது. அந்த வழக்கு கொண்டுவந்த காலத்தில் சொத்துக்குரிய பாத்தியம் அவனுக்குக் கிடைக்கவில்லை. கிரயசாசன மேற்பட்டபிறகுதான் அந்த பாத்தியம் அவனுக்கு ஏற்படு

கிறது. சொத்து ஸ்வாதீன மென்பது கிரயசாசனத்தைச் சார்ந்ததல்ல, அதற்குள் பட்டது மல்ல. ஸ்பெஸிவிக் பர்வார்மென்ஸ் வழக்கில் உடன்படிக்கை செய்து கொண்டவர்கள் மட்டில் கக்ஷிக்காரர்களாயிருக்கவேண்டும். சொத்து ஸ்வாதீனமாக வேண்டுமென்று கொண்டுவரப்படும் வழக்கில் அச்சொத்தை யனுபவித்து வருகிறவர்களெல்லாங் கக்ஷிக்காரர்களாக சேர்க்கப்படவேண்டும். டிரான்ஸ்வர் அவ் பிராபர்டி ஆக்ட் 54-வது செக்ஷன் 55 (1) (F) ரிஜிஸ்டிரேஷனாக்ட் இவைகளின்படி கிரயசாசனம் பூர்த்தியாவதற்கு முந்தி சொத்து பாத்திய முண்டாகமாட்டாது. வாதியின் பாத்தியதையை மூன்று கோர்ட்டுகளிலும் மறுத்துவிட்டு இப்போது செலவு தொகைக்கு கட்டுப்படமாட்டோமென்று இப்போது சொல்வது ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல. வாதியின் தாவாவுக்கு எவ்வித காலாவதி தோஷமுமில்லை. ஆகையால் பிரதிவாதிகளின் 2-வது அப்பீல் செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

I. L. W. 147.

சென்னை ஹைகோர்ட்டு

1912 ௵த்திய லெட்டர்ஸ் பேடெண்டு அப்பீல் நம்பர் 166.

தீர்ப்பு 19—1—14.

ஜட்ஜிகள்	எல்லம்மாள் அ. வாதி
சீவ் ஜஸ்டிஸ் ஸர் சார்லஸ் ஆர்னால்ட் வொயிட் அவர்கள்	V
ஜஸ்டிஸ் சங்கரநாயரவர்கள்	அய்யப்ப நாயக்கர்
ஜஸ்டிஸ் ஓல்டுபீல்டு அவர்கள்	அ. பிரதிவாதி

36. [சிவில் புரொஸீஜர் கோடு]

கடன்தொகை கோர்ட்டாரால் மறியல் செய்யப்பட்டதின்பேரில் கடன்காரன் அத்தொகையை கோர்ட்டில் கட்டிவிட்டால் அக்கடனை டிரான்ஸ்வர் பெற்றவன் மறியல்செய்து வசூலித்தவனிடமிருந்து வசூலிக்க வழக்கிடுவதற்கு காலாவதி தோஷம் மூன்று வருடமென்பது.

4-ம் பிரதிவாதி பெருமாள் நாய்க்கர் என்ற ஒருவர் பேரில் 1905-ம்௵ ஜூலைமாதம் 4-ந்தேதி சில தொகைக்கு டிக்கிரிபெற்று அந்த நாய்க்கருக்கு முதல் பிரதிவாதியிடமிருந்து வரவேண்டிய கடன் தொகையை மறியல்செய்தார். அந்தக்கடன் கொடுபட

வேண்டிய கெடு 1905-ம் வருஷம் ஜூலை மாதம் 29-ந்தேதி ஏற்பட்டிருந்தது. முதற் பிரதிவாதி தான் கொடுக்கவேண்டிய தொகையை கோர்ட்டில் கட்டிவிடவேண்டுமென்று 1905-ம் வருஷம் நவம்பர் மாதம் 6-ந்தேதி கோர்ட்டாரிடம் உத்தரவு பெற்று 1906-ம் வருஷம் ஜூன் மாதம் 15-ந்தேதி அத்தொகையை கோர்ட்டில் கட்டிவிட்டார். இத்தொகை 4-ம் பிரதிவாதியிடம் 1906ம் வருஷம் அக்டோபர் மாதம் 3-ந்தேதி கொடுக்கப்பட்டது.

இந்தக் கடன் மறியல் செய்யப்பட்டவுடனே வாதி தனக்கு இந்தக்கடன் தொகை பெருமாள் நாய்க்கனால் இந்த மறியலுக்கு முந்தியே மேடோவர் செய்யப்பட்டிருப்பதாகவும், பெருமாள் நாய்க்கருக்கு பாத்தியமில்லையென்றும், பாத்தியமனுக் கொடுத்தார். இந்த மனுவைக்கோர்ட்டார் தள்ளுபடி செய்துவிட்டதின் பேரில் பழய சிவில் புரிஸீஜர் கோடு 283-வது செக்ஷன்படி அசல் வழக்கிட்டார். முதல்கோர்ட்டார் அதைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். அப்பீலில்இவருக்கு சாதகமான தீர்ப்பு கிடைத்துவிட்டது.

பின்பு 4-ம் பிரதிவாதி கோர்ட்டினின்றும் பெற்றுக்கொண்டிருக்கும் மேற்சொன்ன தொகை தனக்குக் கிடைக்கவேண்டுமென்று 1908 வருஷம் செப்டம்பர் மாதம் 15 தேதியில் வாதி தூத்துக்குடி டி. மு. கோர்ட்டு 1908 வருஷத்திய அசல் 310 நம்பரில் வழக்கிட்டார். இதன்பேரில் தூத்துக்குடி சப் கோர்ட்டில் அப்பீல் விசாரணை நடந்தது. இதன்பேரில் ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் விசாரணைநடந்தது. இந்தத் தீர்ப்பின்பேரில் லெட்டர்ஸ் பேடெண்டு 15-வது கிளாஸ்படி அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது.

வாதியின் தாவா லிமிடேஷனக்ட்டு 29-வது செக்ஷன்படி காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுப் போய்விட்டதென்றும், கோர்ட்டார் செய்யும் மறியலுத்தரவு கடன்தொகையை கைப்பற்றியதாகுமென்றும், இ. லா. ரி. 27 சென்னை 346, 31 சென்னை 431 இந்த தீர்மானங்களை தன் கக்ஷிக்கு ஆதாரமாகக் காட்டி அப்பீல் வாதி வக்கீல் கக்ஷியாடுகிறார்.

இ. லா. ரி. 31 சென்னை 431 தீர்ப்பு கிரமப்படி கைப்பற்றக்கூடிய ஜங்கம சொத்தைப்பற்றி யேற்பட்டதென்றும், 27 சென்

னை 346 தீர்மானம் கிடங்கில் பூட்டப்பட்டு வைத்திருந்த சர்க்கரையைப்பற்றி யேற்பட்டதென்றும், தாவா கேசிற்கண்ட கடன் கைப்பற்றக்கூடியதல்லவென்றும், இந்த தாவாவுக்கு லிமிடேஷனக்ட்டு 62 அல்லது 120 ஆர்டிகில் தான் பொருந்தியதென்றும், அப்பீல் பிரதிவாதியின் வக்கீல் எதிர்கக்ஷி சொல்லுகிறார்.

தீர்ப்பு.

சீவ்ஜஸ்டிஸ் அவர்கள்:—நெகோஷியபில் இன்ஸ்டுருமெண்டு தஸ்தாவேஜிகள் நீங்கலாக மற்ற கடன்களை ஜப்தி செய்வதற்காக 21-வது ஆர்டர் 46-வது ரூலேற்பட்டிருக்கிறது. கடன் கொடுத்தவன் அத்தொகையை வசூலிக்காதபடிக்கும், கடன்வாங்கியவன் கோர்ட்டாருடைய வுத்திரவன்னியில் எவரிடத்திலும் கொடாதபடிக்கும் மறியல் நோடீஸ் மூலகாக இந்த ஜப்தி செய்யப்படுகிறது. ஜங்கம சொத்து ஜப்தியாக விருந்தால் நேரிலாவது அல்லது வேறு விதமாகவாவது அதைக் கைப்பற்ற வேண்டும். (21-வது ஆர்டர் ரூல் 43-44 இவைகளைப் பார்க்க) சொத்து கடன்காரன் வசமில்லாவிட்டால் மறியலுத்திரவின்பேரிற்றான் நடவடிக்கை நடத்தப்படவேண்டும். நெகோஷியபிள் இன்ஸ்டுருமெண்டு தஸ்தாவேஜிகளுக்கு மட்டில் அது கடன்காரன் வசத்தி லிருந்தாலுஞ் சரியே இல்லாவிட்டாலுஞ் சரியே நேரிற் கைப்பற்ற வேண்டும்.

கைப்பற்றுத லென்பது நேரில் அல்லது ஒப்படைப்பான ஸ்வாதீனத்தை ஒருவனிடமிருந்து மற்றொருவருக்கு மாற்றுதல் என்று நமக்குத் தோற்றுகிறது. 46-வது ரூல்படி செய்யப்படும் கடன்மறியல் உத்திரவினால் சொத்து ஸ்வாதீனம் மாற்றப்படாதிருப்பதுடன் அக்கடன் டிக்கிரிக் கடன்காரன் வசத்திலேயே கோர்ட்டாருடைய மறு உத்திரவுவரையி லிருக்கவேண்டு மென்று ஏற்படுகிறது. 1906 வருஷம் ஜூன்மாதம் 15-ந் தேதி டிக்கிரி கடன்காரனுடைய கடன்காரன் என்று சொல்லப்படுபவன் கோர்ட்டிற் செலுத்தியதொகை சட்டப்படி நடவடிக்கை நடத்திக்கைப் பற்றியதாகச் சொல்லக்கூடாது. இவ்விதம் கோர்ட்டிற் கட்டியது இன்டர்பிளீடர் (Interpleader) நடவடிக்கைகளில்சுயமாகத்தானே கட்டியதாக எண்ணப்படவேண்டும். கோர்ட்டார் இத்தொகையை கட்டிவிடும்படி உத்திரவு செய்தது டிக்கிரி கடன்காரனுடைய கடன்காரனுடைய மனுவின்பேரிலேற்பட்டது. இந்தக் கேசுக்கு லிமிடேஷனக்ட் 62 அல்லது 120 வது ஆர்டிகில்தான் பொருந்

திபதெனை அபிப்பிராயப்படுகிறோம். அப்பீல் செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

ஜஸ்டிஸ் சங்கரநாயரவர்கள்:—நானிதற்கு ஒத்துக்கொள்ளுகிறேன்.

ஜஸ்டிஸ் ஒல்டுபீல்ட் அவர்கள்:—நானிதற்கு ஒத்துக் கொள்ளுகிறேன். அப்பீல் தள்ளுபடி செய்யப்பட்டது.

I. L. W. 162.

சென்னை ஹைகோர்ட்டு

1911 ஒத்திய 2-வது அப்பீல் நம்பர் 678

தீர்ப்பு 14—10—13

ஜட்ஜிகள் ஜஸ்டிஸ் ஸ்பிலிங் அவர்கள் ஜஸ்டிஸ் டியாப்ஜி அவர்கள்	கருப்பணம்பலகாரன் ஆ அப்பீல்தார்கள் V மகம்மதுசாடூத் லெவ்வை எதிர்கக்ஷிக்காரர்

7. [காண்டிராகட்டு ஆக்ட்.]

கடன்காரர்களை மோசஞ் செய்யவேண்டுமென்கிற கெட்ட வெண்ணத்துடன் ஒருவன் பேரில் பிரதிப் பிரயோஜனமன்னியில் சாசனமேற்பட்டிருந்தால் அந்த சாசனம் பெற்றவன் சிலகாலங் கிரமித்து அச்சொத்தின்பேரி லேற்பட்ட ஒரு பெந்தகக் கடனைக்கொடுப்பதினால் அத்தொகை அவன் அச்சொத்தை யேலமெடுத்த கடன்காரரிடமிருந்து வசூலிக்க நியாயமில்லை யென்பது.

ஒரு சொத்துக்கு பாத்தியமுள்ள ருமணம்பலகாரன் அதை தன் சகோதரனாகிய வாதிக்கு பிரதிப் பிரயோஜனமின்றி ரூபா 400-க்கு 1900 வருஷம் செப்டம்பர் மாதத்தில் சாசனஞ் செய்தான். அந்த பத்திரத்தில் ரூபா 41-8 ரொக்கங் கொடுபட்டதாகவும் பாக்கித் தொகைகள் கிரயஞ் செய்தவனால் எழுதிக் கொடுக்கபட்டிருந்த பிராமசரி நோட்டுத் தொகையையும் இரண்டு பெந்தகக் கடன் தொகைகளையுங் கொடுப்பதற்கு சாட்டிவிடப்பட்டதாகவுங் கண்டிருந்தது. பிரதிவாதி மேற்படி ருமணம்பலகாரன் பேரில் பெற்றிருந்த டிக்கிரி கடனுக்காக 1900 வருஷம் டிசம்பர்

மாதம் 16ந் தேதி ஜப்தி செய்தார். ஆனால் அச்சொத்துக்கள் 1908-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 28-ந்தேதி ஏலத்துக்குக் கொண்டு வரப்பட்டதில் அதை பிரதிவாதியே ஏலத்தில் எடுத்தார். அந்த ஏலம் மார்ச்சு மாதம் 30-ந்தேதி உறுதிசெய்யப்பட்டது. இதன் மத்தியகாலத்தில் இந்தச் சொத்தின்பேரில் பெந்தகமாகக் கடன்கொடுத்திருந்த ஒருவர் அத்தொகை கிடைக்கவேண்டுமென்று நாகப்பட்டணம் டிஸ்டிரிக்ட் முனிசிப் கோர்ட் 1906-ம் வருஷத்திய அசல் 56 நம்பரின்பேரில் வழக்கிட்டதில் இந்தவாதியும் பெந்தகசொத்தை பின்திசாசனம் பெற்றவராக பிரதிவாதியாகச் சேர்க்கப்பட்டிருந்தார். இதின்பேரிலேற்பட்ட டிக்கிரி சி. பு. கோடிற்கண்டபடி எழுதப்படாமல் வாதியின் சரீர ஜவாப்தாரியின்பேரிலு மேற்பட்டிருந்தது. இந்த டிக்கிரி நிறைவேற்றப்பட்டதில் இந்தக் கடனை வாதி மூன்று தடவையாகக் கொடுத்துத் தீர்த்துவிட்டார். கடைசித்தொகை 1908 வருஷம் மார்ச்சு மாதம் 13ந் தேதி கொடுக்கப்பட்டது. இது பிரதிவாதியின் ஏலத்துக்கு 14 தினங்களுக்குப் பிறகும் இந்த ஏலம் உறுதி செய்யப்பட்டதற்கு 17 தினங்களுக்கு முந்தியும் ஏற்பட்டிருக்கிறது. பிரதிவாதி கிரமப்படி ஏலசர்டிபிகேட் பெற்று சொத்தை கோர்ட்டு மூலமாக ஸ்வாதீனப்படுத்திக் கொண்டார். இதன்பேரில் வாதி தான்பெற்ற சாசனப்படி சொத்து கிடைக்கவேண்டியதென்றும், தான்பெற்ற சாசனப்படி சொத்து கிடைக்கக்கூடியதாக வில்லாவிட்டாலும் அச்சொத்தின்பேரிலேற்பட்டிருக்கும் பெந்தகக் கடனைத் தான் கொடுத்துத் தீர்த்திருப்பதால் அத்தொகைக்கு தாவா சொத்து பொறுப்பாகவிருக்கிறதென்றும் தாவா சொத்தின் பாத்தியதையின் பேரில் அத்தொகை கிடைக்கவேண்டியதென்றும் பிரதிவாதி பேரில் வாதி வழக்கிட்டார். கீழ் அப்பீல் கோர்ட்டார் நாகபட்டணம் சப் ஜட்ஜியவர்கள் A. அடையாள கிரய சாசனப்படி சொத்து ஸ்வாதீனமாக வேண்டுமென்று கொண்டுவந்திருக்கும் வழக்கில் அச்சொத்தின்பேரில் பொறுப்புச் சாட்டி தொகை கிடைக்கவேண்டுமென்று சொல்வது செல்லத்தகுந்த தல்லவென்றும், வாதி தன் சுயேச்சையாக தொகை செலுத்தியிருப்பதால் இவருக்கு பொறுப்பு பாத்தியங் கிடைக்கமாட்டாதென்றும் வாதியின் வழக்கைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். இந்த இரண்டாவது அப்பீலில் வாதியின் வக்கீல் சாசன பாத்தியதையைக்

கொண்டாடாமல் 1906 வருஷத்திய அசல் 56 நம்பர் பெந்தக டிக்கிரித் தொகையை வாதி கொடுத்துத் தீர்த்திருப்பதால் அத் தொகை தாவா சொத்தின் பாத்தியதையின்பேரிற் கிடைக்க வேண்டுமெனக் கேட்கிறார்.

இவ்வித பொறுப்பு பாத்தியம் எந்தெந்த இனங்களிலுண்டென்பதைப் பற்றி கல்கத்தா புல்பெஞ்சு கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். (இ. லா. ரி. 36 கல்கத்தா 193). ஒருவன் மற்றொருவனுக்குச் சேரவேண்டிய தொகையை எந்த விதத்தினாலாவது கொடுக்கக் கடமைப்பட்டிருந்தால் மட்டில் அதைக்கொடுக்கவேண்டும். இந்தக்கேசில் மேலே சொன்ன 56 நம்பர் டிக்கிரித்தொகையை செலுத்த வாதி சட்டப்படிக் கடமைப்பட்டவரா இல்லையா வென்பதை நாம் பார்க்கவேண்டும். பிரதிவாதி தாவா சொத்தை ஏலமெடுத்த காலத்தில் வாதிக்காவது வேறே யாருக்காவது இச்சொத்தில் ஏதேனும் பாத்தியமிருந்ததாவென்பதை பார்க்கவேண்டும். இந்த ஏலகாலத்தில் இதன்பேரிலேற்பட்டிருந்த பெந்தகம் தீர்ந்துவிட்டது. இந்த ஏலகாலத்தில் இச்சொத்து டிக்கிரி கடன்காரன் வசமிருந்ததாக பிரதிவாதி பாத்தியங் கொண்டாடியிருக்கிறார். தாவா சொத்து வாதிக்குச்சொந்தமா டிக்கிரி கடன்காரனுக்குச் சொந்தமா என்ற சந்தேகமிருந்து வந்ததால் குறைந்த தொகைக்கே தாவா சொத்து ஏலம்போடப்பட்டிருந்கிறது. பெந்தகம் தீர்ந்துவிட்டதா வென்ற கேள்வி அப்போதில்லை. தாவா சொத்து வாதிக்குச்சொந்தமல்ல வென்று தீர்ப்பு செய்யப்பட்டிருக்கிறது. வாதியின் மோச நடவடிக்கையினாலேயே குறைந்த தொகைக்கு ஏலம்போயிருக்கிறது. அதனால் வாதிக்கு சாதகமான தீர்ப்புக்கொடுக்க நியாயமில்லை. காண்டிராக்ட் ஆக்ட் 69-70–வது செக்ஷன்களும் தாவா கேசுக்கு ஒற்றுமையானவையல்ல. அவை சொத்தின்பொறுப்பின்பேரிலேற்பட்டதற்கல்ல. ஆளைப்பொறுத்து டிக்கிரி செய்வதற்கு ஏற்பட்டவை. சப் ஜட்ஜியவர்கள் செய்த தீர்மானம் சரியானது. இந்த 2-வது அப்பீல் செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

(1914) M. W. N. 131.

சென்னை ஹைகோர்ட்

1911வருஷத்திய சீவில் ரெவிஷன் மனு நம்பர் 793.

தீர்ப்பு 12—12—13.

ஜட்ஜி.
ஜஸ்டிஸ் டியாப்ஜி அவர்கள்

சுப்பிரமணியஅய்யர் ஆ. மனுதார்கள்
(பிரதிவாதிகள்)
V
T. R. M. T. சுப்பிரமணியசெட்டி.
எதிர்மனுதார் (வாதி.)

8. [காண்டிராக்ட் ஆக்ட்]

தவணைக் கடன் பத்திரத்தில் தவணைகளில் கண்ட காலங்களில் குறிப்பிட்ட தொகை செலுத்தப்படாவிட்டால் பத்திரத்தொகைக்கு செல்லானது போக பாக்கித் தொகைக்குமட்டில் வட்டியேற்படாமல் அசல் முழுத் தொகைக்கே வட்டி செலுத்தப்படவேண்டுமென்ற நிபந்தனை யேற்பட்டிருந்தால் அது அபராத நிபந்தனையாகுமென்பது.

திருச்சினாப்பள்ளி சப்கோர்ட்டு ஸ்மால்காஸ் தீர்ப்பின்பேரில் ரெவிஷன் மனு.

வாதிக்கு பிரதிவாதி ரூ 200 க்கு எழுதிக்கொடுத்திருந்த தவணைக் கடன்பத்திரத்தில் எந்தக் கெடுவிலாவது, தவணைத் தொகை செலுத்தப் படாவிட்டால் அசல் தொகைக்கு மாதம் 1 – க்கு 100 க்கு ரூ 3 வீதம் வட்டிசேர்த்து கொடுக்கவேண்டியதென்றும், செல்லான தொகை போக பாக்கித் தொகைக்கு மட்டில் வட்டி போடக்கூடாதென்றுங் கண்டிருக்கிறது. வாதிக்கு தவணைகளின்படி தொகை செல்லாகாததால் வாதி பத்திரஷரத்துப்படியே வட்டிபோட்டு வழக்கிட்டார். தாவாவில் வரவு வைக்கப்பட்டிருக்கிற ரூ 136-7-0யைத்தவிர ரூ 80 தாவா கடனுக்கு வரவு வந்திருப்பதாகவும், செல்லான தொகைபோக பாக்கித் தொகைக்கு வட்டி போடாமல் பத்திர அசல் தொகைக்கே வட்டிகொடுக்கவேண்டுமென்று கண்டிருப்பது அபராத நிபந்தனை யென்றும், அது செல்லத்தகுந்த தல்லவென்றும் பிரதிவாதிகள் கக்ஷியாடினார்கள். ரூ 80 வரவு வந்ததற்கு ருஜூவில்லையென்றும், 100 க்கு 36 வீதம் வட்டி போட்டிருப்பது அபராத நிபந்தனை யல்லவென்றும், 2 M. W. N. 367 தீர்மானத்தையனுசரித்து

சப்ஜட்ஜி யவர்கள் வாதியின் தாவாப்படியே தீர்ப்பு செய்து விட்டார்கள். அதன் பேரில் இந்த ரெவிஷன் மனு கொடுக்கப்பட்டிருக்கிறது. ரூ 80 வரவு வரவில்லையென்று சப்ஜட்ஜி கண்டுபிடித்திருக்கிறார். அது ருஜுவம்சமாகையால் அதில் நாம் பிரவேசிக்கத்தக்கதில்லை. தாவாவிற் கண்ட வட்டி அபராத நிபந்தனையென்றே அபிப்பிராயப் படுகிறோம். 2 M. W. N. 367 தீர்ப்பில் 100 க்கு 36 வட்டி அபராத நிபந்தனை யல்லவென்று சொன்னதை நான் ஆக்ஷேபிக்க வில்லை. அந்தக் கேசுக்கும் தாவா கேசுக்கும் மெத்த வித்தியாசங்க ளிருக்கின்றன. அதில் கிரமமாக பாக்கி சேரவேண்டிய தொகைக்குமட்டில் வட்டி போடப்பட் டிருக்கிறது. இந்தக் கேசு அப்படிக்கல்ல; அசலுக்கு எவ்வளவு வரவு வந்தபோதிலும் அதை கழித்து பாக்கிக்கு வட்டி போடாமல் பத்திர அசல் தொகைக்கே வட்டி போடப்பட்டிருக்கிறது.பத்திரத்தில் தவணைக்கெடுவில் தொகை கொடுக்காதிருந்தால் மட்டில் அசல் தொகைக்கு வட்டி கொடுக்கிறதென்று கண்டிருக்கிறதேயன்றி வேறே பத்திரத்தில் யாதொரு வட்டியுங் காணுததால் அது அபராத நிபந்தனையாகமாட்டாதென வாதியின் வக்கீல் கக்ஷியாடுகிறார். பத்திரத்திற் கண்ட ரூ 200 ம் கொடுபட்டிருக்க எவ்வித நியாயமு மில்லை. இவ்வித தொகை முன்னதாக வட்டிக்கு எடுத்துக்கொண்ட தொகையுள்பட சேர்த் தெழுதப்படுவது வழக்கம்.

ஆகையால் தாவா பாக்கிரத்துக்கு 100 க்கு 12 வீதம் வட்டி போடப்பட வேண்டிய தென்றும், கூடுதலாகுந் தொகையில் 1909 வருஷம் ஆகஸ்டு மாதம் 1-தேதியில் வரவு வந்த தொகை ரூ 100;1910 வருஷம் ஏப்பிரல்மாதம் 25 தேதி வரவு வந்த தொகை ரூ 36-7-அணு; இவைகளை வரவு வைத்துக்கொண்டு பாக்கித் தொகைக்கு மட்டில் தீர்ப்பு செய்கிறோம். இந்தக் கோர்ட்டுச் செலவு தொகைகளை யவரவர்களே பொறுத்துக் கொள்ள வேண்டியது.

(1914) M. W. N. 156.

சென்னை ஹைகோர்ட்.

1912 ஹுத்திய சிவில் மிஸ்லேனியஸ் அப்பீல்கள் 206-207

தீர்ப்பு 28—1—14.

ஜட்ஜிகள்.	
ஜஸ்டிஸ் சங்கரநாயரவர்கள்	திருமெடி அடெய்யா பிரதிவாதி (அப்பீல்தார்)
ஜஸ்டிஸ் எயிலிங் அவர்கள்	செஹாயின் வெங்கடரிகாடு வாதி (எதிர்கக்ஷிக்காரன்)

9 [காண்டிராகட் ஆக்ட்.]

வாதி கூட்டுவியாபாரக் கணக்குபார்த்து லாபப் பிரிவினைக்காக வழக்கிட்டு அவ ரப்பிராதை வாப்ஸ் வாங்கிக்கொண்டாலும், பிரதிவாதிகள் தங்கள் வீதத்தொகைகள் கிடைக்கவேண்டுமென்று அந்த நம்பரிலேயே கக்ஷியாடி தீர்ப்பு பெறலாமென்பது.

வாதியும் 1-2 பிரதிவாதிகளுஞ்சேர்ந்து கூட்டு வியாபாரஞ் செய்து வந்தார்கள். இந்த வியாபார கணக்குகளைப் பார்வையிட்டு வாதிக்குச் சேரவேண்டிய லாபத்தொகை கிடைக்கவேண்டுமென வழக்கிட்டார். இது விஷயமாக பிரதம டிக்கிரி செய்யப்பட்டது. கணக்குகள் சோதிக்கப்பட்டதில்வாதியால் 2-ம் பிரதிவாதிக்கு சில தொகை கொடுபடவேண்டியதாக வேற்பட்டது. இதன்பேரில் அப்பீல் செய்யப்பட்டதில் இந்த தீர்ப்பு ரத்துசெய்யப்பட்டது. இது ரத்துசெய்யப்பட்ட பின்பு வாதி இந்த வழக்கை சி. பு. கோடு 23-வது ஆர்டர் 1-வது ரூல்படி வாப்ஸ் வாங்கிக்கொண்டார். டிஸ்டிரிக்ட் ஜட்ஜி இந்த வழக்கை தள்ளுபடி செய்து உபயகக்ஷிக்காரர்களும், அவரவர்கள் செலவை யவரவர்களே பொற்றுக்கொள்ளவேண்டியதென்று தீர்ப்பு செய்துவிட்டார்கள். இது விஷயமாக 2-ம் பிரதிவாதி அப்பீல் செய்ததில் இந்தக் கேசை விசாரித்து கணக்குகளை சோதித்து 2-ம் பிரதிவாதிக்குச் சேரவேண்டிய தொகை நிஷ்கரிக்கப்படவேண்டியதென்று சப் ஜட்ஜி கேசை மறுவிசாரணைக்கு அனுப்பினார்கள். அவ்விதம் மறுவிசாரணை செய்ய அனுப்பியதுசரியல்ல வென்பதாக வாதியும் முதற்பிரதிவாதியும் 2-வது அப்பீல் செய்திருக்கிறார்கள்.

தீர்ப்பு.

கூட்டு வியாபாரம் நிறுத்தப்பட்டு கணக்குகள் பார்க்கவேண்டுமென்பதாக இந்த வழக்கு கொண்டுவரப்பட்டிருக்கிறது. கணக்குப் பார்த்து முடிவு செய்யவேண்டிய தவசியமென்றும், தனக்குச் சேரவேண்டிய தொகை வாதியாலும், முதற் பிரதிவாதியாலுந் தனக்குக் கிடைக்கவேண்டியதென்றும், 2-ம் பிரதிவாதி எழுத்து மூலமான ஸ்டேட்மெண்டு கொடுத்திருக்கிறார். இந்தத்தொகை நிஷ்கரிக்கப்பட்டவுடன் அதற்குள்ள கோர்ட் பீஸ் தொகை இந்த 2-ம் பிரதிவாதி கட்டியிருக்கிறார். இதன் பிறகு வாதி தன்னுடைய பிராதை வாப்ஸ் வாங்கிக்கொண்டிருக்

கிறார். 2-ம் பிரதிவாதியின் பாத்தியம் இந்தக் கேசில் விசாரிக்கப் படவேண்டியது அவசியமா என்பதுதான் கேள்வி.

11. Q B. D. 464 தீர்மானத்திற் கண்டபடி 2-ம் பிரதிவாதியின் பாத்தியம் இந்த வழக்கிலேயே தீர்மானிக்கப்படவேண்டியதவசியமென்றே அபிப்பிராயப் படுகிறோம். வாதி தன் வழக்கை வாபஸ் பெற்றுக்கொண்டதினால் 2-ம் பிரதிவாதி தன் ஸ்டேட்மெண்டிற் சொன்ன விஷயங்களைத் தடுக்க நியாயமில்லை. மேலே சொன்ன தீர்மானத்தை நாமேன் அனுசரிக்கக் கூடாதென்பதற்கு காரணந் தென்படவில்லை. சப் ஜட்ஜி செய்த தீர்மானஞ் சரியானதென அபிப்பிராயப்படுகிறோம். இந்த அப்பீல்கள் செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டன.

1914 M. W. N. 155

சென்னை ஹைகோர்ட்டு.

1912 ஸெகண்டு அப்பீல் நம்பர்கள் 705-987 & 1479

தீர்ப்பு 20—11—13.

ஜட்ஜிகள் ஜஸ்டிஸ் சங்கரன் நாயரவர்கள் ஜஸ்டிஸ் பேக்வெல் அவர்கள்	சித்தஸ்வாதீன மில்லாத சேதுராம் மாடிக்கே ராவ்சாகிப்புக்குஅடுத்த சிநேகிதியுந் தாயாருமான பத்மாபாய் அம்மாள். அப்பீல்தாரி எல்லாக்கேசுகளிலும் (முதல்வாதி) V கோபால்ராவ்பீஷ்வா ஆ. அ. பிரதிவாதிகள்.

4 [ஸ்பெஸிவிக்ரிலிவ் ஆக்ட்]

உபயகக்ஷிக்காரர்களின் சவுகரியங்களில் பிரதிவாதிக்கு ஜாஸ்தியான சவுகரிய மிருந்தால் ஜயமடைந்த வாதிக்கு நஷ்டபரிகாரங் கொடுக்கலாமேயன்றி மாண்டேடரி இன்ஜங்ஷன் கொடுக்கக் கூடாதென்பது.

தஞ்சாவூர் டிஸ்டிரிக்ட் முனிசிப் கோர்ட்டு தீர்ப்பின் பேரில் தஞ்சாவூர் சப்கோர்ட்டில் அப்பீல் விசாரணை நடந்து அதன்பேரில் 2 வது அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது.

தாவா நிலம் வாதிக்குச் சொந்தமானதென்றும், அதில் பிரதிவாதி வாதியுடைய சம்மதியன்னியில் கட்டடங் கட்டிவிட்டதாகவும், முதல் பிரதிவாதி அதை யிடித்துவிடும்படி அவருக்கு மாண்டேடரி இன்ஜங்ஷன் கொடுக்கவேண்டுமென்றும், வாதி வழக்கிட்டார். தாவாவிற் கண்ட நிலம் முதல்வாதிக்கும் பிரதிவாதிகளுக்கும் பொதுவிற் சொந்தமென்றும், அதில் விசேஷ தொகை செலவழித்து கட்டடங் கட்டிவிட்டதால் தாவா நிலம் பிரித்துக் கொடுபடக் கூடாததாக விருந்தபோதிலும் பிரதிவாதி அக்கிரமித்துக் கட்டிய பாகத்தை பிரதிவாதியின் பாகத்துக்கு ஒதுக்கிவைத்துவிடலாமென்றும், பொது சொத்து பாகப் பிரிவினை செய்வதினால், பரிகாரங் கிடைக்கக்கூடாதபடி பிரதிவாதியின் செய்கையினால் முக்கியமானதும் ஸ்திரமானதுமான கெடுதியுண்டாய்விட்டதாக வாதி ருஜுப்பிக்கவில்லை யென்றும், கீழ்கோர்ட்டார்களிருவருங் கண்டு பிடித்து வாதியின் வழக்கைத் தள்ளுபடி செய்து விட்டார்கள்.

தாவா ஸ்தலம் இருவருக்கும் பொதுவாக விருப்பதுடன் அந்த நிலமுழுவதும் வழிநடப்பு என்பதை கீழ் கோர்ட்டார்கள் தெரிந்துகொள்ளத் தவறிவிட்டார்களென்றும், தாவா ஸ்தலம் ரோட்டுக்குப் போகும் ஒரே பாதையான சந்தாகையால் கீழ்கோர்ட்டார்களின் டிக்கிரி வாதிக்கு மிகவும் மேன்மையாயுள்ள பாத்தியதைகளை யிழந்துவிடச் செய்யுமென்றும், இந்தக் கெடுதி சரியானபடி நஷ்டபரிகாரத்தினால் ஈடாகக் கூடாததாயிருக்கிறதென்றும் அப்பீல் வாதியின் வக்கீல் கக்ஷியாடுகிறார்.

கீழ்கோர்ட்டார்களின் டிக்கிரியினால் போக்குவரத்துக்கு எவ்வித இடஞ்சலுமில்லையென்றும், மாண்டேடரி இன்ஜங்ஷன்கொடுக்கும்பட்சத்தில பிரதிவாதி விலையுயர்ந்த கட்டடத்தை யிடித்துவிடவேண்டியதாக விருக்குமாதலால் அது அவருக்கு விசேஷ கெடுதிகளை யுண்டுபண்ணுமென்றும், வாதிக்குண்டாகும் அசவுகரியம் மிகுந்த அற்பமென்றும், அது நஷ்டபரிகாரத்தினால் ஈடாகக்கூடிய தென்றும், ஜாஸ்தியான அசவுகரியங்கள் பிரதிவாதிக்குத்தா னிருக்கிறதென்றும், அப்பீல் பிரதிவாதி வக்கீல் எதிர்கட்சி சொன்னார்.

தீர்ப்பு.

2-ம் வாதி பிரதிவாதி இவர்களின் வீடுகளுக்கு மத்தியில் ஒரு சந்திருப்பதாகவும், முதல் வாதியின் வீட்டுக்கு அதன் வழி

யாகப்போகவேண்டியதென்றும், இந்த சந்தும் இதற்கு சமதையாக 3 அடி அகலமுள்ள துண்டு நிலமும் முதல்வாதிக்கும் பிரதிவாதிக்குஞ்சொந்தமானநிலமென்று கீழ்அப்பீல் கோர்ட்டார் கண்டுபிடித்திருக்கிறார்கள். இந்தப்பொதுச் சொத்தில் சொற்ப பாகம் அதாவது 2 அடி நீளம் 2 அடி அகலத்திற்கு பிரதிவாதி ஆக்கிரமித்து ஒரு கட்டடங்கட்டியிருக்கிறார். இவர் தன்சுவற்றிலுள்ள வாசற்படிக்கு பொதுசொத்தில் 3 அடி நீட்டி சில படிகள் கட்டியிருக்கிறார். அப்பீல் வாதியின் தடையைமீறி யிந்தப்படி கட்டப்பட்டிருக்கிறது. வாதிகள் இரண்டு பிராதுகளிலும் தங்கள் பாத்தியங்களை யதிகப்படுத்தியே சொல்லியிருக்கிறார்கள். 405 நம்பர் பிராதில் பிரதிவாதிக்குச் சொந்தமானதைக்கூட தங்களுக்கு ஏகதேசத்திற் சொந்தமெனச்சொல்லியிருக்கிறார்கள். 44 நம்பர்பிராதில் பிரதிவாதி தன்னுடையதென்றுசொல்லுகிற வாசற்படியையிடித்துவிடவேண்டுமெனக் கேட்டிருக்கிறார்கள். பொதுச்சொத்தில் ஆக்கிரமித்துக் கட்டப்பட்டிருக்கிற கட்டடமும்படிகளும்இடித்துவிடப்படவேண்டுமெனமாண்டெடரி இன்ஜங்ஷன்கேட்டிருக்கிறார்கள். கக்ஷிக்காரர்களின் வீடுகளுக்கு மத்தியிலுள்ள சந்துள்பட மற்ற நிலமும் பாகப்பிரிவினை செய்யப்பட்டு ஒவ்வொருவருக்கும் தெற்கு வடக்கில் 5 அடி 10 அங்குல அகலமும் கிழமேல் 39 அடி நீளமும் கொடுபடலாமென்றும், இவ்வித பிரிவினை செய்யும் பட்சத்தில் பிரதிவாதி ஆக்கிரமித்திருக்கிற பாகத்தை அவருக்கு பொது சொத்தில் கிடைக்கக்கூடிய பாகத்துக்கு வைத்துவிடலாமென்றும் சப் ஜட்ஜியவர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். இந்த ருஜுக்களினால் பொது சொத்தை பாகப்பிரிவினை செய்யக்கூடாதபடி முக்யமானதும் நிலையானதுமான கெடுதிகள் வாதிகளுக்குநேரிடவில்லையென்று முதல் கோர்ட்டார் செய்த தீர்மானத்தை கீழ் அப்பீல் கோர்ட்டார் உறுதிசெய்திருக்கிறார்கள். முதல்வாதி வீட்டிற்கு போவதற்கு சந்துதான் வழியாகவிருக்கிறது. அதிற்பாதியாகச்செய்வது பொது சொத்தில் இதுவரையிற் போய்வந்துகொண்டிருந்தபடி இல்லாமல் வாதியின் பாத்தியதையைக்குறைத்து அவருக்கு மெத்தவும் அசவுகரியத்தையுண்டுபண்ணுகிறது. இந்தச் சந்தில் இருவருக்கும் பொதுவான பாத்திய மிருப்பதுமன்றி இருவருக்கும் போக்குவரத்துக்கு பாதையாகவுமிருக்கிறது. இச்சொத்தை பிரிவினை செய்யவேண்டுமென்று சொல்வது இவர்களின் பாத்தியதைகளை நீக்கிவிடுவதாக ஆகி

றது. சப் ஜட்ஜி சொல்லுந் தீர்மானங்கள் தாவா கேசுக்குப் பொருத்தமானதல்ல; பிரதிவாதி ஆக்கிரமித்திருக்கிற சொற்ப நிலம் முதல் வாதியின் திண்ணை, அது 2 சதுர அடி விஸ்தீரணமுள்ளது. அதே விஸ்தீரணமுள்ள வேறு நிலம் வாதிக்குக் கொடுத்துவிடலாம். முழு பொது சொத்தையும் பாகப்பிரிவினை செய்வது வாதிகளுக்குக் கெடுதிகளை யுண்டுபண்ணும். வாதிகளுக்கு இன்ஜங்ஷன் பரிகாரங் கிடைக்கக்கூடியதா அல்லது நஷ்டபரிகாரங் கிடைக்கக்கூடியதா வென்பதுதான் கேள்வி. தாவா சொத்து தனக்கு ஏகதேசத்திற் சொந்தமென்று வாதி பாத்தியங்கொண்டாடியது அவர் பேரிற் பிசகு. சவுகரியங்களை சீர்தூக்கிப் பார்க்கையில் நஷ்டங்கொடுபடவேண்டியதுதான் சரியான பரிகாரமென அபிப்பிராயப்படுகிறோம். அதனால் ரூபாய் 20 நஷ்டபரிகாரங் கொடுக்கவேண்டியதாகத் தீர்மானிக்கிறோம்.

S. A. 705 நம்பரில் இரண்டு கீழ்கோர்ட்டு டிக்கிரிகளையும் ரத்து செய்து பிரதிவாதி கட்டடங் கட்டியிருக்கிற 2 சதுர அடி விஸ்தீரணமுள்ள நிலம் வாதிக்கும் பிரதிவாதிக்கும் பொதுவிற் சொந்தமானதென்றும், வாதிக்கு பிரதிவாதி ரூபா 20 நஷ்டபரிகாரமாக கொடுக்கவேண்டியதென்றுந் தீர்மானிக்கிறோம். S. A. 987 அப்பீல் வாதிக்கு செலவு தொகை கொடுபடுவதற்கு மட்டில் தீர்ப்பு செய்கிறோம்; வேறே யாதொரு உத்திரவுஞ் செய்யவில்லை. S. A. 1497-ல் கீழ் அப்பீல் கோர்ட்டார் டிக்கிரியை ரத்து செய்து டிஸ்டிரிக்ட் முனிசிப் செய்த தீர்மானத்தை யுறுதி செய்கிறோம்.

1. L. W. 166.

சென்னை ஹைகோர்ட்டு.

1913 ஞுத்திய 88,146 நம்பர் உத்திரவுகளின்பேரில் அப்பீல்
தீர்ப்பு 15—1—14.

ஜட்ஜிகள்.	திருமல்ராவ் ஆ. 88 நம்பரில் அப்பீல்தாரர், டேங்கம்மா செட்டிச்சி. இறந்தப் பிரதிவாதியின் வார்சு. 146 நம்பரில் அப்பீல்தார்
ஜஸ்டிஸ் எயிலிங் அவர்கள்	V
ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள்	காடிகாரர் துர்கி செட்டி தி. எதிர் கக்ஷிக்காரர் வாதி.

5 [ஸ்பெஸிவிக் ரிலீவ் ஆக்ட்.]

வாதியின் பாத்தியதையை மறுப்பதைப்பற்றி வழக்கிடுவதற்கு வியாஜ்ய மூலம் ஒன்றே யொன்றுதா னென்பதும், அது வாதியின் பாத்தியதையைபிரதிவாதி மறுத்தது வாதிக்குத்தெரிந்த கால முதலுண்டாகிற தென்பதும், அந்தத்தேதி முதல் ஆறு வருடங்களுக்குள் வழக்கிட வேண்டுமென்பதும்.

வாதிதானொருகுடும்பத்துக்கு எஜமானியென்றும், தன்ஸ்வாதீனத்தி லிருப்பதும் தானனுபவித்து வருவதுமான சொத்து தனக்கு சர்வசுதந்தர பாத்திய முடைய தென்றும், பிரவாதிக்கு அச்சொத்தில் எவ்வித பாத்தியமில்லையென்றும், வாதி பாத்தியஸ்தாபன வழக்கிட்டாள். 1904 வருஷம் செட்டில்மெண்டு நடந்தகாலத்தில் பிரதிவாதி செட்டில்மெண்டு ஆபீசர்முன்பாக ஆஜராகி வாதியின் பாத்தியதையை மறுத்ததின்பேரில் நிலப்பட்டா பிரதிவாதி பெயரால் ஏற்பட்டு ரெவனியூ ரிஜிஸ்டர்களிலும் பதிவாகி விட்டது. வாதிமறுபடியும் ரெவினியுஅதிகாரிகளிடம் ஆக்ஷேபித்து இந்த ரெவனியு ரிஜிஸ்டர் திருத்தப்படவேண்டுமெனக் கட்சியாடிக்கொண்டிருந்தாள். இந்த முயற்சிகளில் இவள் தவறிவிட்டபடியால் பிரதிவாதிகள் இவளுடைய பாத்தியங்களை மறுத்த 6 வருடங் கழித்து இந்த வழக்கு கொண்டு வந்திருக்கிறாள். வாதியின் தாவா காலாவதியால் பாதிக்கப்பட்டுப்போய்விட்டதாக முதல் கோர்ட்டார் தீர்ப்பு செய்துவிட்டார்கள். இது விஷயமாக அப்பீல் செய்யப்பட்டதில் கீழ் அப்பீல் கோர்ட்டார் இந்த தாவாவுக்குக் காலாவதி தோஷமேற்படவில்லை யென்றும் ரெவினியு அதிகாரிகளிடம் வாதி மறுபடியும் மனுக்கொடுத்திருப்பதால் அதன்பேரில் முடிவான உத்தரவு ஏற்பட்ட தேதி முதல் காலாவதி தோஷம் பார்க்கவேண்டுமென்றும், முதல் கோர்ட்டார் இந்தக் கேசைப்பற்றி விசாரணைசெய்ய வேண்டிய தென்றும் கேசை ரிமாண்டு செய்தார்கள். அந்த ரிமாண்டு உத்தரவின்பேரில் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது.

தீர்ப்பு.

பிரதிவாதி தன் பாத்தியதையை மறுப்பதாக வாதி பாத்திய ஸ்தாபன வழக்கிடுவதற்கு ஓரே யொரு வியாஜ்ஜிய மூலந்தானுண்டு. அது வாதியின் பாத்தியதையை பிரதிவாதி மறுப்பது வாதிக்கு எப்போது தெரிகிறதோ அந்தத் தேதி முதலே யுண்டாகிறது. அவ்விதம் மறுப்பதினாலே ரெவனியு அல்லது மற்ற அதிகாரிகள் ரெவனியு ரிஜிஸ்டரிற் பதிவு செய்து கொள்ளுதல் அல்லது நிறைவேறு நடவடிக்கைகளில் சொத்தை விற்றல் முதலியனமூலமாக பிரதிவாதிக்கு அனுகூலமாக ஒரு காரியத்தைச் செய்தால் அதைக்கொண்டு வாதியின் பாத்தியதையை பிரதிவாதி மறுக்க ஜாஸ்தியான அக்கரை யேற்பட்டிருக்குங் காரணத்தினால் அது ஸ்பெஸிவிக் ரிலீவ் ஆக்ட்டு 42-வது செக்ஷன்படி வேறு வியாஜ்ஜிய மூலத்தை யுண்டுபண்ணமாட்டாது. இ. லா. ரி. 26 சென்னை 410, 22 சென்னை லா ஜர்னல் 103 இந்த தீர்மானங்களை நாம் அங்கீகரிக்கவில்லை. சப் ஜட்ஜி செய்த தீர்மானத்தை ரத்து செய்கிறோம். இ. லா. ரி. 31 அலகபாத் 9; 10 அலகபாத் லாஜர்னல் 413 இந்தத் தீர்மானங்களை யனுசரித்து டிஸ்டிரிக்ட் முனிசிபின் தீர்ப்பை உறுதி செய்து வாதியின் வழக்கைச் செலவுடன் தள்ளுபடி செய்கிறோம்.

1—L W 134.

சென்னை ஹைகோர்ட்டு.

1913 ஞூ ரூத்திய சிவில் ரெவிஷன் மனு நம்பர் 50.

தீர்ப்பு 28—11—13.

ஜட்ஜி ஜஸ்டிஸ் மில்லரவர்கள் } மலையபிள்ளை நாடான் மனுதார்
V
வெங்கனன் செட்டி ஆ. எதிர் மனுதார்கள்]

[3. ஸ்மால்காஸ்கோர்ட் ஆக்ட்.]

கணக்கு ஒப்பிவிக்காத சரக்கின் விலையைப் பற்றி ஏஜண்டு பேரில் ஸ்மால்காஸ் திறப்பில் வழக்கிடலா மென்பது.

மதுரை சப்கோர்ட்டு தீர்ப்பின் பேரில் ரெவிஷன் மனு. எதிர் மனுதார்கள் திண்டுக்கல்லிலுள்ள வர்த்தகர்கள், அவர்கள் காய்ந்த மிளகாய் மூட்டைகளை மதுரையிலுள்ள மனுதாரிடம் அனுப்பி அவைகளை ஏஜண்டு முறைமையில் விற்கச் செய்தார்கள். மனுதாரிடம் ஒப்பிவிக்கப்பட்ட சரக்குகளுக்கு அவர் சரியான கணக்கு கொடுக்கவில்லை. அதனால் கணக்குச் சொல்லாத சரக்குகளின் கிரயங் கிடைக்க வேண்டுமென மனுதார் பேரில் வழக்கிட்டார்கள். மனுதார் பிரதிவாதி தான் சொற்ப சரக்குதான் விற்றதாக வொப்புக்கொண்டு மிளகாய் காய்ந்து விட்டதால் நிறையில் குறைந்து கம்மியேற்பட்டிருப்பதாக கக்ஷியாடினார். சப்ஜட்ஜி வாதி

யின் பிராதின்படி தீர்ப்பு செய்து விட்டார்கள். அதனால் பிரதிவாதி ஹைகோர்ட்டில் ரெவிஷன் மனு கொடுத்திருக்கிறார்.

- ஏஜண்டு கணக்கு ஒப்பிவிக்க வேண்டுமென வழக்கிட்டிருப்பதால் இந்த தாவா ஸ்மால்காஸ் திறப்பில் நடவடிக்கைகள் நடத்தப்படக் கூடாதென்றும், இந்தப் பிராது சரியான கோர்ட்டில் கொடுக்கும்படி சப்ஜட்ஜி பிராதைத் திருப்பிக் கொடுத்திருக்கவேண்டுமென்றும், மிளகாய் காய்ந்து போய் விட்டதால் நிறை குறைந்து விட்டதென பிரதிவாதி ருஜுப்பித்திருக்கிறாரென்றும், இதற்கு விரோதமாக எவ்வித ருஜுவுமில்லையென்றும் அதனால் சப்ஜட்ஜியின் தீர்மானம் சரியானதல்லவென்றும் மனுதார் வக்கில் கக்ஷியாடுகிறார்.

வாதியின் தாவா குறிப்பிட்ட தொகைக்கு ஏற்பட்டிருக்கிறதென்றும், கணக்குகள் அதை காட்டுவதற்காக ஏற்பட்டதென்றும், எதிர்மனுதார் வக்கீல் எதிர் வாதஞ் செய்கிறார்.

தீர்ப்பு.

இந்த தாவா கணக்குக் கொடுக்க வேண்டுமென்ற வழக்கென்றும், அது ஸ்மால்காஸ் திறப்பில் நிற்கத்தகுந்ததல்லவென்றும், கக்ஷி சொல்லப்படுகிறது. பிராதுப்படி இது கணக்கு கேட்கும் வழக்கல்ல. பிராதிற்கண்ட வாசகங்களின் பேரிற் தீர்ப்பு செய்யப்படவில்லை. விசாரணையில் பிரதிவாதியின் ஒப்புக்கொள்ளுதலின் பேரில் தீர்ப்பு செய்யப்பட்டிருக்கிறது.

189 மணங்கு நிறையுள்ள 45 மூட்டை மிளகாய் பெற்றுக்கொண்டிருப்பதாகவும், 177 மணங்கு நிறையுள்ள 39 மூட்டைகளை விற்று விட்டதாகவும் பாக்கி சரக்கு காய்ந்து விட்டதால் நிறைக்குறைவு ஏற்பட்டதென்றும், பிரதிவாதி ஒப்புக்கொண்டிருக்கிறார். வாதிகளுக்கு செல்லாகாத 12 மணங்கின் விலையைப்பற்றிய வழக்காக விருந்தபோதிலும் அது கணக்கு ஒப்பிவிக்க வேண்டுமென்ற வழக்காக மாட்டாது.

அதனலிந்த தாவா ஸ்மால்காஸ் திறப்பிற் கொண்டு வாலாம். விற்பதற்காக அனுப்பப்பட்ட சரக்கை பார்க்கிலும் குறைந்த சரக்கு விற்கப்பட்டிருக்கிறதென்பதைப் பிரதிவாதி ஒப்புக்கொண்டிருப்பதினாலே பாக்கி யெப்படி யாயிற்றென்பதை அவர்தான் ருஜுப்பிக்கவேண்டும். இவர்சொன்ன சமாதானத்தை சப்ஜட்ஜி நம்பவில்லை. அதனால் நான் ஸ்மால்காஸ் கோர்ட் ஆக்ட்டு 25-வது செக்ஷன்படி பிரவேசிக்கக்கூடாது. அதனலிந்த மனுவைச் செலவுடனே தள்ளுபடி செய்கிறேன்.

I. L. W. 180.

OFFICE OF THE REGISTRAR OF ... REGISTERED 1? MAY 1914 MADRAS.

ஹைகோர்ட்டு தீர்மானங்கள்.

தமிழ்ப்பாஷை பயின்றவர்கள் வியவகார நுட்பங்களை
எளிதில் உணரும் பொருட்டு பிரசுரிக்கப்படும்
மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

புத்தகம்-1 } மாயவரம் 1914ௗ ஏப்ரல்மீ { இலக்கம்-8

சென்னை ஹைகோர்ட்.

1913 ௵த்திய கிரிமினல் ரெவிஷன் கேஸ் நம்பர் 542.

ஷை ௵த்திய ரெவிஷன் மனு நம்பர் 438

ஷை ௵த்திய கிரிமனல் அப்பீல் நம்பர் 509.

ஜட்ஜிகள் ஜஸ்டிஸ் எயிலிங் அவர்கள் ஜஸடிஸ் ஒல்டுபீல்ட் அவர்கள்	மார்க்கமய்யர் வாதி மனுதார் V S-J. மெர்ஸர் எதிரிகவுண்டர் மனுதார்

2 [ரயில்வே ஆக்ட்]

ரயில்வே சிப்பந்திகள் குடியிருக்க ஏற்பட்டிருக்கும் கட்டடங்கள் ரயில்வேயின் ஓர் பாகமல்லவென்பதும், விசேஷ நியாயத்தவறுதல்களிருந்தாலன்றி கீழ்கோர்ட்டார் தீர்ப்புகளை ஹைகோர்ட்டார் ரெவிஷனில் கவனிக்கமாட்டார்களென்பதும்.

1913-ம் வருஷம் மே மாதத்தில் சென்னை ரயில்வே சிப்பந்திகள் கட்டுப்பாடான வேலை நிறுத்தம் ஏற்பட்ட காலத்தில் வாதி மார்க்கமய்யர் சென்னை ரயில்வே செட்டி குண்டா ஸ்டேஷனில் அஸிஸ்டெண்டு ஸ்டேஷன் மாஸ்டராகவிருந்தார். இவரும் அந்த கட்டுப்பாட்டிற் சேர்ந்து தன்னுடைய வேலையை விட்டு விட்டு மேற்படி கட்டுப்பாடு சம்பந்தமான வேலைகளை ஒவ்வொரு ஸ்டேஷனுக்குஞ்சென்று பார்த்து வந்தார். இவரை வேலையினின்றுந் தள்ளிவிட்டதாகவும், இவருக்கேற்பட்டிருந்த விடுதியைக் காலிசெய்து விடவேண்டுமென்றும் இவருக்கு 9 அடையாள நோட்டீஸ் 3-6-13-ல் கொடுக்கப்பட்டது. இது வாதியிடம் 9-6-13 வந்து சேர்ந்ததாக இவரே ஒப்புக்கொள்ளுகிறார். இவர்

அதே தேதியில் மாலை 5 மணிக்கு தான் வேலையிற் சேர்ந்துவிட்டதாக எதிரி டிஸ்டிரிக்ட் டிராவிக் சூபரின்டெண்டுக்கு தந்திக் கொடுத்தார். இந்த வாதி சில முக்கிய காரணங்களுக்காக தள்ளுபடி செய்யப்பட்டிருப்பதை யுணர்ந்தும், அவரால் அபாயகரமுண்டாகுமென நினைத்தும், டிஸ்டிரிக்ட் டிராவிக் சூபரின்டெண்டு அந்த செட்டி குண்டா ஸ்டேஷனுக்குப் போகவேண்டியதவசியமென நினைத்து பகல் 1½ மணிக்கு வாதியின் விடுதிக்கு போலீஸ் உத்தியோகஸ்தர்களுடன் வந்து கதவை காலாலுதைத்து உள்ளே நுழைந்து தூஷணமான வார்த்தைகளைப்பேசி உலாத்தப்போகையிலுபயோகிக்குங்கழியால் அடித்து சொற்பகாயங்களுண்டு பண்ணினதுமன்றி தானும் போலீசாருஞ் சேர்ந்து வாதியை வீட்டினின்றும் பலவந்தமாக அப்புறப்படுத்தி சென்னைக்குப்போகும் வண்டிவருகிற வரையில் ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் வாதியை வைத்திருந்தார். எதிரி வாதியின் வீட்டில் பிரவேசித்ததின் கருத்து செட்டி குண்டா ரயில்வே கட்டடத்தில் வாதி தங்காமல் அவரைத்தடுப்பதற்கும், அவசியமானால் பலாத்காரமாக வெளிப்படுத்தவேண்டியதை யுத்தேசித்தும், அந்தப்படிச் செய்ததாகவும், அவ்விதமப்புறப்படுத்துவதற்கன்றி தனிமையிற்றுன்பஞ் செய்வதற்கல்லவென்றும் பயிண்டிங் கேற்பட்டிருக்கிறது.

வாதியை எதிரிதாக்கியதற்காகஇ. பி. கோடு 323 செக்ஷன்படி எதிரி தண்டிக்கப்பட்டிருக்கிறார். மேற்சொன்னபடி எதிரியின் எண்ணத்தைப்பற்றித் தான் நாம் கவனிக்கவேண்டும். அதை முன்னிட்டு இராத்திரியில் வீட்டில் நுழைந்ததும், துராகிரதமாக நுழைதலென்னுங் குற்றமாகையால் அது இ. பி. கோடு 456 செக்ஷன்படி குற்றமாகிறது. எதிரிதான் செய்தது 1890-ம் வருஷத்திய 9-வது ஆக்ட் 122 (2) செக்ஷன்படி நியாயமானதென்றும், ஒருவன் ஸ்வாதீனத்திலுள்ள சொத்தில் அன்னியன் அக்கிரமமாகப் பிரவேசித்தால் அவனையப்புறப்படுத்துவதற்கு பலாத்காரஞ் செய்ய எவருக்கும் பாத்தியமிருப்பதால் அந்தப்படிச் செய்ததாகவும், எதிரி தரப்பு வக்கீல் கக்ஷியாடுகிறார். இவர் சொல்லும் ரயில்வே ஆக்ட் 122 (2) செக்ஷன் தாவாக்கேசுக்குப் பொருத்தமில்லை. ரயில்வே சிப்பந்திகள் குடியிருக்கும் இடம் ரயில்வேயல்ல; மேற்படி ஆக்ட் 3-வது செக்ஷன் [illegible] 4-ல்

ரயில்வே என்ற பதத்தின் அர்த்தம் சவிஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருந்தபோதிலும், சிப்பந்திகள் குடியிருக்குமிடமாவது குடியிருப்பதற்கேற்பட்ட வேறு கட்டடங்களாவது ரயில்வே என்ற அர்த்தத்தின் கீழ் வரவில்லை. மேலும் வாதி ரயில்வேயில் அக்கிரமமாகப் பிரவேசிக்கவில்லை. சட்டப்படி வாதி தாவாவிற்கண்ட கட்டடத்திற் குடியிருந்து வருவதால் 122-வது செக்ஷனிதற்குப் பொருந்தியதல்ல. இந்தக் கட்டடத்தில் வாதியிருந்தது ஆக்கிரமித்து அனுபவிக்குஞ் சொத்தல்லவாகையால் எதிரி தன்தற்காப்புக்கு வேண்டிய பலாத்காரஞ் செய்ததாகச் சொல்வது எவ்விதத்திலும் அங்கீகரிக்கத்தக்கதல்ல. எதிரி இ. பி. கோடு 456-வது செக்ஷன்படிக்குங் குற்றஞ் செய்திருப்பதால் அந்த செக்ஷன்படி எதிரியை தண்டிக்கவேண்டியதவசியமென வாதி ரெவிஷன் மனுக் கொடுத்திருக்கிறார். முக்கியமான நியாயத்தவறுதல்களிருந்தாலன்றி இந்தக் கோர்ட்டார் கீழ்கோர்ட் தீர்ப்புகளில் பிரவேசிக்கும் வழக்கமில்லை. எதிரிக்கு விதித்த தண்டனை ஜாஸ்தியாகவிருப்பதால் இந்த 456-வது செக்ஷன்படிக்கும் தண்டனை விதித்து ஜாஸ்திப்படுத்த வேண்டியதில்லை.

(1914) M. W. N. 124.

சென்னை ஹைகோர்ட்டு.

1905 ஹுத்திய அப்பீல் நம்பர் 53.

தீர்ப்பு 5—12—13.

ஜட்ஜிகள்.	ராமசாமி நாய்க்கர் ஆ. அப்பீல் தார்கள் (பிரதிவாதிகள்).
சீவ் ஜஸ்டிஸ் அவர்கள்	V
ஜஸ்டிஸ் டியாப்ஜி அவர்கள்	இறந்த இராமநாதன் செட்டி ஆ. எதிர்கக்ஷிக்காரர்கள் (வாதிகள்).

9. [சாக்ஷிய சட்டம்].

கணக்கு எழுதியவன் தலைமறைவாகத் திரிந்து கண்டுபிடிக்க முடியாத பட்சத்தில் அந்த கணக்கே சாக்ஷியமாக அங்கீகரிக்கப்படலாமென்பதும், ஒரு தஸ்தாவேஜி உண்மை அல்லது பொய்யென்பதைப்பற்றி விவாதப்படும் கையெழுத்துடன் விவாதமில்லாத கையெழுத்தை கோர்ட்டாரே ஒத்துப்பார்த்து தீர்மானஞ் செய்யலா

மென்பதும், அது உண்மை யென்பதைப்பற்றி எந்த சாக்ஷியும் விசா
ரிக்கப்படவேண்டிய தவசியமில்லை யென்பதும்.

கீழ் மதுரை சப் கோர்ட்டு தீர்மானத்தின் பேரில் அப்பீல்
பிரதிவாதிகளின் தாயார் பிரதிவாதிகள் நடத்தவேண்டிய பாக
வழக்குச் செலவுகளுக்காக கார்டியன் முறைமையில் முதல் வாதி
க்கு 4-2-97 ல் ஒரு ரிஜிஸ்டரான பத்திரம் ரூ 5000 த்துக்கு
எழுதிக் கொடுத்திருப்பதாகவும், அத்தொகைக்கு மாதம் 1 க்கு
100 க்கு 4-8 விதம் வட்டி கொடுப்பதாக ஷரத்து ஏற்பட்டிருப்ப
தாகவும், ஆனல் ரூ 4000 சொச்சந்தான் கொடுபட்டதாகவும்,
அத்தொகையும் அதன் வட்டியுங் கூடுதல் ரூ 20,000 கிடைக்க
வேண்டுமென வழக்கிட்டார்கள். 2 ம் வாதி முதல் வாதியின்
அவிபக்த குமாரனுகையால் அவனும் வாதியாகச் சேர்க்கப்பட்
டான். 18-2-97 ல் கொடுபட்ட தொகை ரூ 1250 அதற்கு முன்
பிராமசரி நோட்டுகளின்படி கொடுபட்ட தொகை ரூ 250 ஆக
மொத்தம் ரூ 1500 க்குத்தான் தாவா பத்திரத்துக்குப் பிரதிப்
பிரயோஜன மேற்பட்டிருக்கிறதென்றும், உபயவாதிகளுக்குள்
ளும் ஏற்பட்ட உடன்படிக்கையின்படி மேற்கொண்ட தொகை
வாதி கொடுக்கமாட்டேனென்று ஆக்ஷேபித்து ஏற்பட்ட உடன்
படிக்கை ரத்தாகிவிட்டதால், வாதிகளுக்கு யாதொரு தொகை
யுங் கிடைக்கத்தக்கதில்லை யென்றும், வட்டி யேற்பட்டிருப்பது
மிகவும் ஜாஸ்தி யென்றும், அநீதமானதென்றும் பிரதிவாதிகள்
கக்ஷியாடினர்கள். வாதி மேற்கொண்ட தொகை கொடுக்காமல்
நிறுத்திவிட்டதாகவும், அவ்விதம் நிறுத்தப்பட்டத் தேதியிலிரு
ந்து வாதிகளுக்கு வட்டி கிடைக்கதக்கதில்லை யென்றும் தாவா
பத்திரத்துக்கு ரூ 4800 சொச்சந்தான் பிரதிப் பிரயோஜனமென்
றும், சப் ஜட்ஜி யவர்கள் தீர்மானஞ் செய்தார்கள். இதன் பேரில்
பிரதிவாதிகள் அப்பீல் செய்திருக்கிறார்கள். வாதிகளும் கிராஸ்
ஆக்ஷேபனை மெமோராண்டம் கொடுத்திருக்கிறார்கள்.

தாவா பத்திரத்திற் கண்டவை மூன்று ஐடங்களாக பிரிக்
கப்படலா மென்றும், அவைகளில் (1) பத்திரம் பிறந்த தேதியிற்
கொடுபட்டதாகச் சொல்லுந் தொகை ரூ 1500 என்றும், (2)
ஸ்டாம்பு வாங்குவதற்காக கொடுபட்ட தொகை ரூ 1250 என்
றும் அது ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறதென்றும், (3) சில்லரை

யாக பல தேதிகளிற் கொடுபட்டதாகச் சொல்லும் ரூ 2000
சொச்சமென்றும், முதல் ஐடத்தைப்பற்றி வழக்குக்காகச் செலவு
செய்யும் நாட்டுக்கோட்டைச் செட்டியாகிய வாதி இவ்வழக்கு
சரிவர நிறைவேறுவதற்கு வேண்டிய தொகை கொடுத்துதவி
பிரதிவாதிகளுக்கு அனுகூலமான தீர்ப்பு கிடைத்தாலன்றி இவர்
கொடுத்தத் தொகையை வசூலிக்க சிரமப்படும் என்றது வாதிக்கு
நன்ருகத் தெரிந்திருக்கிறதென்றும், 2 வது ஐடமாகிய ஸ்டாம்பு
கிரயத்துக்கு ரூ 1250 கொடுத்திருப்பதாக வாதிகள் ஒப்புக்
கொண்டிருப்பதினலே ரூ 1500 பத்திரம் பிறந்த தேதியிற் கொடு
பட்டிருக்கக்கூடியதாக விருக்கவில்லை யென்றும், 3 வது ஐடத்
தொகையைப்பற்றி கணக்கு மட்டில் தாகல் செய்யப்பட்டிருப்ப
தாகவும், அது ருஜுப்பிக்கப்படவில்லை யென்றும், வாதிகளுக்கு
யாதொன்றும் நேரிற் றெரியாதென்றும், கணக்கு எழுதியவனும்
பத்து வரவுகள் நடந்ததைப்பற்றிச் சொல்லக்கூடியவனுமானவர்
இதில் சாக்ஷியாக விசாரிக்கப்படவில்லை யென்றும், ஒரு கக்ஷிக்
காரனைக் கட்டுப்படுத்துவதற்கு சாக்ஷிய சட்டம் 34 வது செக்
ஷன்படி கணக்கு புத்தகங்கள் மட்டிற் போதுமானதல்ல வென்
றும் அப்பீல்தார்களின் வக்கீல்கள் கக்ஷியாடுகிறார்கள்.

முதலாவது ஐடம் ரூ 1500 எதற்காக செலவிடப்பட்டதென்
பதை வாதி கவனிக்கவேண்டிய தவசியமில்லை யென்றும், வாதி
யும் அவர் சாக்ஷிகளும் அது விஷயமாக ருஜுச் சொல்லியிருக்
கிறார்களென்றும், தொகையைப் பெற்றுக்கொண்ட பிரதிவாதி
களின் தாயார் சாக்ஷியாக விசாரிக்கப்படவில்லை யென்றும், பத்து
வரவுகளைப்பற்றி சொல்லக்கூடிய ஏஜண்டுக்கு வாதி சம்மன் எடுத்
துக்கொண்டிருப்பதாகவும், அவனிருப்பிடந் தெரியவில்லை யென்
றும், அதனலவனை விசாரிக்கமுடியவில்லை யென்றும், இந்த சந்
தர்ப்பத்தினல் சாக்ஷிய சட்டம் 34 வது செக்ஷன்படிக்கன்றி
டி ஆக்ட்டு 32 வது செக்ஷன்படிக்கும் இந்த கணக்கு புத்தகங்
கள் சாக்ஷியங்களாக அங்கீகரிக்கப்படவேண்டியதென்றும்,
அவை வர்த்தக முறைமையில் வைக்கப்பட்டிருப்பதால் அவை
செல்லத்தகுந்தன வென்றும், மேலும் இந்த கணக்குபுத்தகத்தை
யாதரித்து H அடையாள ஆதிரவு ஏற்பட்டிருப்பதாகவும் இ.லா.ரி
23 பம்பாய் 291 தீர்மானத்தை தன் கக்ஷிக்கு ஆதாரமாக எடுத்
துக்காட்டி அப்பீல் பிரதிவாதிகளின் வக்கீல் எதிர்கக்ஷி சொல்லு
கிறார்.

சீவ் ஜஸ்டிஸ்:—H அடையாள ஆதிரவு யார் ருஜுப்பித்தது?

வக்கீல்:—ஒப்புக்கொள்ளப்பட்ட தஸ்தாவேஜியுடன், H. அடையாள ஆதிரவை கோர்ட்டார் ஒத்துப்பார்த்து அது உண்மையென்று கண்டுபிடித்தார்கள். சாக்ஷிய சட்டம் 73-வது செக்ஷன்படி கோர்ட்டார் அவ்விதஞ் செய்யலாம்.

தீர்ப்பு.

சீவ் ஜஸ்டிஸ் அவர்கள்:—பிரதிவாதிகளின் தாயார் வாதிக்கு எழுதிக்கொடுத்திருக்கும் பத்திரத்தின்பேரில் இந்த வழக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இது 1897-ம் வருஷம் பிப்பரவரி மாதம் 4-ந்தேதி ஏற்பட்டது. பிராது ஸ்டாம்புக்காக ரூபாய் 1500 மற்ற சில்லரைச் செலவுகளுக்காக வாதியின் கடை உண்டி மூலமாக பெற்றுக்கொண்டது ரூபாய் 3500 ஆக மொத்தம் ரூபாய் 5000 பெற்றுக்கொண்டதாக பத்திரத்திற் கண்டிருக்கிறது. வாதி தான் பத்திர தேதியில் ரூபாய் 1500 கொடுத்ததாகவும், பிப்ரவரி மாதம் 18-ந்தேதியில் ரூபாய் 1250 கொடுத்ததாகவும் சில்லரையாக பலதடவைகளில் கொடுத்திருப்பதாகவும் மொத்தத்தில் ரூபாய் 4856-4-9 பிரதிவாதிகளுக்கு பத்தாயிருப்பதாக வாதி சொல்லுகிறார்.

பிரதிவாதிகள் ரூபாய் 1250 பிப்ரவரி மாதம் 18-ந்தேதி பெற்றுக்கொண்டதாகவும், இந்த பத்திர தேதிக்குமுன் பிராம்சரி நோட்டுகளின்படி ரூபாய் 250 கொடுக்கவேண்டியிருந்ததாகவும் ஆகமொத்தம் ரூபாய் 1500 மட்டில் தாவா பத்திரத்துக்குக் கொடுபட்டிருப்பதாக பிரதிவாதிகள் கக்ஷியாடுகிறார்கள்.

பத்திர தேதியில் பிரதிவாதிகளின் தாயாரிடம் ரூபாய் 1500 கொடுபட்டதற்கு வாதியொருவரே சாக்ஷி; இது விஷயமாக இவர் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. இதைப்பற்றி பிரதிவாதிகளின் தாயாரை சாக்ஷியாக விசாரிக்கவில்லை. இதனால் ரூபாய் 1500 பிரதிவாதிகளின் தாயாரிடங் கொடுபட்டதாகவே தீர்மானிக்கிறேன். பிப்ரவரி மாதம் 18-ந்தேதி பிரதிவாதிகளின் தாயார் பிச்சையம்மாளிடம் ரூபாய் 1250 வாதியின் மானேஜர் மீனாட்சி சுந்திரம் கொடுத்ததாக வாதி தரப்பு முதல் சாக்ஷி சொல்லுகிறான். இதுவிஷயமாக சிலகுறுக்குவிசாரணை நடந்திருக்கிறது. மேலே சொன்னபடி இது விஷயமாக பிரதிவாதிகளின் தாயார்

விசாரிக்கப்படவில்லை. இதனாலிந்தத் தொகையுங் கொடுபட்டதாகவே கண்டுபிடிக்கிறேன். மற்ற தொகைகளைப்பற்றி பிராதில் விபரம் யாதொன்றுஞ் சொல்லப்படவில்லை. வாதியின் மானேஜர் மீனாட்சி சுந்திரத்தினால் வைக்கப்பட்டிருக்கும் கணக்குகளில் இதன் விபரங்களிருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. இவர் இப்போது வாதியிடத்தில் வேலைபார்க்கவில்லை. இந்த கணக்கிற் கண்ட தொகை கொடுபட்டதற்கு தகுந்த சாக்ஷியமிருக்கிறதா இல்லையா வென்பதுதான் கேள்வி. மீனாட்சிசுந்திரம் சாக்ஷியாக விசாரிக்கப்படவில்லை. வாதியிடத்தில் வேலைபார்த்த வேறொருவன் விசாரிக்கப்பட்டிருக்கிறான். அவன் D. அடையாள பெயரேட்டிலிருப்பது மீனாட்சி சுந்திரத்தின் கையெழுத்தென்று ருஜுச் சொல்லுகிறான். வாதி ஆதரித்துச்சொல்லும் C. அடையாள குறிப்பு மீனாட்சி சுந்திரத்தினலெழுதபட்டதென்பதற்கு எவ்வித ருஜுவுமில்லை. பெயரேட்டு புஸ்தகம் வைக்கப்பட்டிருக்கும் விதமானது வர்த்தக முறைமையில் வைக்கப்பட்ட கணக்காகவே தெரிகிறது.

இந்த கணக்கு சாக்ஷியமாக அங்கீகரிக்கப்பட வேண்டுமென சப் ஜட்ஜி சாக்ஷிய சட்டம் 34 - 32 இந்த செக்ஷனை யாதாரமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். கணக்குமட்டில் தனிமையில் சாக்ஷியமாகாதென்றும், அது வர்த்தக முறைமையில் வைக்கப்பட்டதென்பதற்கு வேறு சாக்ஷியம் வேண்டுமென்றும், 34-வது செக்ஷனிற் சொல்லப்பட்டிருக்கிறது. ஒருவன் எழுத்து மூலமாகவாவது வாய்மொழியாகவாவது சொல்லிய ஸ்டேட்மெண்டு அவனிறந்துபோய்விட்டாலும் அவனைக்கண்டு பிடிக்க முடியாவிட்டாலும் பொருந்திய விஷயம் (Relevant fact) ஆகுமென்று 32-வது செக்ஷனிற் சொல்லப்பட்டிருக்கிறது. மீனாட்சிசுந்திரத்தினிருப்பிடந் தெரிந்துகொள்ள முடியவில்லை யென்பதற்குத் தகுந்த போதுமான சாக்ஷியங்களில்லாவிட்டாலும், இவனை கண்டு பிடிக்க முடியவில்லை யென்பதற்கு ருஜுவிருக்கிறது. ரூ 33 கொடுக்கும்படி பிரதிவாதிகளின் தாயார் மீனாட்சிசுந்திரத்துக்கு எழுதிய கடிதம் H அடையாள ஆதிரவாக தாகல் செய்யப்பட்டிருக்கிறது. இது D கணக்கிற் கண்டிருப்பதை யாதரிக்கிறது. இந்தக் கடிதம் பிரதிவாதிகளின் தாயாரா லெழுதப்பட்டது தானென்பதைப்பற்றி பிரதிவாதி சாக்ஷியாக விசாரித்தபோது

அவனைக் கேட்கவில்லை. பிரதிவாதிகளின் வக்கீல் இதை யொப்புக்கொள்ளவில்லை. ஆனால் சப் ஜட்ஜி யவர்கள் இந்த H அடையாள கடிதத்திற்கண்ட கையெழுத்தை ஒப்புக்கொள்ளப்பட்ட தஸ்தாவேஜிகளின் கையெழுத்துகளுடன் ஒத்துப்பார்த்து பிரதிவாதிகளின் தாயார்பிச்சையம்மாளுடைய கையெழுத்துதானென்று கண்டுபிடித்திருக்கிறார்கள். இது சாக்ஷிப சட்டம் 73 வது செக்ஷன்படி ஒப்புக்கொள்ளத்தக்கதா வென்பது கேள்வி. இவ்வித கையெழுத்துகள் சாக்ஷிகளால் ருஜுப்பிக்கப்படாவிட்டால் கோர்ட்டார் அந்தக்கையெழுத்தை யொத்து பார்த்து உண்மை யல்லது பிசகென்று தீர்மானிக்கலாமென்பது டெய்லரால் எழுதபட்ட சாக்ஷிப சட்ட புத்தகத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் கையெழுத்து D அடையாளஆதாவினாலும்ஆதரிக்கப்பட்டிருக்கிறது.

வாதியால் கொடுபட்ட தொகைகள் B அடையாள உண்டியில் வரவு வைக்கப்படவில்லையென்பதும், வாதியால் பிச்சையம்மாளுக்கு 11-10-07 ல் எழுதிய கடிதமும் தங்கள் கக்ஷிக்கு முக்கிய ஆதாரங்களென பிரதிவாதிகள் கக்ஷியாடுகிறார்கள். அதில் "நான் கொடுத்த ரூ 1500 நஷ்டம் வந்திருப்பது போதுமானது, மேற்கொண்ட தொகை கொடுக்க முடியாது" என்று கண்டிருக்கிறது. ஆகிலும் இதிற் சொல்லுந் தொகை முதலில் முன்பணமாகக் கொடுத்த தொகையைப்பற்றிச் சொல்லப்பட்டதென சப் ஜட்ஜி யவர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். அது சரியானதென்றே நாமும் அபிப்பிராயப்படுகிறோம். அப்பீலைப்பற்றிய விஷயம் இவ்வளவுதான்.

வாதி தன் பிராதிற் கேட்ட தொகைக்கு 11-10-97 வரையில் மட்டில் 100 க்கு 4½ வீதம் வட்டிக்குத் தீர்மானித்திருப்பதாகவும், பாக்கி காலங்களுக்கு வட்டிக்கு தீர்ப்பு செய்யப்படவில்லை யென்றும், வாதி ஆக்ஷேபணை மெமோராண்டங் கொடுத்திருக்கிறார். III அடையாள ஆதிரவிற்கண்டபடி வாதி தான் செய்துகொண்ட உடன்படிக்கையின்படி நடவாததால் அந்த உடன்படிக்கையிற் கண்டபடி வட்டி கொடுபடவேண்டியதில்லை யென்று சப் ஜட்ஜி சொல்லியது மெத்த நியாயமானதுதான். ஆகிலும் கொடுபட்ட தொகைக்கு பிந்திய வட்டியே கிடையாதெனச் சொல்வது சரியல்ல. ஆகையால் 3 அடையாள ஆதிரவு தேதிக்

குப் பிறகு ரூ 1 க்கு 100 க்கு 6 வீதம் வட்டி கொடுபடவேண்டியதெனத் தீர்மானிக்கிறோம். இந்த டிக்கிரித்தொகையைப் பிரதிவாதிகளின் சரீர ஜவாப்தாரியின் பேரில் நிறைவேற்றுகிறதில்லை யென்று வாதியின் வக்கீல் ஒப்புக்கொள்ளுகிறார்.

ஜஸ்டிஸ் டியாப்ஜி அவர்கள்:—நானும் இத்தீர்மானத்துக்கு ஒத்துக்கொள்ளுகிறேன்.

1. L. W. 136.

சென்னை ஹைகோர்ட்டு.

1913 ஹூத்திய லெட்டர்ஸ் பேடெண்டு அப்பீல் நம்பர் 52.

தீர்ப்பு 25—11—13.

ஜட்ஜிகள்.

ஜஸ்டிஸ் சதாசிவய்ய ரவர்கள்

ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர் அவர்கள்

T. M. ராமசாமி அய்யர் அப்பீல்தார் (மனுதார் வாதி).

V

கணபதியாபிள்ளை எதிர்கக்ஷிக்காரர் (பிரதிவாதி).

10. [சாக்ஷிய சட்டம்].

பிராமசரி நோட்டு மேடர் வாங்கியதற்குப் பிரதிப் பிரயோஜனமில்லை யென்பது கட்சிக்காரர்களின் யோக்கியதை, ஏற்பட்ட சந்தர்ப்பங்கள் முதலியனவற்றைத் தெரிந்து தீர்ப்பு செய்யப்படவேண்டுமென்பதும், இவ்விஷயங்களின் பேரில் தீர்ப்பு செய்வதைப்பற்றி ஹைகோர்ட்டில் ரேவிஷன் கொடுக்க சட்டமில்லை யென்பதும்.

கும்பகோணம் சப் கோர்ட்டு ஸ்மால்காஸ் தீர்ப்பின் பேரில் ஹைகோர்ட்டில் ரெவிஷன் மனு.

நகைகளின் கிரயத்துக்காக பிரதிவாதி தாவா பிராமசரி நோட்டு எழுதிக் கொடுத்ததாகவும், அதை பிரதிப்பிரயோஜனத்துடன் தான் மேடர் பெற்றதாகவும் வாதி வழக்கிட்டார். தாவா நோட்டு துன்மார்க்க விஷயத்துக்காக எழுதிக் கொடுக்கப்பட்டதென்றும், அதற்கு எவ்வித பிரதிப் பிரயோஜனமுமில்லை யென்றும், வாதி யாதொரு தொகையுங் கொடுத்து மேடர் வாங்கவில்லை யென்றும், அதனால் வாதியின் தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றும், பிரதிவாதி கக்ஷியாடினார். தாவா நோட்டுக்கு ஏவ்வித பிரதிப் பிரயோஜனமுமில்லை யென்றும், மேடருக்கும்

பிரதிப் பிரயோஜனமில்லையென்றும், சப் ஜட்ஜியவர்கள் வாதியின் வழக்கைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். இதன்பேரிற் கொடுத்த ரெவிஷன் மனுவுந் தள்ளுபடி செய்யப்பட்டது. அதனால் லெட்டர்ஸ் பேடெண்டு அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது.

ஒரு பிராமசரி நோட்டை மேடர் பெறுகிறவன் பிரதிப் பிரயோஜனத்துடன் பெற்றதாகவே அனுமானிக்கப்பட வேண்டும் (Shall presume) என்று நெகோஷியபிள் இன்ஸ்டுருமெண்டு ஆக்ட் 118-வது செக்ஷனிற் சொல்லப்பட்டிருப்பதால் கீழ் கோர்ட்டார் வாதிக்கு அனுகூலமாகத் தீர்மானித்திருக்க வேண்டுமென்றும், தாவா நோட்டு துன்மார்க்கத்துக்காக ஏற்பட்டதென்பது வாதிக்கு தெரிந்திருக்கிறதென்பதற்கு எவ்வித ருஜுவுமில்லையென்றும், அது துன்மார்க்கத்துக்காக ஏற்பட்டதாக வைத்துக்கொண்டாலும் நெகோஷியபிள் இன்ஸ்டுருமெண்டு ஆக்ட் 118-வது செக்ஷன்படி வாதிக்குத் தீர்ப்பு செய்யவேண்டியது நியாயமானதென்றும், அப்பீல்தார்களின் வக்கீல் கக்ஷியாடுகிறார்.

தீர்ப்பு.

A அடையாள ஆதாரவுக்குப் பிரதிப் பிரயோஜனமில்லையென்றும், வாதியின் மேடர் செல்லத்தகுந்ததல்லவென்றும் இருதிறப்பிலும் விடப்பட்ட ருஜுக்களின்பேரில் சப் ஜட்ஜியவர்கள் தீர்மானஞ் செய்திருக்கிறார்கள். நெகோஷியபிள் இன்ஸ்டுருமெண்ட் ஆக்ட் செக்ஷன் 118 கிளால் a-g இவைகளிற் கண்ட ருஜுபனுவைத்தெரிந்து கொள்ளாமல் தீர்ப்பு செய்தார் என்று சொல்ல நாங்கள் தயாராகவிருக்கவில்லை. மேடருக்குப் பிரதிப் பிரயோஜனமில்லையென்பது நேரானசாக்ஷியினால் ருஜுப்பிப்பது சாதாரணமாக முடியாத விஷயம். அனுமானங்களினாலும் சந்தர்ப்பங்களினாலும் வாதிபிரதிவாதிகளின் அந்தஸ்து, மேடருக்கு பிரதிப்பிரயோஜனமுண்டென்று சொல்லும் சாட்சியின் நடத்தை (Demeanur) இவைகளைக்கொண்டு சட்டத்திற் சொல்லப்படும் அனுமானங்களைக் கவனித்து ருஜுக்களைப்பற்றி முடிவான தீர்மானஞ் செய்யவேண்டும்.

கீழ்கோர்ட்டாருடைய அபிப்பிராயம் சரியான ருஜுக்களைப்பொறுத்து ஏற்படவில்லையென்றும், ருஜுக்களாற் றெரிகிற

அனுமானங்கள் சந்தர்ப்பங்கள் இவைகளைப்பற்றி ஏற்பட்டிருக்கின்றனவென்றும், சொல்லுங்காரணத்தைக்கொண்டு ருஜுவம்சமான அபிப்பிராயத்தில் நாங்கள் பிரவேசிக்கக்கூடாது, ஆகையால் இந்த அப்பீலை செலவுடன் தள்ளுபடிசெய்கிறோம்

I. L. W. 100.

சென்னை ஹைகோர்ட்டு

1913 வருஷத்திய கிரிமனல் ரெவிஷன் மனுக்கள் நம்பர்கள் 738-596

தீர்ப்பு 23—1—14.

ஜட்ஜி. ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள் | கோவிந்தராஜுலு முதலி மனுதார் (முதல் எதிரி)

18. [கிரிமனல் புரிஸீஜர் கோடு]

ஒருவரைத் திருட்டுக்குற்றத்துக்கும் மற்றொருவரை திருட்டுச் சோத்தென்று தெரிந்து வாங்கியதற்காகவும் ஒரே கேசில் ஒன்றாகச் சேர்த்து விசாரிப்பது சட்டப்படி செல்லுபடியுள்ளதல்லவென்பது.

சென்னை ஹைகோர்ட்டு, கோட்டை இவைகளினின்றும் P. W. D. அடையாளமிடப்பட்ட எலெக்டிரிக் மணிகள் 191?ம் வருஷம் ஜூன் மாதத்தில் களவுபோனதாக ரிபோர்ட்டுகளேற்பட்டிருந்தன. இந்த எலிக்டிரிக் மணிகளிலொன்று மனுதாரிடமிருந்து 1913 வருஷம் ஆகஸ்டு மாதத்தில் கண்டுபிடிக்கப்பட்டதில் இவன் அது திருட்டுச் சொத்தென்று தெரிந்து அல்லது திருட்டுச் சொத்தென்று நம்பத்தகுந்த காரணங்களிருந்து அயோக்கியத்தனமாக தன் ஸ்வாதீனத்தில் வைத்திருந்தான் என்பதாக இவனை இ. பி. கோடு 411 வது செக்ஷன்படி சார்ஜ் செய்தார்கள். இவன் தான் அந்த மணியை நல்ல எண்ணத்துடன் அதன் விலையின்னதென்று நன்றாகத் தெரிந்துகொண்டு 2-வது எதிரியிடமிருந்து ரூபா 1-8 அணுவுக்கு வாங்கியதாக டிபென்ஸ் சொன்னான். 2 வது எதிரி தான் அந்தப்படி விற்கவில்லையென்று சொன்னான். இருவரும் ஒரே கேசில் விசாரிக்கப்பட்டார்கள். மாஜிஸ்டிரேட் 2 வது எதிரியை விடுதலை செய்து முதல் எதிரிக்கு ரூபாய் 50 அபராதம் விதித்தார்கள். இதன்பேரில் மனுதாரன் இந்த ரெவிஷன் மனுக்கொடுத்திருக்கிறான்.

தினத்திலிருந்து வந்ததாகவும், முதல் எதிரியும் மற்றவர்களும் அதை யப்புரப்படுத்தி விட்டதாகவும் கீழ்கோர்ட்டார்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள். இந்தச் சொத்து ஸ்வாதீனம் முதல் எதிரியிடமிருந்ததாக எண்ணப்படவேண்டுமென்றும், அதை யப்புறப் படுத்தியது திருட்டாகமாட்டாதென்றும் வாதிக்கப் படுகிறது.

இப்போது கண்டுபிடித்திருக்கிற முக்கிய விஷயங்கள்:—பட்டடைக்கு வாதியால் குறிபோடப்பட்டிருப்பது ஒன்று. A. அடையாள ஆதிரவின்படி ஸ்வாதீனத்தை முதல் எதிரி ஒப்புக்கொண்டிருப்பது மற்றொன்று. அது எதிரியின் கொல்லையில் போடப்பட்டிருக்கிறது. கடைசியாகச் சொன்ன இரண்டு விஷயங்களையும் கீழ்கோர்ட்டார்கள் முக்கியமானவையாக நினைக்கவில்லை. முதலிற் சொன்ன விஷயத்திலும் மற்ற சந்தர்ப்பங்களிலும் சட்ட விரோதமாக முடிவு செய்திருப்பதாக நாம் அபிப்பிராயப் படுகிறோம். மிராசுதாருக்கு பாத்தியமான மேல்வார நெல்லை அவருக்கு குடியானவன் ஒப்புக்கொடுக்கிற வரையில் அந்த முழுபாக நெல்லும் குடியானவன் வசமாகவே யிருப்பதாக எண்ணப்படுமென்று இ. லா. ரி. 26 சென்னை 481. தீர்மானத்திற் சொல்லப் பட்டிருக்கிறது. அதை யிந்த கேசுக்கு உபயோகிக்காததற்குக் காரணந்தெரியவில்லை. தாவா நெல்லின் ஸ்வாதீனம் குடியானவன் வசமிருந்ததாகவே தீர்மானிக்கப்படவேண்டும். அதனால் கீழ்கோர்ட்டார்களின் தீர்மானம் ரத்து செய்யப்பட்டது. விதித்த அபராதம் வாபஸ் செய்யப்படவேண்டும்.

I. L. W. 178

சென்னை ஹைகோர்ட்டு

1911 வருஷத்திய 2வது அப்பீல் நம்பர் 935

தீர்ப்பு 3—2—14

ஜட்ஜிகள்
ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள்
ஜஸ்டிஸ் ஸ்பென்ஸரவர்கள்

பல்லகனகம்மா அப்பீல்தார் (வாதி)
V
சல்ல ருமசாமி ஆ எதிர்கக்ஷிக்காரர் பிரதிவாதிகள்

புருஷன் சொத்துக்களைப் பராதீனஞ் செய்ய பாத்தியமில்லாத விதந்து அச்சொத்துக்களை அடுத்த அனந்தரவார்சாக வரக்கூடியவர்கள் தன் ஜீவ்திசைக்குப் பிறகு அடையவேண்டியதென்று அவர்களுடன் செய்து கொள்ளும் உடன்படிக்கை செல்லத்தகுந்ததல்ல வென்பது.

சந்ததியன்னியில் இறந்த ஒரு இந்துவின் விதந்தும் அவளுடைய சகோதரர்களும் அந்த இறந்தவருடைய சொத்துக்களை யடையவேண்டியதென்று உயில் மூலமாகக் கொடுத்துவிட்டதாகச் சொன்னார்கள். இறந்தவருக்கு அப்போது அனந்தரவார்சு பாத்திய முடையவராகவிருந்த வாதியின் தகப்பனும் முதல்பிரதிவாதியின் தகப்பனும் அந்த உயில் கற்பனையானதென்று ஓர் பாத்தியஸ்தாபன வழக்கிட்டார்கள். அந்தக் கேஸ் ராஜியாகிவிட்டது. அந்த A அடையாள இராஜினாமாவில் சில சொத்துக்கள் அந்த விதந்துவின் சகோதரர்களுக்கு அத்தறுதியாகக் கொடுபட்டதாகவும், பாக்கியாகவுள்ள சொத்துக்களை அந்த விதந்துவின் ஜீவதிசைக்குப் பிறகு வாதியின் தகப்பனும் முதல் பிரதிவாதியின் தகப்பனும் சமபாதியாகப் பிரித்துக்கொள்ளுகிறதென்றுங் கண்டிருக்கிறது. பிறகு வாதியின் தகப்பனும் முதல் பிரதிவாதியின் தகப்பனும் தங்களுக்குக் கிடைக்கக்கூடிய பின்னிட்ட பாத்தியமுள்ள சொத்துக்களை பிரித்துக் கொள்ள B அடையாள உடன்படிக்கை யேற்படுத்திக்கொண்டார்கள். அந்த விதந்து இறப்பதற்கு முந்தியே வாதியின் தகப்பனிறந்துவிட்டார். இந்த விதந்து இறந்த பிறகு வாதி தன் தகப்பனும் முதல் பிரதிவாதியின் தகப்பனுஞ் செய்துகொண்ட B அடையாள உடன்படிக்கையின்படிக்கும் A அடையாள ராஜினாமாப்படிக்கும் தன்னுடைய தகப்பன் பாகம் தனக்கு கிடைக்க வேண்டுமென வழக்கிட்டாள். A அடையாள ஆதாரவு ஸ்வாதீனனுக்கும் பாத்தியமல்லவென்றும், B ஆதாரவு அனந்தரவார்சு பாத்தியதையைப்பற்றிச் சொல்லப்பட்டிருப்பதால் அது செல்லத்தகுந்ததல்ல வென்றும், வாதி ஸ்திரீயாகையால் அவளுக்கு அனந்தரவார்சு பாத்தியமில்லையென்றும், கீழ்கோர்ட்டார்களிருவரும் வாதியின் வழக்கைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். இதன்பேரில் வாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்திருக்கிறாள்.

ஒரு இந்துவிதந்து தன்னுடைய நெருங்கிய அனந்தரவார்சுகளுக்கு தன்னுடைய பாத்தியங்களைக் கொடுத்து வார்சுகள் சீக்கிரத்தில் தங்களுக்குரிய சுதந்திரங்களையடையச் செய்யலாமென்றும், A அடையாள ஆதரவு அதைப்போன்றதென்றும், B அடையாள ஆதரவு அனந்தரவார்சுகளின் பாத்தியங்களை ஸ்வாதீனமாக்கும் பாத்தியமென்றும், அந்த பாத்தியம் விதந்துவின் ஜீவதிசை வரையில் நிறுத்தப்பட்டு வைக்கப்பட்டிருந்ததாகவும், அந்த பாத்தியம் இப்போது குறிப்பிட்டு நிறைவேற்றப்படலாமென்றும் வாதியின் வக்கீல் கக்ஷியாடுகிறார்.

அனந்தரவார்சு பாத்தியம் பின்னால் கிடைக்கக் கூடிய பாத்தியமென்றும், முன்னதாகச் செய்துகொள்ளும் ஏற்பாடு செல்லத்தகுந்ததல்லவென்றும், தாவாவிற் கண்டபடி பின்னால் எதிர்பார்க்கக்கூடிய பாத்தியதையை இப்போதே ஸ்வாதீனமாக்கும் பாத்தியமாகச் செய்துகொள்ள விதந்துவுக்கும் அப்போதுள்ள அனந்தரவார்சுகளுக்கும் எவ்வித பாத்தியமுமில்லையென்றும் பிரதிவாதிகளின் வக்கீல் எதிர்கக்ஷி சொல்லுகிறார்.

தீர்ப்பு.

ஒரு இந்து விதந்துவும் அவளுக்கு அப்போது நெருங்கிய அனந்தரவார்சுகளாயுள்ளவர்களும் ஒருவித ஏற்பாடு செய்துகொண்டு அப்போதுள்ள அனந்தரவார்சு பாத்தியதையை ஸ்வாதீனமாக்கும் பாத்தியமாக (Vested right) செய்யலாமாவென்பதுதான் கேள்வி.

பின்னால் சில சொத்துக்களை அனந்தரவார்சு முறைமையில் அடையக்கூடியவர்களாயிருப்பவர்களும், அனந்தரவார்சு பாத்தியதையை பாரதீனஞ் செய்யவாவது விநியோகஞ் செய்யவாவது பாத்தியமில்லாத ஒரு ஸ்திரீயும் அவளுடைய ஜீவதிசைக்குப்பின் அவளுடைய புருஷன் சொத்துக்களை அனந்தரவார்சு முறைமையில் அடைய அருகமுள்ளவர்களின் பாத்தியங்களுக்கு விரோதமாக அந்த அனந்தரவார்சு பாத்தியதையைப் பற்றி ஏற்பாடு செய்துகொள்வது எவ்விதத்திலுஞ் செல்லத்தகுந்ததல்ல. இந்த விதந்துவின் ஜீவதிசைக்குப் பிறகு அவள் புருஷனுடைய சொத்துக்களை அவளுக்கு அப்போது ஜீவந்தர்களாயிருந்த அனந்தரவார்சுகள் பாகப்பிரிவினை செய்துகொள்ளுகிறதென்று B அடை-

யாள உடன்படிக்கை யேற்பட்டிருக்கிறது. அது ஸ்வாதீனமாக்கும் பாத்தியதையை யுண்டுபண்ணமாட்டாது. A-B அடையாள ஆதரவுகள் ஸ்வாதீனமாக்கும் பாத்தியதையை யுண்டுபண்ணிவிட்டதாகவும், அதன்படி பாகப்பிரிவினை செய்து சொத்து ஸ்வாதீனமாகவேண்டுமென்று வழக்கிடப்பட்டிருக்கிறது. B அடையாள உடன்படிக்கையின்படி முதற் பிரதிவாதி வாதிக்கு தாவா சொத்தை சாசனஞ்செய்து கொடுக்கவேண்டுமென்று வழக்கு கொண்டுவரவில்லை. இது விஷயம் இந்த இரண்டாவது அப்பீல் மெமோராண்டத்திலுஞ் சொல்லப்படவில்லை. அவ்வித வழக்கிடாததால் அது விஷயமாக நமது அபிப்பிராயத்தை வெளியிடவேண்டிய தனாவசியம். இந்த 2 வது அப்பீல் செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

I. L. W. 237.

அலகபாத் ஹைகோர்ட்.

1912 ஸூத்திய முதலாவது அப்பீல் நம்பர் 175.

தீர்ப்பு 17—1—14.

ஜட்ஜிகள் சீவ் ஜஸ்டிஸ் ஸர் ஹென்ரி ரிச்சேர்ட்ஸ் Kt. அவர்கள். ஜஸ்டிஸ் ஸர் P. C. பனார்ஜி Kt. அவர்கள்.	ராம்சரண் ஆ. வாதிகள் அப்பீல்தார்கள் V மெகின்லால் ஆ. பிரதிவாதிகள் எதிர்கக்ஷிக்காரர்

29. [இந்து லா]

குடும்பச் செலவுகளுக்காக குடும்ப மானேஜரால் குடும்ப சொத்து சாசனஞ் செய்யப்படலாமென்பதும், அதற்கு குடும்ப மெம்பர்களனைவருங் கட்டுப்பட்டவர்களென்பதும்.

தாவா ஸ்தாவர சொத்துக்கள் வாதிகளுக்கும், அவர்களின் சகோதரர் கோபால தாஸுக்கும், தகப்பன் ஹோடிலாலுக்கும் பாட்டன் பார்புலாலுக்கும் பொதுவான சொத்தென்றும், அதை கோபாலதாஸ் முதல் பிரதிவாதி மெகின்லாலுக்கு 1910-ம் வருஷம் ஜனவரி மாதம் 4-ந்தேதி சாசனஞ்செய்து கொடுத்துவிட்டதாகவும், வாதிகளின் சம்மதமன்னியில் அவர் விற்க எவ்வித பாத்தியமில்லையென்றும், அந்த சாசனத்துக்கு தாங்கள் கட்டுப்-

பட்டவர்களல்ல வென்றும், அது செல்லுபடி யற்றதென்றும், முதல் பிரதிவாதி மோசக்கருத்துடன் தனக்கு கோபாலதாஸ் தாவா சொத்தை சாசனஞ் செய்யும்படி தூண்டிவிட்டதாகவும், சாசனத்துக்குப் பிரதிப்பிரயோஜனமென்று சொல்லுந் தொகை யாதொன்றுங்கொடுபட வில்லையென்றும், பாத்தியஸ்தாபன வழக்கு கொண்டு வந்தார்கள்.

கோபாலதாஸ் குடும்பமானேஜரென்றும் அவருடையவும் வாதிகளுடையவும் சகோதரியின் கலியாணச் செலவுகளுக்கும் அந்த கோபாலதாஸ் வாதிகள் இவர்களுக்குச் சொந்தமான கடை வியாபாரத்துக்காகவும் தாவா சாசனத்தொகை செலவழிக்கப் பட்டிருக்கிறதென்று கீழ்க் கோர்ட்டார் வாதியின் வழக்கைத்தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

கோபாலதாஸ் தன்னுடைய மைனர் சகோதரர்களுக்கு கார்டியனென்றும், குடும்பத்தலைவரென்றும் குடும்பமானேஜரென்றும், பொய்சொல்லி தாவா சொத்தையவர் சாசனஞ் செய்திருப்பதாகவும், அவர் சட்டப்படி மைனர்களுக்கு கார்டியனயல்லவென்றும், மைனர்களுக்காக அவர் விற்றது செல்லத்தகுந்ததல்லவென்றும், வாதிகள் கக்ஷியாடுகிறார்கள். கோபாலதாஸ் வாதிகளுக்கு கார்டியனல்லவென்பது உண்மையே; ஆனால் அவர் குடும்ப மானேஜராக விருந்து குடும்பத்தின் நன்மையின் பொருட்டு விற்றிருக்கிறார். அதனாலதற்கு மைனர்கள் கட்டுப்பட்டவர்கள். ஒரு மைனருக்கு கார்டியனாகவில்லா விட்டாலும், குடும்ப மானேஜர் ஸ்தானத்தில் கிரமமானதாகவும், அவசியமானதாகவுமுள்ள விஷயங்களில் முன் யோஜனையின்பேரில் ஒருவன் குடும்ப சொத்தைப் பராதீனஞ் செய்யும் பட்சத்தில் மைனர்கள் அதற்கு கட்டுப்பட்டவர்களென்று மெயின்ஸ் இந்து லா 7-வது பதிப்பு 285-வது பக்கத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விஷயங்களை 6 மூவர்ஸ் இந்தியன் அப்பீல் 393-112 பிரிவிகவுன்ஸல் தீர்ப்பும், இ. லா. ரி 26 கல்கத்தா 320 தீர்மானமும் ஆதரிக்கின்றன. இதனால் கோபாலதாஸ் குடும்ப மானேஜரா, அவர் குடும்ப நன்மையின் பொருட்டு தாவா பராதீனஞ் செய்தாரா, என்ற விஷயங்களை நாம் கவனிக்க வேண்டும். தாவா சாசனமேற்பட்ட காலத்தில் வாதிகளின் பாட்டன் பார்புலால் ஜீவந்தராக விருந்திருக்கி

றார். ஆனாலவர் தன்னுடைய பேரன்களுக்கு விரோதியாக விருந்திருக்கிறார். தாவா சொத்து வாதிகள் கோபாலதாஸ் இவர்களுடைய தகப்பன் பெயரால் வாங்கப்பட்டிருக்கிறது. இந்த பார்புலால் இச்சொத்தை சேர்ந்து அனுபவித்ததாகவாவது, வரும்படிகளை யடைந்ததாகவாவது ருஜுவில்லை. தாவா சொத்து ரூபாய் 9000-த்துக்கு வாங்கப்பட்டு ரூபாய் 15000-த்துக்கு விற்கப்பட்டிருக்கிறது. இத்தொகையில் ரூபாய் 11500 சப் ரிஜிஸ்டிரார் முன்னிலையில் கோபால்தாஸிடங் கொடுபட்டிருக்கிறது. ஆனாலிந்தத் தொகை பிரதிவாதி மெகின்லாலிடம் திரும்ப கொடுபட்டு விட்டதாக ருஜுச்சொல்லப்பட்டிருக்கிறது. அவை திருப்திகரமானதாகவில்லை. ரூபாய் 2500 வாதிகளுடையவும் கோபால்தாஸுடையவும் சகோதரியின் கலியாணத்துக்காக கோடி கோபால்தாஸ் என்ற ஒருவரிடம் பிரதிவாதி மெகினலால் கொடுத்ததாக ருஜுவேற்பட்டிருக்கிறது. இத்தொகை வாங்கிய காலத்திலே இந்த விவாகம் நடந்திருப்பதாகவும், அச்செலவுகள் பார்புலாலால் செய்யப்பட்டதாகவும் ருஜுக்களேற்பட்டிருக்கின்றன. பாக்கித்தொகை ரூபா 1000-மும் சாசனத்திற் கண்டபடி ஸ்டாம்புக்கிரயம் ரிஜிஸ்டிரேஷன் முதலியனவற்றிற்கு செலவழிக்கப்பட்டிருக்கும். வாதிகளின் தகப்பன் வைத்திருந்த கடை அவர் ஜீவதிசைக்குப் பிறகு நடைபெறவில்லையென்றும், அந்த வர்த்தகத் தொழில் நடத்த வேண்டியதற்காக தாவா தொகை வாங்கப் பட்டதாகவும் அக்காலத்தில் ஆக்ரா நகர் வர்த்தகர் ஒருவரிடம் ரூபா 6000 த்துக்கு தங்கக் கட்டிகள் வெள்ளிக்கட்டிகள் வாங்கப்பட்டிருப்பதாகவும், இத்தொகை வாங்கிய சொற்ப மாதங்களுக்குள் ரூபா 14000 த்துக்கு வர்த்தகம் நடந்திருப்பதாகவும், கணக்குகள் முதலிய ருஜுக்களேற்பட்டிருக்கின்றன. மேலே சொன்ன காரணங்களினால் கோபாலதாஸ் குடும்பமானேஜர் முறைமையில் வாதிகளின் நன்மையின் பொருட்டும் சாசனத்தொகை வாங்கியிருப்பதால், வாதிகள் தாவா சாசனத்துக்குக் கட்டுப்பட்டவர்களாகிறார்கள். தாவா சொத்து பார்புலாலுக்கும் ஹோடிலாலுக்கும் பொதுவிற் சொந்தமானதால் அந்த பார்புலால் பாகத்தை சாசனஞ் செய்தது செல்லத்தக்கதில்லை யென்று வாதிக்கிறார்கள். இச்சொத்து பார்புலாலுக்குச் சொந்தமானதென்று கீழ்கோர்ட்டார் கண்டு

பிடிக்கவில்லை; இது அவருக்கும் சொந்தமானதென்று வைத்துக் கொண்டாலும் தாவாதொகை குடும்ப அவசியச் செலவுகளுக்கு வாங்கப்பட்டிருப்பதால் அவருடைய பாத்தியதையை வாதிகளும் கோபால தாஸனும் சர்வைவர்ஷிப் மூலமாக அடைந்துவிட்டதால் அவருடைய பாத்தியமுங் கட்டுப்படக் கூடியது. ஆகையால் இந்த அப்பீலை செலவுடன் தள்ளுபடி செய்கிறோம்.

22 Indian Cases 633.

சென்னை ஹைகோர்ட்டு.

1910 வருஷத்திய 2-வது அப்பீல் நம்பர் 856

தீர்ப்பு—23—1—14.

ஜட்ஜிகள்
ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள்
ஜஸ்டிஸ் ஸ்பென்ஸரவர்கள்

மோடுபள்ளி கஞ்சிசெட்டி ஆ அப்பீல்தார் பிரதிவாதிகள்.
V
பாலூரிருமமூர்த்தி ஆ எதிர்கக்ஷிக்காரர் வாதியின் வார்சுகள்.

30. [இந்துலா.]

குடும்ப மானேஜரிடமிருந்து குடும்ப சொத்தைக் கிரயம் பெறுகிறவன் அவ்வித சாசனஞ் செய்யப்படவேண்டியதி னவசியத்தை நல்ல எண்ணத்துடன் விசாரித்துத் தெரிந்துகொண்டு வாங்கினால் அச்சாசனத்துக்கு மற்ற பாகஸ்தர்கள் கட்டுப்பட்டவர்களென்பதும், அச்செலவினங்களை கிரயதாரன் ருஜுப்பிக்காததால் அது செல்லுபடியற்றதாக மாட்டாதென்பதும்.

வாதியின் இறந்த மூத்தசகோதரனால் குடும்ப சொத்து பிரதிவாதிக்கு சாசனஞ் செய்தது செல்லத்தகுந்த தல்லவென்றும், அதற்கு தான் கட்டுப்பட்டவரல்லவென்றும், அச்சாசனம் ரத்து செய்யப்படவேண்டுமென்றும், வாதி வழக்கிட்டார். வாதியின் தகப்பனுக்கு அபரக்கிரிகைகள் செய்யவேண்டிய செலவுகளுக்கு குடும்பமானேஜரால் தாவா சாசனஞ் செய்யப்பட்டிருப்பதால் அதற்கு வாதிகட்டுப்பட்டவரென்று பிரதிவாதி கக்ஷியாடினர்.

சாசனத்தொகை வாதியின் தகப்பனுடைய அபரகிருத்தியச் செலவுகளுக்கு உபயோகப்படுத்தப்பட்டதாக ருஜுவில்லாவிட்டாலும் வேறு நியாயமான அவசியச் செலவுகளுக்கு உபயோகப்படுத்தப்பட்டிருக்குமென்று டிஸ்டிரிக்ட் முனிசீப் வாதியின் வழக்கைத் தள்ளுபடி செய்து விட்டார்கள். இது விஷயமாக அப்பீல் செய்யப்பட்டதில் சாசனத்தொகை வாதியின் தகப்பனுடைய அபரகிருத்தியச் செலவுகளுக்கு உபயோகப்படுத்தப்படவில்லையென்று டிஸ்டிரிக்ட் முனிசீப் கண்டுபிடித்திருப்பதால் தாவா கடன் குடும்பார்த்தமான தல்லவென்று வாதியின் வழக்குப்படியே தீர்ப்பு செய்துவிட்டார்கள். பிரதிவாதிகள் இந்தக் கோர்ட்டில் 2–வது அப்பீல் செய்திருக்கிறார்கள்.

தீர்ப்பு.

சாசனத்தொகை ரூபா 80-ம் வாதியின் தகப்பனுடைய அபரகிருத்தியச் செலவுகளுக்கு உபயோகப்படுத்தப்பட்டதென்பதை முதல் பிரதிவாதி ருஜுப்பிக்கத்தவறி விட்ட காரணத்தினால் வாதியின் மூத்த சகோதரனால் முதல் பிரதிவாதிக்கு செய்த சாசனம் செல்லத்தகுந்ததல்லவென்று சப் ஜட்ஜி வாதியின் தாவாப்படியே தீர்ப்பு செய்திருக்கிறார்கள். முதல் பிரதிவாதி நல்ல எண்ணத்துடன் சாசனஞ் செய்யப்படவேண்டிய அவசியமின்னதென்பதை விசாரித்துத் தெரிந்து கொண்டு கிரமமான விலைக்கு சாசனம் பெற்றிருப்பாராகில் அது வாதியைக் கட்டுப்படுத்தக்கூடியது. முதல் பிரதிவாதி நல்ல எண்ணத்துடன் விசாரித்துத்தெரிந்துக்கொண்டு நல்ல எண்ணத்துடன் வாங்கினாரென்பதை சப் ஜட்ஜி கண்டுபிடிக்கவில்லை. ஏற்பட்டிருக்கும் ருஜுக்களின்பேரில் அவ்விஷயங்கண்டு பிடித்துதீர்மானஞ்செய்ய சி. பு. கோடு 103-வது செக்ஷன்படி எங்களுக்குஅதிகாரமுண்டு.

தாவா சாசனம் வாதியின் தகப்பனிறந்த மறுதினத்திலேற்பட்டதாகவும், வாதியின் மைத்துனனே அதிற்சாக்ஷி போட்டிருப்பதாகவும், தாவா சாசனமேற்பட்ட பிறகு நீண்டகாலமாக வாதி மைனராக விருந்த காலத்தில் வாதியின் தாயாராவது வாதியின் மாமனாவது தாவா சாசனத்தை ரத்துசெய்ய முயற்சிக்கவில்லையென்றும், முதல் பிரதிவாதியின் சாக்ஷியங்களினாலும் ஏற்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களினாலுந் தெரிகிறது. வாதியின்

தமயனும் அவனுடைய உறவின் முறையார்களும் இருத்தியச் செலவுகளுக்கு தொகை வேண்டியதாக விருக்கிறதென்று சொன்ன நம்பிக்கையின் பேரில் நல்ல எண்ணத்துடன் சாசனத்தொகை கொடுபட்டதாக ஏற்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களினாலும் எழுதப்படிக்கத்தெரியாத முதல் பிரதிவாதியின் சாக்ஷியத்தினாலுந் தெரிகிறது. குடும்பக்களஞ்சியத்தில் அக்காலத்தில் விசேஷதானிய மிருந்ததாக வாதியின் தாயார் ருஜூச்சொல்லுகிறாள். அது உண்மையானதாக வைத்துக்கொண்டாலும் விதந்துவாகப் போன மறுதினத்தில் முதல் பிரதிவாதி அந்த விதந்துவிடஞ் சென்று அவளை விசாரித்துக்கொண்டு சாசனஞ் செய்யப்பட வேண்டியதி னவசியத்தைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்பது கட்டாயமானதல்ல.

இதனால் தாவா சாசனம் வாதியைக் கட்டுப்படுத்தக்கூடியதென்றே தீர்மானிக்கிறோம். கீழ் அப்பீல் கோர்ட்டார் செய்த தீர்ப்பை ரத்து செய்து டிஸ்டிரிகட் முனிசிப் செய்த தீர்ப்பை யுறுதி செய்கிறோம்.

I. L. W. 249

சென்னை ஹைகோர்ட்.

1912 வருஷத்திய லெட்டர்ஸ் பேடண்டு அப்பீல் நம்பர் 254

தீர்ப்பு 17—12—13.

ஜட்ஜிகள் மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யாவர்கள் மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்பென்ஸரவர்கள்	சுப்பம்மாள் என்கிற பிச்சு அம்மாள் வாதி அப்பீல்தாரி V மைனர் கிருஷ்ணய்யருக்கு கார்டியன் லெக்ஷ்மணய்யர்

31. [இந்துலா]

ஆயுள்பரியந்தம் அனுபவிக்கக்கூடிய பாத்தியங்களை, மூலபுருஷனிடமிருந்து அடைந்த இரண்டு ஸ்திரீகள் ஒருவள் தனக்குரிய பாத்தியதையை அத்தறுதியாக மற்றொருவளே யெடுத்துக்கொள்ளுகிறதென்று உடன்படிக்கை செய்து கொடுத்துவிட்டதால் அச்சொத்தை பெற்றுக்கொண்டவள் முன்னதாக இறந்துவிட்டாலும் அச்

சொத்து அவளுடைய வார்சுகளுக்கு கிடைக்குமே யன்றி உடன்படிக்கை செய்து கொடுத்தவளுக்கு சர்வைவர்ஷிப்புப்படி கிடைக்கக்கூடிய பாத்தியமும் (Survivorship) விலகிப்போய்விட்டதென்பது.

திருநெல்வேலி சப் கோர்ட்டு தீர்ப்பின்பேரில் திருநெல்வேலி டிஸ்டிரிக்ட் கோர்ட்டில் அப்பீல் அதன்பேரில் ஹைகோர்ட்டில் 2வது அப்பீல். இதன்பேரில் லெட்டர்ஸ் பேடண்டு அப்பீல்.

ஆயுள் பரியந்தம் அனுபவிக்கக்கூடிய பாத்தியங்களை மூலபுருஷனிடமிருந்து அடைந்திருக்கும் இரண்டு ஸ்திரீகள் சவுகரியமாக அனுபவிப்பதற்கு மட்டில் பிரித்துக்கொள்ளாமல் ஒருவளுக்கு கிடைத்திருக்கும் பாத்தியதையை அத்தறுதியாக மற்றொருவளுக்குக் கொடுத்து விட்டதாக தஸ்தாவேஜி எழுதிக் கொடுத்துவிட்டதால் அவ்விதம் எழுதி வாங்கியவள் முன்னதாக இறந்து, எழுதிக் கொடுத்தவள் ஜீவந்தியாக விருப்பாளானால் அச்சொத்து இவளுக்கு சர்வைவர்ஷிப் (Survivorship) படி அதாவது ஒருவர் ஜீவதிசைக்குப் பிறகு கிடைக்கும் பாத்தியம் கிடைக்குமா கிடைக்கமாட்டாதா என்பதுதான் இந்த லெட்டர்ஸ் பேடண்டு அப்பீலில் தீர்மானஞ் செய்யப்பட வேண்டியதாக விருக்கிறது. இவ்வித வுடன்படிக்கை செல்லத்தகுந்ததென இந்தக் கோர்ட்டாராலேயே தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (23 சென்னை லா ஜர்னல் 355, இ. லா. ரி. 23 சென்னை 522 இந்தத் தீர்மானங்களைப் பார்க்க).

இவ்வித தஸ்தாவேஜி ஒருவளுக்கு பின்னால் கிடைக்கக்கூடிய அனந்தரவார்சு பாத்தியதையை பாதீனஞ் செய்கிறதாகிறதென்றும், அது டிரான்ஸ்பர் அவ் பிராபர்டி ஆக்ட்டு 6-வது செக்ஷன்படி செல்லத்தகுந்ததல்லவென்றும் வாதியின் வக்கீல் கக்ஷியாடுகிறார். இவர் இவ்விவாதஞ் செய்வதற்கு ஆதாரம் ஒரு ஸ்திரீ தன்னாயுள் பரியந்தம் அனுபவிக்கக்கூடிய பாத்தியதையை ஒருவள் மற்றொருவளுடன் கூட்டாக சேர்ந்தனுபவிக்கும் பாத்தியம் ஒன்று, ஒருவள் முன்னதாக இறந்துவிட்டால் அவளுக்கு சர்வைவர்ஷிப்படி வார்சாக அனுபவிக்கும் பாத்தியம் இரண்டு; இவ்விதம் பிரித்து யுக்தியாகச் சொல்வதாகத் தெரிகிறது. இவ்விதம்

யுக்தியாகச் சொல்வது பிரயோஜனமற்றது. இது 15 வருடகாலமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகிற தீர்மானங்களுக்கு விரோதமாக செல்லத்தகுந்ததல்ல. A. அடையாள பாகபத்திரத்தின்படி 1-2-3 ஷெடியூல் சொத்துக்களில் வாதி தனக்கிருந்த ஆயுள் பரியந்தம் அனுபவிக்கும்படியான பாத்தியங்களை கொடுத்துவிட்டாளாவென்பது இரண்டாவது கேள்வி. "சர்வசுதந்திர பாத்தியமம்" "சந்ததி பிரவேசமயம்" என்ற வார்த்தைகளுக்கு கீழ் கோர்ட்டார்களாலும் இந்தக்கோர்ட்டு ஜட்ஜியவர்களாலும் சரியான அர்த்தஞ் செய்யப்பட்டிருக்கிறது, 1-3 ஷெடியூல் சொத்துக்களுக்குமட்டில் மேற்சொன்ன வார்த்தைகள் உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றனவேயன்றி 2-வது ஷெடியூல் சொத்துக்கு அவ்வார்த்தைகளில்லையென வாதி வக்கீல் கக்ஷியாடுகிறார். 1 அடையாள ஆதாரவின்படி 2-வது ஷெடியூல் சொத்தில் பாதி தன் பாகமட்டில் இறந்தவள் பிரதிவாதியின் தாயாருக்கு விற்றிருக்கிறாள். ஆகையால்அந்தப்பாதி பாகம் போக மற்றபாதி பாகத்துக்கு வாதி சர்வைவர் ஷிப்பின்படி பாத்தியமுடையவள். பிரதிவாதியின் தாயார் இறந்தவுடன் அவள் பாத்தியம் வாதிக்கு கிடைத்து விட்டது. ஆகையால் 2-வது ஷெடியூலை இரண்டு பாகமாகப் பிரித்து ஒருபாகத்துக்குமட்டில் பிரதம டிக்கிரி செய்கிறோம்.

22 Indian Cases 399.

சென்னை ஹைகோர்ட்.

1911 ௵த்திய 2-வது அப்பீல் நம்பர் 151
தீர்ப்பு 5—12—13.

ஜட்ஜிகள் மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரநாயரவர்கள் மிஸ்டர் ஜஸ்டிஸ் பேக்வெல்அவர்கள்	நஞ்சயா முதலி ஆ. பிரதிவாதிகள் அப்பீல்தார்கள் சண்முக முதலி ஆ. வாதிகள் எதிர்கக்ஷிக்காரர்கள்

32. [ஹிந்து லா]

அவிபக்த குடும்பத்தில் ஒரு பாகஸ்தன் தன்னுடைய பாத்தியத்தையை பிறருக்கு பராதீனஞ் செய்யும் பட்சத்தில் அந்தப் பராதீனத்தினல் அவன் பாகம் பிரிந்தவனுகமாட்டானென்பதும், அந்தப்பராதீனம் பெற்றவருக்கு குறிப்பிட்ட ஒரு சொத்துகிடைக்கமாட்டாதென்பதும், அவர் குடும்ப முழுசொத்துக்கும் வழக்கிட்டு பராதீனஞ் செய்தவருக்கிருந்த சொத்துமட்டிலுடைய பாத்தியஸ்தராவா

ரென்பதும், ஒரு இந்து ஜாதி பிரஷ்டனுகி பனிரெண்டு வருடங்களுக்கு மேற்பட்டு குடும்ப சொத்தை யனுபவிக்காதிருந்தால் அவருக்கு குடும்பசொத்திலுள்ள பாத்தியம் விலகிவிடு மென்பதும்.

திண்டுக்கல் டிஸ்டிரிக்ட் முனிசீப் கோர்ட் தீர்ப்பின்பேரில் மதுரை டிஸ்டிரிக்ட் கோர்ட்டில் அப்பீல், அதன்பேரில் ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல்.

முதல் பிரதிவாதி ஒரு இந்து; அவருக்கு நான்குபிள்ளைகள்; அவர் பிள்ளைகளிலொருவனுகிய 3-ம் பிரதிவாதி தன் பிதிரார்சித சொத்தில் தனக்கு கிடைக்கக்கூடிய ஐந்திலொரு பாகத்தை I அடையாள ஆதாரவின்படி 1891-ம் வருஷத்தில் ஒருவருக்கு பராதீனஞ் செய்துவிட்டார். அந்த பாகம் முதல் பிரதிவாதியாக அவர் தகப்பனுக்கு இப்போது கிடைத்துவிட்டது. இந்த பிள்ளைகளிலிருவர் இப்பாலிறந்து விட்டபடியினுல் 3-ம் பிரதிவாதி 1904-ம் வருஷத்தில் தனக்கப்போதுள்ள பாத்தியம் மூன்றிலொன்றை A அடையாள ஆதாரவின்படி வாதிக்கு சாசனஞ்செய்து கொடுத்துவிட்டார். அதனுலவர் தான்பெற்ற சாசனப்படி தனக்கு குடும்பச் சொத்தில் மூன்றிலொரு பாகம் பிரித்துக் கொடுக்கப்படவேண்டுமென வழக்கிட்டார். முதல் சாசனப்படி கிடைத்த ஐந்திலொரு பாகத்தை இரண்டாவது சாசனப்படி கொடுபட்டிருக்கும் மூன்றிலொன்றிற் கழித்து பாக்கி ஐந்திலிரண்டு பாகத்துக்குமட்டில் சப் ஜட்ஜியவர்கள் தீர்மானஞ் செய்துவிட்டார்கள். அதன்பேரில் பிரதிவாதிகள் இந்த அப்பீல் செய்திருக்கிறார்கள்.

3-ம் பிரதிவாதி தனக்கிருந்தபாத்தியதையை முதலில் 1891 வருஷத்திற்பராதீனஞ் செய்ததானது கூட்டு குடியான பாத்தியதையை(Joint tenancy) முடிவு செய்துவிட்டதென்றும், அதனுல் 3ம் பிரதிவாதியிடம் முதலில் சாசனம் பெற்றவர் அந்த சாசன சொத்து சம்பந்தப்பட்ட வரையில் மற்ற பாகஸ்தர்களுடன் கூட்டுக் குடியானவன் ஸ்தானத்திலிருக்கிறாரென்றும், அதனுல் இரண்டு சகோதரர்கள் இப்பாலிறந்துவிட்டதால் அவர்களின் பாத்தியம் சர்வைவர்ஷிப்பின்படி 3-ம் பிரதிவாதிக்கு கிடைக்கமாட்டாதென்றும், வாதிக்கு எவ்வித பாத்தியமுங் கிடைக்கமாட்டாதென்றும், அப்பீல்தார்களின் வக்கீல் 1912 M W N 379, 23 M L J 64, இ. லா. ரி. 35 சென்னை 47 இந்தத் தீர்மானங்களை

தன் கக்ஷிக்கு ஆதாரமாக எடுத்துக்காட்டி வாதாடுகிறார். இந்தத் தீர்மானங்கள் நியாயமானதல்லவென்று எதிர் கக்ஷிக்காரர் சொல்லுகிறார்கள்.

இந்து அவிபக்த குடும்பத்தில் ஒரு பாகஸ்தன் தன்பாத்தியதையை பராதீனஞ் செய்ய அதிகாரமிருப்பதைப்பற்றி மெயின்ஸ் தன்னுடைய இந்து லாவில் 353 முதல் 360 பாராக்களிற் சொல்லியிருக்கிறார். இந்த அதிகாரம் பழைய மிடக்ஷரா ஸ்மிருதியின் கருத்துக்கு விரோதமானதென்றும், அவை தற்போதுள்ள அபிப்பிராயத்தின்படி சொல்லப்பட்டிருக்கிறதென்றும் அதனால் பலவிதமாக ஜட்ஜிகள் தீர்மானிக்க இடமுண்டாயிற்றென்றும் சொல்லுகிறார். ஒரு பாகஸ்தன் குடும்பப் பொதுவாயுள்ள சொத்தில் தனக்கிருக்கும் பாத்தியதையை மட்டில் விற்கலாமேயன்றி ஜாஸ்தியான பாத்தியதையை பராதீனஞ் செய்யக்கூடாது. அவிபக்த இந்து குடும்பஸ்தன் ஒரு கூட்டு வியாபாரி ஸ்தானத்திலிருக்கிறான். இந்த வியாபாரி அன்னியனொருவனை தன்னுடைய ஸ்தானத்திலிருக்கச் செய்யக்கூடாது. அந்தக் கூட்டுச் சொத்தில் குறிப்பிட்ட ஒரு பாகத்தை அன்னியனுக்கு பராதீனஞ் செய்யவாவது கொடுத்துவிடவாவது கூடாது. கூட்டுவர்த்தகக் கணக்கு பார்த்து லாபநஷ்டங்களை கணக்கிட்டு ஒரு பாகஸ்தனுக்கு எவ்வளவு கிடைக்கவேண்டுமென்று நிஷ்கரிக்க வேண்டும். அதுபோலவே ஒரு குடும்ப சொத்து முழுவதுக்கும் பாக வழக்கிடவேண்டுமேயன்றி குறிப்பிட்ட ஒரு சொத்துக்கு மட்டில் வழக்கிடக்கூடாது. அவிபக்த இந்துக் குடும்பத்தில் ஒரு பாகஸ்தனுடைய பாத்தியதை கோர்ட்டில் ஏலமெடுத்தவன் அல்லது சென்னை இராஜதானியில் வழங்கி வருகிறபடி அப்பாகஸ்தனிடம் பராதீனம் பெற்றவன் அந்த பாகஸ்தன் ஸ்தானத்திலிருக்கிறார். மற்ற பாகஸ்தர்கள்பேரில் பாக வழக்கிட அவருக்கு பாத்தியமுண்டு. (4 இந்தியன் அப்பீல் 247 பக்கம் 255 பிரிவிகவுன்ஸில் தீர்ப்பை பார்க்க) இவர் பராதீனம் பெற்ற காலத்தில் எந்த பாகமிருந்ததோ அதுவல்ல பாத்தியம். பராதீனஞ் செய்தவர் பாகவழக்கிட்டு அவருக்கு என்ன கிடைக்கக் கூடுமோ அதுதான் இவருக்கு கிடைக்கக் கூடியது (இ. லா, ரி. 10 கல்கத்தா 626) பாகப்பிரிவினையின் பேரில் மட்டில் சொத்தின் பாத்தியம் நிஷ்கரிஷிக்கப்படவேண்டுமென சென்னை பம்பாய் இந்த

இரண்டு ஐகோர்ட்டார்களாலுந் தீர்மானங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. (இவ்வித பாகப்பிரிவினை செய்யப்படுவதற்கு முன் பராதீனஞ் செய்த பாகஸ்தனிறந்து விடுவதினால் அந்த பாத்தியம் விலகமாட்டாது. (இ-லா-ரி 35 சென்னை 47) பராதீனஞ் செய்யும் பாகஸ்தன் தனக்கு அப்போதுள்ளவும் பின்னால் கிடைக்கக் கூடியதுமான பாத்தியங்களையும் ஏன் பராதீனஞ் செய்யக் கூடாதென்பதற்குக் காரணந் தெரியவில்லை. பராதீனஞ் செய்பவருடைய பாத்தியம் மற்றொரு பாகஸ்தன் பின்னால் பிறப்பதினாலாவது கிரமப்படி கொடுபடவேண்டிய கடன்கள் கொடுபடுவதினாலாவது குடும்பமானேஜரால் சொத்துக்கள் பராதீனஞ் செய்யப்படுவதினாலாவது குறைவுபடும். இந்தக்காரணங்களை யுத்தேசித்தே குடும்ப முழுசொத்தும் பாகப் பிரிவினை செய்யப்பட வேண்டுமென்று வழக்கிடவேண்டியது மெத்த அவசியமென தீர்மானங்களேற்பட்டிருக்கின்றன. (இ-லா-ரி 34 சென்னை 269 தீர்மானத்தைப் பார்க்க) பராதீனம் பெற்றவருக்கு பாகப் பிரிவினை செய்யும்படி கட்டாயப்படுத்தும்படியான பாத்திய மட்டிலுண்டு. ஆளைப்பொருத்த பாத்தியமேயன்ற முடிவான பாத்தியமில்லை. பராதீனஞ் செய்தவர் குடும்பமெம்பராகவேயிருந்து மற்ற பாகஸ்தர்களிறந்து விட்டால் அதனால் கிடைக்கும் ஜாஸ்தியான பாத்தியமுள்பட எல்லா பாத்தியங்களையுமுடையவர், அவிபக்த பாகஸ்தனொருவனுக்கு குறிப்பிட்ட ஒரு சொத்தில் பாகங் கிடைக்கமாட்டாது. அவரிடம் பராதீனம் பெறுகிறவருக்கு அவ்விதங்குறிப்பிட்ட சொத்தில் பாத்தியங் கிடைக்கமாட்டாது. இவர் பாகவழக்கிட்டு இந்தசொத்து பராதீனஞ் செய்தவர் பாகத்துக்கு கிடைத்துவிடும் பட்சத்தில் டிரான்ஸ்வர் அவ்பிராபர்டி ஆக்ட்டு 43-வது செக்ஷன் படி சாசனசொத்து கிடைக்கக்கூடியது.

இந்தக் கேசில் முதற் பிரதிவாதியும் அவருடைய நான்கு பிள்ளைகளும் 1891-ம் வருஷத்தில் அவிபக்த மெம்பர்களாயிருந்தார்கள். இவர் பிள்ளைகளிலொருவனாகிய 3 ம் பிரதிவாதி அப்பயம்பட்டி என்கிற கிராமத்திலுள்ள சொத்தில் தனக்கு பாத்தியமுள்ள ஐந்திலொரு பாகத்தை கோவிந்தசெட்டி யென்றவருக்கு 1 அடையாள ஆதாரவின்படி சாசனஞ்செய்தார். அவர் இச்சொத்தில் தனக்குள்ள பாத்தியதையை முதற்பிரதிவாதிக்கு 1894-ம் வருஷத்தில் விற்றுவிட்டார். வீணான வழக்குகளுக்கிடமின்றி

இந்த சாசனம் வாங்கினதாக முதற் பிரதிவாதி தன்னுடைய ஸ்டேட்மெண்டிற் சொல்லியிருக்கிறார். இந்த ஆதாவு பாகப் பிரிவினை செய்வதற்கு ஒரு தஸ்தாவேஜியாகிறது. எந்த விதத்தி லும் 3-ம் பிரதிவாதி குடும்ப மெம்பராகவே யிருந்துவருகிறார். முதற் பிரதிவாதி தன்னுடைய சகோதாருக்கு 1891-ம் வருஷத் தில் பாகாலப்தமாகக் கிடைத்த சொத்தை 1900-ம் வருஷத்தில் வார்சுக்கிரமத்திலடைந்தார். இவருடைய இரண்டு பிள்ளைகள் முறையே 1891-ம் வருஷத்திலும் 1904-ம் வருஷத்திலு மிறந் தார்கள். இதனால் 3-ம் பிரதிவாதி குடும்ப மெம்பர் ஸ்தானத்தில் அப்பயம்பட்டிகிராமத்தில் ஜாஸ்தியான பாகத்தையடைந்ததுடன் பூஜாரிபட்டி கிராமத்திலும் ஜாஸ்தி பாகத்தை யடைந்தார். இந்த இரண்டு கிராமங்களிலும் குறிப்பிட்ட சில சொத்துக்களில் பேர் பாதியை 3-ம் பிரதிவாதி 1904-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 31-ந்தேதி 4 5 பிரதிவாதிகளுக்குச் சாசனஞ் செய்தார். முதல் பிரதிவாதியின் அவிபக்த சகோதாராகிய வாதிக்கு அந்த 4-5 பிர திவாதிகள் தங்களுக்குள்ள பாத்தியங்களை B அடையாள ஆதர வின்படி 1905-ம் வருஷம் டிசம்பர் மாதம் 3-ந்தேதி சாசனஞ் செய்துவிட்டார்கள். அதே கிராமங்களிலுள்ள குறிப்பிட்ட சில சொத்துக்களில் சில பாகங்களை 2-ம் பிரதிவாதி 1904-ம் வருஷம் நவம்பர் மாதம் 12-ந்தேதி முத்துசாமி செட்டியார் என்ற ஒருவ ருக்கு விற்றுவிட்டார். A-B ஆதரவுகளின்படி 3ம் பிரதிவாதியிடம் சாசனம் பெற்றிருப்பதாகவும் இந்த சொத்துக்கள் பிரிக்கப்பட்டு தனக்கு மூன்றிலொருபாகங் கிடைக்கவேண்டு மென்றும் வாதி வழக்கிட்டிருக்கிறார். 3ம் பிரதிவாதிஜாதிபிரஷ்டனாகவிலக்கப்பட்டு விட்டதாகவும், இந்த தாவாவுக்கு 12 வருடங்களுக்கு முந்தியே 3ம்பிரதிவாதி குடும்பத்தை விட்டு நீக்கப்பட்டிருப்பதால் I அடை யாள ஆதரவான சாசனபாத்தியம் போய்விட்டதென்றும் பாகம் பிரிக்கப்படுவதற்கு முன்னமே குடும்பத்தாரால் கொடுபடவேண் டிய கடன்களெல்லாங் கொடுத்துவிடப்படவேண்டு மென்றும் 1-2 பிரதிவாதிகள் கக்ஷியாடுகிறார்கள்.

வாதி A B அடையாள ஆதரவுகளின்படி 3ம் பிரதிவாதி யிடங் கிடைத்த சாசன்பாத்தியதையின் பேரில் பாக வழக்கிட லாம். குடும்ப சொத்துக்கள் எல்லாவற்றிற்கும் பாகப்பிரிவினை செய்ய வேண்டுமெனக் கேட்கலாம். பிராது சரியாகத் . தயாரிக்

கப்படவில்லை யென்று டிஸ்டிரிக்ட் முனிசிப் சொன்னபோது பிரா தை திருத்திக் கொள்ள வேண்டுமென்று வாதிகேட்டிருக்கலாம். இந்த ஆதாரத்தின் பேரிலேயே வழக்கு தள்ளுபடி செய்யப்பட் டிருக்கவேண்டும் (23 M L J 64.) 3ம் பிரதிவாதியின் பாத்தியம் காலாவதி தோஷத்தாலும் பாதிக்கப்பட்டு போய்விட்டது. இத னால் சப் கோர்ட்டு தீர்ப்பை ரத்து செய்து டிஸ்டிரிக்ட் முனிசீ பின் தீர்ப்பை யுறுதி செய்கிறோம்.

22 Indian Cases 555.

கல்கத்தா ஹைகோர்ட்டு.

1910 ஷரத்திய அப்பீல் நம்பர் 438.

தீர்ப்பு 30—1—14.

ஜட்ஜிகள்.	
மிஸ்டர் ஜஸ்டிஸ் காக்ஸ் அவர்கள்	சோஜேந்திர நாராயணசிங் வாதி. அப்பீல்தாரன்
மிஸ்டர் ஜஸ்டிஸ் D சடார்ஜி அவர்கள்	V
	சண்டுலால் பிரதிவாதி எதிர்கக்ஷிக்காரர்

33. [இந்துலா].

வழக்கின் செலவுக்கு தொகை கொடுத்துதவுகிறவருக்கு அவ் வழக்கினால் கிடைக்கும் சொத்தில் சில பாகங்கொடுக்கிற தென்று ஒருவனுக்கு உடன்படிக்கை செயது கொடுத்திருந்தால் அந்த உடன் படிக்கை வாங்கியவன் வாதியாகச் சேர்ந்து வழக்கிட நியாயமில்லை யென்பதும், விதந்துவால் வாங்கப்படுங்கடன் எந்த அவசியத்துக் காக வாங்கப்பட்டதென்ற ருஜுவின்பேரில் அவள் செய்யும் பரா தீனம் செல்லுஞ் செல்லாதென தீர்மானிக்கப்பட வேண்டு மென் பதும், காலாவதியாகப் போன புருஷனுடைய கடன்களை விதந்து கொடுத்தால் அதற்கு புருஷன் சொத்து கட்டுப்படக் கூடிய தென் பதும்.

பிஷன் நாராயண் என்ற இந்து 1864-ம்ஷரத்தில் இறந்தார். அவருடைய தாயார் சித்திராவதி அவருடைய சொத்துக்களை வார்சுக் கிரமத்திலடைந்து 1906-ம்வருஷத்தில் இறந்தாள். முதல் வாதி அந்த பிஷன் நாராயுணனுக்கு சமீபமாக அனந்தரவார்சு

அந்த விதந்துவால் பாராதீனஞ் செய்யப்பட்ட சொத்து கிடைக்க வேண்டுமென்று வழக்கிடுவதற்கு முதல் வாதிக்கு திரவியமில்லாதால் அவ்வழக்கின் செலவுகளுக்கு வேண்டிய தொகையை 2-ம்வாதி கொடுக்கிறதென்றும், அந்த ஒத்தாசை செய்வதற்காக வழக்கிற் கிடைக்குஞ் சொத்தில் பாதி 2-ம்வாதிக்குங் கொடுத்து விடுகிறதென்றும் இவர்களுக்குள் ஒருவிதவுடன் படிக்கை செய்து கொண்டு விதந்துவால் பாராதீனஞ் செய்யப்பட்ட சொத்துக்களைப்பற்றி இவ்விருவரும் வாதிகளாகச் சேர்ந்து வழக்கிட்டார்கள்

இவ்விதம் முதல்வாதி 2-ம்வாதிக்கு எழுதிக் கொடுத்திருக்கும் உடன் படிக்கை பொது நீதிகளுக்கு விரோதமானவையென்றும், வழக்கு விலைக்கு வாங்கினதென்றும், அது எவ்விதத்திலுஞ் செல்லத்தக்கதல்லவென்றும், 2-ம் வாதி சேர்ந்து வழக்கிட்டிருப்பது செல்லமாட்டாதென்றும் விதந்து செய்த பாராதீனங்கள் கிரமமான கடன்களுக்கேற்பட்டவையென்றும் பிரதிவாதிகள் கக்ஷியாடினார்கள்.

முதல்வாதிக்கும் 2-ம் வாதிக்கும் ஏற்பட்டிருக்கும் உடன் படிக்கையின்படி வழக்கிடுவதில் வாதியாகச் சேர்ந்து கொள்ள 2-ம்வாதிக்கு எவ்வித பாத்தியமில்லையென்றும், பஞ்சம் நேரிட்ட காலத்தில் விதந்து குடும்பச் செலவுகளுக்குக் கடன் வாங்கி அந்தக்கடன்களுக்காக தாவா சொத்துக்களைப் பாராதீனஞ் செய்திருப்பதால், அது செல்லத்தகுந்ததென்றும் கீழ்க்கோர்ட்டார் வாதியின்வழக்கைத் தள்ளுபடிசெய்துவிட்டார்கள். அதன்பேரில் அப்பீல்செய்யப்பட்டிருக்கிறது.

தீர்ப்பு.

2-ம் வாதி இந்த நம்பரிற் சேர்ந்து வழக்கிட நியாயமில்லையென்று சப் ஜட்ஜி சொல்லியது மெத்தச்சரியானதே. முதல்வாதி எழுதிக்கொடுத்த உடன்படிக்கையின் பேரில் இவனுக்கு பாத்தியமேற்பட்டது. சொத்து பாத்தியம் யாதொன்றுங் கொடுபடவில்லை. வழக்கு ஜெயித்து சொத்தும் ஸ்வாதீனமாகும் வரையில் 2-ம் வாதிக்கு பிரதிவாதிகள் பேரில் வழக்கிட எவ்வித பாத்தியமுமில்லை. விதந்து சித்திராவதி பிரதிவாதிகளின் தகப்பனுக்கு இரண்டு தடவைகளில் தாவா சொத்துக்களை பாராதீனஞ்செய்திரு

க்கிறாள். முதலிற் செய்தபாராதீனம் 1869-ம் வருஷத்திலேற்பட்டது. விதந்துவின் புருஷனாலேற்பட்ட 5 கடன்களை நிவர்த்திப்பதற்காக ஒரு வெண்ணலைக் கடன்பத்திரம் 1854-ம் வருஷத்தில் ஏற்பட்டதாகவும், அந்தக் கடனுக்காக சில பாக சொத்துக்கள் விற்கப்பட்டதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. இது நடந்து 50 வருடங்களாவதால் இதன் மூலாதாரவுகளைக் கண்டுபிடித்து தாக்கல் செய்வது சாத்தியமானதல்ல. இது சாதாரண வெண்ணலைக் கடனாகையால் விதந்துவின் ஜீவதிசை வரையிலுள்ள அனுபவிக்கும் பாத்தியம் விற்கப்படலாமே யன்றி அத்தறுதிபாக விற்றது செல்லாதென வாதி கக்ஷிபாடுகிறார். விதந்துவின் புருஷனுடைய சிரார்த்தச் செலவுக்கு ரூபாய் 420 செலவழிக்கப்பட்டிருக்கிறது. இது அந்தக் குடும்பத்துக்கு ஒரு ஜாஸ்தியான செலவென்று சொல்லக்கூடாது. 1864-ம் வருஷத்திலேற்பட்ட கடன்பத்திரம் குடும்ப அவசியச் செலவுகளுக்கு வாங்கப்பட்டதென்றும் அதற்காக ஏற்பட்ட பராதீனஞ் செல்லத்தகுந்ததென்றுந் தீர்மானிக்கிறோம்.

இரண்டாவது பாராதீனம் இரண்டு பெந்தக இராஜினாமா டிக்கிரியின்பேரிலேற்பட்டது. இது விதந்து சித்திராவதியுடைய சம்மதியின்பேரிலேற்பட்ட டிக்கிரியாகையால் விதந்துவின் ஜீவதிசைக்கு பிறகு இந்த பாராதீனஞ் செல்லத்தக்கதல்லவென்று ஆக்ஷேபிக்கப்படுகிறது. தாவா கடன்கள் வாதியைக்கட்டுப்படுத்தக்கூடியது அல்லது இல்லையென்பது கடன்வாங்க வேண்டியிருந்ததின் அவசியத்தைப் பொறுத்ததாக விருக்கிறது. முதல் பத்திரம் ரூபாய் 3540-க்கு ஏற்பட்டிருக்கிறது. இதில் ரூபாய் 2540 விதந்துவின் புருஷனால் 1857-ம் வருஷத்திலேற்பட்ட கடனைத் தீர்ப்பதற்காக ஏற்பட்டது. இதன் அசல்தொகை ரூபாய் 1270 இந்து சாஸ்திரங்களின்படி தனரெட்டிப்புக்கு மேல்வாங்கக்கூடாதாகையால் அந்தப்படி கொடுபட்டிருக்கிறது. ஆனால் இந்தக்கடன் காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டது. ஒரு விதந்து தன் புருஷனுடைய காலாவதியாகப்போன கடனை கொடுக்கலாமாகையால் அந்தப்படி கொடுபட்டிருக்கிறது. பாக்கித் தொகை ரூபா 1000 தன் சொந்தச் செலவுகளுக்கும் கோர்ட்டுச் செலவுகளுக்கும் வாங்கப்பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறன. விதந்துவுக்கு விசேஷ வரும்படிகள் கிடை

த்து வந்ததால் இத்தொகை வாங்கவேண்டிய அவசியங்களிருக்க நியாயமில்லை. இரண்டாவது பத்திரம் ரூபா 6850 க்கு ஏற்பட்டது. இந்தத் தொகையிற் சிலது பராமாட்டூர் நிலம் வாங்கினதற்கு செலவழிக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நிலம் வாங்கபட்டிருக்கிறதென்பதை பிரதிவாதி ருஜூப்பிக்கவில்லை. சர்க்கார் கிஸ்திக்காகவும் சொந்தச் செலவுக்காகவும் கடன் வாங்கவேண்டிய அவசியமிருந்ததென்பதையும், பிரதிவாதி ருஜூப்பிக்கவில்லை. ஏற்கனவே நாம் சொன்னபடி ஏராளமான வரும்படி கிடைத்து வந்திருப்பதினாலே கடன் வாங்க வேண்டியதினவசியத்தை பிரதிவாதிகள் ருஜூப்பிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். பஞ்சம் நேரிட்டவிஷயம் வாதியினால் ஒப்புக்கொள்ளப்படுகிறது. விதந்து மிதந்த செட்டினமாக குடித்தனஞ் செய்ய முடியாது. அவ்விதஞ் செய்யக்கடமைப்பட்டவளுமல்ல. தாவா கேசுக்கு இ. லா. ரி. 29 அலகபாத் 331, 17 சென்னை லா ஜர்னல் 233 முதலிய தீர்மானங்கள் மிகுந்த ஒற்றுமையாகவிருக்கின்றன. முதலிற் செய்த அதாவது 1809 வருஷத்திய பாதீனத்துக்கு வாதி கட்டுப்பட்டவர். இரண்டாவது 1889 வது வருஷத்திய பாதீனத்திற்கு வாதி கட்டுப்படவேண்டியதில்லை. ஆகையால் விதந்துவின் புருஷனுடைய கடன் ரூபா 2540 மற்ற கிரமமான கடன் ரூபா 1888 ஆகமொத்தம் ரூபா 4428-ம் பிரதிவாதிகளுக்குச் சேரும்படி வாதி கோர்ட்டிற் கட்டிவிட்டு இரண்டாவது பாதீனஞ் செய்யப்பட்ட சொத்துக்களை விதந்து இறந்த தேதி முதல் கிடைக்கக்கூடிய வரும்படியில் முக்கால் பாகத்துடன் கோர்ட்டு மூலமாக பெற்றுக்கொள்ளும்படி தீர்மானஞ் செய்கிறோம்.

22 Indian Cases 669.

சென்னை ஹைகோர்ட்டு.

1912வருஷத்திய 2-வது அப்பீல் நம்பர் 752

தீர்ப்பு—12—11—13.

3. [மகமதியலா]

ஜட்ஜிகள். மிஸ்டர் ஜஸ்டிஸ்சதாசிவய்யர் அவர்கள்.	பூதன்ஸா ராவுத்தர் வ. வாதிகள் அப்பீல் தாரர்கள்
	V
மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர் அவர்கள்.	பாதிமா பீ வ. வாதிகள் எதிர் கக்ஷிக்காரர்கள்

விவாகமான இந்து ஸ்திரீ யொருவள் தன் புருஷன் ஜீவந்தராக விருக்கும் போது மகம்மதியனை விவாகஞ் செய்து கொண்டால் அவ ளுக்கு அந்த மகம்மதியனுக்காக பிறந்த பிள்ளைகளுக்கு மகம்மதிய லாப்படி கிடைக்கக் கூடிய பாத்தியங் கிடையா தென்பதும், அவ் வித விவாகஞ் செல்லத்தக்க தல்ல வென்பதும்.

புதுச்சேரியைச் சேர்ந்த காரியம்புத்தூரிலிருந்த மணியக் கவுண்டன் பெண்சாதி உண்ணாமலை யென்பவள் தன் புருஷனை விட்டு விலகி தென்னார்க்காடு ஜில்லா சோழவல்லியிலுள்ள ஜெயிலா ராவுத்தர் என்ற மகம்மதியனை விவாகஞ் செய்து கொண்டு பாத்மா என்ற பெயரை வைத்துக் கொண்டாள். வாதி இந்த பாத்மாவுக்கும் ஜெயிலா ராவுத்தருக்கும் பிறந்த பெண். இவள் தன் தகப்பன் இறந்த ஜெயிலா ராவுத்தருக்கு இவள் பாட்டன் ஆகம்ஸா விடமிருந்து கிடைத்த சொத்தில் மகம்மதிய லாப்படி தன் வீதத்துக்குக் கிடைக்கக் கூடிய சொத்தைப் பற்றி வழக்கிட்டாள். எதிர் கக்ஷியாடும் பிரதிவாதிகளில் முக்கியமானவள் 7ம் பிரதிவாதி. அவள் அந்தஜெயிலா ராவுத்தருடையஇரண்டாந்தார மனைவியின் பெண். வாதியின் தாயார் முனியக் கவுண்டன் என்ற இந்துவுக்கு முதலில் வாழ்க்கைப் பட்டிருந்த தாகவும், அந்த விவாகம் ஊர்ஜிதத்திலிருக்கும் போது ஜெயிலா ராவுத்தரை இவள் விவாகஞ் செய்து கொண்டது சட்டப்படி செல்லத்தக்கதல்ல வென்றும், அதனால் வாதியும் 2 முதல் 5 பிரதி வாதிகளும் அந்த ஜெயிலா ராவுத்தருடைய வைப் பாட்டியின் பிள்ளைகளென்றும், வழங்கி வரும் மகமதியலா சூனி வகுப்பாருடைய கொள்கைகளின் படி வாதி'பாகஸ்தியாகமாட்டா ளென்றும் கக்ஷி

யாடினாள். கீழ்க் கோர்ட்டார்களிருவரும் வாதியின் வழக்கைத் தள்ளுபடி செய்து விட்டார்கள். வாதி இவ்வழக்கின் மத்தியி லிறந்து விட்ட படியால் இவளுடைய மைனர் வார்சு தன்னடுத்த சினேசிதர் மூலமாக இந்தக் கோட்டில் அப்பீல் செய்திருக்கிறான்.

இந்த இரண்டாவது அப்பீலில் சட்டசம்மந்தமான கட்சிகள் ஐந்துசொல்லப்பட்டிருக்கின்றன. அவையாவன:—(1) முதல் பிரதிவாதி இஸ்லாம் மதத்திற் சேர்ந்து விட்டகால் அவள் நல்ல மகமதியளாகிவிட்டாள். ஒரு ஹிந்து விடம் இவளுக் கேற்பட்டிருந்த விவாக சம்பந்தம் விலகி விட்டது. அவள் பின்னிட்டு ஒருமகதியனை விவாகம் செய்து கொண்டது செல்லுபடி யுள்ளது.

(2) இவ்வித விவாகம் அசாதாரணமாக விருந்த போதிலும் அது செல்லுபடி யற்றதென்று ஆகமாட்டாதென மகமதியர்களால் மதிக்கப் பட்டிருக்கிறது. தம்பதிகள் புருஷனும் பெண்ஜாதியுமாக வசித்து வந்திருப்பதினாலே தனிமையான இந்த, அசாதாரண விஷயம் மன்னிக்கப் படவேண்டியதாக விருக்கிறது. (3) இந்த விவாகம் செல்லுபடியுள்ளதா வென்பதை கவனிப்பதற்கு இந்தியாவிலுள்ள பிரான்ஸ் இலாகா சட்டங்களை யுபயோகப்படுத்தவேண்டும்.

(4) பள்ளிஜாதியின் வழக்கம் ஒழுங்குகளின்படி முதல் புருஷன் ஜீவந்தனாக விருக்கும் போதே வேறொருவனை விவாகஞ் செய்து கொள்வது செல்லத்தகுந்தது. குறிப்பிட்ட ஒரு கேசில் அந்த வழக்கத்தை யுபயோகப் படுத்தக் கூடாதென கக்ஷி சொல்லுகிறவர்கள் அவ்விஷயங்களை ருஜுப்பிக்கவேண்டும்.

(5) முதல் பிரதிவாதிக்கு ஜெயிலா ராவுத்தரால் பிறந்ததென்பதை அந்த ராவுத்தரே ஒப்புக்கொண்டிருப்பதாக கீழ்க்கோர்ட்டார் கண்டு பிடித்திருக்கிறார்கள். அது நியாயமான சந்ததி யென்றே தீர்மானித்திருக்கவேண்டும். விவாகஞ் செய்து கொண்டவர்கள் அவ் விவாகம் செல்லுபடி யற்றதென்று தெரிந்து கொண்டிருக்கிறார்களென்பது ருஜுப்பிக்கப்படவில்லை.

மகமதியலாவும் இந்து லாவும் ஆளைப் பொருத்ததாகையால் இதை யனுஷ்டிக்கிறவர்கள் எங்கெங்கே வசிக்கிறார்களோ அந்தந்த சட்டங்களையே அனுஷ்டிக்கவேண்டும். வாதியின் தாயார் ஜெயிலா ராவுத்தரை விவாகஞ் செய்துகொண்டது

இங்கிலீஷ் இலாகாவாகையால் இந்த இலாகா சட்டத்தைத்தான் நாம் கவனிக்கவேண்டும். பள்ளிகள் அல்லது வன்னியர்களுக்குள் முதல் புருஷன் ஜீவந்தனாகவிருக்கும்போது வேறொருவனை விவாகஞ் செய்துகொள்ளும் வழக்கமிருப்பதாக வைத்துக்கொண்டாலும் அது பொது நீதிக்கும் நல்லொழுக்கத்துக்கும் விரோதமானதாக விருப்பதால் அதை யனுசரித்து கோர்ட்டார் தீர்ப்பு செய்யவேண்டிய அவசியமில்லை. பெற்றோனென்பதை யொப்புக்கொள்வதினால் நியாயமான சந்ததியாக எண்ணப்படக்கூடாது (இ. லா. ரி. 21 கல்கத்தா 666 தீர்மானத்தைப் பார்க்க.) விபசாரத்தினால் பிறந்த பிள்ளை நியாயமானசந்ததியாகாது. (இ. லா. ரி. 34 பம்பாய் 111 தீர்மானத்தை பார்க்க) 1-2 கக்ஷிகளுக்கு சமாதானஞ் சொல்லுவது கஷ்டமானதாக விருந்தாலும் அது விஷயங்களும் தீர்மானிக்கப்படவேண்டும்.

முனிசீப்பின் தீர்ப்பிற் கண்டபடி முதற் பிரதிவாதியின் முதல் விவாகம் நடந்து நாற்பது வருடங்களுக்குமேலாகிறது. அவள் ஜெயிலாராவுத்தரை 34 வருடங்களுக்கு பிறகு விவாகஞ் செய்துகொண்டிருக்கலாமென்றுசொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் குழந்தைகள் உற்பத்தியாவதற்கு முந்தியே முதல் பிரதிவாதி மகமதிய மதத்திற் சேர்ந்துவிட்டதாகவும் அதன் பின்பு விவாகம் நடந்ததாகவும் வைத்துக்கொள்ளுவோம். இவர்களுக்குப் பிறந்தவர்கள் நியாயமான சந்ததியா இல்லையாவென்பதை நாம் பார்க்கவேண்டும். மகமதிய நாடுகளில் ஒரு ஸ்திரீ மகமதிய மதத்திற் சேர்ந்தால் இவள் உடனே இது விபரத்தை காஜிக்காவது மாஜிஸ்டிரேட்டுக்காவது தெரிவிக்க வேண்டும். அவர் அவள் புருஷனையும் மகம்மதிய மதத்திற் சேரும்படி சொல்லுவார். அவனந்தப்படிச் சேர இஷ்டமில்லையென்று சொல்லி விட்டால் அந்தக் காஜி இவர்களுக்குள்ள விவாக சம்பந்தத்தை நீக்கி விடுவார். அன்னிய நாடுகளில் ஒருவன் மனைவி மொஸ்லிம்மதத்திற் சேர்ந்து அவள் புருஷன் நாஸ்திகனாகவிருந்தால் 3 மாதப் பிரவடை கழித்த பிறகு இவர்களுக்குள்ள விவாக சம்பந்தம் நீங்குகிறது. (அமீரலி மகமதியலா 2-வது வாலியூம் 426 - 427 பக்கங்களை பார்க்க.) ஒரு இந்துவின் மனைவி மகம்மதிய மதத்திற் சேர்ந்து மகம்மதியனொருவனை மறுவிவாகஞ் செய்துகொண்டால் அவள் சிவில் மரணமடைந்தவளாக எண்ணப்படவேண்டியதென்

னும் அவளுக்கும் அவளுடைய முதல் புருஷனுக்குமிருந்தவிவாக சம்பந்தங்கள் நீங்கிவிடுமென்றும் அவளுக்கு இந்துலா எவ்விதத்திலும் சம்பந்தப்படமாட்டாதென்றும், அப்பீல்தார் வக்கீல் இ. லா. ரி. 8 சென்னை 169 தீர்மானத்தை தன் கக்ஷிக்கு ஆதாரமாக எடுத்துக் காட்டிச் சொல்லுகிறார். இதற்கு நேர்மாறாக பின்னால் ஏற்பட்ட இ. லா. ரி. 9 சென்னை 466 தீர்மானத்தில் ஒருவன் இதரமதத்திற் சேர்ந்துவிட்டாலும் பிறகு சாஸ்திரப்படி பிராயச்சித்தஞ் செய்துகொண்டால் முதலிலிருந்த மதஸ்தனாகிவிடலாமெனச் சொல்லப்பட்டிருக்கிறது. தாவா கேசைப்போன்ற விஷயங்கள் சந்தேகங்களுக்கிடமின்றி இப்பால் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றன. (இ. லா. ரி. 18 கல்கத்தா 264, 30 சென்னை 550, 32 கலகத்தா 871 இந்தத் தீர்மானங்களைப் பார்க்க.) வெவ்வேறு மதக் கொள்களைப்பற்றி கோர்ட்டாருக்குச் சந்தேகமேற்படும் பட்சத்தில் நீதி, நடுநியாயம், நல்ல மனசாட்சி இவைகளின் விதிகளை யனுசரித்து கோர்ட்டார் தீர்மானங்கள் செய்யவேண்டும்.

முதல் பிரதிவாதி ஜெயிலாராவுத்தனை இரண்டாவது விவாகஞ் செய்துகொண்ட காலத்தில் முதல் விவாகம் ஊர்ஜிதத்திலிருந்ததா இல்லையா என்ற விஷயத்தைப்பற்றி இந்துலாவின் விதிகளை பார்க்கவேண்டும். இரண்டாவது விவாகம் செல்லுமா செல்லாதா வென்ற விஷயம் மகமதிய லாவைக்கொண்டு தீர்மானிக்கப்படவேண்டும். முதல் பிரதிவாதி மதபிரஷ்டளாய் விடுவதினால் இந்துலாப்படி அவளுக்கு ஏற்பட்டிருக்கும் விவாகபந்தம் விலகமாட்டாது. முதல் விவாகம் ஊர்ஜிதத்திலிருக்கும்போது இரண்டாவது விவாகம் செல்லத்தகுந்ததல்லவென்று மகம்மதியலாவிற் சொல்லப்பட்டிருக்கிறது. அது செல்லுபடியற்றதாகிவிடுவதுடன் சட்டவிரோதமானதாகவுமிருக்கிறது (இ. லா. ரி. 15 அலகபாத் 396.) வாதி ஜெயிலாராவுத்தரின் வைப்பாட்டி மகனேயன்றி சாஸ்திரப்படி விவாகமானவளுடைய பெண்ணல்ல. அதனால் இந்த இரண்டாவது அப்பீலுஞ் செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

22 Indian Cases 697.

சென்னை ஹைகோர்ட்.

1909 வருஷத்திய சிவில் மிஸ்லேனியஸ் அப்பீல் நம்பர் 257.

தீர்ப்பு 11—11—13.

ஜட்ஜிகள் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள் ஜஸ்டிஸ் ஸ்பென்ஸரவர்கள்	T. வரதய்யா:—அப்பீல்தாரன் மனுதார் V மைனர் ராஜகுமார வெங்கட பெருமாள் ராஜாபகதூர்வாருக்கு கார்டியன் மிஸ்டர் W. A. வரதாசாரியார் ஆ

19. [டிரான்ஸ்வர் அவ்பிராபர்டி ஆக்ட்].

பெந்தக சொத்து ஏலம் போடப்படுவதற்கு முந்தி இதர சொத்துக்கள் ஏலம் போடப்படக் கூடாதென்பதும், டிக்கிரி கடன்காரனுக்கு நோட்டீஸ் கொடாமலே இதர சொத்துக்கள் விற்று முதல் செய்ய வத்திரவு செய்யப்பட்டு பின்பு பெந்தக சொத்து ஏலம்போட வுத்திரவு செய்யப்பட்டால் அது ரேஸ்ஜூடிகேடா தோஷமாகமாட்டாதென்பதும், நிறைவேறு மனுவில் பிசகுகளிருந்தால் அவைகள் திருத்தல் செய்யப்படலாமென்பதும்.

வடவார்க்காடு டிஸ்டிரிக்ட் கோர்ட்டார் செய்த வுத்திரவின் பேரில் அப்பீல்.

மனுதார் தான் பெற்ற டிக்கிரியிற்கண்ட பெந்தக சொத்தின் பேரில் நிறைவேற்றாமல் பெந்தகத்திலில்லாத சொத்துக்களை ஜப்தி செய்யும்படி 1906 வருஷத்தில் நிறைவேறு மனுக் கொடுத்தார். இதேவித விஷயங்கள் கண்டு 1909 வருஷத்திலும் மனுக் கொடுக்கப்பட்டது. கீழ் அப்பீல் கோர்ட்டார் அடியிற்கண்ட காரணங்களினால் வாதியின் மனுவைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். அவையாவன:—(1) முன் 1906 வருஷத்தில் கொடுபட்ட நிறைவேறு மனு சட்டப்படி செல்லுபடியற்றதாகையால் வாதியின் தாவா காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுப் போய்விட்டது. ஏனென்றால் பெந்தக சொத்து ஏலம் போடப்படுவதற்கு முந்தி பெந்தகமல்லாத சொத்து ஜப்தி செய்யப்பட வேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறது.

(2) முதல் மனுவிற்கண்ட பிரார்த்தனையே தாவா 1909 வருஷத்திய நிறைவேறு மனுவிலுங் கேட்கப்பட்டிருக்கிறது. பெந்தக சொத்து முழுவதும் ஏலம் போடப்பட்டு அதனாலுளவடைந்த

தொகை போக பாக்கித் தொகைக்கு மட்டில் இதர சொத்துக்களைத் துடர்ந்து தொகை வசூலிக்கப்படவேண்டிய தாகையால் இந்த மனுவுஞ் செல்லத்தகுந்ததல்ல

இந்த டிஸ்டிரிக்ட் ஜட்ஜியின் உத்திரவின் பேரில் 2-வது அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது.

பெந்தக சொத்து ஏலவிற்பனை செய்யப்படக்கூடாததாகவிருந்தால் இதர சொத்துக்களைத் தொடர்ந்து தொகை வசூலிக்கப்படலா மென்றும், இறந்தவருக்கு வார்சு நியமிக்கவேண்டுமென முன்னால் மனுக் கொடுத்திருப்பதால் அது நிறைவேறுவதற்கு முயற்சித்ததாகு மென்றும், (Step in need of Execution) அது முதல் 3 வருடங்களுக்குள் நிறைவேற்றப்பட் டிருப்பதால் டிக்கிரிக்கு காலாவதி தோஷ மேற்படவில்லை யென்றும் 26 அலகபாத் 25, 25 அலகபாத் 28 அலகபாத் இந்தத் தீர்மானங்களை தன் கக்ஷிக்கு ஆதாரமாக எடுத்துக்காட்டி வாதியின் வக்கீல் கக்ஷியாடுகிறார்.

தாவா டிக்கிரியின் கருத்து டிக்கிரிதாரன் முதலில் பெந்தக சொத்தை ஏலம் போடவேண்டிய தவசியமென்றும் (3 சென்னை லா டைம்ஸ் இ. லா. ரி 31 பம்பாய்) டிக்கிரி யெந்தப்படி யேற்பட்டிருக்கிறதோ அதேவிதமாக நிறைவேற்றுவதுதான் கோர்ட்டுக்கு ஏற்பட்ட கிரமமான முறையென்றும், கோர்ட்டார் புதிய பாத்தியங்களை யுண்டுபண்ணக்கூடாதென்றும் (இ. லா. ரி 31 சென்னை தீர்மானத்தை பார்க்க) நிறைவேறு மனு சட்டப்படிக்கில்லாவிட்டால் அது காலாவதி தோஷத்துக்கு பரிகாரமாகமாட்டா தென்றும், இ. லா. ரி 28 அலகபாத் 33 கல்கத்தா இந்தத் தீர்மானங்களை யாதாரமாகக் காட்டி எதிர் மனுதார் வக்கீல் எதிர் கக்ஷி சொல்லுகிறார்.

பிரதிவாதி பேரிலாவது இதர சொத்தின் பேரிலாவது தொடர்ந்து தொகை வசூலிக்கப்படுவதற்கு முந்தி பெந்தக சொத்துக்களெல்லாம் ஏலவிற்று முதல் செய்யப்படவேண்டிய தவசிய்ம், பெந்தக சொத்துக்கள் விற்று முதல் செய்யப்படுவதற்கு முந்தி இதர சொத்துக்கள் ஜப்தி செய்யப்படக்கூடாதென இ. லா. ரி 31 பம்பாய் 244 தீர்மானமேற்பட்டிருக்கிறது. வாதி நல்ல எண்ணத்துடன் இந்த மனுக் கொடுத்திருப்பதால் பெந்தகசொத்தைத்

துடர்ந்து தொகை வசூலித்துக்கொள்ளும்படி இந்த மனுவை வாதி திருத்திக்கொள்ளும்படி அனுமதி கொடுக்க வேண்டியது மெத்த அவ்சியம். 1906 வருஷத்திற்கொடுத்த நிறைவேறு மனுவில் டிக்கிரி கடன்காரனுக்கு நோட்டீஸ் கொடுபட்டதாக ருஜுவில்லாததால் இந்த மனு ரெஸ்ஜுடிகேடா ஆகமாட்டாது (இ.லா. ரி 30 சென்னை 255—265 தீர்மானத்தைப் பார்க்க). முதல் மனுவானது காலாவதி தோஷத்துக்கு பரிகாரமாகமாட்டாதென கீழ் அப்பீல் கோர்ட்டார் சொன்னது சரியல்ல. அந்த மனுவில் இறந்த முதல் பிரதிவாதிக்கு வார்சு நியமிக்கவேண்டுமெனக் கேட்கப்பட்டிருக்கிறது. அது நிறைவேறு நடவடிக்கைக்கு முயற்சித்ததாகும். இந்த மனுவை வாதி இரண்டு வாரங்களுக்குள் மேலே கண்டபடி திருத்திக்கொள்ளும்படி அனுமதி கொடுத்திருக்கிறோம். கீழ் அப்பீல் கோர்ட்டார் செய்த வுத்திரவை ரத்துசெய்து மனுவிற்கண்ட மற்ற விஷயங்களை கவனித்து உத்திரவு செய்யும்படி இதை மறு விசாரணைக்கு அனுப்பியிருக்கிறோம்.

1914 M. W. N. 157.

சென்னை ஹைகோர்ட்டு.

1913 வருஷத்திய கிரிமினல் ரெவிஷன் கேஸ் நம்பர் 108.

ஷை வருஷத்திய கிரிமினல் ரெவிஷன் மனு நம்பர் 95

தீர்ப்பு 24—10—13

ஜட்ஜி	மஞ்சுபாய்டிகாடு வாதி மனுதார்
	V
ஜஸ்டிஸ் மில்லரவர்கள்	காடிம்செட்டி தம்மய்யா எதிர்கக்ஷிக்காரர்

13 [இந்தியன் பெனல் கோடு].

பட்சிகள் மச்சங்கள் இவைகளைப்பற்றி திருட்டுக் குற்றஞ் சாட்டவேண்டியதாக விருந்தால் அவைகள் தப்பிப்போகவிடாமின்றி வைத்திருக்கப்படவேண்டிய தவசியமென்பது.

எதிரிகள் வாதி வசமிருந்த மச்சங்களைத்திருடியதாக பிராது கொடுத்ததை மாஜிஸ்டிரேட் தள்ளுபடி செய்துவிட்டார். அதன் பேரில் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்டாரிடம் மனுக் கொடுத்ததில்

அவரும் சப் மாஜிஸ்டிரேட் செய்த தீர்ப்பை யுறுதி செய்துவிட்டார். அதன்பேரில் இந்த கோர்ட்டில் ரெவிஷன் மனுக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

பிராதிற்கண்ட மச்சம் நாலுபுறமும் அடைக்கப்பட்டிருந்த ஒரு குளத்திலிருந்தன. அதனால் அவை வாதி வசமிருந்ததாகவே அபிப்பிராயப்படுகிறேன். தாவாவிற்கண்ட மச்சம் தானே வெளியே போய்விடக்கூடுமா வென்பதை நாம்பார்க்கவேண்டும். கூட்டிலடைக்கப்பட்டிருக்கும் காட்டுப்பட்சி யெப்படி வெளிப்பட முடியாதோ அதுபோலவே தாவாவிற் சொல்லும் குளத்துக்கு மதகு ஏற்பட்டிருப்பதால் அதைத்திறந்தாலன்றி மச்சம் வெளிப்பட்டுப் போக முடியாது அதனால் எதிரிகள் செய்தது குற்றமாகும். சப் மாஜிஸ்டிரேட் பிராதைத் தள்ளியது பிசகு. அவர் செய்த வுத்திரவை ரத்து செய்திருக்கிறோம். சப் மாஜிஸ்டிரேட் கேசை பயிலில் வைத்துக்கொண்டு கேசை விசாரிக்கவேண்டும்.

1914 M. W. N. 168.

சென்னை ஹைகோர்ட்டு.

1912 வருஷத்திய சீவில் ரெவிஷன் மனு நம்பர் 995

தீர்ப்பு 17—2—14.

ஜட்ஜிகள் ஜஸ்டிஸ் சங்கரநன் நாயவர் கள் ஜஸ்டிஸ் எயிலிங் அவர்கள்	ஹென்ரி மோபர்லீ வாதி மனுதார் V கூடலூர் முனிசிபல் கவுன்ஸல் பிரதிவாதி (எதிர்மனுதார்)

2 [டிஸ்டிரிக்ட் முனிசிபல் ஆகட்டு]

டிஸ்டிரிக்ட் ஜட்ஜி கோர்ட்டு லீவு தினங்களில் வேறு முனிஸிபல் பட்டணத்திலிருந்து தனக்குரிய வேலைகளைச் செய்தால் அந்த முனிசிபல் சங்கத்தினர் அவரிடம் தொழில் வரி அங்கே தங்கிய காலங்களுக்கு வசூலிக்கலாமென்பதும், வேறு முனிசிபாலிடியார் அவ்வரியை வசூலிக்க பாத்தியமில்லை யென்பதும்.

வாதி கூடலூர் டிஸ்டிரிகட் ஜட்ஜியும் செஷன் ஜட்ஜியுமாக வேலை பார்ப்பவர். ஏப்பரல் மாதம் 30 தேதி கோர்ட்டு சாத்தப்பட்டவுடனே கொடைக்கானல் மலைக்குச் சென்று ஜூலை

மாதம் 2-ந்தேதி வரையில் வசித்து வந்தார். இவர் 60 தினங்களுக்கு மேற்பட்டு அந்த கொடைக்கானல் முனிசிபல் எல்லைக்குள் வசித்து தன்னுடைய வேலைகளை பார்த்து வந்ததாக அந்த முனிசிபல் சங்கத்தினர் டிஸ்டிரிக்ட் முனிசிபாலிடி ஆகட்டு 53-வது செக்ஷன்படி இவரிடம் வரி வசூலித்து விட்டார்கள். அதே பாதி வருஷத்துக்கு கூடலூர் முனிசிபாலிடியாரும் தொழில் வரி கேட்டார்கள். முனிசிபாலிடி ஆகட்டு 60-வது செக்ஷன் 2-வதுபாராப்படி தனக்கு ஏற்பட்ட வரியை ரத்துசெய்யவேண்டுமெனக் கேட்டார். நிர்ப்பந்தத்தின் பேரில் இவர் அந்த வரி கொடுக்க நேர்ந்தது. அந்தத் தொகை தனக்கு திருப்பிக்கொடுக்கப்படவேண்டுமென கூடலூர் முனிசிபல் சங்கத்தினர் பேரில் வழக்கிட்டார். இது தஞ்சாவூர் சப் கோர்ட்டுக்கு மாற்றப்பட்டது. சப் ஜட்ஜி இ. லா. ரி. 17 சென்னை, 12 சென்னை இந்தத் தீர்மானங்களின் ஆதாரத்தின்பேரில் வாதியின் வழக்கைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். இதன் பேரில் வாதி இந்தக் கோர்ட்டில் ரெவிஷன் மனுக்கொடுத்திருக்கிறார்.

கிரிமினல் புரிஸீஜர்கோடு 25-வது செக்ஷனில் கண்டபடி கொடைக்கானலிலும் வேறிடங்களிலும் வாதி செஷன் ஜட்ஜி முறைமையில் ஜஸ்டிஸ் அவ்பீசாகவிருக்கிறாரென்றும் கொடைக்கானலில் இவர் அரசாங்க பரிபாலன வேலை பார்த்து வந்திருப்பதாகவும் அவ்விடத்தில் 60 தினங்களுக்கு மேல் அவர் தங்கியிருந்ததால் அந்த முனிசிபல் சங்கத்தினர் தொழில் வரி வசூலிக்க பாத்திய முடையவர்களென்றும், கூடலூர் முனிசிபல் சங்கத்தினர் அந்த வரி வசூலித்தது சரியல்லவென்றும் வாதியின் வக்கீல்கள் கக்ஷியாடுகிறார்கள்.

வாதி கொடைக்கானலிலிருந்தபோதிலும் கூடலூர் செஷன் ஜட்ஜியாக வேலை பார்த்து வந்திருப்பதினால் கூடலூர் முனிசிபல் சங்கத்தினரே இந்த வரி வசூலிக்க பாத்தியமுடையவரென பிரதிவாதி வக்கீல் எதிர்வாதஞ் செய்கிறார்.

தீர்ப்பு.

வாதி ஏப்பரல் மாதம் 30 தேதி முதல் ஜூலைமாதம் 1 தேதி வரையில் கொடைக்கானல் முனிசிபல் எல்லைக்குள் செஷன் ஜட்ஜி டிஸ்டிரிக்ட் ஜட்ஜி வேலைபார்த்து வந்ததாக எண்ணப்பட

வேண்டியதா இல்லையா வென்பதுதான் நாமிப்போது பார்க்க வேண்டும். ருஜுவம்சங்களில் எவ்வித ஆக்ஷேபனைகளுமில்லை. வாதி 60 தினங்களுக்குமேல் கொடைக்கானலில் தங்கியிருந்திருக்கிறார். அவருடைய சம்பளத்தை யவ்விடத்திற் பெற்றுக் கொண்டிருக்கிறார். அவ்விடத்தில் 14 அல்லது 15 அரசாங்க பரிபாலன வேலைகளை பார்த்திருக்கிறார். ஜட்ஜி வேலை யாதொன்றும் பார்க்கவில்லை. ஜட்ஜி வேலைதான் பிரதானமானது. அந்த வேலை பார்க்காததால் கொடைக்கானலில் வாதிவேலைபார்த்ததாக மாட்டாதென பிரதிவாதி வக்கீல் கக்ஷியாடுகிறார். கொடைக்கானல் முனிசிபல் எல்லைக்குள் எந்த வேலை செய்திருந்தாலுஞ் சரியே எந்தவேலை செய்யாதிருந்தாலுஞ் சரியே கொடைக்கானல் முனிசிபல் சங்கத்தினர் வாதியிடம் வரி வசூலிக்க பாத்தியமுடையவர்கள். இதனால் வாதியின் அப்பீலை யங்கீகரித்து வாதியின் தாவாப்படி தீர்ப்பு செய்கிறோம்.

1914 M W. N. 171.

பம்பாய் ஹைகோர்ட்டு.

1912 ஞுத்திய 2-வது அப்பீல் நம்பர் 890.

தீர்ப்பு 3—10—13.

ஜட்ஜிகள்	
மிஸ்டர் ஜஸ்டிஸ் பீமன் அவர்கள்.	மல்லிக் சாகிப் அபடல சாகிப் காண்டிக பொட் பிரதி வாதி அபீல் தார்
மிஸ்டர் ஜஸ்டிஸ் மாக்னி யட் அவர்கள்.	V
	மல்லிகார் ஜுன சிவமூர்த்தியார்.

31. [இந்துலா.]

தாயார் செய்த பராதீனத்தைப் பற்றி ஆக்ஷேபிப்பதில்லையென்று பெண் ரிஜிஸ்டராகாத கடிதங் கொடுக்கும் பட்சத்தில் இந்தப் பெண்ணின் வார்சு அந்த பராதீனத்தைப் பற்றி ஆக்ஷேபிக்கக்கூடாதென்பது.

ஒரு விதந்து தன்னுயுள் பரியந்தம் அனுபவிக்கக் கூடிய ஒரு எஸ்டேட்டை பிரதிவாதிகளுக்கு 1891 ஞுந்தில் விற்ட்டு அவளுக்குப் போது தன் இறந்த புருஷனுடைய பென்று சூலை டாவா என்றவன் மட்டில் வார்சாக விருந்தாள்.

மேற்பட்ட 13 தினங்கள் கழித்து இந்தப் பெண் ஒரு கடிதம் கொடுத்திருக்கிறாள். இதில் நான் உனது ஜீவதிசைக்குப் பின் உயிரோடிருந்தால் நீ செய்த பராபதீனத்தை ரத்து செய்வதில்லை அதற்கு நான் சம்மதித்திருக்கிறேன் என்று எழுதப் பட்டிருக்கிறது. இது ரிஜிஸ்டர் செய்யப் படவில்லை. தாயார் இறந்த மறுதினம் பெண்ணிறந் தாள். இந்தப் பெண்ணின் புருஷன் அவளுக்கு வார்சாகையால் அந்த விதந்துவால் செய்யப் பட்ட பராதீனஞ் செல்லாதென்றும் அச்சொத்துப் பிரதிவாதிகளிடமிருந்து கிடைக்க வேண்டுமென்றும் வழக்கிட்டார். பிரதிவாதிகள் மேலே சொன்ன கடிதத்தை ஆஜர் செய்து அனந்தா வார்சு இந்தப் பரா தீனத்துக்கு சம்மதித்து விட்டதால் வாதியின் தாவா செல்லத்தகுந்த தல்லவென்று பிரதி வாதிகள் கக்ஷியாடினார்கள். அந்தக் கடிதம் ரிஜிஸ்டர் செய்யப் படாத தஸ்தாவேஜி யாகையால் அது அங்கிகரிக்கத்தக்கதல்லவெனவாதியின் தாவாப்படியேதீர்ப்பு செய்து விட்டார்கள். இவ்விதஞ் செய்த தீர்ப்பு சரியானதல்லவென்று பிரதி வாதிகள் இந்தக் கோர்ட்டில் 2 வது அப்பீல்செய்திருக்கிறார்கள்.

இந்தக் கடிதம் பெண்ணினுடைய சம்மதியைத் தெரிவிக்கிறதேயன்றி வேறல்ல. இது ரிஜிஸ்டிரேஷனுகட்டு 17 வதுசெக்ஷன் கிளாஸ் D ப்படி இது ரிஜிஸ்டர் செய்யப்பட வேண்டிய தவசியமில்லை. 3 சென்னை லா டைட்ஸ் 1 பிரிவிகவுன்ஸல் தீர்ப்பும், 17 சென்னை லாஜர்னல் 605 இந்தத் தீர்மானங்கள் தாவா கேசுக்கு மெத்த ஒற்றுமையாயிருக்கின்றன. அதனால் கீழ் அப்பீல்கோர்ட்டார் செய்த தீர்மானத்தை ரத்து செய்து வாதியின் வழக்கைச் செலவுடன் தள்ளுபடி செய்கிறோம்.

22 IndianCases 292.

கல்கத்தா ஹைகோர்ட்.

1910 ஞுத்திய 2வது அப்பீல் நம்பர் 3080.

தீர்ப்பு 29 —8—13.

ஜட்ஜிகள்.	
மிஸ்டர் ஜஸ்டிஸ் N R சட்டார்ஜியா அவர்கள்	E-H ஸ்டேவன்ஸ் ஆ. பிரதி வாதிகள். அபீல் தார்கள்
மிஸ்டர் ஜஸ்டிஸ் வாம்ஸூலே அவர்கள்.	V
	ஜங்கி பால் ஹாப் பிரசாத் நாருயன் சிங் ஆ. வாதிகள் எதிர்கக்ஷிக்காரர்கள்

35. [ஹிந்து லா]

வழக்குச் செலவுக் காக விதந்துவால் வாங்கப் பட்ட கடன் அவள் புருஷனுடைய சொத்தை காப்பாற்றுவதற்காக வாங்கப் பட்டிருந்தால் அச்சொத்துக்கள் அக்கடனுக்குக் கட்டுப் படக்கூடிய தென்பதும், ஜாஸ்தி வட்டிக்கு விதந்து கடன் வாங்கி யிருந்தால் அதன் அவசியம் ருஜுப்படுத்தப் படவேண்டு மென்பதும்.

கூடர் சாகே என்ற வரின் விதந்து இறந்த பாச்சோ கோபர் என்பவள் 6ம் பிரதிவாதிக்கு ரூ 2000-க்கு 1901 ௵ நவம்பர் மாதத்தில் ஒரு பெந்தகக்கடன் பத்திரம் எழுதிக் கொடுத்திருந்தாள். அத்தொகை ஜேம்ஸ் வில்ஸன் மார்ட்டின் கிரிகரி இவர்களால் கொண்டு வரப்பட்ட வழக்குகளி லேற்பட்ட செலவுகளுக்காக வாங்கியதாகக் கண்டிருக்கிறது. அந்த பெந்தக பத்திரத்தை வாதி மேடர் பெற்று அச்சொத்துக்களை அனந்தர வார்சு கிரமத்திலடைந்து அனுபவித்தவர்கள் பேரில் வழக்கிட்டார். பெந்தக பத்திரத்திற் கண்ட கடன்கள் விதந்து வின் எஸ்டேட் மானேஜர்கள் அவர்களின் சம்பளத்துக் காக கொண்டு வந்த வழக்கின் கடன்களென்றும் அதனால் அக்கடன்கள் விதந்து வின்சொந்தக் கடன்களென்றும் அது விஷயமாக வேற்பட்ட வழக்குகளின் செலவும் அவருடைய சொந்தக்கடன்க ளென்றும் எஸ்டேட்டின் வரும் படிகளை விதந்து அடைந்து வந்திருப்பதால் அந்த வரும் படிகளினின்றும் எஸ்டேட் மானேஜர் களின் சம்பளங் கொடுபட்டிருக்க வேண்டியதேயன்றி அத்தொகைகளை சொந்த வுபயோகப் படுத்திவிட்டு அக்கடனுக்கு எஸ்டேட்டின் சொத்தைப் பொறுப்பாக்கக் கூடாதென்றும், தாவாகடன்களுக்கு பெந்தகச் சொத்து எந்த விதத்திலுங் கட்டுப் படத் தக்கதில்லை யென்றும், ஜாஸ்தி வட்டி கிடைக்கத் தக்கதில்லை என்றும் பிரதி வாதிகள் கக்ஷியாடினார்கள். கீழ் கோர்ட்டார்கள் வாதிகளுக்கு அனுகூலமாகத் தீர்ப்பு செய்து விட்டதின் பேரில் பிரதிவாதிகள் இந்தக் கோர்ட்டில் அப்பீல் செய்திருக் கிறார்கள்.

மிஸ்டர் வில்ஸன் இந்த விதந்து பேரில் பெற்றிருந்த டிக்கிரிகளில் ஒன்று நிறைவேற்றப்பட்டு இவள் புருஷனுடைய சொத்துக்களிற் சில ஏலம் போடப்பட்டன. அந்த ஏலம் ரத்து செய்யப்படவேண்டுமென மனுக் கொடுத்திருந்தான். மற்றொரு டிக்கிரி நிறைவேறு நடவடிக் கையிலிருந்து கொண்டிருந்தது

மற்றொரு மார்டின் கிரிகரி தன்னுடைய சகோதரனுக்குக் கிடைக்கவேண்டிய சம்பளம் முதலியன வற்றிற்காக ரூ 15000த்துக்கு வழக்கிட்டிருந்தார். இந்த விதந்து தன் புருஷனுடைய நிலத்தில் தன்னுடைய ஆயுள் பரியந்தம் அனுபவிக்கக் கூடிய பாத்தியதையைக் காப்பாற்றவேண்டியதி னிமித்தம் நல்ல எண்ணத்துடன் எதிர்கக்ஷியாடவேண்டிய அவசியங்களிருந்தன. தாவா பெந்தகத்தொகை ரூ 2000த்தில் ரூ 1200 கலகத்தாவுக்குக் கொண்டுபோய் விதந்து வின் முக்தியார் ஏஜெண்டிடம் கொடுபட்டதாகவும் பாக்கித் தொகை ரூ 800-ம் சில கேஸுக்காக செலவழிக்கப் பட்டதாகவும் வாதி திறப்பில் ருஜுச் சொல்லுகிறார்கள். இந்த ரூ 1200ம் எந்த இனத்துக் காக செலவழிக்கப் பட்டதென்பதற்கு ருஜுவில்லாத தினாலே இது அவசியமான செலவென்று சொல்ல இடமில்லாதிருக்கிறது. விதந்துவா லேற்பட்ட கடனுக்கு அவள் பெண் வசமுள்ள அவள் புருஷனுடைய சொத்தின் ஜவாப் தாரியின் பேரில் தொகை கிடைக்க வேண்டுமென வழக்கிடும் வாதிகள் தாவா தொகை ரூ 2000வாங்கவேண்டிய அவசியமிருந்த தென்பதை ருசுப்பிக்கவேண்டும் அல்லது அந்தத் தொகை கடன் வாங்கவேண்டி அவசியங்களிருந்தனவென்பதைத் தீரவிசாரித்து திருப்திகரமாகத் தெரிந்து கொண்டு அதன் பின் கொடுக்கவேண்டும். இது விஷயங்களைப்பற்றித் திருப்திகரமான ருஜுவில்லை.

ஜாஸ்தி வட்டிக்கு கடன் வாங்க வேண்டிய அவசியங்களிருந்தனவென்று ஸ்பஷ்டமாக ருஜுப்பிக்கப்படவேண்டு மென்று இ. லா ரி 18 கல்கத்தா 311 பிரிவிகவுன்ஸல் தீர்ப்பு ஏற்பட்டிருக்கிறது. தாவா கடன் 100க்கு 24 வீதம் வட்டிக்கு வாங்க வேண்டியதின் அவசியங்களின்னவென்று ருஜுப்பிக்கப்படவில்லை.

இதனால் கீழ் அப்பீல் கோர்ட்டாருடை டிக்கிரியை ரத்து செய்திருக்கிறோம். மேற்கண்ட விஷயங்களைப் பற்றிய ருஜுக்களை விளங்கி முடிவு செய்ய நம்பர் கட்டை யனுப்பியிருக்கிறோம்.

சென்னை ஹைகோர்ட்டு.

1912 வருஷத்திய 2வது அப்பீல் நம்பர் 1085

தீர்ப்பு 27—11—13

ஜட்ஜிகள்.	
ஜஸ்டிஸ் சங்கரநாயரவர்கள்	மகாகனம் பொருந்திய இந்தியா சிகாடரியவர்களின் பிரதிநிதி கோயம்புத்தூர் கலெக்டர் அப்பீல்தார்
	V
ஜஸ்டிஸ் ஓல்டுபீல் டவர்கள்	P. M. கிருஷ்ணமாசாரியார் எதிர் கக்ஷிக்காரர் (வாதி)

1. [ரிவினியூ]

ஒரு நிலம் அயன் அல்லது தீர்வைப்பட்டதரிசு என்று மாற்ற கலெக்டர் முன்னதாக சாங்ஷன் செய்யாவிட்டாலும் அவர் சப் டிவிஷன் ஸ்டேட்மெண்டு அனுப்பும்படி சாங்ஷன் செய்து அந்த ஆதாரத்தின்பேரில் அந்த நிலம் டிப்டி கலெக்டரால் தர்க்காஸ்து அடமானஞ் செய்யப்படலாமென்பது.

கோயம்புத்தூர் டிஸ்டிரிக்ட் முனிசிப் கோர்ட்டு தீர்ப்பின் பேரில் கோயம்புத்தூர் டிஸ்டிரிக்ட் கோர்ட்டில் அப்பீல் அதன் பேரில் இந்த 2-வது அப்பீல்.

தாவா நிலம் ஒரு கிராமத்தின் சிலபாகமாகவிருந்து சர்க்கார் தீர்வையும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பிறகு காட்டிலாகாவி லெடுத்துக் கொண்டார்கள். பின்பு இதை யதனின்றும் நீக்கியும் விட்டார்கள். இந்த நிலம் தர்க்காஸ்தின்பேரில் அடமானஞ் செய் யப்பட வேண்டியதை யுத்தேசித்து கவர்ன்மெண்டாரவர்க ளுடைய உத்திரவின்படி சர்வேயுஞ் செய்யப்பட்டது. கலெக்டர் இந்த நிலங்களை நேரிற் பார்வையிட்டும், குடிகளைக்கண்டு பேசி யும், தர்க்காஸ்து விதிகளின்படி அடமானஞ் செய்யும்படி டிப்டி கலெக்டருக்கு உத்திரவு செய்துவிட்டார். இந்த வுத்திரவு விப ரம் டிப்டி கலெக்டரால் டிப்டி தாசில்தாருக்கு அறிவிக்கப்பட் டது. இதன்பேரில் இவர் தர்க்காஸ்து விதிகளின்படி இந்நிலத் தை வாதிக்கு அடமானஞ் செய்துவிட்டார். இந்த அடமானம் அப்பீலில் டிப்டி கலெக்டரால் உறுதிசெய்யப்பட்டிருக்கிறது. வாதி பெயரால் பட்டாவும் ஏற்பட்டு சர்க்கார் கிஸ்தி வசூலிக்கப் பட்டதுடன் அந்த நிலங்களிலிருந்த மரங்களின் கிரயமும் வாதி

யிடம் வசூலிக்கப்பட்டது. ரெவனியு போர்டு ஸ்டாண்டிங்கார்டர் நம்பர் 15 செக்ஷன் 1-ன்படி அயன் அல்லது தீர்வைப்பட்டதரிசு என்று மாற்ற கலெக்டரால் யாதொரு வுத்திரவுஞ் செய்யப்படாத காரணத்தினாலே இந்த அடமானஞ் செல்லத்தகுந்த தல்லவென்று கலெக்டர் அதை ரத்து செய்துவிட்டார். இதன்பேரில் வாதி தனக்கு அந்த நிலத்திலுள்ள பாத்தியதையை ஸ்தாபிக்கவும் கலெக்டர் செய்த வுத்திரவை ரத்து செய்யவும் வழக்கிட்டார். இந்த அடமானஞ் செல்லுபடியற்றதென்று டிஸ்டிரிகட் முனிசிப் வாதியின் வழக்கைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். இந்தத் தீர் மானம் டிஸ்டிரிகட் ஜட்ஜியவர்களால் ரத்தாகி வாதியின் தாவாப் படியே தீர்மானஞ் செய்யப்பட்டது. அதன்பேரில் இந்தக் கோர் ட்டில் கவர்ண்மெண்டாரவர்களால் இரண்டாவது அப்பீல் செய் யப்பட்டிருக்கிறது.

ஸ்டாண்டிங் கார்டர் 15 ஒருவித கட்டளையானதென்றும், தாவா நிலம் தீர்வைப்பட்டதல்லவென்று கீழ்கோர்ட்டார்கள் கண்டுபிடித்திருக்கிறார்களென்றும் இந்த நிலத்தை அயனுக்கு மாற்றும்படி கலெக்டர் உத்திரவு செய்த பிறகு தாவா நிலம் அட மானஞ் செய்யப்படலாமேயன்றி அதற்கு முந்தி செய்தது செல் லுபடியற்றதென்றும், அவ்வித உத்திரவு யாதொன்றுஞ் செய்யப் படவில்லையென்றும், அது கிரம விரோதமானதாகமட்டி லிருக்க வில்லையென்றும், சட்டவிரோதமானதாகவு மிருப்பதாகவும், அதைத் தவிர்க்க முடியாதென்றும், இது விஷயமாக கலெக்டர் செய்த வுத்திரவு முடிவானதென்றும், சிவில் கோர்ட்டார் அந்த வுத்திரவுக்கு விரோதமாக யாதொன்றுஞ் செய்யக்கூடாதென் றும், கவர்ண்மெண்டு வக்கீல் கக்ஷியாடுகிறார்.

தாவா நிலம் ஏற்கனவே தீர்வைப்பட்ட தரிசு நிலமாக இரு ந்து வந்ததாகவும், அதை காட்டிலாகாவில் சேர்த்ததினால் அதன் சுபாவத்தன்மை மாறமாட்டாதென்றும், அதனால் ஸ்டாண்டிங் கார்டர் 15 செக்ஷன் 1 இந்தக் கேசுக்கு ஒற்றுமையானதல்ல வென்றும், இது தீர்வைப்படாத தரிசென்று வைத்துக்கொண்டா லும், இது விஷயமாகவேற்பட்ட அனேக நடவடிக்கைகளில் இந்த நிலத்தை அயனாகமாற்ற கலெக்டர் சம்மதித்து விட்டா ரென்றும், ஸ்டாண்டிங் கார்டரின் விதி யனுஷ்டிக்கப்பட்டிருக்கிற தென்றும், கவர்ண்மெண்டாரவர்கள் செய்யும் ஆக்ஷேபனையெல்

லாம் சாதாரண விதியென்றும், தாவா அடமானம் அப்பீலில் உறுதி செய்யப்பட்டிருப்பதினாலே கலெக்டர் செய்த வுத்திரவு சரி அல்லது பிசகென்பதைப்பற்றி சிவில் கோர்ட்டார் விசாரிக்க அதிகாரமுண்டென்றும், நிலபாத்தியம் வாதிக்கு கிடைத்துவிட்டதால் அதை ரத்துசெய்ய கலெக்டருக்கு அதிகாரமில்லையென்றும், தாவாநிலத்தை அயனாக மாற்ற கலெக்டர் உத்திரவு செய்யாதிருப்பது கிரம விரோதமானதேயன்றி வேறல்லவென்றும், ஏற்பட்ட அடமானத்தை ரத்துசெய்யக்கூடாதென்றும் வாதியின் வக்கீல் எதிர்கக்ஷி சொன்னார்.

தீர்ப்பு.

தாவா நிலம் தீர்வைப்படாத தரிசுநிலம் இதை தர்க்காஸ்து ரூல்களின்படி அடமானஞ் செய்யும்படிக்கும் இந்த நில முழுவதும் அந்த கிராமத்தாருக்கே அடமானஞ் செய்வது மெத்த நன்மையென்றும், கலெக்டர் டிப்டி கலெக்டருக்கு உத்திரவு செய்திருக்கிறார்கள். தீர்வைப்பட்ட தரிசு நிலங்களை தர்க்காஸ்து விதிகளின்படி அடமானஞ் செய்ய அதிகாரமுள்ள டிப்டி தாசில்தாருக்கு டிப்டி கலெக்டர் மேற்சொன்ன கலெக்டரின் உத்திரவைப் பற்றி யறிவித்தார். அந்த வுத்திரவின்படி தாவா நிலத்தை அவர் இந்த வாதிக்கு அடமானஞ் செய்திருக்கிறார். டிப்டி கலெக்டர் அதை யுறுதி செய்து வாதிக்கு பட்டாகொடுத்திருக்கிறார். இவ்விதம் டிப்டி கலெக்டரால் அடமானம் உறுதி செய்யப்பட்ட சில மாதங்கழித்து இது விபரம் கலெக்டருக்குத் தெரிந்தவுடன் இவ்வித அடமானஞ் செய்ய டிப்டி தாசில்தாருக்கு அதிகாரமில்லையென அவர் செய்த அடமானத்தை ரத்து செய்துவிட்டார். தாவா நிலம் தீர்வைப்பட்டது அல்லது தீர்வைப்படாததாகவிருந்தாலும், இது தர்க்காஸ்தின்பேரில் அடமானஞ் செய்யப்படவேண்டுமென்று கலெக்டர் தனது அபிப்பிராயத்தை வெளியிட்டபடியால் தீர்வைப்படாத நிலத்தை அயனாக மாற்றுவதற்கு கிரமமான உத்திரவு செய்யாவிட்டாலும், அந்த நிலம் தீர்வைப்பட்ட நிலமென்றே நினைத்து அது அடமானஞ் செய்யப்படவேண்டியதாக கலெக்டர் உத்திரவு செய்ததாகவும் அந்த வுத்திரவின்படி அவருடையகீழ்ப்பட்ட சிப்பந்திகளால் வாதிக்கு அடமானஞ் செய்யப்பட்டதாகவும் டிஸ்டிரிக்ட் ஜட்ஜி சொல்லியிருக்கிறார்கள். கலெக்டர் கிரமமான வுத்திரவு யாதொன்றுஞ் செய்யாவிட்டாலும் தாவா நிலம்

அயன் நிலமாகவே எண்ணப்படவேண்டியதாக உத்திரவு செய்திருக்கிறார். ரெவினியூ விதிகளின்படி கலெக்டருக்கு அனுப்பப்பட்டிருக்கிற b 6 அடையாள ஆதாரவில் இந்நிலம் சப்டிவிஷன் செய்யப்பட்டதும், ஒவ்வொரு சப் டிவிஷனுடைய விஸ்தீரணமும் அதன் தீர்வையுங் கண்டிருக்கிறது. சாகுபடி லாயக்குதரிசென்றுஎழுதப்பட்டிருந்ததற்கு அக்கம்பக்கம்நிலங்களுக்குஏற்பட்டிருப்பதுபோல் தீர்வை யேற்படுத்தியிருப்பதாகவுங் கண்டிருக்கிறது. இந்தரிபோர்ட்டின் பேரில் கலெக்டர் அடியிற்கண்டபடி உத்திரவுசெய்திருக்கிறார்.

“சர்வே விஸ்தீரணமும் தீர்வையும் அங்கீகரிக்கப்பட்டது; அந்தப்படி சாங்கிஷன் செய்யப்பட்டது”.

கலெக்டர் அயனாக மாற்ற முன்னதாக எவ்வித வுத்திரவுஞ் செய்யாதிருந்தபோதிலும், மேலேசொன்ன சாங்கிஷன்படிக்காவது தாவா நிலம் தீர்வைப்பட்டதாக எண்ணப்படவேண்டும். அந்த தேதி முதற்கொண்டு தாவா நிலம் அயன் நிலமாகிறது. அதன் பிறகு இது அடமானஞ் செய்யப்படத்தகுதியாகிவிட்டது. இதனால் அயனாக மாற்றப்படவில்லையென்ற கக்ஷி பிரயோஜனமற்றதாகிவிட்டது.

ரெவினியூ G. O நம்பர் 687 படி கலெக்டர் தனக்கு கிடைத்திருக்கும் அதிகாரத்தின்படி தாவா அடமானத்தை ரத்து செய்திருப்பதாகச் சொல்வது இரண்டாவது கக்ஷி. ஏற்கனவே யொருவருக்கு கொடுபட்டிருக்கும் பாத்தியதையில் பிரவேசிக்க இந்த வுத்திரவுக்கு பலமில்லை. இந்த வுத்திரவுக்கு முந்தியே தாவா அடமான மேற்பட்டுவிட்டது. இதுவுமன்றி தீர்வைப்படாத நிலங்களுக்கு ஏற்பட்டிருக்கும்விதிகள் அனுஷ்டிக்கப்படவில்லையென்றும், அயனாக மாற்ற கலெக்டருடைய அனுமதி முன்னாடி பெற்றிருக்கவேண்டுமென்றும், அவ்விதஞ் செய்யாததால் ஏற்பட்ட பட்டாவை ரத்து செய்திருப்பதாக கலெக்டர் உத்திரவு செய்திருக்கிறார். கலெக்டர் அனுமதி கொடுத்திருக்கிறார் என்ற விபரத்தை யேற்கனவே சொல்லிவிட்டோம். இந்த ஆதாரத்தின் பேரில் வாதிக்கு ஏற்பட்டுவிட்ட பாத்தியதையை மாற்றுவதற்கு நியாயமில்லை.

கீழ் அப்பீல் கோர்ட்டாருடைய டிக்கிரியை உறுதி செய்து இந்த இரண்டாவது அப்பீலை செலவுடன் தள்ளுபடி செய்கி

றேம். செலவு தொகை கொடுபட 3 மாத கெடு கொடுபட்டிருக்கிறது.

I. L. W. 225.

கல்கத்தா ஹைகோர்ட்.

1913 ௵த்திய சிவில் நூல் நம்பர் 932

தீர்ப்பு 28—8—13.

ஜட்ஜிகள் ஜஸ்டிஸ் ஸர் அஷுடோஷ் முகர்ஜி Kt மிஸ்டர் ஜஸ்டிஸ் பீச்கிராப்ட்	பியரிலால் தாஸ் டிக்கிரிதாரன். மனுதார் V பிரியலால் டான் மற்றொரு டிக்கிரிதாரன் எதிர்கக்ஷிக்காரன்

27. [சிவில் புரீஜர் கோடு.]

விவாதப் படும் டிக்கிரி மோசடியானதா இல்லையா எவன்பதைப் பற்றி சம்மரியாக கோர்ட்டார் விசாரிக்கலா மேன்பதும் கக்ஷிக்காரர்கள் அல்லது அவர்களின் வக்கீல்கள் ஆஜரில்லாமல் ஜட்ஜி சாக்ஷி விசாரணைகள் செய்யக் கூடாதேன்பதும்.

மனுதார் பியரிலால் தாஸ் என்பவர் ஹரிதாஸ் நந்திவு நாலு பெயர்கள் பேரில் 1912 ௵ செப்டம்பர் மாதத்தில் டிக்கிரி பெற்று அதே வருடம் செப்டம்பர் மாதத்தில் நிறை வேற்றினர். எதிர்கக்ஷிக்காரர் பியரிலால் டான் அதே பிரதிவாதிகள் பேரில் 1911 ௵ ஜூலைமாதத்தில் டிக்கிரி பெற்று அதே மாதத்தில் அந்த டிக்கிரியை நிறைவேற்றி டிக்கிரி கடன் காரர்களின் இரண்டு சொத்துக்களை யேல விற்று முதல் செய்து அவர்களின் மற்ற சொத்துக்களை யேலவிற்று முதல் செய்ய மனுக்கொடுத்திருந்தார். பியரிலால் டான் ஷை பிரதிவாதிகள் பேரில் நிறைவேற்றியிருந்த மனுநடவடிக்கைகளில் பியரிலால் தாஸ் தனக்கு வீதாசாரத் தொகை கிடைக்க வேண்டு மென 1912௵ செப்டம்பர் மாதம் 11௳ மனுக் கொடுத்தார். இச்சொத்து ஏலவிற்று முதல் செய்ய செப்டம்பர் மாதம் 13௳ கெடு குறிக்கப்பட்டு பிறகு அந்த ஏலம் வேறு தேதிக்கு ஒத்திவைக்கப் பட்டது. இதற்கு சில காலங்கிரமித்து பியரிலால் தாஸ் கொடுத்த நிறைவேறு மனுநடவடிக்கையில் பியரிடான் தனக்கு வீதாசாரத் தொகைகிடைக்கவேண்டு

மென மனுக் கொடுத்தார். இவ்விதம் நிறைவேறு நடவடிக்கைகளிலும் ஒருவருக் கொருவர் வீதாசாரத் தொகை கிடைக்க வேண்டுமென மனுக் கொடுத்திருந்தார்கள். பியரியலால் தாஸ் பெற்றிருக்கும் டிக்கிரி மோசடியான தென்று பியரிடான் 1913௵ பிப்பரவரி மாதம் 13௳ மனுக்கொடுத்தார். இது விஷயமாக சப் ஜட்ஜி விசாரித்து பியரிலால் தாஸ் பெற்ற டிக்கிரி மோசடியானதென்று 1913௵ மேமாதம் 24௳ உத்திரவு செய்து விட்டார்கள். இந்த உத்திரவு ரத்து செய்யப் பட வேண்டுமென்று அடியிற்கண்ட இரண்டு ஆதாரங்களின் பெரில் பியரிலால் தாஸ் அப்பீல் செய்திருக்கிறார். அவை யாவன.

(1) சப்ஜட்ஜி இந்த விஷயத்தைப் பற்றி சம்மரியாக விசாரித்து முடிவு செய்தது சட்டவிரோதம்.

(2) அவ்வித வுத்திரவு செய்ய அவர்களுக்கு அதிகாரமிருந்த போதிலும் சட்டப்படி சாக்ஷி விசாரணை செய்யாததினலே அது விசேஷ தவறுதலான காரியம்.

முதற்கக்ஷி பிரயோஜன மற்றது. இவ்விதம் சம்மரியாக விசாரித்து வுத்திரவு செய்ய சப்ஜட்ஜிக்கு அதிகார முண்டு (16 இந்தியன் கேஸ் 795 தீர்மானத்தை பார்க்க). இரண்டாவது சொல்லுங்கக்ஷி யேற்றுக் கொள்ளத் தக்கது. சப்ஜட்ஜி இந்த மனு விஷயமாக விசாரித்து உபயக்கக்ஷி வக்கீல் களின் விவாதங்களை இரண்டுமணி நேரம் வரையிற் கேட்டு விட்டு 1913௵ மேமாதம் 24௳ முடிவு சொல்லுவதாக கெடு போட்டிருந்தார். வேறொரு கேஸ் சம்பந்தமாக டிக்கிரிகடன் காரன் ஹரிதாஸ் நந்தி கோர்ட்டில் ஆஜராயிருந்தான். அவனை சப் ஜட்ஜி விசாரித்தார். இந்த விசாரணை உபயத் திறப்பு வக்கீல்கள் ஆஜரில்லாத காலத்தில் நடந்தது. பியாரி டானுக்குச் சேரவேண்டிய தொகையை குறைப்பதற்காக இந்த ஹரிதாஸ் நந்தி பியரிதாஸை தூண்டி விட்டதாக சப்ஜட்ஜிக்கு இவர் பேரில் ஒரு வித தப்பான எண்ண முண்டாய் விட்டது. இந்த விசாரணை கக்ஷிக்காரர்கள் அல்லது அவர்களின் வக்கீல்கள் முன்னிலையில் நடந்திருக்க வேண்டிய தவசியம். அந்த விதம் நடந்திருந்தால் அந்த சாக்ஷியை குறுக்கு விசாரணை செய்யவும் அல்லது அவன் சொன்னதை மறுத்துச் சொல்லவுமிட மிருக்கும்; சாக்ஷிசட்டம் 165 வது செக்ஷன்படி

இவ்வித விசாரணை செய்ய கோர்ட்டாருக்கு அதிகார மிருக்கிறதென்றுஎதிர் கக்ஷிவக்கீல் எடுத்துச்சொல்லுகிறூர். அது எவ்விதத்திலும் ஏற்றுக் கொள்ளத் தக்கதல்ல. இந்தபியரிலால் தாஸ் 1912௵ செப்டெம்பர் மாதத்தில் வீதாசார மனு கொடுத்த காலத்தில் பியரிடான் இவ்வித ஆக்ஷேபணை செய்யவில்லை. பியரிதாஸ் கொடுத்த நிறை வேறு மனுநடவடிக்கையில் இந்த பியரிடான் வீதாசார மனுக்கொடுத்தார். இந்த பியரிதாஸுடைய டிக்கிரி நியாய மானதும், செல்லத் தகுந்தது மாக இருந்ததினுல் மட்டில் இவர் வீதாசாரத்துக்கு மனுக் கொடுத்திருக்கிறூர். இவருடைய மோசம் தனக்கு 1913௵ பிப்பரவரிமாதந்தான் தெரியவந்ததாகச் சொல்லுகிறூர். தாமதத்துக்கு காரணஞ் சொல்லவில்லை. இவ்விஷயங்களை பிரமாண பத்திரிகைகளை பார்வையிட்டு சப்ஜட்ஜி முடிவு செய்தது சரியல்ல. ஆகையால் சப்ஜட்ஜி செய்த வுத்திரவை ரத்து செய்திருக்கிறோம். உபயகக்ஷிக் காரர்களின் நிறைவேறு மனுக்களையும் பயிலில் வைத்துக்கொண்டு வீதாசார சம்பந்தமான விவாதங்களை சரிவர விசாரித்து முடிவு செய்யும்படி உத்திரவு செய்கிறோம்.

22 Indian Cases 407.

கல்கத்தா ஹைகோர்ட்.

1909 வருஷத்திய அப்பீல் 518

தீர்ப்பு 15—1—14.

ஜட்ஜிகள் ஜஸ்டிஸ் ஸர் ஹெர்பர்ட் கார்ன்டப் Kt. மிஸ்டர் ஜஸ்டிஸ் ரிச்சேர்ட்ஸன்	அயாடனெஸ்ஸா பீபீ வாதி அப்பீல்தார் V கல்பர் காலிபா ஆ பிரதிவாதிகள் எதிர் கக்ஷிக்காரர்

28. [சீவில் புரிஸீஜர் கோடு]

தர்மசோத்தை ஆக்கிரமித்து அனுபவிப்பவன் பேரில் தர்மகர்த்தா பாத்தியமுள்ளவர் வழக்கிடுவதற்கு சி. பு. கோடு 92 - வது செக்ஷன்படி அனுமதி பெற்று வழக்கிட வேண்டிய தவசியமில்லை என்பது.

161286

வாதி தன்னுடைய இறந்த புருஷன் எழுதிக்கொடுத்திருக்கும் டுவில் யாத்துமாப்படி மதசம்பந்தமும் தர்ம சம்பந்தமுமான மடத்துச் சொத்து தனக்கு பாத்தியமான தென்றும் பிரதிவாதிகளுக்கு அச்சொத்தில் எவ்வித பாத்தியமும் அனுபோகமு மிருந்த தில்லை யென்றும், அவர்கள் ஆக்கிரமித்து தர்வா தர்மசொத்துக்களை கைப்பற்றி யிருப்பதாகவும் அவர்கள் அச்சொத்துக்களை யவர்கள் தங்கள் பெயரால் லாண்டு ரிஜிஸ்டிரேஷனுக்ட்டுப்படி பதிவு செய்துகொண்டு தர்ம சொத்துக்களை பரிபாலித்து வருவதாகவும் அச்சொத்துக்கள் தனக்கு கிடைக்க வேண்டு மென்றும், வழக்கிட்டாள். தர்ம பரிபாலனத்தில் பிசகுகள் நடப்பதாகச் சொல்ல வில்லை. தர்ம பரிபாலனஞ் செய்ய விதிகளேற்படுத்த வேண்டுமென்று கேட்கவு மில்லை.

பிரதிவாதி தர்மகர்த்தா ஸ்தானத்தி லிருப்பதாலும் அவரை நீக்க வேண்டுமென்று பிராதிற் கேட்பதாலும் தர்ம பரிபாலன விஷயமாக முறை துறைகள் கோர்ட்டார் ஏற்படுத்த வேண்டியதாக விருக்கு மென்ற காரணத்தை முன்னிட்டு இந்த வழக்கு சி. பு. கோடு 92 - வது செக்ஷன்படி கொண்டு வரப்பட வேண்டியதென்று இ. லா. ரி 26 சென்னை 450, 24 கல்கத்தா 418 இந்தத் தீர்மானங்களை யனுசரித்து சப்ஜட்ஜி வாதியின் வழக்கைத் தள்ளுபடி செய்து விட்டார்கள். அதன் பேரில் இந்த அப்பீல் செய்யப்பட் டிருக்கிறது.

தர்ம சொத்தை ஆக்கிரமித்து அனுபவிக்கு மொருவனிடமிருந்து அச்சொத்து கிடைக்க வேண்டுமென இந்த வழக்கு கொண்டுவரப்பட் டிருக்கிறது. இவ்விதம் ஆக்கிரமித்து அனுபவிப்பவன் தர்மகர்த்தாவாக இருக்கிறுன் என்று சொல்வது பிசகு. அவன் கொள்ளையடிக்கிறவனுகவு மிருக்கலாம், அவர்களின் நன்மையின் பொருட்டு இந்த 92 - வது செக்ஷன் ஏற்பட வில்லை. சப் ஜட்ஜி முதலிற் சொன்ன தீர்மானத்தின் கருத்துஇன்னதென்பதை இந்த கோர்ட்டு இ. லா. ரி 33 கல்கத்தா 789 பக்கங்கள் 807-808 இவைகளில் விளங்கிக் காட்டி யிருக்கிறது. 2 வது சொன்ன தீர்மானம் இந்த கோர்ட்டு 2 கல்கத்தா லா. ஜர்ணல் 431 பக்கம் 439 தீர்மானத்தினுல் மாற்றப்பட் டிருக்கிறது. புதியசீவில் புரிஸீஜர் கோடின்படி ஏற்பட்ட வழக்கில் மேலே சொன்ன 33 கல்கத்தா தீர்மானத்தை யனுசரித்து தீர்மானித்திருக்கிறூர்கள்.

ZL
Z2N, 83 m N13
N13'1

(இ. லாரி 35 அலகபாத் 559 தீர்மானத்தை பார்க்க.) இதனாலிந்த அப்பீலை யங்கீகரித்து சப் ஜட்ஜி செய்த தீர்மானத்தை ரத்து செய்திருக்கிறோம். சப் ஜட்ஜி சாராம்சங்களில் பிரவேசித்து விசாரித்து கேசை முடிவு செய்யும்படி மறு விசாரணைக்கு அனுப்பியிருக்கிறோம்.

22 Indian Cases 677.

சென்னை ஹைகோர்ட்டு.

1911 வருஷத்திய 2-வது அப்பீல் நம்பர் 1521

தீர்ப்பு—19—11—13.

ஜட்ஜிகள்	ஞானியார் ராவுத்தர் ஆ அப்பீல்தார் (1-3 பிரதிவாதிகள்)
ஜஸ்டிஸ் சங்கரநாயரவர்கள்	V
ஜஸ்டிஸ் பேக்வெல் அவர்கள்	வி. கிருஷ்ணய்யர் ஆ எதிர்கக்ஷிகாரர்கள் (வாதி 2-4 பிரதிவாதிகள்)

29. [சிவில் புரிஸீஜர் கோடு]

கோர்ட்டு ஏலத்தில் ஒரு சோத்தை யேலமெடுத்தவன் அச்சோத்து ஸ்வாதீனமாக வேண்டுமென வழக்கிட்டு அந்த ஏலம் மோசவகையாக ஏற்பட்டதென்று கக்ஷியாடினான். அவனதை ருஜுப்பிக்க வேண்டிய அவசியமென்பதும், குறைவான தோகைக்கு ஒரு சோத்து ஏலம் போடப்பட்டால் அது செல்லுபடியற்றதாக மாட்டாதென்பதும்.

3-ம் பிரதிவாதி பேரில் 4-ம் பிரதிவாதி 1903-ம் வருஷத்திய ஸ்மால்காஸ் 599 நம்பரில் ஒரு டிக்கிரி பெற்றிருந்தார். அந்த டிக்கிரியை நிறைவேற்றி 3-ம் பிரதிவாதியின் தாவாவிற் கண்ட சொத்தை ஏலவிற்று முதல் செய்து அவரே ரூபா220-க்கு ஏலத்தி லெடுத்து விட்டார். பிறகு அவர் அச்சொத்தை வாதிக்கு விற்று விட்டார். வாதி அச்சொத்து தனக்கு வசமாக வேண்டு மென்று பெரிய குளம் டிஸ்டிரிக்ட் முனிசீப் கோர்ட்டில் வழக்கிட்டார். டிக்கிரி பெற்றவரும் ஏலதாருமாகிய 4-ம் பிரதிவாதிக்கு வாதி நெருங்கிய சொந்தக்கார ரென்றும், வாதி மோச வகையா தாவா சொத்துக்களை ஏலத்துக்குக் கொண்டு வந்து குறைந் தொகைக்கு ஏலமெடுத்து விட்டதாகவும், அதனால் வாதியின் வ

க்குத் தள்ளுபடி செய்யப்பட வேண்டு மென்றும், பிரதிவாதிகள் கக்ஷியாடினார்கள். வாதியின் மோச நடவடிக்கைகளினாலேயே தாவா சொத்துக்கள் ஏலம் போடப்பட்டிருப்பதினாலே கோர்ட்டு ஏல பாத்தியதையின் பேரில் வாதிவழக்கிட்டது செல்லாதென்று டிஸ்டிரிக்ட் முனிசீப் வாதியின் வழக்கைத் தள்ளுபடி செய்து விட்டார்கள். இது விஷயமாக அப்பீல் செய்யப்பட்டதில் பிரதிவாதிகள் டிக்கிரி கடன்காரன் மூலமாக தங்கள் பாத்தியங்களைக் கொண்டாடுவதால் பழைய சிவில் புரிஸீஜர் கோடு 244 வது செக்ஷன்படி தங்களுக்கு கிடைக்கக் கூடிய பரிகாரங்களைத் தேடிக்கொள்ளாமல் இப்போது எதிர்கக்ஷியாடதடைப் படுத்தப் பட்டிருக்கிறார்களென்றும் டிஸ்டிரிக்ட் ஜட்ஜி முனிசீப்பின் தீர்ப்பை ரத்து செய்து வாதியின் வழக்கின்படியே தீர்ப்பு செய்து விட்டார்கள். அதனால் 1-3 பிரதிவாதிகள் இந்தக் கோர்ட்டில் 2 வது அப்பீல் செய்திருக்கிறார்கள்.

அப்பீல் தாருடைய கக்ஷிக்கு 244 வது செக்ஷன் தடையாக மாட்டாதென்றும், ஏலசர்டிபிகேட் கொடுக்கும்படி வாதி மோசவகையாகத் தூண்டுதல் செய்திருப்பதாகவும், இந்த மோசம் கோர்ட்டாருக்கு தெரிந்திருக்கும் பட்சத்தில் கோர்ட்டார் ஏலசர்டிபிகேட் கொடுத்திருக்க மாட்டார்களென்றும், அப்பீல் தாரர்கள் தங்கள் கக்ஷிகளை நிறைவேறுநடவடிக்கைகளிற்சொல்லவேண்டிய தவசிய மில்லையென்றும், மோசநடவடிக்கைகளை கக்ஷிவரும் போது சொல்லிக் கொள்ளலா மென்றும் அப்பீல் தார்களின் வக்கீல் கக்ஷியாடுகிறார்.

தீர்ப்பு

பிரதிவாதிகளை யப்புறப்படுத்தி வசமாகவேண்டு மென்று இந்த வழக்கு கொண்டுவரப்பட்டிருக்கிறது. தாவா நிலம் தனக்கு பாத்தியமுள்ளதென்பதை வாதி ருஜுப்பிக்கடமைப் பட்டிருக்கிறார். தாவாசொத்தில் வாதிக்கு கிடைத்த பாத்தியம் செல்லுபடியற்றதென்பதைப் பற்றியும், மோசவகையாக ஏலம் போடப்பட்டு மோசடியாக ஏலசர்டிகேட் வாங்கப்பட்டதென்பதைப் பற்றியும் பிரதிவாதிகள் ருஜுப்பிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். பிரதிவாதிகள் சொல்லும் ஆக்ஷேபனைகள் நிறைவேறு நடவடிக்கைகளில் சொல்லியிருக்கப் படவேண்டும். கோர்ட்டாரால் செய்யப்பட்ட வுத்திரவுக்கு விரோதமாக இப்போது கக்ஷி

சொல்வது சரியல்லவென்று எதிர்கக்ஷிக்காரர்களின் வக்கீல் சொல்லுகிறார்; ஏலம் கிரமத்துக்கு விரோதமானதாக விருந்தால், அதைப் பற்றி நிறைவேறு நடவடிக்கைகளில் கக்ஷியாடி தீர்மானிக்கப்பட்டிருக்கலாம். கோர்ட்டில் நடத்தப் பட்ட நடவடிக்கை மோசடியான தென்றும், அது செல்லத் தகுந்ததல்ல வென்றும் அந்த நடவடிக்கைகளிற் சொல்ல வேண்டிய தவசிய மில்லை. (சாக்ஷிய சட்டம் 44வது செக்ஷன், 10 H L C 431 இவைகளைப் பார்க்க)கோர்ட்டாரிடம் மோசவகையாக உத்திரவுபெறுவது சிருஷ்டனை செய்ததஸ்தாவேஜிக்கு ஒப்பாகும். அதனாலது செல்லத் தகுந்த தல்ல. பிரதிவாதிகள் சொல்லும் கக்ஷிகிரமமானது. அது சம்பந்தமானருஜுக்களை விளங்கி டிஸ்டிரிக்ட் ஜட்ஜி தீர்மானஞ் செய்திருக்கவேண்டியது மெத்த அவசியமானது. அதனால் அடியிற் கண்டஇரண்டு இஷ்ஷியுக்களைய் பற்றியும் டிஸ்டிரிக்ட் ஜட்ஜி விசாரித்து 6-வாரங்களுக்குள் பயிண்டிங் அனுப்பும்படி கட்டைக் கீழ்கோர்ட்டுக்கு அனுப்பி யிருக்கிறோம்.

இந்த வுத்திரவின்படி அடியிற் கண்ட பயிண்டிங் டிஸ்டிரிக்ட் ஜட்ஜியால் அனுப்பப்பட்டது.

பயிண்டிங்

அடியிற் கண்ட இரண்டு இஷ்ஷியுக்களைப் பற்றி பயிண்டிங் அனுப்பும்படி உத்திரவு செய்யப்பட் டிருக்கிறது.

(1) சாசன மூலமாக தாவா சொத்து வாதிக்கு பாத்திய முண்டா?

(2) நாராயணன் சேர்வை தாவா சொத்துக்கு சொந்தக்காரனாயிருந்தானா? 4ம் பிரதிவாதிக்கு அது கோர்ட்டு ஏலத்தில்விற்று முதல் செய்யப்பட்டதும் அவரதை வாதிக்கு விற்றதும் செல்லுபடியுள்ளதா? 1 அது முதல் 3 பிரதிவாதிகளை கட்டுப் படுத்தக் கூடியதா?

அரியனாச்சியுடைய செட்டில் மெண்டுபத்திரத்தின் பேரிலேற்பட்ட பாத்திய வ்ழக்கு இராஜியாகி விட்டதாலும் தாவா சொத்து நாராயணன் சேர்வைக்கு பாத்திய மில்லையென டிஸ்டிரிக்ட் முனிசீப் கோர்ட்டிற் சொல்லாததாலும் எதிர்கக்ஷிக்காரர்கள் அது விஷயமாக என் முன்பாக எவ்வித விவாதமுஞ் செய்யாமையாலும் நாராயணன் சேர்வையே தாவா சொத்துக்கு அத்கஙவி

யான சொந்தக்காரனென்று வாதிகொண்டாடும் பாத்தியதையை நான் ஒத்துக்கொள்ளுகிறேன். இது இரண்டாவது இஷ்ஷியுவின் முதற்பாகத்தைப் பற்றிய பயிண்டிங்.

தாவா சொத்தில் நாராயணன் சேர்வைக்கிருந்த சுதந்திரம், பாத்தியம், உரிமை, 1903 ம் வருஷத்திய ஸ்மால்காஸ் 599 டிக்கிரிக் கடனுக்காக ஏலம்போட்டதில் 4ம் பிரதிவாதி அவைகளை ஏலத்தி லெடுத்திருக்கிறார். 1ம் பிரதிவாதிக்கு என்னபாத்தியங்கிடைத்திருக்கிறதோ அதேபாத்தியம் வாதிக்குக்கிடைத்திருக்கிறது. இந்த நிறை வேறு நடவடிக்கைகள் செல்லுபடியற்றதாகா விட்டால் வாதி தாவா சொத்துக்கு சுதந்திர பாத்தியமுடையவராக வெண்ணப்பட வேண்டும். இதனால் முதல் இஷ்ஷியு உறுதி செய்யப்பட வேண்டியதாகவே பதிற் சொல்லப்பட வேண்டும். எதிர்கக்ஷியாடும் பிரதிவாதிகள் பொதுவாக மோசம் நடந்ததாகச் சொல்லுகிறார்களே யன்றி இன்ன விதத்தில் மோசம்நடந்த தென்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை. மைனராகிய சகோதரர் மகன் பெயரால் ரூ 30000 பெறுமான முள்ள சொத்தை ரூ 220 க்கு குறைந்த தொகைக்கு ஏல மெடுத்திருப்பது மோச மெனச் சொல்லுகிறார்கள். வாதி மைனரென்று சொல்லுங் கட்சியை வற்புறுத்த வில்லை. தாவா சொத்து ஜாஸ்தி விலை பெறுமென்பதற்குச் சந்தேகமில்லை. இச்சொத்து சம்பந்தமாக செட்டில் மெண்டு பத்திரத் தகரார் இருந்தது. கருப்பாயி என்பவளால் பெந்தகமு மேற்பட்டிருந்தது. தாவா சொத்தில் பெரும் பாகத்தைப்பற்றி ஆக்ஷேபனைக ளிருந்தன. மூல புருஷன் எழுதிவைத்த உயில் பாத்தியதையையும் அரியனாச்சியா லேற்பட்ட செட்டில்மெண்டு பாத்தியதையையும் 2-3 பிரதிவாதிகள் கொண்டாடுகிறார்கள். தாவா நிலத்தில் நாலிலொரு பாகம் ஜப்திக்கு முன்னமேயே பராதீனஞ் செய்யப்பட் டிருக்கிறது. அநேக முன் பாத்தியங்களெல்லாம் ஏற்பட்டு விட்டன. அவை சுமார் ரூ 8000 ஆகின்றன. தாவா சொத்து மிகவுங் குறைந்த விலைக்கு விற்கப் பட்டதென்பதற்கு சந்தேகமே கிடையாது. தாவாசொத்து பாத்தியங்களைப் பற்றிய சந்தேகங்கள்,இவை விஷயமாக வேற்படும் வழக்குகள், தாவா சொத்து வசமாவதற்கு முந்தி யேற்படக் கூடிய செலவுகள், இவைகளை யோஜிக்கு மளவில் இச்சொத்தை போட்டியாகக் கேட்க எவரும் வரவில்லை யென்பது ஆச்சரியமான

தல்ல. குறைந்த விலைக்கு ஏலம் போயிருக்கிற தென்ற விஷயம் பிரதி வாதிகளின் கக்ஷியை யாதரிப்பதற்குப் போதுமானதல்ல. செய்கைகளினுலாவது தவறுதல்களினுலாவது குறைந்த தொகைக்கு ஏலம் போடப்படவில்லை. அதனுலந்த ஏலம் ரத்து செய்யப்படுவதற்கு நியாயமில்லை. ஆகையால் இரண்டாவது இஷ்ஷியுவின் இரண்டாவது பாகமும் உறுதி செய்யப்படவேண்டுமென்று பதிற் சொல்லுகிறேன்.

இந்தப் பயிண்டிங்கின்பேரில் இரண்டாவது அப்பீல் செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

I. L. W. 208

கல்கத்தா ஹைகோர்ட்டு.

1912 ஷுத்திய மீஸ்லேனியஸ் சீவில் அப்பீல் நம்பர் 489

தீர்ப்பு 5—2—14.

ஜட்ஜிகள். மிஸ்டர் ஜஸ்டிஸ் பிளெட்சர் அவர்கள். மிஸ்டர் ஜஸ்டிஸ் N. R. சட்டார்ஜியா அவர்கள்.	ஶ்ரீ ஜாபன் பேகாரி காபூர் டிக்கிரிதாரன் அப்பீல்தாரன் V ஞானேந்திரனுத் கோடை ஆ. எதிர்மனுதார்கள்

15. [லிமிடேஷனுகட்டு]

டிக்கிரி கடன்காரர்கள் டிக்கிரி கடனை எழுத்துமூலமாக ஒப்புக்கொண்டால் அவ்விதம் ஒப்புக்கொண்ட தேதிமுதல் 3 வருடங்களுக்குள் டிக்கிரி நிறைவேற்றப்படலா மென்பது.

டிக்கிரிதாரன் 1912 வருஷம் ஆகஸ்டு மாதம் 20 தேதி கொடுத்த நிறைவேறு மனு காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுப் போய்விட்டதாக சப் ஜட்ஜியவர்கள் தீர்மானித்துவிட்டார்கள். அதன்பேரில் இந்த அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது. இந்த டிக்கிரி சம்பந்தமான ஏலமானது 1909 வருஷம் பிப்பரவரி மாதம் 3 தேதியில் குறிப்பிடலாமா வென்று நாஸர் மனு செய்துகொண்டதும், டிக்கிரிதாரன் ஏலவிற்று முதல் தொகையை கோர்ட்டினின்றும் வாங்கிக்கொண்டதும், நிறைவேறு நடவடிக்கைக்கு உதவியான காரியமாகமாட்டாதென்று சப் ஜட்ஜி சொன்னது நியாயமானதுதான். மற்றொரு விஷயம் சப் ஜட்ஜியின் கோட்டு

சுக்கு கொண்டுவரப்படவில்லை யென்று தெரிகிறது. டிக்கிரி கடன்காரர்களில் ஒருவன் 1911 வருஷம் டிஸம்பர் மாதம் 29 தேதியில் ரூபா 1900 இந்த டிக்கிரி கடனுக்குக் கொடுத்திருக்கிறுன்; வேறொரு கடன்காரன் 1912 வருஷம் ஜனவரி மாதம் 14 தேதியில் சில தொகையும் மற்றொரு கடன்காரன் அந்த மாதம் 29 தேதியிலும் கொடுத்திருக்கிறுர்கள். தாவா நிறைவேற்று மனு 1912 வருஷம் ஜனவரி மாதம் 29 தேதி கொடுபட்டிருக்கிறது. இத்தொகைகள் கொடுபட்ட 90 தினங்களுக்குள் டிக்கிரிதாரனுல் இத்தொகைகளுக்காக சர்டிபிகேட்டு மனுக்கள் கொடுபட்டிருக்கின்றன. இத்தொகைகள் கொடுபட்டது லிமிடேஷனுகட்டு 19-வது செக்ஷன்படி ஒப்புக்கொள்ளுதலாகிறது. இத்தொகைகள் வரவுவந்த தேதிமுதல் மூன்று வருடங்களுக்குள் நிறைவேறு மனு கொடுபட்டிருக்கிறது. மேற்சொன்ன மூன்று டிக்கிரி கடன்காரர்களைப் பற்றின வரையில் எவ்வித காலாவதி தோஷமுமில்லை. அதனுல் இவர்கள் சம்பந்தபட்ட வரையில் கீழ்கோர்ட்டார் செய்த தீர்மானத்தை ரத்து செய்கிறேம்.

22 Indian Cases 709.

சென்னை ஹைகோர்ட்டு.

புல் பென்சு தீர்ப்பு.

1914 வருஷத்திய 2-வது அப்பீல் நம்பர் 1978.

தீர்ப்பு 10—12—13.

ஜட்ஜிகள் சீவ் ஜஸ்டிஸ் ஸர் சார்லஸ் அர்னுல்ட் வொயிட் Kt. அவர்கள் மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரா நாயரவர்கள் மிஸ்டர் ஜஸ்டிஸ் ஒல்டுபீல்டவர்கள்	பெரிய அய்யா அம்பலம் ஆ. பிரதிவாதிகள். V சண்முக சுந்திரம் ஆ வாதிகள்.

16. [லிமிடேஷனுகட்டு].

போக்கிய அடமானம் பெற்றவன் வசமிருக்கும் சோத்தை அன்னியன் ஆக்கிரமித்து அனுபவித்து வந்தால் அது விஷயமாக பேந்தகம் வைத்தவன் வழக்கிடுவதற்கு எந்தத்தேதி முதல் வியாஜ்ஜிய மூல முற்பத்தி யென்பதும், அதற்குரிய காலாவதி தோஷமும்.

தாவா வீடு வாதிகளுக்குச் சொந்தமென்றும், அதையவர் போக்கிய அடமானம்வைத்திருப்பதாகவும்,அச்சொத்து மீட்கும் படியான கெடு 1917 வருஷம் வரையி விருப்பதாகவும், 2-3 பிரதி வாதிகள் தாவா வீட்டில் பிரவேசித்து சில புதிய கட்டடங்கள் கட்டுவதை வாதிகள் 1908ம் வருஷத்தில் தடுத்ததின்பேரில் பிரதி வாதிகள் தாவா வீடு அவர்களுக்குச் சொந்தமானதென்றும் வாதிகளுக்கு அதில் எவ்வித பாத்தியமுமில்லையெனச் சொல்வதாகவும், அதனால் வாதிகள் தங்களுக்கு அச்சொத்திலுள்ள பாத்தியதையை ஸ்தாபித்துக் கொள்ள வேண்டுமென 1909 வருஷத்தில் வழக்கிட்டார்கள். தாவா வீட்டை சென்ற 1898ம் வருஷ முதலே வாதிகளுக்குத் தெரிந்தே யனுபவித்து வருவதாகவும், வாதிகளின் பாத்தியதைகளை மறுத்து தங்களுக்குச் சொந்தமானதென்றே பாத்தியங்கள் கொண்டாடி வருவதாகவும், தாங்கள் தாவா சொத்தை ஆக்கிரமித்து அனுபவித்து வருகிற 1898 வருஷம் முதல் 6 வருடங்களுக்குள்ளும், வாதி மேஜரான 3 வருடங்களுக்குள்ளும் இந்த வழக்கு கொண்டு வரப்படாததால் வாதியின் தாவாவுக்கு காலாவதி தோஷமேற்பட்டு விட்டதென்றும் 2-3 பிரதிவாதிகள் கக்ஷியாடினார்கள்.

இந்தக்கேஸ் 2-வது அப்பீலில் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள், ஜஸ்டிஸ் டியாப்ஜியவர்கள் இவர்கள் முன்பாக விசாரணைக்கு எடுக்கப்பட்டதில் வியாஜ்ஜியமூலம் காலாவதி தோஷம், இவை விஷயமாக அபிப்பிராய பேதங்களுண்டாகி அடியிற்கண்ட விஷயங்கள் புல்பெஞ்சு தீர்மானத்துக்கு அனுப்பப்பட்டன.

(1) பெந்தக சொத்தை யனுபவித்து வருகிற பெந்தகம் வைத்தவனிட மிருந்தாவது போக்கிய சொத்தை யனுபவித்து வரும் போக்கிய அடமானதாரனிட மிருந்தாவது அன்னியன் அச்சொத்தை ஆக்கிரமித்து கட்டிக்கொண்டால் அது அந்த பெந்தகதாரனுக்கும், போக்கியதாரனுக்கும்விரோதமான பாத்தியதையுடன் அனுபவிப்பதாகுமா.

(2) வாதியின் சுதந்திர பாத்தியம் கெட்டுப்போகாதிருக்கையில் வாதியின் பாத்தியதைகளை அன்னியன் மறுத்துவரும் ஒவ்வொரு காலத்திலிருந்தும் வியாஜ்ஜியமூல முற்பத்தியா, முதலில்

ஒரு தடவை மறுத்தபிறகு மற்றொரு தடவையில் மறுப்பதைக் கொண்டு வேறு வியாஜ்ஜிய மூலங்களுண்டாக மாட்டதா.

புல் பெஞ்சு கோர்ட்டாரின் அபிப்பிராயம். தாவா போக்கிய சொத்தை மீட்கும்படி வாதிக்கு வியாஜ்ஜியமூல மேற்படாததால் அச்சொத்தை யாக்கிரமித்து அனுபவித்தவனிடமிருந்து சொத்து கிடைக்க வேண்டுமென்று வழக்கிட பாத்தியமில்லை யென்றும், அதனாலவன் அனுபவிப்பது வாதிக்கு விரோதமான பாத்தியதையுடன் அனுபவிப்பதாக மாட்டாதென்றும், வாதியின் வக்கீல் கக்ஷியாடுகிறார். வாதி தனக்கு சொத்து ஸ்வாதீனமாக வேண்டுமென வழக்கிட பாத்திய மில்லாவிட்டாலும், போக்கிய அடமானதாரனுக்கு வசமாக வேண்டுமென வழக்கிடலாமென்றும், போக்கிய அடமானதாரன் வசமுள்ள சொத்தை அன்னியன் ஆக்கிரமித்து அனுபவிக்கும் தேதி முதலே பெந்தகம் வைத்தவனுக்குங் காலாவதி தோஷம் ஆரம்பித்து விடுகிறதென்றும், பிரதிவாதிகளின் வக்கீல் கக்ஷியாடுகிறார்.

இ. லா. ரி. 2 சென்னை 226, 7 சென்னை 26, 10 சென்னை 189, 21 சென்னை 153 இந்தத் தீர்மானங்களிற் கண்டபடி ஒரு அன்னியன் பெந்தக சொத்தை போக்கிய அடமானதாரனிடமிருந்து கட்டிக்கொண்டால் அது பெந்தகம் வைத்தவனுக்கு விரோதமான பாத்தியதையுடன் அனுபவிப்பதாக ஆகுமா அல்லது ஆகமாட்டாதா வென்பது பெந்தகம் வைத்தவனுடைய பாத்தியதையையும் கட்டிக்கொண்டாரா வென்பதைப் பொறுத்ததாகவிருக்கிறது. போக்கிய அடமானதாரனிடமிருந்து சொத்தைக் கட்டிக்கொண்டது அந்தப் போக்கியம் வைத்தவனுக்கு விரோதமாக அனுபவிப்பதாக மாட்டாது. இவனுடைய பாத்தியதைக்கும் விரோதமாக அனுபவிப்பதாக இவனுக்குத் தெரிந்திருக்கிறதென்ற ருஜா வேண்டுவதவசியம். போக்கிய சொத்தை ஆக்கிரமித்து அனுபவிப்பவன் அடமானம் வைத்தவனுடைய பாத்தியதைக்கும் விரோதமாக அனுபவித்து வருகிறான் என்ற ருஜாவுளு ஆக்கிரமித்து அனுபவிப்பவனைப் பொறுத்ததாக விருக்கிறது. (இ. லா. ரி. 18 பம்பாய் 51 பக்கம் 54 பார்க்க). போக்கிய அடமானதாரன் வசமுள்ள போக்கிய சொத்து வேறொருவன் வசம் வந்துவிட்டால் அவன் பாத்தியமன்னியில் அனுபவிப்பதாக எண்ணக்கூடாது. அவன் அப்பாத்தியதையை டிரா

ன்ஸ்பர் பெற்றிருக்கலாம், கிரயத்துக்கு வாங்கியிருக்கலாம், கெட்ட விஷயமாக அனுபவிப்பதாக நினைக்கவிடமில்லை. ஆதலால் பிரதிவாதி தான் சர்வ சுதந்திரபாத்தியமாக பெந்தகம் வைத்தவனுடைய பாத்தியதைக்கும் விரோதமாக அனுபவிப்பதாக ருஜுப்பிக்கக் கடமைப்பட்டவர். இந்தக் கேஸில் ஏற்பட்ட ருஜுக்களினால் 1898ம் வருஷம் முதல் 1908 வருஷம் வரையில் வாதியின் பாத்தியதைக்கு விரோதமாக பிரதிவாதிகள் அனுபவித்ததாக ஏற்படவில்லை. தாவா கேசுக்கு வியாஜ்ஜிய மூலம் 1908ம் வருஷமுத லுற்பத்தியாகையால் வாதியின் பாத்தியங்களை மறுக்கும் ஒவ்வொரு காலத்திலின்றும் வெவ்வேறு வியாஜ்ஜியமூலங்களுண்டா இல்லையா வென்பதைப்பற்றி நாமிப்போது தீர்மானிக்க வேண்டியது அனுவசியம்.

22 Indian Cases 615.

சென்னை ஹைகோர்ட்டு.

1913 வருஷத்திய C. M. S. A. நம்பர் 5.

தீர்ப்பு 19—12—13.

ஜட்ஜிகள்
ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள்
ஜஸ்டிஸ் ஸ்பென்ஸரவர்கள்

அப்துல் காதர் ராவுத்தர் ஆ.
அப்பீல்தார்கள் டிக்கிரிகடன்காரர்கள்
V
கிருஷ்ணமலமால் நாயர்
டிக்கிரி பெற்றவர்.

17. [லிமிடேஷனுக்ட்டு].

நிறைவேறு மனு நடவடிக்கைகளில் டிக்கிரிதாரன் கெடு கேட்பது நிறைவேறு நடவடிக்கைக்கு ஒத்தாசையான காரியமென்பதும், அந்தத்தேதி முதல் காலாவதி தோஷம் பார்க்கவேண்டுமென்பதும்.

அப்பீல்தார்கள் பேரில் எதிர் மனுதார் பெற்றிருந்த டிக்கிரியை நிறைவேற்றி அப்பீல்தார்களுடைய ஸ்தாவர சொத்துக்களை ஜப்தி செய்தார். இந்த நிறைவேறு நடவடிக்கையில் ஜப்தி சொத்துக்களுக்கு வில்லங்க சர்டிபிகேட் தாகல் செய்யப்பட வேண்டியதற்காக டிக்கிரிதாருடைய வக்கீல் 1908ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 7-ந்தேதி வாய்மொழியாகக் கெடுக்கேட்டார்.

பின்பு மேல் நடவடிக்கை நடத்தப்படவில்லை. இதன்பிறகு 1911 வருஷம் ஜூலை மாதம் 3-ந்தேதி விவாத நிறைவேறு மனு கொடுக்கப்பட்டது. மேலே சொன்னபடி கெடுகேட்டது நிறைவேறு நடவடிக்கைக்கு ஒத்தாசையான காரியம் (Step in need of Execution) ஆகமாட்டாதென்றும்; தாவா நிறைவேறு மனு காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுப் போய்விட்டதென்றும் பாலக்காடு சப் ஜட்ஜியவர்கள் வாதியின் நிறைவேறு மனுவைத் தள்ளுபடி செய்து விட்டார்கள். இந்த வுத்தரவின் பேரில் டிஸ்டிரிக்ட் கோர்ட்டில் அப்பீல் செய்யப்பட்டதில் அவர்கள் இந்த வுத்திரவை ரத்து செய்து விட்டார்கள். அதன்பேரில் டிக்கிரி கடன்காரர்கள் இந்தக்கோர்ட்டில் 2-வது அப்பீல் செய்திருக்கிறார்கள்.

கெடுகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டது நிறைவேறு நடவடிக்கைக்கு தடை செய்வதாகுமே யன்றி அதற்கு ஒத்தாசையான காரியமல்லவென்றும், இ. லா. ரி. 27 கல்கத்தா 285 தீர்மானத்திற் கண்டபடி வாதியின் மனுவுக்கு காலாவதி தோஷ மேற்பட்டவிட்டதென்றும், வாதி சொல்லும் 14 C. W. N. 486 தாவா கேசுக்கு ஒற்றுமையானதல்லவென்றும், அது எழுத்து மூலமாக செய்துகொண்ட அப்பிளிகேஷன்பேரில் ஏற்பட்டதென்றும், அப்பீல்தாரின் வக்கீல் கக்ஷியாடுகிறார்.

அப்பீல்தார் சொல்லும் தீர்ப்பு ஒரு தனிமையான தீர்ப்பென்றும், அதன்பிறகு ஏற்பட்ட அந்தக் கோர்ட்டாருடைய தீர்ப்பு (14 C. W. N. 486) தான் சரியானதென்றும், இது இ. லா. ரி. 36 பம்பாய் 638 தீர்மான முதலியனவற்றை யனுசரித்து ஏற்பட்டதென்றும், வாதி வக்கீல் கெடுக்கேட்டது ஒரு சொற்ப தாமதமென்றும், வாய்மொழியாகக் கெடுக் கேட்பதே போதுமானதென்றும், மித்ரா லிமிடேஷனுகட்டு 2-வது வாலியம் 1285 பக்கம் அதிற்கண்ட தீர்மானங்கள் இவைகளைக் காட்டி எதிர்மனுதார் வக்கீல் கக்ஷி சொல்லுகிறார்.

தீர்ப்பு.

1908ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 7தேதி [illegible] மனுதார் வக்கீல் வாய்மொழியாக கெடுக்கேட்டது நி[illegible]வேறு நடவடிக்கைக்கு ஒத்தாசையான காரியமென்று எ[illegible]ப்படாவிட்டால்

வாதியின் டிக்கிரிக்கு காலாவதிதோஷ மேற்பட்டு விடுகிறது. எதிர் மனுதார் வாதி வக்கீல் சொல்லும் 14 C. W. N. 486 தீர்மானம் எழுத்து மூலமாக கெடுக்கேட்ட விஷயமென்றும், அது பிரமாண பத்திரிகை தாகல் செய்யப்படவேண்டியதற்காக கெடு கேட்கப்பட்டதென்றும் அதனால் அந்தத் தீர்மானம் தாவா கேசுக்குப் பொருந்தியதல்லவென்றும், அப்பீல்தார் வக்கீல் சொல்லுகிறார். இந்த இருவித கக்ஷிகளும், பிரயோஜன மற்றவை, நிறைவேறு நடவடிக்கைக்கு உதவியான காரியஞ்செய்வது எழுத்து மூலமான மனுவின் பேரிலேற்பட வேண்டுமென்று லிமிடேஷனாக்ட்டு 179-வது செக்ஷனில் சொல்லப்படவில்லை. இ. லா. ரி. 3 அலகாபாத் 139, 15 பம்பாய் 405, இந்தத் தீர்மானங்கள் தாவா கேசுக்கு மெத்த ஒற்றுமையானவை. டிக்கிரி கடன்காரன் கெடுக்கேட்பது நிறைவேறு நடவடிக்கைகளுக்கு தடைசெய்வதாகும். டிக்கிரி கடன்காரனுக்கு அனுதாபத்தின்பேரில் டிக்கிரி பெற்றவன் கெடு கொடுப்பது நிறைவேறு நடவடிக்கைக்கு தடை அல்லது தாமதஞ் செய்ததாகும். தஸ்தாவேஜிகள் தாகல்செய்ய அல்லது ருஜுக்கள்விட கெடுக் கேட்பதானது நிறைவேறு நடவடிக்கைக்கு உதவியான காரியமாகும். (இ. லா. ரி. 36 பம்பாய் 638, 29 அலகபாத் 301, 5 சென்னை 141 இந்தத்தீர்மானங்களைப் பார்க்க) கெடுக்கேட்பது வாய்மொழியாகவு மிருக்கலாம். அது நிறைவேறு நடவடிக்கைக்கு உதவியான காரியமாகும். இந்த அப்பீல் செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

I·L·W 271.

ஹைகோர்ட்டு தீர்மானங்கள்.

தமிழ்ப்பாஷை பயின்றவர்கள் வியவகார நுட்பங்களை
எளிதில் உணரும் பொருட்டு பிரசுரிக்கப்படும்

மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

புத்தகம்-1 } மாயவரம் 1914ஹு மேமீ { இலக்கம்-9

OFFICE OF THE REGISTRAR
MADI...

சென்னை ஹைகோர்ட்டு.

1911 ஹுத்திய 2 வது அப்பீல் நம்பர் 1
தீர்ப்பு 28—1—14.

ஜட்ஜிகள்.
ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள்
ஜஸ்டிஸ் ஸ்பென்ஸரவர்கள்

C. W. விம்ஸன் ஆ-அப்பீல்தார் (வாதிகள்)
V
கோகா ஜெகந்நாத நாயடுவு அ. பிரதிவாதிகள்

10. [காண்டிராகட்டு ஆகட்.]

குறிப்பிட்டு காட்டாத சரக்கு கொடுப்பதாக வுடன்படிக்கை செய்துகொண்டு வேறு சரக்கு கொடுபட்டால் கொடுக்கத் தவறிய தேதியில் கொடுப்பதாகச் சொன்ன சரக்கு என்ன விலைவிற்றதோ, அதற்கும் கொடுபட்டிருக்கும் சரக்கின் விலைக்குமுள்ள வித்தியாசம் மட்டில் நஷ்டபரிகாரமாக கிடைக்கக்கூடுமென்பது.

தாவாவில் தாகல் செய்யப்பட்டிருக்கும், இங்கிலீஷ் சுத்தஞ் செய்த அரிசியென்ற தினிசின்படி கொடுப்பதாக பிரதிவாதிகள் வாதிகளிடம் ஒப்பந்தஞ் செய்துகொண்டார்கள். இவர்கள் கொடுப்பதாக வொப்புக்கொண்டதை நம்பி வாதிகள் தங்களுக்கு வழக்கமாயுள்ள ஆங்கிலேய வர்த்தகர்களுக்கு கொடுப்பதாக வுடன்படிக்கை செய்துகொண்டார்கள். ஆனால் அந்த வுடன்படிக்கை விபரம் பிரதிவாதிகளுக்குத் தெரியாது. பிரதிவாதிகள் தாங்கள் ஒப்புக்கொண்ட அரிசியைக் கொடுக்காமல் மட்டமான அரிசியைக் கொடுத்தார்கள். ஆனாலதை வாதிகள் ஒப்புக்கொண்டு முன் பேசியபடி அதை ஆங்கிலேய நாடு வர்த்தகர்களுக்கு அனுப்பிவிட்டார்கள். இந்த மட்ட அரிசியினால் அந்த வர்த்தகர்களுக்கு வாதி

கள் நஷ்டங் கொடுக்கவேண்டியதாக விருந்தது. ஏற்பட்ட எக்கிரிமெண்டுபடி நல்ல அரிசி கொடாமல் மட்ட அரிசி கொடுத்ததால் தங்களுக்குண்டாகிய நஷ்டங்களுக்கு வாதிகள் பிரதிவாதிகள் பேரில் வழக்கிட்டார்கள். அதில் வாதிகள் தங்கள் ஆங்கிலேய வர்த்தகர்களுக்கு கொடுத்த ஸ்பெஷல் நஷ்டமுங் கிடைக்கவேண்டுமெனக் கேட்டிருந்தார்கள். வாதிகள் அன்னிய தேச வர்த்தகர்களிடம் உடன்படிக்கை செய்துகொண்டது தங்களுக்குத் தெரியாதென்றும், அந்த அன்னியநாட்டு வர்த்தகர்களுக்கு வாதிகள் கொடுத்த ஸ்பெஷல் நஷ்டத்தை தாங்கள் கொடுக்க கடமைப்பட்டவர்களல்ல வென்றும், பிரதிவாதிகள் கக்ஷியாடினார்கள். பிரதிவாதிகள் கொடுப்பதாக வொப்புக்கொண்ட அரிசியின் கடைவிலைக்கும், பிரதிவாதிகள் அளந்துவிட்ட அரிசியின் விலைக்குமுள்ள வித்தியாசத் தொகை மட்டில் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியதென்றும், வாதிகள் அன்னிய நாட்டு வர்த்தகர்களிடம் உடன்படிக்கை செய்துகொண்டது பிரதிவாதிகளுக்கு தெரியாதாகையால் அவர்கள் கொடுத்த ஸ்பெஷல் நஷ்டம் பிரதிவாதிகள் கொடுக்க கடமைப்பட்டவர்களல்லவென்றும் கீழ் கோர்ட்டார்கள் தீர்மானஞ் செய்துவிட்டார்கள். இதன்பேரில் உபயவாதிகளும் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்திருக்கிறார்கள்.

டிஸ்டிரிகட் ஜட்ஜி கணக்கிட்ட விதம் சரியானதல்லவென்றும், பிரதிவாதிகளின் தவறுதலினால் வாதிகள் ஸ்பெஷல் நஷ்டங் கொடுத்திருப்பதால் அந்த நஷ்டங்களும் பிரதிவாதிகளிடமிருந்து கிடைக்கவேண்டியதென்றும், காண்டிராகட்டு ஆகட்டு 73-வது செக்ஷன் விளக்கம் M ஆதாரத்தை யெடுத்துக்காட்டி அப்பீல் வாதிகளின் வக்கீல் கக்ஷியாடுகிறார்.

வாதிகள் அன்னியதேச வர்த்தகர்களிடம் ஒப்பந்தஞ் செ
ய்துகொண்டது பிரதிவாதிகளுக்குத் தெரியாதாகையால், அந்த
ஸ்பெஷல் நஷ்டங்களை பிரதிவாதிகள் கொடுக்கக் கடமைப்பட்ட
வர்களல்லவென்றும், அந்த நஷ்டம் அதிக தூரமானதென்றும்,
வாதிகளிடம் பிரதிவாதிகள் ஒப்பந்தஞ் செய்துகொண்டதும்,
வாதிகள் அன்னியநாட்டு வர்த்தகர்களிடம் ஒப்பந்தஞ் செய்து
கொண்டதும் ஏக காலத்திலேற்படாததினாலே காண்டிராகட் ஆக்
ட்டு 73-வது செக்ஷன் விளக்கம் M. தாவா கேசுக்கு ஒற்றுமை
யானதல்லவென்றும், பிரதிவாதிகளின் வக்கீல் எதிர்கக்ஷி சொ
ன்னார்.

தீர்ப்பு.

'வாதிகளுக்கு பிரதிவாதிகள் கொடுத்த சரக்கின் விலைக்கும் அவர்கள் ஒப்பந்தஞ் செய்துகொண்ட சரக்கின் கடைவிலைக்குமுள்ள வித்தியாசத்தொகை மட்டில் நஷ்டபரிகாரமாக கொடுபட வேண்டிய தென்றும், வாதிகள் அன்னியதேச வர்த்தகர்களிடம் ஒப்பந்தஞ் செய்துகொண்டது பிரதிவாதிகளுக்குத் தெரியாதாகையால் வாதிகள் கொடுத்த ஸ்பெஷல் நஷ்டம் பிரதிவாதிகள் கொடுக்க கடமைப்பட்டவர்களல்ல வென்றும், அது விஷயம் பிரதிவாதிகளுக்கு நோட்டீஸ் மூலமாக அறிவிக்கப்படவில்லையென்றும், டிஸ்டிரிக்ட் ஜட்ஜி சொல்லியது சரியானதென்றே நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். காண்டிராக்ட் ஆகட்டு 73-வது செக்ஷன் விளக்கம் M இந்தக் கேசுக்கு' ஒற்றுமையானதல்ல; அது குறிப்பிட்ட சரக்குகளைப்பற்றி யேற்பட்டது. இந்தக் கேசில் குறிப்பிடாத சரக்கைப்பற்றி ஒப்பந்த மேற்பட்டிருக்கிறது. அந்த விளக்கம் Mல் Aயும் Bயும் எந்த காலத்தில் ஒப்பந்தஞ் செய்துகொண்டார்களோ அதே காலத்தில் Bயும் Cயும் ஒப்பந்தஞ் செய்துகொண்டதாகக் கண்டிருக்கிறது. தாவா கேசுக்கு மேற்படி 73-வது செக்ஷன் விளக்கம் (a) ஒற்றுமையானது.

இந்த இரண்டாவது அப்பீல் செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது. எதிர்கக்ஷி மெமோராண்டத்தைப்பற்றி வற்புறுத்தவில்லை. அதனாலதுவுந் தள்ளுபடி செய்யப்பட்டது.

I. L. W. 269

சென்னை ஹைகோர்ட்டு

1913வருஷத்திய சீவில் ரேவிஷன்மனு நம்பர் 188.

தீர்ப்பு 11—12—13.

ஜட்ஜி மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள்.	சுப்பிரமணிய அய்யர் பிரதிவாதி மனுதார் V. E. S. B. ஸ்டிவன்ஸன் ஹவாதிகள்.

4. [ஸ்மால்காஸ் கோர்ட்டு ஆகட்டு.]

" குளவெட்டுத் தொகை கிடைக்க வேண்டுமென்ற வழக்கு ஸ்மால்காஸ் திறப்பென்பது"

இராமனாதபுரம் சப்கோர்ட்டு தீர்ப்பின் பேரில் ஹைகோர்ட்டில் ரெவிஷன் மனு கொடுபட்டது.

குளவெட்டுத் தீர்வை விஷயமாக வாதிகள் வழக்கிட்டதில் அவர்களின் தாவாப்படியே தீர்ப்பு செய்யப்பட்டதின்பேரில்வாதிகளின் தாவா ரெஸ் ஜூடிகேடா தோஷத்துக்கு வுள்ளாக்கப்பட்டிருக்கிற தென்றும், வாதிகளின் வழக்கு ஸ்மால்காஸ் திறப்பில் நிற்கத்தகுந்ததல்ல வென்றும், இந்த இரண்டு ஆதாரங்களின் பேரில் ரெவிஷன் மனு கொடுக்கப்பட்டிருக்கிறது. சேய் 1-க்கு வருடம் 1-க்கு 2 மரக்கால் வீதம் வசூலிக்கப்பட்டதாக 2 அடையாள ஆதிரவு தாகல் செய்யப்பட்டிருக்கிறது. இந்த வீதப்படித் தான் வசூலிக்கப்படவேண்டியதா வென்பது சந்தேகத்துக்கு இடமாயிருக்கிறது. சேய் 1• க்கு 2 மரக்கால் வீதம் பாக்கியாகிற தென்று அர்த்தமென்றும் தெரிகிறது. அதனாலிது வாதிகளுக்கு விரோதமாக ரெஸ்ஜூடிகேடா தோஷமாக மாட்டாது. C.C. தீர்ப்புகள் இதே விஷயத்தைப்பற்றி இதே சப்கோர்ட்டாரால் ஏற்பட்ட தீர்மானங்கள். அவைகளில் பிராதிற்கேட்டபடி குளவெட்டுத்தொகை அதாவது சேய் 1-க்கு ஒரு 1க்கு 8மரக்கால் வீதம் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இவை பிரதிவாதிக்கு விரோதமாக ரெஸ்ஜூடிகேடா வாகின்றன. மேலே கண்டபடி ரெஸ்ஜூடிகேடா ஆகாவிட்டாலும் வாதியின் வழக்கு சரியானதென்று சப்ஜட்ஜி தீர்மானித்திருக்கிறார்கள். தாவாவிற்கண்ட குளவெட்டுத் தொகை வாதிகளின் தண்ணீரை பிரதிவாதி உபயோகிப்பதற்காக ஏற்பட்டது; அதனால் ஸ்மால்காஸ் கோர்ட்டு ஆகட்டு 13வது ஆர்டிகிளின் கீழ்வரமாட்டாது. (17 சென்னை லாஜர்னல் 487 தீர்மானத்தை பார்க்க). ரெவிஷன் மனுதள்ளுபடி செய்யப்பட்டது.

22 Indian Cases 144.

சென்னை ஹைகோர்ட்டு.

1910 ஞூதிய சிவில் ரிவிஷன் மனுக்கள் 744 முதல் 746, 748 முதல் 819.

தீர்ப்பு 10—12—13.

ஜட்ஜிகள். ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள் ஜஸ்டிஸ் டியாப்ஜி அவர்கள்	R. M. P. S. முத்தய்யா செட்டியார் ஆ மனுதார்கள் (வாதிகள்.) V. ஆதீனமுல்கி ஆ எதிர்மனுதார்கள்.

1, [பொரிவின்ஷியல் ஸமால்காஸ்கோர்ட்டு ஆக்ட்டு.]

குத்தகை பாக்கி விஷயமாக ஸ்மால்காஸ் திறப்பில் வழக்கிட்டு அச்சொத்து பாத்திய விஷயமாக பிரதிவாதிகள் ஆக்ஷேபித்தால் அவ்வழக்கு அசல் திறப்பில் தீர்மானிக்க திருப்பியனுப்பலாமென்பது.

இராமனாதபுரம் சப்கோர்ட்டார் செய்த வுத்திரவின்பேரில் ஹைகோர்ட்டில் ரிவிஷன் மனு.

இராமனாதபுரம் ஜில்லாவிலுள்ள சிலகோவில்களுக்கு வாதிகள் டிரஸ்டிகளென்றும், பிரதிவாதிகள் மேற்படி கோவில்களைச் சேர்ந்த நிலங்களை சாகுபடி செய்யுங் குடிகளென்று, குத்தகை பாக்கி அவர்களால் கிடைக்கவேண்டு மென்றும், ஸ்மால்காஸ் கோர்ட்டில் வழக்கிட்டார்கள். வாதிகள் தாவாவில் சொல்லுங் கோவில்களுக்கு தர்மகர்த்தாக்கள் அல்லவென்றும், அவர்களுக்கு வழக்கிட பாத்தியமில்லை யென்றும், வாதிகளுக்கு குடிவாரபாத்தியமில்லாததால் சிவில் கோர்ட்டார் இந்தக் கேஸ்களை விசாரிக்க அதிகார மில்லையென்றும் பிரதிவாதிகள் கக்ஷியாடினார்கள். தாவா சொத்தின் பாத்தியத்தை களை விசாரிக்க அருகமுள்ள கோர்ட்டில் இந்த பிராதை கொடுக்கும்படி ஸ்மால்காஸ் கோர்ட்டு ஆகட்டு 23 வது செக்ஷன்படி பிராதை வாப்ஸ் செய்துவிட்டார்கள். இதன்பேரில் இந்தக் கோர்ட்டில் ரிவிஷன் மனுக்கள் கொடுபட்டிருக்கின்றன.

சிவில் கோர்ட்டு அசல்திறப்பில் கொடுக்கும்படி பிராதுகளை வாப்ஸ் செய்தது பிசகென்றும், வாதியின் மேல்வார பாத்தியங்களைப்பற்றி பிரதிவாதிகள் ஆக்ஷேபிக்கவில்லை யென்றும், இது விஷயமாக தீர்ப்பு செய்ய ஸ்மால்காஸ் கோர்ட்டாருக்கு அதிகாரமிருக்கிறதென்றும், பிரதிவாதிகள் கக்ஷிசொல்லுகிறபடி ரெவனியுகோர்ட்டார் இந்தக் கேஸ்களை விசாரிக்க அதிகாரமுண்டாவென்பதைப்பற்றி சப் ஜட்ஜி விசாரித்துத் தீர்மானஞ் செய்திருக்க வேண்டிய தவசிய மென்றும், பிராதிற் கேட்டும் பிரார்த்தனை ஸ்தாவர சொத்தின் பாத்தியதையைப்பற்றி ருஜூ அல்லது ருஜூவில்லை யென்பதைப் பொறுத்து ஏற்படாததால் ஸ்மால்காஸ் கோர்ட்டு ஆகட்டு 23 வது செக்ஷன் தாவா கேஸ்களுக்குப் பொருத்தமான தல்லவென்றும், பிராதுகளை வாபஸ் செய்தது சட்ட விரோதமான தென்றும் மனுதார்களின் வக்கீல் வாதாடுகிறார்.

இந்தவழக்குகள் சிலவற்றில் குடியானவர்கள் வாதிகள் தர்மகர்த்தாக்கள் அல்லவென்று கக்ஷியாடுவதால் ஸ்மால்காஸ் திறப்பில் இவ்வழக்குகள் நிற்கத் தகுந்ததல்ல வென்றும், இந்த நம்பர்களில் வாதிகள் தர்மகர்த்தாக்களா வென்று தீர்மானிக்க வேண்டியதவசியமாகையால் பிராதுகளை வாபஸ் செய்தது நியாயமானதென்றும், சப்ஜட்ஜி தாவா கேஸ்களை விசாரிப்பதற்கு அதிகாரமிருக்கிறதா இல்லையா என்ற விஷயம் தாவா சொத்துக்கள் வாதிகளுக்கு சொந்தம் அல்லது இல்லை யென்றதைப் பொறுத்திருக்கிறதென்றும் சப்ஜட்ஜி பிராதை வாபஸ் செய்தது நியாயமானதென்றும், எதிர் மனுதார்களின் வக்கீல் கக்ஷிசொல்லுகிறார்.

வாதிகளுக்கு குடிவாரபாத்திய மிருக்கிறது அல்லது இல்லை யென்ற விஷயம் தீர்மானிக்கப் படுவதற்கு முந்தி ஸ்மால்காஸ் திறப்பில் தாவா கேஸ்களை விசாரிக்க நியாய மில்லை. ஸ்மால்காஸ் கோர்ட்டார் சிலசமயங்களில் சொத்து பாத்தியங்களைப்பற்றி விசாரிக்க நேர்ந்தாலும், சொத்தின் பாத்தியங்களைப்பற்றி முடிவான தீர்மான மேற்படவேண்டியதை யுத்தேசித்து பிராதை வாபஸ் செய்ய ஸ்மால்காஸ் கோர்ட்டாருக்குஅதிகாரமுண்டு; தாவாகேஸ் ரெவனியு கோர்ட்டாராலா அல்லது சீவில் கோர்ட்டாராலா விசாரிக்கப் படவேண்டிய தென்ற விவாதமு மிருப்பதால் சப்ஜட்ஜி பிராதை வாபஸ் செய்தது மெத்த நியாயமானது. சில பிரதிவாதிகள் வாதிகளின் தர்மகர்த்தா பாத்தியங்களை மறுப்பதால் எந்த விதத்திலும் பிராதுகள் வாபஸ் செய்யப்படவேண்டும். இதனுலிந்த ரிவிஷன் மனுக்களைத் தள்ளுபடி செய்கிறோம்.

I. L. W. 203.

சென்னை ஹைகோர்ட்.

1911 ௵த்திய 244 நம்பர் உத்திரவின்பேரில் அப்பீல்

தீர்ப்பு 30—1—14.

ஜட்ஜிகள்	
ஜஸ்டிஸ் சங்கரநாயரவர்கள் ஜஸ்டிஸ் எயிலிங் அவர்கள்	T. P. கோதண்டபாணி நாயடு மனுதார் 2-வது மேடர் பெற்றவர் V குப்புசாமி நாயக்கர் ஆ. எதிர் மனுதார்கள்

30. [சீவில் புரீஸிஜர் கோடு]

ஒரு டிக்கிரியை மேடர் பெற்றவனிடமிருந்து வேறொருவன் மேடர் பெற்று மனுக் கொடுத்து டிக்கிரி கடன்காரன் அது மோசடியானதென்று ஆக்ஷேபித்தால் அவ்விஷயங்களை விசாரித்து வுத்திரவு செய்யாமல் மேடரைத் தள்ளுபடி செய்வது சட்டவிரோதமென்பது.

நாகபட்டணம் சப்கோர்ட்டு தீர்ப்பின்பேரில் அப்பீல்.

4-வது எதிர்மனுதார் பேரில் ஒருவர் டிக்கிரி பெற்றிருந்தார். முதல் எதிர் மனுதார் K. அதை யவரிடமிருந்து மேடர் பெற்று தன்னுடையமருமகனை அப்பீல்தாருக்கு மேடர்செய்து கொடுத்து விட்டார். இது அங்கீகரிக்கப்பட வேண்டுமென அப்பீல்தாரன் சி. பு. கோடு 21-வது ஆர்டர் 16-வது ரூல்படி நிறைவேறு மனுக்கொடுத்தார். இந்த டிக்கிரியே மோசடியாக வேற்பட்டதென்றும், K யிடமிருந்து தனக்கு சில தொகை கிடைக்கவேண்டியிருப்பதால் இந்த டிக்கிரித் தொகையில் அது வுளவடைக்கப்படவேண்டிய தென்றும், அத்தொகை விஷயமாகத்தான் வழக்கிட்டிருப்பதாகவும் அது வியரந் தெரிந்து K தன்மருமகன் பேரில் மேடர் செய்து வைத்திருப்பதாகவும், அதனுலிந்த மேடரை அங்கீகரிக்கக் கூடாதென்றும், டிக்கிரி கடன்காரனுகிய 4—வது எதிர் மனுதார் கக்ஷியாடினுர். மேற்கண்ட விஷயங்கள் யாதொன்றைப்பற்றியுந் தீர்மானிக்காமலே அப்பீல்தாருடைய மேடரை யங்கீகரிக்காமல் அதைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். அதனுலிந்த 2—வது மேடர்தார் இந்தக் கோர்ட்டில் அப்பீல் செய்திருக்கிறார்.

யாதொரு விசாரணையுமின்றி கீழ் கோர்ட்டார்மேடரை யங்கீகரிக்காமல் தள்ளுபடி செய்தது பிசகென்றும், மேடர் செல்லத்தகுந்ததாக விருக்கும்பட்சத்தில் மேடரை யங்கீகரிக்காமல் நிராகரிப்பது கோர்ட்டாரினிஷ்டத்தைப் பொறுத்ததல்லவென்றும், பழய சி. பு. கோடு 232 வது செக்ஷனில் "கோர்ட்டார் தகுதியென்று நினைத்தால்" என்ற வார்த்தைகள் புதிய கோடு 21-வது ஆர்டர் 16—வது ரூலில் விடப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கதென்றும், அப்பீல்தாரின் வக்கீல் கக்ஷியாடுகிறார்.

புதிய கோடின்படிக்கும் மேடரை யங்கீகரிப்பது கோர்ட்டாரினிஷ்டத்தைப் பொறுத்ததென்றும், கோர்ட்டார் மேடரை நிராகரிக்கலாமென்றும், 21-வது ஆர்டர் 17-வது ரூலில் "வேண்டும்" என்று சொல்லப்பட்டிருப்பதற்கு நேர்மாறாக 16-வது ரூலில் "கூடும்" என்று சொல்லப்பட்டிருக்கிறதென்றும், பழய சிவில் புரிஸீஜர் கோடின்படி டிக்கிரிதாரன் என்பவர் மேடர் பெற்றவருள்பட என்ற அர்த்தமென்றும், புதியகோடில் டிக்கிரிதாரன் என்று சொல்லப்படுகிறவர் எவருக்கு அனுகூலமாக டிக்கிரி செய்யப்படுகிறதோ அவர்தான் டிக்கிரிதாரன் என்று சொல்லப்படவேண்டியதென்றும், டிக்கிரிதாரனிடமிருந்து மேடர் பெறுகிறவருக்கு 21-வது ஆர்டர் 16-வது ரூல்படி விதிகளேற்பட்டிருக்கிறதென்றும், டிக்கிரி மேடர் பெற்றவனிடமிருந்து மேடர் பெறுதற்கு எவ்வித விதிகளுமேற்படவில்லையென்றும், அதனால் புதியகோடின்படி அப்பீல்தாருக்கு எவ்வித பாத்தியமுங் கிடைக்க மாட்டாதென்றும், எதிர் மனுதார்களின் வக்கீல் வாதிக்கிறார்.

தீர்ப்பு.

அப்பீல்தார் தான் ஒரு டிக்கிரியை மேடர் பெற்றவரிடமிருந்து மேடர் பெற்றிருப்பதாகவும், அதை நிறைவேற்றவேண்டுமென்றும், பாத்தியங்கொண்டாடுகிறார். டிக்கிரி கடன்காராகிய 4-வது எதிர்மனுதார் தாவா டிக்கிரியே மோசடியானதென்றும், இதை மேடர் பெற்றவர் தனக்கு சில தொகை கொடுக்கவேண்டியிருப்பதால் அது இந்த டிக்கிரித் தொகையில் உளவடைக்கப்படவேண்டியதென்றும், தன்னுடைய பாத்தியங்களைத் தெரிந்தே அப்பீல்தாராகிய மருமகன் அவரிடம் மேடர் பெற்றிருப்பதாகவும், தான் முன்னதாகவே அந்த மேடர் பெற்றவர் பேரில் வழக்கிட்டிருப்பதாகவும் கக்ஷியாடுகிறார். கீழ் கோர்ட்டார் விவாதத்திலுள்ள விஷயங்களைப்பற்றி தீர்மானிக்காமலே 4-வது எதிர்மனுதாருடைய வழக்கின் விபரந் தெரிந்தே தாவா மேடர்பெற்றிருப்பதால் அது செல்லத்தக்கதல்லவென்று சப் ஜட்ஜி அப்பீல்தாரின் மனுவைத் தள்ளும்படி செய்திருக்கிறார்கள். இந்த வுத்திரவு நியாயமானதல்ல. மேடர் செல்லும்படியுள்ளதா அப்பீல்தாரன் டிக்கிரியை நிறைவேற்ற பாத்திமுண்டா என்ற விஷயங்களை சப் ஜட்ஜி விசாரித்து முடிவு செய்திருக்க வேண்டிய தவசியமானதென்று அபிப்பிராயப்படுகிறோம். ஆகையால் சப்

ஜட்ஜி செய்த வுத்திரவை ரத்து செய்து அப்பீல்தாருடைய மனுவை மறுபடியும் பயிலில் வைத்துக்கொண்டு விசாரித்து சட்டப்படி முடிவு செய்யும்படி உத்திரவு செய்கிறோம்.

I.L.W 206.

சென்னை ஹைகோர்ட்.

1913வருஷத்திய ரிபரான கேஸ் நம்பர் 41.

தீர்ப்பு 10—11—13.

ஜட்ஜிகள் மிஸ்டர் ஜஸ்டிஸ் எயிலிங் அவர்கள்	கோல்லாசின்னவெங்கடு கைதி அப்பீல்தாரன்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் ஓல்டுபீல்ட் அவர்கள்.	V. சக்கரவர்த்தியவர்கள்

11. [சாக்ஷிய சட்டம்].

குழந்தைகளின் வாக்குமூலங்கள் ருஜுக்களாக அங்கீகரிக்கப்படலாமென்பது.

அப்பீல்தாரன் அவனுடைய மனைவியை ஜூலைமாதம் 25உ இராத்திரி கொலை செய்ததாக குற்றஞ் சாட்டப்பட்டு தண்டிக்கப்பட்டிருக்கிறான். அவனுக்கு விரோதமாக நேரிற்பார்த்த சாக்ஷிகள் அவனுடைய குழந்தைகள் இருவர். இவர்கள் பிராஸிக்யூஷன் திறப்பு 4-5 சாக்ஷிகளாக விசாரிக்கப் பட்டதில் அவர்கள் நடு இராத்திரியில் விழித்துக்கொண்டதாகவும் அப்பீல்தார் கைதி அவனுடைய மனைவியின் கழுத்தை வெட்டுவதை நேரிற்பார்த்ததாகவும் ருஜுச் சொல்லியிருக்கிறார்கள்.

இந்தக் குழந்தைகள் ஆறுவயது, எட்டுவயதுள்ளவைகளாயிருப்பதாகவும், இவர்களை உறுதி மொழியின் பேரிலாவது, பிரமாணத்தின் பேரிலாவது செஷன் ஜட்ஜி விசாரிக்கவில்லையென்றும், அதனாலிவர்களின் சாக்ஷியம் அங்கீகரிக்கத் தகுந்தனவல்லவென்றும், இந்த ருஜுக்களை நீக்கிவிட்டால் எதிரி இந்தக்குற்றஞ் செய்தானென்பதற்கு நேரான சாக்ஷியமில்லையென்றும், எதிரி சித்த ஸ்வாதீனமற்றவனாயிருந்திருக்கிறானென்றும், அதனாலும் எதிரியை விடுதலை செய்ய வேண்டுமென்றும், அப்பீல்தாரின் வக்கீல் கக்ஷியாடுகிறார். இந்தியன் பிரமாணசட்டம் 13 வது செக்ஷன்

படி இந்தக் குழந்தைகளின் வாக்குமூலம் அங்கீகரிக்கத் தகுந்ததென்று பப்ளிக் பிராஸிகியூடர் எதிர்வாதஞ் செய்கிறார்.

இது விஷயமாக இந்தியா ஹைகோர்ட்டார்களின் அபிப்பிராயங்கள் ஒற்றுமையான தாக விருக்கவில்லை. உறுதி மொழியாவது பிரமாணமாவது வாங்காமல் விசாரிக்கப்பட்ட சாக்ஷிகளின் வாக்குமூலங்கள் ருஜுக்களாக அங்கீகரிக்கப்படலாமென பம்பாய் கல்கத்தா ஹைகோர்ட்டார்கள் தீர்மானங்கள் செய்திருக்கிறார்கள். இந்த கோர்ட்டுக் கேஸ் ஒன்றில் இவ்வித வாக்குமூலம் அங்கீகரிக்கத்தகுந்ததென ஜஸ்டிஸ் பார்க்கர் அவர்கள் தீர்மானித்திருக்கிறார்கள் (இ. லா. ரி. 16 சென்னை 105 தீர்மானத்தைப் பார்க்க). அலகபாத் ஹைகோர்ட்டார் மட்டில் இதற்கு மாறாகத் தீர்மானித்திருக்கிறார்கள். (இ. லா. ரி. 10 அலகபாத் 207) இந்திய பிரமாண சட்டம் 13-வது செக்ஷனுடைய கருத்தின்படிக்கும் மேலே சொன்ன தீர்மானங்களின்படிக்கும் இவ்வித கேஸ்களுக்கு இந்த 13-வது செக்ஷன் பொருத்தமானது. இதனால் குழந்தைகளின் சாக்ஷியம் அங்கீகரிக்கத்தக்கன. இந்த ருஜுக்களையன்றி அப்பீல்தாரனே அவனுடைய மனைவியைக் கொலை செய்தானென்பதற்கு அயல்சார்பு சாக்ஷிகளுமிருக்கின்றன.

இந்தக் கேஸ் இந்தியன் பெனல்கோடு 84-வது செக்ஷன்படி எடுத்துக்கொள்ளப்பட வேண்டியதாவென்பது இரண்டாவது விவாதம். இவனை கமிட் செய்த கோர்ட்டார் முன்பாகவாவது செஷ்ஷன் கோர்ட்டிலாவது இந்த கக்ஷி சொல்லவில்லை. இவனுடைய நடவடிக்கைகளினால் இவன் சித்த ஸ்வாதீனமுள்ளவனாகவே யிருந்திருப்பதாகத் தெரிகிறது. இவன் கொடுத்த அப்பீல் மனுவை கவனிக்கும்போது இவன் சித்த ஸ்வாதீனமற்றவனாக விருந்ததாகத் தெரியவில்லை. அப்பீல் விசாரணைக்கு நோட்டீஸ் போனகாலத்தில் இவனுக்கு சித்த ஸ்வாதீனமில்லை யென்று மெடிகல் ஆபீசர் சொல்லி யிருக்கிறார். இவன் தன் மனைவியைக் கொலை செய்ய முகாந்திரம் யாதொன்றுமில்லை, பயித்தியத்தினால் தான் கொலை செய்திருக்கவேண்டுமென இவனுடைய வக்கீல் சொல்லுகிறார். குற்றம் நடந்த காலத்தில் இவனுக்குப் பயித்தியமிருந்திருக்கிறதென்பதற்கு எவ்வித ருஜுவுமில்லை. இவனை கொலை செய்யும்படி தீர்ப்பு சொல்லிவிட்டதால் அது இவனுக்கு பயித்தியத்தை யுண்டுபண்ணி யிருக்கலாம். இதனால் குற்றத்தை

யுறுதிசெய்து தண்டனையை ஆயுள்பரியந்தம் தீபாந்திர சிக்ஷையாக மாற்றுகிறோம். இவனை கிரிமனல் பயித்தியங்கொண்டவனாகச் செய்யவேண்டியதா அல்லது தண்டனைக்குள்ளாக்குவதாவென்ற விஷயம் கவர்ண்மெண்டார் தீர்மானிப்பார்கள்.

22 Indian Cases 737.

அலகபாத் ஹைகோர்ட்டு

1913வருஷத்திய கிரிமனல் ரெவிஷன் மனு நம்பர் 843.

தீர்ப்பு 28—11—13.

ஜட்ஜிகள். ஜஸ்டிஸ் ஸர் P. C. பனர்ஜி Kt. அவர்கள் மிஸ்டர் ஜஸ்டிஸ் ரய்வ்ஸ் அவர்கள்	வில்லியம் வீவில் கேயமர் மனுதார் V சக்கரவர்த்தி எதிர்கக்ஷிக்காரர்

20. [கிரிமினல் புரீஸிஜர் கோடு]

ஒரு கேசை ஒரு மாஜிஸ்டிரேட் விசாரித்து எதிரியை விடுதலை செய்த பிறகு அதே குற்றத்துக்கு அவனை மறுபடியும் விசாரித்து முடிவு செய்யலாமென்பது.

மிஸ்டார்ஸ் வில்லியம்ஸ் என்பவள் தனக்காக மோடார் வண்டி முதலியன வாங்க கேமர் என்பவனிடத்தில் ரூபாய் கொடுத்ததாகவும், அத்தொகையை யவன் மோசஞ் செய்துவிட்டதாகவும், மற்றுஞ் சில குற்றங்களைச் சாட்டி முதலாவது வகுப்பு மாஜிஸ்டிரேட்டிடம் பிராது கொடுத்து நடவடிக்கை நடத்தியதில் அவர் அந்தக் கேசை விசாரித்து 1913 வருஷம் மார்ச்சு மாதம் 17 தேதி எதிரியை எல்லா குற்றங்களினின்றும் விடுதலை செய்தார். பிறகு இந்த மிஸ்டார்ஸ் வில்லியம்ஸ் அந்த கேமர் இவளுக்காக மோடார் வண்டி வாங்கின வகையில் ரூபா 182 சொந்த வுபயோகப்படுத்தி விட்டதாக போலிசாரிடந் தெரிவித்து அவர்கள் மூலமாகக் கேசை சார்ஜ் செய்யப்பட்டது. இந்தக் கேஸ் அந்த முதலாவது வகுப்பு மாஜிஸ்டிரேட் கோர்ட்டாரிடமாகவே விசாரணைக்கு வந்தது. இதே விஷயத்தைப்பற்றி இவர் முன்கேசில் விசாரித்தபோதிலும் வேறு சாக்ஷிகளை விசாரித்து எதிரிபேரில்குற்றப் பத்திரிகை வாசித்து விட்டார்கள். இதன்பேரில் எதிரி தன்னை யிதே கேஸ் விஷயமாக ஏற்கனவே விசாரித்து விடுதலை செய்து

விட்டதால் அதே கோர்ட்டார் அதே குற்றத்துக்காக இரண்டாவது தடவை விசாரிப்பது சட்ட விரோதமானதென்று இந்தக் கோர்ட்டில் ரெவிஷன் மனுக் கொடுத்திருக்கிறார். இது விஷயமாக நாம் இந்தக்கோர்ட்டுத் தீர்மானம் A-W-N (1895) 86 தீர்மானத்தை யனுசரித்துத் தீர்ப்பு செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம். அது கி. பு. கோடு 203-வது செக்ஷன்படி தள்ளுபடி செய்யப்பட்டதாக விருந்தபோதிலும் அதன் கருத்துகளை யிந்தக் கேசில் நாம் உபயோகப்படுத்தவேண்டும். இதனால் மாஜிஸ்டிரேட் இந்தக் கேசை புனர்விசாரணை செய்ய அதிகாரமுடையவர். இந்த ரிவிஷன் மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

22 Indian Cases 145.

சென்னை ஹைகோர்ட்.

1901 வருத்திய கிரிமனல் ரெவிஷன் கேஸ் நம்பர் 335.

பெட்டிஷன் நம்பர் 224.

தீர்ப்பு 20—9—1901.

ஜட்ஜிகள்	
ஸர் அர்னல்ட் வொயிட் Kt. சிவ்ஜஸ்டிஸ்	
மிஸ்டர் ஜஸ்டிஸ் பாஷியமய்யங்கார்	மகமதுகாசிம். எதிரிமனுதார்.

21. [கிரிமனல்புரிஸீஜர்கோடு.]

குறுக்குவிசாரணையை நிறுத்திவைக்க வேண்டுமென்று எதிரி கேட்க பாத்திய மில்லையென்பது.

சாத்தூர் முதலாவது வகுப்பு ஸ்பெஷல் அஸிஸ்டெண்டு மாஜிஸ்டிரேட் கோர்ட்டார் செய்த இரண்டு வுத்திரவுகளின் பேரில் இந்தரெவிஷன்மனு கொடுக்கபட்டிருக்கிறது. எதிரிதான் செய்யவேண்டிய குறுக்குவிசாரணையை பிராஸிகியூஷன் திறப்பு சாக்ஷிகள் எல்லோரையும் பிரதமவிசாரணை செய்தபிறகுதான் அவ்விசாரணை செய்யப்படவேண்டுமெனக் கேட்டு மாஜிஸ்டிரேட் அந்தப்படி நிறுத்திவைக்க மாட்டேனென்று வுத்திரவு செய்துவிட்டார். இந்தமனு இரண்டு ஆதாரங்களின் பேரிற் கேட்கப்பட்டிருக்கிறது.

(1) பிராஸிகியூஷன் திறப்பு சாக்ஷிகள் எல்லோரையும் பிரதம விசாரணை செய்த பிறகுதான் அவர்களை எதிரி குறுக்கு விசாரணை செய்ய பாத்தியமுண்டு.

(2) அவ்வித பாத்தியம் எதிரிக்கு இல்லை யென்று ஏற்பட்டாலும் எதிரிகேட்டுக் கொண்டபடி குறுக்கு விசாரணையை நிறுத்திவைக்க வேண்டியது உஜிதமான காரியம். குறுக்கு விசாரணை செய்யும்படியான பாத்தியம் எதிரிக்கு கிரிமனல் புரிஸீஜர்கோடு 208-வது செக்ஷன் பாரா 2ன்படி ஏற்பட்டிருக்கிறது. அதன்படி எதிரி குறுக்கு விசாரணையை நிறுத்திவைப்பதற்கு அவருக்கு எவ்வித பாத்தியமு மில்லை. இவ்விதகுறுக்கு விசாரணை நிறுத்திவைக்கப்படுவதில் மாஜிஸ்டிரேட் தன்னுடைய அபிப்பிராயத்தை யுபயோகிக்கலாமென்ற விஷயமும் நமக்கு சந்தேகத்துக் கிடமாயிருக்கிறது. குறுக்கு விசாரணை நிறுத்தவைக்கப்படுவது வழக்கத்திலிருந்து வருகிறது. குறுக்கு விசாரணையை நிறுத்திவைக்கும்படி அனுமதி கொடுப்பது கிரமமல்லாத விஷயமான தாக விருந்தபோதிலும் அவ்வித வுத்திரவு செல்லுபடியற்றதாக மாட்டாது. மாஜிஸ்டிரேட் தன்னுடைய அபிப்பிராயத்தை யுபயோகிக்கக்கூடிய விஷயமானதாகவிருந்தபோதிலும் இந்த விஷயத்தில் அவர் செய்தது நியாயமானதே. இதனாலிந்த ரெவிஷன் மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன.

22 Indian Cases. 173

சென்னை ஹைகோர்ட்டு.

1913 வருத்திய கிரிமனல் ரெவிஷன் மனுநம்பர்கள் 351. முதல் 354.

தீர்ப்பு 7—11—13.

ஜட்ஜி	
மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லரவர்கள்	காட்டுவா ராவுத்தன் வு. எதிரிகள்.

1. [இந்திய ஆயுதச்சட்டம்.]

லைசன்ஸைப் புதுப்பிக்க காலதாமதஞ் செய்ததினால் துபாக்கியை பறிமுதல் செய்யக் கூடாதென்பது.

எதிரிகள் தாங்கள் உபயோகித்து வந்த துபாக்கிகளுக்கு லைசென்ஸ் புதுப்பித்துக் கொள்ளாமல் காலதாமதஞ் செய்ததால் எதிரிகள் ஆயுதச் சட்டம் (1878 வருத்திய 9-வது ஆக்டு

16 வது செக்ஷன்படி குற்றஞ்சாட்டப்பட்டு சப்டிவிஷனல் மாஜிஸ்டிரேட் அவர்களுக்கு அபராதம் விதித்ததுடன் துபாக்கிகளை பறி முதலுஞ் செய்து விட்டார்கள். இது விஷயமாக செஷஷன் கோர்ட்டுக்கு அப்பீல் செய்ததில் செஷன் ஜட்ஜ இந்தக்கோர்ட்டுக்குரிபொனஸ் செய்திருக்கிறார்.

காலதாமதஞ் செய்ததற்கு அபராதம் விதித்ததே போதுமான தண்டனையாகும். லைசென்ஸ் புதிப்பிக்கப் படுகிறவரையில் ஆயுதங்களை கிரமப்படி போலீஸ் ஸ்டேஷனில் வைத்துவைக்க வேண்டியதேயன்றி சர்க்கா ராதாயஞ் செய்யக் கூடாது. இதனால் சப்டிவிஷனல் மாஜிஸ்டிரேட் செய்த வுத்திரவு ரத்து செய்யப்பட்டது. லைசென்ஸ் புதிப்பிக்கப்படுகிறவரையில் துபாக்கிகள் போலீஸ் ஸ்டேஷனில் வைத்து வைக்கப்படவேண்டும்.

22 Indian Cases. 165.

பம்பாய் ஹைகோர்ட்டு.

1913 வருத்திய கிரிமனல் ரேவிஷன் நம்பர் 166.

13—7—13.

ஜட்ஜிகள்.
மிஸ்டர் பாச்சலர் அவர்கள்
மிஸ்டர் ஜஸ்டிஸ் ஷா அவர்கள்.

மோரோ பல்வண்ட் மாராதி எதிரி மனுதார்.
V.
சக்காவர்த்தி.

14. [இந்தியன் பெனல்கோடு.]

வக்கீல்களுக்கு ஏற்பட்ட சர்க்கார் கட்டடத்தில் அன்னியர் பிரவேசித்தால் அவரை பலவந்தமாக வெளிப்படுத்துவது குற்றமாகாதென்பது.

வக்கீல் அல்லாத ஒருவன் கோர்ட்டில் வக்கீல்களுக்கு ஏற்பட்ட விடுதியில் வந்ததை அங்கிருந்த வக்கீலாகிய எதிரி தடுத்து அந்த விடுதியில் அன்னியன் வரக்கூடாதென்றேற்பட்ட விதியை அவருக்கு வாசித்துக் காட்டினார். அந்த அன்னியனாகிய வாதி தானந்த விடுதியைவிட்டுப் போவதில்லையென்று பிடிவாதமாக அந்த விடத்திலேயே உட்கார்ந்தார். இதன்பேரில் எதிரி அவரிடஞ் சென்று வாதியை வெளியே தள்ளிவிட்டார். இதன் பிற

கும் வாதி அந்த கட்டடத்துக்குள் பிரவேசித்தார். அதனால் எதிரி கோபங்கொண்டு துர்பாஷையாக திட்டினார். பின்பு அவ்விதங் கோபத்தினால் திட்டியதைப்பற்றி மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். இதற்கு மூன்று தினங்கழித்து வாதி எதிரிபேரில் பிராது கொடுத்ததில் எதிரிபேரில் இ. பி. கோடு 352-வது 504-வது செக்ஷன்படி குற்றஞ்சாட்டி ரூபா 16 அபராதம் விதித்தார்கள். இது அப்பீலிலும் உறுதி செய்யப்பட்டதின்பேரில் இந்த தெண்டனை சட்டவிரோதமானதென்று இந்தக் கோர்ட்டில் ரெவிஷன் மனு கொடுபட்டிருக்கிறது.

வக்கீல்களுக்கு ஏற்பட்ட விடுதியானது வக்கீல்களுக்குச் சொந்தமானதாகையால் அதைவிட்டுப் போகும்படி எதிரி கண்டித்துச் சொல்லியுங் கேளாமல் பிடிவாதமாக அதைவிட்டு போகமாட்டேனென்று சொன்னதானது எதிரிக்கு கோபத்தையுண்டு பண்ணியதால் வாதியை அந்த விடுதியினின்றும் வெளிப்படுத்தியது எதிரி தனது தற்காப்பை யதிகப்படுத்தியதாகமாட்டாது அதனால் எதிரிபேரில் இ. பி. கோடு 352-வது செக்ஷன்படி குற்றஞ்சாட்டியது சட்ட விரோதம்.

திட்டியதாகச் சொன்ன வார்த்தை யெப்போதும் வழக்கத்திலுபயோகபட்டதாக விருப்பதுடன் அது விஷயத்தைப்பற்றி மன்னிப்புங் கேட்டுக்கொண்டிருக்கிறார். மேலும் அவ்விதந் திட்டியது இந்தியன் பெனல்கோடு 95-வது செக்ஷன்படி குற்றமாக மாட்டாது. அதனால் 504—வது செக்ஷன்படி குற்றஞ் சாட்டியதும் பிசகு. இதனால் கீழ்கோர்ட்டார்கள் செய்த தீர்ப்பை ரத்து செய்து மனுதார் எதிரிக்கு விதித்த தண்டனையை ரத்து செய்திருக்கிறோம்.

22 Indian Cases 158.

சென்னை ஹைகோர்ட்டு.

1912 வருத்திய ஸிடி சீவில் கோர்ட்டு அப்பீல் நம்பர் 28.

தீர்ப்பு 11—3—14.

ஜட்ஜிகள்.
ஸர் அர்னால்ட் வொயிட் சீவ்ஜஸ்டிஸ்
ஜஸ்டிஸ் ஓல்ட்பீல்ட்.

ஆண்டாளம்மாள் (பிரதிவாதி) அப்பீல்தாரி
V.
நாசிம்மராகவாசாரியார் வு (எதிர் கக்ஷிக்காரர்கள்) வாதிகள்.

36. [இந்துலா.]

மேஜரான பிள்ளை பெயராலும் மைனர் பிள்ளைகள் பெயரா
லும் தாயார் சாசனம் வாங்குவது செல்லுபடியற்றதாகமாட்டா
தென்பது.

வாதிகளில் மூத்தவர் மேஜர். மற்ற இருவரும் அவருடைய
மைனர் சகோதரர்கள். இவர்களின் ரூபாயைக் கொண்டு இவர்
களின் தாயார் பிரதிவாதியின் புருஷனிடமிருந்து ஒரு வீட்டில்
இரண்டு அறைகளும், ஒரு தாழ்வாரமும் கிரயத்துக்கு வாங்கிய
தாகவும், அவை தங்களுக்கு ஸ்வாதீனமாக வேண்டுமென்றும்
வழக்கிட்டார்கள். தாவாவிற் கண்ட கட்டடங்கள் பிரதிவாதியின்
குடியிருப்புக்காக பிரதிவாதியின் புருஷனால் கொடுபட்டிருப்ப
துடன் அவளுடைய ஜீவனும் சத்துக்காக அச்சொத்தில் பொறு
ப்பு ஏற்பட்டிருக்கிறதென்றும் தனக்கிருக்கும் இந்த பாத்தியங்
களைத் தெரிந்தே வாதிகளின் தாயார் தாவா சாசனம் பெற்றிருப்
பதால் தன்னை தாவா சொத்துக்களினின்றும் அப்புறப்படுத்தக்
கூடாதென்றும், தாவாசொத்து வாதிகளின் தாயாருக்கு ஸ்திரீ
தனசொத்தாகையால் அவள் ஜீவதிசைக்குப் பிறகு இச்சொத்துக்
கள் வாதிகளின் சகோதரிக்குக் கிடைத்து விட்டதென்றும் பிரதி
வாதிகக்ஷிபாடினாள். விவாதங்களை எடுத்துப் பேசிய காலத்தில்
தாவாசாசனம் மைனர்களுக்காக வாங்கப்பட்டிருப்பதால் அது
சட்டப்படி செல்லுபடியற்றதென்று மற்றொரு கக்ஷியும் பிரதிவா
தியாற் சொல்லப்பட்டது. பிரதிவாதிக்கு தாவா சொத்துக்களில்
குடியிருப்பு பாத்திய மிருப்பது தெரியாமலே வாதிகளின் தாயார்
இவைகளை வாதிகளின் தொகையைக் கொண்டு தன் பெயரால்
சாசனம் வாங்கிய தாகவும், தாவாசொத்துக்களில் எவ்வித பொ
றுப்பும்ஏற்படவில்லை யென்றும்,வாதிகளின் தாவாப்படியேஸிட்டி
ஸீவில் ஜட்ஜி தீர்மானித்து விட்டார்கள். இதன்பேரில்பிரதிவாதி
யால் இந்த அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது.

தீர்ப்பு

பிரதிவாதிக்குள்ள குடியிருப்பு பாத்தியந் தெரிந்து. கொள்
ளாமலே வாதிகளின் தாயார் வாதிகளின் தொகையைக் கொண்டு
அவர்களின் நன்மையின் பொருட்டு தாவாசாசனம் வாதிகளின்
தாயாரால் வாங்கபட்டதென்றும், பிரதிவாதிக்கு தாவா சொத்

தில் எவ்வித பொறுப்பும் ஏற்படவில்லையென்றும் அவள் தாவா
சொத்துக்களில் குடியிருப்பு பாத்தியதையை அடையவில்லையென்
றும், கீழ்கோர்ட்டார் தீர்மானித்தது சரியானதென்றே நாங்களும்
ஒத்துக்கொள்ளுகிறோம்.

அப்பீல்தாரி முக்கியமாக வாதிக்கும் விஷயம் அவளுடைய
ஸ்டேட்மெண்டில் சொல்லப்படவில்லை. அது விஷயமாக இஷ்ஷிப்பு
வும் ஏற்படவில்லை. இப்போது அது விஷயமாக விவாதஞ் செய்ய
லாமாவென்பது சந்தேகத்துக் கிடமாயிருக்கிறது. 2—3 வாதிகள்
தாவா சாசன காலத்தில் மைனர்களாயிருந்திருப்பதால், அது சட்
டப்படி செல்லுபடியற்றதென்பது தான் முக்கிய விவாதம். ஒரு
மைனரால் செய்து கொடுக்கப்பட்ட பெந்தகம் செல்லமாட்டா
தெனப் பிரிவிக்கவுன்ஸலில் தீர்மானித்திருக்கிறார்கள் (இ-லா-ரி 30
கல்கத்தா 539) மைனருக்குச் செய்துகொடுக்கும்சாசனம் செல்லு
படியற்றதென்று இந்தக் கோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட்டிருக்
கிறது (19 சென்னை லா ஜர்னல் 752.)

தாவா கேசிலுள்ள விஷயங்களைக் கவனிக்கும்போது அந்தத்
தீர்மானங்கள் இந்தக் கேசுக்குப் பொருத்தமானவையல்லவென்று
தெரிகிறது. தாவா சாசனம் வாதிகளின் தாயார் பெயரால் வாதி
களின் தொகையைக்கொண்டு வாங்கப்பட்டிருக்கிறது. வாதிக
ளில் அப்போது ஒருவன் மேஜராயிருந்திருக்கிறான். இந்தக் கே
சின் விஷயங்களினால் வாதிகளுக்கு டிரஸ்டியாகவிருந்து வாதி
களின் தாயார் தாவா சாசனம் பெற்றிருக்கிறாள். தாவா சாச
னம் சௌகரியார்த்தமாக வாதிகளின் தாயார் பெயரால் ஏற்பட்டி
ருந்தபோதிலும் முதல்வாதி அப்போது மேஜராகவிருக்கிறபடி
யால் அவர் மானேஜிங் மெம்பர் ஸ்தானத்தில் குடும்பச் சொத்தைக்
கொண்டு வாங்கினதாக எண்ணப்படவேண்டும். மேற்சொ
ன்ன இரண்டு வகைகளிலும் தாவா சாசனம் செல்லுபடியுள்ளதா
கும். இதனால் முதல்வாதி தனக்காகவும் மைனர் 2—3 வாதிக
ளுக்கு அடுத்த சிநேகிதராகவும் வழக்கிட பாத்தியமுடையவர்.
இந்த அப்பீல் செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

I. L. W. 379.

சென்னை ஹைகோர்ட்டு.

1912 ஹ்லத்திய அசல் தீர்ப்பு அப்பீல் நம்பர் 28.

தீர்ப்பு 17—12—13

ஜட்ஜிகள் ஸர் சார்லஸ் அர்னால்ட் வொயிட் சீவ் ஜஸ்டிஸ் அவர்கள் ஜஸ்டிஸ் ஓல்ட்பீல்ட் அவர்கள்	M. மீனாட்சியம்மாளென்கிற சின்னம்மாள் அப்பீல்தாரி (பிரதிவாதி) V M. மாணிக்கசெட்டி எதிர் கக்ஷிக்காரர் (வாதி)

37. [இந்துலா]

புருஷன் பெயரால் ஏற்பட்ட சாசனசொத்துக்கு பெண்ஜாதி பெயரால்பட்டா ஏற்பட்டிருப்பதைக் கொண்டும் அவள் சர்க்கார் கிஸ்திசெலுத்துவதைக்கொண்டும் அச்சொத்து அவளுடைய சொந்த சொத்தென்றெண்ணப்படக் கூடாதென்பது.

வாதியின் சகோதரன் காளப்பசெட்டி அவர் மனைவி அம்மாயி அம்மாளுடைய பாட்டியார் பொன்னம்மாளிடமிருந்து வீடு வகையராவை 1854 வருஷத்தில் சாசனம் வாங்கினார். இந்த வீடுவகைரா குடும்பப் பொதுத்தொகையினின்றும் வாங்கப்பட்டதென்றும், அதனால் தன்னுடைய பாகங் கிடைக்கவேண்டுமென்றும் வாதி தன் சகோதரர் காளப்பசெட்டி பேரில் பாக வழக்கிட்டார். அந்த வீடு வகைரா தன்னுடைய சுயார்ஜித சொத்தைக்கொண்டும், தன்னுடைய மனைவியின் தொகையைக் கொண்டும் வாங்கப்பட்டதென்று காளப்பசெட்டி கக்ஷியாடினார். அதனால் வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. இந்த வழக்குக்குப் பிறகு இந்த காளப்பசெட்டி தான் அந்த சொத்தை தன்னுடைய மனைவிக்குகொடுத்து விட்டதாகவும், அதனால் அவள் பெயருக்கு சர்டிபிகேட் கொடுபடவேண்டுமென்றும், கலெக்டருக்கு அவர் மனுசெய்துகொண்டதின் பேரில் அந்தப்படி கலெக்டர் சர்டிபிகேட் கொடுத்துவிட்டார். இவ்விதம் இவர் தன் மனைவிக்கு இனாமாகக் கொடுத்ததற்கு எவ்வித ரிஜிஸ்டரான தஸ்தாவேஜியுங் கிடையாது. 1899 வருஷத்தில் அம்மாயி அம்மாள் இச்சொத்துக்களை தன்னுடைய பெண் பச்சையம்மாளுக்கு இனாமாகக் கொடுத்து விட்டாள். அவள் 1903 வருஷத்தில் இறந்துவிட்டபடியால் அச்சொத்துக்களை அவள் புருஷன் முருகேசன் செட்டி கைப்பற்றி விட்டார். வாதி தான் காளப்ப செட்டியாருக்கு அனந்தரவார்சுபாத்திய முடையவரென்றும், பச்சையம்மாள் ஜீவதசைக்குப் பின் தான் அச்சொத்துக்களையடையப் பாத்திய முடையவரென்றும் அவை தனக்கு கிடைக்க வேண்டுமென்றும் வழக்கிட்டார். பிரதிவாதி முருகேசன் செட்டியார் வழக்கின் மத்தியிலிறந்து விட்டபடியால் அவருடைய இரண்டாவது மனைவி அவருக்கு வார்சாக நியமிக்கப்பட்டாள். காளப்ப செட்டியார் பொன்னம்மாளிடமிருந்து சாசனம் பெற்றது, தன்னுடைய மனைவியின் நன்மையின் பொருட்டு பெயரிரவலாக சாசனம் பெற்றாரென்றும், இந்த பாத்தியமில்லை யென்று ஏற்பட்டாலும், இந்த அம்மாயி அம்மாள் பெயரால் கலெக்டர் சர்டிபிகேட் கொடுத்து 12 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக இந்தக் காளப்ப செட்டியாரின் பாத்தியதைக்கு விரோதமாக அனுபவித்து வருவதால் வாதியின் தாவா காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுப் போய்விட்டதென்றும், பிச்சையம்மாள் தாவா வீட்டுக்கு விசேஷத் தொகை செலவழித்து விர்த்தியாம்சஞ் செய்திருப்பதால், எந்த விதத்திலும் அந்த விர்த்தியாம்சத்தொகையாவது தனக்குக் கிடைக்கக்கூடியதென்றும், பிரதிவாதி கக்ஷியாடினான். கீழ்கோர்ட்டார் பிரதிவாதியின் விவாதங்களைத் தள்ளுபடி செய்து வாதியின் தாவாப்படியே தீர்ப்பு செய்து விட்டார்கள். அதன் பேரில் இந்த அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது.

பொன்னம்மாளால் காளப்ப செட்டியாருக்கு எழுதிவைக்கப்பட்டிருக்கும் உயில் தஸ்தாவேஜிகளினால் இவருடைய மனைவியின் நன்மையை யுத்தேசித்தே இவர்பெயரால் தஸ்தாவேஜி ஏற்பட்டிருக்கிறதென்பது ஸ்பஷ்டமாகத் தெரிகிறதென்றும், மூல புருஷி தன் பேத்திக்கு இனாங் கொடுத்ததை அவள் புருஷன் பெயரால் சாசனவாசகமாக எழுதிக்கொடுத்திருக்கிறாளென்றும், அம்மாயி அம்மாள் பெயரால் சர்டிபிகேட் கொடுக்க மனுக்கொடுத்து அந்தப்படி சர்டிபிகேட் கொடுபட்டதும், அவள் அதன் பிறகு அனுபவித்து வந்ததும், அந்த இனாங் கொடுபட்டதின் எண்ணத்தை ஸ்பஷ்டமாகத் தெரிவிக்கிறதென்றும், பச்சையம்மாள் நல்ல எண்ணத்துடன் டிரான்ஸ்பர் பெற்றுத் தன்னுடைய நகைகளை விற்று விசேஷ விர்த்தியாம்சஞ் செய்திருப்பதால் பிரதிவாதிக்கு அந்த விர்த்தியாம்சத்தொகை கிடைக்கக்கூடியதென்றும், அப்பீல்தாரியின் வக்கீல் கக்ஷியாடுகிறார்.

தீர்ப்பு.

காளப்ப செட்டியாருக்கு பொன்னம்மாளால் 1854ம் வருஷத்தில் எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கும், கிரயசாசன தஸ்தாவேஜி அவ்வித தஸ்தாவேஜியாக எண்ணப்படக்கூடாதென்பதற்கு எவ்வித ஆதாரமுமில்லை. அது பெயரிரவலாக ஏற்பட்ட தஸ்தாவேஜி என்பதற்கு அப்பீல்தாரியின் வக்கீல் பொன்னம்மாளால் இந்த சாசனதேதிக்கு முன்னேற்பட்ட இரண்டு உயில் தஸ்தாவேஜிகளை தன் கக்ஷிக்கு ஆதாரமாக எடுத்துச் சொல்லுகிறார். அதில் பொன்னம்மாளின் பேத்தியுடைய புருஷன் என்றுஎழுதப்பட்டிருப்பதால், அது பெயரிரவலான தஸ்தாவேஜி யென்று சொல்லுகிறாள். அந்த வாசகத்தினால் பெயரிரவலாகுமென்று நினைக்க ஹேதுவில்லை. இந்தக் காளப்பசெட்டியார் தன் மனைவி பெயரால் சர்டிபிகேட் கொடுபடச் செய்தது இனாமாகக் கொடுத்துவிட்டதாக எண்ணப்படக்கூடாது. இவள் இந்த சர்டிபிகேட் பாத்தியதையின் பேரில் 12 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தீர்வை செலுத்திவந்ததானது விரோதமான பாத்தியதையுடன் அனுபவித்ததாக எண்ணப்படக்கூடாது. இவள் தன் புருஷனை விட்டு விலகித் தனிமையில் அனுபவித்து வந்தாளென்பதற்கு எவ்வித ருஜுவுமில்லை. இதனால் கீழ்கோர்ட்டார் இந்த தாவாவுக்கு காலாவதி தோஷமில்லையென்று சொன்னது சரியானதென்றே நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம்.

வீடுவகையரா விர்த்தியாம்சஞ் செய்யப்பட்டது அம்மாயி அம்மாளாலென்று ருஜுவேற்பட்டிருக்கிறது. பச்சையம்மாளாலேற்பட்டதென்பதற்குத் தகுந்த ருஜுக்கிடையாது. அந்த அம்மாயி அம்மாள் பராதீனம் பெற்றவளல்ல. அவளால் விர்த்தியாம்சஞ் செய்த தொகையைப்பற்றிப் பிரதிவாதி பாத்தியங் கொண்டாட அருகமுள்ளவளல்ல. இந்த அப்பீல் செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

I. L. W. 360

சென்னை ஹைகோர்ட்டு

1913ளுத்திய 2வது அப்பீல் நம்பர் 879

தீர்ப்பு 6—3—14.

ஜட்ஜிகள்	அஸமன் ருமருவ் அப்பீல்தார் (வாதி)
ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள்	V
ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யரவர்கள்	ஸிகரடரி அவ் ஸடேட்
	இந்தியா கவுன்ஸலில்

2. [ரெவினியு]

நிலத்தீர்வை விதிக்கும் விஷயத்தில் கவர்ன்மெண்டாருக்கு ஜாஸ்தியான பாத்தியமுண்டு என்பதும், அதுவிஷயத்தில் சீவில் கோர்ட்டார் பிரவேசித்து யாதொரு தீர்மானமுஞ் செய்யக் கூடாதென்பதும், ஒருவர் சிவாஜிமா தீர்வை செலுத்திவருவதைக் கொண்டு அவருக்கு அந்நிலத்தில் சுதந்திர பாத்தியங் கிடையாதென்பதும், ரயித்வாரி நிலக்காரருக்குப் பட்டா கொடுக்க கவர்ன்மெண்டார் கடமைப்பட்டவர்களல்ல வென்பதும்.

தாவாவிற்கண்ட நிலம் வாதிக்கு முன்னால் சொந்தமாக விருந்து வந்ததாகவும், இவருடைய பாத்தியதையை கவர்ன்மெண்டார் ஆக்ஷேபித்ததின் பேரில் இந்த நிலம் தனக்கு அடமானஞ் செய்யப்படவேண்டுமென தர்க்காஸ்து மனு கொடுத்ததாகவும், அதன்பேரில் கலெக்டர் தாவா நிலத்தில் ரயில்வே வுபயோகத்துக்கு எவ்வளவு பாகம் எடுத்துக்கொள்ளுவார்கள் என்ற விபரம் தெரிந்தபிறகுதான் பாக்கியாகவுள்ளநிலங்களுக்குப்பட்டாக்கொடுக்கும்படி உத்திரவு செய்யப்படுமென்றும், அது பரியந்தம் ஏகரு 1க்கு ரூபாய் 4 வீதம் சிவாஜிமா தீர்வை வசூலிக்கப்பட வேண்டுமெனக் கலெக்டர் 1892-ம் வருஷத்தில் உத்தரவு செய்ததாகவும், இந்த உத்தரவை யனுசரித்து தாசில்தார் வாதிக்கு உத்தரவனுப்பி சிவாஜிமாத்தீர்வை வசூலித்து வந்ததாகவும்,ஜாஸ்தி நிலம் அனுபவிப்பதாக மேலதிகாரிக்கு தெரிவிக்கப்பட்டவுடன் அந்த நிலத்துக்குஅந்த ரேட்டுப்படி சிவாஜிமாத் தீர்வை வசூலித்துவர1896-ம் வருஷத்தில் உத்தரவு செய்யப்பட்டதாகவும், வாதி தாவா நிலம் தனக்கு சாஸ்வதமாகக் கிடைத்துவிடுமென்ற நம்பிக்கையின் பேரில் விசேஷ மரங்கள் வைத்து பயிராக்கியும் விசேஷ தொகை செலவழித்து பலமான கட்டடங்கள் கட்டியும் விர்த்தி செய்திருப்ப

தாகவும், 1904-ம் வருஷத்தில் இந்நிலங்களில் சில பாகம் ரயில்வேயின் உபயோகத்துக்காகஎடுத்துக்கொண்டதாகவும், அதுபோக பாக்கி நிலத்துக்கு 1893 - 1896 இந்த வருடங்களிற் செய்த உத்தரவுகளின்படி தன் பெயரால் பட்டா செய்யும்படி கேட்டுக்கொண்டாதாகவும், ரெவினியூ போர்டாருள்பட எல்லா உத்தியோகஸ்தர்களும் தனது மனுவை தள்ளுபடி செய்துவிட்டதாகவும், தாவா நிலத்தை வருஷத்துக்கு ஏக்கர் 1-க்கு ரூபா 50-க்கு குத்தகைக்கு ஒப்புக்கொள்ள சம்மதிக்காவிட்டால் தாவா நிலத்தை விட்டுவிடவேண்டியதென உத்தரவு செய்திருப்பதாகவும், தாவா நிலம் கவர்ன்மெண்டு உபயோகத்துக்கு வேண்டியதாகவிருந்தால் அதைக் காம்பன்சேஷனன்னியில் கொடுத்து விடவேண்டுமென உத்தரவு செய்திருப்பதாகவும், அதனால் தாவா நிலத்தை 1893, 1896-ம் வருஷங்களிற் பிறந்த உத்தரவுகளின்படி வாதி சுதந்திரமாயனுபவிக்குக்கும்படியான பாத்தியமுடையவரென்பதை ஸ்தாபிக்கும்படிக்கும், அந்தப்படி கவர்ன்மெண்டாரால் தனக்குப் பட்டாக் கொடுக்கப்பட வேண்டுமென்றும், முன் செய்த உத்தரவுகளிற்கண்டபடி ஏகர் 1-க்கு ரூபா 4 வீதம் தீர்வை வசூலிக்கப்படலாமேயன்றி ஜாஸ்தி தீர்வையாவது குத்தகையாவது தன்னிடம் வசூலிக்கப்படக்கூடாதென்றும் வாதி இந்தியா ஸ்டேட்ஸிகரடரியவர்கள் பேரில் வழக்கிட்டார். தாவா நிலத்துக்கு பட்டா கொடுப்பதாக யாதொரு வாக்குறுதியுஞ் செய்யப்படவில்லையென்றும், வாதிக்கு எவ்வித அடமானமும் செய்யப்படவில்லையென்றும் சிவாஜிமாத் தீர்வைமட்டில் வசூலித்துவர உத்தரவு செய்யப்பட்டாதாகவும், அதைக்கொண்டு பட்டாக் கொடுக்கவேண்டுமென பாத்தியங் கொண்டாடக்கூடாதென்றும், பிரதிவாதி கக்ஷியாடினார்கள்.

முதல்கோர்ட்டார் வாதியின்தாவாப்படியேதீர்மானஞ்செய்துவிட்டார்கள். இதைப்பற்றி கவர்ன்மெண்டார் அப்பீல் செய்ததில் தீர்வை விதிப்பதைப்பற்றி சிவில் கோர்ட்டார் தீர்மானிக்க அதிகாரமில்லையென்றும், 1893-1896 வருஷங்களிலேற்பட்ட உத்தரவுகள் தற்காலஅனுபோகத்துக்குமட்டிலேற்பட்டதேயன்றி சாஸ்வதமான அனுபோகத்துக்குக் கொடுபட்டதல்லவென்றும், ரயில்வேயின் உபயோகத்துக்கு வேண்டியிருந்தால் மட்டில் கொடுக்கவேண்டும், மற்றெந்த விஷயத்துக்கும் கொடுக்கவேண்டியதில்லை

யென வாதி சொல்லுவது சரியல்லவென்றும், டிஸ்டிரிக்ட் ஜட்ஜி அப்பீலையங்கீகரித்து வாதியின் வழக்கைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். அதன்பேரில் வாதி இந்தக் கோர்ட்டில் இந்த இரண்டாவது அப்பீல் செய்திருக்கிறார்.

தீர்ப்பு.

1892-ம் வருஷத்தில் வாதி தர்க்காஸ்து மனுக்கொடுத்தார். தாசில்தார் இது விபரம் டிப்டிக் கலெக்டருக்கு தெரிவிக்க, அவர் கலெக்டருக்கு எழுதியதில் அவரால் L அடையாள உத்தரவு செய்யப்பட்டிருக்கிறது. அதில் "ரயில்வேயின் உபயோகத்துக்கு எவ்வளவு பாகம் எடுத்துக்கொள்ளப்படுமென்று தீர்மானமேற்படுகிற வரையில் பட்டாக் கொடுபடமாட்டாது. தாசில்தார் சிபார்சு செய்த தீர்வை (ஏகர் 1-க்கு ரூபா 4) கிரமமானது. அந்தப்படி சிவாஜிமாத் தீர்வை வசூலித்து வரவேண்டும். ரயில்வேயினுபயோகத்துக்கு வேண்டியதில்லையென்ற தீர்மானமேற்பட்டவுடன் பட்டாக் கொடுக்கப்படும்" என்று கண்டிருக்கிறது. இதையனுசரித்து தாசில்தார் வாதிக்கு உத்தரவு செய்திருக்கிறார். 1903-ம் வருஷத்தில் ரயில்வேத் தீர்மானமேற்பட்டது. இதன் பிறகு வாதி பாக்கி நிலங்கள் தன் பெயரால் பட்டாவாக வேண்டுமெனக்கேட்டார். தாவா நிலத்தை வாதிக்கு டெம்பரரியாக குத்தகைக்குக் கொடுக்க இஷ்டமிருப்பதாக கலெக்டர் உத்தரவு செய்தார். ரெவனியூபோர்டார் 1910-ம் வருஷம் நவம்பர் மாதத்தில் அடியிற்கண்ட உத்தரவு செய்தார்கள்.

"தாவா நிலம் குத்தகைக்கு விடப்படவேண்டும் என்பதற்குக்காரணம் தென்படவில்லை. நிவரி கொடுக்கப்பட வேண்டுமென்ற நிபந்தனையின் பேரிலும், பொதுவுபயோகத்துக்கு எப்போது வேண்டியதோ அப்போது காம்பன்சேஷனன்னியில் விட்டுவேண்டியதென்ற நிபந்தனையின் பேரிலும், தர்க்காஸ்து விதிகளின்படி அப்பீல்தாருக்கு அடமானஞ் செய்யப்படவேண்டும் பொது உபயோகத்துக்கு வேண்டியதென்று கவர்ன்மெண்டார் தீர்மானிப்பதே முடிவானது". வாதிதன் பெயரால் பட்டா வேற்படவேண்டுமென்று கேட்பதுமன்றி ஏற்கனவே விதித்த தீர்வையைத் தவிர ஜாஸ்தி தீர்வை ஏற்படுத்த கவர்ன்மெண்டாருக்கு பாத்தியமில்லையென்றுஞ் சொல்லுகிறார். புது செட்டில்மெண்டு ஏற்படாவிட்டாலும், ஜாஸ்தி தீர்வையேற்படுத்த கவர்ன்

மெண்டாருக்கு அதிகார முண்டு. (1864-ம் வருஷத்திய 2-வது ஆக்ட் 58-வது செக்ஷனை பார்க்க.) பட்டா கொடுக்கவேண்டுமென்று கவர்ன்மெண்டாரைக் கட்டாயப்படுத்த எவ்விதசட்டமுமில்லை. தாவா நிலத்துக்கு வாதி பாத்தியமுடையவரென்ற டிக்ளரேஷன் பரிகாரமட்டில் கொடுக்கலாமென்று, முதலில் நினைத்தோம். வாதி கேட்கும் மற்ற பரிகாரங்கள் கொடுபடத்தக்கதல்ல வாகையாலும், இவ்வித டிக்ளரேஷன் பரிகாரங்கள் கொடுப்பது கோர்ட்டாரிஷ்டத்தைப் பொறுத்ததாகையாலும் வாதியின் நிலபாத்தியங்களைப்பற்றி கீழ் அப்பீல் கோர்ட்டார் சொன்ன அபிப்பிராயம் சரியானதல்லவென்று நாம் அபிப்பிராயப்பட்டாலும் கீழ் அப்பீல் கோர்ட்டார் செய்த தீர்மானத்தில் பிரவேசிப்பது கிரமமல்லவென்று நினைக்கிறோம். அதனாலிந்த அப்பீல் தள்ளுபடி செய்யப்பட்டது. உபயக்ஷிக்காரர்களும் அவர்கள் செலவை அவரவர்களே பொறுத்துக்கொள்ளவேண்டியது.

I. L. W. 339.

சென்னை ஹைகோர்ட்டு.

1912 வருஷத்திய சீவில் ரெவிஷன் மனு நம்பர் 622.

தீர்ப்பு 16—2—14.

ஜட்ஜி.	ஆதிராஜசெட்டி மனுதார்
ஜஸ்டிஸ் சதாசிவரய்யரவர்கள்	V.
	வில்லால் புட்டா எதிர்மனுதார்

11. [காண்டிராக்ட் ஆக்ட்].

சாக்ஷி சொல்லுவதற்காக பிராமிஸரி நோட்டு எழுதிக்கொடுப்பது செல்லத்தகுந்ததல்ல வென்பது.

வாதிக்கு பிரதிவாதி எழுதிக்கொடுத்த பிராமசரி நோட்டின்படி தொகை கிடைக்கவேண்டுமென வழக்கிட்டதில், தாவா நோட்டு வாதி ஒரு ஜீவனாம்சக் கேசில் சாக்ஷி சொல்லவேண்டிய தினிமித்தம் எழுதிக் கொடுக்கப்பட்டதென்றும், அது செல்லத்தகுந்ததல்லவென்றும் பிரதிவாதி கக்ஷியாடினார். தாவா நோட்டுக்குப் பிரதிப் பிரயோஜனமில்லையென கீழ்கோர்ட்டார் வாதியின் வழக்கைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். அதனால்

பொரிவின்ஷிபல் ஸ்மால்காஸ் கோர்ட்டு ஆக்ட்டு 25-வது செக்ஷன்படி இந்த ரெவிஷன் மனு கொடுபட்டிருக்கிறது.

4 சென்னை ஹைகோர்ட்டு ரிபோர்ட்டு 7 தாவா கேசுக்கு ஒற்றுமையானதல்லவென்றும், தாவா நோட்டு சாக்ஷி சொன்னவருக்கு எழுதிக்கொடுக்கப்படவில்லையென்றும், மூன்றாவது மனிதனுக்கு எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கிறதென்றும், சாக்ஷி ருஜூச்சொல்லச் சட்டப்படி கடமைப்பட்டிருந்தபோதிலும் வாதி வேறொருவனைத்தூண்டுதல் செய்து சாக்ஷி சொல்லும்படி செய்யக் கடமைப்பட்டவரல்லவென்றும், இவ்விதந் தூண்டுதல் செய்தது தகுந்த பிரயோஜனமாகுமென்றும், வாதியின் தாவா செல்லத்தகுந்ததென்றும் மனுதார் வக்கீல் கக்ஷியாடுகிறார்.

தீர்ப்பு

வாதியின் சினேகிதர்கள் பிரதிவாதி பக்கத்தில் சாக்ஷி சொல்லவேண்டியதினித்தம், வாதிக்கு பிரதிவாதி தாவா நோட் எழுதிக்கொடுத்திருக்கிறார். B சாக்ஷி சொல்ல பொதுவான கடமைப்பட்டவன். அவன் அந்தச் சாக்ஷி சொல்லுவதற்காக Cக்கு A என்பவன் தஸ்தாவேஜி எழுதிக்கொடுப்பது தகுந்த பிரதி பிரயோஜனமாக மாட்டாது (பாலக் இந்தியன் காண்டிராக்ட் ஆக்ட்டு 3வது பதிப்பு 26 பக்கத்தைப் பார்க்க) B செய்யக்கடமைப்பட்ட விஷயத்துக்குஅவருக்காவது வேறொருவருக்காவதுவெகுமதியாக ஏதேனுங் கொடுப்பது பொது நீதிக்கு விரோதமானது. இவ்வித காண்டிராக்ட் செல்லுபடியற்றதாகும். இந்த ரெவிஷன் மனு செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

I-L-W 800.

பிரிவிகவுன்ஸல்.

கல்கத்தா ஹைகோர்ட்டு தீர்ப்பின்பேரில் அப்பீல்

தீர்ப்பு 2—2—14.

ஜட்ஜிகள்.	பிஜால் கோபால் மூகர்ஜி ஆ
லார்ட் ஷா அவர்கள்	அப்பீல்தார்கள்
லார்ட் மௌல்டன் அவர்கள்	V
மிஸ்டர் அமீர் ஆலி அவர்கள்	கிரிந்தானாத் மூகர்ஜி ஆ
	எதிர்கக்ஷிக்காரர்கள்

37. [இந்துலா.]

சமீப அனந்தரவார்சுகளின் சம்மதியின்பேரில் ஒரு விதந்து தன் குடும்ப நிர்ப்பந்தங்களை யுத்தேசித்து அவள் புருஷன் சொத்துக்களைப் பராதீனஞ் செய்தால் அதற்கு அவளிறக்குங் காலத்தில் அவளுக்கேற்பட்ட அனந்தரவார்சுகள் கட்டுப்பட்டவர்களென்பது.

சந்திரபூஷன் மூகர்ஜி என்பவர் எவ்வித சந்ததியுமன்னியில் 1832 வருஷத்தில் இறந்தார். அவருடைய விதந்து சாயாமோனி கோஷா ஸ்திரீயாகையால் அவள் புருஷனுடைய பந்துக்கள் பாமன்தாஸ் ஆ இவளுடைய புருஷன் சொத்துக்களை ஆக்கிரமித்து கட்டிக்கொண்டார்கள். இதனால் அவள் அந்த பாமன்தாஸ் அவருடைய சகோதரர்கள் இவர்கள் பேரில் 1844 வருஷத்தில் வழக்கிட்டாள். இந்தக் கேஸ் பிரிவிகவுன்ஸில் வரையிற்போய் 1858 வருஷத்தில் முடிவு பெற்றது. சங்கடங்கள் இத்துடன் நிவர்த்தியாகவில்லை. இவள் சொத்துக்களை ஸ்வாதீனஞ் செய்துகொள்ள முடியவில்லை. சொத்தை நேரில் அனுபவிப்பவர்கள் குத்தகைத் தொகை செலுத்துகிறதில்லையெனச் சொன்னதால் இவளுடைய பாத்தியங்கள் அபாயகரமான ஸ்திதியிலிருந்தது. இந்தச் சமயத்தில் இந்த விதந்து சாயாமோனி தன்னுடைய காலக்ஷேபத்துக்காக சில தொகைகளை யேற்படுத்திக்கொண்டு இவளுடைய சொத்துக்களை சமீப அனந்தரவார்சுகளிடம் 1863 வருஷம் செப்டம்பர் மாதம் 7 தேதி 60 வருடங்களுக்கு இஜாரா அதாவது குத்தகையாகக் கொடுத்துவிட்டாள். முன்னமே இந்த விதந்துக்கு விரோதமாகக் கக்ஷியாடிய கவுரிபிரசாதுடைய மகன்சரோடா பிரசாத், மற்றொரு அன்னோதா பிரசாத் இவர்களுக்கும் மற்றொரு பாகஸ்தன் பாமன்தாஸுடைய மகனுக்கும் இஜாரா கொடுக்கப்பட்டது. இதனால் சமீப அனந்தரவார்சுகள் எல்லோருக்கும் பங்கிட்டே இஜாரா கொடுக்கப்பட்டது. இந்தக் குத்தகைதார்களில் அன்னோதா பிரசாத் 1882-ம் வருஷத்தில் இறந்து விட்டார். இந்த விதந்து சாயாமோனி 1893-ம் வருஷத்தில் இறந்தாள். அதாவது அந்த அன்னோதா பிரசாத் இறந்து 11-வருடம் வரையில் ஜீவந்தியாக இருந்து வந்திருக்கிறாள். இந்த விதந்து இறந்த பிறகு அந்த அன்னோதா பிரசாதின் பிள்ளைகள் நால்வர்களாகிய இந்த அப்பீல்தார்கள் தாங்கள் இறந்த விதந்தவுக்கு சமீபமான அனந்தர வார்சுகளென்றும், விதந்து தான் ஜீவதிசை வரை

யில் அனுபவிக்கக் கூடிய பாத்தியதையை மட்டில் பராதீனஞ் செய்ய பாத்திய முண்டே யன்றி, அவள் ஜீவதிசைக்குப் பின் செய்த பராதீனஞ் செல்லத் தக்கதில்லை யென்றும், அதனாலந்த இஜாரா ரத்து செய்யப்பட்டு சொத்துக்கள் தங்களுக்கு கிடைக்க வேண்டு மென்றும், வழக்கிட்டார்கள். கீழ் அப்பீல் கோர்ட்டார் தாவாவிற் கண்ட இஜாரா எஸ்டேட்டின் நன்மையை யுத்தேசித்தும் அப்போதிருந்த அவசியங்களை யுத்தேசித்தும் ஏற்பட்டதே யன்றி எவருக்காவது கெடுதி செய்வதற்காக ஏற்பட்டதல்லவென்று வாதிகளின் வழக்கைத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள்.

இந்தக் கேஸ் முழுவதும் ருஜுவம்சங்களைப் பொறுத்ததாக விருக்கிறது. குடும்ப அவசியங்களை யுத்தேசித்து அப்போதிருந்த சமீப அனந்தரவார்சுகளின் அனுமதியின் பேரின் செய்யப்பட்ட விஷயங்கள், இதனால் இந்த அப்பீல் தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாக அபிப்பிராயப் படுகிறோம். தாவாவிற் கண்ட இஜாரா, உதவி செய்ய மனிதரில்லாத கோஷாஸ்திரீயை ஏமாற்றி மோச வகையாக எழுதி வாங்கிய தென்று, அப்பீல்தார்களின் வக்கீல் வாதாடுகிறார். இந்த அப்பீல்தார்களை இந்த விதந்துவால் தங்கள் தகப்பனுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் இஜாராவை யொப்புக்கொண்டு அவர்கள் தகப்பனிறந்த பிறகும் 11 வருடங்கள் வரையில் இந்த இஜாரா லாபங்களை யடைந்து அனுபவித்து வந்திருக்கிறார்கள். இந்த ஏற்பாடு குடும்பத்துக்கு நன்மையானதென்று நம்பியே யிருந்ததாகத் தெரிகிறது. சமீப அனந்தரவார்சுகளின் சம்மதியின்பேரிற் செய்யப்படும் பராதீனங்களெல்லாம் இந்து லாப்படி குடும்ப அவசியத்துக்காக ஏற்பட்டதென்பதே இந்த போர்டார்களின் தீர்மானம் அப்பீல்தார்கள் இது விஷயத்தைப்பற்றி நீண்டகாலமாக ஆக்ஷேபிக்காதிருந்ததே இவர்களுடைய சம்மதியைத் தெரிவிக்கிறது. ஆகையால் இந்த அப்பீலைத் தள்ளுபடி செய்யும்படி மாக்ஷிமை தங்கிய சக்கரவர்த்தியவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

அப்பீல் தள்ளுபடி செய்யப்பட்டது.

28 Indian Cases. 162.

சென்னை ஹைகோர்ட்டு.

1912 ஹூத்திய 2-வது அப்பீல் நம்பர் 2299.

தீர்ப்பு 12—3—1914.

ஜட்ஜிகள்.
ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள்
ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யரவர்கள்.

சரிபாக சின்ன மகாதேவவாயலு ஆ
அப்பீல்தார்கள் வாதிகள்
3 - முதல் 6
V.
முதும் சூரியபிரகாசம் (பிரதிவாதி)

38. [இந்து லா].

புரோகித பாத்தியதையைக் குத்தகைக்கு கொடுப்பது செல்லதகுந்த தல்ல வென்பது.

வாதிகள் செமுடு ஜமீன்தாரி கிராமங்களின் புரோகிதபாத்திய முடையவர்க ளென்றும், அந்தப் பாத்தியங்களை பிரதிவாதியின் தகப்பனுருக்கு குத்தகைக்குக் கொடுத்து வருடம் 1-க்கு ரூபா 12 வீதம் வசூலித்து வந்ததாகவும். பிரதிவாதியின் தகப்பனிறந்த பிறகு பிரதிவாதியே இரண்டு வருடங்களுக்குக்கொடுத்து வந்ததாகவும் பின்பு கொடுக்க வில்லை யென்றும், இது விஷயமாக பிரதிவாதியின் தகப்பன் முச்சலிகா எழுதிக் கொடுத்திருப்பதாகவும், பிலவங்க வருஷத்துக்கு ரூபா 12 தங்களுக்குச் சேர வேண்டிய தென்றும், வாதிகள் வழக்கிட்டார்கள்.

பிரதிவாதி அவர் தகப்பன் கொடுத்து வந்ததை யனுசரித்து இரண்டு வருடம் வரையில் வாதிகளுக்குத்தொகை கொடுத்து வந்திருப்பதால் இந்தத் தொகை கொடுக்கிற தென்ற எண்ணத்துடன் அந்தப் புரோகித வேலை பார்த்து வந்ததாக டிஸ்டிரிக்ட்முனிசிப் கண்டு பிடித்து வாதிகளின் தாவாப்படியே தீர்மானஞ் செய்து விட்டார்கள். இது விஷயமாக பிரதிவாதி அப்பீல் செய்ததில் பிரதிவாதிகள் தொகை கொடுத்துவந்ததால் தாவாவிற்கண்ட வருஷத்துக்கும் தொகை கொடுக்க அவர்கள் சம்மதித்ததாக எண்ணக் கூடா தென்று வாதியின் வழக்கைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். அதன் பேரில் வாதிகள் இந்த 2-வது அப்பீல் செய்திருக்கிறார்கள்.

தீர்ப்பு.

வாதிகள் மாமூல் வழக்கப்படி தங்கள் புரோகித வேலையைப் பார்த்து வரச்செய்ததாகவும், அந்த வகையில் பிலவங்க வருஷத்

தின் தொகை ரூபா 12 தங்களுக்குப் பிரதிவாதியால் கிடைக்க வேண்டுமென்றும் வழக்கிட்டார்கள். வாதிகளுக்கும் பிரதிவாதிக்கும் பில்வங்க வருஷத்துக்கு எவ்வித வுடன்படிக்கையுமில்லையென கீழ் அப்பீல் கோர்ட்டார் வாதிகளின் வழக்கைத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். குறிப்பிட்ட ஒரு மனிதனுக்கு ஒரு கிராமம் அல்லது சில கிராமங்களுக்குப் புரோகித வேலை பார்ப்பதானது ஒருவித சுதந்தரபாத்தியமென்பதை நாம் ஒப்புக்கொள்ளவில்லை. இந்தக் கோர்ட்டு 21 சென்னை லா ஜர்னல் 57 தீர்மானத்திற் கண்டபடி புரோகிதத்தொழில் ஒருவருக்கு ஏகதேசவாத்தியமென்பது பொது நீதிக்கு விரோதமானது. அதனாலதைக் கோர்ட்டார் அங்கிகரிக்க நியாயமில்லை. ஒருவிதத் தொழிலுக்கு ஒருவன் மட்டில் பாத்தியமுடையவனென்றும் மற்றவருக்கு கிடையாதென்றும் சொல்வது பிசகு. பம்பாய் ஹைகோர்ட்டார் இவ்வித பாத்தியங்கள் ஒருவருக்கு உரித்தானதென்று தீர்மானித்திருக்கிறார்கள். அவைகளை நாம் அங்கீகரிக்க நியாயமில்லை. இவ்வித வேலைகளை ஒருவருக்குக் கிரயஞ் செய்வது, பெந்தகம் வைப்பது, அல்லது குத்தகைக்குக்கொடுப்பது இந்து மதத்துக்குவிரோதமானதாக இருப்பதுடன் பொது நீதிக்கும் விரோதமானது. அதனாலிந்த அப்பீலைச் செலவுடன் தள்ளுபடி செய்கிறோம்.

I. L. W. 389.

சென்னை ஹைகோர்ட்டு.

1913 ஹூத்திய 2 வது அப்பீல் நம்பர் 639.

தீர்ப்பு 7—1—14.

ஜட்ஜி.
மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவரய்யரவர்கள்

ஒப்பலம்பள்ளி ராமலெக்ஷமண்ணு
பிரதிவாதி அப்பீல்தாரன்

31. [சிவில் புரீஸிஜர் கோடு]

பெந்தகம் வைத்தவனுடைய பாத்தியதையை மறுத்து அச்சோத்து தன்னுடையதென்று கக்ஷியாடுகிறவரை பிரதிவாதியாகச் சேர்ப்பது பிசகல்லவேன்பது.

பெந்தகம் வைத்தவனுடைய பாத்தியதையை மறுக்கும் ஒருவனை முதல் பிரதிவாதியாகச் சேர்த்து வழக்கிடப்பட்டது

இவர் தன்னை யிந்த நம்பரில் கக்ஷிக்காராராகச் சேர்த்தது பிசகென்று கக்ஷியாடினார். கீழ்க்கோர்ட்டார் இவருடைய ஆக்ஷேபனைகளைக்கவனியாமல் தீர்ப்பு செய்துவிட்டதின்பேரில் அவரால் இந்த இரண்டாவது அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது.

டிரான்ஸவர் அவ் பிராபர்டி ஆகட்டு 85-வது செக்ஷன்படி அப்பீல்தாரன் இந்தக் கேசில் அவசியமான கக்ஷிக்காரரல்லவென்பது நியாயமானதுதான். பெந்தகம் வைத்தவனுக்கு விரோதமான பாத்தியங் கொண்டாடுகிறவன் கக்ஷிக்காராராகச் சேர்க்கப்பட்டு அவர் தன்னை கக்ஷிக்காராராகச் சேர்த்தது பிசகென்று விவாதஞ் செய்யும்பட்சத்தில் அவரை அந்த தாவாவினின்றும் விலக்கிவிடவேண்டிய தவசியமென கல்கத்தா ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள் (இ. லா. ரி. 33 கல்கத்தா 425 தீர்மானத்தை பார்க்க.)இவ்வித நபர்களைத் தாவாவினின்றும் விலக்கிவிடவேண்டுமென்று சிவில் புரிஸீஜர்கோடில் எவ்வித விதியும் ஏற்படவில்லை. சாராம்சங்களைக்கவனிக்கும்போது கீழ்கோர்ட்டார்கள் கண்டுபிடித்தது நியாயமானதென்றே ஒத்துக்கொள்ளுகிறோம். இந்த இரண்டாவது அப்பீல் தள்ளுபடி செய்யப்பட்டது.

22 Indian Cases. 976

அலகாபாத் ஹைகோர்ட்டு.

1912 ஹுலத்திய எக்ஸிகியூஷன் 2-வது அப்பீல் நம்பர் 855.

தீர்ப்பு 4—12—13.

ஜட்ஜி
ஜஸ்டிஸ் ஸர் P. C. பனர்ஜி K. T.
அவர்கள்

கவுரி உபாத்தியா ஆ டிக்கிரிதார்
அப்பீல்தாரர்
V.
துவாரகாசிங் ஆ எதிர் கக்ஷிக்காரர்

32. [சிவில் புரிஸீஜர் கோர்ட்டு.]

கோர்ட்டில் சில தொகை குறிப்பிட்ட காலத்துக்குள் கட்டிவிட்டு சொத்தை வசப்படுத்திக் கொள்ளுகிற தேன்று தீர்ப்பு செய்யப்பட்டிருந்தால் அந்தக் கெடுவுக்கு பிந்தி தொகை கட்டியது செல்லுமென்பதும் இது விஷயமாக செய்யப்படும் உத்தரவின் பேரில் சி. பு கோடு 47 வது சேக்ஷன்படி அப்பீல் செய்யலா மென்பதும்.

வாதி தனக்கு முதல் பிரதிவாதி 1902 ம் வருஷத்தில் ஜுலை மாதம் 16 - ந்தேதி எழுதிக் கொடுத்திருக்கும் பெந்தகக் கடன் பத்திரப்படி தொகையாவது அல்லது பெந்தக சொத்தாவது கிடைக்க வேண்டுமென வழக்கிட்டார். 2-3 பிரதிவாதிகள் பெந்தக சொத்தைச் சாசனம் பெறவர்களானதையாலும்,4-ம் பிரதிவாதி முன் பெந்தகம் பெற்றவரின் விதந்து வானதையாலும் அவர்களும் பிரதிவாதிகளாகச் சேர்க்கப்பட்டார்கள். 2 - 3 பிரதிவாதிகள் எதிர் கக்ஷியாடினார்கள். வாதியின் பெந்தகத்தின்படி ரூபா 50 முன் பெந்தகத்துக்காக வாதி கொடுக்க வேண்டியதென்றும், மேற்படி பெந்தகத்துக்காக 2-3 பிரதிவாதிகளின் சாசனத் தொகையிலும் ரூபா 50 சாட்டி விடப்பட்டதாகவும், கோர்ட்டார் கண்டு பிடித்தார்கள். வாதிக்கு பெந்தகத் தொகை கிடைக்கத் தக்கதில்லையென்றும், ஆனால் ரூபா 50 ஒருமாத கெடுவுக்குள் 2-3 பிரதிவாதிகளுக்காகக் கோர்ட்டில் கட்டிவிட்டு தாவா பெந்தகச்சொத்தை வசப்படுத்திக் கொள்ளுகிறதென்றும் அந்தப்படி தொகை செலுத்தப்படாவிட்டால் பிராது தள்ளுபடி செய்யப்படவேண்டியதென்றும் தீர்ப்பு செய்தார்கள். இந்த தீர்ப்பிற் கண்டபடி கெடுவுக்குள் தொகை கட்டப்படாமல் சில காலங்கிரமித்து கோர்ட்டில் தொகை கட்டப்பட்டது. இவ்விதந் தொகை கட்டிய ஒரு வருடங்கிரமித்து பெந்தக சொத்து வசமாக வேண்டுமென வாதி மனுக்கொடுத்தார். தீர்ப்பிற் கண்டபடி கெடுவுக்குள் தொகை கோர்ட்டில் கட்டப்படாததினாலே வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென பிரதிவாதிகள் கக்ஷியாடினார்கள். தாவா டிக்கிரி ரிடெம்ஷன் டிக்கிரியென்றும், கோர்ட்டில் தொகை கட்ட கெடு கொடுக்கப்படலாமென்றும், வாதியின் டிக்கிரி நிறைவேற்றப்படக்கூடியதென உத்தரவு செய்துவிட்டார்கள். இந்த உத்தரவின்பேரில் அப்பீல் செய்யப்பட்டதில் டிஸ்டிரிக்ட் ஜட்ஜி கீழ்கோர்ட்டார் செய்த உத்திரவை ரத்து செய்து விட்டார்கள். இதன்பேரில் வாதி இந்த இரண்டாவது அப்பீல் செய்திருக்கிறார். டிஸ்டிரிக்ட் ஜட்ஜி செய்த உத்திரவின் பேரில் 2 வது அப்பீல் இடையாதென்று எதிர்கக்ஷிக்காரர்கள் வாதஞ் செய்கிறார்கள். கீழ்க்கோர்ட்டார் செய்த உத்திரவு சி பு. கோடு 47-வது செக்ஷன்படி செய்யப்பட்டதாகையால் டிஸ்டிரிக்ட் ஜட்ஜி செய்த உத்திரவின்பேரில் அப்பீல் செய்யலாம். சாராம்

சங்களை கவனிக்கும்போது முதல் கோர்ட்டார் செய்தது சுத்தப் பிசகாகவிருக்கிறது. டிஸ்டிரிக்ட் ஜட்ஜி அதை ரத்து செய்தது கிரமமானது. இந்த அப்பீல் செலவுடன் தள்ளுபடி செய்யப் பட்டது.

22 Indian Cases 926.

சென்னை ஹைகோர்ட்.

1913 வருஷத்திய 72-ம் நம்பர் அப்பீல் உத்தரவின் பேரில் அப்பீல்.

தீர்ப்பு 27—2—14.

ஜட்ஜிகள் ஜஸ்டிஸ் சங்கரநாயரவர்கள் ஜஸ்டிஸ் எயிலிங் அவர்கள்	மைனர் ரெத்தினசாமிசெட்டிக்கு அடுத்தசிநேகிதன்வேலாயுதஞ்செட்டி அப்பீல்தாரன் V ரெத்தினம்மாள் ஆ எதிர்கக்ஷிகாரர்கள் மனுதார்கள்.

33. [சிவில்புரிஸீஜர் கோடு]

பாத்தியஸ்தாபன வழக்கில் தோகை கிடைக்க வேண்டிய தென்று கக்ஷிக்காரர்கள் இராஜிமனுக் கொடுத்து அந்தப்படி டிக்கிரி செய்யப்படும் பட்சத்தில் அது சட்டப்படி செல்லத் தகுந்ததல்ல வென்று அப்பீல் செய்யலாமே யன்றி இந்த டிக்கிரி நிறைவேறு நடவடிக்கைகளில் ஆக்ஷேபனைகள் செய்யக் கூடாதென்பது.

பண்ணுருட்டி டி-மு. கோர்ட்டு தீர்ப்பின் பேரில் தென்னாற்காடு டிஸ்டிரிக்ட் கோர்ட்டில் அப்பீல் நடந்து அதன் பேரில் இந்தக் கோர்ட்டில் 2 வது அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது.

முதல் எதிர் கக்ஷிக்காரியின் புருஷன் நமசிவாய செட்டியாரால் எழுதி வைக்கப்பட்டதாகச் சொல்லும் உயில் போர்ஜரி யென்று பாத்தியஸ்தாபன வழக்குக்கொண்டுவரப்பட்டதில் அந்த உயில் உண்மையா அல்லவா வென்பதைப்பற்றி தீர்மானஞ் செய்யாமலே, உபய கக்ஷிக்காரர்களும் இராஜியாகிப் பிரதிவாதிக்கு வாதி ரூபாய் 2750 ஆறுமாத கெடுவுக்குள் 100-க்கு வருஷம் 1-க்கு 9 வீதம் வட்டி யுடன் கொடுக்கிற தென்றும், அந்தக் கெடுவில் அத்தொகை கொடுபடா விட்டால் ரூபா 3000 வருஷம் 1-க்கு ரூபா 100 க்கு 12 வீதம் வட்டியுடன் கொடுக்க வேண்டிய தென்

றும், இராஜிமனு கொடுத்தார்கள். வாதியும் மைனர்களி லொருவரும் மைனர்களா யிருந்த படியால் கோர்ட்டாருடைய அனுமதி பெற்றுக் கொள்ளப் பட்டது. இந்த இராஜிமனுவின்படியே கோர்ட்டார் டிக்கிரி செய்து விட்டார்கள். இந்த டிக்கிரியின்படி யாதொரு தொகையுங் கொடுபடாததால் பிரதிவாதிகள் இந்த டிக்கிரிப்படி தங்களுக்கு தொகை கிடைக்கவேண்டு மென்று டிக்கிரியை நிறைவேற்றினார்கள். வாதியின் தாவா பாத்தியஸ்தாபன வழக்காகையால் அதிற்காணுத விஷயங்களைப்பற்றி டிக்கிரி செய்தது சட்டவிரோதமானதென்றும், அந்த டிக்கிரி செய்யக் கோர்ட்டாருக்கு அதிகாரமில்லையென்றும், டிக்கிரியிற் கண்ட தொகை டிஸ்டிரிக்ட் முனிசீப்பின் ஜுரிஸ்டிக்ஷனுக்கு மேற்பட்ட தாகையால் அந்த டிக்கிரி செய்ய இந்தக் கோர்ட்டாருக்கு அதிகாரமில்லையென்றும், வாதி எதிர்க்கக்ஷியாடினார். டிஸ்டிரிக்ட் முனிசீப் வாதியின் ஆக்ஷேபனைகளைத் தள்ளுபடி செய்து டிக்கிரியை நிறைவேற்றும்படி உத்தரவு செய்துவிட்டார்கள். இந்த உத்தரவு டிஸ்டிரிக்ட் ஜட்ஜியால் முறுதி செய்யப்பட்டது. அதனாலிந்த கோர்ட்டில் 2-வது அப்பீல் செய்திருக்கிறார்கள்.

தீர்ப்பு.

ஒரு உயில் போர்ஜரி யென்று தீர்மானிப்பதற்காக வழக்கிடப்பட்டது. வாதியும் 2-ம் பிரதிவாதியும் மைனர்களாயிருந்தமடியால் கோர்ட்டாருடைய அனுமதி பெற்றுக்கொண்டு இராஜி மனுக் கொடுத்தார்கள். மைனர்களின் நன்மையை யுத்தேசித்து அந்த இராஜிமனுப்படி டிஸ்டிரிக்ட் முனிசீப் டிக்கிரி செய்திருக்கிறார்கள். இதன்படி வாதி பிரதிவாதிகளுக்கு ரூபா 2750 கொடுக்கிற தென்று டிக்கிரி செய்யப்பட்டிருப்பதால் அதன்படி பிரதிவாதிகள் டிக்கிரியை நிறைவேற்றி யிருக்கிறார்கள். வாதியால் பலவித ஆக்ஷேபனைகள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்த டிக்கிரி பாத்தியஸ்தாபன டிக்கிரி யொன்றும், தொகையை வசூலிக்க ஏற்பட்டதல்ல வென்றும் அப்பீல்தார் ஆக்ஷேபிக்கிறார். இந்த டிக்கிரியின் அம்சங்களை கவனிக்கும்போது இராஜிநாமா ஷரத்துகளெல்லாம் அடங்கியதாகவே இந்த டிக்கிரி யேற்பட்டிருப்பதாகத் தெரிவதால் அப்பீல்தாருடைய முதலாவது ஆக்ஷேபனையைத் தள்ளுபடி செய்கிறோம். பழய சிவில் புரிஸீஜர் கோடு 375-வது செக்ஷன்படி பிராது சம்பந்தப்பட்ட விஷயங்களைப்பற்றி மட்டில் தீர்

ப்பு செய்யலாமே யன்றி பிராதிற் காணுதவிஷயங்களைப்பற்றி தீர்ப்பு செய்ய கோர்ட்டாருக்கு அதிகாரமில்லையென்றும், டிஸ்டிரிகட் முனிசிப் கோர்ட்டு அதிகாரத்துக்கு மேற்பட்ட தொகை அதாவது ரூபா 2750-க்கு டிக்கிரிசெய்ய கோர்ட்டாருக்கு அதிகாரமில்லையென்றும், அப்பீல்தார் ஆக்ஷேபிக்கிறார். இந்த இராஜிணுமா டிக்கிரி சட்ட விரோதமானதாக விருக்கும்பட்சத்தில் அது விஷயத்தைப்பற்றி அப்பீல் செய்யலாமேயன்றி டிக்கிரி நிறைவேறு நடவடிக்கைகளில் இவ்வித ஆக்ஷேபனைகள் செய்யக்கூடாதென இந்தக் கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள் (இ. லா. ரி. 30 சென்னை 421) ரூபா 27̊0-க்கு டிக்கிரி செய்ய டிஸ்டிரிக்ட் முனிசீபுக்கு அதிகாரமில்லையென்பது மூன்ருவது ஆக்ஷேபனை. பிராதின் விஷயங்களைக் கொண்டு ஜூரிஸ்டிக்ஷன் விஷயம் தீர்மானிக்கவேண்டியதேயன்றி டிக்கிரித் தொகையைக் கொண்டு சொல்லக்கூடாது (இ. லா. ரி. 25 சென்னை 543-21 கல்கத்தா 550 இந்தத் தீர்மானங்களைப் பார்க்க) இந்த டிக்கிரி செய்ய ஜூரிஸ்டிக்ஷனில்லாவிட்டாலும் வாதி செய்யும் ஆக்ஷேபனை நிறைவேறு நடவடிக்கை சம்பந்தமானதல்ல. அது செல்லுபடியுள்ளதா, வாதி சொல்லுகிறபடி டிக்கிரி யேற்படவில்லையா, என்ற விஷயங்களை பொருத்ததாக விருக்கிறது. (இ. லா. ரி. 9 சென்னை 80 தீர்மானத்தை பார்க்க.) இந்த ஆக்ஷேபனையும் பிரயோஜனமற்றது. டிக்கிரியிற் கண்ட வட்டி அபராத நிபந்தனை அது செல்லத்தக்கதல்லவென்பது கடைசி ஆக்ஷேபனை. டிக்கிரியிற் கண்ட வட்டி கிரமமல்லவென்பதற்கு யாதொரு காரணமுமெங்களுக்கு தென்படவில்லை. ஆகையால் இந்த அப்பீலை செலவுடன் தள்ளுபடி செய்கிறோம்.

I. L. W. 446.

சென்னை ஹைகோர்ட்டு.

1912வருஷத்திய சீவில் ரெவிஷன் மனு நம்பர் 653.

தீர்ப்பு 16—12—13

ஜட்ஜி	
ஜஸ்டிஸ் ஒல்ட்பீல்ட் அவர்கள்	கோயில் கந்ததாய்அன்னன் ருமானுஜாசாரியார் ஆ மனுதார்கள்
	V
	காஞ்சீபுாம் ஆடிஸன்பட் தனாக்ஷணநிதி பிரவிடெண்டு

34. [சீவில் புரிஸீஜர் கோடு]

டிக்கிரி கடன்காரனுக்கு ஏலசொத்தில் பாத்தியமில்லையென்றும், அந்த ஏலம் ரத்தாகவேண்டுமென்றும் ஏலதாரன் கொடுக்கும் மனு நடவடிக்கைகளில் அச்சொத்துக்கு சொந்தக்காரனென்று ஏலதாரனல் சொல்லப்படும் நபர் சேர்க்கப்படக்கூடாதென்பது.

ஒரு ஸ்தாவர சொத்தை ஏலமெடுத்தவர் டிக்கிரி கடன்காரனுக்கு அச்சொத்தில் பாத்தியமில்லையென்றும், அதனலந்த ஏலம் ரத்தாகவேண்டுமென்றும் சி. பு. கோடு 21-வது ஆர்டர் 91-வது ரூல்படி மனுக்கொடுத்தார். மனுதாரன் மூன்ருவது மனிதன்பேரில் பெற்றிருந்த டிக்கிரிக்காக இதே சொத்துக்கள் மனுதாரனல் ஜப்தி செய்யப்பட்டிருந்ததால் இவரையும் அந்த மனு நடவடிக்கைகளில் கக்ஷிக்காரராகச் சேர்த்தார்கள். மனுதார் தன்னை கக்ஷிக்காரராகச் சேர்க்கக் கூடாதென கொடுத்த மனு கீழ்கோர்ட்டார்களால் தள்ளுபடி செய்யப்பட்டதின்பேரில் இந்த ரெவிஷன் மனுகொடுபட்டிருக்கிறது.

தீர்ப்பு

21-வது ஆர்டர் 92-வது ரூல்படி இந்த மனு நடவடிக்கைகளில் ஒரு அப்பீல்தானேற்பட்டிருக்கிறது. இரண்டாவது அப்பீல் கிடையாது. மனுதார் தன் பாத்தியதையைப்பற்றி வழக்கிடும் பட்சத்தில் இவர் தன் கேசைப்பற்றி பூர்த்தியாக சாக்ஷி விசாரணை முதலியன நடத்தி தீர்ப்பு பெறலாம்; இரண்டாவது அப்பீலுஞ் செய்யலாம். இந்த 21-வது ஆர்டர் 92(2) ரூலில் சம்பந்தப்பட்ட பேர்வழிகளுக்கு நோட்டீஸ் கொடுக்கவேண்டுமென்று சொல்வது அன்னியர்களை சேர்க்கவேண்டுமென்ற அர்த்தமல்ல. இந்த மனு ஏலத்தொகையை திருப்பிக்கொடுப்பதற்காக ஏற்பட்டதேயன்றி மற்றதற்கல்ல. ஏலதாரனுக்கும் டிக்கிரிதாரனுக்கும் ஏற்பட்ட மனு நடவடிக்கைகள் முடிவானதல்ல. இதன்பேரில் அசல் வழக்கும் 21-வது ஆர்டர் 93-வது ரூல்படி கொண்டுவரலாம். (இ. லா. ரி. 8 சென்னை 99, 11 சென்னை 269 சென்னை 269 தீர்மானங்களைப் பார்க்க) இவர்களுக்குள்ளேயே வழக்கு முடிவானதாக விராதபோது அன்னியனை பெல்லிதமாகக் கட்டுப்படுத்த முடியும். ஆகையால் இந்த மனுதாரனை சம்பந்தப்படுத்தி இவரைப்பற்றி செய்யப்பட்ட உத்திரவுகள் ரத்து செய்யப்பட்டன.

I. L. W. 412

சென்னை ஹைகோர்ட்டு

1912ளுத்திய 2 வது அப்பீல் நம்பர் 2292.

தீர்ப்பு 17—3—14.

ஜட்ஜிகள்.	
ஜஸ்டிஸ் டியாப்ஜி அவர்கள் ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர் அவர்கள்	மைனர் பயணியாண்டிசெட்டியாருக்கு அடுத்த சிநேகிதியும் தாயாருமான அருக்காணி யம்மாள். V. கம்பாராயச் செட்டி ஆ

35. [சிவில் புரிஸீஜர் கோடு.]

தஸ்தாவேஜிக்கு விபரீத அர்த்தஞ் செய்வதைப்பற்றி இரண்டாவது அப்பீல் செய்யலாமென்பது.

நாமக்கல் டிஸ்டிரிக்ட் முனிசீப் தீர்ப்பின்பேரில் திருச்சிராப்பள்ளி டிஸ்டிரிக்ட் கோர்ட்டில் அப்பீல் நடந்து அதன்பேரில் இந்த 2-வது அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது.

முதல் பிரதிவாதியும் வாதியின் ஸ்வீகார பாட்டனும் சகோதரர்களென்றும், முதல் பிரதிவாதிக்கும் வாதியின் தகப்பனுக்கும் 1889 வருஷத்தில் பாகப் பிரிவினை யேற்பட்டதில் தாவாவிற்கண்ட சந்து வாதியின் தகப்பன் பாகத்துக்குஏற்பட்டதென்றும், அந்த பாகத்தேதி முதல் வாதி தாவா சந்தை ஏகதேசத்தில் சர்வசுதந்தரமாக அனுபவித்து வருவதாகவும், அந்தச் சந்தில் வாதி சுவர்வைத்து கதவு போட எத்தனித்ததை பிரதிவாதி தடுப்பதாகவும், அதனால் தனக்கு தாவா சொத்திலுள்ள பாத்தியதையை ஸ்தாபித்து அதில் பிரதிவாதிகள் பிரவேசிக்காமல் அவர்களுக்கு சாஸ்வத இன்ஜக்ஷன் கொடுக்கவேண்டுமென்றும், வாதி வழக்கிட்டார். தாவா சந்து வாதிக்கு மட்டில் ஏகதேசத்தில் சொந்தமில்லையென்றும், உபயவாதிகளின் குடும்பஸ்தர்கள் இதை 60 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக பொதுவாகவே அனுபவித்து வருவதாகவும், வாதியின் பாகத்துக்கு ஏற்பட்ட சொத்தாக விருந்தாலும் பிரதிவாதிகள் தாவா சொத்தை 20 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அனுபவித்து வருவதால் தங்களுக்கு உரித்தான பாத்திய முண்டாய் விட்டதென்றும் பிரதிவாதிகள் கக்ஷியாடினார்கள். வாதி தாதல் செய்த பாகபத்திர ஷாத்தின்படி தாவா சந்து வாதிக்குச் சொந்தமானதென்

றும், பிரதிவாதிகளுக்கு எவ்வித வசதிபாத்தியமு மேற்படவில்லையென்றும், வாதியின் தாவாப்படியே டிஸ்டிரிக்ட் முனிசீப் தீர்ப்பு செய்து விட்டார். இதைப்பற்றி அப்பீல் செய்ததில் பாகபத்திர ஷரத்துக்கள் விளங்காதிருக்கின்றன வென்றும், எல்லா சந்தர்ப்பங்களையும் யோஜிக்கும்போது பிரதிவாதிகள் தாவா சந்தை 20 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக பொதுவாகஅனுபவித்து வருவதாகவும், டிஸ்டிரிக்ட் ஜட்ஜி அப்பிலையங்கீகரித்து வாதியின் வழக்கைத் தள்ளுபடி செய்து விட்டார்கள். அதனால் வாதி இந்த 2-வது அப்பீல் செய்திருக்கிறார்.

தீர்ப்பு.

உபயகக்ஷிக் காரர்களும் ஆதரித்துச் சொல்லும் பாகபத்திரத்துக்கு டிஸ்டிரிக்ட் ஜட்ஜி விபரீத அர்த்தஞ் செய்திருப்பதாக அப்பீல்தார் வக்கீல் செல்லுகிறார். அது விஷயமாக அப்பீல் செய்வது நியாயமானதே. தாவா சந்து முதல் பிர்திவாதியின் பாகத்துக்கு நான் கெல்லையிலொன்றாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அது வாதியின் தகப்பன் பாகத்துக்கு ஏற்பட்ட சொத்துக்களில் சேர்க்கப்படவில்லை. பிரதிவாதிகளின் பாகத்திலுஞ் சேர்க்கப்படவில்லை. இது உபயவாதிகளுக்கும் பொதுவென்றுஞ் சொல்லப்படவில்லை. பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் வசதி பாத்திய மேற்பட்டு விட்டதா வென்பதைப்பற்றி டிஸ்டிரிகட் ஜட்ஜி தீர்மானிக்கவில்லை. பாகபத்திர விஷயமாக அவருடைய அபிப்பிராயம்தவறுதலென்று எங்களுக்குத் தோற்றினால் அந்த வசதி பாத்தியதையைப்பற்றி பயிண்டிங் அனுப்பும்படி உத்திரவு செய்யலாம். கீழ்கோர்ட்டார்கள் முக்கியமான இஷ்ஷியுக்கள் எல்லாவற்றைப்பற்றியும் விபரமான தீர்மானஞ் செய்ய கடமைப்பட்டிருக்கிறார்கள் (இ. லா. ரி. 18 கல்கத்தா 23 பிரிவிகவுன்ஸல் தீர்ப்பைபார்க்க.) கீழ் அப்பீல் கோர்ட்டார் செய்த தீர்மானத்தில் பிரவேசிக்க நியாயமில்லை. அதனாலிந்த அப்பீல் செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

I. L. W. 416.

3-ன்படி பிரதிவாதிகளின் ஆக்ஷேபணைகளை கீழ்கோர்ட்டார்களிருவரும் தள்ளுபடி செய்து விட்டார்கள். தாவா டிக்கிரி ஸ்தாவர சொத்துக்கள் சம்பந்தப்பட்ட டிக்கிரி யாகையால் பிரதிவாதிகள் கொடுத்த தொகைக்கு சர்டிபை செய்யப்பட வேண்டிய அவசிய மில்லை யென்று இ லா. ரி 22 சென்னை 182 தீர்மானத்தை ஆதாரமாக எடுத்துக்காட்டி பிரதிவாதிகளின் வக்கீல் கக்ஷியாடுகிருர். புதிய சீவில் புரஸீஜர் கோடில் பழய செக்ஷனை திருத்தல் செய்து எந்த விதமான டிக்கிரியாக விருந்தாலும் தொகை வசூலிக்க வேண்டியதாக விருந்தால் அத்தொகை வரவு வந்தது ஏற்பட்ட கெடுவுக்குள் சர்டிபை செய்யப்படா விட்டால் அதை கோர்ட்டார் அங்கீகரிக்கத் தக்கதில்லையென கண்டிருக்கிறது. அதனுல் கீழ் கோர்ட்டார்கள் செய்த தீர்மானம் நியாயமானது. இந்த அப்பீல் செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

1914 *M*. W. *N*. 346.

சென்னை ஹைகோர்ட்.

1912 வருஷத்திய சீவில் ரெவிஷன் மநுநம்பர் 902

தீர்ப்பு 12—2—14.

ஜட்ஜி சதாசிவய்யரவர்கள்	கனகம்மாள் ஆ மநுதார்கள்
	V
	பஞ்சாபிகேச உடையார் ஆ கவுண்டர் மனுதார்கள்

33. [சீவில் புரஸீஜர் கோடு]

மிஸ் ஜாயிண்டர் வியாஜ்ஜிய மூலத்துக்காக பாபர் மனுவை தள்ளுபடி செய்யக்கூடாதென்பதும், வழக்கு சரியானதென்பதைப் பற்றி சந்தேகமிருந்தாலும் பாபரில் வழக்கிட அனுமதி கொடுக்க வேண்டியதவசிய மென்பதும்.

மாயவரம் சப்கோர்ட்டு தீர்மானத்தின்பேரில் ஹைகோர்ட்டில் ரெவிஷன் மனு கொடுக்கப்பட்டது.

முதல் வாதி முதல் பிரதிவாதியின் இறந்த சகோதரருடைய ஸ்திரமான வைப்பாட்டி மைனர் 2-ம் வாதி முதல்வாதியின்மகன். மனுதார்களாகிய வாதிகள் தங்களுக்கு முன் வருஷங்களின் ஜீவனும்சத் தொகையைப் பற்றியும் பிந்தி கிடைக்கக்கூடிய ஜீவனும்

சத்தைப்பற்றியும் பிரதிவாதிகள் பேரில் வழக்கிட பாபரில் மனுக் கொடுத்தார்கள். வழக்கின் பொருமானத் தொகை ரூபா 11,100; முதல் வாதி தனக்கு ரூபா 327 பொருமானமுள்ள சொத்துக்கள் தானிருக்கின்றன, வேறு சொத்துக்களில்லையென்று மனுக் கொடுத்தாள். மைனர் 2-ம் வாதிக்கு எவ்வித சொத்துங் கிடையாதென்றே சொல்லப்பட்டிருக்கிறது. முதல் வாதிக்குள்ள சொத்தைக் கொண்டு பிராதுக்கு வேண்டிய ஸ்டாம்பு வாங்க முடியாத விஷயம். வாதிகள் பாபரா இல்லையா வென்ற விஷயத்தைப் பற்றி சப் ஜட்ஜி விசாரிக்காமலே 33-வது ஆர்டர் ரூல் 5 படி பிராது கொடுபடவில்லையென்று வாதிகளின் மனு தள்ளுபடி செய்துவிட்டார்கள். அதன்பேரில் இந்த ரெவிஷன் மனு கொடுபட்டிருக்கிறது.

இந்த 33-வது ஆர்டர் 5-வது ரூலில் எந்த விதிகள் அனுசரிக்கப்படவில்லையென்று சப் ஜட்ஜி சொல்லவில்லை. (b) (c) (e) விதிகள் பாபர்மனுவில் கவனிக்கப்படவேண்டியனவல்ல. மற்ற (a) (d) என்ற இரண்டு விதிகளைப்பற்றித்தான் ஆலோஜிக்கவேண்டும். வாதிகளுக்கு வியாஜ்ஜியமூலங்கள் பிராதிற் சொல்லப்படாவிட்டால் d விதியின்படி பிராது தள்ளுபடி செய்யப்படலாம். தாவா பிராதில் வியாஜ்ஜிய மூலஞ் சொல்லப்படவில்லையென்று சப் ஜட்ஜி தன்னுடைய உத்திரவிற் சொல்லவில்லை. 2-ம் வாதி தனது தகப்பன் சொத்தில் பாகப்பிரிவினை செய்யவேண்டுமென்று வழக்கிடவேண்டியவனுக விருக்க ஜீவனும்சத்துக்காக வழக்கிட்டது செல்லுமென்பது சந்தேகத்துக்கிடமாயிருக்கிறதென்று சப் ஜட்ஜி வாதிகளின் பாபர்மனுவைத் தள்ளுபடி செய்திருக்கிருர்கள். 2-ம் வாதி பாகப்பிரிவினை செய்ய பாத்தியமற்றவனென்பதே வாதிகளின் கக்ஷி. அதனுல் 2-ம் வாதி ஜீவனுமசத்துக்கு வழக்கிட வியாஜ்ஜியமூல மேற்பட்டிருக்கிறது. சந்தேகத்துக்கிடமாயிருந்தால் பாபர் மனுவைத் தள்ளுபடி செய்யக்கூடாது (இ. லா. ரி. 19 சென்னை 197 பக்கம் 198) முதல் வாதியின் இரண்டு பெண்களுக்கும் முதல்வாதி ஜீவனும்சங் கேட்க வியாஜ்ஜியமூலமில்லையென்பது நியாயமானதே. ஆனுல் பிராதிற்கண்ட பல வியாஜ்ஜிய மூலங்களில் சிலது வாதிக்கு ஏற்படவில்லையென்ற காரணத்துக்காக மனு தள்ளுபடி செய்யப்படலாமென்று 5-வது ரூலிற் சொல்லவில்லை. ஆகையால் கிளாஸ் a ப்படி வாதிகளின், மனு

தள்ளுபடி செய்யப்படலாமா வென்ற விஷயத்தைப்பற்றி மட்டில் நாம் ஆலோஜிக்க வேண்டும். ரூல் 2-3 இவைகளின்படி மனு தயாரிக்கப்படாவிட்டால் அது தள்ளுபடி செய்யப்படலாமென்று சொல்லப்பட்டிருக்கிறது. பிராது எங்கெந்தப்படி எழுதவேண்டியதோ அந்தப்படியே பாபர் மனுவுந் தயாரிக்கப்படவேண்டுமென்று 2-வது ரூலிற் சொல்லப்பட்டிருக்கிறது. வாதிகள் தங்கள் ஜீவனும்சத் தொகையைப்பற்றி வழக்கிடுவதால் இந்த பிராதில் மிஸ் ஜாயிண்டர் வியாஜ்ஜியமூலங்களில்லை. புருஷன், பெண் ஜாதி பிள்ளைகள் இவர்கள் தங்கள் தங்களுக்குத் தனித்தனியே கிடைக்கவேண்டிய ஜீவனும்சத்துக்கு இவர்கள் எல்லோருஞ் சேர்ந்தே வழக்கிடலாமென்று 17 கல்கத்தா வீக்லி நோட்ஸ் 341 தீர்மானமேற்பட்டிருக்கிறது. முதல் வாதி தன்னுடைய பெண்களிருவருக்கும் ஜீவனும்சங் கிடைக்கவேண்டுமென்று கேட்பதால் அவ்விதங் கேட்க முதல் வாதிக்கு வியாஜ்ஜியமூலமில்லையென்று ஆக்ஷேபிக்கப்படுகிறது அது விஷயமாக பிராதைத் திருத்திக் கொள்ள கோர்ட்டார் அனுமதி கொடுக்க வேண்டியது மெத்த அவசியம். சப் ஜட்ஜி வாதிகளின் மனுவைத் தள்ளுபடி செய்தது சட்டவிரோதமும், கிரமவிரோதமுமாகவிருப்பதால் சப் ஜட்ஜி செய்த வுத்திரவை ரத்து செய்கிறோம். மேற்கண்ட விஷயங்களைப்பற்றி புனர் விசாரணை செய்து முடிவு செய்யும்படி உத்திரவு செய்கிறோம்.

1914 M. W. N. 329.

சென்னை ஐகோர்ட்டு.

1912 ஹுத்திய, சீவில் ரெவிஷன் மனு நம்பர் 920.

தீர்ப்பு 13—2—14.

ஜட்ஜி. ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யரவர்கள்	மதுரைத் தாச்சியின் அதிகாரம் பெற்ற ஏஜண்டு வயித்திலிங்கம் பிள்ளை (பிரதிவாதி) V சொக்கலிங்கம்பிள்ளை வாதி எதிர் கக்ஷிக்காரன்.

39. [சிவில் புரீஸிஜர் கோடு]

சம்மன் சர்வ் செய்யப்போகும் சேவகன் கேழ்வி மூலமாகத் தெரிந்து கொள்ளுமிடங்களுக் கெல்லாம் வாதி சம்மன் எடுத்துக்

கொள்ளவேண்டிய தவசியமில்லை யென்பதும், பிரதிவாதியின் குடியிருப்பு அல்லது அலுவல் வேறிடங்களிலிருந்தால் அவ்விடங்களுக்கு சம்மன் எடுத்துக் கொள்ளவேண்டிய தவசியமென்பதும்.

மாயவரம் சப்கோர்ட்டார் செய்த வுத்திரவின்பேரில் ஹைகோர்ட்டில் ரெவிஷன் மனு கொடுக்கப்பட்டது.

மனுதாரி பிரதிவாதி வழக்கமாக குடியிருக்கு மிடத்துக்கு வாதியால் சம்மன் எடுத்துக் கொள்ளப்பட்டதில் பிரதிவாதிகள் வெவ்வேறிடங்களுக்குப் போயிருப்பதாகவும், வருங்காலந் தெரியாதென்றும் சம்மன் திருப்பியனுப்பப்பட்டது. வாதி நாலு மாதங்கிரமித்து முதலிற் சொன்ன விடத்துக்கே சம்மன் எடுத்துக் கொண்டதில் முன்போலவே சம்மன் ரிட்டர்ன் செய்யப்பட்டது. இதன்பேரில் சம்மனை யொட்டி சர்வ்செய்து எகஸ்பார்டி டிக்கிரி செய்யப்பட்டது.

பிரதிவாதிகள் எவ்விடங்களுக்குப் போயிருப்பதாக பிராஸஸ் சேவகனுக்கு தெரிவிக்கப்பட்டதோ அந்த விடங்களுக்கு சம்மன் எடுத்துக் கொள்ள வாதிகடமைப்பட்டவரென்றும், அந்த விடத்திலும் பிரதிவாதியில்லாமல் வேறிடங்களுக்குப் போயிருந்தால் அந்த விடங்களுக்கும் சம்மன் எடுத்துக் கொள்ளவேண்டிய தவசியமென்றும், மனுதாரியின் வக்கீல் கக்ஷியாடுகிறார். இவர் சொல்லுங்கக்ஷி சரியானதல்ல; பிரதிவாதி எங்கெந்த விடங்களுக்குப் போயிருப்பதாகச் சொல்லப்படுகிறதோ அந்த விடங்களுக்கெல்லாம் சம்மன் எடுத்துக் கொள்ளவேண்டியது அனாவசியம். ஆனால் பிரதிவாதி வேறெந்த விடங்களில் குடியிருந்தாலும், அல்லது வேலைபார்த்தாலும் அது விபரம் வாதிக்கு தெரியவந்தால் அந்த விடத்துக்கு சம்மன் எடுத்துக் கொள்ளவேண்டியது மெத்த அவசியம்; பிரதிவாதி தனக்கு சம்மன் சர்வசெய்யவொட்டாமல் தலைமறைவாக விருப்பதினாலாவது வேறெந்த காரணங்களினாலாவது சம்மன் சர்வ் செய்வது சாத்தியப்படாததாக விருந்தால் மட்டில் சம்மனை யொட்டி சர்வ் செய்யவேண்டுமென்று இ. லா. ரி 29 சென்னை 324 தீர்மானத்தி லேற்பட்டிருக்கிறது. பிரதிவாதிக்கு சம்மன் எடுத்துக் கொண்ட இரண்டு தடவைகளிலும் வேறிடங்களுக்குப் போயிருப்பதாகவும் வருங்காலந் தெரியாதென்றும் சம்மன் ரிட்டர்னாயிருக்கிறது. அதனால் பிரதிவாதிக்கு சம்மன்

சர்வ்செய்வது சாத்தியமான விஷயமாகவில்லை. வாதி சி. பு. கோடு 5 வது ஆர்டர் ரூல் 12ன்படி பிரதிவாதிக்கு சம்மன் சர்வ் செய்ய வேண்டியதில் தன்னால் கூடிய முயற்சி செய்தும் முடியாததால் ஒட்டிசர்வாகி யிருக்கிறது இந்த நம்பர் விசாரணைக்கு எடுபட்ட காலத்தில் பிரதிவாதியின் ஏஜண்டு கோர்ட்டில்ஆஜராயிருந்ததாகவும் ருஜுவேற்பட்டிருக்கிறது மனுதாரி பிரதிவாதி கொடுத்த பிரமாணபத்திரிகையில் எகஸ்பார்டியை ரத்துசெய்ய அதிககாலங் கிரமித்து மனுக் கொடுத்ததற்கு தகுந்த காரணஞ் சொல்லவில்லை. எதிர்கக்ஷிக்குத் தகுந்த ஆதாரங்களிருப்பதாகவுந் தெரியவில்லை. பிரதிவாதியை கண்டு பிடிக்க முடியவில்லையென்ற விபரந் தெரிந்த முதல் தடவையிலேயே பிரதிவாதிக்கு ஒட்டி சர்வ் செய்யும்படி வாதி கேட்பது நியாயமானதென்று இந்த கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள் (1914 M. W. N. 79). ஆகையால் இந்த ரெவிஷன் மனு செலவுடன் தள்ளுபடிசெய்யப்பட்டது.

1914. M W. N. 315.

சென்னை ஹைகோர்ட்டு.

1913 ஹுத்திய சீவில் ரெவிஷன் மனு நம்பர் 890.

தீர்ப்பு 24—2—14

ஜட்ஜி ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யரவர்கள்	சுப்பாரயரெட்டியார் வாதி மனுதார் V ருஜகோபாலரெட்டியார் ஆ பிரதிவாதிகள்

18. [லிமிடேஷனுக்கு]

சாசன சொத்தைப்பற்றி வேறொருவர் வழக்கிட்டு கட்டிக்கொண்டால் அந்த சாசனத்தொகை திருப்பிக்கொடுபடவேண்டுமென வழக்கிட பாத்தியமும், அதற்குரிய காலாவதி தோஷமும்.

திருநெல்வேலி சப் கோர்ட்டு ஸ்மால்காஸ் தீர்ப்பின்பேரில் ரெவிஷன் மனு கொடுக்கப்பட்டிருக்கிறது.

சுப்பராய ரெட்டியார் சந்ததியன்னியிலிறந்ததால் அவருடைய சொத்துக்களை அவருடைய விதந்து காந்தம்மாள் வார்சுக்கிரமத்தில் அடைந்தாள். இந்த ரெட்டியாரின் தாயார் தன்னுடைய பாத்தியங்களை 1892 வருஷத்தில் ஒரு விடுதலைபத்திர

மூலமாக காந்தம்மாளுக்கு விட்டுவிட்டாள். அவள் தன்னுடைய பாத்தியங்களை தன் புருஷனுடைய சமீப அனந்தரவார்சாகிய 1 முதல் 3 பிரதிவாதிகளின் தகப்பனுக்கு 1900ஹு ஆகஸ்டு மாதம் 23 தேதி விடுதலை பத்திரமூலமாகக் கொடுத்து விட்டாள். இதில் மாமியார் ஞானம்மாளிடமிருந்து வாங்கிய விடுதலைபத்திரவிபாமுங் கண்டிருக்கிறது. இந்த சாசனத்தேதியிலேயே 1 முதல் 3 பிரதிவாதிகளின் தகப்பன் அச்சொத்துக்களை வாதிகளுக்கு விற்று விட்டார். வாதிகள் அச்சொத்துக்களை ஸ்வாதீனஞ் செய்து கொண்டார்கள். காந்தம்மாள் 1904 ம் வருஷத்தில் இறந்தாள். ஞானம்மாள் தான் 1892 வருஷத்தில் விடுதலை கொடுத்தது தன்னுடைய ஜீவனாம்ச பாத்தியதையே யன்றி வேறல்லவென்றும், காந்தம்மாள் ஜீவதிசைக்குப் பிறகு தன்னுடைய பிள்ளைகளின் சொத்தை தான் வார்சுக்கிரமத்திலடைந்து விட்டதாகவும், தான் கொடுத்த விடுதலைபத்திரம் தனக்கு தற்போது கிடைத்திருக்கும் பாத்தியதைக்கு தடை செய்யமாட்டாதென்றும், தன்னுடைய பிள்ளை சொத்து தனக்கு கிடைக்கவேண்டியதென்றும் 1900வருஷத்தில் வழக்கிட்டாள். அதில் இந்த நம்பர் வாதியும் பிரதிவாதிகளும் கக்ஷிக்காரர்கள். இவளுடைய வழக்கின்படியே தீர்ப்பாகி அச்சொத்துக்களை 1911 வருஷத்தில் வசப்படுத்திக்கொண்டாள். இதனால்வாதி தான் கொடுத்த சாசனத்தொகை 1 - 2 - 3 - பிரதிவாதிகளிட மிருந்து கிடைக்கவேண்டுமென மேற் சொன்ன வசத்தேதிக்கு ஒருவருஷத்துக்குள்ளே வழக்கிட்டார். சப்ஜட்ஜி வாதியின் வழக்கைத் தள்ளுபடிசெய்துவிட்டதின் பேரில் இந்த ரெவிஷன் மனு கொடுபட்டிருக்கிறது.

சாசனம் 1900 வருஷத்தி லேற்பட்டிருப்பதினாலே வாதியின் தாவா காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுப் போய்விட்டதென்பது பிரதிவாதிகளின் பிரதம ஆக்ஷேபணை. தாவா கேசுக்கு லிமிடேஷனாக்டு 62 அல்லது 97 வது செக்ஷன்பொருந்தியதென்றும், வாதியின் தாவாவுக்கு காலாவதி தோஷமில்லையென்றுந் தீர்மானிக்கிறோம். சாசன சொத்து பாத்தியதையைப் பற்றி வெளிப்படையான உடன்படிக்கையில்லை யென்றும், சொத்துபாத்தியதையின் பலகீனங்களை நன்றாகத் தெரிந்தேவாதி சாசனம் பெற்றிருப்பதாகவும் அதனால் வாதிக்கு எவ்வித வியாஜ்ஜியமூலமு மில்லையென்பதும் பிரதிவாதிகளின் இரண்டாவது

விவாதம். கக்ஷிக்காரர்களுக்குள் பிரத்தியேகமான உடன்படிக்கையேற்படாதவரையில் சாசன சொத்துக்கு நல்ல பாத்திய முண்டென்பதுதான் இந்த தேசசட்டங்களின் நோக்கம். (டிரான்ஸ்வர் அவ்பிராபர்டி ஆக்டு 55 வது செக்ஷன் 2வது கிளாஸைப்பார்க்க) சாசனம்பெற்றவனுக்கு விஷயங்கள் தெரிந்திருப்பதானது நஷ்டபரிகாரத்துக்காக இந்தியாசட்டப்படிக்கு ஏற்பட்ட பாத்தியங்களை தடைசெய்யமாட்டாது. நஷ்ட பரிகாரத்துக்கு எந்தத் தேதி முதல் வியாஜ்ஜிய மூலமுற்பத்தியென்பதைப்பற்றி பலவிதகேஸ்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகள் அடியிற்கண்டபடி மூன்று பிரிவாக பிரிக்கப்படலாம்.

(a) சாசன சொத்தில் சாசனஞ் செய்பவருக்கு எவ்வித பாத்தியமின்மையும், சாசனம் பெற்றவருக்கு அச்சொத்து ஸ்வாதீனஞ் செய்யப்படாமையும்.

(b) மூன்றாவது மனுஷன் ஆக்ஷேபனையின்பேரில் சாசனம் நிகாரிக்கக்கூடியதும், அந்த நிராகரிக்கக்கூடிய சாசனப்படி சொத்து ஸ்வாதீனப்படுத்திக்கொள்ளுதலும்.

(c) பாத்தியம் பலஹீனமுள்ளதாயிருப்பதாகத் தெரிந்திருந்தபோதிலும் உடன்படிக்கையை பூர்த்திசெய்து கொடுத்து சொத்தை ஸ்வாதீனஞ் செய்து கொடுப்பது.

முதலாவது சொன்ன கேசுக்கு காலாவதி தோஷம் சாசனத்தேதி முதலுண்டாகிறது. (1913 M. W. N. 1029 தீர்மானத்தைப் பார்க்க) தாவா கேசு அது போன்றதல்ல. இரண்டாவது கேசுக்கு வியாஜ்ஜிய மூலம் சொத்தில் நல்ல பாத்தியமில்லையென்று கண்டுபிடித்த தேதி முதலுண்டாகிறது. (இ. லா. ரி. 19 கல்கத்தா 123, 11 அலகபாத் 47 இந்தத் தீர்மானங்களை பார்க்க.) மூன்றாவது வகுப்பு கேசுக்கு சொத்தில் மூன்றாவது மனிதன் பிரவேசித்தத் தேதிமுதல் வியாஜ்ஜியமூல முற்பத்தி (இ. லா. ரி. 37 பம்பாய் 538 தீர்மானத்தை பார்க்க) தாவா கேஸ் இரண்டாவது வகுப்பின் கீழ் வருகிறது. ஞானம்மாள் வழக்கிடாதவரையில் வாதி நிராக்ஷேபனையாக சொத்தை யனுபவித்து வருவார். இந்த இரண்டாவது வகுப்பின் கீழ் தாவா கேஸ் வரவில்லையென்று சொன்னாலும் மூன்றாவது வகுப்பின் கீழ் வந்தே தீர வேண்டும். சொத்தில் அன்னியன் பிரவேசிக்கிறவரையில் சாச

னத்தொகையைத் திருப்பிக் கேட்க நியாயமே கிடையாது. ஆகையால் ஞானம்மாள் சொத்தை வசப்படுத்திய தேதி முதற்கொண்டுதான் வாதிக்கு வியாஜ்ஜியமூல முண்டாயிருக்கிறது. ஆகையால் சப் ஜட்ஜி செய்த தீர்மானத்தை ரத்து செய்திருக்கிறோம். கீழ்கோர்ட்டார் இந்தக்கேஸை பயிலில் வைத்துக்கொண்டு முடிவு செய்யும்படி யுத்திரவு செய்கிறோம்.

1914 M. W. N. 376.

சென்னை ஹைகோர்ட்டு.

1912 ௵த்திய சீவில் ரெவிஷன் மனு நம்பர் 122.

தீர்ப்பு 13—2—14.

ஜட்ஜி ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள்	சேஷப்பய்யர் மனுதார் (3 பிரதிவாதி) V. சுப்பிரமணிய செட்டியார் வ எதிர் மனுதார்கள். (வாதி 1. 2. பிரதிவாதிகள்.)

19. [லிமிடேஷனுக்கு.]

ஒருவன் தன்னுடைய நகையை வேறொருவருக்கு கொடுத்து அவர் அதை மூன்றாவது மனிதனிடம் அடகுவைத்து விட்டால் அந்த நகை கிடைக்கவேண்டுமென்று வழக்கிட காலாவதி தோஷம் எந்தத்தேதி முதலுண்டாகிறதென்பது.

நாகபட்டணம் சப்ஜட்ஜியின் தீர்மானத்தின்பேரில் ஹைகோர்ட்டில் ரெவிஷன்மனு கொடுக்கப்பட்டிருக்கிறது.

முதல் பிரதிவாதியின் புருஷனும் 2 ம் பிரதிவாதியின் தகப்பனுமான கந்தசாமிபத்தர் வாதியின் நகையொன்றை வாங்கத்தகுந்த மனிதனிருப்பதாகவும், அதை யவரிடங்காட்டி விலைபிடித்திருந்தால் வாங்குபவரை அழைத்துவந்து நேரில் தொகை வாங்கிக் கொடுப்பதாகவுஞ் சொல்லி வாதியிடத்தில் அந்த கந்தசாமிபத்தர் தாவா நகையை 1907 வருஷம் மேமாதம் 19ந் தேதி வாங்கிப்போனார். இவர் தான் சொல்லி வந்தபடி செய்யாமல் அந்தநகையை 3 ம் பிரதிவாதியிடத்தில் 1907 ௵ ஜூன்மாதம் 20ந் தேதி ரூபா 175 க்கு அடகுவைத்து தொகைவாங்கிக் கொண்டார். இவ்விதம் அடகுவைத்த 2—3 மாதங்களுக்குள் கந்தசாமிபத்

தார் இறந்து விட்டார் இந்த பத்தர் இந்த நகையை தொகையைக் கொடுத்து மீட்டுக் கொள்ளாததினாலே 3 ம் பிரதிவாதி அந்த நகையை விற்றுக் கொடுக்கும்படி. வாதியைக் கேட்டதாகவும் அது தன்னுடைய நகையென்று வாதிக்குத் தெரியவந்ததின் பேரில் அதைத் தன்னிடங் கொடுத்து விட வேண்டுமென்று கேட்டதாகவும், 3-ம் பிரதிவாதி தாவா நகையைக் கொடுக்க ஆக்ஷேபிக்கிறதாகவும், வாதி தாவா நகை தனக்கு கிடைக்க வேண்டுமென வழக்கிட்டிருக்கிறார்.

தாவா நகை தன்னிடம் 1907 வருஷம் மே மாதம் 20-ந் தேதி அடகுவைத்திருப்பதாலும், வாதி 1911 வருஷத்தில் வழக்கிட்டிருப்பதாலும் வாதியின் தாவா காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுப் போய்விட்டதாகவும், எந்த விதத்திலும் தான் அடகாக கொடுத்த தொகையும் அதன் வட்டியுங் கொடாமல் வாதி தாவா நகையை கேட்க நியாயமில்லையென்றும் 3-ம் பிரதிவாதி கக்ஷிபாடுகிறார்.

இந்த 3-ம் பிரதிவாதியிடத்தில் தாவா நகை அடகுவைக்கப்பட்ட விபரம் வாதிக்குத் தெரிந்த தேதி முதல் 3 வருடங்களுக்குள் இந்த வழக்கு கொண்டுவரப்பட்டிருப்பதால் வாதியின் தாவாவுக்கு எவ்வித காலாவதி தோஷமுமில்லையென்று லிமிடேஷனுக்டு 48வது ஆர்டிகிலை யனுசரித்து சப் ஜட்ஜி வாதியின் தாவாப்படியே தீர்ப்பு செய்து விட்டார்கள். இதன்பேரில் இந்த ரெவிஷன் மனு கொடுபட்டிருக்கிறது.

49-வது ஆர்டிகில் தாவாகேசுக்கு பொருத்தமானதென்று மனுதார் வக்கீல் கக்ஷிபாடுகிறார். ஒருவனுக்கு நியாயப்படி கிடைத்து அவன் பிறகு அதை யக்கிரமமாக தன் வசம் வைத்திருப்பானாகில் 48—வது ஆர்டிகில்தான் பொருத்தமானதென்று இ. லா. ரி. 29 அலகபாத் 579, 22 சென்னை லா ஜர்னல் 152 தீர்மானங்களேற்பட்டிருக்கின்றன.

ஒரு சொத்தை ஒருவன் நல்ல எண்ணத்துடன் அடகு வாங்கினால் அச்சொத்திலவருக்கு நல்ல பாத்தியமுண்டாகிவிடுகிறதென்றும் அதனால் அடகு தொகை கொடுபடாமல் நகையைக் கேட்க நியாயமில்லையென்றும் காண்டிபாக்டு ஆகட்டு 178-வது செக்ஷன் தாவா கேசுக்கு பொருத்தமானதென்றும், மனுதார் வக்கீல் கக்ஷியாடுகிறார். ஒரு சொத்தை கிரயம் வாங்குகிறவனைக

அடகு வாங்குகிறவனுவது நல்லஎண்ணத்துடன்வாங்கினனென்று ருஜூப்பிப்பது மட்டில் போதுமானதல்ல. ஒரு சொத்துக்குடையவன் தன்னுடைய செய்கைகளினாலாவது தவறுதலினாலாவது தன்னுடைய சொத்தைக் கைப்பற்றும்படியான பாத்தியதையை இழந்துவிட்டானென்று ருஜூவேண்டுவது மெத்த அவசியம். ஒரு சொத்துக்கு உண்மையில் சொந்தக்காரனுயுள்ளவனுடைய பாத்தியதையை மறுக்கிறவன் தானந்த சொத்தை வைத்துக்கொள்ள நியாயமிருக்கிறதென்றும், சொந்தக்காரனுடைய மோச நடவடிக்கையினால் தான் தொகை கொடுத்ததாகவும் ருஜூப்பிக்கக் கடமைப்பட்டவனுகவிருக்கிறான். கந்தசாமி பத்தன் தாவா நகையை வைத்திருந்தது வாதியுடைய ஏஜண்டின் முறைமையில்வைத்திருந்ததாகவும், மோசவகையாலாவது வேறெந்தக் குற்றஞ் செய்தாவது வைத்திருக்கவில்லையென்று மனுதார் வக்கீல் கக்ஷி சொல்லுகிறார். கந்தசாமி ஏஜண்டு முறைமையில் தாவா நகையை வைத்திருக்கவில்லையென்றும், நகையை வாங்குபவருக்குக்காட்டிக் கொண்டு வருவதற்காகக் கொடுபட்டதென்றும் தகுந்த ருஜூக்கவிருக்கின்றன. அதனால் வாதியின் தாவாவுக்கு எவ்வித காலாவதி தோஷமுமில்லை. அடகுத்தொகையை வாதி கொடுக்க நியாயமுமில்லை. அதனால் இந்த ரெவிஷன் மனு செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

1914. M. W. N. 319.

சென்னை ஹைகோர்ட்டு.

1913ஞு த்திய 2 வது அப்பீல் நம்பர் 453.

தீர்ப்பு 26—2—14.

ஜட்ஜி.	பவருஜூ வெங்கடசுப்பாராவ் லு. அப்பீல்தார்கள் (பிரதிவாதிகள்)
ஜஸ்டிஸ் சங்கரநாயரவர்கள்	V [காரு
ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யரவர்கள்	ஸ்ரீருஜூ எனுமுலமல்லுதொர எதிர்கக்ஷிக்காரர் (வாதி)

5. [எஸ்டேட்லாண்டு ஆக்ட்.]

ஒவ்வொரு வருஷத்திய பகுதிக்கும் ஒவ்வொரு பசலியின் கடைசியிலிருந்து வியாஜ்ஜியமூல மென்பதும் சொத்து ஸ்வாதீன

மாக வேண்டுமென்று வழக்கிட்டதினால் அந்த வழக்கு காலாவதி தோஷத்தைத் தடை செய்யமாட்டாதென்பதும்.

வாதி தனக்குப் பிரதிவாதிகளிடமிருந்து 1310-ம் பசலிமுதல் 1320-ம் பசலிவரையிலுள்ள குத்தகைத் தொகைப்பாக்கி கிடைக்க வேண்டுமென வழக்கிட்டார். 1310-ம் பசலி முதல் 1317-ம் பசலிவரையிலுள்ள குத்தகைத் தொகைகள் காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுப் போய்விட்டதாக பிரதிவாதிகள் ஆக்ஷேபித்தார்கள். இவ்வழக்குக்கு முந்தி பிரதிவாதிகளை அப்புறப்படுத்தி சொத்துக்கள் வசமாகவேண்டுமென வாதி வழக்கிட்டிருந்தார் கடைசியாக ஹைகோர்ட்டார் பிரதிவாதிகளுக்கு குடிக்காணி பாத்தியதை யுண்டெனத் தீர்மானித்துவிட்டார்கள். அந்த வழக்கில் குத்தகைத் தொகை கேட்கவில்லை. முந்திய வழக்கு நடந்து வந்த காலம் காலாவதி தோஷத்துக்கு தடையாகு மென்றும், அந்தக் காலமுஞ் சேர்த்துக் குத்தகைத் தொகைக்கு வழக்கிட தனக்கு பாத்தியமுண்டென்றும், வாதி சொன்னார். பிரதிவாதிகள் சொன்ன காலாவதி தோஷத்தை சப் கலெக்டர் ஏற்றுக்கொண்டு 3 பசலிக்கு மட்டில் தீர்ப்பு செய்தார்கள். இது விஷயமாக அப்பீல் செய்யப்பட்டதில் டிஸ்டிரிக்ட் ஜட்ஜி முந்திய வழக்கின் காலம் கூடிவருமென்று அப்பீலை யங்கீகரித்து வாதியின் தாவாப்படியே தீர்ப்பு செய்து விட்டார்கள். அதனால் பிரதிவாதிகள் இந்த இரண்டாவது அப்பீல் செய்திருக்கிறார்கள்.

தீர்ப்பு

இந்த தாவாவுக்கு 3 வருடங்களுக்கு முந்திய குத்தகைத் தொகை காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுப் போய்விட்டது. சென்னை எஸ்டேட் லாண்டு ஆக்ட் A ஷிடியூல் 8-வது ஆர்டிகிளின்படி குத்தகை பாக்கி ஏற்பட்ட 3 வருடங்களுக்குள் வழக்கிடவேண்டும். பிரத்தியேகமான உடன்படிக்கை ஏற்பட்டிருந்தாலன்றிக் குத்தகைத் தொகை ஒவ்வொரு பசலியின் கடைசியில் செலுத்தப்படவேண்டும். வியாஜ்ஜியமூலம் அந்தத் தேதி முதற்றுவுண்டாகும். சொத்து ஸ்வாதீனமாக வேண்டுமெனக் கொண்டு.வந்த வழக்கு இந்தக் காலாவதி தோஷத்தை தடை செய்யமாட்டாது. குத்தகைத் தொகையைப்பற்றி அந்த வழக்கிலேயே கேட்டிருக்கலாம். 1318-ம் பசலி முதல் 1320-ம் பசலி வரையில் குத்தகைத் தொகையும் அத்தொகைக்கு வட்டியுங்

கிடைக்கக் கூடியதெனத் தீர்ப்பு செய்யப்பட்டது. பிராதிற் கண்ட மற்றப் பரிகாரங்கள் தள்ளுபடிசெய்யப்பட்டன.

I. L. W. 438.

சென்னை ஹைகோர்ட்டு.

1912 வருஷத்திய 2 வது அப்பீல் நம்பர் 227.

தீர்ப்பு 11—3—14

ஜட்ஜிகள் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யரவர்கள்	கரியகவுண்டன் என்கிற அருணாசல கவுண்டன் ஆ அப்பீல் தார்கள் V ரூகவரெட்டி ஆ எதிர்கக்ஷிகாரர்கள்

2. [ரெவினியு]

" ஒரு நிலத்தில் ஒருவருக்கு பாத்தியமேற்பட்டு விட்டால் அதில் சிலதை யவர் சாகுபடி செய்யாமல் தரிசாகப் போட்டுவிட்டாலும், அவருடைய பாத்தியம் விலகமாட்டாதென்பதும், ஒருவன் நல்ல எண்ணத்துடன் ஒரு சொத்து பாத்தியங் கொண்டாடாத வரையில் அவரால் செய்யப்பட்ட அபிவிர்த்திக்கு யாதொரு தொகையுங் கிடைக்கத்தக்கதில்லை யென்பதும்."

தாவாவிற்கண்ட நிலம் ஆதியில் தீர்வைப்படாத தரிசாக அளவாகி ஒதுக்கப்பட்ட காட்டுவகுப்பிற் சேர்க்கப்பட்டிருந்தது. கவர்ன்மெண்டாரின் அனுமதியன்னியில் அப்பீல்தார்கள் தாவா நிலங்களிற் சிலதை சாகுபடி செய்ததால் மடங்குத்தீர்வை யிவர்களிடம் வசூலிக்கப்பட்டது. பிறகு அப்பீல்தார்கள் தாவா நிலங்களை தாங்கள் விசேஷ அபிவிருத்தி செய்திருப்பதாகவும், கிணறுகள் கட்டியிருப்பதாகவும் அதனால் தாவா நிலங்கள் தங்களுக்கு அடமானஞ் செய்யப்படவேண்டு மென்றுங் கேட்டார்கள். எதிர்கக்ஷிக்காரர்கள் அடுத்த நிலக்காரர்களா யிருப்பதால் அவர்கள் தங்கள் பெயரால் முழுநிலமும் அடமானஞ் செய்யப்படவேண்டுமெனக் கேட்டார்கள். தாசில்தார் அப்பீல்தார்களுக்கு தாவா நிலத்தை அடமானஞ் செய்தார்கள். இது விஷயமாக அப்பீல் செய்யப்பட்டதில் டிவிஷனல் ஆபீசர் போட்டியாகவுள்ள கக்ஷிக்காரர்களின் பாத்தியங்களைத் தீர்மானிக்க முடியாமல் தாவா நிலங்களை பப்ளிக் ஏலத்தில் விற்று முதல் செய்ததில் எதிர்கக்ஷிக்காரர்கள்

அவைகளை யேலத்திலெடுத்து விட்டார்கள். இதனாலிவர்கள் பெயரால் பட்டாவு மேற்படுத்திவிட்டார்கள். இதன்பேரில் அப்பீல்தார்களை தாவா சொத்துக்களினின்றும் அப்புறப்படுத்த வேண்டுமென எதிர்கக்ஷிக்காரர்கள் வழக்கிட்டார்கள். சப்கலெக்டர் செய்த வுத்திரவு செல்லத்தகுந்ததல்லவென்றும், தாங்கள் வாதிகளின் பாத்தியதைகளுக்கு விரோதமாக நீண்டகாலமாக தாவா சொத்துக்களை யனுபவித்து வருவதாகவும், எந்தவிதத்திலும் தாங்கள் செய்த விருத்தியாம்சத் தொகைகள் தங்களுக்குக் கிடைக்கக் கூடியதென்றும் அப்பீல்தார்கள் கக்ஷியாடினார்கள். சப் கலெக்டர் செய்த வுத்திரவு கிரமப்பிசகல்லவென்றும், அவர் செய்த வுத்திரவில் பிரவேசிக்க சிவில் கோர்ட்டாருக்கு அதிகாரமில்லையென்றும், வாதிகளுக்கு விரோதமான பாத்தியதையுடன் பிரதிவாதிகள் அனுபவிக்கவில்லையென்றும், பிரதிவாதிகள் செய்த விருத்தியாம்சத்தொகைகள் வாதிகள் கொடுக்கக்கடமைப் பட்டவர்களல்லவென்றும், வாதிகளின் தாவாப்படியே தாவா சொத்தும் அதன் வரும்படியுங் கிடைக்கவேண்டியதென டிஸ்டிரிக்ட் முனிசீப் தீர்ப்பு செய்தார்கள். இது அப்பீலிலும் உறுதிசெய்யப்பட்டது. அதன்பேரில் பிரதிவாதிகள் இந்த அப்பீல் செய்திருக்கிறார்கள்.

சப்கலெக்டர் தர்க்காஸ்து அப்பீலைப்பற்றி முடிவு செய்ததில் 15 வது ஸ்டாண்டிங்கார்டருக்கு விரோதமாகத் தீர்மானித்தது கிரமமல்லவென்றும், ஒப்புக்கொள்ளப்பட்டபடி தாவா நிலத்தின் சில பாகத்தை அனுபவிப்பதால் தாவா முழுசொத்துக்களும் அப்பீல்தாரே அனுபவிப்பதாக ஊகிக்கப்பட வேண்டியதென்றும், இவர்கள் தாவா நிலத்தில் விசேஷவிருத்தி யாம்சஞ் செய்திருப்பதால் அத்தொகை இவர்களுக்குக் கிடைக்கக் கூடியதென்றும் அப்பீல்தார்கள் கக்ஷியாடுகிறார்கள்.

தீர்ப்பு.

தாசில்தார் தர்க்காஸ்து அடமானஞ் செய்ததை ரத்துசெய்ய சப்கலெக்டருக்கு அதிகாரமுண்டு. சப்கலெக்டர் அப்பீலை முடிவு செய்ததில் 15 வது ஸ்டாண்டிங் கார்டருக்கு விரோதமாக நடந்ததாக வைத்துக்கொண்டாலும், அது தாசில்தார்செய்த உத்திரவை ரத்துசெய்ய சப்கலெக்டருக்கும் அதிகாரத்தை எவ்விடத்திலுந் தடைசெய்யமாட்டாது, அதனால்முதலாவது சொன்ன கக்ஷி பிரயோஜன மற்றது.

ஒருவருக்கு முழுசொத்தும் பாத்தியமாகவிருந்து அதில் சில சொத்தை யவர் அனுபவியாமல் தரிசுபோட்டு விட்டாலும் அந்த முழுசொத்தும் அவருடையதென்றே எண்ணப்பட வேண்டும். ஆக்கிரமித்து அனுபவிப்பவனுடைய பாத்தியம் அப்படிக் கல்ல. அவன் ஸ்வாதீனத்திலிருக்கும் சொத்துக்கு மட்டில் பொருந்தும். அப்பீல்தார்கள் துடர்ச்சியாக 12 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அனுபவித்ததாக டிஸ்டிரிக்ட் ஜட்ஜி கண்டுபிடிக்கவில்லை. இதனால் காலாவதிதோஷ கக்ஷியும் பிரயோஜனமற்றதாகிவிட்டது. பிரதிவாதிகள் நல்ல எண்ணத்துடனும் நம்பிக்கையுடனும் தாவா ஸ்தலத்தில் பாத்தியங் கொண்டாடவில்லை. அதனாலிவர்களுக்கு விர்த்திபாம்சத் தொகை யாதொன்றும் கிடைக்கத்தக்கதில்லை. இதனால் இந்த அப்பீல் செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

I. L. W. 410.

சென்னை ஹைகோர்ட்டு.

1912 ௵த்திய 2-வது அப்பீல் நம்பர் 2551

தீர்ப்பு 19—1—14.

ஜட்ஜிகள்.	சக்காங்கல் கோவிந்த மீனன் 1 பிரதிவாதி அப்பீல்தார்
ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள்	V.
ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர் அவர்கள்	சக்காங்கல் சாதுமீனன் ஆ 2-3 பிரதிவாதிகளும் வாதிகளும்

20. [டிரான்ஸ்வர் அவ் பிராபர்டி ஆக்ட்]

பெந்தக சொத்து கெடுக்கடந்தபின் எந்த காலத்திலும் மீட்கப்படலாமென்பதும், பெந்தகம் செல்லுபடியற்றதெனக் கோர்ட்டு மூலமாக ஸ்தாபிக்கப்படுகிற வரையில் பெந்தகதாரன் தன் தொகையைப்பற்றி வழக்கிட பாத்திய முடையவனென்பதும்.

வாதிகள் தாவா சொத்தை இரண்டாவது பெந்தகம் பெற்றவர்கள் முதல் பெந்தகம் மீட்கப்படவேண்டுமென வழக்கிட்டார்கள். வாதிகள் இந்த தாவா செய்யப் போதுமான காலம்வரவில்லையென்றும், அதனால் இவ்வழக்குத் தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்பதும் முதலாவது கக்ஷி. இந்த பெந்தகம் 1897-ம் வருஷத்திலேற்பட்டது. எந்த வருஷத்திலாவது கய்யம் மாதம் 30-ந்

தேதிக்குள் சொத்துக்கள் மீட்கப்படலாமென்று கண்டிருக்கிறது. இங்கிலீஷ் வருஷம் ஆகஸ்டு மாதமாகிறது. ஒவ்வொரு வருஷமும் ஆகஸ்டு மாதத்துக்குப் பிற்பட்டும் மார்ச்சு மாதம் 13-ந் தேதிக்கு முந்தியும் வழக்கு கொண்டு வரவேண்டியதென்றும், இந்த தாவா 1911-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 21-ந்தேதி கொண்டு வந்திருப்பதால் வாதி வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றும் பிரதிவாதிகள் கக்ஷியாடுகிறார்கள். டிரான்ஸ்வர் அவ் பிராபர்டி ஆக்ட் 60-வது செக்ஷன்படி பெந்தக பத்திரத்திற்கண்ட கெடுக்கடந்த பின்பு எந்தக் காலத்திலும் வழக்குக் கொண்டுவரலாம். அதனாலிந்த ஆக்ஷேபணையைத் தள்ளுபடி செய்கிறோம். வாதிகள் பெற்றிருக்கும் பெந்தகம் செல்லுபடியற்றது; அதன்பேரிற் கொண்டு வந்திருக்கும் வழக்கு செல்லத்தகுந்ததல்லவென்பது இரண்டாவது கக்ஷி. இந்தப் பெந்தகம் செல்லுபடியற்றதென்று தகுந்த கோர்ட்டாரால் தீர்மானிக்கப்படுகிற வரையில் வாதிகள் தங்கள் பெந்தக பத்திரத்தின்பேரில் டிரான்ஸ்வர் அவ் பிராபர்டி ஆக்ட் 91 (b) செக்ஷன்படி ரிடெம்ஷன் வழக்கு கொண்டுவரலாம். இவ்வித ரிடெம்ஷன் வழக்குகளில் முதலாவது பெந்தகம் பெற்றவர் இரண்டாவது பெந்தகம் முற்றிலும் செல்லுபடியற்றதாகவில்லாத வரையில் அதுவிஷயத்தைப்பற்றி கக்ஷியாடக்கூடாது. இதனாலிந்த இரண்டாவது அப்பீல் செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

22 Indian Cases 907.

அலகபாத் ஹைகோர்ட்டு.

1912 ம் வருஷத்திய முதலாவது அப்பீல் நம்பர் 69.

தீர்ப்பு 20—1—1914.

ஜட்ஜிகள். சீவ் ஜஸ்டிஸ் ஸர்ஹென்ரிரிச்சேர்ட்ஸ் Kt அவர்கள்	ஜவாகிர் மால் ஆ வாதிகள் அப்பீல்தார்கள்
	V.
ஜஸ்டிஸ் ஸர் P-C பானர்ஜி Kt. அவர்கள்	ரூணி இந்துமதி ஆ பிரதிவாதிகள் எதிர்க்கக்ஷிக்காரர்கள்

21. [டிரான்ஸ்வர் அவ்பிராபர்டி ஆக்ட்டு.]

கடனைக் கொடுபட்ட தொகைக்கு ஒரு ஸ்தாவர சொத்து ஜவாப்தாரியாக இருக்கிறதென்று எழுதபட்டிருந்தால் அக்கடனுக்கு அந்த சொத்து ஏலவிற்றுமுதல் செய்யப்படலாமென்பதும் கொதுவை பத்திரதநுக்கும் பெந்தகபத்திரத்துக்கு முள்ள வித்தியாசங்களும்.

தாவா பத்திரம் வாதிகளுக்கு ரூ 1000 க்கு 1884 ம் வருஷம் மே மாதம் 12ம் தேதி எழுதிக்கொடுக்கப்பட்டது. இத்தொகையை 7 மாதகெடுவுக்குள் மாதம் 1.க்கு 100 க்கு 2 வீதம் வட்டி சேர்த்து கொடுக்கிறதென்றும், அந்த கெடுவுக்குள் தொகை கொடுபடாவிட்டால் அந்த 2 வீதமாகவே வட்டி சேர்த்து கொடுக்கிறதென்று கண்டிருக்கிறது. இதில் சில ஸ்தாவர சொத்துக்கள் குறிப்பிட்டு எழுதப்பட்டிருக்கின்றன. இந்த அசல்வட்டித் தொகை ஜாடாவும் கொடுபடுகிறவரையில் இதிற்கண்ட சொத்துகளை பெந்தகம் வைத்தவர்கள், கிரயம், பெந்தகம், இனும் முதலியன மூலமாக எவ்வித பராதீனமுஞ் செய்யக்கூடாதெனக் கண்டிருக்கிறது. ஆனாலிதில் பெந்தகம் வைத்ததாகவாவது, அல்லது வேறே இதற்கு ஒற்றுமையான எந்த வாசகமாவது எழுதப்படவில்லை. பிரதிவாதிகள் தாவாபத்திரம் கொதுவைபத்திரமல்லவென்றும், இன்னும் பலவித கக்ஷிகளுமாடினார்கள். முந்திய பெந்தகக்கடனுக்காக தாவா சொத்து ஏலம்போடப்பட்டதில் தாவாசொத்துக்களை ஏலத்திலெடுத்ததாக எதிர்கக்ஷியாடும் பிரதிவாதிகள்வாதிக்கிறார்கள். தாவா பத்திரம் பெந்தகபத்திரமல்லவென்றும் டிரான்ஸவர் அவ்பிராபர்டி ஆக்டு 100 வது செக்ஷன்படி பொறுப்புசாட்டிய தஸ்தாவேஜியாக வைத்துக்கொண்டாலும், அது காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுப் போய்விட்டதென்றும், கீழ்கோர்ட்டார் வாதியின் வழக்கைத்தள்ளுபடி செய்துவிட்டார்கள். அதன்பேரில் இந்த அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது. கீழ்கோர்ட்டார் கக்ஷியாடும் பிரதிவாதிகளின் முன்பாத்தியங்களைப்பற்றிக் கவனிக்கவேயில்லை. 1908 வருஷத்திய லிமிடேஷனுக்டுப்படி தயவாகக் கொடுக்கப்பட்ட கடைசி காலம் வரையில் இந்த வழக்குக் கொண்டுவரப்படவில்லை. தாவா சொத்தின் பொருமானத்துக்குமேல் கடன் ஜாஸ்தியாகட்டுமென வாதிவழக்கிடா திருந்ததாகத் தெரிகிறது. கக்ஷியாடும் பிரதிவாதிகள் முன்பாத்திய கடன்களுக்காக ஏலத்திலெடுத்து அனுபவிக்கிறார்களென்பதற்குச் சந்தேகமே கிடையாது. டிரான்ஸ்வர் அவ் பிராபர்டி ஆக்ட் 56-வது செக்ஷன்படி தாவா பத்திரம் பெந்தக பத்திரமாகாத பட்சத்தில் வாதியின் தாவாவுக்கு காலாவதி தோஷமேற்பட்டு விட்டதென்பதற்குச் சந்தேகமே கிடையாது. தற்செயலாகவோ, அல்லது வேறு விதமாகவோ

கோதுவை அல்லது பெந்தகம் என்ற வார்த்தை தாவாபத்திரத்தி லெழுதப்படவில்லை. பெந்தகம் பெற்றவர் தாவா சொத்தை ஏல விற்றுமுதல் செய்கிற தென்ற வாசகமுமில்லை. முதல் தொகையைத்திருப்பிக்கொடுக்கிறதென்றும், அந்த அசல் வட்டித்தொகைகள் கொடுபடுகிறவரையில் இச்சொத்தைக் கடன்வாங்கியவர் பராதீனஞ் செய்யக்கூடாதெனவுங் கண்டிருக்கிறது. பத்திரத்தின் வாசகங்களைக்கொண்டு கடனுக்கு தாவா சொத்துக்கள் பாத்தியமாக விருக்கவேண்டுமென்ற எண்ணத்துடனேயே தாவா பத்திரமேற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இந்த வழக்கு கெடுக்கடந்த பனிரெண்டு வருடங்களுக்குள் கொண்டுவரப்பட்டிருக்கும் பட்சத்தில் வாதிகள் இந்த வழக்கிடக்கூடியவர்களென நாம் தீர்மானிக்கலாம். 1908-ம் வருஷத்திய லிமிடேஷனாக்டில் தயவாக சிலகாலம் கொடுத்தது அனேக பொய்யான வழக்குகளை யுற்பத்தி செய்துவிட்டது. கீழ்கோர்ட்டார் செய்த தீர்மானம் கிரமமான தாகையால் அதையுறுதி செய்கிறோம். இந்த அப்பீல் செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

22 Indian Cases 973.

சென்னை ஹைகோர்ட்.

1911 வருஷத்திய 2 வது அப்பீல் நம்பர் 1370.

தீர்ப்பு 29—2—14.

ஜட்ஜிகள்	
ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள்	வெங்கடசுப்பய்யர். அப்பீல்தாரர்வாதி
	V
ஜஸ்டிஸ் டியாப்ஜி அவர்கள்	சபாரெத்தின மய்யர் ஆ பிரதிவாதிகள்

22. [டிரான்ஸ்வர் அவ்பிராபர்டி ஆக்ட்டு.

பெந்தகம், பெற்றவன் தன்னுடைய பெந்தகபத்திரத்தை வெறொருவனுக்கு டிரான்ஸ்வர் செய்து பெந்தகத் தொகையை யவரிடங் கொடுத்துவிடும்படி நோட்டீஸ் கொடுத்துவிட்டு, பின்பு அந்த டிரான்ஸவருக்கு பிரதிப் பிரயோஜன மில்லையென்று வேறு நோட்டீஸ் மட்டில் கொடுப்பது போதுமானதல்ல வென்பதும், உடனே அது விஷயமாக வழக்கிட்டு பெந்தகமெழுதிக் கொடுத்தவன் அத்தொகையை டிரான்ஸ்வர் பெற்றவனிடங் கொடாமல் கோர்ட்டு மூலமாக மறியல் செய்யவேண்டியது மெத்த அவசியமென்பதும்,

திருச்சினாப்பள்ளி டிஸ்டிரிக்ட் ஜட்ஜி செய்த தீர்மானத்தின் பேரில் 2 வது அப்பீல்.

முதல் பிரதிவாதி 1894 ம் வருஷம் ஜூலை மாதத்தில்வாதிக்கு தாவா பெந்தக பத்திர மெழுதிக் கொடுத்தார். அதை வாதி D-R என்பவர்களுக்கு 1897ம் ௵ மார்ச்சு மாதம் 3உ டிரான்ஸ்வர் செய்துகொடுத்து விட்டு அது விபரத்தை முதல்பிரதிவாதிக்கு 1897 ௵ மார்ச்சு மாதம் 27உ நோட்டீஸ் மூலமாக அறிவித்து பெந்தகத்தொகையை டிரான்ஸ்வர் பெற்றவர்களிடங் கொடுத்து விடும்படி அறிவித்தார். இதனால் 1 ம் பிரதிவாதி தாவா சொத்துக்களை V-M இவர்களிடம் 1897 ௵ செப்டம்பர் மாதம் 29உ போக்கிய அடமானமாகவைத்து இந்த பெந்தகக்கடனைத் தீர்த்து விடும்படி சாட்டிவிட்டார். பின்பு வாதி தான் செய்த மேற்சொன்ன டிரான்ஸ்வருக்கு பிரதிப் பிரயோஜனமில்லை யென்றும், அது செல்லத்தகுந்ததல்ல வென்றும், பெந்தகத்தொகையை *D. R* இவர்களிடங் கொடுக்கக் கூடாதென்றும், 1897 ௵ ஆகஸ்டு மாதம் 5உ வேறு நோட்டீஸ் முதல் பிரதிவாதிக்குக் கொடுத்திருப்பதாகவும், அதனால் எந்தத் தொகையும் அவர்களுக்கு கொடுபடவில்லை யென்றும், தாவா பெந்தக பத்திரத்தின்படி தனக்கு தொகை கிடைக்கவேண்டுமென்றும், வாதி வழக்கிட்டிருக்கிறார். இந்த வழக்கு 1909-ம் வருஷத்தில் கொண்டுவரப்பட்டது. வாதி தான் செய்த டிரான்ஸ்வர் செல்லத்தகுந்ததல்ல வென்று அந்த டிரான்ஸ்வர் பெற்ற D. R இவர்கள் பேரில் 1900-ம் வருஷத்தில் வழக்கிட்டு அவருடைய தாவாவின்படியே டிக்கிரி பெற்றார். அந்த வழக்கில் முதல் பிரதிவாதி கக்ஷிக்காரராகச் சேர்க்கப்படவில்லை.

வாதி கொடுத்ததாகச் சொல்லும் 2-வது நோட்டீஸ் வாதி சொல்லுகிறபடி 1897-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 5-ந்தேதி கொடுபடவில்லை யென்றும், 1891-ம் வருஷம் அக்டோபர் மாதம் 15ந் தேதி போட்டு மேற்படி வருஷம் நவம்பர் மாதம் 15ந்தேதி தபாலில் போடப்பட்டதாகவும், அதற்கு சில தினங்கள் கழித்து முதல் பிரதிவாதி அதைப்பெற்றுக் கொண்டிருப்பதாகவும், இதன் மத்தியில் முதல் பிரதிவாதியிடத்தில் போக்கிய அடமானம் பெற்றவர் டிரான்ஸ்வர் பெற்றவருக்கு ரூபா 1800 கொடுத்துவிட்டதாகவும், பாக்கித்தொகை ரூபா 230ம் முதல் பிரதிவாதியே 1907 ம் வருஷம் அக்டோபர் மாதம் 3 ந்தேதி கொடுத்து தாவா பெந்தகக்கடன் ஜாடாவுந் தீர்ந்துவிட்டதென்றும், வாதி டிரான்

ஸ்வர் பெற்றவர்கள் பேரில் பெற்றிருக்கும் டிக்கிரிக்கு தாங்கள் எந்த விதத்திலும் கட்டுப்பட்டவர்களல்ல வென்றும் பிரதிவாதிகள் கக்ஷியாடினார்கள்.

இந்தக் கேசை விசாரித்த சப் ஜட்ஜியவர்கள் பிரதிவாதிகள் பெந்தக்கடனைக் கொடுத்துவிட்டதாகச் சொல்வதை நம்பவில்லையென்றும், அது உண்மையாக விருந்தபோதிலும் வாதியின் இரண்டாவது நோட்டீசுக்குப் பிறகு அவ்விதங் கொடுபட்டிருப்பதால் வாதி அதற்குக் கட்டுப்படவேண்டியதில்லையென்றும், வாதியின் தாவாப்படியே தீர்ப்புசெய்து விட்டார்கள். இது விஷயமாக அப்பீல் செய்யப்பட்டதில், வாதி தன்னுடைய பாத்தியங்களை ரிஜிஸ்டர் பத்திரமூலமாக பிறருக்கு டிரான்ஸ்வர் செய்துவிட்டதுமன்றி அது விபரம் முதல்பிரதிவாதிக்கு அறிவித்து விட்டபிறகு தனக்கு 2 வது நோட்டீஸ் மூலமாக அந்த பெந்தக பாத்தியம் திரும்பக்கிடைத்து விட்டதாகச் சொல்வது சரியல்லவென்றும், வாதியின் 1900 ம் வருஷத்திய வழக்குக்குபிரதிவாதிகள் கக்ஷிக்காரர்களல்ல வாகையால் அதற்கு அவர்கள் எவ்விதத்திலுங் கட்டுப்பட்டவர்களல்லவென்றும், அப்பீலையங்கீகரித்து வாதியின்வழக்கைத்தள்ளுபடி செய்துவிட்டார்கள். அதன்பேரில்வாதி இந்த2-வது அப்பீல் செய்திருக்கிறார். இந்தக்கேஸ் ஹைகோர்ட்டில் விசாரணைக்கு எடுக்கப்பட்டதில் அடியிற்கண்ட 3 இஷ்ஷியுக்களை யேற்படுத்தி அவைகளைப்பற்றி விசாரித்து பயிண்டிங் அனுப்பும்படி நம்பர்கட்டை கீழ் அப்பீல் கோர்ட்டுக்கு அனுப்பினார்கள். அந்த இஷ்ஷியுக்களாவன:—

(1) 7 அடையாள 2-வது நோட்டீஸ் கொடுபடுவதற்கு முந்தியே 6 அடையாள போக்கிய பத்திரத்தொகையை பெற்றுக்கொள்வதாக துரைசாமி அய்யங்கார் சம்மதித்தாரா? போக்கிய தாரிடமிருந்தாவது முதல் பிரதிவாதியிடமிருந்தாவது பெந்தகத்தொகையைப் பெற்றுக்கொண்டு அந்த பெந்தக பாத்தியதையை ரத்து செய்து கொடுப்பதாக சம்மதித்தாரா?

(2) 7 அடையாள நோட்டீசுக்கு முந்தி முதல் பிரதிவாதி துரைசாமி அய்யங்காரிடம் தாவா பெந்தகக்கடன் விஷயமாகஎவ்விதமான எக்கிரிமெண்டு செய்துகொண்டார்?

(3) குழித்தலை டி. மு. கோர்ட்டு 1900 வருஷத்திய அசல் 235 நம்பர் தீர்ப்புக்கு முந்தி துரைசாமி அய்யங்காருக்கு ஏதேனுந் தொகை கொடுபட்டதா? அது எவ்வளவு?

இது விஷயமாக டிஸ்டிரிக்ட் ஜட்ஜி புனர் விசாரணை செய்ததில் தாவா பெந்தகக் கடன் தீர்க்கும் விஷயமாக முதல் பிரதிவாதிக்கும் துரைசாமி அய்யங்காருக்கும் 7 அடையாள நோட்டீசுக்கு முந்தி எவ்வித வுடன்படிக்கையும் ஏற்படவில்லையென்றும், ஆனால் ரூபா 230—1—6 இந்த நோட்டீசுக்கு முந்தி முதல் பிரதிவாதி துரைசாமி அய்யங்காரிடங் கொடுத்திருப்பதாகவும், போக்கிய அடமானத்திற்கண்ட தொகை இந்த இரண்டாவது நோட்டீசுக்குப் பிறகுதான் கொடுபட்டிருக்கிறதென்றும், தாவா பெந்தகத் தொகை முழுவதும் 1900ம் வருஷத்திய 235 நம்பர் டிக்கிரிக்கு முந்தியே கொடுபட்டு தீர்ந்துவிட்டதென்றும் பயிண்டிங் ஏற்படுத்தி அனுப்பி விட்டார்கள்.

தீர்ப்பு.

7 அடையாள நோட்டீசுக்குப்பிறகு முதல் பிரதிவாதி தாவா பெந்தகக் கடனை கொடுத்திருப்பதால் அவர் நஷ்டப்படவேண்டியதுதானென்று வாதி சொல்லுகிறார். வாதி கொடுத்த இந்த 7 அடையாள நோட்டீசில் தான் துரைசாமி அய்யங்கார்பேரில் வழக்கிட்டு அவர் பெற்றிருக்கும் டிரான்ஸபரை ரத்து செய்வதாகச் சொல்லவில்லை. வாதி துரைசாமி அய்யங்கார் பேரில் வழக்கிடுவதற்கு முந்தியே அந்த அய்யங்கார் தான் டிரான்ஸவர் பெற்ற பெந்தக பத்திரத்தின்பேரில் இந்த முதல் பிரதிவாதிபேரில் வழக்கிடும்பட்சத்தில், இவர் எவ்வித கக்ஷியுஞ் சொல்ல இடமிராது. அதனால் இந்த டிரான்ஸவர் ரத்து செய்யப்படுகிறவரையில், துரைசாமி அய்யங்காரே பெந்தகம் பெற்றவராக நினைத்து பெந்தகக் கடனை யவரிடஞ் செலுத்த முதல் பிரதிவாதி கடமைப்பட்டிருக்கிறார், இ. லா. ரி. 33 சென்னை 123, 130 தீர்மானத்திற் கண்டபடி முதல் பிரதிவாதி வாதிபேரிலும் டிரான்ஸவர் பெற்ற துரைசாமி அய்யங்கார் பேரிலும் இன்டர் பிளீடர் வழக்கு (Interpleader Suit) கொண்டுவரவேண்டுமென அப்பீல் வாதியின் வக்கீல் கக்ஷியாடுகிறார். அது தாவா கேசுக்கு ஒற்றுமையானதல்ல. வாதி தாவா தொகைக்கு தகுந்த ஜாமீன் கொடுத்தால் தாவா கடனை கொடுப்பதாக முதல் பிரதிவாதி கேட்டிருக்கிறார். அதற்குவாதி சம்மதிக்கவில்லை. வாதி டிரான்ஸ்வர் பெற்றவர் பேரில் உடனே வழக்கிட்டு தாவா பெந்தகக்கடனை டிரான்ஸ்பர் பெற்றவரிடங்கொடுக்கக் கூடாதென முதல் பிரதிவாதிக்கும் அவரிடம் போக்கிய அடமானம் பெற்றவருக்கும் இன்ஜங்ஷன் கொடுத்திருக்கலாம். அாதப்படிச் செய்யவில்லை அதனால் வாதி அவரிடம்.

டிரான்ஸ்வர் பெற்றவர்பேரில் வழக்கிடுவதற்கு முந்தி பிரதிவாதிகள் இந்த டிரான்ஸ்வர் பெற்றவரிடங் கொடுத்துவிட்ட தொகைக்கு வாதி கட்டுப்பட்டவராகிறார். அதனால் வாதியின் இந்த அப்பீல் செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

I. L. W. 419

சென்னை ஹைகோர்ட்டு.

1912 ஷுலத்திய 2வது அப்பீல்கள் நம்பர் 701 & 779.

தீர்ப்பு 5—2—14.

ஜட்ஜிகள் மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரன்நாயரவர்கள் மிஸ்டர் ஜஸ்டிஸ் எயிலிங் அவர்கள்	சுப்பாரெட்டியார் வாதி அப்பீல்தார் V சுப்பாரெட்டியார் ஆ அ. பிரதிவாதிகள்

6 [ஸ்பெஸிபிக் ரிலீவ் ஆக்ட்டு.]

ஒரு பத்திரம் ரிஜிஸ்டர் செய்யப்படவேண்டிய கெடு தவறி விட்டால் வேறுபத்திரமெழுதிக் கொடுத்து ரிஜிஸ்டர் செய்துகொடுக்க வேண்டுமென வழக்கிடக்கூடாதென்பது.

சீர்காழி டி. மு. கோர்ட்டு தீர்ப்பின்பேரில் மாயவரம் சப் கோர்ட்டில் அப்பீல் விசாரணை நடந்து அதன்பேரில் 2-வது அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது.

முதல் பிரதிவாதி 1907 வருஷம் ஜுன்மாதம் 29 தேதி வாதிக்கு ஒரு கிரய சாசனம் எழுதிக்கொடுத்தார். அதை ரிஜிஸ்டர் செய்து கொடுக்கும்படி வாதி முதல் பிரதிவாதியை பலதடவைகளிற்கேட்டு வந்ததில் அவர் தன்வீட்டில்வைசூரிபூட்டியிருப்பதால் அசவுகரியமாக விருப்பதாகச் சொல்லி காலஹரணஞ் செய்து ரிஜிஸ்டர் கெடு* தவறிப்போகச் செய்து விட்டதாகவும், வேறுபத்திரம் எழுதி ரிஜிஸ்டர் செய்து கொடுப்பதாக வாக்குறுதி சொன்னதாகவும், பிறருடைய தூண்டுதலின்பேரில் அச்சொத்தை 2-ம் பிரதிவாதிக்கு 1908ம் வருஷம் ஜுன்மாதம் 17-ந் தேதி சாசனஞ் செய்து கொடுத்து விட்டதாகவும், அதனால் முதல் பிரதிவாதி வேறு சாசனம் எழுதி அதை ரிஜிஸ்டர் செய்து கொடுக்கவேண்டுமென்றும் வாதி வழக்கிட்டார். வாதியின் பிராதிற் கண்ட விஷயங்கள் உண்மையானதாக டிஸ்டிரிக்ட் முனிசீப் கண்டுபிடித்து வாதியின் தாவாப்படியே முதல் பிரதிவாதி வேறு சாசனம் எழுதி அதை ரிஜிஸ்டர் செய்துகொடுக்கவேண்டுமெனத் தீர்ப்பு செய்துவிட்டார்கள். இது விஷயமாக அப்பீல் செய்யப்பட்டதில் சப் ஜட்ஜியவர்கள் முதல் பிரதிவாதி B அடையாள சாசனம் எழுதிக்கொடுத்து விட்டதால் அதை ரிஜிஸ்டர் செய்துகொள்ளவேண்டியது வாதியின் கடமையென்றும், அது ரிஜிஸ்டர் செய்யப்பட முடியாவிட்டால் அது விஷயமாக வழக்கிட்டு ரிஜிஸ்டர் செய்துகொள்ளவேண்டியது மெத்த அவசியமென்றும், வேறு சாசனமெழுதிக் கொடுப்பதாக முதல் பிரதிவாதி ஒப்புக்கொள்ளவில்லையென்றும், அப்பீலையங்கீகரித்து வாதியின் வழக்கைத் தள்ளுபடி செய்து விட்டார்கள். ஆனால் தாவா சாசனம் ரிஜிஸ்டர் செய்யப்படாமற் போய்விட்டது வாதியின் தவறுதலென்றாவது, பிரதிவாதியின் தவறுதலென்றாவது சொல்லவில்லை. இது விஷயமாக 2-வது அப்பீல் செய்யப்பட்டதில் B அடையாள சாசனம் ரிஜிஸ்டர் செய்யப்படாதது முதல் பிரதிவாதியின் தவறுதல் அல்லது அலக்ஷியத்தின்பேரிலேற்பட்டதா வென்பதைப்பற்றி விசாரித்து பயிண்டிங் அனுப்பும்படி கீழ் அப்பீல் கோர்ட்டுக்கு கேஸ் ரிமாண்டு செய்யப்பட்டது. இதன்பேரில் சப் ஜட்ஜியவர்கள் உபய திரப்பிலும் விடப்பட்ட ருஜுக்களை விளங்கி முதல் பிரதிவாதியின் அசவுகரியங்களினால் தாவா சாசனம் ரிஜிஸ்டர் செய்யப்படாமற் போய்விட்டதாகவும், அது ரிஜிஸ்டர் செய்யப்படாதது முதல் பிரதிவாதியின் தவறுதல் அல்லது அலக்ஷியமென்றும், முதல் பிரதிவாதியின் வீட்டில் நடந்த துன்பங்களை யுத்தேசித்தும் அவருடைய நன்மையை யுத்தேசித்தும் வாதி தாவா சாசனம் ரிஜிஸ்டர் செய்யப்பட சப்ரிஜிஸ்டர் ஆபீசில் தாகல் செய்யாமலிருந்து விட்டதாகவும் பயிண்டிங் ஏற்படுத்தியனுப்பிவிட்டார்கள்.

தீர்ப்பு.

தாவா சாசனம் ரிஜிஸ்டர் செய்யப்படுவதற்காக வாதி சப் ரிஜிஸ்டராபீசில் தாகல் செய்யாதிருந்தது முதல் பிரதிவாதியின் வீட்டில் நடந்த அசவுகரியங்களை யுத்தேசித்து சும்மாயிருந்ததாக கீழ் அப்பீல் கோர்ட்டார் கண்டுபிடித்திருக்கிறார்கள், இது காரணத்திற்காக முதல் பிரதிவாதி வேறு சாசனம் எழுதிக் கொடுத்து ரிஜிஸ்டர்செய்து கொடுக்கக் கடமைப்பட்டவரல்ல. ஆகையால் கீழ் அப்பீல் கோர்ட்டார் செய்த தீர்மானத்தை யுறுதி செய்கிறோம். இந்த அப்பீல் செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

22 Indian Cases 941.

கல்கத்தா ஹைகோர்ட்.

1911 ஷூ த்திய 2-வது அப்பீல் நம்பர் 592.

தீர்ப்பு 11—2—14.

ஜட்ஜிகள். ஜஸ்டிஸ் ஸர் ஹர் பர்ட் கார்ண்டவ் மிஸ்டர் ஜஸ்டிஸ் ரிச்சேர்ட்ஸ்சன் அவர்கள்.	கோவிந்த சந்திர சக்கிரவர்த்தி (வாதி) அப்பீல்தாரன். V. நந்தகுமாரதாஸ் ஆ பிரதிவாதிவாதிகள்.

7. [ஸ்பேஸிவிக் ரிலீவ் ஆக்ட்டு.]

கக்ஷிக்காரர்களுக்குள் ஏற்பட்ட காண்டிராகட்டின்படி கோர்ட்டார் தீர்ப்பு செய்யவேண்டியதவசியமில்லை யென்பது.

தாவா நிலம் பூர்வத்தில் வாதிகளுக்குச் சொந்தமாயிருந்தது. டிக்கிரி கடனுக்காக இவைகள் ஏலம்போடப்பட்டதில் இதை பியரிலால் என்ற ஒருவர் வாங்கி 1 - 2 பிரதிவாதிகளுக்கு விற்றுவிட்டார். தாவா நிலத்தை வாதிகளுக்கு ரூபா 250க்கு சாசனஞ்செய்து கொடுப்பதாக பிரதிவாதிகள் உடன்படிக்கை எழுதியதாகவும், ஆனல் அது ரிஜிஸ்டர் செம்யப்படவில்லை யென்றும், அது தங்களிடங் கொடுபடவில்லை யென்றும், அதனல் அந்த உடன்படிக்கை பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்து அதையவர்கள் ரிஜிஸ்டர் செய்துங் கொடுக்கவேண்டு மென்றும் வாதிகள் வழக்கிட்டார்கள். தாவா உடன்படிக்கை யேற்பட்டதுமட்டி லுண்மை யென்றும், அதுபலவந்தத்தின்பேரில் எழுதிக் கொடுக்கப்பட்ட தென்றும், அதற்கெற்பட்ட பிரதிப்பிரயோஜனம் நடுநியாயத்துக்கு விரோதமானதென்றும், மோசவகையாக தணிந்த தொகைக்கு எழுதிவாங்கப்பட்ட தென்றும் வாதிகளின் வழக்கை கீழ்கோர்ட்டார்களிருவருந் தளளுபடி செய்துவிட்டார்கள். அதன் பேரில் இந்தக்கோர்ட்டில் 2-வது அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது.

2-ம்பிரதிவாதி டிஸ்டிரிக்ட் கோர்ட்டில் ரிகார்டு கீப்பர் வேலையிலுள்ளவர். அவர் தன்னுடைய உத்தியோக முறைமையில் சில பிசகுகள் செய்ததாக அவர்பேரில் வாதிகளின தூண்டுதலின் பேரில் ஓர் நடவடிக்கை நடத்தபட்டது. அந்தக்கேஸ் சப்ஜட்ஜியால் விசாரிக்கப்பட்ட காலத்தில் வாதிகளை பிரதிவாதிகள் கேட்டுக் கொள்ளும் சமயம் வாய்த்ததை முன்னிட்டு வாதிகள் தங்கள் நிலத்தை பிரதிவாதிகளிடமிருந்து சுலபமாக வாங்க வுத்தேசித்து தாவா உடன்படிக்கை எழுதிக்கொடுத்தால் 2 ம் பிரதிவாதி பேரிலேற்பட்ட கேசை அழுத்திவிடுவதாகச் சொன்னர். அதன்பேரில் தாவாவிற்கண்ட உடன்படிக்கை யேற்பட்டது. தாவா உடன்படிக்

கை காண்டிராகட்டு ஆகட்டு 16 - வது செக்ஷனிற் கண்டபடி அசாதாரண தாக்ஷியணத்துக் குட்பட்டு ஏற்பட்டதல்ல வென்றும், பிரதிவாதிபேரில் எவ்வித பிராதாவது சார்ஜாவது இருந்திருப்பதாக எவ்வித தஸ்தாவேஜியு மில்லாததால் கேசை அழுத்திவிடுவதாகச் சொன்னதின்பேரில் தாவா உடன்படிக்கை யேற்பட்டிருப்பதாகச் சொல்லுவதும் அது பொது நீதிக்கு விரோதமெனச் சொல்லுவதும் ஏற்றுக் கொள்ளக்கூடாத விஷயங்களாகவிருக்கின்றன வென்றும், இந்திய தேசசட்டப்படி கக்ஷிக்காரர்களுக்குள் ஏற்பட்ட எக்கிரிமெண்டின்படியே ஸ்பெஸிபிக்ரிலீவ் ஆகட்டு 22-வது செக்ஷன்படி தீர்மானிக்கவேண்டியதவசியமென்றும் அப்பீல்தார் வக்கீல் கக்ஷியாடுகிருர். இந்தியன் காண்டிராகட்டிற் சொல்லப்படாத பல செல்லத்தகாத உடன்படிக்கைகளிருக்கின்றன. கோர்ட்டார் இவ்விஷயங்களில் நடுநியாயப்படி தீர்மானங்கள் செய்யவேண்டும். கோர்ட்டார் உடன்படிக்யையை மட்டில் கவனிக்கக் கூடாது, சுற்றுப்பட்ட விஷயங்களையுங் கவனிக்கவேண்டும். ஏற்பட்ட உடன்படிக்கை கிரமமாகவும் யோக்கியமாகவும் ஏற்பட்டிருந்தால் மட்டில் கோர்ட்டார் அந்தப்படி தீர்மானஞ் செய்யலாம்; மற்றகேஸ்களில் தீர்மானிக்கக் கூடாது; ஆகையால் அப்பீலைத்தள்ளுபடி செய்கிறோம்.

22 Indian Cases. 910

கல்கத்தா ஹைகோர்ட்டு.

1911 ஷூத்திய 2வது அப்பீல் நம்பர். 1925

தீர்ப்பு 26—11—13

ஜட்ஜிகள். மிஸ்டர் ஜஸ்டிஸ் பிளெச்சரவர்கள் மிஸ்டர் ஜஸ்டிஸ் *N R* சடர்ஜியா அவர்கள்.	உமேஷ்சந்திர மஹாவுபாதியார் வாதி அப்பீல்தார். V. நிபாரன் சந்திரகான்வர் ஆ பிரதிவாதிகள்.

8. [ஸ்பெஸிவிக் ரிலீவ் ஆகட்டு.]

ஒரு ஸ்தலத்தில் கட்டப்பட்டிருக்கும் கட்டடத்தை இடித்துவிடும்படி மாண்டடரி இஞ்சங்ஷன் கொடுப்பது கோர்ட்டாரின் இஷ்டத்தைப் பொருத்த தென்பது.

வாதி தாவா ஸ்தலம் தனக்குச் சொந்தமான தென்றும், பிரதிவாதி அதில் பிரவேசித்து ஒரு கட்டடங் கட்டுவதாகவும், அவ்விதங்கட்டாமல் பிரதிவாதிக்கு சாஸ்வத இன்ஜங்ஷன் கொடுக்கவேண்டுமென்று வாதி வழக்கிட்டதுமன்றி அவருடைய கேட்டுக்

கொள்ளுதலின்படி இந்தக் கேஸ் முடிவாகும் வரையில் பிரதிவாதி தாவா ஸ்தலத்தில் கட்டடங்கட்டாதபடி டெம்பாரி இஞ்செங்ஷனுங் கொடுக்கப்பட்டது. இந்த இஞ்செக்ஷன் பிரதிவாதிக்கு சர்வானபோதிலும், பிரதிவாதி கோர்ட்டாருடைய உத்திரவை நிராகரித்து இந்தக்கேஸ் முடிவடைவதற்கு முந்தியே அந்தக் கட்டடங்கட்டி முடித்துவிட்டார். வாதி இந்த டெம்பாரி இஞ்செங்ஷன் கொடுத்த பிறகுதான் கட்டடங்கட்டி முடித்ததாகச் சொல்லுகிறார். பிரதிவாதி இந்த டெம்பாரி இஞ்செங்ஷன் தனக்கு கொடுப்பதற்கு முந்தியே கட்டடங்கட்டி விட்டதாகச் சொல்லுகிறார். தாவா ஸ்தலத்தில் கட்டப்பட்ட கட்டடத்தை யிடித்துவிடும்படி முனிசீப் மாண்டடரி இஞ்செங்ஷன் கொடுத்து விட்டார், இதன்பேரில் அப்பீல் செய்யப்பட்டதில் சப்ஜட்ஜியவர்கள் கீழ்கோர்ட்டு டிக்கிரியை ரத்துசெய்து விட்டார்கள். அதன் பேரில் வாதி இந்த இரண்டாவது அப்பீல் செய்திருக்கிறார்.

தாவா ஸ்தலம் பலவருடங்களுக்கு முன்னே கணேஷ் சந்திர முகர்ஜிக்கு சொந்த மாயிருந்தது. எவ்விதமான பாத்திய மென்று கீழ் கோர்ட்டு தீர்ப்புகளினால் விளங்கவில்லை. இவருடைய விதந்து கான்பகதூர்கள் என்ற வம்சஸ்தர்களுக்கு தாவா ஸ்தலத்தைக் கொடுத்து விட்டார்கள். இந்த கான்பகதூர்கள் பிரதிவாதிக்கு தாவா ஸ்தலத்தை முதலில் 7 வருடங்களுக்கு குத்தகைக்குக் கொடுத்தார்கள். அந்த கெடு முடிந்தவுடன் சாஸ்வத பகுதியாக பட்டாவுங் கொடுத்தார்கள். இந்த பாத்தியதையின் பேரில் பிரதிவாதி ரூபா 1000 செலவழித்து கல் கட்டடங் கட்டினார். சாஸ்வதப்பகுதி கொடுப்பதற்காக ரூபா 749 இந்தக் கான்பகதூர்களுக்குக் கொடுத்ததாகவுந் தெரிகிறது. இந்த கான்பகதூர்களின் அவிபக்த தாயாதிகளிலொருவரிடமிருந்து வாதி அவர் பாகத்தை வாங்கி பாகவழக்கிட்டார். தாவா சொத்து வாதியின் பாகத்திற்கு ஏற்பட்டது. தாவா சொத்தினின்றும் பிரதிவாதியை அப்புறப்படுத்த வேண்டுமென்று வாதி வழக்கிடவில்லை. கட்டடங் கட்டக்கூடாதென்று மட்டில் தாவா செய்திருக்கிறார். டிஸ்டிரிக்ட் முனிசீப் கட்டடத்தை யிடித்துவிடும்படி தீர்ப்பு செய்திருக்கிறார். கட்டடத்தை யிடித்துவிடுவதினால் வாதிக்கு யாதொரு லாபமுமில்லை. கட்டடமிருந்தால் ஜாஸ்தி வாடகை கிடைக்கும். அதனால் சப் ஜட்ஜி வாதியின் வழக்கைத் தள்ளுபடி செய்தது நியாயமானது. அதனாலிந்த அப்பீல் செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

I. L. W. 710

ஹைகோர்ட்டுத் தீர்மானங்கள்.

தமிழ்ப்பாஷை பயின்றவர்கள் வியவகார நுட்பங்களை
எளிதில் உணரும் பொருட்டுப் பிரசுரிக்கப்படும்
மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

புத்தகம்-1 } மாயவரம் 1914ளு ஜூன்மீ { இலக்கம் 10.

சென்னை ஹைகோர்ட்டு.

1912-ளுத்திய 2-வது அப்பீல் நம்பர் 2527

தீர்ப்பு. 19—11—13

ஜட்ஜிகள்.
ஜஸ்டிஸ் சங்கரநாடரவர்கள்
ஜஸ்டிஸ் பேக்வெல் அவர்கள்

T. S. V. நாஸாராத் அப்பீல்வாதி
V
ஜாபீர் மெக்ஜீஷைட் அ. பிரதிவாதி

9 [ஸ்பெஸிவிக் ரிலீவ் ஆக்ட்டு]

பல சொத்துக்கள் சாசனஞ் செய்யப்பட வேண்டுமென்ற காண்டிராக்ட் ருஜுப்பிக்கப்படா விட்டால் எவ்வளவு சொத்துக்கள் விற்பதாக வுடன்படிக்கை ருஜுப்பிக்கப் படுகிறதோ அந்தச் சொத்துக்களைப் பற்றி மட்டில் தீர்ப்பு செய்யலா மென்பது.

சர்வே நம்பர்கள் 15 - 16–18 இரண்டு வீடுகள் சில மரங்கள் இவைகள் விற்கப்படுவதாக உடன் படிக்கை யேற் பட்டிருப்பதாகவும், அந்தப்படி சாசனஞ் செய்யப்பட வேண்டு மென்றும், வாதி பிரதிவாதி பேரில் வழக்கிட்டார். சர்வே 15 நம்பரும் மரங்களும் வாதிக்குக் கிடைக்கக் கூடியதென கீழக்கோர்ட்டார் தீர்மானஞ் செய்தார்கள். பிராதிற்கண்ட எல்லாச் சொத்துக்களைப் பற்றியும் விற்பதாக எக்கிரிமெண்டு ஏற்பட்டிருப்பதைப் பற்றி வாதி ருஜுப்பிக்காததினால் வாதியின் தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்று 9 R. R. 54, 2 Ves Sen 299 இந்தத் தீர்மானங்களை யனுசரித்து பிரதிவாதியின் வக்கீல் இந்த இரண்டாவது அப்பீலில் கக்ஷிபாடுகிறார்.

சாசன விஷயமாக உபய கக்ஷிக்காரர்களுக்குள்ளும் உடன்படிக்கை யேற்பட்ட பின்பு, இந்த வுடன்படிக்கையிற் கண்ட

சொத்துக்களில் A அடையாள ஆதிரவிற்கண்ட சொத்துக்கள் வாதிக்கு பெந்தகமாக வைக்கப்பட்டன. அதில் சர்வே 15 நம்பர் சொத்து பெந்தகமாக வைக்கப்பட்டதாகவும், ரெகுநாத நாயக்கர் கிறிஸ்டு லௌஸா வசமுள்ள வீடுகள் விலக்கப்பட்டதாகவுங் கண்டிருக்கிறது. நாயக்கர் வசம் F. G. வீடுகளிருந்தன. லௌசா வசம் 18 நம்பர் வீடிருக்கிறது. A அடையாள ஆதிரவிற்கண்ட சொத்துக்களைத்தவிர வேறு சொத்துக்கள் வாதி கேட்பதாக பிரதிவாதி சொல்ல வில்லை. ஆனால் ஜாஸ்தித்தொகை கொடுபட வேண்டிய தென்றும் குறிப்பிட்ட கெடுவுக்குள் சாசனத்தை முடித்துக் கொள்ளாததால் வாதியின் வழக்கு செல்லத் தகுந்த தல்லவென்றும் பிரதிவாதி சொல்லுகிறார். இது விஷயங்களைப்பற்றி கீழ்க்கோர்ட்டார் பிரதிவாதிக்கு விரோதமாகத்தீர்மானித்திருக்கிறார்கள். வாதி வேண்டுமென்று பொய்யான வழக்குக் கொண்டு வரவில்லை. வாதிதனக்குச் சில சொத்துமட்டில் கிடைத்தால் போதுமான தென்று சம்மதித்து விட்டதால் வாதியின் கோருதல்படி கீழ்க்கோர்ட்டார் தீர்மானித்தது மெத்த நியாயமானது. ஆகிலும் பிரதிவாதிக்குச் சேரவேண்டிய சாசன பாக்கித் தொகை ரூபா 500-ம் வாதி கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறார். அதனால் இந்தத் தேதி முதல் 3 மாத கெடுவுக்குள் சாசன பாக்கித்தொகை ரூபா 500 கோர்ட்டில் கட்டிவிட வேண்டியதென்றும், அந்தக் கெடுவுக்குள் அத்தொகை கோர்ட்டில் கட்டப்படா விட்டால் வாதியின் வழக்குத் தள்ளுபடி செய்யப்பட வேணடிய தென்றும் தீர்ப்புச் செய்கிறோம். இந்த நிபந்தனைக் குட்பட்டு கீழ் அப்பீல் கோர்ட்டாருடைய டிக்கிரியை யுறுதி செய்கிறோம்.

1914 M. W. N. 339.

பஞ்சாப் சீவ் கோர்ட்டு.

1909ளு வருஷத்திய சீவில் ரேவிஷன் மனு நம்பர் 2179

தீர்ப்பு 14—7—13

ஜட்ஜி	டினாத்ரும் பிரதிவாதி மனுதார்
மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்காட் ஸ்மித் அவர்கள்	V சர்தார் ஆடர்சிங் வாதி எதிர்கக்ஷிக்காரர்

4 நெகோஷியபில் இன்ஸ்ட்ருமெண்டு ஆக்ட்டு.

உடையவருக்காவது அவரிடம் உத்தரவு பெற்றவருக் காவது கொடுக்கிற தென்று காணாத பிராமிசரி நோட்டின் பிரதி பிரயோஜனத்தைப்பற்றி யார் ருஜூவிட வேண்டு மென்பது.

வாதிக்குப் பிரதிவாதி எழுதிக் கொடுத்த பிராமிசரி நோட்டின்படி ரூபா 693-5-3 கிடைக்க வேண்டுமென வாதி வழக்கிட்டார். தாவா நோட்டிற் கண்டபடி ரூபா 400 தான் பெற்றுக் கொள்ள வில்லை யென்றும், ரூபா 50 மட்டிற் பெற்றுக் கொண்டிருப்பதாகவும், பிரதிவாதி கக்ஷியாடினார். முழுத்தொகையும் கொடுபட்டதாக வாதி ருஜூப்பிக்காததால் முதல் கோர்ட்டார் ரூபா 61-8-க்கு மட்டில் தீர்ப்புச் செய்தார்கள். இது விஷயமாக அப்பீல் செய்யப்பட்டதில் நெகோஷியபில் இன்ஸ்ட்ருமெண்டு ஆக்ட்டு 118-வது செக்ஷன்படி முழுத்தொகையும் வாங்கவில்லை யென்று ருஜூப்பிக்கக் கடமைப் பட்டவன் பிரதிவாதி தானென்பதாக வாதியின் வழக்கின்படியே தீர்ப்புச் செய்து விட்டார்கள். அதன் பேரில் இந்த ரெவிஷன் மனு கொடுக்கப்பட் டிருக்கிறது.

தாவா நோட்டின் தொகை குறிப்பிட்ட ஒருவருக்கு மட்டில் கொடுக்க வேண்டியதாகக் கண்டிருக்கிறதே யன்றி அவருடைய உத்தரவு பெற்றவருக் காவது குறிப்பிட்ட ஒருவருடைய உத்தரவு பெற்றவருக்காவது, உடைய வருக்காவது கொடுக்க வேண்டுமென்று காணவில்லை, இதனால் மேலே கண்ட 118 வது செக்ஷன் தாவா கேசுக்கு ஒற்றுமை யானதல்ல. அதனால் இந்த ரிவிஷன் மனுவை யங்கீகரித்து கீழ் அப்பீல் கோர்ட்டாருடைய தீர்மானத்தை ரத்து செய்கிறோம். கீழ் அப்பீல் கோர்ட்டார் அப்பீலை பயிலில் வைத்துக் கொண்டு முடிவு செய்யும்படி உத்தரவு செய்கிறோம்.

22 Indian Cases 861.

கல்கத்தா ஹைகோர்ட்டு.

1911-ஞூலத்திய 2-வது அப்பீல் நம்பர் 2869.

தீர்ப்பு 18 - 8 - 13.

ஜட்ஜிகள். ஜஸ்டிஸ் ஸர் அஷுடோஷ் மூகர்ஜி அவர்கள் ஜஸ்டிஸ் பீச்காப்ட் அவர்கள்	சீதாராம் வாதி அப்பீல்தார் V ரூம்பிரசாத்ரூம் ஆ. பிரதிவாதிகள்.

12. [சாக்ஷிய சட்டம்.]

ஒருவர் கணக்குத்தீர்த்து கையெழுத்து செய்தது கிரமப்படி ஸ்டாம்பு வொட்டி கை யெழுத்து செய்யவேண்டியது சட்டப்படிக்கு அவசியமானதாக விருந்தாலும் அது சாக்ஷியமாக ஒரு கோர்ட்டாரால் அங்கீகரிக்கப்பட்டு விட்டால் அதை யப்பீல் கோர்ட்டார் நிராகரிக்கக் கூடாதேன்பதும்; கமிஷனரை சாக்ஷியாகக் கோரிக் கோண்டால் அவரை விசாரிக்கவேண்டியது மேத்த அவசியமேன்பதும்.

பிரதிவாதிகள் நால்வரும் சகோதரர்கள். 1-2 பிரதிவாதிகள் ஒரு மனைவிக்கும், 3-4 பிரதிவாதிகள் வேறுமனைவிக்கும் பிறந்த பிள்ளைகள். பிரதிவாதிகள் தங்கள் அரிசி வியாபாரத்துக்காக வாதியிடத்தில் பத்துவரவு செய்துவந்ததாகவும், முதல் பிரதிவாதி குடும்ப மானேஜரென்றும், இந்தப் பத்துவரவு விஷயமாக 1908 வருஷம் அக்டோபர் மாதம் 25 ந் தேதி கணக்குத்தீர்த்ததில் ரூபா 2115-9-0வாதிக்கு பிரதிவாதிகள் கொடுக்க வேண்டியதாக பாக்கி யேற்பட்டு 3 ம் பிரதிவாதி தனக்காகவும், மற்ற 3 சகோதரர்களுக்காகவும், அந்தக்கணக்கில் கையெழுத்துசெய்திருப்பதாகவும், இதன்பிறகு சில தொகை வரவு வந்திருப்பதாகவும், பாக்கியாகுந் தொகை ரூ 2000 மும் பிரதிவாதிகளிடமிருந்து கிடைக்கவேண்டிய தென்றும், வாதி வழக்கிட்டார்.

1-2 பிரதிவாதிகள் தாங்கள் வாதியிடத்தில் பத்துவரவு செய்ததை யொப்புக்கொண்டு, யாவற்றுத்தொகைகளுங் கொடுபட்டுத் தீர்ந்துபோய் விட்டதென்று கக்ஷியாடினார்கள். 3-4 பிரதிவாதிகள் தாங்கள் வாதியிடத்தில் எவ்வித பத்து வரவுஞ் செய்யவில்லையென்றும், தாங்களும் 1-2 பிரதிவாதிகளுந் தனித்தனியே குடியிருந்துகொண்டு யோகக்ஷேமங்கள் தனித்தனியே செய்துவருவதாகவும், தாவா தொகைக்கு தாங்கள் கட்டுப்பட வேண்டியதில்லை யென்றும் கக்ஷியாடினார்கள். இந்தக் கேஸில் நான்கு இஷ்யுக்கள் ஏற்படுத்தப்பட்டன (1) 3-4 பிரதிவாதிகள் தாவா தொகைக்குக் கட்டுப்பட்டவர்களா? (2) 1908 வருஷம் அக்டோபர் மாதம் 25 ந் தேதி கணக்கு தீர்த்து ரூ 2115-9 பாக்கி யேற்பட்டதா? அதை யொப்புக்கொண்டு பிரதிவாதிகள் கணக்கில் கையெழுத்துச் செய்தார்களா? (3) என்ன வீதம் வட்டி கிடைக்கக் கூடியது? (4) தாவாகடன் கொடுபட்டுத் தீர்ந்துவிட்டதா? தாவா கேஸ் கணக்கு சம்பந்தமான தாகையால் இது கமிஷனரால் விசாரிக்கப்பட வேண்டுமென உபயகக்ஷிக்காரர்களின் சம்மதியின் பேரில் நம்பர்கட்டு கமிஷனரிடம் அனுப்பப்பட்டது. இவர் வாதியின் தாவாப்படியே தொகை கிடைக்கவேண்டுமென ரிபோர்ட்டு செய்தார். கோர்ட்டார் இதை யங்கீகரிக்காமலே கேசின் சாராம்சத்தில் பிரவேசித்துத் தீர்ப்புசெய்தார்கள். 3 ம் பிரதிவாதி ஸ்டாம்புவொட்டி கையெழுத்து செய்யாததினாலே அது சாக்ஷியமாக அங்கீகரிக்கக் கூடாதென்று வாதியின் வழக்கைத் தள்ளுபடி செய்து விட்டார்கள். இது அப்பீலிலும் உறுதிசெய்யப்பட்டது. அதன்பேரில் வாதி இந்தக் கோர்ட்டில் 2 வது அப்பீல் செய்திருக்கிறார். ஸ்டாம்பு வொட்டி கையெழுத்துசெய்யாதது சாக்ஷியமாக அங்கீகரிக்கக் கூடாதென கீழ்க்கோர்ட்டார் சொன்னது பிசகென்றும், அது அங்கீகரிக்கப்பட்டால் வாதியின் தாவாப்படியே டிக்ரிசெய்ய வேண்டியதென்றும், அது அங்கீகரிக்கப்படா விட்டாலும் 1-2 பிரதிவாதிகள்தாவா பத்துவரவை யொப்புக்கொண்டிருப்பதினாலே தொகை கொடுபட்டு தீர்ந்துவிட்டதென்று அவர்கள் ருஜூப்பிக்கக் கடமைப்பட்டவர்களென்றும், கமிஷனருடைய ரிபோர்ட்டையங்கீகரிக்காதது தவறுதலென்றும், அதை யங்கீகரிக்காவிட்டாலும் அவரை யிந்தக் கேசில் சாட்சியாக விசாரித்திருக்க வேண்டியது அவசியமென்றும் வாதியின் வக்கீல் கக்ஷியாடுகிறார்.

1908 வருஷம் அக்டோபர் மாதம் 25 ந் தேதி 3 ம் பிரதிவாதி தாவாகணக்குத்தீர்த்து கையெழுத்து செய்தது உண்மையென்று டிஸ்டிரிக்ட் ஜட்ஜி கண்டுபிடித்திருக்கிறார். அது பிசகென்று 2 வது அப்பீலில் கக்ஷி சொல்லக்கூடாது. இது முதல் கோர்ட்டாரால் சாக்ஷியமாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. அதனால் அது இந்தியன் ஸ்டாம்பு ஆக்ட்டு 36 வது செக்ஷன்படி பின்னால் தள்ளுபடி செய்யப்படக்கூடாது (இ லா ரி 12 கல்கத்தா

64 தீர்மானத்தைபார்க்க). அது பிரதிவாதிக்கு விரோதமானது. அவர் தானெந்த காரணத்துக்காக தாவா கணக்கு பாக்கியை யொப்புக்கொண்டு கையெழுத்து செய்தாரென்று விளங்கி ருஜுப்பிக்கா விட்டால் அது அவரைக் கட்டுப்படுத்தக் கூடியது. இது இவரைக் கட்டுப்படுத்தக் கூடியதாகவிருந்தால் இது மற்றப் பிரதிவாதிகளையுங் கட்டுப்படுத்தக் கூடியதா?மற்ற பிரதிவாதிகளை கட்டுப்படுத்தக்கூடாதென்று சொன்னால் கணக்கிற்கண்ட பத்துவரவுகள் சரியா பிசகாவென்று பார்க்கவேண்டும். 1-2 பிரதிவாதிகள் ஏராளமான தொகை பத்துவரவு செய்ததாக வொப்புக்கொண்டு தாவா தொகை கொடுபட்டு தீர்ந்துவிட்டதென கக்ஷி சொல்லுகிறார்கள். அவ்விதங் கொடுத்து கடன் தீர்ந்து விட்டதென்ற ருஜுபளு 1-2 பிரதிவாதிகளைச் சார்ந்ததாக விருக்கிறது. கமிஷனர் ஜட்ஜி ஸ்தானமாகையால் அவரை சாக்ஷியமாக விசாரிக்கக் கூடாதென்று கீழ்க் கோர்ட்டார் உத்தரவு செய்திருக்கிறார்கள். வீணாக அலக்கழிப்பு செய்து அவமதிக்கத்தக்க கேழ்விகள் கேட்கக் கூடாதே யன்றி உபய கக்ஷிக்காரர்களும் அவரை சாக்ஷியாகக் கோரிக்கொண்டால் அவரை சாக்ஷியாக விசாரிக்க வேண்டியது மெத்த அவசியம். இதனால் அப்பீலை யங்கீகரித்து கீழ்க்கொர்ட்டு டிக்கிரியை ரத்துசெய் திருக்கிறோம். கேசை கீழ்க் கோர்ட்டார் மறுபடியும் பயிலில்வைத்துக்கொண்டு மேலே சொன்ன விஷயங்களை விளங்கித் தீர்ப்புச் செய்யும்படி உத்தரவு செய்கிறோம்.

22 Indian cases 858.

சென்னை ஹைகோர்ட்டு.

1912ஹுத்திய C. M. A. நம்பர் 310

தீர்ப்பு 17—2—14

ஜட்ஜிகள்	
	மைனர் வாசுதேவ ரெட்டி யென்கிற ராமசாமி ரெட்டிக்கு கார்டியன் பிரசன்ன வெங்கடராம ரெட்டி அப்பீல்தார் பிரதிவாதி
ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள்	V
ஜஸ்டிஸ் டியாப்ஜி அவர்கள்	நல்லப்ப ரெட்டி எதிர்கக்ஷிக்காரர் வாதி

3 [ரிஜிஸ்டிரேஷனாக்ட்டு.]

குத்தகைக்கு கொடுப்பதாக எழுதிக்கொடுத்த ரிஜிஸ்டராகாத உடன்படிக்கை செல்லத் தகுந்ததல்ல வென்பதும், அதை சாக்ஷியமாக் வுபயோகப் படுத்தக்கூடா தென்பதும்.

நாமக்கல் டிஸ்டிரிக்ட் முனிசீப் கோர்ட்டு தீர்ப்பின் பேரில் திருச்சினாப்பள்ளி டிஸ்டிரிக்ட் கோர்ட்டில் அப்பீல் அதன்பேரில் ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல்.

மைனர் முதல் பிரதிவாதிக்கு 2-ம் பிரதிவாதி கார்டியன், 2-ம் பிரதிவாதி சில ஸ்தாவர சொத்தை வாதிக்கு 5 வருடங்களுக்கு குத்தகைக்கு கொடுப்பதாக உடன்படிக்கை செய்து கொடுத்திருப்பதாகவும், அதன்படி பிரதிவாதிகள் குத்தகை சீட்டு எழுதிக் கொடுக்கவில்லை. அந்தச் சீட்டு எழுதிக் கொடுக்கப்பட வேண்டு மென்று வாதி பிரதிவாதிகள் பேரில் வழக்கிட்டார். ஸ்டாம்பில் எழுதப்படாததும் ரிஜிஸ்டர் செய்யப்படாதது மான ஒரு தஸ்தாவேஜி 2-ம் பிரதிவாதி எழுதிக்கொடுத் திருப்பதாகவும், அது தாவா குத்தகை வுடன்படிக்கையைக் காட்டக்கூடிய ருஜுவென்றும் வாதி சொன்னார். அந்த தஸ்தாவேஜி சாக்ஷியமாக அங்கீகரிக்கத் தக்கதில்லை யென்று டிஸ்டிரிக்ட் முனிசீப் வாதியின் வழக்கைத் தள்ளுபடி செய்து விட்டார்கள். இது விஷயமாக அப்பீல் செய்யப்பட்டதில் வாதி வாய் மொழியான உடன்படிக்கையின் பேரில் வழக்கிட்டிருப்ப தாகவும், வாதி தாகல் செய்த தஸ்தாவேஜி ரிஜிஸ்டராகாததாக விருந்த போதிலும் அது வாய்மொழியான உடன் படிக்கைக்கு சாக்ஷியாகஅங்கீகரிக்கலா மென்றும் அப்பீலை யங்கீகரித்து கேசை புனர் விசாரணை செய்யும்படி கேசை கீழ் கோர்ட்டுக்கு ரிமாண்டு செய்தார்கள். இவ்விதம் ரிமாண்டு செய்தது சட்டவிரோதமான தென்று பிரதிவாதிகள் 2-வது அப்பீல் செய்திருக்கிறார்கள்.

தீர்ப்பு.

வாதியின் தாவா முந்திய வுடன்படிக்கையின்பேரி லேற்பட்டதென்றும், சாக்ஷியமாக அங்கீகரிக்கத்தகாத ரிஜிஸ்டராகாத குத்தகைச் சீட்டின்பேரில் ஏற்பட்டதல்ல வென்றும் டிஸ்டிரிக்ட் ஜட்ஜி கண்டுபிடித்து கேசை ரிமாண்டு செய்தது நியாயமானது. ஆனால் ரிஜிஸ்டராகாத குத்தகைச் சீட்டு குத்தகை செய்வதற்காக

வேற்பட்ட முந்திய வுடன்படிக்கையைக் காட்டக்கூடிய சாக்ஷிய மாக அங்கீகரிக்கப்படலா மென டிஸ்டிரிக்ட் ஜட்ஜி சொல்லியிருப்பது பிசகு. ஒரு ஸ்தாவரசொத்தை குத்தகைக்குக் கொடுப்பதாகச் செய்து கொள்ளும் உடன்படிக்கை ஒரு ஸ்தாபர.சொத்தின் பாத்தியதையை யேற்படுத்தக் கூடிய தென்று இ லா ரி 35 சென்னை 63 தீர்மான மேற்பட் டிருக்கிறது. ரிஜிஸ்டராகவேண்டிய தஸ்தாவேஜி ரிரிஸ்டராகா விட்டால் அது ரிஜிஸ்டிரேஷ ஷைக்ட்டு 49 வது செக்ஷன் கிளாஸ் C படி சாக்ஷியமாக அங்கீகரிக்கப்படக் கூடாது. இந்த நிபந்தனைக்குட்பட்டு இந்த அப்பீலை செலவுடன் தள்ளுபடிசெய்கிறோம்.

I. L. W. 296.

சென்னை ஹைகோர்ட்டு.

1909 ஞு த்திய அப்பீல்கள் நம்பர்கள் 262-269

1910 ஞு த்திய அப்பீல் நம்பர் 122

தீர்ப்பு 26—3—14

ஜட்ஜிகள்	மதுரை மீனாட்சி சுந்திரேஸ்வரர் தேவஸ்தானம் மானேஜர் 262 நம்பரிலும்
ஜஸ்டிஸ் வாலீஸ் அவர்கள்	அபிஷேக சுந்திர பட்டர் ஆ 122-269 நம்பர்களிலும் அப்பீல் தார்கள்
ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள்	V ஆதிமுத்துவய்யர் என்கிற ஆதி அய்யர் ஆ அ. பிரதிவாதிகள்

1 [தேவாலய ஸ்தானீக பாத்தியம்.

தேவாலயங்களில் வம்ச பரம்பரையான ஸ்தானீக பாத்தியங்களை ஸ்தாபிக்க கோர்ட்டார் தக்க வுதவி புரிய வேண்டுமென்பது

அ. பிரதிவாதிகளாகிய அசல் நம்பர் வாதிகள் தங்களுக்கு மதுரை மீனாட்சி சுந்திரெஸ்வரஸ்வாமி கோவிலில் அதிகாரபரபத்தியம் என்றவோர் ஸ்தானீக பாத்திய மிருக்கிற தென்றும், பிரதிவாதிகள் அப்பாத்தியதையை விலக்கி விட்டதால் அது கிடைக்க வேண்டு மென்றும், வழக்கிட்டதில் டிஸ்டிரிக்ட் கோர்ட்டாரால் அடியிற்கண்ட தீர்மானஞ் செய்யப் பட்டது.

(a) பிராதிற்கண்ட வுத்தியோகம், அதற்குரிய மரியாதைகள், அவைகளுக்காக ஏற்பட்ட வரும்படிகள் இவைகள் வாதிக்கு பிரதிவாதிகளால் கிடைக்க வேண்டும்.

(b) வாதி இந்த வுத்தியோகத்திற்குரிய காரியங்களைச் செய்வதிலும் அதற்குரிய மரியாதை முதலியன அடைவதிலும் பிரதிவாதிகள் பிரவேசிக்காமல் அவர்களுக்கு இன்ஜெக்ஷன் கொடுக்கிறோம்

(c) தாவா ஸ்தானீக பாத்தியதையின் சென்ற வரும்படிகளுக்காக ரூபா 100-ம் பிராதின் தேதி முதல் இவ்வுத்தியோகத்தை வாதி கைப்பற்றுந் தேதி வரையிலும் வரும்படி ரூபா 100-ம் வாதிக்கு பிரதிவாதிகள் கொடுக்கும்படி தீர்மானிக்கிறோம்.

(d) வாதிக்கு பிரதிவாதிகள் வீதாசார செலவு தொகை ரூபா 294-15-5 கொடுக்கும்படி தீர்மானிக்கிறோம்.

இதன்பேரில் பிரதிவாதிகள் இந்தக்கோர்ட்டில்அப்பீல் செய்திருக்கிறார்கள்.

பிராதிற்கண்ட வுத்தியோகம் வாதிக்கு வம்சபாரம்பரையான பாத்தியமுள்ளதா, அல்லது 2 முதல் 9 வரையிலுள்ள பிரதிவாதிகளாகிய ஸ்தானீகர்களின் இஷ்டப்படி அப்போதைக் கப்போது நீக்கி வேறு நபர்களை நியமிக்கலாமா என்பதுதான் இந்தக் கேசில் முக்கியமாகத் தீர்மானிக்கப்பட வேண்டிய விஷயம்.

1802 வருஷத்தி லேற்பட்ட G அடையாள ஆதிரவின்படி சொக்கப்பன் அல்லது சொக்கய்யன் என்பவர் வாதியின் வம்ச மூல புருஷன் என்று தெரிகிறது இது 1-3 ஆதிரவுகளினாலும் பிரதிவாதி திறப்பு 3 வது சாக்ஷியத்தினாலும் ஆதரிக்கப்டிருக்கிறது. வாதியின் ஸ்தானீக பாத்தியம் வம்சபாரம்பரையாக அனுஷ்டிக்கப்பட்டு வந்திருக்கின்றன வென்பதற்குத் தகுந்த சாக்ஷியங்களிருக்கின்றன. வாதியின் பாட்டன் ஜாவந்தி அய்யருக்கு வார்சு நியமிக்கும் விஷயமாக தேவஸ்தானம் மானேஜரைக் கேட்டுக் கொண்டிருப்பதாக ருஜுவிருந்தாலும் 1-3 K. G. ஆதிரவுகள் A. அடையாள இராஜீனமா இவைகளினால் வாதியின் பாத்தியம் வம்சபாரம்பரையாக வில்லை யென்பதை ஸ்பஷ்டமாகக் காட்டு

றது. இதனால் 2 முதல் 10 பிரதிவாதிகள் செய்த அப்பீலை செலவுடன் தள்ளுபடி செய்கிறோம்.

தேவஸ்தானம் மானேஜர் தான் வாதியின் பாத்தியதையை மறுத்தில்லையென்றும், அவருடைய வுத்தியோக வேலையை யவர் பார்க்காமல் தடைசெய்யவில்லையென்றும், அதனால் தனக்கும் இன்ஜக்ஷன் கொடுத்ததும் வரும்படிசெலவுதொகை கொடுக்கச் செய்ததும் சரியல்லவென்று ஆக்ஷேபிக்கிறார். மற்றப் பிரதிவாதிகளை பார்க்கிலும் இவர் மிகுந்த ஜாக்கிரதையாக எழுத்துமூலமான ஸ்டேட்மெண்டு கொடுத்திருந்தாலும், வாதியின் வழக்கு முழுவதும் தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென பிரார்த்தனையிற் சொல்லியிருக்கிறார். இந்தக் கோர்ட்டில் செய்யப்பட்டிருக்கும் அப்பீலிலும் வாதி ஸ்தானீகர்களின் வேலைக்காரரென்றும், பிரதமடிக்கிரி செய்யப்படக் கூடாதென்றுஞ் சொல்லியிருக்கிறார். இதனால் 1 முதல் 10 பிரதிவாதிகளும் இவரும் ஒன்றாகச் சேர்ந்தே நடவடிக்கை நடத்திவருகிறார்களென்பதற்குச் சந்தேகமே கிடையாது. இதனாலிவருடைய அப்பீலையுஞ் செலவுடன் தள்ளுபடி செய்கிறோம்.

1914 M. W. N. 385.

அலகபாத் ஹைகோர்ட்டு.

1913-ஷூலத்திய கிரிமினல் ரெபரன்ஸ் நம்பர் 1099.

தீர்ப்பு 13 - 1 - 14.

ஜட்ஜிகள்.	
மிஸ்டர் ஜஸ்டிஸ் ரய்வ்ஸ் அவர்கள்	ஜர்பின்—மனுதார்.
	V
மிஸ்டர் ஜஸ்டிஸ் பிக்காட் அவர்கள்	சக்கரவர்த்தி—எதிர்கக்ஷிக்காரர்.

22. [கிரிமினல் புரிஸீஜர் கோடு.]

சாக்ஷி விசாரணை முடிந்த பிறகு வாதி எதிரிகளுக்கு அலக்கழிப்பு உண்டுபண்ணியதற்காக காம்பன்ஸேஷன் கொடுக்கும்படி உத்தரவு செய்வது எந்தக்காலத்தில் செய்யப்பட வேண்டுமென்பது.

வாதி எதிரிகள்பேரில் இ. பி. கோடு 506 வது செக்ஷன்படி குற்றஞ்சாட்டி நடவடிக்கைகள் நடத்தினர். கோர்ட்டார் வாதி தரப்பு சாக்ஷிகளையும் எதிரியையும் விசாரித்த பிறகு வாதியின்

கேஸ் ருஜுப்பிக்கப்படவில்லையென அபிப்பிராயப்பட்டார். இந்தக் கேஸ் 1913 ஷூ ஆகஸ்டு மாதம் 2 உ விசாரணை முடிவடைந்தது. அன்றுதினம் மாஜிஸ்டிரேட் எதிரிகளுக்கு காம்பன்ஸேஷன் தொகை வாதி ஏன் கொடுக்கக்கூடாதென்பதற்குக் காரணந் தெரிவிக்கும்படி உத்தரவு செய்து அந்த ஆக்ஷேபனைக்காக வேறுதினம் விசாரணை கெடுவை யொத்திப்போட்டார். 1913 ஷூ ஆகஸ்டு மாதம் 6 உ வாதி எதிரிகளுக்கு காம்பன்ஸேஷன் தொகை கொடுக்கவேண்டுமென உத்தரவு செய்தார். எதிரிகளை விடுதலை செய்த உத்தரவு இதற்கு 4 தினங்களுக்குமுன் செய்யப்பட்டது. எதிரிகளை விடுதலை செய்த உத்தரவிலேயே இந்த காம்பன்ஸேஷன் உத்தரவுஞ் சேர்க்கப்பட வேண்டியதேயன்றி தனிமையாக சிலதினங்கழித்து உத்தரவு செய்தது சட்டவிரோதமானதென்று செஷன் ஜட்ஜி இந்தக் கேசை இந்த கோர்ட்டுக்கு ரிபெரென்ஸ் செய்திருக்கிறார்கள்.

இவ்வித நடவடிக்கைகள் சம்மரி நடவடிக்கைகள்; எதிரிகளை விடுதலை செய்யும் தீர்மானத்திலேயே இந்த காம்பன்ஸேஷன் சம்பந்தமான உத்தரவுஞ் சேர்க்கப்பட்டிருக்கவேண்டு மென்பதே சட்டத்தின் கருத்து; எதிரிகளை விடுதலை செய்வதற்கு முந்தியே இந்த காம்பன்ஸேஷன் சம்பந்தமான நடவடிக்கைகள் எல்லாம் நடத்தப்பட்டிருக்கவேண்டும். இதுவிஷயமாக ஹைகோர்ட்டார்களால் அனேக தீர்மானங்க ளேற்பட்டிருக்கின்றன. எதிரிகளை விடுதலை செய்த பிறகு இவர்களுக்கு வாதி காம்பன்ஸேஷன் தொகை கொடுக்கவேண்டு மென்று பிரத்தியேகமாக உத்தரவு செய்வது பிசகென்பதாக இந்த கோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது (இ. லா. ரி 25 அலகபாத் 315 தீர்மானத்தை பார்க்க). கி. பு. கோடு 250 வது செக்ஷனிற்கண்ட விதிகள் எல்லாம் சரியாக நடத்தப்படாமல் சிலதுமட்டில் சரியாக நடத்துவது கிரமத்தவறுதலென்று 8 பம்பாய் L. R. 847 தீர்மானமேற்பட்டிருக்கிறது. A. W. N. (1905) 214 தாவா கேசுக்கு மெத்த ஒற்றுமையாகவிருக்கிறது. எதிரிகளை விடுதலை செய்ததும் வாதி காம்பன்ஸேஷன் கொடுக்கவேண்டியதாக உத்தரவு செய்ததும் வெவ்வேறு தேதிகளி லேற்பட்டிருந்தபோதிலும் இவ்விரண்டும் ஓரேவித நடவடிக்கையென மாஜிஸ்டிரேட் அபிப்பிராயப்பட்டது கிரமத்தவறுதலென்றும், அது கி. பு. கோடு 537 வது செக்ஷன்படி

அத்தவறுதல் மாற்றக்கூடியதென்றும் சட்டவிரோதமானதல்லவென்றும், அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். ஆகையால் மாஜிஸ்டிரேட் செய்த உத்தரவில் நாம் பிரவேசிக்க நியாயமில்லை. ரிகார்டுகள் திருப்பி யனுப்பப்பட்டன.

22 Indian Cases 977.

சென்னை ஹைகோர்ட்டு.

1913-வருத்திய லெட்டர்ஸ் பேடண்டு அப்பீல் நம்பர் 102

தீர்ப்பு 4—2—14

ஜட்ஜிகள் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள் ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர் அவர்கள்	கருப்பண்ண கவுண்டன் அப்பீல்தார் (மனுதார்) V கந்தசாமி கவுண்டன் ஆ. எதிர்கக்ஷிக்காரர்கள்

23 [கிரிமனல் புரிஸீஜர் கோடு.]

ஒருவன் வேறொருவன் நிலத்தில் பிரவேசிக்கக் கூடாதென்று கி-பு-கோடு 144 வது செக்ஷன்படி உத்திரவு செய்வதானது கலகம் நடக்க ஹேதுவாயிருக்குங் காரணத்தினால் அந்த வேறொருவன் வேலிவைத்து வழியை அடைக்கக் கூடாதென கி-பு கோடு 147 வது செக்ஷன்படி செய்த வுத்திரவைத் தடைசெய்ய மாட்டாதென்பதும், கீழ்க்கோர்ட்டார் செய்யும் உத்திரவு சட்டவிரோதமானதாக விருந்தாலும் ரேவிஷன் கோர்ட்டார் அது விஷயத்தில் பிரவேசித்து உத்திரவு செய்ய வேண்டிய தவசியமில்லை யென்பதும்.

அப்பீல் தாரனுடைய நிலத்தின் வழியாகப் போகும் பழய ஒத்தையடிப்பாதை வழியாக எதிர்மனுதார்கள் நடக்காதபடி அவர்கள் கிரிமனல் புரிஸீஜர் கோடு 144 வது செக்ஷன்படி 2 வது வகுப்பு மாஜிஸ்டிரேட் கோர்ட்டாரால் 1912 ம் வருஷம் நவம்பர் மாதம் 20 ந் தேதி தடைநோட்டீஸ் கொடுக்கப்பட்டிருந்தார்கள். பின்பு இது விஷயம் கலகத்துக்கு இடமாயிருக்குமென கரூர் சப்டிவிஷனல் மாஜிஸ்டிரேட் அப்பீல்தாரன் அந்த பழய பாதையை மறைத்து அடைத்திரும் வேலியை எடுத்துவிட வேண்டுமென்று கி-பு கோடு 147 வது செக்ஷன்படி 1912 ம் வருஷம் நவம்பர் மாதம் 25 ந் தேதி உத்திரவு செய்து விட்டார்கள். இது விஷயமாக அப்பீல்தார் ஹைகோர்ட்டில் ரெவிஷன் மனு கொடுத்ததில்

அது தள்ளுபடியாகி விட்டது. அதன்பேரில் இந்த ரெவிஷன் மனு கொடுபட்டிருக்கிறது.

2 வது வகுப்பு மாஜிஸ்டிரேட் செய்த உத்திரவுக்கு ஒரு வாரத்துக்குள்ளேயே கலகம் நடக்க ஹேதுவாயிருக்கிறதென்று சப்டிவிஷனல் மாஜிஸ்டிரேட் சொன்னது பிசகென்று, அப்பீல் தாரன் கக்ஷியாடுகிறான். கலகம் நடக்குமென்று டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டுக்குத் தோற்றினால் அவர் கி பு கோடு 147 வது செக்ஷன்படி செய்யும் உத்திரவு சட்டவிரோத மானதல்ல. அவர் கொண்ட அபிப்பிராயம் அகாரணமானதாக விருந்தால் ரெவிஷன் கோர்ட்டார் பிரவேசித்து வுத்திரவு செய்யலாம். அவருடைய அபிப்பிராயம் பிசகானதென்று எங்களுக்குத் தெரியவில்லை. பாதையில் வேலிவைத்து அடைத்துவிட்டால் டிவிஷனல் மாஜிஸ்டிரேட் கி-பு கோடு 147 வது செக்ஷன்படி உத்திரவுசெய்ய அதிகாரமில்லை யென்பது இரண்டாவது கக்ஷி. இதற்கு இ லா ரி 4 சென்னை 121 தீர்மானத்தை யாதாரமாகக் காட்டிச் சொல்லுகிறார்கள். இந்த தீர்மானம் ஒரு இரும்புகம்பி வேலையைப்பற்றிய தீர்மானம். அது தாவா கேசுக்கு ஒற்றுமையானதல்ல. கி-பு கோடு 133 வது செக்ஷன்படி வேலியை எடுத்துவிடும்படி உத்திரவு செய்யக்கூடுமானால் அவ்வித உத்திரவு 147 வது செக்ஷன்படி ஏன் செய்யக்கூடாது? பொதுவான பாதையாக இருந்தால் மட்டில் 147 வது செக்ஷன்படி உத்திரவுசெய்யலாம்; சொந்தபாதையாக விருந்தால் அந்தப்படி உத்தரவு செய்யப்படக்கூடாது என்பதில்லை.

மாஜிஸ்டிரேட்டுகள் செய்யும் உத்திரவு சட்ட விரோதமானதாக விருந்தாலும் கி-பு கோடு 435 - 439 செக்ஷன்களின்படி ரெவிஷன்செய்வது இந்தக் கோர்ட்டாரின் அபிப்பிராயத்தைப் பொறுத்தது. மேலும் இந்தக் கோர்ட்டாரின் ஜட்ஜிகளில் ஒருவரால் செய்யப்பட்ட உத்திரவை லெட்டர்ஸ் பேடெண்டு அப்பீல் கோர்ட்டார் மாற்றுவதாக விருந்தால் அதற்கு மிகவும் பலமான ஆதாரங்கள் வேண்டுவது மெத்த அவசியம். ஆகையால் இந்த அப்பீல் தள்ளுபடி செய்யப்பட்டது.

1914 M. W. N. 394.

அலகபாத் ஹைகோர்ட்டு.

1913 ௵த்திய கிரிமினல் ரேவிஷன் மனு நம்பர் 1097.

தீர்ப்பு. 2—1—14.

ஜட்ஜி.
மிஸ்டர் ஜஸ்டிஸ் ரைவஸ் அவர்கள்

ராம்பரோஸ் ஆ. மனுதார்கள்.
V
பாபன் எதிர்கக்ஷிக்காரர்.

24. [கிரிமினல் புரிவீஜர் கோடு.]

ஒருவர் கொடுத்த பிராது 203 வது செக்ஷன்படி தள்ளுபடி செய்யப்பட்டாலும், அதே விஷயத்தைப்பற்றி மறுபடியும் பிராது கொடுத்து நடவடிக்கை நடத்தலாமென்பது.

முசமத் கலியா என்பவள் தன் புருஷன் பாவனை எதிரிகள் 6 பேர் அடித்துத் துன்பஞ் செய்ததாக போலீசாருக்குத் தெரிவித்தாள். இதே விஷயத்தைப்பற்றி இந்த பாபனுடைய சகோதரன் நாகோ என்பவர் எதிரிகள் ஒன்பது பேர் பேரில் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்டாரிடம் பிராது கொடுத்தார். இந்தப் பிராது சப் டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டாரிடம் அனுப்பப்பட்டதில் அவர் கி. பு. கோடு 202 வது செக்ஷன்படி பிரதம விசாரணை செய்யச்சொல்லி கேசை 203 வது செக்ஷன்படி தள்ளுபடி செய்தார். இவ்விதம் பிராது தள்ளுபடி செய்யப்பட்ட நாலுதினங் கழித்து பாபன் என்பவர் அந்த சப் டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டிடத்திலேயே 6 எதிரிகள் பேரில் முன் பிராதிற்கண்ட விஷயங்களைப்பற்றியே பிராது கொடுத்தார். இவர் முன் கேஸ் ரிகார்டுகளை இதிற் சேர்க்கச் செய்தார். இந்தக் கேஸ் விசாரிப்பதற்கு முந்தியே இந்த மாஜிஸ்டிரேட் மாற்றலாகிப் போய்விட்டபடியால் வேறு மாஜிஸ்டிரேட் கேசை பயிலில் வைத்துக்கொண்டு எதிரிகளுக்கு சம்மன் அனுப்பினார். இந்தக் கேஸ் முன் மாஜிஸ்டிரேட்டினால் தள்ளுபடி செய்யப்பட்டிருப்பதினால் மறுபடியும் இந்தக் கோர்ட்டாரே இதை விசாரிக்க அதிகாரமில்லையென்று இ. லா. ரி 22 அலகபாத் 106 தீர்மானத்தை யாதாரமாகக் காட்டி எதிரிகள் இந்த ரெவிஷன் மனுக் கொடுத்திருக்கிறார்கள்.

பாபனுடைய மனைவி எதிரிகள் பேரில் பிராது கொடுத்த போது எதிரிகளில் ஒருவர் கவுண்டர் பிராது கொடுத்திருக்கிறார். இந்தப் பிராதுகள் சப் டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டாரிடம் அனுப்பப்பட்டதில் அவர் போலீசாருடைய ரிபோர்ட்டை நம்பி இரண்டு பிராதுகளையுந் தள்ளுபடி செய்துவிட்டார். இது விஷயமாக இந்தக் கோர்ட்டார் கி. பு. கோடு 437 வது செக்ஷன்படி யுத்தரவு செய்ய அதிகாரமுண்டு. இதனால் இந்த பாபனுடைய பிராது விஷயமாக டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்டாவது அவர் தனக்குட்பட்ட வேறு மாஜிஸ்டிரேட்டைக் கொண்டாவது விசாரிக்கும்படி உத்தரவு செய்கிறோம். இந்தக் கேசை முதலில் பயிலில் வைத்துக்கொண்ட சப் டிவிஷனல் மாஜிஸ்டிரேட் விசாரிப்பது உசிதமானது.

22 Indian Cases 734.

கல்கத்தா ஹைகோர்ட்டு.

1912௵த்திய கிரிமினல் ரேவிஷன் நம்பர் 1506.

தீர்ப்பு 17—12—12.

ஜட்ஜிகள்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் ஷார்புடீன் அவர்கள்
மிஸ்டர் ஜஸ்டிஸ் காக்ஸ் அவர்கள்

சண்டேல்லாஷீக் ஆ. எதிரிகள் மனுதார்கள்.
V
சக்கரவர்த்தியவர்கள்.

15. [இந்தியன் பெனல் கோடு.]

அமரிக்கையான ஸ்வாதீனத்திலிருக்கும் ஒருவனிடமிருந்து அன்னியன் ஆக்கிரமித்துக் கட்டிக்கொண்டால் அதை அச்சொத்துக்குடையவன் உடனே பலவந்தமாகவும் ஸ்வாதீனஞ் செய்து கொள்ளலாமென்பதும் அது கலகக்குற்றமாகாதென்பதும்.

ஒரு ஸ்தல விஷயமாக இரண்டு கக்ஷிக்காரர்களுக்குள்ளும் தகரார்களிருந்தன. சப் டிவிஷனல் ஆபீசர் அந்தத் தகவல்களைத் தீர்த்து பொழிவைத்து அந்தப் பொழிக்கு வடக்கேயுள்ளது மனுதார்களுடையதென்றும், தெற்கேயுள்ளது எதிர்கக்ஷிக்காரர்களுடையதென்றுந் தீர்த்துவிட்டார். இந்தப்படியே இருகக்ஷிக்காரர்களும் அனுபவித்து வந்தார்கள். இவ்விதம் சப் டிவிஷனல் ஆபீசர் தீர்த்துவிட்டது சரியல்லவென்று எதிர்கக்ஷிக்காரர் பொழிக்கு வடக்கேயுள்ள சில நிலங்களைப்பற்றி வழக்கிட்டு அந்தப்படி டிக்கிரியும் பெற்றார்கள். ஆனால் அந்த டிக்கிரியில் தாவா நிலம் சம்பந்தப்படவில்லை. விவாத சண்டை நடந்த தினத்துக்கு முதனாள்

இராத்திரி இருட்டில் எதிர்கக்ஷிக்காரர்கள் திருட்டுத்தனமாக தாவா நிலத்தில் சில குடிசைகளை கட்டினார்கள். இவ்விபரம் மனுதார்களுக்குத் தெரிந்ததின் பேரில் ஆக்கிரமித்து குடிசைகள் போட்டவர்களை அப்புறப்படுத்தவேண்டியதி னிமித்தம் ஆயுதங்களுடன் விவாத ஸ்தலத்துக்குப் போனபோது இருதிறப்பாரும் ஒருவரோடொருவர் எதிர்த்து சண்டை செய்ததில் இருதிறப்பு கக்ஷிக்காரர்களுக்கும் காயங்களுண்டாயின. இவர்கள் இ. பி. கோடு 147 வது செக்ஷன்படி சார்ஜ் செய்யப்பட்டு உபயகக்ஷிக்காரர்களும் தெண்டிக்கப்பட்டார்கள். மனுதார்கள் தங்களை தண்டித்தது சட்ட விரோதமானதென்று இந்த ரெவிஷன் மனுக் கொடுத்திருக்கிறார்கள்.

திருட்டு, கெடுதி, கிரிமினல், ஆக்கிரமிப்பு அக்குற்றங்கள் நடப்பதை சொத்துக்குடையவன் தடுப்பதற்காக கொலை நீங்கலாக மற்றெவ்வித துன்பங்களுஞ் செய்யலாமென இ. பி. கோடு 104 வது செக்ஷனிற் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இது விபரத்தை சர்க்கார் உத்தியோகஸ்தருக்குத் தெரிவித்து அவர்களால் பரிகாரந் தேடிக் கொள்ளக்கூடிய சாவகாசமிருந்தால் தற்காப்பு பாத்தியம் (Private defence) கிடையாதென்று இ. பி. கோடு 99 வது செக்ஷனிற் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் இந்தக் கேஸில் மனுதார்கள் சர்க்கார் உத்தியோகஸ்தருக்குத் தெரிவித்து பரிகாரந் தேடிக்கொள்ள தகுந்த சாவகாசமிருந்ததா வென்பதுதான் இந்தக் கேஸில் முக்கியமாக நாம் கவனிக்கவேண்டிய விஷயம். இவர்களுக்குத்தகுந்த சாவகாசமில்லையென்றே நாங்கள் அபிப்பிராயப் படுகிறோம். விவாத ஸ்தலத்தில் இராத்திரியில் திருட்டுத்தனமாக குடிசைகள் போட்டிருக்கிறார்கள். இவ்விஷயம் இவர்களுக்குத் தெரிந்தவுடன் இந்த விடத்துக்குச்சென்று இந்தக் குடிசைகளைப் பிரிக்க பாத்தியமுடையவர்களா யிருக்கிறார்கள். எதிர்கக்ஷிக் காரர்களால் தாக்கப்படுவார்களென இவர்களுக்குத் தெரிந்தால் தங்களை பாதுகாக்கத்தக்க விதமாகவே செல்லவேண்டும். தங்கள் தற்காப்புக்கு எவ்வளவு வேண்டியதோ அந்த அளவுக்கு அதிகப்படாமல் எதிர்கக்ஷிக்காரர்களுக்குத் துன்பம் உண்டுபண்ணுவார்களானால் இவர்கள் சட்டவிரோதமான கூட்டம் கூடினவர்களாக மாட்டார்கள். இந்தக் கேஸில் மனுதார்கள் தங்கள் தற்காப்புக்கு

ஜாஸ்திபட்ட துன்பஞ் செய்ததாகத் தெரியவில்லை. இதனாலிவர்கள் செய்தது எவ்வித குற்றமுமாகாது. இதனால் எதிரிகளுக்கு விதித்த தண்டனையை ரத்துசெய்கிறோம்.

22 Indian cases 993

பிரிவி கவுன்ஸில்.

கல்கத்தா ஹைகோர்ட்டு தீர்ப்பின்பேரில் அப்பீல்.

தீர்ப்பு 30—3—14

ஜட்ஜிகள் லார்ட் மௌல்டன் அவர்கள் லார்ட் பார்க்கர் அவர்கள்	ஸ்ரீமதி ருணிமோனிதாஸி ஆ அப்பீல்தார்கள் V
ஸர் ஜான் எட்ஜ் அவர்கள் மிஸ்டர் அமீர் ஆலி அவர்கள்	ருதாபிரசாத் முல்லிக் ஆ எதிர்கக்ஷிக்காரர்

39 [இந்துலா.]

ஒருவர் தன் பெண்களுக்கு எழுதிவைத்த உயிலில் எந்தப் பெண்ணுக்கு பிள்ளையிருக்கிறதோ அவள் ஜீவதிசைக்குப் பின் அந்தப் பிள்ளைகளடைகிறதென்று எழுதியிருந்தால் அது செல்லுமென்பது.

ஹரிதாஸ் டட்என்பவர் 1875 ம் வருஷம் அக்டோபர் மாதம் 30 ந் தேதி ஒரு உயில் எழுதிவைத்துவிட்டு இறந்தார். அவர் இறக்கும்போது அவர் விதந்து ஸ்ரீநோமோனி, பெண்கள் ருணிமோனி பிரிமோனி இம் மூவரும் ஜீவந்தர்களா யிருந்தார்கள். இந்த ஸ்ரீநோமோனி ஒருவனை ஸ்வீகாரஞ்செய்துக் கொண்டாள். அந்த ஸ்வீகாரஞ் செல்லத்தக்கதல்ல வென்று 1900 ம் வருஷத்தில் பிரிவிகவுன்ஸலில் தீர்மானஞ் செய்துவிட்டார்கள். இந்த விதந்து இறந்துபோன பிறகு ருணிமோனியுடைய புருஷன் ஜுகல் கிஸ்ஸன் ஸென் என்பவனை ஸ்வீகாரஞ் செய்துகொண்டார். பிறகு இந்த ருணிமோனியும் அவள் சகோதரி பிரிமோனியும் தங்கள் தகப்பனுடைய சொத்துகளுக்கு தாங்கள் அத்தறுதியான சொந்தக்காரர்களென்ற பாத்தியஸ்தாபன வழக்குக்கொண்டுவந்தார்கள். இந்த வழக்கு பிரிவிகவுன்ஸிலுக்குப் போனதில் ஹரிதாஸ் எழுதிவைத்தது இந்தப் பெண்களிருவரும் அவர்கள் ஜீவதிசைவரையில் அனுபவிக்கும்படியான பாத்தியமேயன்றி அவர்கள் ஜீவதிசைக்குப்பின் அவர்களின் பிள்ளைகளடையவேண்டுமென்ற எண்ணத்

துடன் எழுதபட்டிருப்பதாக பிரிவிகவுன்ஸிலில் தீர்மானித்து விட்டார்கள். (இ. லா. ரி 35 கல்கத்தா 896 தீர்மானத்தை பார்க்க). பெண் பிரிமோனி 1909 ஹூத்தில் இறந்தாள். இவள் பிள்ளைகளில் ஒருவனுன ராதாபிரசாத் முல்லிக் என்பவர் தானும் மற்றொரு காசிபிரசாதும் மட்டில் ஹரிதாஸ் ஜீவதிசையில் பிறந்திருந்ததால் அவர்களுக்குமட்டில் இந்த பிரிமோனிக்கு மேற்சொன்ன உயில்மூலமாக கிடைத்தசொத்துக்கள் கிடைக்கக்கூடியதென்றும், அந்த ஹரிதாஸ் ஜீவதிசைக்குப் பிறகு பிறந்த பிள்ளைகளுக்கு அச்சொத்தில் பாத்தியமில்லையென்றும் ராணிமோனிக்கும் அவளுடைய இறந்த சகோதரி சொத்து சர்வேயர்ஷிப்புப்படி கிடைக்கமாட்டாதென்றும், பாத்தியஸ்தாபன வழக்கிட்டார். முதல் கோர்ட்டார் வாதியின் தாவாவைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். இதைப்பற்றி அப்பீல் செய்ததில் இறந்த பிரிமோனிக்கு பிள்ளைகளிருப்பதால் ராணிமோனிக்கு சர்வேயர்ஷிப்புப்படி தாவா சொத்து கிடைக்கமாட்டாதென்றும், உயில் எழுதிவைத்தவர் ஜீவதிசையில் பிறந்த பிள்ளைகளுக்கு மட்டில் தாவா சொத்துக்கள் கிடைக்கக்கூடியதென்றும் மற்றவர்களுக்குக் கிடைக்கமாட்டாதென்றுந் தீர்ப்பு செய்துவிட்டார்கள்.

பிரிமோனி இறந்த பிறகு அவளுடைய சொத்துக்கள் அவள் சகோதரி ராணிமோனிக்கு சர்வேயர்ஷிப்புப்படி கிடைத்துவிட்டதென்று இந்த கோர்ட்டில் அப்பீல் செய்திருக்கிறார்கள்.

கீழ் அப்பீல் கோர்ட்டார் செய்திருக்குந் தீர்மானத்தை ஆழ்ந்து யோஜித்து அவர்கள் செய்ததே நியாயமானதென்று அப்பீலைத் தள்ளுபடி செய்கிறோம். உயில் செய்தவரின் ஜீவதிசைக்குப் பிறகு பிறந்த பிள்ளைகளுக்கு அச்சொத்துக்கள் கிடைக்குமா கிடைக்கமாட்டாதா வென்பதைப்பற்றி நாங்கள் யாதொரு முடிவுஞ் சொல்லவில்லை.

23 Indian Cases 713.

சென்னை ஹைகோர்ட்.

1912 வருஷத்திய அசல் நம்பர் 364.

தீர்ப்பு 18—12—13.

ஜட்ஜி ஜஸ்டிஸ் வாலீஸ் அவர்கள்	P. புஷ்பவல்லித் தாயாரம்மாள் வாதி V P. ராகவய்யா செட்டி பிரதிவாதி

40. [இந்துலா]

ஒரு இந்து விதந்து தனிமையான ஜீவனும்சம் தனக்கு வேண்டுமென்று கேட்கும்போது அவள் புருஷன் ஜீவதிசையில் அவள் எவ்விதம்சம்ரேக்ஷிக்கப்பட்டு வந்தாளோ அதே விதங்காலக்ஷேபஞ் செய்யத்தக்கதாகவும், புருஷன் பாக சொத்தின் வரும்படிக்கு மேற்படாமலும், அந்தந்த குடும்பவழக்கங்களின்படி ஜீவனும்சங்கொடுக்கப்படவேண்டுமென்பதும், முற்பட்ட ஜீவனும்சம்வேண்டாமென்று வெளிப்படையாக விதந்து சொல்லாத வரையில் அது அவளுக்குக் கிடைக்ககூடியதென்பதும்.

வாதி ஒரு விதந்து; இவள் தனக்கு சில நகைகளும், புடவைகளும், பாத்திரங்களும் ஜீவனும்சமுங் கிடைக்கவேண்டுமென தன்னுடைய மாமனூர் பேரில் வழக்கிட்டாள். புடவை பாத்திரங்கள் இவைகளை பிரதிவாதி கொடுப்பதாக ஒப்புக்கொண்டு விட்டதால் அவைகளைப்பற்றித் தீர்மானிக்கிறோம். நகைகளைப்பற்றியும் ஜீவனும்சத்தைப் பற்றியுந் தீர்மானிப்பது கடினமான விஷயம். வாதி தன்னை விவாகஞ் செய்து கொடுக்கும்போது தானணிந்து கொள்ளவேண்டிய நகைகளுக்காக தன்னைச்சேர்ந்தவர்கள் பிரதிவாதியிடம் ரூபாய் 2000 கொடுத்ததாகவும், தனக்கு ரூபாய் 16000 மதிப்புள்ள நகை புருஷனின் மூத்த மனைவி யணிந்திருந்ததை பிரதிவாதி கொடுத்து தான் போட்டுக்கொண்டிருந்ததாகவும், அவை பிரதிவாதி வசமிருப்பதாகவும், அவைகள் தனக்கு கிடைக்கவேண்டுமென்றுங் கேட்கிறாள். இது விஷயங்கள் இவளால் ருஜூப்பிக்கப்படவில்லை. இவளிந்த நகைகளை தன் புருஷன் வீட்டில் வைத்துவிட்டு தன் தாயார் வீட்டுக்குப் போய்விட்டதாகச் சொல்லுகிறாள். இது நம்புவதற்கு அருகமற்றது. இவளிந்த நகைகளை யணிந்து கொண்டிருந்ததைக் கொண்டு இவளுக்கு இந்நகைகளில் பாத்திய முண்டாகமாட்டாது. பிரதிவாதி வர்த்தகனுகையால் அனுவசியமான செலவுகள் செய்யமாட்டார். இவைகளை யுபயோகிக்கும்படி அனுமதி கொடுத்திருந்தாலும் இவைகளை யவளுக்குச் சொந்தமாகக்கொடுத்து விட்டிருப்பாரென்று தெரியவில்லை. வெங்கி என்ற நகை மட்டில் வாதி கேட்டுக் கொண்டபடி அவளிடங் கொடுபட்டதாகத் தெரிகிறது. ஆகையால் நகை விஷயம் வாதியால் ருஜூப்பிக்கப்படவில்லை.

ஜீவனாம்சத்துக்கு எவ்வளவு தொகை கொடுபட வேண்டு
மென்பது அடுத்த விஷயம். பிரதிவாதி வர்த்தகத் தொழில் நட
த்துபவராகையால் ரூபாய் சேர்த்து வைப்பதிலேயே திருஷ்டி
யுடையவர்களாயிருப்பார்கள். வரும்படி மிகுதியா யிருந்தாலும்
இந்தச் செட்டிகள் ஜமீன்தார் முதலிய பெரிய தனக்காரர்கள்
போல குடும்பச் செலவுகள் செய்யமாட்டார்கள். இவர்கள் குடும்
பத்துக்கு மாதம் 1-க்கு சராசரி ரூபாய் 400 தான் செல்லும்.
இதனால் வாதிக்கு மாதம் 1—க்கு ரூபாய் 140 கொடுபட வேண்டி
யதாகத் தீர்மானிக்கிறோம். வாதி தனக்கு ஜீவனாம்சங் கொடுக்
கும்படி முந்தி கேட்காததால் முற்பட்ட ஜீவனாம்சம் வாதிக்குக்
கிடைக்கத்தக்கதில்லை யென பிரதிவாதி கக்ஷியாடுகிறார். அவிபக்த
குடும்பத்தில் வசித்து வந்த ஒரு விதந்துவுக்கு அவள் புருஷன்
இறந்த தேதி முதற்கொண்டே ஜீவனாம்சங் கிடைக்கக்கூடியது.
இவள் தன்னுடைய பெற்றோருடன் வசித்து வருவதைக்கொண்டு
இவள் தனக்குரிய ஜீவனாம்சத்தை விட்டுவிட்டதாக எண்ணப்படக்
கூடாது. இவ்விதம் விட்டுவிட்டதற்கு தகுந்த ருஜு வேண்டும்.
(இ. லா. ரி. 24 சென்னை 147 பிரிவிகவுன்ஸல் தீர்ப்பைப் பார்க்க.)
வாதி தன் புருஷனிறந்தபின் ஒன்பது மாதங்கள் வரையில் தன்
புருஷன் குடும்பத்துடன் வசித்து வந்து பின்பு எவ்வித விரோத
முமன்னியில் தன்னுடைய பெற்றோர் வீட்டுக்குப்போயிருக்கி
றாள். இவளுடைய புருஷனுடைய வருஷாப்திகத்துக்கு இவள்
வரமாட்டேனென்று சொல்லிவிட்டாள். அந்தத் தேதி முதற்
கொண்டு அதாவது 1911-ம் வருஷம் ஜூன் மாதம் 1-ந்தேதி
முதல் விரோதம் ஏற்பட்டு விட்டது. அதனாலந்தத் தேதி முதல்
இவளுக்கு க்த ஜீவனாம்சங் கிடைக்கக்கூடியது. இந்த ஜீவனாம்சத்
தொகைகளுக்கு பிராது D ஷெடியூல் 1—2 ஐட சொத்துக்கள்
ஜவாப்தாரியாக்கப்படும்.

28 Indian Casse 413.

பிரிவி கவுன்சல்.

அலகாபாத் ஹைகோர்ட்டு தீர்ப்பின் பேரில் அப்பீல்
தீர்ப்பு 6-2-14.

ஜட்ஜிகள்.	
லார்ட் ஷா அவர்கள்	லாலா பிர்ஜலால் அப்பீல்தார்
லார்ட் மௌல்டன் அவர்கள்	V
மிஸ்டர் அமீர்அலி அவர்கள்	முஸமத் இந்தகன்வார் ஆ
	அ. பிரதிவாதிகள்
	&
	லாலா பிர்ஜலால் அப்பீல்தார்
	V
	ஹெமட்ரம்ஜூ அ பிரதிவாதிகள்

41. [இந்துலா]

இந்து விதந்துவால் செய்யப்பட்ட பராதீனங்கள் அவசியமா
ன செலவுகளுக் கேற்பட்ட தென்பதை சாசனம் பெற்றவர்தான்
ருஜுப்பிக்கக் கடமைபட்டவரேன்பதும், அந்த சாசன முதலிய
தஸ்தாவேஜிகளில் செலவுகளின் அவசியம் சொல்லப்பட்டிருப்பது
மட்டில் போதுமான ருஜுவல்ல வென்பதும், அது விஷயங்களுக்கு
வேறு ருஜு வேண்டியதவசிய மென்பதும்.

கில்சிபூர் என்ற கிராமம் ஆதியில் குண்டன்லால் என்பவருக்கு
சொந்தமாயிருந்தது. இவருக்கு மிகின்லால் ஷாம்லால் என்ற
இரண்டு பிள்ளைகள். இவர்கள் அவிபக்தர்கள். மிகின்லால் 1853ம்
வருஷத்தி லிறந்தார். அவருக்கு லீலாதார் என்ற ஒரே பிள்ளை
தான் வார்சு. ஷாம்லால்1859ம் வருஷத்திலிறந்தார். அவருடைய
விதந்து நிம்மா என்பவன்தான் அவருடைய வார்சு. ஷாம்லால்
இறந்தவுடனே முழு சொத்துக்களும் லீலாதாருக்கு கிடைத்து
விட்டது. இவர் 1861ம் வருஷத்தி லிறந்தார். இவருடைய சொத்
துக்களை இவர் விதந்து ருக்மணி வார்சுக்கிரமத்தி லடைந்தாள்.
இவளுக்கு இச்சொத்துக்கள் ஏகதேசத்திற் சொந்தமாயிருந்தா
லும் ஷாம்லாலின் விதந்தும் சமபாகஸ்தியாக அங்கீகரிக்கப்பட்ட
தாக அவர்களின் நடவடிக்கைகளினால் தெரிகிறது; இந்த இரண்டு
விதந்துகளும் மேலே சொன்ன கில்சிபூர் கிராமத்தின் பாதி 10
பங்குநிலங்களை ருக்மணியின்மானேஜர் டால்சண்டு என்பவருக்கு
1862ம் வருஷத்தில் விற்றுவிட்டார்கள். பிறகு இந்த டால்சண்டு,
ருக்மணி நிம்மா இந்த மூவருஞ்சேர்ந்து இந்த கிராம முழுவதும்
அதாவது 20 பங்கு நிலங்களையும் மாதொரும் என்பவருக்கு
1871 வருஷத்தில் போக்கிய அடமானமாகவைத்து விட்டார்கள்.
போக்கிய அசல் தொகைக்கும் அதன் வட்டிக்கும் இந்த முழு
கிராமத்தையும் 12 வருடங்களுக்குஅனுபவித்துக்கொண்டுகெடுக்
கடந்தவுடனே கிராமத்தை விட்டுவிட வேண்டியதென்று கண்டி
ருக்கிறது. டால்சண்டு 1873ம் வருஷத்தி லிறந்தார். இவருடைய
வார்சாகிய இவருடைய விதந்து பானு என்பவள் தன் புருஷன்
ருக்மணி நிம்மா இவர்களிடம் சாசனம்பெற்ற 10 பங்கு நிலங்க
ளில் 8 பங்கு நிலத்தில் தனக்குள்ள மீட்கும்படியான பாத்திய
தையை (Equity of Redemption) மாதோராமுடைய மகன் டர்
பாரிலாலுக்கும் அவருடைய விதந்து சாண்டோவுக்கும் 1874ம்

வருஷத்தில் விற்றுவிட்டாள். சாசன சொத்தில் பாக்கியாயிருந்த 2 பங்கு நிலமும், இந்த பானுவின் பேரில் ஏற்பட்ட டிக்கிரி கடனுக்காக ஏலம் போடப்பட்டு கடைசியாக அது இந்த அப்பீல்தாருக்கு கிடைத்துவிட்டது. பாக்கியாகவுள்ள 10 பங்கு நிலத்தில் ருக்மணி நிம்மா இவர்களுக்கிருந்த மீட்கும்படியான பாத்தியம் எவ்விதம் மாதோராமுடைய மகனுக்குக் கிடைத்ததென்பதைப்பற்றி சொல்லவேண்டுவது அனாவசியம்.

பிராமணர்களாகிய வாதிகள் இந்த லீலாதார் டால்சண்டு இந்த இருவருக்கும் சமீப அனந்தர வார்சுகளென்று வழக்கிட்டிருக்கிறார்கள். இவர்கள் தங்களுக்கு அனந்தர வார்சு பாத்தியதையுள்ள இந்த கிராமத்தில் சமபாதியை இந்தாகோயர் என்பவளுக்கு விற்று விட்டதால் அவளும் இந்த அனந்தர வார்சு பாத்தியதையை முன்னிட்டுப் பேர்பாதி நிலத்துக்கு வழக்கிட்டாள். டால்சண்டின் விதந்து பானு 1905ம் வருஷத்திலிறந்ததாகவும், நிம்மா 1906ம் வருஷத்திலும், ருக்மணி இதற்குச் சில வருடங்களுக்குமுன்னுமிறந்து விட்டதாகவும், அம்மூவர்களாலுஞ் செய்யப்பட்டபராதீனங்கள் அவர்களின் ஆயுள்பரியந்தான் செல்லத்தக்கதென்றும், அந்தப் பராதீனங்கள் செய்யும்படியான அவசியங்கள் யாதொன்றுமிருந்ததில்லையென்றும், அவைகளுக்கு தாங்கள் எவ்விதத்திலுங்கட்டுப் பட்டவர்களல்லவென்றுங் கக்ஷி சொன்னார்கள். பிராமண வாதிகள் இறந்த லீலாதாருக்காவது, டால்சண்டுக்காவது அனந்தர வார்சுகள் அல்லவென்றும் கடைசி ஆண் வார்சின் விதந்து ருக்மணி இறந்து 12 வருடங்களுக்குப் பிறகு இந்த வழக்குக் கொண்டு வரப்பட்டிருப்பதால் வாதிகளின் தாவாவுக்கு காலாவதி தோஷமேற்பட்டு விட்டதென்றும், வாதிகள் அனந்தர வார்சுகளென்று ஏற்பட்டாலுங்கூட விதந்துகளாலேற்பட்ட பராதீனங்கள் குடும்ப அவசியச் செலவுகளுக்கேற்பட்டனவென்றும், பிரதிவாதிகள் கக்ஷியாடினார்கள்.

பிராமணவாதிகள் லீலாதாருக்கு அனந்தரவார்சுகளென்று ருஜுவிட்டது நம்புவதற்கு அருகமற்றதென்றும், அதனால் ருக்மணி எப்போது இறந்துபோனாளென்பதைப்பற்றி விசாரிக்க வேண்டியது அனாவசியமென்றும் சப் ஜட்ஜியவர்கள் தீர்மானஞ் செய்தார்கள். இந்த பிராமணவாதிகளில் லக்ஷ்மணன் நீங்கலாக மற்றவர்கள் டால்சண்டினுடைய சகோதரரின் குமாரர்களென்

றும், அதனால் அவருடைய விதந்து செய்த பராதீனங்களைப்பற்றி வழக்கிட பாத்தியமுடையவர்களென்றும், இந்த விதந்து 8 பங்கு நிலங்களை பராதீனஞ் செய்தது அவசியமான செலவுகளுக்கென்றும், மற்ற 2 பங்கு நிலம் இவளுடைய கடனுக்காக ஏலம் போடப்பட்டது இவளுடைய ஆயுள்பரியந்தஞ் செல்லத்தக்கதேயன்றி பிற்பட்டுச் செல்லத்தக்கதல்லவென்றும், அதனாலிந்த 2 பங்கு நிலத்தைப்பற்றின வரையில் இந்தாகோயர் வழக்கின்படி தீர்மானஞ் செய்துவிட்டார்கள். இது விஷயமாக ஹைகோர்ட்டில் அப்பீல் செய்யப்பட்டதில், இறந்த லீலாதார் டால்சண்டு இவ்விருவருக்கும் ஹெட்ராம்வகையரா வாதிகள் அடுத்த அனந்தர வார்சுகளென்றும், வாதிகள் குண்டன்லால் என்பவருடையபெண் மூலா என்பவளின் வம்சஸ்தர்களென்றும், அதனால் ருக்மணியின் புருஷன் லீலாதாருக்கு வாதிகள் பந்துக்களென்றும், ருக்மணி நிம்மா இவர்களால் டால்சண்டுக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட சாசனத்துக்கும், அம்மூவர்களால் செய்யப்பட்ட போக்கிய அடமானத்துக்கும் எவ்வித அவசியமான செலவுகளுமிருந்ததில்லை யென்றும், கீழ்கோர்ட்டு டிக்கிரியை ரத்துசெய்து வாதிகளின் பிரார்த்தனையின்படியே தீர்மானஞ் செய்துவிட்டார்கள். இதன்பேரில் பிரதிவாதி இந்த போர்டில் அப்பீல் செய்திருக்கிறார்.

வாதிகள் இறந்த டால்சண்டின் சகோதரரின் குமாரர்களென்பதும், அவருடைய விதந்து பானுவின் ஜீவதிசைக்குப் பிறகு அந்த டால்சண்டின் சொத்துக்களை யடைய பாத்தியமுடையவர்களென்பதும், ஆக்ஷேபிக்கக்கூடாத விஷயம். இந்த பானு மீட்கும்படியான பாத்தியதையை பராதீனஞ்செய்தது அவசியமானசெலவுகளுக்காக ஏற்பட்டதா இல்லையா வென்பதைப்பற்றித் தான் தீர்மானிக்கப்பட வேண்டும். விதந்துவாலேற்படும் பராதீனங்கள் அவசியமான செலவுகளுக்காக ஏற்பட்டதென்பதை சாசனம் பெற்றவர் தான் ருஜுப்பிக்கக் கடமைப்பட்டிருக்கிறார். அப்பீல்தார் இந்த அவசியச் செலவுகளின்னதென்பதை ருஜுப்பிக்கவில்லை. சாசனத்திலும் அடமானத்திலுங் கண்ட வாசகங்கள் தான் ருஜுவென்று சொல்லுகிறார். இந்த வாசகங்களுண்மையென்பதற்கு வேறு ருஜுக்கள் வேண்டுமென்று இந்த போர்டார் அடிக்கடி எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். அதனால் இந்த பானுவால் செய்யப்பட்ட 8 பங்குகளின் பராதீனத்தைப்பற்றின

வரையில் ஹைகோர்ட்டார் செய்த தீர்மானம் சரியானதென்றே அபிப்பிராயப்படுகிறோம். இந்த பானுவின் கடன்களுக்காக கோர்ட்டாரால் ஏல விற்று முதல் செய்யப்பட்ட மற்ற 2 பங்குகளைப்பற்றின வரையில் அவசியமான செலவுகளுக்கு ஏற்பட்டனவல்லவென்று கீழ்கோர்ட்டார்களிருவருந் தீர்மானித்துவிட்டார்கள். அதுவும் வாதிகளைக் கட்டுப்படுத்தக் கூடியதல்லவெனத் தீர்மானிக்கிறோம். வாதிகள், இறந்த குண்டன்லானுடைய பெண் மூலோவுடைய பேரப்பிள்ளைகளென பாத்தியங்கொண்டாடுகிறார்கள். இதுவிஷயமாக தஸ்தாவேஜி சம்பந்தமான சாக்ஷிகள் கிடையாது. எல்லாம் வாய்மொழியான சாக்ஷியங்கள். அவைகளை நம்புவதற்கு இடமில்லை. இதனால் இதுவிஷயமாக சப் ஜட்ஜி செய்ததீர்மானமே சரியானதென்று அபிப்பிராயப்படுகிறோம். இதனால் ருக்மணிஎப்போது இறந்தாளென்பதைப்பற்றி விசாரிக்க வேண்டியது அனுவசியம். வாதிகள் ஹிந்தாகோயருக்கு வற்ற 10 பங்கு நிலமட்டில் அனந்தரவார்சு முறைமையில் கிடைக்கக் கூடியதாகவிருப்பதால் அவள் அந்த 10 பங்கு நிலத்தையும் அப்பீல்தாரிடம் வசப்படுத்திக்கொள்ள பாத்தியமுடையவள். இவளுக்கு நிலத்தின் வரும்படியுங்கிடைக்கக்கூடியது. கோர்ட்டில் கட்டப்படவேண்டிய போக்கியத்தொகை யின்னதென்பதை ஹைகோர்ட்டார் தீர்மானிப்பார்கள். இந்தப்படி தீர்மானிக்க மாக்ஷிமை தங்கிய சக்கரவர்த்தியவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். உபயகக்ஷிக்காரர்களும் ஹைகோர்ட்டு செலவுகளையும் இந்த போர்டு செலவுகளையும் அவரவர்களே பொறுத்துக் கொள்ளவேண்டியது.

அப்பீல் ஒரு பாகம் தீர்மானிக்கப்பட்டது.

1914 M. W. N. 405.

சென்னை ஹைகோர்ட்டு.

1912 ஷ்த்திய 2 வது அப்பீல் நம்பர் 1348.

தீர்ப்பு 11—3—14.

ஜட்ஜிகள்.	
மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள்	சுப்பாராயுடு ஆ. பிரதிவாதிகள் அப்பீல்தார்கள்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யரவர்கள்	V
	வெங்கட்டராமராயுடு ஆ. வாதிகள் எதிர் கக்ஷிக்காரர்கள்.

42. [இந்து லா.]

ஒரு இந்து குடும்பத்தில் ஜாஸ்தி சொத்துக்களிருக்கும் பட்சத்தில் சில சொத்துக்கள் தகப்பன்பேரில் வாங்கப்பட்டிருப்பது அவருடைய சுயார்ஜிதமெனச் சொன்னால், அவ்வித கக்ஷி சொல்லுகிறவர்கள் அதை ருஜுப்பிக்காத வரையில் அது குடும்ப சொத்தென்றெண்ணப்பட வேண்டுமென்பதும், மூக்கறையனுயிருப்பதைக்கொண்டு அவனுக்கு குடும்பச் சொத்திலுள்ள பாத்தியம் விலகமாட்டாதென்பதும்.

திருநெல்வேலி டிஸ்டிரிக்ட் கோர்ட்டு தீர்ப்பின்பேரில் அப்பீல். சில சொத்துக்கள் வாதிகளுக்கு பாகஅருகமுள்ள குடும்பப் பொது சொத்துக்களென்றும், மூக்கறையனுயிருப்பவருக்கு குடும்ப சொத்தில் பாகமுண்டென்றும் டிஸ்டிரிக்ட் கோர்ட்டார் தீர்ப்பு செய்துவிட்டதின் பேரில், இந்தக் கோர்ட்டில் அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது. அடியிற்கண்ட இரண்டு ஆதாரங்களின் பேரில் பிரதிவாதிகள் அப்பீல் செய்திருக்கிறார்கள்.

(1) வாதிகளின் தகப்பன் வசமுள்ள சொத்துக்கள் குடும்பப் பொதுச் சொத்துக்களென்றும், சுபார்ஜிதமான தனிச்சொத்துக்களல்லவென்றும், ஏற்பட்ட ருஜுக்களைக் கொண்டு டிஸ்டிரிக்ட் ஜட்ஜி கண்டு பிடித்தது சட்ட விரோதமானதா?

(2) இந்துலாப்படி வாதி தாவா சொத்துக்களையடைய அருகமற்றவரா? டிஸ்டிரிக்ட் ஜட்ஜி இது விஷயமாக பயிண்டிங் ஏற்படுத்தவில்லை யாகையால் கேஸை ரிமாண்டு செய்யவேண்டுமா?

முதல் கேள்வி விஷயமாக கீழ்க் கோர்ட்டார்களிருவரும் பிதிரார்ஜ்ஜித தொகைகளிருந்தனவென்றும், தகப்பன் குடும்ப மானேஜராக விருந்துவந்தாரென்றும், கண்டு பிடித்திருக்கிறார்கள். இதனால் தகப்பன் பெயரால் வாங்கப்பட்ட சொத்துக்கள் அவருடைய சுயார்ஜ்ஜித சொந்தச் சொத்துக்கள் என்று பாத்தியங் கொண்டாடுகிறவர்கள் அவ்விஷயத்தை திருப்திகரமாகருஜுப்பிக்காத வரையில், அவை குடும்பப் பொதுச் சொத்தென்றே எண்ணப்பட வேண்டும். (மெயின்ஸ் இந்துலா 291-வது பாராவைப்பார்க்க) அப்பீல்தார்களாகிய பிரதிவாதிகள் அது விஷயத்தை ருஜுப்பிக்கத் தவறிவிட்டதாகக் கண்டு பிடித்திருப்பது மெத்த நியாயமானதே.

இரண்டாவது கேள்விவிஷயமாக பிரதிவாதிகள் டிஸ்டிரிக்ட் கோர்ட்டில் விவாதிக்காமல் விட்டுவிட்டார்கள். அப்பீல்தார்கள் சொல்லும் வியாதி பிறவியிலேயே ஏற்பட்டதல்லவென்று டிஸ்டிரிக்ட் முனிசீப் சொல்லியிருக்கிறார். அது பிறவியாகவிருந்தாலும் குடும்பச் சொத்துக்களை படைய அருகமற்றதாகச் செய்யமாட்டாது. (மெயின்ஸ் இந்து லா 596 வது பாராவைப் பார்க்க). கண் குருடு செவிடு முதலியன மட்டில் பாக அருகமற்றதாகச் செய்து விடுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

23 Indian Cases 528.

கல்கத்தா ஹைகோர்ட்டு.

1912 வருஷத்திய லெட்டர்ஸ் பேடெண்டு அப்பீல் நம்பர் 16.

தீர்ப்பு 1-7-13.

ஜட்ஜிகள் ஸர் லாரென்ஸ் ஜெங்கின்ஸ் Kt. சீவ் ஜஸ்டிஸ் அவர்கள் ஜஸ்டிஸ் ஸர் அஷுடோஷ் மூக்கர்ஜி அவர்கள்	ஹனுஷிக் ஆ. பிரதிவாதிகள் அப்பீல்தார்கள் V ஜுரொஷீக் வாதி எதிர்க்கக்ஷிக்காரர்

4. [மகமதியலா]

ஒருவள் தனக்கு மனைவியாக வாழ வேண்டுமென்று வழக்கிடும் மகமதியர் தனக்கு அவள் மகமதிய லாப்படி விவாகமானவளென்பதைத் திருப்திகரமாக ருஜுப்பிக்க வேண்டியதவசியமென்பதும், மைனர் பெண்ணுக்காக யார் சம்மதி கொடுத்தாரென்று சொல்லாத தீர்ப்பு சரியல்லவென்பதும்.

3-ம் பிரதிவாதி தனக்கு சட்டப்படி விவாகமான மனைவியென்றும், பிறகு 2-ம் பிரதிவாதியாகிய அவள் தாயார் அவளை முதற் பிரதிவாதிக்கு விவாகஞ்செய்து கொடுத்திருப்பதாகவும், 3-ம் பிரதிவாதி தன்னுடன் கூடிவாழ வேண்டுமென்றும் வாதி வழக்கிட்டிருக்கிறார். வாதிக்கும் 3-ம் பிரதிவாதிக்கும் எவ்வித விவாகமும் நடக்கவில்லையென்றும், விவாகம் நடந்ததாக ருஜு ஏற்பட்டாலும் அது செல்லுபடியற்ற விவாகமென்றும், பிரதிவாதிகள் கக்ஷியாடினார்கள். முதல் கோர்ட்டார் வாதியின் வழக்கைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். இதன் பேரில் அப்பீல் செய்யப்பட்டதில் டிஸ்டிரிக்ட் கோர்ட்டார் வாதியின் தாவாப்படியே தீர்ப்பு

செய்து விட்டார்கள். இது இந்தக் கோர்ட்டு ஜட்ஜி ஒருவரால் உறுதியுஞ் செய்யப்பட்டிருக்கிறது. இதன்பேரில் லெட்டர்ஸ் பேடெண்டு அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது.

டிஸ்டிரிக்ட் ஜட்ஜி சரியாக கேஸை விசாரிக்கவில்லை. மைனர் பெண்ணை விவாகஞ்செய்து கொடுக்க யார் சம்மதித்தார் என்று சொல்லவில்லை. பெண்ணின் தாயார் சம்மதித்திருந்தால் அது மகமதியலாப்படி செல்லுபடியற்றது. மகமதியர்களுக்குள் எவ்விதம் விவாகம் நடத்தப்பட வேண்டுமென்பது வில்ஸன்ஸ் ஆங்கலோ மகமதியலா 24 முதல் 30-வரை செக்ஷன்களிற் சொல்லப்பட்டிருக்கிறது. யார் கார்டியனாக விருக்கத்தகுந்தவரென்பது 93-வது செக்ஷனிற் சொல்லப்பட்டிருக்கிறது. விவாகம் மகமதியலாப்படி நடந்திருக்கிறதென்று வாதி ருஜுப்பிக்காத வரையில் வாதியின் தாவா தள்ளுபடிக்கு அருகமானது. கீழ் அப்பீல்கோர்ட்டார்கள் செய்த தீர்மானங்களை ரத்துசெய்து ஏற்பட்டிருக்கும் ருஜுக்களை நன்றாக கவனித்துத் தீர்ப்பு செய்யும்படி டிஸ்டிரிக்ட் கோர்ட்டுக்கு நம்பர்க்கட்டை அனுப்பியிருக்கிறோம்.

23 Indan Cases 921.

சென்னை ஹைகோர்ட்டு.

1911 வருஷத்திய 2-வது அப்பீல் நம்பர் 831

தீர்ப்பு 27-1-14.

ஜட்ஜிகள் மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள் மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்பென்ஸரவர்கள்	அல்லாபிச்சை தரங்கனரென்கிற காதர்மீரா சாகிப் தரங்கனர். V மகமது மொய்தீன் தரங்கனர்.

5. [மகம்மதியலா]

ஒரு வீட்டை இனும் சாசனஞ்செய்தவர் அந்த சாசனத்துக்கு பிறகு அவ்வீட்டில் குடியிருப்பதைக்கொண்டு அது செல்லத்தகாததாக மாட்டாதென்பதும், இனுங்கொடுப்பதில் நிபந்தனை எழுதப்பட்டால் அந்த நிபந்தனை செல்லத்தக்கதல்ல வென்பதும்.

திருநெல்வேலி சப்கோர்ட்டு டிக்கிரியின் பேரில் 2-வது அப்பீல்.

4-வது ஆதாவிற்கண்ட வீடு இனாம் சாசனம். அச்சொத்து முழுவதும் இனாம் பெற்றவருக்கு ஸ்வாதீனமாகாததால், செல்லத் தக்கதல்லவென்பது முதலாவது விவாதம். இந்தக்கேஸின் விஷயங்களைப் போன்ற (இ. லா. ரி 30 சென்னை 305 தீர்மானத்தில் இனாங்கொடுத்தவர் அந்த சாசன வீட்டில் குடியிருப்பதைக் கொண்டு அந்த இனாம் செல்லுபடியற்றதாக மாட்டாதென்று தீர்மானித்திருக்கிறார்கள்.

இனாங் கொடுத்தவர் ஜீவதிசைக்குப் பிறகுதான் 1-2 பிரதிவாதிகள் இனாஞ் சொத்தை அத்தறுதியான பாத்தியதையுடன் அனுபவிக்க வேண்டியதாகக் கண்டிருப்பதால் அவ்வித நிபந்தனை கண்ட இனாம் மகம்மதியலாப்படி செல்லுபடியுள்ள தல்லவென்பது இரண்டாவது விவாதம். பிந்திசெலாவணிக்கு வரக்கூடிய இனாமுக்கும் நிபந்தனைகண்ட இனாமுக்கும் மிகுந்த வித்தியாசங்களிருக்கின்றன. முதற்சொன்ன இனாம் மகமதியலாப்படி செல்லுபடியற்றது. பிந்திசொல்லிய இனாம் அத்தறுதியான இனாமாகவே ஏற்றுக் கொள்ளக்கூடியது. அந்த நிபந்தனை செல்லத்தக்கதல்ல. (இ. லா. ரி. 13 பம்பாய் 264, அமீர் அலி மகமதியலா 4-வது பதிப்பு முதலாவது வாலியூம் 134 பக்கம் இவைகளைப்பார்க்க). இந்த இரண்டாவது அப்பீல் செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

23 Indan Cases 520

சென்னை ஹைகோர்ட்டு.

1912 ௵த்திய சீவில் ரெவிஷன்மனு நம்பர் 636.

தீர்ப்பு. 18—2—14.

ஜட்ஜி.	மோகனாம்பாள் வாதி மனுதாரர்
	V
மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள்	தாவுத்ஸா ராவுத்தர் பிரதிவாதி எதிர்கக்ஷிக்காரர்.

6 . [சென்னை எஸ்டேட் லாண்டு ஆக்டு.]

எல்லா இனாம்தார்களும் எஸ்டேட் லாண்டு ஆக்டுப்படி பூமிக் குடையவர்களாக மாட்டார்க ளென்பதும், குடிகளுக்கு சாஸ்வத குடிக்காணி பாத்திய மிருப்பதைக் கோண்டு அவர்கள் பேரில் எஸ்டேட் ஆக்டுப்படி நடவடிக்கைகள் நடத்தக் ;கூடா தென்பதும்.

மாயவரம் சப் கோர்ட்டுத் தீர்ப்பின்பேரில் அப்பீல்.

வாதி, பிரதிவாதிகளாகிய குடிகள் பேரில் வழக்கிட்டதில் சப் ஜட்ஜிபவர்கள் பிரதிவாதிகளுக்குக் குடிவார பாத்தியம் அல்லது சாஸ்வத அனுபவ பாத்திய முண்டென்றும், ஆனால் தாவாவிற் கண்ட நிலங்கள் எஸ்டேட் லாண்டு ஆகட்டு 3 வது செக்ஷன் கிளாஸ் 2-ல் கண்டபடி எஸ்டேட் ஆகிறதென்றும் இந்த தாவாவிற்கண்ட விஷயங்கள் ரெவினியு கோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட வேண்டுமென்றும், வாதியின் வழக்கை தள்ளுபடி செய்து விட்டார்கள். அதன் பேரில் இந்த அப்பீல் செய்யப் பட்டிருக்கின்றது.

இந்த 3-வது செக்ஷன் கிளாஸ் 2-ல் a முதல் e வரையில் 5-வகுப்புக ளிருக்கின்றன. இவைகளில் எந்த வகுப்பின் கீழ் தாவாவிற்கண்ட நிலம் வருகிறதென்று சப் ஜட்ஜி சொல்லவில்லை. a கிளாஸில் வருவதாக பிரதிவாதிகளின் வக்கீல் சொல்லுகிறார். இவ்வகுப்பு "லாண்டு ரெவனியு இனாமாகச் செய்யப்பட்டயாதொரு கிராமம்" என்று சொல்லப் பட்டிருக்கிறது. அதாவது ஒரு முழுகிராமத்தில் சில பாகம் இனாமாகப் பிரிக்கப்பட்ட கிராமம். தாவா நிலம் ஒரு முழு கிராமத்தில் சொற்ப ஏகர்கள். இது ஒரு கோவிலுக்கு இனாமாகக் கொடுக்கப்பட்டது. தாவா நிலம் இனாங் கிராமத்தில் ஒருபாக நிலம். எஸ்டேட் லாண்டு ஆக்டின்படி எல்லா இனாம் தார்களும் பூமிக்குடையவர்களல்ல. முந்திய செட்டில் மெண்டுப்படி ஏற்பட்ட இனாம்தார் களெல்லாம் எஸ்டேட் லாண்டு ஆக்ட்டுப்படி பூமிக்குடையவர்க ளாகமாட்டார்களென்றும் முழு கிராமமும் இனாமாக ஏற்பட்டிருந்த போதிலும் அது எஸ்டேட் ஆகமாட்டாதென்றும் இந்தக் கோர்ட்டார் ஏற்கனவே தீர்மானித் திருக்கிறார்கள் (24 சென்னை லா ஜர்னல் 659, 14 இந்தியன் கேஸஸ் 215 இந்தத் தீர்மானங்களைப் பார்க்க) தாவா நிலங்கள் எஸ்டேட் என்று பிரதிவாதிகள் திருப்திகரமாக ருஜுப்பிக்கா விட்டால் சீவில் கோர்ட்டார் தாவா கேசை விசாரிக்க பாத்திய முடையவர்கள். ஜூரிஸ்டிக்ஷன் நீங்கலாக மற்ற விஷயங்களை விசாரித்து முடிவு செய்யும்படி உத்தரவு செய்கிறோம்.

23 Indian Cases 859.

சென்னை ஹைகோர்ட்டு.

1913-வருஷத்திய அசல் நம்பர் 174.

தீர்ப்பு 5 - 3 - 14.

ஜட்ஜிகள்.	T. M. நரசிம்மாசாரியார் வாதி
மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ் அவர்கள்	V
மிஸ்டர் ஜஸ்டிஸ் பேக்வெல் அவர்கள்	V. கிருஷ்ணமாசாரியார் பிரதிவாதி

40. [சீவில் புரிஸீஜர் கோடு.]

ஒரு கடன் காரனுக்குச் சேரவேண்டிய தொகையைப் பல டிக்கிரிதார்கள் பல கோர்ட்டு டிக்கிரிகளை நிறைவேற்றி மறியல் செய்திருந்தால் அத்தொகையில் மறியல் செய்த எல்லா டிக்கிரி தார்களுக்கும் பாத்திய முண்டென்பது.

டிக்கிரி கடன்காரனுக்கு பப்ளிக் வொர்க்ஸ் டிபார்டுமெண்டி லிருந்து சில தொகை கிடைக்க வேண்டியதாக விருந்தது. இந்தத் தொகையை இவருடைய கடன்காரர்கள் (Creditors) பலர் பல கோர்ட்டு டிக்கிரிகளைக் கொண்டு ஜப்தி செய்து மறியல் செய்தார்கள். இவ்விதம் மறியல் செய்தவர்களில் சிலர் உயர்ந்த கோர்ட்டில் டிக்கிரி பெற்றவர்கள். இவர்கள் தங்களுக்கு முன் பாத்தியமெனக் கக்ஷி யாடுகிறார்கள். மற்றவர்கள் இத்தொகை வீதாசாரப்படி பிரித்துக் கொடுபட வேண்டுமென கக்ஷியாடுகிறார்கள்.

பப்ளிக் வொர்க்ஸ் டிபார்டு மெண்டார் சி-பு-கோடு 63 வது செக்ஷன், 21 வது ஆர்டர் ரூல் 36 இவைகளின்படி ஜப்தி செய்யப்பட்ட தொகை பூராவையும் இந்தக் கோர்ட்டில் செலுத்தி விட்டதுமன்றி தங்களுக்குக் கொடுபட்ட மறியல் நோட்டீஸ்கள் பலவற்றையும் இந்தக் கோர்ட்டில் கொடுத்திருக்கிறார்கள். டிக்கிரித்தொகை கோர்ட்டில் செலுத்தப் படுவதற்கு முந்தி யார் யார் இந்தத் தொகையை ஜப்தி மறியல் செய்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் வீதாசாரப்படி தொகை கிடைக்க வேண்டிய தென்று 73 வது செக்ஷனில் சொல்லப்பட்டிருக்கிறது. 63 வது செக்ஷன் படி உயர்ந்த கோர்ட்டார் இந்தத் தொகையை வசூலிக்க பாத்திய முடையவர்களா யிருந்தாலும் உயர்ந்த கோர்ட்டு டிக்கிரிதார்களுக்குத்தான் இதில் பாத்திய முண்டு மற்றவர்களுக்குக் கிடையா

தென்பதில்லை. சவுகரியத்தினிமித்தம் உயர்ந்த கோர்ட்டார் தொகை வசூலிக்க பாத்திய முடையவரெனச் சட்டமேற்படுத்தி யிருக்கிறார்கள். இவ்வித வீதாசாரத் தொகை கிடைக்கவேண்டுமெனக் கேட்பதற்கு முந்தி இந்த டிக்கிரிதாரன் தன்னுடைய டிக்கிரியைத் தொகை வசூலித்த கோர்ட்டுக்கு மாற்றிக் கொண்டிருக்க வேண்டு மென்பதும் அவசியமில்லை. (இ. லா. ரி. 35 சென்னை 388, 21 கல்கத்தா 200 இந்தத் தீர்ப்புகளைப் பார்க்க.) எக்ஸிகியூடிவ் இஞ்சினீர் டிக்கிரி கடன் காரனுக்குச் சேரவேண்டிய தொகையை இந்தக் கோர்ட்டில் செலுத்துவதற்கு முந்தி யார் யார் இந்தத் தொகையை ஜப்தி மறியல் செய்திருக்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் வீதாசாரப்படி தொகை பட்டுவாடா செய்யும் படி உத்திரவு செய்கிறோம்.

23 Indian Cases 909.

பிரிவிகவுன்ஸல்.

சென்னை ஹைகோர்ட்டு தீர்ப்பின் பேரில் அப்பீல்

தீர்ப்பு 4—3—14

ஜட்ஜிகள்	சிதம்பரஞ் செட்டியார் அப்பீல்தார்
லார்ட் மௌல்டன் அவர்கள்	V
லார்ட் ஸமனர் அவர்கள்	சீனுவாச சாஸ்திரிகள் ஆ.
ஸர் ஜான் எட்ஜ் அவர்கள்	எதிர்கக்ஷிக்காரர்கள்
மிஸ்டர் அமீர் ஆலி அவர்கள்	

41 [சிவில் புரிஸீஜர் கோடு.]

பல கடன்க ளிருக்கும்போது சில கடன்களை மட்டில் தீர்க்க ஒருவர் தன் சொத்தை பராதீனஞ் செய்வது செல்லத் தக்கதல்லவென்பது.

கும்பகோணம் சப் கோர்ட்டார் செய்த தீர்மானத்தின் பேரில் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்யப்பட்டது. இந்த அப்பீல் தீர்மானம் 16 சென்னை லாஜர்னல் 427 வது பக்கத்தில் பிரசுரிக்கப் பட்டிருக்கிறது.

சாமி அய்யர் என்பவருக்கு ரூபா 15000த் துக்கு ஒரு டிக்கிரித் தொகை வரவேண்டியதாக விருந்தது. அதை யவர் தான் கொடுக்க வேண்டிய கடன்காரர் ரமணுதன் செட்டியாரென்ற ஒருவருக்கு டிரான்ஸ்வர் செய்து தன்னுடைய கடனை

யுளவடைத்துக் கொள்ளும்படி சொல்லி விட்டார். இவர் இந்த டிக்கிரியை அப்பீல்தாருக்கு டிரான்ஸ்வர் செய்து விட்டார். இவர் இந்த டிக்கிரியை நிறைவேற்ற சப் கோர்ட்டில் மனுக் கொடுத்தவுடன் இந்த சாமி அய்யரின் மற்றக் கடன் காரர்கள் அப்பீல்தார் பெற்றிருக்கும் டிரான்ஸவர் மோசடியான தென்று ஆக்ஷேபனை செய்தார்கள். அதனால் சப் ஜட்ஜி அப்பீல் தாருடைய மனுவைத் தள்ளுபடி செய்து விட்டார்கள். அப்பீல் தாரர் தனக்கு இந்த டிக்கிரியை நிறைவேற்றித் தொகை வசூலிக்க பாத்திய மிருக்கிற தென்பதை ஸ்தாபித்துக் கொள்ளுவதற்கும், எதிர் கக்ஷிக்காரர்கள் இந்த டிக்கிரித் தொகையை வசூலிக்காமல் இன்ஜங்ஷன் கொடுக்க வேண்டு மென்றும் அசல் வழக்கிட்டார். அப்பீல்தார் தான் பெற்ற டிக்கிரி டிரான்ஸவர் அங்கீகரிக்கப் படாமல் தள்ளுபடி செய்யப்பட்ட உத்திரவின் பேரில் அப்பீல் செய்ய வேண்டியதே யன்றி அசல் வழக்கிட்டது செல்லா தென்று அதைத் தள்ளுபடி செய்து விட்டார்கள். அதனால் அப்பீல்தார் முன் சொன்ன உத்திரவின் பேரிலும் அசல் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்ட தீர்ப்பின் பேரிலும் இரண்டு அப்பீல்கள் ஹைகோர்ட்டில் செய்தார். இந்தக் கோர்ட்டார் இந்த இரண்டு அப்பீல்களையுந் தள்ளுபடி செய்து விட்டதின்பேரில் இந்தப்பிரிவிகவுன்ஸலில் அப்பீல் செய்யப் பட்டிருக்கிறது.

தாவாவிற் கண்ட டிரான்ஸ்வர் சாமி அய்யருடைய கடன் காரர்களை மோசஞ் செய்வதற்காவது, அல்லது அவர்களைக் காலதாமதஞ் செய்வதற்காவது ஏற்பட்ட தென்பதற்கு எவ்வித ருஜுவுமில்லை யென்றும், அவ்வித எண்ணங்கள் யாதொன்று மன்னியில் நல்ல எண்ணத்துடனும் தகுந்த பிரதி பிரயோஜனத்துடனும் டிரான்ஸ்வர் ஏற்பட்டதென்றும், அந்த பாத்தியம் அப்பீல்தாருக்குக்கிடைத்திருக்கிறதென்றும், அசல் கக்ஷிக்காரர்களுக்குள் அவ்வித எண்ணங்களிருந்ததாக ஏற்பட்டாலும், அப்பீல்தாருக்கு அது விஷயங்கள் தெரியா தென்றும், தானதில் சம்பந்தப் படவில்லை யென்றும், அதனால் தன்னுடைய டிரான்ஸ்வரை கோர்ட்டார் நிராகரித்தது பிசகென்றும், அப்பீல் தாருடைய வக்கீல் கக்ஷியாடுகிறார்.

தீர்ப்பு.

ஒன்று அண்ணாமலை செட்டிக்கும், மற்றொன்று சிதம்பரசெட்டிக்கும், டிரான்ஸவர் செய்யப் பட்டிருக்கின்றது. இவைகளை

ஹைகோர்ட்டார் ரத்து செய்திருப்பது மெத்தச்சரியானதே. அவைகளின் பேரில் எவ்வித நடவடிக்கைகளும் நடத்தப்படக் கூடாது. டிரான்ஸவர் நீங்கலாக மற்ற ஆதாரங்கள் சரியானபடி கடன்கள் கொடுபட்டுத் தீர்ந்தன முதலிய விஷயங்களில் பாத்திய ஸ்தாபன வழக்குகள் கொண்டுவரப் படலாமா வென்ற விஷயங்களைப்பற்றி எங்கள் முன்பாக விசாரணைக்கு வாராததால் அது விஷயமாக நாங்கள் யாதொரு அபிப்பிராயமுஞ் சொல்லவில்லை. இந்த அப்பீலை தள்ளுபடி செய்ய மாக்ஷிமை தங்கிய சக்கரவர்த்தியவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்

அப்பீல் தள்ளுபடி.

23 Indian cases 714.

சென்னை ஹைகோர்ட்டு.

1910 ஷ்த்திய அசல் திறப்பு அப்பீல் நம்பர் 40.

தீர்ப்பு 23—3—14.

ஜட்ஜிகள். *மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரநாய ரவர்கள்* *மிஸ்டர் ஜஸ்டிஸ் எயிலிங் அவர்கள்.*	N. *துரைசாமி செட்டி* *அப்பீல்தார்.* V *N. கோவிந்த செட்டி வு.* *எதிர் கக்ஷிக்காரர்கள்.*

42. [சிவில் புரிஸீஜர் கோடு]

"நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிற வரையில் நம்பிக்கை யுண்டாயிருக்கிறது" என்று சொல்வது சி· பு. கோடு 19 வது ஆர்டர் 3 - வது ரூல்படி பிரமாணப் பத்திரிகையாக மாட்டா தென்பதும் எந்த முகாந்திரமாகத் தெரிந்துகொள்ளப்பட்ட தென்று எழுதப்படா விட்டால் அது பிரமாண பத்திரிகையாகா தென்பதும், அது சாக்ஷியமாக அங்கீகரிக்கத் தக்கதில்லை யென்பதும்.

ஆனரபிள் மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ் அவர்களால் செய்யப்பட்ட அசல் தீர்ப்பின் பேரில் அப்பீல் செய்யப்பட் டிருக்கிறது.

உடயவாதிகளும் ஒரு இந்து குடும்ப மெம்பர்கள். இவர்கள் குடும்பத்துக்கு வரவேண்டியதும், கொடுக்க வேண்டியதுமான தொகைகளுக்குக் கணக்குகள் பார்த்துப் பிரிவினை செய்யப்பட

வேண்டுமென்றும், 1909வருஷம் ஜூலைமாதம் 23-ந்தேதி பிரதம டிக்கிரி செய்யப்பட்டது. இந்த கக்ஷிக்காரர்கள் தங்கள் குடும்பக் கணக்குகளை தாக்கல் செய்ய வேண்டியதுடன், குடும்பத்துக்கு வர வேண்டியதும் குடும்பத்திலிருந்து கொடுபட வேண்டியதுமான தொகைகளுக்கும், ஸ்தாவர ஜங்கம சொத்துக்களுக்கும் விபரங்கள் இவர்களாவது, அல்லது தகுந்த மனுஷாள் மூலமாயாவது பிரமாணப் பத்திரிகைகள் கொடுக்க வேண்டுமென்றும், அவைகள் கொடுபட 1909 - வருஷம் செப்டம்பர் மாதம் 6-ந் தேதி கெடு குறிக்கப்பட்டிருந்தது. இவை விஷயமாக உபய கக்ஷிக்காரர்களும் ஆக்ஷேபனைகளைத் தெரிவித்துக் கொள்ளலாமென்றுஞ் சொல்லப்பட்டிருந்தது. வாதி ஆகஸ்டு மாதம் 23-ந் தேதி மேலே கண்டபடி கணக்குகளை தாக்கல் செய்தார். இதை முதல் பிரதிவாதி செப்டம்பர் மாதம் 6-ந்தேதிக்கு முந்தி ஆக்ஷேபிக்கவில்லை. வாதி கொடுத்த கணக்குகளுக்கு வாதி தாக்கல்செய்த பிரமாண பத்திரிகையைத் தவிர வேறு சாக்ஷிகள் கிடையாது. இந்தப் பிரமாண பத்திரிகையில் அடியிற் கண்டபடி எழுதப்பட்டிருந்தது.

"அடியிற் சொல்லப்பட்டிருக்கிற விஷயங்கள் அவிபக்த குடும்பத்துக்கு வரவேண்டியதும், கொடுக்க வேண்டியதுமான கடன்களென்று நான் நன்ருகத் தெரிந்துகொண்டிருக்கிறேன். அவைகளுண்மையென நம்புகிறேன்"

இந்த விஷயங்கள் பிரமாண பத்திரிகையாகமாட்டாதென்பதும், அவை சாக்ஷியமாக அங்கீகரிக்கக் கூடாதென்பதும் அப்பீல்தாருடைய விவாதங்கள்.

சி. பு. கோடு·19-வது ஆர்டர் 3-வது ரூலில் அடியில் வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது.

"பிரமாண பத்திரிகைகளில் உறுதி வார்த்தை சொல்லுகிறவருக்கு நேரில் எவ்வளவு தெரியுமோ அது மட்டிற்ருன் சொல்லப்பட வேண்டும்; ஆனல் இண்டர் லோகடரி அப்பிளிகேஷன்களில் தனக்கு உண்மையென்று நம்பிக்கையுண்டாயிருக்கிற விஷயங்களையுஞ் சொல்லலாம். ஆனல் அவ்வித நம்பிக்கை யுண்டாவதற்குக்காரணங்களைச்சொல்ல வேண்டும்."

அனேகபிரமாணபத்திரிகைகளில் தனக்குத்தெரிந்திருக்கிறதென்றும் நம்பிக்கை யுண்டாயிருக்கிறதென்றுஞ்சொல்லியிருக்கிருர்களேயன்றி, எவ்விதமாகத் தெரிந்து கொண்டார்கள், எவ்விதமாக நம்பிக்கையுண்டாயிற்றென்ற விஷயங்கள்சொல்லப்படுவதில்லை. இவை எவ்விதந் தெரிந்து கொண்டார்கள் எவ்விதத்தில் நம்பிக்கை யுண்டாயிற்றென்று கோர்ட்டார் தெரிந்துகொள்ளாவிட்டாலும், இந்த விஷயங்கள் வேறு சாக்ஷியங்களினல் ஆதரிக்கப்படாவிட்டாலும் அவை சாக்ஷியமாக அங்கீகரிக்கத் தகாதனவாகும். வாதி கொடுத்த பிரமாண பத்திரிகை சாக்ஷியமாக மாட்டாது. இது விஷயமாக வாதி தனிமையான ருஜு விடும்படி அனுமதி கொடுத்து கேசை ரிமாண்டு செய்கிருேம். அந்த ரிமாண்டின் பேரில் முதல் கோர்ட்டார் விசாரித்து தீர்மானம் அனுப்பியதின் பேரில் அது உறுதி செய்யப்பட்டது.

23 Indian cases 377

சென்னை ஹைகோர்ட்.

1913 வருஷத்திய 148 நம்பர் ஆர்டரின் பேரில் அப்பீல்

தீர்ப்பு 3—2—14.

ஜட்ஜிகள்.	எபூர் ரூமசாமி ரெட்டி ஆ. அப்பீல்தார்கள்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரநாயகரவர்கள் மிஸ்டர் ஜஸ்டிஸ் எயிலிங் அவர்கள்	V கந்ததாய் ரெங்கமன்ஞர் அய்யங்கார்

43. [சிவில் புரிஸீஜர் கோடு.]

டிக்கிரி உறுதிசெய்யப்படுவதற்கு முந்தி அது நிறைவேற்றப்பட்டு அது விஷயமாக ஆக்ஷேபனைகளில்லாதிருந்தால் பிந்தி அந்த நிறைவேறு நடவடிக்கை செல்லாதென்று சொல்லக்கூடாது.

அப்பீல்தார் பிரதிவாதி பேரில் எதிர்கக்ஷிக்காரர் பெந்தக டிக்கிரி பெற்றிருந்தார்; அந்த பெந்தக டிக்கிரி உறுதி செய்யப்படவில்லை. அதை நிறைவேற்றியபோது அப்பீல்தாரன் யாதொரு ஆக்ஷேபனையுஞ் செய்யவில்லை. பின்பு அப்பீல்தார் அந்தப் பெந்தக சொத்தை டிக்கிரிகாரனுக்கு விற்று டிக்கிரி பைசல் செய்துவிடுவதாகச் சொல்லி அதற்கு டிக்கிரிதாரன் சம்மதித்துவிட்டதாகவும், அதனலும் பெந்தக டிக்கிரி உறுதிசெய்யப்படாமல் நிறைவேற்றியது சட்ட விரோதமென்றும் அதனல் எதிர்கக்ஷிக்காரர் நிறைவேற்று மனுதள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றும்

கக்ஷியாடுகிறார். அப்பீல்தார் இந்த உடன்படிக்கை விஷயமாக தாக்கல் செய்த A. அடையாள தஸ்தாவேஜீ அவர் கக்ஷிக்கு விரோதமாகவேயிருக்கிறது. B அடையாளமிட்டது எதிர்கக்ஷிக்காரர் சொற்படி எழுதப்பபட்டதாகத் தெரியவில்லை. அதனால் டிக்கிரி கடனுக்கு பெந்தக சொத்தை விற்றுக்கொடுப்பதாகச் சொன்ன கக்ஷி பொய்யென்றே தீர்மானிக்கிறோம்.

பிரதம டிக்கிரி நிறைவேற்றப்பட அருகமற்றதென்று பிரிவி கவுன்ஸலில் தீர்மானித்திருக்கிறார்கள். (இ. லா. ரி. 33 அலகாபாத் 264 தீர்மானத்தைப்பார்க்க) இதை யனுசரித்து இந்த கோர்ட்டிலும் தீர்மானங்களேற்பட்டிருக்கின்றன. (15 இந்தியன் கேஸஸ் 732,23 சென்னை லாஜர்னல் 675 இந்தத் தீர்மானங்களைப் பார்க்க) இந்தத் தீர்மானங்கள் தாவா கேசுக்கு ஒற்றுமையானதல்ல. இந்த உறுதி செய்யப்படாத டிக்கிரி நிறைவேற்றப்படவேண்டுமென்று எதிர்கக்ஷிக்காரர் மனுக்கொடுத்து அப்பீல்தாரருக்கு ஆக்ஷேபனை நோட்டீஸ் சர்வாகியிருக்கிறது. அப்பீல்தாரர் அப்போது யாதொரு ஆக்ஷேபனையுஞ் செய்யாததினாலே பெந்தக சொத்து ஏலவிற்பனைசெய்யப்பட வேண்டியதாக உத்திரவு செய்யப்பட்டிருக்கிறது. இப்போது அது விஷயமாக ஆக்ஷேபிப்பது ரெஸ்ஜுடிகேடா தோஷத்துக்குள்ளாக்கப்பட்டிருக்கிறது. டிக்கிரியில் எவ்விதபரிகாரமும் ஏற்படக்கூடாததாக விருந்தபோதிலும், நிறைவேறு நடவடிக்கையில் டிக்கிரிப்படி பரிகாரமிருக்கிறதென்று கோர்ட்டார் தீர்மானித்து விட்டால் பிறகு கக்ஷிக்காரர்கள் அந்த டிக்கிரியில் பரிகார மேற்படவில்லையென்ற கக்ஷி சொல்லக்கூடாதென்று அனேக தீர்மானங்களேற்பட் டிருக்கின்றன. யாதொரு டிக்கிரியும் இல்லையென்றும், பெந்தக சொத்து ஏலம் போடப்படக்கூடாதென்றும் அப்பீல்தார்சொல்லுங்கட்சி அங்கீகரிக்கத்தக்கதல்ல. இந்த அப்பீல் செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது.

23 Indian Cases 390.

கல்கத்தா ஹைகோர்ட்டு.

மிஸ்லேனியஸ் சீவில் அப்பீல் 1912௵த்திய 563-ம் நம்பர்

தீர்ப்பு 11—3—14.

ஜட்ஜிகள்	
ஜஸ்டிஸ் ஸர் ஹெர்பர்ட் கார்ண்டப் Kt மிஸ்டர் ஜஸ்டிஸ் ரிச்சர்ட்ஸன்	பிதாம்பர் ஸாகா ஆ. எதிர மனுதார்கள் (அப்பீல்தார்கள்) V கிருஷ்ண மோகன்தாஸ் மனுதார் எதிர்கக்ஷிக்காரர்

44. [சீவில் பிரிஸீஜர் கோர்டு.]

டிக்கிரி நிறைவேறு நடவடிக்கைகளில் உபயவாதிகளும் இராஜியாகி ஒரு குறைந்ததொகை யேற்படுத்தி கொண்டு, அதைப் பல தவணைகளில் கொடுப்பதாகவும், குறிப்பிட்ட தவணைகளில் கொடுபடாவிட்டால் முழுத்தொகைக்கும் நிறைவேற்றிக் கொள்ளுகிறதென்றும், இராஜி மனு கொடுபட்டு அந்தப்படிதொகை செலுத்தப்படாமல் கெடுக்கடந்து தவணைத்தொகை செலுத்தியதை டிக்கிரிதாரன் ஒப்புக்கொண்டு வாங்கிவிட்டால் பின்னால் முழுத்தொகைக்கும் நிறைவேற்றக்கூடாதென்பது

அப்பீல்தாரன் மனுதார் பேரில் ரூபா 782க்கு வெண்ணலை டிக்கிரி பெற்றிருந்தான். இது நிறைவேற்றப் பட்ட காலத்தில் உபயவாதிகளும் இராஜியாகி அப்பீல்தாருக்கு டிக்கிரி பூராக கடனுக்கும் ரூபா 650 செலுத்தி விடுகிறதென்றும், அத்தொகையில் ரூபா 100 உடனே கொடுத்துவிட வேண்டியதென்றும், பாக்கித் தொகையில் ரூபா 250, 1908 ம் வருஷம் அக்டோபர் மாதத்திலும், மற்றது 1909 ம் வருஷம் அக்டோபர் மாதத்திலுங் கொடுத்து விடுகிறதென்றும் மனுக்கொடுத்து அந்தப்படி உத்திரவுஞ் செய்து விட்டார்கள். இதன்படி ரூபா 100 மட்டில்உடனே கொடுபட்டது. இரண்டாவது. தவணைத்தொகை ரூபா 250 குறிப்பிட்ட அக்டோபர் மாதத்தில் கொடுபடாமல் அடுத்த மாதத்தில் கொடுபட்டது. இதை டிக்கிரிதார் ஆக்ஷேபிக்காமல் பெற்றுக்கொண்டு பிரதிவாதி இராஜினுமா ஷரத்துப்படி தொகை செலுத்தாமையால் முழுத்தொகையும் அதாவது ரூபா 782 ம் தனக்கு கிடைக்கக் கூடியதென்றும், வரவு வந்த தொகை ரூபா 350 போக பாக்கித் தொகைக்கு நிறை வேற்றினார். அப்பீல்தார் இராஜினுமா ஷரத்தை யனுசரிக்காமல் வாதி தவணை கெடு கடந்து தொகை வாங்கி விட்டதால் வாதி அந்த நிபந்தனை தேவையில்லையென்று விட்டு விட்டதாக எண்ணப்பட வேண்டுமென்று இராஜி மனுவிற் கண்டபடி ரூபா 650 ல் வரவு வந்த ரூபா 350 போக பாக்கி ரூபா 300 க்கு மட்டில் நிறை வேற்றும்படி கீழ் கோர்ட்டார் உத்திரவு செய்து விட்டார்கள். ரூபா 782ம் தனக்குக் கிடைக்கக் கூடியதென்று வாதி அப்பீல் செய்திருக்கிறார்.

தவணையின்படி தொகை கொடுபடாததினால் முழுத்தொகையுந் தனக்கு வேண்டுமென்று டிக்கிரிதாரன் கேட்டதாக பிரதி

வாதி ஒப்புக்கொண்டாலும், பிற்பட்டு ரூபா 250 வாதி பெற்றுக்கொண்டது இராஜினாமா ஷரத்துப்படிக்கல்லவென்பதற்கு ருஜுவில்லை. தவணை நிபந்தனை வேண்டியதில்லையென விட்டுவிடுவது ஒவ்வொரு கேசிலும் ஏற்பட்ட சந்தர்ப்பங்களைப் பொறுத்ததாகவிருக்கிறது. (இலாரி 27 பம்பாய் 1. தீர்மானத்தைப் பார்க்க) கீழ்கோர்ட்டார் சட்ட விரோதமாகத் தீர்மானித்து விட்டார்களென்பதற்கு எவ்வித காரணமுமில்லை. ஆகையால் இந்த அப்பீல் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது.

23 Indian Cases 391.

அலகபாத் ஹைகோர்ட்டு.

1912 வருஷத்திய முதலாவது அப்பீல் நம்பர் 204.

தீர்ப்பு 10—3—14

ஜட்ஜிகள்	
ஸர் ஹென்ரி ரிச்சர்ட்ஸ் Kt சீவ் ஜஸ்டிஸ்	இந்தரபால்சிங் ஆ. பிரதிவாதிகள் அப்பீல்தார்கள்
	V
ஜஸ்டிஸ் ஸர் P. C பனர்ஜி Kt	மேவாலால் ஆ. வாதிகள் எதிர் கக்ஷிக்காரர்கள்

45 [சிவில் புரிஸீஜர் கோடு]

பெந்தகம் பெற்ற ஒருவன் அந்தத் தொகைக்கு வெண்ணலை டிக்கிரி பெற்ற பிறகு அத்தொகை வசூலிக்கப்படாததால் மறுபடியும் பெந்தக பத்திர பாத்தியதையின் பேரில் வழக்கிடலாமென்பதும், குடும்ப மானேஜர் குடும்பக் கடனை யொப்புக்கொண்டாலதற்கு மற்ற பாகஸ்தர்கள் கட்டுப்பட்டவர்களென்பதும்.

வாதிகளுக்கு பிரதிவாதிகள் 1895 வருஷம் செப்டம்பர் மாதம் 6-ந்தேதி ஒரு பெந்தகக் கடன் பத்திரம் எழுதிக்கொடுத்திருந்தார்கள். இதற்கு முன் இந்த பிரதிவாதிகள் இதே சொத்துக்களின் பேரில் வேறொருவருக்கு 1893ம் வருஷத்தில் பெந்தக பத்திரம் எழுதிக்கொடுத்திருந்தார்கள். இந்த முன்பெந்தகதாரன் தன்னுடைய பத்திரப்படி தொகை கிடைக்க வேண்டுமென வழக்கிட்டதில் இந்த வாதிகளும் அதில் பிரதிவாதிகளாகச் சேர்க்கப்பட்டிருந்தார்கள். இந்தக் கேஸ் 1900 வருஷம் மார்ச்சு மாதம் 29-ம்வ இராஜியாகி இராஜினாமா டிக்கிரி யேற்பட்டது. இதற்குப்

பிறகு வாதிகள் தங்கள் பெந்தக பத்திரத்திற் கண்டதொகைக்கு வெண்ணலை டிக்கிரி செய்யப் பட்டால் போதுமானதென்று வழக்கிட்டு அந்தப்படி டிக்கிரியும்பெற்றார்கள். இந்தப்படி டிக்கிரித்தொகை வசூலிக்கப்படாததினாலே முன்னேற்பட்ட பெந்தகபத்திரஷரத்தின்படியே பெந்தக சொத்து ஏலவிற்று முதலால் தொகை வசூலிக்கப்பட வேண்டுமென வாதிகள் வழக்கிட்டிருக்கிறார்கள். பிரதிவாதிகள் பலவித ஆக்ஷேபனைகள் செய்தார்கள். அவைகளையெல்லாம் கீழ் கோட்டார் தள்ளுபடி செய்து பெந்தக சொத்து ஏலவிற்பனையால் தொகை யுளவடைக்கப்பட வேண்டியதென டிக்கிரி செய்திருக்கிறார்கள். ஆனால் மேற் சொன்ன வெண்ணலை டிக்கிரியின் பாத்திய முழுவதையும் வாதிகள் இழந்துவிட்டபிறகுதான் இந்த பெந்தக டிக்கிரி யுறுதி செய்யப்பட வேண்டுமெனத் தீர்மானித்து விட்டார்கள். இதனால் பிரதிவாதிகள் அடியிற்கண்ட ஆதாரங்களைக் காட்டி அப்பீல்செய்திருக்கிறார்கள்.

சி. பு. கோடு 2-வது ஆர்டர் 2—வது ரூல்படி வாதிகள் புனர் வழக்கிட்டிருப்பது செல்லாதென்பது முதலாவது ஆக்ஷேபனை. இந்தக் கோடு 34-வது ஆர்டர் 14-வது ரூலில் பெந்தகம்பெற்றவன் வெண்ணலைடிகிரி பெற்று அந்தக் கடனுக்காக பெந்தக சொத்தை யேல விற்பனை செய்ய வேண்டியதாகவிருந்தால் அது விஷயமாக தனி வழக்கிட வேண்டுமென்றும், 2-வது ஆர்டர் 2-வது ரூல் வழக்குக்கு தடைசெய்ய மாட்டாதென்றுஞ் சொல்லப்பட்டிருக்கிறது. முன் வழக்கில் பெந்தக பாத்தியம் தேவையில்லையென்று பிராதில் சொல்லிவிட்டதால் அதற்கு விரோதமாக வழக்கிட்டது செல்லாதென பிரதிவாதிகள் ஆக்ஷேபிக்கிறார்கள். அந்த ஸ்டேட்மெண்டு எக்ரிமெண்டாக வைத்துக்கொண்டாலும் அதற்கு எவ்வித பிரதிப்பிரயோஜனமுமில்லாததால் அது செல்லுபடியற்றது. பெந்தக பாத்தியம் வேண்டாமென்று பிராதில் சொன்னதைக்கொண்டு அது பெந்தக பாத்தியதையை இழந்துவிட்டதாக எண்ணப்படக்கூடாது.

சி. பு. கோடு 11-வது செக்ஷன்படி புனர் வழக்கிட வாதிகள் தடைபட்டிருக்கிறார்களென்பது இரண்டாவது ஆக்ஷேபனை. இந்த பிராதிற்கண்ட விஷயங்கள் முன் பிராதில் இஷ்யுவாக ஏற்படவில்லை. இவ்விஷயத்தைப்பற்றி முந்திய பிராதில் பரிகாரங் கேட்கவும், நியாயமிருக்கவில்லை. அதனால் ஷெ. 11வது

செக்ஷனாவது அந்த செக்ஷனிற்கண்ட விளக்கங்களாவது தாவா கேசுக்கு பொருந்தியதாக மாட்டாது.

வாதிகளின் தாவா காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுப் போய்விட்டதென்பது அடுத்த ஆக்ஷேபனை. முந்திய வழக்கில் இந்த பெந்தகக் கடனை பிரதிவாதிகள் ஒப்புக்கொண்டு ஸ்டேட்மெண்டு கொடுத்திருக்கிறார்கள். காலாவதி தோஷம் ஏற்படுவதற்கு முந்தியே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அதில் வட்டி ஜாஸ்தியானதென்றும், புத்திமயக்கத்தினால் ஜாஸ்தி வட்டிக்கு எழுதிக்கொடுக்க நேர்ந்ததென்றும், கக்ஷி சொன்னார்களேயன்றி பெந்தகக்கடன் விஷயமாக எவ்வித ஆக்ஷேபனையுஞ் செய்யவில்லை. அந்த ஸ்டேட்மெண்டில் ஒப்புக்கொண்ட தேதி முதற்கொண்டு புதிய வியாஜ்ஜிய மூலமேற்படுகிறது. இந்த தாவாவுக்குக் காலாவதி தோஷமில்லையென்று கீழ்க் கோர்ட்டார்தீர்மானித்தது மெத்த நியாயமானது குடும்பமானேஜர் இந்தக்கடனை யொப்புக்கொண்டதினால் அதற்கு மற்ற மெம்பர்கள் கட்டுப்பட்டவர்கள். இவ்விதம் ஒப்புக்கொள்ளுதலில் மோசம் கெட்ட யோசனை யிருந்ததாகவும் ருஜூவில்லை.

முன்பெற்ற வெண்ணலை டிகிரியில் பெந்தக சொத்தை யேலவிற்று முதல் செய்யக்கூடாதென்று கண்டிருப்பதால் அதற்கு மாறாக வழக்கிட்டது செல்லாதென்பது அடுத்த ஆக்ஷேபனை. அந்த டிகிரிப்படி பெந்தக சொத்தை யேலவிற்று முதல் செய்யக்கூடாதெனச் சொன்னார்களேயன்றி வேறு வழக்கிடக்கூடாதென்றும் சொல்லவில்லை. அதாவது டிரான்ஸ்வர் அவ் பிராப்பர்ட்டி ஆக்ட்டு 99-வது செக்ஷனுக்கு விரோதமாக நடத்தக்கூடாதெனச் சொன்னார்கள்.

முன் வெண்ணலை டிகிரியிற்கண்ட வட்டிக்கு மேல் ஜாஸ்தியான வட்டி புதிய பிராதிற் கேட்டிருப்பதால் அது செல்லாதென்பது கடைசி ஆக்ஷேபனை. இந்த வட்டி விஷயமாக கீழ் கோர்ட்டிலாவது அப்பீல் மெமோராண்டத்திலாவது சொல்லவில்லை. அதனால் அந்த ஆக்ஷேபனை யங்கீகரிக்க தக்கதல்ல. வாதிகள் பெந்தகபத்திரஷரத்துப்படி வழக்கிட்டிருப்பதால் அது செல்லத்தகுந்தது.

அப்பீல் செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

23. அலகபாத் 429.

சென்னை ஹைகோர்ட்டு.

லெட்டர்ஸ் பேடேண்டு அப்பீல் 1913 வருஷத்திய 59 நம்பர்.

தீர்ப்பு 18-11-13.

ஜட்ஜிகள் மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள் மிஸ்டர் ஸ்பென்ஸரவர்கள்	C. M. அப்பாவுபிள்ளை வாதி அப்பீல்தார் V ஷேக் அமீர்சாகிப் வு. பிரதிவாதிகள்

46 [சிவில் புரிஸீஜர் கோடு.]

கோர்ட்டு காலங்களன்னியில் மற்றக் காலத்தில் வாங்கப்படும் பிராது முதலியன செல்லத்தக்கதல்ல வென்பது.

கோயமுத்தூர் டிஸ்டிரிக்ட் முனிசீப் கோர்ட்டில் வாதி கொடுத்த பிராது கோர்ட்டு காலங்களில்லாத சமயத்தில் கொடுத்ததாக அதைத் தள்ளுபடி செய்து விட்டார்கள். இது விஷயம் இந்த கோர்ட்டு 2-வது அப்பீலிலும் உறுதி செய்யப்பட்டுப்போய் விட்டதால் லெட்டர்ஸ் பேடண்டு ஆக்ட்டுப்படி அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது.

ஆபீஸ் காலங்களில் மட்டில் பிராதுகள் வாங்கும்படி ஹெட் கிளார்க்குக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தக் காலங்களுக்கு பிறகு வாங்கியதை டிஸ்டிரிக்ட் முன்சீப் அங்கீகரித்துக்கொள்ளாத வரையில் அது செல்லத்தக்கதல்ல. இது விஷயமாக 2-வது அப்பீலில் இந்தக் கோர்ட்டு ஜட்ஜியவர்கள் செய்த தீர்மானம் சரியானது; வாதியின் தாவா காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுப் போய்விட்டது. இந்த லெட்டர்ஸ் பேடெண்டு அப்பீல் தள்ளுபடி செய்யப்பட்டது.

23 Indian Cases 360.

அலகபாத் ஹைகோர்ட்டு.

1913 வருஷத்திய சிவில் ரேவிஷன் அப்ளிகேஷன் நம்பர் 77.

தீர்ப்பு 24—1—14

ஜட்ஜ் மிஸ்டர் ஜஸ்டிஸ் டட்பால் அவர்கள்	ஷீயோபாலக் பதாக் மனுதார அப்பீல்தாரன் V சுகதேவி எதிர்கக்ஷிக்காரர்

47. [சிவில் புரிவீஜர் கோடு.]

பிராதில் பரிகார விஷயம் சரியாக எழுதப்படடு பிரார்த்தனை கேட்பதில் அதே விஷயம் பிசகாக எழுதப்பட்டால் அவ்விஷயம் பிரார்த்தனையின்படி டிக்கிரி யேற்பட்ட பிறகும் திருத்திக்கொள்ள லாமென்பது.

சாட்டி, தார்கன் என்ற இருவரும் சகோதரர்கள். இவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு கிராமத்தில்இரண்டணாபங்குஇருந்தது. தார்கன் இறந்தான். அவனுடைய சொத்துக்களை யவர் விதந்து சுகதேவி யடைந்தாள். பிறகு சாட்டி இறந்தான்; அவன் பாக சொத்துக்களை யவன் விதந்து ஹரிதேவி யடைந்தாள். இந்த ஹரி தேவி யிறந்து விட்டதால் இச்சொத்து சாட்டியின் தாயார் சௌ ராசிக்கு கிடைத்தது. இவளும் இறந்து விட்டபடியால் இந்தபாக சொத்தையும் சுகதேவி கைக்கொண்டு அனுபவித்தாள். இதனால் மேற்சொன்ன சாட்டியின் சமீப அநந்தரவார்சுதனக்கு அந்தசாட் டியின் இரண்டணா பாக சொத்து கிடைக்கவேண்டு மென வழக் கிட்டார். இந்த இரண்டணா பங்குக்கு என்ன சர்க்கார் கிஸ்தியோ அதற்கு ஐந்து மடங்கு தொகைக்கு கோர்ட்டு பீஸ் செலுத்திவழ க்கிட்டார். துர் அதிர்ஷடமாய் பிரார்த்தனையில் இரண்டு பைசா பாக மென்று தவறுதலாக எழுதப்பட் டிருந்தது. இந்த பிரார்த்த னையின் படியே இரண்டு பைசா பங்குக்கே தீர்மானித்து விட்டார் கள். இவ்விஷயந் திருத்தப்பட வேண்டுமென மனுக்கொடுத்ததில் தீர்ப்புக்குச் சரியாகவே டிக்கிரி யிருக்கிற தென்றும் தீர்ப்புக்கு மாறுதலாக விருந்தால் மட்டில் டிக்கிரியைத் திருத்தலா மென் றும், மனுவைத் தள்ளுபடி செய்து விட்டார்கள். அதன் பேரில் இந்த ரெவிஷன் மனு கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கேசுக்கு சி. பு. கோடு 152 வது செக்ஷன் பொருத்தமான தென்று அபிப் பிராயப்படுகிறோம். பிராதில் தவறுதலாக எழுதியது கிளார்க்கின் கைப்பிசகு; அதேதவறுதல் தீர்ப்பிலும் டிக்கிரியிலு மேற்பட்டிரு க்கிறது. இரண்டணா பங்கைப் பற்றித்தான் விவாத மென்பது உப யவாதிகளின் எண்ணமேயன்றி வேறல்ல. இதனால் பிராது முதல் டிக்கிரி வரையில் இந்தத் தவறுதலைத் திருத்திக் கொள்ளும்படி தீர்மானிக்கிறோம்.

23 Indian Cases 344

சென்னை ஹைகோர்ட்டு.

, 1913 வருஷத்திய 2-வது அப்பீல் நம்பர் 924.

தீர்ப்பு 17 - 2 - 14.

ஜட்ஜிகள். மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யரவர்கள்	ராகவய்யங்கார் பிரதிவாதி அப்பீல்தார் V ஆதனம்பலம் வாதி எதிர் கக்ஷிக்காரர்

48. [சிவில் புரிவீஜர் கோடு.]

மோச வகையாக டிக்கிரி நிறைவேற்றி யதற்காக நஷ்ட வழக் கிட சி. பு. கோடு 47 - வது செக்ஷன் தடையாகா தென்பதும் மோசடியாக நிறை வெற்றிய தொகையே நஷ்ட பரிகாரமா மென் பதும்.

இராமனுதபுரம் சப் கோர்ட்டு டிக்கிரியின் பேரில் அப்பீல்.

முதல் பிரதிவாதி வாதி பேரில் ஒரு டிக்கிரி பெற்றிருந்தார். அதை யவர் 3 - ம் பிரதிவாதிக்கு டிரான்ஸவர் செய்து கொடுத்து விட்டதால் அந்த 3 - ம் பிரதிவாதியிடம் ரூபா 170 பெற்றுக் கொண்டு டிக்கிரி முழுவதுந் தீர்ந்து விட்டதாக ரசீது கொடுத்து விட்டார். இவ்விதந் தொகை கொடுத்து டிக்கிரி தீர்ந்து போன தைப் பற்றி கோர்ட்டில் சர்டிபை செய்ய வில்லை. இவ்விஷயத்தை யாதாரமாகக் கொண்டு முதல் பிரதிவாதி இந்த டிக்கிரியை நிறை வேற்றி வாதியிடம் ரூபா 400 சொச்சம் வசூலித்து விட்டார். அதனு லித்தொகை நானூறே சொச்சமும் நஷ்ட பரிகாரமாக கிடைக்க வேண்டுமென வாதி வழக்கிட்டார். வாதியின் தாவாப் படியே சப்கோர்ட்டார் தீர்மானித்து விட்டார்கள். இதன் பேரில் முதற் பிரதிவாதி கீழ்க் கோர்ட்டார் தீர்மானம் சி. பு கோடு 41- வது ஆர்டர் 31 - வது ரூலுக்கு விரோதமான தென்றும், முன் நிறைவேறு நடவடிக்கையினால் ரெஸ்ஜூடிகேடா தோஷமேற் பட்டு விட்டதென்றும், டிக்கிரி டிரான்ஸவர் கோர்ட்டாரால் அங் கீகரிக்கப் படாததாலும் வாதி முதற் பிரதிவாதி இவர்களுக்குள் டிக்கிரித் தொகை வரவு செலவு செய்யப்படாததாலும் எவ்வித மோசமும் ஏற்பட வில்லை யென்றும், வாதி பிசகாகக் கொடுத்த ரூபா 170 மட்டில் நஷ்ட பரிகாரமாக வசூலிக்கலாமே யன்றி ஜா ஸ்தி தொகை கிடைக்கமாட்டா தென்றும் முதற் பிரதிவாதிஇந்த

கோர்ட்டில் அப்பீல் செய்திருக்கிறார். மோச வகையாக டிக்கிரி நிறைவேற்றியதற்காக நஷ்ட வழக்கிட்டிருப்பது 47 வது செக்‌ஷன்படி தடையாக மாட்டாது. முதற் பிரதிவாதி வசூலித்த தொகையே நஷ்ட பரிகாரமாக கிடைக்கக் கூடியது. அப்பீல் தள்ளுபடி செய்யப்பட்டது.

23 Indian Cases 405·

சென்னை ஹைகோர்ட்டு.

1913 வருடத்திய சீவில் ரெவிஷன்மனு நம்பர் 889.

தீர்ப்பு. 9—2—14.

ஜட்ஜி. மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்பென்ஸரவர்கள்	சாம்பசிவய்யர் வகையறா மனுதார்கள் V கணபதி அய்யர்-வகையறா-எதிர் மனுதார்கள்

49. [சிவில் புரொஸீஜர் கோடு.]

இண்டர் லோகடரி உத்திரவு விஷயமாக அப்பீல் செய்யக் கூடியதாக விருக்க அது விஷயமாக ரெவிஷன் மனு கொடுக்கக் கூடாதென்பதும், கூட்டுப்பிரிவினை விஷயமாக கொண்டு வரப்படும் வழக்குகளில் விவகார விருத்திக்கு இடமன்னியில் உபயவாதிகளுக்குள்ளும் ஏற்பட்ட எல்லா பத்து வரவுகளும் சேர்த்து வழக்கிடப் படலாமென்பதும்.

· கும்பகோணம் சப் கோர்ட்டார் செய்த உத்தரவின்பேரில் ரெவிஷன் மனு கொடுபட்டிருக்கிறது.

பிராதைத் திருத்தும்படி வாதிகள் மனுக் கொடுத்ததானது ஒரு மில் விஷயமாக ஏற்பட்ட வழக்கை இரண்டு மில்கள் சம்பந்தமாக வழக்குகளாகச் செய்கிறதென்றும், அது வேறு வழக்காகுமென்றும், சப் ஜட்ஜி சொல்லுவதை நாம் ஒப்புக்கொள்ளவில்லை. பிராது 17 (e) பாராவில் நெம்மேலி மில் விஷயமாக கணக்கு பார்க்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருப்பதுடன் மன்னார்குடி மில் விஷயமாகவுங் கணக்குப்பார்க்கவேண்டுமென்று கண்டிருக்கிறது. கணக்கு பார்க்க வேண்டுமென்று கேட்பது பரிகாரங் கொடுபட வேண்டுமென்ற பிரார்த்தனை. நெம்மேலி மில் விஷயமாகபரிகாரம் வேண்டியதில்லை யென்று பிராது 16-வது பாராவிற் சொல்லியது தவறுதல் அது முன்னுக்குப்பின் விரோதமாகவுள்ளது. பிராதின்

மற்றொரு விடத்தில் நெம்மேலி மில் விஷயமாக நஷ்டம் வந்துவிட்டதென்றும், அதிலுள்ள பாத்தியங்களை வாதிகள் 2-ம் பிரதிவாதிக்கு விட்டுவிட்டதாகவுஞ் சொல்லப்பட்டிருக்கிறது. இது 16—வது பாராவுக்கு சமாதானமாக ஒருவாறு சொல்லலாம். ஆனால் அது விஷயமாக ஏற்பட்ட கடன்களுக்கு இவர்கள் பாத்தியஸ்தர்களா யிருக்கிறார்கள். வரவேண்டிய நிலுவைகளுக்கும் பாத்தியமுடையவர்கள். பல விவகாரங்களுண்டாவதைத் தடுப்பதற்காக உபயவாதிகளுக்குள்ளு மேற்பட்ட கூட்டு வியாபார சம்பந்தமான யாவற்று பத்துவரவு கணக்குகளையும் பார்த்து முடிவு செய்ய கோர்ட்டார் கடமைப்பட்டவர்களா யிருக்கிறார்கள். இவர்களுக்குள்ள விவாதங்கள் எல்லாவற்றையும் தீர்ப்பதற்கு பிராதில் அவசியமான திருத்தல்கள் செய்துகொள்ள அனுமதிகொடுப்பது மெத்த நியாயமானது. (இ. லா. ரி. 36 சென்னை 378 தீர்மானத்தை பார்க்க.) பிராது திருத்தல் விஷயமாக செய்யப்படும் உத்தரவுகளின் பேரில் ரெவிஷன் மனுக்கள் கொடுப்பதை ஏற்றுக் கொள்ளக்கூடாதென இந்தக் கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். (1914 M. W. N. 98 தீர்மானத்தைப்பார்க்க.) இந்த வழக்கில் செய்யப்படும் முடிவான டிக்கிரியின் பேரில் அப்பீல்செய்து கொள்ளலாம். அதனால் இந்த மனுவை செலவுடன் தள்ளுபடி செய்கிறோம்.

23 Indian Cases 564

சென்னை ஹைகோர்ட்டு

புல்பெஞ்சு தீர்ப்பு.

1913-வருடத்திய 2-வது அப்பீல் நம்பர் 1972.

தீர்ப்பு 15-1-14.

ஸர் சார்லஸ் அர்னால்ட் வொயிட் Kt. சீவ் ஜஸ்டிஸ் அவர்கள் மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரநாயர் அவர்கள் மிஸ்டர் ஜஸ்டிஸ் ஒல்டுபீல்டவர்கள்	கள்ளிக்கோட்டை மனவிக்கிரம ஸாமரின் ராஜா அவர்கள் வகையறா. பிரதிவாதிகள் அப்பீல்தார்கள் V R. P. அச்சுதமேனன் வாதி எதிர்கக்ஷிக்காரர்.

20. [லிமிடேஷன் ஆக்ட்டு.]

வருஷப்பிரதி வருஷம் கிடைக்கக்கூடிய வரும்படியைப்பற்றி பாத்தியஸ்தாபன வழக்கிட்டாலும் அத்தொகை கிடைக்க வேண்டு

மேன வழக்கிட்டாலும் 131-வது ஆர் டிகிளின்படி 12 வருட காலாவதி தோஷமென்பது.

வாதிக்கு பிரதிவாதிகளால் கொடுபட வேண்டிய ஜீவனாம்ச வரும்படி 8 வருஷங்களுக்கு கொடுபட வேண்டுமென்றும், அதற்கு 100-க்கு 10-வீதம் வட்டியுங் கொடுபட வேண்டுமென்றும் வாதி வழக்கிட்டார். வாதிக்கு 3 வருஷ வரும்படிதான் கிடைக்க கூடியதென்றும் அதற்கு மேற்பட்டது காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுப் போய்விட்டதென்றும் 3 வருஷத்துக்கும் 100-க்கு 10 வீதம் வட்டி கிடைக்கக்கூடியதென்றும், டிஸ்டிரிக்ட் முனிசீப் தீர்ப்பு செய்தார். இது விஷயமாக அப்பீல் செய்யப்பட்டதில் சப் ஜட்ஜியவர்கள் வாதியின் தாவாப்படியே முழுத் தொகைக்குத் தீர்ப்பு செய்துவிட்டார்கள். அதன்பேரில் பிரதிவாதிகள் இந்தக் கோர்ட்டில் அப்பீல் செய்திருக்கிறார்கள்.

வரும்படியின் விகிதங்களைப்பற்றியும் வட்டியைப்பற்றியும் முதலாவது ஆக்ஷேபனை. இது விஷயமாக கீழ் கோர்ட்டார்கள் செய்த தீர்மானம் சரியானதென்றே அபிப்பிராயப்படுகிறோம். காலாவதி தோஷ விஷயமாக இந்தக் கேசை விசாரித்த இரண்டு ஜட்ஜிகளுக்குள்ளும் அபிப்பிராய பேதங்களேற்பட்டு விட்டதால் இது விஷயம் புல்பெஞ்சு தீர்மானித்துக்கு கொண்டுவரப்பட்டிருக்கின்றது.

வருஷப் பிரதிவருஷம் வந்து கொண்டிருக்கிற பாத்தியதையை ஸ்தாபிக்க வேண்டியதற்காக 131 வது ஆர்டிகள் ஏற்பட்டதென்றும், அந்த பாத்தியப்படி தொகை கிடைக்க வேண்டியதை பற்றி ஏற்பட்டதல்லவென்றும், அபிப்பிராயப் படுகிறோம். பாத்திய ஸ்தாபன வழக்குக்கும் தொகைகிடைக்கவேண்டுமென்ற வழக்குக்கும் மெத்த வித்தியாசமுண்டு. ஜீவனாம்ச பாத்தியம் ஸ்தாபிக்கப்பட வேண்டியதற்கும்,ஜீவனாம்சத் தொகை கிடைக்கவேண்டியதற்கும், ஒரேவித காலாவதிதோஷம் ஏற்பட்டிருப்பது போல தாவாவிற் சொல்லும் தொகைக்கு பாத்திய ஸ்தாபன வழக்குக்கும், அத்தொகை கிடைக்க வேண்டுமென்ற வழக்குக்கும் ஒரேவித காலாவதி தோஷமேனிருக்கக் கூடாது. ரிபெரென்ஸிற்கண்ட சென்னை ஹைகோர்ட்டு தீர்மானம் இ-லா-ரி 10 சென்னை 115 தீர்ப்பு சரியானதென்றே அபிப்பிராயப் படுகிறோம். பம்பாய் ஹைகோர்ட்டாரு மிதே விதமாகத் தீர்மானஞ் செய்திருக்கிறார்கள்

(இ. லா. ரி 34 பம்பாய் 349 தீர்மானத்தை பார்க்க) அதனால் தாவா கேசுக்கு 131 வது ஆர்டிகிள் பொருத்தமானதென்றும், வாதியின் தாவாவுக்கு எவ்வித காலாவதி தோஷமுமில்லையென்றும் அபிப்பிராயப் படுகிறோம்

23 Indian Cases 806

சென்னை ஹைகோர்ட்டு.

1913 - ஷூத்திய 236 - நம்பர் உத்திரவின் பேரில் அப்பில்

தீர்ப்பு 4 - 3 - 14

ஜட்ஜிகள்	நாராயண சாஸ்திரிகள் பிரதிவாதி அப்பீல்தார்
மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ் அவர்கள் மிஸ்டர் ஜஸ்டிஸ் எயிலிங் அவர்கள்	V மங்களத்தம்மாள் வாதி எதிர் கக்ஷிக்கார்

21. [லிமிடேஷ ஷக்ட்]

வாதி ஒருவர் பேரில் வழக்கிட வேண்டியதில் அவன் பெயரை பிசகாக பிராதி லெழுதப்பட்டு அது காலாவதி தோஷத்துக்குப் பிறகு திருத்தப்பட்டாலும் வழ்க்கு செல்லுபடியுள்ளதென்பது.

வலங்கமான் முனிசீப் கோர்ட்டு தீர்ப்பின் பேரில் கும்பகோணம் சப் கோர்ட்டில் அப்பீல் விசாரணை நடந்தது. அதன்பேரில் இந்தக் கோர்ட்டில் 2 - வது அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது.

தீர்ப்பு.

வாதி நாராயண சாஸ்திரி பேரில் வழக்கிட வுத்தேசித்து அவருடைய சரியான பெயர் தெரிந்து கொள்ளாமல் வைத்திநாதன் என்று தவறுதலாக எழுதி விட்டதால் இதை திருத்திக் கொள்ளுவது நியாயமானது. இந்த வழக்குக்கு காலாவதி தோஷமில்லை. வாதி வுண்மையில் வைத்திநாதன் பேரில் வழக்கிடுவதாகவும் அவர் தான் உத்திரவு பெற்றவரென்றும் எண்ணி நடவடிக்கை நடத்தினால் பின்பு நாராயணன் பேரில் வழக்கிடவேண்டுமென்று பிராதைத் திருத்திக் கொள்ளுவது காலாவதி தோஷமாகும்.

இது விஷயமாக டிஸ்டிரிகட் முனிசீப் யாதொரு இஷ்ஷியுவும் ஏற்படுத்தவில்லை. சப் ஜட்ஜி சரியான இஷ்ஷியு ஏற்படுத்தி

னார். ஆனால் சாக்ஷி விசாரணை செய்யாமல் தீர்ப்புசெய்துவிட்டார். ரிமாண்டு உத்திரவின் பேரில் பிரவேசிக்காமலே 2-வது இஷ்ஷியுவைப் பற்றின வரையில் சப்ஜட்ஜியின் பயிண்டிங்கை ரத்து செய்கிறோம். அந்த இஷ்ஷியுவைப் பற்றியும் டிஸ்டிரிக்ட் முன்சிப் விசாரித்து முடிவு செய்ய வேண்டியதாக உத்திரவு செய்கிறோம்.

23 Indian Cases 764

பம்பாய் ஹைகோர்ட்டு.

1912 வருஷத்திய முதலாவது அப்பீல் நம்பர் 206.

தீர்ப்பு 16-9-13.

ஜட்ஜிகள்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் ஹிடன் அவர்கள்
மிஸ்டர் ஜஸ்டிஸ் ஷா அவர்கள்

டின்கார் ஹரிகுல்கார்னி பிரதிவாதி அப்பீல்தார்
V
சாகன்லால் நர்சிதாஸ் வாதி எதிர்கக்ஷிக்காரர்

22. [லிமிடேஷனாக்ட்]

வெண்ணலை பத்திரம் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருந்தால் கெடுக்கடந்து 6 வருடங்களுக்குள் வழக்கிடலாமென்பதும் பிற்பட்டு ஏற்பட்ட தஸ்தாவேஜிகளில் முன்னேற்பட்ட கடன் விபரம் எழுதப்பட்டிருந்தால் அது லிமிடேஷனாக்ட் 19-வது செக்ஷன்படி காலாவதி தோஷத்துக்கு பரிகாரமாகு மென்பதும்.

வாதி தனக்கு பிரதிவாதியால் 1897 வருஷம் ஜூன் மாதம் 17-ந்தேதி எழுதிக்கொடுக்கப்பட்ட ஒரு ரிஜிஸ்டரான பெந்தக பத்திரத்தின் பேரில் வழக்கிட்டிருக்கிறார். இந்த பெந்தகக்கடனை 1898 வருஷம் ஜூன் மாதம் 5-ந்தேதி, 1899 வருஷம் ஜூன் மாதம் 24-ந்தேதி, 1900 வருஷம் ஜூன் மாதம் 14-ந்தேதி இந்த மூன்று தவணைகளிற் கொடுப்பதாகக் கண்டிருக்கிறது. இந்த பத்திரத்தில் ஒரே சாக்ஷி தான் போடப்பட்டிருக்கிறது. இந்தப் பத்திர மேற்பட்ட பிறகு வாதிக்குப் பிரதிவாதியால் இரண்டு பிராமசரி நோட்டுகள் 1903 வருஷம் ஆகஸ்டு மாசம் 24-ந்தேதி, 1906 வருஷம் ஆகஸ்டு வாசம் 11-ந்தேதிகளில் எழுதிக்கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் பிரதிவாதி ஷை பெந்தகக்கடனை யொப்புக்கொண்டிருக்கிறார். இந்தப் பிராது 1910 வருஷம் ஆகஸ்டு

மாதம் 6-ந்தேதி கொடுபட்டிருக்கிறது. வாதி தன்னுடைய பிராதில் தாவா தொகை பெந்தக சொத்து ஏல விற்பனையால் கிடைக்க வேண்டுமென்றும், அவ்வித பரிகாரம் கிடைக்கக்கூடாததாகவிருக்கும் பட்சத்தில் ஆளைப்பொறுத்தாவது டிக்கிரி செய்யும்படிக்கும் கேட்டிருக்கிறார். தாவா பெந்தக பத்திரத்தில் ஒரே சாக்ஷிதான் போட்டிருப்பதால் அது செல்லத்தக்கதல்லவென்றும், வாதியின் தாவாவுக்கு காலாவதி தோஷமில்லையென்றும், வாதியின் தாவாப்படி ஆளைப்பொறுத்து கீழ் கோர்ட்டார் டிக்கிரி செய்து விட்டார்கள்.

தாவா கேசுக்கு லிமிடேஷனாக்ட் 66-வது ஆர்டிகிள் பொருத்தமானதேயன்றி 116-வது ஆர்டிகிள் பொருத்தமானதல்லவென்றும், பிராமிசரி நோட்டுகள் காலாவதி தோஷத்துக்கு 19 வது செக்ஷன்படி பரிகாரமாக மாட்டாதென்றும், ஆளைப்பொறுத்து டிக்கிரி செய்தது சட்ட விரோதமானதென்றும், பிரதிவாதி இந்தக்கோர்ட்டில் அப்பீல் செய்திருக்கிறார். இவர் தான் சொன்ன முதலாவது கக்ஷிக்கு ஆதாரமாக இ. லா. ரி. 7 அலகாபாத் 502, 14 பம்பாய் 377 இந்தத் தீர்மானங்களை எடுத்துக்காட்டிப் பத்திரம் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருந்த போதிலும், 66-வது ஆர்டிகிள்படி 3 வருட காலாவதி தோஷமென்றும், 116-வது ஆர்டிகிள் தாவா கேசுக்கு பொருத்தமானதல்லவென்றுங் கக்ஷிபாடுகிறார். தாவாப் பத்திரத்தின் பேரில் தொகை கிடைக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருந்த போதிலும், அது உடன்படிக்கைக்கு விரோதமாக நடந்ததினாலுண்டாகிய நஷ்டங்களுக்கு வழக்கிடுவதாகுமென்றும், அந்தப் பத்திரம் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருந்தால் 116 வது ஆர்டிகிள் பொருத்தமானதென்றும், இவ்விந்தியா ஹைகோர்ட்டுகளில் பல தீர்மானங்களேற்பட்டிருக்கின்றன. (இ. லா. ரி. 31 சென்னை 452, 18 கல்கத்தா 506, முதலிய தீர்மானங்களைப் பார்க்க.) இவை பிரிவிகவுன்ஸல் தீர்மானத்தாலும் (19-வது இந்தியன் அப்பீல் 234-வது, இ. லா. ரி. 20 கல்கத்தா 79) உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. அதனால் தாவா கேசுக்கு 116-வது ஆர்டிகிள் பொருத்தமானதென்று தீர்மானிக்கிறோம்.

பிராமசரி நோட்டுகளின் வாசகங்களினால் லிமிடேஷனாக்ட்டு 19-வது செக்ஷன்படி பத்திரக்கடனை யொப்புக்கொண்டதாகிறது. பத்திரத்தொகை பெந்தக சொத்து ஏலவிற்று முதலினாலுள்ளவடையாதிருந்து பாக்கி யேற்பட்டால் மட்டி ஆல்ளைப்பொறுத்துப்போக

வேண்டுமென்று கண்டிருப்பதால் பத்திரஷரத்துப்படி சொத்தைத் தொடர்ந்து தொகை வசூலிக்க முடியாமற் போய்விட்டபடியால் வேறெவ்விதத்திலுந் தொகைவசூலிக்கக்கூடாதென அப்பீல்தாரின் வக்கீல் கக்ஷிபாடுகிறார். பத்திரத்தில் பத்திரத்தொகையை வட்டியுடன் திருப்பிக்கொடுப்பேனென்று கண்டிருக்கிறது. இதனால் பாக்கித் தொகைக்கு மட்டில் ஆளைத்தொடருகிறதென்று பிந்தி சொல்லிய வாசகம் முன் சொன்னதற்குத் தடைசெய்யமாட்டாது; இதனால் அப்பீலைச் செலவுடன் தள்ளி கீழ்கோர்ட்டு டிக்கிரியை யுறுதி செய்கிறோம்.

23 Indian Cases 353.

பிரிவி கவுன்ஸில்.

அலகாபாத் ஹைகோர்ட்டு தீர்ப்பின் பேரில் அப்பீல்

தீர்ப்பு 6-2-14.

ஜட்ஜிகள்
லார்ட் ஷா அவர்கள்
லார்ட் மோல்டன் அவர்கள்
மிஸ்டர் அமீர் ஆலி அவர்கள்

முசாமத் பக்டவார் பீகம். அ. வாதி
V
முசமத் ஹூஸெனி கானம் ஆ.
அ. பிரதி வாதிகள்.

23. [லிமிடேஷ னக்ட்.]

அடமானசொத்து மீட்கப்படக் குறிப்பிட்ட காலம் ஏற்பட்டிருந்தால் அந்தத் தேதி முதல் காலாவதி தோஷம் பார்க்க வேண்டுமென்பதும், அடமான அசல் வட்டித் தொகைகள் உள வடைந்தவுடனே சொத்தைவிட்டுவிட வேண்டுமெனத் தனிமையானஉடன் படிக்கை ஏற்பட் டிருந்தால் அவ்விதந் தொகை உளவடைந்த தேதி முதல் காலாவதி தோஷம் பார்க்க வேண்டியது அவசிய மென்பதும்.

ஹூசேனி கானம் என்ற வாதி தன்னுடைய தகப்பன் ஆகா பாடி ஆலி என்பவரும், மற்றொரு ஆமனலி என்பவருஞ் சேர்ந்து கான்பூர் ஜில்லாவிலுள்ள 12 கிராமங்களை ஆடாவுல்லாகான் என்பவருக்கு 1830ம் வருஷம் ஜனவரி மாதம் 6 ந் தேதியில் கண்டிஷனல் கிரய மென்னும் பெந்தகம் வைத்ததாகவும், அச்சொத்துக்கள் தங்களுக்குக் கிடைக்கவேண்டுமென்றும், வழக்கிட்டார். மற்ற வாதிகள் இந்த உசேனி கானம் என்பவருடை பாத்தியதைகளை சாசனம் பெற்றவர்கள். மேற் சொன்ன ஆடாவுல்லாகானுடைய

வார்சு அலி வுஸ்ஸென்கான் பிரதிவாதியாகச் சேர்க்கப் பட்டார். அவர் வியாஜ்ஜிய மத்தியி லிறந்து விட்டபடியால் அவருடைய விதந்து பக்டவார் பீகம், வார்சாக இந்த அப்பீல் செய்திருக்கிறாள். மற்றப் பிரதிவாதிகள் அடமானதாரிடத்திலும் அவருடைய வார்சுகளிடத்திலும் சாசனம் பெற்றவர்கள்.

இந்த அடமானப் பத்திரம் வெளிக்கு வரவில்லை. கலெக்டருடைய கோர்ட்டில் 1830ம் வருஷம் செப்டம்பர் மாதம் 18ந் தேதி நடந்த நடவடிக்கையினால் உபயவாதிகளுக்குள்ளும் ஏற்பட்ட உடன்படிக்கை தெரிகிறது. வாதியின் தகப்பனுக்கு எழுதிக்கொடுக்கப்பட் டிருக்கும் உடன் படிக்கையில் சாசனத் தொகையை ஒன்பது வருட கெடுவுக்குள் கொடுத்து விட்டால் சாசனம் ரத்தாகி விடுவதாகக் கண்டிருக்கிறது. இந்த வழக்கு 1899ம் வருஷம் ஜனவரி மாதம் 6 ந்தேதி கொண்டுவரப் பட்டது. இந்த உடன் படிக்கை யேற்பட்ட தேதி முதல் 60 வருடங்களுக்குள் வழக்குக் கொண்டு வரப்படாததால் வாதிகளின் தாவா காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுப் போய் விட்டதாக சப் ஜட்ஜி தீர்மானித்து விட்டார்கள். இதன் பேரில் அப்பீல் செய்யப்பட்டதில் அடமானதாரின் வார்சுகளிட மிருந்த 7 கிராமங்களைப் பற்றின வரையில் வாதிகளின் தாவாவுக்குக் காலாவதி தோஷமில்லையென்றும், அவர்களால் பராதீனஞ் செய்யப்பட்ட 5 கிராமங்களைப்பற்றின வரையில் காலாவதி தோஷமேற்பட்டு விட்ட தென்றும் ஹைகோர்ட்டார் தீர்மானித்தார்கள். அதனால் உபயவாதிகளும் இந்த போர்டில் அப்பீல் செய்து கொண்டிருக்கிறார்கள்.

ஒன்பது வருடங்களுக்குள் எந்த காலத்திலாவது சொத்து மீட்கப்படலா மென்பது எதிர் நடைச் சீட்டாகிய உடன்படிக்கையின் அர்த்தமாக விருக்கும் பட்சத்தில் வாதிகளின் தாவா காலாவதி தோஷத்தால் பாதிக்கப்படும். அந்த ஒன்பது வருடங்கடந்த பின்பு தான் மீட்கப்பட வேண்டு மென்று அர்த்தமாகும் பட்சத்தில் வாதிகளின் தாவாவுக்கு காலாவதி தோஷமில்லை. உடன்படிக்கையில் ஒன்பது வருடங்களுக்குள் என்று சொல்லி யிருப்பதின் அர்த்தம் விளங்க வில்லை. வாதிகளின் பிராது 2-வது பாராவில் தாவா நிலத்தின் வரும்படியில் கவர்ன்மெண்டு கிஸ்தி, தொகை வசூலிக்கும் சிப்பந்திச் சம்பளம், அடமானத் தொகையின் வட்டி இவைகளை கழித்துக் கொண்டு பாக்கியை அடமானத் தொகைக்கு உளவடைத்துக் கொண்டு வந்ததாகவும், அந்தப்படி செய்து

வந்ததில் 1245 ம் பசலி முடிவுடன் அடமானக் கடன் தீர்ந்து விட்ட தென்றும், பாங்கிவரும்படிவாதிகளுக்குகிடைக்கவேண்டிய தென்றும் கண்டிருக்கிறது. இந்தக்கணக்குப் பார்க்கும்ப்க்ஷத்தில் 1838 ம் வருஷத்துடன் அடமானக்கடன்தீர்ந்துவிட்டது. அந்தத் தேதிமுதல் பிரதிவாதிகள் தாவா சொத்துக்களை பாத்தியமன்னி யில் அனுபவிக்கிறதாகவே யேற்படுகிறது. ஆகைபால் வாதிகளின் தாவா எந்த விதத்திலும் காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட் டுப் போய்விட்டது. இந்தப்படி தீர்மானிக்க மாக்ஷிமைதங்கிய சக் கரவர்த்தி யவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

அப்பீல் ஏற்றுக்கொள்ளப்பட்டது; கிராஸ் அப்பீல் தள்ளு படி செய்யப்பட்டது.

1914 M. W. N. 411.

சென்னை ஹைகோர்ட்டு.

1911 ஷூத்திய 2-வது அப்பீல் நம்பர் 1973.

புல் பெஞ்சு தீர்ப்பு 10—12—13.

ஜட்ஜிகள். சீவ் ஜஸ்டிஸ் வொயிட்துரையவர்கள் ஜஸ்டிஸ் சங்கரநாய ரவர்கள் ஜஸ்டிஸ் ஒல்பீல்டவர்கள்.	பெரிய அய்யா அம்பலம் வு. அப்பீல்தார்கள் (2,3 பிரதிவாதிகள்) V

ஷண்முக சுந்தரம் வு.
எதிர் கக்ஷிக்காரர்கள் (1 வாதியும்
2-ம் வாதியின் வார்சும்)

24. [லிமிடேஷனுக்ட்]

பெந்தகம் வைத்தவனிடமிருந்தாவது போக்கிய அடமானதார னிடமிருந்தாவது அன்னியன் பெந்தகசோத்தை ஆக்கிரமித்துக் கட் டிக்கோண்டால் அது விரோதமான பாத்தியதை ஆகுமா ஆகாதா வேன்பது ஒவ்வோரு கேசிலுமுள்ள ருஜூ அம்சத்தைப் போறுத்த தேன்பது.

இராமனதபுரம் டிஸ்டிரிக்ட் கோர்ட்டு தீர்ப்பின்பேரில் அப் பில் போக்கிய அடமானதாரன் வசமிருந்த வீட்டை 2-3 பிரதிவா திகள்1898ம்வருஷத்தில்ஆக்கிரமித்து கட்டிக்கொண்டார்கள். அச் சொத்தை மீட்கும்படியான கெடு1917ம்வருஷ. இந்த2-3பிரதிவாதி கள் தாவா வீட்டை 1908ம் வருஷத்தில் விருத்திசெய்து கட்டிய

தாகவும், இது விஷயமாக வாதி அவர்களைக் கேட்டதின் பேரில் இவர்கள் அச்சொத்தில் வாதிக்குள்ள பாத்தியதைகளை மறுத்த தாகவும், அதனால் தாவா வீட்டில் தனக்குள்ள பாத்தியதையை ஸ்தாபித்துக்கொள்ள வேண்டியதென்றும், 1909ம் வருஷத்தில் வழக்கிட்டிருக்கிறார். வாதி தன்னுடைய பாத்தியதையை பிரதி வாதிகள் மறுத்தகாலத்தை அதாவது 1908ம்வருஷத்தில் வியாஜி ஜிய மூல மேற்பட்டிருப்பதாகச் சொல்லி யிருக்கிறார்.

வாதிக்குத் தெரிந்து 1898ம்வருஷம்முதற்கொண்டே விரோ தமான பாத்தியதையுடன் தாவா சொத்துக்களை யனுபவித்து வருவதாகவும், வாதியின் பாத்தியதையை 1898ம் வருட முதற் கொண்டே மறுத்துவருவதாகவும் அந்த 1898 ம் வருட முதல் 6 வருடங்களுக்கு மேற்பட்டும் வாதி மேஜரான தேதிக்கு 3 வரு டங்களுக்கு மேற்பட்டும் இந்த தாவா செய்திருப்பதால் வாதியின் தாவா காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுப் போய்விட்ட தாக 2—3 பிரதிவாதிகள் கக்ஷியாடினார்கள்.

இந்தக் கேஸ் ஹைகோர்ட்டில் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள் ஜஸ்டிஸ் டியாப்ஜி அவர்கள் இவர்கள் முன்பாக விசாரணைக்கு எடுக்கப்பட்டதில் இதைப்போன்ற கேஸ்களில் இந்தக் கோர்ட்டா ருடைய தீர்மானங்கள் 21 மெட்ராஸ் லாஜர்னல் 397, 21 மெட் ராஸ் லாஜர்னல் 468 இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று ஒற்றுமை யில்லாமல் வெவ்வேறுவிதமாக அபிப்பிராயங்கொண்டிருப்பதால் அடியிற்கண்ட விஷயங்கள் புல்பெஞ்சுக் கோர்ட்டாருடைய விசார ணைக்கு கொண்டு வரப்பட்டது.

(1) சுத்த பெந்தகம் வைத்தவன் வசமிருந்தாவது போக்கிய அடமானதாரன் வசமிருந்தாவது அன்னியன் அந்த பெந்தக சொத்தை ஆக்கிரமித்துக் கட்டிக்கொள்ளுவானாகில், முதற்சொ ன்ன கேசில் சுத்த பெந்தகம் பெற்றவனுக்கு விரோதமான அக் கரையுடன் அனுபவிக்கிறதாகுமா, இரண்டாவது கேசில் சொத் தை ஸ்வாதீனஞ் செய்துகொள்ள பாத்தியமற்ற சுத்த பெந்தகம் வைத்தவனுக்கு விரோதமான அக்கரையுடன் அனுபவிக்கிற தாகுமா?

(2) ஒருவனுடைய பாத்தியதையை மற்றொருவன் மறுக்கும் ஒவ்வொரு தேதி முதற்கொண்டும் வெவ்வேறு வியாஜ்ஜிய மூலங் களுண்டா?

அபிப்பிராயம்.

ஜஸ்டிஸ் சங்கரநாயரவர்கள்:—போக்கிய அடமானம் பெற்றவன் வசமிருந்து அன்னியன் அச்சொத்தை ஆக்ரமித்துக் கட்டிக்கொண்டால் பெந்தகம் வைத்தவனுக்கு எந்தத்தேதி முதற்கொண்டு காலாவதி தோஷம் ஏற்படுமென்பதைப்பற்றி இந்தக் கோர்ட்டார் இ-லா-ரி-2 சென்னை 226 ல் தீர்மானித்திருக்கிறார்கள். இந்தக்கேசில் பெந்தகசொத்து போக்கிய அடமானதாருடைய வார்சுகள் வசமிருந்தது. இச்சொத்து கவர்ன்மெண்டாருக்குச் சொந்தமானதென அவர்கள் பாத்தியங்கொண்டாடி விசாரணைசெய்து அது அவர்களுக்குச் சொந்தமானதென்றே தீர்மானித்து அவர்கள் பட்டாவுங்கொடுத்துவிட்டார்கள். அந்த விசாரணையில் போக்கியம் வைத்தவனும் சம்பந்தபட்டவன். இவரிச்சொத்து மீட்கப்படவேண்டுமென வழக்கிட்டபோது இவருடைய தாவா காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுப் போய்விட்டதாகத் தீர்மானித்துவிட்டார்கள். பெந்தகசொத்து தனக்குச் சொந்தமென்று பாத்தியங்கொண்டாடும் ஒருவன் அச்சொத்தை 12 வருடங்களுக்கு மேற்பட்டகாலம் அனுபவிக்காத வரையில் உண்மையாக சொத்துக்குடையவனுடைய பாத்தியம் காலாவதி தோஷத்தால் பாதிக்கப்படமாட்டாதென இந்தக்கோர்ட்டார் இ-லா-ரி 7 சென்னை 26 ல் தீர்மானித்திருக்கிறார்கள். போக்கிய சொத்து கவர்ண்மெண்டாருக்குச் சொந்தமானதென்று அவர்கள் தீர்மானிப்பது மட்டில் போதுமானதல்ல. இது விஷயம் போக்கியம் வைத்தவனுக்குத் தெரிந்திராவிட்டால் இவருடைய பாத்தியதைக்கு விரோதமாக அனுபவிப்பதாக எண்ணப்படக் கூடாதென இந்தக் கோர்ட்டாரே தீர்மானித்திருக்கிறார்கள். (இ - லா - ரி 10 சென்னை 189 தீர்மானத்தைப்பார்க்க) அடமானத்தொகை கொடுபடுகிறவரையில் போக்கிய சொத்தை ஸ்வாதீனஞ் செய்துகொள்ளும்படியான பாத்தியம் போக்கியம்வைத்தவனுக்கு இல்லையென்றும், அதனால் அன்னியன் அனுபவிப்பது விரோதமான அக்கறையுடன் அனுபவிக்கிறதாக மாட்டாதென்றும், ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யரவர்களால் தீர்மானமேற்பட்டிருக்கிறது (இ-லா-ரி 21 சென்னை 153 பக்கம் 165 தை பார்க்க).

இந்தச் சென்னை தீர்மானங்களின்படி போக்கிய அடமானதாரின் வசமுள்ள பெந்தகசொத்தை அன்னியன் ஆக்கிரமித்துக் கட்டிக்கொள்ளும் பட்சத்தில், விரோதமானபாத்தியம் பெந்தகம்

வைத்தவனுக்கு உண்டா இல்லையா வென்பது பெந்தகம் வைத்தவனும் அப்புறப்படுத்தப்பட்டானா வென்பதைப் பொறுத்ததாகவிருக்கிறது. போக்கியதாரன் அப்புறப்படுத்தப்பட்டான்என்பது மட்டில் போதுமானதல்ல. போக்கியம் வைத்தவனுக்கும் விரோதமாக அனுபவிக்கிறான் என்ற விபரம் போக்கியம் வைத்தவனுக்கு நன்றாகத் தெரிந்திருக்கவேண்டும். சொத்துக்கு சொந்தக்காரன் அப்புறப்படுத்தப்பட்டால் அவன் தன்னுடைய பாத்தியதையைப் பன்னிரண்டு வருஷங்களுக்குள் ஸ்தாபித்துக் கொள்ளவேண்டும். போக்கிய அடமானதாரன் போக்கிய சொத்தினின்றும் அப்புறப்படுத்தப்பட்டால்அவன்பாத்தியதையின்பேரில் அனுபவிக்கவில்லையென்று ஊகிக்க சட்டமில்லை. அவன் போக்கியதாரனிடமிருந்து பாராதீனம் பெற்றிருக்கலாம். அல்லது அவனுடைய பாத்தியதையை சாசனம் பெற்றிருக்கலாம். இதனால் பிரதிவாதி தான் சொத்துக்குடையவனுடைய அதாவது பெந்தகம் வைத்தவனுடைய பாத்தியதைக்கு விரோதமாக அனுபவிப்பதாக ருஜுவிடவேண்டும்.

இந்த ரிபெரென்ஸுக்கு அடியிற்கண்ட பதில் சொல்லுகிறோம். விரோதமான பாத்தியம் உண்டு அல்லது இல்லையென்பது ஒவ்வொரு கேசிலுமுள்ள ருஜுவைப் பொறுத்ததாகவிருக்கிறது. இந்த ரிபெரென்ஸில் அன்னியன் 1898 முதல் 1908 ம் வருடம் வரையில் அனுபவித்தது விரோதமான பாத்தியதையுடன் அனுபவித்ததாக மாட்டாது. 1908ம் வருடம் முதற்றான் விரோதமான பாத்தியமுண்டாகிறது. பெந்தகம்வைத்தவன் வசமுள்ள பெந்தகசொத்தை அன்னியன் ஆக்கிரமித்து அனுபவிப்பது பெந்தகம் பெற்றவனுடைய பாத்தியதைக்கு விரோமாக அநுபவிப்பதாகுமா மாட்டாதாவென்பது இந்தக்கேசில் ஏற்படாததால்அதுவிஷயமாக நாம் யாதொரு அபிப்பிராயமுஞ் சொல்லவில்லை. வியாஜ்ஜிய மூலம் 1908ம்வருடமுதற்கொண்டு ஏற்பட்டிருப்பதால் வாதியின் பாத்தியதைகளை மறுக்கும் ஒவ்வொரு காலத்திலும் வெவ்வேறு வியாஜ்ஜியமூலமுண்டா இல்லையா வென்பதைப்பற்றி நாம்சொல்லவேண்டியதில்லை.

சீவ்ஜஸ்டிஸ்:—நான் ஒத்துக்கொள்ளுகிறேன்.

ஜஸ்டிஸ் ஓல்டு பீல்ட் அவர்கள்:—எனக்கும் சம்மதம்.

1914 M. W. N. 417.

பிரிவி கவுன்ஸல்

அலகாபாத் ஹைகோர்ட்டு தீர்ப்பின் பேரில் அப்பீல்

தீர்ப்பு 7 - 4 - 14.

ஜட்ஜிகள் லார்ட் மௌல்டன் அவர்கள் ஸர் ஜான் எட்ஜ் அவர்கள் மிஸ்டர் அமீர் ஆலி யவர்கள்	சௌத்திரி அப்டல் மாஜிட் அப்பீல்தாரன் V ஜவாகிர்லால் ஆ. எதிர் கக்ஷிக்காரர்கள்

25. [லிமிடேஷ ஞக்ட்]

அப்பீல் நடவடிக்கைகள் நடத்தத் தவறிக் கேஸ் தள்ளுபடி செய்யப்படும் பட்சத்தில் அந்தத் தேதி முதல் காலாவதி தோஷம் பார்க்கக் கூடா தென்பதும், பெந்தகடிக்கிரிநிறைவேற்றப்படக் காலாவதி தோஷமும்.

1868 ம் வருஷம் செப்டம்பர் மாதம் 3 ந்தேதி எழுதிக் கொடுக்கப்பட்ட பெந்தகபத்திரப்படி அப்பீல்தார் பேரில் 1889-ம் வருஷத்தில் அலகாபாத் சப் கோர்ட்டில் நடவடிக்கை நடத்தப் பட்டதில் 1890 ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 12-ந்தேதிக்குள் பெந்தகத் தொகை கொடுபடா விட்டால் அந்த பெந்தக சொத்துக்கள் ஏலவிற்று முதல் செய்யப்படு மென்பதாக 1890 ம் வருஷம் மே மாதம் 12 ந்தேதி டிக்கிரி செய்தார்கள். இதன் பேரில் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்யப்பட்டதில் கீழ்கோர்ட்டார் டிக்கிரியை யுறுதி செய்து அப்பீலை 1893 ம் வருஷம் ஏப்ரல்மாதம் 8 ந்தேதி தள்ளுபடி செய்து விட்டார்கள். இது விஷயமாக பிரிவி கவுன்ஸலில் அப்பீல்செய்ததில் நடவடிக்கை நடத்தப்படாமல் அது 1901ம் வருஷம் மே மாதம் 13-ந்தேதி தள்ளுபடி செய்யப் பட்டது.

இதன் பிறகு பெந்தக டிக்கிரி பெற்றவன் இந்தடிக்கிரிஉறுதி செய்யப்பட வேண்டுமென சப் கோர்ட்டில் 1909 ம் வருஷம் ஜூன் மாதம் 11 ந்தேதி மனுக்கொடுத்தார். அப்பீல்தாரனுகிய பிரதிவாதி இந்த டிக்கிரிக்கு காலாவதி தோஷம் ஏற்பட்டுவிட்ட தென கக்ஷிபாடினுர். இவருடைய ஆக்ஷேபனைகள் கீழ் கோர்ட்டார்களிருவராலும் தள்ளுபடி செய்யப்பட்டதின் பேரில் இந்தக் கோர்ட்டில் அப்பீல் செய்திருக்கிறுர்.

பிரவிகவுன்ஸலில் பிரதிவாதியின் அப்பீலை 1901 ம் வருஷம் மே மாதம் 13 ந்தேதி தள்ளுபடி செய்து விட்டதால் அந்தக்

தேதிமுதல் 12 வருடங்களுக்குள் இந்த டிக்கிரி நிறைவேற்றப்பட்டிருப்பதால் லிமிடேஷ ஞக்ட்டு 180 வது ஆர்டிகிளின்படி இந்த டிக்கிரிக்கு எவ்வித காலாவதி தோஷமு மில்லை யென்பது வாதியுடையவும் கீழ் கோர்ட்டார்களுடையவும் தீர்மானம். அப்பீல் நடவடிக்கை நடத்தப்படாமல் தள்ளுபடி செய்யப்படும் பட்சத்தில் அது கீழ் கோர்ட்டாருடைய டிக்கிரியை யுறுதி செய்ததாக மாட்டாது. அப்பீல் நடவடிக்கை நடத்தத் தவறியது அப்பீல் நடவடிக்கை நடத்தப்படாம லிருந்தால் எந்த ஸ்திதியோ அதே ஸ்திதி தான். அதாவது நிறைவேற்றப்பட வேண்டிய டிக்கிரி 1893 ம் வருஷம் ஏப்ரல் மாதம் 8-ந்தேதி யுள்ள அலகாபாத் ஹைகோர்ட் டிக்கிரியே யன்றி வேறல்ல. இந்த டிக்கிரி நிறைவேற்றப் படாமல் தடை செய்யப்படவில்லை. வேறு டிக்கிரியிற் கலந்து விட்டதென்று சொல்வதற்குப் பிரிவிகவுன்ஸலில் எவ்விதடிக்கிரியும்ஏற்படவில்லை. எந்த விதம் பார்த்தாலும் இந்த டிக்கிரி நிறைவேற்றப்பட வேண்டியதற்கு மூன்று வருடகாலாவதி தோஷமே யன்றி அதற்குமேற்பட்டதல்ல. எதிர்கட்சிக்காரர்களின் பாத்தியம் காலாவதி தோஷத்தால் பாதிக்கப் பட்டுப் போய் விட்டது. ஆகையால் இந்த அப்பீலை யங்கீகரித்து 1909 ம் வருஷம் ஜூன் மாதம் 11 ந்தேதியுள்ளநிறைவேற்று மனுவைத் தள்ளும்படி மாக்ஷிமை தங்கிய சக்கரவர்த்தியவர்களுக்கு வணக்கமாகத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

அப்பீல் அங்கீகரிக்கப் பட்டது.

23. Indian Cases 649.

கல்கத்தா ஹைகோர்ட்டு.

1911ளுத்திய 2-வது அப்பீல் நம்பர் 3566.

தீர்ப்பு 31—3—14.

ஜட்ஜிகள் மிஸ்டர் ஜஸ்டிஸ் சாக்ஸ் அவர்கள் மிஸ்டர் ஜஸ்டிஸ் இமாம் அவர்கள்	சாட்டேர்தாரி சவுத்திரி ஆ. பிரதிவாதி அப்பீல்தார் V கயாபிரசாத்சிங் ஆ. வாதிகள் ஆ. எதிர்கக்ஷிக்காரர்கள்

23. [டிரான்ஸ்பர் அவ் பிராபர்டி ஆக்டு]

முதல் பெந்தகதாரன் தன்னுடைய கடனுக்காக அச்சொத்தை ஏலத்திலெடுத்து விட்டால் அவருக்குத்தான் சொத்து ஸ்வாதீனங்

கிடைக்கக் கூடுமென்பதும், இரண்டாவது பெந்தகதாரனுக்கு அது கிடைக்க மாட்டாதென்பதும்.

வாதிகளுக்கு தாவா சொத்துக்கள் 1896ம் வருஷம்செப்டம்பர் மாதத்தில் பெந்தகம் வைக்கப்பட்டது. தொகை கொடுபட வேண்டிய கெடு 1897ம் வருஷம் மேமாதம். 1907ம் வருஷம்ஜூன் மாதம் வாதிகள் வழக்கிட்டு 1907ம் வருஷம் செப்டம்பர் மாதம் 26-ந்தேதி டிக்கிரி பெற்று நிறைவேற்றி 1909ம் வருஷத்தில் அச்சொத்தை ஏலத்திலெடுத்தார்கள். பிரதிவாதிகளின் பெந்தகம் 1899ம் வருஷத்திலேற்பட்டது. அவர்கள் தங்கள் பெந்தக பத்திரத்தின் பேரில் வழக்கிட்டு 1906ம் வருஷம் ஜூன் மாதம் 18-ந்தேதி டிக்கிரி பெற்று நிறைவேற்றி 1907ம் வருஷம் செப்டம்பர் மாதம் 17-ந்தேதி ஏலத்திலெடுத்தார்கள். இவர்கள் பேரால் பட்டாவாகி சொத்து ஸ்வாதீனமாகி விட்டது. வாதிகள் பின் பெந்தகதாரர்களாகிய பிரதிவாதிகளைத் தங்கள் வழக்கில் கக்ஷிக்காராராகச் சேர்க்கவில்லை. வாதிகள் தாங்களெடுத்த ஏல சர்ட்டிபிகேட்டின் படி தங்களுக்கு சொத்து ஸ்வாதீனமாக வேண்டுமென்றும் அது கிடைக்கக்கூடியதாக வில்லாவிட்டால் தமக்குச் சேரவேண்டிய கடனை பின் பெந்தகதாரர்களாகிய பிரதிவாதிகள் கொடுத்து மீட்க வேண்டியதென்றும் பிராது செய்தார்கள். கீழ் கோர்ட்டார்களிருவரும் வாதிகளுக்கு அனுகூலமாகவே தீர்மானஞ் செய்து விட்டார்கள்.

பின் பெந்தகதாரர்களாகிய பிரதிவாதிகள் வாதிகளின் பிராதில் தாங்கள் கக்ஷிக்காரர்களாக சேர்க்கப்படாமையினாலே வாதிகளின் டிக்கிரிக்குத் தாங்கள் கட்டுப்பட்டவர்களல்லவென்றும் வாதிகள் இனிப் புதிதாகத் தொகை கிடைக்க வேண்டுமென வழக்கிட மட்டில் பாத்தியமுடையவர்களென்றும், அவ்வழக்கிடக் காலாவதி தோஷ மேற்பட்டுவிட்டதென்றும், 1. M. W. N. 165 தீர்மானத்தை யநுசரித்துக் கட்சியாடுகிறார்கள். இந்தத் தீர்மானம் இ. லா. ரி. 32 கல்கத்தா 891, 11, C. W. N. 403 இந்த தீர்மானங்களுக்கு விரோதமானவை. வாதிகள் தங்கள் பத்திரத்தின் பேரில் வழக்கிடும்போது தான் பிரதிவாதிகள் ஏலத்திலெடுத்திருக்கிறார்கள். இந்த அப்பீல் செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

23 Indian cases 791.

லோயர்பர்மா சீவ்கோர்ட்டு.

1912ம் வருஷத்திய ஸ்பெஷல் இரண்டாவது அப்பீல் நம்பர் 76.

தீர்ப்பு 22—7—13

ஜட்ஜி மிஸ்டர் ஜஸ்டிஸ் பார்லெட் அவர்கள்	ஸ்வேடாலி - அப்பீல்தாரன் V எஸ்நாலி ஆ எதிர்கக்ஷிக்காரர்

24. [டிரான்ஸ்வர் அவ்பிராபர்ட்டி ஆக்ட்]

ஒருவன் தனது கடன்காரனை மோசஞ் செய்வதற்காகத் தன்னுடைய சொத்துக்களைப் பெயரிரவலாக மற்றொருவர் பேரால் சாசனஞ் செய்துவைத்து, பின்னால் அச்சொத்து தனக்குக் கிடைக்க வேண்டுமென வழக்கிடுவோனாகில் அவன் தனது கடன்காரர்களை மோசஞ்செய்யவில்லையெனத் திருப்திகரமாக ருஜுப்பிக்காதவரையில் அச்சொத்து அவருக்கு கிடைக்கதில்லையென்பது.

எதிர்கக்ஷிக்காரர்கள் தங்களுக்கிருந்த கடனிம்சைகளினிமித்தம் அவைகளை நிவர்த்திப்பதற்காக தங்களுக்குச் சொந்தமான 24 ஏகர் சொச்சநிலத்தை அப்பீல்தாருக்கும் மற்றொரு லோமன் என்பவருக்கும், பெயரிரவலாக 1908ம்வருஷம்டிஸம்பர்மாதம்31ந்தேதி சாசனஞ்செய்து அதை ரிஜிஸ்டருஞ்செய்து கொடுத்திருப்பதாகவும், அச்சொத்துக்கள் தங்களுக்குத் திரும்பக்கிடைக்க வேண்டுமென்றும் வழக்கிட்டார்கள். தாங்கள் உத்தேசித்த மோசங்கள் யாதொன்றுஞ் செய்யவில்லையென்று பிராதிற் சொல்லியிருந்தார்கள். முதல் கோர்ட்டார் வாதிகளின் பிராதைத்தள்ளுபடி செய்துவிட்டார்கள். இது விஷயமாக அப்பீல் செய்யப்பட்டதில் டிவிஷனல் கோர்ட்டார் இ-லா-ரி 35 கல்கத்தா 551 பிரிவி கவுன்ஸல் தீர்ப்பை யனுசரித்து வாதிகளின் தாவாப்படியே தீர்ப்பு செய்து விட்டார்கள். வாதிகள் தங்கள் கடன்காரர்களை மோர்சஞ்செய்யவில்லையென்பதை ருஜுப்பிக்கத் தவறிவிட்டார்களென்றும், அதனால் வாதிகளின் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றும், பிரதிவாதி இந்த கோர்ட்டில் அப்பீல் செய்திருக்கிறார்.

வாதிகள் தங்கள் கடன்காரர்களை மோசஞ்செய்ய எத்தனித்ததாகவும், ஆனால் அந்தப்படிச் செய்யவில்லையென்றும், அதனால் தாவா சொத்துக்கள் தங்களுக்குக் கிடைக்கவேண்டு மென்

றுஞ் சொல்லுவதால் அவ்விஷயங்களை வாதிகள் சாக்ஷிய சட்டம் 101, 103, 106, 110 இந்த செக்ஷன்களின்படி ருஜுப்பிக்கக்கடமைப்பட்டவர்கள். இந்த சாசனமேற்பட்ட காலத்தில் 3 கடன் கொடுத்தவர்கள் தங்கள்பேரில் டிக்கிரியேற்படுத்தத் தயாராகவிருந்ததாகவும், அந்தப்படியே டிக்கிரிகளேற்படுத்தியதாகவும் அந்த டிக்கிரித் தொகைகள் இந்த வழக்கு கொடுபட்டகாலத்தில் கொடுபட்டு தீர்ந்துவிட்டனவென்றுஞ் சொல்லுகிறார்கள். இந்தக்கடன் கொடுத்தவர்கள் எவரையும் சாக்ஷியாகக் கோறி விசாரிக்கவில்லை. இந்த டிக்கிரிகள் தீர்ந்துபோனதாக யாதொரு தஸ்தாவேஜிகளுந் தாகல் செய்யப்படவுமில்லை. வாதியின் சாக்ஷியொருவன் குறைந்த தொகைகொடுத்து ஒருகடன் கொடுத்தவனை ராஜிசெய்து கொண்டதாகச் சொல்லுகிறான். கடன் கொடுத்தவர்கள் தாவா சொத்துக்களை யிதுவரையில் ஜப்திசெய்ய வில்லையென்றும், டிக்கிரிக்கடன் கொடுபடாதிருந்தாலும் தாவா சொத்துக்களின்பேரில் அவர்கள் இப்போது நிறைவேற்றி வசூலித்துக் கொள்ளலாமென்றும் அதனால் மோசம் யாதொன்றுமில்லை யென்றும் டிவிஷனல் கோர்ட்டார் சொல்லியிருக்கிறார்கள். தாவாவிற்கண்ட சாசனம் தகுந்த பிரதிப்பிரயோஜனத்துடனேற்பட்டதென்று கடன்கொடுத்தவர்கள் நினைத்து இச்சொத்தின்பேரில் நிறைவேற்றாமலிருக்கலாம். வாதிகளிடந் தொகை வசூலிக்க மார்க்கமில்லையென விட்டிருக்கலாம். இந்த டிக்கிரி யேற்படுவதற்கு முந்தி அதாவது 1912ம் வருஷம் பிப்ரவரிமாதம் 1ந் தேதிக்கு முந்தியே அந்தக் கடன்கொடுத்தவர்களின் டிக்கிரிகள் காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுப் போயிருக்கலாம். வாதிகள் தங்களுக்குக் கடன் கொடுத்தவர்களை மோசஞ்செய்யவில்லையென்று மிகுந்த பலமாக ருஜுப்பிக்கக்கடமைப்பட்டவர்கள். அவர்களிவ்விஷயங்களை எவ்வளவேனும் ருஜுப்பிக்கவேயில்லை. அதனால் கீழ் அப்பீல் கோர்ட்டாருடைய டிக்டிரியை ரத்துசெய்கிறோம். வாதிகளின் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

28 Indian Cases 870.

சென்னை ஹைகோர்ட்டு

1911 வருஷத்திய 2-வது அப்பீல் நம்பர் 1631.

தீர்ப்பு 2—4—14.

ஜட்ஜிகள்
மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ் அவர்கள்
மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள்

மைனர் வைகுண்டராம பிள்ளை
கார்டியன் முத்தம்மாள்
பிரதிவாதி அப்பீல்தார்
V
ஆதிமூலஞ் செட்டியார்
வாதி எதிர்கக்ஷிக்காரர்

12. [காண்டிராக்ட்டு ஆக்டு.]

மைனரால் ஏற்படும் காண்டிராக்ட் செல்லத்தகுந்த தல்லவென்பதும், மைனராக விருக்கு மொருவன் தான் மேஜரென்று சொல்லி பெந்தக பத்திரம் எழுதிக்கொடுத்திருந்தால் தான் மைனராக விருந்த காலத்தில் அந்த தஸ்தாவேஜி எழுதிக்கொடுத்ததாகச் சொல்வது எஸ்டாபல் தோஷமாக மாட்டாதென்பதும்.

திருநெல்வேலி டிஸ்டிரிக்ட்கோர்ட்டு தீர்ப்பின்பேரில் அப்பீல்.

முதல் பிரதிவாதி மைனராக விருந்த காலத்தில் ஒரு சொத்தின் பேரில் 3-ம் பிரதிவாதிக்கு பெந்தக பத்திரம் எழுதிக்கொடுத்திருந்தார். அதையவர் 4-ம் பிரதிவாதிக்கு டிரான்ஸ்வர் செய்தார். அந்த பத்திரத்தில் முதல் பிரதிவாதி மேஜரான பிறகு சாக்ஷியும் போட்டிருக்கிறார். அந்த பெந்தகக்கடனை 4-ம் பிரதிவாதி வாதிக்கு டிரான்ஸ்வர் செய்துவிட்டார். முதல் பிரதிவாதி தான் மேஜரான பிறகும் மேற்சொன்ன டிரான்ஸ்வர் பத்திரத்தில் சாக்ஷி போடுவதற்கு முந்தியும் தன்னுடைய எல்லாச்சொத்துக்களையும் தன் தாயாருக்கும் தன்னுடைய மைனர் குமாரனுக்காக தன்னுடைய மனைவிக்கும் செட்டில்மெண்டு பத்திர மூலமாகக்கொடுத்து தனக்கு ஜீவனாம்ச மட்டில் கொடுத்து வரவேண்டியதென்று ஏற்பாடுசெய்து கொண்டார். இந்த செட்டில்மெண்டு பத்திரம் மோசடியான தென்றும், தானதற்குக் கட்டுப்பட்டவரல்லவென்றும், வாதி வழக்கிட்டதில் முதல் பிரதிவாதி தான் 3-ம் பிரதிவாதியின் கடன்காரனாக நடத்தி வந்ததாகவும் இவர் மேஜரான பிறகும் தாவா பெந்தக பத்திரத்தில் வரவு வைத்திருப்பதாகவும், 4-ம் பிரதிவாதிக்கு செய்துகொடுத்த டிரான்ஸ்வர் பத்திரத்தில் சாக்ஷி போட்டிருப்பதாகவும், கடைசியாக இந்த

தாவாவை யொப்புக்கொண்டதாகவும், டிஸ்டிரிக்ட் முனிசிப் சொல்லியிருக்கிறார். டிஸ்டிரிக்ட் ஜட்ஜியும் இதேவிதமாக அபிப்பிராயப்பட்டுத் தாவா செட்டில்மெண்டு பத்திரம் கடன்காரர்களை மோசஞ் செய்வதற்கும் காலதாமதஞ் செய்வதற்கும் ஏற்பட்டதென்றும் அது வாதிக்கு விரோதமாக செல்லத்தக்கதல்லவென்றுந் தீர்மானித்து விட்டார்கள். இதனால் 2-ம் பிரதிவாதி இந்த கோர்ட்டில் அப்பீல் செய்திருக்கிறார்.

மைனர்களிடஞ் செய்து கொள்ளும் கண்டிராக்ட்டு செல்லுபடி யற்றது. கண்டிராக்ட் ஆக்ட்டு 65 வது செக்ஷன் தாவா கேசுக்கு ஒற்றுமையானதல்ல. நடு நியாயப்படி தீர்ப்பு செய்யக் கடமைப்பட்ட கோர்ட்டார் சட்டப்படி செல்லுபடியற்றதான காண்டிராக்ட்டின்படி கொடுபட்ட தொகையைத் திருப்பிக்கொடுக்க வேண்டுமென கட்டாயப்படுத்தக் கூடாது. மோச நடவடிக்கைகளில்லாத இனங்களில் ஒருவன் மைனராக விருந்த காலத்தில் வாங்கிய தொகையை திருப்பிக்கொடுக்க வேண்டுமெனச் சொல்லக்கூடாது. இவன் தான் மைனரென்று இப்போது கக்ஷி சொல்லுவது எஸ்டாபல் தோஷமாக மாட்டாது. இது விஷயங்கள் 8 இந்தியன் கேஸஸ் 888 பக்கத்திலும் இ. லா. ரி. 30 கல்கத்தா 539 பிரிவிகவுன்ஸல் தீர்ப்பிலும் விபரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. முதல் பிரதிவாதி 3-ம் பிரதிவாதியிடத்தில் கடன் வாங்கியபோது தன்னுடைய வயதைப்பற்றி பிசகாகச் சொன்னதாகவாவது மோசமாகச் சொன்னதாகவாவது ருஜுவில்லை. அதனால் இவர் வாங்கிய தொகையைத் திருப்பிக்கொடுக்க நியாயமில்லை. இந்த செட்டில்மெண்டு நடந்த காலத்தில் 3-ம் பிரதிவாதி கடன்காரனாக விருக்கவில்லை. இந்தக் காலத்தில் வாதி கடன்காரன் ஸ்தானத்திலிருந்ததாகவுஞ் சொல்லப்படக்கூடாது. இக்காரணங்களினால் செட்டில்மெண்டு பத்திரம் ரத்து செய்யப்பட நியாயமில்லை. அப்பீலை அங்கீகரித்து 2-ம் பிரதிவாதியைப் பற்றின வரையிலும் பிராது 2-வது ஷெடியூலைப் பற்றினவரையிலும் வாதியின் வழக்கைத் தள்ளுபடிசெய்கிறோம்.

23 Indian Cases 799.

அலகபாத் ஹைகோர்ட்டு.

1912 ௵த்திய 2-வது அப்பீல் நம்பர் 1536.

தீர்ப்பு 11-3-14

ஜட்ஜிகள் மிஸ்டர் ஹென்ரி ரிச்சேர்ட்ஸ் Kt. சீவ் ஜஸ்டிஸ் ஜஸ்டிஸ் ஸர் P. C. பனர்ஜி Kt.	அப்தல் அஜிஸ் ஆ. பிரதிவாதிகள் அப்பீல்தார்கள் V சயிது மருமாலி ஆ. வாதிகள் எதிர் கக்ஷிக்காரர்கள்

13. [காண்டிராக்ட் ஆக்ட்]

இனாமாக சந்தாத் தொகை கொடுப்பதாக ஒருவர் ஒப்புக்கொண்டால் அதைப்பற்றி வழக்கிடக் கூடாதென்பதும், கவுரதைக்காக ஒருவர் பொக்கிஷதார் வேலையை ஒப்புக்கொண்டால் அவருடைய அலக்ஷியத்தினாலுண்டாகிய நஷ்டங்களுக்கு வழக்கிடக் கூடாதென்பதும்.

வாதி ஆக்ரா பட்டணத்திலுள்ள இஸ்லாம் லோகல் ஏஜன்ஸி கமிட்டியார். 1907ம்௵த்தில் இந்தகமிட்டியார் ஒருமசூதிகட்டவேணுமென்று ஏற்பாடுசெய்து இவர்கள் ரூபா 3000 கொடுத்தார்கள். அதே தேதியில் ஹாகீப் என்பவரால் ரூபா 100 இதற்காக ரொக்கங் கொடுக்கப்பட்டது. அப்தல் கரீம் ரூபா 500 ம், ஜன் முகமது ரூபா 500 ம் சந்தா கொடுப்பதாக வொப்புக்கொண்டார்கள். அப்தல் கரீம் இந்த தர்மகயிங்கரியத்துக்குக் கவுரவ பொக்கிஷதாராக நியமிக்கப்பட்டார். இவரிடம் மேற்கண்ட தொகை ரூபா 3100 கொடுபட்டது. ஜன் முகம்மது தான் வாக்களித்த சந்தாத் தொகை ரூபா 500 க்கும், 1907 ம் ௵ செப்டம்பர் 12 ந்தேதி ஒரு செக் கொடுத்தார். அதை மாற்ற அந்த மாதம் 28-ந்தேதி கொடுபட்டதில் இண்டார்ஸமெண்டு சரியாக வில்லை யென்று வாப்ஸ் செய்யப்பட்டது. மறுபடியும் அது 1909 ம் வருஷம் ஜனவரி மாதம் 12 ந்தேதி திருப்பிக் கொடுக்கப்பட்டதில் அது காலாவதியாகப் போய் விட்டதாகச் சொல்லி விட்டார்கள். இந்த அப்தல் கரீம் 1909ம் வருஷம் ஏப்ரல் மாதம் 20 ந்தேதி இறந்து விட்டார். இதனால் மேலே சொன்ன ரொக்கம் ரூபா 3100, அப்தல் கரீம் ஒப்புக் கொண்ட சந்தாத் தொகை ரூபா 500, மேலே சொன்ன செக் மாற்றப்படாததா லுண்டாகிய நஷ்டம் ரூபா 500 ஆக மொத்தம் ரூபா 4100ம் அந்த அப்தல் கரீம் வார்சுகளிடமிருந்துகிடைக்கவேண்டுமென வாதிகள் 1910ம் வருஷம் ஏப்ரல்மீ 14-ந்தேதி வழக்கிட்டார்கள். ஜன் முகமது இதற்கு அடுத்த மே மாத

த்தி விறந்து விட்டார்' பிரதிவாதிகள் ரூபா 3100 பற்றின வரை
யில் எவ்வித ஆக்ஷேபணையுஞ் செய்யவில்லை. பாக்கி இரண்டு ஐடத்
தொகைகளும் வாதிகளுக்குக் கிடைக்கக் கூடிய தில்லையென கக்ஷி
யாடினார்கள். கீழ் அப்பீல் கோர்ட்டார் வாதிகளின் பிராதுப்படி
முழுத்தொகைக்கும் தீர்ப்பு செய்து விட்டார்கள். இதனால் "பிரதி
வாதிகள் இந்த கோர்ட்டில் அப்பீல் செய்திருக்கிறார்கள். இந்த
அபதல் கரீம் பொக்கிஷதாரில்லாமல் வேறு மனிதனாக விருந்தால்
இனமாகக் கொடுப்பதாக சொன்ன தொகைக்கு வழக்கிடக் கூடா
தென வாதிகளை ஒப்புக்கொள்ளுகிறார்கள். இவர் பொக்கிஷதா
ராக விருந்திருப்பதைக் கொண்டு அந்தத் தொகை கொடுக்கவே
ண்டுமென்று சொல்லுவதற்கு எவ்வித ஆதாரமு மில்லை. இவர்
அத்தொகை கொடுத்து அது பிரத்தியேகமாக வைக்கப்பட் டிரு
ந்த தென்பதற்கு எவ்வித ருஜுவுமில்லை. மற்றொரு ஜன் முகமது
வின் செக்கைப்பற்றி அப்தல் கரீம் கௌரவத்துக்கு பொக்கிஷ
தாராக ஒப்புக்கொண்டு வேலை பார்த்த காலத்தி லேற்பட்ட விஷ
யம். இவர் அவ்வேலை தனக்கு வேண்டியதில்லையென்றால் அதைப்
பற்றி அவ்வேலையவர் பார்க்க வேண்டுமெனக் கட்டாயப்படுத்தக்
கூடாது. இவர் இந்த கமிட்டியாருக்குள் ஏஜண்டாக விருந்து
வேலை பார்த்ததாக எண்ணப்பட வேண்டிய தென்றும், ஏஜண்
டின் அலக்ஷியத்தினால் நஷ்டங்களுண்டானால் அவை யவரிடம்
வசூலிக்கப்படலா மாகையால் அதுபோலவே இத்தொகையும் பிரதி
வாதிகளிடம் வசூலிக்கப்படலா மென்றும், வாதிகள் கக்ஷியாடுகி
றார்கள். அப்தல் கரீம் ஏஜண்டு முறைமையிற் செய்ததாக எண்
ணப்படக்கூடாது. அவர் மிகுந்த அலக்ஷியமாக விருந்ததாகவுஞ்
சொல்லக்கூடாது; அவர் தொகைகிடைக்கச் செக்கைகொடுத்திருக்
கிறார். இண்டார்சு மெண்டில் பிசகிருப்பது சகஜமானது. ஏற்
பட்ட வேலை மிகுந்த தாமதமாக நடந்து வந்தபடியால் செக்மாற்
றுவதற்கு தடைப்பட்டது. இந்தக்கேசில் அப்தல்கரீம் ஜீவந்தராயி
ருந்தால் அவர் பேரில் வழக்கிட முடியாது. ஆகையால் இந்த இர
ண்டு ஐடத் தொகைகளைப் பற்றிப் பிரதிவாதிகள் பேரில் வழக்கிட்
டது செல்லத் தக்கதல்ல. அப்பீல் கோர்ட்டு டிக்ரி இந்தத் தொ
கைகள் ரூபா 1000 சம்பந்தப்பட்ட வரையில் ரத்து செய்யப்
பட்டது.

23 Indian Cases 600.

OFFICE OF THE RE... 6-OCT 1... ORA

ஹைகோர்ட்டுத் தீர்மானங்கள்.

தமிழ்ப்பாஷை பயின்றவர்கள் வியவகார நுட்பங்களை
எளிதில் உணரும் பொருட்டுப் பிரசுரிக்கப்படும்
மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

புத்தகம்-1 } மாயவரம் 1914 ௵ ஜுலை ௴ { இலக்கம் 11.

கல்கத்தா ஹைகோர்ட்.

1911 வருஷத்திய இரண்டாவது அப்பீல் நம்பர் 2095.

தீர்ப்பு 6—3—14

ஜட்ஜிகள். மிஸ்டர் ஜஸ்டிஸ் காக்ஸ் அவர்கள். மிஸ்டர் ஜஸ்டிஸ் D-சடார்ஜி அவர்கள்.	பல்டியோ டியூப் 2 ம் பிரதிவாதி அப்பீல்தார் V ஷாம் துர் பண்டி வாதி ரூ எதிர்க்கக்ஷிக்காரர்.

10. [ஸ்பெஸிவிக் ரிலீவ் ஆக்ட்.

விதந்து செய்யும் பராதீனஞ் செல்லாதென்று சமீப அனந்தர
வார்சு இருக்கும்போதே தூர அனந்தரவார்சு வழக்கிடலாமென்பதும்
பாத்தியஸ்தாபன வழக்குகளில் தீர்ப்பு கொடுப்பது ஜட்ஜியின்
அபிப்பிராயத்தைப் பொருத்த தென்பதும்.

தியோனந்தி என்ற விதந்து அவளுடைய புருஷன் சொத்
துக்களை பராதீனஞ்செய்தது செல்லத்தக்கதல்ல வென்று அவ
ளுடைய புருஷனுக்கு சமீப தாயாதியாகிய வாதி வழக்கிட்டார்.
இந்த விதந்துவுக்கு 18 அல்லது 19 வயதுள்ள விவாகமான
பெண்ணொருவள் ஜீவந்தியாயிருந்தாள். கீழ் அப்பீல் கோர்ட்
டார் வாதிக்கு அனுகூலமாக தீர்ப்பு கொடுத்து விட்டதின்பேரில்
சொத்தை பராதீனம் பெற்ற 2 ம் பிரதிவாதி தான் பெற்ற கார
ணம் சரியான அவசியத்துக்காக ஏற்பட்டதென்றும், விதந்துவுக்கு
அதிபாலியமான [illegible]வாகமான பெண்ணொருவளிருப்பதால் விதந்து
ஜீவதிசைக்குப் பிறகு தாவா சொத்துக்களை யவளே அடையக்
கூடியவளென்றும், வாதி 50 வயதான கிழவனாக விருப்பதால்
தாவா சொத்துக்களை அவனுடைய தேறுதலில்லையென்றும் இந்தக்
கேஸில் கீழ் அப்பீல் கோர்ட்டார் தங்கள் உசிதமான அபிப்பிரா

யத்தைச் செலுத்த வில்லையென்றும், இந்தக் கோர்ட்டில் அப்பீல் செய்திருக்கிறார்.

விதந்துவுக்கு இளவயதுள்ள வாழும் பெண் ஜீவந்தியாயிருப்பதாலும், வாதி 50 வயதுள்ளவனாக இருப்பதாலும் இந்தப் பெண்ணுக்குப் பிறகு வாதி உயிருடனிருப்பாரென்றெண்ண எவ்வித ஹேதுவுமில்லை. இதனால் தாவா சாசனம் சரியானது, அல்லது பிசகானதென்று நாம் தீர்மானிக்க வேண்டியது அனாவசியம். வாதி கேட்கும் பரிகாரம் கிடைக்கத்தக்கதில்லையென சப் ஜட்ஜி தீர்மானித்தது மெத்தச்சரியானது. இதனால் அப்பீலையங்கீகரித்து கீழ் அப்பீல் கோர்ட்டாருடைய தீர்ப்பை ரத்துசெய்து வாதியின் வழக்கைத் தள்ளுபடி செய்கிறோம்.

23 Indian Cases 809.

சென்னை ஹைகோர்ட்டு.

1911 வருஷத்திய 2-வது அப்பீல் நம்பர் 599.

தீர்ப்பு 2 - 3 - 14.

ஜட்ஜிகள் மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள் மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யரவர்கள்	சமார்தி சூரியப்பிரகாச நாயடு வாதி அப்பீல்தார் V அனார்தி லெக்ஷிமி நரசிம்மசார்யலுலு பிரதிவாதிகள்

1. [ஸ்பெஸிபிக் ரிலீவ் ஆக்ட்.

சாசனஞ் செய்துகொடுப்பதாக உடன்படிக்கை எழுதிக்கொடுத்தவன், சாசன மெழுதிக்கொடுக்கு முன்னமே சாசனத்தொகை கொடுபடவேண்டிய அவசியமில்லை யென்பதும், சொத்து ஸ்வாதீனஞ் செய்துகொண்டிருப்பவன் சாசனஞ் செய்துகொடுக்கவேண்டுமென்பதும்.

முதல் பிரதிவாதி அவருக்குச் சொந்தமான ஒரு ஸ்தாபர சொத்தை ஒருமாத கெடுவுக்குள் ரூபா 400 க்கு வாதிக்கு சாசனஞ் செய்து கொடுப்பதாக ரூபா 40 அட்வான்ஸ் பெற்றுக்கொண்டு பாக்கித்தொகை ரூபா 360-ம் சாசனஞ் செய்து கொடுத்துவிட்டபின் பெற்றுக்கொள்ளுவதாக சம்மதித்து ஒரு உடன்படிக்கை எழுதிக்கொடுத்திருந்தார். இந்த எக்கிரிமெண்டுப்படி

சாசனஞ் செய்து கொடுக்காததினாலே வாதி உடன்படிக்கையின் கெடுக்கடந்து 3 வருடங்கள் முடியுஞ் சமயத்தில் ஏற்பட்ட உடன்படிக்கையின்படி தனக்கு சாசனம் முதல் பிரதிவாதியால் செய்து கொடுக்கப்பட வேண்டுமென வழக்கிட்டார். டிஸ்டிரிக்ட் முனிசீப் வாதியின் தாவாப்படியே தீர்ப்பு செய்துவிட்டார். இது விஷயமாக அப்பீல் செய்யப்பட்டதில் சப் ஜட்ஜி அடியிற்கண்ட காரணங்களினால் வாதியின் பிராதைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

(a) சாசன பாக்கித்தொகை ரூபா 360 யும் கொடுக்கத்தயாராகவிருந்ததாக வாதி சொல்லிக்கொண்டிருந்தபோதிலும், அந்தத் தொகை கொடுப்பதற்கு வாதியிடத்தில் ரூபா 360 கையிலில்லை.

(b) வாதி இந்த வழக்கிடுவதற்கு மூன்றுவருடகாலம் வரையில் தாமதித்துவிட்டதால் வாதி வழக்குகளை விலைக்கு வாங்குதலென்னுங் குற்றத்துக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார். ஸ்பெஸிவிக் பெர்பார்மன்ஸ்களில் தீர்ப்பு கொடுப்பது கோர்ட்டாருடைய இஷ்டத்தைப் பொருத்ததாகையால் வாதி கேட்கும் பரிகாரங் கிடைக்கமாட்டாது.

(c) வாதி தான் சாசனம் பெறும் விஷயத்தில் நீண்டகாலம் அலக்ஷியமாக விருந்து விட்டதால், வாதி தனக்கேற்பட்ட பாத்தியதையை விட்டுவிட்டதாகவே எண்ணப்படவேண்டும். அதனாலும் வாதியின் பிராது தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

சாசனபாக்கித்தொகை ரூபா 360-ம் வாதியின் கையிலில்லையென்பதற்கு தகுந்த ருஜுவில்லை. A அடையாள ஆதிரவின்படி முதற் பிரதிவாதி தான் ஒப்புக்கொண்ட சாசனத்தை எழுதிக்கொடுத்துவிட்டு சாசன பாக்கியைக் கேட்கவேண்டும். இவர் ஏற்பட்ட ஒருமாத கெடுவுக்குள் சாசனத்தை எழுதிக்கொடுக்கவில்லை; பிராது தேதிவரையிலும் எழுதிக் கொடுக்கவேயில்லை. பிரதிவாதிகள் தங்கள் கக்ஷிக்கு ஆதாரமாக எடுத்துக்காட்டும் இ. லா. ரி. 27 அலகபாத் 678 தீர்மானம் தாவா கேஸுக்கு ஒற்றுமையானதல்ல. அந்தக் கேஸில் பிரதிவாதி தான் எழுதிக்கொடுத்த எக்கிரிமெண்டுப்படி சாசனமெழுதிக் கொடுக்கமாட்டேனென்று மறுதளித்துவிட்டான். இந்தக் கேஸ் அப்படியல்ல; பிரதி

வாதி தன்னுடைய C அடையாள ரிஜிஸ்டர் நோட்டீசில் பார்த்த ஒருவார கெடுவுக்குள் A அடையாள உடன்படிக்கையின் ஷரத்துப்படி நடந்துகொள்ளவேண்டுமென்றும், தவறினால் உடன்படிக்கை ரத்து செய்யப்படுமென்றுஞ் சொல்லியிருக்கிறார். இதற்கு வாதி கொடுத்த பதில் நோட்டீசில் தான் சாசனபாக்கித் தொகையைக் கொடுக்க எப்போதுந் தயாராக விருப்பதாகச் சொல்லியிருக்கிறார். முதல் பிரதிவாதி தாவா சொத்தை 2-ம் பிரதிவாதிக்கு விற்ற இரண்டு மாதங்களுக்குள்ளேயே வழக்கிட்டிருப்பதால் வாதி வழக்குகளை விலைக்கு வாங்குபவரென்றாவது இவருக்கேற்பட்ட பாத்தியதையை வேண்டாமென்று விட்டுவிட்டவரென்றாவது எண்ணப்படக்கூடாது. வழக்குகளை விலைக்கு வாங்குகிறவன் என்பதினாலே ஸ்பெஸிபிக் பெர்பார்மன்ஸ் தீர்ப்பு செய்யாதிருக்கக் கூடாதென்று இ. லா. ரி. 21 சென்னை 42, 33 கல்கத்தா 633, 29 பம்பாய் 234 தீர்மானங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இதனால் கீழ் அப்பீல் கோர்ட்டார் செய்த தீர்மானத்தை ரத்து செய்கிறோம். டிஸ்டிரிக்ட் முனிசிப் 1-3-4 பிரதிவாதிகளால் சாசனமெழுதிக் கொடுக்கப்படவேண்டுமெனத் தீர்மானித்திருக்கிறார். அது சரியல்ல. சொத்து பாத்தியம் 2-ம் பிரதிவாதிக்கு கிடைத்துவிட்டதால் அவர்தான் வாதிக்கு சாசனமெழுதிக்கொடுக்க அருகமுள்ளவர். அவர் கோர்ட்டு திறந்த ஒருமாதத்துக்குள் வாதிக்கு சாசனமெழுதிக் கொடுக்கவேண்டியதாகத் தீர்மானிக்கிறோம்.

23 Indian Cases 560.

சென்னை ஹைகோர்ட்டு.

1912 வருஷத்திய சிவில் ரெவிஷன் மனு 1912வருஷத்திய567 நம்பர்.

தீர்ப்பு 16—2—14

ஜட்ஜி
மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யரவர்கள்

படோஜு சங்கய்யா
பிரதிவாதி மனுதார்
V
படோஜு சன்னியாசிலு
வாதிகள் எதிர்மனுதாரர்கள்

5. [நெகோஷியபிள் இன்ஸ்டுருமெண்டு ஆக்ட்.]

பிராமிசரி நோட்டு இண்டார்ஸ்மெண்டு பெற்றவனுக்கு தொகை வசூலிக்க மட்டில் பாத்தியமுண்டென்றும் அத்தொகையில் பாத்தியமில்லையென்றுஞ் சொல்லக்கூடாதென்பது.

A அடையாள ஆதாவில் இண்டார்சு செய்திருப்பது வாதி ஏஜண்டு முறமையில் தொகை வசூலிக்க மட்டில் பாத்தியமுடையவரென்றும், அத்தொகையில் வாதிக்கு பாத்தியமில்லையென்றும், முதல் பிரதிவாதியின் விவாதம். இந்த இண்டார்சுமெண்டினால் வாதி இத்தொகையை வசூலிக்க பூராபாத்தியமுடையவரென்றும், 2-ம் பிரதிவாதிக்கு இவர் கணக்கு ஒப்பிவிக்கக்கடமைப் பட்டவரல்லவென்றும் ஸ்பஷ்டமாகத் தெரிகிறது. இதனால் தொகை வசூலிக்கமட்டில் இண்டார்சுமெண்டு ஏற்படவில்லையென அபிப்பிராயப்படுகிறேன். நெகோஷியபில் இன்ஸ்டுருமெண்டு ஆக்ட் 8-வது செக்ஷன்படி வாதி ஒல்டர் Holder ஆகிறார். (இ. லா. ரி. 30 சென்னை 88 தீர்மானத்தைப் பார்க்க) அவரே இத்தெர்கை வசூலிக்க வழக்கிட பாத்தியமுடையவர். முதல் பிரதிவாதி இரண்டாம் பிரதிவாதியிடம் தொகை கொடுத்துவிட்டதாகச் சொல்லும் டிபென்ஸுக்கு வாதி எவ்விதத்திலும் கட்டுப்பட்டவரல்ல. இது விஷயமாக சாக்ஷிகளை விசாரிக்க கேசை யனுப்பவேண்டியது அனுவசியம். ஆகையால் இந்த மனு செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

23 Indian Cases 545.

அலகபாத் ஹைகோர்ட்டு.

1913 வருஷத்திய சிவில் ரிபெரென்ஸ் நம்பர் 519.

தீர்ப்பு 20-1-14.

ஜட்ஜிகள்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் ரய்வ்ஸ் அவர்கள்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் பிக்கார்ட் அவர்கள்

இந்தர் மால் மனுதார்
V
பல்டியோதாஸ் வு எதிர்மனுதார்

5. [ஸ்மால்காஸ் கோர்ட்டு ஆக்ட்.]

கணக்குப் பார்க்காதவரையில் எவ்வளவு தொகை கிடைக்குமென்று தெரியாதிருந்தால் அத்தொகையைப் பற்றி ஸ்மால்காஸ் திறப்பில் தான் வழக்கிடவேண்டுமென்பது.

மனுதார் வாதி கொடுத்த பிராது கணக்கு பார்க்கும்படியான வழக்காக விருப்பதால் கீழ்க்கோர்ட்டார், இது விஷயமாக அசல்திறப்பில் வழக்கிட்டுக் கொள்ளும்படி பிராதை வாபஸ் செய்துவிட்டார்கள். இவ்விதஞ் செய்தது சட்ட விரோதமானதென்று ஆக்ரா டிஸ்டிரிக்ட் ஜட்ஜி இந்தக்கோர்ட்டுக்கு ரிபெரென்ஸ் செய்திருக்கிறார்கள்.

இந்தக் கேஸில் பிரதிவாதி யாதொரு எழுத்து மூலமான ஸ்டேட்மெண்டுங் கொடுக்காமலே இந்த தாவா கணக்கு பார்த்து முடிவுசெய்யும் படியான வழக்காக இருக்கிறதென்றும், அதனால் அசல்திறப்பில் வழக்கிடவேண்டு மென்றும் வாய்மொழியாக ஆக்ஷேபனை செய்ததின்பேரில், பிராது வாபஸ் செய்யப்பட்டிருக்கிறது. பிராதை பரிசோதித்து பார்க்கும்போது இது கணக்குப்பார்க்கும்படியானவழக்காக இருக்கவில்லை; தொகைகிடைக்க வேண்டுமென்றும், உபயவாதிகளுக்குள்ளே யிருக்கும் கணக்குகளை சோதித்துப் பார்க்காதவரையில், நிச்சயமான தொகை தெரியக் கூடியதாக விருக்கவில்லை யென்றுங் கண்டிருக்கிறது. இது ஸ்மால்காஸ் திறப்பில் பிராது செய்யக்கூடியதேயன்றி அசல் திறப்பில் வழக்கிடக்கூடியதல்ல. அதனால் கீழ்க்கோர்ட்டார் செய்த வுத்திரவை ரத்துசெய்கிறோம். இதை ஸ்மால்காஸ் சயிடில் தாகல் செய்துகொண்டு விசாரித்து முடிவு செய்யவேண்டும்.

23 Indian Cases 424

கல்கத்தா ஹைகோர்ட்.

1914 வருஷத்திய கிரிமினல் ரெவிஷன் நம்பர் 249.

தீர்ப்பு. 6—3—14.

ஜட்ஜிகள். மிஸ்டர் ஜஸ்டிஸ் ஹோம்வூட் அவர்கள். மிஸ்டர் ஜஸ்டிஸ் ஷார்புடீன் அவர்கள்.	ஷிராகுடீன் எதிரி மனுதார் V சக்கரவர்த்தி எதிர்கக்ஷிக்காரர்

3. [சாக்ஷியசட்டம்.]

ஒருவனை தெண்டனைக்குள்ளாக்குவதற்கு போதுமான அனுமான சாக்ஷியங்கள் வேண்டுமென்பதும், ஒருவனிடமிருந்து கண்டு

பிடிக்கப்பட்ட தொகையவனுக்கு எவ்விதங் கிடைத்ததென்பதற்கு அவன் தகுந்த சமாதானஞ் சொல்லாத காரணங்களினால் அவன் குற்றவாளியென்று தெண்டனைக் குள்ளாக்கலாகா தென்பதும்.

கவர்ண்மெண்ட் டாபீசிலிருந்த கரன்ஸிநோட்டுகளையும், ரொக்கத்தொகையையும் அந்த ஆபீசிலுள்ள சேவகனொருவன் திருடிவிட்டதாக அனுமான சாக்ஷியங்களைக்கொண்டு தெண்டிக்கப்பட்டான். அவ்வித ருஜுக்களைக்கொண்டு தன்னை தெண்டித்தது சட்டவிரோதமானதென்று எதிரி இந்தக் கோர்ட்டில் ரெவிஷன் மனுக் கொடுத்திருக்கிறார். எதிரி பேரிலேற்பட்ட அனுமானக் குறிப்பு மூன்று; அவையாவன:—முதலாவது பிரதான ஆபீஸர் மிஸ்டர் பிரய்டே ஆபீசிலில்லாத காலத்தில் திருட்டுப்போயிருப்பதும், அந்தக்காலத்தில் எதிரி ஆபீசுக்குட் சென்றதும், இந்த எதிரிமட்டில் போனதாக ருஜுவில்லை. இன்னும் ஐந்து பெயர் இந்த ஆபீசுக்குட் சென்றதாக ருஜுவேற்பட் டிருப்பதால் இந்த சாக்ஷியம் பிரயோஜன மற்றது.

திருட்டுப்போன நோட்டுகளில் இரண்டு கல்கத்தா கடையில் மாற்றப்பட்டபோது எதிரியின் மைத்துனன் கூடவிருந்தது இரண்டாவது அனுமான சாக்ஷியம். இது எதிரி குற்றவாளியென்று தீர்மானிக்கப் போதுமானதல்ல. மைத்துனனுடைய மோச நடவடிக்கைகளுக்கு எதிரியைக் கட்டுப்படுத்தக் கூடாது அதனால் இந்தசாக்ஷியமும் பிரயோஜனமற்றது.

இந்தத் திருட்டு நடந்தவுடனே எதிரிவீட்டில் விசேஷ தொகையிருந்தது. இவை எவ்விதந்தனக்குக் கிடைத்த தென்பதைப்பற்றி எதிரி சரியான முகாந்திரஞ் சொல்லாதிருப்பது மூன்றாவது அனுமானம். இந்த எதிரிக்கு மாதம் 1 க்கு ரூ 5 சம்பளமேற்பட்டிருப்பதால் இவனிடத்தில் ஜாஸ்தித்தொகை யிருக்கக் காரணமில்லை யென்று சொல்லப்பட் டிருக்கிறது. இவனுக்கு சொற்ப சம்பளமேற்பட்டிருப்பதைக் கொண்டு இவன் வேறு கெட்டவழிகளில் திரவியங்கள் சம்பாதித்திருக்கலாம். இவனிடமிருந்து எடுக்கப்பட்ட தொகை திருட்டுப்போன தொகைதான் என்பதற்கு எவ்வித ருஜுவுமில்லை. ரொக்கத்தில் ரூபா 210—ம், நோட்டுகள் சிலதுந் திருட்டுப்போயிருக்கிறது. எதிரி மேமாதம் 12ந் தேதியில் ரூபா 29—ம், அந்த மாதம் 21ந் தேதியில் ரூபா 155-ம், போஸ்டல் சேவிங்ஸ் பாங்கில் போட்டி

ருப்பதால் திருட்டுப்போன தொகைதான் அந்த பாங்கில் போடப்பட்டிருக்கிறதென்று அனுமானித்துத் தெண்டித்திருக்கிறார். இந்தத் திருட்டினாற்றான் அந்தத் தொகை கிடைத்ததென்பதற்கு ருஜுவில்லை. ஒருவனை அனுமான சாக்ஷியங்களைக் கொண்டு தெண்டிக்கவேண்டியிருந்தால் அது விஷயத்துக்கு போதுமான சாக்ஷியங்கள் வேண்டியது மெத்த அவசியம்; இப்போதேற்பட்டிருக்கும் சாக்ஷியம் எதிரியைத் தண்டிப்பதற்கு போதுமானதல்ல. இதனால் எதிரிக்கு விதித்த தண்டனையை ரத்து செய்திருக்கிறோம். அபராதம் ஏதேனும் வசூலிக்கப்பட்டிருந்தால் அது வாபஸ் செய்யப்படவேண்டும்.

23. Indian Cases 501.

கல்கத்தா ஹைகோர்ட்டு.

1913 வருஷத்திய கிரிமினல் அப்பீல் நம்பர் 329.

தீர்ப்பு 23-5-13.

ஜட்ஜிகள்
ஸர் லாரென்ஸ் ஜென்கின்ஸ் Kt
சீவ் ஜஸ்டிஸ்
மிஸ்டா ஜஸ்டிஸ் ஷார்புடீன்

ஹாம் ஹொலாதார் எதிரி
V
சக்கரவர்த்தியவர்கள்

4. [சாக்ஷிய சட்டம்.]

புருஷன் சொன்ன இரகசியத்தை அவன் மனைவி சொல்லும்படி கட்டாயப்படுத்தக்கூடாதென்பதும், அந்த சாக்ஷியம் அங்கீகரிக்கத்தக்கதல்ல வென்பதும்.

1912 வருஷம் நவம்பர் மாதம் 6 ந்தேதி இராத்திரி ருஜூர்சார் என்ற கிராமத்தில் ஒலிமுட்டி யென்பவர் வீட்டில் இரண்டு ஆண்பிள்ளை, 3 பெண்பிள்ளைகள் ஒரு சிறுவயதுடைய பெண் இவர்கள் எல்லோரும் அதாவது அவ்வீட்டிலிருந்தவர்களனைவருங் கொல்லப்பட்டார்கள். இவ்விஷயம் மறுநாட்காலையிற்றான் தெரியவந்தது. இக்கொலை பலபேர்களால் செய்யப்பட்டிருக்கிறதென்பதற்குச் சந்தேகமே கிடையாது. அவர்களிற் சிலர் அப்பீல்தார்களென்பது பிராஸிகியூஷன் கக்ஷி. கொள்ளையடிப்பதற்காக இந்தக் கொலையேற்படவில்லை.

அப்பீல்தார்களில் இருவர் டிப்டி மாஜிஸ்டிரேட் முன்பாக குற்றத்தை யொப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆனாலவர்கள் பின்னால் தாங்கள் சொன்னதை மறுத்துவிட்டார்கள். இந்தப் பார்ட்டிகளில் சம்பந்தப்பட்ட ஹாம்ஜா என்பவனுடைய ஸ்டேட்மெண்டு மிகுந்த ஆதாரமானதென்று பிராஸிகியூஷன் திறப்பிற் சொல்லுகிறார்கள். இவனிப்பால் தானே கொலை செய்துகொண்டு விட்டான். இதைத்தவிர மெடிகலாபீசருடைய சாக்ஷியமிருப்பதுடன் கொலையுண்ட ஒலிமுட்டிக்கும் அப்பீல்தாருக்குமுள்ள விரோதத்தைப் பற்றியும் சாக்ஷிகள் சொல்லியிருக்கிறார்கள். குற்றம் நடந்தவிடத்துக்கு சமீபத்தில் எதிரிகள் சிலரிருந்ததாக ருஜுக்களிருக்கின்றன. நேரிற்கண்ட சாக்ஷியுமிருக்கிறது. நேரிற் பார்த்ததாகச் சொல்லும் சாக்ஷி அப்புரூவர் அப்தல்கரீம் ஸர்தார் இவர்சாக்ஷியம் பொய்யானதென்று வாதிக்கப்பட்டிருக்கிறது. ஹாம்ஜாவினுடைய ஸ்டேட்மெண்டு அவன் விதந்து ஜாய்டன் பீபீயால் ருஜுப்பிக்கப்பட்டிருக்கிறது. இவள் தன் புருஷன் சொன்ன ரகசியத்தை வெளிப்படுத்தத் தடைபட்டிருக்கிறாளென்பது செஷன் கோர்ட்டிலும் இந்தக் கோர்ட்டிலும் எதிரி வாதிக்கிறார். இந்த ஸ்டேட்மெண்டு ஒருவன் தன் மனைவிக்கு விவாகசம்பந்தமிருக்கும்போது சொன்ன இரகசிய விஷயம்; இது சாக்ஷிய சட்டப்படி வெளியிடப்படக்கூடாத விஷயம். இவ்விஷயத்தை வெளியிடும்படி எவருங் கட்டாயப்படுத்தக்கூடாது. இதை வெளியிடும்படி சொல்லக்கூடியவரா அல்லது சம்மதிக்கக்கூடியவரா ஒருவருமில்லை. சட்டத்தில் இவ்வித தடையேற்பட்டிருப்பது சாஸ்திரார்த்தமானதல்ல (Technical). இது ஒரு மிகவும் முக்கியமான நியாயம். இந்த விதியை எந்தக் கோர்ட்டாரும் மீறி நடக்கக்கூடாது. இதனால் ஹாம்ஜா சொன்னதாக அவன் மனைவி ஜாய்டன் வாக்குமூலங்கொடுத்திருப்பது ருஜுக்களினின்றும் விலக்கிவிடப்படவேண்டும். தீர்ப்பிற் சொல்லும் மற்ற விஷயங்கள் வேண்டியதில்லை.

கீழ்க்கோர்ட்டுத் தீர்ப்பு நிராகரிக்கப்பட்டது.

23 Indian Cases 511.

சென்னை ஹைகோர்ட்டு

1914 ௵த்திய கிரிமினல் மிஸ்லேனியஸ் மனு நம்பர் 82

தீர்ப்பு 10-3-14.

ஜட்ஜிகள்	
மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ் அவர்கள்	சின்னவன் என்கிற நல்லநாய்க்கன்
மிஸ்டர் ஜஸ்டிஸ் எயிலிங் அவர்கள்	மனுதார்

25. [கிரிமினல் புரிஸீஜர் கோடு.]

ஒரு ஸ்திரீயை மானபங்கஞ் செய்யத் தாக்குதல் என்னுங் குற்றத்துக்காக விசாரித்து முடிவு செய்யும்போது அவளை பலவந்த புணர்ச்சி செய்ய எத்தனித்ததாக குற்றஞ் சுமத்தி செஷனுக்கு கமிட்டி செய்வது சட்டவிரோதமானதல்லவென்பது.

மனுதார் பேரில் 2-வது கிளாஸ் ஸ்டேஷனரி மாஜிஸ்டிரேட் முன்பாக நடவடிக்கை நடத்தப்பட்டதில் இ. பி. கோடு 354-வது செக்ஷன்படி மானபங்கஞ் செய்யத்தாக்குதல் என்னுங் குற்றஞ் சாட்டப்பட்டு பிராஸிகியூஷன் திறப்புச் சாக்ஷிகளை குறுக்கு விசாரணை செய்தும் டிபென்ஸ் திறப்பு சாக்ஷிகளை விசாரித்தும் தீர்ப்பு சொல்ல கெடுபோடப்பட்டிருந்த தேதியில் மாஜிஸ்டிரேட் தீர்ப்பு சொல்லாமல் மனுதார்பேரி லேற்பட்ட ருஜுக்களினால் அவர் இ. பி. கோடு 376, 511-வது செக்ஷன்களின்படி பலவந்தப்புணர்ச்சி செய்ய எத்தனித்ததாக குற்றப்பத்திரிகை படித்து செஷனுக்கு கமிட் செய்யப்பட்டார்.

மனுதார்பேரில் 18-வது அத்தியாயப்படி நடவடிக்கை நடத்தப்படவேண்டியதாகவிருக்க 21-வது அத்தியாயப்படி விசாரித்து 347-வது செக்ஷன்படி கமிட்டி செய்தது சட்டவிரோதமானதென்றும், இவ்விதங் கமிட் செய்ததை ரத்து செய்யப்படவேண்டுமென்றும், இந்த கோர்ட்டில் மனு கொடுபட்டிருக்கிறது. இந்த இரண்டு அத்தியாயங்களின்படி நடத்தும் நடவடிக்கைகள் ஒன்றாகத்தானிருக்கிறது; இந்த இரண்டு அத்தியாயங்களின்படிக்கும் பிராஸிகியூஷன் திறப்பு சாக்ஷிகளை குறுக்குவிசாரணை செய்யலாம். செஷன் கேஸ்களில் பிரதமவிசாரணை செய்யுங்கோர்ட்டார் டிபென்ஸ் சாக்ஷிகளை விசாரிக்கவேண்டியதில்லை. ஆனாலிந்தக் கேஸில் பிராஸிகியூஷன் கேஸ் முழுவதும் கட்டுப்பாடானதென்பதுதான் டிபென்ஸ், அதனால் மனுதார் டிபென்ஸ் சாக்ஷிகளை

கீழ்கோர்ட்டில் விசாரித்ததால் அவர்பேரில் கோர்ட்டார் தப்பெண்ணங்கொள்ள இடமில்லை. ஆகையால் கமிட் செய்ததை ரத்து செய்யக்காரணமில்லை. மனுதாருடைய மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

23 Indian Cases 734.

அலகபாத் ஹைகோர்ட்டு.

1914-௵த்திய கிரிமினல் ரிபெரென்ஸ் நம்பர் 57

தீர்ப்பு 6 - 2 - 14.

ஜட்ஜி	
மிஸ்டர் ஜஸ்டிஸ் பிக்கார்டு	சக்கரவர்த்தி அவர்கள் மனுதார்
அவர்கள்	V
	குருதயால் எதிர்கக்ஷிக்காரர்

26. [கிரிமினல் புரிஸீஜர் கோடு.]

எதிரிகள் விடுதலை செய்யப்பட்டால் அது விஷயமாக அப்பீல் செய்ய பாத்தியமுடையவர் லோகல் கவர்ண்மெண்டாரேயன்றி டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட் அல்லவென்பது.

பாரில்லி டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்டினால் இந்த ரிபெரென்ஸ் செய்யப்பட்டது.

எதிரிகள் குற்றவாளிகளல்லவென்று தீர்மானிக்கப்பட்ட விஷயங்களைப்பற்றி ரிவிஷன் நடவடிக்கையில் பிரவேசிப்பதுஇந்த கோர்ட்டு நடவடிக்கைக்கு விரோதமானது. (இ. லா. ரி 24 அலகபாத் 346; 25 அலகபாத் 128 இந்தத் தீர்மானங்களை பார்க்க.) இந்த இரண்டு கேஸ்களிலும் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்டால் ரிபெரென்ஸ் செய்யப்பட்டிருக்கிறது. அப்பீல் செய்ய பாத்தியமுடையவர் லோகல் கவர்ன்மெண்டார். அப்பீல் செய்யும்படி டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட் லோகல் கவர்ன்மெண்டாருக்கு எழுதவேண்டும். கி. பு. கோடு 439-வது செக்ஷன் 5-வது கிளாஸைப்பார்க்க. டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்டுக்கு அப்பீல் செய்யும்படியான அதிகாரமே கிடையாது. ரிகார்டுகள் திருப்பியனுப்பப்பட்டன.

23 Indian Cases 512.

அலகபாத் ஹைகோர்ட்டு.

1913 ௵ ஷீய கிரிமினல் ரிவிஷன் நம்பர் 1215.

தீர்ப்பு 5 - 3 - 14.

ஜட்ஜி ஜஸ்டிஸ் ஸர் ஜார்ஜ் நாக்ஸ் Kt அவர்கள்.	}	ராமேஷ்வர்லு மனுதார்கள் V சக்கரவர்த்தி அவர்கள் எதிர்மனுதார்.

27. [கிரிமனல் புரிஸீஜர் கோடு]

கி. பு. கோடு 112 வது செக்ஷன்படி எழுத்து மூலமாக உத்திரவு செய்வதற்கு முந்தி ஷை 8 வது அத்தியாயப்படி நல்நடத்தைக்கு ஜாமீன்வாங்கும் நடவடிக்கைகள் நடத்தப்படக் கூடாதென்பதும் எழுத்துமூலமாகத் தகுந்த காரணஞ் சொன்ன பிறகுதான் வாரண்டு முதலியன கொடுபடவேண்டு மென்பதும்.

கி. பு. கோடு 54 அல்லது 55 வது செக்ஷன்படி போலீசார் ருமேஷ்வரையும் மற்றிருவர்களையும் 23-6-13 ல் வாரண்டிற் பிடித்து ஜூன்மாதம் 25 ந் தேதி மாஜிஸ்டிரேட் முன்பாகக் கொண்டு போய் அவர்களுக்கு ரிமாண்டு கொடுக்கும்படி கேட்டார்கள்; கி. பு. கோடு 167வது செக்ஷன்படி மாஜிஸ்டிரேட் கொடுத்துவிட்டார். இவர்கள் 1913 வருஷம் ஜூலை மாதம் 2 ந் தேதிவரையில் ஜெயிலில் அடைக்கப்பட்டிருந்தார்கள். இவ்விதம் தங்களை யடைத்து வைத்திருந்தது சட்ட விரோதமான தென்று இந்த கோர்ட்டில் ரெவிஷன் மனுக் கொடுத்திருக்கிறார்கள்.

கி-பு-கோடு 112 வது செக்ஷன்படி நடத்தப்படும் நடவடிக்கைகளுக்கு ஷை கோடு 167 வது செக்ஷன் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. ஷை கோடு 8 வது அத்தியாயப்படி நடத்தும் மாஜிஸ்டிரேட்டுகள் ஷை கோடு 112 வது செக்ஷன்படி தெரிய வந்த சங்கதிகளின் சுருக்கம், ஜாமீன் கொடுபட வேண்டிய தொகை, எவ்வளவு காலத்துக்கு ஜாமீன் கொடுக்கப்பட வேண்டுமென்பது, எத்தனை பெயர், எந்த விதமான ஜாமீன் கொடுக்க வேண்டு மென்பது, என்ற விஷயங்களை விபரமாக எழுதி எதிரிகளுக்கு வாசித்துக் காட்டவேண்டியது மெத்த அவசியம். அப்பீல் தார்கள் கோர்ட்டிலிருந் திருப்பதால் கி-பு-கோடு 114 வது செக்ஷன் தாவாகேசுக்குப் பொருத்தமானதல்ல. இவ்விதம் எழுத்துமூலமான உத்திரவு செய்ததின்பிறகு மாஜிஸ்டிரேட் தனக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கும் விஷயங்களின் உண்மையைப்

பற்றி கிரமமாக விசாரித்து நடவடிக்கைகள் நடத்தவேண்டும். மாஜிஸ்டிரேட் தான் நடவடிக்கைகள் நடத்த ஆரம்பிப்பதற்கு முந்தி அவ்விதஞ் செய்ய தகுந்த ஆதாரங்களிருக்கிற தென்பதை எழுத்து மூலமாக உத்திரவு செய்துவிட்டு அதன் பிறகுதான் சம்மன் அல்லது வாரண்டு பிறப்பிவிக்க வேண்டும். அதற்கு முன் சம்மன் முதலியன அனுப்ப எவ்வித அதிகாரமுமில்லை. மாஜிஸ்டிரேட் தனக்குத் தெரிவிக்கப்பட்ட விஷயங்களை நன்றாக கவனித்து ஆலோஜித்து பொது நன்மையின் பொருட்டு எதிரிகளுக்கு ரிமாண்டு கொடுக்கவேண்டியது அவசியமான தென்பதை தனியான உத்திரவு எழுத்துமூலமாகச் செய்யவேண்டும். இனி கெடுதி நடக்குமென்ற அனுமானத்தின்பேரில் ரிமாண்டு கொடுக்கக்கூடாது. அப்பீல்தார்களை ஜூன்மாதம் 25ந் தேதி முதல் ஜூலை மாதம் 2 ந்தேதி வரையில் அடைத்து வைத்திருந்தது சட்ட விரோதமானது. இந்த கோர்ட்டு இ-லா-ரி 6 அலகபாத் 132, 14 அலகபாத் 45 இந்த தீர்மானங்களிற்கண்ட பிசகுகளே இந்தக் கேஸிலும் நடந்திருக்கின்றன; போலீஸார் அப்பீல்தார்களை பிடிப்பதற்கு முந்தியே சரியாக விசாரித்திருந்தால் இவர்கள் ஜூன் மாதம் 24 ந் தேதிக்கு முந்தியே விடுதலை செய்யப்பட்டிருப்பார்கள்.

ரிகார்டுகள் திருப்பியனுப்பப்பட்டன.

23 Indian Cases 497.

அலகபாத் ஹைகோர்ட்டு.

1912 - ௵த்திய கிரிமனல் அப்பீல் நம்பர் 449.

தீர்ப்பு 6 - 2 - 14.

ஜட்ஜிகள். ஸர் ஹென்ரி ரிசசேர்ட்ஸ் Kt சீவ் ஜஸ்டிஸ் ஜஸ்டிஸ் ஸர் P-C பனர்ஜி Kt	}	சக்கரவர்த்தி யவர்கள் (பிராஸிக்யூடர்) V ருமசச்சந்திர எதிரி

16. [இந்தியன் பெனல் கோடு].

16 வயதுக் குட்பட்ட பெண்ணொருவள் தன்னுடைய புருஷன் மாமனார் இவர்களின் சம்ரக்ஷணையினின்றும் தன் சுயேச்சையாக விலகி வழியிற்கண்ட ஒருவரிடம் அவருடைய பலவந்தம்

அல்லது மோசநடவடிக்கை யில்லாமல் அவரிடஞ் சிலகாலந் தங்கி யிருப்பது ஆசைவார்த்தை சொல்லி அழைத்துப் போதல் அல்லது ஸ்திரீசோரஞ் செய்தல் என்னுங் குற்றங்களாகா தென்பது.

குத்ரி என்ற 16 வயதுக்குட்பட்ட பெண் தனது மாமனார் வீட்டை விட்டு ஓடிப்போய்விட்டாள். எதிரி பிராமணனொருவனை வழியிற்கண்டு அவனுடன் காசியில் சில இரவுகளில் தங்கியிருந்தாள். பின்பு இருவரும் மிர்ஸாபூர் என்ற விடத்துக்குச் சென்றார்கள். அங்கே இவ்விருவருக்குள்ளும் மனஸ்தாபங்களேற்பட்டதின்பேரில் இவள் பிராது கொடுத்ததின்பேரில் எதிரியை வாரண்டிற் பிடித்து விசாரணைக்குக் கொண்டுவந்தார்கள். இவனை செஷ்ஷன் ஜட்ஜி பூர்த்தியாக விசாரித்தபோது தான் தன் புருஷன் மாமனார் இவர்கள் சம்ரக்ஷணையினின்றும் சுயேச்சையாக ஓடிவந்து விட்டதாகவும், இதற்கு முன்னு மவ்விதம் ஓடிவந்திருந்ததாகவும், தன்னுடைய சுயேச்சைப்படி எதிரியுடன் சேர்ந்திருந்ததாகவும் அவர் தன்னை மோசஞ் செய்யவில்லை யென்றும், ஏமாற்றவில்லை யென்றும், வாக்குமூலங்கொடுத்திருக்கிறாள். இதனால் எதிரி குற்றவாளியல்லவென்று செஷ்ஷன் ஜட்ஜி கண்டுபிடித்தது நியாயமானதென்றே அபிப்பிராயப்படுகிறோம். இ. பி. கோடு 366, 391 இந்த செக்ஷன்களின் வாசகங்கள் தாவா கேசுக்கு ஒற்றுமையானதாகவிருக்கவில்லை. இந்த பெண் குத்ரி தன்னிஷ்டப்படி வீட்டைவிட்டு வெளிப்பட்டு வந்திருக்கிறாளேயன்றி எதிரி யிவளை எவ்விதத்திலுந் தூண்டுதல் செய்யவேயில்லை; எதிரி பேரில் எவ்வித குற்றமும் ஏற்படவில்லை. அப்பீல் தள்ளுபடி செய்யப்பட்டது.

23 Indian Cases 478.

சென்னை ஹைகோர்ட்டு.

1913 வருஷத்திய கிரிமனல் ரெவிஷன் கேஸ் நம்பர் 675.

தீர்ப்பு 5 - 2 - 14.

ஜட்ஜி
மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள் } இராமசாமி அய்யர் எதிரி மனுதார்

17. [இந்தியன் பெனல்கோடு].

போக்கிய அடமானதாரன் போக்கிய சொத்தை ரிபேர் செய்வதற்கு அச்சொத்திலுள்ள மரத்தை வெட்டி யுபயோகிப்பது கெடுதிக் குற்றமாகா தென்பது.

ஒரு போக்கிய அடமான சொத்தில் சிலபாகத்தைப் பழுது பார்ப்பதற்காக அந்த அடமானசொத்திலிருந்த சில மரங்களைவெட்டி யுபயோகப்படுத்தினான். இவ்விதம் வெட்டியது இ. பி. கோடு 426 வது செக்ஷன்படி கெடுதிக் குற்றமாகுமென இந்தஅடமானதாரன் தெண்டிக்கப்பட்டான். இவ்விதந் தன்னைத் தெண்டித்தது சட்டவிரோதமானதென்று எதிரி இந்தக் கோர்ட்டில் ரெவிஷன் மனுக்கொடுத்திருக்கிறார். ஒருசொத்தைஒருவன் மற்றொருவனுக்கு அடமானம் வைத்தால் அடமானம் பெற்றவனுலுண்டாகும் நஷ்டங்களுக்கு அவன் பாத்தியப்படவேண்டுமென சட்டமேற்பட்டிருப்பதினாலே அடமான வீட்டின் ஒருபாகத்தைப் பழுது பார்ப்பதற்காக எதிரி பகிரங்கமாக மரங்களை வெட்டியிருப்பதானது அடமானம் வைத்தவனுக்கு கெடுதிசெய்ய வேணுமென்கிற கெட்ட எண்ணத்தை முன்னிட்டு செய்ததாகவாவது அல்லது அவ்வித நஷ்டங்களுண்டாகலாமென்றெண்ணிச் செய்ததாகவாவது எண்ணப்படக்கூடாது. அதனால் அப்பீல்தாருக்கு விதித்த தண்டனையை ரத்து செய்திருக்கிறோம். அவருக்கு விதித்த அபராதம் வாபஸ் செய்யப்படவேண்டும்.

23 Indian Cases 498.

சென்னை ஹைகோர்ட்டு.

1911 வருஷத்திய அப்பீல் நம்பர் 243.

தீர்ப்பு 3 - 4 - 14.

ஜட்ஜிகள்
ஜஸ்டிஸ் வாலிஸ் அவர்கள்
ஜஸ்டிஸ் சதாசிவய்யாவர்கள் } நாகரம்பள்ளி காமேசம் அப்பீல்தார் வாதி
V
நாகரம்பள்ளி புச்சம்மாலு எதிர்கக்ஷிக்காரர் (பிரதிவாதிகள்)

43. [இந்து லா].

ஸ்வீகாரஞ் செய்துகொள்ள சமீப தாயாதி சம்மதிக்காவிட்டால் தூர தாயாதிகளிடம் சம்மதிபெற்று ஸ்வீகாரஞ் செய்துகொள்ளலாமென்பதும், எந்தக்காலத்திலாவது எந்தப்பையனையாவது ஸ்வீகாரஞ் செய்துகொள்ளலாமென்று அனுமதி கொடுப்பது செல்லுபடியுள்ளதென்பதும்.

புச்சம்மா என்ற விதந்து தன்னுடைய புருஷனின் சமீப தயாதியாகிய காமேசம் என்ற வாதியை தான் தன் புருஷனுக்

காக ஸ்வீகாரஞ்செய்துகொள்ள வேண்டுமென அனுமதி கேட்டான். வாதி அனுமதி கொடுக்கமாட்டேனென்று சொல்லிவிட்டதால் தூர தாயாதிகளிடம் அனுமதிபெற்று 2-ம் பிரதிவாதியை ஸ்வீகாரஞ்செய்துகொண்டாள். அவர்கள் எந்தக் காலத்திலாவது எந்தப் பிள்ளையையாவது ஸ்வீகாரஞ் செய்துகொள்ளலாமென்றும் அடுத்தடுத்து ஸ்வீகாரஞ் செய்து கொள்ளலாமென்றும் அனுமதி கொடுத்துவிட்டார்கள். அந்தப்படி விதந்துவான முதற் பிரதிவாதி 2-ம் பிரதிவாதியை ஸ்வீகாரஞ் செய்துகொண்டுவிட்டதால் வாதி இந்த ஸ்வீகாரம் இந்துலாப்படி செல்லத்தகுந்ததல்லவென்று வழக்கிட்டார். கீழ் கோர்ட்டார்கள் வாதியின் வழக்கைத் தள்ளுபடி செய்துவிட்டதால் இந்தக்கோர்ட்டில் இரண்டாவது அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது.

சமீப தாயாதியாகிய வாதியைக் கேட்காமலும் வாதியிடம் அனுமதி பெருமலும் விதந்து 2-ம் பிரதிவாதியை ஸ்வீகாரஞ் செய்துகொண்டது இந்து லாப்படி செல்லத்தகுந்ததல்லவென்றும், தூர தாயாதிகள் அனுமதிகொடுத்தது பொதுவாகவிருப்பதால் அது செல்லத்தகுந்ததல்லவென்றும், அடுத்து அடுத்து ஸ்வீகாரஞ் செய்துகொள்ளும்படி அனுமதி கொடுத்ததுஞ் செல்லத்தகுந்ததல்லவென்றும், வாதி வக்கில் கக்ஷியாடுகிறார்.

விதந்து 2-ம் பிரதிவாதியை ஸ்வீகாரஞ் செய்தது இந்துலாப்படி செல்லத்தகுந்ததல்ல வென்று, அதை வியாஜ்ஜிய மூலமாகக் கண்டு இந்த வழக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. 2-ம் பிரதிவாதி இந்த வழக்கின் மத்தியிலிறந்துவிட்டான். கோர்ட்டுச் செலவு தொகை யார் யாருக்குக் கொடுக்கவேண்டும் என்பதற்காகமட்டில் ஸ்வீகாரம் செல்லுமா செல்லாதா வென்ற விஷயத்தை தீர்மானிக்கவேண்டியதாக விருக்கிறது. விதந்துவுக்குக் கொடுபட்ட அனுமதி எந்தகாலத்திலாவது எந்தப்பையனையாவது ஸ்வீகாரஞ் செய்துகொள்ளலாமென்று பொதுவாகச் சொல்லப்பட்டிருப்பதால் அது இ. லா. ரி. 26 சென்னை 681 தீர்மானத்தில் கண்டபடி செல்லுபடியற்றதென்று வாதி கக்ஷியாடுகிறார். இந்தத் தீர்மானம் தாவா கேசுக்கு ஒற்றுமையானதல்ல. அதில் அனுமதி கொடுத்தபடி உடனே ஸ்வீகாரமெடுத்துக்கொள்ளாமல் நீண்டகாலங் கிரமித்து எடுத்துக்கொள்ளப்பட்டது. அந்தக்காலத்தில் அனுமதி கொடுத்தவர்களுமிறந்து விட்டார்கள். அவை

கேஸ் அந்தப்படிக்கல்ல. இந்தகேசில் விதந்து முதற்பிரதிவாதி நல்ல எண்ணத்துடன் நல்ல நம்பிக்கையின்பேரில் ஸ்வீகாரஞ் செய்துகொள்ளவேண்டுமெனக் கேட்டதால் தயாதிகள் அவளை நம்பி அவள் கேட்டுக்கொண்டபடியே அனுமதி கொடுத்தார்கள். இவளுடனே அந்த அனுமதிகொடுத்தவர்களெல்லாம் ஜீவந்தர்களாயிருக்கும்போதே ஸ்வீகாரஞ் செய்துகொண்டுவிட்டாள். அடுத்து அடுத்து ஸ்வீகாரஞ் செய்துகொள்ள அனுமதி கொடுத்தது செல்லத்தகுந்ததல்லவென்று ஆக்ஷேபிக்கப்படுகிறது. 2-ம் பிரதிவாதியை உடனே ஸ்வீகாரஞ் செய்துகொண்டுவிட்டதால் இந்த விஷயம் செல்லுமா செல்லாதா வென்பதைப்பற்றி ஆலோசிக்கவேண்டியது அனாவசியம். சமீபதாயாதியாகிய வாதியைக் கேளாமல் தூரதாயாதிகளிடம் அனுமதி பெற்றது செல்லத்தகுந்ததல்லவென்பது அடுத்த ஆக்ஷேபனை. முதற் பிரதிவாதி வாதியை அனுமதி கேட்டதும், வாதி அனுமதி கொடுக்கமாட்டேனென்று சொன்னதும் டிபென்ஸ் 1-2-5-6 சாக்ஷிகளால் ருஜூப்பிக்கப்பட்டிருக்கிறது. வாதி முதல் பிரதிவாதிக்கு செலவு தொகை கொடுக்கும்படி தீர்மானித்து அப்பீலைத் தள்ளுபடி செய்கிறோம்.

1 Law Weekly 511.

சென்னை ஹைகோர்ட்டு.

1912 வருஷத்திய 2 வது அப்பீல் நம்பர் 1496.

தீர்ப்பு 9-4-14.

ஜட்ஜிகள்.	சகிரெட்டி அப்பால ஸ்வாமி வாதி அப்பீல்தாரன்
ஜஸ்டிஸ் டியாப்ஜி அவர்கள்	V
ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர் அவர்கள்	சகிரெட்டி வெங்கண்ணு ஆ. பிரதிவாதிகள்.

44. [இந்து லா].

ஒரு விதந்து தன் புருஷன் சொத்தின் வரும்படியைக்கொண்டு புருஷனுடைய கடனின் வட்டித் தொகையைக் கொடுக்கவேண்டுமென்பதும், அந்த வரும்படி இவளுடைய காலக்ஷேபத்துக்குமட்டில் போதுமானதாக யாதொரு மிகுதியு மில்லாதிருக்குமானல் அவள் தன் புருஷன் சொத்தைப் பராதீனஞ் செய்யலா மென்பதும்.

ஒரு இந்து இறந்த காலத்தில் அவருக்கு ரூ 500 கடனிருந்ததாகவும், அவருடைய விதந்து அதன் அசல் வட்டித் தொகைகளுக்கு அவளுடைய புருஷன்சொத்துக்களைப் பராதீனஞ்செய்துவிட்டதாகவும், அவள் புருஷன் சொத்தின் வரும்படிகளைக்கொண்டு வட்டியை யுளவடைத்திருக்கலாமென்றும், அதனால் விதந்து செய்த பராதீனஞ் செல்லத்தக்கதல்லவென்றும், சமீப அனந்தரவார்சாகிய அப்பீல்தாரன் வழக்கிட்டார். பிரதிவாதிகள் நல்ல எண்ணத்துடன் சாசனம் பெற்றிருப்பதாகவும், அசல் வட்டித் தொகை பூராவுக்கும் தாவா சொத்து கட்டுப்படக் கூடியதென்றும், கீழ் கோர்ட்டார்களிருவருந் தீர்மானஞ் செய்துவிட்டார்கள். தாவா சொத்தின் வரும்படியைக்;கொண்டு வட்டி யுள்வடைத்திருக்க முடியாதென்று டிஸ்டிரிக்ட் முனிசீப் தீர்மானஞ் செய்திருக்கிறார். 3 அடையாள ஆதிரவில் இறந்த மூலபுருஷனால் கொடபடவேண்டியதாகவிருந்த அசல் தொகை யின்னதென்றும், அதற்கு வட்டித் தொகை எவ்வளவாயிற்றென்றும், கீழ் கோர்ட்டார்கள் கண்டு பிடிக்கவில்லை யென்றும், அதுவிஷயமாக தீர்மான மேற்படுத்தவேண்டிய தவசியமென்றும் வாதி இந்தக் கோர்ட்டில் அப்பீல் செய்திருக்கிறார்.

இது விஷயமாக கீழ் கோர்ட்டார்கள் விபரமாக தீர்மானஞ் செய்யாதிருப்பது உண்மையே. தாவாவிற் கண்ட நிலம் நல்ல வளமுடையதென்று வாதியின் சாக்ஷிகள் சொல்வதைத் தான் நம்பவில்லையென்று டிஸ்டிரிக்ட் முனிசீப் சொல்லியிருக்கிறார். இதனால் தாவா நிலத்தின் வரும்படியைக் கொண்டு வட்டி யுள வடைத்திருக்க நியாயமில்லை. பிரதிவாதிகள் நல்ல எண்ணத்துடன் சாசனம் பெற்றவர்கள். ருஜுக்களை சரியாக கவனிக்கும்பட்சத்தில் பராதீனஞ் செய்தது செல்லத்தகுந்ததென்பதே கீழ்கோர்ட்டார்களின் தீர்மானம். அதனால் மேலே சொன்ன பயிண்டிங் ஏற்படுத்தி விசாரிக்கச் செய்யவேண்டியது அனாவசியம். இந்த இரண்டாவது அப்பீல் செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

1914 Madras Weekly Notes 488.

சென்னை ஹைகோர்ட்டு.

1909 வருஷத்திய சிவில் அப்பீல் நம்பர் 126.

தீர்ப்பு 9—4—14

ஜட்ஜிகள் ஸர் ஆர்னால்ட் வொயிட் Kt சீவ் ஜஸ்டிஸ் அவர்கள் மிஸ்டர் ஜஸ்டிஸ், சேஷகிரி அய்யரவர்கள்	கோமத்தம் ராமானுஜ அய்யங்கார் ஜூ வாதிகள் (அப்பீல்தாரர்கள்) V சடகோபாசாரியார் ஜூ பிரதி வாதிகள்(எதிர்க்கக்ஷிக்காரர்கள்)

45. [இந்துலா].

ஒரு இந்து தனது பெண்ஜாதி அல்லது பெண்ணுக்கு சொத்துக் கொடுத்தால் மட்டில் அது அவர்களின் ஆயுள்பரியமுள்ள பாத்தியதைக்குக் கொடபட்டதாக எண்ணப்படவேண்டியதே யன்றி, மற்றக்கேஸ்களில் அத்தறுதியான பாத்திய முடையவரென்றேதீர்மானிக்கப்பட வேண்டுமென்பது.

அமிர்தத்தம்மாள் என்ற ஒருவளுக்கு அவளின் சிற்றப்பன் சில சொத்துக்களை உயில் மூலமாகக் கொடுத்தார். இச்சொத்துக்கள் இவளுக்கு அத்தறுதியான பாத்தியதையுடன் கொடபட்டதென்பது வாதிகளின் விவாதம். இவை அமிர்தத்தம்மாள் ஜீவதிசையில் மட்டில் அனுபவிக்கும்படியான பாத்தியமென்பது பிரதிவாதிகளின் கக்ஷி. கீழ்கோர்ட்டார் தாவா சொத்துக்கள் அமிர்தத்தம்மாளுக்கு அத்தறுதியான பாத்தியதையுடன் கொடபட்டதாகத் தீர்ப்பு செய்து விட்டார்கள். அத்தீர்மானம் பிசகானதென்று பிரதிவாதிகள் இந்தக் கோர்ட்டில் அப்பீல் செய்திருக்கிறார்கள்.

ஒரு சொத்து ஒரு ஸ்திரீக்கு கொடபட் டிருக்கிறதென்ற காரணத்தைக் கொண்டு அது அவளுக்கு அத்தறுதியாக கொடபட்டதல்ல வென்று சொல்லக்கூடாது. அடியிற்கண்ட நான்கு காரணங்களைக்கொண்டு தாவா சொத்துக்கள் அமிர்தத்தம்மாளுக்கு அத்தறுதியாக கொடபட்டதென்று தீர்மானிக்கிறேன். இச்சொத்து அமிர்தத்தம்மாளுக்கு கொடபட் டிருக்கிறதென்று உயிலிற் சொல்லப்பட் டிருக்கிறது. இதற்கு அத்தறுதியாக கொடபட்டதென்றே அர்த்தஞ் செய்யவேண்டும். இந்த அமிர்தத்தம்மாளுடன் ஒரு ஆண்பிள்ளைக்குஞ் சேர்த்து சொத்து கொடபட்டிருக்கிறது. இதனால் இ. லா. ரி. 31 சென்னை 179 தீர்மானத்திற் கண்டபடி இவ்விருவரும் அத்தறுதியாக அனுப

விக்கும்படிக்கே. கொடுபட்டதாக எண்ணப்பட வேண்டும். இதுவன்றி தர்மத்துக்காக சில சொத்துக்கள் இந்த உயிலிற்கண்டிருக்கிறது. அது அத்தறுதியான பாத்தியதையுடன் கொடுபட்டதல்லவென்று சொல்லக்கூடாது. அது போலவே தாவா சொத்தும் எண்ணப்படவேண்டும். தாவா சொத்து வார்சுபாத்திய மில்லாத அன்னிய ஸ்திரீ யொருவளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைக்கொண்டும் தாவா சொத்து அத்தறுதியான பாத்தியதையுடன் கொடுபட்டதாகவே எண்ணப்படவேண்டும். இதனலிந்த அப்பீல் செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

24 Indian Cases 20.

அலகபாத் ஹைகோர்ட்டு.

1913 வருஷத்திய நிறைவேறு மனு அப்பீல் நம்பர் 659.

தீர்ப்பு 15—4—14

ஜட்ஜி. மிஸ்டர் ஜஸ்டிஸ் பிக்கார்ட் அவர்கள்.	அலி ஆமத். டிக்கிரிதாரன் அப்பீல்தார்கள் V ஸோகன்லால்வூ டிக்கிரிகடன் காரர் வூ

46. [இந்துலா].

இந்து குடும்பத்தில் தகப்பன் குடும்ப அவசியச் சேலவுகளுக்கல்லாமல் வேறு சேலவுகளுக்கு குடும்ப சொத்துக்களை பெந்தகம் வைத்தால் அக்கடனுக்குத் தகப்பன் பாக சொத்தும் கட்டுப்படமாட்டாதேன்பது.

பிரசாதிலால் என்ற இந்து ஒருவன் தன்குடும்ப சில சொத்தை அப்பீல்தாருக்கு பெந்தகம் வைத்தார். இதன்பேரில் அப்பீல்தார் 1910 வருஷம் மார்ச்சு மாதம் 1ந் தேதி பிரதம டிக்கிரி பெற்ருர். இது 1910 வருஷம் டிஸம்பர் மாதத்தில் உறுதிசெய்யப்பட்டது. இந்த பிரசாதிலால் 1912 வருஷம் பிப்ரவரி மாதத்தில் இறந்தார். டிக்கிரிதாரனுகிய அப்பீல்தார் தாவா பெந்தக சொத்தை 1912 வருஷம் மார்ச்சு மாதத்தில் ஏலவிற்று முதனுக்குக் கொண்டுவந்தார். இந்த பெந்தகக்கடன் குடும்ப பூர்வீகக் கடன்களை தீர்க்கவேண்டியதற்காவது அல்லது குடும்ப அவசியச்

செலவுகளுக்காவது ஏற்பட்டதல்லவென்றும், அதனுல் தாவா பெந்தக சொத்துக்கள் அந்தக்கடன்களுக்குக் கட்டுப்படக் கூடியதல்லவென்றும், பிரசாதிலாலினுடைய பிள்ளைகள் பாத்தியஸ்தாபன வழக்குக் கொண்டுவந்தார்கள். ஆனல் இந்தக்கடன் துன்மார்க்கச் செலவுகளுக் கேற்பட்டதாகச் சொல்லவில்லை. முதல் கோர்ட்டார் இந்த பாத்தியஸ்தாபன வழக்கை சிவில் புரிஸீஜர் கோடு 47 வது செக்ஷன்படி ஆக்ஷேபனை மனுவாக அங்கீகரித்துக்கொண்டு விசாரித்து அப்பீல்தாருடைய நிறைவேறு மனுவைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். கீழ் அப்பீல் கோர்ட்டாரும் இதை யுறுதிசெய்து விட்டதால் இந்தக் கோர்ட்டில் அடியிற்கண்ட ஆதாரங்களின்பேரில் டிக்கிரிதாரர் அப்பீல் செய்திருக்கிறர்.

(1) தாவாகடன் தகப்பனுடைய துன்மார்க்கக் கடனல்லவாகையால் தகப்பன் கடன்களைக் கொடுக்க பிள்ளைகள் சாஸ்திரப்படி கடமைப்பட்டிருக்கிறர்கள். அதனலிந்த ஏலவிற்று முதலை அவர்கள் ஆக்ஷேபிக்க நியாயமில்லை.

(2) தாவா கடனுக்குப் பிள்ளைகளை கட்டுப்படுத்தக் கூடாதென்று ஏற்பட்டாலும் தகப்பன் இந்த பிள்ளைகளுடன் பாகப்பிரிவினை செய்துகொண்டால் எந்த சொத்து தகப்பன்பாகத்துக்குக் கிடைக்கக்கூடியதோ அந்த பாகமாவது தாவாக் கடனுக்கு கட்டுப்படக்கூடியது.

அப்பீல்தார் தன்னுடைய முதலாவது கக்ஷிக்கு ஆதாரமாக இ. லா. ரி. 14 அலகபாத் 179 தீர்மானத்தை யெடுத்துக்காட்டுகிறர். இது இப்பாலேற்பட்ட 31 அலகபாத் 176 தீர்மானத்தினல் மறுக்கப்பட்டிருக்கிறது. குடும்பச் செலவுகளுக்கன்றி வேறெந்தச் செலவுகளுக்கும், தகப்பன் குடும்பச்சொத்தைப் பராதீனஞ் செய்யக்கூடாதென்று இ. லா. ரி. 31 அலகபாத் 507 தீர்மானமேற்பட்டிருக்கிறது. இதனல் கீழ்கோர்ட்டார்கள் அப்பீல்தாருடைய நிறைவேறு மனுவைத் தள்ளுபடி செய்தது மெத்த நியாயமானது. தாவா பெந்தக சொத்துக்கள் தகப்பன் ஜீவதிசையிலேயே ஏலவிற்று முதல் செய்யப்பட்டு பிள்ளைகள் இது விஷயமாக ஆக்ஷேபனை செய்யாதிருந்துவிட்டால் பெந்தக டிக்கிரித் தொகை முழுவதும் கொடாமல் ஏலத்தை ரத்து செய்ய முடியாது. பெந்தக டிக்கிரி செய்யப்பட்டிருப்பதால் தகப்பன்

பாக சொத்தாவது கட்டுப்படக்கூடியதென அப்பீல்தார் கக்ஷி சொல்லுகிறார். பிள்ளைகள் இந்த நம்பரில் பிரதிவாதிகளாகச் சேர்க்கப்பட்டிருக்கும்பட்சத்தில் இப்போது செய்யும் ஆக்ஷேபணைகளை முந்தி செய்திருப்பார்கள். தாவா பெந்தகம் அப்போதே ரத்து செய்யப்பட்டிருக்கும். (12 இந்தியன் கேஸஸ் 178 தீர்மானத்தைப் பார்க்க) இதனால் இந்த அப்பீல் செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

24 Indian Cases 6.

பம்பாய் ஹைகோர்ட்.

1913 வருஷத்திய ஒரிஜனல் சயிட் அப்பீல் நம்பர் 58.

தீர்ப்பு. 2—2—14.

ஜட்ஜிகள் ஸர் பேஸில் ஸ்காட் Kt. ஜஸ்டிஸ் அவர்கள்.	பச்சு ஹரிகிஷன்தாஸ் பிரதிவாதி அப்பீல்தார்
	V
மிஸ்டர் ஜஸ்டிஸ் பாச்சலர் அவர்கள்	நாகின்தாஸ் பகவன்தாஸ் வாதி எதிர்க்கக்ஷிக்காரர்.

47. [இந்து லா].

அவிபக்த இந்துக் குடும்பத்தில் மூலபுருஷனுடைய சொந்தப் பிள்ளையின் ஸ்வீகாரப் பிள்ளைக்கும், மற்றொரு சொந்தப் பிள்ளையின் பிள்ளைக்கும் பாகப்பிரிவினை செய்யப்படும் பட்சத்தில் அந்த ஸ்வீகாரப் பிள்ளைக்கு ஐந்திலொரு பாகமும் மற்ற ஐந்தில் நாலுபாகம் சொந்தப் பிள்ளையின் பிள்ளைக்கும் கிடைக்குமென்பது.

நாகர்தாஸ் என்ற மூலபுருஷனுக்கு ஹரிகிஷன்தாஸ் பகவன்தாஸ் என்ற இரண்டு பிள்ளைகள். இந்த ஹரிகிஷன்தாஸ் 1900 செப்டம்பர் மாதம் இறந்தார். அப்போது இவர் விதந்து கெர்ப்பிணியாயிருந்து 1900 வருஷம் டிஸம்பர் 18 தேதி பிரதிவாதியாகிய பாச்சுவைப் பெற்றாள். பகவன்தாஸ் 1900 வருஷம் டிஸம்பர் மாதம் 17 தேதி இறந்தார். இவர் விதந்து வாதி நாகின்தாஸை 1901 வருஷம் பிப்பரவரி மாதத்தில் சாஸ்திரோக்தமாக ஸ்வீகாரஞ் செய்துகொண்டாள். உபயவாதிகளும் மிடாக்ஷரா ஸ்மிருதியை யனுசரித்து நடப்பவர்கள். வாதி தனக்குக் குடும்ப சொத்தில் சமபாதி பிரித்துக் கொடுக்கப்படவேண்டுமென வழக்கிட்டார். ஸ்வீகாரப்பிள்ளைக்கு சொந்தப்பிள்ளைக்குக் கிடைக்க

கூடியதில் நாலிலொரு பாகந்தான் கிடைக்கக்கூடியதெனப் பிரதிவாதி கக்ஷியாடினார். வாதியின் தாவாப்படியே வாதிக்கு சமபாதி கிடைக்கக்கூடியதென்று கீழ் கோர்ட்டார்கள் தீர்ப்பு செய்துவிட்டார்கள். அதனால் பிரதிவாதி இந்த அப்பீல் செய்திருக்கிறார்.

ஸ்வீகார விஷயங்களில் தத்தக சந்திரிகாதான் பிரதானமான சட்டமாக வழங்கி வருகிறது. (இ லா.ரி. 14 பம்பாய் 249, பக்கம் 259-யை பார்க்க.) ஒருவன் ஒரு பிள்ளையை ஸ்வீகாரஞ் செய்துகொண்டபிறகு தனக்கு பிள்ளை பிறந்துவிட்டால் சொந்த பிள்ளைக்கு எவ்வளவு கிடைக்குமோ அதில் நாலிலொருபாகந்தான் ஸ்வீகாரப் பிள்ளைக்குக் கிடைக்குமென்று எக்ஞவல்கியம் 25-வது அத்தியாயத்தில் (Placitum) சொல்லப்பட்டிருக்கிறது. கார்த்தியாயனரிஷியும் இவ்விதமாகவே சொல்லியிருக்கிறார். வசிஷ்டர் சாஸ்திரத்தை யனுசரித்துத்தான் தத்தகாசந்திரிகா சொல்லப்பட்டிருக்கிறது. இதனால் வாதிக்கு ஒரு பங்கும் பிரதிவாதிக்கு நாலுபங்குமாகப் பிரித்துக்கொடுக்கும்படி தீர்ப்பு செய்கிறோம்.

23 Indian Cases 912.

பிரிவிகவுன்ஸல்.

பம்பாய் ஹைகோர்ட்டு தீர்ப்பின்பேரில் அப்பீல்.

தீர்ப்பு 17-3-14.

ஜட்ஜிகள். லார்ட் ஷா அவர்கள்	சூனிலால் பார்வதி சங்கர் அப்பீல்தார்
	V
லார்ட் மௌல்டன் அவர்கள் மிஸ்டர் அமீர் ஆலி அவர்கள்	பாய்சாம்ராத்-எதிர்க்கக்ஷிக்காரர்.

3. [இந்து உயில் ஆக்டு.]

இந்து தகப்பன் தன் சுயார்ஜித சொத்துக்களைப் பற்றி எழுதி வைத்த உயிலில் தன் பிள்ளைகள் தன் சொத்துக்களைத் தன் ஜீவதிசைக்குப் பிறகு அனுபவித்து வருகிறதென்றும், தன்பிள்ளைகளிலெவராவது ஆண்சந்ததி யன்னியிலிறந்தால் அச்சொத்தை மற்றப் பிள்ளைகளடைகிறதென்றும், எழுதியிருந்தால் அது இந்துலாப்படி செல்லத்தகுந்த தென்பது.

சூரத் நகரில் பார்வதி சங்கர் அர்காசங்கர் என்ற இந்து ஒருவரிருந்தார். அவருக்கு சம்புபிரசாத், சூனிலால், சுராஜ்லால்

என்ற மூன்று குமாரர்கள். அவர்களில் சுராஜ்லால் தகப்பன் பார்வதி சங்கர் ஜீவதிசையிலேயே இறந்துவிட்டார். இந்த பார்வதி சங்கர் தனக்குள்ள சுயார்ஜித சொத்துக்களைப்பற்றி ஒரு வித உயில் செய்தார். தனது ஜங்கம சொத்துக்களை தன்னுடைய ஜீவ திசையிலேயே தன்னுடைய குமாரர்கள் சம்பு பிரசாத் சூனிலால் இவர்களுக்கு சமபாகமாகக் கொடுத்துவிட்டதாகவும், வெள்ளி பொன் ஆபரணங்களைப்பற்றியும் ஏற்பாடுகள் செய்துவிட்டதாகவும் அவருக்குச் சொந்தமான ஸ்தாபர சொத்துக்களை மேற்சொன்ன பிள்ளைகளிருவரும் அடியிற்கண்ட நிபந்தனைக்குட் பட்டு சமபாதியாகப் பிரித்து எடுத்துக்கொள்ளுகிற தென்றுங் கண்டிருக்கிறது. அந்த நிபந்தனை யாவன.

மேலே சொன்னபடி என்னுடைய எல்லாச் சொத்துக்களையும் என்னுடைய குமாரர்கள் சம்பு பிரசாத் சூனிலால் இவர்களுக்குப்பங்கிட்டுக் கொடுத்துவிட்டேன். இந்தப்பிள்ளைகளில் எவனாவது ஆண்சந்ததியன்னியில் இறந்துபோனால் அந்த இறந்து போனவனுடைய எல்லாச் சொத்துக்களையும் ஜீவந்தனாக விருக்கும் பிள்ளையடையவேண்டியது. ஆனால் அவன் இறந்தவனுடைய மனைவி பெண்கள் இவர்களை சம்ரெக்ஷித்து வரவேண்டியதுமன்றி மைனர் பெண்களுடைய கலியாணச் செலவுகளுஞ் செய்துவரவேண்டும். என்னுடைய இறந்த குமாரன் சுராஜ் லாலினுடைய பிள்ளைக்கு இந்தச் சொத்தில் எந்த பாத்தியமுங் கிடையாது. இவ்விதம் உயில் செய்துவைத்த இரண்டு வருடங்களுக்குப் பின் பார்வதி சங்கர் 1901 வருஷத்திலிறந்தார். இவரிறக்கும்போது உயிலிற்கண்ட இரண்டு பிள்ளைகளும் ஜீவந்தர்களாயிருந்தார்கள். சம்புபிரசாத் 1903 வருஷத்திலிறந்தார். அவருக்கு அவருடைய விதந்து பாய்சம்ராத் அப்பீல்தாரியும், இரண்டு பெண்களும் வார்சுகளாயிருந்தார்கள். இறந்த சம்புபிரசாதின் சொத்துக்கள் விஷயமாக அவருடைய விதந்துவுக்கும், அவர் சகோதரன் சூனிலாலுக்கும் விவாதமுண்டாயிற்று. இந்த சூனிலால் தன் தகப்பன் எழுதிவைத்த உயிலின் ஷரத்துப்படி இறந்த சம்புபிரசாதின் யாவற்றுச் சொத்துக்களையும் தானடைய பாத்தியஸ்தனென்பதாக பாத்தியஸ்தாபன வழக்கும், பிரதிவாதி அவைகளில் பிரவேசிக்காமல் இன்ஜெங்ஷன் பரிகாரமுங் கேட்டார். சப் ஜட்ஜி வாதியின் தாவாப்படியே தீர்ப்புசெய்து

விட்டார்கள். இது டிஸ்டிரிக்ட் கோர்ட்டாராலும் உறுதிசெய்யப்பட்டது. இதைப்பற்றி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்ததில் ஆண்சந்ததியில்லாமலிருப்பவரின் சொத்துக்களை ஜீவந்தராயிருக்கும் சகோதரன் அடையவேண்டுமென்று உயிலிற் சொல்லியிருப்பது உயிலெழுதிவைத்தவரின் ஜீவதிசையிலிறக்கும் பிள்ளைகளைப் பற்றிச் சொன்னதேயன்றி இவரிறந்த பிறகு இருக்கும் பிள்ளைகளைப்பற்றிச் சொன்னதல்லவென்றும், சுராஜ்லாலுடைய பிள்ளைகளுக்கு இச்சொத்தில் எவ்வித பாத்தியமுமில்லையென்று உயிலிற் சொல்லப்பட்டிருப்பதால் மேற்கண்ட விஷயம் நன்றாக விளங்குகிறதென்றும், பிரதிவாதியின் அப்பீலையங்கீகரித்து வாதியின் வழக்கைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். அதன்பேரி லிந்த அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது.

உயிலின் வாசகங்களினால் உயில் செய்தவரின் ஜீவதிசையிலிறக்கும் பிள்ளைகளைப்பற்றி சொன்ன விஷயமாகத் தெரியவில்லை. ஹைகோர்ட்டார் உயிலுக்கு அர்த்தஞ் செய்தது சரியல்ல. ஆண் சந்ததியன்னியி லிறப்பவரின் மனைவி பெண்கள் இவர்களை ஜீவந்தராயிருக்கும் சகோதரன் சம்ரெக்ஷித்து வரவேண்டுமென்று சொல்லப்பட்டிருப்பதினால் உயில் செய்தவரின் ஜீவதிசைக்குப் பிறகு நடக்கவேண்டிய விஷயங்களைப் பற்றிச் சொல்லப்பட் டிருக்கிறதென்பது ஸ்பஷ்டமாகத் தெரிகிறது. இதனால் இறந்த சம்பு பிரசாதின் சொத்துக்களை சூனிலால் அடைய பாத்தியஸ்தராகிறார். எதிர்கக்ஷிக்காரர் அனுபோகத்தில், இறந்த உயில் செய்தவரின் சொத்துக்கள் ஏதாவது இருக்கின்றனவா வென்பதைப்பற்றி அப்பீல் தாருக்குத் தெரியாதென்றும் அவர் வக்கீல் ஒப்புக்கொள்ளுவதினாலே பிரதிவாதி விதந்துவுக்கு அவள் புருஷனுடைய ஜீவதிசையிலேயே கொடுபட்ட சொத்துக்களைப்பற்றி வாதி வழக்கிட நியாயமில்லையென்று எதிர்கக்ஷி சொல்லப்படுகிறது.

இந்த விவாதம் சரியானதாகத் தோற்றவில்லை. இந்த நடவடிக்கை விஷயமாக டிஸ்டிரிக்ட் ஜட்ஜி செய்த தீர்மானத்தில் நாங்கள் பிரவேசிக்கக் கூடாது. ஆகையால் இந்த அப்பீலையங்கீகரித்து எதிர்கக்ஷிக்காரர் விதந்து அவள் பெண் இவர்களின் ஜீவனாம்சத்திற்கும் அந்தப் பெண்ணின் கலியாணச் செலவுகளுக்கும் தகுந்த ஏற்பாடு ஹைகோர்ட்டார் செய்யவேண்டியு

தென்றும், அந்த ஏற்பாடு செய்தபின் வாதி கேட்ட பாத்தியஸ் தாபனம் இன்ஜங்ஷன் பரிகாரங்கள் கிடைக்கக் கூடியதென்றும், தீர்ப்பு செய்ய மாக்ஷிமை தங்கிய சக்கரவர்த்தி யவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

1914 Madras Weekly Notes 441.

சென்னை ஹைகோர்ட்

1910 ஷுத்திய அப்பில் நம்பர்கள் 139, 210.
1911 ஷுத்திய அப்பில் நம்பர்கள் 224, 225.
தீர்ப்பு 12 - 12 - 13.

ஜட்ஜிகள்
ஜஸ்டிஸ் மில்லரவர்கள்
ஜஸ்டிஸ் சதாசிவய்ய ரவர்கள்

அபடல் ரிகிமான் நாச்சியாள் (பிரதிவாதி) அப்பீல்தாரி (139,224)
V
மீ ராதாயாரம்மாள் ஆ; எதிர் கக்ஷிக்காரர் (வாதியும் பிரதிவாதிகள் 3 முதல் 13)

முகமது நூர்தீன் மாக்காயர் (13பிரதிவாதி) அப்பீல்தார் 210, 225 நம்பர்கள்.
V
மீராதாயாரம்மாள் ஆ. வாதியும் (1-3 முதல் 12 பிரதிவாதிகள்)

6. [மகமதியவர]

பெயரிரவல் என்ற கக்ஷிசோல்லுகிறவர் அதை திருப்திகரமாக ருஜுப்பிக்க வேண்டு மென்பதும் பெயரிரவ லென்று சோல்லப்ப டும் விஷயங்களிம் கிரயத்தோகை யாரிடமிருந்து கோடுபட்ட தென் பதும், சாசனத்தோகை கோடுத்தவரின் நன்மையின் போருட்டு வா ங்கப்பட்ட தென்பதும் அந்தந்த சந்தர்ப்பங்களைக் கோண்டு தெரிந்து கோள்ளவேண்டு மென்பதும், யாரிடத்தில் சோத்து ஸ்வாதீன மிரு க்கிற தென்றும் அதன் வரும்படிகளை யார் அடைந்து வருகிறு ரென் பதையும் தெரிந்துகோண்டு சோத்துக்குடையவர் யாரேன்பதை நிஷ்கரிக்க வேண்டு மென்பதும், இனுங்கோடுபட்டது சோத்து ஸ்வாதீனமு மிருந்தாலன்றி அது மகமதிய லாப்படி செல்லத் தகுந்த தல்ல வென்பதும்.

முகம்மது கவுஸ்மாக்காயர் என்பவர் ம. மு என்ற விலாசம் வைத்துக்கொண்டு பினுங்கினும் அதற்கு சுற்றுப்பட்ட விடங்களி

லும் 1882 வருஷம் முதல் அவரிறந்த 1904 வருஷம் அக்டோபர் மாதம் வரையில் வர்த்தகத் தொழில் நடத்தி வந்தார். வாதி அவருடைய சகோதரி, விதந்து வானவள், 1-முதல் 3 பிரதிவாதிகள், அவருடைய மனைவி, இறந்த முத்துக் கன்னியின் பெண்கள். பிராது 2 வது ஷிடியூல் 1 வது பாகத்திற் கண்ட ஜங்கம சொத்துக்களும் மேற்படி ஷிடியூல் 2 வது பாகத்திற் கண்ட ஸ்தாபர சொத்துக்களும்இறந்த முகம்மது கவுஸ்மரக்காயருக்குச் சொந்தமானவைக ளென்றும், அவைகளில் தனக்கு மகமதிய லாப்படி கிடைக்கக் கூடிய பாகம் பிரித்துக்கொடுபட வேண்டு மென்றும், வாதி நாகப்பட்டணம் சப்கோர்ட்டில் வழக்கிட்டாள். 2 வது ஷிடியூல் 2 - வது பாகத்திற் கண்ட ஸ்தாவர சொத்துக்களில் 1 முதல் 5 ஐடங்கள், 23 வது ஐடத்தில் சில பாகம். இவை நீங்கலாக மற்ற சொத்துக்கள் யாவும் முகமது கவுஸின் மனைவி முத்துக் கன்னிக்கு தனிமையிலும் சில அவளுக்கும் 1 முதல் 3 பிரதிவாதிகளுடன் கூட்டாகவுஞ் சொந்த மென்று 1 முதல் 3 பிரதிவாதிகள் கக்ஷியாடுகிறார்கள். இவர்கள் தங்கள் பெயராலும் தங்கள் தாயார் பெயராலும் சாசனங்களேற்பட்டிருப்பதால் அவை தங்களுக்குச் சொந்தமானவை யென கக்ஷிசொல்லுகிறார்கள். இதனால் 2 வது ஷிடியூல் 2 வது பாகத்திலுள்ள சொத்துக்களில் 6 முதல் 18, 19 முதல் 22 இந்த ஐடச் சொத்துக்களும், 23 வது ஐடத்தில் 3 வேலி நிலமும், இறந்த முகமது கவுஸால் தன்னுடைய மனைவி 1 முதல் 3 பிரதிவாதிகளாகிய பெண்கள் இவர்கள் பெயரால் பெயரிரவலாக வாங்கப்பட்டதா வென்ற இஷ்ஷியு ஏற்படுத்தப் பட்டது.

பிராது 2 வது ஷிடியூல் முதலாவது பாகத்திற்கண்ட ஜங்கம சொத்துக்கள் யாதொன்றும் இறந்த முகமது கவுஸ்மரக்காயருக்குச் சொந்தமா யிருக்கவில்லை யென்பது முதல் பிரதிவாதியின் விவாதம். வாதியும் 2, 3 பிரதிவாதிகளும்அந்த ஜங்கம சொத்துக்கள் முகமது கவுஸ்மரக்காயருக்குச் சொந்தமா யிருந்ததாக கக்ஷியாடுகிறார்கள். அதனால் இறந்த முகமது கவுஸுக்கு தாவாவிற் கண்ட ஜங்கம சொத்துக்களிருந்தனவா? இருந்தால் அவைகள்யார் வசமிருக்கின்றன என்ற இஷ்ஷியு ஏற்பட்டது. 14 வது ஐடம் 12 வது பிரதிவாதிக்குச் சொந்தமான தென்று தீர்மானித்துவிட்டார்கள்; அதைப் பற்றி அப்பீல் செய்யப்பட வில்லை.

A. என்பவர் பெயரா லேற்பட்ட சொத்து B யுடைய தென்று சொல்லுகிறவர்கள் அது விஷயத்தை ருஜூப்பிக்க கடமைப்பட்டவர்கள் என்பது உண்மையான விஷயமே. ஆனால் இவ்விந்திய வியாபாரிகளுக்குள் பெயரிவலாக சாசனங்கள் ஏற்படுவது சகஜமான தென்று மெயின்ஸ் இந்து லாவிற் சொல்லப்பட்டிருக்கிறது. தஞ்சை ஜில்லாவிலுள்ள மரக்காயர் வர்த்தர்களுக்குள் இவ் வழக்கங்கள் மிகுதியாக விருப்பதாக ருஜூப்பிக்கப்பட்டிருக்கிறது. இதனால் பெயரிவல் விஷயமாக ஜாஸ்தியான ருஜூபு வேண்டுவதில்லை. இவ்வித பெயரிவல் சாசனங்களிருப்பதை பிரிவிகவுன்ஸிலும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இந்தியா சட்டசபையாரும் இதுவிஷயமாக டிரஸ்டு ஆக்ட்டு 81,82 செக்ஷன்களில் விதிகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். தற்கால சட்டங்களின்படி நியாயாதிபதிகள் பெயரிவல் சாசனங்கள் செல்லுபடியுள்ளதென்று அதாவது யாருடைய நன்மைக்கு ஏற்பட்டதோ அவருடையதென்று தீர்மானிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆகிலும் இந்த பெயரிவல் விஷயமாகத் தகுந்த ருஜூக்கள் வேண்டும்.

இவ்வித பெயரிவல் விஷயங்களில் (1) சொத்து வாங்குவதற்கு யார் தொகை கொடுத்தது (2) யார் தொகை கொடுத்தார்களோ அவர்களின் நன்மைக்காக சாசனமேற்பட்டதென்பதற்கு சந்தர்ப்பங்களிருக்கின்றன (3) யாருடைய அனுபோகத்தில் சொத்துக்களிருக்கின்றன, வரும்படிகளை யார் அடைந்துவருகிறார்கள். இவ்வித ருஜூக்கள் வேண்டுவது மெத்த அவசியம். 4 அடையாள ஆதிரவிற்கண்ட 19, 20 ஐடசொத்துக்கள் முகம்மது கவுஸ் மரக்காயரின் ரூபாயைக் கொண்டு அவர் மனைவி முத்துக்கன்னி பெயரால் வாங்கப்பட்டதென்பதற்கு விசேஷ ருஜூக்களிருக்கின்றன. இந்த முத்துக்கன்னி பெயரால் ஏற்பட்ட 11, 12, 13, 15, 17, 18, 19 இந்த ஐடங்களைப்பற்றின வரையில் ருஜூ போதுமானதாக விருக்கவில்லை. ஆனால் இச்சொத்துக்களின் வரும்படிகள் முகம்மது கவுஸ்மரக்காயர் விலாசமுள்ள ம. மு கணக்கில் வந்திருக்கிறது. இதற்கேற்பட்ட முனிஸிபல் வரியும் முகமது கவுஸ் மரக்காயர் பெயராலே செலுத்தப்பட்டு வருகிறது. இவருடைய மனைவி பெயராலிருக்கப்பட்ட சொத்துக்கள் இவருடைய மனைவி பெண்கள் இவ்விருவர்கள் பெயராலேற்பட்ட சொத்

துக்கள், மனைவி பெயராலும் பேத்திகள் பெயராலுமேற்பட்ட சொத்துக்கள், இவர் பெயராலேற்பட்ட சொத்துக்கள் இவைகளின் வரும்படிகளெல்லாம் இந்த முகமது கவுஸ் மரக்காயர் கணக்கிலேயே ஏற்பட்டிருக்கிறது. இதனால் 6 முதல் 13 ஐடசொத்துக்கள் 15, 19 முதல் 22, 23 ஐடத்தில் சிலபாகம் இவைகள் மேற்கண்டபடி எவர்கள் பெயரா லேற்பட்டிருந்தபோதிலும் அவைகளெல்லாம் முகமதுகவுஸ் மரக்காயருக்குச் சொந்தமானதென்று சப் ஜட்ஜி தீர்மானஞ் செய்தது சரியானதென்றே நாங்களும் அபிப்பிராயப்படுகிறோம்.

ஜங்கமசொத்துக்கள் மூன்று வகுப்புகளாக பிரிக்கப்பட்டிருக்கின்றன.(1) தங்கநகைகள் ரூபா 17700.(2) வெள்ளி பாத்திரங்கள் ரூபா 545. (3) பித்தளை மரச்சாமான்கள், கால்நடைகள் ரூபா 4968. இந்த முகமதுகவுஸ் மரக்காயர் இறந்தவுடனே இவைகளுக்கெல்லாம் ஜாய்தாக்கள் ஏற்பட்டதாகவும், அவைகளை முதல் பிரதிவாதி மறைத்துவைத்திருப்பதாகவும் ருஜூக்களேற்பட்டிருக்கின்றன. ஏற்பட்டிருக்கும் ருஜூக்களினால் தங்க நகைகள் ரூபா 15200, வெள்ளி சாமான்கள் ரூபா 500, மற்ற ஜங்கமசொத்துக்கள் ரூபா 4000 ஆக மொத்தம் ரூபா 19700 பொருமானமுள்ளதென்றும், அவைகள் முதல் பிரதிவாதி வசமிருப்பதாகவுங் கண்டுபிடிக்கிறோம். இந்த மதிப்புப்படி வாதிக்கு வீதங் கிடைக்க வேண்டியதென்றும், ஸ்தாபர சொத்துக்களைப்பற்றின வரையில் கீழ்கோர்ட்டு டிக்கிரி உறுதிசெய்யப்படவேண்டியதென்றுந் தீர்மானிக்கிறோம்.

1 Law Weekly 451.

சென்னை ஹைகோர்ட்

1911 ஹூத்திய 2-வது அப்பில் நம்பர் 1776

தீர்ப்பு 27—2—14

ஜட்ஜிகள்
ஜஸ்டிஸ் சங்கரநாயரவர்கள்
ஜஸ்டிஸ் டியாப்ஜி அவர்கள்

சாஜுல் பீவு அப்பீல்தார்கள்
V
மதாரி மகால்தார் குலாம்சாகிபு
எதிர்கக்ஷிக்காரர்கள்

7. [மகம்மதியலா]

மகமதியலாப்படி சொத்து ஸ்வாதீனமல்லாத இனும் செல்லத்தகுந்ததல்லவென்பதும், தர்மசொத்துக்கள் விஷயமாக கக்ஷிக்காரர்களுக்குள் விவாதமுண்டாகுங் காலத்தில் தர்மசொத்துக்களின் நன்மைகளைப் பாதுகாக்கத் தகுந்தவர் கக்ஷிக்காரராகச் சேர்க்கப்பட வேண்டியது அவசியமென்பது.

விவாத மகூதி வாதிகளின் பாட்டன் விசாரணையிலிருந்து வந்தது. அவர் இறந்தவுடனே அவருடைய பெண்கள் மூவரும் இச்சொத்தை பாகப்பிரிவினை செய்துகொண்டதில் இந்த மகூதி சொத்தின் வரும்படிகளை இவர்கள் சமபாகமாகப் பிரித்தெடுத்துக் கொள்ளுகிறதென்றும், எந்தப்பெண்களுக்காவது சந்ததியற்றுப் போய்விடும்பட்சத்தில் அந்தபாகத்தை மற்ற பெண்களின் வார்சுகள் அடைகிறதென்றும் A அடையாள உடன்படிக்கை செய்து கொண்டார்கள். இந்தப் பெண்களிலொருவளாகிய மக்காபீ என்பவளின் பிள்ளை ஹயாத்சாகிப் சந்ததியன்னியில் இறந்துவிட்டபடியால் அவர் பாகத்துக்கேற்பட்ட மகூதிசொத்துக்களை மற்ற இரண்டு பெண்களின் வார்சுகளுக்கு பாத்தியமென்றும், அந்த பாகசொத்தை அந்த ஹயாத்சாகிபின் விதந்து முதற் பிரதிவாதிக்கு அடமானமாக வைத்துவிட்டதாகவும், அச்சொத்து தங்களுக்கு கிடைக்கவேண்டுமென்றும் வழக்கிட்டார்கள். இந்த ஹயாத்சாகிப் 1893 வருஷத்தில் இறந்தார். இந்த வழக்கு இதற்கு 14 வருடங்கள் கழித்து 1907 வருஷத்தில் கொண்டுவரப்பட்டது. வாதிகளின் தாவா காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுப் போய்விட்டதாக பிரதிவாதிகள் கக்ஷியாடினார்கள். இந்த ஹயாத்சாகிபின் விதந்து காரீம்பீ வாதிகளின் சம்மதியின்பேரில் தாவா சொத்துக்களை யனுபவித்து வந்ததாகவும், C அடையாள ஆதிரவின்படி அச்சொத்தின் பாத்தியதையை தங்களுக்கு கொடுத்துவிட்டதாகவும், வாதிகள் கக்ஷி சொல்லுகிறார்கள். முதல்கோர்ட்டார் வாதிகளின் தாவா காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுப்போய்விட்டதாக வாதிகளின் வழக்கைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். ஹயாத்சாகிபின் விதந்து பாகத்தைப்பற்றினவரையில் C அடையாள ஆதிரவு செல்லத்தகுந்ததெனக் கீழ் அப்பீல் கோர்ட்டார் அந்த பாகத்துக்கு தீர்மானஞ் செய்துவிட்டார்கள்.

இதன்பேரில் 2-ம் பிரதிவாதியின் பிரதிநிதியால் இந்த இரண்டாவது அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது.

இந்த விதந்து காரீம்பீக்கு மகமதியலாப்படி தாவா சொத்தில் $\frac{172}{768}$ பாகத்துக்கு பாத்திய முண்டென்றும், அந்த பாகத்தைப் பற்றினவரையில் C அடையாள ஆதிரவு செல்லத்தகுந்ததென்றும் சப் ஜட்ஜி தீர்மானஞ் செய்திருக்கிறார். சொத்து ஸ்வாதீனம் வாதிகளுக்குக் கொடுபடவில்லையென்பதை சப் ஜட்ஜி கவனிக்கவில்லை. மகமதியலாப்படி சொத்து ஸ்வாதீனங் கொடுபடாததால் C அடையாள ஆதிரவு செல்லத்தகுந்ததல்ல. காரீம்பீக்கு வார்சு முறைமையிலும் வாதிகள் வழக்கிடவில்லை. அவ்விதம் வழக்கிடும்பட்சத்தில் அவளால் முதல் பிரதிவாதிக்கு செய்து கொடுக்கப்பட்ட பெந்தக பத்திரத்துக்கும் இவர்கள் கட்டுப்பட்டவர்களாகவேண்டும். இந்த தாவா தர்மகர்த்தா முறைமையில் வழக்கிடவில்லை. சொந்த பாத்தியதையின்பேரில் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்த தாவாவில் அட்வொகேட் ஜெனரலை கக்ஷிக்காரராகச் சேர்க்கவில்லை. தர்மசொத்தாகிய மகூதியின் நன்மைகளை பாதுகாக்கவேண்டியதினிமித்தம் அவரை இதிற் கக்ஷிக்காரராகச் சேர்க்கவேண்டியது மெத்த அவசியம். இதனாலும் இந்த தாவா நிற்கத்தகுந்ததல்ல. அப்பீலை யங்கீகரித்து வாதிகளின் வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டது.

1 Law Weekly 505.

சென்னை ஹைகோர்ட்டு

1912 ஞூத்திய 2-வது அப்பீல் நம்பர் 2215

தீர்ப்பு 21—4—14

ஜட்ஜிகள்	
ஜஸ்டிஸ் மில்லர் அவர்கள்	மாட்டிசாரய்யா (பிரதிவாதி) அப்பீல்தார்
ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள்	V
	வெப்பாரதி வைத்தினாதம் (வாதி) எதிர்கக்ஷிக்காரர்

1. [இனும் நிலங்கள்]

தாசி கோவிலில் வேலை செய்யாவிட்டால் அவளுக்கு கவர்ன்மெண்டாரால் கொடுபட்ட இனும் நிலத்தைப்பற்றி அந்த கோவில் தர்மகர்த்தா வழக்கிடக்கூடாதென்பது.

ஒரு கோவிலில் சில கயிங்கரியங்கள் செய்ய ஒரு தாசிக்கு சில நிலங் கொடுபட்டிருந்தது. இனும் செட்டில்மெண்டு காலத்தில் இந்த தாசி கோவிலில் கயிங்கரியங்கள் செய்து வரவேண்டுமென்ற நிபந்தனையின்பேரில் இவள் பெயரால் இனும் பட்டா கொடுபட்டது. இவளிந்த நிலத்தை அன்னியனுக்கு பெந்தகம் வைத்துவிட்டாள். அவன் அந்த தஸ்தாவேஜியின் பேரில் வழக்கிட்டு டிக்கிரிபெற்று அச்சொத்தை ஏலவிற்பனை செய்ததில் அப்பீல்தார் பிரதிவாதி அதை ஏலத்திலெடுத்து விட்டார். இதனால் அந்தக் கோவில் தர்மகர்த்தா தாசி கோவிலில் வேலைசெய்யவில்லையென்றும் அச்சொத்து கோவிலுக்கு வசமாகவேண்டுமென்றும் அப்பீல்தார் பேரில் வழக்கிட்டார். கீழ் அப்பீல் கோர்ட்டார் வாதியின் தாவாப்படியே தீர்ப்பு செய்துவிட்டார்கள். அதன் பேரில் பிரதிவாதி இந்தக்கோர்ட்டில் அப்பீல் செய்திருக்கிறார்.

தீர்ப்பு.

கோவில் அதிகாரிகளால் தாவா நிலம் இனமாகக் கொடுபட்டதென்பதற்கு எவ்வித ஆதாரமுமில்லை. D அடையாள ஆதிரவு தாசி கோவிலில் கயிங்கரியங்கள் செய்யவேண்டியதற்காக கவர்ன்மெண்டாரால் கொடுபட்ட இனும்பத்திரம். அது தாசி கோவிலில் கயிங்கரியங்கள் செய்துவரவேண்டும் என்ற நிபந்தனையின்பேரில் கொடுபட்டது. கோவில் தர்மகர்த்தாக்கள் இவ்விஷயத்தில் பிரவேசித்து பராதீனஞ் செய்வதைத் தடுக்க எவ்வித ஆதாரமுமில்லை. கவர்ன்மெண்டார் இந்த இனமை ரத்து செய்து சொத்தை ஸ்வாதீனஞ் செய்துகொள்ள பாத்தியமுடையவர்கள். தற்காலமுள்ள வேலைக்காரி இவ்வித பராதீனஞ் செய்ததற்காக இவளை வேலையினின்றும் தள்ளுபடி செய்து இவள் ஸ்தானத்தில் வேறொருவள் நியமிக்கப்பட்டால் அவள் இந்தச் சொத்துக்களைப் பற்றி 14 சென்னை லா ஜர்னல் 134 தீர்மானத்திற் கண்டபடி வழக்கிட்டு இந்த இனும் சொத்தை வசப்படுத்திக் கொள்ளலாம். கோவில் தர்மகர்த்தா இதைப்பற்றி வழக்கிட்டு சொத்தை ஸ்வாதீனஞ்செய்துகொள்ள எவ்வித பாத்தியமுமில்லை. இதனால் கீழ் அப்பீல் கோர்ட்டாருடையதீர்ப்பை ரத்துசெய்து வாதியின்வழக்கைத் தள்ளுபடி செய்கிறோம். உபயவாதிகளும் அவரவர்கள் செலவை அவரவர்களே பொறுத்துக்கொள்ளவேண்டும்.

1 Law Weekly 190

சென்னை ஹைகோர்ட்டு

1910 வருஷத்திய அப்பீல் உத்திரவின்பேரில் அப்பீல் நம்பர் 17.

தீர்ப்பு 11—2—14

ஜட்ஜிகள்.	செருவலாத் கம்பனுரி வாலாகதாலா இருச்செயின் என்கிற குட்டப்பாவு மனுதார்கள் (அப்பீல்தார்கள்)
ஜஸ்டிஸ் சங்கரநாயரவர்கள்	V
ஜஸ்டிஸ் எயிலிங் அவர்கள்	தெய்யதாத்காரான் எதிர்மனுதார்

50. [சீவில் புரிஸீஜர் கோடு.]

பெந்தக டிக்கிரியில் டிக்கிரித்தொகையை பிரதிவாதிகள் ஓர் குறிப்பிட்ட கெடுவில் செலுத்திவைக்கிறதென்றும், செலுத்தாவிட்டால் பெந்தகசொத்து ஏலம்போடப்படவேண்டியதென்றுங் கண்டிருந்தால் இதைக்கொண்டே இதர சொத்துக்களைத் தொடர்ந்து தொகை வசூலிக்கலாமென்பதும், வேறு டிக்கிரி பெறவேண்டிய தவசியமில்லையென்பதும்.

மனுதார்கள் பெற்ற பெந்தக டிக்கிரியில் பிரதிவாதிகள் குறிப்பிட்ட ஒரு கெடுவுக்குள் டிக்கிரித் தொகையை கோர்ட்டில் கட்டிவிடவேண்டியதென்றும், அந்த கெடுவில் தொகை கொடுபடாவிட்டால் பெந்தக சொத்து ஏலவிற்பனை செய்யப்படவேண்டியதென்றுங் கண்டிருந்தது. இந்தப்படி பிரதிவாதி தொகை கொடாததால் வெண்ணலை டிக்கிரியாக நிறைவேற்றப்படவேண்டுமென வாதிகள் மனுக்கொடுத்தார்கள். இந்தப்படி நிறைவேற்றப்படக்கூடாதென கீழ்கோர்ட்டார்கள் உத்திரவு செய்துவிட்டதின்பேரில் இந்த அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது.

இந்த டிக்கிரி டிரான்ஸ்வர் அவ் பிராபர்டி ஆக்ட்டு 88-வது செக்ஷன்படி (சி. பு. கோடு 34-வது ஆர்டர் 4-வது ரூல்) பெந்தக டிக்கிரியாகவிருப்பதுடன் இது வெண்ணலை டிக்கிரியாகவுமிருக்கிறது. இதன்படி இதர சொத்துக்களைத் தொடர்ந்தும் தொகை வசூலிக்கலாம். இதனால் இது வெண்ணலை டிக்கிரியாகவும் நிறைவேற்றப்படலாம். கீழ் கோர்ட்டார்களின் உத்திரவுகளை ரத்து செய்திருக்கிறோம். வாதிகள் கொடுத்த மனுவை டிஸ்டிரிக்ட் முனிசிப் பயிலில் வைத்துக்கொண்டு சட்டப்படி நிறைவேற்றவேண்டியதாகத் தீர்மானிக்கிறோம்.

1914 M. W. N. 497.

சென்னை ஹைகோர்ட்டு.

1913 ஞுஅத்திய ஸிடிசீவில் சோர்ட்டு அப்பீல் நம்பர் 8.

தீர்ப்பு. 12—3—14.

ஜட்ஜிகள் ஸர் சார்லஸ் அர்னுல்ட் வொயிட் Kt. சீவ் ஜஸ்டிஸ் அவர்கள்	M. T. சிவராமபிள்ளை ஆ பிரதிவாதிகள் அப்பீல்தார்கள்
	V
மிஸ்டர் ஜஸ்டிஸ் ஒல்டு பீல்ட் அவர்கள்	V வீரப்பபிள்ளை வாதி எதிர்கக்ஷிக்காரர்.

51. [சீவில் புரிஸீஜர் கோடு]

விவாக சம்பந்தத்தை யுண்டுபண்ணவேணுமென்று கோண்டு வரப்படும் வழக்குகளில் விவாகம் சரிவர நடந்ததென்பதை திருப்தி கரமாக ருஜூப்பிக்கவேண்டு மென்பதும், மைனர் பெண்ணை யவளுடைய புருஷனிடங் கோண்டுபோய் விடும்படி அப்பெண்ணின் பெற்றோர்கள் கட்டாயப்படுத்தப்படலாமென்பதும்.

வாதி தன்னுடைய பெண்ஜாதி 3-ம் பிரதிவாதியை அவளின் தாய் தகப்பன்களாகிய 1-2 பிரதிவாதிகள் தங்கள் வீட்டில் வைத்துக்கொண்டு வாதியுடன் சேர்ந்து வாழவொட்டாமற் றடுத்துவருவதாகவும், அதனால் 3-ம் பிரதிவாதி தன்னுடன் கூடி வாழும்படி செய்யவேண்டுமென்றும் அதை 1-2 பிரதிவாதிகள் தடைசெய்யாமல் அவர்களுக்கு இன்ஜக்ஷன் கொடுக்கவேண்டுமென்றும், வாதி வழக்கிட்டார். 1-2 பிரதிவாதிகள் பலவித ஆக்ஷேபனைகள் செய்ததுடன் வாதிக்கும் 3-ம் பிரதிவாதிக்கும் விவாகச் சடங்குகள் சரிவர நடைபெறவில்லையென்றுங் கக்ஷியாடினார்கள். எவ்விதச் சடங்குகள் நடத்தப்படவில்லையென்பதைப் பற்றி விபரமான ஸ்டேட்மெண்டு இரண்டு வார கெடுவுக்குள் கொடுக்கும்படி கோர்ட்டார் உத்திரவு செய்தார்கள். அந்தப்படி யாதொரு சப்பிளிமெண்டு ஸ்டேட்மெண்டுங் கொடுக்கவில்லை. விசாரணை கெடுவில் பிரதிவாதிகள் கோர்ட்டில் ஆஜரில்லாமையாலும், இவர்களின் வக்கீல் நடவடிக்கை நடத்த தன்னிடந் தெரிவிக்கவில்லையென்றுஞ் சொல்லிவிட்டதாலும் வாதி யொருவரை மட்டில் சாக்ஷியாக விசாரித்துக்கொண்டு வாதியின் தாவாப்படியே தீர்ப்பு செய்துவிட்டார்கள். இதனால் பிரதிவாதிகள் அடியிற் கண்ட ஆதாரங்களின்பேரில் அப்பீல் செய்திருக்கிறார்கள்.

வாதிக்கும் 3 ம் பிரதிவாதிக்கும் சரியானபடி விவாகம் நடந்ததென்பதை வாதி ருஜூப்பிக்காததால் வாதியின் தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்பது முதலாவது விவாதம். இது விஷயமாக பிரதிவாதிகள் இ. லா. ரி 28 கல்கத்தா 37 தீர்மானத்தை தங்கள் கக்ஷிக்கு ஆதாரமாக, எடுத்துச் சொல்லுகிறார்கள். அந்தத் தீர்மானத்துக்கும் இந்தக் கேசுக்கும் மெத்த வித்தியாசங்க ளிருக்கின்றன. அதில் முக்கியமான சடங்குகள் சில நடத்தப்படவில்லையென்றும் அது நடத்தப்பட்டதாக வாதி ருஜூப்பிக்க வேண்டுமென்றுஞ் சொல்லப்பட்டிருந்தது. இந்தக் கேசில் அப்படியல்ல. விவாகச்சடங்குகள் சரியாக நடக்கவில்லையென்று பொதுவாகச் சொல்லியிருக்கிறார்கள். வாதி சடங்குகள் சரியாக நடந்ததென்று பிரமாண வாக்குமூலங் கொடுத்திருக்கிறார். அதை நம்பி தீர்ப்பு செய்தது பிசகானதல்ல.

கோர்ட்டார் உத்திரவை மீறினால் 3ம் பிரதிவாதியை ஜெயிலில் அடைத்துவிடவேண்டுமென்று தீர்ப்பு செய்தது சரியல்லவென்பது அடுத்த விவாதம். இது விஷயத்தைப்பற்றி கீழ்கோர்ட்டில் ஆக்ஷேபிக்கவில்லை. ஆகிலும் 21 - வது ஆர்டர் 33 (1) ரூல்படி கோர்ட்டார் அந்த தீர்ப்பை மாற்றிவிடலாம்.

3-ம் பிரதிவாதியை 1-2 பிரதிவாதிகள் வாதி வசம் ஒப்பிவிக்க வேண்டுமென்று தீர்ப்பு செய்தது சரியல்லவென்பதும், 3ம் பிரதிவாதி மைனராக விருந்தபோதிலும் அவளை பலவந்தமாக வாதியிடங் கொண்டுவந்து சேர்ப்பது தங்களால் எந்த விதத்திலும் சாத்தியமில்லாத விஷயமென்பதும், 3 வது விவாதம். இதுவிஷயமாக இவர்கள் 20 வீக்லீ ரிபோர்டர் 92, 23 வீக்லீ ரிபோர்டார் 179 இந்தத் தீர்மானங்களை தங்கள் கக்ஷிக்கு ஆதாரமாக எடுத்துக்காட்டுகிறார்கள். இத்தீர்மானங்கள் பழய கோடுகளின்படி ஏற்பட்ட தீர்மானங்கள். கோர்ட்டார் உத்திரவை மீறினால் பிரதிவாதியை ஜெயிலிலடைக்க வேண்டியதில்லையென்றும், வேறு உசிதமான தீர்ப்புசெய்யலாமென்றும் மேற்கண்ட 33வது ரூலிற் சொல்லப்பட்டிருக்கிறது. 3ம் பிரதிவாதி மைனராக விருப்பதால் டிக்கிரிப்படி வாதிக்கு பரிகாரங்கிடைக்கக் கூடியதில் 1-2 பிரதிவாதிகள் பிரவேசிக்காமல் அவர்களுக்கு இன்ஜக்ஷன் கொடுபடவேண்டியது நியாயமானது. ஆகையால் வாதி 3ம்

பிரதிவாதியை தன்னிடம் விட்டுவிடவேண்டுமென்று கேட்ட ஒரு மாதகெடுவுக்குள் அவனை விட்டுவிட வேண்டுமென்று தீர்ப்பு செய்கிறோம்.

23 Indian Cases 828.

கல்கத்தா ஹைகோர்ட்டு.

1911 வருஷத்திய 2 வது அப்பீல் நம்பர் 1774.

தீர்ப்பு 17-4-14.

ஜட்ஜிகள் மிஸ்டர் ஜஸ்டிஸ் D சடார்ஜி அவர்கள் மிஸ்டர் ஜஸ்டிஸ் முல்லீக் அவர்கள்	பிர்ஜநந்தன்சிங் பிரதிவாதி அப்பீல்தார் V. கைலாஷ்திவாரி வாதி (எதிர்கக்ஷிக்காரர்)

25. [சிவில் புரிஸீஜர் கோடு]

உபயவாதிகளும் ஆஜரில்லையென்று கேஸ் தள்ளுபடி செய்யப்பட்டால் அது ரேஸ்ஜூடிகேடா தோஷமாக மாட்டாதென்பது.

தாவாசொத்து ஒரு பெந்தக டிக்கிரிகடனுக்காக ஏலம் போடப்பட்டதை வாதிகளின் தாயார் முதல் பிரதிவாதி பெயரால் ஏலத்திலெடுத்தாள். முதல் பிரதிவாதி இந்த ஏலசொத்துக்கள் தன் பெயரால் பட்டா மாற்றப்படவேண்டுமென்று கலெக்டரிடம் மனுகொடுத்தார். அந்த மனு 1903௵ பிப்பரதரிமாதம் தள்ளுபடி செய்யப்பட்டதின்பேரில் முதல் பிரதிவாதி தனக்கு தாவா சொத்திலுள்ள பாத்தியம் ஸ்தாபிக்கப்படவேண்டியதென்றும், தாவா ஸ்தலம்தன்னிடத்திலில்லையென்று கோர்ட்டார்கண்டுபிடிக்கும்பட்சத்தில் அச்சொத்துக்கள் தனக்கு வசமாக வேண்டுமென்றும் வழக்கிட்டார். இதிலிவர் தானிருந்தக் கேசை மேல் நடவடிக்கை நடத்த இஷ்டமில்லையென்று சொல்லிவிட்டதாலும், பிரதிவாதிகளின் வக்கீல் தனக்கு இன்ஸ்டாக்ஷன்ஸ்இல்லையென்று சொல்லிவிட்டதாலும் கேஸ் 1907௵ நவம்பர்மாதம் 27௳ தள்ளுபடி செய்யப்பட்டது. இதன் பிறகு வாதிகள் தங்களுக்கு தாவா ஸ்தலத்திலுள்ள பாத்தியம் ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்று வழக்கிட்டார்கள். முதல் பிரதிவாதி சி. பு. கோடு 9வது ஆர்டர் 9 வது ரூல்படி புதியவழக்கிடக் கூடாதாகையால் அவருக்குதடை

யாகிறது; வாதிகளுக்குந்தடையாகுமென்றும் பிரதிவாதிகள் கக்ஷியாடினார்கள். உபய கக்ஷிக்காரர்களும் நடவடிக்கை நடத்தாமல் கேஸ்தள்ளுபடி செய்யப்பட்டிருப்பதால் வாதிகளின் தாவாவுக்கு ரெஸ்ஜூடிகேடா தோஷமில்லையென்று கீழ் கோர்ட்டார்கள் தீர்மானஞ் செய்துவிட்டார்கள். அதன் பேரிலிந்த அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது.

பிரதிவாதி இ. லா. ரி 31 கல்கத்தா 428, 22 சென்னை லா ஜர்னல் 668, இ. லா. ரி 34 அலகபாத் 599 இந்தத் தீர்மானங்களைத் தன் கக்ஷிக்கு ஆதாரமாக எடுத்துச் சொல்லுகிறார். அவைகள் தாவா கேசுக்கும் ஒற்றுமையானதல்ல. இந்தக் கேஸில் உபயக்கக்ஷிக்காரர்களும் மேல்நடவடிக்கைகள் நடத்தாமல் கேஸ் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. இதற்கு 10 கல்கத்தா வீக்லி நோட்ஸ் 40 தீர்மானந்தான் ஒற்றுமையாக விருக்கிறது. வாதிகளின் தாவாவுக்கு எவ்விதரெஸ்ஜூடிகேடாதோஷமுமில்லை யென்று தீர்மானிக்கிறோம். வாதிகள் முதல் பிரதிவாதியிடமிருந்து (சாசனம்) வாங்காமையால் வாதிகளுக்கு தாவா சொத்தில் எவ்வித பாத்தியமுமில்லையென்பது இரண்டாவது விவாதம். உண்மையில் தாவா சொத்துக்களை வாதிகளே ஏலத்திலெடுத்திருப்பதால் பெயரிரவலாக ஏலமெடுத்தவரிடமிருந்து சாசனம் பெற வேண்டியது அனுவசியம். ஆனுலிவரிடமிருந்து விடுதலைபத்திரம் வாங்கியிருக்கலாம்; அது வேறு விஷயம். வாதிகளின் தாவாவுக்கு காலாவதிதோஷ மேற்பட்டுவிட்டதென்பது கடைசி விவாதம். தாவா சொத்துக்கள் வாதிகளின் ஸ்வாதீனத்திலிருப்பதாக கண்டுபிடித்திருக்கிறார்கள். பெயரிரவலாக ஏலமெடுத்தவர் வாதிகளின் பாத்தியதைகளை யொப்புக்கொள்ளாமல் மறுத்த தேதி முதல் இந்த வழக்குக்கு வியாஜ்ஜிய மூல முற்பத்தி. அதனால் வாதிகளின் தாவாவுக்கு எவ்வித காலாவதி தோஷமுமில்லை. அதனால் இந்த அப்பீல் செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

24 Indian Cases 17.

அலகபாத் ஹைகோர்ட்டு.

1912 வருஷத்திய 2-வது அப்பீல் நம்பர் 1327.

தீர்ப்பு 9 - 4 - 14.

ஜட்ஜிகள் ஸர் ஹென்ரி ரிச்சேர்ட்ஸ் Kt சீவ் ஜஸ்டிஸ் அவர்கள் ஜஸ்டிஸ் ஸர் P C பனர்ஜி Kt அவர்கள்	சிட்டார்மால்லூ பிரதிவாதிகள் அப்பீல்தார்கள் V ரும்நாருயன்லூ எதிர்கக்ஷிக்காரர் பிரதிவாதிகள்

53. [சிவில் புரிஸீஜர் கோடு.]

பின் பெந்தகதாரன் பிரதிவாதியாகச் சேர்க்கப்பட்ட காரணத்தைக்கொண்டு அவர் பிந்தி வழக்கிட்டபோது மற்றப் பிரதிவாதிகள் அதை யாக்ஷேபிப்பது பிசகென்று சொல்லக்கூடாதென்பது.

பார்வதி என்ற ஒரு இந்து விதந்துவால் 1896ஞு எழுதிக் கொடுக்கப்பட்ட பெந்தக பத்திரத்தின்பேரில் ஜானகிபிரசாத் என்றவர் வழக்கிட்டதில் இந்த விதந்துவும் அவளிடம் இனுஞ்சாசனம்பெற்ற மூர்லி ஹீரா என்றவர்களும் இந்த நம்பர் வாதி பின் பெந்தகதாராகவும் சேர்க்கப்பட்டார்கள். அதில் இந்த நம்பர் வாதி தான் முன் பெந்தகபாத்தியதையைத் தீர்த்திருப்பதால் தன்னுடைய பாத்தியம் ஜானகிபிரசாதின் பாத்தியதைக்கும் மேலானதென்று கக்ஷியாடினர். அதில் இந்த மூர்லி ஹீரா என்ற இருவரும் வாதியின் பெந்தகத்தைப்பற்றி ஆக்ஷேபிக்கவேயில்லை. வாதி தனக்கு ஷை விதந்துவால் 1898வது வருஷத்தில் எழுதிக் கொடுக்கப்பட்ட பெந்தகபத்திரப்படி தனக்கு தொகை கிடைக்கவேண்டுமென வழக்கிட்டதில் மேலே சொன்ன மூர்லி ஹீரா இருவரிடத்திலும் சாசனம்பெற்ற சித்தர்மால் தேவிராம் என்ற பிரதிவாதிகள் தாவா பெந்தகத்துக்கு பிரதிப் பிரயோஜனமில்லையென்றும் தாவா கடன்வாங்கவேண்டிய அவசியங்கள் யாதொன்றுமிருந்ததில்லையென்றுங் கக்ஷியாடினதுமன்றி மற்றும் பல கக்ஷிகளுமாடினார்கள். தாவா பெந்தகம் பிரதிப் பிரயோஜனத்துடன் ஏற்பட்டதென்று கீழ் கோர்ட்டார்களிருவருந் தீர்மானஞ் செய்துவிட்டதின்பேரில் அந்தப் பிரதிவாதிகள் இந்தக் கோர்ட்டில் அப்பீல் செய்திருக்கிறார்கள்.

தாவா பெந்தகக் கடன் வாங்கவேண்டிய அவசியங்கள் யாதொன்றுமிருந்ததில்லையென்று ஜானகிபிரசாத் வழக்கில் பிரதிவாதிகள் கக்ஷியாடாதிருந்ததால் இப்போது அந்த ஆக்ஷேபணை செய்வது ரெஸ்ஜூடிகேடா தோஷமாகுமென்று வாதி கக்ஷி சொல்லுகிறார். முன் வழக்கில் அந்த நம்பர் வாதிக்கும் பிரதிவாதிகளுக்கும் பொதுவாயுள்ள விவாதங்கள் விசாரிக்கப்பட்டு தீர்மானிக்கப்பட்டன. தாவா பெந்தகத்தொகையைப் பற்றியாவது, அதன் வட்டியைப்பற்றியாவது தாவா கடன் வாங்கவேண்டிய அவசியத்தைப் பற்றியாவது விசாரிக்கவில்லை. எந்த அவசியத்

துக்காக கடன் வாங்கபட்டதென்பதைப் பற்றியும், ஜாஸ்திவட்டிக்கு கடன்வாங்கவேண்டியிருந்த அவசியத்தைப்பற்றியும் கீழ்கோர்ட்டார் விசாரிக்கவில்லை. விதந்துவால் பெந்தகம் வைக்கப்படும் கேஸ்களில் அவர்களுக்கு பூர்வகடன்களிருந்தன என்று சொல்வதுமட்டில் போதுமானதல்ல. அந்தக்கடன்கள் எந்த அவசியங்களுக்காக வாங்கப்பட்டதென்பதைப் பற்றியும் ருஜூப்பிக்கவேண்டும். இவ்விஷயங்கள் இந்தக் கோர்ட்டு இ. லா. ரி. 17 அலகபாத் 63 தீர்மானத்திற் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆகையால் அடியிற்கண்ட இஷ்ஷியுக்களைப்பற்றி கீழ்கோர்ட்டார் விசாரித்துத் தெரிவிக்கும்படி கேசை மறுவிசாரணைக்கு அனுப்பியிருக்கிறோம்.

(1) பார்வதி 1898 வருஷம் ஆகஸ்டு மாதம் 23 தேதி தாவா கடன்வாங்க வேண்டிய நியாயமான அவசியங்களிருந்தனவா, இருந்தால் தாவாவிற் கண்ட முழுத்தொகைக்கா அல்லது சில பாகத்துக்கு மட்டிலா.

(2) பிராதிற்கண்டபடி ஜாஸ்தி வட்டிக்குக் கடன்வாங்கும்படியான நியாயமான அவசியங்களிருந்தனவா, இல்லாவிட்டால் அப்போதிருந்த சந்தர்ப்பங்களுக்குத் தக்கபடி என்ன வீதம் வட்டி கொடுபடவேண்டியது.

(3) மேற்சொன்ன இஷ்ஷியுக்களின்படி தீர்மானிக்கும் பட்சத்தில் தாவா பெந்தகபத்திரப்படி எவ்வளவு தொகை கிடைக்கக்கூடும்.

மேற்கண்ட இஷ்ஷியக்களைப்பற்றி உபயகக்ஷிக்காரர்களும் ருஜூக்கள் விட்டு பயிண்டிங் இந்த கோர்ட்டுக்கு வந்தபிறகு ஆக்ஷேபணைகள் செய்பவர்கள் 10 தினங்களுக்குள் செய்து கொள்ளலாம்.

24 Indian Cases 84.

அலகபாத் ஹைகோர்ட்டு.

1913 ஞூதிய கிரிமினல் ரெவிஷன் மனு நம்பர் 160.

தீர்ப்பு 3 - 4 - 14.

ஜட்ஜி ஜஸ்டிஸ் ஸர் ஜார்ஜ் நாக்ஸ் Kt அவர்கள்	ராமச்சந்திரசிங் வாதி அப்பீல்தார் V முசம்மத்துர்காதேவி பிரதிவாதி

26 [லிமிடேஷனுகட்டு]

வட்டிக்காக வரவு வந்ததென்பதைக் கொண்டு காலாவதி தோஷமில்லையென்று கக்ஷி சொல்லுகிறவர்கள் கடன்காரனாவது அவரிடம் அதிகாரம்பெற்ற ஏஜெண்டாவது வட்டிக்குத் தொகை கொடுத்ததாக ருஜுப்பிக்க வேண்டியதவசியமென்பது.

வாதிக்கு 1907 வது வருஷம் ஜூன்மாதம் 17 ரூ 98-க்கு எழுதிக்கொடுக்கப்பட்ட வெண்ணிலைக்கடன் பத்திரத்தின்படி ரூ 372-11 அணா கிடைக்கவேண்டுமென்று தாவா செய்யப்பட்டிருக்கிறது. வாதி தாவா பத்திரத்தின் வட்டிக்காக பிரதிவாதியிடம் அதிகாரம்பெற்ற ஏஜண்டு ரூ 5 கொடுத்திருப்பதால் வாதியின் தாவாவுக்கு காலாவதி தோஷமில்லையென்று வாதி தன் பிராதிற் சொல்லியிருக்கிறார். பிரதிவாதி இந்த தாவாவை மறுத்ததுமன்றி வாதியின் தாவா காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுப் போய்விட்டதாகவுங் கக்ஷிபாடினார். பிரதிவாதியின் ஏஜெண்டால் கொடுபட்ட வட்டித்தொகை காலாவதி தோஷத்துக்கு பரிகாரமாக மாட்டாதென்றும், காலாவதி பரிகாரத்துக்காக தொகை கொடுக்கும்படி இந்த ஏஜண்டுக்கு அதிகாரங்கொடுக்கப்படவில்லையென்றும் கீழ் கோர்ட்டார் வாதியின் வழக்கைத் தள்ளுபடி செய்து விட்டார்கள். இதன்பேரில் இந்தக் கோர்ட்டில் ரெவிஷன் மனு கொடுபட்டிருக்கிறது.

தாவாவிற்கண்ட ரூ 5 வட்டிக்கு வரவு வந்த விபரம் பிரதிவாதிக்குத் தெரியுமென்பதற்கு எவ்வித ருஜுவுமில்லை. மேலும் இந்த வரவு காலாவதிக்குக் கடைசிதேதியில் வரவு வைக்கப்பட்டிருக்கிறது. பிரதிவாதியின் ஏஜண்டுக்குக்கொடுபட்ட அதிகாரம் சாதாரண முக்தியார்னாமா. அதில் காலாவதி பரிகாரத்துக்கு வரவு வைப்பதற்கு ஏஜண்டுக்கு எவ்வித அதிகாரமுங் கொடுபடவில்லை. தாவாவிற்கண்ட தொகை ரூ 5 வட்டிக்குத்தான் வரவு வந்திருக்கிறதென்பதைப்பற்றியும் அவ்விதங் காலாவதி பரிகாரத்துக்கு செல்லுவைக்கும்படி அவருக்கு அதிகாரங் கொடுக்கப்பட்டிருக்கிறதென்பதைப்பற்றியும், வாதி ருஜுப்பிக்கவில்லை. கீழ் கோர்ட்டாருடையடிக்கிரி சட்டவிரோதமானதாக விருக்கவில்லை. அதனாலிந்த ரெவிஷன் மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

23 Indian Cases 863.

கல்கத்தா ஹைகோர்ட்டு.

1910-ஞூத்திய 2-வது அப்பீல் நம்பர் 3949
தீர்ப்பு 15-1-14.

ஜட்ஜிகள். ஜஸ்டிஸ் ஸர் அஷோடாஷ் மூகர்ஜி Kt அவர்கள் மிஸ்டர் ஜஸ்டிஸ் பீச்கிராப்ட் அவர்கள்	மன்மதநாத்மண்டால் வாதி அப்பீல்தாரன் V கிரோதார்கோஷ்லூ பிரதிவாதிகள்

27. [லிமிடேஷனுகட்டு]

கார்டியன் செய்த பராதீனத்தை ரத்து செய்து சொத்து ஸ்வாதீனமாகவேண்டுமென கொண்டுவரப்படும் வழக்குகள் மைனர் மேஜரான 3 வருடங்களுக்குள் கொண்டுவரப்படவேண்டுமென்பது.

வாதி மைனராக விருந்தகாலத்தில் அவர் தாயார் இந்த மைனர் சொத்துக்களை 1899 வது வருஷத்தில் பராதீனஞ்செய்தாள். இந்தப் பராதீனஞ் செல்லத்தகுந்ததல்லவென்றும், அச்சொத்துக்கள் தனக்கு கிடைக்கவேண்டுமென்றும் வாதி 1909வது வருஷத்தில் வழக்கிட்டார். இவர் மேஜராகி மூன்று வருடங்கழித்து இவ்வழக்கிடப்பட்டதாக ருஜுவேற்பட்டது. தாவாவிற்கண்ட பராதீனம் நியாயமான அவசியச் செலவுகளுக்கு ஏற்படாவிட்டாலும், அந்த சாசனத்திற்கண்ட தொகை மைனரின் நன்மைக்கே உபயோகப்படுத்தப்பட்டதாக ருஜுவேற்பட்டது. அதனால் சாசனத்தொகையை கிரயதாருக்குக் கொடுத்துவிட்டு சொத்தை வாதி மீட்டுக்கொள்ள பாத்தியமுடையவரென்றும், ஆனால் வாதி தான் மேஜரான மூன்றுவருடங்களுக்குப் பிறகு இந்த வழக்குக் கொண்டுவந்திருப்பதால் வாதியின் தாவா காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுப் போய்விட்டதென்றும், வாதியின் தாவாவை கீழ் கோர்ட்டார்களிருவருந் தள்ளுபடி செய்துவிட்டார்கள். அதன் பேரில் இந்த அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது.

வாதியின் வக்கீல் தன் கக்ஷிக்கு ஆதாரமாக இ. லா. ரி. 14 சென்னை 24,7 சென்னை லா ஜர்னல் 134 இந்த தீர்மானங்களையெடுத்துச் சொல்லுகிறார். இவை இ. லா. ரி. 23 சென்னை 27, பிரிவி கவுன்ஸல் தீர்ப்புக்கு விரோதமானதாக இருப்பதால் அவைகள் அங்கீகரிக்கப்படத்தக்கனவல்ல. வாதியின் தாயார் கார்டியன் வார்ட்ஸ் ஆக்ட்டின்படிக்காவது வேறெந்த ஆக்ட்டின்படிக்காவது நியமிக்கப்பட்ட கார்டியனல்லவாகையால் 44-வது ஆர்டி

இல் தாவா கேசுக்குப் பொருந்தாதென்று வாதி வக்கீல் கக்ஷியாடுகிறார். அந்த 44-வது கார்டியன்களுக்கு பொதுவாக ஏற்பட்டதேயன்றி வேறல்ல. இதனால் கீழ்கோர்ட்டு டிக்கிரி உறுதி செய்யப்பட்டது. அப்பீல் செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

24 Indian Cases 110.

சென்னை ஹைகோர்ட்

1912 ஷுத்திய ரெவிஷன் மனு நம்பர் 251.

தீர்ப்பு 30-4-14.

ஜட்ஜிகள்
ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள்

நரசிங்க பத்ரோ பிரதிவாதி மனுதார்.
V
பகவன் சடதோ. வாதி. எதிர்மனுதார்

25. [டிரான்ஸ்வர் அவ் பிராபர்ட்டி ஆக்ட்டு].

சொத்து மீட்கப்பட்ட பின்பு அச்சொத்திலுள்ளமகசூலைப்பற்றி போக்கியதாரன் தனிவழக்கிடக் கூடாதென்பது.

பிரதிவாதி தனக்குச் சொந்தமான போக்கியசொத்து மீட்கப்படவேண்டுமென வாதிபேரில் வழக்கிட்டு டிக்கிரி பெற்று அச்சொத்திலிருந்த மகசூலுடன் வசப்படுத்திக்கொண்டார். இந்த டிக்கிரிப்படி பிரதிவாதிக்கு நிலமட்டில் கிடைக்கக்கூடியதென்றும், மகசூலையும் பிரதிவாதி கைப்பற்றிவிட்டதால் அதையவர் அக்கிரமமாக சொந்தவுபயோகப்படுத்திக்கொண்டுவிட்டதாகவும், அந்த மகசூல் கிரயந்தனக்குக் கிடைக்கவேண்டுமென்றும், வாதி பிரதிவாதிபேரில் ஸ்மால்காஸ் கிரப்பில் வழக்கிட்டார். வாதியின் தாவாப்படியே கீழ் கோர்ட்டார் தீர்மானஞ் செய்துவிட்டதால் இந்த ரெவிஷன் மனு கொடுக்கப்பட்டிருக்கிறது.

தாவாவில் வாதி கேட்டிருக்கும் பரிகாரங்கள் முன் ரிடெம்ஷன் டிக்கிரி யேற்படுங்காலத்திலாவது, அதற்கு பிற்பட்டாவது கேட்டு அந்தக் கேஸிலேயே தீர்மானங்கள் செய்திருக்கவேண்டும். உபயகக்ஷிக்காரர்களுக்குள்ளும் பாத்திபா பாத்தியங்களெல்லாம் அந்தக் கேஸிலேயே முடிவுசெய்திருக்கப் படவேண்டும். (இ. லா. ரி 13-சென்னை 15, 30 அலகபாத் 36, 225 இந்த தீர்மானங்களை பார்க்க). பிரதிவாதி கொண்டுபோன மகசூலைப்பற்றி

ஸ்மால்காஸ்கிரப்பில் வாதி வழக்கிட்டது செல்லத்தக்கதல்ல. கீழ்கோர்ட்டு டிக்கிரியை ரத்து செய்திருக்கிறோம். வாதியின் வழக்கு செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

1914 M. W. N. 499.

சென்னை ஹைகோர்ட்டு

1912 ஷுத்திய 2-வது அப்பீல் நம்பர் 1412

தீர்ப்பு 9—4—14.

ஜட்ஜிகள்
ஜஸ்டிஸ் வாலீஸ் அவர்கள்
ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள்

நாச்சிமடுகு லெக்ஷிமிநாராயணா
அப்பீல்தார் (4 பிரதிவாதி)
V
சான்னுதி ராமசுப்பய்யா செட்டி ஆ
எதிர் கக்ஷிக்காரர்கள்

26. [டிரான்ஸ்வர் அவ் பிராபர்டி ஆகட்டு]

ஒரு பெந்தக பத்திரத்தின் தொகை ஏற்பட்ட கெடுக்களில் கொடுபடாவிட்டால், அந்த கெடுவரையிலுள்ள அசல் வட்டித் தொகைகளுக்கு அச்சொத்தை சாசனஞ் செய்கிற தென்று எழுதிக் கொள்ளும் நிபந்தனை செல்லாதென்பதும், அது பெந்தகமாகு மென்பதும்.

1871 ஷுத்தில் ரூபா 100 க்கு எழுதிக் கொடுக்கப்பட்ட ஒரு பெந்தகப் பத்திரத்தில் அத்தொகை 3 தவணைகளில் மாதம் 1 க்கு 100 க்கு 14 அணா வீதம் வட்டி சேர்த்துக் கொடுக்கிறதென்றும், எந்த கெடுவிலாவது அசல் வட்டித்தொகைகள் கொடுபடா விட்டால் அந்தத் தேதிவரையிலுள்ள அசல் வட்டித் தொகைகளுக்கே அச்சொத்தை பெந்தகம் பெற்றவருக்கு சாசனஞ் செய்து கொடுக்கிற தென்றுங் கண்டிருக்கிறது. இதே சொத்து வேறொரு வெண்ணலை டிக்கிரி கடனுக்காக ஏலம் போடப்பட்டதில் அதை அப்பீல்தாரன் ஏலத்தி லெடுத்து சொத்தை 1880 ஷுத்தில் ஸ்வாதீனஞ் செய்து கொண்டான். மேற் சொன்ன பெந்தக பத்திர ஷரத்தின்படி அசல் வட்டித்தொகைகள் கிடைக்கவேண்டு மென்றும், அல்லது பத்திர ஷரத்துப்படி பெந்தக சொத்தாவது தனக்கு ஸ்வாதீனமாக வேண்டு மென்றும் பெந்தகம் பெற்றவர் 1910 ஷுத்தில் வழக்கிட்டார். அப்பீல்தாராகிய ஏலதாரன் தான் தாவா சொத்தை பெந்தகம் வைத்தவர் பெந்தகம் பெற்ற

வர் இவர்களின் பாத்தியங்களுக்கு விரோதமாக பனிரெண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அனுபவித்து வருவதால் தனக்கு ஜாஸ்தியான பாத்தியம் கிடைத்து விட்டதாகவும், வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டு மென்றுங் கக்ஷியாடினார். முதல் கோர்ட்டார் வாதியின் வழக்கைத் தள்ளுபடிசெய்தார்கள். கீழ் அப்பீல் கோர்ட்டார் அதை ரத்து செய்து வாதியின் தாவாப்படியே தீர்ப்பு செய்துவிட்டார்கள். அதனால் ஏலதார் 4-ம் பிரதிவாதி இந்த 2-வது அப்பீல் செய்திருக்கிறார்.

பெந்தகபத்திர ஷரத்துப்படி பெந்தகத்தொகை தவணைகளில் கொடுபடாவிட்டால் பெந்தகம் பெற்றவன் அச்சொத்தை ஸ்வாதீனஞ் செய்துகொள்ள வேண்டியதென்றும், அந்த பாத்தியம் பனிரெண்டு வருடங்களுக்கு முந்தியே ஏற்பட்டுவிட்டதென்றும், அதனால் ஏலதாரனாகிய அப்பீல்தாரன் பெந்தகம் வைத்தவன் பெந்தகம் பெற்றவன் இவர்களின் பாத்தியங்களுக்கு விரோதமாக அனுபவித்து வருவதாகவும், பெந்தகம் பெற்றவர் தன்னுடைய பாத்திய விஷயத்தில் அலட்சியமாக இருந்து வந்ததது விரோதமான பாத்யதையுடன் அனுபவிப்பதினா லுண்டாகிய காலாவதி தோஷத்தை தடைசெய்ய மட்டாதென்றும், அப்பீல்தாருடைய வக்கீல் இ. லா. ரி 21 சென்னை 153, 36 சென்னை 97 முதலிய தீர்மானங்களை யெடுத்துக்காட்டி கக்ஷியாடுகிறார்.

தீர்மானம்.

பெந்தகபத்திரத்தொகை ஏற்பட்ட தவணைகளில் கொடுபடாவிட்டால் முழுத்தொகையு முடனே கொடுத்து விடவேண்டியதென்றும், அத்தொகைக்கே சாசனஞ் செய்யப்பட்டு சொத்து ஸ்வாதீனமும் பெந்தகம் பெற்றவனுக்குக் கொடுபடவேண்டியதென்றும் கண்டிருக்கிறது. இந்த தஸ்தாவேஜு 1871 வது வருஷத்திலேற்பட்டது. இ. லா. ரி. சென்னை 1 தீர்மானத்திற் கண்டபடி இது பெந்தகபத்திரமாகும். பெந்தகம் வைத்தவன் தனக்குள்ள மீட்கும்படியான பாத்தியதையை இழந்துவிடவேண்டியதாக எழுதியிருக்கும் ஷை ரத்து செல்லுபடியுள்ளதல்ல. இந்தபெந்தகம் ஊர்ஜிதத்திலிருந்து வந்தபடியால் 4-ம் பிரதிவாதிக்கு ஏற்பட்ட ஏலவிற்பனை அதற்குட்பட்டதாகவிருக்கிறது. கீழ் அபீல் கோர்ட்டார் செய்த தீர்மானம் நியாயமானது. இச்சொத்தை மீட்க இந்தத் தேதிமுதல் 3 மாதம் வரையில் கெடு

கொடுபட்டிருக்கிறது. அப்பீல் செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது.

1 Law Weekly 503.

அலகாபாத் ஹைகோர்ட்.

1912 ௵த்திய 2 வது அப்பீல் நம்பர் 1326

தீர்ப்பு 8—4—14.

ஜட்ஜிகள் ஸர் ஹென்ரி ரிச்சேர்ட்ஸ் K. T. சீவ் ஜஸ்டிஸ் ஜஸ்டிஸ் ஸர் P. C. பனர்ஜி K. T.	ஹரிநாராயன் பிரதிவாதி அப்பீல்தார் V ஹரிபிரசாத் ஆ வாதிகள் எதிர் கக்ஷிக்காரர்கள்

27. [டிரான்ஸ்வர் அவ் பிராபர்டி ஆக்ட்].

சுத்த பெந்தகதாரன் முந்திய போக்கிய கடனை தீர்த்தாலும், அந்த சொத்து இவன் வசமில்லா விட்டால் இவனுக்கு முன் பாத்தியமில்லை யென்பது.

வாதிகளின் முன்னோர்களுக்கு ஒரு சொத்து 1872 ௵த்தில் ஜூலை மாதம் 4 ந்தேதி பெந்தகம் வைக்கப்பட்டது. பின்பு இந்த சொத்தும் இன்னுஞ் சில சொத்துக்களும் ஜங்கி பிரசாத் என்பவருக்கு 1891 ௵த்தில் ரூபா 116 க்கு பெந்தகமாக வைக்கப்பட்டது. அந்தத் தொகையில் ரூபா 100 இந்த இரண்டு பெந்தகங்களுக்கு முற்பட்டதும், 1866 ௵த்தில் ஏற்பட்டதுமான தாவா சொத்தின் பேரி லேற்பட்ட போக்கியக் கடனைக் கொடுத்து தீர்த்துவிட வேண்டியதென சாட்டிவிடப்பட் டிருக்கிறது. ஜங்கி பிரசாத் தன்னுடைய பெந்தக பத்திரத்தின் பேரில் வழக்கிட்டு டிக்கிரி பெற்று பெந்தக சொத்துக்களை ஏலம் போட்டதில் அப்பீல்தாராகிய பிரதிவாதி ஏலத்தி லெடுத்துவிட்டார். வாதிகள் தங்களின் முன் பெந்தக பத்திரத்தின்படி வழக்கிட்டார்கள். ஜங்கி பிரசாத் முந்திய போக்கிய கடனைத் தீர்த்து விட்டதால் அப்பீல்தார் தனக்கு அந்த முன் பாத்திய மிருக்கிறதென்று கக்ஷியாடுகிறார். கீழ் கோர்ட்டார்களிருவரும் வாதிகளுக்கு அனுகூலமாகத் தீர்ப்பு செய்து விட்டார்கள். ஆனால் பிரதிவாதி இந்தக் கோர்ட்டில் அப்பீல் செய்திருக்கிறார்.

முன் பெந்தக பாத்தியம் கொண்டாட முடியும் அல்லது முடியா தென்பது ஒவ்வொரு கேசினு மேற்பட்ட கக்ஷிக்காரர்களின் எண்ணத்தைப் பொருத்ததாக விருக்கிற தென்று இந்தக் கோர்ட்டாராலும் பிரிவிகவுன்ஸலினும் பல தீர்மானங்களேற்பட்டிருக்கின்றன. டிரான்ஸவர் பெற்றவரின் நன்மையின் பொருட்டு முன் பாத்திய மிருக்கிற தென்றே ஊகிக்கப்பட வேண்டும். அந்த பாத்தியங்களை இழந்து விட்டதற்கு வெளிப்படையாக வுள்ள தகுந்த ருஜுக்கள் வேண்டும். ஆனாலிந்தக் கேசி லேற்பட்ட விஷயங்களை கவனிக்கு மளவில் முன் பாத்தியம் வைத்துக்கொள்ளவில்லையென்றே தெரிகிறது. போக்கிய கடனை தீர்த்ததினால் நன்மையடைந்தவன் பெந்தகம் பெற்ற ஜங்கின்தாஸ் அல்ல. பெந்தகம்வைத்தவள் சொத்தை ஸ்வாதீனஞ் செய்து கொண்டவன். அதனால் அப்பீல்தார் போக்கியதாரன் ஸ்தானத்தி லிருக்கிறா னென்று சொல்ல முடியாது. இதனால் பிரதிவாதியின் அப்பீலை செலவுடன் தள்ளுபடி செய்கிறோம். டிக்கிரி கடனை செலுத்த 6 மாதங் கெடு கொடுபட்டிருக்கிறது.

23 Indian Cases 827.

கல்கத்தா ஹைகோர்ட்

1914 ஷூத்திய சீவில் றூல் நம்பர் 340

[தீர்ப்பு 7—7—14.

ஜட்ஜிகள்
ஜஸ்டிஸ் ஸர் அஷோடஷ் மூகர்ஜி Kt. அவர்கள்
மிஸ்டர் ஜஸ்டிஸ் பீச்கிராப்ட் அவர்கள்

சுதேந்திரனாத் பாஸு ஆ-வாதிகள் மனுதாரர்கள்.
V
டௌவெஜ்மண்டால் பிரதிவாதிகள்-எதிர்கக்ஷிக்காரர்கள்.

14. [காண்டிராகட் ஆகட்டு]

பசுவின் கன்றை காயடிக்கக் கூடாதென்றும், அடித்தால் நஷ்டம் கொடுக்கவேண்டுமென்றும் செய்துகொள்ளும் உடன்படிக்கை செல்லுமென்பது.

வாதி தனக்குச் சொந்தமான பசுவின் கன்று ரூபா 30பெருமான முள்ளதை பிரதிவாதிக்கு ரூபா. 14-க்கு விற்றதில் இரண்டு வித நிபந்தனைகள் செய்துகொண்டார். அவையாவன (1) பிரதிவாதி அந்தக்கன்றை எவருக்கும் விற்கக்கூடாது. விற்கும் பட்சத்தில் தன்னிடத்திலேயே விற்கவேண்டும். வேறே எவரிடத்தில் விற்றாலும் தன்னுடைய பாத்தியமே மேலானது. (2)பிரதிவாதி அந்தக்கன்றை காயடிக்கக்கூடாது; அடிக்கும் பட்சத்தில் வாதிக்கு நஷ்டபரிகாரமாக ரூபா 50 கொடுக்கவேண்டியதுமன்றி அவ்விதங் காயடித்ததற்கு பிராயச்சித்தச் செலவுகளுங் கொடுக்க வேண்டும். பிரதிவாதி இந்த நிபந்தனையின்படி நடவாமல் அந்தக்கன்றை காயடித்துவிட்டதால் வாதி தான் செய்துகொண்ட உடன்படிக்கையின்படி ரூபா 50 பிரதிவாதியிடமிருந்து நஷ்டபரிகாரபாக கிடைக்கவேண்டுமென்றும், அவ்விதங் காயடித்ததற்கு தான் செய்த பிராயச்சித்த செலவு ரூபா 10 பிரதிவாதியிடமிருந்து கிடைக்கவேண்டுமென்றும் வழக்கிட்டார். இந்தக்கேசை விசாரித்த ஸ்மால்காஸ் ஜட்ஜி தாவா காண்டிராகட்டு செல்லுபடியற்றதென்றும், ஜங்கம சொத்துக்களைப்பற்றி ஏற்படும் நிபந்தனை அது திருப்பிக்கொடுபடவேண்டுமென்று ஏற்பாடு செய்து கொள்வது மட்டில் செல்லுமேயன்றி மற்றவை செல்லாதென்றும் வாதியின் வழக்கைத் தள்ளுபடிசெய்து விட்டார்கள். இதன் பேரில் இந்த ரெவிஷன் மனு கொடுபட்டிருக்கிறது.

உபயகக்ஷிக்காரர்களின் பாத்தியங்கள், கடமைகள் இவைகளைப்பற்றி கீழ் கோர்ட்டார் பிசகான அபிப்பிராயங் கொண்டிருக்கிறார். பிராதில்கண்ட விஷயம் நடந்ததாகத் தெரிவதால் வாதிக்கு நஷ்டபரிகாரங் கிடைக்கக்கூடியது. தாவாவிற்கண்ட காண்டிராக்ட் பொதுநீதிகளுக்கு விரோதமானதல்ல. அதை நிறைவேற்றலாம். அதனால் வாதியின் தாவாப்படி ரூபா 60-ம் அதற்கு 100-க்கு 6-வீதம் வட்டிக்கும் தீர்ப்பு செய்கிறோம். வாதிக்கு இரண்டு கோர்ட்டு செலவு தொகைகளுங் கிடைக்கக்கூடியது.

24 Indian Cases 86.

கல்கத்தா ஹைகோர்ட்டு.

1912 வருஷத்திய 2 வது அப்பீல் நம்பர் 2368.

தீர்ப்பு 13-2-14.

ஜட்ஜிகள்
மிஸ்டர் ஜஸ்டிஸ் N. R.சடார்ஜியா அவர்கள்
மிஸ்டர் ஜஸ்டிஸ் டியூனன் அவர்கள்

போனோமலிரூஜ் பிரதிவாதி அப்பீல்தார்
V
மூகந்தலால் கோஸ்வூ வாதிகள் எதிர்கக்ஷிக்காரர்

4. [ஈஸ்மெண்டு ஆக்டு]

காற்று வெளிச்சம் ஒருவன் வீட்டுக்கு ஏற்பட்டிருந்ததை மற்றொருவன் சுவர் வைத்து தடுத்துவிட்டதாக வழக்கிட்டால் அதனால் அந்த வீட்டை சவுகரியமாக அனுபவிக்க முடியாதா வென்பதைப் பற்றி ருஜுப்பிக்க வேண்டியதவசியமென்பது.

வாதி தன் வீட்டுக்கு வந்துகொண்டிருந்த வெளிச்சம் காற்று இவைகள் பிரதிவாதி சுவர் வைத்ததால் தடைபட்டு விட்டதாகவும், அதனால் தனக்குள்ள பாத்தியதையை ஸ்தாபித்து பிரதிவாதி சுவர் எடுக்காமல் இஞ்சக்ஷன் கொடுக்கவேண்டுமென வழக்கிட்டார். பிரதிவாதி பிராதிற்கண்டபடி காற்று வெளிச்சம் இவை யாதொன்றும், தடைசெய்யப்படவில்லை யென்றும், வாதி கொண்டாடும் பாத்தியம் செல்லத்தக்கதில்லையென்றும், கக்ஷியாடினார். இந்தக்கேசில் கீழ் கோர்ட்டார் வாதிக்கு தாவாவிற்கண்ட வசதிபாத்திய மேற்பட்டுவிட்டதா வென்ற ஒரே இஷ்ஷியுதான் ஏற்படுத்தி விசாரித்து பிராதிற்சொல்லும் தடையானது வாதிகளின் குடியிருப்புக்காவது, தொழில் நடத்துவதற்காவது எவ்வித கெடுதியுஞ் செய்யமாட்டாதென்று தாவாவைத் தள்ளுபடிசெய்துவிட்டார்கள். இது விஷயமாக அப்பீல் செய்யப்பட்டதில் பிரதிவாதி எழுப்பிய சுவற்றினால் வாதிகளின் ஜன்னல் முக்கால்பாகம் மறைக்கப்பட்டுப் போய்விட்டனவென்றும், அதனால் அதன் வழியாக வந்த காற்று வெளிச்சம் குறைவுபட்டு விட்டனவென்றும், வாதியின் தாவாப்படியே தீர்ப்பு செய்துவிட்டார்கள். அதனாலிந்த அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது.

வாதியின் வீட்டுக்கு அருகாமையில் பிரதிவாதி சுவர் எழுப்பிய ஒருகாரணத்தைக் கொண்டுமட்டில் வாதிக்கு தீர்ப்பு கொடுத்தது சரியல்ல. இந்தச்சுவர் வைக்கப்பட்டிருப்பதினால் வாதிகள் குடியிருப்பதற்கு அசவுகரியங்களிருக்கின்றனவா வென்பதை மட்டில் கவனிக்கவேண்டும். வாதிகளின் வீட்டுக்குப் போதுமான வெளிச்சம் காற்று இவைகளிருக்கின்றனவென்று பிரதிவாதிகள் கக்ஷி சொல்லியிருக்கிறார்கள். பிரதிவாதி சுவர் எழுப்பியதைக்கொண்டு வாதிகள் தங்கள் வீட்டை சவுகரியமாக அனுபவிக்க முடியவில்லையா வென்ற இஷ்ஷியு ஏற்படுத்தி விசாரித்து முடிவு செய்யவேண்டியது மெத்தஅவசியமானதாக விருக்கிறது.

இதனால் கீழ் கோர்ட்டார்களின் தீர்ப்புகளை ரத்து செய்து மேற்கண்ட இஷ்ஷியுவைப்பற்றி விசாரித்து தீர்ப்பு செய்யும்படி உத்திரவு செய்கிறோம்.

23 Indian Cases 959.

சென்னை ஹைகோர்ட்டு.

1913 வருஷத்திய சிவில் ரெவிஷன் மனு நம்பர் 39

தீர்ப்பு 11 - 2 - 14.

ஜட்ஜி ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யரவர்கள்.	சூரியன் முத்திரியன் பிரதிவாதி மனுதார் V நடேசப்பிள்ளை என்கிற மருதப்பிள்ளை வாதி. எதிர்க் கட்சிக்காரர்

4. [ஸ்மால்காஸ் கோர்ட் ஆக்ட்]

ஜலம் வடிய விடுவதற்காக தொகை வாங்கிக்கொண்டு அந்தப்படி நடவா விட்டால் அது விஷயமாக உண்டாகிய நஷ்டத்துக்கு ஸ்மால்காஸ் திரப்பில் வழக்கிடலாமென்பது.

வாதியுடைய நிலத்தின் ஜலம் பிரதிவாதியின் நிலத்தில் வடிகிறதென்றும், அதற்காக வாதி பிரதிவாதி ரூ 3 கொடுக்கிறதென்றும், உடன்படிக்கை செய்து கொண்டார்கள். அந்தப்படி பிரதிவாதி நடவாததால் அதனாலுண்டாகிய நஷ்டத்துக்கு வாதி பிரதிவாதி பேரில் வழக்கிட்டார். இந்த தாவா ஸ்மால்காஸ் திறப்பில் வழக்கிடக் கூடாதென்று பிரதிவாதி கக்ஷியாடினார். சீரங்கம் டிஸ்டிரிக்ட் முனிசீப் வாதியின் தாவாப்படியே தீர்ப்பு செய்துவிட்டதால் பிரதிவாதி இந்த ரெவிஷன் மனுக் கொடுத்திருக்கிறார். ஸ்மால்காஸ் கோர்ட் ஆக்டுஆர்டிகிள் (35 i) தாவா கேசுக்கு ஒத்துமையானதல்ல. தாவா கேஸ் வசதிபாத்தியதையைப் பற்றினதுமல்ல, நீரோட்டத்தை மறித்ததுமல்ல. தாவா கேஸ் ஒரு உடன்படிக்கையின் ஷரத்துக்கு விரோதமாக நடந்ததினாலுண்டாகிய நஷ்டத்தைப் பற்றிய வழக்கு. வாதி கேட்ட நஷ்டத்தை பிரதிவாதி கொடுக்கக் கடமைப் பட்டவர். மனுதார் வக்கீல் நஷ்டத்தொகையைப் பற்றி ஆக்ஷேபிக்க வில்லை. இந்த மனு செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

1914 M. W. N. 497.

சென்னை ஹைகோர்ட்டு.

1913 ஷூதிய ரேவிஷன் மனு நம்பர் 18.

தீர்ப்பு 27 - 3 - 14.

ஜட்ஜி மிஸ்டர் ஜஸ்டிஸ்எயிலிங்அவர்கள்	ஆருவமுதய்யங்கார். பிரதிவாதி மனுதார் V கலிய பெருமாள் வாதி எதிர் மனுதார்.

1. [ஸக்ஸெஷன சர்டிபிகேட் ஆகட்டு]

ஸக்ஸெஷன் சர்டிபிகேட் தாகல் செய்யப்படுவதற்கு முந்தி டிக்கிரி செய்யப்படக் கூடாதென்பது.

புருஷனுக்கு எழுதிக்கொடுத்திருந்த பிராமசரிநோட்டை அவர் விதந்து ஒருவருக்கு டிரான்ஸவர் செய்துகொடுத்தார். அந்த நோட்டின் பேரில் அவர் வழக்கிட்டதில் கும்பகோணம் சப் ஜட்ஜி அந்த நோட்டின்பேரில் டிக்கிரிசெய்து ஸக்ஸெஷன் சர்டிபிகேட் தாகல் செய்தபிறகுதான் டிக்கிரித்தொகை வசூலிக்கப் படவேண்டியதென்று டிக்கிரி செய்தார்கள்.

ஸக்ஸெஷன் சர்டிபிகேட் ஆகட்டு தாக்கல் செய்வதற்கு முந்தி டிக்கிரிசெய்தது சட்டவிரோதமானதென்று பிரதிவாதி இந்தக் கோர்ட்டில் ரெவிஷன் மனு கொடுத்திருக்கிறார்.

மனுதார் பிரதிவாதி செய்யும் ஆக்ஷேபனை நியாயமானதென்றே நினைக்கிறோம். (இ. லா. ரி 15 பம்பாய் 105 தீர்மானத்தைப் பார்க்க). தாவா நோட்டை மேடர் கொடுத்தவனின் பாத்தியதைக்கு வாதியின் பாத்தியம் மேலானதல்ல. (இ. லா. ரி 15 சென்னை 419 தீர்மானத்தைப்பார்க்க). விவாத டிக்கிரி சட்டவிரோதமானது. இ. லா. ரி 17 சென்னை 14 தீர்மானத்திற்கண்டபடி வாதி ஸக்ஸெஷன் சர்டிபிகேட் வாங்கி தாகல் செய்யும்படி போதுமான சாவகாசங்கொடுக்கவும், அந்தப்படி தாகல் செய்யாவிட்டால் பிராதைத் தள்ளுபடிசெய்யவுங்கடமைப்பட்டவர்கள். இதனால் கீழ் கோர்ட்டார் டிக்கிரியை ரத்து செய்திருக்கிறோம். கேஸை மறுபடியும் பயிலில் வைத்துக்கொண்டு சட்டப்படி தீர்மானிக்கும்படி உத்திரவு செய்கிறோம்.

24 Indian Cases 143.

சென்னை ஹைகோர்ட்டு.

1914 வருஷத்திய கிரிமனல் ரேவிஷன் கேஸ் நம்பர் 274.

ரிபரான கேஸ் நம்பர் 30 of 1914.

தீர்ப்பு 1—5—14

ஜட்ஜிகள். ஜஸ்டிஸ் எயிலிங் அவர்கள் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யரவர்கள்	திருப்பத்தூர் சப்மாஜிஸ்டிரேட் கோர்ட்டு 1914 ஷூத்திய கியாலண்டர் 103 நம்பர் எதிரி ஊமையன்

15. [சாக்ஷிய சட்டம்.]

ஊமையனிடம் திருட்டுச் சோத்து கண்டு பிடித்ததினால் அவன் திருடனென்ருவது திருட்டுச் சோத்தை வாங்கினவனென்ருவது தீர்மானிக்கக் கூடாதென்பது.

ரயில்வே கார்டு ஒருவருடைய சொத்துக்கள் திருட்டுப் போய் விட்டன. இவ்விதம் திருட்டு நடந்த ஒரு வாரத்துக்குப் பிறகு அந்த திருட்டில் சம்பந்தப் பட்ட உடுப்பொன்றை ஊமையுஞ் செவிடுமாகிய எதிரி தரித்துக் கொண்டு அந்த ரயில்வே கார்டின் வீட்டின் வழியாகச் சென்றான். இவனை யுடனே திருட்டுக் குற்றத்துக்காக சார்ஜ் செய்தார்கள். மாஜிஸ்டிரேட் கைஜாடை மூலமாக அவன் பேரிலேற்பட்ட குற்றவிஷயமாகத்தெரிவித்ததாகவும், விபரஞ் சரியாகப் பிரியாத எதிரியின் சமிக்கைகளைக் கொண்டும், திருட்டு நடந்த சமீப காலத்தில் திருட்டுச் சொத்து எதிரி வசமிருந்து கண்டு பிடிக்கப்பட்டதைக் கொண்டும் எதிரி அச்சொத்தைத்திருடி யிருக்க வேண்டு மென்றும், அல்லது திருட்டுச்சொத்தென்று தெரிந்து அதை வாங்கி யிருக்க வேண்டு மென்றும், அவனைத் தெண்டித்து விட்டார். இது விஷயமாக டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட் கி—பு கோடு 341 வது செக்ஷன்படி ரிபெர் செய்திருக்கிறார்.

உத்தரவு,

எதிரி ஒரு செவிடும் ஊமையுமானவன். இவன் ரயில்வே கார்டின் வஸ்திர மூட்டையைத் திருடிய குற்றத்துக்காக தெண்டிக்கப்பட் டிருக்கிறான். இவன் பேரிலேற்பட் டிருக்கும் சாக்ஷியம் இந்தத் திருட்டு நடந்த ஒரு வாரத்துக்குப் பிறகு திருட்டுப்போன வஸ்திரத்தை யுடுத்திக்கொண்டு எதிரி வாதி வீட்டின் வழியாகப் போனதாகவும், ருஜுச்சொல்லப்பட்

டிருக்கிறது. இதைத்தவிர வேறு ருஜுவில்லை. சாதாரணமான ஒருவனிடமிருந்து இவ்விதந் திருட்டுச் சொத்துக் கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் இந்திய சாக்ஷிய சட்டம் 114 (a) செக்ஷன்படி இவன் அச்சொத்தை திருடியவனென்றாவது திருட்டுச் சொத்தென்று தெரிந்து அயோக்கியத்தனமாக வாங்கினவனென்றாவது அனுமானித்து இ. பி. கோடு 411–வது செக்ஷன்படி தெண்டிக்கலாம். இந்த எதிரி விஷயத்தில் அவ்வித அனுமானங் கொள்ளக்கூடாது. ஏனென்றால் எதிரி தன் வசம் இச்சொத்து எவ்விதம் வந்ததென்பதைத் தெரிவிக்க சக்தியற்றவனாகவிருக்கிறான். இத்திருட்டு விஷயத்தை அவனுக்குத் தெரிவிக்கவுமுடியவில்லை. இவன் சமிக்கை காட்டியது சரியாகத் தெரியவில்லையென்று மாஜிஸ்டிரேட் சொல்லுகிறார். எதிரிக்கு அயோக்கியத்தனமான எண்ணமிருந்ததென்பதற்கு எவ்வித ஆஸ்பதங்களுமில்லை. இதனால் கீழ்க்கோர்ட்டார் விதித்த தண்டனையை ரத்து செய்து எதிரியை விடுதலை செய்திருக்கிறோம்.

1 Law Weekly 492.

சென்னை ஹைகோர்ட்டு

1914 ௵த்திய கிரிமனல் ரெவிஷன் கேஸ் நம்பர் 187

கிரிமனல் மனு நம்பர் 157 of 1914.

தீர்ப்பு 12 - 5 - 14.

ஜட்ஜி
ஜஸ்டிஸ் எயிலிங் அவர்கள்

சுப்பிரமணிய அய்யர்வூ மனுதார்கள் 1-2 (கவுண்டர் மனுதார்கள்)
V
மாரியாபிள்ளை எதிர்க்கக்ஷிக்காரர் (மனுதார்)

28. [கிரிமனல் புரிஸீஜர் கோடு.]

கி. பு. கோடு 144 வது செக்ஷன்படி கோடபட்ட மனுவை மாஜிஸ்டிரேட் தள்ளுபடி செய்த பிறகு விவாத சொத்தை வில்லேஜ் மாஜிஸ்டிரேட் ஸ்வாதீனத்தில் வைததுக்கோள்ள வேண்டுமென்று மாஜிஸ்டிரேட் உத்தரவு செய்வது சட்ட விரோதமானதென்பது.

மனுதார்கள் சுப்பிரமணிய அய்யர் வூ மூலபுருஷன் குழந்தை வேலுப்பிள்ளையின் பிள்ளைகளிடமிருந்து சாசனம் பெற்ற

வர்கள். எதிர்க்கக்ஷிக்காரர் மாரியாபிள்ளை அந்த குழந்தை வேலுப்பிள்ளையின் விதந்து சந்திரோதயம்மாளிடமிருந்து குத்தகைக்கு வாங்கியவர். இந்த மாரியாபிள்ளை விவாத சொத்துத் தன்வசமிரும்பதாகவும், மனுதார்கள் சுப்பிரமணிய அய்யர் வூ தாவா சொத்தில் பிரவேசிக்காமல் அவர்களைத் தடைசெய்யவேண்டுமென்றும், நாகபட்டணம் சப் டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டிடம் 17-1-14 ல் கி. பு. கோடு 144-வது செக்ஷன்படி மனுக்கொடுத்தார். இது திருவாலூர் போலீஸ் சப் இனிஸ்பெக்டரிடம் அனுப்பப்பட்டது. அவர் பிப்பரவரி மாதம் 2-தேதி ரிபோர்ட்டு செய்தார். இதன் மத்தியில் மாரியாபிள்ளை போலீசார் கேசை சரியாக விசாரிக்கவில்லையென்றும், மனுதார்கள் மகசூலை அறுவடை செய்யாமல் அவர்களைத் தடைசெய்யவேண்டுமென்றும், அறுவடையான மகசூலை கிராம முனிசீப் கைப்பற்றி அவர் வசம் வைத்துக்கொள்ள வேண்டுமென்றும் விசாரணை சீக்கிரம் நடத்தப்படவேண்டுமென்றும் ஜனவரி மாதம் 24 தேதி மனுக்கொடுத்தார். இதன் பேரில் சப் டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டாரால் ஜனவரி 24 தேதியில் அடியிற்கண்ட உத்திரவு செய்யப்பட்டது.

"தாவாசொத்தின் பாத்தியாபாத்தியம் ஸ்தாபிக்கப்படுகிற வரையில் உபயகக்ஷிக்காரர்களும் தாவா சொத்தில் பிரவேசிக்காதபடி நோட்டீஸ் பிறப்பிவி" ஏற்கனவே அறுவடையான மகசூலை வில்லேஜ் முனிசீப் கைப்பற்றி அவர் வசமிருக்கவேண்டும். உபயகக்ஷிக்காரர்களும் பிப்பரவரி மாதம் 5 தேதி நாகபட்டணம் முகாமில் நம்முன்பாக அவரவர்களின் சாக்ஷிகளுடன் ஆஜராகவேண்டும். எந்த செக்ஷன்படி இந்த உத்தரவு செய்யப்பட்டதென்று சொல்லப்படவில்லை. இந்தக் கேசின் விசாரணை மெத்த தாமதத்தின்பேரில் நடந்து மார்ச்சுமாதம் 5 தேதி அடியிற்கண்ட உத்திரவு செய்யப்பட்டது.

"தாவா நிலத்திலுள்ள நெல் சிலபாகம் கிராம முனிசீபால் அறுவடை செய்யப்பட்டது. அவர் மற்ற மகசூல்களையும் அறுவடை செய்து சிவில் கோர்ட்டாரிடமிருந்து உத்திரவு வருகிற வரையில் எல்லா நெல்லையும் ஜப்தியில் வைத்திருக்கவேண்டும். சிவில் கோர்ட்டாரிடமிருந்து ஒருமாத கெடுவுக்குள் உத்திரவு கிடைக்காத வரையில் இந்த நெல் பகிரங்கமான ஏலத்தில் விற்று முதல் செய்யப்படும்.

இதன்பேரில் மனுதார்கள் இந்தக்கோர்ட்டில் ரெவிஷன் மனுக் கொடுத்திருக்கிறார்கள். மனுதார்களின் வக்கீல் மிஸ்டர் T. V. கோபாலசாமி முதலியார் தாவா சொத்துக்களை ஜப்தி செய்து உபயவாதிகளும் சிவிலில் வழக்கு செய்து கொள்ளும்படி மாஜிஸ்டிரேட் உத்திரவு செய்ய அவருக்கு அதிகாரமில்லை யென்றும், தற்காலம் ஜப்தி செய்தது கி. பு. கோடு 145-வது செக்ஷன் கிளாஸ் 4-ன் படிக்கென்றும், இது விஷயமாக கொடுபட்ட மனு தள்ளுபடி செய்யப்பட்டபோதே இந்த ஜப்தியும் விடுதலையாய் விட்டதென்றும், மாஜிஸ்டிரேட் கி. பு. கோடு 145-வது செக்ஷன்படி விசாரிக்கவில்லையென்றும், தாவா சொத்து உபயகக்ஷிக்காரர்களின் வசமில்லையென்றாவது ஏற்பட்ட ருஜுக்களால் யார் வசத்திலிருக்கிறதென்று கண்டுபிடிக்க முடியவில்லையென்றாவது தீர்மானிக்காததால் கி. பு. கோடு 146-வது செக்ஷன்படி உத்திரவு செய்ய அவருக்கு அதிகாரமில்லையென்றும் (இ. லா. ரி. 40 கல்கத்தா 105) மனுதார்களின் ஸ்வாதீனம் சிவில் கோர்ட்டாரின் தீர்ப்பினால் ஆதரிக்கப்பட்டிருப்பதால் அதை ஸ்தாபிக்க மாஜிஸ்டிரேட் கடமைப்பட்டவரென்றும் (இ. லா. ரி. 26 கல்கத்தா 625, 32 கல்கத்தா 796) அறுவடை செய்யப்பட்ட மகசூல் ஸ்தாபர சொத்தல்லவாகையால் அதை ஜப்தி செய்தது சட்ட விரோதமானதென்றும், (இ-லா-ரி 26 அலகபாத் 266) 145 வது செக்ஷனிற் கண்ட விதிகளின்படி மாஜிஸ்டிரேட் நோட்டீஸ் கொடுக்காததினாலே அந்த நடவடிக்கைகள் முழுவதும் செல்லத்தக்கதல்லவென்றும், எந்த விதமாக விருந்த போதிலும் மனுவைத் தள்ளுபடி செய்த பிறகு ஜப்தியை ஊர்ஜிதத்தில் வைத்துக்கொள்ள மாஜிஸ்டிரேட்டுக்கு அதிகாரமில்லை யென்றும் கக்ஷியாடினார்.

விவாத உத்திரவு 146 வது செக்ஷன்படி செய்யப்பட்டிருக்க வேண்டுமே யல்லது வேறு செக்ஷன்படி செய்யப்பட நியாயமில்லை. இந்த உத்திரவின் வாசகங்களை யோஜிக்குமளவில் சிவில் கோர்ட்டாருடைய தீர்ப்பினால் கி. பு. கோடு 145 வது செக்ஷன்படி சொத்தின் அனுபவ பாத்தியதையைப் பற்றி விசாரிக்கவாவது தீர்மானிக்கவாவது தான் தடைப்பட்டிருப்பதாக மாஜிஸ்டிரேட் எண்ணி இந்த உத்திரவு செய்ததாகத் தெரிகிறது. இந்த திருவாரூர் டி. மு. கோர்ட்டு 1911 வருஷத்திய அசல் 144 நம்பர் தீர்ப்பு மாஜிஸ்டிரேட் கி. பு. கோடு 145-வது செக்ஷன்படி நட

வடிக்கை நடத்தும் அதிகாரத்துக்கு தடை செய்யுமென்று எங்களுக்குத் தோற்றவில்லை. மனுதார் வக்கீல்எடுத்துச் சொல்லுந் தீர்மானங்களிற் கண்ட விஷயங்களுக்கும், தாவாவிற் கண்ட கேசுக்கும் மெத்த வித்தியாசங்களிருக்கின்றன. இந்த 145 வது செக்ஷன்படி இரண்டுமாத காலங்களுக்குள் யாரிடத்தில் சொத்து ஸ்வாதீன மிருந்து வந்ததென்பதைப் பற்றி மட்டில் விசாரிக்கவேண்டுமே யல்லது சொத்து பாத்தியதையைப் பற்றி விசாரிக்கவேண்டுவதில்லை. தாவா கேசில் மனுதார் சொல்லும் சிவில் கோர்ட்டு டிக்கிரிக்கு விவாத நடவடிக்கைக்கும் மத்தியில் 18 மாத காலங்களிருந்திருக்கின்றன. அந்த சிவில் வழக்கு பாத்திய ஸ்தாபன வழக்குமல்ல. விவாத சொத்து சுவாதீனமாகவேண்டுமென்ற வழக்குமல்ல. அது நஷ்ட பரிகாரங் கிடைக்கவேண்டுமென்ற வழக்கு. அதில் சொத்து சுதந்திரத்தைப் பற்றிய ருஜு மிகவும் சொற்பம். 145 வது செக்ஷன்படி சொத்து ஸ்வாதீன விஷயமாக செய்யப்படும் உத்திரவினால் சிவில் கோர்ட்டாருடைய தீர்மானம் திருத்தப்படவாவது ரத்து செய்யப்படவாவது நியாயமில்லை. இதனால் மனுதார் வக்கீல் எடுத்துச் சொல்லும் கல்கத்தா ஹைகோர்ட்டுத் தீர்மானங்கள் தாவா கேசுக்கு ஒற்றுமையானதல்ல.

மாஜிஸ்டிரேட் கி. பு. கோடு 145 வது செக்ஷன் 1 வது கிளாஸ்படி நடவடிக்கை நடத்தாததினாலே அவர் செய்த உத்திரவு செல்லுபடி யுள்ளதல்ல. மாஜிஸ்டிரேட் ஜனவரி மாதம் 21-ந் தேதி செய்த உத்திரவு 145 வது செக்ஷன்படி செய்ததல்ல; ஏனென்றால் போலீஸாருடைய ரிபோர்ட்டு இதற்கு பிறகு பிப்பாவரி மாதம் 2 ந்தேதி தான் வந்தது. இந்த ரிபோர்ட்டுக்குப் பிறகு மாஜிஸ்டிரேட்டால் எவ்வித வுத்திரவுஞ் செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. மாஜிஸ்டிரேட் கி. பு. கோடு 145 வது செக்ஷன்படி நடத்திய நடவடிக்கைகள் சட்ட விரோதமாகவும், அதிகார வரம்பை மீறிச் செய்ததாகவு மிருப்பதால் அவர் 146 வது செக்ஷன்படி செய்த வுத்திரவு சரியல்ல. அது சட்ட விரோதமானதென்று அதை ரத்து செய்கிறோம்.

1 Law Weekly 493

அலகபாத் ஹைகோர்ட்டு.

1914 வருஷத்தியகிரிமனல் ரேவிஷன் மனு நம்பர் 167.

தீர்ப்பு 29 - 4 - 14.

ஜட்ஜி.
ஜஸ்டிஸ் ஸர் P. C. பனர்ஜி Kt
அவர்கள்

ஆடார்கர்மி மனுதார்
V
சக்கரவர்த்தி அவர்கள்
எதிர்மனுதார்

29 [கிரிமனல் புரிஸீஜர் கோடு.]

கி. பு. கோடு 145(1) விதிகளை யனுசரித்து நடத்தாத நடவடிக்கைகள் செல்லத்தகுந்ததல்ல வென்பது.

ருகவசிங் என்பவர் மனுதார் கலகஞ் செய்ய எத்தனிப்பதாக முதலாவது வகுப்பு மாஜிஸ்டிரேட்டுக்கு தந்தி கொடுத்தார். இந்த மனு போலீசாரிடம் அனுப்பப்பட்டதில் அவர்கள் கி. பு. கோடு 107-வது செக்ஷன்படி விசாரணை செய்தார்கள். இந்த நடவடிக்கையில் மனுதார் மாஜிஸ்டிரேட்டிடம் எழுத்து மூலமாக ஸ்டேட்மெண்டு கொடுத்தார். அதன்பேரில் மாஜிஸ்டிரேட் அடியிற்கண்ட உத்திரவு செய்தார்.

"இந்தக் கேசைப் பார்க்கும்போது இது கி. பு. கோடு 145 வது செக்ஷன்படியாகிறது. 107–வது செக்ஷனல்ல. ஆகையால் விசாரணைக்கு அக்டோபர் மாதம் 23 தேதி கெடு போடப்பட்டிருக்கிறது. சொத்து ஸ்வாதீனத்தைப்பற்றி கக்ஷிக்காரர்கள் எழுத்துமூலமான ஸ்டேட்மெண்டுகள் கொடுக்கவேண்டும்."

கி. பு. கோடு 145(1) செக்ஷனிற் கண்டபடி தன்னுடைய ஜூரிக்ஸ்டிக்ஷனுக்குட்பட்ட விடத்தில் எந்த நிலமுதலியனவற்றைப் பற்றியாவது விவாதங்களுண்டாகி கலகங்கள் நடக்க ஹேதுவா யிருக்கிறதென்று நம்பத்தகுந்த, காரணங்களிருக்கின்றனவென்று எழுத்துமூலமாக எவ்வித பதிவுஞ் செய்யவில்லை. இந்த விஷயங்களில் சம்பந்தப்பட்ட நபர்களிடத்தில் அந்த வுத்திரவு காபிகளை சர்வ் செய்யவுமில்லை. மேற்படி செக்ஷன் 3-வது கிளாஸிற் கண்டபடி விவாத ஸ்தலத்திலாவது அதற்கு சமீபத்திலாவது பயிரங்கமான ஸ்தலத்தில் அந்த உத்திரவின் காப்பி ஒட்டப்படவுமில்லை. இந்நடவடிக்கைகள் நடத்தாமல் கேசை விசாரித்தது சட்ட விரோதமானதென்று மனுதார் இந்தக் கோர்ட்டில் ரெவிஷன் மனுக் கொடுத்திருக்கிறார்.

இந்த செக்ஷன்படி நடவடிக்கைகள் நடத்தப்பட வேண்டுமானால் இதிற் சொல்லப்பட்ட விதிகள் எல்லாம் சரிவர அனுசரிக்கப்படவேண்டுமென்று இந்தக்கோர்ட்டாரால் தீர்மானங்கள் ஏற்பட்டிருக்கின்றன.(ஐ லா. ரி 25 அலகாபாத் 537, 20 இந்தியன்கேஸஸ் 751 இவைகளைப் பார்க்க). இந்தக்கேசில் மாஜிஸ்டிரேட் 145 வது செக்ஷனிற் கண்ட விதிகளை யனுசரித்து நடவடிக்கைகள் நடத்தவில்லை யென்றே தீர்மானிக்கிறோம். இதனு லிந்த மனுவை யங்கீகரித்து கீழ் கோர்ட்டார் செய்த வுத்திரவை ரத்து செய்கிறோம். இந்த செக்ஷன்படி கீழ் கோர்ட்டார் உஜிதப்படி மேல் நடவடிக்கை நடத்துவதற்கு இது எவ்வித பாதகமுஞ் செய்ய மாட்டாது.

24 Indian Cases 160.

சென்னை ஹைகோர்ட்டு.

1914 ஷத்திய கிரிமனல் ரெவிஷன் கேஸ் நம்பர் 71

தீர்ப்பு 1 - 5 - 14.

ஜட்ஜிகள்
மிஸ்டர் ஜஸ்டிஸ் எயிலிங் அவர்கள்
மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யரவர்கள்

நாச்சிமுத்து செட்டி வாதி மனுதார்
V
முத்துசாமிசெட்டி எதிரி

30 [கிரிமனல் புரிஸீஜர் கோடு.]

கிராம மாஜிஸ்டிரேட்டிடம் சொல்லிக்கொள்ளும் பிராதுகளிலும் வாதி கி. பு. கோடு 250-வது செக்ஷன்படி எதிரிக்கு காம்பன்சேஷன் தொகை கொடுக்கும்படி உத்திரவு செய்யலாமென்பது.

வாதி மனுதார் தனக்குச் சொந்தமான ஒரு மூட்டை பஞ்சை எதிரி முத்துசாமிசெட்டி திருடிப்போய் விட்டதாக ஆயக்குடி கிராம மாஜிஸ்டிரேட்டிடம் தெரிவித்தார். அதன்பேரில் அவர் கி. பு. கோடு 47 (c) செக்ஷன்படி இது விபரத்தை போலீசாருக்குத் தெரிவித்ததின்பேரில் போலீஸார் எதிரிபேரில் இ.பி. கோடு 379-வது செக்ஷன்படி குற்றஞ்சாட்டி பழனி சப்மாஜிஸ்டிரேட் முன்பாக விசாரணைக்குக் கொண்டுவந்தார்கள். அவர்கள் விசாரித்து கேசைத் தள்ளுபடி செய்ததுமன்றி வாதி கி.பு.கோடு 250 - வது செக்ஷன்படி எதிரிக்கு காம்பன்ஸேஷன் தொகை கொடுக்கவேண்டியதென்றுந் தீர்மானஞ் செய்தார்கள். இதிற் சொல்லும் 250-வது செக்ஷன்படி வாதியால் பிராதுகொடுபடாத

தாலும், போலீஸ் ஆபீசரிடமாவது மாஜிஸ்டிரேட்டிடமாவது வாதியாதொன்றுந் தெரிவிக்கவில்லையாதலாலும், வாதி காம்பன்சேஷன் தொகை கொடுக்கும்படி உத்திரவு செய்தது சட்டவிரோதமானதென்று வாதி இந்தக் கோர்ட்டில் ரெவிஷன் மனுக் கொடுத்திருக்கிறார்.

வாதி மனுதார் வக்கீல் தன் கக்ஷிக்கு ஆதாரமாக இ. லா. ரி 25 சென்னை 667, 22 சென்னை லா ஜர்னல் 138 இந்தத்தீர்மானங்களை யெடுத்துக்காட்டுகிறார். இவைகளுக்கு விரோதமாக இப்பால் இ. லா. ரி 32 சென்னை 258 புல்பெஞ்சு தீர்மான மேற்பட்டு விட்டதாலும் அது இந்த செக்ஷனுடைய உண்மையான கருத்தின்படிக்கும், நடுநியாயம் தகுந்த காரணங்கள் இவைகளின்படிக்கும் ஏற்பட்டிருப்பதால் அதையே நாம் அனுசரிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். வாதி வில்லேஜ் மாஜிஸ்டிரேட்டிடம் பிராது கொடுப்பது அவரதைப்பற்றி போலீசாரிடமாவது மாஜிஸ்டிரேட்டிடமாவது தெரிவித்து நடவடிக்கை நடத்தவேணுமென்ற எண்ணத்துடனே யன்றி வேறல்ல. அவ்விதஞ் செய்வது வாதி கி. பு. கோடு 154-வது செக்ஷன்படி போலீசாருக்குத் தெரிவிப்பதாகும்; அல்லது மாஜிஸ்டிரேட்டிடம் கி. பு. கோடு 191-வது செக்ஷன்படி மாஜிஸ்டிரேட்டிடந் தெரிவிப்பதாகும். ஏனென்றால் கிராமத்தலைவர் இது விஷயத்தைப்பற்றி போலீசாருக்காவது மாஜிஸ்டிரேட்டுக்காவது தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறார். ஹைகோர்ட்டார் ஒருகிராம மாஜிஸ்டிரேட்டிடமிருக்குங் கேசை வேறு கிராம மாஜிஸ்டிரேட்டுக்கு மாற்றிவருகிறார்கள். அதினால் மாஜிஸ்டிரேட் என்று கிரிமனல் புரஸீஜர் கோடில் சொல்லப்பட்டிருப்பது கிராம மாஜிஸ்டிரேட்டென்றும் அர்த்தமாகலாம். வில்லேஜ் மாஜிஸ்டிரேட் தாங்கள் நேரில் விசாரிக்க அதிகாரமுள்ள கேஸ்களுக்குமட்டில் இந்த 250 வது செக்ஷன் பொருத்தமானதல்ல. துன்பமடைந்தவர்கள் பெரும்பாலும் தங்களுக்குற்றவைகளைப்பற்றி போலீசாருக்கு நேரிற்றெரிவிக்கும் வழக்கங் கிடையாது. கிராம மாஜிஸ்டிரேட் மூலமாகவே தெரிவிக்கிறார்கள். இதனால் மனுதார் வாதி காம்பன்சேஷன் கொடுக்கும்படி உத்திரவு செய்தது சட்ட விரோதமானதல்ல. அதனாலிந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

24 Indian Cases 167.

கல்கத்தா ஹைகோர்ட்.

1913 வருஷத்தியகிரிமனல் ரெவிஷன் மனு நம்பர் 162.

தீர்ப்பு 19 - 11 - 13.

ஜட்ஜிகள்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் இமாம் அவர்கள்
மிஸ்டர் ஜஸ்டிஸ் சாப்பென் அவர்கள்

பிரியோலால் மூகர்ஜி
எதிரி மனுதார்
V
சக்கரவர்த்தியவர்கள் எதிர்மனுதார்

18. [இந்தியன் பெனல் கோடு].

கோர்ட்டார் சட்டவிரோதமாக தீர்ப்பு செய்திருந்தபோதிலும் அந்தத் தீர்ப்பை நிறைவேற்றும் சர்க்கார் உத்தியோகஸ்தனைத் தடுப்பது குற்றமாகுமென்பது.

ஒரு குளத்திலுள்ள பாசி பாத்தியதையைப்பற்றி மனுதார் எதிரியைச் சேர்ந்தவருக்கும் வேறொரு பங்காளிக்கும் விவாதமிருந்தால் அந்தப் பங்காளி இந்த எதிரிபேரில் வழக்கிட்டு காலேயரைக்கால் பாகத்துக்கு தீர்ப்பு பெற்றார். அந்தத் தீர்ப்பை நிறைவேற்றுவதற்காக டிக்கிரிதாரன் கோர்ட்டுச் சேவகனுடன் தாவாவிற்கண்ட குளத்துக்குச் சென்றார். அங்கே வந்த மீன்பிடிப்பவர்களைக்கொண்டு வலைகளைப்போட்டு கோர்ட்டுச் சேவகன் மீன்பிடிக்கச் செய்தான். மற்றபாகஸ்தனுக்காக மனுதார் எதிரிவந்து மீன்பிடிக்கக் கூடாதென ஆக்ஷேபனை செய்தார். இவருடைய சொற்களை கேளாமல் மறுபடியும் மீன் பிடித்ததால் எதிரி குளத்திலிறங்கி வலைகளை தன்னுடைய கத்தியினாலறுத்து விட்டார். இது விஷயமாக டிக்கிரிதாரனும் கோர்ட்டுச் சேவகனும் கேட்டதற்கு எதிரி இவர்களைத் தாக்கினார். இதனால் எதிரிபேரில் பிராது கொடுக்கப்பட்டு விசாரணை செய்து கோர்ட்டுச் சேவகனை எதிரி தாக்கிய குற்றத்துக்காக இவருக்கு 6 மாதங் கடுங்காவல் தெண்டனை விதித்தார்கள். இவ்விதந் தெண்டனை விதித்தது சட்டவிரோதமானதென்று எதிரி இந்தக் கோர்ட்டில் ரெவிஷன் மனுக் கொடுத்திருக்கிறார்.

சிவில்கோர்ட்டு தீர்ப்பில் குளத்தில் மீன்பிடித்துக் கொள்ளும்படி சொல்லப்படவில்லை யென்றும், வாதி தாவா குளத்தில் மீன்பிடித்துக்கொள்ளும் பாத்தியதையுடன் குளத்தை ஸ்வாதீனஞ் செய்து கொள்ளுகிற தென்று தீர்ப்பிற் கண்டிருப்பது சட்ட விரோதமான தென்றும், அதனால் எதிரி செய்தது குற்றமாகா தென்றும், மனுதார் வக்கீல் எடுத்துச் சொல்லுகிறார். முனிசிப் செய்த தீர்மானத்திலாவது உத்திரவிலாவது எவ்வித பிசகுகளிருந்த போதிலும் கோர்ட்டுச் சேவகன் தன்னு

டைய உத்தியோக முறைமையில் நல்ல எண்ணத்துடன் நடவடிக்கை நடத்தியதால் அது சட்ட விரோதமானதாக விருந்த போதிலும். இந்தச் சேவகன் விஷயத்தில் எதிரிக்கு தற்காப்பு பாத்தியம் (right of private defence) கிடையாது. இ. பி. கோடு 99-வது செக்ஷன்படி எதிரிக்கு தற்காப்பு பாத்தியங் கிடையாது. இவ்விதம் மீன் பிடிக்கும்படி உத்திரவு செய்தவன் கோர்ட்டு சேவகனென்று எதிரி தெரிந்து கொள்ளாமல் எதிரியைத் தாக்கினார். இந்தச் சேவகன் தான் சர்க்கார் உத்தியோகஸ்த னென்று தனக்கு கிடைத்த உத்திரவை யெடுத்துக் காட்டிய வுடன் மனுதார் பிறகு யாதொன்றுஞ் செய்யாம லிருந்து விட்டார். இதனை லிவர் சட்டத்துக் கடங்கிநடந்து விட்டதாகவே தெரிகிறது. இது சாதாரணமாக வுள்ள தாக்குத லென்னுங் குற்றமாதலால் இக்குற்றத்துக்கு ரூ. 50 அபராதம விதிப்பது போதுமான தென்று நினைக்கிறோம். அதனால் எதிரிக்கு விதித்த 6 மாத தண்டனையை மாற்றி ரூ. 50 அபராதம் விதிக்கிறோம். இந்த அபராதஞ் செலுத்தப் படா விட்டால் இரண்டுவாரங் கடுங்காவல் தண்டனை.

24 Indian Cases 163.

சென்னை ஹைகோர்ட்டு

1913 ஷ வருத்திய கிரிமினல் ரெவிஷன் கேஸ் நம்பர் 793.
தீர்ப்பு 23—4—14

ஜட்ஜிகள்
மிஸ்டர் ஜஸ்டிஸ் எயிலிங் அவர்கள் } அபதல் ரகிமான் சாகிப் எதிரி மனுதார்

19. [இந்தியன் பெனல் கோடு]

வாரண்டுச் சேவகன் பெயர் போடாமல் சோடுக்கப்பட்ட வாரண்டின் பேரில் டிக்கிரி கடன்காரன் பிடிக்கப்பட்டதை விடுவித்தவனுக்கு இ. பி. கோடு 225 - வது செக்ஷன்படி தண்டனை விதிக்கலா மென்பது.

கோவில்பட்டி ஸ்டேஷனரி சப் மாஜிஸ்டிரேட் தீர்ப்பின் பேரில் மேற்படி யூர் சப் டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டாரிடம் அப்பீல் செய்யப்பட்டு அதன் பேரில் இந்த ரெவிஷன் மனுக் கொடுக்கப் பட்டிருக்கிறது.

சிவில் வாரண்டில் பிடிக்கப்பட்ட இராமசாமி மூப்பனை மனுதார் எதிரி விடுவித்ததற்காக அவனை தண்டித்திருக்கிறார்கள். இராமசாமி மூப்பனை வாரண்டிற் பிடித்தது சட்டவிரோதமான தென்றும் எதிரி யுடைய பலாத்கார செய்கையால் அந்த இராமசாமி மூப்பன் ஓடிப்போக வில்லையென்றும், மனுதார் வக்கீல் விவாதஞ் செய்கிறார். பிராஸிகியூஷன் திறப்பு 2-வது சாக்ஷி பெயர் குறிப்பிட்டு

சொல்லாமல் கோர்ட்டு அமீனு வென்று பொதுவாகச் சொல்லியிருப்பதால், அந்த வாரண்டின் பேரில் பிடித்தது சட்ட விரோதமான தென்பதற்கு மனுதார் வக்கீல் யாதொரு ஆதாரமும் எடுத்துக் காட்ட வில்லை. வாரண்டிற் கண்ட பேர் வழி அதிற் கண்ட தொகையைச் செலுத்தும்படி சாவகாசங் கொடுத்து அந்தப்படிச் செய்யா திருந்தால் மட்டில் வாரண்டிற் பிடிக்கவேண்டு மென்பதற்கும் மனுதார் வக்கீல் யாதொரு ஆதாரமும் எடுத்துக் காட்டவில்லை. அதனால் மேலே சொன்ன விவாதங்களைத் தள்ளுபடி செய்கிறோம்.

முதல் எதிரியைப் பிடிப்பதற்கு முந்தி அந்த வாரண்டிற் கண்ட விஷயங்களை அந்த எதிரிக்கு பிராஸிகியூஷன் திறப்பு 2-வது சாக்ஷி தெரிவிக்க வில்லை யென்றும், அவ்விதந் தெரிவிக்காதது சட்ட விரோதமான தென்றும், மனுதார் வக்கீல் விவாதஞ் செய்கிறார். இந்த வாரண்டை முதல் எதிரிக்கு காண்பித்து அதில் கையெழுத்து செய்யும்படி பிராஸிகியூஷன் 2 வது சாக்ஷி கேட்டதாக ருஜுவாகியிருக்கிறது. அதனால் முதல் எதிரி அதை நன்றாக வாசித்துப் பார்த்திருக்கலாம். அதையவர் வாங்கிப்பாராமலே காலமில்லாத காலத்தில் பிடித்தது பிசகென்று சொல்லி ஓடவாரம்பித்தார். மனுதார் வக்கீல் தன் கக்ஷிக்கு ஆதாரமாக எடுத்துச் சொல்லும் 5 கல்கத்தா வீக்லீநோட்ஸ் 843 இ. லா. ரி. 26 கல்கத்தா 748 இவைகள் தாவா கேசுக்குப் பொருத்தமானவையல்ல. பிராஸிகியூஷன் 2-வது சாக்ஷியை தாக்கவில்லையென்றும், பிராஸிகியூஷன் 3-வது சாக்ஷியைத்தான் தாக்கினதாகவும் விவாதஞ் சொல்லுகிறார். 3-வது சாக்ஷி சேவகனை தாக்கினதால் முதல் எதிரி ஓடிவிட்டதால் அது 2-வது சாக்ஷியைத் தாக்கினதுபோலவேயாகும். இதனால் கீழ்கோர்ட்டார் செய்த தீர்மானத்தில் பிரவேசிக்க எவ்வித நியாயமுமில்லை. இந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

24 Indian Cases 175.

சென்னை ஹைகோர்ட்

1913 ஷ வருத்திய கிரிமனல் ரெவிஷன் கேஸ் நம்பர் 431
தீர்ப்பு 3—4—14.

ஜட்ஜி
மிஸ்டர் ஜஸ்டிஸ் டியாப்ஜி அவர்கள் } தொப்பளான் எதிரி மனுதாரன் V சங்கரநாராயண அய்யர் வாதி எதிர் மனுதார்

20. [இந்தியன் பெனல்கோடு]

குடியானவன் ஸ்வாதீனத்திலிருக்கும் மரத்தை அவன் வெட்டிவிடுவது குற்றமாகாதென்பது.

சிவகெங்கை சப் மாஜிஸ்டிரேட் கோர்ட்டு தீர்ப்பின்பேரில் தேவக்கோட்டை சப்டிவிஷனல் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் அப்பீல் நடந்து அதன்பேரில் இந்த ரெவிஷன் மனு கொடுக்கப்பட்டிருக்கிறது.

எதிர் மனுதாரின் மரத்தை மனுதார் எதிரி வெட்டிவிட்டதாக சப் மாஜிஸ்டிரேட் மனுதாருக்கு அபராதம் விதித்தார். இது அப்பீலிலும் உறுதி செய்யப்பட்டதின்பேரில் இந்தரெவிஷன்மனு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏற்பட்ட ருஜுக்களினால் தாவாவிற் கண்ட மரம் 9-வது எதிரியின் அனுபோகத்திலிருந்ததாகவும், அதில் வாதிக்கும் கூட்டுப்பாத்திய மிருந்ததாகவுந் தெரிகிறது. இவ்வித கேஸ்களில் சொத்து ஸ்வாதீனம் குடியானவன் வசத்திலிருப்பதாக எண்ணப்படவேண்டுமென்று இ லா. ரி 26 சென்னை 484 தீர்மானத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. இது திருட்டுக் குற்றமாகாவிட்டாலும் இ. பி. கோடு 403 - வது செக்ஷன்படி பிறர் சொத்தை யபகரித்தல் அல்லது 424 - வது செக்ஷன்படி அயோக்கியத்தனமாயாவது மோசடியாகவாவது ஒருவன சொத்தை யப்புறப்படுத்தல் அல்லது மறைத்துவைத்தல் என்னுங் குற்றங்களாகுமென்று எதிர் மனுதார் வக்கீல் கக்ஷியாயிருக்கிறார். ஒருவித குற்றத்துக்காக விசாரிக்கப்பட்டிருப்பதை வேறு குற்றங்களுக்காக மாற்றுவது எதிரி பேரில் தப்பெண்ணங்கொள்ளச் செய்யும், அது கிரமமான நீதியாகாது. இதனால் கீழ் கோர்ட்டார்கள் செய்த தீர்மானங்களை ரத்து செய்திருக்கிறோம். அபராதங் கொடுபட்டிருந்தால் அது மனுதார் எதிரிக்கு திரும்பக் கொடுபடவேண்டும்.

24 Indian Cases 176.

குறிப்புகள்.

சென்னை ஹைகோர்ட்டு தீர்ப்புகள்.

17—7—14

1913 ஷ்றீய S. A. நம்பர் 2497.

இந்து லாப்படி ஒரு மைனருக்கு அவனுடைய அத்தைகார்டியனாக மாட்டாள். கிரமமான அல்லது கோர்ட்டாரால் நியமிக்கப்பட்ட கார்டியன்கள் தவிர வேறுவித கார்டியன்களால் செய்யப்பட்ட பாதீனங்களைப் பற்றி ரத்து செய்ய லிமிடேஷனாகட்டு 44-வது செக்ஷன் பொருத்தமானதல்ல.

S. A. NO 881 of 1913

பெந்தகம் வைத்தவன் பெந்தகத் தொகையை கோர்ட்டில் கட்டியபிறகு பெந்தகம் பெற்றவன் ஒருவருஷ கெடுவுக்குள் அத்தொகையை பெற்றுப் போகாததால் அதை தானே வாபஸ் வாங்கிக்கொண்டான். இதனால் இந்த பெந்தகத்துக்கு வட்டியாவது கோர்ட்டுச் செலவாவது கிடைக்கமாட்டாதென்ற கக்ஷி சொல்லக் கூடாது.

Appeal No 94 of 1911

ஒரு குத்தகைதாரன் குத்தகை நிலத்தை நீண்டகாலந்தரிசு போட்டுவிடுவதைகொண்டு அவனுடைய பாத்தியதையை இழந்தவனாகமாட்டான். ஒரு சொத்தை ஒருவன் கோர்ட்டு ஏலத்தில் எடுத்து அதை வசப்படுத்திக் கொள்ளாமலிருந்து விட்டால் சொத்தை ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண் டிருப்பவன் பாத்தியம் விலகமாட்டாது.

20—7—14

C. M. S. A. No 77 of 1913

நிறைவேறு நடவடிக்கைகளில் ஏலங்கேட்பவர்கள் ஜாஸ்தியாக இல்லாததினால் ஏலத்தை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்பதானது நிறைவேறு நடவடிக்கைக்கு அவசியமான முயற்சி (Step in need of execution) ஆகும்.

21--7--14

A. S. No 177 of 1910

ஒரு இந்து பாகஸ்தனிடம் அவனுடைய பாகத்தை சாசனம் பெற்றவர் மற்ற பாகஸ்தர்களுடன் பொதுவான குடியான பாத்தியமுடையவரல்ல. அதனால் அவ்விதம் சாசனம் பெற்ற தேதி முதற் கொண்டு அவருக்கு அச்சொத்தின் வரும்படி கிடைக்க மாட்டாது.

S. A. No 1874 of 1913

22—7—14.

ஒரு ஜமீன் சொத்து கோர்ட் அவ்வார்ட்ஸ் விசாரணையில் 15 வருடகாலமிருந்து வந்தது. அந்த காலங்களில் அவர்கள் ஏகர் 1-க்கு ஒரு ரேட்டுப்படி குடிகளிடம் குத்தகைத் தொகை வசூலித்து வந்தார்கள். அவர்கள் விசாரணை விலகி மைனர் மேஜரானவுடன் தான் கோர்ட் அவ் வார்ட்ஸ் அவர்கள் செய்த ஏற்பாட்டுக்கு கட்டுப்பட்டவரல்ல வென்றும் ஜாஸ்திக் குத்தகைத் தொகை கொடுக்கவேண்டுமென்றும் வழக்கிட்டார். கோர்ட் அவ் வார்ட்ஸ் அவர்கள் செய்த ஏற்பாடே நியாயமானதென்று தீர்மானிக்கப்பட்டது.

S. A. No 1219 of 1912

23—7—14

ரிஜிஸ்டரான கூட்டுச் சீட்டின் சந்தாதார் ஒருவர் தான் எடுத்த ஏலத்தொகைக்காக எழுதிக்கொடுத்த பத்திரத்தில் தான் தவணைத் தொகைகளை குறிப்பிட்ட கெடுக்களில் செலுத்திவருகிற

தென்றும், தவறினல் மறு தவணையை எதிர்பாராமல் பாக்கித் தொகை முழுவதுக்கும் வாரம் 1-க்கு ரூபாய் 1-க்கு 2 பைசா விதம் வட்டி சேர்த்து செலுத்திவைக்கிறதென்றுங் கண்டிருந் தால் அது எல்லா சந்தாதார்களுடைய நன்மையின் பொருட்டு ஏற்பட்டிருப்பதால், அது செல்லுபடியுள்ளது அது அபராத நிபந் தனையாகமாட்டாது.

C. R. P. No 631 of 1912
24-7-14.

மோசவகையாக ஒரு உத்திரவு ஏற்பட்டிருந்தால் அதை ரத்து செய்ய சிவில் புரஸீஜர் கோடு 151-வது செக்ஷன்படி கோ ர்ட்டாருக்கு அதிகாரமுண்டு. அது விஷயமாக ரெவியுமனு கொடு படவேண்டியது அனுவசியம்.

S. A. No 1700 of 1912

வரும்படி கிடைக்கவேண்டுமென்று வழக்கிட்ட வாதி அந்த வியாஜ்ஜிய மத்தியில் அந்த விவாத சொத்தை வேறொருவருக்கு விற்றுவிட்டார். இதனல் விவாத நிலம் வாதிக்கு பாத்தியமில்லை யென்ற காரணத்தினல் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. இவ் விதம் சாசனம் பெற்றவர் தனக்கு அச்சொத்து கிடைக்கவேண்டு மென வழக்கிட்டார். முன் தீர்ப்பினல் இந்தத் தீர்ப்புக்கு ரெஸ் ஜுடிகேடா தோஷமுண்டாய்விட்டதாகத் தீர்மானிக்கப்பட்டது.

S. A. No 1557 of 1512.
27—7—14.

ஒரு போக்கிய அடமான பத்திரத்தில் போக்கிய சொத்து ஏழு வருஷ கெடுவுக்குள் மீட்கப்படலாமென்று கண்டிருக்கிறது. இந்த கெடு போக்கியம் வைத்தவன் போக்கியம் வாங்கினவன் இவ்விருவர்களுடைய நன்மைகளின் பொருட்டு ஏற்பட்டதே யன் றி போக்கியம் வைத்தவனுடைய நன்மைக்குமட்டி லேற்பட்ட தல்ல.

S. A. No 877 of 1912

பெந்தகச் சொத்தை பின்னல் சாசனம் பெற்றவர் அச்சொ த்து தரிசுபோடப் படுவதினு லுண்டாகிய நஷ்டத்துக்கு பாத்தி யப் பட்டவராவார்.

S. A. No 1476 of 1914
28—7—14

ஒரு மசூதியில் தொழுது வரும் பக்தன் அந்த மசூதியின் சொத்து பெந்தகம் வைக்கப்பட்டிருப்பதை மீட்க பாத்தியஸ்தனு கான். அந்த வழிக்கிட மட்வாலி அல்லது தர்மகர்த்தா பாத்திய முடையவர்.

ஹைறகோர்ட்டுத் தீர்மானங்கள்.

தமிழ்ப்பாஷை பயின்றவர்கள் வியவகார நுட்பங்களை
எளிதில் உணரும் பொருட்டுப் பிரசுரிக்கப்படும்
மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

...RAR ...
21 NOV 1914
OFFIC...
MADRAS

புத்தகம்-1 } மாயவரம் 1914ஆம் ஆகஸ்டு மீ { இலக்கம்-12.

சென்னை ஹைகோர்ட்டு.

1911 வருஷத்திய 2 வது அப்பீல் நம்பர் 1075.

தீர்ப்பு 14-7-14.

ஜட்ஜிகள்	}	ராமசுப்பய்யர் வாதி அப்பீல்தார்
ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள்		V
ஜஸ்டிஸ் டியாப்ஜி அவர்கள்		ஆவுடையம்மாள் எதிர்கக்ஷிக்காரி

[48. இந்து லா.]

கடன்காரர்களை மோசஞ் செய்யவேண்டியதற்காக தகப்பன் தன்னுடைய சொத்தைக்கொண்டு பெயரிரவலாக வேறொருவன் பேரால் சாசனம் வாங்கியிருந்தால் அச்சொத்தில் தங்கள் பாகங் கிடைக்கவேண்டுமெனப் பிள்ளைகள் வழக்கிடலாமென்பது.

வாதிகளின் தகப்பன் முதற் பிரதிவாதி தங்கள் குடும்பச் சொத்துக்களைக்கொண்டு 2-ம் பிரதிவாதி பெயரால் B. C. அடை யாள சாசனங்களின்படி சில ஸ்தாவரசொத்துக்கள் வாங்கியிருப்ப தாகவும், அச்சாசன சொத்துக்களில் வாதிகள் முதல் பிரதிவாதி இவர்கள் வசமுள்ள வீடு நீங்கலாக மற்றவை 2-ம் பிரதிவாதிவச மிருப்பதாகவும், அச்சாசன சொத்துக்கள் வாதிகள் குடும்பத் துக்குச் சொந்தமானதென்று ஸ்தாபித்து மேற்சொன்ன வீடு நீங்கலாக மற்றவை 2-ம் பிரதிவாதி வசமிருந்து கிடைக்கவேண் டியதென்றும், முதல் பிரதிவாதி வீதசொத்து வாதிகளுக்கு வச மாகக் கூடாதெனக் கோர்ட்டார் அபிப்பிராயப்படும் பட்சத்தில் வாதிகளின் வீத சொத்தாவது பிரிக்கப்பட்டு அவைகள் கிடைக்க வேண்டுமென்றும் வழக்கிட்டார்கள்.

இந்தக் கேஸ் இந்தக் கோர்ட்டில் விசாரணைக்கு எடுக்கப் பட்டு சில விஷயங்களைப்பற்றி புனர்விசாரணை செய்து தெரிவிக்

கும்படி கேஸ் ரிமாண்டு செய்யப்பட்டது. டிஸ்டிரிக்ட் ஜட்ஜி இந்தக் கேசைப்பற்றி புனர் விசாரணை செய்து "தாவாவிற்கண்ட சொத்துக்கள் வாதிகளின் குடும்பத் தொகையைக்கொண்டு வாதிகளின் தகப்பனாகிய முதற் பிரதிவாதி அவருக்கு விவகாரங்களை போதித்து வரும் (Legal advisor) 2-ம் பிரதிவாதி பெயரால் சாசனங்கள் வாங்கினாரென்றும், முதற் பிரதிவாதி தன்னுடைய அனேக கடன்காரர்களை மோசஞ்செய்யவேண்டியதினிமித்தம் மேற் சொன்னபடி சாசனங்கள் வாங்கினாரென்றும், அவ்விதம் 2-ம் பிரதிவாதி பெயரால் சாசனங்கள் ஏற்பட்டதைக்கொண்டு கடன்காரர்களில் இரண்டு பேர்களாவது ஏமாந்து மோசம்போய் விட்டார்களென்றும், அதனால் தாவாப்படி முழுசொத்தும் வாதிகளுக்குக் கிடைக்கதக்கதில்லையென்றும், ஆனால் வாதிகள் பாக மட்டிற் கிடைக்கக்கூடியதென்றும் பயிண்டிங் ஏற்படுத்தி தெரிவித்தார்கள்.

முதல்வாதி இவ்வழக்கின் மத்தியிலிறந்துவிட்டார். அவருக்கு சந்ததியில்லாததால் 2-ம் வாதியே முழு சொத்துக்கும் வாரசானார். 2-ம் பிரதிவாதியும் இவ்வழக்கின் மத்தியிலிறந்துவிட்டார். அவர் விதந்து வார்சாக நியமிக்கபட்டாள். முதல் பிரதிவாதி தன்னுடைய கடன்காரர்களை மோசஞ் செய்யவேண்டியதினிமித்தம் தாவா சொத்துக்களை 2-ம் பிரதிவாதி பெயரால் சாசனஞ் செய்துவைத்திருப்பதால் முதல் பிரதிவாதியின், அவிபக்த குமாரர்கள் அச்சொத்துக்களை யடைய நியாயமில்லையென்று 2-ம் பிரதிவாதியின் விதந்து கக்ஷியாடுகிறாள். கடன்காரர்களை மோசஞ் செய்வதற்காக குடும்ப சொத்துக்களைப் பராதீனஞ் செய்தால் மட்டில் அது செல்லத்தக்கதில்லையெனச் சட்டமேற்பட்டிருக்கிறதேயன்றி குடும்பச் சொத்துக்களைக் கொண்டு வேறொருவர் பெயருக்கு சொத்துக்கள் வாங்குவதற்கு அச்சட்டமேற்படவில்லையென்றும், முதல பிரதிவாதிக்காக அவர் பாகம் கிடைக்கவேண்டுமென்று தாவா செய்யப்படவில்லையென்றும், அவிபக்த குடும்பத்துக்காக வாதிகளுக்கு சொத்துக்கள் கிடைக்கவேண்டுமென வழக்கிட்டிருப்பதால் வாதிகளின் தாவா செல்லுபடியுள்ளதென்றும், முதற் பிரதிவாதி தன்னுடைய கடன்காரர்களை மோசஞ் செய்யவேண்டியதினிமித்தம் தாவா சாசனங்கள் மோசவகையாக ஏற்பட்டதென்று 2-ம் பிரதிவாதி தன்னுடைய எழுத்துமூலமான ஸ்டேட்மெண்டிற் சொல்லாமையால் அவர் விதந்து இப்போது

சொல்லுங் கட்சி பிரயோஜனமற்றதென்றும், தாவா சாசனங்கள் பிரதிப் பிரயோஜனமின்றி இனாமாக 2-ம் பிரதிவாதிக்கு கொடுபட்டதாக வைத்துக்கொண்டாலும் அச்சாசனஞ் செய்தவரின் அவிபக்த குமாரர்கள் அச்சொத்துக்கள் தங்கள் குடும்பத்துக்குக் கிடைக்கவேண்டுமென வழக்கிட பாத்தியமுள்ளவர்களென்றும், மற்றுஞ் சில கக்ஷிகளும் வாதியின் வக்கீல் எடுத்துச் சொல்லுகிறார்.

கடன்காரர்களை மோசஞ் செய்வதற்காக ஏற்படும் பராதீனங்களுக்கும், அம்மோசத்துக்காக குடும்பத்தொகையைக் கொண்டு வேறொருவர் பெயரால் சாசனமேற்படுத்திவைப்பதற்கும் எவ்வித வித்தியாசமுமில்லை. கடன்காரர்களை மோசஞ் செய்யவேண்டுமென்று ஒருவன் தன் குடும்பச் சொத்தைப் பராதீனஞ் செய்துவிட்டு அந்தக் குடும்பச் சொத்து கிடைக்கவேண்டுமென்று மற்றொரு பாகஸ்தனைக்கொண்டு வழக்கிடச் செய்து அச்சொத்துக்கள் கிடைத்துவிடும்பட்சத்தில் அவ்விதஞ் செய்ய கோர்ட்டார் உதவி செய்வது பொதுநீதிகளுக்கு விரோதமானது. தாவா சொத்துக்களில் எவ்வளவேனும் வாதிக்கு கிடைக்கத்தக்கதில்லையென 2-ம் பிரதிவாதியின் வக்கீல் கக்ஷி சொல்லுகிறார். வாதி முதல் பிரதிவாதியின் பாத்தியதையை முன்னிட்டு வழக்குக்கொண்டுவரவில்லை. வாதிகள் தாவா சொத்தில் தங்கள் சொந்த பாத்தியதையின் பேரில் வழக்கிட்டிருக்கிறார்கள்.

ஆகையால் கீழ்கோட்டார்களின் டிக்கிரிகளை மாற்றி வாதி முதற்பிரதிவாதி இவர்கள் வசமிருப்பதாக ஒப்புக்கொள்ளப்படுகிற வீடுநீங்கலாக மற்ற சொத்துக்களில் வாதியின் பாகம் பாதி மட்டில் பிரிபட்டு வாதிக்கு கிடைக்கக்கூடியதென்னத் தீர்ப்பு செய்கிறோம்.

முதல் கோர்ட்டார் வழக்கம்போல் கமிஷனர் மூலமாகப் பிரிவினைசெய்து முடிவான டிக்கிரி செய்வார். உபயகக்ஷிக்காரர்களும் அவரவர்கள் செலவை அவரவர்களே பொறுத்துக்கொள்ள வேண்டும்.

1914 Madras Weekly Notes 595.

சென்னை ஹைகோர்ட்டு

1912 ஞூத்திய 2-வது அப்பீல் நம்பர் 720.

தீர்ப்பு 29—4—14

ஜட்ஜிகள்	
மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரநாயரவர்கள்	தாடி ராமமூர்த்தி வாதி அப்பீல்தார்
மிஸ்டர் ஜஸ்டிஸ் டியாப்ஜி அவர்கள்	V
	மூலாகாமியா பிரதிவாதி

49. [இந்துலா]

ஒரு அவிபக்த பாகஸ்தனுடைய வெண்ணலே டிக்கிரிக் கடனுக்காக குடும்பசோத்து ஜப்தி செய்யப்பட்டு அச்சோத்து ஏலவிற்பனைக்குக் கோண்டுவரப்படுவதற்கு முந்தி அவன் இறந்து விடும்பட்சத்தில் அவருக்குள்ள சோத்து பாத்தியம் சர்வேயர்ஷிப்புப்படி மற்ற பாகஸ்தர்களுக்கு கிடைக்கமாட்டா தென்பதும், அந்த ஜப்தி சோத்து ஏலவிற்பனை செய்யப்படலாமென்பதும்.

முதல் பிரதிவாதியின் அவிபக்த சகோதரன்பேரில் ஒரு வெண்ணலே டிக்கிரி யேற்பட்டிருந்தது. அந்த டிக்கிரி நிறைவேற்றப்பட்டு அந்த சகோதரனுடைய பாகசொத்து 1908-ம்வருஷம் டிசம்பர் மாதம் 26-ந்தேதி ஜப்தி செய்யப்பட்டது டிக்கிரி கடன்காரன் 1909-ம் வருஷம் ஜனவரி மாதம் 2-ந்தேதி இறந்தான். அதனுல் அவர் சகோதரன் இறந்தவருக்கு வார்சாக சேர்க்கப்பட்டார். 1909-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 7-ந் தேதி அந்த ஜப்தி சொத்து ஏலவிற்பனை செய்யப்பட்டதில் டிக்கிரி கடன்காரனுக்கு ஜப்தி சொத்திலுள்ள பாத்தியதையை வாதியே ஏலமெடுத்துவிட்டார். அதனுலவர் அச்சொத்து தனக்கு வசமாக வேண்டுமென வழக்கிட்டிருக்கிறுர்.

தாவா சொத்து ஏலவிற்பனை செய்யப்படுவதற்கு முந்தியே அவிபக்த பாகஸ்தனுகிய டிக்கிரி கடன்காரனுக்குள்ள பாத்தியம் சர்வேயர்ஷிப் பாத்தியதையின்படி அவன் அவிபக்த சகோதரனுகிய முதல் பிரதிவாதிக்கு கிடைத்துவிட்டதால், ஏலவிற்பனை செய்யும்படியான பாத்தியம் யாதொன்றும் இருந்ததில்லை யென கீழ் கோர்ட்டார்கள் வாதியின் வழக்கைத்தள்ளுபடி செய்துவிட்டார்கள். அதன்பேரில் இந்த அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது.

ஒரு அவிபக்த பாகஸ்தனுக்கு குடும்பத்திலுள்ள சொத்து அவனுடைய கடனுக்காக ஜப்தி செய்யப்படும் பட்சத்தில் அச்சொத்து ஏலவிற்பனைக்குக் கொண்டுவரப்படுவதற்கு முந்தி அந்த டிக்கிரி கடன்காரன் இறந்துவிட்டால் அந்த ஜப்தி சொத்து பாத்தியம் சர்வேயர்ஷிப்புப்படி மற்ற பாகஸ்தர்களுக்கு கிடைக்கமாட்டாதென்று இ. லா. ரி 5 கல்கத்தா 148 பிரிவிகவுன்ஸல் தீர்ப்பை யனுசரித்து சென்னை ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறுர்கள். (இ. லா. ரி 4 சென்னை 302 தீர்மானத்தை பார்க்க.) இதற்கு விரோதமாக சென்னை ஹைகோர்ட்டாராலேயே இ. லா. ரி 30 சென்னை 413, 32 சென்னை 429 இத்தீர்மானங்களும், 25 கல்கத்தா 179 பிரிவிகவுன்ஸல் தீர்மானமும் ஏற்பட்டிருப்பதாக பிரதிவாதி வக்கில் எடுத்துக்காட்டுகிறுர். இந்தக் கேஸ்கள் தாவாவிற் கண்ட விஷயங்களுக்கு அதிக பொருத்தமானதாக விருக்கவில்லை, இ. லா. ரி 4 சென்னை 302 தீர்மானந்தான் பொருத்தமாயிருக்கிறது. அதனுல் கீழ்கோர்ட்டார்களின் டிக்கிரியை ரத்து செய்திருக்கிறேம். இந்தக் கேசில் முடிவு சொல்வதற்கு முந்தி முதலாவது இஷ்ஷியுவைபற்றிக் கீழ் கோர்ட்டார் விசாரித்து பயிண்டிங் அனுப்பும்படி உத்தரவு செய்கிறேம்.

"ஆதுல பங்காரய்யாவுக்காக வாதி பெயரிவலாக தாவா சொத்தை ஏலமெடுத்தாரா" என்பது இந்தமுதலாவதுஇஷ்ஷியும். பெயரிவலாக ஏலமெடுத்ததாக பிரதிவாதி ருஜூப்பிக்காததால் வாதியே இந்தவழக்கிட பாத்திபஸ்தரென கீழ்கோர்ட்டார்பயிண்டிங் ஏற்படுத்தி அனுப்பிவிட்டார்கள்.

தீர்மானம்.

இந்த பயிண்டிங்கை ஒத்துக்கொள்ளுகிறேம். கீழ்கோர்ட்டார்களின் டிக்கிரிகளை ரத்து செய்திருக்கிறேம். முதல் கோர்ட்டார் தாவாவிற் கண்ட சொத்தை பாகப்பிரிவினை செய்து பிரதம டிக்கிரி செய்யும்படி உத்தரவு செய்கிறேம். வாதிக்கு பிரதிவாதியிடமிருந்து பாதி செலவுதொகை கிடைக்கவேண்டியதென்று தீர்மானிக்கிறேம்.

24 Indian Cases 667.

பிரிவிகவுன்ஸல்.

அலகபாத் ஹைகோர்ட்டு தீர்ப்பின்பேரில் அப்பீல்

தீர்ப்பு 24 - 4 - 14.

ஜட்ஜிகள்		
லார்ட் மௌல்டன் அவர்கள்		ஹீரான்பீபீஆ அப்பீல்தார்கள்
லார்ட் பார்க்கர் அவர்கள்		V
ஸர் ஜான் எட்ஜ் அவர்கள்		ஸோகான் பீபீ. எதிர்கக்ஷிக்காரி
மிஸ்டர் அமீர் ஆலி அவர்கள்		

50. [இந்து லா.]

குடும்ப சொத்துக்களைப்பற்றி விவகாரமுண்டாகி ராஜியாகப் பிரிவினை செய்து கொண்டால் அது இந்துலாப்படி செல்லத்தகுந்ததென்பது.

ஹரிஷ்சந்திரா என்ற இந்து ஒருவர் தன்னுடைய மனைவி மங்கிபாகு ஒரு பையனை ஸ்வீகாரஞ் செய்துகொள்ளவேண்டியதென்றும், ஆனாலவள் ஆயுள்பரியந்தம் தன்னுடைய சொத்துக்களை சர்வசுதந்திரமாக அனுபவிக்கிறதென்றும் ஏற்பாடு செய்துவிட்டு இறந்தார். இவருடைய விதந்து அந்தப்படி பிரஸோதம் என்பவரை ஸ்வீகாரஞ் செய்துகொண்டாள். இந்த ஸ்வீகாரப் பிள்ளை இந்த விதந்து ஜீவதிசையிலேயே இறந்துவிட்டார். இந்த விதந்தர் இறந்த பிறகு இச்சொத்துக்கள் ஸ்வீகார குமாரரின் மனைவி பின்டேஷரிபாகுவிடம் வந்துவிட்டன. இந்த மங்கிபாபுவின் பெண் புனேபீபீ என்பவள் பிரஸோதத்தின் ஸ்வீகாரத்தை ஆக்ஷேபித்து இந்தச் சொத்தில் தன்பாகம் பிரிபட்டு தனக்குக் கிடைக்க வேண்டுமென வழக்கிட்டாள். இந்தக்கேஸ் இராஜி செய்யப்பட்டதில் இச்சொத்தில் பாத்தியங்கொண்டாடினவர்கள் அனைவருக்கும் பாகங்கிடைத்தது. இதன்பிறகு ஸ்வீகாரப்பிள்ளை பிரஸோதத்தின் மகள் ஒருவள் தன் தாயார் இராஜி செய்துகொண்டதற்குத் தான் எவ்விதத்திலுங் கட்டுபட்டவளல்லவென்றும், இந்த இராஜி குடும்பச்சொத்தை அத்தறுதியாக அனுபவிக்கவேற்பட்டிருப்பதால் அது சமீப அனந்தரவார்சாகிய தன்னுடைய பாத்தியதையைக் கட்டுப்படுத்தாதென்றும், இந்த இராஜியில் சம்பந்தப்பட்டவர்களனைவரையும் பிரதிவாதிகளாகச் சேர்த்து வழக்கிட்டாள். டிஸ்டிரிக்ட் ஜட்ஜ் இராஜினமா செல்லுபடியுள்ளதெனத் தீர்மானித்துவிட்டார். இது ஹைகோர்டாரால்

ரத்து செய்யப்பட்டபடியால் பிரதிவாதிகளால் இந்த அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது.

தீர்ப்பு.

தாவாவிற்கண்ட இராஜினமா குடும்ப சொத்தில் வரையறுக்கப்பட்ட பாத்தியமுடையவளால் செய்யப்பட்ட பராதீனமல்ல. இது ஒரு குடும்ப ஏற்பாடு; இதன்படி ஒவ்வொருவரும் அத்தறுதியான பாத்தியதையுடன் சொத்தை யடைந்திருக்கிறார்கள். உபயகக்ஷிக்காரர்களின் சம்மதியின் பேரிலிது ஏற்பட்டது. இது 10 இந்தியன் கேஸஸ் 477 தீர்மானத்திற் கண்டபடிசெல்லுபடியுள்ளது.

இந்த அப்பீலையங்கீகரித்து ஹைகோர்ட்டார் தீர்ப்பை ரத்துசெய்து டிஸ்டிரிக்ட் கோர்ட்டாருடைய தீர்ப்பை யுறுதிசெய்யும்படி மாக்ஷிமை தங்கிய சக்கரவர்த்தியவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

24 Indian Cases 309.

சென்னை ஹைகோர்ட்.

1912 ஞூ இரண்டாவது [illegible]

1912 ஞுத்திய சீவில் அப்பீல் நம்பர் 113

தீர்ப்பு 9—2—14.

ஜட்ஜிகள்		
மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரநாயரவர்கள்		முத்துசாமிசெட்டி அப்பீல்தார்
		V
மிஸ்டர் ஜஸ்டிஸ் எயிலிங் அவர்கள்		சின்னம்மாள் எதிர்கக்ஷிக்காரி

51 [இந்துலா]

டிக்கிரிக்கு முன் ஜப்திசெய்யப்பட்டு டிக்கிரிக்குப்பிறகு டிக்கிரி கடன்காரன் இறந்துவிட்டால் அந்த ஜப்திசொத்தில் அவனுக்கிருந்த பாத்தியம் சர்வேயர் ஷிப்பின்படி அவனுடைய அவிபக்த பாகஸ்தர்களுக்குக் கிடைக்கமாட்டாதென்பது

செங்கல்பட்டு டிஸ்டிரிக்ட் கோர்ட்டார் செய்த தீர்மானத்தின் பேரில் அப்பீல்.

ஒருவன் கொடுக்கவேண்டிய கடனுக்காக அவனுடையசொத்துக்கள் பிராது கொடுத்தவுடன் ஜப்தி செய்யப்பட்டு அத்தொகைக்கு டிக்கிரி யேற்பட்ட பிறகும், அச்சொத்து ஏலவிற்பனைக்கு

முந்தியும் டிக்கிரி கடன்காரன் இறந்து விடும் பட்சத்தில் அந்த ஜப்தி சொத்தின் பாத்தியம் சர்வேயர்ஷிப்பின்படி அவனுடைய அவிபக்த பாகஸ்தர்களுக்கு கிடைக்கமாட்டாதென்று இந்தக் கோர்ட்டாரால் பல தீர்மானங்களேற்பட்டிருக்கின்றன. (இ. லா. ரி 4 சென்னை 302 பக்கம் 307 ஐ பார்க்க). டிக்கிரி கடன்காரன், டிக்கிரி செய்யப்படுவதற்கு முந்தி இறந்துபோகும் பட்சத்தில் அந்த ஜப்தி பிரயோஜனமற்றதென தீர்மானிக்கப்பட்டிருப்பது உண்மைதான் (இ. லா. ரி 17 சென்னை 144 பக்கம் 145 பார்க்க). தீர்ப்பு செய்யப்படுவதற்கு முன் ஜப்தி செய்யப்படுவதின் பிரயோஜனம் அச்சொத்து பராதீனஞ்செய்யப்படா திருக்கவேண்டியதை யுத்தேசித்தே யன்றிவேறல்ல. இதில் டிக்கிரி யேற்பட்ட பிறகு மறுபடியுஞ் ஜப்தி செய்யவேண்டியது அனாவசியம். இதனால் டிக்கிரிக்குப்பிறகு ஜப்திசெய்யப்பட்டால் சர்வேயர்ஷிப் பாத்தியங் கிடையாததுபோல் டிக்கிரிக்கு முன் ஜப்தி செய்யப்பட்ட கேஸ்களிலும் சர்வேயர்ஷிப்பு பாத்தியங் கிடைக்கமாட்டாது. இதனால் கீழ்கோர்ட்டார்களின் டிக்கிரிகளை ரத்து செய்திருக்கிறோம். டிஸ்டிரிக்ட் முனிசிப்வாதியின் நிறைவேறு மனுவை பயிலில்வைத்துக் கொண்டு மேல்நடவடிக்கை நடக்கும்படி உத்திரவு செய்கிறோம்.

24 Indian Cases 320.

சென்னை ஹைகோர்ட்.

1912-வருஷத்திய 2-வது அப்பீல்கள் 2494-2495

தீர்ப்பு 3 - 4 - 14.

ஜட்ஜிகள்.	
மிஸ்டர் ஜஸ்டிஸ் டியாப்ஜி அவர்கள்	கிருஷ்ணாருவ் என்கிற சீனிவாசருவ் வாதி அப்பீல்தார்
மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர் அவர்கள்	V
	அய்யாசாமிபடையாச்சி ஆ அ. பிரதிவாதிகள்

52. இந்துலா.

மைனர்கார்டியனால் செய்யப்பட்ட பராதீனங்கள் செல்லுபடியுள்ளதென்பதைப்பற்றி ருஜுவிடவேண்டியது பராதீனம் பெற்றவருடையதாக விருந்தபோதிலும் சில சந்தர்ப்பங்களில் வாதியே அதை ருஜுப்பிக்க வேண்டியதென்பது

வாதி மைனரை அவர் ஜனக தகப்பன் ஒருவருக்கு ஸ்வீகாரமாகக் கொடுத்துவிட்டார். வாதி மைனராகவிருந்த காலத்தில்

அவர் ஜனகதகப்பனே கார்டியனாகவுமிருந்து குடும்ப மானேஜ்மெண்டு செய்துவந்தார். இந்த கார்டியன் இறந்துவிட்டார். இந்த கார்டியனால் செய்யப்பட்ட பராதீனங்கள் செல்லத்தகுந்ததல்லவென்று வாதி வழக்கிட்டார். கும்பகோணம் சப்கோர்ட்டார் வாதியின் வழக்கைத் தள்ளுபடி செய்துவிட்டதின்பேரில் இந்த அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது.

இந்தக் கேசிலேற்பட்ட ருஜுக்களினால் தாவாவிற்கண்ட தொகை மைனரின் நன்மையின்பொருட்டு கடன்வாங்கப்பட்டதென்பதை பிரதிவாதிகள் ருஜுப்பித்திருக்கிறார்கள். அதனால் தாவா கடனுக்கு வாதி கட்டுப்படத்தக்கதில்லையென்பதை வாதி தகுந்த சாக்ஷியங்களினால் ருஜுப்பிக்கவேண்டும். அடியிற்கண்ட விஷயங்களினால் கார்டியன் செய்த பராதீனத்துக்கு வாதி கட்டுப்பட்டவராகிறார்.

முதலாவது:—வாதிக்கு கார்டியன் அவருடைய ஜனக தகப்பன். அவர் வாதியிடத்தில் மிகுந்த அன்புள்ளவர்.

இரண்டாவது:—7 அடையாள ஆதிரவு ரூபா 15 க்கு ஏற்பட்ட ஒரு போக்கியகடன். இதை வாதி மேஜரான பிறகு ஒப்புக்கொண்டிருக்கிறார். இதை தீர்ப்பதற்காகவே 6 அடையாள தஸ்தாவேஜு ஏற்பட்டிருக்கிறது.

மூன்றாவது:—வாதி ஸ்வீகாரஞ் செய்து கொள்ளப்பட்டவுடனே இந்த ஸ்வீகாரத்தை ஸ்தாபித்துக்கொள்ளவேண்டியதற்காக 1896-வருஷத்திய 15-ம்நம்பர்வழக்குக்கொண்டுவரப்பட்டது. அதில் ஏராளமான தொகை செலவழிந்தன. அச்செலவுகள் செய்ய குடும்பத்தில் தொகையில்லை. இச்செலவுகளுக்காகவே கார்டியனால் கடன் வாங்கப்பட்டிருக்கிறது.

நான்காவது:—இந்த வழக்கில் விவாதத்திலுள்ள 1-6 அடையாள ஆதிரவுகளில் சொல்லப்படும் கடன்கள் இந்த தாவாவிற் சம்பந்தப்படாத வேறு கடன்காரர்களுக்குக் கொடுபடவேண்டிய கடன்கள்.

இந்தக் கேசிலேற்பட்ட சாக்ஷியங்களினால் பிரதிவாதிகள் தாங்கள் எவ்வளவு வரையில் தங்கள் நல்ல எண்ணத்தையும் வாதியைக் கட்டுப்படுத்தக் கூடியதையும் ருஜுப்பிக்கக்கூடுமோ அவ்வளவு விஷயங்களையும் ருஜுப்பித்துவிட்டார்கள். மற்றெல்

லா விஷயங்களையும் ருஜுப்பிக்கவேண்டியது பிரதிவாதிகளைப் பொறுத்ததல்ல (இ. லா. ரி. 5 கல்கத்தா 363 பக்கம் 374 இந்த தீர்மானத்தைப் பார்க்க) மைனரின் சொத்துக்களை சாசனம் பெற்றவர் அதிற்கண்ட தொகை மைனரைக் கட்டுப்படுத்தக்கூடியதென்பதை ருஜுப்பிக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது என்ன காரணத்தினாலென்பது 6 மூர்ஸ் இந்தியன் அப்பீல் 393 பக்கம் 423 தீர்மானத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் ருஜு அம்சங்களினால் 2-வது அப்பீல் கோர்ட்டார் பிரவேசிக்கவும் நியாயமில்லை. வாதியின் ஜனகதகப்பன் வாதிக்கு விரோதமாக நடந்திருப்பாரென்று நம்பஹேதுவில்லை. வரும்படி வட்டி இவைகளைப்பற்றினவரையில் திருத்தங்கள் செய்து கீழ்கோர்ட்டாருடைய தீர்மானத்தை உறுதி செய்திருக்கிறோம்.

24 Indian Cases 426.

சென்னை ஹைகோர்ட்டு.

1911 வருஷத்திய 2 வது அப்பீல் நம்பர் 299.
தீர்ப்பு 6-4-14.

ஜட்ஜிகள் மிஸ்டர் ஜஸ்டிஸ் டியாப்ஜி அவர்கள் மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர் அவர்கள்	ராமலிங்கம்பிள்ளை ஆ அப்பீல்தார்கள் V மைனர் முத்தய்யனுக்கு கார்டியன் அருணாஜலம்பிள்ளை

53. [இந்து லா.]

குடும்ப மானேஜர் பேரிலேற்பட்ட கிரிமனல் கேஸ் செலவுகளுக்கு குடும்ப சொத்துக்கள் கட்டுப்படக் கூடியவையென்பது.

வாதி முதல்பிரதிவாதியின் அவிபக்த குமாரன். இவர்களுக்குச் சொந்தமாயுள்ள குடும்ப பித்ரார்ஜித சொத்தை முதல் பிரதிவாதி அவர் பேரிலேற்பட்ட நம்பிக்கை மோசக்கேஸ் விஷயமாக ஏற்பட்ட கடன்களுக்காக 2 முதல் 5 பிரதிவாதிகளுக்குப் பராதீனஞ் செய்துவிட்டார். இதனால் மைனர் வாதி தன்பாக சொத்து இந்தக் கிரிமனல் கேஸ் கடன்களுக்குக் கட்டுப்படத்தக்கதல்லவென்றும், தன்பாகசொத்து தனக்குக் கிடைக்கவேண்டுமென்றும், வழக்கிட்டார். கீழ்கோர்ட்டார்கள் வாதியின் தாவாப்படியே தீர்ப்பு செய்துவிட்டபடியால் பிரதிவாதிகள் இந்தக் கோர்ட்டில் இரண்டாவது அப்பீல் செய்திருக்கிறார்கள்.

ஒரு குடும்ப மானேஜர்பேரிலேற்பட்ட கிரிமினல் கேசில் எதிர்கக்ஷியாடுவதிலேற்பட்ட அவசியமான செலவுகள் குடும்ப மெம்பர்களின் நன்மையின் பொருட்டு குடும்ப அவசியச் செலவுகளுக்கு வாங்கப்பட்டதென்றே நான் அபிப்பிராயப்படுகிறேன். இதற்கு இ. லா. ரி. 34 அலகபாத் 4, 33 அலகபாத் 472 ஆதாரங்களாக விருக்கின்றன. முதல் கேசில் குடும்ப மானேஜர் தண்டிக்கப்பட்டார். தாவாவிற்கண்ட கேசிலே குடும்ப மானேஜர் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார். அதனால் இந்தக் கேசில் செலவழிக்கப்பட்டது மெத்த நியாயமானதும் அவசியமானதுமான செலவு. எதிர்கக்ஷி வக்கீல் இ, லா. ரி. 27 சென்னை 71 தீர்மானம் தன் கக்ஷிக்கு மெத்த ஆதாரமானதென்று எடுத்துச் சொல்லுகிறார். அது குடும்ப மானேஜர் காஷியர் வேலையாயிருந்து அவரை நம்பி ஒப்பிவித்த தொகையை யபகரித்தது. இந்தக்கேஸ் அப்படியல்ல. இந்தக்கேசில் குடும்ப மானேஜர் தன்பேரிற் பொய்யாக ஏற்பட்ட கேசினின்றும் தன்னை தப்பித்துக்கொள்ளத் தொகை செலவழித்தார். இவ்விஷயத்தில் பிள்ளை தன் தகப்பனுக்கு வேண்டிய உதவி புரியக் கடமைப்பட்டிருக்கிறார். 1 அடையாள ஆதிரவுக்கு தகுந்தப் பிரதிப் பிரயோஜனமிருக்கிறதென்று ஏற்பட்டிருக்கும் ருஜுக்களினால் விளங்குகிறது. அதனால் இந்த அப்பீலை யங்கீகரித்து வாதியின் அப்பீலை செலவுடன் தள்ளுபடி செய்கிறோம்.

24 Indian Cases 356.

சென்னை ஹைகோர்ட்.

1913 வருஷத்திய அசல் நம்பர் 186
தீர்ப்பு 3—2—14.

ஜட்ஜி மிஸ்டர் ஜஸடிஸ் பேக்வெல் அவர்கள்	மைனர் குப்பம்மாளுக்கு அடுத்த சினேகிதர் தயாசுந்திராசாரி வாதி V குப்பணாசாரி பிரதிவாதி

54. இந்துலா.

குடும்ப வாழ்க்கைக்கு கட்டுப்படுத்தவேண்டுமென்று மனைவி தன் புருஷன்பேரிற் கொண்டுவரும் வழக்கில் அவளின் சீக்கின் நிமித்தம் அவளை நிராகரிக்கக்கூடாதென்பது.

வாதி பிரதிவாதியின் மனைவி. இவளுக்கு வயது 12. இவளுக்காக இவள் தகப்பன் அடுத்த சினேகிராகவிருந்து இவள் தன் புருஷனுடன் சேர்ந்து இல்லறவாழ்க்கை செய்யும்படி அவரைக் கட்டாயப்படுத்த வேண்டுமென்று வழக்கிட்டார். இந்த வழக்கு 1913 வருஷம் ஆகஸ்டுமாதத்தில் தொடுக்கப்பட்டது. இவளை தன்னுடன் சேர்ந்து இல்லறவாழ்க்கை செய்யும்படி சென்ற ஏப்ரல் மாதம் கேட்டதற்கு இவள் திரேகஸ்திதி கெடுதலாயிருந்ததாகவும், அதனால் இல்லறவாழ்க்கை செய்யமுடியாதென இவளுடைய பெற்றோர்கள் மறுத்துவிட்டதாகவும், இவளிப்போது இல்லறவாழ்க்கை செய்யும்படியாக சரியான திரேகஸ்திதியிலிருப்பதாக ருஜுப்பிக்கவில்லையென்றும் அதனால் வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றும் பிரதிவாதிகக்ஷியாடினார்.

மனைவி சீக்காளியாகவிருப்பதைக்கொண்டு அவளை தன்வீட்டிலிருக்கச் செய்யக்கூடாதென்றாவது, அவளை சம்ரெக்ஷிக்க மாட்டேனென்றாவது புருஷன் சொல்லக்கூடாது. மனைவி தன் புருஷனுக்குச் செய்யவேண்டிய எல்லா கடமைகளையுஞ் செய்ய முடியாதிருந்தாலும் புருஷன் தன் மனைவிக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்து தீரவேண்டும். மனைவியின் பெற்றோர் அவளை யொருகாலத்தில் விடமாட்டேனென்று சொன்ன காரணத்தினால் அவளை பின்னால் நிராகரிக்கக்கூடாது. பிரதிவாதி வாதியை தன்வீட்டில் வைத்து குடித்தனஞ் செய்யும்படி தீர்மானிக்கிறோம்.

24 Indian Cases 330.

அலகபாத்ஹைகோர்ட்டு

1913ஞூத்திய 2-வது அப்பீல் நம்பர் 486.
தீர்ப்பு 11—5—14

ஜட்ஜிகள்
ஜஸ்டிஸ் ஸர் P. C. பனர்ஜி Kt அவர்கள்
மிஸ்டர் ஜஸ்டிஸ் சாமியர் அவர்கள்

சுராஜ்பேல்சிங் வாதி அப்பீல்தார்
V
பிருதவூ அ. பிரதிவாதிகள்

55. [இந்துலா]

ஒரு விதந்து தன் புருஷன் சோத்துக்களை தன் சமீப அனந்தரவார்சுக்கு சாசனஞ் செய்துவிட்டால் அதைப்பற்றி தூர அனந்தரவார்சு ஆக்ஷேபிக்கக்கூடாதென்பது.

ஒரு இந்து விதந்துவுக்கு தன் புருஷனுடைய சமீப அனந்தரவார்சுகள் நாலு பெயர்கள் இருந்தார்கள். அவர்களில் மூவருக்கு இந்த விதந்து தன் புருஷனுடைய சொத்தை சாசனஞ் செய்து கொடுத்துவிட்டாள். இது மற்றொரு சமீப அனந்தரவார்சின் சம்மதியின்பேரிலேயே யேற்பட்டது இந்த சாசனம் செல்லத்தக்கதல்லவென்று வாதியாகிய தூர அனந்தரவார்சு அந்த விதந்து முதலியவர்கள் பேரில் வழக்கிட்டார். கீழ்கோர்ட்டார் வாதியின் வழக்கை தள்ளுபடி செய்துவிட்டதின்பேரில் இந்த அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது.

வாதி தூர அனந்தரவார்சாகவிருப்பதாலும், சமீப அனந்தரவார்சுகளின் சம்மதியின்பேரில் தாவா சாசனமேற்பட்டிருப்பதாலும் இ. லா. ரி 30 அலகபாத் 1 பிரிவிகவுன்ஸல் தீர்ப்பின்படி இந்த சாசனம் செல்லுபடியுள்ளதாகும். இது விஷயமாக வாதி வழக்கிட பாத்தியமற்றவன். இந்த சாசனத்துக்கு பிரதிப்பிரயோஜனமில்லையென்று ஏற்பட்டால் இதுதான் சாசனமாகிறது. இது சமீப அனந்தரவார்சுகள் நால்வரில் மூவருக்கு மற்றொருவருடைய சம்மதியின்பேரிலேற்பட்டது. இது இந்த விதந்துவின் பாத்தியதையை விட்டுவிட்டதாகிறது. எந்தவிதமாகப் பார்த்தாலும் வாதியின் வழக்கு நிற்கத்தகுந்ததல்ல. தள்ளுபடிக்கு அருகமானது. ஆகையால் இந்த அப்பீலை செலவுடன் தள்ளுபடி செய்கிறோம்.

24 Indian Cases 482.

பிரிவிகவுன்ஸல்.

கல்கத்தா ஹைகோர்ட்டு தீர்ப்பின்பேரில் அப்பீல்
தீர்ப்பு 26 - 5 - 14.

ஜட்ஜிகள்
லார்ட் மௌல்டன் அவர்கள்
லார்ட் பார்க்கர் அவர்கள்
ஸர் ஜான் எட்ஜ் அவர்கள்
மிஸ்டர் அமீர் ஆலி அவர்கள்

பயாஜிதாகூர்ஆ அப்பீல்தார்கள்
V
ஜருலாதாஸ் எதிர்கக்ஷிக்காரர்

56. [இந்து லா.]

தேவாலயவரும்படி ஒரு இந்து குடும்பஸ்தருக்கு வம்சபரம்பரையான பாத்தியமுடையதாகவிருந்தால் அது அந்த குடும்பவித

ந்துவின்பேரிலேற்பட்ட கடனுக்கு கட்டுப்படமாட்டாதென்பதும் அதைப்பற்றி அனந்தரவார்சுகள் வழக்கிட காலாவதிதோஷம் எது வரையிலென்பதும்.

சிங்கேஸ்வரர் என்றதோர் தேவாலயத்துக்கு பிராமண பண்டாக்கள் வம்சபரம்பரையான தர்மகர்த்தாக்கள். அந்த தேவாலயச் செலவுகள்போக மிகுதிவரும்படியில் பிரதிபால்தாகுர் என்பவர் மூன்று வீசமரை வீச பாகவரும்படியை அடைந்து வந்தார். இவர் ஜீவதிசைக்குப்பின் இவருடைய விதந்து கிரிகமோனி என்பவள் அந்த வரும்படிகளை அடைந்துவந்தாள். இந்த விதந்து பேரில் ஜரூலாதாஸ் என்பவர் 1880 வருஷத்தில் ஒரு டிக்கிரி பெற்று அந்த டிக்கிரி கடனுக்காக இந்த மூன்று வீச மரைவீச வரும்படியை ஜப்திசெய்து ஏலவிற்றுமுதல் செய்து அதற்கு 1892 வருஷம் பிப்ரவரிமாதம் ஏலசர்டிபிகேட் பெற்று அந்த வரும்படியை அடைந்துவந்தார். இதில் இது ஸ்ரீ சிங்கேஸ்வர ஸ்வாமியின் மடத்து வரும்படியென்று கண்டிருக்கிறது. இந்த ஏலம் செல்லத்தகுந்ததல்லவென்று விதந்து கிருகிமோனியும் பியாஜிதாகூரும் 1891 வருஷத்தில் வழக்கிட்டு அதை வேறு வழக்கு செய்துகொள்ளுகிறதென்ற அனுமதியுடன் வாப்ஸ் வாங்கிக் கொண்டார்கள். பின்பு இந்த கிரிகிமோனி மேலேசொன்ன டிக்கிரியும் ஏலமும் மோசவகையாக ஏற்பட்டதென்றும், அவை ரத்து செய்யப்படவேண்டுமென்றும் 1895 வருஷத்தில் வழக்கிட்டாள். இந்த வழக்கு பழயசிவில் புரிஸீஜர்கோடு 244-வது செக்ஷன்படி நிறைவேறு நடவடிக்கையில் செய்யவேண்டியதேயன்றி அசல் வழக்கிட்டது செல்லாதென்று வாதியின் வழக்கைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். இந்த விதந்து 1900 வருஷத்தில் இறந்தாள். இவள் புருஷனுடைய சமீப அனந்தரவார்சு பியாஜிதாகூர் என்பவர் சில நிலங்களும் அதன் வரும்படிகளுங் கிடைக்கவேண்டுமென வழக்கிட்டதுமன்றி முன் சொன்ன தேவாலய வரும்படி மூன்றுவீசம் அரைவீசம் பங்கும்கிடைக்கவேண்டுமென 1910 வருஷம் ஜனவரி மாதம் வழக்கிட்டார். வாதியின் தாவா காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுப்போய்விட்டதென்றும், கிரிகமோனியின் வழக்கு 1895 வருஷத்தில் தள்ளுபடியாகிவிட்டதால் அது விஷயமாக புதிய வழக்கிட ரெஸ்ஜூடிகேடாதோஷத்தால் தடைபட்டிருப்பதாகவும், இன்னும் பலவிதமாகவும் பிரதி

வாதி கக்ஷிபாடினார். முதல்கோர்ட்டார் வாதியின் தாவாப்படியே தீர்மானஞ் செய்துவிட்டார்கள். இது விஷயமாக பிரதிவாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்ததில் நிலம் அதன்வரும்படி இவைகளைப்பற்றின வரையில் கீழ்கோர்ட்டார் தீர்ப்பை யுறுதிசெய்தார்கள். தேவாலய வரும்படியை பிரதிவாதி ஏலத்திலெடுத்து 1892 வருஷம் முதல் அவ்வரும்படியை அடைந்துவருவதால் அதைப்பற்றினவரையில் வாதியின் தாவா காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுப்போய்விட்டதென்றும் 1895 வருஷத்தில் கிருகிமோனியின் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டிருப்பதால் அது இந்த தாவாவுக்கு ரெஸ்ஜூடிகேடா தோஷமாகுமென்றுந் தீர்ப்பு செய்துவிட்டார்கள். அதன்பேரில் வாதியின் வார்சுகள் இந்த அப்பீல் செய்திருக்கிறார்கள்.

தாவாவிற்கண்ட தேவாலய ஆதீனகர்த்தர் பாத்தியம் வாதியின் வம்சஸ்தாருக்கு தலைமுறை தத்துவமான பாத்தியம். இது பிராமண பண்டாக்களால் நடத்தப்படவேண்டியது. பிரதிவாதி ஜருலதாஸ் பிராமண பண்டாவல்ல; இவர் தாழ்ந்தகுலத்தவர். ஆதீனகர்த்தர் பாத்தியதையை வகிக்கவாவது தேவாலய கயிங்கரியஞ் செய்யவாவது அருகமற்றவர். தேவாலய வரும்படியை அடைவதைக்கொண்டு அந்த தேவாலயத்துக்கு ஆதீனகர்த்தர் பாத்தியம் கிடைக்கமாட்டாது. யார் ஆதீனகர்த்தர்களாயிருக்கிறார்களோ அவர்கள்தான் அந்த வரும்படிகளைக்கொண்டு தேவாலய கயிங்கரியங்களைச் செய்து மிகுதி வரும்படியினின்றும் மேற்சொன்ன மூன்றுவீசம் அரைவீசம் பாகத்தை யடைய பாத்தியமுடையவர்கள். பிரதிவாதி ஜரூஸ்தாஸ் இந்த தேவாலய வரும்படியை அடைந்துவந்ததைக்கொண்டு இவருக்கு அதில் உரித்தான பாத்தியங் கிடைக்கமாட்டாது. பிரதிவாதி அக்கிரமமாக அடைந்துவரும் ஒவ்வொரு தேதியினின்றும் வாதிக்கு புதிய வியாஜ்ஜியமூல முற்பத்தியுண்டாகிறது. அவ்விதம் அடைந்துவந்து பிரதிவாதிக்கு ஆதீனகர்த்தர் பாத்தியதையை யுண்டுபண்ணமாட்டாது. இதனால் மூன்று வீசம் அரைவீசம் பங்கைப் பற்றினவரையில் ஹைகோர்ட்டாருடைய தீர்மானத்தை ரத்து செய்து அது வாதிக்கு கிடைக்கக்கூடியதென அபிப்பிராயப்படுகிறோம். இந்தப்படி தீர்மானிக்க மாக்ஷிமைதங்கிய சக்கரவர்த்தியவர்களுக்கு தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

அப்பீல் அங்கீகரிக்கப்பட்டது.

24 Indian Cases 501.

சென்னை ஹைகோர்ட்.

1913 ஹுத்திய லெட்டர்ஸ்பேடெண்டு அப்பீல் நம்பர் 98
தீர்ப்பு 6—3—14.

ஜட்ஜிகள்	முத்துகிருஷ்ணநாய்க்கன்
மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரநாயரவர்கள்	பிரதிவாதி அப்பீல்தார்
மிஸ்டர் ஜஸ்டிஸ் எயிலிங் அவர்கள்	V
	மாரிமுத்து கவுண்டன்வூ
	வாதிகள் எதிர்கக்ஷிக்காரர்

57 [இந்துலா]

ஒரு ஸ்திரீ தன் சரீர பிரயாசையினால் சம்பாதித்த சொத்து அவளுடைய புருஷனுக்கு பாத்தியமில்லையென்பதும், அச்சொத்தையவளுடைய வார்சுகள் அடைய பாத்தியமுடையவர்களென்பதும்.

ஈரோடு டி. மு. கோர்ட்டு தீர்ப்பின்பேரில் கோயம்புத்தூர் டிஸ்டிரிக்ட் கோர்ட்டில் அப்பீல். அதன்பேரில் ஹைகோர்ட்டில் அப்பீல் நடந்து அதன்பேரில் லெட்டர்ஸ்பேடெண்டு ஆக்ட்டுப்படி அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது.

மொட்டைய கவுண்டனும் அவனுடைய பெண்ஜாதி அய்யம்மாளும் சேர்ந்து சரீரப்பிரயாசைப்பட்டு குடும்ப காலக்ஷேபஞ் செய்துவந்ததுமன்றி அந்த வரும்படியில் மிகுதியைக்கொண்டு தாவா சொத்தை வாங்கினார்கள். இந்த அய்பம்மாள் முந்தி இறந்துபோய்விட்டாள். இந்தச் சொத்து முதல் பிரதிவாதியிடம் குத்தகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது. இந்த மொட்டைய கவுண்டனும் பிறகு இறந்துவிட்டபடியால் இவரின் வார்சுகள் தாவா சொத்தினின்றும் முதல் பிரதிவாதி விலக்கப்பட்டு சொத்து ஸ்வாதீனமாகவேண்டுமென வழக்கிட்டார்கள். தாவா சொத்தை அய்யம்மாளுடைய வார்சிடமிருந்து சாசனம் பெற்று அனுபவிப்பதாக 2-ம் பிரதிவாதி கக்ஷியாடினார். ஒரு ஸ்திரீ தன் கைத்தொழிலினால் சம்பாதித்த சொத்து அவள் புருஷன் வறுதிக்குட்பட்டதென்று இந்து ஸ்மிருதிகளிற் சொல்லப்பட்டிருக்கிறதென்றும், அதனால் தாவா சொத்து அய்யம்மாளுடைய சொந்த சொத்தாகாதென்றும், தாவா சொத்து அய்யம்மாள் பெயராலேற்பட்டிருப்பதானது இந்த மொட்டைய கவுண்டனுடையசகோதரர்கள் இச்சொத்தில் பாத்தியங்கொண்டாடாமலிருக்க வேண்டியதினிமித்தஞ் செய்துவைக்கப்பட்டதென்றும், இவள் தன் புருஷனைப்

பார்க்கிலும் புத்திசாலியாக •விருந்ததினாலும் அவள்பெயரால் சாசனமேற்பட்டதென்றும், இந்தச்சொத்து புருஷன் பெண்ஜாதி இருவர்களாலுஞ் சம்பாதிக்கப்பட்டதாகவிருந்தாலும் அய்யம்மாளிறந்தவுடன் முழு பாத்தியமும் மொட்டய கவுண்டனுக்குக் கிடைத்துவிட்டதென்றும், வாதிகள் இந்த மொட்டயகவுண்டனுக்கு பிரதிநிதிகளாகையால் தாவா சொத்துக்கள் அவர்களுக்குக் கிடைக்கக்கூடியதென்றும் டிஸ்டிரிக்ட் முனிசீப் தீர்ப்பு செய்துவிட்டார். இது டிஸ்டிரிக்ட் ஜட்ஜியாலும் ஹைகோர்ட்டு ஜட்ஜி மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லரவர்களாலும்உறுதிசெய்யப்பட்டது.இதன்பேரில் இந்த லெட்டர்ஸ்பேடெண்டு அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது.

புருஷர்களிருவரால் சேர்ந்து சம்பாதிக்கப்பட்ட சொத்து அவர்களிருவருக்கும் பொதுவானது. அதுபோல் ஸ்திரீ புருஷர் இருவர்களாலுஞ் சம்பாதிக்கப்பட்ட சொத்துக்கள் இருவருக்கும் பொதுவானதென்றே. சொல்லவேண்டும். இந்த சென்னை இராஜதானியில் வழங்கிவருகிற மிடாக்ஷாஸ்மிருதிப்படி. ஒரு ஸ்திரீயால் சம்பாதிக்கப்படுவது அவளுடைய ஸ்திரீதன சொத்தாகிறது. அச்சொத்தையவள் இறந்தவுடனே அவளுடைய வார்சுகள் அடைவார்கள். மணப்பெண் அல்லது மனைவிக்கு கொடுபட்ட இனாஞ்சொத்துக்கள், ஒருவளுடைய புருஷன், அல்லது அவளுடைய பெந்துக்கள், அல்லது அவளுடைய புருஷனின் பெந்துக்கள் இவர்களாற் கொடுக்கப்பட்ட சொத்துக்களெல்லாம் அவளுடைய சொந்த சொத்துக்களாகும். புருஷனால் ஒருவளுக்கு இனாமாகக் கொடுக்கப்பட்ட ஸ்தாபர சொத்துக்கள்மட்டில் அவளுடைய சொந்த சொத்தென்று சொல்வது சந்தேகத்துக்கிடமானது. மேலே சொன்னபடி ஒரு ஸ்திரீக்கு அன்னியர்களால் இனாமாகக் கொடுபட்ட சொத்துக்கள் அவளுக்குச் சொந்த சொத்துக்களென்று தீர்மானமேற்பட்டிருக்கிறது (3 M. H. C. R. 272 தீர்மானத்தைப் பார்க்க.) ஒரு சொத்து புருஷன் பெண்ஜாதி இருவருக்கும் பொதுவாக கொடுபடலாம். இருவர் பெயராலுஞ் சாசனம் வாங்கப்படலாம். இச்சொத்தில் புருஷன் பாகத்தை அவர் வார்சும் மனைவியின் பாகத்தை அவளுடைய வார்சும் அவர்களின் ஜீவதிசைக்குப் பிறகு அடைய பாத்தியமுடையவர்கள் (இ. லா. ரி. 1 சென்னை 307, 27 சென்னை 498, 21 சென்னை 100

இந்தத் தீர்மானங்களைப்பார்க்க.) இத்தீர்மானங்களில் ஒரு ஸ்திரீயால் சம்பாதிக்கப்பட்ட சொத்தும் அவளுக்கு அன்னியரால் கொடுபட்ட இனாமும் அவளுடைய ஸ்திரீதன சொத்துக்களென்று சொல்லியிருக்கிறார்கள். இந்த கேசிலேற்பட்ட ருஜுக்களினால் தாவாவிற்கண்ட சொத்து அய்யம்மாளுக்கும் அவள் புருஷனுக்கும் பொதுவிற் சொந்தமானது. இவள் முந்தியிறந்து விட்டதால் இவளுடைய பாத்தியம் இவள் புருஷனுக்கு கிடைக்க மாட்டாது. இவர்களுக்குள் சர்வேயர்ஷிப் பாத்தியங்கிடையாது. (இ. லா. ரி. 1 சென்னை 307 தீர்மானத்தை பார்க்க.) இந்த அய்யம்மாள் பாகசொத்துக்கு இவளுடைய பெண்கள்தான் வார்சுகள். அய்யம்மாளிறந்தவுடன் இந்தப் பெண்கள் மொட்டயகவண்டனுடன் கூட்டுபங்காளியாக தாவா சொத்தை யனுபவித்துவந்தார்கள். இச்சொத்தை விரோதமான பாத்தியதையுடன் எவரும் அனுபவிக்கவில்லை. மொட்டயகவண்டன் அனுபவித்தது அவனுடைய பெண்களுக்கு விரோதமான பாத்தியதையுடன் அனுபவித்ததாகமாட்டாது. மொட்டயன் பாத்தியதையைக் கொண்டாடிவருகிற வாதிகள் இந்த மொட்டயனுடைய பெண்களுக்கு கூட்டுபங்காளிகளாக விருக்கிறார்கள். முதற் பிரதிவாதி மொட்டயனிடம் குத்தகை பெற்றவன். முதற்பிரதிவாதி 2-ம் பிரதிவாதியின் பாத்தியதையின் கீழ் தனக்குக்கிடைத்ததாகச்சொல்லுகிறான். அய்யம்மாளுடைய வார்சு 2-ம் பிரதிவாதி சாசனம் பெற்ற வேலாயுதக்கவுண்டனல்ல. இது குடியான பாத்தியதையை விலக்கவேண்டுமெனக் கொண்டுவரப்பட்ட வழக்கு. இதில் கூட்டுபாத்தியமாக தீர்ப்பு செய்யப்படலாம். இதனால் கீழ் கோர்ட்டார்களின் டிக்கிரிகளை ரத்து செய்துவிட்டோம். டிஸ்டிரிக்ட் முனிசிப் இந்த வழக்கை பயிலில் வைத்துக்கொண்டு இந்த அய்யம்மாளுடைய பெண்கள் அல்லது அவர்களின் வார்சுகளை இவ்வழக்கில் கக்ஷிக்காரர்களாகச் சேர்த்துக்கொண்டு சட்டப்படி தீர்மானிக்கும்படி உத்திரவு செய்கிறோம்.

24 Indian Cases 363.

அலகபாத் ஹைகோர்ட்டு.

1913-வருஷத்திய 2-வது அப்பீல் நம்பர் 705

தீர்ப்பு 26-5-14

ஜட்ஜிகள் ஸர் ஹென்றி ரிச்சேர்ட்ஸ் Kt சீவ் ஜஸ்டிஸ் அவர்கள் மிஸ்டர் ஜஸ்டிஸ் டட்பால் அவர்கள்	முஸமத் அமராயோகன்வாதிஆ பிரதிவாதிகள் அப்பீல்தாரிகள் V லஷியோமங்கல்சிங் வாதி எதிர்க்கக்ஷிக்காரர்

58. [இந்துலா]

ஒரு விதந்து தன்னுடைய சமீப அனந்தரவாரிசின் சம்மதியின் பேரில் இனாம் சாஸனஞ் செய்தால் அது செல்லத்தகுந்ததல்லவென்பது.

தாவா சொத்து ஹரிநாத்சிங்குக்குச் சொந்தம். அதையவர் விதந்து ருக்மணி வார்சுக்கிரமத்திலடைந்து அனுபவித்தாள். இவளிந்த சொத்தை பந்தன்சிங் சூர்ஜான்கன்வார் இந்த இருவர்களின் சம்மதியின்பேரில் 2, 3 பிரதிவாதிகளுக்கு இனாஞ் சாசனஞ் செய்து கொடுத்துவிட்டாள். வாதியாகிய அனந்தரவார்சு இந்த இனாம் சாசனஞ் செல்லத்தகுந்ததல்லவென்ற பாத்தியஸ்தாபன வழக்கிட்டார். கீழ்கோர்ட்டார்கள் வாதியின் தாவாப்படியே தீர்ப்பு செய்துவிட்டதால் பிரதிவாதிகள் இந்தக் கோர்ட்டில் அப்பீல் செய்திருக்கிறார்கள்.

ஒரு இந்து விதந்து தன்னுடைய சமீப அனந்தரவார்சின் சம்மதியின்பேரில் தன்புருஷன் சொத்துக்களை பராதீனஞ் செய்யக்கூடுமாதலால் தாவா இனாஞ் சாசனம் செல்லத்தகுந்ததென பிரதிவாதிகளின் வக்கீல் இ. லா. ரி. 30 அலகபாத் 1 தீர்மானத்தை ஆதாரமாகக் காட்டி கக்ஷிபாடுகிறார். இந்த தீர்ப்பு நல்ல எண்ணத்துடன் சாசனஞ் செய்ததைப்பற்றிய தீர்ப்பு. வேறுமென்று இனாமாகக் கொடுபட்ட சொத்துக்கு அந்தத் தீர்மானம் பொருத்தமானதல்ல. இ. லா. ரி. 32 அலகபாத் 176, 34 அலகபாத் 129 இந்தத் தீர்மானங்களிற் கண்டபடி இந்த இனாம் எவ்விதத்திலுஞ் செல்லத் தகுந்ததல்ல. அதனாலிந்த அப்பீல் செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

24 Indian Cases 435

சென்னை ஹைகோர்ட்டு

1912 ஞூத்திய 2 வது அப்பீல் நம்பர் 725.

தீர்ப்பு 28 - 14 - 4.

ஜட்ஜிகள்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர் அவர்கள்
மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரநாயரவர்கள்

N, சுப்பய்யா வாதி அப்பீல்தார்
V
பவானி பிரதிவாதி

59. [இந்துலா]

ஒருவன் மனைவி வியபிசாரத்தினால் பிள்ளைபெற்றாலும் அவளுக்கு ஜீவனாம்சங்கிடைக்கத்தக்கதென்பது.

பிரதிவாதி வாதியின் மனைவி. இவளுக்கு யாதொரு ஜீவனாம்சமுந் தன்னால் கிடைக்கத்தக்கதில்லையென்று வாதி பாத்தியஸ்தாபன வழக்கிட்டார். பிரதிவாதி 1903 வருஷம் முதல் அவளுடைய பெற்றோர் வீட்டிலேயே யிருந்துவந்தாள். இந்த வழக்கு கொண்டு வருவதற்கு ஒரு வருஷத்துக்கு முந்தி 1907 வருஷம் அக்டோபர் மாதத்தில் இவளொரு குழந்தையைப்பெற்றாள். வாதி இவளுடன் சம்சர்க்கஞ் செய்ததாக ருஜூவில்லாததினால் இது வியபசாரத்தினால் பிறந்ததென்றே கீழ்கோர்ட்டார் தீர்மானித்து விட்டார்கள். இவள் தன் புருஷன் வீட்டுக்குத் திரும்பிப்போக சம்மதித்தாள். வாதி இவளை வைத்துக்கொள்ளக் கூடாதெனச் சொல்லிவிட்டார். பிரதிவாதி வியபிசாரஞ் செய்து வருகிறாளாவென்பது இரண்டாவது இஷ்யு. இவள் வியபிசாரியாக இருந்து வருவதாகவே டிஸ்டிரிக்ட் முனிசிப் தீர்ப்பு செய்தார். இது சப் ஜட்ஜியாலும் உறுதி செய்யப்பட்டிருக்கிறது. பிரதிவாதிக்கு பிறந்தபிள்ளை வாதிக்குப் பிறந்ததல்லவென்ற ஒரே காரணத்தினால் அவள் வியபசாரியாக விருப்பதாக கீழ்கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். இந்த தாவா செய்யப்பட்ட காலத்தில் பிரதிவாதி வியபிசாரியாக இருந்துவருகிறாளா இல்லையாவென்பதைப்பற்றித் தீர்மானிக்கவில்லை. வியபசாரஞ் செய்யும் மனைவிக்கு ஜீவனாம்சங் கிடைக்கத்தக்கதில்லையென்று இ. லா. ரி. 39 சென்னை 6 தீர்மானமேற்பட்டிருக்கிறது. தாவா செய்த காலத்திலும் ஒருவள் தன்னுடைய வியபசாரத்தொழிலை விடாதிருந்தால் அவளுக்கு எவ்வித ஜீவனாம்சமுங் கிடைக்கத்தக்கதில்லை. இது விஷயமாக எக்னவல்கியர் மிடக்ஷராவின் வியாக்கியானம் இவைகளை யனுசரித்து இ. லா. ரி. 34 பம்பாய் 278

தீர்மானமேற்பட்டிருக்கிறது. அதில் ஒரு புருஷன் தனது மனைவியைத் ,தள்ளிவைக்கக்கூடியதாக அவள் கொடிய பாவங்களைச் செய்திருந்தாலும் அவள் திரேகசம்பந்தத்துக்கும் மதசம்பந்தமான கிரிகைகள் செய்வதற்கும், அருகமற்றவளானவளேயன்றி அவளுக்கு அன்னவஸ்திரங்கொடுத்து புருஷனுடைய பாதுகாப்பில் வைத்திருக்கப்படவேண்டுமென்றும், அவள் ஜீவித்திருக்க எவ்வளவு ஆகாரம் அவசியமோ அதுமட்டிற் கொடுத்து அவளை வெளியே வைத்துவரவேண்டுமென்றுஞ் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த பம்பாய் தீர்மானத்தை யனுசரித்து தீர்மானஞ் செய்யவேண்டியது மெத்த நியாயமானது. வாதியின் பிராதுக்காலத்தில் பிரதிவாதி வியபிசாரத்தொழில் செய்து வந்ததாக ருஜூ ஏற்பட்டால் வாதி கேட்டபரிகாரம் கிடைக்கக்கூடியதே. இதனால் 2—வது இஷ்யுவைப்பற்றி கீழ் அப்பீல்கோர்ட்டார் விசாரித்து பயிண்டிங்கை அனுப்பும்படி உத்திரவு செய்தார்கள். கீழ்கோர்ட்டார் இது விஷயமாக விசாரித்ததில் இந்த வழக்கு நடந்த காலத்தில் பிரதிவாதி வியபசாரத்தொழில் செய்ததாக ருஜூவில்லையென்று பயிண்டிங் ஏற்படுத்தித் தெரிவித்தார்கள். இதனால் கீழ்கோர்ட்டார்களின் டிக்கிரிகளை ரத்து செய்து வாதியின் வழக்கு செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

24 Indian Cases 890.

கல்கத்தா ஹைகோர்ட்டு

1911 ஞூத்திய 2-வது அப்பீல் நம்பர் 1169

தீர்ப்பு 26—5—14

ஜட்ஜிகள்.
ஜஸ்டிஸ் ஸர் அஷுடோஷ் மூகர்ஜி Kt
மிஸ்டர் ஜஸ்டிஸ் பீச்கிராப்ட்

டினோநாத்கோஷ் ஆ வாதிகள் அப்பீல்தார்கள்
V
ஹிரிஷிகேஷ்பால்ஆ பிரதிவாதிகள்

60. [இந்துலா]

ஒரு விதந்து கயாவுக்கு ஸ்தலயாத்திரை செய்த செலவும் அங்கே சிராத்தஞ் செய்த செலவும் அவளுடைய புருஷனுடைய சொத்தைக்கட்டுப்படுத்தக்கூடியதென்பது.

ஈஸ்வரசந்திரபால் என்ற இந்து ஒருவர் சந்ததியன்னியில்
இறந்தார். வாதிகள் அவருக்கு சகோதரி பிள்ளைகள். 1908ம் வரு
ஷத்தில் இந்த ஈஸ்வர சந்திரபாலுடைய விதந்து (2-ம் பிரதி
வாதி) கயாவுக்கு ஸ்தலயாத்திரை செய்து அங்கே தன் புருஷ
னுக்கு சிரார்த்தங்கள் செய்து தன் வீட்டுக்குத் திரும்பிவந்த
வுடன் அனேக பிராமணர்களுக்கு சாப்பாடுபோட்டாள். இவளு
டைய புருஷனுக்கு குடிக்காணி பாத்தியமுடைய நிலங்கள் சொ
ற்பமிருக்கிறது. இதன் வரும்படியில் பூமிக்குடையவருக்கு
கொடுபடவேண்டிய குத்தகைத் தொகைபோக மிகுதி இவளு
டைய காலக்ஷேபத்துக்கும் இவள் புருஷன் குடும்பத்தில் பூஜித்து
வந்த ஸ்வாமியின் பூஜை நைவேத்தியங்களுக்கும்மட்டில போது
மானதாக விருந்தது. இதனல் மேலேகண்ட செலவுகளுக்கும்
நிலம் சரிபாக விளையாததால் நஷ்டப்பட்டு செலுத்தவேண்டிய
தாக ஏற்பட்ட குத்தகை தொகைக்கும் இவளுடைய சகோதரன்
குமாரன் முதற் பிரதிவாதியிடத்தில் ரூபா 500 பெற்றுக்கொண்டு
அவள் புருஷன் நிலத்தில் சிலபாகத்தையவருக்கு விற்றுவிட்
டாள். இந்த சாசனம் அவசியமான செலவுகளுக்கேற்பட்டதன்
வல்லவென்றும் அவை ரத்து செய்யப்படவேண்டுமென்றும் வாதி
கள் வழக்கிட்டிருக்கிறார்கள். கயாவில் நடத்திய சிரார்த்தத்துக்
குப் பிறகு வீட்டுக்கு வந்தபின் பிராமணர்களுக்கு விருந்தளித்த
செலவுகளுக்கு தாவா சொத்துக்கள் கட்டுப்படமாட்டாதென்றும்
நிலம் விளைவில்லையென்றதற்கு ருஜுவில்லையென்றும் டிஸ்டிரிக்ட்
முனிசீப் வாதிகளின் தாவாப்படியே டிக்கிரி செய்துவிட்டார்கள்.
இது விஷயமாக முதல் பிரதிவாதி அப்பீல் செய்ததில் நிலம் விளை
யாமல் நஷ்டப்பட்டு குத்தகைத் தொகை அளந்ததற்கு ருஜு
வில்லையென்றும் பிராமணர்களுக்கு அன்னசிராத்தஞ் செய்த செ
லவு ரூபா 200-க்கும் தாவா சொத்துக்கள் கட்டுப்படக்கூடிய
தென்றும், விதந்து ஜீவதிசைக்குப்பின் வாதிகள் ஜீவந்தர்களா
யிருந்தால் இந்த ரூபாய் 200-ம் கொடுத்துவிட்டு தாவா சொத்
துக்களை வசப்படுத்திக் கொள்ளலாமென்றுந் தீர்ப்பு செய்துவிட்
டார்கள். இந்தத் தீர்ப்பு நியாயவிரோதமானதென்று வாதிகள்
இந்தக்கோர்ட்டில் 2-வது அப்பீல் செய்திருக்கிறார்கள்.

ஒரு விதந்து கயாவுக்கு ஸ்தலயாத்திரை செய்த செலவுகளு
க்கும் அவள் புருஷனுடைய சிராத்தச் செலவுகளுக்கும் அவள்
புருஷன் சொத்துக்கள் கட்டுப்படக்கூடியதென இந்தக் கோர்ட்

டாரால் தீர்மானங்கள் ஏற்பட்டிருக்கின்றன (19 W R 426, 20
W R 187, 10 W R 309, தீர்மானங்களையும் இ. லா. ரி. 36 பம்
பாய் 82 தீர்மானத்தையும் பார்க்க.) இவ்வித கேஸ்களில் நாம்
கவனிக்கவேண்டியன (1) இவளுடைய புருஷனுடைய ஆன்மா
நற்கதியடையவேண்டியதினிமித்தம் இந்த கயா யாத்திரை செய்
யப்பட்டதா (2) இந்த விதந்துவின் குலாசார மதாசாரக் கொள்
கைகளின்படிக்கும், இவளுடைய குடும்ப அந்தஸ்து குடும்ப
வரும்படி இவைகளுக்குத் தக்கபடிக்கும் தகுந்த யோக்கியதை
யாக நல்ல எண்ணத்துடனும் செலவழிக்கப்பட்டதா என்ற
இந்த இரண்டு விஷயங்கள். விதந்து தன் புருஷனுடைய அனந்
தரவார்சுகளுக்கு விரோதமன்னியில் கிரமமான செலவுகளை செ
ய்யவேண்டும். இப்போது நாம் பார்க்கவேண்டியது, இவள் கயா
வுக்குப்போய் சிராத்தஞ் செய்துவந்த பிறகு பிராமணபோஜனஞ்
செய்வித்தது நியாயமானதும் அவசியமானதுமான செலவா
வென்பதுதான். இச்செலவு அவசியமானதென்றே அறிகி
றோம். ஒருவர் ஸ்தலயாத்திரைக்குப் போகுமுன்னும் அவ்வி
டம்போய் திரும்பிவந்த பிறகும் ஸ்வாமி பிதிர்க்கள், பிராமணர்
கள் இவர்களை பூஜிக்கவேண்டுமென ரெகுநந்தனர்செய்த சிராத்த
தத்துவ சாஸ்திரத்திற் சொல்லப்பட்டிருக்கிறது ஸ்தலயாத்திரை
செய்யப்போகு முன்னும் ஸ்தலயாத்திரை செய்துவந்த பிறகும்
தெளிவாயுள்ள விசேஷ வெண்ணெயைக்கொண்டு ஹோமஞ்செ
ய்து விருத்தி சிராத்தஞ் செய்யவேண்டுமென்று கர்மபுராணத்
திற் சொல்லப்பட்டிருக்கிறது; இதனல் பிராமணபோஜனம்,
அவசியஞ் செய்தே தீரவேண்டுமெனத் தெரிகிறது. இதேவித
மாக ஆதித்தியபுராணத்திலும் கயாசிராத்த விதியிலுஞ்சொல்ல
ப்பட்டிருக்கிறது. இந்த ஆதாரங்களினல் கயாவில் சிராத்தஞ் செ
ய்துவந்தபிறகு பிராமணபோஜனஞ் செய்து வைக்கவேண்டியது
மெத்த அவசியமானதென்றே தீர்மானிக்கிறோம் இந்த விதந்து
வின் குடும்ப அந்தஸ்துக்கு இவ்விஷயத்தில் ரூபா 200 செலவழி
ந்தது கிரமமானதென்று டிஸ்டிரிக்ட் ஜட்ஜி செய்த தீர்மானம்
நியாயமானதென்றே அபிப்பிராயப்படுகிறோம். இதனல் அனந்தர
வார்சுகள் இத்தொகையை கொடாமல் தாவா சொத்தை யடைய
நியாயமில்லை (இ. லா. ரி. 29 அலகபாத் 331, 1 இந்தியன் கேஸஸ்
434 இந்தத் தீர்மானங்களைப் பார்க்க.)

அனந்தரவார்சுகளால் கொண்டுவரப்படும் வழக்குகளில் விதந்துவால் அவசியமான இனங்களில் செலவழிக்கப்பட்ட தொகையை கொடுத்துவிடுவதாக சொல்லாத பிராதுகள், தள்ளுபடி செய்யப்படவேண்டுமென இ. லா. ரி 31 சென்னை 153, 25 அலகபாத் 330, 18 சென்னை லாஜர்னல் 17 தீர்மானங்கள் ஏற்பட்டிருக்கின்றன ஆனால் 1912. M W N. 1176, 4 Indian Cases 792 இந்தத் தீர்மானங்களில் மேற்சொன்ன விதம் அவசியமான செலவுகளுக்கு ஏற்பட்ட தொகைகளை கொடுத்து விடுவதாக பிராதில் சொல்லாவிட்டாலும் அந்த பிராதுப்படி தீர்ப்பு செய்யலாமெனச் சொல்லப்பட்டிருக்கிறது. அனந்தரவார்சுகளால் கொண்டுவரப்பட்ட இந்த அப்பீல் செலவுடன் தள்ளுபடி செய்து டிஸ்டிரிக்ட் ஜட்ஜி செய்த தீர்மானத்தை யுறுதி செய்கிறோம்.

24 Indian Cases 670.

பிரிவிகவுன்ஸல்.

அலகபாத் ஹைகோர்ட்டு தீர்ப்பின்பேரில் அப்பீல்
தீர்ப்பு 18-5-14.

ஜட்ஜிகள் லார்ட் பார்க்கர் அவர்கள் ஸர் ஜான் எட்ஜ் அவர்கள் மிஸ்டர் அமீர் ஆலி அவர்கள்	ஷொகாரத்சிங்கு பிரதிவாதிகள் அப்பீல்தார் V முசமத்ஜாபிரிபீபீ வாதி எதிர்கக்ஷிக்காரி

8. [மகமதியலா.]

ஷயா வதுப்பு மகமதியர்களுக்குள் மூடா விவாகம் சொற்பகாலவிவாகசம்பந்தமென்பதும், அது அப்போதைக்கப்போது ஸ்திரீ புருஷாளுக்குள் ஏற்படுத்துக்கொள்ளும் காலநிர்ணயத்தைப் பொறுத்ததென்பதும், அந்தக்காலத்தில் அந்த ஸ்திரீக்கு பிறந்த பெண்களுக்கு அந்த புருஷன் சொத்தில் பாத்தியமுண்டென்பதும்.

முகமத்காஸீம் என்பவர் ஷயாவகுப்பைச் சேர்ந்த மகமதியர். அச்ஹீபீபீ என்பவள் இவருடன் சேர்ந்து 3 பெண்களைப் பெற்றாள். இந்தப் பெண்களில் கடைசிப்பெண் தான் ஒருவள் மட்டில் மகமதியலாப்படி விவாகமான பிறகு பிறந்த பெண்ணென்றும், மற்றஇருவரும் விவாகமாவதற்குமுந்தி பிறந்தவர்களென்றும்

அதனால் தன்னுடைய தகப்பன் சொத்துக்கள் முழுவதையும் தான் ஏகதேசத்திலடைய பாத்தியமுடையவளென்றும், வழக்கிட்டாள். இந்த முகமத்காஸீம் அசஹீ பீபீயை முதலில் மூடா விவாகஞ் செய்துகொண்டு புருஷனும் மனைவியுமாக வாழ்ந்து வந்ததாகவும், அந்தக் காலத்தில் பிரதிவாதிகள் பிறந்ததாகவும், அந்த விவாகம் ஷயாவகுப்பு மகமதியர்களுக்குள் செல்லத்தக்கதென்றும் அக்காலத்தில் பிறந்த பிள்ளை பெண்களுக்கு தகப்பன் சொத்தில் பாத்தியமுண்டென்றும் அதனால் வாதிக்கு தாவா சொத்தில் மூன்றிலொருபாகந்தான் கிடைக்கக்கூடியதென்றும், பிரதிவாதிகள் கக்ஷியாடினார்கள். ஹைகோர்ட்டார் வாதிக்கு அனுகூலமாகத் தீர்ப்பு செய்துவிட்டதின்பேரில் பிரதிவாதிகள் இந்த அப்பீல் செய்திருக்கிறார்கள்.

இந்த முகமத்காஸீமால் எழுதிக்கொடுக்கப்பட்டவர் பத்திரம் இந்தக் கேஸில் முக்கிய சாக்ஷியமாக எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. இதில் இவர் இந்த அச்ஹீபீபீயுடன் முதலில் மூடா விவாகஞ் செய்துகொண்டதாகவும் இவளிடத்திலிருந்த அன்பின் மிகுதியினால் இவளுடன் நிகாவிவாகஞ் செய்துகொள்ள தீர்மானித்திருந்ததாகவும், சில அசந்தர்ப்பங்களினாலும், குடும்ப மெம்பர்கள் சம்மதிக்காததினாலும் இந்த நிகா விவாகஞ் செய்துகொள்ள தவக்கப்பட்டிருந்ததாகவும், சில விவாதங்கள் ஏற்பட்டதின்பேரில் இந்த நிகா விவாகஞ் செய்துகொள்ள வேண்டிய அவசியம் நேர்ந்ததால் இவ்விவாகத்தை பலஜனங்களுக்கு முன்னிலையில் சாஸ்திரப்படி நிகாவிவாகஞ் செய்துகொண்டதாகவும், இவளுக்கு டவர் தொகை ரூபா 50,000 கொடுப்பதாகவுங் கண்டிருக்கிறது. ஷயாவகுப்பு லாப்படி மூடா விவாகமென்பது சொற்பகாலத்துக்கு உபயகக்ஷிக்காரர்களுக்கு மேற்படுத்திக்கொள்ளும் காலநிர்ணயத்துக்கு கட்டுப்பட்ட விவாகம். இந்த விவாகத்தினால் ஸ்திரீக்கு புருஷன் சொத்தில் எவ்வித பாத்தியமுங் கிடைக்கமாட்டாது. இந்த விவாக சம்பந்தத்தில் பிறந்த குழந்தைகளுக்கு தகப்பன் சொத்தில் பாத்தியமுண்டு. நிகா விவாகமென்பது சாஸ்திரோக்தமாகச் செய்யப்படும் விவாகம். இந்த விவாகத்தினால் மனைவிக்கும் அவள் குழந்தைகளுக்கும் புருஷன் சொத்தில் பூருபாத்தியமுண்டு. இந்த அச்ஹீபீபீயுடன் செய்துகொண்ட மூடா விவாகம் எவ்வளவு காலத்துக்கு ஏற்பட்டதென்பத

ற்கு ருஜுவில்லை. இதனால் இந்த ஸ்திரீ புருஷர்கள் திரேகசம்பந்தப்பட்டுக்கொண்டு வந்த காலமுழுவதும், இந்த மூடா விவாகம் நீடித்து வந்ததாகவே யெண்ணப்படவேண்டும். மூடா விவாகத்தைப்பற்றி ருஜு விளங்கவில்லை. டவர்பத்திரம் உண்மையானதென்றும், அது விஷயமாக விடப்பட்ட ருஜுக்கள் நம்பத்தகுந்தனவென்றும் இந்த முகமத்காஸீமும் அச்ஹீபீயும் திரேக சம்பந்தபட்டு வந்தது மூடா விவாகத்தின்படிக்கேயன்றி வேறல்லவென்றுதெரிகிறது. ருஜுவம்சங்களைப்பற்றி கீழ்கோர்ட்டார்கள்தான் விளங்கி தீர்மானிக்க அருகமுள்ளவர்கள். அதனால் இந்தக்கேசைப் புனர்விசாரணை செய்து இந்த மூடா விவாகசம்பந்தத்தில் பிரதிவாதிகள் பிறந்ததாக ருஜுவானால், வாதிக்கு மூன்றிலொரு பாகமட்டில் தீர்மானிக்கலாமென்று அபிப்பிராயப்படுகிறோம். இந்தப்படிசெய்ய மாக்ஷிமை தங்கிய சக்கரவர்த்திபவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

24 Indian Cases 499.

அலகபாத் ஹைகோர்ட்டு.

1914வருஷத்திய அப்பீல் நம்பர் 35.

தீர்ப்பு 13—5—14

ஜட்ஜிகள்	சயாதத் உஸ்ஸேன்வூ அப்பீல்தார்கள்
மிஸ்டர் ஜஸ்டிஸ் நாபீக் அவர்கள்	V
மிஸ்டர் ஜஸ்டிஸ் பிக்கார்ட் அவர்கள்	முசமத்சாலி முன்னிஸா எதிர்கக்ஷிக்காரி

9. [மகமதியலா.]

மகமதிய மத ஸ்திரீ இறந்துபோனால் அவளுடைய குழந்தைகளுக்கு தகப்பன் கார்டியனே யன்றி தாயைப்பெற்ற பாட்டி கார்டியனாக மாட்டாளென்பது.

முகமத்ஜாமிலா காடுன் என்ற மகமதிய ஸ்திரீ இறந்தாள். அவளுக்கு 3 வருஷம் 3 மாதம் வயதுள்ள ஒரு பெண்குழந்தையிருக்கிறது. அந்தப் பெண்ணின் தாயைப்பெற்ற பாட்டி தான் அந்தக் குழந்தைக்கு கார்டியனென்றும், தன்னை கார்டியனாக நியமிக்கவேண்டுமென்றும், டிஸ்டிரிக்ட் கோர்ட்டில் மனுக்கொடுத்தாள். இந்தக் குழந்தையின் தகப்பனைப் பெற்ற பாட்டனும்

பாட்டியும் தாங்கள் இந்தக் குழந்தைக்கு கார்டியனாக நியமிக்கவேண்டுமென மனுக்கொடுத்தார்கள். தகப்பனும் இந்தப்பாட்டன் பாட்டி இவர்களுக்கு சாதகமாக மனுக்கொடுத்தார். டிஸ்டிரிக்ட் ஜட்ஜி இந்தக்குழந்தைக்கு அவள் தாயைப்பெற்ற பாட்டியை கார்டியனாக நியமித்துவிட்டார். இதனால் இந்தக் குழந்தையின் பாட்டனும் பாட்டியும் இநதக் கோர்ட்டில் அப்பீல் செய்திருக்கிறார்கள்.

இந்த நம்பர் கக்ஷிக்காரர்கள் ஷியா வகுப்பைச்சேர்ந்தவர்கள். இந்த வகுப்பு சட்டப்படி மைனர் குழந்தைகளுக்கு தாயார் இறந்துபோனாலும், அல்லது அவள் கார்டியனாகவிருக்க அருகமற்றவளாகப் போய்விட்டாலும், தகப்பன் தான் கார்டியனாகவிருக்க வேண்டும் ஹிஸானத் சம்பந்தப்பட்ட விதிகள் ஷியா சூனி இந்த இரண்டிற்கும் பொதுவானதே. ஷியா மதஸ்தர்களுக்குள் தாயார் இல்லாவிட்டால் அந்த பாத்தியம் தகப்பனுக்குக் கிடைத்துவிடுகிறது. தகப்பனில்லாவிட்டால் அந்த பாத்தியம் பாட்டன்களுக்கும் அவர்களின் முன்னோர்களுக்கும் கிடைத்துவிடுகிறது (மிஸ்டர் அமீர் ஆலி மகமதியன்லா 2-வது வாலியம் 3-வது பதிப்பு 294 வது பக்கத்தைப்பார்க்க.) இதனால் தாயைப்பெற்ற பாட்டி கார்டியனாகவிருக்க பாத்தியமற்றவள். இதனாலிந்த அப்பீலை யங்கீகரித்து கீழ்கோர்ட்டார் செய்த வுத்திரவை ரத்து செய்திருக்கிறோம்.

24 Indian Cases 632.

சென்னை ஹைகோர்ட்.

1911 வருஷத்திய அப்பீல் நம்பர் 268.

தீர்ப்பு 30—3—14.

ஜட்ஜிகள்	செட்டிகுளம் பிரசன்ன வெங்கடாஜலசெட்டியார் பிரதிவாதி அப்பீல்தார்
ஜஸ்டிஸ் டியாப்ஜி அவர்கள்	V
ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர் அவர்கள்	திருச்சினாப்பள்ளி கலெக்டர்வூ எதிர்கக்ஷிக்காரர்.

4. [தர்மசொத்துக்களைப்பற்றியசட்டம்.]

தர்மசொத்தென்று தெரியாமல் ஒருவன் அதை நல்ல எண்ணத்துடனும் தகுந்த பிரதி பிரயோஜனத்துடனும் வாங்கினால் அது கிரய

சாசனம் நடந்த 6 வருஷங்களுக்குள் ரத்து செய்யப்படவேண்டுமென்பது.

முதற் பிரதிவாதி ஒரு தர்மசொத்துக்கு டிரஸ்டி. அச்சொத்தில் சிலதை யவர் 2-ம் பிரதிவாதிக்கு பராதீனஞ் செய்தார். இதனால் திருச்சினாப்பள்ளி கலெக்டர் முதல் பிரதிவாதி இந்த தர்ம சொத்து விசாரணையினின்றும் விலக்கப்படவேண்டியதென்றும், அச்சொத்தின் வரவு செலவுகளுக்கு கணக்குகள் ஒப்பிவிக்கப்படவேண்டுமென்றும், முதற் பிரதிவாதி இரண்டாம் பிரதிவாதிக்குச் செய்த சாசனம் செல்லத்தக்கதில்லையென தீர்மானிக்கவேண்டுமென்றும் சி. பு. கோடு 92,93-வது செக்ஷன்களின்படி பிராது செய்தார். இதுவன்றி இத்தர்மசொத்து பரிபாலனஞ் செய்ய வேறு டிரஸ்டி நியமிக்கப்பட்டு அவர்வசம் இந்த தர்ம சொத்துக்கள் ஒப்பிவிக்கப்படவேண்டுமென்றுங் கேட்கபட்டிருக்கிறது. வாதியின் பிராதிற் கேட்டபடி எல்லா பரிகாரங்களும் இரண்டு பிரதிவாதிகள்பேரிலும் தீர்மானிக்கப்பட்டன. இது விஷயமாக பிரதிவாதிகள் தனித்தனியே அப்பீல் செய்திருக்கிறார்கள். முதற் பிரதிவாதி இறந்துவிட்டார். அவருக்கு வார்சு நியமிக்காததால் அது தள்ளப்பட்டது. 2-ம் பிரதிவாதியின் அப்பீல் மட்டில் ஊர்ஜிதத்திலிருக்கிறது. இறந்த முதற் பிரதிவாதி அப்பீல்தாருக்கு வார்சு நியமிக்கப்படாமையால் 2-ம் பிரதிவாதியின் அப்பீலுந் தள்ளுபடி செய்யப்படவேண்டுமென வாதி கக்ஷியாடுகிறார்.

அப்பீல்தார்களில் ஒருவர் இறந்து அவருடைய பாத்தியம் மற்ற அப்பீல்தாருக்கு கிடைத்துவிடும்பட்சத்தில் அப்பீல் தள்ளுபடி செய்யப்பட நியாயமில்லை. சி. பு கோடு 22-வது ஆர்டர் 11-ல் கண்டபடி வழக்குகளில் இறந்த கக்ஷிக்காரர்களுக்கு வார்சுகள் நியமிப்பதுபோல் அப்பீல் செய்தபின் இறந்த கக்ஷிக்காரர்களுக்கு வார்சு நியமிக்கப்படவேண்டும். இந்தக் கேசில் இரண்டு பிரதிவாதிகளுடைய கக்ஷிகள் வெவ்வேறாயிருக்கின்றன. 2-ம் பிரதிவாதி தன்னை இந்த வழக்கில் கக்ஷிக்காரராகச் சேர்த்தது பிசகென்றும், தன்பேரிலேதேனும் வியாஜ்ஜியமூலம் ஏற்படுமானால் அது காலாவதிதோஷத்தால் பாதிக்கப்பட்டுப்போய்விட்டதாகவும், கக்ஷி சொல்லியிருக்கிறார். இவர் தன் சொந்த பாத்தியதையின்பேரில் கக்ஷியாடுகிறார். முதல் பிரதிவாதி இறந்துவிட்டதால் 2-ம் பிரதிவாதியின் பாத்தியம் போய்விடமாட்டாது.

ஒரு வழக்கில் ஒருவன் பிரதிவாதியாகச் சேர்க்கப்படவேண்டியது அவசியமா அல்லவா என்பதைப்பற்றி அடியிற்கண்ட விஷயங்கள் கவனிக்கப்படவேண்டுமென்று இ. லா. ரி. 27 கல்கத்தா 493 பக்கம் 497-ல் சொல்லப்பட்டிருக்கிறது. அவையாவன (1) இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட விஷயங்களினால் இவனைப்பற்றினவரையில் இவனால் எந்தபரிகாரங் கிடைக்கக்கூடியதாகவிருக்கிறது. (2) இந்த வழக்கிற்கண்ட எல்லா விஷயங்களையும் சவிஸ்தாரமாக சரிவரத் தீர்மானிக்கவேண்டியதற்கு இவன் இந்த வழக்கில் கக்ஷிக்காரனாக விருக்கவேண்டியது மெத்த அவசியமா. இந்த 2-ம் பிரதிவாதிபால் செய்யப்பட்டிருக்கும் அப்பீலில் முதல் பிரதிவாதியும் கக்ஷிக்காரனாக இருக்கவேண்டியது அவசியமா இல்லையாவென்பது இவருடைய அப்பீலிற் சொல்லப்பட்டிருக்கிற ஆதாரங்களைக்கொண்டு நாம் தெரிந்துகொள்ள வேண்டியதாகவிருக்கிறது. இந்த அப்பீலை நன்றாக கவனித்ததில் முதற் பிரதிவாதி இதிற் கக்ஷிக்காரராகச் சேர்க்கப்படவேண்டியது அனாவசியமென்று தெரிகிறது. இதனால் இறந்த முதற் பிரதிவாதிக்கு வார்சு நியமிக்கப்படாமலே இந்த அப்பீல் விசாரணை நடத்தப்படலாம். இந்த புதிய கோடு 92-வது செக்ஷன் ஏற்படுவதற்கு முந்தி இது விஷ சம்பந்தமாக முன்னேற்பட்டிருந்த சி. பு கோடு 539-வது விஷயமாக வெவ்வேறான தீர்மானங்கள் பலவேற்பட்டிருந்தன புதிய கோடு 92 (1) செக்ஷன்படி கொண்டுவரப்படும் கேஸ்களில் தர்ம சொத்துக்களை பராதீனம் பெற்றவர்கள் அல்லது அச்சொத்தை யாக்கிரமித்துக் கட்டிக்கொண்டவர்கள் இவர்களையும் கக்ஷிக்காரர்களாகச் சேர்க்கலாமா கூடாதாவென்பது விவாதங்களுக்கு இடமாயிருக்கின்றன. எந்த தர்மசொத்துக்கள் வேறொருவருக்குக் கட்டுப்பட்டிருக்கிறதென்பதைத் தெரிந்துகொள்ள வேண்டியதினிமித்தம் இச்சொத்தை யனுபவிப்பவர்கள் பிரதிவாதிகளாகச் சேர்க்கப்படவேண்டுமென்று இ. லா ரி. 28 அலகபாத் 112 தீர்மானத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த தர்மசொத்துக்கள் வசப்படுத்தப்படவேண்டியதினிமித்தம் இந்தப் பராதீனம் பெற்றவர்கள் பிரதிவாதிகளாகச் சேர்க்கப்படவேண்டியது மெத்த அவசியமானதென்று இ. லா. ரி. 2ı கல்கத்தா 488 தீர்மானத்திலேற்பட்டிருக்கிறது. ஆனால் இந்த செக்ஷன் 92 அன்னியர்களுக்கு ஏற்பட்டனவல்லவென்று இ. லா. ரி. 15 சென்னை 241, 16 சென்னை 31, 33 கல்கத்தா 789 முதலிய தீர்மானங்களேற்பட்டிருக்

கின்றன. இந்தத்தீர்மானங்கள் எப்படியிருந்தபோதிலும் இந்த 2-ம் பிரதிவாதியைப் பற்றினவரையில் வாதியின் தாவா காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுப்போய்விட்டதா இல்லையாவென்பதை நாம் கவனிக்கவேண்டும். இந்த தாவாவில் 2-ம் பிரதிவாதியிடமிருந்து சொத்து கிடைக்கவேண்டுமென்று கேட்கவில்லை. அதனால் லிமிடேஷனாக்ட்டு 134-வது ஆர்டிகிள் தாவா கேசுக்குப் பொருத்தமானதல்ல. ஒரு சொத்தைப் பராதீனஞ் செய்தது செல்லத்தக்கதில்லையென்ற பாத்தியஸ்தாபன வழக்குக்கு லிமிடேஷனாக்ட்டு 120-வது ஆர்டிகிள் பொருந்தியதென்று இ. லா. ரி. 33 சென்னை 31 தீர்மானமேற்பட்டிருக்கிறது. இது சாசனம் ஏற்பட்ட தேதி முதலுண்டாகிறது. இது வாதிக்குத் தெரிந்த காலமுதலல்ல. 2-ம் பிரதிவாதி தாவா சொத்தை 1899 வருஷம் ஜனவரி மாதம் 26 தேதி சாசனம் பெற்றார் இந்த வழக்கு 1908 வருஷம் அக்டோபர்மாதம் 7 தேதி கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்த 120-வது ஆர்டிகிளின்படி வழக்கிட பாத்திய மேற்பட்ட தேதிமுதல் 6 வருஷம் காலாவதி தோஷம் பார்க்கவேண்டும். இந்தப் பராதீன விஷயம் வாதியாகிய கலெக்டருக்கு 1905 வருஷத்தில் ரெவினியு இனிஸ்பெக்டருடைய ரிபோர்ட்டு மூலமாகத தெரியவந்ததாக சப் ஜட்ஜி சொல்லுகிறார். இந்த தர்ம சொத்தை முதற் பிரதிவாதி அபகரித்ததாகவும், அதைப் பராதீனஞ் செய்ததாகவும் கலெக்டருடைய 1899 வருஷம் ஜூன்மாதம் 9 தேதியுள்ள புரொஸீடிங்ஸினால் தெரிகிறது. இதனால் எந்த விதத்தினாலும் வாதியின் தாவா இந்த அப்பீல் சொத்தைப் பற்றினவரையிலும், காலாவதிதோஷத்தால் பாதிக்கப்பட்டுப்போய்விட்டது. இதனாலிந்த அப்பீலை யங்கீகரித்து இந்த அப்பீல்தாரைப்பற்றினவரையில் வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

1914 Madras Weekly Notes 581.

சென்னை ஹைகோர்ட்.

1913 ஹுத்திய அப்பீல் நம்பர் 300.

தீர்ப்பு 16—7—14.

ஜட்ஜிகள் ஸர் ஜான் வாலிஸ் அபிஷியேடிங்	வெங்கடாஜல முதலி அப்பீல்தார் (வாதி)
	V
சீவ் ஜஸ்டிஸ் ஜஸ்டிஸ் குமாரசாமி சாஸ்திரியவர்கள்	அருணாசலமுதலிவூ எதிர்கக்ஷிக்காரர் (பிரதிவாதிகள்)

5 [தர்ம சொத்துக்களைப்பற்றிய சட்டம்]

பிரிடிஷ் இந்தியாவுக்கு வெளியில் வசித்துவரும் இந்து இங்கிலீஷ் கவர்ன்மெண்டாருக்குட்பட்ட இடங்களிலுள்ள பொது தர்ம சொத்துக்களுக்கு வம்சபரம்பரையான பாத்தியங்கொண்டாடலாமென்பது.

தென்னாற்காடு டிஸ்டிரிக்ட் கோர்ட் தீர்ப்பின் பேரில் அப்பீல்.

அன்னிய தேசத்தில் வசிக்கும் வாதியின் முன்னோர்கள் பிரிட்டிஷ் இந்தியாவில் பொது தர்ம சொத்துக்களை ஸ்தாபனஞ் செய்தார்கள். அச்சொத்து விஷயமாக ஏற்பட்ட டிரஸ்டு பத்திரத்தில் தர்மத்தை யேற்படுத்தியவரின் வார்சுகள் வம்சபரம்பரையாக தர்மத்தை நடத்திவருகிறதென்று கண்டிருக்கிறது. அன்னியநாட்டில் வசிக்கும் வாதி தானிந்த தர்மசொத்துக்கு வம்சபரம்பரையான பாத்தியஸ்தனென்ற பாத்தியஸ்தாபன வழக்குக் கொண்டுவந்தார். வாதி அன்னியநாட்டில் வசிப்பதால் அவரிந்த வழக்கிட பாத்திய மற்றவரென்று டிஸ்டிரிக்ட் கோர்ட்டார் வாதியின் வழக்கைத்தள்ளுபடி செய்துவிட்டார்கள். அதன்பேரில் இந்த அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது. தாவா கேசுக்கு இந்தியன் டிரஸ்டு ஆக்ட்டு பொருத்தமானதல்ல. வாதி இந்த வழக்கிட பாத்தியஸ்தரல்லவென்பதற்கு யாதொரு ஆதாரமுமெடுத்துச் சொல்லப்படவில்லை ஓரிந்து அன்னியநாட்டில் வசிப்பதைக்கொண்டு பிரிடிஷ் இந்தியாவிலுள்ள பொது தர்மசொத்துக்கு வம்சபரம்பரையான தர்மகர்த்தா ஆகமாட்டாரென்றுசொல்ல எவ்வித ஆதாரமுமில்லை. இதனால் கீழ் கோர்ட்டாரின் டிக்கிரியை ரத்துசெய்து கேசை பயிலில் வைத்துக்கொண்டு தீர்மானிக்கும்படி உத்தரவுசெய்கிறோம்.

I L W 574.

சென்னை ஹைகோர்ட்டு.

1913 வருஷத்திய சீவில் ரெவிஷன் மனு நம்பர் 599.

தீர்ப்பு 30 - 7 - 14.

ஜட்ஜிகள் ஜஸ்டிஸ் ஓல்ட்பீல்ட் அவர்கள் ஜஸ்டிஸ் நேப்பியர் அவர்கள்	சொரக்குடிசின்னகோடய்யா மனுதார் (பிரதிவாதி) V ஸ்ரீ ருஜா வரதருஜா அப்பா ருவ்பகதூர் ஜமீன்தார்காரு எதிர்கக்ஷிக்காரர் (வாதி)

54. [சிவில் புரிஸீஜர் கோடு].

முதல் கோர்ட்டில் வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதின்பேரில் வாதி அப்பீல் நடவடிக்கை நடத்தும்போது அவர் தன்னுடைய பிராதை வாபஸ் வாங்கிக்கொண்டு வேறு வழக்கிட அனுமதி கொடுக்க அப்பீல் கோர்ட்டாருக்கு அதிகாரமில்லையென்பது

வாதியின் வழக்கு கீழ்கோர்ட்டாரால் தள்ளுபடி செய்யப்பட்டிருந்ததால் அதைப்பற்றி வாதி அப்பீல் செய்திருந்தார். இந்த அப்பீல் விசாரணையில் வாதி அனேக புதிய தஸ்தாவேஜிகளை தாகல் செய்ய விரும்பினர். அப்பீல் கோர்ட்டார் இதற்கு இடங்கொடுக்கவில்லை. அதனால் வாதி தான் இந்த அப்பீலை வாபஸ் வாங்கிக்கொள்ளுவதாகவும் தாவாவிற்கண்ட விஷயங்களைப் பற்றி புதிய வழக்கிட அனுமதி கொடுக்கவேண்டுமென்றும் அப்பீல் கோர்ட்டாரை கேட்டுக்கொண்டதின்பேரில் அப்பீல் பிரதிவாதிக்கு செலவு தொகை கொடுத்துவிடவேண்டுமென்ற நிபந்தனையின்பேரில் வாதி புதிய வழக்கிடவேண்டிய அனுமதியுடன் அப்பீல் தள்ளுபடி செய்யப்பட்டது. இவ்விதம் அப்பீல் கோர்ட்டார் அனுமதி கொடுத்தது சட்டவிரோதமானதென்று பிரதிவாதி இந்தக்கோர்ட்டில் ரெவிஷன் மனுக்கொடுத்திருக்கிறார்.

இந்த ரெவிஷன் மனுவிற் கண்டபடி தீர்மானிக்கப்படவேண்டியது சி. பு. கோடு 23-வது ஆர்டர் 1-வது ரூலுக்கு அர்த்தஞ் செய்வதைப் பொறுத்ததாகவிருக்கிறது. அப்பீல் கோர்ட்டார் மேற்கண்டபடி அனுமதிகொடுக்க அதிகாரமிருக்கிறதென்பதைப் பற்றி வாதி எதிர்மனுதார் சி. பு. கோடு 107-வது செக்ஷனையும் இ. லா. ரி. 11 சென்னை 323, 1912 M W N 1003 இந்த தீர்மானங்களையும்எடுத்துக்காட்டுகிறார். வாதியின்வழக்குமுடிவடைந்

ந்து டிக்கிரியாகிவிட்டது. அதாவது டிக்கிரியிற் சம்பந்தப்பட்டு
விட்டது. ஆகையால் அப்பீல் செய்யும்போது யாதொரு வழ
க்குமில்லை. அப்பீல் என்ற பதத்துக்கு வழக்கு என்று அர்த்தஞ்
செய்யக்கூடாது. பிராதை வாபஸ் வாங்கிக்கொள்ளும் பாத்தியம்
வாதிக்கு உண்டென்பது வழக்கு தீர்மானிக்கப்படுவதற்கு முந்தி
யே யன்றி அதற்கு பிந்தியல்ல. இவ்விஷயம் இ. லா. ரி. 35 பம்
பாய் 261 தீர்மானத்தில் விபரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.
அதை நாம் அனுசரிக்கவேண்டும். அதனால் பிரதிவாதியின்
மனுவை யங்கீகரித்து கீழ்கோர்ட்டார் செய்த வுத்திரவை ரத்து
செய்கிறோம். அந்தக் கோர்ட்டார் அப்பீலை பயிலில் வைத்துக்
கொண்டு சட்டப்படி முடிவு செய்யவேண்டும்.

1 Law Weekly 613.

கல்கத்தா ஹைகோர்ட்டு.

1912 வருஷத்திய 2 வது அப்பீல் நம்பர் 28.

தீர்ப்பு 6-5-14.

ஜட்ஜிகள் மிஸ்டர் ஜஸ்டிஸ் பிளெட்சர் அவர்கள் மிஸ்டர் ஜஸ்டிஸ் ரிச்சேர்ட்ஸன் அவர்கள்	ருஜா ஸ்ரீ ஸ்ரீ மோகேந்திரலால் சிங்காடியோ பிரதிவாதி அப்பீல்தார் V பக்கீர்சந்திரடட்டாவு வாதிவு எதிர்கக்ஷிக்காரர்

55. [சிவில்புரிஸிஜர்கோடு.]

தீர்ப்பு செய்வதற்கு முந்தி எந்தக்காலத்திலும் கக்ஷிக்காரர்கள்
தங்கள் வழக்கை பஞ்சாயத்தார் முன்னிலையில் தீர்த்துக்கொள்ள
கோர்ட்டாரைக் கேட்டுக்கொள்ளலாமென்பதும், அந்தப்படியே கோ
ர்ட்டார் அனுமதிகொடுக்கக் கடமைப்பட்டவர்களென்பதும்.

சப்கோர்ட்டில் நடந்துகொண்டிருந்த வழக்கில் உபயவாதி
களும் தங்களுக்குள்ள விவாதங்களை பஞ்சாயத்தார் மூலமாகத்
தீர்த்துக்கொள்ளுவதாக ஏற்பாடு செய்துகொண்டிருப்பதாகவும்,
தங்களால் குறிப்பிட்டிருக்கும் பஞ்சாயத்தார்களிடம் நம்பர்கட்
டை அனுப்பவேண்டுமென்றுங் கேட்டுக்கொண்டார்கள். கால
பிற்பாடாக இந்த மனு கொடுபட்டிருப்பதால் இதை தள்ளுபடி

செய்துவிட்டதாக சப் ஜட்ஜியவர்கள் தீர்மானித்துவிட்டார்கள். அதன்பேரில் முதல் பிரதிவாதி இந்தக் கோர்ட்டில் அப்பீல் செய்திருக்கிறார்.

இந்த விசாரணையில் விசேஷகாலம் செலவழிந்துவிட்டதால் இந்த மனு காலபிற்பாடாகக் கொடுபட்டதாக சப் ஜட்ஜி நினைத்ததாகத் தெரிகிறது. விசாரணையில் கோர்ட்டார் எவ்வளவு காலம் செலவழித்தபோதிலும் கக்ஷிக்காரர்கள் தங்கள் விவாதங்களை பஞ்சாயத்தார் முன்னிலையிற் தீர்த்துக்கொள்ளுவதாக கேட்டுக் கொண்டால் கோர்ட்டார் அவர்கள் கேட்டுக் கொண்டபடியே செய்ய சட்டப்படி கடமைப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் கேட்டுக்கொள்ளுதலின்படி நடவாமல் சப் ஜட்ஜி வாதிக்கு தீர்ப்பு செய்தது நியாயமானதல்ல. ஆகையால் சப் ஜட்ஜியின் தீர்மானத்தை ரத்து செய்திருக்கிறோம். கீழ்கோர்ட்டார் உபய கக்ஷிக்காரர்களும் கேட்டுக்கொண்டபடி நம்பர்கட்டை அவர்களால் கோரிக்கொள்ளப்பட்ட பஞ்சாயத்தார்களிடம் அனுப்பும்படி உத்தரவுசெய்கிறோம்.

24 Indian Cases 610

அலகபாத் ஹைகோர்ட்டு.

1913-ஹு வருஷத்திய 2-வது அப்பீல் நம்பர் 290

தீர்ப்பு 30 - 5 -14

ஜட்ஜிகள்	
மிஸ்டர் ஜஸ்டிஸ் ராபிக் அவர்கள்	ஸர்தார்சிங் ஆ. வாதிகள் அப்பீல்தார்கள்
மிஸ்டர் ஜஸ்டிஸ் பிக்காட் அவர்கள்	V
	ரூட்டன்லால் அ. பிரதிவாதிகள்

56 [சிவில் புரிஸீஜர் கோடு.]

தகப்பனால் செய்து கொடுக்கப்பட்ட பெந்தக பத்திரத்தின் பேரில் வெண்ணலை டிக்கிரி பெற்று அக்கடனுக்காக குடும்பசொத்துக்கள் ஏலவிற்பனை செய்யப்படும் பட்சத்தில் பிள்ளைகள் அச்சொத்தை மீட்க பாத்தியமுடையவர்களென்பது.

வாதிகளாகிய அப்பீல்தார்களும் அவர்கள் தகப்பன் நந்தன் சிங்கும் ஒரு அவிபக்த இந்து குடும்ப மெம்பர்கள் இந்த நந்தன் சிங் 1893-ம் வருஷத்தில் குடும்பசொத்தில் சிலதை ராட்டன்

லால் என்பவரிடம் பெந்தகம் வைத்து ரூபா 99 கடன் வாங்கியிருந்தார். இவர் இந்த பத்திரத்தின்படி தொகை கிடைக்கவேண்டுமென்று நந்தன்சிங் என்பவரை மட்டில் பிரதிவாதியாகச் சேர்த்து வழக்கிட்டார். இதில் இவருடைய பிள்ளைகள் கக்ஷிக்காரர்களாக சேர்க்கப்படவில்லை. இந்த வழக்கில் பெந்தக பாத்தியம் வேண்டாமெனவிட்டுவிட்டு வெண்ணலை டிக்கிரி 189²-ம் ஹு செப்டம்பர் மாதம் பெற்றார். இந்த டிக்கிரியை நிறைவேற்றி மேலே சொன்ன பெந்தக சொத்தையும் வேறு சில சொத்துக்களையும் ஏலவிற்று முதலுக்குக்கொண்டு வந்து அன்னியனொருவன் போல் ஏலத்திலெடுத்தார். இந்த ஏலம் 1899-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 26-ந் தேதி உறுதி செய்யப்பட்டது. வாதிகள் தாங்களும் தங்கள் தகப்பன் மேற்சொன்ன நந்தன் சிங்கும், ஒரு அவிபக்த இந்துகுடும்பஸ்தர்களென்றும், தாவாவிற்கண்ட சொத்து குடும்பப் பொது சொத்தென்றும், 1898-ம் வருஷத்திலேற்பட்ட டிக்கிரியில் தாங்கள் கக்ஷிக்காரர்களல்லவென்றும், 1882-ம் வருஷத்திய 4-வது ஆக்ட்டு 99-வது செக்ஷன்படி ராட்டன்லாலுக்கு ஏற்பட்ட ஏலம் செல்லத்தகுந்ததல்லவென்றும், தாவா சொத்து பிரதிவாதி வசம் வந்த பிறகு அச்சொத்தின் வரும்படியையும் தங்கள் தகப்பனால் எழுதிக்கொடுக்கப்பட்ட பெந்தகக்கடனையுங் கணக்குப்பார்த்துப் பிரதிவாதிக்குச் சேரவேண்டியதைக் கொடுத்து விடுவதாகப் பிரதிவாதியை பல தடவைகளிற்கேட்டும், அவர் சம்மதிக்கவில்லையென்றும் அதனால் 1893-ம் வருஷத்தில் ஏற்பட்ட பெந்தக பத்திரத்தின்படி கூடுதலாகுந் தொகை ரூபாய் 158-வது அல்லது தாவா சொத்தின்வரும்படிகளையும் பெந்தக பத்திரத்தின் வட்டித்தொகையுங் கணக்கு பார்த்து என்ன தொகை கொடுக்கப்படவேண்டுமென கோர்ட்டார் தீர்மானிக்கிறார்களோ அந்தத் தொகையாவது கொடுத்துவிடுவதின்பேரில் பிரதிவாதி ஏலமெடுத்த சொத்துக்கள் வசமாகவேண்டுமென்றும், தாவா சொத்துக்களை விடுவதில்லையென்று பிரதிவாதி கடைசியாகச் சொன்ன 1911-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 1-ந்தேதியை வியாஜ்ஜிய மூலமாகக்கண்டு வாதிகள் வழக்கிட்டார்கள். பெந்தகபத்திரம் யாதொன்றும் ஊர்ஜிதத்திலில்லையாகையால் மீட்டும்படியான பாத்தியம் வாதிகளுக்கில்லையென்றும், தனக்கு ஏற்பட்ட ஏலம் செல்லுபடியுள்ளதென்,

றும், அது கோர்ட்டாரால் உறுதிசெய்யப்பட்ட பிறகு ஆக்ஷேபிப்பது பிசகென்றும், 1882-ம் வருஷத்திய 4-வது ஆக்ட் 99-வது செக்ஷன் தாவா கேசுக்கு ஒற்றுமையானதல்லவென்றும், தாவாவிற்கண்ட பெந்தகத்துக்கு முந்தி வேறு பெந்தகமிருப்பதால் அதுவும் மீட்கப்படவேண்டியது அவசியமென்றும், தாவாவிற்கண்ட தொகைக்கு மேல் ஜாஸ்தித்தொகை தனக்குச் சேரவேண்டியதென்றும், மற்றுஞ் சில கக்ஷிகளும் பிரதிவாதி சொன்னார். நந்தன்சிங் குடும்பகர்த்தா முறைமையில் பெந்தகம் பத்திரமெழுதிக்கொடுத்து கடன் வாங்கியதாகவும், அந்த முறைமையிலேயே டிக்கிரிபெற்று தாவா சொத்துக்கள் ஏலவிற்றுமுதல் செய்யப்பட்டதென்றும், இந்த ஏலத்தைப்பற்றி அவர் ஆக்ஷேபிக்காமல் அது உறுதிசெய்யப்பட்டுப் போய்விட்டதால் அவர் தன்னுடைய பாத்தியதையை இழந்துவிட்டாரென்றும், கீழ்கோர்ட்டார் வாதிகளின் வழக்கைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

நந்தன்சிங்கால் இந்தப் பெந்தப்கபத்திரம் எழுதிக்கொடுக்கப்பட்டதாவது அல்லது அவர்பேரில் குடும்பகர்த்தா முறைமையில் டிக்கிரி செய்யப்பட்டதாவது இந்தக்கேசின் சாராம்சங்களுக்குக் கெடுதி செய்யமாட்டாது. 1889 வருஷத்தில் நடந்த நிறைவேறு நடவடிக்கைகளில் யாதொன்றுஞ் செய்யாதிருந்துவிட்டதானது வேண்டாமென்று விட்டுவிட்டதாகமாட்டாது. அல்லது இந்த மீட்கும்படியான வழக்குக் கொண்டுவர பிள்ளைகளை தடை செய்யவுமாட்டாது. இதில் கிரமமான இஷ்ஷியு நந்தன்சிங்கின் நிலைமையல்ல. 1889 வருஷத்திய நிறைவேறு நடவடிக்கையில் அவர் யாதொன்றுஞ் செய்யாதிருந்ததுமல்ல. ஒரு பெந்தகம் பெற்றவன் அப்பத்திரக் கடன் கிடைக்கவேண்டுமென வழக்கிட்டதில் பெந்தக பாத்தியதையை விட்டு வெண்ணலை டிக்கிரி பெற்று அந்த டிக்கிரியை நிறைவேற்றி பெந்தகம் வைத்தவனுக்குள்ள மீட்கும்படியான பாத்தியதையை ஏலமெடுத்துவிடும்பட்சத்தில் அவனுக்குள்ள பெந்தக பாத்தியக்கடமையினின்றும் அவன் விலக்கிக்கொண்டானா, பெந்தகம் வைத்தவனுக்குள்ள மீட்கும்படியான பாத்தியம் விட்டுப்போய்விட்டதா என்ற விஷயங்களைத்தான் நாம் கவனிக்கவேண்டியது. இது விஷயமாக வாதி அப்பீல்தார் வக்கீல் இ. லா. ரி. 22 சென்னை 347, 22 பம்பாய் 624 இந்த தீர்மானங்களை தன் கக்ஷிக்கு ஆதாரமாக எடுத்துச் சொல்லுகிறார்.

1882 வருஷத்திய 4-வது ஆக்ட்டு 99-வது செக்ஷன் அல்லது சிவில் புரிஸீஜர்கோடு 34-வது ஆர்டர் 14-வது ரூல் இவைகளின்படி அப்பீல்தார் வாதி கொண்டாடும் மீட்கும்படியான பாத்தியம் தாவா கேசுக்குப் பொருந்தியதல்லவென்று பிரதிவாதி வக்கீல் அடியிற்கண்ட மூன்றுகாரணங்களையெடுத்துச் சொல்லுகிறார்.

முதலாவது:—ஒரு வழக்கில் தகப்பன்மட்டில் பிரதிவாதியாகச் சேர்க்கப்பட்டு பிள்ளைகள் பிரதிவாதிகளாகச் சேர்க்கப்படாவிட்டால் அந்த டிக்கிரியின்படி குடும்பச் சொத்துக்கள் ஏலம் போடப்படும்பட்சத்தில் அந்த டிக்கிரி கடனுக்கு பிள்ளைகள் கட்டுப்படக்கூடியதாக விராவிட்டால் அந்த ஏலசொத்தில் பிள்ளைகளின் பாகமட்டில் விலக்கப்படவேண்டும் (இ. லா. ரி. 25 அலகபாத் 214 தீர்மானத்தைப் பார்க்க.)

இரண்டாவது:—பெந்தகக்கடனுக்காக வெண்ணலை டிக்கிரி செய்யப்பட்டு அந்த டிக்கிரிக்காக பெந்தக சொத்து ஏலவிற்பனையாகி அதை பெந்தகம் பெற்றிருந்தவனே ஏலத்திலெடுத்துவிட்டால் பெந்தகம் வைத்தவனாவது அவனுடைய பிள்ளைகளாவது இந்த ஏலத்தைப்பற்றி ஆக்ஷேபிக்கவாவது அதை ரத்து செய்யவாவது கூடாது.

மூன்றாவது:—இந்த டிக்கிரிப்படி ஏலம் போடப்பட்ட பிறகு இந்த ஏலம் உறுதி செய்யப்படுவதற்கு முந்தி அது விஷயமாக பெந்தகம் வைத்தவன் ஆக்ஷேபிக்காதிருந்துவிட்டால் அவர் அந்த பாத்தியதையை விட்டுவிட்டதாகவே கருதப்படவேண்டும். அவராவது அவருடைய குடும்ப மெம்பர்களாவது அந்த ஏலத்தைப்பற்றி ஆக்ஷேபிக்கத்தடைப்பட்டிருக்கிறார்கள். இந்த 2,3 ஆக்ஷேபனைகளைப்பற்றி பிரதிவாதியின் வக்கீல் இ. லா. ரி. 24 அலகபாத் 549, 27 அலகபாத் 450, 30 அலகபாத் 146 இந்த தீர்மானங்களை தன் கக்ஷிக்கு ஆதாரமாக எடுத்துக்காட்டுகிறார்.

இந்தக்கேசில் வாதிகள் தங்கள் தகப்பன் பட்ட கடன்களைப்பற்றி ஆக்ஷேபிக்கவில்லை. குடும்ப சொத்துக்கள் சில சந்தர்ப்பங்களை முன்னிட்டு விற்கப்பட்டதால் அச்சொத்துக்கள் மீட்கப்படவேண்டுமென வாதிகள் வழக்கிட்டிருக்கிறார்கள். ஏலத்தைப்பற்றி ஆக்ஷேபிக்காதிருந்த காரணத்தினால் அந்த ஏலசொத்தை

மீட்கவேண்டுமென்று கொண்டுவரும் வழக்குக்கு அது எவ்வித தடையுஞ் செய்யமாட்டாது. 6 இந்தியன் கேஸஸ் 47 தீர்மானத்தில் இது விபரங்கள் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பிரதிவாதி வக்கீல் எடுத்துக்காட்டிய தீர்மானங்கள் தாவா கேசுக்கு ஒற்றுமையானதல்ல. இந்த அப்பீலை யங்கீகரித்து கீழ்கோர்ட்டு டிக்கிரியை ரத்து செய்திருக்கிறோம். கீழ்கோர்ட்டார் இந்தக் கேசை பயிலில் வைத்துக்கொண்டு சட்டப்படி முடிவு செய்யும்படி உத்திரவு செய்கிறோம்.

24 Indian Cases 612.

சென்னை ஹைகோர்ட்டு

1912 ஷ்த்திய 2வது அப்பீல் நம்பர் 1667.

தீர்ப்பு 29 - 4 - 14.

ஜட்ஜிகள்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலீஸ் அவர்கள்
மிஸ்டர் ஜஸ்டிஸ் ஓல்ட்பீல்ட் அவர்கள்

தேவகுபட்டு காமேஸ்வரம்மா
4-ம் பிரதிவாதி அப்பீல்தார்
V
வாடத்தி வெங்கடசுப்பராவ்
வாதிகள் ஆ.

57. [சிவில் புரிஸீஜர் கோடு]

தகப்பனும் பிள்ளையும் அவிபக்தர்களாயிருந்தால் மட்டில் தகப்பனாற் கொடுபட்ட ஜாமீனுக்கு பிள்ளை கட்டுப்பட்டவனே யன்றி ஜாமீன் கொடுத்த பிறகு அவர்களுக்குள் பாகப்பிரிவினை ஏற்பட்டிருந்தாலும் அந்த பிரிவினைக்குப்பிறகு பிள்ளை பாக சொத்தின் பேரில் நிறைவேற்றக்கூடாதென்பது.

2-ம் பிரதிவாதி 3-ம் பிரதிவாதி பேரில் ஒரு ஜீவனாம்ச டிக்கிரிபெற்று அதை நிறைவேற்றி ரூபா 637 வசூலித்தான். அத்தொகைக்கு முதற் பிரதிவாதியைக்கொண்டு ஜாமீன் கொடுக்கச் செய்தாள். அவர் வாதிக்கு தகப்பன் ஹைகோர்ட்டார் கீழ்கோர்ட்டு டிக்கிரியை ரத்து செய்துவிட்டதால் 2-ம் பிரதிவாதியால் வசூலிக்கப்பட்ட தொகைக்கு 3-ம் பிரதிவாதி இந்தஜாமீன் சொத்தைத்தொடர்ந்து தொகை வசூலிக்கிறதென்று உத்தரவு செய்யப்பட்டதால் 3-ம் பிரதிவாதி வாதியின் பாகத்துக்குக் கிடைத்த ஜாமீன் சொத்தை ஜப்திசெய்தார். வாதி தன் பாக

சொத்து 3-ம் பிரதிவாதிக்குச் சேரவேண்டிய தொகைக்குக் கட்டுப்படமாட்டாதென பாத்தியமனுக் கொடுத்து அது தள்ளுபடி செய்யப்பட்டதின் பேரில் வாதி தனக்கு இச்சொத்திலுள்ள பாத்தியம் ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்று அசல் வழக்கிட்டார். வாதியின் பாகபத்திரம் மோசடியாக ஏற்பட்டதென்றும், அது செல்லத்தக்கதில்லையென்றும் 3, 4 பிரதிவாதிகள் கக்ஷிபாடினார்கள். கீழ்க்கோர்ட்டார்கள் வாதியின் தாவாப்படியே தீர்ப்புசெய்துவிட்டதால் மேற்சொன்ன பிரதிவாதிகள் இந்தக்கோர்ட்டில் இரண்டாவது அப்பீல் செய்திருக்கிறார்கள்.

இந்த பாகபத்திரம் கிரமமாக ஏற்பட்டிருந்தபோதிலும் வாதி வசமுள்ள ஜாமீன்சொத்து 3-ம் பிரதிவாதிக்குச் சேரவேண்டிய கடனுக்கு கட்டுப்பட்டதென்றும், சி. பு. கோடு 253-வது செக்ஷன்படி தகப்பன் பேரிலேற்பட்ட உத்தரவுக்கு பிள்ளைகட்டுப்பட்டவனென்றும் தகப்பன்பட்ட கடனுக்கு பிள்ளை சாஸ்திரோக்தமாகக்கட்டுப்பட்டவனென்றும், பிள்ளையின் பாகத்துக்குக்கிடைத்த சொத்து தகப்பனுடைய கடனுக்குக்கட்டுப்படக்கூடிய தென்றும், இ. லா. ரி. 24 சென்னை 555 தீர்மானத்தையாதாரமாகக் காட்டி அப்பீல்தார் கக்ஷிபாடுகிறார்.

பாகப்பிரிவினைக்கு முன் தகப்பனாலேற்பட்ட கடனுக்கு பிள்ளையின் பாகத்துக்கு ஏற்பட்ட சொத்துக்கட்டுப்பட மாட்டாதென இ. லா. ரி 22 சென்னை 519 தீர்மானத்திலேற்பட்டிருக்கிறது. இதை யனுசரித்து (1910 M W N 565, 18 M L J 599 தீர்மானங்களேற்பட்டிருக்கின்றன. அப்பீல்தார் எடுத்துக்காட்டும் இ லா ரி 11 பம்பாய் 37, 28 பம்பாய் 383 முதலிய தீர்மானங்கள் தாவா கேசுக்கு ஒற்றுமையானதல்ல. இந்த கேஸ்கள் பாகப்பிரிவினைக்கு முன்பாராதீனஞ் செய்யப்பட்ட சொத்துக்களைப்பற்றியது. இந்த இரண்டாவது அப்பீல் செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

24 Indian Cases 474.

அலகபாத் ஹைகோர்ட்டு

1913 வருஷத்திய நிறைவேறு நடவடிக்கை 2-வது அப்பீல் நம்பர் 1496

தீர்ப்பு 19—5—14

ஜட்ஜி மிஸ்டர் ஜஸ்டிஸ் பிக்காரட் அவர்கள்	பாஜன்லால் டிக்கிரிதாரன் அப்பீல்தார் V செடாலால் டிக்கிரி கடன்காரன்

58. [சிவில் புரிஸீஜர் கோடு].

டிக்கிரி கடனுக்கு வரவு வந்ததைப்பற்றி கோர்ட்டில் சர்டிபை செயயாவிட்டால் அந்த வரவு காலாவதிதோஷத்துக்கு பரிகாரமாக மாட்டாதென்பது.

அப்பீல்தார் எதிர்மனுதார்பேரில் 1909 வருஷம் ஜூலைமாதம் 1 தேதி ஒரு டிக்கிரி பெற்றார். இந்த டிக்கிரி 1913 வருஷம் ஜனவரி மாதம் 21 தேதி நிறைவேற்றப்பட்டது. இந்த டிக்கிரிக்காக சென்ற 1911 வருஷம் நவம்பர்மாதம் 23 தேதி ரூபா 25 வரவு வந்திருப்பதாகவும், அதனாலிந்த நிறைவேற்று மனுவுக்கு காலாவதி தோஷமில்லையென்று அப்பீல்தார் சொன்னார். சி பு. கோடு 20-வது ஆர்டர் ரூல் 2 கிளாஸ் 137-படி இந்த வரவு கோர்ட்டாரால் அங்கீகரிக்கப்படாததால் டிக்கிரி நிறைவேற்றப்பட காலாவதி தோஷமேற்பட்டுவிட்டதென கீழ்க்கோர்ட்டார் வாதியின் நிறைவேற்று மனுவை தள்ளுபடி செய்துவிட்டார்கள். அப்பீல்தார் தன் கக்ஷிக்கு ஆதாரமாக அனேக தீர்மானங்களை யெடுத்துக்காட்டியது மன்றி இ. லா. ரி. 26 அலகபாத் 36 தன் கக்ஷிக்கு மெத்த ஆதாரமானதென்று எடுத்துச்சொல்லுகிறார். பழய சி. பு கோடு 258வது செக்ஷனுக்கும் புதியகோடு 21-வது ஆர்டர் 2-வது ரூலுக்கும் மெத்த வித்தியாசங்களிருக்கின்றன. சி. பு. கோடுக்கு மிஸ்டர் அமீராலி உட்ராவ் இவர்கள் எழுதிய வியாக்கியானத்தின்படிகோர்ட்டுக்குவெளியில் தீர்த்துக்கொண்டதாவது, சர்டிபை செய்யாமற் கொடுத்தாவது கோர்ட்டாரால் அங்கீகரிக்கத்தக்கதல்ல. தாவா கேசைப்போன்ற 23 இந்தியன் கேஸ் 753 தீர்மானத்தில் டிக்கிரிதாரனுக்கு விரோதமாகத் தீர்மானித்திருக்கிறார்கள். புதிய லிமிடேஷனச்ட்டு 182-வது ஆக்டின்படி வாதியின் டிக்கிரி காலாவதியாகப் போய்விட்டதென்று கீழ்க்கோர்ட்

டார் தீர்மானித்தது மெத்த நியாயமானது. இந்த அப்பீல் செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

24 Indian Cases 215.

சென்னை ஹைகோர்ட்டு.

1912 வருஷத்திய அப்பீல் நம்பர் 51.

தீர்ப்பு 24 - 4 - 14.

ஜட்ஜிகள் சீவ் ஜஸ்டிஸ் ஸர் ஆர்னல்ட் வொயிட் Kt. அவர்கள் ஜஸ்டிஸ் ஒல்ட்பீல்ட் அவர்கள்	T. சிதாராமசெட்டியூ. அப்பீல்தார்கள் V கோத கிருஷ்ணசாமிசெட்டி எதிர்கக்ஷிக்காரர்

28 [லிமிடேஷனக்ட்]

காலாவதியாகப் போனகடனை யொப்புக்கொள்ளுதலினால் அதைப் பிற்பட்ட வழக்கில் மறுக்கத்தடைப் படுத்தப்படமாட்டாரென்பதும், தவணைப் பத்திரங்களில் தவணை தவறினால் மறுகெடு நிபந்தனையன்னியில் தொகை கொடுக்கிறதென்று ஷரத்து ஏற்பட்டிருந்தாலும் ஒவ்வொரு தவணைக்கும் ஏற்பட்ட கெடுமுதல் காலாவதி தோஷம் பார்க்கவேண்டுமென்பதும்.

உபய வாதிகளும் தொழில் நடத்திவந்ததில் இவர்களுக்குள்ள விவாதங்களை மத்தியஸ்தர்கள் தீர்த்துவிட்டபடி வாதிக்கு பிரதிவாதி ரூபா 30,000 தவணையொன்றுக்கு ரூபா 1000 வீதம் 30 தவணைகளின் கொடுத்துத் தீர்த்துவிடுகிற'தென்று B என்ற ஒருவித உடன்படிக்கை ஏற்பட்டு அத்தொகைக்காக பிரதிவாதி ஒரு பிராமசரி நோட்டும் எழுதிக்கொடுத்திருந்தார். 1906-ம் வருஷம் ஏப்பரல் மாதத்துடன் 16 தவணைகளில் ரூபா 16000 கொடுபட்டுவிட்டது. மே ஜூன் இந்த இரண்டு மாதங்களிலும் செலுத்தப்பட வேண்டிய தவணைத்தொகைக்கு செக்குகள் வாதிக்கு அனுப்பப்பட்டன. அவைகளை வாதி திருப்பியனுப்பிவிட்டார். ஜூலை மாதத்துக்கு செக் அனுப்பப்படவில்லை. ஆனால் தவணைகளின்படி தொகை செலுத்தத் தயாராக விருப்பதாக பிரதிவாதிகள் வாதிக்குத் தெரிவித்தார்கள். (E அடையாள ஆதிரவு) வாதி இதற்கு சரியான பதில் செய்யவில்லை. B அடையாள ஆதிரவு மோசவகையாக எழுதி வாங்கப்பட்டதென்றும், ஏற்பட்ட

பிராமசரி நோட்டின்படி எட்ரனுக்குப் பிந்தி பாக்கித்தொகை
யை பெற்றுக்கொள்ள இஷ்டமில்லை யென்றும், பாக்கித்தொகை
ரூபா 11000-மும் தனக்கு உடனே கிடைக்க வேண்டியதென்
றும், வாதி 1906-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் பிரதிவாதிகள்
பேரில் வழக்கிட்டார். வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யப்
பட்டதின்பேரில் அவர் அதைப்பற்றி அப்பீல் செய்ததில் அந்தக்
கோர்ட்டார் மேற்சொன்ன விடுதலை பத்திரம் ரத்து செய்யப்பட
நியாயமில்லை யென்றும், ஆனால் கணக்குப்பார்த்ததில் ரூபா 1400
விட்டுப்போய்விட்டதென்றும், அது வாதிக்குக் கிடைக்கக்கூடிய
தென்றும் தீர்ப்பு செய்தார்கள். இந்த அப்பீல் தீர்ப்பு 1910-ம்
வருஷம் ஜனவரி மாதம் 19-ந்தேதி செய்யப்பட்டது. இந்த ஜன
வரி மாதம் 25-ந்தேதி பாக்கித்தொகை ரூபா 14000மும் தனக்கு
கொடுபடவேண்டியதென்று கேட்டு அதன்பேரில் வாதியால்இந்த
வழக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. வாதியின் தாவா காலா
வதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுப் போய்விட்டதாக பிரதிவாதி
கள் கக்ஷியாடுகிறார்கள். பிரதிவாதிகளில் ஒருவர் தன்னுடைய
பிரமாண பத்திரிகையில் தாவா கடனை யொப்புக்கொண்டிருப்ப
தால் அது லிமிடேஷனுக்ட் 19-வது செக்ஷன்படி காலாவதி தோ
ஷத்துக்கு பரிகாரமாகுமென்றும், சாக்ஷிய சட்டம் 115-வது
செக்ஷன்படி பிரதிவாதிகள் அதை மறுக்கத்தடைப்பட்டிருக்கிறார்
களென்றும் வாதியின் தாவாப்படியே முதல் கோர்ட்டார் தீர்மா
னித்துவிட்டார்கள். அதன்பேரில் பிரதிவாதிகள் இந்த அப்பீல்
செய்திருக்கிறார்கள்.

காலாவதிக்காக ஏற்பட்ட கெடுவுக்குப்பிற்பட்டு வழக்கிடு
வது செல்லத்தக்கதல்லவென்று புதிய லிமிடேஷனுக்ட் 3-வது
செக்ஷனிற் சொல்லப்பட்டிருக்கிறது. சட்ட நிரூபண சபையா
ராலேற்பட்ட ஆக்டுக்கு எஸ்டாபல் தோஷம் பார்க்கக்கூடாது
(இ. லா. ரி 36 கல்கத்தா 920, 38 கல்கத்தா 512 இந்தத் தீர்மா
னங்களைப்பார்க்க). இச்சட்டத்தினால் யாருக்கு என்ன கெடுதி
நேரிட்டாலும் அதை யனுசரித்தே தீரவேண்டும். எந்தத்தவணை
தவறினபோதிலும் மறுதவணை யெதிர்பாராமல் தொகை கொடுக்
கிறதென்று கண்டிருப்பதால் வாதியின் தாவாவுக்கு காலாவதி
தோஷமேற்பட்டுவிட்டதாகச் சொல்லப்படுகிறது. இந்த தவணை
களின்படி பிரதிவாதிகள் தொகை கொடுக்கத்தவறவில்லை, சில

தவணைத்தொகைகளை செக்மூலமாயனுப்பி அவைகள் திருப்பி
யனுப்பப்பட்டதால் பின்னிட்ட தவணைகள் அனுப்பப் படாதிருந்
தன. இந்த தாவாவுக்கு லிமிடேஷனுக்ட்டு 74-வது ஆர்டிகிள்
தான் பொருத்தமானது. அதாவது ஒவ்வொரு தவணை முதலும்
வியாஜ்ஜியமூல முற்பத்தி. இதனால் பிரதிவாதிகளால் செலுத்தப்
படவேண்டிய 14 தவணைகளில் 1907-ம் வருஷம் பிப்பரவரி,
மார்ச்சு, ஏப்ரல், மே, ஜூன் இந்த 5 தவணைத் தொகைகளுக்கு
மட்டில் காலாவதி தோஷமேற்படவில்லை. மற்ற 9 தவணைகளுக்கு
காலாவதி தோஷ மேற்பட்டுவிட்டது. ஆகையால் இந்த 5 தவ
ணைத் தொகைகளும் வட்டியுடன் கிடைக்கவேண்டியதாகத் தீர்
மானிக்கிறோம்.

24 Indian Cases 507.

சென்னை ஹைகோர்ட்.

1911 வருஷத்திய 2 வது அப்பீல் நம்பர் 659.
தீர்ப்பு 28—1—14.

ஜட்ஜிகள்
ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள்
ஜஸ்டிஸ் ஸ்பென்ஸரவர்கள்

ரூஜம்மாள் அப்பீல்தார் (வாதி)
V
மைனர் லெக்ஷ்மம்மாளுக்கு
கார்டியன் அண்ணாஜி ரங்காசாரியார்
(அ. பிரதிவாதிகள்)

29. (லிமிடேஷனுக்ட்)

ஜங்கம சொத்துக்கள் அல்லது ரொக்கத் தொகைகளை அடைக்
கலமாக வைப்பதினால் அச்சொத்தை வைத்திருப்பவர் டிரஸ்டியாக
மாட்டாரென்பதும், அச்சொத்து வழக்கிடக் காலாவதி தோஷமும்.

வாதி தன்னுடைய தகப்பன் இறந்த சீனிவாசய்யங்கார் சில
நகைகளும் ரொக்கத்தொகையும் தன்னுடைய புருஷனிடத்தில்
அடைக்கலமாகவைத்து அபிவிருத்தி செய்யும்படி ஏற்பாடுசெய்த
தாகவும், அத்தொகை ரூபா 1600 ஆய்விட்டதாகவும் அதில்
ரூபா 600 தள்ளிவிட்டதாகவும், அத்தொகை பிரதிவாதியாகிய
தனது புருஷன் மருமகளிடத்திலிருந்து கிடைக்கவேண்டியதென்
றும், வழக்கிட்டாள். இத்தொகை தனது புருஷனாலும் அவர்
மகனாலும் எழுதப்பட்டிருக்கும் கணக்கிலிருப்பதாகச் சொல்லப்
பட்டிருக்கிறது. இந்தக் கணக்கு வாதியின் தகப்பன்பெயராலேற்

பட்டிருக்கிறதே யன்றி வாதி பெயராலேற்படவில்லை. தாவாவிற்
கண்ட தொகை நம்பிக்கையாக டிரஸ்டு முறைமையில் வைக்கப்
படவில்லையென்றும், வாதிக்கு தொகை சேரவேண்டியது உண்
மையானதாக வேற்பட்டாலும் அது காலாவதி தோஷத்தால்
பாதிக்கப்பட்டுப் போய்விட்டதாகவும் பிரதிவாதி கக்ஷியாடினார்.
தாவாவிற்கண்ட தொகை டிரஸ்டு முறைமையில் வைக்கப்பட்ட
தால் வாதியின் தாவாவுக்கு காலாவதி தோஷமில்லையென்று
வாதியின் தாவாப்படியே டிஸ்டிரிக்ட் முனிசிப் தீர்ப்பு செய்து
விட்டார். இது டிஸ்டிரிக்ட் ஜட்ஜியால் ரத்து செய்யப்பட்டதின்
பேரில் இந்தக் கோர்ட்டில் வாதி அப்பீல் செய்திருக்கிறாள். டிஸ்
டிரிக்ட் ஜட்ஜி செய்த தீர்மானத்தில் சரியான விபரமில்லாததால்
தாவா தொகை வாதியின் தகப்பனுக்காவது அல்லது வாதிக்கா
வது அல்லது வாதி வாதியின் தகப்பன் இருவருக்குமாவது டிர
ஸ்டு முறைமையில் வாதியின் புருஷன் சேஷாத்திரி அய்யங்கார்
வசம் ஒப்பிவிக்கப்பட்டிருந்ததா வென்பதைப்பற்றி பயிண்டிங்
ஏற்படுத்தித் தெரிவிக்கும்படி கேஸ் ரிமாண்டு செய்யப்பட்டது.

பயிண்டிங்

வாதியை விவாகஞ்செய்து கொடுக்கப்போகுஞ் சமயத்தில்
வாதியின் தகப்பன் 1877-ம் வருஷத்தில் வாதியின் புருஷன்
சேஷாத்திரி அய்யங்காரிடம் ரூபா 400 நம்பிக்கை யாகக்கொடு
த்து வைத்திருந்தார். வாதியின் தகப்பனிறந்த பிறகு வாதியின்
நன்மையின் பொருட்டே வாதியின் புருஷன் இத்தொகையைஅபி
விருத்தி செய்து வைத்திருந்தார். இந்த சேஷாத்திரி அய்யங்கார்
இறந்த பிறகு இத்தொகை இவர் மகன் சீனிவாசய்யங்கார் வசம்
வந்துவிட்டது. இந்த சீனிவாசய்யங்கார் 1906-ம்வருஷத்தில் இற
ந்துவிட்டார். வாதி சொல்லும் கணக்கில் K. சீனிவாசய்யங்கார்
பெயர் ஏற்பட்டிருக்கிறதே யன்றி வாதியின் பெயரில்லை. வாதி
தனிமையிலாவது அவன் தகப்பனுடன் சேர்ந்தாவது பெனிபிஷ
ரியாக இருந்து வந்தாளென்று தீர்மானிக்க முடியவில்லை. 1880-ம்
வருஷம் வரையில் வாதியின் தகப்பன் பெயரால் கணக்கு ஏற்பட்
டிருக்கிறது. 1884-ம் வருஷத்தில் சேஷாத்திரி அய்யங்கார்
குடும்பப் பொதுக்கணக்கிற் சேர்ந்துவிட்டது. சீனிவாசய்யங்கார்
ஜீவதிசை வரையில் அவருக்காகவும், அவர் ஜீவதிசைக்குப்பின்
வாதிக்காகவும் டிரஸ்டாக தாவா தொகை வைக்கப்பட்டிருந்ததா

கத் தீர்மானிக்கிறேன். இது வெளிப்படையான டிரஸ்டானபடியால்
லிமிடேஷனுக்ட் 10-வது செக்ஷன்படி இந்த தாவாவுக்குக் காலா
வதி தோஷமில்லை. இந்த சேஷாத்திரி அய்யங்காரின் சொத்துக்
களைப் பிரதிவாதியின் புருஷன் வார்சுக்கிரமத்தில் அடைந்துவிட்
டதால் பிரதிவாதி இந்த டிரஸ்டு தொகையை திருப்பிக்கொடுக்க
பாத்திய முடையவன். 1884-ம் வருஷத்திற்குப் பிறகு இந்தத்
தொகை ரூபா 400-க்கும் வட்டி சேர்க்கப்பட்டிருப்பதாகத் தெ
ரியவில்லை. இத்தொகையின் நன்மையை அடையக்கூடியவள்
வாதியாகையால் இந்த வட்டித்தொகை முழுவதும் வாதியின்
குடும்பத்துக்கே செலவழிக்கப்பட்டு வந்திருக்கிறது. அதனால்
முதல் தொகை ரூபாய் 400மட்டில் வாதிக்குக்கிடைக்கக்கூடியது.
இந்த டிரஸ்டுத் தொகைகளை டிரஸ்டி தன் சொந்த சொத்துடன்
சேர்த்துவிட்டார். அந்தத் தொகை இன்னதாயிற்றென்றாவது
அந்தத் தொகையைக்கொண்டு இன்ன சொத்து வாங்கப்பட்ட
தென்றாவது ருஜுப்பிக்க முடியவில்லை. இதனால் பிரதிவாதி வச
முள்ள அவள் புருஷன் சொத்துக்கள் தாவா கடனுக்குக் கட்டுப்
படக்கூடியது.

இந்த பயிண்டிங்கின் பேரில் அடியிற்கண்ட தீர்ப்பு செய்யப்
பட்டது.

சீனிவாசய்யங்காருடைய ஜங்கம சொத்துக்கள் சேஷாத்திரி
அய்யங்காரிடம் அடைக்கலமாக வைக்கப்பட்டிருந்தமையால்
இந்த சேஷாத்திரி சீனிவாசய்யங்காருக்கு டிரஸ்டியென்று அறி
விற் சிறந்த டிஸ்டிரிக்ட் ஜட்ஜி சொல்லுகிறார். ஒருவருடைய ஜங்
கம சொத்து மற்றொருவரிடம் அடைக்கலமாக வைப்பதைக்கொ
ண்டு அவர் டிரஸ்டி யென்று சொல்லக்கூடாது. லிமிடேஷனுக்ட்
10-வது செக்ஷன் தாவா கேசுக்குப் பொருத்தமானதல்ல. ஒரு
ஸொலிஸிட்டரிடத்தில் கக்ஷிக்காரன் அடைக்கலமாக வைத்தால்
அவர் டிரஸ்டியாவாரென்று இ. லா. ரி 31 பம்பாய் 412 தீர்மான
த்திற் சொல்லப்பட்டிருக்கிறது. மாமனார் மருமகனிடத்தில் ஜங்
கம சொத்துக்களை அடைக்கலமாக வைப்பதினால் அவர் டிரஸ்டி
யாகமாட்டார். இது குறிப்பிட்ட ஒரு விஷயத்துக்கு இது டிரஸ்
டாக ஏற்பட்டதென்பதற்கு ருஜுவில்லை. இந்த சீனிவாசய்யங்
கார் தன்னுடைய செலவுக்கு வேண்டிய போதெல்லாம் இதனின்
றும் வேண்டிய தொகையை வாங்கிக்கொண்டு வந்திருக்கிறார்.

இதனால் இந்த சேஷாத்திரி அய்யங்கார் ஓர் சாவுகாரி அல்லது
பாங்குக்காரராக விருந்து வந்திருக்கிறார். (இ. லா. ரி 32 சென்னை
68, 33 சென்னை 154, 34 சென்னை 125, இந்தத் தீர்மானங்களைப்
பார்க்க). லிமிடேஷனக்ட் 10-வது செக்ஷனிற் கண்டபடி இந்த
சாவுகாரி அல்லது பாங்குக்காரர் வெளிப்படையான டிரஸ்டிக
ளாகமாட்டார்கள். அதுபோலவே வாதியின் தகப்பனுக்கு வாதி
யின் புருஷன் டிரஸ்டியாகமாட்டார். அதனால் இந்த இரண்டா
வது அப்பீல் செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது. இந்தத்
தொகையை டிபாஸிட்டாக வைத்த வருக்கு வார்சு முறையில்
தாவா தொகை தனக்குக்கிடைக்க வேண்டுமென்றுவழக்கிட்டிருக்
கும் பட்சத்தில் வாதிக்கு கேஸ் ஜெயமாகலாம் இத்தொகை எந்
தெந்த காலத்தில் கேட்கப்பட்டது, எந்தெந்த காலத்தில் ஒப்புக்
கொள்ளப்பட்டது. என்ற ருஜுவம்சங்களைப் பொருத்ததாக
விருக்கிறது. பிரதிவாதியின் பேரில் வெளிப்படையான டிரஸ்டி
யென்ற பாத்தியதையின்பேரில் வழக்கிட்ட பிறகு அதை வேறு
விதமான வழக்காகமாற்றுவது இப்போது கூடாத விஷயம். A
அடையாள ஆதிரவின் உண்மையை பிரதிவாதி மறுத்ததால் அவ
ளுக்கு இந்தக் கோர்ட்டில் செலவு தொகை கிடைக்கத்தக்கதில்லை.

I L W 577.

சென்னை ஹைகோர்ட்.

1913 வருஷத்திய சில்லரை 2-வது அப்பீல் நம்பர் 5.

தீர்ப்பு 19—12—13.

ஜட்ஜிகள்
ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள்
ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்அவர்கள்

அப்தல்காதர் ருவுத்தர் ஆ அப்பீல்தார்
V
கிருஷ்ணமனமல் நாயர் கார்னவன்
எதிர்மனுதார்

30 [லிமிடேஷனக்ட்]

நிறைவேறு நடவடிக்கையை நிறுத்தி வைக்கவேண்டுமென
டிக்கிரிதாரன் வாய்மொழியாக கோர்ட்டாருக்குத் தெரிவித்துக்கொள்
வது நிறைவேறு நடவடிக்கைக்கு உதவியான காரியமாகுமென்பது.

எதிர்மனுதார் அப்பீல்தார்கள்பேரில் நிறைவேறு நடவடிக்
கைகள் நடத்தியதில் 1908-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 7-ந்தேதி

இந்த மனுவிசாரணையை ஒத்திக்கொடுக்க வேண்டுமென்று வாய்
மொழியாகக் கேட்டார். அதன்பிறகு 1911-ம் வருஷம் ஜூலை
மாதம் 3-ந்தேதி நிறைவேற்று மனு கொடுக்கப்பட்டது. மேற்
கண்டபடி 1908-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 7-ந்தேதி வாய்மொ
ழியாக கெடு ஒத்திக்கேட்டது நிறைவேறு நடவடிக்கைக்கு உத
வியான காரியமென்று (Step inneed of execution) அதனால் நிறை
வேறு நடவடிக்கைக்கு காலாவதி தோஷமில்லை யென்றும், எதிர்
மனுதார் தன்னுடைய டிக்கிரியை நிறைவேற்றினார். கீழ் கோர்ட்
டார்கள் டிக்கிரிதார் சொல்லுங்கக்ஷி நியாயமானதென்று இந்த
நிறைவேறு மனுவை யங்கீகரித்து நடவடிக்கை நடத்தும்படி உத்
தரவு செய்தார்கள். இது சட்ட விரோதமானதென்று டிக்கிரி
கடன்காரர்கள் இந்தக் கோர்ட்டில் இரண்டாவது அப்பீல் செய்
திருக்கிறார்கள்.

அப்பீல்தார் தன் கக்ஷிக்கு ஆதாரமாக இ. லா. ரி. 27
கல்கத்தா 285 தீர்மானத்தை யெடுத்துக் காட்டுகிறார். எதிர்
மனுதாராகிய டிக்கிரிதார் 14 C W N 486 தன் கக்ஷிக்கு ஆதார
மாக எடுத்துச்சொல்லுகிறார். உபயகக்ஷிக்காரர்களும் எடுத்துக்
காட்டும் தீர்மானங்கள் சரியானதல்ல. லிமிடேஷனக்ட் 179-வது
ஆர்டிகிளின்படி நிறைவேறு நடவடிக்கைக்கு உதவியான காரியம்
என்று சொல்லுவதற்கு எழுத்துமூலமாகத்தான் விண்ணப்பம்
இருக்கவேண்டுமென்று சொல்லுவதற்கு எவ்விதஆதாரமுமில்லை.
(இ லா ரி 3 அலகபாத் 139, 15 பம்பாய் 405 இந்தத் தீர்மானங்
களைப்பார்க்க). அப்பீல்தார் எடுத்துச் சொல்லும் தீர்மானம் தாவா
கேசுக்கு ஒற்றுமையானதல்ல: டிக்கிரி கடன்காரன் ஒத்திக்கேட்
பது நிறைவேறு நடவடிக்கைகளை காலதாமதப்படுத்துவதற்கே
யன்றிவேறல்ல. டிக்கிரிதாரன் ஒத்திக்கேட்பது (a) ஏதாவது ஓர்
வித உதவியை விரும்பிக்கேட்கலாம் (b) தாமதப்படுத்துவதற்காக
உத்தரவை விரும்பிக்கேட்கலாம் (c) மேற்கண்ட இரண்டு விதங்
களுமல்லாததாகவுமிருக்கலாம். டிக்கிரி கடன்காரன் ஒத்திக்கேட்
பது நிறைவேறு நடவடிக்கைக்கு காலதாமதஞ் செய்வதற்காக
வன்றிவேறில்லை. இந்தக்கேட்டுக்கொள்ளுதலின்படி கொடுப்பது
தயா விஷயமாகச்செய்யவேண்டிய விஷயம் டிக்கிரிதாரன் ஒத்
திக்கேட்பதெல்லாம் தஸ்தாவேஜிகள் தாக்கல் செய்வதற்காக
வாவது, அவசியமான ருஜுக்கள் விடுவதற்காகவாவது இருக்

கும். அதனுலிவர் கேட்பது நிறைவேறு நடவடிக்கைக்கு உதவி யான காரியம் (இ. லா. ரி 5 சென்னை 141, 21 அலகபூரத் 301 பக்கம் 302, 36 பம்பாய் 638 இந்தத் தீர்மானங்களைப்பார்க்க). கோர்ட்டு டிபாஸிட்டிலிருக்கிற தொகையை வாப்ஸ்வாங்கவாவது ஏல ஜாப்தாக்களின் காபிகள் வாங்கவாவது ஒத்திக்கேட்பது நிறைவேறு நடவடிக்கைகளுக்கு உதவியான காரியமுமல்ல, அல் லது அதை தாமதப்படுத்துவதற்குமல்ல. இந்தக் கேசில் வாதி ஒத்திக்கேட்டது நிறைவேறுநடவடிக்கைக்கு உதவியானகாரியம். இது விஷயத்தைப்பற்றி வாய்மொழியாகக் கேட்பதும் காலாவதி தோஷத்துக்கு பரிகாரமாகும், நிறைவேறு நடவடிக்கைக்கு உத வியான விஷயமாகும். அதனுலிந்த அப்பீல் செலவுடன் தள்ளு படி செய்யப்பட்டது.

1914 M W N 563.

சென்னை ஹைகோர்ட்டு

1912 ஹூத்திய ரெவிஷன் மனு நம்பர் 101.

தீர்ப்பு 26 - 3 - 14.

ஜட்ஜி
மிஸ்டர் ஜஸ்டிஸ் டியாப்ஜி
அவர்கள்

முனியப்பசவுத்திரி (பிரதிவாதி)
மனுதார்
V
சிங்காரவேலு முதலி ஆ வாதிகள்
(எதிர் மனுதார்கள்)

28. [டிரான்ஸ்வர் அவ் பிராபர்டி ஆக்ட்]

குத்தகைத் தொகையைப்பற்றி வாய்மொழியான உடன்படிக் கை ஏற்பட்டிருந்ததாக வழக்கிட்டு அது விஷயம் ருஜூப்பிக்கப் படாவிட்டாலும் அச்சொத்தை யடைந்து அனுபவித்து வந்ததற்காக கிடைக்கக்கூடிய வரும்படிக்கு தீர்ப்பு செய்ய கோர்ட்டாருக்கு அதி கார முண்டென்பது.

வாதியின் நிலத்தை பிரதிவாதியிடம் வாய்மொழியான குத் தகைக்கு விடப்பட்டிருந்ததாயும், அந்தப்படி குத்தகைத்தொகை கிடைக்கவேண்டுமென்றும், வாதி வழக்கிட்டார். இந்த வாய் மொழி உடன்படிக்கை ருஜூப்பிக்கப்படவில்லை. ஆனுல் பிரதிவாதி தாவா சொத்தையடைந்து அனுபவித்ததாக ருஜூவேற்பட்ட தால் அதனுல் வாதிக்குக் கிடைக்கக்கூடிய வரும்படிக்கு டிஸ்டிரி

க்ட் முனிசிப் தீர்ப்பு செய்துவிட்டார். இவ்விதந் தீர்மானஞ்செய் தது சட்டவிரோதமானதென்றும், வாதி பொய்யான விஷயங் களைக்கண்டு பிராது செய்திருப்பதால் இந்த தாவா தள்ளுபடிசெய் யப்பட்டிருக்கவேண்டுமென்றும், இ. லா. ரி. 22 கல்கத்தா 752, 21 வீக்லீரிப்போர்டர் 208 இந்தத் தீர்மானங்களையெடுத்துக்காட் டி பிரதிவாதி வக்கீல் கக்ஷியாடுகிறுர்.

வாதி தன் பிராதிற் சொல்லியபடி எல்லா விஷயங்களையும் ருஜூப்பிக்கத் தவறிவிட்டாலும் தாவா நிலத்தை பிரதிவாதி யனுபவித்துவரும்படி விட்டுவிட்டதாக ருஜூப்பித்திருக்கிறுர். அவ்விதம் பிரதிவாதி யனுபவித்ததால் அதன் வரும்படி கிரமப் படி வாதிக்குக் கிடைக்கக்கூடியது. இவ்வித கேஸ்களில் கோர்ட் டார் தங்கள் யுக்தானுசாரப்படி தீர்ப்பு செய்யலாம் இதனுல் டிஸடிரிக்ட் முனிசிப் செய்த தீர்ப்பு பிசகென்று சொல்லவிட மில்லை. வாதி பொய்யான விஷயங்களையுஞ் சேர்த்து பிராதிற் கேட்டிருப்பது பிசகுதான். இதற்காக செலவுதொகை கொடுக் கும் விஷயத்தில் கோர்ட்டார் தங்கள் உஜிதப்படி செய்யலாம். அதனுல் பாதி செலவுதொகை மட்டில் வாதிக்கு பிரதிவாதி கொடுக்கவேண்டியதென்று தீர்மானிக்கிறேம். மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

24 Indian Cases 611

சென்னை ஹைகோர்ட்டு

1913-ஹூத்திய சீவில் ரெவிஷன் மனு நம்பர் 374

தீர்ப்பு 12 - 5 -14

ஜட்ஜி
மிஸ்டர் ஜஸ்டிஸ் எயிலிங் அவர்கள்

கோகி பத்மரூஜய்பாலு வாதிகள்
(மனுதார்கள்)
V
மத்துரு வெங்கடசுப்பய்யா
பிரதிவாதி

15 [காண்டிராக்ட்டு ஆக்ட்டு.]

வியாபாரிகள் எந்தவூரிலிருந்து சரக்குகள் அனுப்புகிறுர்களோ அந்த ஜூரிஸ்டிக்ஷனுள்ள கோர்ட்டில் வழக்கிடலாமென்பது

வாதி பல்லாரியில் வர்த்தகத் தொழில் நடத்திவந்தார். பிர திவாதி குண்டூரில் வசிப்பவர் வாதி பிரதிவாதிக்காக 25 மூட்டை

கள் கொள்ளு பல்லாரி ரயில்வேஸ்டேஷனிலேற்றினர். 9 மூட்டைகளுக்கு பிரதிவாதி பெயருக்கு ரயில்வே பாஸ் வாங்கி அனுப்பப்பட்டது. பாக்கி 16 மூட்டைகளுக்கு வாதிபெயருக்கு ரயில்வே பாஸ் வாங்கி பிரதிவாதிக்கு இண்டார்சு செய்து அனுப்பப்பட்டது. இந்தச் சரக்குகள் இன்ஷியூர் செய்யப்படவில்லை. இந்தக் கொள்ளுமூட்டைகளின் கிரயத்தொகை கிடைக்கவேண்டுமென வாதி பல்லாரி டிஸ்டிரிக்ட் முனிசீப்கோர்ட்டில் வழக்கிட்டார். இவ்வழக்கிட சி. பு. கோடு 20 (c) செக்ஷன்படி தனக்கு ஜூரிஸ்டிக்ஷனில்லையென்று டிஸ்டிரிக்ட் முனிசீப் சொல்லிவிட்டார். அதன்பேரில் இந்த ரெவிஷன் மனு கொடுபட்டிருக்கிறது

தாவா கேசுக்கு காண்டிராக்ட்டு ஆக்ட்டு 91-வது செக்ஷன் பொருத்தமானது. ரயில்வே கம்பெனியாரிடம் சரக்கு கொண்டுபோக ஒப்பிவிப்பது அச்சரக்கை வாங்குகிறவனிடம் ஒப்பிவிப்பதுபோலவேயாகும். வாங்குகிறவருக்கு அச்சொத்தில் பாத்தியமுண்டாகிவிடுகிறது. இந்தச்சரக்குகள் பிரதிவாதிக்கு வந்து சேராபலிருந்தால்மட்டில் காண்டிராக்ட்டு ஆக்ட்டு 93-வது செக்ஷன் பொருத்தமானது. பிரதிவாதியின் எழுத்துமூலமான ஸ்டேட்மெண்டால் இந்தச் சரக்குகளை பிரதிவாதி பெற்றுக்கொண்டுவிட்டதாகவே ஏற்படுகிறது. இதனால் டிஸ்டிரிக்ட் முனிசீப்பின் தீர்ப்பை ரத்து செய்கிறோம். அவர் இந்தக் கேசை மறுபடியும் பயிலில் வைத்துக்கொண்டு சட்டப்படி முடிவு செய்யும்படி உத்திரவு செய்கிறோம்.

24 Indian Cases 423.

சென்னை ஹைகோர்ட்டு.

1912 வருஷத்திய 2 வது அப்பீல் நம்பர் 1618.

தீர்ப்பு 19—2—14

ஜட்ஜிகள்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரநாயரவர்கள்
மிஸ்டர் ஜஸ்டிஸ் எயிலிங் அவர்கள்

சுப்பன் ஆசாரிஷு பிரதிவாதிகள் அப்பீல்தாரர்கள்
V
வன்னியகோனார்ஷு வாதிகள்.

5 [ஈஸ்மெண்டு ஆக்ட்டு.]

ஒரு வகுப்பு ஜாதியார் ஓர் வழியை நீண்டகாலமாக யுபயோகப்படுத்தி வந்தால் அந்த பாத்தியம் சீவில் கோர்ட்டாரால் அங்கீகரிக்கப்படலாமென்பதும், அந்த ஜாதியாரில் சிலர் அவ்வகுப்பினருக்கு பிரதிநிதியாக வழக்கிடலாமென்பதும்.

திருநெல்வேலி நகரத்தில் காமாக்ஷியம்மன்கோவில் ஒன்றிருக்கிறது. அதன் வடபுரத்திலுள்ள ஓர் பாதையை வாதிகளாகிய கோனார்ஜாதியார் வெகுநீண்டகாலமாக வுபயோகித்து வருவதாகவும் அதில் அவர்களுக்கு வழக்கமான பாத்தியமேற்பட்டுவிட்டதாகவும், வாதிகள் வழக்கிட்டார்கள். வாதிகளின் தாவாப்படியே கீழ்கோர்ட்டார்கள் தீர்மானித்துவிட்டதால் பிரதிவாதிகள் இந்தக்கோர்ட்டில் அப்பீல் செய்திருக்கிறார்கள்.

ஒரு ஜாதியார் ஓர் வழக்கமான பாத்தியதையை அனுஷ்டிக்கக்கூடாதென்றும், இவ்வித பாத்தியதைகள் ஒரு கிராமத்தார் அல்லது ஜில்லாவாசிகளுக்கு உரித்தான பாத்தியங்களாகவிருக்கவேண்டுமென்றும், பிரதிவாதிகள் கக்ஷி சொல்லுகிறார்கள். இந்த கக்ஷி இங்கிலீஷ் சட்டம். இந்தக் கேசைப்போல் இன்னகாலத்திலேற்பட்டதென்பது தெரிந்துகொள்ளமுடியாமல் வெகு நீண்டகாலமாக ஓர்வித வழக்கமேற்பட்டிருந்தால் அது இத்தேச வழக்கப்படி ஒரு அனுபோக வழக்கம். இது ஒரு சங்கத்தினருக்கேற்பட்ட சீவில் பாத்தியம் போன்றது. விவாத சொத்து இந்த வகுப்பு ஜாதியாரால் இவ்வகுப்பாருக்காக வாங்கப்பட்டதாக தெரிகிறது. இந்த பாத்தியதையை யிவர்கள் அனுபவிப்பது அங்கீகரிக்கப்பட்டுமிருக்கிறது. ஒரு வகுப்பு ஜாதியார் வேறு வகுப்பு ஜாதியார்பேரில் வழக்கிட்டுவருகிறார்கள். இவ்வழக்குகளில் சிலர்மட்டில் அவ்வகுப்பினருக்கு பிரதிநிதிகளாக சி. பு. கோடு 30-வது செக்ஷன்படி வழக்கிடுகிறார்கள். நீண்டகால வழக்கத்தை யனுசரித்து இவர்களுக்கேன் உரித்தான பாத்தியமுண்டாகமாட்டாதென்பதற்கு காரணந் தெரியவில்லை. இந்த வழக்கத்துக்கும் ஒரு அவிபக்த குடும்பத்தார் அல்லது ஓர் சங்கத்தினர் இவர்களுக்குள்ள வழக்கங்களுக்கும் எவ்வித வித்தியாசமுமில்லை. வாதிகள் கொண்டாடும் பாத்தியம் பொதுவான பாத்தியம்; இது வாதி வகுப்பினர்களுக்கு மட்டில் ஏகதேச பாத்தியமில்லையென்பது மற்றொரு விவாதம். மேலே சொன்னபடி இது ஒரு சங்கத்தினர்போல் வாதி வகுப்பினருக்கு மட்டில் பாத்தியமுள்ளது. இதனாலிந்த அப்பீல் செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

24 Indian Cases 467.

பிரிவிகவுன்ஸில்.

கல்கத்தா ஹைகோர்ட்டார் தீர்ப்பின்பேரில் அப்பீல்

தீர்ப்பு 11—5—14

ஜட்ஜிகள்
லார்ட் டனிடின் அவர்கள்
லார்ட் மௌல்டன் அவர்கள்
ஸர் ஜான் எட்ஜ் அவர்கள்
மிஸ்டர் அமீர் ஆலி அவர்கள்

பீடர் சார்லஸ்பால்லூ அப்பீல்தார்
V
வில்லியம் ருப்ஸன்லூ
எதிர்கக்ஷிக்காரர்கள்

6 [ஈஸ்மெண்டு ஆக்ட்டு]

உபயகக்ஷிக்காரர்களுக்குள்ளும் சட்ட சம்பந்தமாயுள்ள பாத்தியங்களை தீர்மானிப்பது லாபாயிண்டேன்பதும், ஒருவர் வீட்டுக்கு வழக்கமாக வந்துகொண்டிருந்த வெளிச்சத்தை மறைப்பது கெடுதியைச் செய்யாவிட்டால் அதுவிஷயமாக வழக்கிடக்கூடாதென்பதும்.

அப்பீல்தாரர்களுக்கு கல்கத்தாநகரத்தில் ஒரு பெரிய கட்டடமிருக்கிறது. அதற்கு கிழ்புரத்தில் 17 அடிக்கு அப்பால் பிரதிவாதிகள் ஒரு கட்டடங் கட்டினார்கள். அது வாதிகளின் கட்டடத்துக்கு சமமான வுயரமாயிருந்ததால் அப்பீல்தார்களின் கட்டடத்தின் கிழ்பாகம் ஜன்னல்கள் வழியாக 20 வருடங்களுக்கு மேற்பட்டகாலமாக வந்துகொண்டிருந்த வெளிச்சம் தடைப்பட்டுவிட்டதாகவும், அதனால் இவர்களின் கட்டடத்துக்கு எப்போதும்போல் வெளிச்சம் வந்துகொண்டிருக்கத்தக்கதாக பிரதிவாதிகளின் கட்டடம் இடித்துவிடப்படவேண்டுமென்றும், வழக்கிட்டார்கள். பிரதிவாதிகளின் கட்டடம் முன்னால் தாழ்மையாகவிருந்தது. இப்போது அதையுயர்த்தி கட்டிவிட்டார்கள். முதல் கோர்ட்டாரும் அப்பீல் கோர்ட்டாரும் வாதியின் வழக்கைத் தள்ளுபடி செய்துவிட்டதின்பேரில் இந்த அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது.

பிரதிவாதிகளால் கட்டப்பட்டிருக்கும் புதிய கட்டடத்தால் அப்பீல்தார்கள் சவுகரியமாகவும் சுகமாகவும் தங்கள் கட்டடத்தில் குடியிருக்கவாவது தொழில் செய்யவாவது கூடாததாகவிருப்பதாகவும், அதனால் தங்களுக்கு மிகக்கெடுதியுண்டாயிருக்கிறதாகவும் கிழ்கோர்ட்டார்கள் தங்கள் பாத்தியங்களை சரியாக கவனித்துத் தீர்ப்பு செய்யவில்லையென்றும், அப்பீல்தார்களின்

வக்கீல் கக்ஷியாடுகிறார்கள். அப்பீல்தார்கள் 20 வருடங்களுக்கு மேற்பட்டகாலமாக ஒருவித நிரந்தரமான வெளிச்சத்தை யனுபவித்து வந்ததால் அது விஷயமாக தங்களுக்கு ஓர்வித வுரித்தான் பாத்தியமுண்டாய்விட்டதாக அப்பீல்தார்கள் சொல்லுகிறார்கள். இவ்வித கேஸ்கள் விஷயமாக (1904) App Case 179 1907 App Case 1 என்ற இரண்டு தீர்மானங்களேற்பட்டிருக்கின்றன. இவைகள் ஒன்றுக்கொன்று ஒற்றுமையில்லை. இவைகளிற் கண்ட விஷயங்களை சரியாக கவனிக்கும்போது 20 வருஷகாலத்துக்கு ஒருவருக்கு நிரந்தரமான வெளிச்சம் வந்துகொண்டிருந்த காரணத்தைக் கொண்டுமட்டில் அந்த வெளிச்சம் தடைசெய்யப்பட்ட விஷயமாக வழக்கிடக்கூடாதென்றும், அந்த வெளிச்சந் தடைப்படுவதினால் குடியிருப்பு வீடு அல்லது அறையை சவுகரியமாக அனுபவிக்க அல்லது வுபயோகிக்க முடியாததாகவிருந்தால் மட்டில் வியாஜ்ஜியமூல மேற்படவேண்டியதென்று விளங்குகிறது. இப்போதேற்பட்டிருக்கும் ருஜுக்களைக்கொண்டு கீழ் கோர்ட்டார்கள் செய்த தீர்மானங்கள் சரியானதென்றே தீர்மானிக்கிறோம். அதனாலிந்த அப்பீலை தள்ளுபடி செய்யும்படி மாக்ஷிமைதங்கிய சக்ரவர்த்திபவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

I. L. W. 561.

சென்னை ஹைகோர்ட்டு.

1911 வருஷத்திய 2-வது அப்பீல் நம்பர் 874.

தீர்ப்பு 16 - 7 - 14.

ஜட்ஜிகள்
ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள்
ஜஸ்டிஸ் டியாப்ஜி அவர்கள்

பங்காருஸாமி அய்யங்கார்
அப்பீல்தார் (1 பிரதிவாதி)
V
அரு. அரு. சோம சோமசுந்தரஞ் செட்டியாரின் பவர்பெற்ற ஏஜண்டு மாயாண்டி செட்டியார்

6 [நெகோஷியபிள் இன்ஸ்ட்ருமெண்டு ஆக்ட்டு.]

மூவர் எழுதிக்கொடுத்ததாக பிராமசரிநோட்டு எழுதி அதில் இருவர் மட்டில் கையெழுத்து செய்தாலும் அந்த இருவர்பேரிலும் வழக்கிடலாமென்பது.

திருநேல்வேலி டி. மு. கோர்ட்டின் தீர்ப்பின்பேரில் மேற்படியூர் சப்கோர்ட்டில் அப்பீலாகி அதன்பேரில் 2-வது அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது.

முதல் பிரதிவாதியாலும் மற்றவர்களாலும் எழுதிக்கொடுக்கப்பட்டிருந்த மூன்று பத்திரங்களின்படி கிடைக்கவேண்டிய தொகையின் பாக்கிக்காக பிரதிவாதிகளாலும், மற்றொரு தேசிகாசாரியாராலும், தாவா நோட்டு எழுதிக்கொடுக்கப்பட்டதாக எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் பிரதிவாதிகள் மட்டில் அதில் கையெழுத்து செய்தார்கள். இந்த நோட்டின்படி தொகை கிடைக்கவேண்டுமென வாதி இந்த பிரதிவாதிகள்பேரில் மட்டில் வழக்கிட்டார். இந்த நோட்டில் மற்றொரு தேசிகாசாரியாருங் கையெழுத்து செய்தபிறகுதான் இது செல்லுபடிக்கு வரவேண்டுமென்ற நிபந்தனையின்பேரில் வாதியிடம் இந்தநோட்டு கொடுபட்டதென்றும் அதனால் வாதியின் வழக்குத் தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றும் பிரதிவாதிகள் கக்ஷியாடினார்கள். டிஸ்டிரிக்ட் முனிசீப் வாதியின் வழக்கைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். இது விஷயமாக அப்பீல் செய்யப்பட்டதில் தேசிகாசாரியார் சேர்ந்து எழுதிக்கொடுக்காவிட்டாலும் முதல் பிரதிவாதி தாவா நோட்டின் தொகையைக் கொடுப்பதாக சம்மதித்திருப்பதாக அப்பீலை யங்கீகரித்து வாதியின் தாவாப்படியே தீர்ப்பு செய்துவிட்டார்கள். அதன்பேரில் முதல் பிரதிவாதியாலிந்த அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது.

A. B. C. மூவர்களாலும் எழுதிக்கொடுக்கப்பட்டதாக வாசகங்கள் கண்டு எழுதிக்கொடுக்கப்பட்டிருக்கும் ஒரு பிராமசரி நோட்டில் A B இருவர்மட்டில் கையெழுத்து போட்டிருந்தால் C-யும் அதில் கையெழுத்து செய்யாதவரையில் A B தாங்கள் அந்த நோட்டின் தொகைக்கு கட்டுப்படமாட்டோமென்று சொல்வது ஏற்படும் ருஜுவைப் பொருத்ததாக விருக்கிறது (இ. லா. ரி. 25 சென்னை 389, 31 சென்னை 1:4 இந்தத் தீர்மானங்களைப் பார்க்க.) இந்தக் கேசில் ஏற்பட்ட சந்தர்ப்பங்களையும் ஆஸ்பிதங்களையும் கீழ் அப்பீல் கோர்ட்டார் நன்றாக கவனித்து அப்பீல்தார் தாவா கடனைக் கொடுக்க சம்மதித்ததாக தீர்ப்பு செய்திருக்கிறார்கள். தாவா நோட்டின் தொகையைப்பற்றி வாதியின் முதல்சாக்ஷி முதற் பிரதிவாதியைக் கேட்டதாகவும் அவர் சீக்கிரம் அத்தொகையைக் கொடுத்துவிடுவதாகச் சொன்னதாகவும் ருஜுக் சொல்லுகிறார். இதனால் தேசிகாசாரியார் கையெழுத்து செய்யாமையால் தொகை கொடுக்கிறதில்லையென்ற ஏற்பாடில்லை. இதனாலிந்த 2-வது அப்பீல் செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது.

I. L. W. 584

சென்னை ஹைகோர்ட்டு

1912 ௵த்திய 2வது அப்பீல் நம்பர் 2093.

தீர்ப்பு 10 - 8 - 14.

ஜட்ஜிகள். ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர் அவர்கள்	பாலசிந்தாந்தம் ஆ. (2 முதல் 4 பிரதிவாதிகள்) அப்பீல்தாரகள். V
ஜஸ்டிஸ் குமாரசாமி சாஸ்திரிகள் அவர்கள்	பெருமாள்செட்டி ஆ. எதிர்கக்ஷிக்காரர் (வாதிகள் ஆ.)

2. [கோர்ட்பீஸ் ஆக்ட்].

குடியானவன் விலக்கப்படவேண்டுமென்று கோண்டுவரப்படும் வழக்கில் குடியானவன் அச்சொத்து தனக்குச் சொந்தமென்றும் தான் கெடு வுடன்படிக்கையின் பேரில் சாசனஞ் செய்திருப்பதாகவும் போக்கியத் தொகை கோர்ட்டில் கட்டிவிட்டதால் அச்சொத்து கிடைக்கத்தக்கதில்லையென்றுங் கக்ஷி சொல்லக் கூடாதென்பது.

பிரதிவாதியிடம் எழுதிவாங்கிய குத்தகைச் சீட்டின்படி கெடு சரியாகப் போய்விட்டதாகவும், அதனால் அந்தக் குத்தகை நிலம் கிடைக்கவேண்டுமென்றும், ஒருவருஷ குத்தகைத்தொகையின் பேரில் மதிப்பிட்டு கோர்ட்டுபீஸ் செலுத்தி வாதி வழக்கிட்டார். பிரதிவாதிகள் தங்கள் நிலத்தை வாதிக்கு கண்டிஷனல் கிரயமென்னும் பெந்தகமாக வைத்திருந்ததாகவும், பெந்தகத் தொகையை கோர்ட்டில் கட்டிவிட்டதாகவும், வாதிகள் அந்தத் தொகையைப் பெற்றுக்கொள்ளாதிருக்கிறார்களென்றும், அதனால் வாதிகளுக்கு அத்தொகை கட்டிய தேதி முதற்கொண்டு குத்தகைத் தொகையாவது, நிலமாவது கிடைக்கத்தக்கதில்லையென்றும், பிரதிவாதிகள் எதிர் கக்ஷியாடினார்கள். இந்தக் கேசில்

தாகல் செய்யப்பட்டிருக்கும் வாதிகளுக்கு ஏற்பட்ட கிரய சாசனம், சாசனத் தேதியிலேயே வாதிகளால் எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கிற உடன்படிக்கை, பிரதிவாதிகளால் எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கிற குத்தகைச் சீட்டு இவைகளினால் மறு சாசனஞ் செய்துகொடுக்கிறதென்ற நிபந்தனையின் பேரில் ஏற்பட்ட எக்கிரிமெண்டென்று, கீழ்க்கோர்ட்டார்கள் வாதிகளின் தாவாப்படியே தீர்ப்பு செய்துவிட்டார்கள். இதன் பேரில் இந்த இரண்டாவது அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது.

கோர்ட்டுபீஸ் ஆக்ட்டு 7 வது செக்ஷன் 11 வது கிளாஸ்படி ஒருவருஷ குத்தகைத் தொகையின் பேரில் கோர்ட்டுபீஸ் செலுத்தி இந்த வழக்குக் கொண்டுவரப்பட் டிருக்கிறது. அதனால் வாதியின் சுதந்திர பாத்தியதையைப்பற்றி நாம் கவனிக்கவேண்டியதில்லை. அதனால் A B I இந்த தஸ்தாவேஜிகள் கண்டிஷனல் கிரயமென்னும் பெந்தக தஸ்தாவேஜி யாகுமென்றாவது, மறு சாசனஞ் செய்யப்படவேண்டுமென்ற எக்கிரிமெண்டு என்றாவது நாங்கள் யாதொரு அபிப்பிராயமுஞ் சொல்லத் தயாராகவில்லை. கோர்ட்டில் பெந்தகத் தொகையை டிபாஸிட்டு செய்வதைக் கொண்டு பெந்தக பாத்தியம் ரத்தாகிவிடமாட்டாதென்று இ. லா. ரி 34 கல்கத்தா 223, 31 பம்பாய் 527, தீர்மானங்களேற்பட்டிருக்கின்றன. வாதிகள் பெந்தகம் பெற்றவர்களாக விருந்தபோதிலும் தாவா நிலமும் குத்தகைத் தொகையுங் கிடைக்கவேண்டுமென வழக்கிடலாம். இந்த ஆதாரத்தின் பேரில்மட்டில் கீழ்க்கோர்ட்டார்களின் டிக்கிரியை உறுதி செய்கிறோம். இந்த அப்பீல் தள்ளுபடி செய்யப்பட்டது.

1 Law weekly 641.

சென்னை ஹைகோர்ட்.

1912 ௵த்திய 2 வது அப்பீல் நம்பர் 504.

தீர்ப்பு 21—4—14.

ஜட்ஜிகள்
மிஸ்டர் ஜஸ்டிஸ் எயிலிங் அவர்கள்
மிஸ்டர் ஜஸ்டிஸ் டியாப்ஜி அவர்கள்

கோபாலகிருஷ்ணய்யர் ஆ
பிரதிவாதிகள் அப்பீல்தார்
V
ஸ்ரீசகிர்த திந்தாதீதஸ்வாமிகள் ஆ
வாதிகள் எதிர்கக்ஷிக்காரர்

4. (ரிஜிஸ்டிரேஷனாக்ட்)

ரிஜிஸ்டர் செய்யப்படாத குத்தகைச் சீட்டு சட்டப்படி செல்லுபடியற்றதாகவிருந்தாலும் குடியானவனை அச்சொத்தினின்றும் விலக்கலாமென்பதும். அந்நிலத்தில் சாஸ்வதப்பகுதி கிடைக்குமென்ற நம்பிக்கையின்பேரில் கட்டடங் கட்டிவிட்டால் அந்த நஷ்டபரிகாரங் கொடுபடவேண்டுமென்பதும்.

திருநெல்வேலி டிஸ்டிரிக்ட் முனிசீப் கோர்ட்டு தீர்ப்பின் பேரில் மேற்படியூர் டிஸ்டிரிக்ட் கோர்ட்டில் அப்பீல் விசாரணை நடந்து அதன்பேரில் இந்தக் கோர்ட்டில் 2-வது அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது.

பிரதிவாதிகள் ஒரு மனைக்கு வாதிக்கு பகுதிச்சீட்டு எழுதிக் கொடுத்திருப்பதாகவும், அவர்கள் அச்சொத்தினின்றும் விலக்கப்படவேண்டுமென்றும், வாதிகள் வழக்கிட்டார்கள். இந்தக் கேஸ் விஷயமாக டிஸ்டிரிக்ட் ஜட்ஜி செய்த தீர்மானம் சரியானதாக இல்லாமையால் அடியிற்கண்ட 3 இஷ்ஷியுக்களை ஏற்படுத்தி அவ்விஷயங்களை விசாரித்து பயிண்டிங் அனுப்பும்படி கேஸ் ரிமாண்டு செய்யப்பட்டது. அந்த இஷ்ஷியுக்களாவன.

(1) முதல்வாதியின் தகப்பனும் பிரதிவாதியின் தகப்பனும் தாவா நிலத்தை பகுதிக்கு கொடுக்க வாய்மொழியாக உடன்படிக்கை செய்துகொண்டார்களா, அவ்விதஞ் செய்துகொண்டிருந்தால் அதன் ஷரத்துக்கள் என்ன?

(2) ஈஸ்மெண்டு ஆக்ட்டு 52-வது செக்ஷன் கருத்தின்படி தாவா மனையில் வீடு கட்டிக்கொள்ளும்படி வாதியின் தகப்பன் பிரதிவாதியின் தகப்பனுக்கு லைசென்ஸ் கொடுத்தாரா?

(3) இந்த வாய்மொழி உடன்படிக்கையாவது லைசென்ஸாவது ருஜுப்பிக்கப்படுகிற பட்சத்தில் பிரதிவாதிகளை அப்புறப்படுத்த வாதிகள் தடைப்பட்டிருக்கிறார்களா?

இந்த இஷ்ஷியுக்களைப்பற்றி டிஸ்டிரிக்ட் ஜட்ஜியவர்கள் விசாரித்து அடியிற்கண்ட பயிண்டிங் அனுப்பினார்கள்.

முதலாவது இஷ்ஷியு:—பிரதிவாதியின் தகப்பனிடத்தில் வாதியின் முன்னோர் ரூ 60 பெற்றுக்கொண்டு ௵ 1-க்கு ரூ 6 வீதம் சாஸ்வத பகுதிக்கு கொடுக்க சம்மதித்ததாக 2 அடையாள ஆதிரவினால் தெரிகிறது. பிரதிவாதியின் தகப்பன் தாவா மனையில் கட்டடங் கட்டவேண்டியதற்காகவே பகுதியேற்பாடு செய்துகொண்டதாகத் தெரிகிறது.

இரண்டாவது இஷ்ஷியு:—உபய கக்ஷிக் காரர்களுக்குள்ளும் செய்துகொண்ட ஏற்பாடு லைசென்ஸ் என்பதாக எனக்குத் தெரியவில்லை. லைசென்ஸ் என்பது குறித்த ஒரு விஷயத்தைப்பற்றி ஏற்பட்டது. பகுதியென்பது சொத்தில் ஒருவித உரித்தான பாத்தியமுண்டுபண்ணுகிறது.

மூன்றாவது இஷ்ஷியு:—பிரதிவாதியாற் சொல்லப்படுங் காலத்துக்கு குத்தகை அல்லது பகுதி ஏற்பாடு நடந்திருந்தால் அது டிரான்ஸ்பர் அவ்பிராபர்டி ஆக்ட்டு 107 வது செக்ஷன்படி கட்டாயம் ரிஜிஸ்டர் செய்யப்படவேண்டும். அந்தப்படி ரிஜிஸ்டர் செய்யப்படாததினால் பிரதிவாதி சொல்லும் சாஸ்வதப் பகுதி செல்லத்தக்கதல்ல, அதனால் பிரதிவாதியை தாவா சொத்தினின்றும் அப்புறப்படுத்தலாம். இவ்விதம் விலக்க வாதிக்கு தடையுண்டாகவில்லை. சாஸ்வதப் பகுதிக்கு கொடுப்பார்களென்று பிரதிவாதி தகப்பன் நம்பி தாவா மனையில் கட்டடங் கட்டிவிட்டதால் பிரதிவாதிக்கு காம்பன்சேஷன் கொடுபடவேண்டியது நியாயமானது. எனக்கு முன்னிருந்தவர் ரூ 250 காம்பன்சேஷன் கொடுக்கலாமென்று அபிப்பிராயஞ் சொல்லியிருக்கிறார். அத்தொகையே சரியானதென்று நான் அபிப்பிராயப்படுகிறேன்.

தீர்ப்பு.

காம்பன்சேஷன் நீங்கலாக மற்ற பயிண்டிங்குகள் நியாயமானதென்று நாங்கள் ஒத்துக்கொள்ளுகிறோம். இந்த காம்பன்சேஷன் விஷயமாக கீழ்கோர்ட்டுக்கு மறுபடியும் கேசை ரிமாண்டு செய்வது உசிதமல்லவென்று நினைக்கிறோம். இந்தக் கேசில் ஏற்பட்டிருக்கும் சாக்ஷியங்களைக்கொண்டு ரூ 350 பிரதிவாதிகளுக்கு காம்பன்சேஷன் கொடுபடவேண்டியதெனத் தீர்மானிக்கிறோம். இந்தத் தொகை பிரதிவாதிகளுக்குச் சேரும்பொருட்டு வாதிகள் இந்த ரூ 350 யும் கோர்ட்டில் கட்டிவிட்டு தாவா சொத்தை வசப்படுத்திக் கொள்ளும்படி தீர்மானிக்கிறோம்.

உபயகக்ஷிக்காரர்களும் அவரவர்கள் செலவுகளை அவரவர்களே பொறுத்துக்கொள்ள வேண்டியது.

24 Indian Cases 790.

அலகபாத் ஹைகோர்ட்டு.

1913 வருஷத்திய 2-வது அப்பீல் நம்பர் 845.

தீர்ப்பு 19—5—14.

ஜட்ஜிகள் சீப் ஜஸ்டிஸ் ஸர் ஹென்ரி ரிச்சேர்ட்ஸ் அவர்கள் மிஸ்டர் ஜஸ்டிஸ் டட்பால் அவர்கள்	பன்ஸ்ராஜ்சிங்கு வ. வாதிகள் அப்பீல்தாரகள் V ராஜ்பன்ஸ் பாரதி பிரதிவாதி

5. [ரிஜிஸ்டிரேஷனாக்ட்].

பெந்தக பத்திரத்திற்கண்ட ஸ்தாபர சொத்துக்கள் யாதொன்றுமில்லாத ஜுரிஸ்டிக்ஷனுள்ள சப் ரிஜிஸ்டராபீசில் ஒரு பத்திரம் ரிஜிஸ்டரானால் அது செல்லத்தக்க தல்லவென்பது.

பிரதிவாதியால் எழுதிக் கொடுக்கப்பட்ட ஒரு ரிஜிஸ்டரான பெந்தக பத்திரத்தின் பேரில் வழக்கிட்டதில் இந்த பெந்தக பத்திரத்திற்கண்ட ஸ்தாபர சொத்துக்கள் ஒன்றேனும் இதை ரிஜிஸ்டர் செய்த சப் ரிஜிஸ்டராரின் எல்லைசரகத்தில் இல்லாமையால் இந்த பத்திரம் சட்டப்படி ரிஜிஸ்டரான தல்லவென்றும், அதனால் அதன்பேரில் கொண்டுவந்த வழக்கு செல்லத்தகுந்த தல்லவென்றும், கீழ்கோர்ட்டார்கள் வாதியின் வழக்கைத் தள்ளுபடிசெய்துவிட்டார்கள். அதன்பேரில் இந்த இரண்டாவது அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது.

தாவாவிற்கண்ட தஸ்தாவேஜி கிரமப்படி ரிஜிஸ்டர் செய்யப்படவில்லையா, அதை ருஜுவாக அங்கீகரிக்கக் கூடாதா என்ற விஷயங்கள்தான் நாம் இப்போது கவனிக்கவேண்டியதாகவிருக்கிறது. மோசங்கள் நடக்க ஹேதுவாயிருக்குமென்பதை யுத்தேசித்து ஒவ்வொரு ஜுரிஸ்டிக்ஷனிலுமுள்ள சொத்துக்கள் அந்தந்த ஜுரிஸ்டிக்ஷனிலுள்ள சப் ரிஜிஸ்டராபீசில் ரிஜிஸ்டர் செய்யப்படவேண்டுமென்று ரிஜிஸ்டிரேஷனாக்ட்டு 28 வது செக்ஷனிற் சொல்லப்பட்டிருக்கிறது. தாவா தஸ்தாவேஜியை ரிஜிஸ்டர் செய்ய சப் ரிஜிஸ்டராருக்கு அதிகாரமில்லை. (16 இந்தியன் கேஸஸ் 108 தீர்மானத்தை பார்க்க). பிரதிவாதி தானே மோசவகையாக ரிஜிஸ்டர் செய்துவிட்டு இவரே ஆக்ஷேபிப்பது நியாயமானதல்லவென்று வாதி கக்ஷி சொல்லுகிறார். பிரகிருத கேசில் பெந்தகம் வைத்தவர் பெந்தகம் வாங்கியவர் இருவரும் மோசவகையாக ரிஜிஸ்டிரேஷனாக்ட்டுக்கு விரோதமாக நடந்திருக்கிறார்கள்: பெந்தகம் வாங்கியவர் பேரிற்றான் குற்றமாகிறது. இதனால் இந்த அப்பீல் செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

24 Indian Cases 451.

சென்னை ஹைகோர்ட்.

1912 ௵ 2-வது அப்பீல் நம்பர் 2487.

தீர்ப்பு 31-7-14.

ஜட்ஜிகள்
ஜஸ்டிஸ் சதாசிவய்ய ரவர்கள்
ஜஸ்டிஸ் நேபியர் அவர்கள்

சாமு என்கிற அனந்தநாராயண பத்தர் 2 ம் பிரதிவாதி (அப்பீல்தார்)
V
சாமிநாதஅய்யர் ஆ. எதிர் கக்ஷிக்காரர்கள்)

1. [இந்தியன் பிரமாண சட்டம்].

பிரமாணத்தின் பேரில் தகப்பனுக்கு விரோதமாக செய்யப்பட்ட டிக்கிரிக்கு பிள்ளைகள் கட்டுப்பட்டவர்களென்பதும், அதுபின்னிட்டு பிள்ளைகள் கொண்டுவரும் வழக்குக்கு ரேஸ்ஜூடிகேடா தோஷமாகு மென்பதும்.

பிரதிவாதிகளிடமிருந்து சில் ஸ்தாபர சொத்துக்கள் கிடைக்கவேண்டு மென்று வாதிகள் இந்த வழக்கிட்டிருக்கிறார்கள். இந்த வழக்குக்கு முந்தி வாதிகளின் தகப்பன் முதற் பிரதிவாதி பேரிலும் அவர் பிள்ளைகள் பேரிலும் இதே சொத்துக்களைப்பற்றி வழக்கிட்டார். அந்த வழக்கில் இந்த வாதிகள் கக்ஷிக்காரர்களாகச் சேர்க்கப்படவில்லை. இந்தியன் பிரமாண சட்டம் 11 வது செக்ஷன்படி பிரமாணத்தின் பேரில் வாதிகளின் தகப்பனுக்கு விரோதமாக, முன்வழக்குத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. வாதிகளின் இந்த தாவாவுக்கு மேற்சொன்ன வழக்கின் தீர்மானத்தினால் ரெஸ்ஜூடிகேடா தோஷமுண்டாய்விட்டதாக பிரதிவாதிகள் கக்ஷியாடினார்கள். முன்வழக்கு இந்த தாவாவுக்கு எவ்வித பாதகமுமாகமாட்டா தென்றும், இது சரியான பிராதல்லவென்றும் பாகப்பிரிவினையாகி சொத்து வசமாகவேண்டுமென வழக்கிட்டிருக்கவேண்டிய தென்றும் வாதிகளின் தாவாவைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். அதனால் 2 வது வாதியால் இந்த அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது.

தகப்பனும் அவிபக்த குமாரர்களுமுள்ள ஒரு குடும்பத்தில் குடும்ப நன்மையின் பொருட்டு தகப்பனால் கொண்டுவரப்படும் வழக்கில் தகப்பன் குடும்பஸ்தர்களுக்கு பிரதிநிதியாக விருந்து நடவடிக்கைகள் நடத்துகிறார். அவர் பிள்ளைகளுக்கு விரோதமாக மோசடியாக டிக்கிரி பெற்றதாக ருஜு ஏற்படாத வரையில் தகப்பன்பேரி லேற்பட்ட டிக்கிரிக்கு பிள்ளைகள் கட்டுபட்டவர்க

ளாகிறார்கள். பிரமாணத்தின்பேரில் தகப்பன்பேரி லேற்பட்ட டிக்கிரி மோசடியாகமாட்டாது. (இ. லா. ரி 36 சென்னை 287 தீர்மானத்தைப் பார்க்க). ஒரு தகப்பன் தன் குடும்பஸ்தர்களுக்குப் பிரதிநிதியாக விருந்து வழக்கிடுவதாக வெளிப்படையாகத் தெரிவிக்காத வரையில் அவர் தன் சொந்தமுறைமையில் வழக்கிடுவதாக எண்ணப்படவேண்டு மென்று இ. லா ரி 6 சென்னை 248 தீர்மானத்தை யெடுத்துக்காட்டி அப்பீல் வாதி கக்ஷியாடுகிறார். இத்தீர்மானம் இப்பாலேற்பட்ட 22 சென்னை லா ஜர்னல் 45 தீர்மானத்தினால் ரத்து செய்யப்பட்டிருக்கிறது. இதனாலிந்த இரண்டாவது அப்பீல செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

1 Law Weekly 643.

சென்னை ஹைகோர்ட்டு.

1914 ௵ கிரிமினல் அப்பீல் நம்பர் 12.

தீர்ப்பு 20 - 4 - 14.

ஜட்ஜிகள்
மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்ய ரவர்கள்
மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலீஸ் அவர்கள்
மிஸ்டர் ஜஸ்டிஸ் எயிலிங் அவர்கள்

பொந்தாலா நரிசிரெட்டி ஆ. கைதிகள் அப்பீல்தார்கள்.

21. [இந்தியன் பெனல் கோடு].

ஒருவனுடைய அனுபோக நிலத்தில் பிறர் பிரவேசித்து இருவர்களுக்குள்ளும் சண்டையுண்டானால் நிலத்தை யனுபவித்து வருபவன் தனது தற்காப்புக்காக எவ்வளவு வரையில் எதிரிகளுக்கு துன்பமுதலியன வுண்டுபண்ணலா மென்பது.

விவாத நிலம் நியாகய்யா என்ற மைனரொருவருக்குச் சொந்தம். அதை யந்த மைனரின் தாயார் 1 எதிரிக்கு 1908 ௵த்தில் கிரய சாசனஞ் செய்து கொடுத்துவிட்டார். இந்த நிலவிஷயமாக இந்த கிரிமினல் கேசுக்கு 10 மாதங்களுக்கு முந்தி கி. பு. கோடு 145 வது செக்ஷன்படி நடவடிக்கைகள் நடந்ததில் 1 எதிரியே விவாத மன்னியில் இந்நிலத்தை யனுபவித்து வருவதாக மாஜிஸ்டிரேட் தீர்மானித்தார். இது விஷயமாக பிராஸிகியூஷன் இறப்பு முதல் சாக்ஷி சிவில்கோர்ட்டில் பாத்திய மனுக் கொடுத்ததில் அவர் அசல் வழக்கிட்டுக் கொள்ளும்படி தீர்மான மேற்பட்டது. 1 எதிரியே தாவாநிலத்தை யனுபவித்து வந்ததாக செஷன்ஜட்ஜியாலுந் தீர்மான மேற்பட்டிருக்கிறது. தாவாநிலத்தை 1 எதிரி

யும் அவரைச் சேர்ந்தவர்களும் சாகுபடி செய்வதை பிராஸிகியூஷன் திறப்பு முதல் சாக்ஷி ஆ தடைசெய்யப் போவதாக 1 எதிரிக்குத் தெரிந்தவுடன் அவர் 14 பெயர்களை கூட்டிக்கொண்டு விவாத நிலத்துக்கு வந்திருந்ததாகவும், அவர்களிற் சிலர் அபாயகரமான ஆயுதங்கள் வைத்திருந்ததாகவும், பிராஸிகியூஷன் திறப்பு 1 வது 8 வது சாக்ஷிகளால் ருஜூச் சொல்லப்பட்டிருக்கிறது. இவர்களுக்குள் பெருத்த சண்டை நடந்து இருவருக்கு பலத்த காயங்களுண்டாகி இறந்துவிட்டார்கள். இதனால் இந்தப் பதினால் வரும் கொலை அபாயகரமான ஆயுதங்களினால் கொடுந்துன்பம், துன்பம் இந்தக் குற்றத்தின் கீழ் சார்ஜ் செய்யப்பட்டார்கள். 1-2 எதிரிகள் மட்டில் நினையாமற் செய்த கொலை என்னுங் குற்றஞ் செய்ததாக அவர்களுக்கு மட்டில் செஷன் ஜட்ஜி 3 வருட கடுங்காவல் தெண்டனை விதித்தார்கள். மற்றவர்கள்பேரில் குற்றமில்லையென அவர்களை விட்டுவிட்டார்கள். 1-2 எதிரிகள் தங்கள் பேரில் யாதொரு குற்றமுமில்லை யென்று இந்தக் கோர்ட்டில் அப்பீல் செய்திருக்கிறார்கள். மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ் அவர்கள் எதிரிகள் செய்தது குற்றமாகுமென்றும் சதாசிவய்யரவர்கள் எதிரிகள் செய்தது குற்றமாகமாட்டாதென்றும் அபிப்பிராயங்கள் வெவ்வேறாகச் சொல்லிவிட்டதால் இந்தக்கேஸ் மூன்றுவது ஜட்ஜியவர்களுடைய தீர்மானத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

இறந்த நரசிம்மடு பெந்தநாகய்யா இவர்களுக்கு அப்பீல்தார்களே கொடுமையான துன்பங்கள் செய்ததாகவும், அப்பீல்தார்களே தாவாவிற்கண்ட நிலங்களை அனுபவித்துவந்ததாகவும், தாவா நிலத்தில் அப்பீல்தார்கள் உழாமல் பிராஸிகியூஷன் திறப்பு சாக்ஷிகள் தாவாநிலத்தில் பிரவேசித்து அதன்பேரில் சண்டையேற்பட்டதாகவும் ருஜூப்பிக்கப்பட்டிருக்கிறது. இதனால் எதிரிகள் அப்பீல்தார்களுக்கு தங்கள் நிலத்தையும் தங்கள் தேகத்தையுந் தற்காப்பு செய்யவேண்டியது அவசியமானதால் இ. பி. கோடு 97-வது செக்ஷன் இந்தக் கேஸுக்குப் பொருத்தமானது. பிராஸிகியூஷன் திறப்பு சாக்ஷிகள் எதிரிகள் நில்த்தில் அக்கிரமமாக பிரவேசித்ததைப்பற்றி அதிகாரிகளிடத்தில் தெரிவிக்கத் தகுந்த சாவகாசமிருந்ததால் எதிரிகளுக்கு தற்காப்பு சுதந்தரமில்லையென்று பப்ளிக் பிராஸிகியூடர் இ. பி. கோடு 99-வது செக்ஷன் 3-வது கிளாஸை தன் கக்ஷிக்கு ஆதாரமாக எடுத்துச்

சொல்லுகிறார். ஏற்பட்ட ருஜூக்களினால் இக்கேஸ் விஷயமாக அதிகாரிகளிடந் தெரிவிக்கப்போதுமான சாவகாசமில்லையென்று தெரிகிறது. எதிரிகள் தங்களுக்கு எவ்வளவு தற்காப்பு வேண்டியதோ அதைமீறி நடந்திருக்கிறார்களா வென்பதை மட்டில் நாம் கவனிக்கவேண்டும். பிராஸிகியூஷன் திறப்பு ஜனங்களைப்பார்க்கிலும் எதிரிகள் திறப்பில் ஜாஸ்தி ஜனங்களிருந்திருக்கிறார்கள். இவர்களிற் சிலர் ஈட்டிகள், மழு, வளைபங்களுள்ள தடிகள் வைத்திருந்ததாகவும் ருஜூவிருக்கின்றன. நரசிம்மடுவுக்கு மார்பின் நடுவிற் குத்தப்பட்டிருக்கிறது, நாகய்யாவுக்கு நுரையீரல் வரையில் குத்தப்பட்டிருக்கிறது. இவை ஈட்டியினாலேற்பட்ட காயங்களென்பதற்குச் சந்தேகமில்லை. இதனால் இந்த எதிரிகள் மேற்சொன்னவர்களை கொலைசெய்ய நினைத்தே அக்காயங்கள் செய்ததாக வேற்படுகிறது. இதனால் எதிரிகளுக்கு தண்டனை விதித்தது நியாயமானதே. பிராஸிகியூஷன் திறப்பு சாக்ஷிகள் தாவா ஸ்தலத்துக்கு வருவார்கள், வந்தால் கூடியவரையில் அவர்களுக்கு துன்பஞ் செய்யவேண்டுமென்ற எண்ணத்துடனே முன்னெச்சரிக்கையாக தகுந்த ஆயுதங்களுடன் எதிரிகள் போயிருக்கிறார்கள். திடீரென்று ஏற்பட்ட சம்பவமல்ல. இதனால் எதிரிகளுக்கு விதித்த தண்டனையைக் குறைக்க எவ்வித நியாயமுமில்லை. அப்பீல் தள்ளுபடி செய்யப்பட்டது.

24 Indian Cases 327.

சென்னை ஹைகோர்ட்டு.

1913 ஹுத்திய கிரிமனல் ரிவிஷன் கேஸ் நம்பர் 681

கிரிமனல் ரிவிஷன் மனு நம்பர் 552

தீர்ப்பு 3—3—14

ஜட்ஜிகள்.
ஜஸ்டிஸ் வாலீஸ் அவர்கள்
ஜஸ்டிஸ் எயிலிங் அவர்கள்

M. சுப்பராய அய்யர் எதிரி மனுதார்
V
மவுல்காதர் ரவுத்து அப்தல்காதர் சாகீப் வாதி (எதிர்மனுதார்

22 [இந்தியன் பெனல் கோடு]

முனிசிபல் உத்தியோகத்தின் பாத்தியா பாத்தியங்களைப்பற்றி விவாதஞ் செய்வதில் ஒருவருடைய சொந்த செய்கைகளைப்பற்றிச் சொல்லாமல் பொதுநன்மையின் பொருட்டு பொதுவான விஷயங்களை குறிப்பிட்டுச் சொல்லுவது அவதூறு குற்றமாகாதென்பது.

161286
600 008.

வாதி [illegible] அவதூறு குற்றஞ்சாட்டி பிராது செய்ததில் எதிரிக்கு பிரஸிடென்ஸி மாஜிஸ்டிரேட் அபராதம் விதித்தார்கள். இதன்பேரில் எதிரி கி. பு. கோடு 435, 439-வது செக்ஷன்படி ரெவிஷன் மனுக்கொடுத்திருக்கிறார்.

வாணியம்பாடியில் முனிசிபல் செயர்மென் உத்தியோகத்தை வகிக்கக்கூடிய கல்வியிற் சிறந்தவர் ஒருவர்கூட இல்லையென்று சொன்னதின் அர்த்தம் என்னவென்றால் இங்கிலீஷ் பேசக்கூடியவராவது, தாய்பாஷையாகிய தமிழை பிழையன்னியில் எழுதக்கூடியவர்களாவது இல்லையென்பது அர்த்தம். இந்த வாதி சம்பந்தப்பட்டவரையில் மேலே கண்ட விஷயங்கள் உண்மையானதே. இந்த வார்த்தைகள் பிரசுரிக்கப்பட்டதினால் இவருக்கு துன்பமுண்டாக விடயில்லை. பொதுவான செய்கைகளை எதிரி விவாதமாகச் சொன்னது எவ்விதத்திலும் குற்றமாகமாட்டாது. ஜாமாத் தனவான்கள் இருவர் அல்லது மூவருடைய அதிகாரத்துக்குள்ளிருக்கிறது. இந்த 2 அல்லது 3 பேர்களின் ஆஞ்ஞையின்பேரில் வாணியம்பாடியிலுள்ளவர்கள் எல்லோரும் முனிசிபால்ட்டிக்கு விரோதமான காரியங்களைச் செய்யலாம் என்று சொல்லியது அவதூறானதல்ல. எதிரி அயோக்கியமாயாவது அல்லது கெட்ட எண்ணத்துடனாவது சொன்னதாக வாதி தன்னுடைய பிராதிற் சொல்லவில்லை. இவர்களுக்குள் முனிசிபல் செயர்மென் ஸ்தானத்துக்கு அருகமுள்ளவர்கள் ஒருவர்கூடவில்லை யென்ற பதங்களை. "ரெவனியு டிவிஷனல் ஆபீசர்தான் முனிஸிபல் செயர்மெனாக இருக்கவேண்டுமென கவர்ன்மெண்டாரவர்கள் சமீபகாலத்தில் உத்திரவு செய்திருக்கிறார்கள்" என்ற வார்த்தைகளுடன் சேர்ந்து வாசிக்கவேண்டும். பின்னாற் சொன்ன விஷயம் உண்மையானது, முதலிற் சொன்னது கிரமமான வியாக்கியானம். இந்த முனிசிபால்டிக்கு தகுந்த கெட்டிக்காரன் வேண்டும், உத்தியோகஸ்தனவ்லாத எவராவது இந்த முனிசிபல் செயர்மென் ஸ்தானத்துக்கு அருகமுள்ளவர்களாயிருக்கிறார்களா என்று சொன்னது பொதுவான விஷயத்தைப்பற்றி ஒருவருடைய அபிப்பிராயம். ஆகையால் எதிரிக்கு விதித்த தண்டனையை ரத்து செய்திருக்கிறோம். அபராதம் செலுத்தப்பட்டிருந்தால் அத்தொகையும் வாதிக்குக் கொடுபடவேண்டியதாக சொன்ன செலவு தொகை ரூபா 4-1 அணாவும் எதிரிக்கு திருப்பிக்கொடுபடவேண்டும்.

Z211, 83m N13
N13,1

1914 M. W. N. 351.